40

சென்னை எஸ்டேட்ஸ்

நிலச் சட்டக் கமிட்டியின் அறிக்கை

முதற் பாகம்.

1939

சென்னை

எஸ்டேட்ஸ் நிலச்சட்டக் கமிட்டியின்

அறிக்கை.

முதற் பாகம்.

சென்னை

அரசாங்கப் பதிப்பகக் கண்காணிப்பாளரால் பதிப்பிக்கப்பட்டது.

1939.

2–10–0.]

சென்னை

எஸ்டேட்ஸ் நிலச்சட்டக் கமிட்டியின்

அறிக்கை.

முதற் பாகம்.

சென்னை

அரசாங்கப் பதிப்பகக் கண்காணிப்பாளரால் பதிப்பிக்கப்பட்டது.

1930.

விலை, ரூ. 2-10-0.]

திருத்தமும் பதவிளக்கமும்.

அறிக்கையிற் சில இடங்களிற் "நிலத்துக்குடையவர்" என்று வரும் பதத்தை "நிலச்சுவான்தார்" என்று கொள்ளுதல் பொருந்தும். "குத்தகை" என்று வரும் பதத்தை "தீர்வை" என்றும், "குத்தகை தார்" என்ற பதத்தை, "தீர்வையைச் செலுத்தும் ரயத்து" என்றும், சந்தர்பத்திற்கேற்றவாறு பொருள் கொள்ளுதல் தகும். 146-வது பக்கம், 4-வது வரியில், "முரை" என்றிருப்பதை "முறை" என்று திருத்திக்கொள்ளவும்.

நிலப்பிரபு = நிலச்சுவான்தார்.

வாடகை = குத்தகைத் தொகை.

ஜமீன் சங்கம் = நிலச்சுவான்தார்கள் சங்கம்.

கைப்பற்று நிலம் = அனுபோகத்திலுள்ள நிலம்.

விஷய சூசிகை.

பக்கம்

IV-ம் அத்தியாயம்.

V-ம் அத்தியாயம்.

VI-ம் அத்தியாயம்.

VII-ம் அத்தியாயம்.

VIII-ம் அத்தியாயம்.

IX-ம் அத்தியாயம்.

X-ம் அத்தியாயம்.

XI-ம் அத்தியாயம்.

XII-ம் அத்தியாயம்.

கௌரவமிக்க சென்னைச் சட்ட சபை அங்கத்தினர்களுக்கும், கௌரவமிக்க சென்னை மேல் சபை அங்கத்தினர்களுக்கும், சென்னை.

ஐயன்மீர்,—

1937-ம் ஆண்டு செப்டம்பர் மீ 10 உயன்று, சென்னை மேல் சபையில், நிறைவேற்றப்பட்ட தீர்மானத்திற்கு இணங்கவும், 1937-ம் ஆண்டு செப்டம்பர் மீ 25 உயன்று சென்னைச் சட்ட சபையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்திற்கு இணங்கவும், எங்கள் விசாரணைகளைப்பூர்த்தி செய்த பின்னர், ஜமீன்தாரிப் பிரதேசங்களிலும், இதர "சுவாம்ய"ப் பிரதேசங்களிலும் (**Proprietary Areas**) இப்பொழுது உள்ள பரிஸ்திதிகளைக்குறித்து, அறிக்கை ஒன்றை தங்கள் முன் சமர்ப்பிக்கும் பெருமை வாய்க்கப் பெற்றுள்ளோம். யதாஸ்துடன், அது சம்பந்தமாக, தேவையென்று கருதப்பட்ட மசோதா ஒன்றும் இணைக்கப்பட்டுள்ளது.

பீடிகை.

பார்லிமெண்டரி கமிட்டியை அமைத்த, சென்னை மேல் சபை, சென்னைச் சட்ட சபை, ஆகிய இரு சபைகளின் தீர்மானங்கள் பின்வருமாறு :—

மேல் சபையின் தீர்மானம் : "இச்சபை (மேல் சபை **Legislative Council**) தனது அங்கத்தினருள் மூவரைத் தேர்ந்தெடுப்பது ; அவர்கள் சட்டசபையால் (**Legislative Assembly**) தேர்ந்தெடுக்கப்பட்ட ஆறு பேர்களோடு சேர்ந்து ஒரு கமிட்டியாக அமைந்து, ஜமீன்தாரிப் பிரதேசங்களிலும், இதர "சுவாம்ய"ப் பிரதேசங்களிலும் உள்ள பரிஸ்திதிகளைப்பற்றி விசாரணை செய்து அறிக்கை ஒன்றை, சமர்ப்பிப்பது. அத்துடன் தேவையென்று கருதப்பட்ட மசோதா ஒன்றையும், கீழ்க்கண்ட விஷயங்களில் விசேஷ கவனத்தைச் செலுத்தி தயாரிப்பது :—

(1) ஜமீன்தார்களைப் பொருத்தமட்டில் ரயத்துகளுக்குள்ள நியாய ரீதியான பாத்யதைகள் ;

(2) வரிவசூலும் வஜாவும் ;

(3) சர்வேயும், உரிமைகளின் அடங்கலும் (**Record of Rights** : தண்ணீர் உரிமை உள்பட)—நியாயமான வரி நிர்ணயமும்;

(4) நிலவரி தவிர குடியானவர்களிடமிருந்து வசூலிக்கப்படும் இதர வரிகள் ;

(5) ஆங்காங்குள்ள இயற்கை வசதிகளை, குடியானவர்கள் தங்கள் சொந்த விஷயத்திற்கும், விவசாய விஷயங்களுக்காகவும் பயன் படுத்திக்கொள்ளுதல் ;

(6) நீர்ப்பாசன அமைப்புகளை நிர்வஹித்தல்."

சட்ட சபையின் (**Legislative Assembly**) தீர்மானம். "இச்சபை தனது அங்கத்தினருள் ஆறு பேர்களைத் தேர்ந்தெடுப்பது ; அவர்கள் மேல் சபையால் தேர்ந்தெடுக்கப்பட்ட மூவர்களோடு சேர்ந்து ஒரு கமிட்டியாக அமைந்து ஜமீன்தாரிப் பிரதேசங்களிலும் இதர "சுவாம்ய"ப் பிரதேசங்களிலும் தற்போதுள்ள பரிஸ்திதிகளைப்பற்றி விசாரணை செய்து, அறிக்கை ஒன்றை சமர்ப்பிப்பது ; அத்துடன், அது சம்பந்தமாக, தேவையென்று கருதப்பட்ட மசோதா ஒன்றை, கீழ்க்கண்ட விஷயங்களில் விசேஷ கவனத்தைச் செலுத்தித் தயாரிப்பது :—

(1) ஜமீன்தார்களை பொறுத்தமட்டில், குடியானவர்களுக்குள்ள நியாய ரீதியான பாத்யதைகள் ;

(2) வரிவசூலும் வஜாவும் ;

(3) சர்வேயும், உரிமைகளின் அடங்கலும் (**Record of Rights** : தண்ணீர் உரிமை உள்பட) ; நியாயமான வரி நிர்ணயமும் ;

(4) நிலவரி தவிர, குடியானவர்களிடமிருந்து வசூலிக்கப்படும் இதர வரிகள் ;

(5) ஆங்காங்குள்ள இயற்கை வசதிகளை, குடியானவர்கள் தங்கள் சொந்த விஷயத்திற்கும், விவசாய நிமித்தமாகவும் பயன் படுத்திகொள்ளுதல் ;

(6) நீர்ப்பாசன அமைப்புக்களை (**Irrigation works**) நிர்வஹித்தல்.

2. மேலே தெரிவிக்கப்பட்ட தீர்மானங்களிலேயே, விசாரித்தறிய வேண்டிய விஷயங்கள் யாவும் அடங்கியுள்ளன.

3. இரு சபையாலும் தேர்ந்தெடுக்கப்பட்ட கமிட்டி அங்கத்தினர்கள் பின்வருமாறு :—

கௌரவமிக்க திருவாளர் டி. பிரகாசம் அவர்கள், ரெவினியூ மந்திரி (தலைவர்).

மிர்ஜாபுரம் ஜமீன்தார், எம்.எல்.ஏ.

ஜனுப் மஹபூப் அலிபெய்க், எம்.எல்.ஏ.

திருவாளர் A. ரெங்கசாமி அய்யங்கார், எம்.எல்.ஸி.

,, M. பல்லம் ராஜு, எம்.எல்.ஏ.

,, P. S. குமாரசுவாமி ராஜா, எம்.எல்.ஏ.

,, V. V. ஜோகய்ய பந்துலு, எம்.எல்.ஸி.

,, B. நாராயணசுவாமி நாயுடு, எம்.எல்.ஸி.

,, B. வெங்கடாசலம் பிள்ளை, எம்.எல்.ஏ.

4. 1937-ம் ஆண்டு செப்டம்பர் மீ 30 உயன்றும், மேற்படி வருஷம் அக்டோபர் மீ 1 உ, 2 உயன்றும், கமிட்டி கூடியது. அவ்வமயம், கவர்ன்மெண்ட் ரெவினியூ காரியதரிசி திருவாளர் K. ராமுண்ணி மேனன் அவர்களும் ஆஜராயிருந்தார்.

5. அதன் பின்னர், கௌரவமிக்க ரெவினியூ மந்திரி அவர்களின் பார்லிமெண்டரி காரியதரிசியாகிய திருவாளர் T. விஸ்வநாதம் அவர்களை கமிட்டியின் காரியதரிசியாக நியமிக்க கமிட்டி அங்கத்தினர்கள் தீர்மானித்தனர்.

6. பிறகு, காரியதரிசியால் தயாரிக்கப்பட்ட ஆரம்ப ரூபகமான கேள்வித் தொடர்ச்சியை கமிட்டியார் ஆலோசித்து, அது சம்பந்தமாக சற்று விவாதித்த பின்னர், பத்திரிகைகளுக்கு விடுத்த அரசாங்க அறிக்கையையும், 1937-ம் ஆண்டு அக்டோபர் மீ 5உயில் பொது ஜனங்களுக்கு விடுத்த கேள்வித்தொடரையும் ஏற்றுக் கொண்டனர்.

7. பொது ஜனங்களைக் கேட்டுக்கொண்டவாறு, கேள்வித்தொடர் சம்பந்தமாக எழுந்த பல விஷயங்களைக் குறித்து பொது ஜனங்கள் சுமார் அறுநூறு யதாஸ்துகளை கமிட்டிக்கு அனுப்பியிருந்தனர்.

8. அது வரை கிடைக்கப்பெற்ற யதாஸ்துகளை ஆலோசிப்பதற்காக, கமிட்டி மீண்டும் 1937-ம் ஆண்டு டிசம்பர் மீ 6, 7உகளில் கூடினது. ஜமீன்தார்கள், இனாம்தார்கள், மொக்கஸதார்கள், ஜமீன்தார்களின் சங்கங்கள், ரயத்துகளின் சங்கங்கள், வக்கீல் சங்கங்கள், வக்கீல்கள் காங்கிரஸ் கமிட்டிகள், பல குடியானவர்கள், இன்னோரன்ன பலர் யதாஸ்துகளை அனுப்பியிருந்தனர். மேற்கூறிய யதாஸ்துகள்யாவும், நாலு பகுதிகளாக யாக்கப்பட்டு, கமிட்டி அறிக்கையோடு சேர்க்கப்பட்டுள்ளன.

9. யதாஸ்துகளில் கண்ட விஷயங்கள்மீது, காரியதரிசியால் தயாரிக்கப்பட்ட ஆரம்பக்குறிப்பை ஆலோசித்து, வரி விகிதங்கள், நீர்ப்பாசன மூலங்கள், கிராமக் கணக்குகள், காடுகள், தரிசு நிலங்கள், இன்னும் மற்ற விஷயங்கள், ஆகிய இவைகளின் சம்பந்தமாக, இரண்டாவது கேள்வித் தொடரை ஜமீன்தார்களுக்கு அனுப்ப, கமிட்டி தீர்மானித்தது; அக்கேள்வித்தொடருக்கு ஜமீன்தார்கள் விடுத்த பதில்கள், இரு பகுதிகளாக, கமிட்டி அறிக்கையோடு சேர்க்கப்பட்டுள்ளன.

10. அதே சமயத்து, இரண்டாவது கேள்வித்தொடர் சம்பந்தமாக எழும் விஷயங்களை குறித்து வேண்டிய தகவல்களை ஜில்லா கலெக்டரிடமிருந்து பெறுமாறு, கமிட்டியார் அரசாங்கத்தாரை கேட்டுக்கொண்டனர். அதற்கேற்ப, சென்னை ராஜதானியில், ரூபாய் 1,000-க்கு மேற்பட்ட வரிவருமானமுள்ள, ஒவ்வொரு எஸ்டேட்டினின்றும், ரூபாய் 5,000-க்கு மேற்பட்ட வரி வருமானமுள்ள ஒவ்வொரு இனாம் கிராமத்தினின்றும், வேண்டிய தகவல்களை சேகரித்துனுப்புமாறு, ஜில்லா கலெக்டர்கள் யாவருக்கும் அரசாங்கத்தார் அறிக்கையொன்றை அனுப்பியிருந்தனர். கலெக்டர்கள் அனுப்பிய விடைகள் யாவும், ஒரு தனித் தொகுதியாக, கமிட்டி அறிக்கையோடு சேர்க்கப்பட்டுள்ளது.

11. மேற்கூறிய கூட்டத்தில் கமிட்டியார் தங்கள் பிராயணத் திட்டத்தை தீர்மானித்துக்கொண்டனர். வாக்குமூலம் வாங்குவதற்கு ஐந்து நடுநகரங்கள் முடிவு செய்யப்பட்டன. விசாகப்பட்டணம் ஜில்லாவிலுள்ள ஜமீன்தாரி முதலிய "சுவாம்ய"ப் பிரதேசங்கள் சம்பந்தமாக, சாக்ஷிகளின் வாக்கு மூலங்களை எடுப்பதற்கு விசாகப்பட்டணம் நடுநகரமாக முடிவு செய்யப்பட்டது. அவ்வாறே, கிழக்குக் கோதாவரி ஜில்லா, மேற்கு கோதாவரி ஜில்லா, கிருஷ்ணா ஜில்லா, குண்டூர் ஜில்லா, ஆகிய இஜ்ஜில்லாக்களிலிருந்து சாக்ஷியம் கொடுக்க வருபவர்களுக்கு, ராஜமந்திரி நடுநகரமாகவும்; திருச்சினாப்பள்ளி, சேலம், தஞ்சாவூர், கோயம்புத்தூர் ஜில்லாக்களுக்கு, திருச்சினாப்பள்ளி நடுநகரமாகவும்; மதுரை, இராமனாதபுரம், திருநெல்வேலி ஜில்லாக்களுக்கு மதுரை நடுநகரமாகவும்; சித்தூர், வட ஆற்காடு, தென் ஆற்காடு, செங்கற்பட்டு, நெல்லூர் ஜில்லா சாக்ஷிகளுக்கு சென்னை நடுநகரமாகவும் முடிவு செய்யப்பட்டன. மற்றும், இதர நடுநகரங்களில் சாக்ஷியம் கொடுக்க இயலாதவர்களுக்கு, சென்னையில் சந்தர்ப்பம் அளிக்கவும் தீர்மானிக்கப்பட்டது.

12. 1937-ம் ஆண்டு டிசம்பர் மீ 22உ மீண்டும் கூடி, ஜில்லா கலெக்டர்களிடமிருந்தும், ஜமீன்தார்களிடமிருந்தும், வேண்டிய தகவல்கள் கிடைக்கும் வரை காத்திருப்பதா, அல்லது முந்திய கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டபடி பிராயாணத்திட்டப்படி பயணமாவது என்பதைப்பற்றி ஆலோசித்தனர். கமிட்டியின் வேண்டுகோளுக்கிணங்க ஆஜராயிருந்த சென்னை அரசாங்க ரெவினியூ காரியதரிசி, கலெக்டர்களிடமிருந்து எதிர்பார்க்கப்படும் தகவல்கள் சுமார் இரண்டு மாதங்களுக்குள் கிடைக்கும் என்று தெரிவித்தனர். வீணாகக் காத்திருப்பதில் பயனில்லை, ஆதலின், முந்திய கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்ட திட்டத்தை மாற்றாது, சாக்ஷிகளின் வாக்கு மூலங்களை எடுக்க முற்படவேண்டுமென்று கமிட்டி முடிவு செய்தது.

13. யதாஸ்துகளை அனுப்பிய சங்கங்களுக்கும் நபர்களுக்கும், சட்ட சபை அங்கத்தினர்களுக்கும் மேல் சபை அங்கத்தினர்களுக்கும், கேந்திர சட்டசபை (**Central Legislative Assembly**) அங்கத்தினர்களுக்கும், ஜமீன்தார்களுக்கும், கமிட்டியின் பிராயணத்திட்டம் முன்னதாகவே அறிவிக்கப்பட்டது.

14. பிரயாணத்திட்டத்தின் பிரகாரம், 1938-ம் ஆண்டு ஜனவரி மீ 7உயினின்று 13உ வரை, கமிட்டி விசாகபட்டணத்திலமர்ந்து, 1 முதல் 78 சாக்ஷிகளின் வாக்கு மூலங்களை பதிவு செய்து, பல ஆதாரப் பத்திரங்களையும் ஏற்றுக்கொண்டது.

15. அதன் பின்னர், 1938-ம் ஆண்டு ஜனவரி மீ 16உயினின்று 22உ வரை கமிட்டி ராஜமந்திரியிலமர்ந்து, 79 முதல் 147 சாக்ஷிகளின் வாக்கு மூலங்களைப்பதிவு செய்து, பல ஆதாரப்பத்திரங்களையும் ஏற்றுக்கொண்டது.

16. பிறகு பிப்ரவரி மீ 6உயினின்றும் 10உ வரை திருச்சினாப்பள்ளியில் கமிட்டி கூட்டி 148 முதல் 197 சாக்ஷிகளின் வாக்கு மூலங்களை பதிவு செய்து பல ஆதாரப்பத்திரங்களையும் ஏற்றுக்கொண்டனர்.

17. கமிட்டியின் அடுத்த கூட்டங்கள் பிப்ரவரி மீ 21உயினின்றும் 25உ வரை மதுரையில் கூடின. 198 முதல் 258 சாக்ஷிகளின் வாக்கு மூலங்கள் பதிவு செய்யப்பட்டன. பல ஆதாரப்பத்திரங்களும் தாக்கல் செய்யப்பட்டன.

18. சட்டசபை வரவு செலவு விவாதம் மார்ச்சு மாதம் நிகழ்ந்தமையால், அம்மாதம் கமிட்டி கூடுவதற்கு அவகாசம் இல்லை.

19. கமிட்டியின் கடைசிக் கூட்டங்கள் சென்னையில் 1938-ம் ஆண்டு ஏப்ரல் மீ 20உயிலிருந்து 30உ வரை நடைபெற்றன. சென்னையில் 259 முதல் 358 சாக்ஷிகளின் வாக்கு மூலங்கள் பதிவு செய்யப்பட்டன. பல ஆதாரப்பத்திரங்களும் தாக்கல் செய்யப்பட்டன. மற்றைய நடுநகரங்களில் வாக்கு மூலம் கொடுக்க இயலாத பலர், முக்கியமாக, நிலச்சுவான்தார்கள் சென்னையில் தங்கள் சாக்ஷியத்தை அளித்தனர். சாக்ஷியங்கள் மூன்று பகுதிகளாக பிரசுரிக்கப்பட்டுள்ளன. தெலுங்கு, தமிழ் பாஷைகளில் கொடுக்கப்பட்ட சாக்ஷியங்களின், ஆங்கில மொழிபெயர்ப்பு, தொடர்ச்சிப் பகுதியாகச் சேர்க்கப்பட்டிருக்கிறது.

20. சாக்ஷியங்கள் பதிவு செய்யப்பட்ட பின்னர், சாக்ஷியங்களிலிருந்தும், தாக்கல் செய்யப்பட்ட பத்திரங்களிலிருந்தும் எழுந்த பல விஷயங்களைக்குறித்து, பூர்வாங்கமாக கலந்து ஆலோசிப்பதற்கு, கமிட்டியார் பலமுறை கூடினர்.

21. பிறகு கமிட்டியார் ஆலோசிப்பதற்காக ஒரு ஆரம்பக்குறிப்பு தயாரிக்கப்பட்டது. 1938-ம் ௵ ஜூலை ௴ 31௳யிலும், ஆகஸ்டு ௴ 1, 2, 13, 20௳களிலும், செப்டம்பர் ௴ 17, 19௳களிலும், செப்டம்பர் ௴ 6, 7௳ களிலும், கமிட்டியார் கூடி விஷயங்களை நன்கு ஆலோசித்து, அவசியம் அல்லது, விரும்பத்தக்கன என்று கருதப்பட்ட சிலமாறுதல்களைச் செய்து, 1938-ம் ௵ நவம்பர் ௴ 6௳, அறிக்கையில் கையொப்பம் இட்டனர். திருவாளர்கள் (1) மிர்ஜாபுரம் ஜமீன்தார், (2) B. நாராயணசுவாமி நாயுடு, (3) மஹ்பூப் அலி பெய்க் (4) A. ரெங்கசாமி அய்யங்கார், ஆகிய இவர்கள் அபிப்பிராயபேத யதாஸ்துகளைச் சமர்ப்பித்தனர். அவை பிரதான அறிக்கை (Main Report)யின் இறுதியில் பதிபிக்கப்பட்டுள்ளன.

B. வெங்கடாசலம் பிள்ளை,

V. V. ஜோகய்யா.

M. பல்லம் ராஜு.

P. S. குமாரசுவாமி ராஜா.

B. நாராயணசுவாமி நாயுடு.

M. வெங்கடராமய்ய அப்பா ராவ் (மிர்ஜாபுரம் ஜமீன்தார்).

A. ரங்கசுவாமி.

மஹ்பூப் அலி பெய்க்.

T. பிரகாசம் (தலைவர்).

செண்ட் ஜார்ஜ் கோட்டை, 1938-ம் ௵ நவம்பர் ௴ 7௳.

எஸ்டேட்ஸ் நிலச்சட்டக் கமிட்டியின் அறிக்கை

முதற் பாகம்

1-ம் அத்தியாயம்.

ஜமீந்தார் நிலத்திற்குச் சொந்தக்காரரா ? அல்லது நிலவரிக்குள்ள சர்க்கார் உரிமையை மட்டும் தம் சார்பாக மாற்றிப் பெற்றுக்கொண்டவரா ? (ASSIGNEE OF LAND-REVENUE).

இந்த விசாரணையில், அடிப்படையானதும் ஆராய்ந்தறியவேண்டிய மிகவும் முக்கியமான விஷயம் வரி விகிதமே.

(1) ஜமீந்தாருக்கு அல்லது மற்ற நிலச்சுவான்தாருக்கு ரயத்து (குடியானவன்) செலுத்தவேண்டிய ஒழுங்கான நியாயமான வரி விகிதம் என்ன ?

(2) சாசுவத நிர்ணயம் (**Permanent Settlement**) செய்யப்பட்ட காலத்தில் சாகுபடி செய்யப்பட்ட நிலங்கள் மீதும், அல்லது அப்பொழுது தரிசாக இருந்து பின்னர் சாகுபடி செய்யப்பட்ட நிலங்கள்மீதும், சாசுவத நிர்ணயம் செய்யப்பட்ட காலத்தில் நிர்மாணிக்கப்பட்ட வரியை உயர்த்துவதற்கு, தன்னிச்சையாகவாவது அல்லது வேறு முகாந்தரத்திற்காவது ஜமீந்தாருக்கு அல்லது நிலச்சுவான்தாருக்கு உரிமை உண்டா ?

இக்கேள்விகளின் விடைகள் கீழ்வரும் கேள்விகளின் விடைகளைப் பொறுத்துள்ளன :—(1) " நிலத்திற்குச் சொந்தக்காரர் யார் ; " நிலத்திலுள்ள உரிமையின் தன்மை என்ன ? " 1802-ம் வருஷத்தில் சாசுவத நிர்ணயம் செய்யப்பட்டபோது நிர்மாணிக்கப்பட்டது என்ன ?

(2) ஜமீந்தார் அல்லது நிலச்சுவான்தார் என்பவர் யார் ? அவருக்கும் குடியானவருக்கும் உள்ள சம்பந்தம் எத்தன்மை வாய்ந்தது ? ஆங்கில நாட்டில் நிலச்சுவான்தாருக்கும் குடியானவருக்கும் உள்ள சம்பந்தம் போன்றதா, இந்தியாவில் ஜமீன்தார் அல்லது நிலச்சுவான்தாருக்கும் குடியானவருக்குமுள்ள சம்பந்தம் ? ஆங்கிலநாட்டுக் குடியானவனைப்போல், இந்தியக் குடியானவனும் தனது அனுபவ பாத்தியத்தை நிலச்சுவான்தாரிடமிருந்து அடையப்பெறுகிறான ?

அவ்விரு கேள்விக்கு விடை " ஆம் " என்றால், ரயத்து, வருஷா வருஷக் குடியானவன் என்று தான் கொள்ளவேண்டி வரும். சொக்கலிங்கம் பிள்ளை வழக்கிலும் (**6 M. H. C. R.,** பக்கம் **164**) சென்னை ஹைகோர்ட்டாரும் அவ்வாறு தவறான முடிவுக்கே வந்தனர். ஆயினும், அதற்குப் பின்னர் பன்முறை, சென்னை ஹைகோர்ட்டும், பிரிவீ கௌன்சிலும், சட்டசபைகளும், சொக்கலிங்கம் பிள்ளை வழக்கின் தீர்ப்பை நிராகரித்து வந்தனர். இறுதியில், இன்று நிலச்சுவான்தார்கள்கூட குடியானவனுக்கு அனுபவ பாத்திய (**occupancy right**) மில்லை என்று சாதிக்க முற்படுவதில்லை. ஆனால், நிலச்சுவான்தார் இன்று சாதிப்பது என்னவென்றால், நிலத்திற்குச் சொந்தக்காரர் தாமே என்றும், அந்த உரிமையினின்றும், சில கீழ்த்தரப் பட்ட உரிமைகள், பலவகைப்பட்ட குடியானவர்களுக்கு கொடுக்கப்பட்டிருக்கின்றனவென்றும் அத்தகைய குடியானவர்களில் முக்கியமானவர்கள், சாசுவத அனுபவ பாத்தியமுள்ள குடியானவர்கள் என்றும் கூறுவதே. (சென்னை நிலச்சுவான்தார் சங்கம் அனுப்பிய யதாஸ்தின் நான்காவது பக்க - உட்பிரிவைப் பார்க்கவும்.)

நிலச்சுவான்தார்களின் வாதம்.

குடியானவனின் அனுபவ பாத்தியதையை நிலச்சுவான்தார் ஒத்துக்கொண்டபோதிலும், அது, தான் (நிலச்சுவான்தார்) அளித்த பாத்தியதை ஆகையால். 1865-ம் வருஷம் வரை தன்னிச்சைப் பிரகாரமும், அதன் பின்னர் சட்ட மூலமாகவும், வரியை உயர்த்த, தனக்கு அதிகாரம் உண்டு என்பது நிலச்சுவான்தார் கூற்று. மிகவும் முக்கியமான விஷயத்தில் அவ்வாறு தெரிவித்த நிலச்சுவான்தார்கள் தங்கள் வழக்கை, தங்கள் கொள்கையை, எல்லா ஆதாரங்களாலும் வலியுறுத்த தயாராக இருக்கவேண்டும். அவ்வாறு செய்யாது, இந்த விஷயத்தைத் தீர்மானிக்கவேண்டிய அவசியமில்லையென்றும் ; அதைப்பற்றிப் பேசக்கூடக் கூடாதென்றும், ஏனெனில் அது ஜமீந்தாருக்கும் குடிகளுக்கும் இடையே விரோதமான, முரணான, பல பாத்தியதைகளைக் கொண்டாடுவதில் கொண்டுபோய்விடும் என்றும் ; நியாயமான வரி விகிதத்தை நிஷ்கரணை செய்வதற்காவது, நீர்ப்பாசன மூலங்களை அபிவிருத்தி செய்வதின், நிர்வஹிப்பதின் பொறுப்பை நிர்மானிப்பதற்காவது, நிலத்திற்கு சொந்தக்காரர் ஜமீந்தாரா, குடியானவனா என்பதைத் தீர்மானிக்கவேண்டிய அவசியமில்லையென்றும் நிலச்சுவான்தார்கள் தர்க்கம் செய்கின்றனர்.

குடியானவர்களின் கூற்று.

மறுபுறத்தில், குடியானவர்கள் நிலைநாட்ட விரும்பும் கொள்கை பின்வருமாறு :—" தொன்றுதொட்டு, குடியானவர்கள் நிலத்தின் சொந்தக்காரர்களாக இருந்து வந்திருக்கிறார்கள் ; அவ்வுரிமை நிலச்சுவான்தார்களால் கொடுக்கப்பட்டதல்ல ; ஜமீன்தார்களை, வரி வசூல் செய்வதற்கு தங்கள் ஏஜெண்டுகளாக நியமித்த சர்க்காரால்கூட கொடுக்கப்பட்டதல்ல ; ஜமீந்தார்கள் எந்தக் காலத்திலும், சர்க்காருக்காக வரி வசூல் செய்பவர்களாக (**rent-collectors**) இருந்து வருகிறார்களே ஒழிய வேறல்ல ; எந்த முகாந்தரத்தைக்கொண்டாவது, வரியை உயர்த்துவதற்கு, ஜமீந்தார்களுக்கு, யாதொருவிதமான உரிமையும் கிடையாது ; நீர்ப்பாசன மூலங்களை, நல்ல நிமையில் வைத்திருப்பது ஜமீந்தார்களின் கடமை."

இருதரப்பினர்களுடைய வாதங்களைக் கருதியும், சட்ட சபையாலும், மேல் சபையாலும், நாங்கள் விசாரணை செய்யவேண்டியவை எவையென வரையறை செய்யப்பட்டதைக் கருதியும், கீழ்க்கண்ட விஷயங்களை ஆராய்ந்தறிவது எங்கள் கடமையாகும் : நாங்கள் விசாரணை செய்து அறியவேண்டிய விஷயங்கள் சம்பந்தமாக எழும் பல அம்ஸங்கள் ; எங்களால் பொதுஜனங்களுக்கு விடுக்கப்பட்ட கேள்வித் தொடர்களும் அதற்கு வந்த விடைகளும் ; எங்கள் (கமிட்டி) முன்பு, ஜமீந்தார்கள் சார்பாகவும், குடியானவர்கள் சார்பாகவும் கொடுக்கப்பட்ட சாக்ஷியங்களும், தாக்கல் செய்யப்பட்ட ஆதாரப் பத்திரங்களும். விசாரணையின் வரையறை பின்வருமாறு.

விசாரணை வரையறை சம்பந்தமான கேள்விகள் யாவையும், தனித்தனி வகுப்புகளாக அமைத்து, அவை ஒவ்வொன்றைப்பற்றியும் சுருக்கமாக ஆராய்ச்சி செய்வோம்.

எழுத்துமூலம் யதாஸ்துகளை அனுப்புமாறு, பொது ஜனங்களுக்கு கமிட்டி விடுத்த கேள்வித் தொடரில் 12 கேள்விகள் அடங்கியுள்ளன.

தொகுதி I.—முதற் தொகுதியில் இரண்டு பாகங்கள் இருக்கின்றன. (a) ; (b) :—

(a) நிலத்திற்குச் சொந்தக்காரர் யார் என்று நீங்கள் கருதுகிறீர்கள்? ஜமீந்தாரா அல்லது குடியானவனா ?

நிலத்தில் குடியானவனுக்கு உள்ள உரிமையின் தன்மை என்ன? ஜமீந்தாருக்கு உள்ள உரிமையின் தன்மை என்ன ?

இக்கேள்வியின் இரு பாகங்களும் ஒரு தொகுதியாகக் கருதப்பட்டு, கமிட்டியால் ஆராய்ச்சி செய்யப்படும்.

தொகுதி II.—நெருங்கிய சம்பந்தமுள்ள II, III கேள்விகள் பின்வருமாறு.—

2. (a) என்ன வரி, ஒழுங்கான, நியாயமான வரி என்று நீங்கள் கருதுகிறீர்கள் ?

(b) ஒழுங்கான, நியாயமான வரியை நிர்மாணிப்பதில், எந்த விஷயங்களை மனதில் வைத்துக் கொள்ளவேண்டுமென்று அபிப்பிராயப்படுகிறீர்கள் ?

(c) வரி வஜாவிற்கு, சட்ட ரீதியான ஏற்பாடுகள், விதிகள் இருக்கவேண்டுமென்று நினைக்கிறீர்களா ? அவ்வாறாயின், எந்த தத்துவங்களைக் கொண்டு அத்தகைய ஏற்பாடுகளைச் செய்யவேண்டும்.

(d) ஒரு குறித்த பிரதேசத்திற்கு, வரியை அல்லது வரியின் ஈவை, நிலையாக நிர்மாணித்தல் யுக்தம் என்று கருதுகிறீர்களா ? அல்லது ஒழுங்கான, நியாயமான வரியென்னவென்பதை விவரித்து, தீர்மானித்து, பின்னர் கேள்வியெழுந்த காலத்து, சரியான புள்ளி விவரங்களை முடிவு செய்யும் கடமையை, தகுந்த அதிகாரியிடமாவது, கோர்ட்டாரிடமாவது விட்டுவிடுதல் நலம் என்று கருதுகிறீர்களா ?

(e) அதிகார தோரணையில், ரெவினியு செட்டில்மெண்ட் அதிகாரிகளால் தீர்மானிக்கப்படும் வரிகள் நியாய மற்றவை என்று தோன்றும்பொழுது, அவ்வரிகள் சம்பந்தமாக புனராலோசனை செய்யவோ, மாற்றவோ, குறைக்கவோ, மாகாண அரசாங்கத்தாருக்கு விசேஷ அதிகாரம் இருக்க வேண்டுமென்று விரும்புகிறீர்களா ?

3. (a) தற்போது, சென்னை எஸ்டேட்ஸ் நிலச்சட்டத்தின் கீழ், வரி வசூல் சம்பந்தமாக, நிலச்சுவான் தாருக்குள்ள அதிகாரங்களில் ஏதாவது மாறுதல் இருக்கவேண்டுமென்று அபிப்பிராயப்படுகிறீர்களா ?

(b) மாறுதல்வேண்டுமாயின், எந்த முறையில் வேண்டும் ?

(c) வரி வசூல் சம்பந்தமாகவும், நில விற்பனை சம்பந்தமாகவும், நடவடிக்கைகள் சுலபமாகவும் குறைந்த செலவுள்ளதாகவும் இருக்க, என்ன ஏற்பாடுகளைச் செய்யவேண்டுமென்று நீங்கள் நினைக்கிறீர்கள் ?

II, III கேள்விகள், இரண்டாவது தொகுதியாகக் கருதப்பட்டு, ஆராய்ச்சி செய்யப்படும்.

தொகுதி III.—மூன்றாவது தொகுதி IV, VIII கேள்விகளைக்கொண்டுள்ளது.

IV கேள்வி பின்வருமாறு :—

(a) தண்ணீர் பாய்ச்சல் சம்பந்தமாக, குடியானவர்களுக்குள்ள உரிமைகள், நிலத்தைச் சார்ந்து நிற்கும் உரிமைகள், ஆதலின் குடியானவர்களுக்கு அவைகள் ஸ்வயமாக உள்ள உரிமைகள் என்று நினைக்கிறீர்களா—அல்லது, அவை, நிலச்சுவான்தார்களுக்கும் குடியானவர்களுக்கும் இடையே எழுந்த ஒப்பந்த விஷயம் என்று கருதுகிறீர்களா ?

(b) எஸ்டேட்டிலுள்ள தண்ணீர் மூலங்களில் (water sources) நிலச்சுவான்தாருக்கு மேலான உரிமையுண்டா ? ஆம், எனில், அவ்வுரிமையின் தன்மையென்ன ? விரிவு என்ன ?

VIII (a) கேள்வி பின்வருமாறு :—எந்தத் தத்துவங்களை ஆதாரமாகக்கொண்டு, ஜமீந்தார்கள், குடியானவர்கள், அல்லது நீதிஸ்தலங்கள், நீர்ப்பாசன மூலங்களையும், அமைப்புக்களையும் நிர்வஹிப்பதற்கு, தகுந்த திட்டத்தைத் தீர்மானிக்கவேண்டும் ?

(b) அவசியமான, தகுந்த ஏற்பாடுகளை, நிலச்சுவான்தார் செய்யத் தவறியபொழுது, நீர்ப்பாசன அமைப்புக்களை நிர்வஹிப்பதற்காவது, பழுது பார்ப்பதற்காவது, மாகாண அரசாங்கத்தாருக்கு அதிகாரம் இருக்கவேண்டுமென்று நினைக்கிறீர்களா ?

(c) அத்தகைய அதிகாரத்தை, ஜமீன்தார்கள், அல்லது குடியானவர்களின் விண்ணப்பத்தின் மேல், அரசாங்கத்தார் பிரயோகிக்கவேண்டுமா ? அல்லது தாமாகவே, அரசாங்கத்தார் உபயோகிக்கலாமா ?

IV தொகுதி.—சர்வே, உரிமைகளின் அடங்கல், இவை சம்பந்தமான 5-வது கேள்வியே நான்காவது தொகுதியாக ஆராய்ச்சி செய்யப்படும். 5-வது கேள்வி பின்வருமாறு :—

(a) எஸ்டேட்டுகள் யாவும் சர்வே செய்யப்பட்டு, ஒவ்வொரு எஸ்டேட்டிலும் கட்டாயமாக "உரிமைகளின் அடங்கல்" இருக்கவேண்டுமென்று அபிப்பிராயப்படுகிறீர்களா ?

(b) அவ்வாறாயின், செலவு தொகையில், இருதரப்பினரும், எவ்வளவு, எவ்வளவை பொறுத்துக் கொள்ளவேண்டும் ?

தொகுதி V.—VI கேள்வியில் பிரஸ்தாபிக்கப்பட்டுள்ள விஷயத்தையே, ஐந்தாவது தொகுதியாக ஆராய்ச்சி செய்வோம். நிலவரியைத் தவிர, மாமூலாகவாவது, வேறுவகையிலாவது, இதர வரிகளை நிலச்சுவான்தார் வசூலிக்கலாமா ?, என்பதே, VI கேள்வி.

தொகுதி VI.—7-வது கேள்வியில், (a), (b), (c) உட்பிரிவுகளில் பிரஸ்தாபிக்கப்பட்டுள்ள விஷயங்களையே VI தொகுதியாக பரிசீலனை செய்வோம். அதாவது, உரிமைகளையும், பிற விஷயங்களையும்பற்றி.

7-வது கேள்வி, பின்வருமாறு :—

(a) கால்நடை மேய்ச்சலுக்கும், கொளை தழை சேகரிப்பதற்கும், உழவுக்கருவிகளுக்கு மரம எடுத்துக் கொள்வதற்கும், ஆங்காங்குள்ள இயற்கை வசதிகளை பயன்படுத்திக்கொள்வதின் சம்பந்தமாக, குடியானவர்களுக்கு உள்ள உரிமைகள் என்ன ?

(b) தாங்கள் சொந்த விஷயங்களுக்கும், உழவு விஷயங்களுக்கும் விலை கொடுக்காமல் அவைகளை உபயோகப்படுத்திக்கொள்ள குடியானவர்களுக்கு, சுயமான உரிமை ஏதாவது உண்டா ?

(c) பொதுப் பாதைகளிலும், சமுதாய நிலங்களிலும், குன்றுகளிலும், காடுகளிலும், புறம்போக்குகளிலும், நிலச்சுவான்தார்களுக்கும் குடியானவர்களுக்கும் முறையே உள்ள உரிமைகள் என்ன ?

தொகுதி VII.—ஜமாபந்தி சம்பந்தமான 9-வது கேள்வியே VII தொகுதியாக ஆராய்ந்தறியப்படும். 9-வது கேள்வி பின்வருமாறு :—
ரயத்துவாரி கிராமங்களில் நடப்பது போல், வருஷாந்தர ஜமாபந்தி ஜமீந்தாரிப் பிரதேசங்களிலும் அவசியம் என்று நீங்கள் கருதுகிறீர்களா ?

தொகுதி VIII.—கீழ்க்குடிகள் (under-tenants) சம்பந்தமான 10-வது கேள்வியே எட்டாவது தொகுதியாய் பரிசீலனை செய்யப்படும். அது பின்வருமாறு :—

"கீழ்க்கண்ட விஷயங்கள் சம்பந்தமாக, ஜமீந்தாரிப் பிரதேசங்களில், கீழ்க்குடிகளுக்குள்ள சட்டபூர்வமான அந்தஸ்து என்ன ?" :—

(1) பட்டாதார்.

(2) ஜமீந்தார்.

தொகுதி IX.—தகுந்த கோர்ட்டுகள் யாவை என்று ஆராய்வது 9-வது தொகுதியாம். இதுவே 11-வது கேள்வியாகும்.

தொகுதி X.—பத்தாவது தொகுதியாகிய இறுதித் தொகுதியே 12-வது கேள்வியின் (a), (b) உட்பிரிவுகளை ஆராய்வது. 12-வது கேள்வி பின்வருமாறு :—

(a) நிலங்களைக் குடியானவர்கள் அனுமதியில்லாமல் அனுபவிப்பதின் சம்பந்தமாக ஜமீந்தாருக்குள்ள பரிஹாரங்கள், நிவாரணங்கள் என்ன ?

(b) இனும்தார்களிடமிருந்து ஜமீந்தார்கள் வசூலிக்கும் ஜோடி, பொறுப்பு, கட்டுபடி, இவை சம்பந்தமாக சட்டமாறுதல் ஏதாவது வேண்டுமா ?

சௌகர்யத்திற்காக, திருத்தி அமைக்கப்பட்ட இத்தொகுதிகளை, மேலே தெரிவிக்கப்பட்ட கிரமத்தில் ஆராய்வோம்.

தொகுதி I.—நிலத்தின் சொந்தக்காரன் யார் ?

முதற் தொகுதியை, பல உட்பிரிவுகளாக ஆராயவேண்டும் :—

(a) ஜமீந்தார் என்பவர் யார் ?

(b) 1802-வது வருஷத்திய சாசுவத நிர்ணயத்திற்கு முன்பு, அவர் நிலைமை என்ன ? அதன் பிறகு, அவர் அடைந்த நிலைமை என்ன ?

(c) 1802-வது வருஷத்திய சாசுவத நிர்ணயத்திற்கு முன், ஜமீந்தார் நிலத்திற்குச் சொந்தக்காரரா யிருந்தாரா ? இல்லையென்றால் சாசுவத நிர்ணயத்தில் கண்ட ஏற்பாடுகளின் பிரகாரம் அவர் அவ்வாறு (நிலத்திற்குச் சொந்தக்காரர்) ஆனரா ?

(d) 1802-வது வருஷத்திய சாசுவத நிர்ணய ரெகுலேஷனுக்கு முன்பும், பட்டா ரெகுலேஷனுக்கு முன்பும், குடியானவனுடைய நிலைமையென்ன ?

(e) நிலச்சுவான்தார், குடியானவர்கள் ஆகிய உபய தரப்பினர்களின், பாத்தியதைகள், பொறுப்புகள் சம்பந்தமாக, 1865-வது வருஷத்திய VIII-வது சட்டமும், 1908-வது வருஷத்திய I-வது சட்டமும், என்ன பலாபலன்களை விளைத்தன ?

(f) ஜமீன்தார்கள், குடியானவர்கள் ஆகிய இருதரப்பினர்களுடைய பாத்தியதைகள், பொறுப்புகள் சம்பந்தமாக, கீழ்க்கண்ட காலங்களில் இயற்றப்பட்ட சட்டங்களின் பலாபலன்கள் என்ன ? :—

(1) 1802-வது, 1865-வது வருஷங்களுக்கிடையே,

(2) 1865-வது, 1908-வது வருஷங்களுக்கிடையே,

(3) 1908-வது, 1938-வது வருஷங்களுக்கிடையே.

அதாவது, விளங்கக்கூறில், 1802-வது வருஷத்திலிருந்து 1938-வது வருஷம் வரை, அல்லது அதற்கு முன்னரே, குடியானவனுடைய, அல்லது ஜமீந்தாருடைய, உரிமை, ஹக்கு, பாத்தியம், வெகுவாக, மாற்றப்பட்டனவா ?

முதன்முதலாக, (a) பூர்வத்தில் ஜமீந்தாரின் நிலைமை என்ன, தற்போது, அவர் நிலைமை என்ன, என்பதை ஆராய்வோம்.

வட சர்க்கார் பிரதேசங்களிலுள்ள ஜமீந்தார்கள்—நிலத்திலுள்ள உரிமை.

சென்னை ராஜதானி ஜமீந்தார்களின் பூர்வமும், வங்காள ராஜதானி ஜமீந்தார்களின் பூர்வம்போன்றதே. சென்னை ராஜதானி ஜமீந்தார்களை பின்வரும் வகுப்புகளாகப் பிரிக்கலாம் :—

(1) ஆதிகாலத்து ஜமீந்தார்கள்.

(2) ஆதிகாலத்து பாளையக்காரர்கள்.

(3) ஹவல்லி எஸ்டேட்களை வாங்கினவர்கள்.

(4) ஜாகீர்தார்கள், முதலியோர்.

மேற்கூறிய ஒவ்வொரு வகுப்பினருடைய சரித்திரத்தையும் ஆராய்வோம்.

ஆறுவது நூற்றாண்டிலே, மகமதிய அரசர்கள் தேசத்தை அரசாள ஆரம்பித்த காலத்தில், அவர்கள் அதற்குமுன் ஹிந்து அரசர்களின் கீழ் வேலை பார்த்துவந்த பழைய அதிகாரிகளை விலக்கிவிடவில்லை ; அவர்களுடைய ஸ்தானத்திற் தங்கள் சொந்த அதிகாரிகளை நியமிக்கவில்லை. உண்மையில், ஹிந்து அரசர்களால் ஸ்தாபிக்கப்பட்ட ஆட்சிமுறை, உத்தியோகங்கள், இவைகளில் அவர்கள் பொதுவாகத் தலையிடவில்லை. ஹிந்து அரசர்களின் காலத்து, தேஷ்முக்கள், தேசபாண்டியாக்கள், வரிவசூல் செய்பவர்கள், வட்டாரக் கணக்குப்பரிசோதகர்கள், தலையாரிகள், கிராமக்கணக்குப் பிள்ளைகளாகிய கர்ணங்கள், ஆகிய அதிகாரிகள், இருந்து வந்தனர். இந்த உத்தியோகங்கள் யாவும், சாசுவதமாகவும், பரம்பரையாகவும் இருந்து வந்தன. இவர்களை, மகம்மதிய அரசர்கள் தங்கள் அதிகாரிகளாக, பழையபெயர்களுடன், தத்தம் கடமைகளை யதாப்பிரகாரம் செய்துவர அனுமதித்தார்கள்.

இவர்களிற் சிலர், தாங்கள் அதிகாரம் செலுத்திவந்த பிரதேசங்களை, சில ஒப்பந்த நிபந்தனைகளின் மேல் எடுத்துக் கொள்ள அனுமதிக்கப்பட்டனர். இவர்களே ஜமீந்தாரென அழைக்கப்பட்டனர். "சௌதரி" (ஹிந்து), "குரோரி" (மகம்மதிய), "ஜமீந்தாரி" என்னும் சொற்கள் ஒரு பொருளைத் தெரிவிப்பன. ஜமீந்தாரென முடிவாக வழங்கப்பட்ட பதம் அவர்களுடைய அந்தஸ்தை அர்த்தம் செய்து கொள்வதற்கு ஒருவாறு ஹேதுவாயிருந்தது.

ராஜபுதனத்தில் இந்தப்பதத்தின் பொருள் : நிலத்தை உடையவர், நிலத்தை உழுபவர், என்பதைத் தவிர வேறல்ல.

"ஜமீந்தார்" எனும் சொல்லின் பூர்வோத்தரமும் பொருளும் அத்தன்மைத்து. (கிருஷ்ணா ஜில்லா மானுயல், பக்கம் 343 பார்க்கவும்).

மேற் கண்டவாறு, ஒரு தேஷ்முக், ஒரு தேஷ்பாண்டியா, ஒரு வரி வசூல் செய்பவர், ஒரு வட்டாரத்தின் கணக்குப் பரிசோதகர் கூட, ஒப்பந்தத்தின்படி ஜமீந்தாராஞர். இப்படிப்பட்ட ஒப்பந்தங்களைச் செய்து கொண்டகாலத்தில், எஸ்டெட்டுகளில் குடியானவர்கள் வெகுகாலமாக இருந்து வந்தனர். ஒப்பந்தச்சட்டம் **(Contract Act)** ஒன்றும் அக்காலத்தில் அமுலில் இல்லை. "ஒப்பந்தம்" என்பதன் பொருள் இதைத்தவிர வேறல்ல. அதாவது, ஏதோ ஒரு ஊதியத்திற்கு, அரசாங்கத்தின் வரி வசூலிப்பவராக வேலை செய்ய உடன்படுவதே யன்றி பிறிதில்லை. பேடன் பௌவல் துரை இதுசம்பந்தமாக பின்வருமாறு கூறுகிறர் :—

"மகம்மதிய சர்க்கார் ஜமீந்தார்களை நியமித்த காலத்தில், அவர்களுக்கு நிலத்தில் ஆதிபத்ய (சொந்தக்கார) உரிமையைக்கொடுக்க எண்ணவில்லை. ஜமீந்தார் நியமனம், ஒன்றையும் விளக்கி; வரையறுத்துக்கூறவில்லை ; ஜமீந்தாரால் என்ன வசூலிக்க முடியுமோ, அல்லது எதை நியாயமாய் வசூலிக்கலாமோ, அதை வசூலிக்க அனுமதித்தது ; ஜமீந்தாரை, முக்கியமாக, வரி வசூல் செய்பவராகவே (சில ஊதியங்கள், கிராமங்களுடன்) கருதினது."

இம்மாதிரியாக, ஜமீந்தார்கள் (வரிவசூல் செய்பவர்கள்) காடுகளுக்கும் குன்றுகளுக்கும் நியமிக்கப்பட்டனர். ஹாவலி நிலங்கள் என்ற "மட்டாக்களையும்" நிலத்தொகுதிகளையும் விலைக்குவாங்கி ஜமீந்தார்களான மற்றொரு வகுப்பினர் இருந்தனர்.

கிருஷ்ணா ஜில்லாவைப்பற்றினவரை, **"ஜமீந்தார்"** என்னும் பதத்தின் பொருளும் "ஜமீந்தாரின்" பூர்வோத்தரமும் மேற்கூறியவாறு. பின்னர் கோதாவரி ஜில்லாவைப்பற்றி ஆராய்வோம்.

இப்பிரதேசத்தில்கூட, மகமதிய அரசரின் கீழ், நிலத்தில் யாதொரு உரிமையும் இல்லாத, வெறும், வரிவசூலிப்பவராகவே, ஜமீந்தார் இருந்து வந்திருக்கிறர். தாம் எழுதிய "நில ஆட்சி முறைகள்" எனும் நூலில் (தொகுதி III, பிரிவு 4, பக்கம் 133), ஜமீந்தாரின் ஹோதாவைக்குறித்து, பாடென் பௌவல் துரை பின்வருமாறு தெரிவித்துள்ளார் :—

கோதாவரி ஜில்லாவில், ஜமீந்தார்களின் பூர்வோத்தரம்.

ஆட்சிப்பொறுப்பின் சின்னங்களேயன்றி, ஆட்சிப்பொறுப்பின் ஞாபகம் கூட சிதைந்தொழிந்து, அரசாங்கம் க்ஷீணதசையை அடைந்த பிற்காலங்களில், கோதாவரி ஜில்லாவில் ஜமீந்தார்கள் யதேச்சாதிகாரத்தைக் கைப்பற்றினலும் கூட, அவர்கள் மகம்மதிய அரசர்களின் ஏஜெண்டுகளாகவே இருந்து வந்தனர் ; பழைய ஹிந்து அரசர்களின் சந்ததியினராய் இருந்தாலும் கூட, மகம்மதிய அரசர்கள் அவர்களை (ஜமீந்தாரர்களை) தங்களிஷ்டம்போல் வைப்பதும், நீக்குவதும், கீழ்ப்படியாமைக்குத்தண்டனையாக பதவியினின்று விலக்குவதுமாகச் செய்து வந்தனர்.

கஞ்சம், விசாகப்பட்டணம் ஜில்லாக்களின் ஜமீன்தார்களுடைய பூர்வோத்தரம்.

கஞ்சம் விசாகபட்டணம் ஜில்லாக்களில் :—கிருஷ்ணா, கோதாவரி ஜில்லாக்களைப்போலல்லாமல், கஞ்சம், விசாகபட்டணம் ஜில்லாக்களில், "ஜமீந்தார்" எனும் பதத்தின் பொருளும் ஜமீந்தாருடைய பூர்வோத்தரமும் மாறுபடுகின்றனவா என்று ஆராய்வோம். பொருளும், பூர்வோத்தரமும் இங்கும் அத்தன்மைத்தே என்பதை, சர்கூட் கமிட்டி நடவடிக்கைகளிலிருந்து (பக்கம் 12, 13) எடுக்கப்பட்டுள்ள ஒரு வர்ணனை நன்கு விளக்குகிறது :—

பழைய ஹிந்து அரசர்களிடமிருந்து மொகலாய அரசர்களாலும் அவர்களுடைய பிரதிநிதிகளாலும் வெல்லப்பட்ட நாட்டின் பகுதியை நிர்வஹிக்க, பொதுவாக, க்ஷத்திரியர்கள், அல்லது ராஜகுல ஹிந்துக்கள் நவாபுகளால் நியமிக்கப்பட்டு சௌபாவால் ஸ்திரப்படுத்தப்பட்டனர். மொகலாய அரசர்களின் பிரதிநிதிகள், பெரும்பான்மையாக, நசித்து அரச குடும்ப உறவினர்களாகவும், வாள் வீரர்களாகவும், எளிதிற் சீற்றங்கொள்பவர்களாகவும், சமாதான முறைகள், தொழில்கள் அறியாதவர்களாகவும், அறிந்துகொள்ள மனக்கிளர்ச்சி இல்லாதவர்களாகவும், இருந்தபடியால் மேற்படி சாகஸவீரர்கள் தாங்கள் புதிதாக வென்ற நாட்டின் பகுதியை, திறமை வாயந்த ஹிந்துக்களிடம் ஒப்புவித்து, வழக்கம் போல் தங்கள் மதத்தையும் பழக்க வழக்கங்களையும் அனுசரித்துப்போற்ற அனுமதித்தனர். ஆனல் முக்கிய நிபந்தனை ஒன்றை விதித்தனர். அதாவது, வரிவசூல் செய்வது சம்பந்தமாக ஏற்படும் செலவுத் தொகைகளையும், வசூலிப்பதில் 100க்கு 10 ஊதியத்தொகையையும் (கமிஷன்) எடுத்துக்கொண்டு பிறகு, எஞ்சிநிற்கும் நிலத்தின் விளைச்சல் முழுவதையும் கொடுத்து விடுவது. ஜமீந்தார்கள், முதன் முதலாக இவ்வாறு நியமிக்கப்பட்டதாகத்தெரியவருகிறது. ஜமீந்தார்கள் தங்கள் ஜாக்கிரதையாலும், சிக்கனத்தாலும், விரைவில் செல்வந்தர்களாகி, மஜும்தாரின் (ஹிந்து அதிகாரி) சஹாயம் பெற்று, தங்கள் சாமாத்திய உபாயங்களாலும் தங்கள் பணத்தைத் திறமையாகச் செலவழிப்பதாலும், நவாப்களை ஏமாற்றியோ அல்லது அவர்களுக்கு லஞ்சம் கொடுத்தோ தங்கள் வருமானத்தைப் பற்றி பொய்யான அபிப்பிராயங்களைத் தெரிவித்தும் இன்னும் அதிகமான பிரதேசங்களைப்பெற்று தாங்கள் செலுத்தவேண்டிய பணத்தை தங்கள் சவகாசம் போல் அனுப்ப அனுமதியடைந்தும்,

இவ்வாறாக, தங்கள் செல்வாக்கைப் பெருக்கிக் கொள்வார்களானார்கள். ஆனால், கேள்வியில்லாமல் யதேச்சாதிகாரம் பெறவாவது, அரசாட்சிபுரியவாவது அனுமதிக்கப்பட்டார் என்று எங்கும் காணப்பட்டவில்லை. ஏனெனில், பலகட்டுப்பாடுகள், முதலிய தடைகளால் அவர்கள் என்றும் அடக்கப் பட்டுவந்தனர்.

இதிலிருந்து, வட சர்க்காரிலுள்ள (தெலுங்குப் பிரதேசம்) ஜமீந்தாரர்கள், புதிதாக வெல்லப்பட்ட நாட்டின் "பரகானங்களை" அல்லது பல பகுதிகளை நிர்வஹிப்பதற்கும், அரசாங்கத்திற்குச்செலுத்தவேண்டிய வரிகளை வசூல் செய்வதற்கும், மகம்மதிய அரசர்களாலும், அவர்களின் பிரதிநிதிகளாலும் நியமிக்கப் பட்ட நிர்வாஹிகள் (மானேஜர்கள்) என்பது, நன்கு விளங்குகிறது.

தெற்கே, ராமநாதபுரம் முதலிய ஜமீன்களும், வடக்கே வெங்கடகிரியும், காளஹஸ்தியும் சிற்றரசுகள்.

இதுவரை "சர்க்கார்" பிரதேசங்களிலுள்ள ஜமீன்களைப்பற்றி ஆராய்ச்சி செய்தோம். சிறந்த மூலங்களிலி ருந்து சேகரிக்கப்பட்ட தகவல்களைக்கொண்டு, ஜமீந்தார், அரசாளுபவர்கள் சார்பாக, ஒரு நாட்டின் பகுதியை நிர்வஹிப்பவர், அல்லது வரி வசூலிப்பவர் தவிர வேறல்லா என்றும், தன்னுடைய சொந்த ஹோதாவில் அவருக்கு சுயமான உரிமை இல்லையென்றும் கண்டோம். கிழக்கு இந்தியா கம்பெனி; நாட்டை ஆள ஆரம்பித்த வெகுகாலம் வரைக்கும்கூட, ஜமீந்தார், வரி வசூலிப்பவராக இருந்து வந்தார்.

தெற்கிலிலுள்ள ஜமீந்தார்கள்—நிலத்திலுள்ள உரிமை.

தென்னாட்டுப் பாளையங்களின் மூலம்.

தென் ஜில்லாக்களிலுள்ள ஜமீன்களைப்பற்றியும் பாளையங்களைப்பற்றியும், நாம் இப்பொழுது ஆராய்வோம் முதலாவது, பாளையங்களை எடுத்துகொண்டு, அவைகளைப்பற்றி சுருக் கமாகவும், பொதுவாகவும் ஆராய்வோம்.

பாளையங்களின் உடையவர்களாகிய பாளையக்காரர்கள், தங்கள் பாத்தியமுறை, சிற்றரசு போன்ற தாக இருந்தாலும், ஆதலின் சாசுவத நிர்ணயத்திற்கு முன்னுள்ள வட சர்க்கார் ஜமீந்தார்களினின்று, வேற்பாடுள்ளவர்களானாலும், சாசுவத நிர்ணயத்திற்குப் பின், அவர்களும் ஒரே வகுப்பில் சேர்க்கப்பட்டு, சன்னதுகள், காபூலியத்துகள் மாற்றிக்கொள்ளலானார்கள். அரசாங்கத்தார், தங்களுக்கு பாளையங்களை ஒப்புவிப்பதற்கு முன்பு, பாளையக்காரர்களுக்கு நிலத்தில் யாதொரு உரிமையும் இல்லை. கிராமங்கள் தங்களுக்கு மாற்றப்பட்டபோது, பாளையக்காரர்கள் அடைந்தது, மேற்படி கிராமங்களின், சர்க்கார் நில வரிவருமான மாற்று (ஒப்புவிப்பு) தான் தவிர, நிலத்தின் உரிமையை, அல்லது உடைமையைப் பெறவில்லை. ஏனெனில், அரசாங்கத்திற்கே (சர்க்காருக்கே) அப்படிப்பட்ட நிலவரி உரிமை, அல்லது நிலத்தின் உடைமை ஒன்றும் கிடையாது. மதுரை நடுநகரத்தில் நாங்கள் விசாரணை நிகழ்த்தியபோது, பல பாளையங்களின் சம்பந்தமாக, பாளையக்காரர்கள் சார்பாகவும், குடியானவர்கள் சார்பாகவும், சாக்ஷியம் பதிவு செய்யப்பட்டது. அவைகளிற் சில பின்வருமாறு :—

தென்னாட்டுப் பாளையங்கள்.

கன்னிவாடி.	ஏழுமலை.
போடிநாயக்கனூர்.	அம்மையநாயக்கனூர்.
இடையக்கோட்டை.	எரசக்கநாயக்கனூர்.
பாவலி.	எட்டயாபுரம்.
தேவாரம்	சாப்டூர், முதலியன.
ஆயக்குடி.	

மேற்கிலுள்ள பாளையங்கள்.

வெங்கடகிரி.	காளஹஸ்தி முதலியன.

1802-வது வருஷத்திய சாசுவத நிர்ணயம், தென்னாட்டுப்பாளையங்களைப் பொறுத்தமட்டில் அத்துணை வெற்றி பெறவில்லை. 1802-வது வருஷத்தினின்று, 1805-வது வருஷம் வரை, திண்டுக்கல் பிரதேசத்தில், ஒரு பொருளாதார நெருக்கடி உண்டாயிற்று. முதலாளிகளெல்லாம் நசித்து பொருளிலிகளானார்கள் ; எஸ் டேட்டுகளிலெல்லாம் ஏராளமான பேஷ்கஷ் பாக்கிகள் நின்றுவிட்டன. (மதுரை நாட்டு மானுயல், பக்கம் 56, 57, 58) மேற்படி க்ஷீணதசையின் காரணங்களைப் பரிசீலனை செய்ய ரெவினியூ போர்ட் அங்கத்தினரான ஹாட்க்ஸன் துரை அனுப்பப்பட்டார். அதுசம்பந்தமாக, அகண்ட விசாரணை ஒன்றை விரிவாக நன்கு ஆராய்ச்சி செய்து, பாளையங்களின் சரித்திரத்தை பின்வருமாறு தெரிவித்தார் :—

பாளையங்கள்.

"தொன்று தொட்டே, இந்தியாவில், ஒரு மகாணத்தைச் சேர்ந்த, நிலம் முழுவதும், சாகுபடி செய்யபட் டதாயிருந்தாலும், சாகுபடி செய்யத்தகுந்ததாயிருந்தாலும், தரிசு, காடு, குன்றுகளாக இருந்தாலும், குறிப்பிட்ட கிராமங்களிற் சேர்க்கப்பட்டு வரையறை செய்யப்பட்டிருந்தன. ஆதலின், நிலங்கள் யாவும் ஒரு குறித்த கிராமத்தின், நான்கு எல்லைக்குள் அடங்கியிருந்தன. ஒரு மாகாணத்தின், எல்லா கிராமங்களுடைய பூரண விஸ்தீரணமே, ஒரு குறித்த மகாணத்தின் பூர்த்தியான நிலப்பரப்பாகும்.

திண்டுக்கல் பிரதேசத்திலிருந்த கிராமங்கள், "சர்க்கார்" கிராமங்களென்றும், "பாளையப்பட்டு" கிராமங் களென்றும் இருவகைகளாக இருந்தன ; சர்க்கார் கிராமங்களில், வரிவருமானத்தை, அல்லது விளைச்சலில், சர்க்கார் பங்கையாவது வசூலிக்க, ஸ்தலத்திலுள்ள அதிகாரிகளைத்தவிர இதர இடை ஏஜன்டுகள் கிடையாது ; பாளையப்பட்டு கிராமங்களில், கிராமங்களின் பூரா வரி வருமானமும், வரி வசூல் சம்பந்தமான அதிகாரக் கட்டுபாடும் பாளையக்காரர்களுக்கு மாற்றப்பட்டு, அவர்களிடம் ஒப்புவிக்கப்பட்டது. இது, காவல் கடமைகளுக் கும், சிற்றரசுக்கடமைகளுக்கும், பிரதிப்பயனாகக் கொடுக்கப்பட்டது. பாளையக்காரர்கள், "பேஷ்கஷ்" என்னும் கப்பங்கட்டிவந்தனர். இந்த "பேஷ்கஷ்", விளைச்சலின் சர்க்கார் பங்கை விட, சற்று குறைச்சலாயிருந்தது. ஏனெனில், சிற்றரசுபோன்ற பாளையக்காரர் அல்லது "காவல்காரர்" தாம் செய்யும் சேவகத்திற்காக ஒரு பகுதியை எடுத்துக்கொண்டமையால், பாளையங்களைத்தவிர, சர்க்கார் கிராமங்களில் "காவலிமானியங் கள்" என்ற நிலங்களையும், பல பாளையக்காரர்கள் அனுபவித்து வந்தனர். கிராமங்கள், தங்களுக்குப்பாளைய ங்களாக மாற்றப்பட்டபோது, பாளையக்காரருக்கு பூமியில் யாதொரு உரிமையாவது, அனுபவபாத்யதையாவது கிடையாது. அம்மாதிரி உரிமையை அவர்கள் ஒருபொழுதும் கொண்டாடவில்லை. "காவலி" சேவகத் திற்காக, பாளையக்காரர்களுக்கு, கீழ்த்தரமாக சாகுபடி செய்யப்பட்ட கிராமங்களும், காடடர்ந்த பூமிகளும், எல்லைப்பிரதேசங்களுமே மாற்றப்பட்டன. தங்கள் சொந்த உபயோகத்திற்காக உயர்ந்த தானியங்களைப்

பயிர் செய்யவும், தங்கள் வருமானங்களை அதிகரித்துக் கொள்ளவும், சிலசமயங்களில் நல்ல நிலங்களும் அவர்களுக்குண்டு. தங்கள் நிலங்களை முதலிலும், சர்க்கார் நிலங்களை இரண்டாவதாகவும், பயிர் செய்யும்படி சர்க்கார் கிராம வாசிகளை நிர்பந்தப்படுத்த அதிகாரமும் சில சமயங்களில் இருந்தது. அரசாங்கம் பலஹீனம், அடைந்து, பாளையக்காரர்கள் பலாஷ்டிகர்களாக இருந்தகாலங்களில் அவ்வாறு நிகழ்ந்தது. தங்கள் அதிகாரமுறைப்பிரகாரம், பிறநாட்டு யுத்தங்களுக்கும், உள்நாட்டு போலீஸ் கடமைகளுக்கும், தங்கள் கீழிருந்த சேவகர்களுக்கு, சம்பளத்திற்காக, நிலங்களை விடுவதும் உண்டு. பாளையங்களில் பெரும்பான்மையானவை, பரந்து, வெகுவாக, காலியாக இருந்தபடியால், பழைய குடியானவர்களுக்கு தொந்தரவு கொடுக்காமல், நிலங்களைச் சேவர்களுக்கு விட சாத்தியமாக இருந்தது. தங்கள் நிலங்களிலிருந்து குடியானவர்கள் பலவந்தகமாக நீக்கப்பட்டால், அது அநியாயம் என்றே எப்பொழுதும் கருதப்பட்டது. பாளையக்காரரின் நியாயமான உரிமை, அல்லது அதிகாரம் என்று கருதப்படவில்லை."

மேற்கூறிய விஷயங்களினின்றும் நன்கு புலப்படுவது என்னவென்றால்: கிராமங்கள் பாளையங்களாக கொடுக்கப்பட்டபோது, பாளையக்காரர் அடைந்தது, சர்க்காருக்குச் சேரவேண்டிய நிலவரி வருமானத்தின ஒரு பகுதியே (நிலத்தில் யாதொரு உரிமையும் அல்ல). மாதாந்தர சம்பளத்திற்கு பதிலாக, அவ்வாறு கொடுக்கப்பட்டது. ஒரு சேவகத்திற்கு மதாந்தர சம்பளம் கொடுப்பதற்கு பதிலாக, நிலவரியை அனுபவிக்கவிடுவது, இந்தியாவில் வெகு சாதாரண வழக்கமாக இருந்தது. சிப்பாய்களின் ஜீவனம்சத்திற்கும், மதஸ்தாபன நிர்வஹிப்பிற்கும், மடப்பள்ளிச் செலவிற்கும், அடைப்பக்காரன் சம்பளத்திற்கும், உள்நாட்டு உத்தியோக வெகுமதியாகவும், யுத்தவுழைப்பிற்கு வெகுமதியாகவும், வைப்பு மாதர்கள் வாழ்கைச்செலவிற்கும்; நிலவரியை அனுபவிக்கும் பாத்தியம் கொடுக்கப்பட்டு வந்தது.

திண்டுக்கல் பிரதேசத்தில், கிராம பரிபாலன முறை.

பிற மாகாணங்களில் இருந்ததைப்போலவே, திண்டுக்கல் கிராமங்களிலும் அதே உட்பரிபாலனமுறை இருந்துவந்தது; கிராமவாசிகளில் ஒரு பகுதியினர் அதாவது நாட்டாண்மைக்காரர்கள் அல்லது மஹாஜனங்கள் (கிராமப் பெரியார்கள்) சில நிலங்களை வரியில்லாமல் அனுபவித்துவந்தனர். எஞ்சிய நிலங்களை அவர்கள் பரம்பரையாக ஆண்டு அனுபவித்துவந்தனர்.

இதனின்றும், பாளையக்காரர்கள், நிலவரிக்கு பாத்தியஸ்தர்களே தவிர, நிலத்திற்குச் சொந்தக்காரர்கள் அல்ல என்பது நன்கு விளங்கும். அப்பேர்ப்பட்ட பாத்தியதையை சென்ற காலத்தில் அவர்கள் கொண்டாடவும் இல்லை.

மதுரை, ராமநாதபுரம், திருச்சிராப்பள்ளி ஜில்லாக்களிலுள்ள பாளையங்கள் யாவும் அப்படிப்பட்டவைகளே. திருச்சிராப்பள்ளி ஜில்லாவிலுள்ள பாளையங்கள் பின்வருமாறு :—

உடையார்பாளையம், அரியலூர், துரையூர், மருங்காபுரி, கடவூர், காட்டுப்புத்தூர். காட்டுப்புத்தூர் ஒரு மிட்டாவாகும். இவைகளைப்பற்றி கமிட்டி திருச்சிராப்பள்ளியில் விசாரித்தது. மேற்கூறிய திருச்சிராப்பள்ளி ஜில்லா ஜமீன்கள், பாளையங்கள் இவைகளின் சரித்திரத்தைப்பற்றி சுருக்கமாக ஆராய்வோம்.

திருச்சிராப்பள்ளி ஜில்லா ஜமீன்கள், பாளையங்கள், இவைகளின் சரித்திரம்.

திருச்சிராப்பள்ளி கஜெட்டியரினின்றும் எடுக்கப்பட்டுள்ள பின்வரும் ஸாராம்ஸம், எஸ்டேட்டுகளின் தன்மையைப்பற்றியும், பேஷ்கஷ் என்ன ஆதாரத்தின்மேல் நிர்மாணிக்கப்பட்டதென்பதையும் விளக்குகிறது. தங்கள் எஸ்டேட்டுகளிலிருந்து ஒரு காலத்தில் விலக்கப்பட்ட பாளையக்காரர்களுக்கு, தாங்கள் அனுபவித்துவந்த எஸ்டேட்டுகள், பிறகு, பூராவும் திருப்பிக்கொடுக்கப்படவில்லை. ஜமீந்தாரி அனுபவமுறைப்பிரகாரம், ஒவ்வொரு பாளையத்தினின்றும் ஜமீந்தாருக்கு என்ன கிடைக்கவேண்டுமோ, அதைத் தரக்கூடிய சில கிராமங்களைமட்டும், பாளையக்காரர்களுக்குத் திருப்பிக்கொடுக்க, அரசாங்கத்தார் முடிவாகத்தீர்மானித்தனர்.

கீழ்க்கண்ட விஷயம் திருச்சிராப்பள்ளி ஜில்லா கஜெட்டியரினின்றும் (பகுதி I, அத்தியாயம் II, பக்கங்கள் 236, 238) எடுக்கப்பட்டிருக்கிறது :—

ஜமீந்தாரி நிலம்—திருச்சினுப்பளி ஜில்லா.

இந்த ஜில்லாவிலுள்ள ஜமீன்கள்: பழய பாளையங்களாகிய அரியலூர், உடையார்பாளையம் (உடையார்பாளையம் தாலுகாவில்), மருங்காபுரி, கடவூர் (குளித்தலைத் தாலுகா), துறையூர் (முசிரி), ஆண்டிப்பட்டி (கரூர் தாலுகா), காட்டுப்புத்தூர் மிட்டா (முசிரி), இனனும் பலநாமக்கல் மிட்டாக்கள். இவைகளில், மிட்டாக்கள் யாவும், சாசுவத நிர்ணயத்திற்குப்பின்னர் பிரிட்டிஷாரால் வகுக்கப்பட்டன. சாசுவத நிர்ணயம் அநுசரணையிற் கொண்டுவரப்பட்ட சேலம் ஜில்லாவில், மேற்கூறிய மிட்டாக்கள், முதலில் இருந்தன. 1851-வது வருஷத்திலே காட்டுப்புத்தூர் மிட்டா சேலம் ஜில்லாவிலிருந்து திருச்சினுப்பள்ளி ஜில்லாவுக்கு மாற்றப்பட்டது. பழய பாளையங்கள் யாவும் பிரிடிஷ் ஆட்சிக்குமுன், பழய அரசர்களால் பாளையக்காரர்களுக்குக் கொடுக்கப்பட்டன. அதாவது, வெகுவாக, மதுரை நாயக் அரசர்களால், ஏதாவதொரு சேவக மானியமாகக் கொடுக்கப்பட்டன. XV அத்தியாயத்தில், பாளையங்களின் பூர்வீக சரித்திரம் சுருக்கமாக வரையப்பட்டிருப்பதைக் காணலாம்.

இப்பழைய பாளையங்கள் சம்பந்தமாக பிரிட்டிஷார் செய்த ஏற்பாடுகள் ஒரே ரீதியானவைகள் அல்ல. பலவகைப்பட்டவை. ஆண்டிப்பட்டி (சமீபகாலம்வரை, கோயம்புத்தூர் ஜில்லாவைச் சேர்ந்திருந்தது), மருங்காபுரி, கடவூர் இவைகள் 1856-வது வருஷம் வரை மதுரை ஜில்லாவில் சேர்ந்திருந்தன. பிரிட்டிஷ் ஆட்சியின் தொடக்கத்திலே, மதிப்பிடப்பட்ட மொத்த வருமானத்தில் 100-க்கு 70, பேஷ்கஷ் தொகையாக வரையறுக்கப்பட்டு நிர்மாணம் ஆனது; மருங்காபுரி சம்பந்தமாக, பாத்திய வழக்குகள் கோர்ட்டில் நடந்து வந்தன. ஆதலின் அந்த எஸ்டேட்டுக்கு, 1906-வது வருஷத்தில்தான் சன்னது வழங்கப்பட்டது. ஆண்டிப்பட்டிக்கும் கடவூருக்கும், 1871-வது வருஷத்தில் சன்னதுகள் வழங்கப்பட்டன. இப்பாளையக்காரர்களின் உரிமையைப்பற்றி கொஞ்சகாலம் சந்தேகம் இருந்துவந்தது. 1871-வது வருஷத்தில் பிரிவீ கௌன்ஸிலார், மருங்காபுரி ஜமீன் (இதற்குச் செல்வது மற்றவைக்கும் செல்லும்) பரம்பரை ஜமீன் என்றும், அந்த ஜமீன் அதிபதியின் உரிமை (பட்டம்) யை மாற்றுவதற்காவது, ரத்து செய்வதற்காவது அரசாங்கத்தாருக்கு அதிகாரம் இல்லையென்றும், தீர்ப்புச் சொன்னார்கள். ஆண்டிப்பட்டி ஜமீன் வெகுகாலத்திற்கு முன்பே பலவாகப் பிரிக்கப்பட்டுவிட்டது. ஆனால், மருங்காபுரியும், கடவூரும் பிரிக்கக்கூடாத ஜமீன்களா (அவிபக்த ஜமீன்கள்) யின (1904-வது வருஷத்திய II-வது சட்டப்படி).

மற்ற ஜமீன்களைப் போலல்லாது, துரையூர், உடையார்பாளையம், அரியலூர் ஜமீன்கள், கிழக்கிந்தியா கம்பெனியார் கர்நாடகப் பிரதேசத்தை, ஆர்காட் நவாபிடமிருந்து சேர்த்துக்கொண்டபொழுது, பாளையக்காரர்கள் வசம் இல்லை. இந்த பாளையக்காரர்கள் எல்லாரும், ஏதோ சில காரணங்களால் நவாபோடு பிணக்கங் கொண்டிருந்தனர். ஆங்கில ஆட்சித் தொடக்கத்திலே, தங்கள் ஜமீன்களை இழந்து, பலவகைப்பட்ட உபகார

சம்பளங்களைப்பெற்று காலம் கடத்துவாராயினர். தேசமானது கம்பெனி அரசாட்சியின்கீழ் வந்தபொழுது, முதல் கலெக்டர், இந்த பாளையக்காரருக்கெல்லாம் (ஜில்லாவில் அப்பொழுதிருந்த பாளையக்காரர்கள் அவர் களே) அவர்களுடைய எஸ்டேட்டுகள் ஜமீந்தாரி முறைப்பிரகாரம், திருப்பிக்கொடுக்கப்படவேண்டுமென்றும், மதிப்பிடப்பட்ட ஜமீனின் மொத்த வருமானத்தில் மூன்றில் இரண்டு பங்கு பேஷ்கஷ் தொகையாகச் செலுத்த வேண்டுமென்றும் சிபார்சு செய்தார். ஆனால் முதலில், இப்பாளையக்காரர்களின் உரிமைப்பட்டத்தை (டைடில்) அரசாங்கத்தார் அங்கீகரிக்க மறுத்து, கலெக்டரையே மேற்படி பாளையங்களை நிர்வஹிக்குமாறு கட்டளை இட்டனர். அதே சமயத்தில், பாளையங்களின் மதிப்பென்னவென்றும், அரசாங்கத்திற்கு பாளையக்காரர்கள் செய்த ஊழியம் என்னவென்றும், அந்த ஊழியத்தை, பணத்தொகையிற் எவ்வளவு பெறுமென்று தீர்மானிக்கவேண்டுமென்றும், ஒரு விசாரணை நடத்தக் கட்டளையிட்டனர். கர்நாடகப் பிரதேசத்தை கம்பெனி யார் சேர்த்துக்கொண்ட தினத்தினின்றும், பாளையக்காரர்களுக்கு தங்கள் பாளையங்களின் மதிப்பில் 100-க்கு பத்து ஜீவனாம்சைக்குக் கொடுத்துவரவும் கட்டளையிட்டனர். பாளையங்களைத் திருப்பிக் கொடுத்தல் பல காரணங்களால், யுக்தமல்லவென்று ரெவினியூ போர்டார் 1814-ம் வருஷத்தின் அரசாங்கத்தாருக்குத் தெரி வித்து, அதற்கு பதிலாக, ஜமீந்தாரி முறைப்படி மேற்படி தொகையைத் தரக்கூடிய கிராமங்களை ஒரு தொகுதியாகக் கொடுக்கச் சிபார்ஸு செய்தனர். இது 1816-ம் வருஷத்தில் அரசாங்கத்தாரால் அங்கீகரிக்கப் பட்டது ; எஸ்டேட்டுகளிலிருந்து வரக்கூடிய மொத்த வருமானம் கணக்கிடப்பட்டது ; மேற்படி கணக்கிடப்பட்ட மொத்தவருமானத்தில் மூன்றிலொருபங்கைத் தரக்கூடிய கிராமங்கள் பாளையக்காரர்களுக்குத் தரப்பட்டன. அதே சமயத்தில், பாளையக்காரர்கள் செய்துவந்த போலீஸ் கடமைகள் ஒழிக்கப்பட்டன. பாளையக்காரர்கள் காவல் பணங்களை, இனிமேல் வசூலிக்கக்கூடாதென்று முடிவு செய்யப்பட்டது. 1816-ம் வருஷம் டிசம்பர்மீ 23உ ஜமீந்தாரி சன்னதுகள் வழங்கப்பட்டன. 1904-ம் வருஷம், II-வது சட்டப்படி துரையூர், உடையார்பாளையம் ஜமீன்கள் அவிபக்த ஜமீன்களா (பிரிவினைசெய்யமுடியாத ஜமீன்கள்) கப் பதிவு செய்யப்பட்டன. அரியலூர் ஜமீன் வெகுகாலத்திற்கு முன்பே பல பகுதிகளாக பிரிவினையுற்றது.

மேற்கூறியதினின்றும், தெள்ளிதாக விளங்குவது என்னவென்றால் : பாளையக்காரர்கள் நிலவரிக்கு பாத்தியஸ்தர்களே ஒழிய அவர்களுக்கு நிலத்தில் யாதொரு சொந்தமும் இல்லை. தாம் எழுதி அனுப்பிய மகஜரில், தமக்கு நிலத்தில் யாதொரு உரிமையும் இல்லையென உடையார்பாளையம் ஜமீந்தார் ஒப்புக் கொண்டுள்ளார். உண்மையில், தமக்கு நிலத்தில் உரிமையிருக்கிறதென்று ஒரு பாளையக்காரர்கூட பாத்தியங் கொண்டாடவில்லை. ஜமீந்தாருக்கு, நிலத்தில் உரிமையிருக்கிறதா என்று அறிய, தெற்கிலுள்ள சில ஜமீன் களைப்பற்றி ஆராய்வோம்.

ராமநாதபுரம் ஜமீன்.

(நிலத்திலுள்ள உரிமை.)

ராமநாதபுரம் ஜில்லா விளக்கப் புத்தகம் (மானுயல்)—பூர்வகாலத்திலிருந்து நிலத்தின் உரிமை குடியானவர்களிடமே இருந்துவந்தது. குடியானவர்களுக்குள்ள நிலத்தின் உரிமையைப்பற்றி மனுப்பெரி யார் பின்வருமாறு விதித்துள்ளார் :—

" சாகுபடி செய்யப்பட்ட நிலம், காட்டை யழித்து, முதலில் (நிலத்தை) பண்படுத்தி உழுதவனுக்கே சொந்தம்.

பழைய ஹிந்து அரசர்கள், தனி நபர்களை உத்தரவாதிகளாகக்கருதாது அரசாங்கத்துக்குச் சேர வேண்டிய வரியைச் செலுத்துவதற்கு கிராம சமூகத்தின் பிரதிநிதிகளாகிய நாட்டாண்மைக்காரர் களோடுதான் ஏற்பாடு செய்துகொண்டார்கள். வரி வசூல் சம்பந்தப்பட்ட விஷயங்களில், கிராம சமுதாயம், அரசாங்கத்தின் அங்கமாக இருந்தது. கிராமப் பங்காளர்களின் சார்பாக, கிராம சமுதாயத்திற்கு நிலத்தில் பரிபூரணமான, அபஹரிக்கமுடியாத உரிமை உண்டு. இதற்கு முன் னிருந்த ஒரு அரசாங்கமாவது, தங்களுக்கு நிலத்தில் உரிமை யிருப்பதாக எப்பொழுதும் கொண் டாடவில்லை என்பதை, கிராம ஆட்சிமுறையின்கீழ் விரிவாகத் தெரிவிக்கப்பட்டுள்ள, பூர்வகாலங் களிலிருந்து அமுலிலுள்ள, கிராம பரிபாலனமுறை தெளிவாக நிலைநாட்டுகிறது."

2. " கிராம சமூகங்கள் " என்ற, தம் நூலில் ஸர் ஹெச். மெயின் பின்வருமாறு கூறுகிறார் :—

ஸர். ஹெச். மெயின் அவர்களின் அபிப்பிராயம்.

" ஆங்கிலர், இந்நாட்டில் முதலில்கொண்ட சில கொள்கைகள், தங்கள்முன் ஆட்சிபுரிந்த மகம்மதிய அரசர்களிடமிருந்து பின்பற்றியவை. அதாவது : நிலம் முழுவதும் ஏகபோகமாக அரசருக்குச் சேர்ந்தது ; நிலத்தில், பிறருக்குள்ள சொந்த உரிமை, அரசர் அனுமதி, அல்லது தய வைப்பொறுத்தது. மகம்மதியர் கொள்கையும், மகம்மதியரின் செயல் முறையும், அரசர்களின் உரிமை சம்பந்தமான பழைய கொள்கையை மறைத்துவிட்டது. அக்கொள்கைப்படி, நிலத்தின் விளைச்சலில் அதிகமான பங்கு அரசருக்குச் சென்றதாயினும் (மேல்நாட்டு அரசர்கள் அவ்வளவு அடையவில்லை), நிலத்தில், குடியானவனுக்குள்ள சொந்த உரிமையை அது மறுதளிக்கவில்லை. தாங்கள் (ஆங்கிலேயர்) தோற்கடித்த மகம்மதிய ராஜப்பிரதிநிதி களின் கீழ் வேலைசெய்துவந்த அதிகாரிகளை தங்கள் கீழ் சேவகம் செய்யுமாறுநியமித்துக் கொண்டனர். இவர்களிடம் சர்வசாதாரணமாக பரவியிருந்த கொள்கைகளை ஆங்கிலேயர்கள் நல் லெண்ணத்துடன் ஏற்று அவைகளின்பிரகாரம் நிர்வாஹம் செய்வராயினர். இக்கொள்கையின் மீது, ஆரம்பத்தில், பரீட்சார்த்தமாகச்செய்த முறைகள் ; அதாவது நிலம் தங்களுக்குச் சொந்த மானதென்ற கொள்கையும், நிலச்சுவான்தார்கள் தங்கள் பிரத்தியேக ஸிருஷ்டியென்ற கருத் தும், கிரமமற்ற நிர்வாகப்போக்கின் பழமொழிகளாகிவிட்டன" (மெயின்ஸ் கிராம சமூகப் பிரசங் கங்கள், IV, பக்கம் 104, 105, முதற் பதிப்பு).

ஆனால், வங்காளத்தில் நிகழ்ந்த தவறு, சென்னையில் அவ்வளவு தூரம் நிகழவில்லை. நாடெங் கும், கிராம சமுதாயங்கள் இருந்துவருகின்றன என்றும் கிராம சமுதாயங்களுக்கு நிலத்தில் சந்தேக மற்ற உரிமையிருக்கிறதென்றும், 19-வது நூற்றாண்டின் தொடக்கத்திலே, பிரபல அரசாங்க அதிகாரிகள் தெரிவித்தனர். மதுரை, திருநெல்வேலி ஜில்லாக்களின் கலெக்டராயிருந்த லஷிங் டன் துரை, 1800-ம் வருஷம் டிசம்பர்மீ 29உயில் எழுதிய கடிதம் ஒன்றில் பின்வருமாறு தெரிவிக்கி றார் :—

" அவர்களுடைய சரித்திரத்தை ஆராய்வோமாகில், முதல் ஹிந்து வேந்தர் ஆட்சிபுரியத் தொடங்கிய திலிருந்து, ஹிந்து அரசாங்கம், இறுதியில் நசிவுற்ற காலம்வரை நிகழ்ந்த பல் வேறு மாறுதல் களில், ஹிந்து சரித்திரத்தின் எந்த சந்தர்ப்பத்திலும் ; முற்றிலும் தரிசான நிலங்கள், பாத்தி யஸ்தர்கள் இல்லாமல், சர்க்காருக்குச் சேர்ந்த நிலங்கள், இவைகளைத் தவிர, மற்ற நிலங்களில் குடிகளுக்குள்ள உரிமை, எப்பொழுதாவது கேள்விக்குவந்ததாகத் தெரியவில்லை. ஆனால் அநா

திகாலத்திலிருந்து இன்றுவரை, தங்குதடையின்றி, அவ்வுரிமைகள், பரம்பரையாக அனுபவிக்கப்பட்டு வந்தன என்பது நன்கு விளங்குகிறது. இவ்வுரிமைகள், ஜனங்களின் பழக்க வழக்கங்கள் மீது ஆதாரப்பட்டிருக்கின்றன. சர்வசாதாரணமாக அங்கீகரிக்கப்படாவிட்டால், அப்பழக்க வழக்கங்களுக்கு அவ்வளவு வலிமை இருக்கமுடியாது. அவர்களின் சரித்திர நூற்களிலும், சட்டங்களிலும், நிலத்தில் குடிகளுக்குள்ள உரிமை, பன்முறை அங்கீகாரம் அடைந்து, பாதுகாக்கப்பட்டு வந்தன. பழய ஹிந்து அரசாங்கங்கள் தன்னிச்சை வாய்ந்தவையென்றும், ஆட்சிபுரியும் வேந்தனின் யதேச்சாதிகாரத்தின்மீது சார்ந்து நிற்பவை என்றும், சொல்லுவது வழக்கமாயிருக்கிறது. கேவலம், வாத முறையில்; அவ்வாருயினும், செயலில், அவைகளுக்கு அப்பேர்ப்பட்ட தன்மை கிடையாது.''

. . பிற்காலங்களில், மகம்மதியர் படையெழுச்சிகளால் தேசம் நாசமடைந்து, ஹிந்து நீதி முறையில், மகம்மதியச் சட்டங்கள் புகுத்தப்பட்டு, நாடெங்கும் நிலைவரம் இன்றியும், நியாயத்தீர்ப்புகளில், எப்பொழுதும் மாறுபாடுகள் இருந்த காலத்திலும்; குடிகளுக்கு நிலத்திலுள்ள உரிமைகளைப்பற்றி, விசேஷமான, அடிப்படையான மாறுதல்கள் ஒன்றும் நிகழவில்லை (நில வரி கடினமாக இருந்தாலும்கூட) மிகவும் எளிய குடியானவனுயிருந்தாலும், நிலத்தை முதலில் பண்படுத்தி வளப்பத்திற்கு கொண்டுவந்தவனிடமிருந்து (நில வரியைக் கொடுத்துவந்தவரை), நிலத்தை அபகரிப்பது, என்றும் வழக்கத்திலில்லை. (பக்கம் 82. மிராசி உரிமையைப்பற்றிய வியாசங்கள்).

3. திண்டுக்கல் கலெக்டராயிருந்த ஹாட்க்ஸன் துரை, 1800-ம்ஞு மார்ச்சுமீ 28உயில் பின்வருமாறு எழுதியுள்ளார் :—

"தென் கோயம்பூத்தூரில் உள்ள நாட்டாண்மைக்காரர்கள் (கிராமப் பெரியார்கள்) இயற்கனவே, தங்களுக்கு நிலத்தில் உரிமையிருக்கிறது (நிலம் தங்களுக்குச் சொந்தமானது) என்று கருதுகிருர்கள், என்று 1800-ம்ஞு மார்ச்சுமீ 31உயிலேயே தெரிவித்துள்ளார். தாங்கள் சாகுபடி செய்யும் நிலம், தங்களின் உடைமையென்று நாட்டாண்மைக்காரர்கள் (கிராமப் பெரியார்கள்) கண்டிப்பாக எண்ணுகிருர்கள் ; மகம்மதிய அரசாங்கத்தைத் தவிர வேறெந்த அரசாங்கமாவது, நிலம், தங்களுக்குச் சொந்தமானதென்ருவது, குடியானவனிடமிருந்து நிலத்தை தங்களிஷ்டப்படி எடுத்துக்கொள்ளலாமென்ருவது கருதவில்லை.''

4. சாசுவத சன்னதைக்குறித்து ஹாட்க்ஸன் பின்வருமாறு எழுதியுள்ளார் :—

'' தங்கள் சௌகர்யப்படி வரி கேட்பதற்கு, சட்டப்படியாவது, வழக்கப்படியாவது, பழக்கப்படியாவது, ஜமீந்தாருக்கு அல்லது உடையவருக்கு (அல்லது என்ன பேரால் அழைக்கப்பட்டாலும்) யாதொரு உரிமையும் கிடையாது.

. . . அநாதிகாலத்திலிருந்து, தாங்கள் சாகுபடி செய்யப்படும் நிலத்திற்கு வரையறை செய்யப்பட்ட வரியைத்தவிர வேறென்றையும் கொடுக்க, குடியானவர்கள் கடமைப்பட்டவர்கள் அல்ல. இது அவர்களுடைய திடமான உரிமை.

* * * *

இதனின்று, சர்க்கார், அல்லது கவர்ன்மென்ட், அல்லது கவர்ன்மென்டின் பிரதிநிதிகளாகிய ஜமீந்தார்கள், நிலத்தின் பூரண சொந்தக்காரர்களாயிருந்திருக்கமுடியா தென்பது ஒப்புக்கொள்ளப் படவேண்டுமென்று கருதுகிறேன்.''

5. மிராசி உரிமையைப்பற்றி 1815-வது வருஷத்தில் தொடங்கிய பரிசீலனையின் பலஞக, அரசாங்கத்தார் (கவர்ன்மென்ட்) ஜமீந்தார்கள், இன்னும் அவர்களைப்போன்ற நிலைமையிலுள்ளவர்களுக்கு எதிர்பாடாக, குடியானவர்களுக்கு நிலத்திலுள்ள ஏகபோகமான, பூரணமான உரிமைகளின் தன்மைக்கு அளவற்ற ஆதாரங்கள் குவிந்தன. உண்மையில், அநாதிகாலத்திலிருந்து, இந்த ஜமீன் (ராமநாதபுரம்) குடிகளுக்கு, தங்கள் நிலத்தை, தாங்கள் விரும்பியவாறு, விற்கவும், தானம் செய்யவும், பிரிவினை செய்யவும், உயில் மூலமாக பிறருக்கு அளிக்கவும் உரிமை இருந்துவருகிறது ; சில குடியானவர்களுடைய நிலங்கள் காலஞ்சென்ற ஜமீந்தார்களாலும், அவர்களுடைய நிர்வாஹிகளாலும் விலைக்கு வாங்கப்பட்டு, சிறுதெட்டு அல்லது பிரத்தியேக உடைமையாக அனுபவிக்கப்பட்டு வந்திருக்கின்றன.

வெங்கிடகிரி, காளஹஸ்தி, கார்வெட்டிநகர்.

வெங்கிடகிரி, காளஹஸ்தி, கார்வெட்டிநகர் பாளையங்களிலும், மேற்படி பாளையக்காரர்கள் நிலவரி பாத்தியஸ்தர்களே தவிர, (**Assigness of land revenue**) நிலத்திற்குச் சொந்தக்காரர்கள் அல்ல. இதுவரை முக்கியமான ஜமீன்கள், பாளையங்களைப் பற்றி ஆராய்ந்தோம். அதனின்றும், ஜமீந்தார்கள், பாளையக்காரர்கள், மேல்வாரம்தார்களே தவிர வேறல்ல என்றும் ; ரயத்துகள். குடிவாரம்தார்கள் என்றும் கண்டோம். பிரிட்டிஷ் அரசாட்சி வந்ததினின்று 1802-வது வருஷம்வரை, ஜமீந்தாருக்கும் அரசாங்கத்துக்கும் உள்ள சம்பந்தம், 1802-வது வருஷத்திய சாசுவத நிர்ணய ரெகுலேஷனுக்குபின் நிகழ்ந்துவந்ததைப்போலவே, சன்னதி-மில்கி-இஸ்திமிரார்—காபூலியத் மாற்றிக்கொள்வதால் வரையறுக்கப்பட்டுவந்தது. சாசுவத நிர்ணயத்திற்கு முன், வழங்கப்பட்ட சன்னதுகளில், மற்றொரு ஷரத்துகூட கண்டிருந்தது. அதாவது, ஜமீன் பிரிவினை செய்யப்படாததென்றும், பட்டம் குடும்பத்தில் மூத்தவனுக்கும், அவன் புருஷ சந்ததிக்கும் செல்லவேண்டுமென்றும் கண்டுள்ள நிபந்தனையுடன் வரிகளை வசூல்செய்ய. அரசாங்கத்துக்குள்ள ஆதிபத்ய உரிமையே ஜமீந்தாருக்கு (அரசாங்கத்தால்) மாற்றப்பட்டது. முக்கிய நிபந்தனை, நிர்மாணிக்கப்பட்ட ஒரு வருமானத் தொகையை, ஜமீந்தார் அரசாங்கத்துக்கு செலுத்தவேண்டுமென்பதே. இந்த நிர்ணயம். தண்ணீர் வரி சம்பந்தமாகவும், ஸ்தலவரிகள் சம்பந்தமாகவும் இல்லை. மேலும், பட்டாக்கள், முச்சலிக்கைகள் மாற்றிக்கொள்வதன் மூலம், தனக்கும் குடியானவர்களுக்குமுள்ள சம்பந்தத்தை. வரையறை செய்துகொள்வதாக ஜமீந்தார் உறுதிமொழி கூறினர். சாசுவத நிர்ணயத்திற்கு முன்னிருந்த சன்னது பின் வருமாறு :—

சாசுவத நிர்ணயத்துக்குமுன் இருந்த மாதிரிசன்னது பின்வருமாறு.

'' ஹைதராபாத் சுபா (மாகாணம்) முஸ்தாபநகர் அரசாங்கம் (சர்க்கார்), சர்மால் ஜில்லா, வின்ன கோட்டாபர்காணு, அமீல்கள் முதலியோருக்கு, தேஷ்முக்கள் தேச பாண்டியாக்கள், சௌதரிகள் (இவை கன்யாவும் ஹிந்து பேர்கள் என்பதைக் காணவும்) முதலியோருக்கு; மேற்கூறிய சார்மஹால் ஜமீந்தார்களுக்கு, வழக்கம்போல், ருசும்வரிகளும், நிலவரியும் (மஹால்) சேயர் (மாமூல் வரி) மொட்டர்பா (வீட்டு வரி, வர்த்தக வரி) வும், சாவரமும் (வருமானம்), அங்கீகரிக்கப்பட்டு ஸ்திரப்படுத்தப்பட்டன. அவர்கள், அரசாங்கத்துக்குக் கட்டுப்பட்டிருக்கும்வரை, அவர்களுக்கு நீங்கள் ருசும்ஹால்த் தொகைகளைக் கொடுத்துவரவும்

மேற்படி மாமூல்களை, அவர்கள் அனுபவித்து வரவேண்டியது; அரசாங்கத்திற்கு உண்மையாக இருக்க வேண்டியது. இவைகள் கண்டிப்பாக அனுசரிக்கப்படவேண்டும். 1172-ம் ஹி. 1759 கி.பி.. (கிருஷ்ணா ஜில்லா மானுயல்) பக்கம் 343 (2) நில அனுபவ முறைகளைப்பற்றி, பாடன் பௌவல் எழுதியது, பகுதி ii, பக்கம் 134, 135.

மேற்படி சன்னதின் முதல் வாக்கியம், தேஷ்முக்கள், தேசபாண்டியாக்கள், சௌதரிகள் ஆகிய இவர்களுக்குத் தெரிவிக்கப்பட்டது. (இவைகள் யாவும் ஹிந்து அரசர்களால் தங்கள் அதிகாரிகளுக்குக் கொடுக்கப்பட்ட பேர்கள், பட்டங்கள்.) தாங்கள் ஆட்சிபுரிய ஆரம்பித்தபோது, மகம்மதிய அரசர்கள் மேற்படி அதிகாரிகளை அங்கீகாரம்செய்து, தங்கள்கீழ் அமர்த்திக்கொண்டார்கள். மகம்மதிய அரசர்களுக்குப்பின்வந்த பிரிட்டிஷாரும், மேற்படி அதிகாரிகளை அவ்வாறே அங்கீகாரம் செய்து தங்கள்கீழ் நியமித்துக்கொண்டார்கள். வெகுகாலம்வரை, அதாவது 1802-வது வருஷம் வரையாவது, பிரிட்டிஷார் தங்கள் முன் ஆட்சிபுரிந்தவர்களைப்போலவே, நாட்டில் இருந்துவந்த ஸ்தாபனங்களில் அவ்வளவாகத் தலையிடாதிருந்தது குறிப்பிடத்தக்கது. ஜமீந்தார் அரசாங்கத்திற்கு விசுவாசமாக இருக்கும்வரை, மஹால் (நிலவரி) முதலிய வரிகளை வசூலிப்பதற்கும், அது சம்பந்தமாக உள்ள நன்மைகளையும் மாமூல்களையும் அனுபவித்து வருவதற்கும், ஜமீந்தாருக்கு உரிமையளிக்கப்பட்டதென்பது மேற்படி சன்னதினின்றும் தெரியவருகிறது. அவர்களுக்கு, நிலத்தில் உரிமை உண்டா என்பதைப்பற்றி யாதொரு பேச்சும் கிடையாது. ஆனால், நிலவரியையும், இதர வரிகளையும் வசூலிக்கமட்டும் அவர்களுக்கு உரிமை அளிக்கப்பட்டது.

நிலத்தில் உள்ள சொந்தம்.

நில அனுபவத்தைப்பற்றி, தாம் எழுதிய புஸ்தகத்தில் நீதிபதி பீல்ட் (**Field**) தெரிவித்துள்ள கருத்துகளால் மேற்படி உண்மை இன்னும் திடமாக நிரூபிக்கப்பட்டிருக்கிறது :—

நீதிபதி பீல்டின் விளக்கம்.

" நிலத்திலுள்ள சொந்தம் அரசரைச் சேர்ந்ததல்ல என்ற உண்மை பல முகாந்தரங்களால் ருஜுப்படுத்தப்படுகிறது. இவைகளில், ஒன்று மிகவும் விசேஷமாகக் குறிப்பிடத்தக்கது. தங்களுக்கு நிலம் வேண்டியபோது, சக்ரவர்த்திகள் தங்கள் குடிகளிடமிருந்து விலைக்கு வாங்கியிருக்கிறார்கள். ஹுன்டி, ' பலான் ', ஊர்களில் அவுரங்கஜீப் சக்ரவர்த்தி, விலைக்கு நிலம் வாங்கியிருக்கிறார். அக்பராபாத், இலாஹாபாத் கோட்டைகள் கட்ட, அக்பர் சக்ரவர்த்தி, நிலம் வாங்கியிருக்கிறார். ஸாஜஹான்பாத் கோட்டை கட்ட, ஸாஜஹான், நிலம் வாங்கியிருக்கிறார். மகம்மதிய சட்டப்படி, அரசனுக்கு கப்பம் அல்லது வரி வருமானத்தில் ' உடைமை உரிமை ' (**right of property**) உண்டு; ஆனால் நிலவரிக்கு உரிமையுள்ளவனுக்கு நிலத்தில் உரிமையில்லை."

சக்ரவர்த்தியின் நிலைமையே இப்படியிருக்கும்போது, கேவலம், வரி வசூல்செய்பவராகத் தோன்றிய ஜமீந்தாருக்கு விசேஷ உரிமை இருக்கிறதென்று சொல்வதற்கிடம் இல்லை.

1908-வது வருஷத்திய மதராஸ் எஸ்டேட்ஸ் நிலச்சட்டத்தை சட்ட சபையில் தாம் பிரரேபித்தபொழுது கௌரவமிக்க போர்ப்ஸ் (**Forbes**) துரை பின்வருமாறு வாதித்தார்கள் : " சாசுவத நிர்ணயத்தின்கீழ் ஜமீந்தாருக்குள்ள சட்ட ரீதியான அந்தஸ்து, அரசாங்க நிலவரி பாத்தியதையைப் பெற்றவரின் (**assignee of public land revenue**) உரிமையைவிட மேலானதல்ல."

மகம்மதிய அரசாங்கத்தில் நடந்துவந்தது போலவே, ஜமீந்தார்கள் கிழக்கிந்தியா கம்பெனியின் வரி வசூலிப்பவர்களாக நியமிக்கப்பட்டார்கள் அல்லது முன்னரிருந்தே வரி வசூலிப்பவர்களாக தொடர்ந்து வந்தார்கள் என்பதை இதுவரை அறிந்தோம். ஜமீந்தார்கள் தங்கள் கடமைகளை, எவ்வாறு நிர்வஹித்து வந்தார்கள், சாசுவத நிர்ணயத்தை (**Permanent settlement**) ஏற்படுத்தவும், சாசுவத நிர்ணய ரெகுலேஷன் XXV, பட்டா ரெகுலேஷன் XXX, கர்ணம் ரெகுலேஷன் XXIX, XXVIII—(இவையாவும் 1802-வது ஸு ஜூலை 13-வயைச் சேர்ந்தவை), ஆகிய இச்சட்டங்களை ஏற்படுத்தவும், கிழக்கிந்தியா கம்பெனியாரை என்ன சந்தர்ப்பங்கள் தூண்டின, மேற்படி சட்டங்களின் பலாபலன்கள் என்ன, என்பதைப்பற்றி இப்பொழுது பரிசீலனை செய்வோம்.

மேற்படி ரெகுலேஷன்கள் ஜமீந்தார்கள் சார்பாக, நிலத்தில் ஏதாவது உரிமையை உண்டாக்கினவா ? 1612-வது வருஷத்திலிருந்து கிழக்கிந்தியா கம்பெனியார்கள் இந்த நாட்டில் வர்த்தகம் செய்து வந்தாலும், 1758-வது வருஷத்தில்தான் அவர்கள் ஆட்சி நிலை நாட்டப்பட்டது. தாங்கள் அமைதியாக ஆள்வதற்குமுன், 1758-வது வருஷத்திலிருந்து பல கொடிய விரோதிகளோடு போராடவேண்டியதாயிருந்தது.

ஜமீந்தாரின் நிர்வாஹம்.

காசு வர ஏற்பாட்டைச் செய்வதற்கு காரணபூதமான அரசியல் நோக்கங்களும் அக்காலத்தில் நாடு இருந்த நிலைமையும்.

மேலும், தாங்கள் நாட்டை ஆட்சிபுரிய ஆரம்பித்த காலத்திலிருந்து, கிழக்கு இந்தியா கம்பெனியாருக்கு முக்கியமான கவலை, நிலவரியை ஸ்திரப்படுத்திக்கொள்ள வேண்டுமென்பதே. முன்னிருந்த அரசாங்கத்தின் பரிபாலன முறையின் பலனாக, தேசம் தாறுமாறாக இருந்தது. அதைச் சீர் செய்வது கம்பெனியாரின் கடமையாயிற்று; ரயத்துவாரி முறையையும், நிலவரி சம்பந்தமாக, ஒவ்வொருவருடைய தனிப்பட்ட பொறுப்பையும் உடனே ஸ்தாபிக்க இயலவில்லை. நாட்டிற்கு புதிதானவர்களாகையால், நாட்டின் பரிஸ்திதிகளை ஆய்ந்தோய்ந்து ஆராய வேண்டியதாயிருந்தது; தோல்வியுற்ற அரச குடும்ப பிரதிநிதிகளைப்பற்றியும், அவர்களின் சந்ததிகளைப்பற்றியும், மகம்மதிய அரசர்களின் கீழ் வரி வசூல் செய்து வந்த ஜமீந்தார்களைப்பற்றியும், அவர்கள் அறியவிரும்பினார்கள். மறுபுறத்தில், குடியானவர்களுடன் நேராக சம்பந்தத்தை வைத்துக்கொள்ளவாவது, ஜமீந்தாரையும் வரிக்குத்தகைக்காரரையும், அரசாங்கத்திற்கு சேரவேண்டிய வரியை மோசம் செய்யாமல் செலுத்திவர, போதிய நாணயஸ்தர்களாகச் செய்யவாவது, கிழக்கு இந்தியா கம்பெனியாருக்கு இயலவில்லை. இந்த ஜமீந்தார்கள், ராணுவங்களையும், சிப்பந்திகளையும், சேவகர்களையும் பெரிய கச்சேரிகளையும் வைத்துக்கொண்டிருந்தார்கள். அவர்களுடைய துருப்புகளுக்கு ஆங்கில சிப்பாய்களோடு சமாளித்து யுத்தம் செய்ய, அவ்வளவு சக்தியில்லாவிட்டாலும், பொதுவாக வலிமை படைத்தே இருந்தன. கிழக்கிந்தியா கம்பெனியார் ஐரோப்பிய துருப்புகளை வைத்துக்கொண்டு, அவைகளைக்கொண்டு ஜமீந்தார்களின் படைகளைக் கலைத்து, தங்களுக்குச் சேரவேண்டிய நிலவரி வருமானத்தை ஸ்திரப்படுத்திக்கொள்ளத் தீர்மானித்தார்கள். ஜமீந்தார்கள், தாங்களாகவே தங்கள் ராணுவங்களை கலைத்துவிட விரும்பார்கள், என்பது கம்பெனியாருக்கு நன்கு தெரியும். கம்பெனியார் எந்த அரசியல் நோக்கங்

களைக்கொண்டு, தேசத்தின் எந்த பரிஸ்திதியில், சாசுவத ஏற்பாட்டைச் செய்யவும், நீதி ஸ்தலங்களையும்
ராணுவங்களையும் ஸ்தாபிக்கவும் விரும்பினார்கள் என்பது, கீழ்க்கண்ட சர்கூட் கமிட்டி அறிக்கையின் சில
சாராம்ஸங்களிலிருந்து எளிதில் புலப்படும் :—

" தற்போதுள்ள முறையினால் விளையும் கொடிய தீமைகளுக்குக் காரணம், ஜமீந்தார்கள், பேராசை
யாலும், சோம்பலாலும், தங்கள் முக்கிய கடமையாகிய குடியானவர்களின் நன்மையைப் புறக்
கணித்து, தாங்கள் லாபம் அடைவதற்கு, குடியானவர்களை ஹிம்ஸிக்கும் வரிக் குத்தகைக்காரர்
களுக்கு வரி வசூல் பாத்தியதையை விற்றுவிடுவதேயாகும். ஆதலால் பயிர் செய்யும் தொழில்
என்பது, இன்றியமையாத அவசியத்தின் பலனாக நடந்து வருகிறதே ஒழிய, அதை விருப்பத்துடன்
செய்வோர் ஒருவருமில்லை. அருகிலுள்ள குன்றுகள் அவ்வளவு பயங்கரமாக இல்லாவிட்டால்,
அக்கம்பக்கத்து ராஜ்யங்களில், சற்று அமைதியும் ஒழுங்கும் பரவியிருந்தால், குடிகள் அங்கு
ஓடி தஞ்சம் புகக்கூடும். விவசாயமும் இங்கு, அடியோடு மறையலாம். இப்போதுள்ள நிலை
மையைவிட குடிகள் இன்னும் கேவலமான நிலைமையில் இருக்கமுடியாது. ஏனெனில் ராஜா
வுக்கு செலுத்திவரும் வரி மிகவும் அதிகமாயிருந்தாலும், குடியானவர்களுக்கு அதற்கேற்ற
பிரதிப்பயனாக, பாதுகாப்பாகவோ, நிலத்தை அபிவிருத்தி செய்துகொள்ள ஏதாவது சகாயமாகவோ
ஒன்றும் கிடையாது. கிராமக்கர்ணங்களோ, வரிக் குத்தகைக்காரர்களின் சேவகர்களாகவும் கையாள்
களாகவும் இருக்கிறார்கள். குடியானவர்களுக்குள்ள குறைகளை வரிக் குத்தகைக்காரர்களிடமே
முறையிடவேண்டியதாயிருக்கிறது. மேலும், மொக்கஸாக்கள் என்றும், மானியங்கள் என்றும்,
தெராஸ்துகளென்றும், நிலங்கள் அனாவசியமாக பராதீனப்படுத்தப்படுகின்றன. இவைகளின்
பலனாக, அரசாங்கத்தார் கேட்கும் வரிகளும் அதிகமாகின்றன. உத்தியோகஸ்தர்களுடைய அதிகார
மும் பெருகுகின்றது. கிராமங்கள் கேவலம், குடிசைக் கூட்டங்களாக இருக்கின்றன. குடி
யானவர்களுக்கு ஜீவனம் நடப்பதே கஷ்டமாயிருக்கும்போது, ஜமீந்தாருக்கு வேண்டிய சில
க்ஷத்திரியர்கள் வரி வசூலில் ஆறிலொருபங்கு அடைகிறார்கள். அவ்வாறடைந்தாலும், அவர்கள்
ஜனங்களுக்காவது, தேசத்திற்காவது, யாதொரு நன்மையும் செய்வதில்லை. தங்கள் பணத்தை
ஒளித்துவைத்துக் கொள்வதால், அது ஒருவருக்கும் பயன் தருவதில்லை. ஜமீந்தார்களும், அர
சாங்க அதிகாரிகளும் குடியானவர்களுக்குச் செய்துவரும் உபத்திரவத்தைக் குறைக்கவும், கம்
பெனிக்குச் சேரவேண்டிய வரி வருமானத்தை வருஷாந்தரத்தொகையாக ஸ்திரப்படுத்திக்கொள்
வதற்கு, கிராமங்களை, பத்து வருஷத்திற்கு நிர்மாணிக்கப்பட்ட ஒரு தொகைக்கு, குத்தகையாக
விடுவது என்று முன்பு தீர்மானிக்கப்பட்டது. மேலதிகாரிகள் நியாயமானவர்களாகவும் ஒழுங்
கானவர்களாகவும் இருந்தால், பரிபாலனம் செய்பவர்களிடம் குடியானவர்களுக்கு நம்பிக்கை
யிருந்தால், மேற்கூறிய திட்டம் கிரியாம்சையில் வெற்றியடையக்கூடும். ஆனால் வரிக்குத்தகைக்
காரர்களின் ஒழுங்கீனத்தையும் கொடுங்கோன்மையையும், கவனிக்கையில், மேற்படி திட்டத்தின்
கீழ், அவர்கள் அநேக சாக்குப்போக்குகளைச் சொல்லி, வரி வசூல், ஒழுங்காகச் செய்யமாட்டார்கள்.
அவர்கள் சொல்வதின் உண்மையைக் கண்டுபிடிப்பதும் கஷ்டம். அதற்கு, பணச்செலவு அதிக
மாகும். மேலும், தாங்கள் பணம் சேர்த்துவைத்திருக்கிறார்கள் என்று சர்க்காருக்குத் தெரிந்
தால், அதைக் கொள்ளையடிக்க சர்க்கார் ரகசியமாக ஏற்பாடு செய்வார்கள் என்ற சந்தேகத்தால்,
அவர்கள் பாடுபட்டு உழைக்கமாட்டார்கள். ஆனால், தங்களுக்குள்ள ஏராளமான நிலங்களின்
வரியைத் தீர்த்துக்கொள்ள, குடியானவர்களையும், அவர்களைச் சார்ந்திருப்பவர்களையும் துன்புறுத்து
வார்கள். தங்கள் லாபங்களையெல்லாம் மறைத்துவைப்பார்கள் அது ஜன சமூகத்திற்கு யாதொரு
பயனையும் தராது.

" மேற்கூறிய விஷயங்களையாவும் நன்கு ஆராய்ந்தறிந்ததின் பலனாக, நிலவரி வருமானம், அதன்
அடிப்படைத் தத்துவங்களுக்கேற்ப, செம்மை செய்யப்பட்டு, ஜமீந்தாரி முறை ஒழிக்கப்படுமானால்,
கம்பெனியாருக்கு வட சர்க்கார் பிரதேசங்களிலிருந்து மட்டும் குறைந்தது ஒரு கோடி ரூபாய்
கிடைக்கும் என்பது ஆச்சரியமான அல்லது அசம்பாவிதமான விஷயம் அல்ல. இது சித்தி
பெறவேண்டுமானால், முற்றிலும் புதிய ஒரு ஏற்பாடு அவசியம் ; ஆனால் முக்கிய விஷயம் ஒன்று
இங்கு குறிப்பிடத்தக்கது. அதாவது மகம்மதிய ராஜப்பிரதிநிதிகளின் சொந்த நன்மையைக்
கருதி நியமிக்கப்பட்ட ஜமீந்தார்கள் காலக்கிரமத்தில், செல்வாக்கையும் அதிகாரத்தையும் அதிக
மாகத் தேடிக்கொண்டார்கள். அவர்களுடைய அதிகாரத்தை உடனே பறித்துக்கொண்டு, பழைய
நிலைமைக்கு மாற்றுவது கஷ்டமான காரியமாயிருக்கலாம். ஆனால் ஜனங்களுக்கு, "தயோக்க
ளிடம்" உள்ள பற்றும் விசுவாசமும் ஜமீந்தார்களிடம் கிடையாது. ஏனெனில் கீழதிகாரிகள் செய்யும்
அக்கிரமங்களை ஜமீந்தார்கள் கண்டிப்பதில்லை. மேலும் ஜமீந்தார்களுக்கு பரம்பரை உரிமை கிடை
யாது. ஆனால், ஜமீந்தார்களுடைய ராணுவம் குறைக்கப்பட்டு (சர்க்கார் பிரதேசங்களில் குறைந்தது
3,500 இருக்கலாம்) ஒவ்வொரு ஜமீன் மத்தியிலும் கம்பெனியார் தகுந்த படைகளை ஸ்தாபித்துக்
கொள்வாராகில், வரி வசூல் வேலையை ஜமீந்தார்களிடமிருந்து தங்கள் அதிகாரிகளுக்கு ஒப்புவிப்பது
பிரமாதமான அல்லது அபாயகரமான செயலாகாது. விலக்கப்பட்ட ஜமீந்தார்களுக்கு நியாயமான
உபகாரச்சம்பளம் கொடுத்து வரலாம்.

" இதனின்று, ஜமீந்தாரின் அதிகாரத்தை அறைகுறையாக அல்ல, அறவே ஒழிக்கவேண்டிய
அவசியம் விளங்கும். நிலவரி வருமானம் ஜமீந்தார்கள் கையில் இருக்கும்வரை ஐரோப்பியர்
களுடைய பொறுப்பும் பொது ஜன நன்மையும் நிலவரா மற்றதாகவே இருக்கும் என்பதும்
குறிப்பிடத்தக்கது. வலிமைமிக்க ஜமீந்தார்கள் சொற்ப சம்பளங் கொடுத்து ஏராளமான ஆட்
களைத் தங்கள் கீழ் அமர்த்திக்கொண்டு, அவர்களிடம் தங்கள் செல்வாக்கைப் பெருக்கிக்கொள்
கிறார்கள். இன்னும் சிலர் பக்கத்திலுள்ள அரசர்களோடு நேச சம்பந்தம் வைத்துக் கொள்கிறார்
கள். தாங்கள் கம்பெனியாரின் சேவகர்கள் என்பதை மறந்து, அதற்கு ஒவ்வாத முறையில்,
ஏராளமான சேனைகளை வைத்துக்கொண்டு, ஜமீந்தார்கள் தங்களிடம் உள்ள செல்வத்தின்
காரணமாக தங்களைப் பிரமாதமாக எண்ணிக்கொள்கிறார்கள். பலவந்த முறையால் தான் இதை
ஒழிக்கமுடியும். ஹாவலி நிலங்கள், விளைச்சலில்லாமல் பாழாய்ச் கிடப்பதற்குக் காரணம்,
ஜமீந்தார்கள், ஒழுக்கங்கெட்ட வரிக் குத்தகைக்காரர்கள் ஒத்தாசையைக்கொண்டு, தங்கள் அதிகார
வரம்பை மீறியும், ஆசை வார்த்தைகளை கூறியும், வெளிப்படையாகத் துன்புறுத்தியும், பலவந்த
படுத்தியும், குடியானவர்களை தங்கள் ஜமீன்களுக்கு அகற்றிச் செல்வதே. 'சர்க்கார்' பிரதேசங்
கள் முழுவதும், ஒரு வரி வசூல் முறைக் கீழ் கொண்டுவரப்பட்டாலொழிய (கம்பெனியார்
எவ்வளவு நல்லெண்ணம் கொண்டிருந்தாலும்) குடியானவர்களுடைய தனி உரிமைகள் ஸ்தா
பிக்கப்படமுடியாது. நிலத்தின் விளைச்சலில் அவர்களுக்குச் சேரவேண்டியது என்ன என்பதும்
நிரந்தரமாக நிர்மாணிக்கப்படமுடியாது. பழைய ஹிந்து சம்பிரதாயங்களை ஒட்டி (நமது ராஜ்யத்தை
சுற்றி ஹிந்து ராஜ்யங்கள் இருக்கின்றன. அங்குள்ள நிலங்களை அவர்கள்தான் லாபஹரமாக
நிர்வஹிக்கக்கூடும்) ஜமீந்தார்கள் தங்களுக்கு பரம்பரை பாத்தியம் இருப்பதாக நடிப்பதை

ஆதரித்து, அவர்களிடம் அதிகாரத்தின் ஒரு சிறு சாயல் கூட இருக்க அனுமதித்தாலும், பிறகு ஒரு காலத்தில் பிரத்தியேகமான அதிகாரத்தைத் தாங்கள் ஸ்தாபிக்கலாம் என்ற தீர்க்க நம்பிக்கைக்கு இடமளித்தாலும்; அது யுக்தமற்றதாகவும், அபாயகரமானதாகவும் முடியும். ஏனெனில் யுத்த சமயங்களிலெல்லாம் அவர்களுடைய நடத்தை சந்தேகத்தை தருவதாக இருந்து வருகிறது. மேலும், தாங்கள் செலுத்தவேண்டிய பாகித் தொகைகளிலிருந்து தப்பித்துக் கொள்வதற்கும், தங்கள் பலத்தை இன்னும் அதிகப்படுத்திக் கொள்வதற்கும், யதேச்சாதிகாரம் பெறுவதற்கும், அரசாங்கப் புரட்சியை அவர்கள் எப்பொழுதும் விரும்புவார்கள். இதற்கு வேண்டிய திருஷ்டாந்தரங்கள் இல்லாமற்போகவில்லை. இச்சந்தர்ப்பத்தில், மற்றொரு முறையைப்பற்றி சிற்சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேம். விரும்பத்தக்க அம்ஸம் அம்முறையில் ஒன்றும் இல்லை. அம்முறை சுபிக்ஷமாகவும் சந்தோஷமாகவும் உள்ள நாட்டை விரைவில் பாழ்ப்படுத்திவிடுகிறது. அம்முறையின் பொதுவான போக்கு பின்வருமாறு. ஒரு ஜமீந்தார் இறந்தவுடனே கம்பெனிக்கு லாபத்தை தரக்கூடியவாறு அதிகமான ஏலத்தொகைகள் கேட்பவருக்கு நிலங்கள் விடப்படுவது; அல்லது, நிலங்களை விட அதிகாரம் உள்ளவர்கள் தயவைப் பெற்று சஹாயமான தொகைக்கு நிலங்களை குத்தகைக்கு எடுத்துக்கொள்வது. எதாயிருப்பினும், விளைச்சலிலிருந்தே செலவை சரிகட்டிக்கொள்ளவேண்டுமாகையால், குடியானவர்களிடமிருந்து நியாயமாக வசூலிப்பதைவிட அதிகமாக வசூலிக்கப்பட்டது. அது பின்வருமாறு நிகழ்வதுண்டு :—

அறுவடை காலம் சமீபித்தவுடன், தனக்கு நியாயமாகச் செல்லவேண்டியதைவிட அதிகமாக அடையும்பொருட்டு, விளைச்சலை அதிகமாக மதிப்பிடுகிறன். குடியானவர்கள், எச்சரிக்கையாயிருந்தால் அதை ஆட்சேபித்து, நியாய மதிப்பிடும் வரை, கதிரறுக்க மறுத்துவிடுகிறார்கள். கதிரறுக்கத் தாமதம் ஆனால் அது தனக்கும் நஷ்டம்தான் என்றெண்ணி வரிக்குத்தகைக்காரன் முடிவில் சம்மதிப்பான். ஆனால் நியாயமாக வசூலிக்கக்கூடியதெல்லாம் வசூலான பிறகு, அவன் சிப்பந்திகளும் சேவகர்களும், குடியானவர்களை நிர்ப்பந்தப்படுத்தி ஹிம்சித்து, பல பொய் முகாந்தரங்களைக் கொண்டு, கசக்கிப் பிழிந்து விடுவார்கள். குடியானவர்கள் கொடுத்துத்தான் தீரவேண்டும். இவ்வாறாக, குடியானவர்கள் பரிதவிக்கிறார்கள். தங்களுக்கு நியாயம் வழங்குபவர் ஒருவருமில்லையேயென்று அவர்கள் நம்பிக்கை இழக்கின்றார்கள். அடுத்த வருஷங்களில், பிற நாடுகளுக்குச் சென்று குடியேற முடிந்தவர்கள் தங்கள் கிராமங்களை விட்டுப் போய்விடுகிறார்கள். எஞ்சியுள்ள துரதிர்ஷ்டசாலிகள், உழைப்பிற்கு உத்ஸாகமும் ஊக்கமும் இல்லாது, வரி செலுத்துவதற்கும் தங்கள் சாப்பாட்டிற்கும் எவ்வளவு வேண்டுமோ அவ்வளவே சாகுபடி செய்து காலம் கடத்துகிறார்கள். ஆதலால் விளைச்சலோ குறைச்சல். குடியானவர்களைத் துன்புறுத்தி வசூலிப்பதோ அதிகம். வசூலித்த தொகையையெல்லாம் தனது ஒப்பந்தத்திற்கு செலுத்திவிட்டு, தனக்கு லாபமில்லாமல் இருப்பதை விரும்பாத வரிக்குத்தகைக்காரன், ஆயிரம் பொய் சொல்லி வசூலித்த தொகையை மறைக்கப் பிரயத்தனம் செய்கிறன். பின்வரும் வருஷங்களில், குடியானவர்கள், நிலங்களை கைவிட்டுச் சென்றபடியால், தனது கொள்ளை தொடர்ந்து அனுபவித்து வருவது தனக்கு லாபம் என்று கருதி கிராமத்தின் முக்கிய மனிதர்களோடு ஒரு ஏற்பாட்டைச் செய்துகொண்டு, நிலங்களை ஒரு குறிப்பிட்ட தொகைக்கு, நிர்வாஹம் செய்யும்படி விட்டுவிடுகிறன். இப்படியாக வேலை வாங்குபவர்களின் எண்ணிக்கை பெருகுகின்றது. குடியானவர்களுடைய சங்கடங்கள் அதிகரிக்கின்றன. சில சமயங்களில் வரிக்குத்தகைக்காரன் மேற்கூறிய கிராம முக்கியஸ்தர்களுக்கு, வரியில்லாமல் நிலத்தை அனுபவிக்கலாம் என்று சன்னது கூடக்கொடுத்துவிடுகிறன். பிற்காலங்களில் இந்த சன்னதுகளை வைத்துக்கொண்டு அவர்கள் வெற்றிகரமாக பாத்தியங்கொண்டாடுகிறார்கள்."

மேலே தெரிவிக்கப்பட்ட விஷயங்கள் யாவும், அக்காலத்திலிருந்த நிலைமையைப்பற்றி வெகு, விளக்கமாக ஓவியம் வரைந்தாற்போல் வரையப்பட்டிருக்கிறது. குற்றம் முழுவதையும் பிறர்மேல் சுமத்தவேண்டுமென்று எண்ணம் கொண்டவர்களால் அவ்வாறு எழுதப்பட்டதென்பது உண்மையே. அதாவது, ஜமீந்தார்கள் வரி வசூலிப்பவர்களாக செய்துவந்த நிர்வாஹத்தைப்பற்றி தகுந்த தகவல்களைச் சேகரித்து அதன் மீது, அறிக்கையொன்று தயாரிக்கும் வண்ணம், கோர்ட் ஆப் டைரக்டர்ஸ் கட்டளையிட்டவாறு ஒரு விசேஷக் கமிட்டி (ஸ்பெஷல் கமிஷன்) எழுதியுள்ளது. முக்கிய அம்சங்களை வற்புறுத்தி, மேலே வரையப்பட்ட படத்தை பூர்த்திசெய்யும், சர்க்கார் பிரதேசங்களைப் பற்றிய சராம்சம் ஒன்று, பின் வருமாறு :—

"காலக்கிரமத்தில், முக்கியமாக, கோலக்கொண்டா தேசத்து மூரிஷ் அரசர்களை ஔரங்கஜீப் முறியடித்தபொழுது, ஹைதராபாத்தில் நடந்த மாறுதல்களின் பலனாக, ஜமீந்தார்கள் அளவற்ற ஆதிக்கமும், செருக்கும் கொள்வாராயினர். தாங்கள், அரசாங்கத்தின் சேவகர்கள் என்பதை மறந்து, தங்களை அரசர்களாகவும், அரசாங்கத்தின் நேசவல்லரசுகளாகவும் மதித்து நடந்து வந்தார்கள். ஜமீந்தார்களின் இத்தகைய கருத்தும் நடத்தையும், ஐரோப்பியர்களுக்குத் தெரியாதிருந்தமையால், நாளடைவில் அவைகளை ஸ்திரப்படுத்திக்கொள்ளுவராயினர். அவர்களுக்கு "சாரி" ப்பணம் கொடுக்கப்பட்டுவந்தது. அதாவது ஜமாபந்தியில் 100-க்கு 10. அது 50 லக்ஷத்திற்கு (சர்க்கார் பிரதேசங்களின் மதிப்பென்று கருதப்படுவதில் பாதி) ரூ. 5,00,000 ஆகிறது. ஜமீன்களில் தங்களுக்கு யதேச்சாதிகாரம் இருந்தபடியால், தங்களுக்கும் தங்கள் முக்கிய உத்தியோகஸ்தர்களுக்கும் ருசும் வரிகளை ஏற்படுத்திக்கொண்டார்கள். ஜமாபந்தியில் 100-க்கு $1\frac{1}{2}$ ஆக ரூ. 7,500 ஆயிற்று. தாங்கள் (ஜமீந்தார்கள்) பலவகையான நாணயங்களைப் பெறுவதாகவும், அவைகளிற் சில செல்லாதவையென்றும் சொல்லி, நாணய மாற்றத்திற் ஏற்படும் நஷ்டத்தை சரிகட்டிக்கொள்வதற்கு ஜமாபந்தியில் 100-க்கு 3 செலவு தொகையாக விதித்துக்கொண்டார்கள். வரியை பணமாகச் செலுத்தி அதன் மூலம் 35 லக்ஷம் ரூபாய் கிடைத்தால், அதற்கு மேற்கூறிய, செலவுத்தொகை ரூ. 10,500 ஆகும். நிலங்கள் ஒழுங்காக அளக்கப்பட்டிருந்தால் விளைச்சல் என்னவாயிருக்கலாம் என்பது நவாபுக்கு நிஷ்கரணையாகத் தெரியும். இதனின்று தப்பித்துக் கொள்வதற்கு சில ஜமீந்தார்கள் நில சம்பந்தமாக இருந்த பழைய ஏற்பாடுகளை, தங்களுக்கேற்றாற்போல், மாற்றி அமைத்துக்கொண்டு, கிஸ்தித் தொகையிலேயே "மூல்ல வட்டி", "நஜர்" முதலிய மாமூல்களையும் சேர்த்து வசூலிப்பார்களாயினர். அது சம்பந்தமாக, இலகுவாக, பொய்க் கணக்குகள் எழுதிவைத்தார்கள். கச்சேரிச் செலவிற்கென்று ஜமீந்தார்கள் வரிப்பணத்தில் கொஞ்சப் பணத்தை முன்னதாக எடுத்துவைத்துக்கொள்ளக்கூடும் என்றாலும், குடியானவர்களிடமிருந்தே அதை வசூலித்து வந்தார்கள். ஆனால், நல்ல கச்சேரிகளெல்லாம் மறைந்துவிட்டன. 50 லக்ஷ கிஸ்தித் தொகையில் கச்சேரிச் செலவிற்கு போனது ரூ. 3,25,000. "ரவாசே" "வுல்பா" வரிகள் தங்கள் சேவகர்களின் சம்பளத்திற்காகவும், தங்கள் பிரயாணச் செலவுக்காகவும் வசூலிக்கப்பட்டன. இவை, மொத்தக் கிஸ்தித் தொகையில் ரூ. 35,000 ஆகும். மேற்கூறிய வரிகள் யாவும் வரிக்குத்தகைக்காரர்களால் வசூலிக்கப்பட்டு, இறுதியில் ஜமீந்தாருக்கு

வந்து சோந்தன. முச்சலிக்கைகள் அதிகரித்தன. ஜமீந்தாருக்கு நியாயமாய்ச் சேரவேண்டிய "சாரி"யை விட குடியானவர்களிடம் அநியாயமாக ஹிம்சித்து வசூலித்த தொகை, 50 லக்ஷ மொத்த ஜமாபந்தியில் ரூ. 5,40,000 ஆயிருந்தது. "சாரித்" தொகையைச் சேர்த்து ரூ. 10,40,000 ஆயிற்று".

சாசுவத ஏந்பாட்டிற்குமுன் ஜமீன்தாரின் நிர்வாஹம்.

சாசுவ ஏற்பாட்டிற்கு காரணமாயிருந்த சம்பவங்கள்.

1802-வது வருஷத்திற்குமுன் சுமார் 44 வருஷங்களுக்கு மேல் கிழக்கு இந்தியா கம்பெனியார் புரிந்துவந்த ஆட்சி சம்பந்தமான விஷயங்களைப்பற்றியும், அக்காலத்து ஜமீந்தார்களின் நிர்வாஹப் போக்கைப்பற்றியும், சர்கூட் கமிட்டியார் காரியக்கிரம அறிக்கையிலிருந்து மேலே விரிவாக எடுத்தாளப்பட்ட சராம்ஸங்கள் நன்கு விளக்குகின்றன. 140 அல்லது 150 வருஷங்களுக்குமுன் கம்பெனி உத்தியோகஸ்தர்கள் எழுதியுள்ள ஆங்கில மொழியின் நடையும், இலக்கணமும், வாக்கிய அமைப்பும் தற்காலத்தைப் போன்றவை அல்ல. அவர்களின் அழகிய வாசகங்களின் பூரண அர்த்தத்தை சுலபமாகவும், விரைவாகவும் அறிந்துகொள்ள நம்மில் பலருக்கு அசாத்தியமாக இருக்கலாம். ஆதலின் அவைகளின் சராம்சத்தை அதாவது ஜமீந்தார்களின் செய்கைகளையும், அவைகள் சாசுவத ஏற்பாட்டிற்கு எவ்வாறு காரணமாயிருந்த தென்பதையும், ஒன்றன்பின் ஒன்றாக, எளிய நடையில் தெரிவிக்க விரும்புகிறோம். விஷயம் மிகவும் முக்கியமானதாகையால் மீண்டும் கூறல் மிகையாகாது என்று கருதுகிறோம். 1802-வது வருஷத்திய சாசுவத நிர்ணய ஏற்பாட்டிற்குக் காரணங்கள், சுருக்கமாக, பின் வருமாறு :—

(1) ஜமீந்தார்களுடைய சோம்பலாலும் பேராசையாலும், ஹிம்சித்து வசூல் செய்யும் வரிக் குத்தகைக்காரர்களிடம் குடியானவர்கள் ஒப்புவிக்கப்பட்டனர்.

(2) குடியானவர்களுடைய நன்மையை, ஜமீந்தார்கள் கவனிக்காதபடியால், இன்றியமையாததேவையைக்கருதியே விவசாயம் செய்யப்பட்டு வந்ததே ஒழிய, விருப்பத்தோடு ஒருவரும் செய்யவில்லை.

(3) அருகிலுள்ள குன்றுகள், அவ்வளவு பயங்கரமாக இல்லாவிட்டால், அக்கம்பக்கத்து ராஜ்யங்களில் சற்று அமைதியும் ஒழுங்குமிருந்தால், குடியானவர்கள் அங்கு ஓடிப்போயிருப்பார்கள். பயிர்த் தொழிலும் மறைந்து போயிருக்கும்.

(4) குடியானவர்கள் ஜமீந்தாருக்கு அதிகமான வரியைச் செலுத்தி வந்தார்கள். ஆனால் அதற்குப் பிரதிப்பயனாக, குடியானவர்களுக்குப் பாதுகாப்போ, நிலத்தை அபிவிருத்தி செய்ய சகாயமோ, ஒன்றும் கிடையாது.

(5) கிராமக் கர்ணங்கள் வரிக் குத்தைகைக்காரர்களின் சேவகர்களாகவும் கையாள்களாகவும் இருந்தனர்.

(6) குடியானவர்கள் தங்கள் குறைகளை வரிக்குத்தகைக்காரர்களிடமே முறையிட வேண்டியதாயிருந்தது.

(7) "மொக்கசாக்கள்" என்றும், மானியங்களென்றும், தொஸ்துகளென்றும், நிலங்கள் அநுவசியமாக பராதீனம் செய்யப்பட்டுவந்தன.

(8) மேற்கூறியவைகள் யாவும் அரசாங்கத்தின் ஆட்சேபகரமான அதிகாரங்களையும் வரிகளையும் அதிகரித்தன.

(9) கிராமங்கள் கேவலமான குடிசைக் கூட்டங்களாயிருந்தன. குடியானவன் வயிறு வளர்ப்பதே கஷ்டமாயிருந்தது.

(10) ராஜாவுக்கு வேண்டிய சில க்ஷத்திரியர்கள் வரி வசூலில் ஆறிலொருபங்கும் அடைந்துவந்தாலும் குடியானவர்களுக்காவது அல்லது நாட்டிற்காவது யாதொரு நன்மையையும் செய்யவில்லை.

(11) கிராமங்களை 10 வருஷத்திற்கு, குறிப்பிட்ட தொகைக்கு கிராம முக்கியஸ்தர்களுக்குக் குத்தகைக்கு விட ஜமீந்தார் விரும்பினர்.

(12) தங்கள் விஸ்தீரணமான நிலங்களின் மேல் விதிக்கப்பட்ட வரியைத் தீர்த்துக்கொள்ள, குடியானவர்களையும், அவர்களுடைய ஆட்களையும் கஷ்டப்படுத்திவந்தார்கள். தங்களுடைய லாபங்களை ஒளித்து வைத்துக்கொண்டார்கள்.

(13) மேற்கூறிய காரணங்களால், ஜமீந்தாரி முறையை ஒழித்து, வட "சர்க்கார்ப்" பிரதேசங்களிலிருந்து கம்பெனிக்கு குறைந்தது ஒரு கோடி ரூபாய் வருமானம் வரச்செய்வது உத்தமமென்று கருதப்பட்டது.

(14) "தயோக்களிடம்" ஜனங்கள் வைத்திருந்த பற்றும் விசுவாசமும் ஜமீந்தார்களிடம் கிடையாது. ஜமீந்தார்களை உடனே விரட்டிவிடுவது யுக்தமல்லவென்றும் தோன்றிற்று.

(15) ஜமீந்தார்கள் குடியானவர்களுடைய பற்றையும் விஸ்வாசத்தையும் இழந்ததற்கு காரணம் அவர்களுக்கு பரம்பரை உரிமை இல்லாததாலும், கீழதிகாரிகளின் அக்ரமத்தை கண்டிக்காததாலுமே.

(16) ஜமீந்தார்கள் கையில், வரி வசூல் இருக்கும் வரை, அவர்களுடைய அதிகாரத்தை அடியோடு ஒழித்துவிடுதல் அபாயகரமானது என்றும் கருதப்பட்டது.

(17) ஜமீந்தார்கள், தங்கள் கீழிருப்பவரிடம், தங்கள் செல்வாக்கை பெருக்கிக்கொண்டும், அக்கம் பக்கத்து அரசர்களிடம் உடன்படிக்கைவைத்துக்கொண்டும், தங்கள் இராணுவங்களை அதிகரித்துக் கொண்டும், தாங்கள் கம்பெனியின் சேவகர்கள் என்பதை மறந்து, தங்கள் செல்வச் செருக்கால் தங்களை பிரமாதமாக எண்ணி நடந்துகொள்வார்கள் என்றும் பயப்படப்பட்டது.

(18) பலவந்தவகையாலன்றி, மற்றெவ்வகையாலும், ஜமீந்தாரை நீக்கிவிடுவது கஷ்டமாக தெரிந்தது.

(19) ஹாவல்லி நிலங்கள் விளைச்சலன்றி பாழாய்க்கிடப்பதற்கு காரணம், ஜமீந்தார்கள் ஆசை வார்த்தைகள் கூறியும், குடியானவர்களை பலவந்தப்படுத்தியும், ஹிம்சித்தும், வரிகுத்தகைகாரர்களுடைய உதவியால் தங்கள் ஜமீன்களுக்கு அவர்களை (குடியானவர்கள்) அகற்றிச்சென்றதே.

(20) சில ராஜாக்கள், தங்களுக்கு பரம்பரைப் பாத்யமிருப்பதாக நடித்தனர், இன்னும் சிலர், பழைய ஹிந்து சம்பிரதாயப்படி, தங்களுக்கு உரிமைகளிருப்பதாக, வற்புறுத்தி வந்தனர் (ஹிந்து ராஜ்யங்கள், கிழக்கிந்தியா கம்பெனி ராஜ்யத்தைச் சுற்றியுமிருந்தன. அங்குள்ள நிலங்களை ஹிந்துக்கள் தான் லாபகரமாக நிர்வஹிக்கக்கூடும்).

(21) இந்த ஜமீந்தார்களுக்கு, அதிகாரத்தின் ஒரு சிறு சாயலை அனுமதித்தாலும், பிற்காலத்தில் தாங்கள் பிரத்தியேக ஆதிக்கத்தை ஸ்தாபித்துக்கொள்ளலாமென்கிற நம்பிக்கையை அளித்தாலும், அது யுக்தமற்றதாகவும் அபாயகரமானதாகவும் முடியுமென்றும் கம்பெனியார் கருதினர். ஏனெனில், ஐரோப்பா கண்டத்தில் பிரஞ்சுப் புரட்சி நடந்துகொண்டிருந்தபொழுது, இந்தியாவில் பிரஞ்சு தளகர்த்தர்களாகிய புஸ்ஸி, டியூப்ளே, முதலியோர்களோடு கம்பெனியார் போர்புரிய நேரிட்டபோது, ஜமீந்தார்களினுடைய நடத்தையும் மனப்பான்மையும், சந்தேகத்திற்கு இடமாயிருந்தன.

(22) தாங்கள் இன்னும் அதிக அதிகாரத்தையும், சுவதந்திரத்தையும், அடையலாம், அதன் மூலமாக, கம்பெனிக்கு தாங்கள் செலுத்தவேண்டிய பாக்கித்தொகையினின்று தப்பித்துக்கொள்ளலாம் என்ற எண்ணம் கொண்டவர்களாய் சில ஜமீந்தார்கள் எப்பொழுதும் ராஜ்ஜியபுரட்சியை விரும்புவார்களென்று கிழக்கு இந்தியா கம்பெனியார் கருதினர். அதற்குவேண்டிய திருஷ்டாந்தங்கள் இல்லாமல்போகவில்லை.

(23) பழைய அனுபவத்தை மனதில்வைத்து கிழக்கு இந்தியா கம்பெனியார், ஒரு ஜமீந்தார் இறந்தபொழுது அவர் நிலங்களை, அதிக ஏலத்தொகை கொடுப்பவர்களுக்கு, அல்லது நிலங்களை குத்தகைக்கு விட அதிகாரமுள்ளவர்களின் தயவை சம்பாதித்தவர்களுக்கு சௌகர்யமான தொகைக்கு விடுவதற்கு ஆரம்பித்தார்கள்.

ஆனால் இம்முறை சுபிக்ஷமாகவும் சந்தோஷமாகவுமிருந்த நாட்டை பாழ்படுத்தி விடுவதாயிருந்தது. ஏனெனில் குடியானவர்களினுடைய விளைச்சலிலிருந்தே நியாயமான வரிகளையும், அநியாயமான வரிகளையும், சரிகட்டவேண்டியதாயிருந்தது.

(24) குடியானவர்களிடமிருந்து அநியாயமாக வசூலிக்கப்பட்டுவந்த வழக்கம் பின்வருமாறு :—

(*a*) அறுவடையாவதற்கு முன்பு, வரிக்குத்தகைக்காரன் தனக்கு அதிகமான பங்கு வருவதன் பொருட்டு விளைச்சலை அதிகமாக மதிப்பிடுகிறான். சிலசமயங்களில், குடியானவர்கள் இதற்கு ஆட்சேபித்து, ஒழுங்காக மதிப்பிட்டாலொழிய, கதிரறுக்கமாட்டோமென்று சொல்லிவிடுகிறார்கள். அனுமதியில்லாமல் கதிரறுக்கமுடியாது. காலம் நீடித்தால் கதிர்பாழாயிவிடும். ஆதலால், குடியானவர்கள் முடிவில் இணங்கிவிடுகிறார்கள்.

(*b*) ஆனால், நியாயமான வசூல்களெல்லாம் ஆனபிறகு, சேகவர்களும் சிப்பந்திகளும், பலமுகாந்தரங்களைச் சொல்லி குடியானவர்களை, வாட்டி வதைத்து விடுகிறார்கள். குடியானவர்கள் கஷ்டப்பட்டு தங்களால் முடிந்ததையெல்லாம் கொடுத்துவிடுகிறார்கள். அவர்கள் அடையும் பிரதிப்பயன் ஒன்றுமேயில்லை. தங்கள் குறையை நீக்குபவர்கள் ஒருவருமில்லையேயென்று ஏங்கி, நம்பிக்கை இழந்து விடுகிறார்கள். பிறநாடு சென்று குடியேறக் கூடியவர்கள், அடுத்த வருஷம், தங்கள் ஊரைவிட்டுப் போய்விடுகிறார்கள். அவ்வாறு செய்ய சக்தியில்லாது, எஞ்சி நிற்கும்துரதிர்ஷ்டசாலிகள், வரியை கொடுப்பதற்கும், தங்கள் சாப்பாட்டிற்கும் போதுமான மட்டுமே சாகுபடி செய்கிறார்கள். ஏனென்றால், அவர்கள் உழைப்பதற்கு ஊக்கம் கொடுக்கக் கூடியதொன்றுமில்லை.

(*c*) இவ்வாறு விளைச்சல் குறைச்சலாய்ப்போயிற்று. வரிகள்மட்டும் அதிகமாயின.

(*d*) ஆனால், தங்களுக்கு எப்படியாவது லாபம் வந்து சேரவேண்டுமென்பது வரிக்குத்தகைக்காரர்களின் கருத்து. தாங்கள் வசூலித்ததை எல்லாம் தங்கள் ஒப்பந்தத்திற்கு செலுத்துவிட அவர்கள் பிரியப்படவில்லை. ஆதலால் ஆயிரம் பொய்களைச் சொல்லி, வசூலித்த தொகையை, மோசமாக மறைக்கலானார்கள்.

(25) கொஞ்சம் கொஞ்சமாக, அநேக குடியானவர்கள் தங்கள் ஜில்லாக்களைவிட்டு சென்று விட்டார்கள். வரிக்குத்தகைக்காரர்கள், மேலதிகாரிகளுடைய அதிருப்திக்கு ஆளானார்கள். தங்கள் கவுல்களை புதுப்பித்துக்கொள்ளவேணுமென்றால், குடியானவர்களோடு நேராக ஏற்பாடுசெய்து கொள்ளவழியில்லை. ஆகையால், அவர்கள் கிராம உத்தியோகஸ்தர்களோடு ஒப்பந்தம் செய்துக் கொண்டு, அவர்களுக்கு நிலங்களை குத்தகைக்கு விடுவார்களாயினர்.

(26) இவ்வாறாக வேலைவாங்குபவர்கள் பெருகினர். குடியானவர்களுடைய துன்பம் அதிகரித்தது.

(27) சில சமயத்தில், வரிக்குத்தகைக்காரர்கள், சிலருக்கு, நிலங்களை வரியில்லாமல் அனுபவிக்கலாமென்று சன்னதுகள் கொடுத்துவந்தார்கள். வெகுநாளானபிறகு, சன்னது பெற்றவர்கள் அதன் மீது பாத்தியம் கொண்டாட ஆரம்பித்தார்கள். அவைகள் போலியாகவும், உரிமை செல்லாததாகவும், இருந்தாலும் அவைகளை காயம் செய்யவேண்டியதாயிருந்தது.

(28) வட சர்க்கார் பிரதேசங்களிலோ, ஜமீந்தார்கள், தாங்கள் கம்பெனி சேவகர்கள் என்பதை மறந்து அரசர்களைப்போல் நடித்து வந்தார்கள்.

(29) ஜமீந்தார்களுக்கு, "சாரித்" தொகை கொடுக்கப்பட்டுவந்தது. அதாவது, வட சர்க்கார் பிரதேசங்களின் பாதி ஜமாபந்தி தொகை 50 லக்ஷத்தில், 100-க்கு 10 ஆகும். அது வருமானமாகிய ரூ. 5,00,000 க்கு வந்தது.

(30) தங்களுக்கும், தங்கள் முக்ய உத்தியோகஸ்த்தர்களுக்கும் "ருசும்" மாமூலை யேற்படுத்திக் கொண்டார்கள். அது மேற்கூறிய ஜமாபந்தி தொகையில் நூற்றுக்கு, $1\frac{1}{2}$ ஆக ரூ. 75,000 ஆயிற்று.

(31) தாங்கள் பல நாணயங்களை வரித்தொகையாக பெறுவதாகவும் அவைகளைச் சில செல்லாதவையென்றும் சொல்லி நாணயமாற்ற நஷ்டத்திற்கு நூற்றுக்கு 3 எடுத்துக்கொண்டார்கள். அதாவது ரூ. 35,00,000 வசூலிக்கப்பட்டால் ரூ. 10,500 எடுத்துக்கொண்டார்கள். (நிலங்கள் ஒழுங்காக அளக்கப்பட்டு, விளைச்சலின் மதிப்பு சரியாய்த் தெரிந்திருந்தால் இப்படியெல்லாம் நடவாது.)

(32) ஒழுங்கான மதிப்பினின்றும் தப்பித்துக்கொள்வதற்கு, நிலங்களின் பழைய ஏற்பாடுகளை மாற்றி, "முல்லாவட்டி", "நஜர்" முதலிய மாமூல்களை, கிஸ்தித் தொகையில் சேர்த்து வசூலிக்க ஆரம்பித்தார்கள். இவைகள் சம்பந்தமாக பொய்க்கணக்குகளை சுலபமாகத் தயாரித்துக்கொண்டார்கள்.

(33) மேற்கூறிய உபாயத்தால் வரித் தொகையில் ஒரு பாகத்தை முன்னதாகவே எடுத்துக்கொள்ள சாத்தியமாயிருந்தது. அப்படியிருந்தும் கச்சேரிச்செலவுக்கென்று, இன்னும் குடியானவர்களிடமிருந்து வசூலித்தார்கள். ஆனால் நிலங்கள் வரிக்குத்தகைக்காரர்களிடம் ஒப்புவித்ததிலிருந்து நல்ல கச்சேரி ஒன்றும் கிடையாது. 50 லக்ஷ ரூபாய் கிஸ்து தொகையில், கச்சேரி சிலவிற்கென்று ரூ. 3,25,000 வசூலித்து வந்தார்கள்.

(34) "ரவசெ" "உல்பா" என்ற மாமூல்கள், தங்கள் சேவகர்களுடைய சம்பளத்திற்கும் தங்கள் பிரயாணச் செலவிற்கும் வசூலிக்கப்பட்டன. அது ரூ. 35,000 ஆயிற்று.

(35) மேற்கூறிய தொகைகள் யாவும் வரிக் குத்தகைக்காரர்களால் வசூலிக்கப்பட்டு முடிவில் ஜமீந்தாரிடம் வந்து சேர்ந்தன. அதற்குத் தகுந்தாற்போல் முச்சலிக்கைகளும் அதிகரித்தன.

(36) ஜமாபந்தி தொகை 50 லக்ஷத்திற்கு மேலே குடியானவர்களிடம் ஹிம்சித்து வசூலித்த தொகை ரூ. 5,40,000; "சாரி" தொகையோடு அது ரூ. 10,40,000 ஆயிற்று.

ஸர்கூட் கமிட்டி அறிக்கையின்படி 1802-வது வருஷத்திய சாசுவத ஏற்பாட்டுக்குமுன் ஜமீந்தார்களுடைய நிர்வாகமும் நிலைமையும் இவ்வாறிருந்தன. இவ்வறிக்கையோடு ஷை கமிட்டியார், வட சர்க்கார் பிரதேசங்களின் நிர்வாக சீர்திருத்த சம்பந்தமாக சில சிபார்சுகளையும் செய்தார்கள்.

ஸர்கூட் கமிட்டியின் சிபார்சுகள்.

சிபார்சுகள் பின்வருமாறு :—

(1) கிழக்கு இந்தியா கம்பெனிக்கும் அதன் உத்தியோகஸ்தர்களுக்கும், வரி விஷயங்களிலுள்ள அறியாமையைக் கருதி, ஜமீந்தார்களுடைய கச்சேரிகளையும், உடனே ஜாக்கிரதையாக கவனித்து வரவேண்டியது. (கம்பெனி பிரதேசங்களில் அமைதி ஸ்தாபிக்கப்படும்வரையும், போதிய ராணுவ பலம் சேகரிக்கும் வரையும்).

(2) இரண்டாவது சிபார்சு.—நாட்டை பத்து லக்ஷ ரூபாய் வருமானம் தரக்கூடிய ஜில்லாக்களாக பிரிப்பது. அவைகளை இரண்டு லக்ஷ ரூபாய் வரக்கூடிய உட்பிரிவுகளாக மீண்டும் வகுப்பது.

(3) நிலவரி உத்தியோகஸ்தர்கள், சந்தோஷமாகவும் திருப்தியாகவுமிருந்து தங்கள் வேலையில் அக்கரையெடுத்துக்கொள்வதற்கும், பரிபாலனத்தில் எந்த இடத்திலும் ஒழுங்கீனம் அல்லது தவறு நடக்காமல் தடுப்பதற்கும், அவர்கள் சம்பளத்தை உயர்த்தவேண்டியது. இது சீர்திருத்தத்தின் முதல் நோக்கமாகக் கருதப்பட்டது. வேலையினுடைய பொறுப்பிற்கும் சிரமத்திற்கும் தகுந்தாற்போல் சம்பளம் உயர்த்தவேண்டும். அது, கூட்டு வசூல் மொத்த தொகையையிலிருந்து கொடுக்கப்படவேண்டுமேயொழிய, வகிக்கும் உத்தியோகத்திற்கு சம்மந்தமில்லாததும், நிஷ்கரணையாச கிடைக்குமென்றும் சொல்லக்கூடிய ஒரு ஸ்திர சம்பளமென்று கருதக்கூடாது.

(4) தனது கண்காணிப்பில் உள்ள நிலங்களுக்கு ஒருவரும் தரகு (கமிஷன்) வாங்கக்கூடாது. ஆனால் தன்னைப்போன்ற உத்தியோகஸ்தர்களோடு சரியான ஈவில் பங்கிட்டுக்கொள்ளலாம்.

(5) கம்பெனி உத்தியோகஸ்தர்கள் ஒவ்வொருவரும் நிலவரி வருமான அபிவிர்த்திக்கு, தங்களால் கூடியவரை பாடுபடவேண்டும். பிறருடைய அஜாக்கிரதையையாவது மோசச் செயலையாவது கண்டு பிடித்து மேலதிகாரிகளுக்கு தெரிவிக்கவேண்டும்.

(6) வரி வசூல் விஷயத்தில், குடியானவர்களுடைய செல்வம் பெருகி, ஜனத்தொகையும் அதிகமாகும் வரையும், குடியானவர்கள், நாட்டில் முக்கிய நிலமை அடையும் வரையும் பழைய வருஷாந்திர மதிப்பு முறையையே அனுசரிக்கவேண்டும். நாடு நல்ல நிலமை அடைந்தபிறகு, நிலக் குத்தகைகளோ, நிலத்திலுள்ள உரிமையோ, சந்தர்ப்பத்திற்கு தகுந்தாற்போல் ஸ்தாபிக்கப்படலாம்.

(7) ஹிந்து அரசர்கள் ஆட்சி புரிந்த காலத்தில் நிலத்தில் பிரத்தியேக உரிமையிருந்ததாக தெரிய வருகிறது. ஆனால் மகம்மதியர்கள், தேசத்தை ஜெயித்து, வட சர்க்கார் பிரதேசங்களில், "புலிகட்" வரையும், தங்கள் ஆட்சியை ஸ்தாபித்த காலத்தில் நிலங்களெல்லாம் தங்களுக்கு சொந்தமென்று அரசாங்கத்தார் பாத்தியம் கொண்டாட ஆரம்பித்தார்கள். குடிகள், கேவலம், அடிமைகள் என்று கருதப்பட்டார்கள். இதை, ஜமீந்தார்கள் தவறு என்று எந்த சமயத்திலாவது எடுத்துக் கூறவில்லை.

(8) வரிப்பணத்திலாவது, தானியத்திலாவது கொடுக்கலாம். ஆனால் தானியத்தில் செலுத்துவதுதான் குடியானவர்களுக்கு சுலபமாகவும் நன்மை பயப்பதாகவும் இருக்கும். ஆனால் தானியத்தை களஞ்சியத்திற்கு கொண்டுபோகும்போது நஷ்டமேற்படாமல் பார்த்துக்கொள்ளவேண்டும். களஞ்சியத்திலிருக்கும்பொழுது வீணாக சிதரவிடாமலும், சிப்பந்திகள் மோசமாக அளப்பதாலும் மற்ற தந்திரங்களாலும் குறையாமலிருக்கும்படியும் பார்த்துக்கொள்ளவேண்டும். களஞ்சியத்திற்கு வந்து சேர்ந்தபொழுது எப்படியிருந்ததோ அப்படியே களஞ்சியத்திலிருந்து போகும்பொழுதுமிருக்க வேண்டும்.

(9) பணமாக வரி வசூலிப்பதே மிகவும் சௌகர்யமானது. ஒழுங்கீனம், மோசம், அவ்வளவு ஏற்படாது. ஆனால் ஏழை குடியானவர்களுக்கு பணம் தேடுவது கஷ்டம். "சர்க்கார்" பிரதேசங்களில் நாணயமாக இருக்கும் பணம் மிகவும் குறைச்சல். அதிக வட்டியிருப்பதால், கடன் வாங்குவதும் குடியானவர்களுக்கு முடியாத விஷயம்.

(10) எதிர்காலத்தில் "சர்க்கார்" பிரதேசங்களுக்கு அதிக செல்வத்தையும், குடியானவர்களுக்கு அமைதியையும் சுபிக்ஷத்தையும் தரக்கூடிய முறையையே அனுசரிக்கவேண்டும். அரசாங்கத்திற்கு உடனே லாபத்தைத் தந்து, அதன் உத்தியோகஸ்தர்கள் மோசம் செய்யாமல் தடுக்கும் முறைமட்டும் போதாது. மேற்கூறிய விஷயம் யாவையும் உத்தேசித்து நடுத்தரமான முறை ஒன்றை அனுசரிக்கவேண்டுமென்று சிபார்சு செய்யப்பட்டது. அதாவது குடியானவர்கள், முதலில் செலுத்தவேண்டி தொகைகள் தானியத்திலிருக்கலாம். தானியத்தை விற்பதற்கு போதிய காலமான பிறகு, ஏற்படும் நஷ்டத்தை பணத்தில் கணக்கிடவேண்டும்.

1802-ம்வருஷத்திய XXIX ரெகுலேஷன் படி கர்ணம் உத்தியோகத்தைத் தவிர, மற்ற உத்தியோகங்களெல்லாம் ஒழிக்கப்பட்டன.

2. 1802-வது வருஷத்திய சாசுவத நிர்ணய ரெகுலேஷன் XXV உடன் 1802-வது வருஷத்திய கர்ணம் ரெகுலேஷன் XXIX-ம், ஒரே தினத்தில் (31-வது ஜூலை 1802) ஷை ரெகுலேஷனின் பீடிகையில் காணப்படுவதென்னவென்றால்: பல காரணங்கள் நிமித்தம், வரி குத்தகைக்காரர்கள் தாங்கள் வசூலித்த அசல் தொகையை மறைத்து வந்தார்கள். அரசாங்கத்தார் தங்களுக்கு நியாயமாகவும் ஒழுங்காகவும் சேரவேண்டிய தொகையை அடையாமலிருக்க செய்யவேண்டுமென்பதே அதற்கு காரணம். தங்கள், கீழதிகாரிகளின், இத்தகைய ஒழுங்கீனங்களை கண்டுபிடிக்கவும், மோசமாக கணக்குகள் மறைக்கப்படுவதை தடுப்பதற்கும், அரசாங்கத்தார் போதிய உத்தியோகஸ்தர்களை நியமிக்கவில்லை. ஆனால், வரிக் குத்தகைக்காரர்களுக்கும், ஜமீந்தார்களுக்கும், குடியானவர்களுக்கும் பாதுகாப்பு அளிக்கவேண்டுமென்றும், "பேஷ்கஷ்" தொகையையும், வரித் தொகையையும் ஸ்திரப்படுத்தவேண்டுமென்று தீர்மானித்துவிட்டால், தங்களுக்கு இனிமேல், ஒழுக்கமற்ற கீழதிகாரிகளாலும், வரி வசூல் ஏஜண்டுகளாலும் யாதொரு நஷ்டமும் ஏற்படாதென்று திடமாக கருதினார்கள்.

அக்காரணத்தை யொட்டியே மகம்மதிய அரசர்கள் காலத்தினின்று அமுலில் இருந்து வந்த எல்லா உத்தியோகங்களையும் ஒழித்து கர்ணத்தைமட்டில் வைத்துக்கொண்டார்கள். இது ஐந்தாவது அறிக்கை (**Fifth Report.**) யில் அங்கீகாரம் செய்யப்பட்ட "ஸர்கூட்" கமிட்டி சிபார்சுகளைத் தழுவிச் செய்யப்பட்டது.

பழைய ரெவினியு அதிகாரிகள்.

கிழக்கு இந்தியா கம்பெனியாரால் பின்பற்றப்பட்டு, மகம்மதிய ஆட்சியின்கீழ் முன்பு இருந்த சில முக்கிய உத்தியோகங்களை ஒப்பிட்டுப் பார்ப்பதற்கும், வேண்டிய தகவல்களைத் தெரிவிப்பதற்கும், இச்சந்தர்ப்பத்தில் சில விஷயங்களை எடுத்துக்கூற விரும்புகிறோம்.

1. அவர்களில் பிரதானமானவர், பௌஸ்தார் என்கிற விருதுகொண்ட சேனாபதியாகும். அவர் உண்மையில் அமல்தார் ஆவார். அவரை நவாப் என்று சாதாரணமாக கூப்பிடுவது வழக்கம். பௌஸ்தார், கோல்கொண்டா தேசத்து முதல் அரசராயிருந்தார். பின்னர் தக்ஷண தேசத்தின் ராஜப்பிரதிநிதியுடைய ஸௌபாவாக இருந்தார். அவருக்கு, தனது அதிகாரத்தின்கீழ் இருந்த பல நியமனங்களிலிருந்தும். சேனைத்தலைமையிலிருந்தும் 7,000-த்தில் இருந்து 10,000 சிப்பாய்களுக்கு கொடுக்கவேண்டிய சம்பள பட்டுவாடாவிலிருந்தும், வருஷந்தோறும் ஜமீந்தாரர்களிடமிருந்தும், அவர்களுடைய பிரதிநிதிகளிடமிருந்தும் வந்த நஜர்களாலும் சுமார் 4 அல்லது 5 லக்ஷம் ஒவ்வொரு வருஷமும் கிடைக்கும். மாதம் ஒன்றுக்கு "சர்க்கார்" தேசத்து பணம் ரூ. 5,000 பெருத பொழுது அவருக்கு தர்பார் அனுமதிக்கப்பட்டது. அப்பொழுது துருப்புக்களின் செலவிற்காக வருஷம் ரூ. 60,000 கழித்துக்கொண்டார்.

குறிப்பு.—கோல்கொண்ட அரசர் போரில் முறியடிக்கப்பட்டு, சக்கரவர்த்தி சேனையில் பௌஸ்தார் பதவி கொடுக்கப்பட்டது. ஆனால் உண்மையில், அவர் இப்பிரதேசங்களின் அரசராக இருந்தார்.

மற்ற முக்கிய உத்தியோகஸ்தர்கள் (1) காஜி: மத சம்பந்தமான விஷயங்களையும், பொருள் சம்பந்தமான வழக்குகளையும் விசாரித்து தீர்ப்புக்கூறுவதும், பள்ளிவாசல்களை நிர்வஹிப்பதும் இவர் கடமை. பஜார்களிலுள்ள விலைவாசிகளை நிர்ணயம் செய்வதும் பகிரங்கமான கொடுக்கல் வாங்கல்களையும், தனிப்பட்ட நபர்களுக்குள்ள கொடுக்கல் வாங்கல் நடவடிக்கைகளையும், தமது முத்திரையால் ஸ்திரப்படுத்துவதும், கொலை முதலிய குற்றங்களுக்கு தண்டனை விதிப்பதும்கூட இவரது கடமை. இவைகளுக்கெல்லாம், வழக்கின் முக்கிய தன்மைக்கேற்றவாறும், கக்ஷிக்காரர்களின் சக்திக்கேற்றவாறும், பணம் வாங்குவது உண்டு. இவருக்கு ரூ. 4,200 பெறுமான ஜாகீர்கள் உண்டு. ரூ. 1,600 பெறுமான பஜார் மான்யங்களும், தரகுகளும்கூட உண்டு.

(2) "கனகோ": இவருக்கு அமீருடைய பதவியும் அந்தஸ்தும் உண்டு. இவருக்கு ஜமாபந்தியில், சரியாகக் கூறில், சிக்காகோல் "சர்க்கார்" தர்பார் வசூலில் 100-க்கு ஒன்று கொடுக்கப்பட்டது. (தர்பார் வசூல் 4 லக்ஷம்) வருஷத்திற்கு ரூ. 1,000 பெறும்படியான ஜாகீர்களும் சுங்கங்களும் சிக்காகோல் பஜார்களில் இவருக்கு உண்டு.

(3) "மஜூம்தார்": இவர், "சர்க்கார்" பிரதேசத்தின் கணக்கர். நவாப் இஷ்டப்பட்டால் நீக்கி விடலாம். ஆனால் தொடர்ந்து உத்தியோகம் செய்துவந்தால், அது அரசாங்கத்திற்கு நலமென்று கருதி, அவ்வாறே அனுமதிக்கப்பட்டுவந்தார். ஜமீந்தார்களுடைய வருமானத்தைப்பற்றியும், துருப்புகளைப்பற்றியும் அவருக்கு நன்ருய்த் தெரியுமாகையால், அவருடைய சகாயம் ஜமீந்தார்களால் விரும்பப்பட்டு, அவருக்கு ஏராளமான வெகுமதிகள் கொடுக்கப்பட்டன. ஜமீன்களில், ஜாகீர்களும், ஹாவலி நில ஜமாபந்தியில் 100-க்கு 1 ஆக, வருஷம் ரூ. 2,000-மும் அடைந்துவந்தார். ரூ. 6,500 பெறுமான பஜார் சுங்கங்களும், ஜாகீர் கிராமங்களும் கூட அவருக்குண்டு.

(4) "மஜூம்தார்": இவருக்கு உப்பளச் சுங்கங்களோடு, கிராமங்களும் நிலங்களும்கூட உண்டு. ரூ. 15,000 பெறுமான சில பஜார்களும், மற்ற மாமூல்களும்கூட உண்டு.

(5) "அடலத் தரோகா": இவர் நவாப் தலைமை வகித்த உயர்தர நீதி மன்றத்தில், ஒரு நியாயாதிபதி. சில சமயத்தில் இவர் நவாபின் உறவினராகவோ, அல்லது வேலைக்காரராகவோ இருந்தார். நவாபுக்கு விஷயங்களைத் தெரிவித்து, தனது உத்தியோகத்தின் லாபங்களை அவருக்கு செலுத்திவிடுவார். பொதுவாக, இவர் படித்த மனிதராக இருந்து, வழக்குகளை விசாரிக்கும் உரிமையையும், அது சம்பந்தமாக பணம் வாங்குவதையும் நவாபிடம் ஒரு குறிப்பிட்ட தொகைக்குப் பெற்றவர். இது ஒரு தீய வழக்கம். தர்பார் அவருக்கு யாதொரு சம்பளத்தையும் கொடுக்கவில்லை. ஏனெனில், இப்படிப்பட்ட உத்தியோகஸ்தர் இருக்கின்ருர் என்பது தர்பாருக்குத் தெரியாது. வழக்காடப்பட்ட சொத்தின் மதிப்பில், 100-க்கு 25 ஆக இவருக்கு பெருவாரியான தொகைகள் கிடைத்துவந்தன. கக்ஷிக்காரர்களிடமிருந்து நஜர்களும், வழக்கில் ஜயித்தவரிடமிருந்து, சக்திக்கேற்றுற்போல் வெகுமானமும் கிடைப்பது வழக்கம்.

(6) "கொத்தவால்": சிக்காகோல் போலீஸ் இவர் வசம் இருந்தது. கைதிகளைப் பார்த்துக்கொள்வதும், தண்டிப்பதும் இவர் கடமை. மாதச்சம்பளம் ரூ. 60. ஜாகீர்களிலிருந்து வருவது ரூ. 250. பஜாரிலிருந்து ரூ. 200. இன்னும் பல மாமூல்களும் உண்டு.

(7) "தேசபாண்டி": இவர் "கானகோவாலும்", மஜூம்தாராலும் நியமிக்கப்பட்டவர். 2 லக்ஷ ரூபாய் வருமானம் தரக்கூடிய பரக்கானுவிற்கு, தலைமை எழுத்தாளராகவும், வரி வசூலிப்பவராகவும், மேற்பார்ப்பவராகவும், உத்தியோகம் செய்து வந்தார். தம்மிடம்வரும், கணக்குகளையும், வரிகளையும், சரிபார்த்து கிராம கர்ணங்களுக்கும், "நாயக்வரிக்கும்," மேலதிகாரியான மஜூம்தாருக்கு அனுப்பிவிடவேண்டும். இவருக்கு நியாயாதிபதி அதிகாரமில்லாவிட்டாலும், அடலத்தரோகா கட்டளை இட்டால், சிறு குற்றத்திற்காக தண்டிக்கவும், சிறைவைக்கவும், குற்றவாளியை அல்லது கலகம் செய்பவனை சிக்ஷை செய்வதற்கும் இவருக்கு அதிகாரம் உண்டு. வரி வசூல் வேலைகளுக்கு, தன் கீழிருந்த நாயக்வரி, மேற்கூறிய கருமங்களுக்கு உதவியாயிருந்தான். இது அரசாங்கத்திற்கு மிச்சமாயிருந்தது. தமது பரக்கான வசூலில் 100-குக் 1 இவருக்குக் (கமிஷனுகை) கொடுக்கப்பட்டது.

(8) "நாயக்வரி": ஒவ்வொரு கஸ்பாவிலும் 25 பேர்கள் இருந்தார்கள். இவைகள் கடமை, கலகம் செய்பவர்களையும், குற்றவாளிகளையும் பிடித்துவருவது; கச்சேரிக்கணக்குகளையும், பணத்தையும் காத்து வருவது. நாயக்குக்குச் சம்பளம் மாதத்திற்கு ரூ. 8.

(9) "கிராமக்கர்ணங்கள்": அவர்கள் கடமை யாவருக்கும் தெரிந்ததே. விளைச்சல் விவரங்களையும், கிராமக் கணக்குகளையும் எழுதிவைக்கவேண்டியது. அதற்கு நகல் ஒன்று "தேசபாண்டிக்கு" அனுப்பிவிட வேண்டும். விவசாய பரிஸ்திதியைப்பற்றியும், குடியானவர்களுடைய நிலைமையைப்பற்றியும்கூட, மேலதிகாரிகளுக்குத் தெரிவிக்கவேண்டும். மாறுதல்கள், கிராமத்தில் ஏற்பட்டால், அதற்குக் காரணங்களையும் குறிக்கவேண்டும். தேசபாண்டியின் அதிகாரத்தின் கீழ்உள்ள "ஜங்கன்"—"ஜக்காயத்தி" எனும் நிலச் சுங்கங்களைப்பற்றியும், தகவல்கள் தெரிவிக்கவேண்டும். சம்பளத்திற்கு பதிலாக இவர்களுக்கு நிலங்கள் உண்டு. விதைவிதைக்கும் பொழுதும், அறுவடைசெய்யும் பொழுதும், குடியானவர்கள் இவர்களுக்கு லசி

வெகுமானங்கள் கொடுப்பது வழக்கம். பிரியப்பட்டு கொடுக்கப்பட்டதால் அதை அரசாங்கத்தார் தடுப்ப தில்லை. தற்போது மிராசிலிருந்தும், மானியங்களிலிருந்தும், அவர்களுக்கு ரூபாய் 60 (வருஷம் ஒன்றுக்கு) கிடைக்கலாம். ஒவ்வொரு கிராமத்தின் விளைச்சலும் சுமார் 1,200 ரூபாய் இருக்கலாம். அதிலிருந்து, 2 லக்ஷம் தரக்கூடிய ஒவ்வொரு பரக்கானத்திலும் சுமார் 160 கிராமங்கள் இருக்க வேண்டுமென்று ஊகிக்கப்படும்.

(10) "தலைமை நாயுடு": கிராமவாசிகள் பிரியப்பட்டால், இவர் முன் தங்கள் வழக்குகளைத் தெரி வித்துக்கொள்ளலாம். மேலும், கர்ணங்களுக்கு இவர் ஒத்தாசை செய்யவேண்டியது. அரசாங்கத்தார் இவ ரை நம்பி ஆதரித்து வந்தனர். இவருக்கு மானியம் உண்டு. அனுவசியமான செலவைத் தடுப்பதற்கு, கர்ணமும் நாயுடுவும் சேர்ந்து, அரசாங்கத்திற்கு சேரவேண்டிய வரியை குடியானவர்களிடம் வசூலித்து, குறிப்பிட்ட காலங்களில், மஜும்தார் கச்சேரியில் செலுத்திவிட வேண்டும்.

(11) "பாக்கியும்", "தண்டலரியும்": ஒவ்வொரு கிராமத்திலும் இருவர் இருந்தனர். பாக்கி, பறையன். தானியத்தை அளந்து காக்கவேண்டியது. தண்டலரிகள் நாயக் ஜாதியைச் சேர்ந்தவர்கள். அவர்கள் கடமை, கிராமத்தையும் தானியக் குவியல்களையும் பாதுகாக்கவேண்டியது. இழந்துபோன பொருள்களை தேடிப்பிடித்து ஒப்பிக்கவேண்டும். தான் அளக்கிற ஒவ்வொரு கண்டி தானியத்திலும், அவருக்கு ஒரு படி தானியம் சேரும். ஏதாவது காரியமாக பிரயாணம் செய்தால் அவருக்கு செலவுத்தொகை கொடுப்பதும் உண்டு. இந்தமாதிரி செலவுத்தொகை கொடுப்பது அதிகமாக இருக்காதோ என்று முதலில் தோன்றலாம். ஆனால் அது அப்படியில்லை. ஏனெனில், உத்தியோகங்களுக்கு, இதுவரை ஆதாரமாயிருந்த பல மாமூல்கள் நிராகரிக்கப்பட்டன. வரியும், குடியானவர்களுக்குக் கஷ்டத்தை கொடுக்காமல், நியாயமுறையில் அதிகரிக்கப் பட்டது. எவ்வாறு பார்த்தாலும், அரசாங்கத்தாருக்கு சாதகமாகவே இருந்தது. அதிகாரிகள் சுயேச்சையா யிருப்பதற்கு கௌரவமான வசதிகளும் ஏற்பட்டன. அத்தகைய வசதிகள் இல்லாமையால்தான் இந் நாட்டில் அநேக ஒழுங்கீனங்கள் முன்பு உண்டாயின.

பல உத்தியோகங்கள் ஒழிதல்.

கர்ணம் உத்தியோகத்தை தவிர, 1802வது வருஷம்வரை, கிழக்கு இந்தியா கம்பெனி ஆட்சியின் கீழ் இருந்த எல்லா உத்தியோகங்களையும் ஒழித்துவிடவேண்டுமென்று சிபார்சு செய்யப்பட்டது. மேற்கூறிய உத்தியோகங்களில் பெரும்பான்மையானவர்களை நீக்கிவிட உத்திரவு செய்துவிட்டு, அதற்கடுத்தபடியாக, நீதிஸ்தலங்கள் ஸ்தாபிக்கப்படவேண்டுமென்றும், சட்டங்கள் அமைக்கப்படவேண்டுமென்றும், சிபார்சு செய் தனர். சட்டம் ஏற்படுத்துவதில், மகம்மதிய குரானை பின்பற்றுவதா, அல்லது, ஹிந்து நூல்களை ஆதரிப்பதா என்பது, கொஞ்சகாலம் சந்தேகத்திலிருந்தது. முடிவில், கமிட்டியின் சிபார்சுகள் பின் வருமாறு—(அது சில முக்கிய தகவல்களைத் தெரிவிப்பதால், கமிட்டியின் வாசகங்களை, விரிவாக இங்கு எடுத்து எழுதுகிறோம்.

ஸர்கூட் கமிட்டியின் சிபார்சுகள்.

"வேறெந்த வழியிலும், அவர்களுக்குச் சந்தர்ப்பம் கொடுக்காமல், மகம்மதியர்களை சிப்பாய்களாகவே உபயோகப்படுத்திக்கொள்ளவேண்டுமென்பது, கிழக்கு இந்தியா கம்பெனியின் அக்காலத்து அரசியல் முறை யாக இருந்தது. வெகுநாளாக அடக்கியாளப்பட்டுவந்த ஹிந்துக்களோடு பழகுவது சுலபமாக இருப்பதாக கம்பெனியார் கருதினர். அதற்காக, அவர்கள் ஹிந்துக்களை ஆதரித்தும், முஸ்லீம்களை ஆதரிக்காமலும் இருந்தனர். சட்டங்கள், நீதி ஸ்தலங்கள், இவைகள் ஸ்தாபிப்பதில், கமிட்டி பின்வரும் சிபார்சை செய்தது :—

> "நீதிஸ்தலங்களுக்கும் அடலத்தரோக்காக்களுக்கும் ஆதாரமா இருக்கவேண்டிய சட்டங்கள் ஹிந்து நூல்களிலிருந்து எடுக்கப்படவேண்டுமே தவிர, குரானிலிருந்து எடுக்கக்கூடாது. ஆனால், தண் டனைக்குப் பதிலாக பணம் வாங்கும் வழக்கம், கண்டிப்பாக விலக்கப்படவேண்டும். குற்றங்களுக்கு அதிக கொடுமையான தண்டனை விதிக்கக்கூடாது.
>
> "மகம்மதியர்களுக்கு அடலத் உத்தியோகம் கொடுக்கக்கூடாது. ஏனெனில், அவர்கள் மதப்பிடி வாதமும் மிதமிஞ்சின மனப்பான்மையுங்கொண்டு சாந்தமான ஹிந்துக்களை கஷ்டப்படுத்துவார் கள். மேலும், அவர்களுடைய வழக்கமான சோம்பலும், செருக்கும், சுகஜீவன பிரியமும் அவர் களை அப்படிப்பட்டபொறுப்பான உத்தியோகத்திற்கு தகுந்தவர்களாகச் செய்யாது. அக்காரணத்தி னலேயே மகம்மதிய அடலத்துகளில், நிஷ்பக்ஷபாதமான நியாயம் கிடைப்பதில்லை. ஆதலால், ஐரோப்பியர்கள் அறிந்துகொள்ளுவதற்காக மொழிபெயர்க்கப்பட்ட சட்டங்களைக்கொண்டு, ஹிந்துக் களை, ஹிந்து நியாயாதிபதிகளே விசாரிப்பது நலந்தரும். மேற்கூறிய சட்டங்களும், ஹிந்துக்களுக் கென்றே ஆதியில் ஏற்படுத்தப்பட்டன. சர்க்கார் பிரதேசங்களைப்போல், புதிய அரசாங்கத்தையும் (கம்பெனி அவ்வாறே கருதினது), புதிய பரிபாலன முறையை விரும்பும் பிரதேசம், இந்தியாவில் எங்குமே கிடையாதென்பது எனது திட நம்பிக்கை. ஏனெனில் ஹிந்துக்கள், மகம் மதியர்கள் விளைத்த துன்பத்தாலும், ஜமீன்தார்கள் செய்த ஹிம்சையாலும், மிகவும் கஷ்டப் பட்டார்கள்.
>
> "வெகுகாலமாக ஒடுக்கப்பட்டு, மகம்மதிய ஆட்சி முறைப்படி ஜமீன்தார்களால் வாட்டி வதைக்கப்படும் ஹிந்துக்கள், தங்களுக்கு சுகத்தையும், தங்கள் பொருளை சுயேச்சையாக அனுபவிப்பதற்கு வசதி யையும், தரும் முறையை ஆவலுடன் ஏற்றுக்கொள்வார்கள் என்பதில் சந்தேகமில்லை. மகம் மதியர்களுக்கு சிப்பாய் வேலையைமட்டும் கொடுக்கவேண்டும்; மற்ற வழியில் ஆதரிக்கக்கூடா தென்கிற முக்கிய கருத்தையொட்டி, மற்றொரு விஷயத்தை தெரிவிக்கிறேன். சீதாராமராஜு, ஹாவலி நிலங்களை குத்தகைக்கு எடுத்தபொழுது, சர்க்கார் வசூலுடன் இனும் நிலங்களையும் சேர்த்துக்கொண்டபடியால், பல மகம்மதியர்கள் தங்கள் குடும்பங்களோடு ஹைதராபாத் முதலிய ராஜ்யங்களுக்குப் போய்விட்டார்கள். அவர்கள், நமது பராமரிப்பையும், சேனையையும் விட்டு, சோம்பல்வாழ்க்கையும், நிலைவரமற்ற சம்பளமும் உள்ள, சுதேச சமஸ்தானங்களுக்கு போய்விட் டார்கள். நமது ஒழுங்கும், சீர்மையும், தீயவழக்கங்களுக்கும் ஆட்பட்ட அவர்களுக்கு, ஒவ்வாது போயின. விரும்பத்தகாத இவர்களை நாம் திரும்பியும் அழைக்கலாகாது. ஏனெனில் இவர்கள் சுயேச்சையை அடைந்தால், சோம்பேறிகளாகவும் கிரமமற்றவர்களாகவும் நடந்து கொள்வார்கள்."

சுருங்கக்கூறில், இவைகளே, கோர்ட் ஆவ் டைரக்டர்களுக்கு, ஸர்கூட் கமிட்டி செய்த சிபார்சுகள். ஆனால் எல்லா சிபார்சுகளும் அங்கீகரிக்கப்படவில்லை. மேற்படி அறிக்கையை பெற்றவுடன், அரசாங்கத்தார் வங்காளத்தின் திருஷ்டாந்தரத்தை பின்பற்றி, சென்னை ராஜதானியிலும், ஜமீன்தார்களோடு சாசுவத ஏற்பாட்டை செய்து கொள்ளத் தீர்மானித்தார்கள். ரெவினியூ போர்டாரின் யதாஸ்தின்மீது அரசாங்கத்தார் பிறப்பித்த முதற் கட்டளை என்னவென்பதை அறிவது அவசியம். அது பழைய நிலைமைக்கும் புதிய நிலைமைக் கும் மத்தியிலுள்ள முக்கிய தொடர்பு என்று கூறலாம்.

ஐந்தாவது அறிக்கை (Fifth Report)—முக்கிய விஷயங்களை சேகரிக்க போர்டுக்கு விடுத்த குறிப்புகள்.

ஐந்தாவது அறிக்கையின் 18-வது அநுபந்தத்திலிருந்து, கீழ்கண்ட விஷயத்தை எடுத்திருக்கிறோம். ஜமீன்தார்களை, அவர்கள் ஜமீன்களுக்கு உடையவர்களாகச் செய்யும் நோக்கத்துடன் சாசுவத ஏற்பாடு ஒன்றை அமைத்துக்கொள்ள அரசாங்கத்தார் விரும்பினர் என்று முன்பே கூறினோம். அது சம்பந்தமாக, வேண்டிய தகவல்களை சேகரிக்கும்படி, ரெவினியு போர்டுக்கு சில குறிப்புகள் அனுப்பப்பட்டன. எத்தத்துவங்களைக்கொண்டு, சாசுவத ஏற்பாடு செய்யவேண்டும் என்பது தெளிவாக குறிக்கப்பட்டது. குடியானவர்களுக்கும், ஜமீன்தார்களுக்கும், இடையே, "நிலத்தின் சொந்தக்காரர்கள்" என்ற சொற்றொடரின் அர்த்தம் என்ன என்பதும் துலக்கமாகத் தெரிவிக்கப்பட்டது. குடியானவர்களுடைய உரிமைகளையும் பாத்தியதையும், பாதுகாக்கவேண்டும் என்பது சாசுவத ஏற்பாட்டின் நோக்கம் என்று ஸ்பஷ்டமாக தெரிவிக்கப்பட்டது. வரி வசூல் செய்யும் அமீல்கள், முதலிய அதிகாரிகளின் உபத்திரவத்தினின்றும், கொடுங்கோன்மையினின்றும் குடியானவர்களை விடுவிப்பதே, சாசுவத ஏற்பாட்டின் முக்கியகருத்து என்று கூறப்பட்டது.

சாசுவத ஏற்பாட்டின் வரிவிகித நிர்மாணமும், அதுசம்பந்தமாக என்ன தத்துவங்கள் அனுசரிக்கப்படவேண்டுமென்பதும் வகுக்கப்பட்டன.

கிழக்கு இந்தியா கம்பெனி நிர்வாக விஷயங்களைப்பற்றி, செலக்ட் கமிட்டி எழுதிய ஐந்தாவது அறிக்கையின் அநுபந்தத்திலிருந்து, சில சாராம்சங்கள்.

அநுபந்தம் 18.—பக்க உட்பிரிவு 1. சென்ற செப்டம்பர்மீ 4-தேதி, அரசாங்கத்தார் விடுத்த உத்திரவு, பின்வருமாறு பெட்ரி அவர்களுக்கு : ரெவினியு போர்டு தலைவருக்கும் அங்கத்தினர்களுக்கும் ;

ஐயன்மீர்,

வரிவசூல் முறையில், உத்தேசிக்கப்பட்ட மாறுதல்களைப்பற்றி, நீங்கள் அனுப்பிய அறிக்கை கிடைத்தது. அது சம்பந்தமாக எங்கள் உத்திரவுகளை விரைவில் பிறப்பிக்கின்றோம். அதற்குமுன், ஜமீன்தார்களோடு சாசுவத ஏற்பாடு ஒன்றை செய்வதற்கு, வேண்டிய தகவல்களை நீங்கள் சேகரிக்கவேண்டியது. ஜில்லா கலெக்டர்களுடைய விசாரணைகளிலிருந்தும், உங்களுடைய பத்திரங்களிலிருந்தும் கிடைக்கக்கூடிய தகுந்த தகவல்களைக்கொண்டு, ஜமீன்தார்களை அவர்கள் ஜமீன்களுக்கு, உடையவர்களாகச் (Proprietors) செய்ய வேண்டுமென்பது, எங்கள் எண்ணம்.

என்ன தத்துவங்களைக் கொண்டு, வங்காளத்தில், சாசுவத ஏற்பாடு செய்யப்பட்டதென்பது, நீங்கள் முன்னரே, அறிந்தவிஷயம். மேற்படி தத்துவங்களை, கூடுமானவரை தழுவி நடப்பீர்களென்று கருதுகிறோம்.

பலஜில்லாக்களில், தாலுக்தார்களுடைய உரிமையைப்பற்றியும், கீழ்தர குடியானவர்களுடைய உரிமையைப்பற்றியும், அவசியமான தகவல்களைச் சேகரிக்கவேண்டும். ஜமீன்தார்களுக்கு உடைமை உரிமைகள் வழங்கும்போது, அதனால் பிறருடைய நிஷ்கரணையான உரிமைகள் பாதிக்கப்படக்கூடாதென்பது எங்கள் விருப்பம்.

ஹாவலி நிலங்களில், நில உரிமை அரசாங்காத்தாரைச் சேர்ந்தது. மேற்படி நிலங்களை 1 முதல் 10,000 பக்டோக்கள் (வருஷாந்திர ஜம்மா) தரக்கூடிய எஸ்டேட்களாகவும் சிறு உட்பிரிவுகளாகவும் அமைக்கவேண்டியது—எஸ்டேட்களுடைய ஆஸ்த்திக்குத் தகுந்தாற்போல், செலுத்தவேண்டிய தொகை நிர்ணயம் செய்யவேண்டும். மேற்படி நிலங்களின் நில உரிமையை, சாத்தியமாயிருந்தால், நிலச்சுவான்தார்களுக்கு மாற்றவேண்டுமென்பது எங்கள் கருத்து.

இங்ஙனம்,

தங்கள் வணக்கமுள்ள ஊழியர்கள்,

(கையொப்பம்) மார்னிங்டன்.
(,,) கிலவ்.
(,,) ஜியோ. ஹாரிஸ்.
(,,) டப்லியூ. பெட்ரி.
(,,) இ. டப்லியு. ஹாலோபீல்டு.

செண்ட் ஜார்ஜ் கோட்டை,
1799-ம்வருஷ செப்டம்பர்மீ 4உ.

பக்கஉட்பிரிவு 2.—மேலே தெரிவித்தவாறு, புதிதாக ஏற்படுத்தப்போகும் முறையை, நீங்கள் நன்கு அறிந்துகொள்ளும் பொருட்டு, அதன் தத்துவங்களை விளக்கமாகத் தெரிவிக்கின்றோம். நாங்கள் கொண்டுள்ள நோக்கங்களை எடுத்துக்கூறினால், முதலாக, தகுந்த தகவல்களை சேகரிப்பதற்கும், பின்பு அரசாங்கத்தின் கருத்துக்களை நிறைவேற்றுவதற்கும் ஏதுவாயிருக்கும்.

பக்கஉட்பிரிவு 3.—அவைகள் பின்வரும் தலையங்கத்தின்கீழ் அமைக்கப்படலாம் :—ஜமீன்தார்களை அவர்கள் ஜமீன்களுக்கு உடையவர்களாகச் செய்தல். அவர்களோடு சாசுவத ஏற்பாடு, முடிவு செய்துகொள்ளுதல். அரசாங்கத்திற்குச் செலுத்தவேண்டிய தொகையில் குறைவு ஏற்பட்டால், ஜமீனை விற்றோ, மாற்றியோ, சரிசெய்வது. ஜமீன்தார்களுக்கும் அவர் போன்றவர்களுக்கும் நிலத்தில் உடைமை உரிமை கொடுக்கப்பட்டதின் பலனாக, தாலுக்தார்களுடைய உரிமைகளுக்காவது, குடியானவர்களுடைய உரிமைக்காவது, யாதொரு பாதகமும் உண்டாகாமல் பார்த்துக்கொள்வது. விதிக்கப்பட்ட ஜம்மாவின்படி ஜமீனை பெற்றுக்கொள்ள மறுப்பவர்களைப்பற்றி ; அருகரல்லாத நிலச்சுவான்தார்களைப்பற்றி ; ஜமீன்தாரிடமிருந்து மற்றொருவருக்கு, பகிரங்க விற்பனையினாலோ, பிரத்தியேக விற்பனையினாலோ, தானமாகவோ, ஜமீன் பூராகவாவோ, அல்லது ஒரு பகுதியையோ மாற்றுவதைப்பற்றி ; மேற்படி ஜமீன் பகுதிகள்மீது அதற்கேற்றாற்போல் பேஷ்கஷ் விதித்தல் ; ரெவினியூ அதிகாரிகள் ரெவினியூ கணக்குகள் வைத்துக்கொள்வது பற்றியும் ; அரசாங்கத்தாருக்கு மற்ற தகவல்களை அனுப்பவேண்டியது பற்றியும் ; கம்பெனியாரைச் சேர்ந்த ஹாவலி நிலங்களுக்கு செய்யவேண்டிய ஏற்பாடுகளைப்பற்றியும்.

பக்கஉட்பிரிவு 4.—தற்போது, ஜமீன்தார்கள் தங்கள் ஜமீன்களை அனுபவித்துவரும் நிலைவரமற்ற முறையிலிருந்து, நில உரிமை பாத்தியத்தைப்பற்றி அறிந்துகொள்வது கஷ்டமாயிருக்கிறது. ஜமீன்கள் பரம்பரை உடைமைகள் என்று கருதப்படுகின்றன. ஆனால் அரசாங்கத்திற்கு செலுத்தவேண்டிய தொகை, விதி

விதரணையில்லாமல், கூடுவதும் குறைவதுமாக இருக்கிறது. பேஷ்கஷ் தொகையில் ஒரு பகுதி செலுத்தத் தவறினாலும், அரசாங்கத்தார் ஜமீன்களை எடுத்துக்கொள்ளலாம். இம்மாதிரியாக பல ஜமீன்தார்கள், ஜமீன்களை இழந்து, உபகாரச் சம்பளம் பெற்று வருகிறார்கள். திரண்ட பாக்கித் தொகைக்காக, கலெக்டரால் நிர்வகிக்கப்படும் ஜமீன்கள், கடன் தீர்ந்து திரும்பி ஜமீன்தார்களுக்கு கொடுக்கப்படுவதென்பது அபூர்வ விஷயமாயிருக்கிறது. தற்சமயம், அநேக ஜமீன்கள் இந்த சங்கடத்திலிருக்கின்றன.

பக்கஉட்பிரிவு 5.—இம்முறை அரசாங்கத்தாருக்கு ஏமாற்றத்தைத் தருகிறது. தேச நன்மைக்கு உகந்ததாகவும் இல்லை. ஆதலால் வங்காளத்தில் சில வருஷங்களுக்கு முன் ஏற்படுத்தப்பட்ட முறையை இங்கும் பின்பற்றி, தகுந்த பாத்தியதைகளுள்ள ஜமீன்தார்களையும், நிலச்சுவான்தார்களையும் அவரவர் ஜமீன்களுக்கு உடைமையாளர்களாக (பின்பு கூறப்போகும் நிபந்தனைகளோடு) செய்ய விரும்புகிறோம். மேற்படி நிபந்தனைகளுக்கிணங்க, அவர்களுடைய உரிமைகள், ஒழுங்காக அமைக்கப்பட்ட நீதி ஸ்தலங்கள் மூலம் ஸ்திரப்படுத்தப்படும். இது சம்பந்தமான முக்கியாம்சங்கள் பின்னர், விளக்கப்படும்.

பக்கஉட்பிரிவு 6.—நிலத்திற்கு உடைமையாளராயிருப்பதால், இப்பொழுது நேரிடுவதைப்போல் கவலை, கஷ்டம் நேரிடாவிட்டால், அரசாங்கத்திற்கு செலுத்தவேண்டிய தொகையை, ஒழுங்காகச் செலுத்திவரும் வரை, ஸ்திர அனுபவத்திற்கு யாதொரு பங்கம் நேரிடாவிட்டால், சட்டங்களின் பிரகாரம் நடந்துகொள்ளும்வரை, தங்கள் பாத்தியங்களுக்கும், தங்கள் உடைமைக்கும் யாதொரு தீங்கும் ஏற்படாது என்று ஏற்பட்டால், நிலமானது, யாவராலும் விருப்பத்துடன் கவரப்படுமென்பதற்கு, யாதொரு சந்தேகமுமில்லை. தற்போது, பயனற்றுக் கிடக்கும், அல்லது பிறவழிகளில் செலவிடப்படும், பணம், நில அபிவிருத்திக்காக உபயோகப்படுத்தப்படும்.

பக்கஉட்பிரிவு 7.—இந்த முக்கிய லக்ஷியத்தை, அடைவதற்கு நிலத்திற்கு, தக்க மதிப்பையளித்து, அரசாங்கத்திற்கு செலுத்தவேண்டிய தொகையை வரையறை செய்து ஒவ்வொரு ஜமீனோடும் நிரந்தர ஏற்பாட்டை செய்யவேண்டியதாயிருக்கிறது. ஜமீனுடைய சக்திக்கு தகுந்தாற்போல், மேற்படி தொகை, நியாயமான மிதமுள்ள முறையில், நிர்மாணிக்கப்படவேண்டும். இப்பொழுதுள்ள நிலைமையும், ஏற்படுத்தபோகும் புதிய முறையால் கொஞ்ச காலத்திலுண்டாகும் பலா பலன்களையும் ஒப்பிட்டுப் பார்த்து, அதற்கேற்றாற்போல், பேஷ்கஷ் தொகை சாசுவதமாகவும், என்றும் மாறாதவண்ணமும், முடிவு செய்யவேண்டும்.

பக்கஉட்பிரிவு 8.—அரசாங்கத்தாருக்கு சேரவேண்டிய வரி வருமானம் ஒரு புறமிருக்க, பிரஜைகளுடைய உரிமையை முடிவு செய்து, பாதுகாக்க வேண்டியதும் சர்க்காரின் நோக்கம். நிலத்தைச் சாகுபடி செய்வதில் சம்பந்தமுள்ளவர்களுக்கு, மிகவும் முக்கியமான உரிமை, நிலத்தின் மீது அரசாங்கத்தாருக்கு செலுத்தவேண்டிய தொகையை வரையறை செய்யவேண்டியதே. வரி வசூலிப்பவர்களால் துன்புறுத்தப்படும் குடியானவர்களுக்கும், இப்புதிய முறை விமோசனம் அளிக்கும். வரி வசூலிப்பவர்கள், தங்களிஷ்டம்போல் வசூலிப்பதால் குடியானவர்கள் சொல்ல முடியாத கஷ்டங்கள் அனுபவிக்கிறார்கள். ஜமீன்தார்கள், செலுத்தவேண்டிய தொகையே நிலைவரமற்றதாயிருந்தால் ஜமீன்தார்கள், குடியானவர்களுக்கு ஆதரவளிக்க முடியாது. சகாயம் செய்யமுடியாது. புதிய முறை ஏற்பட்டால்தான் வியாபாரம் செய்பவர்களுடைய சுபிக்ஷமும், அபிவிருத்தியடையும். ஏனெனில் வியாபாரமும், கைத்தொழிலும் நிலத்தின் விளைச்சல் மீதே ஆதாரப்பட்டிருக்கிறது. இவ்வாறாக, புதிய முறையால் நிலச்சுவான்தார்களுடைய நிலைமை கௌரவமடையும். நிலமும் சிறந்த ஆஸ்தியாகவும் கருதப்படும். தேசத்தில் ஒழுங்கும் அமைதியும், ஸ்திரமும், ஏற்படும். ஆதலால் அதிகாரிகளுடைய நடத்தையின் மீதும் குணத்தின் மீதும், ஆதாரப்பட்டுள்ள தற்காலீக முறையை விட, ஏற்படுத்தப்போகும் புதிய முறை, சிறந்தது என்பது, சொல்லாமலே விளங்கும்.

பக்கஉட்பிரிவு 9.—காலக்கிரமத்தில், வங்காளத்தில் ஸ்தாபிக்கப்பட்ட ஒழுங்கான அரசியல் முறையை, இப்பிரதேசங்களிலுள்ள நிலச்சுவான்தார்களும், குடியானவர்களும் அறியமாட்டார்கள். ஆனால், எக்காரணங்களின் பலனாக உண்டாகின்றன என்பதை, உடனே அறியக்கூடாவிட்டாலும், குடியானவர்கள், நில ஸ்திரத்தையும், அதனால் ஏற்படும் பல நன்மைகளையும், பாராட்டி கொண்டாடுவார்கள் என்பது சந்தேகமில்லை.

பக்கஉட்பிரிவு 10.—வங்காளத்தில் ஸ்தாபிக்கப்பட்ட சாசுவத ஏற்பாட்டைப்பற்றி, கௌரவ மிக்க கோர்ட் ஆப் டைரக்டர்ஸ் தெரிவித்துள்ள அபிப்ராயத்தை, நீங்கள் அறியுமாறு கீழே குறிக்கின்றோம். தற்போதுள்ள நாட்டின் சக்திக்குத் தகுந்தவாறு, நிலவரி, சாசுவதமாக நிர்மாணம் செய்யப்படுதல், நன்மை பயக்கும் என்பது தெளிவாக விளக்கப்பட்டிருக்கிறது. நிலமும், அதனால் ஏற்படும் ஸ்திர நன்மைகளும், ஜனங்களுடைய உழைப்பிற்கு ஊக்கமளிக்கும் ; விவசாயத்திற்கும், விவசாய அபிவிருத்திக்கும் ஆதரவு தரும் பொருள் நாணயத்தை நிலைநாட்டி, தேசத்தின் செல்வத்தையும், சுபிக்ஷத்தையும் பெருக்கும். நிலத்தினால் ஏற்படும் நன்மைகள், அவ்வளவாக குறையாது என்ற திட நம்பிக்கையும் உறுதியும் தரும். சில ஜமீன்தார்களின் நிர்வாகத்தால் அவ்வப்போது சில குறைகள் ஏற்படலாம். ஆனால், இப்பொழுதிருக்கும் விளைச்சலைவிட, நிரந்தரமாக குறைந்துவிடுமென்று எண்ணுவதற்கு இடமில்லை. மேலும், இப்பொழுது விதிக்கப்பட்டுள்ள ஜம்மா தொகை மிதமாகவும், நியாயமாகவும் நிர்மாணம் செய்யப்பட்டிருப்பதால், பின்னால் வெள்ளம், மழையில்லாமை முதலிய விபத்துக்களால், நஷ்டம் ஏற்பட்டாலும், அதை சமாளித்துக்கொள்ள போதிய வசதிகளும், ஆதாரமும் இருக்கும். இப்பொழுதுள்ள முறையில், சில நஷ்டத்தைக் குறித்தும் சில ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன. ஆனால், அவைகளெல்லாம் கம்பெனியாரைப் பொறுத்தது. புதிய முறையில் அது மாறிவிடும். ஏனெனில் உடைமை உரிமைகளால் ஏற்படும் நன்மைகளாலும், ஸ்திரமாகக் கிடைக்கும் லாபத்தாலும், வேண்டிய மராமத்துகளைச் செய்ய வசதியிருக்கும். சில வருஷங்களில் விளைச்சல் குறைவு ஏற்பட்டால், அதை, நல்ல வருஷ விளைச்சலைக் கொண்டு சரி செய்துகொள்ளலாம். இப்படி கிரமமாக லாபமே அதிகரிக்கும். சர்க்காருக்கு செலுத்தவேண்டிய தொகை நிலைவரமாயிருக்கும். நிலத்தின் விலையும் அதிகரிக்கும். நிலச்சுவான்தாருக்கு மதிப்பும் உண்டாகும். முற்போக்கான புதிய முறையும் இன்னும் அதிக உறுதிபெறும். சாசுவதமாக ஏற்படுத்தப்பட்ட நியாயமான, வரி நிர்மாணத்தால், இத்தகைய நன்மைகள் உண்டாகுமென்பதிற் சந்தேகமில்லை.

பக்கஉட்பிரிவு 11.—வரி வசூல் சம்பந்தமாக ஏற்படும் ஒழுங்கீனத்தைப் பற்றியும், நிலைவரமற்ற தன்மையைப்பற்றியும், தொகையின் நிர்ணயமற்ற தன்மையைப்பற்றியும் விதி விதரணையில்லாமல் வசூலிக்கப்படும், வரித் தொகைகளைப்பற்றியும் வரி வசூல் மோசடிகளைப்பற்றியும், ரெவின்யூ உத்தியோகத்தில் பல சிக்கல்களைப்பற்றியும், ஜமீன்தார்களுடைய அறியாமைப்பற்றியும், அவர்களின் திறமையற்ற தன்மையைப்பற்றியும், இத்தீமைகளுக்கெல்லாம் காரணம் ஒழுங்கான தத்துவங்கள் மீது ஆதாரப்படாத பழைய முறையே என்றும், அது ஜனங்கள் யாவருக்கும் கஷ்டத்தைக் கொடுத்து வந்ததென்றும், விதி விதரணையில்லாத நிலைவரமற்ற வரி நிர்மாணமே மூல விரோதி என்றும், காரன்வாலிஸ் பிரபு, வெகு நியாயமாக சொல்லியிருக்கிறார். ஆதலால், அதைப்பற்றியே முக்கியமாய் சீர்திருத்தம் ஏற்படவேண்டுமென்றும், ஜமீன்தார்கள், குடியானவர்களிடமிருந்து வசூல் செய்யும் தொகை வரையறை செய்யப்படவேண்டுமென்றால், முதலில் ஜமீன்தார்களிடமிருந்து அரசாங்கத்தார் பெறும் தொகை நிர்மாணம் செய்யவேண்டுமென்றும், அவர் வாதிக்கிறார்.

பக்க உட்பிரிவு 12.—இது சம்பந்தமாக எழுந்த பல விஷயங்களைப்பற்றி எங்கள் அபிப்பிராயங்களை தெரிவித்த பிறகு, முடிவாக உங்களுக்கு அறிவிக்கவேண்டியது, பின் வருமாறு: என்றும் மாருத சாசுவத ஏற்பாட்டைச் செய்வது மிகவும் சிரமமான காரியமாயிருந்தாலும், நில அபிவிருத்தியில் சம்பந்தப்பட்டவர்களுக்கு நாங்கள் செய்யவேண்டிய கடமைகளை முன்னிட்டு, மேற்படி ஏற்பாட்டை நாங்கள் துரிதமாகச் செய்து தீரவேண்டும். நிலைவரமற்ற வரி வருமான பரிபாலனத்தால், தேசத்தின் க்ஷேமம் பாதிக்கப்பட்டதென்றும், அரசாங்க முறையிலும், அரசாங்க விஷயங்களிலும், பல சங்கடங்கள் ஏற்பட்டனவென்றும், நாங்கள் திடமாக எண்ணுகிறோம். நிலைவரமற்ற ஆட்சி முறைகளினால் ஏற்படும் எல்லா தீமைகளைவிட, அடிக்கடி வரியை மாற்றுவதே, மிகவும் கொடியது என்பதும் எங்கள் துணிபு. அது ஒவ்வொரு விஷயத்திலும் நிலைவரமற்ற தன்மையை உண்டாக்கி, அபிவிருத்தி நோக்கங்களை அழித்துவிட்டன. இத்தகைய முறை எந்த நாட்டிற்கும் நன்மை பயப்பதல்லவென்றால், பல புராதன ஆதாரங்களை இழந்து, வருஷாந்திரம் பெரிய கப்பத் தொகையைக் கொடுத்து, பிரதேசத்தார் மீது சார்ந்து நிற்கும் இந்நாட்டிற்கு, எவ்வளவு தீமைகளை விளைவிக்குமென்பது சொல்லவேண்டியதில்லை. இப்படிப்பட்ட நாட்டிற்கு, லாபத்தையும், அபிவிருத்தியையும் தரக்கூடிய முறையே அவசியம். நல்ல செல்வத்தைத் தரக்கூடிய சிறந்த நிலங்கள், (அவைகளிற் பல, இன்னும் செம்மை செய்யப்படவில்லை). ஏராளமாக இத்தேசத்தில் இருக்கின்றனவென்பது திருப்திகரமான விஷயம். இந்நிலங்கள் பண்படுத்தப்படவேண்டும். இதற்காக, கடந்த 30 வருஷங்களாக என்ன பிரயாசை எடுத்திருக்கிறோம்? பழைய முறையை, அப்படியே வைத்துக்கொண்டு, பிற்காலத்தில் சீர்திருத்தங்களைச் செய்துகொள்ளலாமென்று காலம் தாழ்த்தினால், என்ன நன்மை உண்டாகும்? காலக்கிரமத்தில் சாசுவத ஏற்பாட்டைச் செய்யலாமென்ற கருத்தைக்கொண்டு, நீடித்த குத்தகைகளை அனுமதித்தால், பழைய முறையின் பல தீமைகள் ஏற்படும். சில வருஷங்களுக்கு ஒரு முறை, வரியை மாற்றுவதின் பயன், வரியை உயர்த்தி, சாசுவத ஏற்பாடு உண்டாகுமென்கிற ஆசையையும், சாசுவத ஏற்பாட்டால் ஜனங்களுக்கு உண்டாகும் ஊக்கத்தையும், உற்சாகத்தையும் தொலைத்துவிடுவதே. இருபது வருஷங்களுக்கு முன், புதிய முறை அனுஷ்டிக்கப்பட்டிருந்தால், இப்பொழுது நாட்டின் விளைச்சலும், கைத்தொழிலும், வியாபாரமும் அநேக மடங்கு சிறந்த நிலைமையிலிருக்கும். புதிய முறையின் பல நன்மைகளை அடைந்தனுபவித்த ஜனங்களும், சீலத்திற் சிறந்து, தங்களுக்கு பேருபகாரஞ் செய்த அரசாங்கத்தாரிடம் அதிக பற்றும், விசுவாசமும் உள்ளவர்களாயிருப்பார்கள்.

பக்கஉட்பிரிவு 13.—பேஷ்கஷ் தொகை ஜமீனிலுள்ள நில வரியைப்பற்றியே நிர்மாணிக்கப்படவேண்டும். "சேயர்" என்ற பிரவரிகளைச் சேர்க்கக்கூடாது. சேயர் வரியில், ஆப்காரி அதாவது லாகிரி வஸ்துக்கள் மீது விதிக்கப்படும் வரிகூட சேர்ந்திருக்கிறது.

பக்கஉட்பிரிவு 14.—ஆனால், பழத்தோட்டங்கள், புல் தரைகள், மீன் குத்தகைகள், வியாபாரக் கிடங்குகள், இதர கட்டடங்கள், காலி ஸ்தலங்கள், மனைகள், முதலிய இவைகளிலிருந்து வருகிற வரிகளை சேயர் வரிகளோடு சேர்க்கக்கூடாது. ஏனெனில் அவைகள் ஜமீன்தார்களின் பிரத்யேக வரிகளைச் சேர்ந்தவை. அரசாங்கத்தாருடைய தனி உரிமையான வஸ்து, வரிகளல்ல.

பக்கஉட்பிரிவு 15.—உப்பள வருமானத்தையும், பராதீனம் செய்யப்பட்ட நிலங்களையும்கூட (சர்க்காருக்கு வரி கொடுத்தாலும் சரி, கொடுக்காவிட்டாலும் சரி, சர்க்கார் அதிகாரத்தால் ஏற்பட்டவைகளாயினும் சரி, அப்படியில்லாவிட்டாலும் சரி, அதாவது கிராம மாணியங்கள், சர்க்கார் அதிகாரிகளுக்கு சம்பளத்திற்கு பதிலாக கொடுக்கப்பட்ட நிலங்கள்) இதில் சேர்க்கக்கூடாது. அவைகள் சர்க்கார் நிலங்களுடன் சேர்க்கப்பட்டதாய் கருதப்படவேண்டும். அது, ஜமீனிலிருந்து சர்க்காருக்குச் செல்லவேண்டிய சர்க்கார் பொதுவரி என்று கருதப்படவேண்டும்.

பக்கஉட்பிரிவு 16.—"காசி" களுக்கும், கர்ணங்களைத் தவிர, இதர சர்க்கார் ரெவின்யு உத்தியோகஸ்தர்களுக்கும் இனிமேல் ஜமீன்தார்கள் மூலம் கொடுக்கப்படும், தொகையும், இதுவரை ஜமீன்தார் மூலம் கொடுக்கப்பட்டு வந்த சர்க்கார் உபகாரச் சம்பளமும், ஜம்மா தொகையோடு சேர்க்கப்படவேண்டும். அரசாங்கத்தார் அது சம்பந்தமான விதிகளை, ஏற்படுத்தப்படும் ரெகுலேஷன்களில் அமைக்கவேண்டும்.

பக்கஉட்பிரிவு 17.—சாசுவத ஏற்பாட்டின்படி, ஜமீன்தார்கள் செலுத்தவேண்டிய பேஷ்கஷ் தொகை நிர்ணயம் செய்ய எங்களுடைய பத்திரங்களிலிருந்தும், சமீபத்தில் கலெக்டர்கள் செய்த விசாரணைகளிலிருந்தும், தகுந்த தகவல்களை தயாரிக்குமாறு, அரசாங்கத்தார் உத்திரவிட்டிருக்கிறார்கள். மேலே தெரிவிக்கப்பட்டதின் சம்பந்தமாக, ஸர்கூட் கமிட்டி சிபார்சுகளை, பொது ஆதாரமாக வைத்துக்கொள்ளவேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டிருக்கிறது—அதாவது, முற்கூறியவாறு, அரசாங்கத்தார் வசத்திலேயே இருக்கவேண்டிய வரிகளைத் தள்ளி, எஞ்சியுள்ள மொத்த வரி வசூலில் மூன்றில் இரண்டுபங்கு, பேஷ்கஷ் தொகையாகக் கணக்கிட்டு, நிர்மாணிக்கப்படவேண்டும். இதுவே முடிவு செய்யப்பட்ட நில வரியின் சராசரி மதிப்பு. ஆனால், இதனின்றும் ஒவ்வொரு ஜமீனிலும் மூன்றில் இரண்டு பங்கே நிர்மாணிக்கவேண்டுமென்று முடிவு செய்யவில்லை. சற்றேறக்குறைய அவ்வாறிருந்தால் போதும். ஆதலால், ஸர்கூட் கமிட்டியின் சிபார்சுகள் பிரகாரம், சாசுவத ஏற்பாட்டை யாதொரு தாமதமின்றி செய்ய முற்படவேண்டும்.

பக்கஉட்பிரிவு 28.—சில ஜமீன்களுக்கு, பஞ்சத்தாலும் ஒழுங்கீனமான நிர்வாகத்தாலும், மேலே குறிக்கப்பட்ட தொகை பூராவும் கொடுப்பதற்கு, முதலில் கஷ்டமாக இருக்கலாம். இப்படிப்பட்ட ஜமீன்களைப்பற்றி, எங்களுக்கு பூரண தகவல்களைத் தெரிவிக்கவேண்டும். தற்காலிகமாக, பேஷ்கஷ் தொகை குறைக்கப்படவேண்டுமென்றால், அதற்கு ஆதாரமாயுள்ள, உண்மையான பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும். அப்பத்திரங்களைக்கொண்டு, புதிய முறைப்படி ஜமீன் நிலைமை எவ்வளவு காலத்தில் அபிவிருத்தியடைந்து, பூராத் தொகை கொடுக்கக்கூடுமென்பதைப்பற்றியும், அதற்கிடையே படிப்படையாக என்ன தொகை உயர்த்தப்படவேண்டுமென்பதைப்பற்றியும், நாங்கள் முடிவு செய்வோம். அவைகள், நிலத்தில் சுதந்திர உரிமையைக் கொடுக்கும் சன்னதுகளில், தகுந்த தேதிகளோடு குறிக்கப்படும். அது, குறிப்பிட்ட தொகைக்கு சாசுவத ஏற்பாடு செய்யப்பட்டதென்ற நிஷ்கரணையைத் தந்து, சக்தி வந்தவுடன் பூராத் தொகையை, ஜமீந்தார் செலுத்திவர ஏதுவாயிருக்கும். இவ்விஷயங்களில் நாங்கள் கலெக்டருடைய அபிப்பிராயத்தை எதிர்பார்ப்போம். விஷயம் முக்கியமானதாகையால், கலெக்டர் தானே நேரிற் சென்று, தீர விசாரித்து, எந்த மூலங்களிலிருந்து தனக்கு தகவல்கள் வந்தன என்பதை அறிவித்து, பொறுப்பான அபிப்பிராயத்தைத் தெரிவிப்பார்.

பக்கஉட்பிரிவு 29.—ஜமீந்தார்கள், தங்கள் எஸ்டேட்டுகளுக்கு உடைமையாளராகச் செய்யப்பட்டமையால், சர்க்காருக்குச் சேரவேண்டிய தொகைக்கு, அவர்கள் ஜமீன்கள் உத்தரவாதமாகின்றன. சர்க்காருக்குச் சேரவேண்டிய தொகையில் பாக்கியிருந்தால், ஜமீன் சர்க்காரால் கைப்பற்றப்பட்டு, கடன் தீரும் வரை, கலெக்டர் நிர்வாகத்திலிருப்பது, இது வரை நடந்து வந்த வழக்கம். ஆனால், அப்படிப்பட்ட பாக்கித் தொகைக்கு, இனிமேல், ஜமீனில் ஒரு பாகம், தகுந்த விளம்பரத்துடன், நஷ்டம் ஏற்படாமல் விற்கப்படும். அதை, ஏலத்தில் அதிகத் தொகைக்கு வாங்கினவர், அதன் சட்ட ரீதியான ஜமீந்தார் அல்லது உடைமையாளராவார். அப்பாகத்திற்குச் செலுத்தவேண்டிய பேஷ்கஷ் தொகையை அவர் செலுத்திவரவேண்டியது. பழைய

ஜமீந்தாருக்கு அதில் யாதொரு உரிமையும் இராது. இந்த விஷயங்களில் உத்தியோகஸ்தர்கள் எப்படி நடந்து கொள்ளவேண்டுமென்பதின் சம்பந்தமாக தகுந்த விதிகள் ஏற்படுத்தப்படும். தனக்கு அநியாயமாக நஷ்டம் ஏற்பட்டதென்று ஜமீந்தார் கருதினால் நீதி ஸ்தலங்கள் மூலமாக அதை அவர் ஸ்தாபித்துக்கொள்ள லாம்; பரிகாரம் தேடிக்கொள்ளலாம். புதிய முறையின் கீழ், நிலம் அபிவிருத்தி அடைய, பாக்கிகள் ஏற்படா. மேலும், புதிய முறையின் கீழுள்ள அனுபவ ஸ்திரத்தால், பாக்கிகள் ஏதாவதிருந்தாலும் அவைகள் விரைவில் தீர்ந்துவிடும். ஜம்மாத்தொகையைச் செலுத்திவிட்ட பிறகு தனக்குக் கிடைக்கவேண் டிய தொகையை அதிகரிக்கவேண்டுமென்று அக்கரையுள்ள ஜமீந்தார்கள் நன்ருகப் பாடுபடுவார்கள். பாக்கி ஏற்படுவதற்கு இடம் கொடுக்கமாட்டார்கள். கேளி விலாசங்களிற் காலம் செலுத்தும் ஜமீந்தார்களும், சோம்பித் திரியும் ஜமீந்தார்களும், அவர்கள் அறியாமையின் பலனை உணர்ந்த பிறகுக்கு எச்சரிக்கையாக இருப்பார்கள். அவர்களுடைய நிலங்கள் சிக்கனமுள்ளவர்களுக்கு மாற்றப்பட்டு, நாட்டின் சுபிக்ஷமும் அதிகரிக்கும்.

முடிவு.

மேலே தெரிவிக்கப்பட்ட மேற் "கோள்"களையும் ஆதாரங்களையும் கொண்டும், சாக்ஷிகளின் வாக்கு மூலங்களைக்கொண்டும், தாக்கல் செய்யப்பட்ட ஆதாரப் பத்திரங்களைக் கொண்டும், 10-வது அத்தியாயத்தில் தெரிவிக்கப்பட்ட வழக்குத் தீர்ப்புகளைக்கொண்டும், நாங்கள் முடிவு செய்வதென்னவென்றால்: எஸ்டேட்ஸ் நிலச் சட்டம், 4-வது பிரிவில் விதிக்கப்பட்டபடி, ஜமீந்தார், சர்க்காருக்கு வரி வசூல் செய்யும் சர்க்கார் ஏஜென்டே தவிர வேறல்ல. I.L.R. 45 சென்னை 586-ல், பிரிவு கௌன்ஸில் தீர்ப்புக் கூறியவாறு, ரயத்தின் நிலத்தை, அனுபவிப்பதற்குகூட ஜமீந்தாருக்கு உரிமை கிடையாது.

2-ம் அத்தியாயம்.

குடியானவர்களின் அனுபவமுறையும், வரியும், சாசுவதமாக முடிவு செய்யபபட்டது.

குடியானவருடைய அந்தஸ்து.

ஜமீந்தார்களுடைய அந்தஸ்தைப்பற்றியும், நிலத்தில், அவர்களுக்குள்ள சுதந்திரத்தைப்பற்றியும், அவர்களுடைய நிர்வாகப் போக்கைப்பற்றியும், இனி ஏற்படுத்தவேண்டிய சீர்திருத்தங்களைப்பற்றி, ஸர்கூட் கமிட்டி செய்த சிபார்சுகளைப்பற்றியும், இதுவரையில் ஆராய்ந்தோம். இப்பொழுது குடியானவர்களுடைய அந்தஸ்தைப்பற்றி விசாரிப்போம். நிலத்தில் குடியானவர்க்குள்ள உரிமையின் வரலாற்றை, சற்று நோக்குவோமாகில், இங்கிலாந்து தேசத்தில் இருப்பதுபோல, குடியானவன் தனது உரிமையை நிலச்சுவான்தார்களிடமிருந்து பெறுகிறனு, அல்லது தனக்கு பாதுகாப்பை யளிக்கும் அரசன் அல்லது தலைவனுக்கு விளைச்சலில் ஒரு பங்கைக் கொடுத்து, மற்றப்படி, நிலத்தில் ஸ்வயமாகவே பூர்ண சுதந்திரம் உள்ளவனு என்பதை எளிதில் அறிந்துக்கொள்ளலாம். ஹிந்து அரசர்கள் காலத்திலும், மகம்மதிய அரசர்கள் காலத்திலும், ஆங்கில ஆட்சியின் முற்பகுதியிலும், தேசமெங்கும், பழய கிராம பரிபாலனமும், கிராமவரி வசூல் முறையும் பரவியிருந்தது.

ஹிந்து அரசர்கள் காலத்தில் பழைய கிராம பரிபாலன முறை.

ஹிந்து அரசன் தனிப்பட்ட குடியானவர்களோடு ஏற்பாடு செய்துகொள்ளாமல், மொத்தமாக, கிராம சமூகத்தோடு ஏற்பாடு செய்துகொண்டான். தனிப்பட்ட ஒவ்வொருவனும் தனது பங்கை சமூகத்தினிடத்தில் ஒப்புவித்தான். விளைச்சலில் அரசனுக்கு சேரவேண்டிய பாகத்திற்கு கிராம சமூகம் உத்திரவாதயிருந்தது. கிராமத்திலுள்ள சொத்தின் சம்பந்தமாகவும், மற்ற விஷயங்களின் சம்பந்தமாகவும், கிராம சபைக்கு விசேஷ செல்வாக்கும், அதிகாரமுமுண்டு. இந்த சபைக்கு நிலமாற்றத்திலும் நில விற்பனையிலுங்கூட அதிகாரமுண்டு. கிராமத்தார்கள் பெயரால் பத்திரங்களை பதிவு செய்வதுமுண்டு. கிராம வழக்குகளில் மத்யஸ்த்தம் வகித்து தீர்ப்புக் கூறினது. (இவ்வேலையை கர்ணம் அல்லது அவருடைய பிரதிநிதி செய்வதுமுண்டு.) மேலும், இச்சபை, தர்மஸ்தாபனங்களுக்கும், தர்ம நிதிகளுக்கும், தர்மகர்த்தாவாகவிருந்தது. ஷ நிதிகளிலிருந்து கிராமவாசிகளுக்கு வட்டிக்கு கடன் கொடுக்கப்பட்டது. வட்டித் தொகையைக்கொண்டு தர்மஸ்தாபனங்கள் போஷிக்கப்பட்டு வந்தன. அரசனுக்குரிய கடமையை பாதிக்காமல், இச்சபை, சில சமயங்களில் வரி இல்லாமல்அ னுபவிக்கும்படி கிராமவாசிகளுக்கு சில நிலங்களை வழங்குவதுமுண்டு. இதற்கு தென் இந்தியக் கலவெட்டுகள் III, 2, (1) (172) சான்று கூறுகின்றன.

இவ்விஷயத்தில் ஆராய்ச்சி செய்த சர் ஹென்றி மெய்னும், எம். லீவிங்கியும் இந்தியாவில் கிராம சமூகத் தொகுதிகள் இருந்தனவென்னும் அபிப்பிராயத்தை ஆதரிக்கிறார்கள். ஷ கிராம சமூகங்கள் சுயேச்சையும் திருப்தியும் வாய்ந்த ஜனநாயகங்களாக கூறப்படுகிறது.

கிராம அமைப்பின்மீது, தாங்கள் எழுதிய அறிக்கையில், இந்திய மாகாண ஆட்சியைப்பற்றிய ராயல் கமிஷன், பின்வருமாறு தெரிவிக்கின்றது :—

"பெரும்பான்மையாக இந்தியாவெங்கும், கிராமமே, அரசாங்க அமைப்பின் பிரதம, ஸ்தல அங்கமாக இருக்கிறது. தாசில்கள், உட்பிரிவுகள், ஜில்லாக்கள் முதலிய பெரிய பரிபாலன அங்கங்களெல்லாம் கிராமங்கள்மீதே ஆதாரப்பட்டிருக்கின்றன.

"ஒரு சரியான இந்திய கிராமத்தை எடுத்துக்கொண்டால், அதன் மத்தியில் கிராமவாசிகள் குடியிருப்பதற்கு இடமிருக்கிறது. அதிலே, குளமும், மாட்டுத் தொழுவமும் ஒருபுறத்திலிருக்கின்றன. இதைச் சுற்றிலும் கிராம நிலங்களும், பயிர் செய்யப்பட்ட வயல்களும் (பல கிராமங்களில்) மேய்ச்சல் தரைகளும், குடியானவர்கள் விறகு வெட்டிக்கொள்வதற்கு சிறு காடுகளுமிருக்கின்றன. இத்தகைய எளிய சுற்றுப்புறங்களில், கிராமவாசிகள் தங்கள் வாழ்நாட்களை கழித்தனர். ஒற்றுமையுள்ள சமூகமாக இணைக்கப்பட்டு, தங்களுடைய சொந்த பரிபாலன அமைப்பு ஏற்பாடுகளுடன், தங்கள் காரியங்களை நடத்திவந்தார்கள். சில கிராமங்களின் அமைப்பிற்கு தகுந்தாற்போல், பழக்கவழக்கங்களிலும், அனுசரிக்கவேண்டிய விதிகளிலும், உத்தியோகஸ்தர்கள், வேலையாட்கள், வணிகர்கள் ஆகிய இவர்களைப்பற்றியும் சிற்சில வித்தியாசங்கள் இருக்கலாம். (தொகுதி I, பக்கம் 236, உட்பிரிவு 694) பழைய அரசர்களும் அவர்களுடைய ஸ்தல பிரதிநிதிகளும் தனிப்பட்ட குடியானவர்களோடு ஏற்பாடு செய்துகொள்ளாமல் பூரா கிராமத்தோடு அல்லது ஒரு பெரிய நிலச்சுவான்தாரோடு ஏற்பாடு செய்துகொண்டு அவர்களையே சர்க்காருக்குச் சேரவேண்டிய வரிப்பணத்திற்கும், கிராம ஒழுங்கு அமைதிக்கும், உத்தரவாதமாக, கருதிவந்தபடியால், முற்காலத்தில், இந்திய கிராமங்களுக்கு விசேஷ ஸ்தல சுய ஆட்சியிருந்தது. காலக்கிரமத்தில் பல நீதி ஸ்தலங்கள் தோன்றியதின் நிமித்தமாகவும், தற்போதுள்ள வரி வருமான ஏற்பாட்டாலும், போலீஸ் அமைப்பாலும், போக்குவரவு சாதனங்களாலும், மேற்கூறிய ஸ்தல சுய ஆட்சி மறைந்துவிட்டது. குடியானவர்கள், தனிப்பட்ட முறையில், தங்கள் தங்கள் நலத்தையே நாடுவதும், தனிப்பட்ட ரயத்துவாரி முறை, வட இந்தியாவிலுங்கூட அதிகமாக பரவி வருவதும், ஸ்தல சுய ஆட்சி மறைவுக்கு காரணங்களாயிருக்கின்றன. ஆயினும், இன்னும்கூட, கிராமமே பரிபாலனத்தின் முதல் அங்கமாக இருக்கிறது. முக்கியகிராம அதிகாரிகளாகிய கிராம முனிசீப், கர்ணம், கிராமக்காப்பு, முதலியவர்கள் அரசாங்கத்தால் நியமிக்கப்பட்டு வேலை செய்துவருகிறார்கள். இன்னுங்கூட கிராமங்களில், ஐக்கிய உணர்ச்சியும், கட்டுப்பாடுமிருக்கின்றன."

வெகுகாலம் இந்தியாவில் உத்தியோகஞ்செய்து, பின்பு, கிழக்கு இந்தியா சங்கத்தின் காரியதரிசியாக இருந்த Dr. பாலன் 1923-ஞ மேமீ 28உ பின்வருமாறு எழுதியுள்ளார்: வெஸ்ட் மினிஸ்டர், காக்ஸ்டன் ஹாலில், கூடிய கூட்டத்திற்கு அவர் அனுப்பிய செய்தி ; அவ்வமயம், "இந்திய நிலவரி வருமானம்" என்பதைப்பற்றி சர் பாட்ரிக் ஜெ. பாகன், கே.ஸீ.ஐ.இ., ஸீ.எஸ்.ஐ., ஒரு வியாசம் வாசித்தார். (சர் வில்லியம் எச். வின்செண்ட், கே.ஸீ.எஸ்.ஐ., அக்கிராசனம் வஹித்தார்.) கௌரவமிக்க பெண்ட்லண், ஜி.எஸ்.ஐ., ஜி.ஸி.ஐ.இ., சென்னை மாஜி கவர்னர் கூட்டத்தில் ஆஜராயிருந்தார்.

Dr. பாலனின் அபிப்பிராயம்.

Dr. பாலன் எழுதியதாவது :—

"இந்தியாவில், ஆதியில் நில அனுபவமானது, ஒரு குலக்கட்டுப்பாடாயிருந்தது. தனிக் குடும்பத்தால் நிலம் பண்படுத்தப்பட்டது. குலத்தலைவனுக்கோ, குலதெய்வத்திற்கோ விளைச்சலில் ஒரு பாகம் கொடுக்கப்பட்டது. நிலச்சுவான்தார், நில ஆதிபத்தியம் என்பது அக்காலத்தில் ஒன்றுமே கிடையாது. நிலம் யாவும், குலம் அல்லது கிராம கூட்டத்தைச் சேர்ந்தது ; எல்லாருக்கும் பொது உடைமை. கிழக்குதேச யுக்தியாலும், இந்திய தேசத்தின் யுக்தியாலும், பயிர் செய்பவன் விளைச்சலில் ஒரு பாகத்தை சொற்பவரியாக கொடுக்கவேண்டுமென்று ஏற்பாடு செய்யப்பட்டது. இங்கிலாந்து தேசத்தில் நிலச்சுவான்தாரும் வழக்கறிஞரும், சேர்ந்து செய்த சட்டத்தின் பிரகாரம், விதி விதரணையில்லாமல் ஏற்படுத்தப்பட்ட வரியையும், இந்திய நிலவரியையும் ஒன்றுசேர்த்து குழப்பிவிடுவதும் ஒரு சாதாரண தவருக இருக்கிறது. அயர்லந்திலே, கிராமப்புற கொலை கலகங்களுக்கு மூலகாரணமாயிருந்ததும், மேல்நாட்டிலே, "ரெண்ட்" என்று கூறப்படுவதுமான விசித்திர வஸ்து வல்ல, இந்திய நில்வரி !"

ஐந்தாவது அறிக்கை.

"ஐந்தாவது அறிக்கை பிரகாரம், தொன்றுதொட்டு இருந்துவந்த நிலைமையிலேயே, தொடர்ச்சியாக, கிராம சமூகங்களிருந்து வந்தன. ஒவ்வொரு கிராமமும், ஒரு தனிப்பட்ட பூரண அமைப்பாக இருந்தது. அரசாங்கத்தில் என்ன மாறுதல்கள் ஏற்பட்டிருந்தாலும், அவைகளை பொருட்படுத்தாது, தங்கள் நித்திய கர்மங்களைச் சாவதனமாகச் செய்துவந்தார்கள். ஏரில் எருதுகளைப் பூட்டி மேடுபள்ளமான வயல்களில் ஓட்டி உழுதார்கள். அக்கம்பக்கத்திலுள்ள சிறு, ஆறு குளங்களிலிருந்து நீரைப் பாய்ச்சிக்கொண்டார்கள். பிராணனைப்போலக் கருதிய தண்ணீருக்காக சண்டை செய்துகொண்டார்கள். அவர்கள் உழுத நிலத்தில் விதை விதைத்து, பருவகாலத்தில் நாற்று நட்டார்கள். பின்பு கதிரறுத்து எருதுகளைக்கொண்டு தானியமடித்தார்கள். இவ்வெளிய, நித்திய முறையே, அன்று எவ்வளவு அமைதியாகவும் விரைவாகவும் நடந்துவந்ததோ அவ்வாறே இன்றும் நடந்துவருகிறது."

"வரியானது, கிராம பெரியதனக்காரர்களால், பணமாகவோ தானியமாகவோ செலுத்தப்பட்டது. ஜமீந்தார்களுடைய சேவகர்கள்வந்து, சிறு யுத்தத்திற்காக அல்லது தங்கள் யஜமான்கள் வீட்டில் நடக்கும் ஆடம்பரத்திற்காவது பணம் வேண்டுமென்று நிர்ப்பந்தப்படுத்தும் காலங்களில் தவிர, மற்ற காலங்களில், குடியானவர்களின் ஜீவனம் நிம்மதியாகவே நடந்தேறியது."

நில உரிமையைப்பற்றி ஸர். தாமஸ் மன்ரோவின் அபிப்பிராயம்.

ஸர் தாமஸ் மன்ரோ.

ஸர் தாமஸ் மன்ரோவின் அபிப்பிராயப்படி இந்திய குடியானவனின் நிலைமை, ஆங்கிலக் குடியானவன் அல்லது ஆங்கில நிலச்சுவான்தார் ஆகிய இவர்களின் நிலைமையைப் போன்றதல்ல. ஏனெனில், இந்தியக் குடியானவன் தனது உரிமையை, சர்க்காரிடமிருந்து அல்லது சர்க்கார் பிரதிநிதிகளாகிய ஜமீன்தார்களிடமிருந்து அடையாமல், ஸ்வயமாகவே அடைந்திருக்கிருன். (ஸர் தாமஸ் மன்ரோவின் குறிப்புகளிலிருந்து பொறுக்கப்பட்டது. தொகுதி I, பக்கம் 234, 253.)

"ஒரு குடியானவன், நிலத்திலுள்ள எல்லா உரிமைகளையும் சர்க்காரோடு பங்கிட்டுக் கொள்ளுகிருன். சர்க்காருக்கென்று ஒதுக்கிவைக்கப்படாததெல்லாம் அவனைச் சேர்ந்தது. அவன் உரிமை, சர்க்கார் இஷ்டத்தை பொறுத்ததல்ல. அல்லது குறிப்பிட்ட சில வருஷங்களுக்குமட்டும், அவன் உரிமை இருப்பதல்ல. மற்றொருவன் அதிகமாய் கொடுக்கிறேனென்றுல் இவனை தள்ளிவிடகூடாது. (ஸர் தாமஸ் மன்ரோவின் குறிப்பிலிருந்து ஆர்பத்னட் பொறுக்கிய சாராம்சங்களை பார்க்கவும். தொகுதி I, பக்கம் 234, 250). மேற்கூறிய கூற்று 1908-ம் வருஷம் சர்க்காராலும், சட்டசபையில் போர்ப்ஸ் (**Forbes**) துரையாலும் ஏற்றுக்கொள்ளப்பட்டது. காலாந்தரத்தில், அனுபவ உரிமை அடைவது என்பது, இந்திய சட்டங்களில் காணப்படாத விஷயம். இது உண்மை." (மேல்நாட்டில் அப்படியிருக்கலாம்).

நில உரிமையைப்பற்றி ரெவினியு போர்டின் அபிப்ராயம்.

ரெவினியூ போர்டு.

சென்ட் ஜார்ஜ் கோட்டை, 1890-ம் ௵ ஜனவரி ௴ 5௨ ரெவினியூ போர்டார் தெரிவித்ததாவது :—

இவர்களுடைய (குடியானவர்கள்) சர்வ சாதாரணமான அறிகுறியும், முக்கிய உரிமையும் என்னவென்றுல், நிலத்தின் விளைச்சலில், பரம்பரையான ஏகபோக உரிமை. ஆனுல், அதற்கு ஒரே நிபந்தனை உண்டு. அதாவது, விளைச்சலில் ஒரு பாகத்தை பணமாகவோ, தானியமாகவோ சர்க்கார் வரியாக செலுத்துவது. அது சேவகமாகவோ, பணமாகவோ, தானியமாகவோ செலுத்தப்படலாம். அது ராஜாக்கள், ஜாகீர்தார்கள், ஜமீன்தார்கள், பாளையக்காரர்கள், மிட்டாதார்கள், சுரோத்திரியம்தார்கள், இனும்தார்கள் அல்லது தாசில்தார்கள், அமீல்தார்கள் அல்லது டாணுதார்கள் ஆகிய சர்க்கார் உத்தியோகஸ்தர்களுக்கும் செலுத்தப்படலாம். குடியானவர்களால் செலுத்தப்படும் பணத் தொகைகள், "சர்க்காருக்கு செல்லவேண்டிய தொகைகள்," என்று சர்வ சாதாரணமாக கருதப்படுகிறது.

முக்கியமான வாசகம் : "சேவகமாகச் செலுத்தினுலும், பணமாகவோ, தானியமாகவோ செலுத்தினுலும் ; ராஜாக்கள், ஜாகீர்தார்கள், ஜமீந்தார்கள், பாளையக்காரர் முதலியவர்களுக்குச் செலுத்தினுலும் . . . ., குடியானவர்கள் செலுத்திவந்த தொகைகள் சர்க்காருக்குச் செல்லவேண்டிய தொகைகள் என்று கருதப்பட்டன." குடியானவர்களுடைய சட்டரீதியான அந்தஸ்தையும், அவர்களுக்கு நிலத்திலுள்ள உரிமைகளையும், அவர்களுடைய சேவகத்திற்காக முடிவு செய்யப்பட்ட தொகையின் அர்த்தத்தையும், அது நன்கு விளக்குகிறது. "நிலத்திலுள்ளவனுக்கு நிலம் சொந்தம்," என்று மனு முதலிய பெரியார்கள் ஏற்படுத்திய விதிக்கு அவ்வாசகம் ஒத்திருக்கிறது. நிலத்தை உழுது, அனுபவத்தில் கொண்டுவருபவனுக்கு, நிலம் சொந்தம். அது, அவன் தனி உடைமை.

நிலத்திலுள்ள உரிமையைப்பற்றி, பாலி ஆசிரியரின் விளக்கம்.

பாலி ஆசிரியர்.

நிலத்தை, தன் இச்சைப்படி உபயோகப்படுத்திக்கொண்டு, பிறரை அதனின்று விலக்கும் உரிமையோ, அதிகாரமோ நிலத்திலுள்ள உரிமை என்று பாலி ஆசிரியர் தமது தத்துவ சாஸ்திர நூலில் எழுதியிருக்கிருர்.

இவ்வாறாக, இந்திய, ஐரோப்பிய ஆதாரங்களின்படியும், மேற்கோள்களின்படியும், நிலத்திற் பிரவேசித்து நிலத்தைப் பண்படுத்தி விளைச்சல் உண்டாக்கும் குடியானவனுக்கே, நில உரிமை சொந்தமாகும் என்பது புலப்படுகிறது. குடியானவர்கள் இம் மாதிரியாக, நிலத்திற்குச் சொந்தக்காரர்களானுர்கள். பூரண உரிமைகளை அனுபவித்துவந்தார்கள். கிராம பரிபாலனமுறை ஆசரணையிலிருந்துவந்தவரை, நிலவரி அரசருக்கு (மகமதிய அரசராயினும் சரி; ஹிந்து அரசராயினும் சரி) கிராம சமூகத்தால், தொகுப்பாகச் செலுத்தப்பட்டது. ரயத்துவாரிமுறை அமுலில்வந்த பிறகு, கிராம சமூகம் உருக்குலைந்துவிட்டது. ரயத்துவாரிமுறை அமுலில்வந்த பிறகும்கூட இதற்குமுன் கிராம முழுவதற்கும் பொதுவாயிருந்த நில உரிமை, பகுக்கப்பட்டு தனித்தனி குடியானவர்களுக்குப் போய்ச் சேர்ந்தது. ரயத்வாரி நிலங்களில் குடியானவன், தான் செலுத்தவேண்டிய நிலவரி பாகத்தை தான், சர்க்காருக்குச் செலுத்தி வந்தான்.

ரயத்வாரிக் குடியும், ஜமீன் குடியும்.

சர்க்காருக்குச் செலுத்தவேண்டிய வரியைத் தவிர, மற்றபடி ரயத்வாரிக் குடியானவனுக்கு ஏகபோக உரிமை உண்டு. ஜமீந்தாரி ரயத்தும் அதே நிலைமையிலிருக்கிறுன். அவனுக்கு அத்தகைய உரிமை உண்டு. சர்க்கார் நிலங்களில குடியானவனுக்குள்ள ஏகபோக உரிமை, இப்பொழுது சர்க்காரால் ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறது. ஆனுல் ஜமீன் குடியானவன், தனது சக்திக்கு மிஞ்சிய சில சந்தர்ப்பங்களாலும், 1880-வது வருஷத்தில் ரெவினியூ போர்டார் செய்த விளக்கத்திற்கு மாறுகவும், வித்தியாசமான முறையில் நடத்தப்படுகிறுன். ஜமீன் குடியானவன் சர்க்கார் வரியாக செலுத்திவந்தது (முற்றிலும் இல்லாவிட்டாலும் அதிலொரு பாகம்) நிலவரியாகக் கருதப்படாமல், நிலத்தை உபயோகப்படுத்துவதற்கு ஜமீந்தாருக்குச் செலுத்தும் வாடகை (**rent**) யென்று கருதப்படுகிறது.

அத்தவருன கருத்து, முதல் முதல், சாசுவத நிர்ணய காலத்தில், 1802-வது வருஷத்திய XXV, XXX ரெகுலேஷன்களில் தோன்றியது. ஜமீந்தாருக்கு வாடகை செலுத்துபவனுக, ஜமீன் குடியானவன், கருதப்படக்கூடாது. ஆனுல், விளைச்சலின் பாதியில், மூன்றில் இரண்டு பங்கு சர்க்காருக்கும், எஞ்சிய மூன்றில் ஒரு பங்கை நிலவரியாக ஜமீந்தாருக்கும் செலுத்துபவனுகவே ஜமீன் குடியானவன் நடத்தப்பட்டிருக்க வேண்டும். சர்க்காருக்குச் சேரவேண்டிய வரிகளை வசூல் செய்வதற்கு பிரதிப்பயனுக ஷ மூன்றிலொரு பங்கு ஜமீந்தாருக்குக் கொடுக்கப்பட்டது.

மேலே கூறிய விஷயங்களிலிருந்து நாம் அறிவதென்னவென்றுல், சர்க்கார் பிரதேசங்களில் ரயத்துவாரி முறை ஏற்படுத்தும்பொழுதும், அதே சமயத்தில் ஜமீன்களில் சாசுவத ஏற்பாடு செய்யப்பட்டபொழுதும், குடியானவனை ஆங்கில முறைப்படி "வாடகைக் காரனுக் (**tenant**) செய்யவேண்டுமென்பது சர்க்காரின் நோக்கமல்ல. குறிப்பிட்ட சில வருஷங்கள் முடிவடைந்த பிறகாவது, தங்களிஷ்டப்படியாவது, குடியானவனை நிலத்திலிருந்து விலக்கும் உரிமையை, தங்களுக்காவது ஜமீந்தார்களுக்காவது ஒதுக்கிவைத்துக்கொள்ளவும் இல்லை.

சாசுவத ஏற்பாட்டின் நோக்கம்.

ஜமீன்களில் சாசுவத ஏற்பாட்டைச் செய்து, நிலவரியை நிரந்தரமாக முடிவு செய்து, அதன்மூலம் கிழக்கு இந்தியா கம்பெனியார், வெகு காலமாக குடியானவர்கள் படும் கஷ்டங்களை நீக்க விரும்பினுர்கள். இதைப் போலவே, இங்கிலாந்திலும், 1798-வது வருஷத்தில் (சாசுவத ஏற்பாட்டிற்கும், 1802-வது வருஷத்திய பட்டா ரெகுலேஷனுக்கும் நான்கு வருஷத்திற்குமுன்) நிலவரியானது நிரந்தர முறையில் நிர்ணயம் செய்யப்பட்டது. நிலவரி பற்பல "பாரிஷ்" களின் மீது நிரந்தரமாக வரையறுக்கப்பட்டது. அதே முறைதான் பட்டா ரெகுலேஷனிலும், ரயத்துவாரி முறையிலும் அமைக்கப்பட்டது. ஆனுல் 1860-வது வருஷத்தில், புதியவரி நிர்மாணம் (ரிசெட்டில்மெண்ட்) ஏற்பட்டபொழுது, சர்க்கார் ஷ முறையை கைவிட்டனர். அதற்கு பதிலாக சர்க்கார் நிலங்களில் சில வருஷங்களுக்கொருமுறை வரி விகிதங்கள் மாற்றப்படலாம் என்று தவருக முடிவு செய்யப்பட்டது. அதே சமயத்தில், 1802-வது வருஷத்திய பட்டா ரெகுலேஷன் XXX-ல் இருந்த சட்டமும் ரத்து செய்யப்பட்டது. அதற்கு பதிலாக, 11-வது பிரிவும், இதர விதிகளும், புதிய வரிவசூல் சட்டத்தில் (1865-வது வருஷத்திய VII-வது சட்டம்) சேர்த்துக்கொள்ளப்பட்டன. வரி விகிதங்களை உயர்த்துவதற்கு, இது ஜமீந்தார்களுக்கு மிகவும் சாதகமாயிருந்தது. 1865-வது வருஷத்திய வரிவசூல் சட்டத்தைக் கவனிக்கும்போது, இவ்விஷயத்தைப்பற்றி தனியாக ஆராய்வோம். ஆனுல், ரயத்துவாரி நிலங்களைப்பற்றியும், ஜமீந்தாரி நிலங்களைப்பற்றியும் சர்க்காருக்கு ஏற்பட்ட மனுேபாவ மாறுதலை அறிவதற்கு இதுபோதுமானது. 1802-வது வருஷத்திலிருந்து 1865-வது வருஷம் வரை, குடியானவர்களுடைய நில உரிமையும், நிரந்தரமாக முடிவு செய்யப்பட்ட வரி விகிதமும், 1802-வது வருஷத்திய XXX-வது ரெகுலேஷனுல் பராமரிக்கப்பட்டுவந்தன. இதற்குப் பிறகுதான் குடியானவர்களுடைய கஷ்டங்கள் பெருவாரியாகக் கிளம்பின. 1865-வது வருஷத்திற்குமுன் குடியானவர்களுடைய பாத்தியதைகளில் ஜமீன்தார்கள் தலையிடுவதற்கு செய்த பிரயத்தனங்கள் தக்க சமயத்தில் அடக்கப்பட்டன. ஏனெனில், 1802-வதுவருஷத்திய XXX-வது ரெகுலேஷனிலிருந்த சட்டம் ரத்தாகும் வரை அமுலிலிருந்தது.

சாசுவத ஏற்பாட்டின் நோக்கம்.

கிராம பரிபாலன முறையையும், நில உரிமையையும், அக்காலத்து கிராம ஜனநாயக ஆட்சியால் ஏற்பட்ட நன்மைகளையும் மேற்கூறிய விஷயங்கள் படம் வரைந்தாற்போல் நன்கு விளக்குகின்றன. அக்காலத்து அரசாங்கத்திற்கு (மகம்மதிய அரசாங்கமாயினும் சரி—ஹிந்து அரசாங்கமாயினும் சரி) கிராம பரிபாலன முறையும், கிராம வரி வசூல் முறையும் அஸ்திவாரங்களாக இருந்தன. அவைகளை கலைக்காமல், அப்படியே வைத்துக்கொண்டு, அவைகள்மீது, கடந்த 150 வருஷங்களில் ஆட்சி முறையே பிரிட்டிஷ் அரசாங்கத்தார் ஸ்தாபித்திருந்தால், அது திடமான அஸ்திவாரமாக இருக்கும். இப்போதுள்ள பொருக்கமுடியாத செலவுகளும் ஏற்பட்டிரா. அவர்கள் ஒரு புறத்தில் கிராமமுறையையும், கிராமவாசிகளின் ஐக்கியத்தையும் குலைத்து, ரயத்வாரி தனிமுறைக்கு அஸ்திவாரமிட்டபொழுதும், மற்ருெரு புறத்தில், சாசுவத ஏற்பாட்டின் கீழ் ஜமீன்தாரி முறையையும் ஸ்தாபித்தபொழுது, கிராம க்ஷீணமும் சிதைவும் தொடங்கிற்று.

பிறகு ஏற்பட்ட தொல்லைகளுக்கெல்லாம் காரணம் கிராம பரிபாலனமுறை கலைக்கப் பட்டதே.

மகம்மதிய அரசர்கள் ஆட்சி புரிந்துவந்த காலத்தில், ஒரு கிராமம் செலுத்தவேண்டிய வரித்தொகைக்கு மேற்படி கிராமமே கட்டுப்பாடான, ஜவாப்தாரியாக இருந்தது. பிரிட்டிஷ் ஆட்சியின் முற்பகுதியிலும்கூட இம்முறையை அனுசரிக்கப்பட்டு வந்தது. சிலகாலஞ்சென்றபிறகு பிரிட்டிஷ் அதிகாரிகள் கிராம ஏற்பாட்டை (**village settlement.**) அதன்படி, ஒரு கிராமம் செலுத்தவேண்டிய வரித்தொகை, மொத்தமாக நிர்மாணிக்கப்பட்டது. ஒவ்வொரு குடியானவனும் தான் செலுத்தவேண்டிய வரிப்பங்குக்கு தானே உத்திரவாதம். ஆனுல் பிரிட்டிஷ் ரெவினியு உத்தியோகஸ்தர், இப்புதிய தனிப்பொருப்பை அதிகார தோரணையில் கண்டுகொள்ளவில்லை. ஜில்லாக்களின் பரிபாலனத்திற்காக கலெக்டர்கள் நியமிக்கப்பட்ட பிறகுகூட அது அப்படித்தான் நடந்து வந்தது. ரயத்துவாரி வந்த பிறகுதான் அது மாறிற்று.

குடியானவனுடைய அந்தஸ்த்தைப்பற்றியும், குடியானவனுக்கு நிலத்திலுள்ள உரிமையைப்பற்றியும், வரி வசூல் செய்வதற்கு ஜமீன்தாருக்குள்ள உரிமையைப்பற்றியும், சாசுவத ஏற்பாட்டிற்கும், **(permanent settlement)** 1802-ம்வருஷத்திய பட்டா ரெகுலேஷன்களுக்கும் காரணமாயிருந்த, பரிஸ்திதிகளைப்பற்றியும், இது வரை பரிசீலனை செய்தோ, இனிமேல் பட்டா ரெகுலேஷன், பர்மனெண்ட் செட்டில்மண்ட் ரெகுலேஷன், கர்ணம்ஸ் ரெகுலெஷன், ஆகிய இவைகளைப்பற்றி கிரமமாக ஆராய்வோம்.

தீர்மானம் (முடிவு).

மேலே தெரிவிக்கப்பட்ட ஆதாரங்களையும் மேற்கோள்கைகளையும் கொண்டும், சாக்ஷிகள் கொடுத்த வாக்குமூலங்களைக்கொண்டும், தாக்கல் செய்யப்பட்ட ஆதாரப் பத்திரங்களைக்கொண்டும், நாங்கள் முடிவு செய்வது என்னவென்றால், சர்க்கார் நிலங்களில், ரயத்வாரி குடியானவர்களுக்கு என்ன உரிமைகளுண்டோ அதே உரிமைகள், சாசுவத ஏற்பாடுள்ள ஜமீன் குடியானவர்களுக்குமுண்டு. அதாவது குடியானவன், நிலத்திற்கு சொந்தக்காரன். அரசாங்கத்திற்கு செலுத்தவேண்டிய வரியை மட்டும் அவன் செலுத்திவர வேண்டும். அவன் தனது உரிமையை ஜமீன்தார்களிடமிருந்து பெறவில்லை. ஜமீன்தாருக்கு அவன் செலுத்தும் தொகை, வாடகைக்காரன் நிலச்சுவான்தாருக்கு செலுத்தும் தொகை போன்றதல்ல. **ஆனால் அது** நிலத்தின்மேல் விதிக்கப்பட்ட வரிக்காக, சர்க்காருக்கு செலுத்தவேண்டிய தொகை.

3-ம் அத்தியாயம்.

பட்டா ரெகுலேஷன் XXX (1802)—பட்டா—நிலப்பத்திரம் (Title deed)—சாசுவத ஏற்பாடு செய்யப்பட்ட காலத்தில், நிலவரி, நிரந்தரமாக நிர்ணயம் செய்யப்பட்டது.

பட்டா ரெகுலேஷன் XXX (1802)—வரிவசூல் முறை—பழைய அஸ்திவாரங்கள்.

ஜமீன்தார்கள், குடியானவர்கள், ஆகிய உபயதரப்பினர்களுடைய அந்தஸ்தை, 1802-ம் வருஷத்திய ரெகுலேஷன்கள் மாற்றினவா ?

ஜமீன்தார்களுடைய வரலாற்றைப்பற்றியும், சர்க்காரின் சார்பாக, நிலவரி வசூல் விஷயங்களில் அவர்கள் செய்து வந்த நிர்வாகத்தைப்பற்றியும், 1802–ம் வருஷத்திய சாசுவத ஏற்பாட்டிற்கு காரணமாயிருந்த சந்தர்ப்பங்களைப்பற்றியும், குடியானவன் விளைச்சலின் ஒரு பாகத்தை நிலவரியாக சர்க்காருக்கு செலுத்தவேண்டிய கொள்கையின் வரலாற்றைப்பற்றியும், அவைகளுக்கு ஆதாரமான மேற்கோள்களைப்பற்றியும், மேலே விரிவாக எடுத்துக்கூறியுள்ளோம். 1802–ம் வருஷம் வரை ஜமீன்தார் அல்லது நிலச்சுவான்தார், சர்க்கார் சார்பாக வரி வசூல் செய்பவரேதவிர வேறல்லவென்பதையும், நிலத்திற்கு உண்மையான சொந்தக்காரன் குடியானவனே என்பதையும், நிலவரியாக சர்க்காருக்கு விளைச்சலின் வழக்கமான ஒரு பாகத்தை செலுத்திவரவேண்டியதே குடியானவனின் கடமையென்பதையும், விளக்கமாக காட்டியிருக்கின்றோம். இனி, 1802–ம் வருஷம் ஜூலை௴ 13௳ ஏற்படுத்தப்பட்ட சாசுவத ஏற்பாட்டு ரெகுலேஷன் XXV, பட்டா ரெகுலேஷன் XXX, கர்ணம் ரெகுலேஷன் XXIX, ரெகுலேஷன்கள் XXVII, XXVIII, (1802) ஆகிய இச்சட்டங்கள் ஜமீன்தார்கள், குடியானவர்கள், ஆகிய இருதரப்பினர்களுடைய உரிமைகளையும், அந்தஸ்த்தையும், கடமைகளையும், மாற்றினவா ? அவ்வாறாயின், எந்தெந்த முறைகளில் ? மேற்படி ரெகுலேஷன்கள் ஏற்படுவதற்கு காரணமாயிருந்த சந்தர்ப்பங்களின் சாராம்சமும், ஜமீன்தார்கள், குடியானவர்கள், ஆகிய இவர்களுடைய உரிமைகளும், கடமைகளும், மேற்படி ரெகுலேஷன்களின் பீடிகைகளில் சுருக்கமாக தெரிவிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் ஸர்கூட் கமிட்டியார் பிரயோகித்த கடுமையான பாஷையில்லை.

ரெகுலேஷன் XXV ஜமீன்தார்களுடைய நிலைமையை விளக்குவதோடு நில்லாமல், குடியானவர்களின் நிலைமையைக் கூடவிளக்குகிறது.

பர்மனென்ட் செட்டில்மென்ட் ரெகுலேஷன், ஜமீன்தார்களுடைய நிலைமையை வரையறுக்கமட்டும் உத்தேசிக்கப்படவில்லை. ஆனால் ஜமீன்தார்கள் குடியானவர்கள் ஆகிய இரு தரப்பினர்களுடைய நிலைமையையும் விளக்குவதற்கே உத்தேசிக்கப்பட்டது. வெளிதோற்றத்திற்கு, ஜமீன்தார்களைமட்டும் குறிக்கிறதென்று தோன்றலாம். ஆனால் அது சரியல்ல. அதைப்போன்றே பட்டா ரெகுலேஷனும் இருதரப்பினர்களுடைய நிலைமையை குறிக்கிறது. கர்ணம்ஸ் ரெகுலேஷன், ஜமீன்தார்கள், குடியானவர்கள், சர்க்கார் ஆகிய மூவருக்கும் பொதுவான ரெகுலேஷன்களும், குடியானவர்கள், ஜமீன்தார் ஆகிய இவர்களின் கடமைகளையும், உரிமைகளையும் விளக்கிக்கூறுவதற்கும், சர்க்காருக்கு செலுத்தவேண்டிய நிலவரித்தொகையை நிரந்தரமாக முடிவுசெய்வதற்கும், மேற்படி தொகையில் சர்க்காருக்குச் செல்லவேண்டியது எவ்வளவு, வரி வசூல் செய்வதற்கு பிரதிப்பயனாக ஜமீன்தார், எடுத்துக்கொள்ளவேண்டியது, எவ்வளவென்பதை முடிவு செய்வதற்கும், மேற்படி மூன்று ரெகுலேஷன்களும், XXVII, XXVIII, XXXI ரெகுலேஷன்களும் ஏற்படுத்தப்பட்டன.

ராஜபாகத்தின் வரலாறு.

மஹாபாரத காலத்திலிருந்தே, ஹிந்து அரசர்கள் விளைச்சலில், பத்தில் ஒன்றை "ராஜபாகமாகப்" பெற்று வந்தார்கள். ஆனால் அது படிப்படியாக ஆறிலொரு பாகமானது. கர்ணபரம்பரையாகச்சொல்லப்பட்டதேயொழிய, அதுவும் நிஷ்கரணையாயில்லை. மகம்மதியர் ஆட்சியில், அல்லாவுதீன் காலத்தில், சர்க்காருக்கு சேரவேண்டியது, விளைச்சலில் பாதியாயிருந்தது. அக்பர் காலத்தில், அதில் மூன்றில் ஒரு பாகமாக குறைந்தது. ஆனால் இது, சிற்சில இடங்களில் பிரிடிஷ் அரசாட்சிக்குமுன்பு உயர்ந்திருந்தது. வங்காளம், பீகார், ஒரிசா—ஆகிய இத்தேசங்களின் திவானி உரிமையைப்பெற்று 1865–ம் வருஷத்தில் பிரிட்டிஷார் ஆட்சிபுரிய ஆரம்பித்தபொழுது, மொத்த விளைச்சலில் பாதியை ஆதாரமாகக்கொண்டு கணக்கிட்டார்கள். ஆதலால், அக்பரால் ஏற்படுத்தப்பட்ட பேர்போன வரிவசூல் ஏற்பாட்டையும், வரிவசூல் முறையையும், ஆதாரமாகக்கொண்டே இப்பொழுதுள்ள பிரிட்டிஷ் முறைகள் ஸ்தாபிக்கப்பட்டன. ஆகையால் இப்பொழுதுள்ள இந்திய நிலவரி முறை, பிரிட்டிஷ் அரசாங்கத்தால் ஏற்படுத்தப்பட்ட புதிய ஸ்ருஷ்டியல்ல—பழைய அரசாங்கங்களிலிருந்து பின்பற்றப்பட்ட புராதன இந்திய முறையே தவிர வேறல்ல. மேலே தெளிவாகத்தெரிவிக்கப்பட்டுள்ள சரித்திரச்சுருக்கத்தில் இந்த அம்சம் நன்கு வற்புறுத்திக்கூறப்பட்டிருக்கிறது. இப்பொழுதுள்ள இந்திய நிலவரி வருமான முறை, அந்தந்த இடங்களுக்குத்தகுந்தாற் போல் மூலாதாரக்கொள்கைகளை மாற்றிக்கொள்கிறது. இத்தகைய முறையால் ஜனங்களுக்கு பிரமாதமான கஷ்டங்கள் ஏற்பட்டிரா.

இப்பொழுதுள்ள பிரிட்டிஷ் இந்திய நிலவரி முறை புதிய ஸ்ருஷ்டியல்ல. பழைய அரசாங்கங்களிலிருந்து பின்பற்றப்பட்ட புராதன இந்திய முறை.

ஆனால் பிரிட்டிஷ் அரசாங்கத்தார், சாசுவத ஏற்பாட்டையும், ரயத்துவாரி முறைகளையும், ஏற்படுத்தியும், மறு ஏற்பாட்டை (resettlement) அமைத்தும், நாணய முறையையும், நாணய மாற்றத்தையும் ஏற்படுத்தியும், பழைய கிராம முறையை கலைத்துவிட்டார்கள். அதோடு, கிராமவாசிகளின் ஐக்கியமும் போய்விட்டது. இவைகள்தான் பல துன்பங்களுக்கு காரணமாயிருந்தது.கிராம முறையைப்பற்றியும், கிராம வரி வசூல் முறையைப்பற்றியும், முன்னரே தெரிவித்திருக்கிறோம். ஆயினும் இச்சந்தர்ப்பத்தில் ஐந்தாவது அறிக்கையின் (Fifth Report) ஒரு சாராம்சத்தை இங்கு எடுத்து எழுதுவது பொருத்தமாயிருக்குமென்று கருதுகிறோம். அதில் கிராமமுறை வெகு விவரமாக தெரிவிக்கப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு கிராமவாசியையும், தனித்தனியாக துண்டு நிலத்திற்கு சொந்தக்காரனைச் செய்வதால், கிராமவாசிகளின் கூட்டுறவு கலைந்துவிடுமென்பதும், கிராமத்தின் ஒற்றுமை போய்விடுமென்பதும், அப்படிப்பட்ட முறையால் நாட்டிற்கு தீமை உண்டாகுமென்பதும், அந்த சாராம்சத்தில் எச்சரிக்கை செய்யப்பட்டிருக்கிறது. அவைகளைப்பற்றிய சாராம்சங்கள் பின் வருமாறு—

கிராம சமூகம்.

கிராம ஐக்கியமும் கூட்டுறவு வாழ்க்கையும்.

" தற்சமயத்தில், ஒவ்வொரு கிராமமும், ஒரு தனிப்பட்ட சமூகமாக கருதப்பட்டிருக்கிறது. அதனுடைய பொது விஷயங்கள், கிராமவாசிகளுடைய முக்கிய அலுவலாகும். இம்முறை, நிச்சயமாக, கிராமப்பொது நன்மைக்கும், கிராமவாசிகளின் நன்மைக்கும் சாதகமாயிருக்கிறது. ஒவ்வொரு கிராம வாசிக்கும், கிராமத்திலுள்ள பிறர் ஏதாவதொருவழியில் சகாயம் செய்கிறார்கள். எல்லாருடைய பொது உழைப்பின் பயனைக், சர்க்கார் வரி செலுத்தப்படுகிறது. வரும் லாபத்தை எல்லாரும் சமமாக பங்கிட்டுக்கொள்கிறார்கள்.

நஷ்டம் ஏற்பட்டால், அது எல்லோரையும் பொறுக்கின்ற காரணத்தால், சுளுவாய்ப்போய்விடுகிறது. அது தொழிலைப்பங்கிட்டுக்கொண்டு, அதனால் அடையும் நன்மைகளை ஈவுசெய்துகொள்ளும் முறையைத் தழுவியது. ஒருவன் கடைக்கு செல்கிறான், மற்றொருவன் விவசாயத்திலும் அறுவடையிலும் ஈடுபடுகிறான். ஒவ்வொருவனும் தனக்கு, தனியாகக்கொடுக்கப்பட்ட வேலையைச்செய்து, அதன் மூலம், கிராம முழுவதற்கும் பாடுபடுகிறான். ஆனால் பல வேலைகளில் ஒவ்வொருவனும் ஈடுபட்டால், சர்க்காருக்கும் குடியானவர்களுக்கும் நெருக்கடியான சமயத்தில் குடியானவர்கள் உதவிசெய்ய முடியாது. மற்றவேலைகளைப் பார்த்துக்கொண்டிருப்பார்கள். மேலும், எல்லா வேலைகளைச்செய்யும் திறமை ஒவ்வொருவனுக்கும் இருக்காது." (ஐந்தாவது அறிக்கை—தொகுதி. II பக்க உட்பிரிவு 349.)

கிராமக்கூட்டு முறை—ஐக்கிய வாழ்க்கை—அவைகளைக் கலைப்பதால் உண்டாகும் தீமைகள்.

பழைய கிராம அங்கங்களும், அவைகளைக் கலைப்பதால் விளையும் தீமைகளும்.

"நிலத்தை அளந்து, ஒவ்வொரு பகுதியையும் ஒவ்வொரு குடியானவனுக்கு தனித்தனியாகக்கொடுத்து, அதைமட்டும், உழுது பயிரிடும்படி செய்தால், அம்முறை, நிலங்களை ஒவ்வொரு வருஷமும் குடியானவர்கள் மாற்றிக்கொள்ளும் முறையில் தலையிடும். பின்கூறிய முறை, பல இடங்களில் வெகுவாக அனுசரிக்கப்படுகிறது. வளப்பமிகுந்த கிராமங்களில், குடியானவர்களுக்கு நிலங்களை ஸ்திரமாகப் பிரித்துக்கொடுப்பதால் ஏற்படும், தாரதம்மியத்தை நீக்குவதற்கு அம்முறை பின்பற்றப்படுகிறது." (ஐந்தாவது அறிக்கை—தொகுதி II, பக்க உட்பிரிவு 358.)

"கிராம ஐக்கியத்தை கெடுத்து, ஒவ்வொரு குடியானவனையும் தனது தனித்தனி நிலத்திற்கு கட்டுப்படுத்துதல், பொதுவாக தீமையையே விளைவிக்கும் என்பது என் கருத்து. அவரவர் பாத்தியதையும் உரிமையும் அவரவருக்குத்தெரியும்; வெகு காலமாக அனுசரணையிலிருந்துவரும் பழக்க வழக்கங்கள், கிராம வாசிகள் திருப்திக்கும் இன்றியமையாதன. அவை ஒழுங்கீனங்களுக்கும் அக்கிரமங்களுக்கும் இடம் தருகின்றன என்றால், நான் அதற்கு சொல்லும் சமாதானம் என்னவென்றால், மேலதிகாரிகள் அதை கவனித்துக்கொள்ளுவார்கள். அநியாயம் ஏற்பட்டால் அதற்குப்பரிகாரம் செய்யப்படும்; ஒவ்வொருவனும் தன்தன் உரிமையை அறிந்துகொள்வதற்கு ஊக்கம் தரப்படும். குடியானவன் முறையிட்டால் அவன் குறைகள் விசாரிக்கப்படும், முறையிடாவிட்டால், அவன் திருப்தி அடைந்திருக்கிறான். தன்னையொத்த கிராமவாசிகளிடமிருந்து நியாயம் பெறுகிறான் என்றே கருதவேண்டும். ஏனெனில், நிலத்தை அடைந்த ஒருவன், தனது உரிமைகளை அறிந்துகொள்ளமுடியாத அவ்வளவு மதியீனனாகவாவது, தனக்கு யுக்தி சொல்வதற்கு உற்றார் உறவினரில்லாத அவ்வளவு அநாதையாகவாவது இருப்பான் என்று நம்புவது அசம்பாவிதம்; ஏனெனில், மதிஈனனுக்கும் பித்தனுக்கும் நிலம் வந்து சேராது. நிலத்தை விலைகொடுத்து வாங்கினவன் என்று வைத்துக்கொண்டால், அவனுக்கு தன் நியாய உரிமைகளை அறிந்துகொள்ள போதிய ஞானம் இருக்கும் என்று ஊகிக்கவேண்டும்." (ஐந்தாவது அறிக்கை, தொகுதி II, பக்க உட்பிரிவு 351.)

1802-வது வருஷத்திய சீர்திருத்தங்களை ஏற்படுத்துவதற்கு முன், கிழக்கு இந்தியா கம்பெனியாருக்கும் அவர்களுடைய அதிகாரிகளுக்கும் போதிய எச்சரிக்கை கொடுக்கப்பட்டிருந்தும், பழைய கிராமக் கட்டுப்பாட்டையையும் ஐக்கிய உணர்ச்சியையும் அழிக்கவல்ல இரண்டு ஏற்பாடுகளை, அமுலில் கொண்டுவரும்படி, கிழக்கிந்தியா கம்பெனிக்கு, இங்கிலாந்திலிருந்த மேலதிகாரிகள் கட்டளை இட்டார்கள் —

(1) முதலாவது—சாசுவத ஏற்பாடு,

(2) ரயத்வாரி முறையும், அவ்வப்போது ஏற்படும் புனர் நிர்ணயமும் (**Periodical Re-settlement**).

ஜமீந்தார்களிடம் பச்சாத்தாபம் கொண்டு, சாசுவத ஏற்பாடு செய்யப்படவில்லை. நாட்டின் நிலைமையில், கம்பெனியின்நன்மைக்கு யுக்தமானது என்று கருதியே செய்யப்பட்டது.

தாங்கள் தெரிவித்த காரணங்களை முன்னிட்டு, உடனே முடியாவிட்டாலும், நாட்டில் அமைதி உண்டான பிறகு ஜமீன்தாரி முறை ஒழிக்கப்படவேண்டுமென்று சர்கூட் கமிட்டியார் ஆலோசனை கூறினதை முன்பே தெரிவித்திருக்கிறோம். சர்கூட் கமிட்டியார் சொல்லிய முக்கிய காரணம்: ஜமீன் முறை ஒழிந்து ரயத்வாரி முறையில் நிலவரி நிர்மாணம் செய்யப்படுமாகில் "வட சர்க்கார்" பிரதேசங்களிலிருந்து மட்டும் கம்பெனிக்கு குறைந்தது ஒரு கோடி ரூபாய் வருமானம் கிடைக்கும் என்பதே. கம்பெனிக்கு போதிய பலமும், தைரியமும், தகவல்களுமிருந்தால், ஜமீன்களை ஒழிக்க வேண்டுமென்ற ஆலோசனையை, செய்கையில் நிறைவேற்றியிருக்கும். ஆனால், ஜமீன்தார்களுடைய செல்வாக்கையும், பணபலத்தையும், வரி வசூல் விஷயங்களில் அவர்களுக்கிருந்த பிடியையுங் கண்டு, கம்பெனி பயந்தது, ஜமீன்தார்களையும், மகம்மதிய அரசர்களையும் கம்பெனி அடக்கின பிறகுகூட, வரி வசூல் விஷயங்களில், ஜமீன்தார்களால் அதற்கு பல தொந்தரவுகள் தொடர்ந்து நிகழ்ந்து வந்தன. ஆதலால், நெருக்கடியான சமயத்தில் தங்களுக்கு ஆட்களையும் பணத்தையும் தந்து உதவி புரியும்பொருட்டு, ஜமீன்தார்களோடு சிநேகம் செய்துகொண்டு, ஜமீன்களில் சாசுவத ஏற்பாட்டைச்செய்ய கம்பெனி விரும்பினது. ஜமீன்தார்களிடம் அன்பையும் பச்சாதாபத்தையுங் கொண்டு சாசுவத ஏற்பாடு (பர்மனெண்ட் செட்டில்மெண்ட்) செய்யப்படவில்லை. ஜமீன்தார்களோடு சமாதானமாக இருக்கவேண்டுமென்பது கம்பெனிக்கு அவசியமாகவும் யுக்தமாகவும் தோன்றியது. மறுபுறத்தில், பன்னெடுங்காலமாக ஹிம்சிக்கப்பட்டுவரும் குடியானவர்களுடைய புராதன நில உரிமைகளுக்கு பாதுகாப்பளிக்கவேண்டும் என்றும், நில வரி நிரந்தரமாக முடிவு செய்யப்படவேண்டும் என்றும், கம்பெனிக்கு உண்மையான அவா இருந்தது. பர்மனெண்ட் செட்டில்மெண்ட் ரெகுலேஷனிலும், பட்டா ரெகுலேஷனிலும், கர்ணம் ரெகுலேஷனிலும் காணப்படும் வாசகங்கள் இதற்கு போதிய ருஜுக்கள்.

பழைய நிலவரமற்ற முறையை ஒழித்தல்.

சாசுவத ஏற்பாட்டின் நோக்கம், குடியானவர்களின் புராதன உரிமைகளை பாதுகாக்க வேண்டுமென்பது.

பட்டா ரெகுலேஷனுடைய பீடிகை பின்வருமாறு :—

"நிலத்தின் விளைச்சலை (சர்க்காருக்கு இவ்வளவு, குடியானவனுக்கு இவ்வளவு என்று) இப்பொழுது பங்கிட்டுக்கொள்ளும் நிலவரமற்ற முறையும், சில நிலங்களுக்கு, வழக்கமாக விதிக்கப்படும் பண வரியும் ஒழிக்கப்படுவது உத்தமம்; அதற்கு பதிலாக, குடியானவர்களுக்கும் நிலச்சுவான்தார்களுக்கும் நிர்ணயமான ஒப்பந்தங்கள் ஏற்படவேண்டும். அதனால் அனுபவஸ்திரமும், நம்பிக்கையும் உண்டாகும். ஒரு வேளை வழக்குகள் ஏற்பட்டாலும், ஒப்பந்தங்களில் ஸ்பஷ்டமாகக் குறிக்கப்பட்டிருக்கும் ஷரத்துகளைக்கொண்டு, மேற்படி வழக்குகளைசுலபமாகத் தீர்த்துக்கொள்ளலாம். மேற்கூறிய காரணங்களை உத்தேசித்து, ஜமீன்தார்களுக்கும் குடியானவர்களுக்கும் இடையே உள்ள கடமைகளையும் உரிமைகளையும் தெரிவிக்கும் பட்டாக்கள் சம்பந்தமாக, கீழ்க்கண்ட விதிகள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன."

ஒரே தேதியில், பல ரெகுலேஷன்களை (முக்கியமாக பட்டா ரெகுலேஷனை) ஏற்படுத்திய 1802-வது வருஷ அரசாங்கத்தாரின் மனப்பான்மையை, தற்போதுள்ள சட்ட சபைகளும் ஜனங்களும், அவர்களுடைய அரசாங்கமும், நன்கு அறிந்துகொள்ளும்பொருட்டு, முதன்முதலாக பட்டா ரெகுலேஷனின் பீடிகையையும், முக்கிய ஷரத்துகளையும் ஆராய்வோம்.

பட்டா ரெகுலேஷன்படி, ஒழிக்கப்பட்ட முதல் விஷயம்.

நிலத்தின் விளைச்சலை பங்கிட்டுக்கொள்வதின் சம்பந்தமாக, இருந்த, பழைய நிலையற்ற முறையை பட்டா ரெகுலேஷன் ஒழித்தது.

"நிலத்தின் விளைச்சலை பங்கிட்டுக்கொள்வதற்கு இப்பொழுது அமுலிலிருக்கும், நிலவரமற்ற முறை; சில நிலங்கள் சம்பந்தமாகவுள்ள பணவரி ஏற்பாடு."

ஸ்திர அனுபவ முறையும் ஸ்திர வரியும் ஏற்படுத்தப்படுதல்.

பழைய முறைக்கு பதிலாக, ஸ்பஷ்டமான நிபந்தனைகளைக்கொண்ட நிர்ணயமான ஒப்பந்தம் அமுலில் வந்தது. அதாவது, விளைச்சலை நிலவரமற்ற முறையில் பங்கிட்டுக்கொள்வதும், சில நிலங்களுக்கு, விலைவாசிகளுக்குத்தகுந்தாற்போல் பணவரி வசூல் செய்வதும், இனிமேல், சர்க்காராலாவது, ஜமீந்தார்களினாலாவது வற்புறுத்தப்படக்கூடாது.

"நிர்ணயம் செய்யப்பட்ட ஒப்பந்தத்தின்படி, நிரந்தரமாக முடிவு செய்யப்பட்ட தொகையையே அவர்கள் வசூல் செய்யவேண்டும்."

நிர்ணயம் செய்யப்பட்ட ஒப்பந்தம் என்ன?

1802-வது வருஷத்திய சாசுவத செட்டில்மெண்ட் செய்யப்பட்ட காலத்தில், சாகுபடி செய்யப்பட்ட நிலங்களுக்கு, நிலவரிக்காக மொத்த விளைச்சலில், எவ்வளவு பாகம் ஒதுக்கப்படவேண்டும்—அதில் சர்க்காருக்கு எவ்வளவு செல்லவேண்டும், வரி வசூல் வேலைக்காக, ஜமீந்தாருக்கு எவ்வளவு செல்லவேண்டும் என்பது முதலில் தீர்மானிக்கப்படவேண்டும். அக்காலத்தில் நிலவரியை, தானியமாகச் செலுத்துவதே பெரும்பான்மையான வழக்கமாக இருந்தது. மேற்கூறியவாறு, விளைச்சலைப் பங்கிட்டுக்கொள்வது சம்பந்தமாக இருந்த பழைய நிலவரமற்ற முறையை ஒழித்தபிறகு, அடுத்தபடியாக சர்க்கார் செய்யவேண்டிய விஷயம், நிலவரியை நிரந்தரமாக முடிவு செய்யவேண்டியது. இதைச் செய்தால் ஒழிய, இதை செய்யும்வரைக்கும், சர்க்காருக்கு ஜமீந்தார் செலுத்தவேண்டிய பேஷ்கஷ் தொகை சாசுவதமாக நிர்மாணிக்கப்படமுடியாது. பட்டா ரெகுலேஷன் பிரகாரம் இவையாவும், யார் நன்மைக்காக உத்தேசிக்கப்பட்டன? "குடியானவர்கள், நிலத்தை உழுபவர்கள் (**under-tenants**) ஆகிய இவர்களுடைய ஸ்திர அனுபவத்திற்கும் சௌகர்யத்திற்குமே நிலவரி சாசுவதமாக முடிவு செய்யப்பட்டது" என்று, பட்டா ரெகுலேஷன் பீடிகையில், தெளிவாகவும், கொஞ்சமும் சந்தேகமில்லாமலும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. அது எவ்வாறு நிரந்தரமாக முடிவு செய்யப்பட்டது?

அந்தந்த எஸ்டேட்டின் வழக்கப்படி, சர்க்காருக்குச் செலுத்தவேண்டியது, பாதியா, அல்லது மூன்றிலொன்றா என்பது முதலில் நிச்சயம் செய்யப்பட்டது. பிறகு "பர்மனெண்ட் செட்டில்மெண்ட்" (சாசுவத ஏற்பாடு) உண்டான வருஷத்திற்கு முன் வருஷத்திலிருந்த விலைவாசிக்குத்தகுந்தாற்போல் ஜமீன் மதிப்பிடப்பட்டது. மொத்த மதிப்பில் பாதியோ அல்லது மூன்றிலொன்றோ அல்லது அந்தந்த எஸ்டேட்டில் என்ன வழக்கமாக இருந்ததோ, அதுவே குடியானவர்களால் சர்க்காருக்குச்செலுத்தவேண்டிய நிலவரியாக நிர்மாணிக்கப்பட்டது. இதுவே நிரந்தரமான நிலவரித் தொகையாக சாசுவதமாய் நிர்ணயம் செய்யப்பட்டது. இப்படி ஏற்படுத்தப்பட்ட தொகையை, உயர்த்தவோ, குறைக்கவோ, ஜமீந்தாருக்காவது, சர்க்காருக்காவது, குடியானவனுக்காவது, யாதொரு அதிகாரமாவது உரிமையாவது கிடையாது. சர்க்காருக்கு, அல்லது அதன் ஏஜண்டாகிய ஜமீந்தாருக்கு, குடியானவன் செலுத்தவேண்டிய நிலவரித்தொகையை முடிவு செய்தபின், அது சம்பந்தமாக ஏதாவது வழக்கு நேரிட்டால் அதை எப்படி தீர்த்துக்கொள்வதென்பதற்கும் பட்டா ரெகுலேஷனில் விதிகள் அமைக்கப்பட்டன.

பிரிவுகள் 7, 9, 11.

பட்டா ரெகுலேஷன் முக்கிய பிரிவுகள்.

7-வது பிரிவு, பின்வருமாறு விதிக்கிறது :—

"எப்பேராலாவது, எந்த முகாந்தரத்தைக்கொண்டாவது, நிலச்சுவான்தார்கள், குடியானவர்கள் மீது யாதொரு புதிய வரியையும் சுமத்தக்கூடாது. பட்டாவில் தொகுப்பாகக் குறிக்கப்பட்டுள்ள தொகைகளைத் தவிர அல்லது, மற்றபடி சர்க்காரால் அனுமதிக்கப்பட்ட தொகையைத்தவிர, இதர தொகையை நிலச்சுவான்தார் குடியானவனிடமிருந்து வசூல் செய்தார் என்று ருஜுப்படுத்தப்பட்டால், மேற்படி ஜமீந்தாருக்கு, தான் கிரமமற்ற முறையில் வசூலித்த தொகைக்கு மூன்றுமடங்கு அதிகமான தொகை அபராதமாக விதிக்கப்படும்."

பட்டா ரெகுலேஷனின் 9-வது பிரிவு பின்வருமாறு :—

"பணமாகச் செலுத்தவேண்டிய வரி விகிதங்களைப்பற்றியாவது, தானியமாகச் செலுத்தவேண்டிய பாகத்தைப்பற்றியாவது, வழக்குகள் ஏற்பட்டால், மேற்படி விகிதங்கள் சாசுவத ஏற்பாடு செய்யப்பட்ட வருஷத்திற்குமுன் சாகுபடி செய்யப்பட்ட நிலங்களின்மீது என்னவரி விகிதங்கள் இருந்தனவோ அவைகளின் பிரகாரமே, நிர்ணயம் செய்யப்படவேண்டும்; அவைகள் அறிய முடியாவிட்டால், வழக்கு ஏற்பட்ட நிலங்களைப்போல் ஒத்த தரமுடைய நிலங்களுக்கு என்ன வரிவிகிதங்கள் **ஸ்தாபிக்கப்பட்டனவோ** அவைகளின் பிரகாரம் நிர்ணயம் செய்யப்படவேண்டும்."

8-வது பிரிவு, மிகவும் முக்கியமான விதியை அமைத்தது :—

"குடியானவர்களுக்கு பட்டா கொடுப்பதற்கு நிலச்சுவான்தார்கள் மறுத்தால் அல்லது தாமதம் செய்தால், ஆறுமாதகாலம் ஆனபிறகு, மேற்படி நிலச்சுவான்தார்கள் கோர்ட்டில் குற்றம் சாட்டப்படுவார்கள். பட்டா கொடுப்பதற்கு மறுத்தார்கள் அல்லது தாமதம் செய்தார்கள் என்று நிரூபிக்கப்பட்டால், அத்தகைய மறுதளிப்பு, தாமதத்தால், குடியானவர்களுக்கேற்பட்ட செலவு, சிரமத்திற்கு, சரியான நஷ்ட ஈட்டை (**Damages**) நிலச்சுவான்தார்கள் செலுத்தும்படி கட்டளையிடவேண்டும்."

11-வது பிரிவு பின்வருமாறு :—

"குடியானவர்களுடைய முச்சலிக்கைகளில் குறிக்கப்பட்ட தொகைக்கு அல்லது அளவிற்கு, அதிகமாக வசூலிக்கப்பட்ட பணவரியோ தானிய வரியோ, ஜமீந்தாரால் குடியானவர்களிடம் ஹிம்சித்துப் பறித்ததாகவே கருதப்படவேண்டும். அப்படி வசூலிக்கப்பட்டது திருப்பிக் கொடுக்கப்படவேண்டும், அதோடு, அபராதமாக ரெட்டிப்பான தொகையையும் செலவையுங்கூட ஜமீந்தார் செலுத்தவேண்டும்."

14-வது உட்பிரிவு தெரிவிப்பது :—

பணமாகவோ, தானியமாகவோ, குடியானவர்கள் செலுத்துவதற்கு ஜமீந்தார் ரசீதுகள் கொடுக்க வேண்டும். அப்படிக் கொடுக்க மறுத்தால் அதற்கு அபராதம்: செலவு தொகையோடு, செலுத்தின தொகைக்கு ரெட்டிப்பான மடங்கு நஷ்ட ஈடு.

மேலே தெரிவிக்கப்பட்ட பிரிவுகள் வெளிப்படையாகவும், சுலபமாக அறிந்து கொள்ளக்கூடியவைகளாயு மிருக்கின்றன.

இருந்தாலுங்கூட பட்டா ரெகுலேஷன் எந்த நோக்கத்துடன் ஏற்பட்டதென்பதை அறிவதற்கும், மேற்படி பிரிவுகள் எக்காரணத்திற்காக அமைக்கப்பட்டனவென்பதைத் தெரிந்துகொள்வதற்கும், அவைகளைப்பற்றி சற்று பரிசீலனை செய்வோம்.

ஜமீன்தார் நிலவரியை உயர்த்தக்கூடாது. ஏனெனில் சாசுவத செட்டில்மெண்ட் செய்யப்பட்ட காலத்தில், நிலவரி நிரந்தரமாக முடிவு செய்யப்பட்டது.

ஒன்பதாவது பிரிவு.—இப்பிரிவை ஏற்படுத்தியதற்குக் காரணம் பின் வருமாறு. குடியானவனால் செலுத்தவேண்டிய நிலவரித் தொகை நிரந்தரமாக நிர்மாணிக்கப்பட்ட பிறகு, சாசுவத ஏற்பாடு செய்யப்பட்ட காலத்தில் அவ்வாறு முடிவு செய்யப்பட்ட தொகையை, எந்த முகாந்தரத்தைக்கொண்டாவது, என்ன சாக்குப்போக்குச் சொல்லியாவது, ஜமீந்தார் உயர்த்தக்கூடாது. குடியானவனுக்கு சாதகமாகச் செய்யப்பட்ட சட்டத்தை ஏமாற்றுவதற்கு ஜமீன்தார்கள் என்ன வேண்டுமென்றாலும் செய்வார்கள் என்று எதிர்பார்க்கப்பட்டது. சாசுவத ஏற்பாடு செய்யப்பட்ட ஆரம்பகாலத்தில் சாதாரணமாக ஜமீந்தார்களால் கையாளப்பட்டுவந்த, கிரமமற்ற உபாயம் பின் வருமாறு,—பட்டாவில் சில வாக்கியங்களைப் புகுத்தி, அதன்மூலம், நிரந்தரமாக முடிவு செய்யப்பட்ட வரியை உயர்த்திவிடுவது. இத்தகைய கிரமமற்ற செயலை எதிர்த்து வாதாடுவதற்கே, சாசுவத ஏற்பாடு செய்யப்பட்ட காலத்தில் நிரந்தரமாக முடிவு செய்யப்பட்ட வரியைத்தவிர, அதிகமான வரியை, குடியானவன் கொடுக்க கடமைபட்டவனல்ல என்று சட்டத்தில் ஏற்படுத்தப்பட்டது. பேஷ்கஷ் தொகை மாற்ற முடியாமலிருக்கும் வரை, ஜமீந்தாரால் வசூலிக்கப்படும் வரித்தொகைகூட மாற்றமுடியாமலிருக்கவேண்டும், என்று வாதாடுவதற்கு குடியானவனுக்கு உரிமையுண்டு. இது சம்பந்தமாக வழக்கு ஏற்பட்டால் சாசுவத ஏற்பாடு செய்யப்பட்ட வருஷத்திற்கு முன் வருஷத்திலிருந்த வரி விகிதத்தையே கிரமமான வரி விகிதமாக நிர்மாணிக்கப்பட வேண்டுமென்று, 9-வது பிரிவு கூறுகிறது. ஏனெனில் சாசுவத ஏற்பாடுகூட, அதற்கு முன்னிருந்த வருஷத்தின் வரி விகிதத்தின்மீதே, முடிவு செய்யப்பட்டது.

" நிர்ணய ஒப்பந்தத்தின் " பிரகாரம் நிர்மாணிக்கப்பட்ட வரி விகிதங்களை செய்கை முறையில் ஸ்திரப் படுத்துவதற்கு, இதுவே சிரந்த உபாயமென, அக்காலத்து அரசாங்கத்தார் கருதினர்.

"ஸ்திரப்படுத்தப்பட்ட வரி விகிதங்கள்" என்பதின்பொருள், சாசுவத செட்டில்மெண்ட் ஏற்படுவதற்கு முன் வருஷத்தில் ஸ்திரமாக ஏற்படுத்தப்பட்ட வரிகள்.

" வழக்குகள் ஏற்படும் நிலங்களின் தரத்தையொத்த நிலங்களின்மீது ஸ்திரமாக விதிக்கப்பட்ட வரி விகிதங்களின் பிரகாரம் ", என்பதின் அர்த்தம் என்னவென்றால், சாசுவத ஏற்பாட்டிற்கு முன் வருஷத்தில் அக்கம்பக்கத்து நிலங்களின்மீது விதிக்கப்பட்ட வரி விகிதங்கள், ஸ்திரப்படுத்தப்பட்ட வரி விகிதங்கள் என்ற சொற்றொடரின் அர்த்தத்தை கவனிக்கவேண்டியது அவசியம். ஏனெனில், மற்றொருவகையில், " ஸ்திரப்படுத்தப்பட்ட வரிகள் " என்னும் வாக்கியம், அவ்வப்போது, நியாயாதிபதியின் தீர்ப்புகளிலும் 1865-ம் வருஷத்திய வரி வசூல் சட்டத்திலும், 1908-ம் வருஷத்திய எஸ்டேட் நிலச்சட்டத்திலும், அரசாங்க அங்கத்தினர்கள் அறிக்கைகளிலும், உபயோகப் படுத்தப்பட்டிருக்கிறது. அது எந்த சமயத்தில் உபயோகப்படுத்தப்பட்டாலும், எவ்வுருவத்தோடு தோன்றினாலும், அதற்கு உள்ளது ஒரே அர்த்தந்தான். அதாவது, சாசுவத ஏற்பாட்டிற்கு முன்வருஷத்தில் ஸ்தாபிக்கப்பட்ட வரி விகிதங்கள். ஏனெனில், அக்காலத்தில் சாகுபடி செய்யப்பட்ட நிலங்களுக்கும், அதற்குப்பிறகு (சாசுவத செட்டில்மெண்டுக்கும் பிறகு) சாகுபடி செய்யப்படும். தரிசு நிலங்களுக்கும், காட்டு நிலங்களுக்கும், அவைகள் ஒழுங்காகவும், நியாயமாகவும் வரையறை செய்யப்பட்ட சரியான வரி மதிப்பாகும்.

சன்னதுகளும் பட்டாக்களும் உரிமை பத்திரங்களும்; ஒன்றில் பேஷ்கஷ் தொகையும் மற்றொன்றில் வரித்தொகையும் நிரந்தரமாக முடிவு செய்யப்பட்டன.

ஏழாவது பிரிவு மிகவும் முக்கியமானது. பட்டாவில் குறிக்கப்பட்ட தொகைகளுக்கு, அல்லது, சர்க்காரால் அங்கீகரிக்கப்பட்ட தொகைகளுக்குப் புறம்பாக வசூலிக்கப்படும் தொகைகளைப்பற்றியது.

பட்டாவின் முக்கியமாவது, பட்டாக்கள் முச்சலிக்கைகள், மாற்றிக்கொள்ளப்படவேண்டுமென்ற விதியின் முக்கியம் பலருக்கு விளங்குவதில்லை. அவைகள் சர்க்காருக்கும், ஜமீந்தார்களுக்கும் இடையே மாற்றிக் கொள்ளப்படும், சன்னதுகளுக்கும், கபூலியத்துகளுக்கும், சமமானவை. அவைகள் உரிமைப்பத்திரங்கள். சாசுவத செட்டில்மெண்ட் காலத்தில் நிரந்தரமாக முடிவு செய்யப்பட்ட அம்சங்களெல்லாம், மேற்படி பத்திரங்களில் குறிக்கப்பட்டன. பேஷ்கஷ் தொகையென்றால், அது சன்னதில் குறிக்கப்பட்டது. வரித்தொகையென்றால் பட்டாவில் குறிக்கப்பட்டது. குடியானவனுக்கு, சாசுவத செட்டில்மெண்ட் காலத்தில் தான் சாகுபடி செய்த நிலங்களுக்கு வரி விகிதங்களை ஸ்திரமாக முடிவுசெய்யும் பட்டா, ஜமீன்தாருக்கு சன்னது எவ்வளவு விசேஷமானதோ, அவ்வளவு விசேஷமானது. ஜமீன்தார்கள் பின் வருஷங்களில் கிரமமற்ற முறையில் வரி வசூல் செய்யும்பொழுது, குடியானவன், தான் பத்திரம்செய்து வைத்திருந்த முதற் பட்டாவை எடுத்துக் காட்டி, வாதுசெய்தால், மேற்படி பட்டாவில் குறித்துள்ளபடியே வரி விகிதங்கள் நிர்மாணிக்கப்படும். அவைகள்தான் சாசுவதமாக முடிவு செய்யப்பட்ட வரி விகிதங்கள் என்று கருதப்படும். இதுவே 9-வது, 7-வது பிரிவுகளின் கருத்து.

7-வது பிரிவில் குறிக்கப்பட்டுள்ள பட்டா, குத்தகை பத்திரத்தை போன்றதல்ல; சாசுவத செட்டில்மெண்ட் ஏற்படுத்தப்பட்ட காலத்தில் விதிக்கப்பட்ட வரியைக்கொண்டு அது ஒவ்வொரு வருஷமும் புதுப்பிக்கப் படவேண்டும்.

7-வது பிரிவில் குறிக்கப்பட்டுள்ள பட்டா, சாசுவத செட்டில்மெண்ட் காலத்தில் நிரந்தரமாக முடிவு செய்யப்பட்டு முதற் பட்டாவில் பதிவு செய்யப்பட்ட அதே வரி விகிதத்துடன், வருஷாவருஷம் புதுப்பிக்கவேண்டிய பட்டா. நிலத்தை ஆண்டு அனுபவித்துவரும் குடியானவனுக்கு கொடுக்கப்படும் உரிமை பத்திரமே பட்டா என்று வழங்கப்படுகிறது. நிரந்தரமாக முடிவு செய்யப்பட்ட தொகையை சர்க்காருக்கு அல்லது சர்க்கார் ஏஜண்டாகிய ஜமீன்தாருக்கு, நிலவரியாக செலுத்தி வரவேண்டியது குடியானவனின் கடமை. இதைத்தவிர வேறு நிபந்தனை ஒன்றும் கிடையாது. நிலச்சுவான் தாரிடமிருந்து குடியானவன் தனது உரிமையைப் பெற்று, குறிப்பிட்ட சில காலத்திற்கு நிலத்தை அனுபவித்து அது முடிந்தபிறகு, அதை நிலச்சுவான்தாரிடம் திருப்பிக்கொடுத்துவிடுதல், குத்தகைப் பத்திரங்களின் அம்சங்களாகும். ஆனால் பட்டா அப்படிப்பட்டதல்ல. குடியானவனுக்கு பட்டாவால், புதிதாக யாதொரு உரிமையோ, பாத்தியமோ, உண்டாவதில்லை. குடியானவனுக்கு அதற்கு முன்பே ஸ்வயமான

உரிமையிருக்கிறது. ஜமீன்தார், குடியானவர்கள், ஆகிய இவர்களுக்கிடையே பட்டா முச்சலிக்கைகள் மாற்றிக் கொள்வது, சென்ற 150 வருஷங்களாக கட்டாயமாக இருந்து வருகின்றது. சாசுவத செட்டில்மெண்ட் காலத்தில் விதிக்கப்பட்ட அதே வரி விகிதத்தைக்கொண்டு, பட்டா ஒவ்வொரு வருஷமும் புதுப்பிக்கப்படவேண்டும். சாசுவத செட்டில்மெண்டிற்கு பிறகு தரிசு நிலங்கள் சாகுபடி செய்யப்பட்டால், விளைச்சலின் ஒரு பாகத்தை ஜமீன்தார் எடுத்துக்கொள்ளலாம் என்று XXX-வது ரெகுலேஷனில் குறிக்கப்பட்டிருக்கின்றது. இந்த ஒரு விஷயத்தைத் தவிர மற்றபடி, சாசுவத செட்டில்மெண்ட் காலத்தில் கொடுக்கப்பட்ட முதல் பட்டா, அப்பொழுது சாகுபடி செய்யப்பட்ட நிலங்களை பொறுத்தமட்டில், சன்னதைப்போல் நிரந்தரமான பத்திரமாயிருக்கும். யாதொரு மாறுதலும், அதில் ஏற்பட முடியாது. சாசுவத செட்டில்மெண்ட் காலத்திலுள்ள நிலங்களுக்கெல்லாம் ஒரு பட்டா என்றும், சாசுவத செட்டில்மெண்டிற்கு பிறகு சாகுபடி செய்யப்பட்ட நிலங்களுக்கு ஒரு பட்டா என்று தனித்தனியான விதிகள் XXX-வது ரெகுலேஷனில் குறிக்கப்பட்டிருந்தால், இப்பொழுதுள்ள தொல்லைகள் ஒருவேளை குறைந்திருக்கும். ஆனால் குடியானவனுடைய நிலங்களை அப்படி வேறுசெய்வதும் கஷ்டமான காரியமே. அப்படிச்செய்தால், தரிசு நிலங்களில் தனக்கு ஏகபோக உரிமையிருக்கிறதென்று ஜமீந்தார் பாத்தியம் பாராட்டுவதற்கும், தன்னிஷ்டப்படி குடியானவர்களை நிலங்களிலிருந்து அப்புறப்படுத்துவதற்கும், வேண்டுமான வரியைக் கேட்பதற்கும், ஏதுவாயிருக்கும். மேலும் அப்படிச்செய்தால் தங்கள் நிலங்களும் உரிமைகளும் சர்க்காரால் அபகரிக்கப்பட்டு ஜமீன்தாருக்கு கொடுக்கப்பட்டனவென்று, குடியானவர்களிடையே, பெருத்த பரபரப்பும், அதிருப்தியும் உண்டாகும். குடியானவர்களுக்குப் பாதகமாக ஜமீன்தாரை ஆதரிக்கவேண்டுமென்பது, சர்க்காரின் நோக்கமல்ல. தரிசு நிலங்களிலிருந்து தங்களுக்குச் சேரவேண்டிய விளைச்சலின் பாகத்தை சர்க்கார், ஜமீன்தாருக்கு ஏக போகமாகவும், நிரந்தரமாகவும், மாற்றிக்கொடுத்தார்களாயினும், குடியானவர்களுடைய அனுபோக உரிமைகளுக்கும், மேற்படி தரிசு நிலங்களுக்கு சாசுவத ஏற்பாட்டு வரி விகிதங்களையே விதிக்கவேண்டுமென்ற உரிமைக்கும், சர்க்கார் போதிய ஏற்பாடு செய்திருந்தார்கள்.

பட்டாக்கள் முச்சலிக்கைகள்—மாற்றிக்கொள்ளுதல்—மாற்றிக்கொள்ளாததிற்கு அபராதங்கள்.—பட்டாக்களையும், முச்சலிக்கைகளையும் மாற்றிக்கொள்வது சட்டப்படி கட்டாயம் செய்யப்பட்டது. அப்படி மாற்றிக் கொள்ளாவிட்டால் அதற்கு அபராதங்கள் மிகவும் கடுமையாக விதிக்கப்பட்டன. ஆறுமாத காலமான பிறகு ஜமீன்தார் குற்றஞ் சாட்டப்படவேண்டுமென்று, XXX-வது ரெகுலேஷன் 11-வது பிரிவில் குறிக்கப்பட்டிருக்கிறது. இதிலிருந்து, ஜமீன்தாருக்கும் குடியானவனுக்கு முள்ள சம்பந்தம், மேல்வாரம்தாருக்கும், குடிவாரம்தாருக்கும் உள்ள சம்பந்தமே தவிர, நிலச்சுவான்தாருக்கும் குத்தகைக்காரனுக்குமுள்ள சம்பந்தமல்லவென்பது நன்கு விளங்குகின்றது. ஜமீன்தார் தனக்குள்ள நில உரிமையிலிருந்து ஒரு பாகத்தை குடியானவனுக்கு கொடுக்கிறதாக, நிலச்சுவான்தார் சங்கம் சொல்வது, அரசாங்கத்தாரால் அங்கீகரிக்கப்படவில்லை, எனபதற்கு இது போதுமான ருஜுவாகும். ஏனெனில் நிலத்திற்கு சொந்தக்காரனுயுள்ள எவனும், கேவலம், குடியானவனுக்கு பட்டா கொடுக்கவில்லை யென்பதற்காக கிரிமினல் கோர்ட்டில் குற்றஞ் சாட்டப்படமாட்டான். ஆனால் குடியானவனுக்கு பட்டா கொடுப்பதற்கு தவறுவது குடியானவனுடைய நில உரிமையை மறுத்த குற்றமாக கருதப்பட்டது. குடியானவனுக்கேற்பட்ட நஷ்டத்தையும் ஜமீன்தார் ஈடு செய்யவேண்டுமென்று விதிக்கப்பட்டது.

7-வது பிரிவின் பிரகாரம் ஜமீன்தார் குடியானவர்கள் மீது புதிய வரியை விதித்தால், அதற்கு அபராதம் மேற்படி வரித்தொகையின் மூன்று மடங்கு. முச்சலிக்கையில் குறிக்கப்பட்ட வரிக்கு அதிகமாக ஜமீன்தார் வசூல் செய்தால் 11-வது பிரிவின்படி அது ஒரு குற்றமாக கருதப்பட்டு, மேற்படி தொகைக்கு ரெட்டிப்பான தொகையும், செலவு தொகையும் அபராதமாக விதிக்கப்பட்டது.

குடியானவர்களிடமிருந்து வசூலிக்கப்பட்ட தொகைகளுக்கு ஜமீன்தார் ரசீது கொடுக்காவிட்டால் அதற்கு அபராதம், வசூலித்த தொகையைவிட இரண்டு மடங்கு அதிகமான தொகையும், செலவு தொகையும்.

சுருங்கக்கூறில், இவைகளே வரி விகிதங்கள் விஷயமாகவும், நில உரிமை விஷயமாகவும், குடியானவர்களுக்கும், ஜமீன்தார்களுக்கும், ஏற்படுத்தப்பட்ட பாத்தியதைகளும், கடமைகளும் ஆகும். இந்த ரெகுலேஷன் 1865-ம் வருஷம் வரை அமுலிலிருந்தது. சாசுவத செட்டில்மெண்ட் ஏற்பட்டகாலத்தில் சாகுபடி செய்யப்பட்ட நிலங்களின்மீது நிர்மாணிக்கப்பட்ட வரி விகிதங்களும் பேஷ்கஷ் தொகையும், மேற்படி வருஷம் வரை மாறாமலேயிருந்தன. வரி வசூல் சட்டத்தின் **(Rent Recovery Act)** ஷரத்துகளையும், எஸ்டேட் நிலச்சட்டத்தையும் **(Estates Land Act)** ஆராய்ந்து அவைகளின்படி, குடியானவன், ஜமீன்தார், ஆகிய இவர்களின் நிலைமையில் மாறுதல் ஏற்பட்டிருக்கிறதா என்பதை சற்று கவனிப்போம்.

அவ்வாறு செய்வதற்கு முன், 1802-ம்ஞூத்திய சாசுவத செட்டில்மெண்ட் ரெகுலேஷன் (XXV-ல்) உள்ள ஷரத்துகளை பரிசீலனை செய்யவேண்டும். ஏனெனில், மேற்படி ரெகுலேஷன்படி தனக்கு நில உரிமையும், வரியை உயர்த்தும் உரிமையும், தனக்கு இருக்கிறதென்று ஜமீன்தார் பாத்தியங்கொண்டாடுகிறார். அதே வருஷத்தில் ஏற்படுத்தப்பட்ட முக்கிய ரெகுலேஷன்களின் பொருளை அறிந்துகொள்வதற்கு, கர்ணம் ரெகுலேஷன் முதலிய இதர ரெகுலேஷன்களையும் ஆராயவேண்டும்.

தீர்மானம் (முடிவு).

பட்டா ரெகுலேஷனின் முதற் பலன் என்னவென்றால் விளைச்சலை பங்கிட்டுக்கொள்வதிலும், சில நிலங்களுக்கு மாமூலாக பண வரி வசூலிப்பதிலும், இருந்துவந்த நிலைவரமற்ற முறையை ஒழித்து அதற்கு பதிலாக, ஸ்திர அனுபோகமும், ஸ்திர வரியும், எவராலும், எந்த முகாந்தரத்தைக்கொண்டாவது மாற்றாமலிருக்கும்படி சாசுவதமாக முடிவு செய்யப்பட்டது. ஜமீன்தாருக்கு சர்க்கார் கொடுத்த சன்னதைப் போலவே, குடியானவனுக்கு ஜமீன்தார் கொடுத்த பட்டாவும், ஒரு உரிமைப்பத்திரமாகும் **(Title Deed)**. சன்னதில் குறிக்கப்பட்ட பேஷ்கஷ் எவ்வாறு சாசுவதமாக முடிவு செய்யப்பட்டதோ, அதைப்போலவே, பட்டாவில் குறிக்கப்பட்ட வரித்தொகையும், மாற்றமுடியாதவண்ணம், சாசுவதமாக முடிவு செய்யப்பட்டது. சாசுவத செட்டில்மெண்ட் காலத்தில் முடிவு செய்யப்பட்ட பேஷ்கஷ் தொகை மாறாமலிருக்கும்வரை, அதே காலத்தில் பட்டாவில் குறிக்கப்பட்ட வரியும், மாறாமலே இருக்கும். சர்க்காரும், ஜமீன்தாரும், சன்னதி-மிலிகியத்-இஸ்திமிரார், கபூலியத்துகள் மாற்றிக்கொள்வது போலவே, ஜமீன்தாரும், குடியானவனும், பட்டா, முச்சலிக்கைகள் மாற்றிக்கொள்கிறார்கள். சாசுவத செட்டில்மெண்ட் காலத்தில் சாகுபடி செய்யப்பட்ட நிலங்களின்மீதும், சாகுபடி செய்யப்படாத நிலங்களின்மீதும், நிலவரி நிரந்தரமாக முடிவு செய்யப்பட்டது.

1802-ம்ஞூத்திய பட்டா ரெகுலேஷன் XXX-ல் ஏற்படுத்தப்பட்ட விதிகள் இவைகளே.

4-ம் அத்தியாயம்.

சாசுவத செட்டில்மெண்ட் 1802-வது வருஷத்திய XXV-வது ரெகுலேஷன்:

அனுபோக முறையும், கிஸ்தியும் சாசுவத செட்டில்மெண்டால் நிரந்தரமாக முடிவு செய்யப்பட்டன.

நிலவரி என்பது, பேஷ்கஷ் + கிஸ்தி, இரண்டும் சாசுவதமாக நிர்மாணிக்கப்பட்டன.

1802-வது வருஷத்திய XXV-வது ரெகுலேஷன்.

மேற்படி ரெகுலேஷனின் நோக்கம் என்ன? அது விதித்த கொள்கைகள் அல்லது தத்துவங்கள் என்ன?

அதன் அடிப்படைக் கொள்கைகள் பின்வருமாறு தெரிவிக்கப்படலாம் :—

1802-வது வருஷ XXV-வது ரெகுலேஷனின் இரண்டு மூலாதாரக் கொள்கைகள். நில உரிமை சம்பந்தமாக, குடியானவர்களுக்கும் ஜமீன்தார்களுக்கும் உள்ள பாத்தியதா பாத்தியதைகளும்; சர்க்கார், நிலவரியை வரையறை செய்தலும்.

முதலாவது, விளைச்சலிலிருந்து சர்க்காருக்குச் சேரவேண்டியதைச் செலுத்தும், குடியானவர்களுடைய
நிலவுரிமை நிர்ணயம் செய்யப்படுதல்; சர்க்காருக்குச் சேரவேண்டிய
தை குடியானவர்களிடம் வசூலித்து, அதைச் சர்க்காருக்குச் செலுத்தும்
பொறுப்பு வகித்த ஜமீன்தார்களுடைய வரலாறும் உரிமைகளும், இரண்
டாவதாக சர்க்கார் நிலவரியை வரையறை செய்தல். இது பின்வரு
மாறு சித்தியடைந்தது: பழைய ஸ்வதேச ஹிந்து அல்லது மகம்மதிய
அரசாங்கத்தின் சாதாரண வழக்கம்படி, நிலத்தின் மொத்த விளைச்
சலில் ஒரு பாகம் நிலவரியாகத் தீர்மானம் செய்யப்பட்டது. ஆனால்
புதிய முறைப்படி, சாதாரணமாக, கிடைக்கக்கூடிய புள்ளி விவரங்களைக்
கொண்டு, சாகுபடிச் செலவை மொத்த விளைச்சலிலிருந்து கழித்து, மிஞ்சியுள்ளதில் நியாய
மான, மிதமான பாகம் நிலவரியாக ஸ்திரப்படுத்தப்பட்டது. எங்கள்முன் கொடுக்கப்பட்ட சாக்ஷி
யம் சம்பந்தமாக, ஜமீன்கள் தனித்தனியாக ஆராய்ச்சி செய்யப்படும்போது இது விசிதமாகும்.

இரண்டாவது கொள்கையின் நோக்கம், குடியானவனிடமிருந்து, விளைச்சலில் ஒரு பெருத்தபாகம்
நிலவரியாகக் கைப்பற்றவேண்டுமென்பது, சொல்லாமலே விளங்கும். சில இடங்களில் சர்க்கார்
பாகம் மிகவும் அதிகமாயிருந்தது. ஆகையால், சர்க்கார் நிலவரியை வரையறை செய்யவேண்டு
மென்பது சாசுவத செட்ல்மெண்ட் ரெகுலேஷனின் முக்கிய நோக்கங்களிலொன்றுயிருந்தது. அதன்
பலனுகவே, குடியானவர்களுடைய உரிமைகள், ஒரு சிறிதாவது, உருவும், மதிப்பும், ஸ்திரமும்
அடைந்தனவென்று சொல்லலாம். அக்பர் காலத்தைத் தவிர, மற்ற காலங்களில், நிலவரி அதிக
மாகவும், நிலைவறமற்றதாயும் இருந்தது. ஆறிலொரு கடமை என்பது கர்ணபரம்பரையான விஷய
மாயிருந்ததே ஒழிய ஆசரணையில் அறிந்த விஷயமல்ல.

மேற்படி தத்துவங்கள் நல்லெண்ணத்துடன், கட்டாய முறையில் அமுலுக்குக் கொண்டுவரப்பட்டன. ஆனால், சர்க்காரும், ஜமீன்தார்களும், மேற்படி தத்துவங்களை மனதில்வைத்து நாணயமாக நடந்திருந்தால், குடியானவர்கள் இப்பொழுதுபடும் தொல்லைகள் உண்டாயிரா.

நல்லெண்ணத்துடனும், அதிகப்பிரயாசை எடுத்துக்கொண்டும் செய்யப்பட்ட விசாரணைகளின் பலனுகவும்
புதிதாக ஏற்பட்டிருந்த பரிஸ்திதிகள், பழக்க வழக்கங்களின் அனுபவ
பலனுகவும் இத்தத்துவங்கள் கிரியாம்ஸையில் கொண்டுவரப்பட்டன.
ஆகவே, இங்கிலாந்திலிருந்த மேலதிகாரிகளின் சட்டளைப் பிரகாரம்,
1793-வது வருஷத்தில், கார்ன்வாலிஸ் பிரபு, கட்டாயமுறையில் இத்
தத்துவங்களை ஸ்தாபித்தார். ஆனால் இத்தேசத்தில் அனுபவம் வாய்ந்த
அதிகாரிகளெல்லாம் இதற்கு விரோதமாக இருந்தனர். இந்தியாவில்,
வெகுகாலம் உத்தியோகம் செய்த ஸர். சார்ல்ஸ் மூல்ஸ், 25 வருஷங்
களுக்குமுன் தெரிவித்த அபிப்பிராயமாவது: "சாசுவ செட்டில்மெண்ட் என்பது ஒரு மதிஈனமான செயல்;
அறியாமை, திறமையற்ற தன்மை ஆகிய இவைகளின் விளைவு; அது முற்றிலும் தவறென்று கருதப்பட்
டதே தவிர, அதை ஆதரிக்கும ரெவினியூ அதிகாரி ஒருவரும் இல்லை", ஆயினும் 1802-வது வருஷத்தில்
அது அமுலுக்கு வந்தது. அவ்வேற்பாடு பலவந்தமாகக் கொண்டுவரக் கூடாததென்றுலும், அதிற்சில
நல்ல அம்ஸங்கள் இல்லாமற்போகவில்லை. ஜமீன்தார்கள் முதலிய குத்தகைக்காரர்களால், குடியானவர்கள்
அக்காலத்தில்பட்ட கஷ்டங்களை சற்று நினைப்போமாகில், அவைகள் விளங்கும், புதிய ஏற்பாட்டின் இரண்டு
முக்கிய அம்ஸங்கள்: நிலவரி நிர்ணயம் செய்யப்படுதல்; பழைய வரிக்குத்தகைக்காரர்களாகிய ஜமீந்தார்
களின் மேல்வார உரிமைகள், முடிவான முறையில், ஈாயமாகுதல். இவ்விரண்டு அம்ஸங்களும், கவனத்தில்
வைத்து, சர்க்காரும் ஜமீந்தாரும் நாணயமாக நடந்து வந்திருந்தால், இன்று ஜமீன் குடியானவர்கள்படும்
பொருளாதாரக் கஷ்டங்களும், பொறுக்கமுடியாத கடன்பளுவும் ஏற்பட்டிரா. அவர்களுடைய நிலைமை
ரயத்துவாரி குடியானவர்களைவிட மோசமாய் இராது. ஜமீன் குடியானவர்கள் சார்பாக சாக்ஷியம் கொடுத்தவர்
கள் எல்லோரும் ஏகோபித்து விரும்பியதென்னவென்ருல், வரி விஷயத்திலும், வரி வசூல் பரிபாலன
முறையிலும், தாங்கள், குறைந்தபக்ஷம், ரயத்துவாரிக் குடியானவர்களைப் போலவே நடத்தப்படவேண்டு
மென்பதே.

சாசுவத செட்ல்மெண்ட் ரெகுலேஷனில் காணப்படும் விதிகளைப்பற்றி இப்பொழுது ஆராய்வோம்.
1802-வது வருஷத்திய XXV-வது ரெகுலேஷனின் பீடிகை முழுவதும் ஒவ்வொரு சன்னது-இ-மில்க்கியத்-
இஸ்திமிராரில் அடங்கியிருக்கிறது. இந்த ரெகுலேஷனில் காணப்படும் "நிலத்தின் உடைமையாளர்கள்"
(Proprietors of the Soil) என்ற வார்த்தைகள், ரெகுலேஷன் ஏற்பட்ட காலந்தொடங்கியே
வாதப் பிரதிவாதங்களுக்கு இலக்காயிருந்து வருகின்றன. அவ்வார்தைகளின் பொருளை அறிய விரும்பும்
ஒவ்வொருவரும், ரெகுலேஷனின் பீடிகையை படித்துணர வேண்டியது அவசியம், சாசுவத செட்ல்மெண்டின்
பீடிகை பின்வருமாறு :—

பீடிகை.

"சர்க்கார் நிலவரி இதுவரை ஸ்திரமாகத் தீர்மானிக்கப்படவில்லையென்பது, செண்ட் ஜார்ஜ் கோட்டை
அரசாங்கத்திற்கு உட்பட்ட பிரதேசங்களிலுள்ள (சென்னை இராஜதானி) ஜமீந்தார்கள், மிராசு
தார்கள், ரயத்துகள், நிலத்தை உழுபவர்கள் முதலிய யாவரும் அறிந்த விஷயமே. ஆனால்
இத்தேசத்து பழைய அரசாங்கங்களின் வழக்கப்படி, வரித்தொகை, நிர்ணயமான தத்துவங்களால்

நிரந்தரமாக முடிவு செய்யப்படாமல், நிலவரமற்ற முறையில் இருந்துவந்திருக்கிறது. அதனுல், மிதமான நிலவரி சம்பந்தமாக, ஜமீந்தார்களுக்கும் மற்றவர்களுக்கும் யாதொரு உறுதியும் ஏற்படவில்லை. அதற்கு பதிலாக, வரி வருமானத்தை அதிகரிக்கும் பொருட்டு, ஹிந்து அரசாங்கங்களும் மகம்மதிய அரசாங்கங்களும் அடிக்கடி விசாரணைகள் செய்து வந்திருக்கிறுர்கள். அரசாங்கத்தார் நியமிக்கப்பட்ட ஸ்தல அதிகாரிகளின் அபிப்பிராயங்களையும் பரிசிலனைகளையும் தழுவியே, மேற்கூறியவாறு வரிகள் உயர்த்தப்பட்டன. அத்தகைய முறையைக்கையாண்டு வரி வருமானத்தைப் பெருக்கிக்கொள்ள விரும்பியபொழுது, அரசாங்கத்தார், சாதாரணமாக, பழைய ஜமீந்தார்களை விலக்கி, தங்கள் சார்பாக புதிய ஜமீந்தார்களை நியமித்து, ஜமீன்களை நிர்வஹிக்குமாறு செய்து வந்தார்கள். அதன்மூலம் தங்களுக்கு (அரசாங்கத்துக்கு) எல்லா நிலங்களிலும் உள்ள ஆதிபத்ய அல்லது உடைமை, உரிமையை, செய்கையில் ரூபித்துக்காட்டியிருக்கிறுர்கள். ஆனுல் இப்படிப்பட்ட பரிபாலனமுறை, விவசாய அபிவிருத்தியைத்தடுத்து, ஜனங்களுடைய முன்னேற்றத்திற்கும் செல்வத்திற்கும் இடையூருக இருந்து, நாட்டின் நிலவரமான க்ஷேமத்தையும் சுபிக்ஷத்தையும் பாழ்படுத்திவிடும் என்பது யாவரும் அறிந்ததே. மேலும் அம்முறை குடிகளின் சுயேச்சைக்கும் உடைமை உரிமைகளுக்கும் யாதொரு பாதுகாப்பும் அளிக்காமல், உள்ள செளகர்யங்களையும் ஒழித்துவிடும். அத்தகைய முறையால், அரசாங்கத்திற்கும் அதன் பிரஜைகளுக்கும் ஏற்படும் பல தீமைகளை பிரிட்டிஷ் சர்க்கார் நன்குணர்ந்து, அதைத் தங்கள் பரிபாலனத்தினின்றும் நீக்கத் தீர்மானித்திருக்கிறுர்கள். இக்கருத்தை முன்னிட்டு, ஜமீந்தாரர்களுக்கும், மற்ற நிலச்சுவான்தார்களுக்கும், அவர்கள் வார்சுகளுக்கும், சந்ததிகளுக்கும், அவர்கள் நிலங்களில், நிரந்தரமான உடைமை உரிமையை சாசுவதமாகக் கொடுக்கவும், மேற்படி நிலங்களின்மேல், மிதமான வரியை, எந்த சந்தர்ப்பங்களாலும் மாற்ற முடியாவண்ணம், நிரந்தரமாய் விதிக்கவும், அரசாங்கத்தார் முடிவு செய்திருக்கிறுர்கள்."

நிலத்தின் ஆதிபத்ய உரிமை அல்லது உடைமை உரிமை (**Proprietary right to the soil**) என்பது மேல்வார உரிமையைமட்டும் குறிக்கும்.

ரெகுலேஷனில் காணப்படும் "நிலத்தின் ஆதிபத்ய உரிமை அல்லது உடைமை உரிமை" என்ற வார்த்தைகளை ஆதாரமாகக்கொண்டு, தாங்கள் எழுத்துமூலமாக அனுப்பிய யதாஸ்தின், 10-வது பக்க வுட்பிரிவில், சென்னை நிலச்சுவான்தார்கள் சங்கத்தார், பின்வருமாறு வாதிக்கிறுர்கள். அதாவது, நிலவுரிமை, சர்க்காருக்குச் சேர்ந்தது, என்ற கொள்கையின்மீதே, சாசுவத செட்ல்மெண்ட் காலத்தில், பிரிட்டிஷ் அரசாங்கத்தார் பிரவர்தித்தார்கள் என்றும், அத்தகைய, தங்களுக்குச் சேர்ந்த நில உரிமையையே, சர்க்கார், ஜமீந்தார்களுக்கு மாற்றினுர்கள் என்றும், நிரந்தரமாக முடிவு செய்யப்பட்ட பெஷ்கஷ் தொகையை அரசாங்கத்துக்கு செலுத்தவேண்டியதைத் தவிர, ஜமீந்தார்களுக்கும் இதர நிலச்சுவான்தார்களுக்கும் வேறு கடமை கிடையாதென்றும், சர்க்காரால் ஜமீன்தாருக்குக் கொடுக்கப்பட்ட பத்திரம் "சன்னதி-மில்க்கியத்-இஸ்திமிரார்" என்று வழங்கப்பட்டதென்றும், அது உரிமைப் பத்திரம் அல்லது சாசுவத உடைமைப் பத்திரம் என்று பொருள்படும் என்றும், மேற்படி சங்கத்தார் தர்க்கம் செய்கின்றுர்கள். "சன்னதி-மில்க்கியத்-இஸ்திமிரார்," ஒரு உரிமைப் பத்திரமாகக் கருதப்பட்டது என்பதுஉண்மையே. அதைப்போலவே, 1802-வது வருஷத்திய **XXX**-வது ரெகுலேஷன் பிரகாரம் குடியானவனுக்குக் கொடுக்கப்பட்ட பட்டாவும் ஒரு உரிமைப் பத்திரமே. சென்னை நிலச்சுவான்தார்கள் சங்கத்தார் கூறுவதுபோல், உரிமைப் பத்திரத்தைக் கொடுப்பது என்பது, சாசுவத உடைமை உரிமையைக் கொடுப்பதாகும் என்பது உண்மையாகில், அவ்விதி, அவ்வியாக்யானம், சன்னதிற்கும் பட்டாவிற்கும், ஒத்த தன்மையிலேயே செல்லும், சர்க்காருடைய பாத்தியதையும், உரிமையும், ஹக்கும், சாசுவத செட்ல்மென்டால் ஜமீந்தாருக்கு மாற்றப்பட்ட பொழுது, ஜமீந்தாருக்கும் சர்க்காருக்கும் இடையே ஒரு ஒப்பந்தமும்; குடியானவர்களுக்கும் ஜமீந்தாருக்கும் இடையே ஒரு ஒப்பந்தமும்; குடியானவர்களுக்கும் சர்க்காருக்கும் இடையே ஒரு ஒப்பந்தமும் ஆக மூவகை ஒப்பந்தங்கள் நடந்தன. 1802-வது வருஷத்திய **XXV**, **XXX** ரெகுலேஷன்களில் விதித்துள்ளபடி சர்க்காரும் ஜமீன்தாரும் சன்னது, கபூலியத்தை மாற்றிக்கொண்டார்கள். ஜமீந்தாரும் குடியானவர்களும், பட்டா முச்சலிக்கைகளை மாற்றிக்கொண்டார்கள். அதே வருஷத்தில் ஏற்படுத்தப்பட்ட **XXIX**-வது ரெகுலேஷன்படி, சர்க்கார், ஜமீந்தார், குடியானவர்கள் ஆகிய முத்திறத்தாருக்கும் ஜவாப்தாரியாகவும், மூவர்களுடைய உரிமைகளைப் பாதுகாப்பதினிமித்தம் சரியான கணக்குகள் வைத்துக்கொள்ள வேண்டிய அதிகாரியாக கர்ணம் நியமிக்கப்பட்டார். மேலும், பேஷ்கஷ் தொகையை ஜமீந்தாரிடமிருந்து சர்க்கார் வசூல் செய்வதின் சம்பந்தமாகவும், வரியை குடியான்வர்களிடமிருந்து ஜமீந்தார் வசூல் செய்வது சம்பந்தமாகவும், **XXVII**, **XXVIII** ரெகுலேஷன்கள் ஏற்படுத்தப்பட்டன. இவைகளையெல்லாம் ஆராயும்பொழுது, 1802-வது வருஷத்தில் சர்க்காருக்கு பூரண நிலஉரிமையிருந்ததென்றுவது, அது யாதொரு நிபந்தனையுமில்லாமல், ஜமீந்தார்களுக்கு மாற்றப்பட்டு ஏகபோகமாக அனுபவிக்கும்படி அனுமதிக்கப்பட்டதென்றுவது கூறுவதற்கு இடம் இல்லை. அது அகண்டகல்பனைக்குக்கூட எட்டாத விஷயம். 1802-வது வருஷத்திய சாசுவத செட்ல்மெண்ட் வ்யாக்கியான ரெகுலேஷன் **IV**-ல் இது தெளிவாகத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. மேற்படி ரெகுலேஷனின் இரண்டாவது உட்பிரிவில் ஒரு ஷரத்து காணப்படுகிறது. அது கூறுவது என்னவென்றுல், நிலச்சுவான்தார்களுடைய உரிமைகளையாவது குடியானவர்களுடைய உரிமைகளையாவது, குறைப்பதற்காவது, பாதிப்பதற்காவது, ஒழிப்பதற்காவது, 1802-வது வருஷத்திய சாசுவத செட்ல்மெண்ட் ரெகுலேஷன் ஏற்படுத்தப்படவில்லை என்பதே. சென்னை நிலச்சுவான்தார்கள் சங்கம் இதை ஒத்துக்கொள்கிறது. ஆனுல் அது சொல்வதென்னவென்றுல், வியாக்கியான ரெகுலேஷன் உடன்பாட்டாக ஒன்றையும் தெரிவிக்கவில்லை யென்றும், தீர்க்க எச்சரிக்கையாக அது ஏற்படுத்தப்பட்டதே ஒழிய, வேறில்லை யென்றும், குடியானவர்கள் உரிமைகளை அது ஸ்தாபித்துக் கூறவில்லை யென்றும், குடியானவர்களுக்கு அது யாதொரு உரிமையையும் வழங்கவில்லை யென்றும் நிலைநாட்ட முயல்வதே, ஆனுல், அடுத்த வாக்கியத்திலே நிலச்சுவான்தார்கள் சங்கம் கூறுகிறது; சாஸ்வத செட்ல்மெண்ட் ஏற்படுத்துவதற்குமுன் குடியானவர்களுக்கு ஏதாவது உரிமைகள் இருந்தால் அவ்வுரிமைகள் அபகரிக்கப்படவில்லை யென்று, அச்சங்கம் இவ்வாறு ஒத்துக்கொண்ட பிறகு, எழும் முக்கிய கேள்வி என்னவென்றுல் "சாசுவத செட்ல்மெண்ட் ஏற்பட்டபொழுது, சாகுபடி செய்யப்பட்ட நிலங்கள் குடியானவர்கள்வசம் இருந்தனவா, அல்லது இல்லையா?" குடியானவர்களுடைய அனுபோகத்தில் நிலங்கள் இருந்தனவென்றுல், சர்க்காருக்கு அப்பொழுதிருந்த உரிமை யென்ன? மேல்வார உரிமை அதாவது நிலவரியை வசூல் செய்யும் உரிமைதான் சர்க்காருக்கு இருந்தது. அவ்வுரிமையைத்தான், தனது வரி வசூல் ஏஜண்டாகிய ஜமீந்தாருக்கு சர்க்கார் மாற்றினது மேல்வார உரிமை குடிவார உரிமை, ஆகிய இவ்விரு உரிமைகளும் சர்க்காருக்குச் சேர்ந்திருந்தால், 1802-வது

1802-வது வருஷத்திலே சர்க்கார் ஜமீன்தார்களுக்கு மாற்றினது மேல்வார உரிமைகள்தான். ஏனெனில், அக்காலத்திலாவது மற்ற எக்காலத்திலாவது சர்க்காருக்கு அவைகளைவிட உயர்ந்த உரிமைகள் கிடையா.

வருஷத்திய XXV பிரகாரம் வழங்கப்பட்ட சன்னதில், மேற்படி இரு உரிமைகளும் சர்க்காரால் ஜமீந்தாருக்குக் கொடுக்கப்பட்டிருந்தால், ஜமீந்தார்கள், நிச்சயமாக, தங்கள் கீழிருந்த நிலங்களுக்கு ஏகபோக உரிமையாளர்களாயிருப்பார்கள். ஜமீன்தார்கள் தங்கள் ஜமீன் நிலங்கள்முழுவதையும் பண்ணை நிலங்களாக அனுபவித்து வந்திருந்தால், குடியானவர்கள் வருஷாந்திரக் குடியானவர்களாயிருப்பார்கள். ஜமீந்தார் இஷ்டப்பட்டால் அவர்களை நிலங்களிலிருந்து விலக்குவதற்கும் அவர்களுக்கு உரிமை இருக்கும். ஆனால், சர்க்காருக்கு எக்காலத்திலும் இருவாரங்களும் சேரவில்லை. ஆதலால் ஜமீந்தார்களுக்கு இருவாரங்கள் மாற்றப்படுவதற்கு ஏதுவில்லை. ஜமீந்தார்கள் நிலத்தின் உடைமையாளர்களாயினர் என்று, பொதுவான முறையில் பதப்பிரயோகம் செய்யப்பட்டாலும், உண்மையில் அத்தகைய உரிமையொன்றும் ஜமீன்தார்கள் அடையவில்லை. ஏனெனில் சர்க்காருக்கே அவ்வுரிமை கிடையாது. முதலாவது, நிலத்தை அனுபவித்துவந்த குடியானவர்களுடைய உரிமைகளையும், இரண்டாவது ஜமீன்தார்களுடைய உரிமைகளையும், பாதுகாப்பதற்கு, சர்க்கார் மிகவும் ஆவலாயிருந்தது. 1802-வது வருஷத்திய XXV-வது ரெகுலேஷன் பீடிகை பின்வருமாறு தெரிவிக்கிறது. "இப்படிப்பட்ட பரிபாலனமுறை, விவசாய அபிவிர்த்தியைத் தடுத்து ஜனங்களுடைய முன்னேற்றத்திற்கும், செல்வத்திற்கும், இடையூராகவிருந்து நாட்டின் நிலைவரமான க்ஷேமத்தையும், சுபிக்ஷத்தையும், பாழ்படுத்திவிடுமென்பது யாவரும் அறிந்ததே. மேலும், அம்முறை குடிகளின் சுயேச்சைக்கும், உடைமை உரிமைகளுக்கும், யாதொரு பாதுகாப்புமளிக்காமல், உள்ள சௌகர்யங்களையும் ஒழித்துவிடும். அத்தகைய முறையால் அரசாங்கத்திற்கும், அதன் பிரஜைகளுக்கும், ஏற்படும் பல தீமைகளை பிரிடிஷ் சர்க்கார் நன்கு உணர்ந்து, அதை தங்கள் பரிபாலத்தினின்றும் நீக்க தீர்மானித்திருக்கிறார்கள். இக்கருத்தை முன்னிட்டு ஜமீன்தார்களுக்கும், மற்ற நிலச்சுவான்தார்களுக்கும், அவர்களை வார்சுகளுக்கும், சந்ததிகளுக்கும், அவர்கள் நிலங்களில் நிரந்தரமான உடைமை உரிமையை சாசுவதமாக கொடுக்கவும், மேற்படி நிலங்களின்மேல் மிதமான வரியை, எந்த சந்தர்ப்பங்களாலும், மாற்றமுடியாவண்ணம், நிரந்தரமாய் விதிக்கவும் அரசாங்கத்தார் முடிவு செய்திருக்கிறார்கள்."

சாசுவத செட்டில்மெண்ட் ரெகுலேஷன் ஏற்பட்ட பிறகு, தங்கள் முன்னோர்கள் செய்தபடியே, இப்பொழுதும் ஜமீன்தார்கள், தங்களுக்கு நிலத்தில் உரிமையிருக்கிறதென்றும், வரியை உயர்த்த அதிகாரம் இருக்கிறதென்றும், பாத்தியம் கொண்டாடுகிறார்கள். "நிலத்திலுள்ள உடைமை உரிமை" என்ற வார்த்தைகளைப்பற்றி, அன்று என்ன வியாக்கியானம் செய்தார்களோ அதையே இன்றும் செய்கிறார்கள். இவ்வார்த்தைகளின் உண்மையான பொருளையும், சாசுவத செட்டில்மெண்ட் ரெகுலேஷன் கீழ், ஜமீன்தார்களுக்கும் குடியானவர்களுக்கும் உள்ள உரிமைகளைப் பற்றியும், ஹாட்க்சன் துரை விஸ்தாரமாக ஆராய்ந்து விளக்கமாக எடுத்துக்கூறியிருக்கிறார்.

1802-வது வருஷத்திய XXV-வது ரெகுலேஷன்.

பிரிவுகளின் பரிசீலனை.

1802-வது வருஷத்திய XXV-வது ரெகுலேஷனின் கருத்து, ஜமீன்தார்களுக்குமட்டும் நன்மை செய்யவேண்டுமென்பதல்ல. அப்படி இல்லாவிட்டால், குடியானவர்களின் அபிவிருத்தி, தேசத்தின் சுபிக்ஷம் முதலிய வைகளைப்பற்றி பிரஸ்தாபித்திருக்கவேண்டியதல்ல.

மேலே தெரிவிக்கப்பட்ட பீடிகையின் தொடக்கத்தில், கீழ்கண்ட விஷயங்கள் குறிக்கப்பட்டிருக்கின்றன. அதாவது, பழைய பரிபாலனமுறை தேசத்தின் சுபிக்ஷத்திற்கு மிகவும் பாதகமாயிருந்ததென்றும், குடியானவர்களுடைய அபிவிருத்திக்கும், செல்வத்திற்கும் இடையூருக இருந்ததென்றும், ஜனங்களுடைய சுயேச்சையையும் சொத்துரிமை ஸ்திரத்தையும் பாழ்செய்த தென்றும், இது, ஜமீன்தார்கள், மிராசுதார்கள், ரயத்துகள், உழுபவர்கள் யாவரும் அறிந்த விஷயம் என்றும்; இதை முன்னிட்டு, பிரஜைகளுக்கு நன்மை செய்வதற்காக, எந்த சந்தர்ப்பங்களாலும் மாற்றமுடியாதவண்ணம், மிதமான நில வரியை நிரந்தரமாக முடிவு செய்ய சர்க்கார் தீர்மானித்திருக்கிறார்கள் என்றும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. குடியானவர்களுக்கு உதவிசெய்யவேண்டுமென்பதே சாசுவத செட்டில்மெண்டின் முக்கிய நோக்கம் என்பது மேற்கூறிய வாக்கியங்களிலிருந்து மிகவும் ஸ்பஷ்டமாக விளங்குகிறது. நில உரிமையை ஜமீன்தார்கள் சார்பாக, சர்க்கார் ஸ்தாபிக்க விரும்பியிருந்தால், மேற்கூறிய வார்த்தைகளை உபயோகப்படுத்தவேண்டிய அவசியம் இராது. விவசாய அபிவிருத்தி, கைத்தொழில், **முதலிய பலவிஷயங்களைப்பற்றி** பேசவேண்டிய தேவையில்லை. தங்கள் ஏஜெண்டுகளாகிய ஜமீன்தார்களுக்கு வாரம்வசூலிக்கும் உரிமையை சர்க்கார்மாற்றியபொழுது, குடியானவர்களுடைய பாத்தியதைகளையும்பாதுகாக்கவேண்டுமென்று மிகவும் ஆவலுள்ளதாயிருந்தது என்பது ரெகுலேஷனின் பீடிகையிலிருந்துமட்டுமே அல்லாமல் மற்ற எல்லா பிரிவுகளிலிருந்தும் நன்கு புலப்படுகிறது. சர்க்காருக்கு ஜமீன்தார் செலுத்தவேண்டிய பேஷ்கஷ் தொகையை நிரந்தரமாக நிர்மாணித்தல்; வரியைத் தன் இஷ்டப்படி உயர்த்திக் கொள்ள ஜமீன்தாருக்கு அனுமதி கொடுத்தல்; ஆகிய இவ்விரண்டையும் செய்ய அரசாங்கத்தார் விரும்பியிருந்தால், அதைத் தெளிவாகத் தெரிவித்திருப்பார்கள்.

1802-வது வருஷத்திய XXV-வது ரெகுலேஷனின் 2-வது பிரிவுப்படி, ஜமீன்தார்கள் உடைமை உரிமை அடைவதற்கு, இன்றியமையாத விஷயம், நில வரி ஸ்திரப்படுதல். சன்னது வழங்குவதற்கும், அது அவசியமானது.

2-வது பிரிவு, நிலவரியை ஸ்திரம் செய்வதைக் குறிக்கிறது. அப்பிரிவின்படி, சர்க்காருக்கு வரி செலுத்தவேண்டிய எல்லா நிலங்களின் மேலும் நில வரி நிரந்தரமாக முடிவு செய்யப்படும்வரை, ஜமீன்தாரிடம் உடைமை உரிமை அதாவது மேல்வார பாத்தியம் வந்திறங்காது. ஜமீன்தார் அந்த பாத்தியதை அடைந்தாலொழிய, சன்னது அவருக்கு வழங்க முடியாது. இவ்வாருக சட்டப்படி, உடைமை உரிமை, அதாவது மேல்வார பாத்தியம், ஜமீன்தாருக்கு சேர்வதற்கு இன்றியமையாதது, நில வரி நிர்மாணம் செய்யப்படுதல். ஜமீன்தார் சன்னது பெறுவதற்கு இன்றியமையாதது மேல்வார பத்தியம் அல்லது உடைமை உரிமை. சன்னது ஸ்திரமாக இருக்கவேண்டுமென்ருல், XXV-வது ரெகுலேஷனின், 3, 8, 14 பிரிவுகளில் காணப்படும் நிபந்தனைகள் அனுசரிக்கப்படவேண்டும். நில வரி, நிரந்தரமாக நிர்ணயம் செய்வதற்குமுன் சன்னது கொடுக்கமுடியாது. இப்படி ஒன்றை ஒன்று தொடர்ந்து ஆதாரப்பட்டிருக்கின்றபொழுது, நிரந்தரமாக முடிவுசெய்யப்பட்ட நில வரி, பிறகு, ஜமீன்தார் இஷ்டப்படி, எவ்வாறு உயர்த்தப்பட முடியும்? எக்காரணங்களைக்கொண்டு அவ்வாறு செய்யலாம்? ஜமீன்தாருக்கும், குடியானவனுக்கும் கூட்டாகக் கொடுக்கப்பட்ட நிலங்கள், ஒரு சிறிது அபஹரிக்கப்பட்டாலும், அதன் பலன் என்னவாகும்? ஜமீந்தாரும் குடியானவனும், அனுபோக ஸ்திரத்தையும், வரி ஸ்திரத்தையும் அடைவதற்கே நில வரி சாசுவதமாக நிர்ணயம் செய்யப்பட்டது. பட்டா ரெகுலேஷனைப்பற்றி, இதற்கு முன்பே நாம் ஆராய்ச்சிசெய்தபொழுது, ராஜபாகம் எவ்வாறு வரையறை செய்யப்பட்டதென்பதைக் கண்டோம். முதலில் ராஜபாகம் $\frac{1}{2}$ ஆக வரையறை செய்யப்பட்டது. அதில், சர்க்காருக்கு ஜமீந்தார் பேஷ்கஷ் தொகையாகச் செலுத்தவேண்டியது $\frac{1}{4}$ ஆக முடிவு செய்யப்பட்டது. $\frac{1}{2}$-ல் எஞ்சியுள்ள $\frac{1}{4}$ பாகமே, ஜமீந்

தாருக்கு (அவர், சர்க்காருக்கும் குடியானவனுக்கும் செய்யும் சேவகத்திற்காக) கொடுக்கப்பட்டது. ஆனால் ஜமீந்தார் தற்சமயம் வாதாடுவதென்னவென்றால், சாசுவத செட்ல்மென்ட் காலத்தில் நிரந்தரமாக முடிவு செய்யப்பட்டது தாம் சர்க்காருக்குச் செலுத்தவேண்டிய பேஷ்கஷ் தொகைதான்; தமது வருமானத்தைப் பெருக்கிக்கொள்ள தம் இஷ்டப்படி வரியை உயர்த்தலாம். இது அனுமதிக்கப்பட்டால் சாசுவத செட்ல்மென்டின் கதி என்னவாகும்? உதாரணமாக, கீழ்க்கண்ட ஒரு சந்தர்ப்பத்தை எடுத்துக்கொள்வோம். சாசுவத செட்ல்மென்ட் காலத்தில் ஒரு ஜமீனில் உள்ள எல்லா நிலங்களின்மேலும், நிர்மாணம் செய்யப்பட்ட மொத்த வரி 6 லக்ஷ ரூபாய் என்று வைத்துக்கொள்வோம்; அதில் சர்க்காருக்குச் சேரவேண்டியது 3 லக்ஷம் என்று ஒதுக்கிவைப்போம். அந்த 3 லக்ஷத்தில் அதாவது 2 லக்ஷம் ரூபாய் சர்க்காருக்கு பேஷ்கஷாகச் செலுத்தவேண்டியது. எஞ்சிய 1 லக்ஷ ரூபாய் ஜமீந்தாருக்கு வரி வசூல் வேலைக்கு, பிரதிப்பயனாகச் சேரவேண்டியது. ஆனால் சாஸ்வத செட்ல்மென்டிற்குப் பிறகு, வரிகளை உயர்த்தி, தனக்கு, முன் சேரவேண்டிய 1 லக்ஷத்தை ஜமீந்தார் பத்து லக்ஷமாகச் செய்துகொண்டால், சாசுவத செட்ல்மென்ட் என்னவாகும்? அவ்வாறு செய்தால் சாசுவத செட்ல்மென்ட் எங்கே இருக்கிறது? நிரந்தரமாக முடிவு செய்யப்பட்ட வரி ஸ்திரமாயிராமல் சிதைந்துபோகுமல்லவா! குடியானவனுக்கோ ஜமீந்தாருக்கோ, நஷ்டம் ஏற்பட்டாலும் சரி, லாபம் ஏற்பட்டாலும், நிரந்தரமாக முடிவு செய்யப்பட்ட வரி மாறாமலே இருக்கவேண்டும். தமக்கு லாபம் ஏற்பட்டாலும் சரி, நஷ்டம் ஏற்பட்டாலும், ஏற்படுத்தப்பட்ட பேஷ்கஷ் தொகையை மாறாமல், சர்க்காருக்குச் செலுத்திவருவது போல், ஜமீன் குடியானவனும், சாசுவத செட்ல்மென்ட் காலத்தில் முடிவு செய்யப்பட்ட வரியை (விளைச்சலின் பாதியில் மூன்றிலொரு பாகம்) சாசுவதமாகக் கொடுக்க கடமைப் பட்டிருக்கிறான். ரெகுலேஷனின் 2-வது பிரிவில் காணப்படும் வார்த்தைகளின் அர்த்தம் இதுவே:—

> "இக்கொள்கைகளுக்கிணங்க, சர்க்காருக்குச் செலுத்தவேண்டியதற்காக, எல்லா நிலங்களின்மீதும் நிர்ணயமாக வரி விதிக்கப்படவேண்டும். அத்தகைய வரி நிர்ணயத்தின் பலனை, நிலத்தின் உடைமை உரிமை ஜமீந்தார்களுக்கும், அவர்கள் வார்சுகளுக்கும், நியாய உரிமையுள்ள சந்ததிகளுக்கும் சாசுவதமாகச் சேரவேண்டியது."

இப்பிரிவின்படி, நில வரி (மொத்த விளைச்சலில் பாதி) வசூல் செய்யும் உரிமை ஜமீந்தாருக்கு சாசுவதமாகக் கொடுக்கப்பட்டது. இத்தகைய நிலைமையில், விதிக்கப்பட்ட வரியை உயர்த்தி, தமக்குள்ள பாத்தியதா முறையை மாற்றிக்கொள்வதற்கு ஜமீந்தாருக்கு யாதொரு அதிகாரமும் கிடையாது. தமது ஜமீனிடைய நிரந்தர முறையை மாற்றிக்கொள்வது, ஜமீந்தார் தமது ஜமீனையே இழந்ததற்கு சமமாகும். ஏனெனில், அது, சாஸ்வத ஏற்பாட்டின் அஸ்திவாரத்தையே வெளிப்படையாக அழிப்பதற்கு சமானமாகும். அவ்வப்போது வரியை உயர்த்துவதால், ஜமீந்தார், குடியானவனுக்கு தொடர்ந்து அநீதி புரிவதாகும். சன்னது, கபூலியத்துகளை மாற்றிக்கொள்ளவேண்டியதைக் குறிக்கும், ரெகுலேஷனின் 3-வது பிரிவை ஆராய்வோம். அது ஒரு உரிமைப் பத்திரம் என்று நிலச்சுவான்தார்கள் கூறுகிறார்கள். உண்மைதான். அது ஒரு உரிமைப்பத்திரமே. ஆனால் அது நிபந்தனையில்லாத உரிமைப்பத்திரமா? அல்ல. நிலங்கள் எந்த அனுபோக முறையில் அனுபவிக்கப்படுகின்றன என்பதின் சம்பந்தமான நிபந்தனைகளும் ஷரத்துகளும், சன்னதிலும் கபூலியத்திலும், குறிக்கப்படவேண்டுமென்று, 3-வது பிரிவில் 2-வது உட் பிரிவு தெரிவிக்கிறது. நில வரி விஷயமாக ஏதாவது வழக்கு ஏற்பட்டால், சன்னது, கபூலியத்தின் ஷரத்துகளுக்கேற்பவும், ஒப்பந்தத்தின் நிபந்தனைகளுக்கேற்பவும் கோர்ட்டார் தீர்ப்பளிக்கவேண்டும் என்று மேற்படி பிரிவின் 3-வது உட் பிரிவு கூறுகிறது.

முக்கிய நிபந்தனைகள் என்னவென்று அறியவேண்டுமானால், ரெகுலேஷனின் 14-வது பிரிவை ஆராய வேண்டும்.

14-வது பிரிவு விதிப்பது:—

நிரந்தரமாக முடிவு செய்யப்பட்ட வரிகள், பட்டாக்களிலும் முச்சலிக்கைகளிலும் குறிக்கப்படவேண்டும். சன்னது சாசுவதமாய் செல்லவேண்டுமானால் மேற் கூறிய நிபந்தனை இன்றியமையாதது

"வரியை தானியமாகவோ, பணமாகவோ, செலுத்துவதற்கு, குடியானவர்களோடு ஜமீந்தார்கள் அல்லது நிலச்சுவான்தார்கள் ஒப்பந்தம் செய்துகொள்ளவேண்டும். அதன் பிறகு காலதாமதம் இல்லாமல், பட்டா முச்சலிக்கைகளை மாற்றிக் கொள்ளவேண்டும். பட்டா முச்சலிக்கைகளில், குடியானவன் செலுத்தவேண்டிய தொகையை, வரையறை செய்யப்பட்டிருக்கவேண்டும். ஒப்பந்தத்தின் ஏவ்வொரு நிபந்தனையும் விளக்கப்பட்டிருக்கவேண்டும்." மேலும் இப்பிரிவின்படி, குடியானவனிடமிருந்துவசூல் செய்யப்படும் தொகைகளுக்கு கட்டாயமாக ரசீதுகள் கொடுக்கவேண்டும். தவறினால் ஜமீந்தார் நஷ்ட ஈடும் அபராதமும் தரவேண்டும்.

இவ்வாறாக, நிரந்தரமாக முடிவுசெய்யப்பட்ட வரியைத் தெரிவிக்கும் பட்டா முச்சலிக்கைகளை மாற்றிக்கொள்ளுதல்; வரித் தொகைகளுக்கு ரசீது கொடுத்தல்; ஆகிய இவைகள் சன்னதின் ஸ்திரத்திற்கு இன்றியமையாத நிபந்தனைகளாகச் செய்யப்பட்டன. இந்த நிபந்தனைகளில் ஏதாவதொன்று தவறினாலும், கோர்ட்டு மூலம் நில வரியைப்பெறும் உரிமையை ஜமீந்தார் இழந்துவிடுவார். இதுவே ஜமீன் அபஹரணம் என்று அழைக்கப்படுகிறது. (1802-வது வருஷத்திய பட்டா ரெகுலேஷன் பிரிவுகள் ஜி.ஜி. 1 லிருந்து 15 வரையும்).

ஜமீன்தாரின் "உடைமை உரிமையை" விற்பனை மூலமாகவோ, தானமாகவோ அடைந்தவனுக்கு, வரியை உயர்த்த அதிகாரம் இல்லை.

8-வது பிரிவின்படி ஜமீந்தாருடைய மேல்வார உரிமை, விற்பனை மூலமாகவோ, தானமாகவோ, இதர வகையிலோ, மற்றொருவருக்கு மாற்றப்பட்டால், அத்தகைய மாற்றம் சட்ட முறைப்படி செல்லும். பிரிடிஷ் அரசாங்கத்தின் ரெகுலேஷன்களுக்கு விரோதமாயிருந்தாலொழிய, அது கோர்ட்டுகளாலும், சர்க்கார் அதிகாரிகளாலும் அங்கீகரிக்கப்படவேண்டும். ஜமீந்தாரின் சன்னது அல்லது உரிமை பத்திரம், ஒழுங்கானதாகவும், செல்லத் தகுந்ததாகவும், இருக்க வேண்டுமென்றால், ஜமீந்தார் குடியானவர்களோடு செய்துகொள்ளவேண்டிய ஒப்பந்தத்தின் சம்பந்தமான நிபந்தனை, முதலில் நிறைவேற்றப்பட வேண்டுமென்பது வற்புறுத்தியிருக்கிறது. ஜமீந்தாருக்கு குடியானவன் செலுத்தவேண்டிய வரி விகிதங்களே அந்த நிபந்தனையில் முக்கியமாகக் குறிக்கப்பட்டிருக்கிறது. ரெகுலேஷனின் 8-வது பிரிவின்படி, ஜமீந்தார் தமது மேல்வார பாத்தியத்தை மற்றொருவருக்கு விலைக்கு விற்றால் (மேற்படி பிரிவின்படி) விலைக்கு வாங்குபவர் அடையும் உரிமை என்ன? சாசுவத செட்ல்மென்ட் காலத்தில் நிரந்தரமாக முடிவு செய்யப்பட்ட வரிவிகிதங்களை உயர்த்தக்கூடிய ஏகபோக உரிமையல்ல. தமது இஷ்டப்படி வரியை உயர்த்தும் உரிமையை விலைக்கு வாங்கினவர் அடைந்தார் என்றால், முதலாவது அவருக்குச் செய்த விற்பனை ஒழுங்கானதாகவும் சட்டரீதியாய்ச் செல்லக்கூடியதாகவும் இருக்கவேண்டும். ஆனால், அத்தகைய மாற்றமோ, விற்பனையோ, மகம்மதிய சட்டங்களுக்காவது, ஹிந்து சட்டங்களுக்காவது, அல்லது பிரிடிஷ் அரசாங்க ரெகுலேஷன்களுக்காவது, விரோதமாயிருந்தால் செல்லாது என்று 8-வது பிரிவில் குறிக்கப்பட்டிருக்கிறது.

இந்த உதாரணத்தில், விற்பனையாலோ, மற்ற வகையிலோ, ஜமீனைப்பெற்றவர், குடியானவர்களிடமிருந்து அதிக வசூல் செய்ய தமக்கு உரிமையிருக்கிறதென்று பாத்தியம் கொண்டாடுவாரானால், விற்பனையாலோ, மற்ற வகையாலோ ஏற்பட்ட ஜமீன் மாற்றம் சட்டப்படி செல்லாததாகும். ஏனெனில், அது வரி உயர்த்தல்களை நிராகரித்துள்ள, 1802-வது வருஷத்திய XXX-வது ரெகுலேஷன் விதிகளுக்கு விரோதமானது.

இம்மாதிரியாக, 3, 8, 14, பிரிவுகளைக் கூட்டிப்படிப்போமாகில், ஜமீந்தாருக்காவது, அவரிடமிருந்து ஜமீனை விலைக்கு வாங்கினவருக்காவது வரிகளை உயர்த்துவதற்கு யாதொரு அதிகாரமும் இல்லை யென்பது தெளிவில் விளங்கும். 1802-வது வருஷத்திய XXX-வது ரெகுலேஷன்படி வரி உயர்த்தல்கள் நியாயமற்றதாகவும், தண்டிக்கத் தகுந்ததாகவும் இருக்கும்வரை இதுவே ஸ்திரமான விதி.

கர்ணத்தை நியமிப்பதற்கு ஜமீன்தாருக்கு அதிகாரம் உண்டு. விலக்கமுடியாது. இதனின்று நில உரிமை ஜமீன்தாருக்குச் சொந்தமானதல்லவென்பது விளங்கும்.

நில வுரிமை, ஜமீந்தாருக்கு சொந்தமானதல்ல என்பதற்கு, ரெகுலேஷனின் 11-வது பிரிவு மற்றொரு ருஜுவாகும். இப்பிரிவின்படி, நியமிக்கவேண்டிய கர்ணத்தின் பெயரை ஜமீந்தார் தெரிவிக்கலாம். ஆனால் கர்ணத்தை விலக்குவதற்கு ஜமீந்தாருக்கு அதிகாரம் கிடையாது. ஆங்கில முறைப்படி, ஜமீந்தார் நிலத்தின், பூரண சொந்தக்காரராயிருந்தால், தமது இஷ்டப்படி, ஒரு சிப்பந்தியை நியமிக்கவும், நீக்கவும் அதிகாரம் இருக்கும். இது சாதாரணமாக நடக்கக்கூடியது. ஆனால் கர்ணத்தை விலக்கும் அதிகாரம் ஜமீந்தாருக்குக் கொடுக்கப்படவில்லை. ஆதலால் மேல்வார உரிமைக்குமட்டும், ஜமீந்தார், சொந்தக்காரர். அதுகூட பல நிபந்தனைகளுக்கு உட்பட்டது. ஏனெனில் குடியானவனே நிலத்தை ஆண்டு அனுபவித்து வருகிறபடியால் என்க.

ஜமீனின் ஒரு பகுதி விற்கப்பட்டாலும், சாசுவத செட்டில்மெண்ட் காலத்தில் ஏற்படுத்தப்பட்ட வரி நிர்மாணத்தை ஆதாரமாகக்கொண்டே விற்கப்பட்ட பகுதிக்கும் சுவு செய்யப்பட்டது.

ஜமீனில் ஒரு பகுதி, பேஷ்கஷ் தொகை பாக்கிக்காவது, கடனைத் தீர்ப்பதற்காவது, கிரயத்திற்காவது, தானமாகவாவது, விற்கப்படும்பொழுதும், அல்லது மாற்றப்படும்பொழுதும், ஜமீன் முழுவதைப் பற்றியும் உண்மையான சரியான கணக்குகளை ஜமீந்தார் சர்க்காருக்கு அனுப்பவேண்டுமென்று 9-வது பிரிவில் விதிக்கப்பட்டிருக்கிறது. ஜமீனில் ஒரு பாகம் பிரிக்கப்பட்டு மற்றொருவருக்கு மாற்றப்படும்பொழுது, அப்படி மாற்றப்பட்ட பாகம், என்ன பேஷ்கஷை செலுத்தவேண்டுமென்பதைக் குறிக்கும் 9-வது பிரிவின், 2-வது உட்பிரிவு விஷய முழுவதையும் தெளிவாகவும் சுருக்கமாகவும் தீர்மானித்துவிடுகிறது. வெகு சாதாரணமாக நிகழ்வதின்படி, ஜமீனில் ஒரு பாகம் மற்றொருவருக்கு மாற்றப்படும்பொழுது, அவ்வாறு மாற்றப்பட்ட பாகம் செலுத்தவேண்டிய பேஷ்கஷ் தொகை எந்த ஆதாரத்தின்மேல் முடிவு செய்யப்படுகிறது ? மாற்றப்படும் காலத்தில், ஜமீனில் ஒரு பாகம் (மாற்றப்படும் பாகம்) என்ன பெறுமோ அதை ஆதாரமாகக் கொண்டே செலுத்தவேண்டிய பேஷ்கஷ் தொகை நிர்ணயம் செய்யப்பட வேண்டுமென்று சர்க்கார் சொல்லமுடியாது. சாசுவத செட்டில்மெண்ட் காலத்தில் என்ன ஆதாரத்தின் மீது பேஷ்கஷ் தீர்மானம் செய்யப்பட்டதோ, அதை ஒட்டியே இச்சந்தர்ப்பத்திலும், பேஷ்கஷ் தொகை முடிவு செய்யப்படவேண்டும். சாஸ்வத செட்டில்மெண்ட் காலத்தைப் பார்க்கினும், தற்பொழுது குடியானவனுக்கு அதிக லாபம் வருகிறதென்று சொல்லி, சர்க்கார் பேஷ்கஷ் தொகையை உயர்த்தமுடியாது. அதிகமான பேஷ்கஷை சர்க்கார் கேட்க முடியாதென்றால், சர்க்கார் ஏஜண்டாகிய ஜமீந்தாரும், குடியானவனிடம் அதிக வரியைக் கேட்க முடியாது. சர்க்காராவது, ஜமீந்தாராவது அதிகமான பேஷ்கஷையாவது, வரியையாவது கேட்க முடியாமலிருக்கும்பொழுது ஜமீனை, விலைக்கோ, மற்றவகையிலோ பெற்றவருக்கு, வரியை உயர்த்துவதற்கு அதிகாரம் இல்லை யென்பது சொல்லாமலே விளங்கும். இத்தகைய சந்தர்ப்பங்களில் பேஷ்கஷ் தொகை எவ்வாறு நிர்ணயம் செய்யப்படவேண்டுமென்பது 9-வது பிரிவின் 2-வது உட் பிரிவில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது :—

"சாசுவத செட்டில்மெண்ட் காலத்தில், மொத்த ஜமீனுடைய மதிப்பின்மேல் ஏற்படுத்தப்பட்ட மொத்த நிரந்தர பேஷ்கஷ் தொகையின் உரிய பாகமே, பிரிக்கப்பட்ட ஜமீனின் பாகத்தின்மேல் விதிக்கப்பட வேண்டும்."

"மொத்த நிரந்தர பேஷ்கஷ் தொகை" என்ற வார்த்தைகளை கவனிக்கவும். ஜமீந்தார்கள் கூறுவது போல் ஜம்மாவில் ஒரு பாகம் அல்ல.

சட்டத்தால் அமைக்கப்பட்ட விதி இதுவே. இதற்கு மாறாக சர்க்காராவது, ஜமீந்தாராவது குடியானவனாவது நடக்கமுடியாது. ஆகையால்தான், ஒரு ஜமீனுடைய பாகங்கள், மற்றவர்களுக்கு விற்கப்பட்டபொழுதும், கோர்ட் ஏலத்தில் விடப்பட்டபொழுதும், பேஷ்கஷ் பாக்கிக்காக பராதீனம் செய்யப்பட்டபொழுதும், யாதொரு சிக்கலாவது இக்கட்டாவது ஏற்படவில்லை.

ஜமீந்தார்களுக்கு சர்க்காரால் கொடுக்கப்பட்ட உடைமை-உரிமை என்பது மேல்வார பாத்தியத்தை குறிக்கும் கண்டிதமாக வரையறை செய்யப்பட்ட உரிமையைத் தவிர, பூரண நில உரிமை அல்லவென்பது 6, 7 பிரிவுகளால் விளக்கமாக தெரிகிறது.

6-வது பிரிவின்படி, ஏற்படுத்தப்பட்ட பேஷ்கஷை, யாதொரு வஜாவும் இல்லாமல், கொடுக்கவேண்டுமென்பதை தெரிவிக்கிறது. அவ்வாறு செய்யத் தவறினால், 7-வது பிரிவின்படி, ஜமீந்தாருடைய சொந்தச் சொத்து, முதலில் கைப்பற்றப்படும்; ஜமீந்தாருக்கு நில உரிமையை கொடுக்கவேண்டுமென்று சர்க்கார் உத்தேசித்திருந்தால், இந்த விதியை ஏற்படுத்தியிருக்கமாட்டார்கள். முதலாவதாக, ஜமீந்தாருடைய சொந்தச்சொத்தை கைப்பற்றப்படவேண்டும். பிறகு, அவருடைய மேல்வார உரிமை **(Proprietary Right)** விற்பனை செய்யப்படவேண்டும்.

இவ்வாறாக, "நிலத்திற்கு உடையவர்," என்ற வார்த்தைகள், 1802-ஆண்டு XXV-வது ரெகுலேஷனில், இந்திய அர்த்தத்துடன் உபயோகப்படுத்தப்பட்டிருக்கின்றன. இந்த விளக்கத்திற்கு ஆதாரமாக, "ராஜப்பிரதிநிதியின் அரசாங்க தஸ்தாவேஜிகளின் சாராம்சங்களிலிருந்து (1926-ம் வருஷத்தில் இந்திய அரசாங்கத்தின் பத்திர அதிகாரியாயிருந்த சர். ஜார்ஜ் பாரஸ்ட், சி.ஐ.இ. எழுதியது) சில வாசகங்களை கீழே குறிக்கின்றோம் :—

ராஜப் பிரதிநிதியின் சர்க்கார் பத்திரங்களின் சாராம்சங்கள்.

"சட்டத்தின் உண்மையான கருத்தையும், நல்லெண்ணங்களையும், செய்கை முறையிற் சாதிக்கும் பொருட்டு, 1786-ம் ஆண்டு ஏப்ரல் மீ 12உ யில், விஸ்தாரமாய ஒரு அறிக்கையை, கோர்ட் ஆப் டைரக்டர்ஸ் அனுப்பினார்கள். ஜமீன்தார்கள், "பூமிக்கு அதிபதிகள்" என்றும், "நிலத்திற்குச் சொந்தக்காரர்கள்" என்றும், காரன்வாலிஸ் பிரபு பேசினார். அவ்வார்த்தைகளை, அவர், ஷோர் துரையைப்போல, இந்திய அர்த்தத்தில் உபயோகப்படுத்தினார்.

வரையறை செய்யப்பட்ட ஒரு உரிமையை அவர் அங்கீகரித்தாரேயொழிய, பூரண உரிமையை அங்கீகரிக்கவில்லை. அவருடைய கருத்து, நிரந்தரமாக முடிவு செய்யப்பட்ட மிதமான பேஷ்கஷை ஜமீன்தார் செலுத்திவரவேண்டும்; குடியானவர்களுடைய உரிமைகளும், பாத்தியதைகளும், பாதுகாக்கப்பட்டு, அவர்கள் பரம்பரைக் குடியானவர்கள் ஆகவேண்டும், என்பதே."

சர்க்கார் பத்திரங்களும் கலெக்டர்களுக்கு விடுத்த குறிப்புகளும் (1799.)

ஆதிகாலத்திலிருந்தே, நிலவரி நிர்மாணம் நிரந்தரமாக முடிவு செய்யப்படவில்லையென்றும், ஆசியாக் கண்ட அரசாங்கங்களின் வழக்கப்படி, நிர்ணயமான தத்துவங்கள் இல்லாமல், கூடுவதும், குறைவதுமாயிருந்ததென்றும், அதனால் நியாயமான நிலவரியைக் குறித்து ஜமீன்தார்களுக்காவது, குடியானவர்களுக்காவது, யாதொரு நிஷ்கரிணையும் இல்லையென்றும், 1802-ம் ஆண்டு XXV-வது ரெகுலேஷன் பீடிகையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. நிலவரி வருமானத்தை அதிகப்படுத்துவதற்கு, மகம்மதிய அரசாங்கங்களும், ஹிந்து அரசாங்கங்களும், அடிக்கடி விசாரணை நடத்தி வந்தார்கள் என்றும்; அவ்வப்போது நிலவரி வருமானத்தை அதிகப்படுத்துவது, மேற்படி அரசாங்கங்களின் வழக்கமாயிருந்ததென்றும், அதற்காக, ஏதாவது சிறு குற்றம் செய்தாலும், பழைய ஜமீன்தார்கள் விலக்கப்பட்டு, புது ஜமீன்தார்கள் நியமிக்கப்பட்டார்கள் என்றும், அதன் காரணமாக ஜமீன்தார் பதவி என்பது, நிலையற்றதாக யிருந்ததென்றும், பீடிகையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது. அனுபோக முறையின் ஸ்திரமற்ற தன்மையை நீக்குவதற்கும், சர்க்காருக்கு; ஜமீன்தார் அல்லது குடியானவன் செலுத்தவேண்டிய வரித்தொகையை நிஷ்கரிணை செய்வதற்கும், சர்க்கார் தீர்மானித்திருக்கிறார் என்றும், பீடிக்கையின் இரண்டாவது பாகத்தில் தெரிவிக்கப்படிருக்கின்றது. மசோதாவை தயாரிக்க விரும்பியபொழுது, கவர்னர், (தமது அந்தரங்க சபையோடு), இவ்வார்த்தைகளை தீர்மானிக்கவில்லை. மேலே குறிக்கப்பட்ட ஒவ்வொரு வாசகமும், அநேக வருஷங்களுக்கு முன்பே பரிசீலனம் செய்யப்பட்டவை. கலெக்டர்களுக்கு அனுப்பிய குறிப்புகளில் அவைகள் அடங்கியிருக்கின்றன. சென்னை ராஜதானியில் சாசுவத செட்டில்மெண்டை ஏற்படுத்த விரும்பியபொழுது, கலெக்டர்கள் தங்கள் தீர்மானங்களை அனுப்பவேண்டுமென்று உத்திரவு இடப்பட்டதை நாம் முன்னறே அறிவோம். 1802-ம் வருஷத்திய XXV-வது சாசுவத செட்டில்மெண்ட் ரெகுலேஷனின் பீடிகையில் கண்டுள்ள அம்சங்கள் முழுவதும், கலெக்டர்களுக்கு அனுப்பிய குறிப்புகளின் (1799-ம் ஆண்டு அக்டோபர்மீ 15உ) 4, 5, 6, 7, 8, 10 விதிகளில் அடங்கியிருக்கின்றன. சாசுவத செட்டில்மெண்டும், மிதமான நிலவரி வருமானம் சாசுவதமாய் ஸ்தாபிக்கப்படுவதற்கும் காரணமாயிருந்த எல்லா சந்தர்ப்பங்களும், மேற்படி விதிகளால் விஸ்தாரமாக விளக்கப்பட்டிருக்கின்றன. அவைகள் பின்வருமாறு :—

இதற்கு முன்னிருந்த நிலைவரமற்ற நிலவரி முறையை சர்க்கார் மாற்றி, அனுபோகத்தையும், வரி விகிதத்தையும், நிரந்தரமாக தீர்மானித்ததின் நோக்கமென்னவென்பதை 8-வது விதி விரிவாக கூறுகிறது. தங்களுக்கே நிரந்தரமான வரி வருமானத்தை ஸ்திரப்படுத்திக் கொள்வதுமட்டும், சாசுவத செட்டில்மெண்டால் அரசாங்கத்தார் விரும்பிய நோக்கமல்லவென்றும், ஆனால் நிலத்தில் சம்பந்தங்கொண்டவர்களுடைய உரிமைகளை பாதுகாக்கவேண்டுமென்பதும், சர்க்காருக்கு சேரவேண்டிய நிலவரியை வரையறை செய்யவேண்டுமென்பதும், ஆகிய இவைகளே அரசாங்கத்தின் முக்கிய நோக்கம் என்றும், மேற்படி விதியில் பின்னும் கூறப்பட்டிருக்கிறது. சாசுவத செட்டில்மெண்டைப்பற்றி, கோர்ட் ஆவ் டைரக்டர்ஸ் தெரிவித்த அபிப்பிராயங்கள் 10-வது விதியில் காணப்படுகின்றன. சர்க்காருக்குச் செல்லவேண்டிய நிலவரி வருமானத்தை பொருத்தமட்டில், சாசுவத செட்டில்மெண்டால் ஏற்படக்கூடிய லாப நஷ்டத்தைக் கணக்கெடுத்தார்கள். நிலவரி வருமானத்திற்கு போதிய உத்திரவாதமும் பொறுப்பும் இருக்கிறதாவென்பதைப்பற்றி அவர்கள் வெகு ஜாக்கிரதையாக இருந்தார்கள். வரி வசூல் செய்யும் உரிமையை ஜமீன்தார்களுக்கு மாற்றினார்கள். ஜமீன்தார்களுடைய நிர்வாகத்தினின்றும் ஏற்படக்கூடிய நஷ்டத்தையும் குறைகளையும்கூட கணக்கிலெடுத்துக் கொண்டார்கள். இத்தகைய பிரமாதங்களுக்கீடாக நிலங்களின்மீது தாங்கள் விதிக்கப் போகும் ஜம்மா தொகை, மிதமானதாகவும், ஜமீன்தாருக்கும், குடியானவர்களுக்கும், சரியான ஈவுள்ளதாக இருக்குமென்றும், ஏற்படும் நஷ்டமோ, குறைவுகளோ வெறு சூனுவாய் போய்விடுமென்றும், அவர்கள் நினைத்தார்கள். கெட்ட பர்வங்களில் ஏற்படும் நஷ்டமாவது, குறைவுகளாவது, நல்ல வருஷங்களின் விளைச்சலால், சரிசெய்து விடப்படுமென்றும் அவர்கள் கருதினார்கள். இதனின்று, நிலத்தை சாகுபடி செய்யும் குடியானவர்களுக்கு தகுந்த உரிமையை கொடுக்கவேண்டுமென்று சர்க்கார் விரும்பியது என்பது, தெளிவாக புலப்படுகிறது. அவ்விதி மேலும் விளக்கமாக தெரிவிப்பதென்ன வென்றால் :—

" நிலத்தை சாகுபடி செய்வதில் ஈடுபட்டுள்ள குடியானவர்களுக்கு தக்க உரிமை வழங்கப்படவேண்டும். அதைப்போன்றே, வரிவசூல் செய்வதற்கு நியமிக்கப்பட்ட அமீல்கள், வரி குத்தகைகாரர்கள் முதலிய அதிகாரிகளின் உபத்திரவங்களிலிருந்தும், கொடுமைகளிலிருந்தும் இவர்களை (குடியானவர்களை) விடுவிப்பதும் இந்த ஏற்பாட்டின் நோக்கம். வரிகள் இஷ்டப்படி மாற்றப்படுவதால் குடியானவர்களுடைய நிம்மதியும் திருப்தியும் கெட்டுவிடுகின்றது. நிலச்சுவான்தார்கள் சர்க்காருக்கு நிலைவரமற்ற முறையில் பேஷ்கஷ் தொகை செலுத்தி வந்தால், அவர்கள் குடியானவர்களுக்கு என்ன சகாயம் அல்லது ஆதரவு அளிக்கக்கூடும். வியாபாரம் செய்பவர்களுடைய சுபிக்ஷத்தைப் பற்றியும், நிலங்களின் விளைச்சலுக்கு தகுந்தாற்போலவே, வியாபாரமும், கைத்தொழிலும் விருத்தியடையுமென்பதைப்பற்றியும், 8-வது உட்பிரிவு வெகு தெளிவாக அறிவிக்கிறது. தேசத்தின் வியாபாரத்தையாவது கைத்தொழிலையாவது ஒழிக்கவேண்டுமென்கிற உத்தேசம், மேற்படி ரெகுலேஷன்களை ஏற்படுத்தியவர்களுக்கு கொஞ்சமும் கிடையாது.

கீழ் கண்ட விதிகளை ஆராய்வோமாகில், 1802-ம் ஆண்டுத்திய XXV, XXX, ரெகுலேஷன்களின் பீடிகைகளுடைய பூர்ண அர்த்தம் நன்கு விளங்கும். அவைகள் பின் வருமாறு :—

விதி 4.—தற்போழுது, ஜமீன்தார்கள் தங்கள் ஜமீன்களை அனுபவித்துவரும் முறையிலிருந்து நில உரிமை தெளிவாகத் தெரியப்படவில்லை. அது பரம்பரை உடமையாக கருதப்படுகிறது. ஆனால், அது சர்க்காருக்கு செலுத்தவேண்டிய தொகை நிலைவரமற்றதாகவும், விதி விதரணையற்றதாகவும், இருக்கிறது. செலுத்தவேண்டிய கிஸ்தி தொகையில் ஒரு சிறு பகுதி தவறிவிட்டாலும், சர்க்கார் விருப்பப்படி ஜமீன் முழுவதும் கைப்பற்றப்படுகிறது. இவ்வாறு பல ஜமீன்கள் கைப்பற்றப்பட்டு ஜமீனதார்கள் உபகாரச்சம்பளம் பெற்று வருவதற்கு அநேக உதாரணங்களிருக்கின்றன. பேஷ்கஷ் பாக்கிக்காக, கலெக்டரால் நிர்வகிக்கப்படும் ஜமீன்கள், கடன் தீர்ந்து, திரும்பி ஜமீன்தார்களுக்கு கொடுக்கப்படுவதும் என்பதும் அபூர்வ விஷயம். இப்பொழுது பல ஜமீன்தார்கள், மேலே விவரிக்கப்பட்ட சங்கடத்திலிருக்கிறார்கள்.

விதி 5.—இம்முறை அரசாங்கத்திற்கு, ஏமாற்றந்தருவதாயும், பொது ஜன நன்மைக்கு ஒவ்வாததாயும், இருக்கின்றபடியால், வங்காள மாகாணத்தில் சில வருஷங்களுக்குமுன், ஸ்தாபிக்கப்பட்ட சீர் திருத்தத்தை இங்கும் ஸ்தாபிக்கவேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டிருக்கின்றது. அதன்படி,

தகுந்த யோக்கியதா பாத்தியதைகளுடைய ஜமீன்தார்களும், மற்ற நிலச்சுவான்தார்களும், தங்கள் எஸ்டேட்களிலுள்ள நிலங்களுக்கு உடைமையாளர்களாக செய்யப்படுவார்கள். பின்னர் தெரிவிக்கப்படும் நிபந்தனைகளுக்கு அவர்கள் உட்பட்டு நடக்கவேண்டும். அவர்கள் உரிமைகள், மேற்படி நிபந்தனைகளுக்குச் சற்றும் விலகாமல் கிரமமாக ஸ்தாபிகக்ப்பட்ட கோர்ட்டுகளால் ஸ்திரப்படுத்தப்படும். மேற்படி சீர் திருத்தங்களின் கொள்கைகளும், பின்னர், விளக்கி கூறப்படும்.

விதி 6.—தற்பொழுது நிகழ்வதைப்போலில்லாமல், நிலத்தை உடையவனுக்கு, நிலத்தால் யாதொரு நஷ்டமும், கேவலமும், ஏற்படாவிட்டால் வரையறை செய்யப்பட்ட சர்க்கார் வரியை ஒழுங்காகச் செலுத்தப்பட்டுவரும்வரை, நில அனுபோகம் ஸ்திரமாக இருக்குமானால், நீதிஸ்தலங்களால் நிறைவேற்றபடும் சட்டங்களுக்கிணங்க, தாங்கள் நடந்துகொள்ளும் வரை, தங்களுடைய உரிமைகளும், சொத்தும், எவராலும் பாதிக்கப்படாமலிருக்குமானால், தங்களையும் எவரும் ஹிம்சிக்காமலிருக்கமுடியுமானால், நிலமானது யாவராலும், விரும்பப்பட்டு பிற வழிகளில் செலவழிக்கப்படும் பணம், நில அபிவிருத்திக்காக உபயோகப்படுத்தப்படும்.

விதி 7.—மேற்கூறிய லக்ஷியத்தை அடைவதற்கு சர்க்காருக்குச் செல்லவேண்டிய நிலவரி வருமானம், வரையறை செய்யப்படவேண்டும். அதனால் நிலத்தின் மதிப்பு அதிகரிக்கும். ஒவ்வொரு ஜமீனுடைய, ஆஸ்தி, பொருளாதாரம், இவைகளுக்குத் தகுந்தாற்போல் பேஷ்கஷ் தொகை நிரந்தரமாக முடிவு செய்யப்படும். இப்பொழுதுள்ள வருமானத்தையும், புதிய ஏற்பாட்டின்படி இனிமேல் வரக்கூடிய வருமானததையும், ஒப்பிட்டுப்பார்த்து, அதற்கிணங்க ஜம்மா தொகை சாசுவதமாக தீர்மானிக்கப்படும்.

பிரிவு 8.—சர்க்கார் வரி ஒருபுறமிருக்க, பிரஜைகளுடைய பிரத்தியேக உரிமைகளை நிர்ணயம் செய்து பாதுகாப்பதுகூட, அரசாங்கத்தின் நோக்கமாகும. நிலவரி வரையறை செய்யப்படுதலே விவசாயத்திலீடுபட்டிருப்பவர்களுக்கு ஒரு பெரிய உரிமையை வழங்குவதாகும். அதைப் போலவே வரி வசூல் செய்யும், அமீல்கள், வரி குத்தகைக்காரர்கள் முதலிய அதிகாரிகளின் உபத்திரவங்களிலிருந்தும், கொடுமைகளிலிருந்தும், குடியானவர்களை இம்முறை விடுவிக்கிறது. இவ்வேற்பாடு குடியானவர்களுக்கு நிம்மதியையும், திருப்தியையும் தருகிறது. ஏனெனில் ஜமீன்தார் சர்க்காருக்கு செலுத்தவேண்டிய தொகை நிஷ்கரணையில்லாமலிருந்தால், அவர்கள் குடியானவர்களுக்கு, சகாயமோ ஆதரவோ அளிக்கமுடியாது. வியாபாரம் செய்பவர்களுடைய சுபிக்ஷமும், புதிய ஏற்பாட்டின் மீதே ஆதாரப்பட்டிருக்கிறது. ஏனெனில், நிலங்களின் விளைச்சலுக்கு தகுந்தாற்போலவே வியாபாரமும், கைத்தொழிலும், முன்னேற்றம் அடையும். அதனால் நிலத்தை உடையவர்களுக்கு கௌரவமும், செல்வாக்கும், உண்டாகும். நிலத்தின் மதிப்பும், அதிகரிக்கும். புதிய ஏற்பாட்டால் நாம் ஜனங்களுக்கு, அமைதியும், ஸ்திரமும் வாய்ந்த பரிபாலனத்தை நிரந்தரமாக கொடுக்க முடியும். இதற்கு முன்னிருந்த பரிபாலனம், தற்காலிகமான ஏற்பாடுகளின் மேலும், தனிப்பட்ட அதிகாரிகளின் குண ஸ்வபாவங்களின் மீதும் ஆதாரப்பட்டிருந்தது.

விதி 9.—வங்காளத்தில் காலக்கிரமத்தில், அமைக்கப்பட்ட ஒழுங்கு முறையான பரிபாலனம், இப்பிரதேசங்களிலுள்ள ஜமீன்தார்களுக்கும், குடியானவர்களுக்கும, தெரியாத விஷயம். ஆனால், நில அனுபோக ஸ்திரத்தையும், அதனால் ஏற்படும் பல முக்கிய நன்மைகளையும், விரைவில் உணர்ந்து பாராட்டுவார்கள். தாங்கள் அடைந்த நன்மைகளுக்கு காரணம் என்னவென்பதை அவர்கள் உடனே அறியக்கூடாமலிருக்கலாம். அது பரவாயில்லை.

விதி 10.—வங்காளத்தில் ஏற்பட்ட சாசுவத செட்டில்மெண்டைப்பற்றி, கோர்ட் ஆவ் டைரக்டர்ஸ், தெரிவித்த அபிப்பிராயங்களை நீங்கள் அறியுமாறு கீழே குறிக்கின்றோம் அதாவது : "நாட்டின் தற்கால சக்திக்கேற்றவாறு, நிலவரி நிரந்தரமாக முடிவு செய்யப்படுதல் நன்மை விளைக்குமென்றும், நிலத்தின் ஸ்திர அனுபோகமும், அதனால் ஏற்படும் நிச்சயமான நன்மைகளும், கைத்தொழிலுக்கு ஊக்கமளிக்குமென்றும், விவசாயத்தை அபிவிருத்தி செய்யுமென்றும், நாணயத்தை ஸ்தாபிக்குமென்றும், நாட்டின் சுபிக்ஷத்தையும் செல்வத்தையும் பெருக்குமென்றும், தக்க காரணங்களால் நிலை நாட்டப்பட்டிருக்கின்றது. அதனால் நிலத்தின் விளைச்சலில் பிரமாதமான குறைவு ஒன்றும் நிரந்தரமாக உண்டாகாது என்ற உறுதியும், ஏற்படுகிறது. ஏதோ சில ஜமீன்தார்களின் ஒழுங்கீனமான நிர்வாகத்தால் அவ்வப்பொழுது சில குறைகள் ஏறபடலாம். ஆனால், இப்பொழுது இருப்பதைவிட, நிலங்களின் விளைச்சல், நிரந்தரமாக குறைந்துவிடுமென்று ஊகிப்பதற்கு இடமில்லை. மேலும், இப்பொழுது விதிக்கப்பட்டுள்ள ஜம்மா தொகை மிதமானதென்றும், ஒழுங்காக ஈவுசெய்யப்பட்டதென்றும், நாங்கள் திடமாக நம்புகிறோம். மழை பெய்யாததாலும், வெள்ளத்தாலும், மற்ற பிரமாதங்களாலும், நஷ்டங்கள் ஏற்பட்டாலும், அவைகளை சரி செய்துகொள்ள நிலங்களுக்கு போதிய சக்தியும், உத்திரவாதமும், இருக்கும். இது சம்பந்தமான ஏற்பாடு பழைய முறையினும் இருக்கிறது. ஆனால் அது பொதுவாக கம்பெனியின் பொறுப்பு. இனிமேல், அது மாறிவிடும், ஏனெனில், உடைமை உரிமையால் ஏற்பட்ட நன்மைகளையும், ஸ்திரமான லாபங்களையும் அடைந்த ஜமீன்தார்களுக்கு உண்டான பழுதுகளை செம்மை செய்துகொள்வதற்கு போதிய வசதிகளும் ஆதாரங்களும் இருக்கும். பிரதிகூலமான பருவங்களில் உண்டாகும் குறைவுகள் நல்ல வருஷங்களின் விளைச்சலால் சரி செய்துவிடப்படும். இவ்வாறாக சர்க்காருக்குச் செல்லவேண்டிய தொகை நிரந்தரமாக இருக்கும்பொழுது, நிலத்திலீடுபட்டவர்களின் லாபங்கள் பெருகிக்கொண்டே செல்லும். இந்த முன்னேற்ற வேளையில், நிலத்தின் மதிப்பு படிப்படியாக அதிகரிக்கும். நிலத்தின் சொந்தக்காரருக்கு பெருமையுண்டாகும் ; புதியமுறையும் அதிக பலம் பெறும் ; இத்தகைய நலங்கள் நிரந்தரமாக முடிவு செய்யப்பட்ட நியாயமான நிலவரி ஏற்பாட்டின் நிச்சயமான பலன்கள் என்பது யாவரும் எளிதில் அறியக்கூடிய விஷயம்."

இதற்கடுத்தாற்போல், என்ன கருத்துடன், அரசாங்கத்தார், நில அனுபவத்தை ஸ்திரப்படுத்த விரும்பினார்கள் என்பதைப்பற்றியும், எதற்காக வரி விகிதத்தை நிரந்தரமாக தீர்மானிதார்கள் என்பதைப்பற்றியும் அதனால் குடியானவன் அடையும் நன்மை என்னவென்பதைப்பற்றியும் ஆராய்வோம்.

1802-ம் வருஷத்திய XXV ரெகுலேஷனின் 14-வது பிரிவின்படி, வரி விகிதங்கள் நிரந்தரமாக விதிக்கப்படவேண்டும் ; குடியானவர்கள் செலுத்தும் தொகைகளுக்கு, ஜமீன்தார் ரசீது கொடுக்கவேண்டும். 1802-ம் வருஷத்திய XXX-வது ரெகுலேஷனின் 7, 9-வது பிரிவுகளின்படி, சாசுவத செட்டில்மெண்டிற்குமுன் ஏற்படுத்தப்பட்ட வரி, எவ்வகையினாலும் உயர்த்தப்படக்கூடாது, நியாயமற்ற முறையில் வசூலிக்கப்பட்ட தொகைகளுக்கு, ஜமீன்தார் தண்டிக்கப்படுவார் ; குடியானவர்களுக்கு நஷ்ட ஈடு கூட கொடுக்க நேரிடும்.

ஜமீன்தார்களும், அவர்களுடைய ஏஜெண்டுகளும், குடியானவர்களிடம், கண்ட வரிகளையெல்லாம் இஷ்டப்படி வசூல் செய்து, நிலத்தை அபிவிருத்தி செய்வதற்காவது, தங்கள் குடும்பங்களை போஷிப்பதற்காவது குடியானவர்களுக்கு யாதொரு மிச்சமாவது, லாபமாவது இல்லாமற் செய்தல்; ஆகிய இவ்வக்கிரமங்கள் கண்டிக்கப்பட்டன. வரி எதற்காக, நிரந்தரமாகத் தீர்மானிக்கப்பட்டது: அதனால் குடியானவன் அடையும் நன்மை என்னவென்பது, கலெக்டர்களுக்கு அனுப்பிய குறிப்புகளின், 37-வது பிரிவில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. அது பின் வருமாறு —

விதி 37.—காலக்கிரமத்தில், ஜமீன்தார்களும், தாலூக்தாரர்களும், வரிக்குத்தகைக்காரர்களும், குடியானவர்களும், கீழே தெரிவிக்கப்படுவதைப்போன்ற ஒப்பந்தங்களைச் செய்துகொள்ளுதல், பரஸ்பர நன்மையை உண்டாக்கும் என்று நம்பப்படுகிறது. அதாவது குறிப்பிட்ட ஒரு நில விஸ்தீர்ணத்திற்கு, வரையறை செய்யப்பட்ட ஒரு தொகையை வரியாக ஏற்படுத்துதல்; எந்தத் தானியத்தை சாகுபடி செய்தால் அதிக லாபம்வரும் என்று குடியானவன் நினைக்கிறானோ, அந்த தானியத்தையே குடியானவன் பயிர் செய்யும்படி விட்டுவிடுதல்; அதற்கிடையே, எந்த முகாந்தரத்தைக் கொண்டாவது குடியானவர்களிடம் புதிய வரிகள் வசூல் செய்யாதபடி தடுத்தல். அவ்வாறு எவராவது புதிய வரிகள் வசூல் செய்தால், அவருக்கு பெருத்த அபராதம் விதித்தல். இது சம்பந்தமாக, நீங்கள் ஒரு விஷயத்தைக் கவனிக்கவேண்டும். இதுவரைக்குமே குடியானர்வகள் பலவித வரித்தொல்லைகளால் அதிக கஷ்டப்படுகிறார்கள். ஆதலால், குடியானவர்களின் சம்மதத்தின்பேரில், ஜமீன்தார் வரி ஏற்பாட்டை புதிதாகச் செய்துகொண்டு, செலுத்தவேண்டிய வரி அம்ஸங்களையெல்லாம் திரட்டி ஒரு தொகையாகக் குறிப்பிடுதல் விரும்பத்தக்கது. அப்படிச் செய்தால் வரியமைப்பில் சிக்கல் ஏற்படாது. ஜமீன்தாருக்கும் குடியானவர்களுக்கும் உண்டாகும் பல அசௌகரியங்களும் நீக்கப்படும்.

மேலே தெரிவிக்கப்பட்ட பிரிவு, வெளிப்படையான எளிய நடையில் எழுதப்படுகிறது. அது கூறுவது என்னவென்றால்: வரி விகிதம் நிரந்தரமாகத் தீர்மானிக்கப்படுவதால், குடியானவன் அடையும் ஒரு நன்மை: எந்த தானியத்தை சாகுபடி செய்தால் அதிக லாபம் வரும் என்று குடியனவனுக்குப்படுகிறதோ, அதையே குடியானவன் சாகுபடி செய்யலாம். ஆனால், அதற்காக அதிகமான வரியை வசூல் செய்வதற்கு ஜமீன்தாருக்கு அதிகாரம் இல்லை என்பதே. சில ஜமீன்களில், பயிர்வாரியாக, வரி விதிக்கப்படுகிறதென்றும்; சில ஜமீன்களில் தரம்வாரியாக வரி விதிக்கப்படுகிறதென்றும், எங்கள்முன் சாக்ஷியம் கொடுத்தவர்களிற் சிலர் கூறியிருக்கிறார்கள். எப்பொழுது வரி வசூலிப்பார்கள், எந்த முறையில் வரி வசூலிப்பார்கள், எங்கிருந்து வந்து வசூலிப்பார்கள், என்பது யாதொன்றும், குடியானவனுக்குத் தெரியாது. வரி வசூல்க்காரர்கள் வந்தபொழுது, வரி எவ்வளவு அதிகமாகவும் அக்கிரமமாகவும் இருந்தால், அதைத் தீர்ப்பதற்கு, தன்னையும் தன் நிலத்தையும்கூட குடியானவன் அடமானம் செய்ய வேண்டியதாயிருக்கிறது. அநாதிகாலம்தொட்டு குடியானவன் செலுத்தி வரும் நிலவரிக் கடமை ஒருபுறமிருக்க, ஜமீன்தார் கேட்ட பொழுதெல்லாம் "அப்வாப்" என்ற பெயரால் பலவரிகளைச்செலுத்த வேண்டும். 1802-ம் வருஷத்திய XXX-வது ரெகுலேஷன் இத்தகைய வரிகளைக் கண்டித்திருக்கிறது. சாஸ்வத செட்டில்மெண்ட் ஆன இரண்டு வருஷங்களுக்குள், பல வரி அம்சங்கள் ஒருங்கு சேர்த்து, ஒரு தொகையாக பட்டாக்களிலும், முச்சிலிக்கைகளிலும் குறிக்கப்படாவிட்டால், அத்தகைய வரிபாத்தியங்களை, கோர்ட்டுகள் தள்ளிவிடவேண்டும். இது மேற்படி ரெகுலேஷனின் 6-வது பிரிவில் விதிக்கப்பட்டிருக்கிறது. மேலே தெரிவிக்கப்பட்ட 37-வது உட்பிரிவிலும், இதன் சம்பந்தமாக விதிகள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன.

குடியானவனுக்கு ரசீது கொடுக்கவேண்டியதைப்பற்றி விதிகளும்—கொடுக்கத்தவறினால் ஏற்படும் அபராதங்களும் 36-வது விதியில் தெரிவிக்கப்பட்டிருக்கின்றன. அவ்வாசகம் பின்வருமாறு :—.

விதி 36.—ஒவ்வொரு நிலச்சுவான்தாரும், தாலூக்தாரும், வரிக்குத்தகைக்காரரும் அவருடைய ஏஜெண்டுகளும், கீழ்த்தர தாலூக்தார்களிடமிருந்தும், கீழ்த்தர வரிக்குத்தகைக்காரர்களிடமிருந்தும், குடியானவர்களிடமிருந்தும், பிறரிடமிருந்தும் வசூலிக்கும் தொகைகளுக்கு (வரித் தொகை பூராகத் தீர்ந்தவுடன்) ரசீது கொடுக்கவேண்டும். ரசீது கொடுக்கப்படவில்லையென்று குத்தகை அல்லது வரி கொடுத்தவர், ஜில்லா அடலத் கோர்ட்டில் ஸ்தாபிப்பராகில், தாம் செலுத்திய தொகைக்கு இரண்டு மடங்கான தொகை நஷ்ட ஈடாகக் கொடுக்கப்படும். அறுவடை காலத்திற்கேற்பவும், தானிய விற்பனை காலத்திற்கேற்பவும், கீழ்த்தர வரிக்குத்தகைக்காரர்களிடமிருந்தும், குடியானவர்களிடமிருந்தும் வசூலிக்கப்படும் வரித்தவணைகள் ஏற்பாடு செய்யப்படவேண்டும்."

1802-ம் வருஷத்திய XXV-வது ரெகுலேஷனின் 14-வது பிரிவில் குறிக்கப்பட்டுள்ள ரசீதுகளும், ரசீதுகள் கொடுக்க மறுத்தால் அதற்கு அபராதங்களும், 1799-ம் வருஷம் அக்டோபர்மீ 15உக்கு முன்னதாகவே தீர்மானிக்கப்பட்டு, கலெக்டர்கள் குறிப்புகளின் 36-வது விதியில் அமைகைகப்பட்டன. கலெக்டர்கள் குறிப்புகளின் 36-வது பிரிவில் காணப்படும் விதிகளின் நகல்களே, XXV-வது ரெகுலேஷனின் 14-வது பிரிவு; XXX-வது ரெகுலேஷனின் 14-வது பிரிவு.

வரி ஸ்திரம், அனுபோக ஸ்திரம், இவைகள் சம்பந்தமான விதிகள், சாசுவத செட்டில்மெண்ட் பட்டாக்களில் குறிக்கப்படவேண்டும் என்று கூறுகிற 32, 34, 35, சூத்திரங்களைப்பற்றி முன்னரே பேசியுள்ளோம். சாசுவத செட்டில்மெண்ட்டின் நோக்கம் என்ன, பொருள் என்ன, குடியானவனுக்குப் பாதுகாப்பளிக்கின்ற அனுபோக ஸ்திரம், வரி ஸ்திரம், என்ன வென்பதைப் பற்றியும், மேற்படி சூத்திரங்கள் விளக்கிக் கூறுகின்றன. 1802-ம் வருஷத்திய XV, XXX ரெகுலேஷன் பிரிவுகளில் இது சம்பந்தமாக காணப்படும் விஷயங்களெல்லாம், 32, 35, 35 சூத்திரங்களில் காணப்படும் விஷயங்களே. அவைகள் பின்வருமாறு :—

விதி 32.—இந்த பாத்தியதைகள் ஒரு புறமிருக்க சாகுபடி செய்கின்ற குடியானவர்களுக்கு தனியான உரிமைகளும், ஹக்குகளும் உண்டு. அவர்களுக்கு உடன்பாட்டாக நிலத்தில் உரிமையில்லாவிட்டாலும், தங்கள் சக்திக்குத் தகுந்தாற்போல் சாகுபடி செய்து, விளைச்சலின் வழக்கமான ஒரு பாகத்தை சர்க்காருக்கோ, ஜமீன்தாருக்கோ பணமாகவோ, தானியமாகவோ கொடுக்கும் வரை, குடியானவர்களுக்கு நில அனுபோக உரிமை உண்டு.

விதி 33.—சர்க்காருக்கு அல்லது ஜமீன்தாருக்குச் சேரவெண்டிய தொகையை, ஸ்திரப்படுத்துவதற்கு தகுந்த விதிகள் ஏற்படுத்தப்படுமென்றும், அவைகள் நீதிஸ்தலங்களால் நிறைவேற்றப்படும், என்றும், அவைகள் குடியானவர்களுக்குங்கூட பாதுகாப்பளிக்குமென்றும், முன்னரே தெரிவிக்கப்பட்டிருக்கிறது. ஆனால், விவகார நிர்ணயத்திற்காக, ஜமீன்தார்களுக்கும், குடியானவர்களுக்கும், நிஷ்கரணையான எழுத்துமூலமாக ஒப்பந்தங்கள் இருக்கவேண்டும். இந்த ஒப்பந்தங்களே பட்டாக்கள், எந்த விதியால் ஏற்பட்டாலும் சரி, எந்த வழக்கத்தால் ஏற்பட்டாலும் சரி, செலுத்த வேண்டிய வரிகள் பட்டாவில், தெள்வாகத் தெரிவிக்கப்படவேண்டும்; செலுத்தவேண்டிய தொகை சரியாகக் குறிக்கப்படவேண்டும். வரிப்பாகம் மதிப்பிடக்கூடிய சந்தர்ப்பங்களில், அதாவது, சாகுபடி

யான பிறகு நிலங்களை அளந்து, வரிப்பாகம் தீர்மானிக்கப்படும்போதும், அல்லது தானிய விளைச்சலை மதிப்பிட்டு வரி நிர்ணயம் செய்யுமபொழுதும் அல்லது வரி தானியமாகச் செலுத்தப்படும் பொழுதும், கொடுக்கவேண்டிய வரிப்பாகமும், அது சம்பந்தமான நிபந்தனைகளும், ஸ்பஷ்டமாகத் தெரிவிக்கப் படவேண்டும்.

விதி 34.—மேலே அறிவிக்கப்பட்ட விதிகளுக்கு ஏற்பவும், தன் ஜமீன் பரிஸ்திதி, வழக்கங்களுக்கு ஏற்பவும், ஒவ்வொரு ஜமீன்தாரரும், தாலூக்தாரரும், நிலச்சுவான்தாரும், பட்டா பாரத்தை தயாரிக்கவேண்டும். அதற்கு கலெக்டரின் அங்கீகாரத்தைப் பெற்று (இவ்வதிகாரி தனது பேரை யும் உத்தியோகத்தையும் தெரிவித்து கையொப்பமிடவேண்டும்). அதன் நகலை தனது ஜமீன் அல்லது தாலூகாவிலுள்ள, ஒவ்வொரு முக்கிய கச்சேரியிலும் தாக்கல் செய்யவேண்டும்.

அப்படி தயாரிக்கப்பட்ட பட்டாக்களை குடியானவர்கள் பெறுவதற்கு உரிமையுண்டு. வேறு வகையான பட்டாக்கள் செல்லா.

விதி 35.—வரி நிர்ணயமான பிறகு, ஜமீன்தாரையாவது, நிலச்சுவான்தாரையாவது, தாலூக்தாரை யாவது, வரிக்குத்தகைக்காரர்களையாவது, அவர்களுடைய ஏஜெண்டுகளையாவது, தனக்கு பட்டா கொடுக்கும்படி குடியானவன் கேட்கலாம். பட்டா கொடுக்க மறுக்கப்பட்டதென்று ஜில்லா அடலத் கோர்ட்டில் ரூபிக்கப்பட்டால் குடியானவனுக்கு ஏற்பட்ட சிரமம், செலவுக்குத் தகுந்தாற்போல் நிலச்சுவான்தாருக்கு அபராதம் விதிக்கப்படும். ஆகையால் விதிக்கப்பட்ட வரிக்கு, ஜமீன்தார் சட்ட ரீதியான பட்டாவைத் தயாரித்து குடியானவனுக்கு கொடுக்கவேண்டும். பட்டாவை ஜமீன்தார் தாமே கொடுக்கலாம். அல்லது தமது பிரத்தியேக அதிகாரம்பெற்ற ஏஜெண்டுகள் கொடுக்க லாம். அது சம்பந்தமாக, குடியானவனுடைய பிடிவாதத்தால், ஜமீன்தாருக்கு நஷ்டம் ஏற்பட் டால், அதற்கு பிரிகாரம் அளிப்பதற்கு தக்க விதிகள் ஏற்படுத்தப்படும். வரிக்குத்தகைக்காரர்கள் கொடுக்கும் பட்டாக்களில் காலவரையறை குறிக்கப்படவேண்டும். ஜமீன்களும், அடிக்கடி பிரிவினை யடைந்து பிறருக்கு மாற்றப்படக் கூடுமாகையால், ஜமீன்தார் முதலிய நிலச்சுவான்தார்கள் கொடுக்கும் பட்டாக்களிலும், காலவரையறை குறிக்கப்படவேண்டும். அதை, சுமார் பத்து வருஷ மாக வரையறை செய்யலாம்.''

ஒரே தேதியில் ஏற்படுத்தப்பட்ட (1802-ம் ஆ ஜூலை மீ 13வ) 1802-ம் ஆ த்திய கர்ணம்ஸ் ரெகுலேஷன் **XXIX**, ரெகுலேஷன்கள் **XXV**, **XXX** ஆகிய இந்த ரெகுலேஷன்கள், நிலச்சுவான்தாருக்கு எதிராக, குடியானவனுக்கு பாதுகாப்பளிப்பதற்கே உத்தேசிக்கப்பட்டன. 1802-ம் ஆ த்திற்குமுன், ஹிந்து மகம்மதிய அரசாங்க காலத்திலும், பிரிட்டிஷ் ஆட்சியின் முற்பகுதியிலும், வரி வசூலுக்காக ஏராளமான அதிகாரிகள் நியமிக்கப்பட்டு வந்தனர் என்பது முந்திய அத்தியாயங்களில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. இவ்வதிகாரிக ளுக்குக் கொடுக்கப்பட்ட சம்பளத்தைத் தவிர இவர்களும், இவர்களுடைய சிப்பந்தி சேவகர்களும் ஏழைக் குடியானவர்களை இம்சித்து, அநியாயமாக பலவித வரிகளை வசூலித்து வந்தார்கள். அது குடியானவர்க ளால் சகிக்கக் கூடாததாயிருந்தது. வரிகள் வருஷத்திற்கு ஒரு முறை அல்லது சில வருஷங்களுக்கு ஒரு முறை மாற்றப்பட்டு வந்த வரையில், வரி வசூல் வேலையில் தாங்கள் சதா ஈடுபட்டிருப்பதாக அதிகாரிகள் நடித்து வந்தனர். அனுபோகமும், வரியும், ஜமீன்தார் செலுத்தவேண்டிய பேஷ்கஷ் தொகையும், சாசுவத மாக வரையறை செய்யப்பட்டதால், விளைச்சலை பங்கிடுவது சம்பந்தமாகவும், மாமூலான பணவரி வசூல் சம்பந்தமாகவும், இருந்த பழைய முறை ஒழிந்தது. அதனோடு, கணக்குகள் வைத்துக்கொள்வதற்கும், கண்காணிப்பதற்கும், மதிப்பிடுவதற்கும் வேண்டியிருந்த பெரிய கச்சேரிகளின் தேவையும் மறைந்தது. பேஷ்கஷ் தொகையும், நிலவரி விகிதங்களும் சாசுவதமாக முடிவு செய்யப்பட்ட பிறகு, தங்கள் தொல்லைகளெல்லாம் தொலைந்தன என்று சர்க்கார் நினைத்தது. நிலைவரமற்ற தன்மையும், குந்தர கோளமும் நிறைந்திருந்த காலத்தில், அவசியமாயிருந்த கண்காணிப்பும், பெரிய கச்சேரிகளும் இனிமேல் வேண்டியதில்லை என்றும், சர்க்கார் நினைத்தது. ஆதலால் சர்க்கார், வரி வசூல் அதிகாரிகள் எல்லோரை யும் நீக்கிவிட்டு, ஜமீன்தார்கள் அதிக வரி கேட்பது சம்பந்தமாகவும், அநியாயமான தொகைகள் வசூலிப் பது சம்பந்தமாகவும், ஏற்படும் விவகார சந்தர்ப்பங்களில், சரியான கணக்குகளை கோர்ட்டில் தாக்கல் செய்து, குடியானவனுக்கு சகாயம் செய்வதற்கும், கணக்குகளைக் கிரமமாக எழுதி வருவதற்கும், கர்ணத்தையும், பட்டேலையும் மட்டும் நிறுத்திக்கொண்டது. கர்ணம் ஜமீன்தாரருடைய வேலையாளாய் இருக்கவேண்டும் என்பது ஒரு காலத்திலும் உத்தேசிக்கப்படவில்லை. 1802-ம் வருஷத்திய **XXIX**-வது ரெகுலேஷனில் காணப்படும் இந்த அம்ஸம் கலெக்டர்கள் குறிப்புகளின், 48, 49, விதிகளில் தெளி வாகக் குறிக்கப்பட்டிருக்கிறது. அவ்விதிகள் பின்வருமாறு :—

விதி 48.—வரிகளில் அடிக்கடி மாறுதல்கள் ஏற்பட்ட காலத்தில், வயல்களைப் பார்வையிட்டு, விளைச் சலின் சம்பந்தமாக சரியான கணக்குகள் வைத்துக்கொள்வதற்கும், வேண்டிய தகவல்களை, அவ்வப்போது வரி வசூலுக்காக நியமிக்கப்படும் உத்தியோகஸ்தர்களுக்கு தெரிவிப்பதற்கும், சர்க்கார் பல அதிகாரிகளை ஏற்படுத்தவேண்டியதாயிருந்தது. வரி ஸ்திரமாக ஏற்பட்டு, குடியான வர்களுடைய உரிமைகளைப்பற்றி, விஸ்தாரமான சட்டங்களும், அவைகளை நிறைவேற்றுவதற்கு நீதி ஸ்தலங்களும் உண்டான பிறகு, பழைய காலத்தைப்போல அநேக ரெவினியு அதிகாரிகள் தேவையில்லை. நிலங்களைக்குறித்தும், அவைகள் மீது விதிக்கப்பட்ட ஜம்மாத் தொகையையும் குறித்தும் சரியான அடங்கல் ஒன்று (ரிஜிஸ்டர்) இருந்தால், அது வரி வசூல் சம்பந்தமான எல்லா விஷயங்களுக்கும் போதுமானது. சட்ட ரீதியான பொது வழக்கங்களும், ஸ்தல வழக்கங்களும், மேற்படி சட்டங்களிலேயே குறிக்கப்பட்டிருக்கும். சில ஜில்லாக்களில் அல்லது ஊர்களில் இருக்கும் பிரத்தியேக வழக்கங்களைப்பற்றி, நம்பத்தகுந்தவர் அத்தாக்ஷி கூறினால் போதும். தகவல் தெரி யாத, அல்லது அறியாமை வாய்ந்த, அல்லது பணம் முதலிய ஆசையால் முறை பிறழக்கூடிய ஒரு அதிகாரி கொடுக்கும் சாக்ஷியத்தை விட, அது, பன் மடங்கு சிறந்தது.

விதி 49.—இத்தகைய பரிஸ்திதியில், கர்ணம், பட்டவாரியைத் தவிர, மற்ற எல்லா வரி வசூல் அதிகாரிகளையும் நீக்கத் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. கர்ணத்திற்கும், பட்டவாரிக்கும், வங்காளத்தில் என்ன அந்தஸ்து இருக்கிறதோ, அதே இங்கும் இருக்கவேண்டும். ஜமீன்தார்களால், அவர்கள் அங்கு எவ்வாறு நடத்தப்படுகிறார்களோ, அவ்வாறே இங்கும் நடத்தப்படவேண்டும். கர்ணம், பட்டவாரியைப்பற்றிய வங்காள ரெகுலேஷன்களின் நகல் ஒன்று இத்துடன் சேர்க்கப்பட்டிருக்கிறது. அவர்களுக்கும், ஜமீன்தார்களுக்கும் உள்ள பொறுப்பும், கடமைகளும், மேற்படி ரெகுலேஷன் களில் நன்கு விளக்கப்பட்டிருக்கிறது.

ரெகுலேஷன் XXV, 2-வது பிரிவின்படி, நிலவரி வருமானம் எவ்வாறு தீர்மானிக்கப்பட்டதென்பதை, அடுத்தாற்போல் ஆராய்வோம். அது சாதாரணமாக பின்வருமாறு தீர்மானிக்கப்பட்டது :—

(1) ஒவ்வொரு ஜமீனைப்பற்றிய சாசுவத ஜம்மாத்தொகை, உண்டான விளைச்சலை ஆதாரமாகக் கொண்டு தீர்மானிக்கப்படும்.

(2) உண்டான விளைச்சலைக் கணக்கெடுத்து, அதன் வருஷ மதிப்பு நிர்மாணிக்கப்பட்டது. பிறகு, வருஷ மதிப்பில் ஒரு பாகம் பேஷ்கஷ் தொகை என்று முடிவு செய்யப்பட்டது. எஞ்சிய பாகம் வரி வசூல் பிரயாசைக்காக ஜமீன்தாருக்குச் சென்றது.

(3) மழை ஜலத்தால் அல்லாமல், ஆறு, குளம், முதலிய மூலங்களிலிருந்து கிடைக்கும் தண்ணீரைக் கொண்டு நிலம் சாகுபடி செய்யப்பட்டால், பாய்ச்சப்பட்ட தண்ணீர், கணக்கில் எடுத்துக்கொள்ள வேண்டும். அதன் பின்னர், எதிர்கால விவசாய அபிவிருத்திக்கு, நிலத்திற்கு வேண்டிய நீரும் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும். அதாவது, தரிசு நிலங்கள், வயலைச் சார்ந்துள்ள சிறு வீடுகள், குளங்கள், நீர் பாசன வாய்க்கால்கள், ஆகிய இவைகள், சன்னதுகளில், குறிக்கப்படாவிட்டாலும், கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.

(4) அதன் பிறகு XXV-வது ரெகுலேஷன், 4-வது பிரிவின்படி, சர்க்கார் வரி செலுத்தவேண்டாத நிலங்களும், அல்லது, சொற்ப வரி செலுத்தவேண்டிய நிலங்களும், பேஷ்கஷ் தொகை நிர்மாணம் செய்வதில் கணக்கிடப்படாது.

கிராம கச்சேரிகள் ஒழிக்கப்பட்டு, ரெகுலேஷனின் 5-வது பிரிவின்படி, அவைகளுக்காக விடப்பட்ட நிலங்கள் கைப்பற்றப்பட்டு, சாசுவத ஏற்பாட்டோடு சேர்த்துக் கொள்ளப்பட்டது. மிதமான, நிரந்தரமான, வரி நிர்மாணம் செய்யப்பட்டதால், வஜா கொடுக்கப்படவில்லை. மழை பெய்யாமை, வெள்ளம் முதலிய பிரமாதங்களுக்கு, இதற்கும் வஜா கொடுக்கப்பட்டிருந்தாலும், சாசுவத ஏற்பாட்டின் பிறகு அது கொடுக்கப்படவில்லை.

இவ்விதிகளே சாசுவத நிலவரி நிர்மாணத்திற்கு, மூலாதாரமாயிருந்தன. நிரந்தரமாக முடிவு செய்யப்பட்ட ஜம்மா (அல்லது மித வரி நிர்மாணம்) என்னும் வார்த்தையைப்பற்றி ஜமீன்தார்கள் தாறுமாறான அபிப்பிராயங்களைக் கிளப்பி விட்டனர். நிரந்தரமாக முடிவு செய்யப்பட்ட தொகை எந்த ஆதாரங்களைக் கொண்டு அவ்வாறு ஏற்படுத்தப்பட்டது என்பதின் விவரங்களை, நாம் நன்கு அறிவோமாகில், மேற்படி வார்த்தையைப்பற்றி யாதொரு மயக்கமும் உண்டாகாது. ஆனல் முக்கிய விஷயங்கள் சம்பந்தமாகவும், தத்துவங்களின் சம்பந்தமாகவுமுள்ள மூலாதாரக் கொள்கைகளை மறந்துவிட்டு, பேஷ்கஷை மட்டும் எடுத்துக் கொண்டு, 1802-ம் வருஷத்திய XXV-வது ரெகுலேஷன் பிரகாரம், நிரந்தரமாக முடிவு செய்யப்பட்டது, பேஷ்கஷ்தான் என்று வாதிப்போமாகில், எல்லாம் கலக்கத்திலும், மயக்கத்திலும், சந்தேகத்திலுந்தான் முடியும். சாதாரணமனிதர்களும், தக்க யோசனைகளைத் தெரிவிக்குமாறு, சர்க்காரால் உத்தரவிடப்பட்ட கலெக்டர்களும், எளிதில் அறியுமாறு, 1799-ம் வருஷத்திய கலெக்டர்கள் குறிப்புகளில், ஸ்பஷ்டமான கட்டளைகள் கொடுக்கப்பட்டிருந்தன. கலெக்டர்களுக்கு அனுப்பிய குறிப்புகளிலுள்ள விதிகளே, 1802-ம் வருஷத்திய XXV, XXX-வது ரெகுலேஷன் விதிகளில் அடங்கியிருக்கின்றன.

1802-ம் வருஷத்திய XXX-வது ரெகுலேஷன் 4-வது பிரிவில் தெரிவித்திருக்கிறபடி, 1802-ம் வருஷத்திலும் அதற்குச் சற்று முன்னுலும், ஜமீன்தாருக்கு கொடுக்கப்பட்டுவந்த வரிகள் நால் வகைப்பட்டவை.

(1) குத்தகைக் கிராமங்களுக்கு கொடுக்கப்பட்ட பட்டா, முச்சிலிக்கைகளில் மொத்த தொகை குறிக்கப்பட்டது.

(2) விளைச்சலை பங்கிட்டுக்கொள்வதற்கு பட்டாக்கள்.

(3) பணவரி செலுத்தும் சில நிலங்களுக்கு தகுந்த பட்டாக்கள்.

(4) தானியவரியைச் செலுத்தும் நிலவரிப்பட்டாக்கள்.

குத்தகைப்பத்திரங்கள், மற்ற வரிப்பத்திரங்களைப்போல, பட்டாக்கள், முச்சலிக்கைகள், வக்கீலாலாவது, அவருடைய குமாஸ்தாவால் ஆவது தயாரிக்கப்பட முடியாது. பட்டாக்களுக்கும், முச்சலிக்கைகளுக்கும், தகுந்த பாரங்களை சர்க்கார் ஏற்படுத்தியிருந்தார்கள். அவைகளைத்தான் குடியானவர்களும், ஜமீன்தார்களும் உபயோகப்படுத்தவேண்டும். பட்டாவில் பூர்த்தி செய்யவேண்டிய விஷயங்கள், XXX-வது ரெகுலேஷன், 4-வது பிரிவு, 1–6 உட் பிரிவுகளில் தெரிவிக்கப்பட்டன. வரித்தொகை, நிஷ்கரீணயாகவும், நிரந்தரமாகவும் இருக்கவேண்டுமென்று மேற்படி விதிகள் வற்புறுத்தின. வரி, பணமாக செலுத்தப்படும்பொழுது வருஷாந்தரமாகக் கொடுக்கவேண்டிய தொகை, நிஷ்கரீணயாக முடிவு செய்யப்படவேண்டுமென்று, 3-வது உட்பிரிவில் தெரிவித்திருக்கிறது. 4-வது உட்பிரிவின்படி, விளைச்சலின் ஒருபாகம், வரியாக கொடுக்கப்பட்டால், குடியானவன் உழுகிற நிலத்தின் விஸ்தீரணமும், குடியானவன் கொடுக்கவேண்டிய பாகமும், சாகுபடியான தானியத்தைப்பற்றிய விவரங்களும், தெரிவிக்கப்படவேண்டும்.

வரி நிரந்தரமாக நிர்ணயம் செய்வதைப்பற்றி, 5-வது உட்பிரிவு நன்கு விளக்குகிறது. நிலத்தின் அளவிற்குத் தகுந்தாற்போல், வரி நிர்மாணம் செய்யப்படவேண்டுமென்றும், நிலத்தின் தரத்தை ஒட்டியே, பணமாகவோ, விளைச்சலின் ஒருபாகமாகவோ, வரி விதிக்கப்படவேண்டுமென்று அப்பிரிவில் கண்டிருக்கிறது.

வரி, தானியமாக கொடுக்கப்பட்டால், அதைச் செலுத்தவேண்டிய நிலத்தின் விஸ்தீரணமும், எவ்வளவு தானியம் கொடுக்கப்படவேண்டுமென்பதும், என்ன தானியம் கொடுக்கப்படவேண்டுமென்பதும், ஸ்பஷ்டமாக தெரிவிக்கப்படவேண்டுமென்றும், 6-வது உட்பிரிவு கூறுகிறது.

வரி நிரந்தரமாக முடிவு செய்யப்பட்டு, மொத்த நிலத்தின் மதிப்பும், நிர்ணயமான பிறகு, சர்க்காரின் பாகம் வரையறை செய்யப்பட்டது. மொத்த விளைச்சலில், சர்க்காருக்குச் செல்லவேண்டியதிலிருந்து, மூன்றில் இரண்டு பங்கு, சர்க்காருக்கு ஜமீன்தார்கள் செலுத்தவேண்டிய பேஷ்கஷாக, ஏற்படுத்தப்பட்டது. எஞ்சி நின்ற மூன்றில் ஒருபங்கு, வரிவசூல் வேலைக்காக ஜமீன்தாருக்கு கொடுக்கப்பட்டது. இந்த விவரங்களைப் பற்றி, 1802-ம் வருஷத்திய ரெகுலேஷன்களை ஏற்படுத்தியவர்கள், பல வருஷங்களாய் சிந்தித்து வந்திருக்கிறார்கள். அவர்களுடைய சிந்தனைகளின் சாராம்சங்கள், கலெக்டர்களுக்கு விடுத்த குறிப்புகளில் அடங்கியிருக்கின்றன. அவை சம்பந்தமான விதிகள் 11 முதல் 22 வரையும். மொத்த நிலத்திற்கு, குடியானவன்

செலுத்தவேண்டிய, நிலவரி, எவ்வாறு நிர்ணயம் செய்யப்படவேண்டுமென்பதின் சம்பந்தமாக, காரன்வாலிஸ் பிரபு, செய்துள்ள குறிப்புகள் 11-வது விதியில் அடங்கியிருக்கின்றன. எந்த தீமைகளை போக்குவதற்காக சர்க்கார், சாசுவத செட்டில்மென்டை ஏற்படுத்தினர்கள் என்பதைப்பற்றி, 11-வது விதி பின்வருமாறு கூறுகிறது :—

"இத்தீமைகளுக்கெல்லாம் காரணம் பழைய முறைதானென்றும், அது, கொள்கையற்ற ஒழுங்கீனமான முறையென்றும், சகல ஜனங்களுக்கும், அது பல கெடுதிகளை விளைத்ததென்றும், அதன் முக்கிய குறை, விதி விதானையற்ற நிலைவரமில்லாத வரி யேற்பாடேஎன்றும், காரன்வாலிஸ் பிரபு கூறுகிறார். ஆதலால், முதலில் அக்குறையை நீக்குவதற்கே சீர்திருத்தம் ஏற்படவேண்டுமென்றும், குடியானவர்களிடமிருந்து ஜமீன்தார்கள் வரிவசூல் செய்வதை செம்மை செய்வதற்காக, சர்க்கார் தொகை நிர்ணயம் செய்யப்படவேண்டுமென்றும், அவர் பொருத்தமாக வாதிக்கின்றார்."

இந்த உத்திரவுகளுக்கிணங்கவும், காரன்வாலிஸ் பிரபு தெரிவித்தவாறும், வருஷாந்திர விளைச்சல் நிர்ணயம் செய்யப்பட்டு, அதன்பிறகு, முதற்படியாக, சர்க்கார் தொகை முடிவு செய்யப்பட்டது.

ஒரு ஜமீனுடைய நிலவரி, நிர்மாணம் செய்யப்படும்பொழுது, சேயர்வரி, என்றதில் அடங்கியுள்ள சுங்கங்கள், கடைமைகள், லாகிரிவஸ்து வரிகள், முதலிய வரிகளை சேர்க்கக்கூடாது.

"சேயர்" வரி, சர்க்காருக்குப் பிரத்தியேகமாகச் செல்லவேண்டியதின் காரணம் என்னவென்பது 14-வது விதியில் விளக்கப்பட்டிருக்கிறது. பழத் தோட்டங்களிலிருந்தும், புல்த்தரைகளிலிருந்தும், மீன் குத்தகைகளிலிருந்தும், வியாபாரக் கிடங்குகளிலிருந்தும், மற்ற கட்டிடங்களிலிருந்தும் வரும் வரிகள் சேயர் வரியில் சேர்க்கப்படவில்லை எனெனில், அவைகள் நிலத்தின் உபயோகத்திற்கு வசூலிக்கப்படும் வரிகள் மனைவரி போன்றவை (சில சமயங்களில் இந்த வரிகள்கூட சேயர் வரியில் சேர்க்கப்பட்டன) ஜமீன்தார் வசூலிக்க வேண்டிய வரி, சர்க்கார் வசூலிக்கவேண்டிய வரி, என்று வித்தியாசம் உண்டானதற்கு காரணம் என்னவென்றால், சில வரிகளை ஜமீன்தார், தனது பிரத்தியேக உரிமையின் பலனாக வசூலிக்கிறார் என்ற கருத்தே.

மேற்படி சந்தர்ப்பத்தில் உபயோகித்துள்ள "வரி" (ரென்ட் : வாடகை : வரி) என்ற வார்த்தை கவனிக்கப்படவேண்டும். தோட்டங்கள், புல்தரைகள், மீன் குளங்கள், கடைகள், இதர கட்டிடங்கள், ஆகிய இவைகளின் நில உரிமை, ஜமீன்தாருக்கு சர்க்காரால் மாற்றப்படவில்லை. ஆனால், அவைகளுக்காக வரி வசூல் செய்யும் உரிமையே மாற்றப்பட்டது. அவ்வுரிமை அவ்வாறு மாற்றப்படாவிட்டால், சர்க்காரே மேற்படி அம்சங்களின் வரிகளை வசூலித்து வருவார்கள்.

பதினைந்தாவது விதிப்படி, நிலவரி வருமானம் நிர்மாணம் செய்யும்பொழுது, உப்பள வருமானமும், பராதீனம் செய்யப்பட்ட நிலங்களும், கிராம மணியங்களும், சம்பளத்திற்கு பதிலாக கிராமாதிகாரிகளுக்கும், பிறருக்கும், வரியில்லாமல் கொடுக்கப்பட்ட நிலங்களும், கணக்கில் சேர்க்கப்படக்கூடாது. அவைகள் சர்க்கார் நிலங்களாகவே பாவிக்கப்படவேண்டும்.

பதினாறுவது விதிப்படி, காஜிகளுக்கும், சர்க்கார் ரெவினியூ அதிகாரிகளுக்கும் (கர்ணங்களைத்தவிர) இதுவரை ஜமீன்தாரால் கொடுக்கப்பட்ட உபகாரச் சம்பளங்கள், ஜம்மா தொகையில் சேர்க்கப்படவேண்டும். ஏற்படுத்தப்பட்ட ரெகுலேஷன்களின் பிரகாரம், சர்க்கார் அவைகளுக்கு தகுந்த ஏற்பாடுகள் செய்யவேண்டும்.

பிறகு, 17-வது விதியின்படி, நிலவரியை நிரந்தரமாக முடிவு செய்வதில், கலெக்டர்கள், சர் கூட் கமிட்டி அறிக்கையை ஆதாரமாக வைத்து நடக்கவேண்டுமென்று தெரிவிக்கப்பட்டது. அதாவது, "சேயர்" என்று சொல்லப்படும் உள்நாட்டு வரிகளும், உப்பள வரியும், சர்க்கார் வசம் இருக்கவேண்டியது. அவைகள் கலெக்டரின் மேல்பார்வையில் இருக்கவேண்டும். அவைகள் கலெக்டர் தமது அபிப்ராயப்படி வசூலிக்கவோ, நிறுத்தவோ, ஒழித்துவிடவோ முடியும். மற்ற வரிவசூல் தொகையின் மொத்த மதிப்பில் மூன்றில் இரண்டுபங்கு, நிரந்தரமான நிலவரியாக முடிவு செய்யப்பட்டது. ஆனால், இந்த விகிதத்தையே தீர்மானமான விகிதமாகக்கொண்டு ஒவ்வொரு ஜமீனிலும், நிலவரி நிர்மாணம் செய்யப்படவேண்டுமென்று நாங்கள் சொல்லவில்லை. ஆயினும், மேலே கூறியவாறு, "சேயர்" வரிகளையும், உப்பள வரியையும், கழித்துவிட்டு, பின்புள்ள மற்ற வரிகளின் மொத்த தொகையில் மூன்றில் இரண்டுபங்கு, பேஷ்கஷ் தொகையாக கிடைக்குமென்று கருதப்படுகிறது. சாசுவத செட்டில்மெண்டிற்கு ஏழு வருஷங்களுக்குமுன், உண்டான பஞ்சத்தைப் பற்றி 20-வது விதி தெரிவிக்கிறது. அப்பஞ்சத்தின் கொடுமைகள், நாட்டை இன்னும் பூரணமாய் விடவில்லையென்றும், தேசம், பழைய நிலைமையை அடைவதற்கு இன்னும் பல வருஷங்கள் செல்லுமென்றும் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது. நிலவரியை நிர்மாணம் செய்வதில், பஞ்ச வருஷங்கள் கணக்கில் எடுத்துக்கொள்ளக் கூடாதென்றும், தெரிவிக்கப்பட்டிருக்கின்றது.

சர்க்காருக்குச் செல்லவேண்டிய விளைச்சலின் பாகமும், பேஷ்கஷும், மிகவும், குறைவாகத் தெரிவிக்கப் பட்டதென்றும், அது சம்பந்தமான தகவல்களைக் கொடுத்த ரெவினியூ அதிகாரிகள், சர்க்கார் உத்தியோகஸ் தர்களாய் இருந்தாலும், ஜமீன்தார்களின் செல்வாக்கின் பலனாக அவர்களுக்கு அடங்கிநடந்து, ஜமீனுடைய உண்மையான நிலைமையையும், பொருளாதாரத்தையும், ஆஸ்தி விவரத்தையும், மறைத்தார்கள் என்று 19-வது விதியில் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது. இக்காரணங்களை முன்னிட்டே எல்லா ஜமீன்களுக்கும், பேஷ் கஷ், அப்பொழுதே நிரந்தரமாக முடிவு செய்யப்படவில்லை. மேற்படி விதி தெரிவிப்பது :—

"சில ஜமீன்களில், உண்மையான நிலைமை மறைக்கப்பட்டது என்று, கலெக்டர்கள் தங்கள் அனுபவ மூலமாக கண்டபொழுது, கமிட்டி சிபார்சு செய்த மூன்றில் இரண்டு பங்கைவிட அதிகமான பேஷ் கஷ் தொகையை விதிப்பதற்கு அவர்கள் தயங்கவில்லை. மற்ற இடங்களில் ஜில்லாக்களின் பொரு ளாதாரம் கமிட்டி மதிப்பிட்டதைவிட அதிகமாயிருந்தாலுங்கூட குறைவான பேஷ்கஷை விதிப்பதே யுக்தமென்று தோன்றியது. உதாரணமாக, எல்லைபுர மலைப்பிரதேச ஜமீன்கள் இந்த ஜமீன்களை நிர்வகிப்பது கஷ்டமான காரியம், மேலும் அங்கு போக்குவரவு சாதனங்களும் கிடையா: ஆனால், இத்தகைய விலக்குகள் சம்பந்தமாக நீங்கள் செய்யும் சிபார்சுகளும், தெரிவிக்கும் அபிப்பிராயங்க ளும், மிகவும் பொருப்பு வாய்ந்தவைகளாய் இருக்கவேண்டும். அவை சம்பந்தமான காரணங்களை நீங்கள் விவரமாகவும், விசேஷ அக்கரையுடனும் தெரிவிக்கவேண்டும். ஏனெனில், திருப்திகர மான விளக்கத்தின் பலனாக, யுக்தமென்று பட்டாலொழிய, ஏற்படுத்தப்பட்டபொது விதியினின் றும், சர்க்கார் விலக்கமாட்டார்கள்."

சர்க்கார் ஏற்படுத்த விரும்பும் சாசுவத செட்டில்மென்ட், எக்காலத்திலும் மாற்றக்கூடாததாய் இருக்கு மென்று, கலெக்டர்களுக்கு அனுப்பிய குறிப்புகளின் 12-வது பிரிவு தெரிவிக்கிறது. வரிகள் அவ்வப்போது மாற்றப்பட்டதின் பலனாக தேசம் எவ்வாறு பாழடைந்தது என்பதைப்பற்றியும், நிலைவர மற்றமுறை எதற்காக

ஒழிக்கப்படவேண்டுமென்பதைப்பற்றியும், அதற்கு பதிலாக வரியும், பேஷ்கஷும், ஏன் நிரந்தரமாக முடிவு செய்யவேண்டுமென்பதைப்பற்றியும், 1802-ம் வருஷம் வரை கஷ்டமும், நஷ்டமும் அடைந்த குடியானவர்களை அது எவ்வாறு மீட்குமென்பதைப்பற்றியும், மேற்படி விதி வெகு திண்ணமாகக் கூறுகிறது.

இது சம்பந்தமாக, நாம் ஒன்றை மறக்கலாகாது, பல விஷயங்களை பரிசீலனைசெய்து, எதிர் காலத்தில் என்ன செய்யவேண்டுமென்பதைப்பற்றி சர்கூட் கமிட்டி சில சிபார்சுகளைச் செய்தது என்று முந்திய அத்தியாயங்களில் கூறியிருக்கிறோம். நாடு நல்ல நிலைமையை அடைந்து, பூரண அமைதி ஏற்பட்டவுடனே, ஜமீன்தாரி முறையை ஒழித்துவிடுதல் நல்லதென்று சர்கூட் கமிட்டி பலமுறை சொல்லியிருக்கின்றது. சாசுவத செட்டில்மெண்டை உடனே ஏற்படுத்தாமல், கிராமங்களுக்கும், மற்ற நிலங்களுக்கும், நீடித்த குத்தகைகளைக்கொடுத்து அதன்மூலம், பக்குவமடைந்த பிறகே ஏற்படுத்தவேண்டுமென்று, அனுபவம் வாய்ந்த உத்தியோகஸ்தர்கள் தங்கள் திடமான அபிப்பிராயத்தையும், யோசனையையும், தெரிவித்திருக்கிறார்கள். ஆனால், இங்கிலாந்திலிருந்த மேலதிகாரிகள், இக்கருத்திற்கு இணங்கவில்லை. இருபது வருஷங்களுக்கு முன்பே சாசுவத செட்டில்மெண்ட் ஏற்படுத்தவில்லையே என்று அவர்கள் மிகவும் வருந்தினார்கள். 1802-ம் வருஷத்திற்கு, இருபது வருஷங்களுக்குமுன் சாசுவத செட்டில்மெண்ட் ஏற்படுத்தப்பட்டு கிரியாம்சையில் ஒழுங்காகவும், நாணயமாகவும், நடத்தப்பட்டுவந்தால், வ்வசாயமும், கைத்தொழிலும், நாட்டின் வாணிபமும், சுபிக்ஷமான நிலைமையிலிருந்திருக்குமென்று, அவர்களுடைய திடநம்பிக்கை. இந்தியாவினுடைய சுபீக்ஷத்தால் பிரிட்டன் தேசமும், மேலோங்கி இருக்குமென்பதும், அவர்களுடைய கருத்து.

வரிகளை அவ்வப்போது மாற்றுவதாலும், உயர்த்துவதாலும், ஏற்படும் தீமைகளைக்குறித்து அவர்கள் தெரிவித்ததாவது :—" வரிகளை அவ்வப்போது மாற்றுவது, வரிகளை அதிகமாக உயர்த்துவதற்கு சமானமாகும். நிரந்தரமான முறையால் ஏற்படும் நம்பிக்கை, ஊக்கம், உழைப்பு, ஆகிய இவைகளை அது கெடுத்துவிடும்." " நிரந்தரமான முறை இருபது வருஷங்களுக்கு முன்ஏற்படுத்தப்பட்டு, அமுலில் ஒழுங்காகவந்திருந்தால், விளைச்சலும், கைத்தொழிலும், வியாபாரமும், இப்பொழுதிருப்பதைவிட அதிகஉன்னத ஸ்திதியிலிருந்திருக்குமென்பதற்கு சந்தேகமில்லை. இதற்குமுன் அனுபவித்தறியாத புதிய பெருமைகளையும், பாக்யத்தையும் அடைந்த ஜனங்கள், தங்களுக்கு பேருபகாரம் செய்த சர்க்காரிடமும், மிகவும் விஸ்வாசமாயிருந்திருப்பார்கள்.

மேற்படி விதியில் இன்னும் தெரிவிக்கப்பட்டதாவது :—" நிலைவரமற்ற வரிவசூல் முறையால், தேசத்தின் க்ஷேமமும், நமது காரியங்களும், நமது அரசாங்கத்தின் போக்கும், மிகவும் பாதிக்கப்பட்டதென்பதும், நிலைவரமற்ற பரிபாலனத் தத்துவங்களால் விளையும், எல்லாத் தீமைகளையும்விட வரியை அடிக்கடி மாற்றுவதால் விளையும் தீமையே மிகவும் கொடுமை என்பது எங்கள் துணிவு."

பிரிட்டன் தேசத்தின், மிகவும் திறமைவாய்ந்த பரிபாலனத் தலைவர்களால், பல வருஷங்களாக சிந்திக்கப்பட்ட தத்துவங்கள் இவைகளே. வங்காளத்தில் உண்டான அனுபவத்தைத் தழுவி, சென்னையில் 1802-ம் ஞு ஜூலைமீ 13உ ரெகுலேஷன்களில் முடிவாக அமைக்கப்பட்டன. வரிகளை உயர்த்துவதையும், பேஷ்கஷை உயர்த்துவதையும் தடுப்பதே, அவைகளின் நோக்கம். வரி விகிதமும், அனுபோகமுறையும், நிரந்தரமாக முடிவு செய்யப்பட்டு, எக்காலத்திலும் மாற்றக்கூடாது என்ற மூலாதார கொள்கையை அனுசரித்தே 1802-ம் ஞு ஜூலைமீ 13உதிய சட்டங்கள் ஏற்படுத்தப்பட்டன.

கலெக்டர்களுக்கு அனுப்பிய குறிப்புகளையும், மேலே தெரிவிக்கப்பட்ட அரசாங்க தஸ்தாவேஜுகளையும், படிக்காதவர்களுக்கு இந்த ரெகுலேஷன்களை ஏற்படுத்தியவர்களின் நோக்கமும், அபிப்பிராயமும், என்னவென்று தெரிந்துகொள்வது கஷ்டமான காரியம். சாசுவத செட்டில்மெண்ட் ரெகுலேஷன் XXV-ல் உள்ள 15 பிரிவுகளையும், பட்டா ரெகுலேஷன் XXX-ல் உள்ள 15 பிரிவுகளையும், அர்த்தம் செய்துகொள்வதும், சுருக்கமான நடையில் தெரிவிக்கப்பட்டுள்ள ஒவ்வொரு ஷரத்தின் பூரண உட்பொருளை அறிந்துகொள்வதும், அசாத்தியமான காரியம். சாசுவத செட்டில்மெண்டிற்கு முன் நிலவரி விஷயமாக இருந்த மேற்கோள்களையும், ஆதாரங்களையும், ஒருவாறு பூர்த்தி செய்துவிட்டு, மேற்படி ரெகுலேஷன்கள் சட்டமான பிறகு, சர்க்காரும், ரெவினியூ போர்டாரும், கோர்ட் ஆவ் டைரக்டர்ஸும், இன்னும் பல பிரமுக்கியர்களும், 1802-ம் வருஷத்திய ரெகுலேஷன்களின் ஷரத்துகளைப்பற்றி எவ்வாறு விளக்கம் செய்திருக்கிறார்களென்பதையும், சென்ற 136 வருஷங்களாக குடியானவர்களுடைய பாத்தியதைகளும், உரிமைகளும், எவ்வாறு தற்காக்கப்பட்டு வந்தன என்பதையும், இப்பொழுது ஆராய்வோம்.

ஜமீன்தார்கள், தங்கள் செல்வத்தையும், செல்வாக்கையும், அதிகாரத்தையும்கொண்டு, 1802-ம் வருஷத்திலிருந்து இன்றுவரை, குடியானவர்களின் உரிமைகளை, சூனியமாக்குவதற்கு எல்லாப் பிரயத்தனங்களையும் செய்துவந்திருக்கிறார்கள். சாசுவத செட்டில்மெண்ட் ரெகுலேஷனிலும், அதற்கு பிறகு, 1802-ம் வருஷத்திய 4, 5-வது ரெகுலேஷனிலும், 1863-ம் வருஷத்திய வரி வசூல் மசோதாவிலும், 1865-ம் வருஷத்திய வரி வசூல் சட்டத்திலும், குடியானவர்கள் தொன்றுதொட்டு அனுபவித்துவந்த அனுபோக உரிமைகள் அங்கீகாரம் செய்யப்பட்டிருந்தபோதிலும், 1908-ம் வருஷத்திய எஸ்டேட்ஸ் நிலச் சட்டத்தில் முடிவாகவும், யாதொரு சந்தேகமில்லாமலும், நிலை நாட்டப்படும்வரை, குடியானவர்களுடைய அனுபோக உரிமைகள், ஏதாவது ஒரு வகையில் ஆட்சேபிக்கப்பட்டே வந்தன. 1802-ம் வருஷத்திய XXV, XXX, XXIX, ரெகுலேஷன்களின் ஷரத்துகளும், இந்திய அரசாங்கத்தார், தொடர்ந்து தெரிவித்த பகிரங்க அறிக்கைகளும், சென்னை அரசாங்கத்தார், ரெவினியூ போர்டார், ஆகிய இவர்கள் செய்துள்ள விளக்கங்களும், குடியானவர்களுடைய உரிமைகளை ஆதரித்தபோதிலும், வரி விகிதங்களைப்பற்றியும், சாசுவத செட்டில்மெண்ட் காலத்திலும், ஏற்படுத்தப்பட்ட வரியையே குடியானவன் கொடுக்க கடமைப்பட்டிருக்கிறனென்பதைப் பற்றியும், இன்றுவரை வழக்குகள் ஏற்பட்டு வந்திருக்கின்றன. ஆகையால், இவ்விஷய சம்பந்தமாயுள்ள மேற்கோள்களையும், ஆதாரங்களையும், பரிசீலனைசெய்து, சாசுவத செட்டில்மெண்ட் காலத்தில் ஏற்படுத்தப்பட்ட வரி, நிரந்தரமாய் முடிவு செய்யப்பட்டதா என்பதைப் பற்றியும், இன்றுவரை அது மாறாமலிருந்திருக்கிறதா வென்பதைப்பற்றியும், ஆராயவேண்டியது அவசியம். சட்டங்களை விளக்கம்செய்ய வேண்டிய நீதிஸ்தலங்களும், சட்டங்களை அமைக்கவேண்டிய சட்ட சபைகளும், வரிவசூல் சட்டத்திலும் சில சமயங்களில் எஸ்டேட்ஸ் நிலச் சட்டத்திலும், காணப்படும் தவறான விதிகளால் எவ்வளவு தூரம் பாதிக்கப்பட்டன என்பதை அறிவதும் யுக்தமே.

1865-ம் வருஷத்தில் சட்டசபை ஒன்றுமில்லை என்பது இச் சந்தர்ப்பத்தில் கவனிக்கத்தக்கது. மேற்படி ரெகுலேஷன்களையும், சட்டங்களையும், ஏற்படுத்தியவர்கள், கவர்னரும், அவருடைய அந்தரங்க சபையும். 1908-ம் வருஷத்தில் எஸ்டேட்ஸ் நிலச் சட்டம் ஏற்பட்டபொழுது, அப்பொழுதிருந்த சட்டசபைக்கு பிரதிநிதித்வம் கிடையாது. அக்காலத்து சட்டசபை அங்கத்தினர்கள், பொது ஜனங்களின் அபிப்பிராயத்தை தெரிந்து கொள்ளாமல், மேல் வகுப்பினர்களுடைய நோக்கத்தையே பிரதிபலித்து வந்தார்கள். ஆனால் சென்னை சர்க்காரும், ரெவினியூ போர்டாரும், எல்லாச் சந்தர்ப்பங்களிலும், குடியானவர்களுடைய உரிமைகளை ஆதரித்து வந்தார்களென்பது மிகை ஆகாது.

1802-ம் வருஷத்திய சாசுவத செட்டில்மெண்ட் ரெகுலேஷன்களுக்கு பிறகு, ஜமீன்தார்கள் கொண்டாடிய பாத்தியதைகளின் காரணமாக ஏற்பட்ட சந்தேகங்களை நிவர்த்தி செய்வதற்கு (அனுபோக ஸ்திரத்தைப் பற்றியும், வரி ஸ்திரத்தைப்பற்றியும்) 1802-ம் வருஷத்திய IV, V ரெகுலேஷன்கள் ஏற்படுத்தப்பட்டன.

1802-ம் வருஷத்திய IV, V-வது ரெகுலேஷனை ஆராய்வதற்கு முன் முக்கியமாக "உடைமை உரிமை," "அனுபோக உரிமை," "வரி" (ரென்ட்) ஆகிய இவைகளைப்பற்றி, 1802-ம் வருஷத்திய XXV, XXX ரெகுலேஷன்களைக் குறித்து, ஹாட்க்ஸன் துரை என்ன வியாக்யானம் செய்திருக்கிறாரென் பதை சற்று கவனிப்போம்.

ஹாட்க்ஸன் அறிக்கையும் (1908) கோர்ட் ஆவ் டைரக்டர்ஸ் விடுத்த அரசாங்கக்கடிதமும்.

சர்க்கார் தஸ்தவேஜுகளையும், கலெக்டர்களுக்கு அனுப்பிய குறிப்புகளையும் (1802-ம்ஹூ ஜூலைமீ 13௳ ரெகுலேஷன்கள் ஏற்படுவதற்கு முன் தயாரிக்கப்பட்டவை) ஒப்பிட்டுப் பார்த்து 1802-ம் வருஷத்திய XXV, XXX ரெகுலேஷன்களின் ஷரத்துகளை, இதுவரை பரிசீலனைசெய்து, நில அனுபோகத்தையும், நில வரி விகிதங்களையும், யாதொரு முகாந்தரத்தைக்கொண்டும், மாற்றுவண்ணம், நிரந்தரமாக முடிவு செய்வதே, 1802-ம் வருஷத்திய சட்டத்தின் நோக்கம் என்று சுட்டிக் காட்டினேம். தேசத்தின், க்ஷேமமும், செல்வமும், சாசுவத செட்டில்மெண்டின் மீதே, ஆதாரப்பட்டிருக்கின்றன, என்பது, சென்னை சர்க்காரின் பூரண நம்பிக்கை என்பதும், அதைச் சிறந்த வழியில் அமுலுக்கு கொண்டுவருவதற்கு எல்லாப் பிரயாசை யும் எடுத்துக்கொண்டு, பூரண வெற்றியடையச்செய்வது, கலெக்டர்களின் கடமை என்பதும், அவர்களுக்கு அனுப்பிய குறிப்புகளுடன் தெரிவிக்கப்பட்டது. இவ் விஷயம் ராஜப் பிரதிநிதிக்கு தெரிவிக்கப்பட்டது. ஹென்றி மாரிஸ் எழுதிய "கோதாவரி ஜில்லாவின் சரித்திர வரலாறு" (1878) என்ற புஸ்த்தகத்திலும், கோதாவரி ஜில்லா மானுயல், அத்தியாயம் 15, பக்கம் 278-லும், அது காணப்படுகிறது. சென்னை ராஜ தானியில், சாசுவத செட்டில்மென்டை, அமுலுக்கு கொண்டுவருவதின் சம்பந்தமாக, சென்னை சர்க்கார் செய்த ஏற்பாடுகளை அங்கீகரித்து ராஜப் பிரதிநிதி தெரிவித்ததாவது :—

> "இந்த ஏற்பாடுகளை ஒப்புக்கொண்டு, ராஜப் பிரதிநிதி சென்னை சர்க்காருக்கு, வெகு விளக்கமாக அறிவித்த தென்னவென்றால்—ஜமீன்களை அது வரை அனுபவித்துவந்த ஜமீன்தார்களுக்கும், இனிமேல் நிலச் சுவான்தார்களாக செய்யப்படுபவர்களுக்கும், வழங்கப்போகும், உடைமை உரிமையால், குடியானவர்கள் அனுபவித்துவந்த பாத்தியதைகள் எவ்வகையிலும் பாதிக்கப்படு மென்றாவது, குடியானவர்களுக்கு பாதுகாப்பு அளிக்கும் சட்டங்கள் செய்வதைத் தடுக்கு மென்றாவது, கொஞ்சமும் கருதக்கூடாது."

ஜமீன்தார்களுக்கு, கொடுக்கப்போகும் உடைமை உரிமையால், குடியானவர்களின் பாத்தியதைகள், பாதிக்கப்படக்கூடாதென்பதை, சாசுவத செட்டில்மென்டிற்கு, சம்மதமளித்த ராஜப் பிரதிநிதி தெரிவித்திருக் கிறார் என்பது மேற்கூறிய சாராம்சத்தினின்றும் விளங்குகிறது.

அதன் பிறகு ரெகுலேஷன்கள் தயாரிக்கப்பட்டு 1802-ம்ஹூ ஜூலைமீ 13-ம் தேதியில் சட்டமானது. ரெகுலேஷன்கள் சட்டமான தக்ஷணமே, மேற்படி ரெகுலேஷன் பிரகாரம், குடியானவன் அடைந்த உரிமைகளை ஆட்சேபிக்கவும், அவைகள் சம்பந்தமாக வழக்குகளைக் கிளப்பிவிடுவதற்கும், ஜமீன்தார்கள் முற்பட்டனர். ரெகுலேஷனிலுள்ள ஒரு ஊனமான அம்சத்தை, அதாவது, வரி விஷயமாகவும், அனுபோக விஷயமாகவும், விவகாரம் ஏற்பட்டால் அதை வியாஜ்யமூலம் முடிவுசெய்து கொள்ளலாம் என்ற ஷரத்தை ஜமீன்தார்கள் தங்கள் சார்பாக பயன்படுத்தி வந்தார்கள். ரெகுலேஷன்கள் XXVIII, XXX, XXXII, இவைகளிற் தங்களுக்கு வெகு சாதகமாயிருந்த இந்த அம்சத்தை, அதாவது, கோர்ட்டுக்கு போகாமலே, நிலச் சுவான்தார், குடியானவர்களுடைய சாமான்களை ஜப்தி செய்யலாம் என்ற விதியை, ஜமீன்தார்கள் விரிவாகப் பயன்படுத்திக்கொண்டார்கள். ஆனால் ரெகுலேஷன்கள் XXVIII, XXXII, பிரகாரம், ஜமீன் தாருக்கு கொடுக்கப்பட்ட ஜப்தி உரிமையால் குடியானவனுக்கு நஷ்டமேற்பட்டால், அதன் பரிகாரத்தை, சிவில் கோர்ட்டு மூலமாகவே தேடிக்கொள்ளவேண்டும். அது அவ்வாறு ஏற்பட்டது சர்க்காரின் அஜாக்கிரதை யாலும், அசட்டையாலுந்தான். ஜப்தி முறையால் குடியானவர்கள் மிகவும் ஹிம்சிக்கப்பட்டார்கள். குடி யானவனுக்கு பெருங் கஷ்டமாயிருந்தது. ஏனெனில், கலெக்டருக்கு மனுச்செய்துகொண்டு பரிகாரம் அடையும் உரிமை அவனுக்கு கொடுக்கப்படவில்லை. ஒருபுறத்தில், குடியானவன் இப்படிப்பட்ட கஷ்டத்தை அனுபவித்து வந்தான். மற்றொருபுறத்தில், 1802-ம் வருஷத்திய XXV-வது ரெகுலேஷன்படி நில உரிமை தன்னைச் சேர்ந்தது என்பதைப்பற்றியும், நிலத்திற்கு உடையவர் தாம்தான் என்பதைப்பற்றியும், ஆங்கில முறைப்படி தம்மிடமிருந்தே குடியானவன் அனுபோக உரிமையை அடைகிறான் என்பதைப்பற்றி யும், ஜமீன்தார் தொடுத்த வழக்குகளால் ஏழைக் குடியானவன் வாட்டப்பட்டான். மேலும் சாசுவத செட்டில்மெண்ட் காலத்தில், வரி விகிதம் நிரந்தரமாக முடிவுசெய்யப்பட்டதென்பதை ஜமீன்தார் மறுத்து குடியானவர்களிடம் அதிக வரி கேட்க்க ஆரம்பித்தார். சென்னை அரசாங்கத்தாரும், மேலதிகாரிகளும், குடியானவனுடைய உரிமையை எப்படியாவது பாதுகாக்கவேண்டுமென்று விரும்பினாலுங்கூட குடியானவ னுடைய சங்கடம் முன்கூறியதுபோலவே இருந்தது. ஏழைக் குடியானவன் தோல்வி அடைய வேண்டியதா யிருந்தது. ஏனெனில் கோர்ட்டில் வழக்காடி ஜெயிப்பதற்கு அவனுக்கு போதிய பொருள் கிடையாது. நில வரி சம்பந்தமாக சர்க்காருக்கு மூலாதாரமாயிருக்கிற குடியானவனுக்கு பாதுகாப்பளிப்பதே ரெகுலே ஷனின் முக்கிய நோக்கமாயிருக்கும்பொழுது, பேஷ்கஷையும், வரியையும், வெகு ஜாக்கிரதையுடன் சர்க்கார் நிரந்தரமாக முடிவுசெய்திருக்கிறபொழுது, ஜமீன்தார்கள் மேலதிகாரிகளுக்கு எதிராக, நீதி ஸ்தலங்களில் குடியானவனுடைய உரிமைகளை மறுக்க முயல்வது ஆச்சர்யமாயிருக்கிறது.

பட்டா ரெகுலேஷன் 1865-ம் வருஷம் வரை அமுலிலிருந்தது. 1865-ம் வருஷத்திய வரி வசூல் சட்டம் VIII அதை மாற்றினது.

பட்டா ரெகுலேஷனில் ஏற்படுத்தப்பட்ட சட்டம் 1865-ம் வருஷம் வரை அமுலிலிருந்தபோதிலும், ஜமீன்தார்கள் அதைப்பற்றி தொடர்ந்து வழக்குத் தொடுத்து வந்தார்கள். மேற்படி சந்தர்ப்பங்களில், 1802-ம் வருஷத்திலிருந்து 1865-ம் வருஷம் வரை என்ன நிகழ்ந்தது என்பதைப்பற்றி இப்பொழுது ஆராய்வோம்.

ஜமீன்தார்கள் கோர்ட்டுகள் மூலம் குடியானவர்களின் உரிமைகளை ரத்துசெய்து வருவதும், வரி வசூல் விஷயமாகவும், ஜப்தி சம்பந்தமாகவும், குடியானவர்களை ஹிம்சித்து வருவதும், சர்க்காருக்கு எட்டியது. ஜமீன்தார்கள், குடியானவர்கள் ஆகிய உபய தரப்பினருடைய உரிமைகளை பாதுகாக்கவேண்டியது சர்க்கார் கடமை. ஆதலால் ரெவினியு போர்டு அங்கத்தினரான ஹாட்க்ஸன் துரை பரி ஸ்திதிகளை ஆராய்ந்து அவை களைப்பற்றி ஒரு அறிக்கை வெளியிடுமாறு நியமிக்கப்பட்டார். அவர் விஷயங்களை நன்கு பரிசீலனைசெய்து 1802-ம் வருஷத்திய XXV, XXX, ரெகுலேஷன்களின் இலட்சியங்களையும், உட் கருத்துகளையும், விளக்கி, 1808-ம்ஹூ மார்ச்சுமீ 28௳ தேதி தமது அறிக்கையை வெளியிட்டார். சாசுவத செட்டில்மெண்ட்

காலத்தில், நிரந்தரமாக முடிவுசெய்யப்பட்ட "உடைமை உரிமை," "அனுபோக உரிமை," "வரி" (ரெண்ட்) என்ற பதப் பிரயோகங்களைப்பற்றி தமது மகத்தான அறிக்கையில் விளக்கம் செய்திருக்கிறார். சாசுவத செட்டில்மெண்ட் காலத்தில், அனுபோக முறையும், வரி விகிதமும், நிரந்தரமாக முடிவுசெய்யப்பட்டதென்றும், எந்தக் காரணத்தைக்கொண்டாவது ஜமீன்தார் வரியை உயர்த்தக்கூடாதென்றும், சர் ஜான் ஷோரும், காரன் வாலிஸ் பிரபுவும், வற்புறுத்தியதைப் போலவே, ஹாட்க்ஸன் துரையும், நிலைமையை தெளிவாக எடுத்துக் கூறியிருக்கிறார். 5-வது அறிக்கையிலுள்ள, ஒரு சாராம்சத்தை (பக்க உட் பிரிவுகள் 35 முதல் 39 வரை பக்கம் 977) கீழே தெரிவிக்கின்றோம். அதைப் பூராகவும் எடுத்து எழுதியிருக்கிறோம். ஏனெனில், அதில் விஷயங்கள் வெகு ஸ்பஷ்டமாகவும், எளிதில் அறியுமாறும் தெரிவித்திருக்கிறபடியால், தீராச் சந்தேகிகளுங்கூட தெளிவடைவார்கள். அது பின்வருமாறு :—

5-வது அறிக்கையினின்றும் ஒரு சாராம்சம் (பக்கம் 977)—1908-ம௵ மார்ச்சு௴ 28உயில், திண்டுக்கல் மாகாணத்தைப்பற்றி ஹாட்க்ஸன் எழுதியது.

பக்க உட்பிரிவு 35.—ரெகுலேஷன்களில் காணப்படும், "உடைமை உரிமைகள்" என்பதில் இரண்டு உரிமைகள் இருக்கின்றன என்பது அக்காலத்தில் தெரியவில்லை என்பதைப்பற்றியும், இக்காலத்தில், சாதாரணமாக, அவைகள் ஒப்புக்கொள்ளபடாமலிருப்பதைப்பற்றியும், நான் வருந்துகின்றேன். குடியானவர்களுக்கு ஒரு உரிமையும், ஜமீன்தார்களுக்கு மற்றொரு உரிமையுமாக, இரு பிரத்தியேக உரிமைகள் இருக்கக்கூடும். ரெகுலேஷன்களில் அடிக்கடி உபயோகப்படுத்தப்படுவதும், எல்லா ஜமீன்தார்களுக்கும் (பாரம்பர்யமாகவாவது, விலைகொடுத்து வாங்கினதினாலாவது) எல்லா ஜமீன்தார்களுக்கும் கொடுக்கப்படும் சன்னதுகளில் ஸ்திரப்படுத்தப்பட்டதுமான "உடைமை உரிமை" என்பது, வரையரையற்ற உரிமையென்று வாதிக்கப்படுகிறது ; அதாவது, ஜமீன்தார் தமதிஷ்டபடி, ஜமீனிலுள்ள எல்லா நிலங்கள்மீதும் செலுத்தக்கூடிய வரையறை செய்யாத அதிகாரம் என்று. வரி விஷயத்தில் ஜமீன்தார் தமதிஷ்டபடி நடவாமல், பிரர் விருப்பத்தின்படி நடக்கவேண்டுமென்றால், அது உடைமை உரிமைக்கு மாறானதென்று சொல்லப்படுகிறது ; ஆகையால் ஜமீன்தார் கேட்கும் வரி அதிகமென்று கருதினால், குடியானவர்கள் பிர நாட்டிற்குச் சென்று குடியேறுவதைத் தவிர, சட்டத்தில் வேறு வழியில்லை என்று சிலர் சொல்லுகிறார்கள். காரன் வாலிஸ் பிரபுவுக்கும், சர் ஜான் ஷோருக்கும், இது விஷயமாக நடந்த கடிதப்போக்கு வரவுகளையும், வங்காள ரெகுலேஷன்களையும், சாசுவத செட்டில்மெண்ட் ஏற்படுவதின் சம்பந்தமாக, சென்னை ரெவினியூ போர்டார் செய்த அறிக்கைகளையும், பொது ஜனங்கள் யாவரும் படித்திருந்தால், மேலே சொல்லப்பட்ட வாதத்திற்கு இடமிராது. மேற்கூறிய பத்திரங்களை யாவரும் படித்திருந்தால், அல்லது வரி யேற்பாடு விஷயமாக, அவைகளின் முக்கிய சாராம்சம் பலருமறிய வெளியிடப்பட்டிருந்தால், குடியானவர்களுடைய உரிமைகளை ஸ்திரப்படுத்தி பாதுகாப்பதே, சாசுவத ஏற்பாட்டின் முக்கிய நோக்கமென்பது விளங்கி யிருக்கும். ஸ்திரப்படுத்தி பாதுகாக்க என்ற வார்த்தைகளை கவனிக்கவேண்டும். ஏனெனில், புதிய உரிமைகள் கொடுக்கப்படவில்லை. குடியானவர்களுடைய வழக்கமான உரிமைகளைப்பற்றி யாதொரு சந்தேகமும் ஏற்படவில்லை. உதாரணமாக :—

முதலாவதாக, சட்டப்படியாவது, வழக்கப்படியாவது, முறைப்படியாவது, ஜமீன்தாராவது, நிலச்சுவான்தாராவது (என்ன பேரால் அழைக்கப்பட்டாலும் சரி) தன்னுடைய சௌகர்யத்தின்படி, குடியானவனிடம் வரி கேட்பதற்கு உரிமையில்லை ; அதாவது,

இரண்டாவதாக, குடியானவர்கள் தாங்கள் சாகுபடிசெய்யும் நிலங்களுக்கு குறிக்கப்பட்ட வரியைத் தவிர அதிகமான வரியைக் கொடுக்க கடமைபட்டவர்களல்ல. இவ்வுரிமை அவர்களுக்கு தொன்று தொட்டு உள்ளது.

பக்கஉட்பிரிவு 36.—இந்தியாவின் வட பாகங்களிலிருந்து கன்னியாகுமரி வரை, குடியானவர்களுக்கு இவ் வுரிமை ஸ்வயமாக உள்ளது.

பக்கஉட்பிரிவு 37.—ஆதலால், ரெகுலேஷன்களில் காணப்படும் ஜமீன்தார்களின் உடைமை உரிமை என்பது, வழக்கப்படி சர்க்காருக்குச் செல்லவேண்டிய வரியை வசூல் செய்யும் உரிமையைத் தவிற வேறல்ல. அவ்வுரிமையின் பலனாக, முதலாவது, அதிக நிலங்கள் சாகுபடி செய்யப்பட்டால், அவைகளுக்கு வழக்கமான வரி வசூல் செய்து அதன் மூலம் லாபம் அடைவது ; இரண்டாவதாக, வரி தானியமாக கொடுக்கப்பட்டால், அதன் மூலமாகவும் லாபம் அடைவது ; மூன்றாவதாக, குடியானவனும், ஜமீன்தாரும், ஒருமன ஒப்பந்தத்தை செய்துகொண்டு, தங்கள் பரஸ்பர நன்மைக்காக நிலங்களை திறமையாக சாகுபடிசெய்து அதன்மூலம் லாபம் அடைதல்.

பக்க உட்பிரிவு 38.—ஜமீன்தாரி உடைமை, உரிமை என்பதற்கு, எனது தாத்பர்யம் இதுவே. நான் தெரிவித்துள்ள எல்லா தஸ்தவேஜுகளிலும் அவ்வாறுதான் ரூபிக்கப்பட்டிருக்கிறது.

பக்க உட்பிரிவு 39.—நிலத்தைத் தன்னிஷ்டப்படி உபயோகித்து, பிறரை, அதன் அனுபோகத்தினின்றும் விலக்குவதே நில உரிமையாகும் என்று தாம் எழுதிய தத்துவ சாஸ்திரத்தில் பாலி என்பவர் விளக்கி இருக்கிறார்.

கோர்ட் ஆவ் டைரெக்டர்ஸ் விடுத்த அரசாங்கக்கடிதம்.

1802-ம் வருஷத்திய ரெகுலேஷன்களுக்கு பிறகு, ஹாட்க்ஸன் துரை, 1808-ம் வருஷத்திற் செய்த வியாக்கியானத்தை முதல் மேற்கோளாக எடுத்துக் கூறினோம். இவ் விஷயங்கள் இங்கிலாந்திலிருந்த கோர்ட் ஆவ் டைரக்டர்களுக்கு எட்டின. அவர்கள், 1812-ம௵ டிசம்பர்௴ 16உயில், தங்கள் முதல் ரெவினியூ கடிதத்தை அனுப்பினார்கள். குடியானவர்களுடைய உரிமைகளைப்பற்றி XXV, XXX ரெகுலேஷன்களின் கருத்து என்னவென்பதின் சம்பந்தமாக மிகவும் விளக்கமான மற்றொரு கடிதத்தையும் அவர்கள் எழுதினார்கள். 5-வது அறிக்கையின் 107-வது பக்க உட்பிரிவில் அவர்கள் தெரிவித்ததாவது :—

"பட்டாக்களை அமுலுக்கு கொண்டுவருவதின் சம்பந்தமாக நாங்கள் தெரிவிக்கும் உத்திரவு என்னவென்றால், இப்பொழுதுள்ள சட்டத்தின்படி ஜமீன்தார்களுக்குள்ள வரி வசூல் உரிமை ஒருபுறமிருக்க அது சம்பந்தமாக அவர்கள் அக்கிரமமாக நடந்தால் அபராதம் விதிக்கப்படும் என்பதும் மறக்கலாகாது."

"1802-ம் வருஷத்திய XXXII ரெகுலேஷனில் தெரிவித்திருக்கிறபடி வெகு சாதாரணமான சச்சரவு, எல்லை, வரம்புகளைப்பற்றியது. இது சம்பந்தமாக கலெக்டர்களுக்கு (அல்லது அவர்களுடைய கீழ் அதிகாரிகளுக்கு) சாதாரண அதிகாரமிருக்கவேண்டும். பஞ்சாயத்தாரின் தீர்ப்பை ஆதாரமாகக் கொண்டு அவர்கள் நடக்கவேண்டும். இத்தகைய விவகார விஷயங்களை முடிவுசெய்வதற்கு, இதைவிடத் திருப்திகரமான முறை இருப்பதாக தெரியவில்லை."

"மற்றொரு முக்கிய விஷயம், நாங்கள் சொல்லவேண்டியதாயிருக்கிறது. நாங்கள் உத்திரவிட்டுள்ள ஏற்பாட்டை மாற்றுவதற்காக ஏதாவது ரெகுலேஷன் செய்யப்பட்டால், அது ஜனங்கள் அறியக் கூடிய எளிய நடையில் தெரிவிக்கப்படவேண்டும். இந்த தேசத்து நீதி ஸ்தலங்களில் வழங்கும் சட்ட அமைப்புகளையும், வார்த்தைகளையும், கேவலம், பின்பற்றிச் செய்யலாகாது. ஜனங்கள் நன்றாக அறிந்துகொள்ளும்படி அவைகளை வெளியிடவேண்டும்."

குடியானவர்களுடைய உரிமையை குறித்தும், ஏற்பட்ட சட்டங்களை குறித்தும், கோர்ட் ஆவ் டைரக்டர்கள் தங்கள் அபிப்பிராயத்தை தெளிவாக கூறியிருக்கிறார்கள். அதை விளக்க வேண்டிய தேவை இல்லை. குடியானவர்களுக்கு நியாயம் வழங்கப்படவேண்டுமென்றும், சட்டத்தில் மாறுதல் ஏற்பட்டால், அது, குடியானவர்களுக்கு விளங்கும்படி எளிய நடையில் தெரிவிக்கப்படவேண்டுமென்றும், இங்கிலாந்திலுள்ள சட்ட வார்த்தைகளைக்கொண்டு குழப்பம் விளைக்கக்கூடாதென்றும், அவர்கள் அபிப்பிராயப்பட்டனர். 1802-ம் வருஷத்திய XXVIII-வது ரெகுலேஷன்படி ஜமீன்தார் அடைந்த ஜப்தி அதிகாரத்தைப்பற்றி, கோர்ட் ஆவ் டைரக்டர்ஸ் பின்வருமாறு தெரிவிக்கின்றார்கள் :—

"இவ் விஷயத்தைப்பற்றி நாங்கள் முன்னதாகவே ஒரு உத்திரவிட்டிருக்கிறோம். ஜப்திகள் சம்பந்தமான ரெகுலேஷன்கள், திருத்தி யமைக்கப்படவேண்டுமென்பது எங்கள் அபிப்பிராயம். 1802-ம் வருஷத்திய XXV-வது ரெகுலேஷன்படி ஜமீன்தாருக்கு கொடுக்கப்பட்ட ஜப்தி அதிகாரம், குடியானவர்களுக்கும், மற்றவர்களுக்கும் சொல்லமுடியாத ஹிம்சையை தரக்கூடியது என்பது, உண்மையே. நாட்டில் அடிக்கடி சண்டை சச்சரவுகள் உண்டாவதற்கு காரணமாயிருக்கும், வரி விவகாரங்களை தடுப்பதற்கும், குடியானவர்களுடைய உபத்திரவங்களை குறைப்பதற்கும், தகுந்த சாதனமாக இருப்பது பட்டா ரெகுலேஷனும், மற்ற ரெகுலேஷன்களுமே. அதை அமுலில் கொண்டு வருவது சர்க்காரின் கடமை. அதற்கு தகுந்த ஏற்பாடுகள் இருக்கவேண்டும்." 5-வது அறிக்கை, 105-வது பக்க உட்பிரிவை பார்க்கவும்).

மீண்டும் அதே பக்க உட்பிரிவில் அவர்கள் சொல்வதாவது :—

"பட்டாக்களை அமுலுக்கு கொண்டுவருவது சம்பந்தமான ரெகுலேஷன்களைப்பற்றி, 1812-ம்ௌ டிசம்பர்மீ 16உயில் நாங்கள் எழுதிய ரெவினியூ கடிதத்தில், காணப்படும் அபிப்பிராயங்களை, இச் சந்தர்ப்பத்தில் உங்களுக்கு ஞாபகப்படுத்துகிறோம். மேற்படி ரெகுலேஷன்கள் ஒழுங்காக அனுசரிக்கப்பட்டால், ஜமீன்தார்கள், குடியானவர்கள், ஆகிய இவர்களுடைய உரிமைகளும், கடமைகளும், ஸ்திரமடைந்து, பரஸ்பர நன்மை உண்டாகுமென்பது, எங்கள் திடமான நம்பிக்கையாகும். வரி சம்பந்தமாகவும், சாகுபடி செய்வதின் சம்பந்தமாகவும், ஏற்படும் வழக்குகளை சுலபமாக தீர்த்துக்கொள்வதற்கு அது ஏதுவாயிருக்கும். அதனால், நீதி ஸ்தலங்களுக்கும் சற்று ஓய்வு கிடைக்கும்."

மேற்படி ரெகுலேஷன்களை ஏற்படுத்தியவர்களின் உணர்ச்சி இவ்வாறாக இருந்தது. அவைகள் கிரியாம்சையில் ஒழுங்காகக் கொண்டுவரப்பட்டு குடியானவர்களுக்கு நியாயம் கிடைக்கவேண்டுமென்பது அவர்கள் விருப்பமாயிருந்தது. ஆனால், அவர்கள், வழக்குகளை தீர்ப்பதற்காக நீதி ஸ்தலங்களுக்கு அதிகாரம் கொடுத்த பொழுது எழுத்து மூலமாக குடியானவர்களுக்கு உரிமையையும், நித்திய அனுபவமாக வியாஜ்ஜியமாடுவதையுமே தந்தார்கள். வழக்குகளை முடிவுசெய்வதின் சம்பந்தமாக நீதி ஸ்தலங்களுக்கு அதிகாரம் தருவதற்கு பதிலாக பேஷ்கஷ் தொகையைப்பற்றி ஸ்பஷ்டமாக தெரிவித்திருந்ததைப்போல, அனுபோக உரிமையும், வரி விகிதமும், நிரந்தரமாக முடிவுசெய்யப்பட்டதென்று தெளிவாக தெரிவித்திருந்தால் யாதொரு கஷ்டமும் உண்டாயிராது. குடியானவன் செலுத்தவேண்டிய வரி, நிஷ்கரணையாகத் தெரிவிக்கப்பட்டிருந்தால், பேஷ்கஷ் தொகையை யாதொரு மாறுதலில்லாமல் செலுத்தி வருவதைப்போல, குடியானவனும் நிர்மாணிக்கப்பட்ட வரியைச் செலுத்தி வருவான். ஆனால், அக்காலத்திலிருந்த பரிஸ்திதிகளை நாம் கவனியாமல், சட்டமேற்படுத்தியவர்களை குறை கூறுவது சுலபமே. ஆதியிலிருந்து 1908-ம் வருஷம் வரை, குடியானவர்களுடைய உரிமைகளையும், பாத்தியதைகளையும், பாதுகாப்பதற்கு தங்களாலியன்ற யாவற்றையும் செய்த, காரன் வாலிஸ் பிரபு, சர் ஜான் ஷோர், பல கவர்னர்கள், ரெவினியூ போர்டார், ஆகிய இவர்களின் நல்லெண்ணத்தையும், உயரிய சிந்தையையும் சந்தேகிக்கமுடியாது.

பூர்வாங்க ரெகுலேஷன்கள் IV, V (1822).

இப்பொழுது 1822-ம் வருஷத்திய IV, V-வது ரெகுலேஷன்களைப் பற்றி ஆராய்வோம், 1808-ம் வருஷத்தில் நமது அறிக்கையில் ஹாட்க்ஸன் துரை தெரிவித்த அபிப்பிராயங்கள், 1812-ம்ௌ டிசம்பர்மீ 16உ தேதியில் கோர்ட் ஆவ் டைரக்டர்ஸ் எழுதிய ரெவினியூ கடிதத்திலும், பிறகு அரசாங்க கடிதத்திலும், அறிவிக்கப்பட்ட அபிப்பிராயங்கள், ஆகிய இவைகளுக்கு பிறகு கூட ஜமீன்தார்கள் குடியானவர்களுடைய உரிமைகளை ஆட்சேபிப்பதில் சற்றும் தயங்கவில்லை. விஷயம் முற்றினது. குடியானவர்களுடைய உரிமைகளையும், பாத்தியதைகளையும், குறித்து ஜமீன்தார்கள் கிளப்பிவிட்ட சந்தேகங்களை போக்குவதற்காக இந்திய அரசாங்கத்தாரும், சென்னை அரசாங்கத்தாரும், IV, V ரெகுலேஷன்களை சட்டமாக்க தீர்மானித்தனர். IV, V ரெகுலேஷன்கள் சட்டமாக்கப்படுவதற்கு முன் சந்தேகங்களை நிவர்த்தி செய்து, குடியானவர்களுடைய உரிமைகளை ஸ்திரப்படுத்துவதின் சம்பந்தமாக இந்திய சர்க்காருக்கும், சென்னை சர்க்காருக்கும் கடிதப்போக்கு வரவு நடந்தது. ரெகுலேஷன்கள் தயாரிப்பதின் சம்பந்தமாக ரெவினியூ போர்டு செய்த காரியக்கிரமங்களின், சில சாராம்சங்களை இங்கு எடுத்து எழுதுவது நலமாயிருக்குமென்று கருதுகிறோம். ராஜப் பிரதிநிதிக்கும், கவர்னருக்கும், நடந்த கடிதப்போக்குவரவும், ரெகுலேஷன்களை விட விவரமான தகவல்களைத் தரும் பூர்வாங்கமான ரெகுலேஷன்களும் அவைகளில் அடங்கி யிருக்கின்றன. அவைகளை ஜாக்கிரதையாகப் படிப்போமாகில், அக்காலத்து நிகழ்ச்சிகளும் குடியானவர்களுக்கு உடனே சகாயம் செய்யவேண்டுமென்கிற கருத்துடன் இங்கிலாந்தில் கோர்ட் ஆவ் டைரக்டர்ஸும், இந்தியாவில் ராஜப் பிரதிநிதியும், சென்னை சர்க்காரும், எவ்வளவோ ஆவலுடனும், துரிதத்துடனும், சட்டம் செய்ய முற்பட்டார்கள் என்பது வெகு விவரமாகத் தெரியும். 1802-ம் வருஷத்திய ரெகுலேஷன்களின் குறைகள் மேலதிகாரிகளின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டவுடன், குடியானவர்களுக்கு பாதுகாப்பு அளிப்பதற்கு சர்க்கார் எவ்வளவு ஆவலாயிருந்தார்கள் என்பது, 1822-ம் வருஷத்திய IV, V ரெகுலேஷன்களின் பூர்வாங்க மசோதாக்களுடைய சாராம்சங்களிலிருந்து தெரியவருகிறது.

ஏழைக் குடியானவர்களுடைய உரிமைகளையும், பாத்தியதைகளையும், ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் காப்பதற்காக சர்க்கார் எவ்வளவு அவா உடையவர்களாய் இருந்தார்கள் என்பதும் தெரியவருகிறது. மேலும், கிராம பரிபாலன முறை யாதொரு மாறுதலில்லாமலிருந்ததென்றும், பல சிவில் கிரிமினல் கோர்ட்டுகள் இருந்தபோதிலும், கிராம பஞ்சாயத்துகள் வெகு திறமையாக வேலை செய்து வந்தன வென்றும், வழக்குகளை விரைவாகவும், சுலபமாகவும் தீர்ப்பதில், சர்க்காருக்கு கிராம பஞ்சாயத்தில் நம்பிக்கை

உண்டு என்றும் மேற்படி சாராம்சங்கள் ருசுப்படுத்துகின்றன. 1822-ம் வருஷத்திய IV, V-வது பூர்வாங்க ரெகுலேஷன்களில் குறிக்கப்பட்ட கிராம பஞ்சாயத்துகள், மேற்படி ரெகுலெஷன்கள் சட்டமான சமயத்தில் கைநழுவ விடப்பட்டன.

1822-ம் வருஷத்திய IV, V, VI, VII ரெகுலேஷன்களைத் தயாரிப்பது சம்பந்தமாக ரெவினியூ போர்டு எடுத்துக்கொண்ட நடவடிக்கைகளின் அட்டவணை.

இந்திய சர்க்காரிடமிருந்து (1822-ம்ஷூ ஏப்ரல்மீ 16வ) ரெகுலேஷன்களின் நான்கு தயாரிப்பு நகல்கள்—தாமதமின்றி பரிசீலனை செய்யப்பட்டு, திருத்தப்படவேண்டும் என்ற குறிப்புடன்—பக்கம் 23.

சர்க்காரிடமிருந்து (மேமீ 24வ) பௌஜதாரி காரியக் கிராமங்களின் சாராம்சங்கள். 1821-ம்ஷூ ஜூன்மீ 7வ இட்ட அத்தர்து: 1818-ம் வருஷத்திய வங்காளச் சட்டம், XII ரெகுலேஷன் 2, 3, 4, 5 பிரிவுகளின் ஷரத்துகளை அனுசரித்து, ரெகுலேஷன்களின் பூர்வாங்கப் பிரதிகளை தயாரிக்கவேண்டுமென்ற குறிப்பு—பக்கம் 37.

வீடுகளில், கன்னமிடுபவர்களை விசாரிக்கும் கிரிமினல் நியாயாதிபதிகளுக்கு அதிக அதிகாரம் கொடுக்கும் ரெகுலேஷன்களின் பூர்வாங்கப் பிரதிகளை சர்க்கார் ஜூன்மீ 26வ அனுப்புதல்; பிரிவுகளிற் தெரிவிக்கப்பட்ட குறிப்புகளுக்கிணங்க—சென்ற மேமீ 24வயில் ஹில் அவர்கள் எழுதிய கடிதம்—பக்கம் 61.

"ஏ" "பீ" என்று குறிக்கப்பட்ட 2 ரெகுலேஷன்களின் பூர்வாங்கப் பிரதிகள் ஜூலைமீ 6வயில் சர்க்காருக்கு அனுப்புதல்; உரிமைகளைப் பொறுத்தமட்டில், 1802-ம் வருஷத்திய XXV, XXVIII, XXX ரெகுலேஷன்களின் முக்கிய நோக்கம் என்னவென்பதைத் தெரிவிப்பதற்காக ஒரு ரெகுலேஷன் ஜில்லா கோர்டுகள் சீக்கிரமாக விசாரணை செய்யவேண்டிய சில வழக்குகளிற் கலெக்டர்களுக்கு பிரதம அதிகாரத்தைக் கொடுப்பதற்கு மற்றொரு ரெகுலேஷன்—பக்கம் 70 (1822-ம் வருஷத்திய IV, V ரெகுலேஷன்கள்); ஜூலைமீ 12வ பதிலைப் பார்க்கவும்.

ஜூலைமீ 12வ சர்க்காரிடமிருந்து: இரண்டு ரெகுலேஷன்களின் பூர்வாங்கப் பிரதிகள் (6வயில் அனுப்பப்பட்டது) திருப்பி யனுப்பப்பட்டன. இவைகள் சில சிறு மாறுதல்களுடன் சர்க்காரால் சட்டமாக்கப்பட்டது. கவர்னர் தமது சபையுடன் செய்த அபிப்பிராயங்களுக்கேற்ப, மாறுதல்களைச் செய்யவேண்டும் என்ற குறிப்புடன், கலெக்டர்களுக்கு சில அதிகாரங்களைக் கொடுக்கும், ரெகுலேஷன்களின் பூர்வாங்கப் பிரதி திருப்பி அனுப்பப்பட்டது. (1822-ம் வருஷத்திய ரெகுலேஷன்கள் IV, V)—பக்கம் 87.

சர்க்கார் அச்சாபீஸ் இன்ஸ்பெக்டருக்கு—ஜூலைமீ 31வ—ஸ்டூஹு ரெகுலேஷன்களும், 1822-ம் வருஷத்திய ரெகுலேஷன் IV-ம்—பக்கம் 247.

வினியோகம் செய்யப்பட்ட சுற்றறிக்கை—1822-ம்ஷூ ஆகஸ்டுமீ 31வ ரெகுலேஷன்களைத் தயாரிக்கும் போர்டுக்கு—பக்கம் 263.

ரெகுலேஷன்களை தயாரிப்பது சம்பந்தமாக, கீழ்கண்ட கடிதம் சர்க்கார் நீதி இலாகாவிலிருந்து ரெவினியூ போர்டுக்கு அனுப்பப்பட்டது.

ஐயன்மீர்,

இதிலிருக்கும், ரெகுலேஷன்களின் நான்கு பூர்வாங்கப் பிரதிகளை நான் உங்களுக்கனுப்பி, கால தாமதமின்றி அவைகளைப் பரிசீலனைசெய்து திருத்தியமைக்கவேண்டுமென்று கேட்குமாறு, கௌரவ மிக்க கவர்னர் (தமது சபையுடன்) எனக்கு உத்தரவிட்டிருக்கின்றார்.

சென்ட் ஜார்ஜ் கோட்டை, ஏப்ரல்மீ 22வ.

பட்டா ரெகுலேஷன் XXX பிரகாரமும், 1802-ம்ஷூத்திய ரெகுலேஷன் XXVIII பிரகாரமும், குடியானவர்கள் அடைந்த உரிமைகளுக்கு, அதிக பாதுகாப்பளிக்கவேண்டுமென்ற கருத்துடன், 1822-ம் வருஷத்திய ரெகுலேஷன் IV உடன், 1822-ம் வருஷத்திய சென்னை ரெகுலேஷன் V-ம் ஏற்படுத்தப்பட்டது. இது ஏற்பட்டதற்குக் காரணம் பின்வருமாறு. குடியானவனுக்கும், ஜமீன்தாருக்கும், வியவகாரம் ஏற்பட்டால், குடியானவன் எந்த கோர்டுக்குப் போகவேண்டும் என்பதைப்பற்றி, 1802-ம் வருஷத்திய XXXII ரெகுலேஷனில் (இது 1802-ம் வருஷத்திய XXV, XXVIII, XXX ரெகுலேஷன்களுடன் ஒரே தேதியில் ஏற்படுத்தப்பட்டது) காணப்படும் விதிகள் குடியானவனுக்கு பாதகமாயிருந்தது.

1802-ம் வருஷத்திய V ரெகுலேஷனின் பூர்வாங்கப்பிரதி பின்வருமாறு :—

1802-ம் வருஷத்திய XXXII ரெகுலேஷனை ரத்து செய்துவிட்டு, இந்த ரெகுலேஷனை ஏற்படுத்தியதற்கு காரணம், பீடிகையில் விளக்கப்பட்டிருக்கிறது. 1802-ம் வருஷத்திய பட்டா ரெகுலேஷன் XXX, XXVIII பிரகாரம் ஜமீன்தார்கள் அடைந்த அதிகாரங்கள் மிதமிஞ்சினவாயிருந்தன. அந்த அதிகாரங்களை அக்கிரமமாக உபயோகப்படுத்தினால், அதற்கு சீக்கிரமான பரிகாரத்தைத் தேடுவது குடியானவனுக்கு கஷ்டமாயிருந்தது. குடியானவன், தனது உரிமைகளை சிவில் கோர்டு மூலம் ஸ்தாபித்துக்கொள்ளலாம், என்று கூறும், XXXII ரெகுலேஷனின் ஷரத்து, ஏழை குடியானவனுக்கு செலவையும், சுணக்கத்தையும் உண்டாக்கியது. இந்த இரண்டு காரணங்களையும் முன்னிட்டு XXXII ரெகுலேஷன் ரத்து செய்யப்பட்டு, வரிப்பாக்கி, வரிநிர்மாணம், சாகுபடி செய்யும் உரிமை, முதலியவை சம்பந்தமான வழக்குகளை, துரித முறையில் விசாரித்து, குடியானவர்களுக்கு நியாயம் வழங்க, கலெக்டர்களுக்கு அதிகாரம் கொடுக்கப்பட்டது. பட்டாக்கள் ரசீதுகள் கொடுக்க மறுப்பதற்கும், அதிகமான வரி வசூல் செய்வதற்கும், ஜமீன்தாருக்கு அபராதங்கள் விதிக்கப்பட்டு, குடியானவன் உரிமைகள் பாதுகாக்கப்பட்டு வந்தன. இந்த ரெகுலேஷனின் முக்கிய அம்சமும், 1822-ம் வருஷத்திய IV ரெகுலேஷனின் முக்கிய அம்சமும், என்னவென்றால் வழக்குகள் ஏற்பட்டால், அவைகளை சீக்கிரமாக விசாரித்து தீர்ப்புக் கூறுமாறு பஞ்சாயத்துகளுக்கு கலெக்டர் உத்திரவிடுவதே. 1822-ம் வருஷத்திய IV ரெகுலேஷன், முடிவாக அமைக்கப்படுவதற்கு முன் அதிலொரு பிரிவு இருந்தது. அதாவது, விசாரித்து தீர்ப்புக்கூறுவதற்கு, வியவகார வழக்குகள் பஞ்சாயத்துக்கு அனுப்பலாம் என்று, ஆனால், பின்னால் அது விலக்கப்பட்டது. பரிசீலனை செய்து திருத்தியமைப்பதற்கு, 1822-ம் வருஷத்திய பூர்வாங்க ரெகுலேஷன்கள் IV, V ரெவினியூ போர்டுக்கு, கவர்னரால் (தமது சபையிலமர்ந்து) அனுப்பப்பட்டன.

பூர்வாங்க ரெகுலேஷன்கள் IV, V பின்வருமாறு :—

II. 1802-ம் வருஷத்திய XXV, XXVIII, XXX ரெகுலேஷன்களின் ஷரத்துகள், எவ்வகைப்பட்ட குடியானவர்களுடைய உரிமைகளையாவது, குடியானவர்களுடைய உரிமைகளைப்பற்றியாவது, குறைப்ப தற்காவது, வரையறை செய்வதற்காவது, ஏற்படுத்தவில்லை. ஆனால், குடியானவர்கள் தாங்கள் நியாயமாகச் செலுத்தவேண்டிய வரியைச் செலுத்த தவறினால், அவர்கள் மீது என்ன நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ள வேண்டுமென்பதையும், அதனால் குடியானவர்களுக்கு நஷ்டம் ஏற்பட்டால், உரிமைகள் பாதிக்கப்பட்டால், அதற்குத் தகுந்த நஷ்ட ஈட்டையும், செலவு தொகையையும், கோர்டுகள் மூலம் பெறலாம் என்பதையும்தான், அது தெரிவிக்கிறது.

உள்ளடக்கம் எண் 2

1802-ம் வருஷத்திய XXVIII, XXX ரெகுலேஷன்களின்படி சர்க்கார் ரெவினியூ அதிகாரிகள் சம்பந்தமில்லாத விவகாரங்களில், கலெக்டர்களுக்கு பிரதம அதிகாரத்தைக்கொடுத்து, அவைகளைத் தீர்ப்பு செய்யும்படி பஞ்சாயத்திற்கு அனுப்புவதற்கும், கவர்னரால் ஏற்படுத்தப்பட்ட இந்த ரெகுலேஷன்களை, திருப்பி அமுலுக்கு கொண்டு வருவதற்கும், இப்புதிய ரெகுலேஷன் உத்தேசிக்கப்படுகிறது.

1802-ம௵த்திய V-வது ரெகுலேஷன் (பூர்வாங்கம்.)

1802-ம் வருஷத்திய XXVIII, X X-வது ரெகுலேஷன்களின் பிரகாரம், ஜில்லா கோர்ட்டுகள், துரிதமாக விசாரணை செய்யவேண்டிய விவகாரங்களில் கலெக்டர்களுக்கு பிரதம அதிகாரத்தை கொடுப்பதற்கும், 1802-ம் வருஷத்திய X XII-வது ரெகுலேஷனை ரத்து செய்து மேற்கூறிய ரெகுலேஷன்களின் ஷரத்துக்களை திருத்தியமைப்பதற்கும், மேற்படி சட்டத்தின்படி, ஜில்லா கோர்ட்டுகள் விசாரணை செய்யவேண்டிய வழக்குகளில், கலெக்டருக்கு துரித அதிகாரம் கொடுப்பதற்கும், அத்தகைய வழக்குகளை, கலெக்டர்கள், பஞ்சாயத்திற்கு அனுப்புவதற்கும், 1822-ம௵ ஜூலை௴ 19௳ கவர்னரால் ஏற்படுத்தப்பட்ட 1816-ம் வருஷத்திய X I-வது ரெகுலேஷன் ஷரத்துகளை, இன்னும் பல இடங்களில் அமுலுக்கு கொண்டுவருவதற்கும், இந்த ரெகுலேஷன் (1802-ம் வருஷத்திய V-வது ரெகுலேஷன். பூர்வாங்கம்).

பீடிகை.—1802-ம் வருஷத்திய XXVIII, XXX ரெகுலேஷன்களில் காணப்படும் விதிகள், குடியானவர்களுடைய பாதுகாப்பிற்குபோதிய ஆதரவளிப்பதாக தெரியவில்லை, ஏனெனில், ஜமீனதார்களுக்குள்ள அதிகாரங்கள், செயல் முறையில் துரித பலன் தருவதாய் இருக்கும்பொழுது, மேற்படி அதிகாரங்களை ஜமீன்தார்கள் அக்கிரமமாக உபயோகப்படுத்தினால், அதற்கு, ஏழைக்குடியானவர்கள், அதிக செலவு செய்து, வியாஜ்ஜியமாடி, கோர்ட்டுகள் மூலமாகவே பரிகாரத்தை தேடவேண்டியிருக்கிறது. ஆதலால் மேற்படி ரெகுலேஷன்களின்படி அடலத் கோர்ட்டுகளில், விசாரணை செய்யப்பட்டு வந்த இந்த வியவகாரங்களில், இனிமேல், கலெக்டர்களுக்கு பிரதம அதிகாரம் கொடுக்கவேண்டுமென்று, உத்தேசிக்கப்படுகிறது. ஆனால், அந்த வழக்குகள், சர்க்கார் அதிகாரிகள் சம்பந்தப்படாத வழக்குகளாக இருக்கவேண்டும், இந்த விவகாரங்களில், கலெக்டர்கள், முதலாவதாக, மேற்படி ரெகுலேஷன்களில் ஏற்படுத்தப்பட்டுள்ள அபராதங்களை விதிக்கவேண்டும். கக்ஷிக்காரர்கள் விரும்பினால், கலெக்டர்களின் தீர்ப்புகள், சிவில் கோர்ட்டுகளால் புனர் விசாரணை செய்யப்படலாம். மேலும், நில அனுபோகத்தைப்பற்றியும், சாகுபடி செய்வதைப்பற்றியும், நீர்பாய்ச்சலைப்பற்றியும், திடீரென்று சண்டை சச்சரவு ஏற்பட்டால், அவைகளைத் தடுப்பதற்குத் தகுந்த ஏற்பாடுகள், 1802-ம் வருஷத்திய XXXII-ம் ரெகுலேஷன் விதிகளில் காணப்படவில்லை. ஆதலால், மேற்படி ரெகுலேஷனை ரத்து செய்து, இதுவரை ஜில்லா அடலத் கோர்டுகள், விசாரித்து வந்த வழக்குகளை, இனிமேல், கலெக்டர்கள், துரிதமாக விசாரணை செய்யும்படி, அவர்களுக்கு அதிகாரம் கொடுப்பது நலம் என்று தோன்றுகிறது. மேலும், வரிபாக்கிகளைப்பற்றியும், வரி நிர்மாணத்தைப்பற்றியும், நில அனுபோகத்தைப்பற்றியும், சாகுபடி, செய்வதைப்பற்றியும், வழக்குகள் ஏற்பட்டால், அவைகளை சில சமயங்களில், பஞ்சாயத்துகள், விசாரணை செய்வது குடியானவர்களுக்கு, வசதியையும், செலவுக்குறைவையும், நியாயத்தையும், தருமென்று, தோன்றுகிறது. ஆதலால், அப்படிப்பட்ட வழக்குகளை, பஞ்சாயத்துகள் விசாரணை செய்யும்படி கலெக்டர்கள் உத்திரவிடுவது நலமென்று கருதப்படுகிறது. அதற்கேற்ப 1816-ம் வருஷத்திய XII-வது ரெகுலேஷனில் உள்ள சில ஷரத்துக்கள் திருத்தியமைக்கப்படவேண்டும். அது சம்பந்தமான சில விதிகளை கவர்னர் அவர்கள் ஏற்படுத்தியிருக்கிறார்கள். அவைகள் விளம்பரம் செய்த தேதியிலிருந்து அமுலுக்கு வரும்.

II. 1802-ம் வருஷத்திய XXVIII, XXX-வது, ரெகுலேஷன்களின்படி, இதுவரை ஜில்லாக் கோர்ட்டுகள் விசாரித்து வந்த வழக்குகளை இனிமேல் கலெக்டர்கள் விரைவாக விசாரிக்கும்படி, அவர்களுக்கு அதிகாரம் கொடுக்கப்படுகிறது. 1802-ம் வருஷத்திய XXV, XXVIII, ரெகுலேஷன்களில் தெரிவிக்கப்பட்டுள்ள வழக்குகள் இதிலிருந்து விலக்கப்படுகின்றன. சரியென்று தெரிகிற நஷ்ட ஈட்டையோ, செலவு தொகையோ, அபராதத்தையோ, கலெக்டர்கள் விதிக்கலாம். ஆனால் அதற்காக ரெகுலேஷனில் குறிக்கப்பட்ட தொகையை விட அதிகமாயிருக்கக்கூடாது. இந்த ரெகுலேஷன்களும், இதற்கு முன் சர்க்கார் செய்த அறிக்கைகளும், கீழ்கண்ட விஷயத்தை நன்கு விளக்குகிறது :—" குடியானவர்கள், தாங்கள் சாகுபடி செய்யும் நிலங்களுக்கு வரையறை செய்யப்பட்ட வரியைத்தவிர அதிகமான வரியை கொடுப்பதற்குக் கடமைபட்டவர்களல்ல. இவ்வுரிமை அவர்களுக்குதொன்றுதொட்டு உள்ளது. மேலும், ஜமீன்தார்கள், தங்கள் இஷ்டப்படி குடியானவர்களிடம் வரி வசூல் செய்யக்கூடாது." IV, V-வது ரெகுலேஷன்கள் அனுபந்தத்தில் பதிபிக்கப்பட்டிருக்கின்றன. பஞ்சாயத்துகள் சம்பந்தமான குறிப்புகள், முடிவான ரெகுலேஷன்களிலிருந்து, எவ்வாறு விலக்கப்பட்டன என்பதற்கு அவைகள் ஆதாரமாயிருக்கும்.

பட்டா ரெகுலேஷன் XXXIII—கலெகடர்களுக்கு விடுத்த குறிப்புகள்.

1802-ம் வருஷத்திய XXV-வது ரெகுலேஷன் பீடிகையின் கடைசிவாக்கியம் பின்வருமாறு :—

> " இந்த நிலங்களின்மீது மிதமான நிலவரியை, சாசுவதமாக நிர்மாணம் செய்யவேண்டும். அப்படியேற்பட்ட தொகை எந்த சந்தர்ப்பங்களிலும், எந்தக் காரணத்தை கொண்டாவது மாற்றப்படக்கூடாது."

மேற்படி வார்த்தைகளின் பூரண அர்த்தத்தை அறியவேண்டுமென்றால், ஒரே தேதியில் ஏற்படுத்தப்பட்ட 1802-ம் வருஷத்திய XXX-வது ரெகுலேஷன் பீடிகையைபடிக்கவேண்டும். அது பின்வருமாறு :—"விளைச்சலை பங்கிட்டுக்கொள்வதின் சம்பந்தமாகவும், சில நிலங்களுக்கு பணவரி கொடுப்பது சம்பந்தமாகவும், இப்பொழுதுள்ள நிலைவரமற்ற முறையை ஒழித்துவிடுவது நலமென்று தோன்றுகிறது. அதற்கு பதிலாக குடியானவர்களும், ஜமீன்தார்களும், நிர்ணயமான ஒப்பந்தங்களை செய்துகொள்ளவேண்டுமென்றும், அதனால் அனுபோக ஸ்திரமும், வசதிகளும் ஏற்படுமென்றும், வழக்கு விவகாரங்கள் ஓய்ந்துவிடுமென்றும்,

எங்களுக்கு தெரிகிறது ; ஆதலால், ஜமீன்தார்கள், குடியானவர்கள் முதலியவர்களுக்கு பட்டா கொடுக்க வேண்டியதின் சம்பந்தமாக கீழ்கண்ட விதிகள் ஏற்படுத்தப்படுகின்றன." இவ்வாறாக, ஜமீன் நிலங்களுக்கு சர்க்கார் நிலவரி சாசுவதமாக ஏற்பட்ட சமயத்திலேயே, விளைச்சலை பங்கிட்டுக் கொள்வதின் சம்பந்தமாகவும், சில நிலங்களுக்கு பண வரி வசூல் செய்வதின் சம்பந்தமாகவும், இருந்த பழைய நிலைவரமற்ற முறை ஒழிக்கப்பட்டது. அதன் ஸ்தானத்தில், குடியானவர்களுடைய நன்மைக்காக, நிர்ணயமான ஒப்பந்தங்கள் ஏற்பட்டன. அதை முன்னிட்டே பட்டாக்கள், முச்சலிக்கைகள், மாற்றிக்கொள்ளப்படவேண்டுமென்று விதிக்கப்பட்டது.

இதிலிருந்து பழைய வரி வசூல் சம்பந்தமான நிலைவரமற்ற முறை ஒழிக்கப்பட்டு, அதற்கு பதிலாக நிர்ணயமான ஒப்பந்தங்களைக் கொண்ட பட்டாக்கள், முச்சலிக்கைகள் உண்டாயின. அதாவது மேற்படி ஒப்பந்தத்தின்படி வரி விகிதங்கள் நிரந்தரமாக முடிவு செய்யப்பட்டன ; பட்டாக்கள், முச்சலிக்கைகள், மாற்றிக்கொள்ளப்படவேண்டுமென்பதும் கட்டாயமானது. அதே சமயத்தில், சர்க்காருக்குச் செலுத்தவேண்டிய பேஷ்கஷ் தொகை (நிலவரி வருமானத்தில் சர்க்கார் பங்கு) சம்பந்தமாக சர்க்காருக்கும், ஜமீன்தாருக்கும், நிர்ணயமான ஒப்பந்தம் ஏற்பட்டது. அது சன்னது, கபூலியத்துகளில், குறிக்கப்படவேண்டுமென்று விதிக்கப்பட்டது. சன்னது, கபூலியத்துகளை, சர்க்காரும், ஜமீன்தாரும், மாற்றிக்கொள்ளவேண்டுமென்பதும், கட்டாயப்படுத்தப்பட்டது.

சன்னது ஸ்திரமாயிருக்கவேண்டுமென்றால், 3, 8, 14 பிரிவுகளிலுள்ள நிபந்தனைகள் நிறைவேற்றபடவேண்டுமென்பதை முன்னரே தெரிவித்திருக்கிறோம். ரெகுலேஷன் XXV-ல் 14-வது பிரிவின்படி ஜமீன்தார் குடியானவனுக்கு கொடுக்கும், பட்டா, அல்லது கவுலில், குடியானவன் செலுத்தவேண்டிய வரித்தொகையும், அது சம்பந்தமான ஒவ்வொரு நிபந்தனையும் விளக்கமாக குறிக்கப்படவேண்டும். சாசுவத செட்டில்மென்ட் ரெகுலேஷன், 14-வது பிரிவில் காணப்படும் "குடியானவன் செலுத்தவேண்டிய தொகையை வரையறை செய்தல்" என்ற வார்த்தைகளும், XXX ரெகுலேஷன் பீடிகையில் காணப்படும் "நிர்ணயமான ஒப்பந்தங்கள்" என்ற வார்த்தைகளும், ஒரே அர்த்தத்தை தெரிவிக்கின்றன. "வரித் தொகையை வரையறை செய்தல்." "நிர்ணயமான ஒப்பந்தங்கள்" என்ற வார்த்தைகளின் பொருள் என்னவென்றால், பேஷ்கஷைப்போலவே, வரியும், நிர்ணயம் செய்யப்பட்டு, நிரந்தரமாக விதிக்கபடவேண்டும் ; அவ்வாறு முடிவு செய்யப்பட்ட இரண்டு அம்சங்கள்தான் நிலங்கள் மீது விதிக்கப்பட்ட மிதமான சர்க்கார் வரி ; எந்த சந்தர்ப்பங்களிலும் அந்த இரு தொகைகள் மாற்றப்படக்கூடாது.

எதிர்காலத்தில் யாதொரு மாறுதலுமின்றி, பேஷ்கஷும், வரிவிகிதங்களும், நிரந்தரமாக முடிவு செய்யப்பட்டால்தான், 1802-ம் வருஷத்திய XXV ரெகுலேஷன் 2-வது பிரிவில் குறித்துள்ளபடி, நிலவரி சம்பந்தமாக சாசுவத நிர்ணயம் உண்டாகும். சாசுவத செட்டில்மென்ட் ஏற்படுவதற்கு முன், பேஷ்கஷும், வரி விகிதங்களும், நிரந்தரமாக முடிவு செய்யப்பட்டு, அவைகள், முறையே, ஜமீன்தார்கள் சன்னதுகளிலும், குடியானவர்களுடைய பட்டாக்களிலும் குறிக்கப்படவேண்டும்.

பேஷ்கஷும், வரிவிகிதங்களும் நிரந்தரமாய் முடிவு செய்யப்பட்டால் தான், வரி வசூல் செய்வதற்காவது, வரி சம்பந்தமாக வாதாடுவதற்காவது, ஜமீன்தாருக்கும், அல்லது சர்க்காருக்கும, அல்லது குடியானவனுக்கும், அதிகாரம் ஏற்படும்.

3, 8, 14 பிரிவுகளில் குறிக்கப்பட்டுள்ள பட்டா, முச்சலிக்கைகளை, மாற்றிக்கொள்வதின் அர்த்தம், பிரதி வருஷமும் வரி சம்பந்தமாக, புதிய ஒப்பந்தங்களைச் செய்துகொள்ளவேண்டுமென்பதல்ல. வரிவிகிதங்கள் நிர்ணயம் செய்யப்பட்டு, பட்டாக்களிலும், சன்னதுகளிலும், குறிக்கப்பட்டபொழுதே அவைகள் நிரந்தரமாக ஏற்படுத்தப்படவேண்டுமென்று கொள்ளவேண்டும். முதலில் அவைகள் உண்டானால்தான், பின்பு சாசுவத செட்டில்மென்ட் ஏற்படும். 1802-ம் வருஷத்திய XXV, XXX ரெகுலேஷன்களிலும், அவைகளையொட்டிய மற்ற ரெகுலேஷன்களிலும் தெரிவித்துள்ளபடி, அப்பொழுதுதான் சர்க்கார், ஜமீன்தார், குடியானவன், ஆகிய இவர்களுக்கு, தங்கள், தங்கள், தனி உரிமைகள் ஏற்படும்.

ஒன்றோடு ஒன்று இணைந்துள்ள மேற்படி இரண்டு ரெகுலேஷன்கள், சேர்ந்துதான், சாசுவத செட்டில் மெண்டை ஏற்படுத்துகின்றன.

அனுபோக ஸ்திரத்தையும், வரி ஸ்திரத்தையும், உண்டாக்கி, ஜமீன் நிலங்களின் மீது மிதமான சர்க்கார் வரியை, விதிப்பதற்கு, அவைகளில் ஷரத்துகள் இருக்கின்றன.

1802-ம் வருஷத்திய XXX, XXV ரெகுலேஷன்களின் நோக்கமென்ன, பொருள் என்னவென்பதைப்பற்றி இதுவரை விரிவாக ஆராய்ச்சி செய்தோம். மேற்படி ரெகுலேஷன்கள் ஏற்படுவதுவதற்கு முன்னும், ஏற்படுத்திய பிறகும், எங்கள் முடிவுகளுக்கு ஆதாரமாக உள்ள மேற்கோள்களை இப்பொழுது தெரிவிக்க விரும்புகிறோம்.

அதிக குழப்பத்திற்கும், சங்கடத்திற்கும், காரணமாயிருந்த "நிலத்திற்கு உடையவர்" என்ற வார்த்தைகளின் அர்த்தம் என்னவென்பதைப்பற்றி, ராஜப்பிரதிநிதியின், சர்க்கார் தஸ்தவேஜுகளின் சில சாராம்சங்களை தெரிவித்தோம். இந்த ரெகுலேஷன்கள், கவர்னரால், ஒரே இரவில், தீர்மானிக்கப்பட்டு, எழுதப்பட்டு, சட்டமாகச் செய்யப்படவில்லை.

சட்டசபைகள் இல்லாத அக்காலத்தில், மேற்படி ரெகுலேஷன்கள், முடிவாக ஏற்படுவதற்குமுன், அவைகளைப்பற்றி எல்லா முக்கிய அதிகாரிகளும், சிந்தித்தும், ஆராய்ச்சிசெய்தும், விவாதித்தும், வந்தார்கள். சாசுவத செட்டில்மென்ட் சம்பந்தமான, ஆரம்ப தீர்மானங்களுக்கு காரணபூதமாயிருந்தவர்கள், சர். ஜான் ஷோரும், (இவர், பிறகு மார்னிங்டன் பிரபு வானார்), வெல்லெஸ்லி பிரபுவுமே. அவர்கள், முதலில் தங்களுக்குள்ளேயே ஆலோசனை செய்து கொண்டார்கள். அதன் பிறகு அவர்கள் தங்கள் திட்டத்தை முடிவாக விவரிப்பதற்குமுன், ரெவினியூ போர்டையும், கலெக்டர்களையும், பிறரையும், யதாஸ்துகள் அனுப்புமாறு உத்திரவிட்டனர்.

சென்னை ரெகுலேஷன்களை பொறுத்தமட்டில், சர் ஜான் ஷோர், (இப்போழுது மார்னிங்டன் பிரபு வானார்). 1799-மஹூ செப்டம்பர்மீ 4உயில் செண்ட் ஜார்ஜ் கோட்டையில், கவர்னர் சபைக்கு அக்கிராசனம் வகித்து அவரும், கிளைவ் பிரபுவும், என்னும் மூவரும், இராஜதானியிலுள்ள கலெக்டர்களுக்கு விடுத்த கடிதத்தில் கையொப்பமிட்டார்கள். மேற்படி கடிதத்தில், சாசுவத செட்டில்மென்ட் சம்பந்தமாக விவரமான உத்திரவுகள் கொடுக்கப்பட்டிருந்தன. அக்கடிதத்தின், பக்க உட்பிரிவுகள் 3, 4-ல் பின்வருமாறு தெரிவிக்கப்பட்டிருக்கிறது :—

> பக்க உட்பிரிவு 3.—"பல ஜில்லாக்களிலிருக்கும், தாலுக்தார்களுடைய உரிமைகளைப்பற்றியும், குடியானவர்களுடைய உரிமைகளைப்பற்றியும், அவசியமான எல்லாத்தகவல்களையும் நீங்கள் தயாரிக்கவேண்டும். ஏனெனில், ஜமீன்தார்களுக்கு, உடைமை உரிமைகள், ஸ்திரப்படுத்தும்பொழுது, நாம், மற்றவர்களுடைய உரிமைகளை, நிர்ணயம் செய்யத்தவறலாகாது."

பக்கஉட்பிரிவு 4.—" உடைமை உரிமை, சர்க்காருக்குச் சேரும் ஹாவலி நிலங்களை, 1 முதல் 10,000 பக்கோடா, வருஷ ஜம்மாகதரக்கூடிய எஸ்டேட்டுகளாக பிரித்து அமைக்கவேண்டும். அவைகளுடைய சொத்துவிவரங்களையும், மதிப்பையுங்கூட தெரிவிக்கவேண்டும். ஏனெனில், சாத்தியமான வரையில், இந்த நிலங்களின் உடைமை உரிமையை, நிலச்சுவான்தார்களுக்கு மாற்றவேண்டுமென்பது எங்கள் கருத்து."

கலெக்டர்களுக்கு அனுப்பிய கடிதம் இப்படிப்பட்டது. அதில் குறிப்பு பத்திரமும் அடங்கியிருந்தது. கலெக்டர்களுக்கு அனுப்பிய குறிப்பு பத்திரத்தில், 74 பிரிவுகள் இருந்தன. அதைப்படிப்பவர்களுக்கு 1802-ம் வருஷத்திய XXX, XXV ரெகுலேஷன்களை ஏற்படுத்தியவர்களின் நோக்கம் என்னவென்பதும், முக்கிய ஷரத்துகளின் போக்கு என்னவென்பதும், எளிதிற் தெரியும். குறிப்பு பத்திரம், கலெக்டர்களுக்கு அனுப்பப்படுவதற்கு முன், அவைகள், சர் ஜான் ஷோர், காரன்வாலிஸ், பிரபு முதலியவர்களால் ஆலோசிக்கப்பட்டு, அது சம்பந்தமான காரியக்கிரமங்களும் தாக்கல் செய்யப்பட்டன. சர்ஜான் ஷோரும், காரன்வாலிஸ் பிரபுவும், இன்னும் சிலரும், இந்த நாட்டு ஏழை மக்களை கைதூக்கிவிட வேண்டுமென்று கங்கணம் கட்டிக்கொண்டு அவர்களுடைய உரிமைகளை பாதுகாப்பதிற்காக, எல்லாவகையிலும் பாடுபட்டார்கள்.

கலெக்டர்களுக்கு அனுப்பிய குறிப்புப்பத்திரத்தை, பரிசீலனை செய்வதன்முன், ராஜப்பிரதிநிதியின், அரசாங்க தஸ்தவேஜிகளிலிருந்து எடுக்கப்பட்ட சில சாராம்சங்களை (சர் ஜான் பாரஸ்ட் பிரசுரம் செய்தது) ப்பற்றி ஆராய்வோம். 1802-ம் வருஷத்திய சாசுவத செட்டில்மெண்ட் ஏற்படுவதற்கு முன், வரிவிகிதங்கள் நிரந்தரமாக முடிவு செய்யப்பட்டது என்பதற்கு ஆதாரமாக, கீழ்கண்ட வாசகத்தை, தெருவிக்கின்றோம். (ராஜப்பிரதிநிதியின் அரசாங்க தஸ்தவேஜிகள், தொகுதி I, முகஉரை.—119 முதல் 207 வரை, 198-வது பக்கம், அவ்வாசகம் பின்வருமாறு :—

"1789-ம் ௵ ஜூன் ௴ 18உயில், சர்ஜான் ஷோர் (பிறகு மார்னிங்டன் பிரபுவானுர்), வங்காள சாஸ்வத செட்டில்மெண்டைப்பற்றி, தமது பிரசித்திவாய்ந்த அறிக்கையை வெளியிட்டார். வெகு திறமையாக எழுதப்பட்ட இந்த அரசாங்க பத்திரம், 5-வது அறிக்கையில், நுணுக்கமாக அச்சிடப்பட்ட 70 பக்கங்களை கவருகிறது. அவ்வறிக்கையின் இறுதியில், மேற்படி ஏற்பாட்டின் மூலாதாரக் கொள்கைகளைத் தெரிவித்திருக்கிறார். (1) சர்க்காருக்கு செல்லவேண்டிய நிலவரி விஷயமாக உறுதி. (2) நாட்டில் அமைதியும், குடிகளுக்கு பாதுகாப்பும், ஜமின்தார்கள், அல்லது நிலச்சுவான்தார்களோடு சாசுவத ஏற்பாடு செய்துகொள்வதால், முதலாவது கூறப்பட்டதை ஸ்தாபிக்கலாம்; அவர்களுடைய பூமிகளே சர்க்காருக்கு உத்திரவாதமாயிருக்கும். வரையறை செய்யப்பட்ட வரியை, சாத்தியமானவரை செய்கையில் கொண்டுவருவதால், இரண்டாவது குறிக்கப்பட்டதே ஸ்திரமடையும். ஒவ்வொரு குடியானவனும் செலுத்தவேண்டிய தொகை நிச்சயமானதாயிருக்கவேண்டும். நிலைவரமற்றதாயிருக்கக்கூடாது. எப்பொழுது செலுத்தவேண்டும், எவ்வாறு செலுத்தவேண்டும், எவ்வளவு செலுத்தவேண்டும், என்பது யாவரும் அறியும்படி தெளிவாகவும், வெளிப்படையாகவும் இருக்கவேண்டும்."

சர் ஜான் ஷோர் அறிக்கையில் காணப்படும் இந்த வாசகம், அரசாங்கப்பத்திரங்களிலிருந்து பொறுக்கியெடுக்கப்பட்ட ஒரு சாராம்சமாகும். வங்காள சாசுவத செட்டில் மெண்டைப்பற்றி, சர் ஜான் ஷோர் விவரித்த இரண்டு முக்கிய கொள்கைகள் பின்வருமாறு :—

(1) நிலவரி விஷயமாக சர்க்காருக்கு உறுதி.

(2) நாட்டில் அமைதியும், குடிகளுக்கு பாதுகாப்பும்.

நிலச்சுவான்தார்கள் என்றும் அழைக்கப்பட்ட ஜமீன்தார்களோடு, நிரந்தர ஏற்பாடு செய்துகொள்வதால், சர்க்கார் வரி ஸ்திரமடையும் என்று அவர் கூறினர்.

குடிகளுடைய பாதுகாப்பும், நிம்மதியும், அவர்கள் செலுத்தவேண்டிய வரியை ஸ்திரமாக முடிவு செய்வதால், நிலை நாட்டப்படுமென்றும் அவர் அபிப்ராயப்பட்டார். அதாவது, பட்டாதார் செலுத்தவேண்டிய வரித்தொகை நிச்சயமானதாக இருக்கவேண்டுமே யொழிய, அவ்வப்பொழுது மாற்றக்கூடாது. வரிசெலுத்தும் குடியானவனுக்கு எப்பொழுது செலுத்தவேண்டும், எவ்வாறு செலுத்தவேண்டும், எவ்வளவு செலுத்தவேண்டும், என்பது வெளிப்படையாகவும், தெளிவாகவும் இருக்கவேண்டும் என்றும் அவர் சொன்னர். இது, 1789-ம் ௵ ஜூன் ௴ 18உயில் எழுதப்பட்டது. அதாவது சாசுவத செட்டில்மெண்ட் ரெகுலேஷன்கள் ஏற்படுவதற்கு 13-வருஷங்களுக்கு முன் எழுதப்பட்டது.

இந்த ரெகுலேஷன்களின் பிரகாரம், அனுபோகஸ்திரத்தையும், வரி ஸ்திரத்தையும், குடியானவன் அடைந்தான், என்பதை விளக்கும், ஒரு வாசகத்தை, அதை புஸ்தகத்திலிருந்து (207-வது பக்கம்) எடுத்தெழுதுகிறோம் :—

"நிலங்களில், ஜமீன்தார்களுக்கு நியாயமான உரிமை இருக்கிறதென்பதை நமது சர்க்கார் ஒப்புக்கொண்டிருக்கிறது, என்று வாரன் ஹேஸ்டிங்ஸ், எழுதினுர். அந்த அபிப்பிராயத்தை, சாசுவத செட்டில்மெண்ட் ஸ்திரப்படுத்தியது. ஆனுல் மேற்படி சாசுவத செட்டில்மெண்ட் சட்டமாகச் செய்த 1793 ரெகுலேஷனில் காணப்படும், ஷரத்துகள், ஜமீன்தார்கள், நிலங்களுக்கு பூரண உரிமையாளர்கள் என்ற கருத்திற்கு விபரீதமாக இருக்கின்றன. ஜமீன்தார்களின்கீழ் நிலங்களை அனுபவித்துவந்த, தாலூக்தார்கள், முதலியவர்களுடைய உரிமைகள், ஏற்படுத்தப்பட்ட வரியை செலுத்தி வந்தவரை, அங்கீகரிக்கப்பட்டும், பாதுகாக்கப்பட்டும் வந்தன. அனுபோகஸ்திரமும், வரி ஸ்திரமும், குடியானவனுக்கு கொடுக்கப்பட்டது.

"நிலத்திற்கு உடையவர்கள்," அல்லது, "நிலத்திலுள்ள உடைமை" உரிமை என்ற வார்த்தைகள் பலருக்கு சந்தேகத்தை உண்டாக்கினது. மேற்படி வார்த்தைகள், சாசுவத செட்டில்மெண்ட் ரெகுலேஷனிலேயே உபயோகப்படுத்தியிருப்பதால், ஜமீன்தார்களுக்குக் கொடுக்கப்பட்டது, பூர்ண உரிமையா அல்லவா, என்று பலர் மயங்கினர். ஆனுல் மேலே அறிவிக்கப்பட்ட சாராம்சத்தில் கண்டபடி ரெகுலேஷன்களின் விதிகளில், சந்தேகத்திற்கிடமில்லாமல் விளக்கப்பட்டிருக்கின்றன. இக்கருத்தைக்கொண்டே நாங்கள் 1802-ம் ௵த்திய XXV, XXX ரெகுலேஷன்களை விரிவாக பரிசீலனை செய்து, சாசுவத செட்டில்மெண்ட் பிரகாரமும், சன்னதுகளின் பிரகாரமும், சர்க்காரால் ஜமீன்தாருக்கு கொடுக்கப்பட்ட உரிமை, வரையறை செய்யப்பட்ட குறுகிய உரிமை என்று காட்டியிருக்கின்றோம். ஸ்திர அனுபோகமுறையும், ஸ்திர வரியும், நிலைநாட்டப்பட்டு, குடியானவர்களுடைய உரிமைகள், எவ்வாறு பாதுகாக்கப்பட்டது என்பது, மேலே தெரிவிக்கப்பட்ட வாசகத்தில் எழுதியிருக்கிறது.

சாசுவத செட்டில்மெண்ட் காலத்தில், நிரந்தரமாக முடிவு செய்யப்பட்டதென்பதற்கும், அனுபோக முறையும், எக்காலத்திலும் மாற்றமுடியாவண்ணம் ஸ்திரமாக்கப்பட்டதென்பதற்கும், ஆதாரமாக, ஸர் ஜான் பாரஸ்ட், பிரசுரம் செய்த அரசாங்கபத்திரம் 2-வது தொகுதியிலிருந்து ஒரு சாராம்சத்தை இங்கு எடுத்தெழுதுகிறோம். 93-வது பக்கத்திலுள்ள அவ்வாசகம் பின்வருமாறு :—

குடியானவனிடமிருந்து, ஜமீன்தார், வசூல் செய்யும் வரியை சுளுவாகச் செய்வதற்கு முதலாவதாக அத்தொகை நிரந்தரமாக முடிவு செய்யப்படவேண்டும் ; அதற்கு பிறகு, சர் ஜான் ஷோர், வங்காள செட்டில்மென்டுகளைப்பற்றி எழுதிய அறிக்கையில், காணப்படும் தத்துவங்களுக்கிணங்க, ஜமீன்தார்கள், குடியானவர்களுக்கு, பட்டாக்களை சுலபமாக கொடுக்கவேண்டும்.

"நிலத்தின் விளைச்சல் என்னவென்பது குடியானவனுக்கும், ஜமீன்தாருக்கும், தெரிந்தவிஷயமே. நியாயமான வரி விகிதங்களை ஏற்படுத்துவதற்கு அதையே ஆதாரமாக வைத்துக்கொள்ளவேண்டும்."

"எந்த விதி அல்லது வழக்கத்தின் மூலமாக வரிகள் வசூலிக்கப்பட்டாலும், செலுத்தவேண்டிய தொகை நிஷ்கரணையாய் இருக்கவேண்டுமென்பதும், காலதாமதமில்லாமல், ஜமீன்தார்கள் குடியானவர்களுக்கு பட்டாக்களை கொடுக்கவேண்டுமென்பதும், பட்டாவில் குறிக்கப்பட்ட தொகையைவிட அதிகமான தொகையை, குடியானவர்கள் கொடுக்க கடமைப்பட்டவர்களல்ல என்பதும், ஷோர் அவர்களின் தீர்மானங்கள். அவைகள், கலெக்டரால், கிரமமாக அமுலில் கொண்டுவரப்பட்டால், நிலைவரமில்லாமல் ஜமீன்தார்கள், குடியானவர்களிடமிருந்து கண்ட வரிகளை வசூல் செய்வது ஒழிந்துவிடும்."

"குடியானவர்களிடமிருந்து ஜமீன்தார்கள் வரி வசூல் செய்வது சம்பந்தமாக ஒழுங்கு ஏற்படவேண்டுமென்றும், அதற்காக சர்க்கார், சற்று தலையிடவேண்டுமென்றும், ஷோர் கூறும், அபிப்பிராயத்தை நாங்கள் ஒப்புக்கொள்கிறோம்."

XXV, XXX, ரெகுலேஷன்களுக்குமுன், நிலைவரமற்றதாயிருந்த, வரி, XXV ரெகுலேஷன் 4, 14, பிரிவுகளால் நிரந்தரமாக முடிவு செய்யப்பட்டதென்பதும், அதன்படி, குடியானவனுக்கு, பட்டா, கொடுக்கவேண்டுமென்பதும், குடியானவன் செலுத்தவேண்டிய வரித்தொகை, விளக்கமாக குறிக்கப்படவேண்டுமென்பதும், மேற்கூறிய சாராம்சத்தினின்றும் தெரியவருகிறது. மேலே தெரிவிக்கப்பட்ட வாசகத்தில் காணப்படும் "வரையறை செய்யாத" என்ற வார்த்தைகளுக்கு எதிராக, 14-வது பிரிவில், "வரையறை செய்து" என்ற வார்த்தைகள் உபயோகப்படுத்தியிருக்கிறது. 96-வது பக்கத்தில் "வரி ஸ்திரம்," "அனுபோகஸ்திரம்," என்ற வார்த்தைகளின் அர்த்தம் வெகு தெளிவாக விளக்கப்பட்டிருக்கிறது :—

"வங்காளத்தின் வட பாகங்களில், குடியானவர்கள், விதிக்கப்பட்ட வரியைச் செலுத்திவரும்வரை, நிலங்களை சாகுபடிசெய்து, அனுபவித்துவருவது, ஜமீன்தார்களுடைய உடைமை உரிமைகளுக்கு வியதிரேகமானதல்ல. நிலத்தை யார் சாகுபடி செய்தாலும், விதிக்கப்பட்ட வரியைவிட ஜமீன்தார் அதிகமான வரியை வசூல் செய்யமுடியாது. ஏற்படுத்தப்பட்ட வரியைவிட அதிகமான வரியைக் கொடுப்பது, பல இடங்களில் குடியானவனுக்கு அசாத்தியமான காரியமாக இருக்கிறது. நிலத்தை ஒரு குடியானவனிடமிருந்து பிடுங்கி மற்றொரு குடியானவனுக்கு கொடுக்கும்படியான அதிகாரத்தை ஜமீன்தாருக்கு தந்தால், அது குடியானவனுக்கு உபத்திரவத்தை தருமேயொழிய, ஜமீன்தாருக்கு யாதொரு நன்மையும் செய்யாது. மொகலாய அரசர்கள் காலத்தில் இருந்த வழக்கப்படி பல ஜில்லாக்களை ஒரு பெரிய ஜமீனாகச்செய்து, அதை ஒரு பெரிய ஜமீன்தாரிடம் ஒப்புவித்தால், அவருடைய அதிகாரங்களுக்கு சில கட்டுப்பாடுகளைச் செய்வது மிகவும் அவசியமாயிருந்தது. ஜமீன்தார் இஷ்டப்பட்டால் நிலத்தை விற்றுவிடலாம். நிலத்தை விலைக்கு வாங்கினவர்களுக்கு குடியானவன் வரியைச் செலுத்தவேண்டும்."

முன்பு, ஜமீன்தார் வரியை உயர்த்தி வந்ததையும், பழைய குடியானவனைத்தள்ளிவிட்டு அதிகமான வரி கொடுப்போனுக்கு நிலத்தைத் தருவதையும், தடுப்பதுதான் மேற்படி சட்டங்களின் நோக்கம் என்பது மிகவும் ஸ்பஷ்டமாக தெரிகிறது.

1802-ம் ஹூ்த்திய XXV ரெகுலேஷன் 8, 9, பிரிவுகளை நாங்கள் இதற்குமுன்னரே விளக்கம்செய்து, வரியை உயர்த்தும் அதிகாரம் ஜமீன்தாரிடமிருந்தும், நிலத்தை அவரிடமிருந்து விலைக்கு வாங்குபவர்களிடமிருந்தும், எடுத்துவிடப்பட்டதென்று தெரிவித்திருக்கின்றோம். அதற்கு ஆதாரமாக, அதே தொகுதியிலிருந்து (தொகுதி II, பக்கம் 97) ஒரு வாசகத்தை, கீழே எடுத்தெழுதுகிறோம். அது மிகவும் ருசிகரமான, முடிவான மேற்கோளாகும் :—

"பேஷ்கஷ் பாக்கிக்காக, ஜமீன் நிலங்கள், விலைக்கு விற்கப்பட்டால், அதை விலைக்கு வாங்குபவர், அதற்கு முன் நியாயமாக விதிக்கப்பட்ட வரியைவிட அதிகமான வரியை வசூல் செய்யமுடியாது. ஏனெனில், ஜமீன் நிலத்தை விலைக்கு வாங்கிவிட்டதினால்மட்டும் இஷ்டப்படி வரிகளை வசூல் செய்யமுடியாது. ஷோர் தீர்மானித்தபடி ஜமீன்தார்கள் குடியானவர்களுக்கு பட்டாக்கள் கொடுக்க வேண்டியதன் சம்பந்தமாக உள்ள விதிகள் அமுலில் சரியாக கொண்டுவரப்பட்டால் சாசுவத ஏற்பாட்டிற்கு இப்பொழுதுள்ள ஆட்சேபனைகள் நீங்கிவிடும். ஏனெனில், பட்டாக்கள் கொடுத்த பிறகு யார் ஜமீன்தாராக வந்தாலும், பட்டாவில் கண்டிருக்கிறபடியே, குடியானவர்களிடம் வரிவசூல் செய்வதிலும், மற்ற விஷயங்களிலும், கிரமமாகவும் குறிக்கப்பட்ட விதிகளுக்கிணங்கவும், நடந்துகொள்வார்."

இதன் அர்த்தம் மிகவும் வெளிப்படையாயிருக்கிறது. அதாவது பட்டாகொடுப்பதற்குமுன், வரி நிர்ண
யம் செய்யப்பட்டு, சாசுவதமாக முடிவு செய்யப்படவேண்டும். முடிவான வரிவிகிதங்களுக்கு அவைகள்
தகுந்த விதிகளாயிருக்கும். அப்படி யேற்பட்ட வரிகளை, பின்வருஷங்களில், எந்த முகாந்தரத்தைக்
கொண்டாவது மாற்றமுடியாது. பட்டாவை, உடனே ரிஜிஸ்டர்செய்யும்படி கட்டளையிடவேண்டும். சாசுவத
செட்டில்மென்டிற்குமுன், முடிவுசெய்யப்பட்ட வரிவிகிதங்கள், சாசுவத செட்டில்மென்டின் கீழ் கொடுக்கப்
படும் பட்டாக்களில் குறிக்கப்படவேண்டும். அக்காலத்தில் சாகுபடிசெய்த நிலங்களைப்பொருத்தமட்டில் வரி
விகிதங்கள் பின்கொடுக்கப்படும் எல்லா பட்டாக்களிலும் ஒரேமாதிரியாகத்தான் இருக்கவேண்டும். பட்டா
ரெகுலேஷனில் ஏற்பட்டிருக்கிறபடி புதியபட்டாக்கள், வருஷத்திற்கொருமுறை, அல்லது சிலவருஷங்களுக்
கொருமுறை கொடுக்கவேண்டுமென்பதற்கு காரணம் : தரிசு நிலங்கள் பண்படுத்தப்பட்டு புதிதாக சாகுபடி
செய்யப்பட்டால், அவைகளுக்கு, சாசுவத செட்டில்மெண்டுக்கு முன் வருஷத்தில் நிர்மாணம் செய்யப்பட்ட
வரிக்கு அதிகம் இல்லாதவரியை ஜமீன்தார் விதித்து வசூல் செய்து, அதன்மூலம், ரெகுலேஷன்களில்
குறித்துள்ளபடி, தனக்கு வருமானத்தைப்பெருக்கிக் கொள்வதின்பொருட்டே. ஜமீன்தார்களுக்கும் குடி
யானவர்களுக்கும் உள்ள சம்பந்தத்தை ஒழுங்குபடுத்துவதற்கே, பட்டா முச்சிலிக்கைகளை மாற்றிக்கொள்ள
வேண்டுமென்று விதிக்கப்பட்டது. கார்ன்வாலிஸ் பிரபுவின் யோசனையின் பேரிலேயே இது ஏற்படுத்தப்
பட்டது. (1) அனுபோகஸ்திரம் (2) வரிஸ்திரம், இவை சம்பந்தமான அதிகாரங்களை மீறி, ஜமீன்தார்கள்

நடந்தால், அப்பொழுது குடியானவர்களுடைய உரிமைகளை தற்காப்பதற்கு தகுந்த ஏற்பாடுகள்செய்ய வேண்டுமென்று ஸர். ஜான் ஷோர் கூறியதை கார்ன்வாலிஸ் பிரபு முற்றிலும் ஆதரித்தார். "தேசத்திற்கு சுபிக்ஷத்தையும், செல்வத்தையும், உண்டாக்குவதற்கும், அதன்மூலம், இந்தியாவில், பிரிட்டிஷ் அதிகாரத்திற்கு தக்க பக்கபலத்தை ஸ்தாபிப்பதற்கும், இப்பொழுதுள்ள நிலைவரமற்ற முறையை மாற்றி, ஸ்திர அனுபோகத்தையும், ஸ்திரவரியையும், ஏற்படுத்துவது இன்றியமையாதது" என்று, II தொகுதியில், 114-வது பக்கத்தில், தெளிவாக எடுத்துக்காட்டப்பட்டிருக்கிறது. 1802-ம வருஷத்திய XXV ரெகுலேஷன் பீடிகையில் தெரிவித்துள்ளபடி, ஆட்சிபுரிபவர்கள், ஆளப்படுபவர்கள், ஆகிய இருதரப்பினருடைய நன்மையை முன்னிட்டு, நாட்டை விவசாயத்துறையிலும், கைத்தொழிற்றுறையிலும், அபிவிருத்தி செய்யவேண்டுமென்று, அக்காலத்து நிர்வாஹிகள், எவ்வளவோ ஆவலுள்ளவர்களாயிருந்தது அவர்களுடைய பெருந்தன்மையைக் குறிக்கிறது.

கிழக்கு இந்தியா கம்பெனியார், பழைய கிராமபரிபாலன அஸ்திவாரங்களையகற்ற, அவைகளின் ஸ்தானத்தில், ரயத்வாரிமுறையையும், ஜமீன்தாரிமுறையையும், ஏற்படுத்தி இராவிட்டால், இந்தியா இப்பொழுதுள்ள க்ஷீணநிலையை அடைந்திராது. ஆங்கிலர்களும், இந்தியா வியாபாரத்தை இழந்திருக்கமாட்டார்கள். ஜப்பான் முதலிய பிற நாடுகளும் அதைக்கைப்பற்றியிரா.

சாசுவத செட்டில்மென்ட் ஏற்படுவதற்குமுன்பும், சன்னது வழங்கப்படுவதற்குமுன்பும், 1802-ம்வருஷத்திய XXV, XXX ரெகுலேஷன்களின்படி, அனுபோகமும், வரியும், நிரந்தரமாக முடிவுசெய்யப்பட்டு, பட்டா முச்சிலிக்கைகளில் குறிக்கப்படவேண்டுமென்பதைப்பற்றி முன்னரே தெரிவித்திருக்கிறோம். வங்காளத்திலும், சென்னை இராஜதானியிலும் அவ்வாறே செய்யப்பட்டது.

ராஜப்பிரதிநிதியின் அரசாங்கப் பத்திரங்களின், II தொகுதி, 116-வது பக்கத்தில், 1793-ம்வருஷம் மார்ச்மீ 6வ, இட்ட அறிக்கை காணப்படுகிறது. அது பின்வருமாறு :—

"ஜமீன்தார்கள், குடியானவர்களுக்கு, பட்டாக்கள் கொடுக்கவேண்டியதின் சம்பந்தமாக, உங்கள் (கோர்ட் ஆப் டைரக்டர்ஸ்) விருப்பங்களை நாங்கள் முன்னதாகவே எதிர்பார்த்திருக்கிறோம் என்பது, அடுத்த தபாலில் நாங்கள் அனுப்பும், காரியக்கிரமங்களிலிருந்து நீங்கள் அறிவீர்கள். வெகுவாக, நாடுமுழுவதும், ஜமீன்தார்களுக்கும், குடியானவர்களுக்கும், நிர்ணயமான ஒப்பந்தங்கள் ஏற்பட்டிருக்கின்றனவென்றும், அப்படி ஏற்படாத இடங்களில், கூடியசீக்கிரத்தில் தகுந்த ஒப்பந்தங்கள் செய்துகொள்வதாக, ஜமீன்தார்கள்வாக்குத் தந்திருக்கிறார்கள் என்று அதிக மகிழ்ச்சியுடன் தெரிவிக்கிறோம்."

சாசுவத செட்டில்மென்ட் விளம்பரப்படுத்துவதற்குமுன், அதாவது வங்காளத்தில் விளம்பரம்நிகழ்வதற்கு 20 நாளைக்குமுன், நிரந்தரமாக முடிவுசெய்யப்பட்ட வரிவிகிதங்கள் அடங்கிய, பட்டாக்கள், மாற்றிக் கொள்ளப்பட்டனவென்றும், அப்படி ஏற்படாத இடங்களில், விளம்பரம் வெளியிடப்படுவதற்குமுன், குறிக்கப்பட்ட தேதிக்குள், பட்டாக்களை மாற்றிக்கொள்வதாக, ஜமீன்தார்கள் வாக்குத்தந்திருப்பதாகவும்,மேலே தெரிவிக்கப்பட்ட வாசகத்தினின்றும் தெரியவருகிறது. மேலே தெரிவிக்கப்பட்ட அறிக்கை 1793-ம்வஷு மார்ச்மீ 22வ இட்டுள்ளது. வங்காளத்தில் பிரசுரம்செய்யப்பட்ட விளம்பரத்தின் தேதி, 1793-ம்வஷு மார்ச்மீ 22வ. மேலே தெரிவிக்கப்பட்ட வாசகத்தில் கார்ன்வாலிஸ் பிரபு அறிவித்துள்ளதை இது ருஜுப்படுத்துகிறது. சாசுவத செட்டில்மென்டுக்கு இன்றியமையாத, முன் நிபந்தனை, பட்டா வழங்கப்படுவதுதான் என்றுகார்ன்வாலிஸ் பிரபு கூறுவதைவிட, சிறந்த சாக்ஷியம் கிடைப்பது அரிது. சென்னை ராஜதானியிலும் அவ்வாறே நடந்தது. சாசுவத செட்டில்மென்டுக்குமுன் எல்லா பட்டாக்கள் வழங்கப்படாவிட்டால், சாசுவதசெட்டில்மென்டு ஏற்பட்ட 6 மாதங்களுக்குள் பட்டா முச்சலிக்கைகள் மாற்றிக்கொள்ளப்படவேண்டும். (1802-ம் வருஷத்திய XXX ரெகுலேஷனின் 3-வது பிரிவு). சாசுவதமாக முடிவுசெய்யப்பட்ட நிலஅனுபோகமும் வரி விகிதங்களும் கொண்ட பட்டா முச்சலிக்கைகள் 6 மாத காலத்திற்குள் மாற்றிக் கொள்ளப்படவேண்டுமென்று 3-வது பிரிவில் தெரிவிக்கப்பட்டதைப்போல, வரி போக, குடியானவர்களிடமிருந்து வசூலிக்கப்படும் இதர தொகைகள், XXX ரெகுலேஷன், 6-வது பிரிவின்படி, 2 வருஷங்களுக்குள், ஒருங்குகூட்டி, ஒரு தொகையாகக் குறிக்கவேண்டுமென்று ஏற்படுத்தப்பட்டது.

XXX ரெகுலேஷனின் 6-வது பிரிவு பின் வருமாறு :—

"ஜமீன்தார் நிலவரியாக வசூல்செய்யும் தொகையுடன், பணமாகவோ, தானியமாகவோ, வசூலிக்கும் கன்னன்காய், காவலிருசும் முதலிய நிலசம்பந்தமான மாமூல் தொகைகளை ஒருங்குகூட்டி, பட்டாக்களில் ஒரு தொகையாக, அல்லது ஒரு அளவு தானியமாக, பட்டாக்களில் குறிக்கவேண்டும்; சாசுவத செட்டில்மென்ட் ஏற்பட்ட இரண்டு வருஷங்களுக்குள், மேற்படி தொகைகள் ஒருங்குகூட்டி பட்டாவிட்டால் குறிக்கப்படாவிட்டால், அவைகள் சம்பந்தமாக, ஜமீன்தார் அடலத் கோர்ட்டில் அல்லது ஜில்லா கோர்ட்டில், செய்துகொள்ளும் வழக்குகள் தள்ளுபடி செய்யப்படும்." சாசுவத செட்டில்மென்டுக்குமுன் பட்டாக்கள் மாற்றிக்கொள்ளப்படாவிட்டால், அதற்குப்பின் 6 மாதங்களுக்குள் மாற்றிக்கொள்ளப்பட வேண்டுமென்றும், நிலவரி சம்பந்தமில்லாத மற்ற தொகைகள் 2 வருஷங்களுக்குள், ஒருங்கு கூட்டி ஒரு தொகையாக, பட்டாவில் குறிக்கவேண்டுமென்றும் 6, 2, பிரிவுகளிலிருந்தும் (XXX ரெகுலேஷன்) தெரியவருகிறது.

சாசுவத செட்டில்மென்டுக்கு முன் அல்லது அது ஏற்பட்டு 6 மாதங்களுக்குள் மாற்றிக்கொள்ளப்பட்ட பட்டாக்கள், குடியானவனுடைய உரிமையைத் தெரிவிக்கும் பத்திரங்களாயிருந்தன. அவைகளில், குடியானவனுடைய நில அனுபோக உரிமையும், நிரந்தரமாக முடிவுசெய்யப்பட்ட வரியும் குறிக்கப்பட்டிருந்தன. அவைகள் மாற்றக்கூடாதபடி அமைக்கப்பட்டன. பட்டா என்பது கவுல் அல்லது வருஷாந்தரத்தில் முடிவடையக்கூடிய குத்தகை, அல்லது ஒப்பந்தமில்லை. வருஷமுடிவில், பட்டா புதுப்பிக்கப்படாவிட்டால், அது. புதுப்பிக்கப்படும்வரை அமுலில் இருப்பதாகவே கருதப்படவேண்டுமென்று 12-வது பிரிவில் கண்டிருக்கிறது, பசலி தொடங்கினபிறகுகூட, பட்டாக்கள் புதுப்பிக்கப்படாவிட்டால், அவைகள் அமுலிலிருப்பதாகவே கருதப்பட்டு, பசலிமுழுவதும் குடியானவர்களையும் ஜமீன்தாரரையும் கட்டுப்படுத்தும்.

ரெகுலேஷன் XXX, 13-வது பிரிவின்படி, ஜமீன்கள் அல்லது, ஜமீன்களின் பாகங்கள் விற்கப்பட்டால், அல்லது, சர்க்காருக்குச் செலுத்தவேண்டிய பேஷ்கஷ் பாக்கிக்காக, பராதீனம் செய்யப்பட்டால், பழைய ஜமீன்தாரால் கொடுக்கப்பட்ட பட்டாக்கள், நிலங்கள் விற்கப்பட்ட பசலி முடிவில் காலாவதியாய்விடும். நிலத்தைவாங்கினவர்களால் புதிய பட்டாக்கள் கொடுக்கப்படவேண்டும். XXX ரெகுலேஷன், 14-வது பிரிவிலும், XXV ரெகுலேஷன், 14-வது பிரிவிலும் கண்டுள்ளபடி, ரசீதுகள் கொடுக்கவேண்டியது கட்டாயமாகச் செய்யப்பட்டது. ரசீதுகள் கொடுக்கத்தவறினால், அது தண்டிக்கப்பட்டது. நியாயமான வரிக்கு அதிகமாக வசூல் செய்தால், அது, 11-வது பிரிவின்படி, குற்றமாகக் கருதப்பட்டது. ஆறுமாத காலமான பிறகுங்கூட ஜமீன்தார் பட்டா வழங்க மறுத்தால், நஷ்ட ஈடு கொடுக்கவேண்டியதுமட்டும் அல்லாமல், கிரிமினல் கோர்ட்டிலும், குற்றம் சாற்றப்பட்டார்.

இப்படியாக, XXX ரெகுலேஷன், 1 முதல் 15 பிரிவுகளிலுள்ள விதிகள் பல கடமைகளை ஏற்படுத்துகின்றன. அவைகளிற் சில மீளாக்கடமைகளாகவும், முன்நிபந்தனைகளாகவும் இருக்கின்றன. அவைகள் நிலத்தின் உடைமை உரிமை என்பதை, கீழ்த்திசைநாட்டு சம்பிரதாயமாகவும், அர்த்தமில்லாத உபசார வழக்கமாகவும் செய்துவிட்டன.

XXV, XXX, XXIX ரெகுலேஷன்களுடைய முக்கிய விதிகளின் அர்த்தமும், அவைகளின் சரியான தாத்பர்யமும், அரசாங்கப் பத்திரங்களின் சாராம்சங்களால் நிலைநாட்டப்பட்டன. ரெகுலேஷன்கள் ஏற்படுவதற்குமுன் தெரிவித்தபடி, ரெகுலேஷன்களைச் செய்தவர்களின் நோக்கம் என்ன என்பது, மேற்படி அரசாங்கப் பத்திரங்களிலிருந்து அறியக்கூடும்.

ரெகுலேஷன்கள் ஏற்படுவதற்குமுன், மார்னிங்டன் பிரபு, கார்ன்வாலிஸ் பிரபு முதலியவர்களால் கலெக்டர்களுக்கு அனுப்பப்பட்ட குறிப்புகளின் முக்கிய விதிகளைக்கொண்டு, எங்கள் சித்தாந்தத்தை, பின்னும் வலியுறுத்தியிருக்கிறோம். சாசுவத செட்டில்மெண்டுக்குபின் ஏற்பட்ட மேற்கோள்களைக்கொண்டு, அதற்குமேலும் உறுதியளிக்க விரும்புகிறோம்.

ரெவினியூ முறையில், தீர்மானிக்கப்பட்ட மாறுதல்கள் சம்பந்தமாக கலெக்டர்கள் அனுப்பிய அறிக்கையைப்பெற்றபிறகு, மார்னிங்டன் பிரபுவும் (ஸர். ஜான் ஷோர்), சென்னை கவர்னராயிருந்த கிளைவ் பிரபும் எழுதிய கடிதம் முன்னரே தெரிவிக்கப்பட்டது. அக்கடிதத்தில் 1799-ம் வருஷம் செப்டம்பர் மீ 4உ இட்டுள்ளது.

1793-ம் வருஷத்தில் சாசுவத செட்டில்மெண்டு வங்காளத்தில் ஸ்தாபிதமானதிலிருந்து, கிரியாம்சையில் அது எவ்வாறு நடக்கிறதென்பதை ஆறு வருஷகாலம் வெகு கூர்மையாக கவனித்துவந்த ராஜப்பிரதிநிதி மார்னிங்டன் பிரபு, சென்னைக்கு வந்து, கவர்னர் சபையில் அக்கிராசனம்வகித்து மேற்படி கடிதத்தில் கையொப்பமிட்டார். அதன்பிறகு, 1799-ம் வருஷம் அக்டோபர் மீ 15உயில், வில்லியம் பெட்ரி, சார்ல்ஸ் ஒய்ட் தாமஸ் காக்பர்ன், வில்லியம் ஹாரிங்டன் ஆகிய இவர்கள் கையொப்பமிட்ட பத்திரங்களில், கலெக்டர்களுக்கு, விரிவான குறிப்புகளும் உத்திரவுகளும் தெரிவிக்கப்பட்டன.

இக்குறிப்புகளும், உத்திரவுகளும் 74 பிரிவுகளில் அடங்கியிருக்கின்றன. மேற்படி குறிப்புகளின் பூரணமான சாராம்சம் ஒன்றை, எங்கள் அறிக்கையில் ஒரு அனுபந்தமாக பிரசுரித்திருக்கிறோம். ரெகுலேஷன்களின் நோக்கத்தையும், நாடு என்ன ஸ்திதியிலிருக்கும்பொழுது புதிய ஏற்பாடு அமுலுக்கு வந்ததென்பதையும், சாசுவத செட்டில்மெண்டுக்குப்பிறகு, தீவிர விவாதங்களுக்கு இலக்காயிருந்த சில பதங்களின் அர்த்தத்தையும் விளக்கும் சில முக்கிய வாசகங்களின் உட்கருத்தைமட்டும் இனிமேல், மேற்கோளாக எடுத்துக்கூறுவோம்.

விதிக்கப்பட்டிருக்கும் வரிகளுக்கு அதிகமான வரிகளை வசூலிக்கப்படாது என்ற நிபந்தனையுடன் விற்கப்பட்ட ஜமீன்கள்—மசூலிப்பட்டணம் ஜில்லா.

1802-ம் வருஷத்திய XXV, XXX ரெகுலேஷன்களின் அதிகாரவரையறையை ஸ்தாபிப்பதற்கும், சட்டம் ஏற்படுத்தியவர்களின் நோக்கம் என்னவென்பதை (சாசுவத செட்டில்மெண்ட் ஏற்படுவதற்குமுன் தெரிவித்தபடி) விளக்குவதற்கும், இதுவரை, அரசாங்கப் பத்திரங்களிலிருந்தும், கலெக்டர்கள் குறிப்புகளிலிருந்தும், ஆதாரங்கள் எடுத்துக்காட்டினோம். அதைப்போலவே மற்றும்சில அரசாங்கப் பத்திரங்கள் எங்கள் கொள்கையை வலியுறுத்துகின்றன.

பழைய ஜமீன்தாரிகளும், பாளையங்களும், சாசுவத செட்டில்மெண்டு ஏற்படுவதற்கு முன்பே இருந்து வந்தன என்பதை, முன்னரே தெரிவித்திருக்கிறோம். இவைகளுக்கு மாறான, சர்க்காருக்கு பூரண உரிமையுள்ள, சர்க்காருக்கும் குடியானவர்களுக்கும் இடையே மத்தியஸ்தர்கள் இல்லாத நிலங்கள், சாசுவத செட்டில்மெண்ட் காலத்தில், சிறு ஜமீன்களாகச் செய்யப்பட்டன. அவைகளே "ஹாவலி எஸ்டேட்டுகள்" என்று சொல்லப்படுவன. இந்த எஸ்டேட்டுகளுக்குங்கூட, நிலஅனுபோகமும், வரிவிகிதமும், சாசுவத செட்டில்மெண்ட் காலத்தில் நிரந்தரமாக முடிவு செய்யப்பட்டன. மேற்படி எஸ்டேட்டுகளின், விற்பனை நிபந்தனைகளிலும் அவ்வாறு தெரிவிக்கப்பட்டிருப்பதே அதற்கு ருஜு. அவைகள் ஏலத்திற்கு விடுமுன், விளம்பரம் செய்யப்பட்டது. அவைகளின் விற்பனை நிபந்தனைகள், அச்சடிக்கப்பட்டு, கலெக்டர் கச்சேரியிலும், செண்ட் ஜார்ஜ் கோட்டையில், ஸ்பெஷல் கமிஷனர்கள், கச்சேரியிலும் ஒட்டப்பட்டன. ஏலத்தில் கேட்டவர்கள் நிபந்தனைகளை நன்கு பரிசீலனைசெய்து, திருப்தியடைந்து, மேற்படி எஸ்டேட்டுகளை வாங்குவதற்காக, ஏலம் போடுவதற்கு வெகுநாளைக்குமுன்பே, மேற்கூறிய விளம்பரம் முதலியவை நிகழ்ந்தன. அதனால், ஹாவலி எஸ்டேட்டுகளை, ஏலத்தில் எடுத்தவர்கள், தங்களுக்கு விற்பனை நிபந்தனைகள் தெரியாது என்று பிறகு சொல்வதற்கு இடமிராது. ஹாவலி எஸ்டேட்டுகளின் விற்பனை, குடியானவர்களுடைய நிரந்தர அனுபோக உரிமைகளுக்கு உட்பட்டதென்பதும், விதிக்கப்பட்ட வரிக்கு அதிகமானவரியை குடியானவனிடமிருந்து வசூல் செய்யக்கூடாதென்பதும், அதை எந்த முகாந்தரத்தைக்கொண்டும், எஸ்டேட்டுகளை விலைக்கு வாங்கினவர்கள் மாற்றக்கூடாதென்பதும், விற்பனையின் முக்கிய நிபந்தனைகளாயிருந்தன.

1802-ம் வருஷத்திய, மசூலிபட்டணம் ஜில்லா விற்பனை விளம்பரத்தையும், விற்பனை நிபந்தனைகளையும், உதாரணமாக எடுத்துக்கொள்வோம். விற்பனையின் பொது நிபந்தனையைப்பற்றி 18, 20, உட்பிரிவுகள் பின்வருமாறு தெரிவிக்கின்றன :—

> "உட்பிரிவு 18.—நிலத்திற்கு அதிபதியாக, சர்க்கார் செலுத்தும் வரிவசூல் உரிமை, நிலத்தை வாங்குபவர்கள் யாவருக்கும் சேருகிறது ; ஆனால் இந்த உரிமையை அக்கிரமமாக உபயோகிப்பதைத் தடுப்பதற்கும், குடியானவர்கள், முதலிய எளிய ஜனங்களுடைய உரிமைகளையும், மாமூலான, பாத்தியதைகளையும், இதர சௌகர்யங்களையும், பாதுகாப்பதற்கும் சர்க்கார் தகுந்த சட்டங்களை ஏற்படுத்துவார்கள். வழக்கு வியவகாரங்களைத் தடுப்பதற்கு, 1210-வது பசலியின் பட்டாவில் குறிக்கப்பட்டிருப்பதைவிட அதிகமான வாரத்தை ஜாகீர் குடியானவர்கள் கேட்கக்கூடாது. அதைப்போலவே, சர்க்கார் உரிமைகளை விற்பனையால் அடையும் ஜாகீர்தாரும், சர்க்கார் பாகமாகக்குறிக்கப்பட்டிருப்பதைவிட அதிகமான பாகத்தை வசூலிக்கக்கூடாது."

> "உட்பிரிவு 20.—1210-வது பசலி பட்டாவில் குறிக்கப்பட்ட விகிதத்தின்படி, ரொக்கதாயத்தை வசூலிக்கும் உரிமை, நிலத்தை வாங்குபவர்களுக்கு உண்டு. ஆனால் தோப்புகளிலுள்ள பழமரங்களுக்கு, இதுவரை மரம் ஒன்றுக்கு ஒரு காணியாக வசூலிக்கப்பட்ட வரியை ரத்துசெய்து, விளைச்சலில் மாமூலான பாகத்தை சர்க்கார் ஏற்படுத்தியிருக்கிறார்கள். ஆகையால், இதுவரை பணவரியையோ, விளைச்சலின் ஒருபாகத்தையோ, சர்க்காருக்குச் செலுத்திவந்த பழமரங்களிலிருந்து கிடைப்பதை இனிமேல், குடியானவர்களும், எஸ்டேட்டை வாங்குபவர்களும், பங்கிட்டுக்கொள்ளவேண்டியது. புளியமரங்களைப் பொருத்தமட்டில், மேற்கூறிய சமபாகம் கிடையாது. இதுவரை சர்க்காருக்கு

வரிசெலுத்திவந்த புளியமரங்களின் விளைச்சலில் முக்கால்பாகத்தை அடைவதற்கு, எஸ்டேட்டை விலைக்கு வாங்குபவர்களுக்கு, நிலச்சுவான்தார்கள் என்ற ஹோதாவில் உரிமை உண்டு. அது சம்பந்தமாக, யுக்தமென்று கருதப்படுகிற தகுந்த ஏற்பாட்டையாவது, ஒப்பந்தத்தையாவது, குடியானவர்களும், ஜமீன்தார்களும் செய்துகொள்ளலாம்.

1210-வது பசலியில் குறிக்கப்பட்டிருக்கும் வாரத்தை விட, அதிகமான வாரத்தை ஜாகீர் குடியானவர்கள் எடுத்துக்கொள்ளக்கூடாதென்றும், சர்க்கார் உரிமையை விற்பனையால் அடைபவர்கள், சர்க்காருக்கு விதிக்கப்பட்டுள்ள பாகத்தை விட, அதிகமான பாகத்தைக் கேட்கக்கூடாதென்றும், 18-வது பிரிவில் தெரிவிக்கப்பட்டு இருக்கிறது.

ஏலத்தில் எஸ்டேட்டுகளை வாங்குபவர்கள், 1210-வது பசலி பட்டாவில் குறிக்கப்பட்டிருக்கும் வரி விகிதத்தை விட அதிகமான வரியை வசூலிக்கக்கூடாதென்று 20-வது விதியில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. தோப்புகளில், ஒவ்வொரு பழ மரத்திற்கும், ஒரு காணி வசூலிக்கப்பட்டது. அது ரத்து செய்யப்பட்டு விற்பனை நிபந்தனையில் புதிய ஏற்பாடு ஒன்று அமைக்கப்பட்டது. அதாவது, சர்க்காருக்கு இதுவரை சமமான ஒரு பாகம் செலுத்தி வந்த பழ மரங்களின் விளைச்சலை குடியானவர்களும், எஸ்டேட்டை விலைக்கு வாங்குபவர்களும், பங்கிட்டுக்கொள்ளவேண்டியது. ஆனால் புளிய மரத்தைப்பொருத்தமட்டில் விளைச்சலில் முக்கால் பங்கு ஜமீன்தாருக்குச் சேரவேண்டியது. எஞ்சிய கால்பாகமே குடியானவர்களுக்குச் சேரும் என்று 20-வது விதியில் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது.

மேலே தெரிவிக்கப்பட்ட 18, 20, விதிகளிலிருந்து இரண்டு விஷயங்கள் தெளிவாகஸ்தாபிக்கபடுகின்றன. அதாவது நில அனுபோக ஸ்திரமும், வரி ஸ்திரமும், சாசுவதமாக முடிவு செய்யப்பட்டிருக்கின்றன. இரண்டாவதாக பழமரங்களின் விளைச்சலில், பாதி ஜமீன்தாருக்குச் சேரவேண்டியது. புளிய மரங்களின் விளைச்சலில், முக்கால் பங்கு ஜமீன்தாருக்குச் சேரவேண்டியது. கால்பங்கு குடியானவனுக்கு போகவேண்டியது. இவ்வாறாக, சாசுவத செட்டில்மெண்ட் காலத்திலும், ஹாவலி எஸ்டேட்டுகள், ஏலத்திற்கு விடப்பட்ட காலத்திலும், நிரந்தரமாக முடிவு செய்யப்பட்டது. நில அனுபோகமும், வரி விகிதமும், மட்டும் அல்ல. பழ மரங்களின் விளைச்சலில், பொதுவாக, குடியானவனுக்குப் பாதிப்பங்கு சேரவேண்டுமென்பதும், புளிய மரங்களின் விளைச்சலில் கால் பங்கும் சேரவேண்டுமென்பதுங்கூட சாசுவதமாக முடிவு செய்யப்பட்டது.

புறம்போக்குகளிலும், பொதுப்பாதைகளிலும், பொதுத் தோப்புகளிலும், உள்ள மரங்களை உபயோகிக்கும் உரிமை சம்பந்தமாக, மற்றொரு சந்தர்ப்பத்தில் விவாதிக்கப்பட்டிருக்கிறது. இவைகளை, குடியானவர்கள் ஜமீன்தார்களோடு சமமாக அனுபவிக்க, உரிமை உண்டென்று நாங்கள் தெரிவித்திருக்கின்றோம். நாங்கள் அறிவித்த முடிவிற்கு, மேலே தெரிவிக்கப்பட்ட விற்பனை நிபந்தனைகள் ஆதாரமாயிருக்கின்றன. விற்பனை நிபந்தனைகளின் 19, 20, 21, பிரிவுகளையும், பரிசீலனை செய்வோம். அவை பின்வருமாறு :—

பிரிவு 19.—"புன்செய்த் தீர்வை சம்பந்தமாகவும், கொல்லைப்புறங்கள் சம்பந்தமாகவும், அவர்களுக்குள்ள உரிமைகள் 1210-வது பசலி பட்டாவில் குறிக்கப்பட்டிருக்கிறதென்றும், மேற்படி பட்டாவில் குறிக்கப்பட்ட வரி விகிதங்களை, சர்க்காருக்கு பதிலான நிலச்சுவான்தார்கள் என்ற ஹோதாவில், வசூல் செய்ய அவர்களுக்கு உரிமை உண்டென்றும், எஸ்டேட்டை வாங்குபவர்களுக்கு இதனால் தெரிவிக்கப்படுகிறது."

பிரிவு 21.—"தங்கள் கிராமத் தெருக்களில் குடியானவர்கள் நட்ட தென்னை மரங்களின் விளைச்சலில், எஸ்டேட்டை விலைக்கு வாங்குபவர்களுக்கு யாதொரு பங்காவது, பாத்தியமாவது கிடையாது ; அந்த மரங்கள், குடியானவர்களுடைய சொந்த உரிமையென்றும், குறிப்பதற்கு, கள் இறைக்கினுலொழிய மற்றப்படி அம்மரங்களுக்கு யாதொரு வரியும் கிடையாதென்று இதனால் தெரிவிக்கின்றோம். கள் இறக்கினாலுங்கூட அதற்கு வரி, சர்க்கார் ஆப்காரி வரிகளைப் பொருத்திருக்கிறது." நன்செய்த் தீர்வை சம்பந்தமாகவும், கொல்லைப்புறங்கள் சம்பந்தமாகவும், உள்ள உரிமைகள், 1210-ம் பசலி டவுலில் குறிக்கப்பட்டிருக்கிறதென்றும், மேற்படி டவுலில் குறிக்கப்பட்ட விகிதத்தின் பிரகாரம், "சர்க்காருக்கு பதிலான நிலச்சுவான்தார்கள்" என்றஹோதாவில், எஸ்டேட்டை விலைக்கு வாங்குபவர்கள் சர்க்கார் வரி வசூலிக்காலாமென்றும், 19-வது விதியில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. வாடகை என்று குறிக்கப்பட்டாலும், எஸ்டேட்டை விலைக்கு வாங்கினவர்கள், சர்க்காரின் சார்பாகவே, குடியானவர்களிடம் வரி வசூல் செய்தார்களென்பதும், 1210, பசலி டவுலில் குறிக்கப்பட்ட வரி விகிதங்களை விட அதிகமான வரிவிகிதங்களை வசூலிக்கக்கூடாதென்பதும், கோடிட்ட வரிகளால் ருஜுப்படுத்தப்படுகிறது.

கிராமத் தெருக்களில் குடியானவர்களால் நாட்டப்பட்ட தென்னை மரங்களின் விளைச்சல் குடியானவர்களுக்கே சேருமென்றும், அம்மரங்கள் குடியானவர்களுக்குச் சொந்தமென்றும், குடிப்பதற்கு, கள் இறக்க பட்டாலொழிய அம்மரங்களுக்கு யாதொரு வரியும் கிடையாதென்றும், 21-வது பிரிவு தெரிவிக்கிறது.

குடியானவர்களுடைய நில உரிமையையும், பொதுப்பாதைகளிலும், புறம்போக்குகளிலும், தாங்கள் (குடியானவர்கள்) நட்டு வளர்த்த மரங்களின் விளைச்சலினும், கிராமத்தைச் சார்ந்த காடுகளிலுள்ள மரங்களிலும், குடியானவர்களுக்குள்ள உரிமையையும், சர்க்கார் எல்லாக்காலத்திலும் அங்கீகரித்திருக்கிறார்கள். அதற்காகத்தான் சர்க்கார், தனிக்காடுகள் ஏற்படுத்துவது சம்பந்தமாகவும், மற்ற விஷயங்கள் சம்பந்தமாகவும், குடியானவர்களுடைய உரிமைகள் பாதிக்கப்பட்டால், அதற்குத்தகுந்த நஷ்ட ஈட்டை, சர்க்கார் வெகு ஜாக்கிரதையாக கொடுத்து வந்திருக்கிறார். ஹாவலி எஸ்டேட்டுகளின் ஜமீன்தார்களும், மற்ற எஸ்டேட்டுகளின் ஜமீன்தார்களும், பாளையக்காரர்களுந்தான், சட்டத்திற்கும், வழக்கத்திற்கும், விரோதமாக, குடியானவர்களுடைய உரிமைகளை, புறக்கணித்து வந்திருக்கிறார்கள். விற்பனை நிபந்தனைகளுக்குச் சம்மதித்தே அவர்கள் எஸ்டேட்டுகளை விலைக்கு வாங்கினார்கள். ஆதலால், மேற்படி விற்பனை நிபந்தனைகளுக்கு மாறாக வரி விகிதங்களை உயர்த்துவதற்கு, அவர்களுக்கு அதிகாரமில்லை. மற்ற ஜில்லாக்களில் நிகழ்ந்த எஸ்டேட்டுகளின் ஏலத்திலும், மேற் கூறிய நிபந்தனைகள் குறிக்கப்பட்டிருந்தன. அவைகள் சர்க்காரின் உத்திரவின் மீதே ஏற்படுத்தப்பட்டு, அமுலில் கொண்டுவரப்பட்டது. சாசுவத செட்டில்மெண்டை கூடிய சீக்கிரத்தில் ஏற்படுத்தவேண்டுமென்ற கருத்துடன், 1802-ம் வருஷத்தில் கவர்னர் நியமித்த ஸ்பெஷல் கமிஷன் சிபார்சுகளின் பிரகாரமே, மேற்படி நிபந்தனைகள் ஏற்படுத்தப்பட்டன. ஆதலால், விற்பனை விளம்பரங்கள், விற்பனை நிபந்தனைகள், சர்க்கார் உத்திரவுகள், இந்த ராஜதானியிலுள்ள மற்ற ஜில்லாக்களைப்பற்றி ஸ்பெஷல் கமிஷன் செய்த அறிக்கைகள், ஆகிய இவைகளை இப்பொழுது சுருக்கமாக ஆராய்வோம்.

ஸ்பெஷல் கமிஷன், ஹாவலி எஸ்டேட்டுகள் சம்பந்தமான விற்பனை நிபந்தனைகள்.

இந்த ராஜதானியில் சாசுவத செட்டில்மெண்ட் ஏற்படுத்துவதற்கு வேண்டிய தகவல்களெல்லாம் சேகரித்த பிறகு, 1802-ம்ஹு பிப்ரவரிமீ 9உயில் கவர்னர் ஒரு ஸ்பெஷல் கமிஷனை நியமித்தார். சாசுவத செட்டில்மெண்டிற்கு பக்குவமாயிருந்த ஜில்லாக்களில் நிலவரியை சாசுவதமாக ஏற்படுத்தவேண்டியது அதன் நோக்கம். அரசாங்கக்காரியதரிசியான, ஜான் ஹாட்க்ஸன் ரெவினியூ போர்டு தலைவருக்கும்,

அங்கத்தினர்களுக்கும், 1802-ம் ஞு பிப்ரவரிமீ 9உயில் ஒரு கடிதத்தை எழுதினர். ரெவினியூ போர்டு தலைவர், வில்லியம் பெட்ரி, அங்கத்தினர்கள், தாமஸ் காக்பர்னும், ஜோஸையாவெப்பும். சாசுவத செட்டில் மெண்டை அதிதுரிதமாக ஏற்படுத்துவதற்கு, மேற்படி அதிகாரிகள் ஸ்பெஷல் கமிஷனர்களாக நியமிக்கப் பட்டனர். ரெவினியு இலாகா பத்திரங்களை பார்வையிடுவதற்கு கமிஷனர்களுக்கு பூரண வசதி தரவேண்டு மென்றும் அவர்கள் விரும்பின பத்திரங்களை, ரெவினியூ போர்டு காரியதரிசி தாமதமின்றி ஆஜர் செய்ய வேண்டுமென்றும், சர்க்கார் உத்திரவிட்டனர். கிழக்கு இந்தியா கம்பெனியாருக்குச் சொந்தமான ஜாகீர் நிலங்களுக்கு சாசுவதமான நிலவரி ஏற்படுத்துவதின் சம்பந்தமாக, கலெக்டர்கள் வேண்டிய தகவல் களைச் சேகரித்து கொடுத்தார்கள். ஸ்பெஷல் கமிஷனர்கள் தங்களுக்கிட்ட வேலையை, வெகு ஊக்கமாகவும் விரைவாகவும் செய்து, மேற்படி தகவல்களையும், பரிசீலனைசெய்து, 1802-ம் ஞு ஏப்ரல்மீ 9உயில் தங்கள் முடிவுகளை சர்க்காருக்கு தெரிவித்தார்கள். ஸ்பெஷல் கமிஷன் அறிக்கையின்படி, ஜாகீர் எஸ்டேட்டுகளின் விற்பனை சம்பந்தமாக, 1802-ம் ஞு மேமீ 31உயில் சர்க்கார் ஒரு விளம்பரத்தை வெளியிட்டார்கள். ஒரு சன்னத்-இமில்கியத் - இஸ்திமிரார், அல்லது சாசுவதச் சொத்துப்பத்திரம், கலெக்டர் கச்சேரியிலும், ஸ்பெஷல் கமிஷன் கச்சேரியிலும், தாக்கல் செய்யப்பட்டிருக்கிறதென்றும், விளம்பரத்தின்படி, நிலத்தை வாங்குபவருடைய கடமைகளும், உரிமைகளும், மேற்படி சன்னதில் அடங்கியிருக்கின்றன என்றும், விளம் பரத்தின் 7-வது பிரிவில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. சாசுவதசெட்டில்மெண்டின் பிரகாரம் எஸ்டேட்டுகளை விலைக்கு வாங்குபவர்களுக்கு, கவர்னர் கையொப்பமும், கம்பெனியினுடைய முத்திரையும் உள்ள சன்னது கள் அவரவர்கள் ஜமீன்களுக்கு கொடுக்கப்படுமென்றும் மேற்படி பிரிவில் கண்டிருக்கிறது. விளம்பரத்தி லும் விற்பனை நிபந்தனைகளிலும், இன்னும் பல மாமூலான ஷரத்துகளும் இருந்தன. அப்படியாக 1802-ம் ஞு பிப்ரவரிமீ 9உயில் நியமிக்கப்பட்ட ஸ்பெஷல் கமிஷன், இரண்டு மாதகாலத்திற்குள், அதா வது 1802-ம் ஞு ஏப்ரல்மீ 9உயில், ஜாகீர்களைப்பற்றிய தங்கள் முதல் அறிக்கையை வெளியிட்டார்கள். அவர் கள் 1802-ம் ஞு ஆகஸ்டுமீ 24உயில், மேற்றிசைப்பாளையங்கள், அதாவது, வெங்கடகிரி, காளஹஸ்தி, பொம் மராஜுபாளையம், சைதாப்பூர், ஆகிய இப்பாளையங்களைப்பற்றி ஒரு அறிக்கையை வெளியிட்டனர். ஜமீன்தார் களுடைய ராணுவ ஏற்பாடுகளும், வரி நிர்மாணம் செய்வதற்குத்தகுந்த தத்துவங்களும், அறிக்கையில் குறிக்கப்பட்டிருந்தன. இவ்வறிக்கையின் பலனாக ஜமீன்தார்களுடைய ராணுவ ஏற்பாடுகள் கலைக்கப்பட்டன. ராணுவச்செலவு, அது சம்பந்தமான சங்கடங்கள், ஜமீன்தார்களுக்கு ஏற்படாதென்பது அதற்கொரு காரண மாக தெரிவிக்கப்பட்டது. கமிஷன் செய்த இந்த சிபார்ச்சுக்கிணங்க, மேற்றிசை ஜமீன்தார்கள் செய்து வந்த ராணுவ சேவகம் பணமதிப்பாக மாற்றப்படவேண்டுமென்றும், அப்படி விதிக்கப்படும் தொகை, அவர்கள் அறிக்கையின் 11-வது கட்டத்தில் குறிக்கப்பட்ட தொகையாயிருக்கவேண்டுமென்றும், கவர்னர் தீர்மானித் தார். இந்த ஏற்பாட்டை அமுலில் கொண்டுவருவதற்கு அதிகாரிகளுக்குத் தகுந்த உத்திரவும் கொடுக்கப் பட்டன.

இதற்கு பிறகு, மசூலிப்பட்டணம், 1-வது 3-வது, 4-வது, டிவிஷன்களைப்பற்றி ஸ்பெஷல் கமிஷன் தங்கள் அறிக்கையை 1802-ம் ஞு செப்டம்பர்மீ 27உ சர்க்காருக்கு அனுப்பினர்கள்.

அதற்கடுத்தாற்போல், ராமனுதபுரம், சிவகங்கை, திருநெல்வேலி, இங்குள்ள ஜமீன்களையும், பாளையங் களையும் பற்றி, 1803-ம் ஞு ஏப்ரல்மீ 8உயில் தங்கள் அறிக்கையை வெளியிட்டார்கள்.

விசாகப்பட்டணம், 2-வது டிவிஷனில் நிலவரியை சாசுவதமாக ஏற்படுத்துவதின் சம்பந்தமாக ஸ்பெஷல் கமிஷன் தங்கள் அறிக்கையை 1803-ம் ஞு செப்டம்பர்மீ 22உயில் சமர்ப்பித்தார்கள். இந்த அறிக்கை யோடு, ஒரு பட்டியும் சேர்ந்திருந்தது.

அதில் ஜமீன்களின் பெயர்கள், கிராமங்களின் தொகை, சாகுபடி செய்யப்பட்ட நிலத்தின் விஸ்தீரணம், மேட்டு நிலம், படுகை நிலம், சாகுபடி செய்யக்கூடிய நிலங்களின் மொத்த விஸ்தீரணம், ஆகிய இவைகளைப் பற்றி, விவரங்கள் குறிக்கப்பட்டிருந்தன. இப்படியாக சாசுவத செட்டில்மெண்டைப்பற்றி, தாங்கள் சமர்ப் பித்த அறிக்கைகளுடன், மேலே கூறப்பட்ட விவரங்களையும், ஸ்பெஷல் கமிஷனர்கள் தெரிவித்தார்கள். மேற்படி அறிக்கையைப்பெற்று, பல ஜமீன்கள் சம்பந்தமாக, வெப், அலெக்ஸாண்டர் ஆகிய இரு அதிகாரிகள் சிபார்சு செய்த பேஷ்கஷ் தொகையை, கவர்னர் அங்கீகரித்து, அதன்மேல் ஒரு உத்திரவை, 1803-ம் ஞு அக்டோபர்மீ 22உயில் பிறப்பித்தார். ஜமீன்தார்களுக்கு சன்னதுகள் கொடுக்கும் விஷயமாகவும், தகுந்த குறிப்புகளை அதிகாரிகளுக்கு அனுப்பினர். பிறகு, 1803-ம் ஞு ஏப்ரல்மீ 29உயில், விசாகப்பட்டணம், ஹாவலி நிலங்களைப்பற்றியும், மசூலிப்பட்டணத்திலுள்ள ஜமீன் நிலங்களைப்பற்றியும், விசாகப்பட்டணம் 3-வது டிவிஷனிலுள்ள ஜமீன்களைப்பற்றியும், ஒரு அறிக்கையை ஸ்பெஷல் கமிஷன் சமர்ப்பித்தார்கள். ஸ்பெஷல் கமிஷன் செய்த சிபார்சுகளை, ரெவினியூ போர்டார், 1803-ஞு மேமீ 6உயில் அங்கீகாரம் செய்தார் கள். கிராமங்களின் தொகை, ஏருகளின் தொகை, மொத்த நன்செய் நிலத்தின் விஸ்தீரணம், புன்செய் நிலத்தின் விஸ்தீரணம், முதலிய விவரங்கள் மேற்படி அறிக்கையோடு சேர்க்கப்பட்டன.

ஸ்பெஷல் கமிஷனுடைய வேலைகள் பூர்த்தியான பிறகு, அது 1803ஞு மேமீ 7உயில், உத்தியோக முறையில் கலைக்கப்பட்டது. ஆனால், சில பிரதேசங்களைப்பற்றிய அறிக்கையை ஸ்பெஷல் கமிஷன், அப்பொ ழுது தயாரித்து முடிக்கவில்லை.

கஞ்சம் ஜில்லாவைப்பற்றிய அறிக்கை 1804-ம் ஞு ஜுன்மீ 22உயில் சமர்ப்பிக்கப்பட்டது.

திண்டுக்கல் பிரதேசங்களைப்பற்றிய அறிக்கை 1804-ம் ஞு செப்டம்பர்மீ 3உயில் சமர்ப்பிக்கப்பட்டது.

சாசுவத செட்டில்மெண்ட் காலத்திலிருந்த, சாகுபடி செய்யப்பட்ட நிலங்கள், சாகுபடி செய்யாத நிலங் கள், முதலிய விவரங்களும், மேற்படி அறிக்கையோடு சேர்த்துத் தெரிவிக்கப்பட்டது.

ஸ்பெஷல் கமிஷன் அறிக்கையின்மீது, சர்க்கார் பிறப்பித்த உத்திரவுகளைப்பற்றி இப்பொழுது ஆராய் வோம்.

ஸ்பெஷல் கமிஷன் செய்த சிபார்சுகளை அங்கீகரித்து, சேலம் ஜில்லாவிலுள்ள பரமஹாலைப்பற்றி, 1802-ம் ஞு செப்டம்பர்மீ 1உயில், சர்க்கார் தங்கள் உத்திரவுகளைப் பிறப்பித்தார்கள்.

விசாகப்பட்டணம், முதலாவது டிவிஷனைப்பற்றி ஸ்பெஷல் கமிஷன் செய்த அறிக்கைமீது, 1802-ம் ஞு செப்டம்பர்மீ 19உயில் சர்க்கார் தங்கள் உத்திரவுகளைப் பிறப்பித்தார்கள். ஸ்பெஷல் கமிஷன் திருத்தி ஏற்படுத்தின ஜம்மா தொகையை, சர்க்கார் தங்கள் உத்திரவின் மூன்றுவது பக்க உட்பிரிவில் ஒப்புக்கொண் டார்கள். மிதம், நியாயம், ஆகிய தத்துவங்களைக்கொண்டே, ஸ்பெஷல் கமிஷனர்கள், ஜம்மாத் தொகையை ஏற்படுத்தியிருக்கிறார்கள் என்றும், அது நிரந்தரமாயிருக்கக்கூடியதென்றும், சர்க்கார் அபிப்பிராயப்பட்டனர்.

இந்த உத்திரவின்படி, மிராசு மானியங்கள் செலுத்திவந்த நஜர்கள் ஒழிக்கப்பட்டன. வியாபாரிகள், தொழிலாளிகள், செலுத்திவந்த, "முத்தர்பா" வரி அவர்கள் குடியிருக்கும் வீடுகளுக்கு மனை வரியாக மாற்றப்பட்டது. இதற்குத்தகுந்த ஏற்பாடுகள் செய்வதற்கு சர்க்கார் உத்திரவிட்டனர். மேலுபாக் எஸ்டேட்களிலும், மற்ற எஸ்டேட்களிலும் உள்ள ஆற்று அணைகளை மராமத்து செய்யும் கடமையை சர்க்காரே ஒப்புக்கொண்டார்கள்.

1802-ம் ஞு செப்டம்பர் மீ 20உயில், விசாகப்பட்டணம் முதலாவது டிவிஷனிலுள்ள நிலங்கள் சம்பந்தமான, விற்பனை விளம்பரம் வெளியிடப்பட்டது. விளம்பரத்தின் 7-வது பிரிவு, சன்னதுகள் கொடுக்கப்படுவதை தெரிவிக்கிறது. நிலத்தை வாங்குபவர்கள் பின்னால், அதிருப்தி அடையாமலிருக்கும்படி, நிலத்தை வாங்குபவர்கள் உரிமைகள் என்னவென்பதும், கடமைகள் என்னவென்பதும், விற்பனை விளம்பரத்தின் இரண்டாவது பிரிவில் தெளிவாக தெரிவிக்கப்பட்டன.

விசாகப்பட்டணத்திலுள்ள கலெக்டர் கச்சேரியிலிருந்தும், செண்ட் ஜார்ஜ் கோட்டையில், ஸ்பெஷல் கமிஷன் கச்சேரியிலிருந்தும், எஸ்டேட்டுகளுக்கு சாசுவதமாக விதிக்கப்பட்ட ஜம்மாத் தொகை எவ்வளவென்பதை தெரிந்துகொள்ளவேண்டும் என்று 8-வது பிரிவில் அறிவிக்கப்பட்டிருக்கிறது. விலைப்பணத்தைக் கொடுத்த உடன், அல்லது விதிக்கப்பட்ட காலத்திற்குள் விலைப்பணத்தை கொடுப்பதாக ஜாமீன் கொடுத்தவுடன், எஸ்டேட்டுகள் விலைக்கு வாங்குபவர்கள் வசம் ஒப்புவிக்கப்படும், என்று 11-வது பிரிவில் அறிவிக்கப்படுகிறது.

விசாகப்பட்டணம் முதலாவது டிவிஷனிலுள்ள நிலங்களின் விற்பனை நிபந்தனைகள், 1802-ம் ஞு செப்டம்பர் மீ 20உயில் வெளியிடப்பட்டன.

சாசுவத செட்டில்மெண்டுக்குமுன், குடியாள்வர்களும், ஜமீன்தார்களும், செய்துகொள்ளவேண்டிய ஒப்பந்தங்களைப்பற்றி, 6-வது பிரிவு தெரிவிக்கிறது. அப்பிரிவு பின்வருமாறு :—

> "பணமாகவோ, தானியமாகவோ, செலுத்தவேண்டிய வரி சம்பந்தமாக, ஜமீன்தார்களும், நிலச்சுவான்தார்களும், தங்கள் குடியானவர்களோடு ஒப்பந்தம் செய்துகொள்ளவேண்டும். அவ்வாறு செய்துகொண்டு, நியாயமான காலத்திற்குள், குடியானவனுக்கு பட்டா அல்லது கவூலைக் கொடுக்கவேண்டும். செலுத்தவேண்டிய வரியும், அது சம்பந்தமான நிபந்தனைகளும், தெளிவாகவும், நிஷ்கரணையாகவும், பட்டாவில் தெரிவிக்கப்படவேண்டும். குடியானவர்கள் பணமாகவோ தானியமாகவோ செலுத்துவதற்கெல்லாம் ஜமீன்தார்கள் ரசீது கொடுக்கவேண்டும். கபூலியத் எழுதிக்கொடுத்து ஆறு மாதமானபிறகுகூட ஜமீன்தார் குடியானவனுக்கு பட்டா கொடுக்க மறுத்தால் ஜமீன்தார்மீது, ஜில்லா அடலத் கோர்ட்டில், பிரியாது தொடரப்படும். அடலத் கோர்ட்டு விதிக்கும் நஷ்ட ஈட்டை நிலச்சுவான்தார் கொடுக்க நேரிடும். வரையறைச் செய்யப்பட்ட வரியை பட்டாவில் குறிப்பதற்கும், குடியானவர்களுக்கு ரசீது கொடுப்பதற்கும், இந்தப் பிரிவில் தெரிவிக்கப்பட்டிருக்கும் நிபந்தனைகள், 1802-ம் வருஷத்திய சாசுவத செட்டில்மெண்ட் ரெகுலேஷன் XXV, 14-வது பிரிவிலும், 1802-ம் வருஷத்திய XXX ரெகுலேஷனிலும், காணப்படும் நிபந்தனைகளைப்போலவே இருக்கின்றன."

எஸ்டேட்களை விலைக்கு வாங்குபவர்கள், மிராசு ஊழிய மானியங்களிலிருந்து, நஜர், அல்லது, கட்டுபடி, வசூலிக்கக்கூடாதென்று, 12-வது பிரிவில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

முத்தர்பா, அல்லது வியாபார வரி, அல்லது தொழில் வரியை, எஸ்டேட்டை வாங்குபவர்கள் வசூலிக்கக்கூடாதென்று 13-வது பிரிவில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. ஏனெனில், அவ்வரி, மனை வரியாக மாற்றப்பட்டது. மனை வரி வசூலிக்கப்படுபவர்களுக்கு கொடுக்கும் பட்டாக்களில் செலுத்தவேண்டிய மனை வரித்தொகை குறிக்கப்படவேண்டும்.

கடலூரிலும், திருவந்திபுரத்திலும், விளம்பரமும், விற்பனை நிபந்தனைகளும், 1217ம் பசலியில், அதாவது 1807-ம் ஞு ஜூலை மீ 12உயில் வெளியிடப்பட்டன.

ஜமீன்தார்கள் குடியானவர்களோடு ஒப்பந்தங்கள் செய்துகொள்ளவேண்டுமென்றும், அதற்கு, முன் நிபந்தனையாக, வரி நிரந்தரமாக முடிவு செய்யப்படவேண்டுமென்றும், மேற்படி விளம்பரத்தின் 6-வது பிரிவில் காணப்படுகிறது.

மசூலிப்பட்டணம், 1-வது, 3-வது, 4-வது டிவிஷன்களின் செட்டில்மெண்டைப்பற்றி, 1802-ம் ஞு டிசம்பர் மீ 4உயில் சர்க்கார் உத்திரவு பிறப்பித்தார்கள்.

1802-ம் ஞு டிசம்பர் மீ 4உயில் ஸ்பெஷல் கமிஷன் தலைவருக்கு சர்க்கார் அனுப்பித்த கடிதங்களில், 1802-ம் ஞு டிசம்பர் மீ 3-ம் தேதிய ஆலோசனைக்குறிப்பின் சாராம்சத்தையும், அவர்கள் சேர்த்திருந்தார்கள். இப் பத்திரத்தை, அதிக கவனத்துடன் ஆராயவேண்டும்.

கொண்டபல்லி, ஹாவலி, வல்லூர், சமத், குண்டூர் முதலிய ஜமீன்கள் மீது சாசுவதமாக ஏற்படுத்தவேண்டிய தொகையை 4-வது பிரிவு ஸ்திரப்படுத்துகிறது.

சாசுவத செட்டில்மெண்ட் ரெகுலேஷனோடு, அதே தேதியிலேற்படுத்தப்பட்ட, பட்டா ரெகுலேஷனைப்பற்றி 5-வது பிரிவு குறிக்கிறது. அது பின் வருமாறு :—

> "வடசர்க்கார் பிரதேசங்களில், வரி வசூலுக்காக ஏற்படுத்தப்பட்டு, இப்பொழுது அமுலிலிருக்கும் முறை, விளைச்சலைப் பங்கிட்டுக் கொள்வதில் மிகவும் ஒழுங்கீனமாக இருப்பதும், மகம்மதியர்களால் ஸ்தாபிக்கப்பட்ட பல கொடிய உபத்திரவமான முறைகளை அது நீடிப்பதும், ரெவினியூ போர்டாருக்கு அடிக்கடி கவலையைத் தருகிறது. பட்டா ரெகுலேஷன் கிரியாம்சையில் வருவதால், குடியானவர்களுக்கும், ஜமீன்தார்களுக்கும், இடையே ஏற்படும் நடவடிக்கைகள் சுலபமாய்விடும் என்றும், குடியானவர்கள் பல ஹிம்சையிலிருந்து விடுவிக்கப்படுவார்கள் என்றும், ஸ்பெஷல் கமிஷனர்கள் கூறும் உறுதி மொழிகள் ரெவினியூ போர்டாரின் கவலையைக் குறைக்கிறது."

6-வது பிரிவும் முக்கியமானதே. அது மசூலிப்பட்டணம் சர்க்காரிலுள்ள இனாம்களையும், மானியங்களையும் பற்றியது. கர்ணங்கள் வசூலித்துவந்த அநியாயமான ருசும் தொகைகள், 7-வது பிரிவின்படி ஒழிக்கப்பட்டன.

தேசபாண்டிகளுக்கும், மஜூம்தார்களுக்கும் விடப்பட்ட நிலங்கள் சர்க்காரால் கைப்பற்றப்படவேண்டுமென்றும், ஸ்பெஷல் கமிஷன் சிபார்சு செய்தபடி மேற்படி அதிகாரிகளுக்கு உபகாரச் சம்பளம் கொடுக்கவேண்டுமென்றும், 9-வது பிரிவில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

திவிபரகாணத்திற்கு போதிய தண்ணீர் வசதிகள் ஏற்படுத்துவதின் சம்பந்தமாக ஒரு அறிக்கையை தயாரிக்குமாறு, காப்டன் கால்டுவல், கேட்டுக்கொள்ளப்படவேண்டுமென்று 10-வது பிரிவில் தெரிவித்திருக்கிறது.

13, 14-வது பிரிவுகளில் தெரிவிக்கப்பட்டிருக்கும் ஜமீன்களுக்கு பேஷ்கஷ் சாசுவதமாக முடிவு செய்யபடுவது மேற்படி பிரிவுகளில் தெரிவித்திருக்கிறது.

15-வது பிரிவு மிகவும் முக்கியமானது. நில வரி நிர்மாணம் சாசுவதமாக செய்யவேண்டுமென்பதற்கும், இதற்குமுன் இருந்த பேஷ்கஷ் பாக்கிகளுக்கும் காரணத்தை தெரிவிக்கிறது. அது பின்வருமாறு :—

"வட சர்க்கார் பிரதேசங்களில் ஜமீன்கள் செலுத்தவேண்டிய பேஷ்கஷ் பாக்கிகளைப்பற்றி, ஸ்பெஷல் கமிஷனர்கள் தெரிவிக்கும் கருத்தும், அவைகளைப்பற்றி ரெவினியூ போர்டார் கொண்டுள்ள அபிப்ராயமும், ஒத்தே இருக்கின்றன ; ஏராளமான பாக்கிகளுக்கு காரணங்கள் என்னவென்பதை இப்பொழுது விசாரிப்பது பயனற்றதாகும். மேற்படி பிரதேசங்களை நிர்வாகம் செய்வதில் அனுசரிக்கப்பட்ட நிலைவரமற்ற முறையும், தற்காலீக உபாயங்களுமே அதற்குக் காரணங்கள் ; பிரமாதமான இந்த பாக்கிகளை வசூலிப்பது முடியாத காரியமென்று போர்டுக்கு படுகிறது. நியாயமான, மிதமான, ஜம்மாத் தொகையை வசூலிக்கவேண்டுமென்றால், ரெவினியு போர்டார்களும், ஸ்பெஷல் கமிஷனர்களும் செய்த சிபார்சுகளின் பிரகாரம் பழைய பாக்கிகளை தள்ளுபடிசெய்யத்தான் வேண்டும். ஆதலால், ராஜப் பிரதிநிதி அவர்கள் செய்த உத்திரவுகளின்பிரகாரம் 4-வது டிவிஷன் ஜமீன்தார் செலுத்தவேண்டிய பாக்கிகள் கணக்கிலிருந்து தள்ளுபடிசெய்யப்படும். சர்க்கார் கணக்கு புஸ்தகங்களில் குறித்திருக்கிறபடி வட சர்க்கார் பிரதேசங்களிலுள்ள ஒவ்வொரு ஜமீன்தாரும் செலுத்தவேண்டிய பாக்கி சம்பந்தமாக ஒரு பட்டியை தயாரிக்கும்படி அக்கவுண்டன்ட்-ஜனரலுக்கு உத்திரவிடப்பட்டிருக்கிறது."

வட சர்க்காரிலுள்ள ஜமீன்தார்களின் பழைய பாக்கிகள் தள்ளுபடிசெய்யவேண்டுமென்றும், அதனால் சாசுவத செட்டில்மெண்டால் ஏற்படும் நன்மைகளை அவர்கள் அனுபவிப்பதில் சங்கடம் ஏற்படாதென்றும், ராஜப் பிரதிநிதியும், ஸ்பெஷல் கமிஷனர்களும், ரெவினியூ போர்டார்களும், கவர்னரும், ஏகோபித்த அபிப்பிராயப்பட்டனர்.

ஜமீன்தார்களைப்பற்றி கூறிய அபிப்பிராயம் குடியானவர்களுக்கும் செல்லும். குடியானவர்களுக்கும் அதைப்போன்ற பாதுகாப்பை தருவதற்குத்தான், பழைய நிலைவரமற்ற வரி வசூல் முறையை ஒழிக்கும் பட்டா ரெகுலேஷன் ஏற்படுத்தப்பட்டது. குடியானவன் செலுத்தவேண்டிய வரியும் நிரந்தரமாக முடிவு செய்யப்பட்டது. பட்டா ரெகுலேஷன் 7, 9-வது பிரிவுகளின் பிரகாரம் வரி எவ்வகையிலும் உயர்த்தப்படக் கூடாது. வரி விகித சம்மந்தமாக வழக்குகள் ஏற்பட்டால், சாசுவத செட்டில்மெண்ட் காலத்தில் ஏற்படுத்தப்பட்ட வரியையே ஆதாரமாகக்கொண்டு, கோர்ட்டுகள் தீர்ப்பு கூற வேண்டும்.

இந்த சர்க்கார் உத்திரவின்பிரகாரம், பெத்தாபூர், பித்தாபூர், நூஜ்விட் ஜமீன்களில் சாசுவத செட்டில்மெண்ட் ஏற்படுத்தவேண்டுமென்று தெரிவிக்கப்பட்டது.

ஸ்பெஷல் கமிஷன் செய்த சிபார்சுகளின்பிரகாரம், மசூலிப்பட்டணத்திலும், விசாகப்பட்டணத்திலுமுள்ள ஹாவலி நிலங்களுக்கு சாசுவத செட்டில்மெண்ட் ஏற்படுத்தவேண்டுமென்று, 1803-ம் ௵ மேீ 30௳யில் சர்க்கார் உத்திரவிட்டார்கள்.

கஞ்சம் ஜில்லாவைப்பற்றி, ஸ்பெஷல் கமிஷன்செய்த அறிக்கையின்மீது, 1804-ம் ௵ ஜூன்ீ 22௳யில் சர்க்கார் உத்திரவு பிறப்பித்தார்கள்.

திண்டுக்கல் பிரதேசத்தைப்பற்றி ஸ்பெஷல் கமிஷன் செய்த அறிக்கையின்மீது, 1804-ம் ௵ அக்டோபர்ீ 24௳யில் சர்க்கார் தங்கள் உத்திரவை பிறப்பித்தார்கள்.

ஸ்பெஷல் கமிஷன் நியமிக்கப்பட்டதைப்பற்றி மேலே தெரிவிக்கப்பட்ட விஷயங்களும், விற்பனை விளம்பரங்களும் நிபந்தனைகளும், சன்னதுகள் கொடுக்கப்படுவதன்முன், ஜமீன் நிலங்கள்மேல் ஜம்மாத்தொகை சாசுவதமாக முடிவுசெய்யப்படவேண்டுமென்ற முக்கிய குறிப்பும், ஜம்மா (பேஷ்கஷ்) நிர்ணயம் செய்யப்பட்டு, சாசுவத செட்டில்மெண்ட் ஏற்பட்ட ஆறுமாதத்திற்குள்கூட சன்னதுகள் கொடுக்காவிட்டால், பட்டா ரெகுலேஷனில் அவைகள் சம்பந்தமான விதிகளும், ஆகிய இவைகளெல்லாம் ஒரு விஷயத்தை நிலைநாட்டுகின்றன. அதாவது, ஜமீன்தார் உரிமை பெறுவதற்கும், 1802-ம் வருஷத்திய XXV ரெகுலேஷன், 2, 3 பிரிவுகளின்படியும், 1802-ம் வருஷத்திய XXX பட்டா ரெகுலேஷன் ஷரத்துகளின்படியும், சன்னதுகள் பெறுவதற்கும், இன்றியமையாத நிபந்தனைகள்—நிலவரி வருமானமு(பேஷ்கஷ்)ம், வரி விகிதங்களும் நிரந்தரமாக முடிவு செய்யப்படுதலே.

இந்த ராஜதானியிலுள்ள பல ஜமீன்களைப்பற்றி முழு விவரங்களை அறிவதற்கும், ஸ்பெஷல் செய்த சிபார்சுகளை அறிவதற்கும், ஸ்பெஷல் கமிஷன் அறிக்கைகளும், விற்பனை விளம்பரங்களும், நிபந்தனைகளும், சர்க்கார் உத்திரவுகளும், ஸ்பெஷல் கமிஷன் அறிக்கைகளின்மீது ரெவினியூ போர்டு செய்த விளக்கமும், எங்கள் அறிக்கைக்கு ஒரு அனுபந்தமாக சேர்த்து அமைக்கப்பட்டிருக்கின்றன. இவைகள், முக்கியவிஷயமான சாசுவத செட்டில்மெண்ட் சம்பந்தமாக ஏற்படுத்தப்பட்ட 1802-ம் வருஷத்திய XXV, XXX, XXVII, XXVIII, XXIX ரெகுலேஷன்களுக்கும் அதே தேதியில் (1802-ம் ௵ ஜூலைீ 13௳) ஏற்படுத்தப்பட்ட மற்ற ரெகுலேஷன்களுக்கும் ஆதாரமாயிருந்தன.

ஹாட்ஸனும், கோர்ட் ஆவ் டைரக்டர்சும், 1822-ம் வருஷத்திய IV, V ரெகுலேஷன் விதிகளும் விளக்கம்செய்து தெரிவிப்பதின்படி, "நில அனுபோக ஸ்திரம்," "வரி ஸ்திரம்," "நிலத்திற்கு உடையவர்கள்" என்ற சொற்றொடர்களின் அர்த்தத்தை ஸ்தாபிக்க இதுவரை முயன்றோம். இனி, 1822-ம் வருஷத்திலிருந்து வரி வசூல் ஏற்படுத்தப்பட்ட 1863-ம் வருஷம் வரை இருந்த நாட்டின் பரி ஸ்திதிகளையும், ரெவினியூ போர்டு காரியக்கிரமங்களையும் (நெ. 7743, 1864-ம் ௵ டிசம்பர்ீ 2௳) மேற்படி போர்டு காரியக் கிரமங்களை ஆதாரமாகக்கொண்ட செலக்ட் கமிட்டி செய்த அறிக்கையையும், முடிவாக, வரி வசூல் சட்டம் ஏற்படுத்தப்பட்ட 1865-வது வருஷத்தில் இருந்த நிலைமையையும், நாம் பரிசீலனை செய்யவேண்டும். 1822-வது வருஷத்திற்கும் 1863-வது வருஷத்திற்கும் இடையே நிகழ்ந்தவைகளைப்பற்றி நாங்கள் விவரிக்க விரும்பவில்லை ; ஏனெனில், அது நீண்ட விஷயமாக முடியும், மேலும், பி.பி. நெ. 7743-இல், ரெவினியூ போர்டு, அதி விவரமாகவும் விளக்கமாகவும் தெரிவித்திருக்கிறபடி, 43 வருஷங்களில் நடந்த பல விஷயங்களை இவ்வளவு காலமானபிறகு, நாம் எவராவது எடுத்துக்கூறுவது அசாத்தியமான காரியம். ரெவினியூ போர்டு சரித்திரத்திலேயே அது ஒரு பிரசித்தி வாய்ந்த ஸாஸனம். 63 வருஷ காலத்தில் நிகழ்ந்த பல

விஷயங்களையும் சட்ட நுணுக்கங்களையும் அது ஆராய்ச்சி செய்கிறது. மனுவின் காலத்திலிருந்து, ரெவினியூ போர்டு மேற்கூறிய தங்கள் காரியக்கிரமங்களை பூர்த்திசெய்த 1864-ம் வருஷம் டிஸம்பர் மீ 2உ வரை நடந்த வரி வசூல் ஏற்பாடுகளை, அது சீர்தூக்கிப்பார்க்கிறதென்பது மிகையாகாது. பி.பி. நெ. 7743ஐ செய்ததற்கு முக்கிய காரணம் பின்வருமாறு: குடியானவனுக்கும் ஜமீந்தாருக்கும் ஏற்பட்ட ஒரு வழக்கை விசாரித்த ஜில்லா நீதிபதி, 1802-ம் வருஷத்திய XXV, XXX ரெகுலேஷன்களையும், 1822-ம் வருஷத்திய IV, V ரெகுலேஷன்களையும், தனக்குத் தோன்றியவாறு வியாக்கியானம் செய்து, நிலச்சுவான்தார் அல்லது ஜமீந்தாருக்குள்ள அந்தஸ்து, ஆங்கில நிலச்சுவான்தாருக்குள்ள அந்தஸ்துதான் என்றும், குடியானவன் தனது உரிமையை, நிலச்சுவான்தாரிடமிருந்து அடைகிற ஆங்கில "இடனன்டி"ன் நிலைமையிலிருக்கிறனென்றும், தீர்ப்புக்கூறினர். இச்சந்தர்ப்பத்தில், மேற்படி விஷயத்தைக்குறித்து விரிவான அறிக்கையொன்றை சமர்ப்பிக்கும்படி, சென்னை சர்க்கார் ரெவினியு போர்டைக் கேட்டுக்கொண்டார்கள். மனுவின் காலத்திலிருந்து 1864-வது வருஷம்வரை ஆசரணையிலிருந்துவந்த பல நிலவரி வருமான முறைகளை ஆய்ந்து அறிந்து, ஜமீந்தார், ஆங்கில அர்த்தப்படி, நிலப்பிரபு அல்லவென்றும், சர்க்கார் சார்பாக வரி வசூல் செய்பவரே என்றும், நிரந்தரமான அனுபோக, வரி ஏற்பாட்டின்படி, நிலத்தையுடையவன் குடியானவன்தான் என்றும், சாசுவத செட்டில்மெண்ட் விதிகளுக்கு விரோதமாக, எந்தக்காரணத்தை முன்னிட்டாவது வரி ஸ்திரமும், அனுபோக ஸ்திரமும் மாற்றமுடியாதென்றும், ரெவினியு போர்டு தெரிவித்தது. பி.பி. நெ. 7743, நீண்ட பத்திரம். அதை இரண்டு பாகங்களாக நாங்கள் பிரித்திருக்கிறோம். முதலாவது பாகம் பூர்வகாலத்திலிருந்து, பட்டா ரெகுலேஷனும், சாசுவத செட்டில்மெண்ட் ரெகுலேஷனும் ஏற்படுத்தப்பட்ட 1802-வது ஞூ ஜூலை மீ 13-ம் உ வரை உள்ள நிலவரி வருமான சரித்திரத்தைக்குறிக்கிறது. இரண்டாவது பாகம், பட்டா ரெகுலேஷன் ஏற்பட்ட தேதியிலிருந்து 1863-வது வருஷத்திய வரி வசூல் மசோதா காலம்வரை உள்ள சரித்திரத்தைக்குறிக்கிறது. பி.பி. நெ. 7743-வதின் இரண்டாவது பாகத்தை இங்கு எடுத்தெழுதி, அதை இவ்வறிக்கையின் ஒரு பாகமாகச்செய்ய விரும்புகிறோம். அதிற் காணப்படும் விஷயங்களை விஸ்தரிப்பதாவது, திருத்திக்கூறுவதாவது எங்கள் நோக்கம் அல்ல. சட்ட விளக்கமாகவாவது, விஷய விளக்கமாகவாவது, அதைவிட சிறப்பாகக்கூறுதல் அறிய விஷயம். சாசுவத செட்டில்மெண்டுக்கு விரோதமாக, அதிக வரி கொடுக்கச் சம்மதிக்கும் மூன்றுவது மனிதனுக்கு, ஜமீன்தார் நிலத்தைக்கொடுப்பதை சர்க்கார் அனுமதிப்பது, குடியானவர்கள் நிலத்தைக் கொள்ளையடித்து, அப்படிக் கொள்ளையடித்ததில் ஒரு பாகத்தை ஜமீந்தார் அனுபவிக்க அனுமதிப்பதாகும் என்று ரெவினியூ போர்டார் தெரிவித்தனர். முடிவாக அவர்கள் தெரிவித்ததென்னவென்றால், ஆங்கில அர்த்தப்படி, ஜமீந்தார் நிலப்பிரபு அல்ல; குடியானவன் "டெனன்ட்" அல்ல. அதாவது, ஜமீந்தார் வரி வசூல் செய்பவர். குடியானவன், தனது சொந்த, ஸ்வயமான, தொன்றுதொட்டு வருகிற பாத்தியதையால், நிலத்திற்கு உரியவன்; அப்படிப்பட்ட உரிமையின் ஒரு சிறு பாகத்தையாவது ஜமீந்தாரிடமிருந்து அடையவில்லை.

அனுபோக ஸ்திரசம்பந்தமாகவும், வரி ஸ்திர சம்பந்தமாகவும், குடியானவன் கொண்டாடும் பாத்தியத்தின் உண்மையும், நியாயமும், பி.பி. ந. 7743ஐப் படிப்பவர்களுக்கு விளங்கும். 1864-ம் வருஷம் டிஸம்பர்மீ 2உ இட்ட பி.பி. ந. 7743 பின்வருமாறு:—

1864-ம்ஞூ டிசம்பர்மீ 2உ இட்ட நடவடிக்கையின் பிரசித்தி வாய்ந்த சாராம்ஸம்.

பக்கம் 162—பக்க உட்பிரிவு 49.—"ஜமீந்தார்களுக்கும் அவர்களுடைய கீழ்க்குத்தகைகாரர்களுக்கும் ரயத்துகளும் குடியானவர்களுக்கும் இடையே இருக்கவேண்டிய பட்டாக்கள்," XXX ரெகுலேஷனில் குறிக்கப்பட்டிருக்கின்றன. இவைகளைப்பற்றி விஸ்தாரமாக ஆராயவேண்டும்.

"இந்த ரெகுலேஷனுக்கு, ஒரு குறிப்பாகப் பதிப்பிக்கப்பட்டிருக்கும் காம்ப்வெல்ஸ் ரெகுலேஷன் சட்டத்தில், வெப் துரை எழுதிய யதாஸ்து ஒன்று சேர்க்கப்பட்டிருக்கிறது. சாசுவத செட்டில்மென்டை ஏற்படுத்துவதின் சம்பந்தமாக நியமிக்கப்பட்ட ஸ்பெஷல் கமிஷனுக்கு இவர் ஒரு அங்கத்தினராவர். சென்னை சர்க்காருக்கு பிரதம காரியதரிசியாகவும் இருந்தார். இங்கு உயரிய உத்தியோகம் வகித்திருந்த ஹாட்ச்ஸன், கிரீன் எவே துரைகளுக்கு தமது யதாஸ்தை அவர் அனுப்பினர். "மிராசி" உரிமைகளை ஸ்திரப்படுத்தும்சில பிரிவுகளை மேற்படி ரெகுலேஷனில் அமைக்கவேண்டுமென்று அவர்கள் வற்புறுத்தியிருந்தார்கள். 'இந்தியாவின் வடகோடியிலிருந்து கன்னியகுமரி வரை' யுள்ள எல்லா குடியானவர்களுக்கும் அவ்வுரிமைகள் சமமாகவே செல்லும் என்று ஹாட்க்ஸன் விளக்கிக்கூறியிருப்பது இங்கு குறிக்கத்தக்கது. அதன் இலக்ஷணமாவது: "சட்டப்படியாவது, வழக்கப்படியாவது, சம்பிரதாயப்படியாவது, ஜமீந்தாராவது, நிலச்சுவான்தாராவது (என்ன பெயரால் அழைக்கப்பட்டாலும் சரி) தனது சௌகரியப்படி குடியானவனிடம் வரி கேட்கக்கூடாது; அதாவது, சாகுபடி செய்யும் தன் நிலத்திற்கு, குறிக்கப்பட்ட வரியைத் தவிற அதிகமான வரியைக் கொடுக்க குடியானவன் கடமைப்பட்டவன் அல்ல. இது குடியானவனுக்கு தொன்றுதொட்டுள்ள நிலவரமான உரிமை" "இவ்வுரிமைகளை ஸ்திரப்படுத்துவதே சாசுவத செட்டில்மென்டின் மூல தத்துவம்" என்று அவர் விவாதித்தார். இக்காலத்தில் ரெவினியூபோர்டுக்கும் அந்த அபிப்ராயம்தான் இருக்கிறது. கார்ன்வாலிஸ் பிரபு, ஸர் ஜான் ஷோர் ஆகிய இவர்களுடைய ஆராய்ச்சி விளக்கங்களும், வங்காள ரெகுலேஷன்களும், சென்னை ரெவினியூ போர்டு நடவடிக்கைகளும், இந்த அபிப்ராயத்தை வலியுறுத்துகின்றன; "ஜமீந்தார்களுடைய உடைமை உரிமை (**Properitary right**) என்பது, சர்க்கார் உரிமை என்று வழக்கமாக ஏற்பட்ட, குடியானவர்களிடமிருந்து வரி வசூல் செய்யும் உரிமையை விட வேறல்ல; இந்த, உரிமையால் ஏற்படும் பலன், முதலாவது: வழக்கமாக ஏற்பட்ட வரி விகிதத்தை அல்ல மொத்த வரி வருமானத்தை, புதிய நிலங்கள் சாகுபடி செய்வதன்மூலம், பெருக்கிக்கொள்ளுதல்; இரண்டாவதாக வரி, தானியமாகக் கொடுக்கப்பட்டால், அவ்வப்போதுள்ள விலைவாசிக்குத் தகுந்தாற்போல் லாபம் அடைவது; மூன்றுவதாக ஜமீந்தாரும் குடியானவனும், தங்கள் பரஸ்பர நன்மையைக் கருதி, நிலத்தைச் செம்மைப்படுத்தி அபிவிருத்திசெய்து, அதனுல் ஏற்படும் லாபத்தை அனுபவித்தல்" (திண்டுக்கல்லைப்பற்றி, ஹாட்க்ஸன் எழுதிய அறிக்கையைப் பார்க்கவும்—5-வது அறிக்கையின் அனுபந்தம்.)

50. 1802-ம் வருஷத்திய XXX ரெகுலேஷன் பீடிகையை எழுதிய வெப் துரை, சாசுவத செட்டில்மென்டின்கீழ், ஜமீந்தார்கள் அடைந்த உரிமைகளை தீவிரமாக ஆதரிப்பவர். குடியானவர்களுடைய உரிமைகள், அக்காலத்தில், புதிதாக ஸ்தாபிக்கப்பட்ட கோர்ட்டுகளில் நிர்ணயம் செய்யப்பட்டு ஸ்திரம் அடையலாம் என்றும், குடியானவர்களுடைய உரிமைகளை ஜமீந்தார்கள் மறைத்து, ஒழித்துவிடுவார்கள் என்று நினைப்பது "மாணவ அனுபவத்திற்கு முற்றிலும் மாறானதென்றும்" அவர் தாம் எழுதிய யதாஸ்தில் விவாதித்தார். ஆனல் அவர் கூறுகிறபடி செய்தால், குடியானவர்களின் உரிமைகள், காலவரையறையில்லாமல், நீண்டகாலம் ஒத்திவைக்கப்படும் என்பதை அவர் சிந்திக்கவில்லை. இன்றுவரை, குடியானவர்களின் உரிமைகள் அவ்வாறு சுணக்கம் அடைந்து வந்திருக்கின்றனவென்பது போர்டின் அபிப்பிராயம்.

51. பூர்வாங்க ரெகுலேஷனில், ஹாட்க்ஸனும், கிரீன் எவெயும், சில மாறுதல்களைச் செய்தார்கள். நீதிஸ்தலங்கள் இப்பொழுது பின்பற்றுகிறதும், சட்டமாக இப்பொழுது இருந்துவரும் ரெகுலேஷனை ஆராய்வோம். 1802-ம் ஞு ஜூலை மீ 13-ம் உயில் சாசுவத செட்டில்மெண்ட் சம்பந்தமான எல்லா ரெகுலேஷன்களும், ஏற்படுத்தப்பட்டன என்று ரெவினியு போர்டு முதலாவது குறிக்கிறது.

52. "விளைச்சலை பங்கிட்டுக்கொள்வதின் சம்பந்தமாகவும், சில நிலங்களுக்கு வசூலிக்கப்படும் பண வரி சம்பந்தமாகவும், தற்பொழுதுள்ள நிலைவரமற்ற முறையை" (அக்காலமிருந்த பரிஸ்திதிகளைக் குறிக்கிறது) ஒழித்துவிடவேண்டிய அவசியம், XXX ரெகுலேஷன் பீடிகையில் முதலாவது தெரிவிக்கப்படுகிறது. "குடியானவர்கள் தங்கள் நிலச்சுவான்தார்களோடு நிர்ணயமான ஒப்பந்தங்களைச் செய்துகொண்டு அதனால் நன்மையையும், பாதுகாப்பையும், பெறவேண்டும்" என்றும் அது தெரிவிக்கிறது. அதற்காக, சாசுவத செட்டில்மெண்ட் ஏற்பட்ட ஆறு மாதத்திற்குள், எழுத்துமூலமான உடன்படிக்கைகள், (பட்டாக்களும், முச்சிலிக்கைகளும்,) ஒவ்வொரு ஜமீனிலும் ஏற்படவேண்டுமென்றும் குறிக்கிறது. மேற்படி ஒப்பந்தங்கள், கீழே தெரிவித்திருப்பதைப்போல் நால் வகைப்பட்டன :—

முதலாவது—கிராமங்களின் வரி மொத்த தொகையாக தெரிவிக்கப்படுவது.

இரண்டாவது—நிலத்தின் விளைச்சலை பாகம் செய்து கொள்வது.

மூன்றுவது—பணவரி விதிக்கப்பட்ட நிலங்கள் சம்பந்தமான ஒப்பந்தங்கள்.

நான்காவது—தானியவரி விதிக்கப்பட்ட நிலங்கள் சம்பந்தமான ஒப்பந்தங்கள்.

முதலாவது கூறப்பட்ட ஒப்பந்தங்களில், வரித் தொகையும், வரி கொடுக்க வேண்டிய தேதிகளும், எந்த நாணயத்தில் வரி செலுத்தவேண்டும் என்பதும், குறிக்கப்படவேண்டும்.

இரண்டாவது ஒப்பந்தங்களில், குடியானவனுடைய பாகம் என்னவென்பதும், மற்ற விவரங்களும் குறிக்கப்படவேண்டும்.

மூன்றுவது ஒப்பந்தங்களில், " அனுசரிக்கப்படும் நில அளவிற்கு தகுந்தாற்போல் வரி விகிதமும், ஏற்பட்டுள்ள மாமூலின்படி, நிலத்தரத்திற்கு தகுந்தாற்போல், அல்லது, சாகுபடி செய்யும் தானியத்திற்கு தகுந்தாற்போல் விதிக்கப்பட்ட வரியும்," குறிக்கப்பட வேண்டும்.

நான்காவது ஒப்பந்தங்களில், பொதுவாக இதர ஒப்பந்தங்களில் தெரிவிக்கப்படும் விவரங்களோடு " செலுத்தவேண்டிய தானிய அளவும், தானியத்தின் பேரும் குறிக்கப்படவேண்டும்.

பட்டாக்கள் ரிஜிஸ்டர் செய்யப்படவேண்டுமென்று 5-வது பிரிவு விதிக்கிறது.

வசூலிக்கப்படகூடிய, பலவரி அம்சங்கள் " குறிக்கப்பட்ட ஒரு தொகையாகவாவது, ஒரு அளவு தானியமாகவாவது " ஒருங்கு திரட்டித் தெரிவிக்கவேண்டும்.

" ஜமீன்தார், எந்த பெயரைச் சொல்லியாவது, என்ன சாக்கு கூறியாவது, குடியானவர்களிடமிருந்த புதிய வரி வசூல் செய்யக்கூடாது " என்று 7-வது பிரிவு கண்டிப்பாய் தடுக்கிறது. ஹாட்க்ஸன், கூறுவதைப்போல், இவ்விதி, பழைய நிச்சயமான வரி விகிதத்தை அங்கீகரிக்கிறது. குடியானவர்களுடைய உரிமை, ஸ்திரப்படுத்தப்பட்டதென்பதற்கும் அது ஆதாரமாயிருக்கிறது.

குடியானவர்கள் பட்டா கேட்கும் உரிமையையும், தமது ஜமீனில் சாசுவத செட்டில்மெண்ட் ஏற்படுத்தப்பட்ட ஆறுமாத காலத்திற்குள் பட்டா கொடுப்பதற்கு ஜமீன் மறுத்தார், அல்லது தாமதித்தார் என்று கோர்ட்டில் ஸ்தாபிக்கப்பட்டால், ஜமீன்தாருக்கு அபராதம் விதிக்கப்படும் என்பதையும், குடியானவனுக்கு அவர் நஷ்ட ஈடு கொடுக்கவேண்டுமென்பதையும், 8-வது பிரிவு தெரிவிக்கிறது.

பணவரி விகிதமாக, அல்லது தானியபாக சம்பந்தமாக வழக்குகள் ஏற்பட்டால், சாசுவத செட்டில்மெண்ட் ஏற்படுவதற்கு முன் வருஷத்தில், வழக்கில் சம்பந்தப்பட்ட நிலங்களுக்கு என்ன வரி விகிதங்கள் இருந்தனவோ அவைகளே நியாயமான வரி விகிதங்கள் என்று கொள்ளவேண்டும். அவைகள் தெரியப்படாவிட்டால், வழக்கில் சம்பந்தப்பட்ட நிலங்களுக்குப் பக்கத்திலுள்ள நிலங்கள்மீது அக்காலத்தில் என்ன வரி விகிதங்கள் ஏற்பட்டிருந்தனவோ அவைகளே நியாயமான வரி விகிதங்கள் என்று கொள்ளவேண்டும் என்று 9-வது பிரிவு கூறுகின்றது.

முச்சலிக்கைகள், கொடுக்காத குடியானவர்களுடைய நிலங்களை பிறருக்குக் கொடுக்கும் உரிமையை, 10-வது பிரிவு தெரிவிக்கிறது.

ஒப்பந்தத்திலுள்ளதிற்கு மாறாக, ஜமீன்தார் அதிகவரி வசூல் செய்வதற்கு விதிக்கப்படும் அபராதங்களை 11-வது பிரிவு தெரிவிக்கிறது.

ஒரு வருஷத்திற்கு ஏற்படுத்தப்பட்ட பட்டாக்கள், வருஷம் முடிவில் புதுப்பிக்கப்படவேண்டும் என்றும், புதுப்பிக்கப்படும் வரை அவைகள் அமுலிலிருக்குமென்றும், புதிய பசலி ஆரம்பித்த இரண்டு மாதத்திற்குள் அவைகள் புதுப்பிக்கப்படவேண்டும் என்றும், 12-வது பிரிவு தெரிவிக்கிறது.

ஜமீன்களை விலைக்கு வாங்கினவர்கள், பழைய ஜமீன்தார்களால் கொடுக்கப்பட்ட பட்டாக்களுக்கு பதிலாக தங்கள் பேரால், குடியானவர்களுக்கு புதிய பட்டா கொடுக்கவேண்டுமென்று 13-வது பிரிவு வற்புறுத்துகிறது.

வசூலித்த தொகைகளுக்கு, ரசீதுகள் கொடுக்கவேண்டுமென்று 14-வது பிரிவு தெரிவிக்கிறது.

ஜமீன்தார்கள் கொடுக்கும் கட்டிடக் குத்தகைகள் தரிசு நிலங்களைப் பண்படுத்தி சாகுபடி செய்வதற்கு பட்டாக்கள், ஆகிய இவைகள் சம்பந்தமான விதிகளை கடைசிப் பிரிவான 15-வது பிரிவு கூறுகிறது.

53. சாசுவத செட்டில்மெண்டை ஏற்படுத்தியவர்களின் தெளிவான நோக்கமென்னவென்றால், குடியானவர்களிடமிருந்து ஜமீன்தார் வசூலிக்கக்கூடிய வரியை வரையறை செய்வது ; ஜமீன்தார் தன்னிஷ்டப்படி வரிகள் விதிப்பதைத்தடுப்பது. சாசுவத செட்டில்மெண்டின் போக்கு முழுவதும் இந்த நோக்கத்தை அனுசரித்தே இருந்ததென்பது ரெவினியு போர்டாரின் கொள்கை. சாசுவத செட்டில்மெண்டை ஏற்படுத்தியவர்கள் தெரிவித்திருக்கிறபடி, ஜமீன்தார் தனது வருமானத்தை விருத்திசெய்து கொள்வதற்கு இரண்டு

வசதிகள் அனுமதிக்கப்பட்டன. அதாவது, தனது ஜமீனை அபிவிருத்தி செய்து கொள்ளுதல்; இரண்டாவது தரிசு நிலங்களை பண்படுத்தி, சாகுபடிக்கு லாயக்காகச் செய்தல், இவ்விரு உபாயங்கள் மூலம், குடியானவர்களுடைய உரிமைகளைப் பாதிக்காமலே, ஜமீன்தார் லாப மடையலாம்.

54. ரெகுலேஷன்கள் சட்டமான பிறகு அவைகள் நாட்டிலுள்ள உயர்ந்த நீதிமன்றங்களால் எவ்வாறு வியாக்கியானம் செய்யப்பட்டன என்பதும், மேற்படி ரெகுலேஷன்களைச் செய்தவர்களே, சிலசமயங்களில், நியாயாதிபதிகளாக இருந்தபொழுது, என்ன முடிவு கூறினார்கள் என்பதும், சென்னை சத்தர் அடலத் கோர்ட்டில் பழைய தீர்ப்புகளிலிருந்து, அறியக்கூடும்.

55. 1812-ம் வருஷத்திய ஸ்பெஷல் அப்பீல் சூட் நெம்பர் 15-ல் (மேலே கூறப்பட்ட கிரின்சுவே துரை அதில் ஒரு நியாயாதிபதியாக இருந்தார்), செங்கற்பேட்டையிலிருந்த ஒரு குடியானவன் தனக்கு நிலத்தை தனக்குத் திருப்பிக் கொடுக்கவேணுமென்றும், பட்டா கொடுக்கவேணுமென்றும், ஒரு ஜமீன்தார் மீது வியாஜ்ஜியம் தொடுத்தான்.

ஜில்லாக்கோர்ட்டின் தீர்ப்பின்படி, கர்ணம் விதித்த விகிதத்தின்படி பணவரி கொடுக்கவேண்டும் என்ற நிபந்தனையுடன், நிலங்கள் குடியானவன் வசம் ஒப்புவிக்கப்பட்டன.
முதற்கோர்ட்டின் தீர்பை மாகாணக் கோர்ட்டு அங்கீகரித்தது. அதற்குக் கூறிய காரணங்கள் என்னவென்றால், தீர்ப்பில் கண்ட வரித் தொகை ரௌத்ரி வருஷத்தில் (1800-ம் வருஷ) குடியானவர் சர்க்காருக்கு செலுத்திய வரித் தொகையாகும் என்பதே.

ஆனால், ஸ்பெஷல் அப்பீலில் பின்வருமாறு தெரிவிக்கப்பட்டது. "வரி சம்பந்தமாகக் கொடுக்கப்பட்ட சாக்ஷியத்தினின்றும், வரி முடிவாகத் தீர்மானிக்கப்படவில்லை என்றும், அது விளைச்சலின் ஈவைப்பொருத்திருந்ததென்றும், விளைச்சல் பருவத்திற்கு தகுந்தாற்போல் மாறக்கூடியதாகையால், அதன் விலை மதிப்பும், மாறக்கூடிய தென்றும், கோர்ட்டார் தெரிவித்தனர்."

"தானியமாகக் கொடுக்கப்பட்டவரி, என்ன பணவரியாக மாற்றப்படவேணுமென்று நிர்ணயம் செய்வதில் கோர்ட்டார் தலையிடக்கூடாது. இது ஜமீன்தார், குடியானவர்கள், ஆகிய இருதரப்பினர்களால் நிர்ணயம் செய்யப்படவேணுமென்பது தெளிவான விஷயம். அவ்வாறு நிர்ணயம் செய்வதில் இருதரப்பினர்களும் தங்கள் தங்கள் நலத்தையே அனுசரிப்பார்கள்" "ஆனால் எழுத்து மூலமான ஒப்பந்தங்களில் வரிவிகிதங்கள் ஏற்படுத்தப்பட்டால், கோர்ட்டார் அதை அனுசரித்தே தீர்ப்புக் கூறுவார்கள்."

"ஆதலால், விளைச்சலில் செலுத்தவேண்டிய பாகம் என்ன என்பதைத் தெரிவிக்கும் பட்டாவின்படி குடியானவன் வழக்காட்பட்ட நிலத்திற்கு உரியவன் என்றும் 1802-வருஷத்திய XXX ரெகுலேஷன் 9-வது பிரிவின்படி சாசுவத செட்டில்மெண்டுக்கு முன் வருஷத்தில் மேற்படி நிலத்திற்கு ஏற்படுத்தப்பட்ட வரி விகிதமே சரியான வரி விகிதமென்றும், அது தெரிய முடியாவிட்டால், பக்க நிலங்களுக்கு என்ன விதிக்கப்பட்டதோ அதையே சரியானவரி விகிதம் என்று கொள்ளவேண்டுமென்றும், தீர்ப்புக் கூறப்படுகிறது."

"மேற்படி நிலத்தினுடைய விளைச்சலின் ஈவு விகிதத்தைப்பற்றி இனிமேல் யாதொரு வியவகாரமும் இல்லாமலிருப்பதற்கு மேலே கூறப்பட்ட வரி விகிதங்கள், ஜில்லாக் கோர்ட்டால் நிர்ணயம் செய்யப்படவேண்டும். அவைகள் சம்பந்தமாக கர்ணங்கள் கொடுக்கும் சாக்ஷியத்தை, நீதிபதி தனது கோர்ட்டில், கக்ஷிக்காரர்கள் அல்லது அவர்களுடைய வக்கீல்கள் முன்னிலையில் எழுதிக்கொள்ளவேண்டும்.

தனது நில அனுபோகத்தினின்றும், குடியானவன் விலக்கப்பட்டதற்கு ஜமீன்தார் நஷ்ட ஈடு தரவேண்டும்.

56. 1812-ம் வருஷத்திய ஸ்பெஷல் அப்பீல் சூட் நெ. 18-லும், 1814-ம் வருஷத்திய ஸ்பெஷல் அப்பீல் சூட் நெ. 10-லும் (இந்த வழக்குகளில் கிரீன் அவே ஒரு நியாயாதிபதியாயிருந்தார்). ஜமீன்தாருக்கு யாதொரு தொகையும் செலுத்தாமல், "திவிக்காட்டுகளில்" விறகு வெட்டிக்கொள்வதற்கு தங்களுக்கு உரிமை இருக்கிறதென்பதை ஸ்தாபிக்க, மசூலிப்பட்டணத்திலுள்ள சில வியாபாரிகள் வழக்குத் தொடுத்தார்கள்.

விறகு வியாபாரிகள் கொண்டாடிய உரிமை, ஜில்லாக் கோர்ட்டாலும், மாகாணக் கோர்ட்டாலும் அங்கீகரிக்கப்பட்டது.

அது சம்பந்தமாக ஏற்பட்ட ஸ்பெஷல் அப்பீலில், சத்தர் கோர்ட்டு கூறிய தீர்ப்பாவது :—

> "வெகு சாதாரணமான ஆதாரத்தைக் கொண்டு இந்த வழக்கைத் தீர்த்து விடலாம். சாசுவத செட்டில்மெண்டுக்கு முன் இது சம்பந்தமாயிருந்த வழக்கத்தை அனுசரிப்போமாகில், இந்த வியாஜ்ஜியம் சுலபமாய் முடிந்துவிடும்."

> "சாசுவத செட்டில்மெண்டு சட்டத்தின்படி சர்க்கார் தாங்கள் செலுத்திவந்த "உடைமை உரிமையை" (குறிக்கப்பட்ட சில விலக்குகளோடு) ஜமீன்தார்களுக்கு மாற்றினார்கள். அதைவிட அதிகமான உரிமையை சர்க்கார் கொடுக்கமுடியாது. அப்படிக்கொடுத்தால் அது பிறருடைய உரிமைகளைப் பாதிப்பதாகும். ரெகுலேஷனால், பிரத்தியேகமாகவும், வெளிப்படையாகவும், நிராகரிக்கப்படாத வழக்கங்களும் உரிமைகளும், ஸ்திரப்படுத்தப்பட்டதாகவே கொள்ளவேண்டும். சாசுவத செட்டில்மெண்டு ஏற்படுவதற்கு முன் திவிக்காட்டில், விறகு வெட்டுவதற்கு சர்க்கார் யாதொரு தொகையும் வசூலிக்காவிட்டால், ஜமீன்தாரும், இப்பொழுது ஒரு தொகையும் வசூலிக்க முடியாது."

57. 1813-ம் வருஷத்திய ஸ்பெஷல் அப்பீல் சூட் நெ. 8-ல் (கிரீன் அவே ஒரு நீதிபதியாயிருந்தார்) வாதி தனது நிலங்கள், லக்கிராஜ் அல்லது வரிகொடுக்காத நிலங்களென்றும், அவைகளின்மீது ஜமீன்தார் வரி விதித்தது நியாயமல்லவென்றும் வாதித்தான். "நாட்டிலுள்ள சதாரண வழக்கப்படி ஜமீன்தார் வரி வசூலித்தது சரியா, தவறு என்பது, முக்கிய விஷயமல்லவென்று ஜில்லா நீதிபதிகள் கூறினர். ஆனால், அது வழக்கு சம்பந்தமாக, மிகவும் முக்கியமான விஷயமென்று, சத்தர் கோர்ட்டு அபிப்பிராயப்பட்டது. ஏனெனில், வசூலிக்கப்பட்டது மாமூலாகயிருந்தால், வாதியினுடைய பாத்தியம் தோற்றுவிடும். ஆனால் அது புதிய வரியாயிருந்தால், சட்டத்திற்கு விரோதமானதே."

58. சுருக்கமாக ஆராயவேண்டிய இன்னும் இரண்டு ரெகுலேஷன்களிருக்கின்றன. அவை 1802-ம் வருஷத்திய IV, V ரெகுலேஷன்கள் "குடியானவர்களுடைய உரிமைகளைப் பொருத்தமட்டில், 1802-ம் வருஷத்திய XXV, XXVIII, XXX ரெகுலேஷன்களின் உண்மைக் கருத்தையும், பொருளையும் தெரிவிக்கும் ரெகுலேஷன் என்று முதல் ரெகுலேஷன் (IV ரெகுலேஷன்) அழைக்கப்படுகிறது." "சர்க்கார் அதிகாரிகளுக்காவது, ஜமீன்தார்களுக்காவது, வார்சு முறையிலாவது, விற்பனையாலாவது, சாசுவத செட்டில்மெண்டின்படியாவது, தற்காலிக செட்டில்மெண்டின்படியாவது, சர்க்கார் கொடுத்த விசேஷ சன்னதுகளின்படி

யாவது ஜமீன் உரிமை அடைந்தவர்களுக்காவது, குடியானவர்கள் செலுத்தவேண்டிய வரியை ஸ்திரப் படுத்துவதற்கு ஏற்பட்ட ரெகுலேஷன்களின் உட்கருத்து, அர்த்தம் இவை சம்மந்தமாக சந்தேகங்கள் ஏற்பட்டிருக்கிறபடியால்" என்றும் அந்த ரெகுலேஷன் தெரிவிக்கிறது. "ஜமீன்தார்களுடைய எவ்வகைப்பட்ட உரிமைகளையாவது, குடியானவர்களுடைய எவ்வகைப்பட்ட உரிமைகளையாவது வரையறை செய்வதற்காவது, விளக்குவதற்காவது குறைப்பதற்காவது, பாதிப்பதற்காவது, அழிப்பதற்காவது, 1802-ம் ஆண்டு XXVIII, XXX ரெகுலேஷன்கள் செய்யப்படவில்லை என்று இதன் மூலம் தெரிவிக்கப்படுகிறது."

59. 1822-ம் ஆண்டு, V ரெகுலேஷன் பீடிகை தெரிவிப்பது :—"குடியானவர்களுடைய பாதுகாப்பிற்கு, 1802-ம் ஆண்டு XXVIII, XXX ரெகுலேஷன்களின் விதிகள், போதிய ஆதரவளிக்கவில்லை. ஏனெனில், ஜமீன்தார்களுக்கு கொடுக்கப்பட்ட அதிகாரங்கள், துரிதமாகவும், கண்டிதமாகவும், இருக்கின்றன. அதனால் ஏற்படும் நஷ்டத்திற்கு, பொருள் வசதியில்லாத குடியானவன் கோர்ட்டுகள் மூலமாகவே பரிகாரம் தேடவேண்டியிருக்கிறது. ஆதலால், இந்த மாதிரி வழக்குகளிலும், 1802-ம் ஆண்டு XXXII ரெகுலேஷனில் தெரிவித்திருக்கிறபடி நில அனுபோகம், சாகுபடி செய்தல், நீர் பாய்ச்சுதல், சம்பந்தமாக திடீரென்று ஏற்படும் சண்டை சச்சரவுகளிலும், கோர்ட்டுகளுக்குள்ள துரித அதிகாரங்கள் கலெக்டர்களுக்கு மாற்றப்படவேண்டும், வரிபாக்கி, வரிவிகித நிர்மாணம், நில அனுபோகம், நிலத்தைச் சாகுபடி செய்தல், இவைகள் சம்பந்தமான வழக்குகளை, பஞ்சாயத்துகள் விசாரிக்கும்படி, ஏற்பாடு செய்யவேண்டும்."

1802-ம் ஆண்டு XXVII, XXX ரெகுலேஷன்களின் பிரகாரம், கோர்ட்டுகள் செலுத்திவந்த துரித அதிகாரங்களை இந்த ரெகுலேஷன் கலெக்டர்களுக்கு மாற்றியது. (1802-ம் ஆண்டு XXVIII ரெகுலேஷன் 35, 40 பிரிவுகளில் குறிக்கப்பட்டுள்ள வழக்குகள் மட்டும் விலக்கப்பட்டன. இவைகள் சம்பந்தமாக கோர்ட்டுகளுக்கு துரித அதிகாரம் இல்லையென்பது குறிக்கத்தக்கது.)

மேலும், அது தெரிவிப்பதாவது, 1802-ம் ஆண்டு XXVIII ரெகுலேஷன்படி பாக்கிகளுக்காக ஜப்தி செய்யப்பட்ட நிலங்களை (பட்டாக்கள் கொடுத்திருந்தாலொழிய, அல்லது பட்டாக்களை ஜமீன்தார்கள் கொடுத்தும் அவை குடியானவர்களால் மறுக்கப்பட்டாலொழிய, மேற்படி விற்பனை அனுமதிக்கப்பட்டாலொழிய), விலைக்குக் கொண்டுவரக்கூடாது. நிலத்தை ஜப்தி செய்வதற்கும், விற்பனை செய்வதற்கும், ஜப்திக்கு விரோதமான அப்பீல்களை சீக்கிரமாக முடிவு செய்வதற்கும், மேற்படி ரெகுலேஷன் தகுந்த விதிகளை ஏற்படுத்தியது. ஜமீன்தார் தெரிவிக்கும் தொகையை குடியானவன் செலுத்தவேண்டியது உண்மையானல்தான் நிலத்தை விற்பனை செய்யலாமென்று கலெக்டர் உத்திரவு கொடுக்கலாம். தாம் செய்த விசாரணையிலிருந்து குடியானவன் செலுத்தவேண்டிய தொகை ஜமீன்தார் சொல்வதைவிட குறைவான தொகை என்று கலெக்டர் அறிந்தால் அவர், அதற்கு தகுந்த உத்திரவை பிறப்பிக்கலாம்.

குடியானவனுடைய நிலங்களை ஜமீன்தார்கள், 1802-ம் ஆண்டு XXX ரெகுலேஷன் 10-வது பிரிவின்படி, கலெக்டருடைய அனுமதியில்லாமல் பிறருக்குக் கொடுக்கக்கூடாது. "ஜமீன்தார் கொடுத்த பட்டாவில் குறிக்கப்பட்டிருக்கும் வரி விகிதங்கள் சரியானதென்றும், நியாயமானதென்றும், கலெக்டருக்குத் தெரிந்தால், குடியானவன் அதற்கு ஒத்துக்கொள்ளவேண்டும். அப்படிச் செய்யத் தவறினல், கலெக்டரின் உத்திரவுபடி நிராகரிக்கப்படுவான். பணம், ஜமீன்தார் விதிக்கும் வரி, நியாயமாக ஏற்பட்ட வரியைவிட அதிகமாயிருந்தால், குடியானவனை நிலத்திலிருந்து விலக்கக்கூடாதென்று ஜமீன்தாருக்கு, கலெக்டர் உத்திரவிடலாம். உத்திரவைப்பெற்ற ஒருமாத காலத்திற்குள் குடியானவனுக்கு பட்டா கொடுக்கவேண்டும். தாமதம் செய்தால், 1802-ம் ஆண்டு XXX ரெகுலேஷன் 8-வது பிரிவின்படி அபராதம் விதிக்கப்படும்."

நிலவரி பாக்கிகள், பணமாகவோ, தானியமாகவோ செலுத்தவேண்டியவரி, நில அனுபோகம், நிலங்களைப்பற்றி, அல்லது பயிர்களைப்பற்றிய பாத்தியம், ஆகிய இவைகள் சம்பந்தமாக ஏற்படும் வியவகாரங்களை பஞ்சாயத்துகள் தீர்க்கவேண்டும் என்று 15-வது பிரிவில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

60. தாங்கள் ஆலோசனை செய்து வந்த விஷயத்திற்கு, மேற்கூறியவை, போதிய தகவல்களைத் தருகின்றனவென்று ரெவினியூ போர்டார் அபிப்பிராயப்பட்டனர். இந்த நாட்டில், ஆதிகாலத்திலிருந்து வந்த சமூக அமைப்பின் சின்னம், கிராம சமூகம் என்றும், கிராம நிலங்களின் வரையறைகள் நன்றாய்த் தெரிந்த விஷயமென்றும், நாடு முழுவதும், கிராமங்களாக வகுக்கப்பட்டன என்றும், திடமாக அபிப்பிராயப்பட்டு மேலே சொல்லப்பட்ட தகவல்களிலிருந்து கிடைக்கும் சாக்ஷியத்தைக் கொண்டு ரெவினியு போர்டார் கீழ்கண்ட தீர்மானத்திற்கு வந்தனர்.

61. பின்வரும் விஷயங்கள் தெளிவாக ஸ்தாபிக்கப்பட்டதென்று ரெவினியு போர்டார் கருதினர் :—

சரித்திரத்திற்குத் தெரிந்த ஆதிகாலத்திலிருந்து, நிலத்தின் விளைச்சலில் சர்க்காருக்குச் சேரவேண்டிய பாகம் வரையறை செய்யப்பட்டது ; அப்படி வரையறைச் செய்யப்பட்டது குடியானவனுக்கு தக்க ஆதாரத்தை தந்ததோடு நிலத்தின் மதிப்பையும் அதிகரித்தது. விதிக்கப்பட்ட சர்க்கார் பாகத்தைச் செலுத்தி வந்த குடியானவனுக்கு நில உரிமை பரம்பரையாகவும், ஸ்திரமாகவும் செய்யப்பட்டது.

மகம்மதிய அரசர்களும் சர்க்கார் பாகத்தை வரையறை செய்தே வந்தார்கள்.

ஜமீன்தார் உத்தியோகத்தின் வரலாறு சமீப காலத்தைப் பற்றிய விஷயமாகும். ஜமீன்தார்களுடைய பூர்வோத்தரம் எப்படிப்பட்டதாயிருந்தாலும் சர்க்காரிடமிருந்தே அவர்கள் தங்கள் உரிமைகளைப் பெற்றார்கள். தங்களுக்கிருந்த உரிமையைவிட அதிகமான உரிமையை சர்க்கார் தந்திருக்கமுடியாது.

குடியானவனுடைய அனுபோகத்தின் உரிமைகளையும், நிபந்தனைகளையும் மாற்றாமல், தாங்கள் ஜமீன்தார்களுக்கு கொடுத்த உரிமைகளை, சர்க்கார் பிற்காலத்தில் பன்முறை கைப்பற்றி இருக்கிறார்கள்.

சர்க்கார் தம்மிடம் அதிகமான பேஷ்கஷை கேட்கிறார் என்ற காரணத்தைக் கொண்டே ஜமீன்தார் குடியானவன் செலுத்தவேண்டியவரியை அதிகரிக்கலாம். ஆனல் வரி விகிதத்தை உயர்த்துவதற்கு இது போதிய ஆதாரமில்லை. ஏனெனில், சாகுபடி விஸ்தீரணத்தைப் பெருக்கி சர்க்கார் வருமானத்தை ஜமீன்தார் நியாயமாக அதிகரிக்கலாம். விவசாயத்தை அபிவிருத்தி செய்து மேலான தானியங்களை சாகுபடி செய்துஅதன் மூலமாக சர்க்கார் வருமானத்தில் தனக்கு சேரவேண்டிய பாகத்தை அதிகப் படுத்திக்கொள்ளலாம்.

குடியானவர்களை ஹிம்சித்து கொடுமையானவரிகளை ஜமீன்தார்கள் வசூலிப்பது பலரும் அறிந்த தீமையாகும். இதனல் தான், ஜமீன்தார்கள் சர்க்காருக்குச் செலுத்தவேண்டிய தொகையை, டில்லி அரசரின் நாஜிம்கள் உயர்த்தினர்கள். ஆகவே ஜமீன்தார்கள் குடியானவர்களை இன்னும் உபத்திரவித்து அதிக வரியை வசூலிக்க ஆரம்பித்தார்கள். இதைப் பொருக்காத சில குடியானவர்கள் ஜமீன்தார்களை எதிர்க்க ஆரம்பித்தார்கள். பெரும்பான்மையோர், வறுமையில் மாய்ந்தார்கள். இதனல் டில்லி அரசாங்கம், பலத்திலிருந்தவரை, ஜமீன்

தார்கள்பாடும் கஷ்டமாகத்தானிருந்தது. ஆனால் அரசாங்கத்தின் அதிகாரம் தளர்ந்து அதனுடைய பிரதிநிதிகள் பலஹீன மடைந்தபொழுது, ஜமீன்தார்கள் முன்போலவே குடிகளைத் துன்புறுத்தி பணம் திரட்டிக்கொள்ள ஆரம்பித்தார்கள். இரண்டு வகையிலும் சர்க்காருக்கு யாதொரு நன்மையும் ஏற்படவில்லை.

நாட்டின் நிலைமையை ஒழுங்குபடுத்தி மேற்கூறிய கொடிய தீமைகளை போக்கவேண்டுமென்பதே சாசுவத செட்டில்மெண்ட் ஏற்படுத்தியவர்களின் முக்கிய லக்ஷியமாக இருந்தது. அதை அடைவதற்கு, ஜமீன்களில் கடந்த வருஷங்களில் கிடைத்த சராசரி சர்க்கார் வருமானத்தில் தாராளமான ஒரு தொகையை, ஜமீன்தார்களுடைய சொந்த உபயோகத்திற்குக் கொடுக்க அவர்கள் தீர்மானித்தார்கள். ஜமீன்தார் செலுத்தவேண்டிய பேஷ்கஷ் நிரந்தரமாக முடிவு செய்யப்படவேண்டுமென்றும், சாகுபடி விஸ்தீரணத்தை அதிகப்படுத்துவதின் மூலமாகவும், நிலங்களை அபிவிருத்தி செய்வதின் மூலமாகவும், ஜமீன்தார் தமது வருமானத்தை பெருக்கிக்கொள்ளலாம் என்றும், ஆனால் நியாயப்படி விதிக்கப்பட்ட வரியைவிட அதிகமானவரியைக் குடியானவனிடமிருந்து வசூலிக்கக்கூடாதென்றும், மேற்படி விகிதம் கிராம அதிகாரிகளால் பதிவு செய்யப்படவேண்டுமென்றும், ஒவ்வொரு குடியானவனும் செலுத்தவேண்டிய வரித்தொகையோ தானியமோ பட்டாவில் அல்லது எழுத்து மூலமான ஒப்பந்தத்தில் குறிக்கப்படவேண்டுமென்றும், ஒருவருஷத்திற்குக் கொடுக்கப்படும் பட்டாக்கள் வருஷ முடிவில் புதுப்பிக்கப்படவேண்டுமென்றும், அவ்வாறு புதுப்பிக்கும்வரை, அவை அமுலிலிருக்கவேண்டுமென்றும் அவர்கள் தீர்மானித்தார்கள்.

தமது ஜமீனில் சாசுவத செட்டில்மெண்டு ஏற்பட்ட ஆறுமாத காலத்திற்குள், ஜமீன்தார் குடியானவர்களோடு தகுந்த ஏற்பாடு செய்து கொள்ளவேண்டுமென்றும், அதற்கு பிறகு, குடியானவர்களுக்கு பட்டா கொடுக்க மறுத்தால் அபராதம் விதிக்கப்படும். பட்டாவில் குறிக்கப்படவேண்டிய வரித்தொகைப்பற்றியாவது, தானிய அளவைப்பற்றியாவது, விளைச்சலின் பாகத்தைப்பற்றியாவது, வியவகாரம் ஏற்பட்டால், சாசுவதசெட்டில்மெண்ட் ஏற்படுவதற்கு முன் வருஷத்தில், வழக்கு சம்பந்தப்பட்ட நிலங்களுக்கு என்ன ஏற்பாடு இருந்ததுவோ அதையே முடிவுசெய்யவேண்டும். அது தெரியாவிட்டால், ஒத்த தரத்தையுடைய அக்கம்பக்கத்து நிலங்களுக்குள்ள ஏற்பாட்டை அனுசரிக்கவேண்டும்.

விதிக்கப்பட்ட வரியைச் செலுத்தி வரும்வரை, நிலத்திலிருந்து குடியானவனை விலக்கமுடியாது. இந்த மாதிரி வழக்குகளை விசாரிப்பதற்கு கலெக்டருக்கு துரித அதிகாரம் உண்டு. கக்ஷிக்காரர்கள் சம்மதித்தால், அப்படிப்பட்ட வழக்குகளைப் பஞ்சாயத்துகளுக்கு அனுப்பலாம்.

கலெக்டர் தீர்ப்புகள் சம்பந்தமாக, அதிருப்தி ஏற்பட்டால், கோர்ட்டுகளில் ஒழுங்கான வியாஜ்ஜியம் மூலம் அப்பீல் செய்துகொள்ளலாம். ஆனால், லஞ்சம், பகையென்று, காரணம் சொன்னாலொழிய பஞ்சாயத்து தீர்ப்புகளுக்கு அப்பீல் கிடையாது.

62. இந்த உண்மைகள், மேலே கூறப்பட்ட ஆதாரங்களால், தெளிவாக ஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றனவென்றும், குடியானவர்கள் செலுத்தும் வரியை, தங்களிஷ்டப்படி உயர்த்தலாம் என்று ஜமீன்தார் கொண்டாடும் பாத்தியம், அவைகளுக்கு முற்றிலும் ஒவ்வாததாயிருக்கின்றதென்றும், ரெவினியூ போர்டார் கருதுகின்றனர்.

சாசுவத செட்டில்மெண்ட் காலத்தில் குறிக்கப்படவேண்டியது விளைச்சலின், பாகமாக இருக்கும் சந்தர்ப்பங்களிலும், வரி மாற்றமான பிறகு, சென்ற 60 வருஷங்களாக, செலுத்திவந்த பணவரி மாறாமலிருந்தால், பேஷ்கஷ் தொகை மாறாமலிருக்கும்பொழுது, மேற்படிவரி மாற்ற, விகிதத்தை, ஜமீன்தார் நியாயமாக மாற்றக்கூடுமா என்று போர்டார் வினவுகிறார்கள்.

63. இந்த விவாதத்திற்குக் காரணமாயிருந்த வழக்கைப்பற்றியாவது, அது சம்பந்தமாக கலெக்டரும் நீதிபதியும் தெரிவித்த அபிப்பிராயத்தைப்பற்றியாவது ரெவினியூ போர்டார் விரிவாக ஆராயவேண்டியது அவசியமில்லை.

விசாகப்பட்டணத்தைச் சேர்ந்த ஒரு ஹாவலி எஸ்டேட்டைப்பற்றியே கலெக்டருக்கு மனுச் செய்து கொள்ளப்பட்டது. பேஷ்கஷ் விதிக்கப்பட்டு, இந்த எஸ்டேட்டுகள் சற்றேறக்குறைய 1802-ம் வருஷத்தில் விற்கப்பட்டன. "ஜமீந்தார்கள் குடியானவர்களோடு செய்துகொள்ளும் ஒப்பந்தங்களில் குறிக்கப்பட்டிருக்கும் வரியைவிட அதிகமான வரி வசூல் செய்வதைத் தடுப்பதற்கும், தானிய விலை அதிகரித்து, நிலம் அதிக மதிப்பு அடையும்பொழுது ஜமீந்தார்கள், அதனால் அடையும் லாபத்தைத் தடுப்பதற்கும், ரெகுலேஷனில் யாதொரு விதியும் கிடையாதென்று" எஸ்டேட்டின் ஜமீந்தாரினி தனது வக்கீல் மூலம் வற்புறுத்தினார். காலாவதியான கவுல்கள் வரையறை செய்யப்பட்ட சில வருஷங்களுக்கே ஏற்படுத்தப்பட்டன என்பதையும் அவர் தெரிவித்தார்.

குடியானவர்களிடமிருந்து, ஜமீந்தார் வசூலிக்கக்கூடியவர், பட்டா ரெகுலேஷனால் கண்டிப்பாக வரையறை செய்யப்பட்டது; வருஷத்திற்கு ஒரு முறையில்லாமல், மூன்று வருஷத்திற்கு ஒருமுறை பட்டா மூச்சலிக்கைகள் மாற்றிக்கொள்ளப்படலாம் என்று பரஸ்பர சௌகர்யத்தை முன்னிட்டு ஏற்படுத்திக்கொள்வது சாசுவத செட்டில்மெண்டு காலத்தில் ஏற்பட்ட ஜமீந்தார்கள், குடியானவர்கள் ஆகிய இருதரப்பினர்களுடைய பரஸ்பர பாத்தியதைகளையும் உரிமைகளையும் அழிக்காது என்ற காரணங்களைக் கொண்டு, கலெக்டர் மனுவைத் தள்ளிவிட்டார்.

64. கலெக்டர், வழக்கின் யோக்கியதாம்ஸங்களைப்பற்றி, ஆழ்ந்து ஆராயவில்லையாகையால், வழக்கின் விஷயங்களை கலெக்டர் தீர்ப்புக்கு எவ்வளவு தூரம் ஆதாரமாயிருக்கின்றன என்பதை ரெவினியூ போர்டு சொல்ல இயலாது.

65. கலெக்டர் தீர்ப்பு அப்பீல் செய்யப்பட்டது. அப்பீலை விசாரித்த ஜில்லா நீதிபதி வழக்கின் பிரதம கேள்வியைப்பற்றி கலெக்டர் செய்த தீர்ப்பு தவறென்றுகூறி, விஷயங்களைத் தீர விசாரிக்குமாறு வழக்கைத் திருப்பி அனுப்பிவிட்டார். உபய தரப்பினர்களும் வழக்கை ராஜி செய்துகொண்டபடியால் மேற்கொண்டு நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளப்படவில்லை.

66. காலெட், தமது விரிவான தீர்ப்பில், கலெக்டர் கூறிய முடிவு தவறு, என்ற தமது அபிப்பிராயத்திற்கு பல காரணங்களைத் தெரிவித்திருக்கிறார். சுருங்கக்கூறில் அவை பின்வருமாறு: பட்டாக் கொடுப்பது சம்பந்தமான கால வரையறை; வரி விகிதங்களைப்பற்றி ஏற்படும் வியவகாரங்களைத் தீர்த்துக்கொள்வது, இவை சம்பந்தமாக ஏற்படுத்தப்பட்ட 1802-ம் வருஷத்திய 8, 9 பிரிவுகள், சாசுவத செட்டில்மெண்டு ஏற்படுத்தப்பட்ட ஜமீனில் கொடுக்கப்படும் முதல் பட்டாவுக்கே செல்லும்; எதிர் காலத்தில் வரி உயர்த்தப்படுவதைத் தடுப்பதற்கு, ரெகுலேஷனில் யாதொரு விதியும் கிடையாது. ஒவ்வொரு வருஷமும் பட்டாக்கள் புதிப்பிக்கப்படவேண்டும் என்ற விதியிலிருந்து வரி விகிதங்களில் மாறுதல் ஏற்படுத்தலாம் என்பது விளங்குகிறது.

மேற்கூறிய காரணங்களோடு, மற்றொரு அபிப்பிராயத்தையும் தெரிவித்தார். 1802-ம் வருஷத்திய V ரெகுலேஷனில் உபயோகப்படுத்தியுள்ள "நியாயமான சரியான வரி விகிதம்", "விதிக்கப்பட்ட நியாயமான வரி," என்ற வார்த்தைகள் "ஒழுங்கான, நியாயமான" (fair and equitable) என்ற வார்த்தைகளுக்கு சமமானவை என்றும்; வரிகள், 1802-ம் வருஷத்திய ரெகுலேஷன்களால் வரையறை செய்யப்பட்டன என்று கொள்வது, 1822-ம் வருஷத்திய IV ரெகுலேஷனுக்கு விரோதமானதென்றும்; ஷை ரெகுலேஷன்கள், எவர்களுடைய உரிமைகளையும் விளக்குவதற்காகவது, வரையறை செய்வதற்காவது, பாதிப்பதற்காவது, அழிப்பதற்காவது ஏற்படுத்தப்படவில்லை யென்றும் காலெட் கூறினர்.

67. 1802-ம் வருஷத்திய XXX ரெகுலேஷன் 8, 9 பிரிவுகளின் காரிய பலிதத்தைப்பற்றியும், 1822-ம் வருஷத்திய V ரெகுலேஷனில் காணப்படும் "நியாயமான சரியான வரி விகிதம்," "விதிக்கப்பட்ட நியாயமான வரி விகிதம்" என்ற வார்த்தைகளின் வியாக்கியானத்தைப்பற்றியும், மேலே தெரிவித்த அபிப்பிராயத்தை ரெவினியூ போர்டு முற்றிலும் நிராகரிக்கிறது என்று சொல்லவேண்டியதில்லை. ஷை சொற்றொடர்கள் ஏற்படுத்தப்பட்ட வரி விகிதத்தைக் குறிக்கிறதென்றும், குடியானவன் செலுத்தவேண்டிய வரி தக்க சாக்ஷியத்தின் மேல் நிரந்தரமாக முடிவு செய்யப்பட்டதென்றும், நிலத்திற்கு தானிய வரி விகிதம் ஏற்பட்டாலும் அல்லது விளைச்சலின் ஒரு பாகம் வரியாக விதிக்கப்பட்டாலும், பண வரியாக மாற்றிக்கொள்வது பரஸ்பர ஒப்பந்தத்தைப் பொருத்ததென்றும் ஒப்பந்தத்தின் ஸ்திரமும் பொருத்தமும், வியவகாரம் ஏற்பட்டால், கோர்ட்டுகள்மூலம் ஒழுங்காக ஸ்தாபிக்கப்படலாம் என்றும் போர்டார் அபிப்பிராயப்படுகின்றனர்.

68. 1802-ம் வருஷத்திய ரெகுலேஷன், உரிமைகளை குறைக்கவாவது, விளக்கவாவது, வரையறை செய்யவாவது, பாதிக்கவாவது, அழிக்கவாவது இல்லையென்பதை போர்டார் தாராளமாக ஒப்புக்கொள்ளுகிறார்கள். ஆனால், ஜமீந்தார், குடியானவர்கள் ஆகிய இவர்களின் உரிமைகள், நெடுநாளாக ஸ்தாபிக்கப்பட்ட வழக்கத்தால், முன்னதாகவே கண்டிப்பாக வரையறை செய்யப்பட்டிருக்கின்றனவென்றும், ஜமீந்தார் சர்க்காருக்கு செலுத்தவேண்டிய பேஷ்கஷ் தொகையும், குடியானவர்களிடமிருந்து ஜமீந்தார் வசூலிக்கும் வரி விகிதமும் நிரந்தரமாக முடிவு செய்யப்படுவது, சாசுவத செட்டில்மென்டின் மூலாதார தத்துவமென்று ஸ்பஷ்டமாக தெரிவிக்கப்பட்டதென்றும், குடியானவனுக்குச் சேரவேண்டிய பாகம் ஜமீந்தார் வசூலிக்கும் வரி எவ்வளவு, பவித்திரம் வாய்ந்ததோ, அவ்வளவு பவித்திரமும் ஸ்திரமும் வாய்ந்ததென்றும் (ஸர் ஜான் ஷோர் தமது யதாஸ்துகளில் கூறியவாறு) போர்டார் கருதினர்.

69. 1822-ம் வருஷத்திய IV ரெகுலேஷனில் கூறியிருப்பதை, அதாவது 1802-ம் வருஷத்திய ரெகுலேஷன்கள் ஒருவருடைய உரிமைகளையும் வரையறை செய்யவில்லை என்பதை அதிகமாக அவர் (காலெட்) வற்புறுத்திக் கூறினும், ஜமீந்தாருடைய அந்தஸ்தையும் உரிமைகளைப்பற்றியும் விவரிக்கையில், தன்னை யறியாமலே ஷை ரெகுலேஷன்களின் வாசகங்களை உபயோகப்படுத்துகிறார். தனது அபிப்பிராயம் முழுவதிலும், ஜமீந்தார் நிலப் பிரபு என்றும் (ஆங்கில அர்த்தத்திலும் சம்பிரதாயத்திலும்) குடியானவன் "டெனென்ட்" என்றும் கருதுகிறார். இந்த அபிப்பிராயம் முற்றிலும் தவறு என்பது போர்டார் நோக்கம்.

70. ஜமீந்தார் வசூலிக்கக்கூடிய விளைச்சலின் பாகத்தையும் அல்லது வழக்கமான பண வரியையும் வரையறை செய்யவேண்டுமென்பது, ஒருக்கால் 1802-ம் வருஷத்திய XXX ரெகுலேஷனின் நோக்கமாயிருக்கலாம் என்று காலெட் தமது தீர்ப்பின் இறுதியில், அபிப்பிராயப்படுவதுபோல் தோன்றுகிறது. இது, அவர் தனது தீர்ப்பின் ஆரம்பத்தில் தெரிவித்த அபிப்பிராயத்திற்கு மாறுபாடானது. ஆனால் இந்த அபிப்பிராயம் (முடிவிற் கூறிய அபிப்பிராயம்) ரெவினியூ போர்டாரின் அபிப்பிராயத்தை, ஏறக்குறைய ஒத்திருக்கிறது.

71. இந்த வழக்கில் பின் சொல்லப்போகும் முறையை கலெக்டர் அனுசரித்திருந்தால், அது பொருத்தமாயிருக்குமென்று போர்டு அபிப்பிராயப்படுகிறது. அதாவது, சாசுவத செட்டில்மென்டு காலத்தில் குடியானவனுடைய நில அனுபோக உரிமைகளும் நிபந்தனைகளும் என்னவென்பதைப்பற்றியும் அவை தெரியப்படாவிட்டால் ஒத்த தரத்தையுடைய அக்கம்பக்கத்து நிலங்களுக்கு என்ன ஏற்பாடுகளிருந்தனவென்பதைப்பற்றியும், கலெக்டர் தீர விசாரித்திருக்கவேண்டும். அதற்கு பிறகு, ஏற்பாடுகள் மாற்றப்பட்டிருந்தால், அவை எவ்வாறு மாற்றப்பட்டனவென்பதையும், தற்போது ஜமீந்தார் வசூலிக்கும் வரி, பூர்வ ஒப்பந்த நிபந்தனைகளின்படியாவது, பின்னால் ஏற்பட்ட பரஸ்பர ஒப்பந்த நிபந்தனைகளுக்காவது எவ்வளவு தூரம் ஒத்திருக்கிறதென்பதைப்பற்றியும், விசாரித்திருக்கவேண்டும். ஷை நிபந்தனைகளுக்கு ஒத்திருந்தால் ஜமீந்தாரின் பாத்தியதையை அங்கீகரித்திருக்கவேண்டுமென்றும், அவ்வாறு ஒத்திராவிடில், ஜமீந்தார் கொண்டாடும் பாத்தியதையை தள்ளுபடி செய்திருக்கவேண்டுமென்றும், ரெவினியூ போர்டார் அபிப்பிராயப்பட்டனர்.

72. மேற்படி வழக்கிற்கு பிறகு, சாசுவத செட்டில்மென்டின் நோக்கங்களைப்பற்றி விரிவான விளக்கங்கள் செய்யப்பட்ட பின்னும், காசிம் கோட்டா ஜமீனிலுள்ள குடியானவர்கள் வரி விஷயமாக, நிர்ப்பந்தப்படுத்தப்படுகிறார்கள் என்று அவர்கள் அனுப்பிய பல மனுக்கள் மூலம் போர்டுக்குத் தெரியவருகிறது. இது போர்டுக்கு கவலையைத் தருகிறது. வரிகளை, 100-க்கு 25 அதிகமாக உயர்த்துவதற்கு ஜமீந்தார் கொண்டாடிய பாத்தியதை விசாகப்பட்டணத்திலுள்ள பிரின்ஸிபல் அசிஸ்டெண்ட் அங்கீகரித்திருக்கிறார். அதற்கு அவர் அனுசரித்த காரணங்கள் பின்வருபவைகளே: இந்த ஹாவலி எஸ்டேட்டிலிருந்து 14 வருஷ சராசரியாக, வரிக் குத்தகைக்காரர்கள் அடைந்த வருமானம் அப்பொழுது ஏற்படுத்தப்பட்ட எஸ்டேட்டின் மொத்த விளைச்சலின் மதிப்பில் மூன்றில் இரண்டு பாகத்திற்கு சற்று குறைவாக இருந்ததென்றும், குடியானவர்களுக்குச் சேர்ந்த மொத்த பாகம் விளைச்சலின் மதிப்பில் மூன்றிலொரு பாகத்திற்கு அதிகமாக இருந்ததென்றும், ஜமீந்தாருடைய முன்னோர்கள் தங்கள் செலவில் செய்த சில ஏற்பாடுகளின் பலனாக குடியானவர்களுடைய நிலங்கள் அபிவிருத்தியடைந்திருக்கின்றனவென்றும், ஷை நிலங்களுக்குள்ள வரிகள், பக்கத்திலுள்ள ஒத்த தரத்தையுடைய நிலங்களுக்குள்ள வரியைவிட குறைவாயிருக்கின்றனவென்றும், உயர்ந்த வரிக்கு நிலங்களை எடுத்துக்கொள்வதற்கு பிறர்கள் தயாராக இருக்கின்றார்கள் என்றும், பின் வருஷங்களில் தானியங்களின் விலை அதிகரித்திருக்கின்றதென்றும், அவர் காரணங்கள் கூறினர். ஆனால் (தீர்ப்பிலிருந்து தெரியக்கூடியவரை) சாசுவத செட்டில்மென்ட் காலத்தில் குடியானவர்களுக்கிருந்த உரிமைகள் என்னவென்பதைப்பற்றியாவது ஜமீந்தார் தெரிவித்த நில அபிவிருத்தி சம்பந்தமாக பூர்வ ஒப்பந்தங்களில் மாறுதல் ஏதாவது செய்யப்பட்டதா என்பதைப்பற்றியாவது இப்பொழுதுள்ள வரியைக் கொடுத்து, நிலங்களை நெடுநாளாக குடியானவர்கள் அனுபவித்துவரும் நில அனுபோக ஸ்திரத்தைப்பற்றியாவது, வரியை இச்சந்தர்ப்பத்தில் உயர்த்துவது நியாயமா என்பதைப்பற்றியாவது பிரின்சிபல் அசிஸ்டெண்ட் விசாரணை செய்யவில்லை.

73. இம்மாதிரி வழக்குகளில் ரெவினியூ போர்டார் தலையிடுவதற்கு அதிகாரமில்லை. ஆயினும், தாங்கள் ஸ்ரேஷ்டமாகக் கருதுகிற முக்கிய தத்துவங்களும், கொள்கைகளும் புறக்கணிக்கப்படுவதைக்கண்டு அவர்கள் வருந்துகிறார்கள். ஜமீந்தார் வரியை உயர்த்துவதற்கு மேலே ஒரு காரணம் தெரிவிக்கப்பட்டது. அதாவது ஒத்த தரத்தையுடைய பக்க நிலங்களுக்குள்ள வரியைவிட குறைந்த வரியை குடியானவர்கள் வெகுநாளாகக் கொடுத்துவந்திருக்கிறார்களென்பது. ஆராய்ந்து பார்த்தால் வரியை உயர்த்தக்கூடாது என்பதற்கு, இதுவே

போதிய அத்தாக்ஷியாகும். ஏனெனில், வரியை உயர்த்துவதற்கு ஜமீந்தாருக்கு அதிகாரமிருந்தால் வெகு காலத்திற்கு முன்பே வழக்கு சம்பந்தமான நிலங்களின் வரிகள், பக்கத்து நிலங்களின் வரிகளுக்கு சமமாகக் கொண்டுவரப்பட்டிருக்கும்.

74. ஜமீந்தாருடைய பாத்தியத்தையை கண்டிப்பாய் ஆதரிக்கும் ஒரு காரணம்கூட தீர்ப்பில் தெரிவிக்கவில்லை. ஏனெனில் வரிக் குத்தகைக்காரர்களுடைய மொத்த வருமானத்தையும் தெரிவிப்பதால், தனித்தனியாக ஒவ்வொரு குடியானவனும் என்ன அடைந்தானென்பது ரூபிக்கமுடியாது. நிலம் அபிவிருத்தி செய்யப்பட்டதாக ஜமீந்தார் கூறுகிறார். இப்பொழுதுள்ள வரியை ஏற்படுத்துவதில் ஷை விஷயமும் ஆலோசிக்கப்பட்டே இருக்கிறது. விளைச்சல் அதிகரித்திருக்கிறது என்பது, ஜமீந்தார் வரியை உயர்த்துவதற்கு ஒரு முகாந்தரமல்ல. நிலங்களுக்கு இப்பொழுதுள்ள வரி நியாயமான வரி என்று கண்டிருப்பது, ஜமீன் பாத்தியதைக்கு பாதகமாயிருக்கின்றது. குடியானவர்களைக் கொள்ளையடிக்கப்படுவதற்கு அனுமதித்தால், அதனால் கிடைக்கும் கொள்ளையில் ஒரு பாகம் ஜமீந்தாருக்கு கொடுக்கப்படும் என்னும் அர்த்தந்தான், அதிக வரிக்கு நிலங்களை எடுத்துக் கொள்வதற்கு பிறர்கள் தயாராக இருக்கின்றார்கள் என்பதின் அர்த்தமாகும்.

75. முடிவில், குடியானவர்கள் ஜமீந்தாருக்கு செலுத்தும் வரி நிலத்தின் சொந்தக்காரருக்குச் செலுத்தும் வாடகை (ரெண்ட்) என்றும், அரசாங்கத்திற்கு செலுத்தவேண்டிய வரியல்லவென்றும், அரசாங்க கடமைகளை வசூலிக்க, ஜமீந்தாருக்கு சட்டப்படி உரிமை உண்டென்றும், சிலர் கொண்டுள்ள தவறான அபிப்பிராயத்தைப் பற்றி போர்டார் சில விஷயங்களைத் தெரிவிக்க விரும்புகிறார்கள். இத்தகைய ஊகிப்புகள், ஜமீந்தாருக்கும் குடியானவனுக்கும் உள்ள சம்பந்தத்தைப் பொறுத்தமட்டில் மிகவும் தவறானவை.

76. சாகுபடி செய்யப்பட்ட நிலங்களின் விளைச்சலில் குறிக்கப்பட்ட ஒரு பாகமே, சர்க்காருக்கு தொன்று தொட்டுள்ள உரிமை என்பதும், அது தானிய விளைச்சலின்மீது விதிக்கப்படும் வரி (tax) என்பதும் சாசுவத செட்டில்மென்டைப்பற்றி ஆராய்ந்தவர்களுக்கு எளிதில் புலப்படும்.

ஆனால், சிறந்த மேதாவிகள் செய்துள்ள விளக்கத்தின்படி, "ரெண்ட்" (வாடகை) என்பது நிலத்தை உபயோகித்துக்கொள்வதற்குக் கொடுக்கப்படும் பணம் அல்லது பிரதிப் பயன். நிலத்திற்கு நல்ல இயற்கையமைப்பும் வளப்பமும் இருந்தால், நிலத்தின் சொந்தக்காரருக்கு அதிக பலனும் வருமானமும் கிடைக்கும். அத்தகைய வசதிகள் இல்லாத நிலங்கள், நஷ்டமில்லாமல் ஒரு வகையாக சாகுபடி செய்யப்படலாம். மிகவும் கீழ்த்தரமான நிலங்கள், மேலே தெரிவித்த விளக்கத்தின்படி ரெண்ட்டைச் செலுத்துவது முடியாத காரியம். ஆனால், சாகுபடிச் செலவுமட்டும் ஒருவாறு சரி செய்துகொள்ளப்படலாம்.

77. சர்க்கார் அல்லது சர்க்காரின் உரிமையைப்பெற்றவர் நிலத்தின் விளைச்சலின் ஒரு பாகத்தை வரியாக தானியமாகவோ, பணமாகவோ பெறும்பொழுது, நிலத்தின் சொந்தக்காரனுக்குள்ள உரிமை தங்களுக்கு இருக்கிறதென்று சர்க்காராவது ஜமீந்தாராவது கொண்டாடமுடியாது.

தங்களுக்குச் செல்லவேண்டிய பாகத்தை, அரசாங்க காரணங்களை முன்னிட்டு, உயர்த்துவதற்கு சர்க்காருக்கு உரிமை இருக்கலாம்; விலைவாசி அதிகமானால், அதற்குத் தகுந்தாற்போல் சர்க்கார் சில சமயங்களில் வரிப்பணத்தை உயர்த்தக்கூடும். ஆனால் நிலத்தின் விளைச்சலில் சர்க்காருக்கு ஸ்திரமாய் ஏற்பட்டிருக்கும் உரிமைக்கும் நிலத்தின் சொந்தக்காரனுக்குள்ள நில உரிமைக்கும் கண்டிப்பாக வித்தியாசமிருக்கிறது.

78. சர்க்காருக்குச் செலுத்தவேண்டியதும் சாகுபடிச் செலவும் போக மிஞ்சியுள்ள முழுவதும் நிலத்தின் சொந்தக்காரனைச் சேர்ந்தது. இது எல்லா நாட்டிலுமுள்ள வழக்கம். இதனால் மிகவும் கீழ்த்தரமான நிலத்தைச் சாகுபடி செய்தாலும், நிலத்தின் சொந்தக்காரனுக்கு அவ்வளவாக நஷ்டம் ஏற்படாது.

மிகவும் கீழ்த்தரமான நிலமாயிருந்தாலும், அதன் விளைச்சல் விலைவாசிகளுக்குத் தகுந்தாற்போல் சாகுபடிச் செலவை சரிசெய்து கொள்வதாயும், விதிக்கப்பட்ட பண வரியை சர்க்காருக்குச் செலுத்துவதாயுமிருக்கவேண்டும். தானியத்தின் தேவை அதிகரிக்க அதிகரிக்க, ஜனங்கள் இதுவரை சாகுபடி செய்யாத கீழ்த்தர நிலங்களை சீர்திருத்தி, சாகுபடி செய்ய ஆரம்பிக்கிறார்கள். இந்த நிலங்களிலிருந்து விளையும் தானியத்தின் விலை சாகுபடி செலவை சரிகட்டுவதாயிருக்கவேண்டும். இல்லாவிடில் நிலத்தை சாகுபடி செய்யமுடியாது. ஆதலால், தானிய விலையும் அதிகரிக்கத்தான் செய்யும். இதனால், கீழ்த்தர நிலங்களைவிட நல்ல நிலங்களிலிருந்துதான் குடியானவனுக்கு அதிக மிச்சம் கிடைக்கும்.

79. ஆகையால், நல்ல நிலங்களின் சொந்தக்காரர்கள் தங்கள் நிலத்தின் உபயோகத்திற்கு அதிக வாடகையை அடைகிறார்கள். விற்றாலும் அதிக விலைக்கு விற்கிறார்கள். இவ்வாறு, நிலத்தின் வாடகை மதிப்பும், விற்பனை மதிப்பும் அதிகரித்திருப்பதால், ஷை நிலத்தின் விளைச்சலில் தங்களுக்கு ஏற்படுத்தப்பட்டிருக்கும் பாகத்தைவிட அதிகமான பாகத்தை சர்க்கார் கேட்பதற்கு உரிமையில்லை. வரி வசூல் சம்பந்தமாக ஏற்படுத்தப்பட்ட விதிகள் நிலச்சொந்தக்காரருடைய உரிமைகளை ஒரு வகையிலும் பாதிக்காது. அதாவது, அரசாங்க வருமானத்தில் ஒரு அம்சமாகிய நிலவரி, நில அபிவருத்தியால் அதிகரிக்கும் விளைச்சலைப் பாதிக்காது. வழக்கமாகத் தங்களுக்குச் செல்லவேண்டிய பாகத்தையே சர்க்கார் வசூலித்து வருவார்கள். புதிய நிலங்கள் சாகுபடி செய்யப்பட்டால், அதற்கேற்படும் வரிகளைப் பெற்று, தங்கள் வருமானத்தை பெருக்கிக்கொள்ளலாம்.

80. சாசுவத செட்டில்மென்டு ஏற்பட்ட இடங்களில் (சர்க்கார் வருமானத்தைப் பொருத்தமட்டில்) புதிய நிலங்கள் சாகுபடி செய்யப்படுவதால் உண்டாகும் அதிக வருமானத்தை, சர்க்கார் ஜமீந்தார்களுக்கு மாற்றிவிட்டார்கள். இந்த விஷயத்தில், ஜமீந்தார்கள் இப்பொழுது சர்க்கார் ஸ்தானத்திலிருக்கிறார்கள். நில்வரி சம்பந்தமாக, சர்க்காருக்கு முன்னிருந்த உரிமையை ஜமீந்தார்கள் இப்பொழுது அடைந்திருக்கிறார்கள்.

81. நிலம் விலைக்கு வந்தால் அதன் விலை மதிப்பு, மேலே தெரிவிக்கப்பட்ட விளைச்சல் மிகுதியை ஒட்டியே ஏற்படுத்தப்படும். சாகுபடி செலவையும், சர்க்கார் வரியையும் கழித்துவிட்ட பிறகு, எஞ்சியிருக்கும் பாகமே விளைச்சலின் மிகுதியாகும். ஆகையால் விலை மதிப்பைத் தரும் நிலத்தின் பலனே, நிலவரியாக சர்க்காருக்குச் சேரவேண்டிய பாகமென்று, எவ்வகையிலும் கொள்ள முடியாது. ஒரு நிலப்பிரபு (landlord) தனது "டெனண்ட்"களிடமிருந்து அதிக வாடகையைக் கேட்பதுபோல, சர்க்கார் உரிமையைப் பெற்ற ஜமீந்தார் குடியானவர்களிடம் அதிக வரியைக் கேட்கமுடியாது.

1802-ம் வருஷத்திய XXVIII ரெகுலேஷன், 34-வது பிரிவு 7-வது, உட்பிரிவைப் பார்க்கவும்.

டபள்யூ. ஹூட்ல்ஸ்டன்,
காரியதரிசி.

ஜெ. டி. சிம் அவர்களுக்கு, சர்க்கார் காரியதரிசி, ரெவினியூ இலாகா.

டி. எப். கார்மைகல் அவர்களுக்கு, விசாகப்பட்டணம் கலெக்டர்.

குறிப்பு.—மேலே தெரிவிக்கப்பட்ட விஷயங்கள் சம்பந்தமான பத்திரங்களின் முக்கிய சாராம்சங்களை, சௌகர்யத்தைமுன்னிட்டு போர்டார் இதில் சேர்த்திருக்கிறார்கள்.

(உண்மையான நகல்)

முடிவு.

நிலவரியை நிரந்தரமாக முடிவுசெய்து, சிறப்பாக குடியானவனுக்கு நன்மை செய்வதற்கும், பொதுவாக ஜமீந்தாருக்கு சகாயம் புரிவதற்குமே சாசுவத செட்டில்மெண்ட் ஏற்படுத்தப்பட்டது. 1802-ம் ஆண்டு 25-வது ரெகுலேஷன் ஏற்படுத்தப்பட்டதால், பழைய முறைப்படி பேஷ்கஷ் அடிக்கடி மாறுவது ஒழிக்கப்பட்டு, ஜமீந்தார் சர்க்காருக்குச் செலுத்தவேண்டிய தொகை சாசுவதமாக முடிவு செய்யப்பட்டது. சர்க்காருக்குச் செல்லவேண்டிய பேஷ்கஷை நிரந்தரமாக முடிவு செய்வதற்கு, நிலத்தின் மொத்த விளைச்சலில், சர்க்காருக்குச் செல்லவேண்டிய பாகம் என்னவென்பது, முதலில் நிர்ணயம் செய்யப்பட வேண்டும். இவ்வாறு சாசுவதமாக முடிவு செய்யப்பட்ட நிலவரி, வருமானத்திலிருந்து சர்க்காருக்கு ஜமீந்தார் செலுத்தவேண்டிய பாகம் பிரிக்கப்பட்டது. அதற்குத்தான் பேஷ்கஷ் என்று பெயர். பேஷ்கஷ் செலுத்திய பிறகு எஞ்சியுள்ள நிலவரி வருமானம் ஜமீந்தாருக்குக் கொடுக்கப்பட்டது. ஜமீந்தாருக்கு சர்க்கார் ஒப்புவித்த வரிவசூல் வேலைக்கு அது பிரதிப்பயனாகும். சாசுவத செட்டில்மெண்ட் காலத்தில், நிரந்தரமாகத் தீர்மானிக்கப்பட்டது, நிலங்களிலிருந்து வரவேண்டிய மொத்த நிலவரியே தவிர, ஜமீந்தார்கள் வாதாடுவதைப் போல், பேஷ்கஷ் தொகை மட்டுமல்ல. ஜமீந்தாருக்குக் கொடுக்கப்பட்டது மேல்வார உரிமைதான். குடிவார உரிமை எக்காலத்திலும் குடியானவனிடமே இருந்து வந்திருக்கிறது. சன்னதில் கண்டுள்ள நிபந்தனைகளுக்கு சம்மதித்தே ஜமீந்தார் சன்னதைப் பெற்றுக்கொண்டார். சாசுவத செட்டில்மெண்டு காலத்தில் ஏற்படுத்தப்பட்ட வரி ஸ்திரமாகவும், நிரந்தரமாகவும் இருக்கவேண்டுமென்பது முதல் நிபந்தனை. எந்த முகாந்தரத்தைக்கொண்டும் அதை மாற்றக்கூடாது. இரண்டாவது, நில அனுபோகம் சாசுவதமானது. எந்த காரணத்தைக்கொண்டாவது குடியானவனை, அவன் நிலத்திலிருந்து விலக்கக்கூடாது. குடியானவன் செலுத்தும் தொகைகளுக்கு ஜமீந்தார் ரசீதுகள் கொடுக்கவேண்டுமென்பது மூன்றாவது நிபந்தனை. 1802-ம் ஆண்டு 25-வது ரெகுலேஷன் பிரிவிலும், மற்ற விதிகளிலும் இந்த நிபந்தனைகள் குறிக்கப்பட்டிருக்கின்றன. இந்த நிபந்தனைகளை மீறி நடப்பதற்கு ஜமீந்தாருக்கு அதிகாரமில்லை. இந்த விஷயத்தைப்பற்றி நாங்கள் கூறும் முடிவுகள் இவையே.

5-ம் அத்தியாயம்.

கர்ணம்ஸ் ரெகுலேஷன் XXIX (1802)—மற்ற எல்லா ரெவினியூ உத்தியோகங்களும் ஒழிக்கப்பட்டன.

கர்ணம் உத்தியோகம் மட்டிலும் வைத்துக்கொள்ளப்பட்டது ; ஏனெனில், நில அனுபோகமும், வரியும், சாசுவதமாக தீர்மானிக்கப்பட்டது.

1802-ம் ஆண்டு கர்ணம்ஸ் ரெகுலேஷன் XXIX. இனி, மற்ற விஷயங்களை ஆராய்வதற்குமுன், நிலத்திற்குரியவர் யார் என்பதைப்பற்றி இன்னும் பல ஆதாரங்களைத் தரும் 1802-ம்ஆண்டு கர்ணம்ஸ் ரெகுலேஷன் XXIX-ல் உள்ள விதிகளை கவனிப்போம். சர்க்காருக்காக வரி வசூல் செய்பவர்களால் துன்புறுத்தப்பட்ட ஏழைக்குடியானவர்களுக்கு, பாதுகாப்பு அளிக்கவேண்டுமென்று, பிரிடிஷ் சர்க்கார் மிகவும் ஆவலுள்ளவர்களாயிருந்தார்களென்பதை, முன்னரே தெரிவித்திருக்கிறோம். வரி வசூல் செய்வதற்காக தங்கள் ஏஜெண்டுகளாக நியமிக்கப்பட்டவர்களோடு சமாளிப்பது, தங்களுக்கே கஷ்டமாயிருப்பதைக் கண்ட சர்க்கார், குடியானவர்களுக்கு, தற்காப்பளிக்கவேண்டுமென்று விரும்பியது வியப்பல்ல. தங்களுடைய வரி வசூல் அதிகாரிகளால், சர்க்கார் பல சங்கடங்களை அனுபவித்து வந்திருப்பது, 1802-ம்ஆண்டு XXIX ரெகுலேஷன் பீடிகையிலும், பட்டா ரெகுலேஷனிலும், சாசுவத செட்டில்மெண்ட் ரெகுலேஷனிலும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. பல காரணங்களை முன்னிட்டு, ஜமீன்தார்கள் தங்கள் ஜமீன் வருமானத்தை மறைத்து, சர்க்காருக்கு நியாயமாகச் சேரவேண்டிய தொகையை அடையாமலிருக்கச் செய்தார்களென்றும், தங்கள் ஏஜெண்டுகளின் (ஜமீன்தார்கள்) இம்மாதிரியான ஒழுங்கீன உபாயங்களைத் தடுப்பதற்கு சர்க்கார் பல அதிகாரிகளை நியமித்தார்களென்றும், மேற்படி பீடிகையில் அறிவிக்கப்பட்டிருக்கிறது. வரியையும், பேஷ்கஷ் தொகையையும் நிரந்தரமாக முடிவுசெய்து, அதன்மூலம், ஜமீன்தார்களுக்கும், குடியானவர்களுக்கும், ஆதாரவும் ஸ்திரமும் அளிக்க சர்க்கார் தீர்மானித்துவிட்டால், வரி வசூல் ஏஜெண்டுகளாகிய ஜமீன்தார்கள், அதற்கு மேலும், தந்திர உபாயங்களையும், மோசச் செயல்களையும், கையாளமாட்டார்களென்று நினைத்தார்கள். இக்காரணத்தை முன்னிட்டே கர்ணம் உத்தியோகத்தைமட்டும் வைத்துக்கொண்டு, மற்ற உத்தியோகங்கள் எல்லாவற்றையும் சர்க்கார் நீக்கிவிட்டார்கள். மேற்கூறிய விஷயத்தின் சாராம்சம், கர்ணம்ஸ் ரெகுலேஷன் பீடிகையில் தெரிவித்திருக்கிறது. அவ்விஷயங்களைக் குறித்துவிட்டு, மேற்படி பீடிகை, பின்வருமாறு கூறுகிறது :—

> " **ஜனங்களுடைய உரிமையைப் பாதுகாப்பதற்கும், பொருளைப் பாதுகாப்பதற்கும், கர்ணம் உத்தியோகம், இன்னும் மிகவும் அவசியமானதாக இருக்கிறது** நீதிஸ்தலங்களில், விசாரிக்கப்படும் வழக்குகள் சம்பந்தமாக, போதிய வசதிகளைத் தருவதற்கும், சர்க்காரின் ஸ்திர வரி குறையாமலிருக்கச் செய்வதற்கும், குடியானவர்களை அநியாயத்தினின்று காப்பதற்கும், இந்நாட்டில் தொன்றுதொட்டுவந்துள்ள வழக்கத்தின்படி, சர்க்கார் அதிகாரிகளுக்கும், வேண்டிய சமயத்தில், **உண்மையான தகவலையும், கணக்குகளையும்** தருவதற்கும், கர்ணம் உத்தியோகத்தை, திறம்பட ஸ்தாபிக்க வேண்டும். அதற்காக கீழ்க்கண்ட விதிகள் ஏற்படுத்தப்படுகின்றன."

கனத்த **எழுத்திலுள்ள** வார்த்தைகளை கவனிக்கவேண்டும். ஜனங்களுடைய உரிமைகளையும், பொருளையும் பாதுகாப்பதற்கும், நீதிஸ்தலங்களில் விசாரிக்கப்படும் வழக்குகளின் தீர்ப்புக்கு வேண்டிய வசதி தருவதற்கும், சர்க்காரின் ஸ்திரமான நிலவரி வருமானம் குறையாமலிருக்கச் செய்வதற்கும், எல்லோருக்கும் நியாயமளிப்பதற்கும், கர்ணம் உத்தியோகம் வைத்துக்கொள்ளப்பட்டது என்று வெளிப்படையாகத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

பேஷ்கஷை ஸ்திரப்படுத்தி, மற்ற பல உரிமைகளையும் கொடுத்து அதன் மூலம் ஜமீன்தாருடைய பாத்தியதையை சாசுவதமாக செய்யவேண்டுமென்பது, சாசுவத செட்டில்மெண்ட் ரெகுலேஷன், 1802-ம்ஆண்டு XXIX, XXX ரெகுலேஷன்கள் ஆகிய இந்த ரெகுலேஷன்களின் நோக்கமாயிருந்தால் XXIX ரெகுலேஷனின் பீடிகை, முற்றிலும், வேறுன மற்றொரு முறையில் வரையப்பட்டிருக்கும். பூரண நில உரிமை, ஜமீன்தாருக்கு, சாசுவதமாகவும், ஏகபோகமாகவும், மாற்றப்பட்டதென்று, ஜமீன்தாராவது, எந்த நீதிஸ்தலமாவது, வரி வசூல் சட்டத்தையும், எஸ்டேட் நிலச்சட்டத்தையும் செய்த எந்த சர்க்காராவது, எவ்வாறு கூறமுடியும் ? நல்லவேளையாக, இக்காலத்தில், அதிலும், இந்த விசாரணையைக் குறித்து, ராஜதானியின் பல பாகங்களில் கொடுக்கப்பட்ட வாக்குமூலங்களையும், ஆதாரப்பத்திரங்களையும், கேட்டறிந்த பிறகு, ஜமீன்தார்கள், மேலேகூறப்பட்ட விபரீதமான பாத்தியதைகளைக் கொண்டாடுவது கிடையாது. தொடர்ச்சியான ஒரு யாதாஸ்தில், அவர்கள் தெரிவிப்பதாவது :—

> ஜமீன்தார்கள், குடியானவர்கள், சர்க்கார், ஆகிய இவர்களுடைய உரிமைகளையும், கடமைகளையும் இன்னும் தெளிவாக விளக்குகிற இந்த ரெகுலேஷனின் முக்கிய உட்பிரிவுகளை, இப்பொழுது பரிசீலனை செய்வோம். கர்ணத்தை நியமிக்கும் அதிகாரம் ஜமீன்தாருக்குக் கொடுக்கப்பட்டது. ஆனால் விலக்கும் அதிகாரம் கொடுக்கப்படவில்லை. நில உரிமை ஜமீன்தாருக்குச் சேர்ந்ததாயிருந்தால் கர்ணத்தை விலக்கும் அதிகாரம் ஏன் கொடுக்கப்படவில்லை ? வருஷத்திற்கு 400 பக்கோடாக்கள் அல்லது அதற்கதிகமான தொகையை நிலவரி வருமானமாக உள்ள ஒவ்வொரு கிராமத்திற்கும் கர்ணம் நியமிக்கப்பட்டார். உரிமைகளின் அடங்கலை எழுதிவைத்து வரவேண்டியது கர்ணத்தின் கடமை. வருஷாந்திர வருமானம் குறைவான கிராமங்கள், இரண்டு மூன்று கிராமங்களாகச் சேர்க்கப்பட்டு, அதற்கு ஒரு கர்ணம் நியமிக்கப்பட்டார். கர்ணங்களுடைய பெயரைத் தெரிவிக்கும் சரியான பட்டிகளை ஜமீன்தார் தனது தலைமைக் கச்சேரியில் தாக்கல் செய்யவேண்டும். காலியாகும் ஸ்தானங்களில் கர்ணங்களை நியமிப்பதற்கு ஜமீன்தார் தவறினால், ஜூரிக் கோர்ட்டில் அபராதம் விதிக்கப்படும்.

ரெகுலேஷனின், 11-வது விதியின்படி கர்ணத்தினுடைய கடமைகள் பின்வருமாறு :—

(1) கிராமத்திலுள்ள நில விஸ்தீரணத்தைப்பற்றி, எல்லைகளையும், நிலக்குறிப்புகளையும் தெரிவிக்கும் விவரமான ரிஜிஸ்டர்களையும் வைத்துக்கொள்ளவேண்டும். அதாவது :—

(*a*) சாகுபடி செய்யக்கூடிய நிலம்.

(*b*) சாகுபடி செய்யப்பட்ட நிலம் ; சாகுபடி செய்யப்படாத நிலம்.

(*c*) மேய்ச்சல் தரை.

(*d*) மனைகள்.

(*e*) தோட்டங்கள்.

(*f*) ஆறுகள்.

(*g*) குளங்கள்.

(*h*) ஊற்றுகள் அல்லது கிணறுகள்.

(*i*) குன்றுகளைச்சார்ந்த தரிசு நிலங்கள்.

(*j*) காடு அல்லது பாறைகள்.

(2) சாசுவத செட்டில்மென்டு காலத்தில், சர்க்கார் வரியினின்றும் விலக்கப்பட்ட நிலத்தின் விஸ்தீரணமும், தரமும், மேற்படி ரிஜிஸ்டர்களில் தெரிவிக்கப்படவேண்டும். மேற்படி நிலங்கள் எதற்காக கொடுக்கப்பட்டன என்பதும், அது சம்பந்தமான நிபந்தனைகளும், நிலத்தின் சொந்தக்காரர்களின் பெயரும், ரிஜிஸ்டரில் குறிக்கப்படவேண்டும்.

(3) சர்க்கார் வரியிலிருந்து, சன்னதுமூலம் விலக்கப்பட்ட நிலங்களும், அவை எதற்காக கொடுக்கப்பட்டன என்பதும், நிலங்களை அனுபவிப்பவர்களின் பெயர்களும், ரிஜிஸ்டரில் குறிக்கப்படவேண்டும்.

(4) சர்க்கார் வரியிலிருந்து விலக்கப்பட்ட நிலங்களுக்குச் சொந்தக்காரர்கள் இறந்தால், கர்ணம் அதை ஜமீன்தாருக்குத் தெரிவிக்கவேண்டும்.

(5) கதிர் மதிப்பிடும் சமயத்திலும், கதிரை அடிக்கும் சமயத்திலும், தானியத்தை அளக்கும் சமயத்திலும், கர்ணம் ஆஜராக இருக்கவேண்டும்.

(6) சர்க்காருக்கு வரி செலுத்தும் நிலங்களாயிருந்தாலும்சரி, நிலங்களின் மொத்த விளைச்சலைப்பற்றி, கர்ணம் சரியான கணக்குகளை வைத்துக்கொள்ளவேண்டும். குடியானவர்களும், ஜமீன்தாரும், விளைச்சலைப் பங்கிட்டுக்கொண்டால், அப்படி பங்கிட்டுக் கொள்ளப்பட்ட தானியத்தின் அளவும், பாகஈவும், ரிஜிஸ்டரில் குறிக்கப்படவேண்டும்.

(7) கிராம அதிகாரிகளுக்கும், ஊழியர்களுக்கும் கொடுக்கப்படும் சுதந்திரத் தொகைகளை, கர்ணம் தனது ரிஜிஸ்டரில் குறித்துவைத்துக்கொள்ளவேண்டும். மேற்படி சுதந்திரக் கட்டணங்களை, கிராம நிலங்களின் மொத்த விளைச்சலிலிருந்து கொடுக்கவேண்டுமா அல்லது ஜமீன்தாரின் பாகத்திலிருந்து கொடுக்கவேண்டுமா அல்லது குடியானவனுடைய பாகத்திலிருந்து கொடுக்கவேண்டுமா என்பதைத் தெரிவிக்கவேண்டும்.

(8) நிலங்களுக்கு பணவரி செலுத்தப்பட்டால், சாகுபடி செய்யப்பட்ட நிலத்தின் விஸ்தீரணத்தைப் பற்றியும், பண வரியின் விகிதத்தையும், தொகையையும் பற்றியும், கர்ணம் ரிஜிஸ்டர்கள் வைத்துக் கொள்ளவேண்டும்.

(9) தோட்டத்தில் சாகுபடி செய்யப்படும் நிலங்களுக்கும் விளைச்சல் பங்கிட்டுக்கொள்ளப்பட்டால், பாகம் செய்யப்பட்ட தானிய அளவிற்கும் கர்ணம் ரிஜிஸ்டர்கள் வைத்துக்கொள்ளவேண்டும்.

(10) கிராமத்தில் வசூலிக்கப்படும் மனைவரிகளைப் பற்றியும் சொர்ணதாயங்களைப் பற்றியும் கர்ணம் ரிஜிஸ்டர்கள் வைத்துக்கொள்ளவேண்டும்.

(11) தானிய விலைகளைப்பற்றி, கர்ணம், மாதாந்தர ரிஜிஸ்டர்கள் வைத்துக்கொள்ளவேண்டும்.

(12) கிராமத் தலையாரியால் தெரிவிக்கப்பட்ட அன்னியர்கள், கிராமத்தில் நடமாடுவதைப்பற்றி கர்ணம் ரிஜிஸ்டர்கள் வைத்துக்கொள்ளவேண்டும் ; இந்த ரிஜிஸ்டர்களை போலிஸ் அதிகாரிகள் எந்த சமயத்தில் பார்க்கவேண்டுமென்றாலும் அவைகளை அவர்களுக்குக் காட்டவேண்டும்.

(13) கிராம வருமானத்தைப் பற்றியும், கிராமச் செலவுகளைப் பற்றியும், தனது கச்சேரியிலுள்ள எல்லாப் பத்திரங்களைப் பற்றியும் தெரிவிக்கும் கணக்குகளை கர்ணம் வைத்துவரவேண்டும். மேலதிகாரி விரும்பினாலொழிய கணக்குகளையும் பத்திரங்களையும் கிராமத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு கர்ணம் கொண்டுபோகக்கூடாது. கணக்குகளையாவது, தனது கச்சேரியிலுள்ள ரிக்கார்டுகளையாவது, கர்ணம் ஒளித்துவைத்தால், அல்லது, மேலதிகாரியின் அனுமதியில்லாமல், அவைகளை கிராமத்திலிருந்து மற்றொரு இடத்திற்குக் கொண்டுபோனால், அபராதம் விதிக்கப்படும். அவைகளை ஆஜர்ப்படுத்தும்வரை சிறைத்தண்டனையும் விதிக்கப்படும். ஆனால் கணக்குகளையும் ரிக்கார்டுகளையும் ஜமீன்தார் எந்த சமயத்திலும் தடையின்றி பார்வையிடலாம். அவைகளுக்கு நகல்களும் எடுத்துக் கொள்ளலாம்.

தானிய விலைகளைப்பற்றிய மாதாந்தர ரிஜிஸ்டர்களை கர்ணம் வைத்துக்கொள்ளவேண்டும் என்று 11-வது உட்பிரிவு தெரிவிக்கிறது. இந்த விசாரணையில், பெரும்பான்மையாக எல்லா ஜமீன்தார்களும் தங்களுக்கு கர்ணங்களின்மேல் அதிகாரம் இல்லையென்றும் தங்கள் வேலைகளை, கர்ணங்களைக் கொண்டு செய்து முடிப்பது அசாத்தியமான காரியமாயிருக்கிறதென்றும், வரி வசூலுக்கு, தாங்கள் பிரத்தியேகமாக சிப்பந்திகளை ஏற்படுத்திக்கொள்ளவேண்டியதாயிருக்கிறதென்றும், ஆகையால் அவர்களைக் கடுமையாக நடத்துவதற்கு, தங்களுக்குப்போதிய அதிகாரங்கள் கொடுக்கவேண்டுமென்றும், அப்பொழுதுதான் கர்ணங்கள் தங்கள் உத்திரவுகளுக்குக் கீழ்ப்படிந்து நடப்பார்கள் என்றும் தெரிவித்தார்கள். அது ஒரு விபரீதமான நிலைமையே. ஜமீந்தார்களுக்குமட்டும், திருப்திகரமாக அல்ல, முதலாவது சர்க்காருக்கும் குடியானவர்களுக்கும் திருப்திகரமாக, கர்ணம் தன் கடமைகளை நிறைவேற்றவேண்டும் என்று விதிக்கப்பட்டிருக்கிறது. கர்ணம் ரெகுலேஷன் இன்றும் அமுலில் இருக்கிறது. கர்ணங்கள் தங்கள் கடமைகளை ஒழுங்காகச் செய்து வரவேண்டியதில், சர்க்கார் போதிய அக்கரை எடுத்திருந்தால், சாசுவத செட்டில்மென்டுக்கு முன் இருந்த பரிஸ்திதிகளை ஆதாரமாகக் கொண்டாவது அதற்குப்பின் ஏற்பட்ட மாறுதல்களைக் கொண்டாவது, நிலவரி தீர்மானிக்கப்படுவதற்கு அவசியமான ஒவ்வொரு தகவலும் கிடைத்திருக்கும்; வெவ்வேறு பொறுப்பைக் கொண்ட சர்க்கார், ஜமீந்தார், குடியானவன் ஆகிய இவர்களுடைய கடமைகளையும் உரிமைகளையும் ஒழுங்கு படுத்துவதிலும் யாதொரு சங்கடமும் ஏற்பட்டிராது. ஆனால் எக்காரணத்தை முன்னிட்டோ, சர்க்காராலும், ஜமீந்தாராலும், குடியானவனாலும் போற்றப்படாத அனாதைப் பிள்ளையாகப் போய்விட்டான் கர்ணம். ஜமீந்தார்களுடன் செய்துகொண்ட ஒப்பந்தங்களை சர்க்கார் எவ்வளவு விசுவாசத்துடனும் பற்றுடனும் காத்துவருகிறார்களோ அவ்வளவு விசுவாசத்துடனும் பற்றுடனும் குடியானவனுக்குக்கொடுத்த சாசுவத உரிமையை பாதுகாத்து வந்திருந்தால், குடியானவனுடைய நிலைமை இப்பொழுதிருப்பதைவிட வேறானதாக இருக்கும். குடியானவர்கள் தங்கள் பொறுப்புகளை உணர்ந்து தங்கள் உரிமைகளையும் அறிந்திருந்தால், அல்லது, ஜமீந்தார்கள் தங்கள் உரிமைகளை ஸ்திரப்படுத்துவதில், எவ்வளவு அக்கரைகாட்டுகிறார்களோ, அவ்வளவு அக்கரையுடன் குடியானவர்களுக்கு ஆதரவளித்திருந்தால், நிலைமை, முற்றிலும் மாறியிருக்கும்.

கர்ணம் ரெகுலேஷனின் ஒவ்வொரு உட்பிரிவும், இது சம்பந்தமாக, 1802-ம் ஆண்டு ஜூலை மீ 13உயில் ஏற்படுத்தப்பட்ட ஒவ்வொரு ரெகுலேஷனும், வெகு திறமையாக ஆலோசிக்கப்பட்டு, தெளிவாக விளக்கப்பட்டிருக்கின்றன. அவைகளைத் திருத்திக்கூறுவது முடியாத காரியம்; அவைகளைத் திருத்த வேண்டுமென்று பிரயத்தனப்பட்டு, 1802-ம் ஆண்டுத்திய XXX ரெகுலேஷனை ரத்து செய்தபொழுதும் 1865-ம் ஆண்டுத்திய வரி வசூல் சட்டத்தை ஏற்படுத்திய பொழுதும், 1908-ம் ஆண்டுத்திய எஸ்டேட் நிலச்சட்டத்தை ஏற்படுத்தியபொழுதும், குடியானவர்களுடைய உரிமைகள் பாதிக்கப்பட்டனவே ஒழிய வேறொரு பலனும் விளையவில்லை.

கர்ணம் உத்தியோகத்தைத் தவிர மற்ற எல்லா ரெவினியு உத்தியோகங்களும் ஒழிக்கப்பட்டன. ஏனெனில், வரி நிர்ணயமில்லாத காலத்தில் வேண்டியிருந்த பிரமாதமான கச்சேரிகளும் உத்தியோகஸ்தர்களும், வரி சாசுவதமாக முடிவு செய்யப்பட்ட பிறகு அநாவசியமாய் போய்விட்டது. கலெக்டர்களுக்கு அனுப்பிய ஒரு குறிப்பு, இவ்வபிப்பிராயத்தை வலியுறுத்துகிறது.

முடிவு

அதிக செலவிற்குக் காரணமாயிருந்த வரி வசூல் ஸ்தாபனங்களைக் குறைக்கவேண்டுமென்பதே, 1802-ம் ஆண்டுத்திய கர்ணம்ஸ் ரெகுலேஷன் XXIX-இன் நோக்கம். இந்த ரெகுலேஷனும், சாசுவத செட்டில்மெண்டு ரெகுலேஷனும் (XXV) 1802-ம் ஆண்டுத்திய பட்டா ரெகுலேஷன் XXX-உம், ஒரே தேதியில் ஏற்படுத்தப்பட்டன.

நில அனுபோகமும், வரியும் சாசுவதமாக முடிவு செய்யப்பட்டபின், அதிக செலவைத்தரும் வரி வசூல் ஸ்தாபனங்கள் தேவையில்லை என்ற காரணத்தைக்கொண்டே, கர்ணம் உத்தியோகத்தைத் தவிர மற்ற எல்லா ரெவினியு உத்தியோகங்களும் ஒழிக்கப்பட்டன. கர்ணம், ஜமீன்தாருக்காவது, குடியானவனுக்காவது பிரத்தியேகமான வேலைக்காரனல்ல. ஜமீன்தாருக்கும் குடியானவனுக்கும் வரிவிகிதமாக வழக்குகள் ஏற்பட்டால், அதுசம்பந்தமாக முடிவான சாக்ஷியம் தருவதற்கு, கர்ணம் உரிமைகளின் அடங்கலையும், வருஷாந்தர தானிய விலை ரிஜிஸ்டர்களையும் எழுதி வைத்து வரவேண்டும். அது கர்ணத்திற்கிட்ட கடமையாகும். வரிவிகிதம், சாசுவதமாக முடிவு செய்யப்பட்டதென்பதும், அது எந்தகாரணத்தைக் கொண்டும் மாற்றமுடியாதென்பதும், சட்டத்தின் நோக்கம் என்பதற்கு கர்ணம்ஸ் ரெகுலேஷன் இன்னுமொரு ஆதாரமாக இருக்கிறது.

6-ம் அத்தியாயம்.

வரி மசோதா (1823, 1863); வரிச்சட்டம் VIII (1865)

அனுபோக உரிமையில்லாத குடியானவர்களுக்கும், இரண்டாந்தர நிலச்சுவான்தாருகளுக்குத்தான் வரி உயர்த்தல் ஏற்படுத்தப்பட்டது—மசோதாவிற்கும், சட்டத்திற்கும் வித்தியாச மிருக்கிறது.

வரி மசோதாவும் 1865-ம்ஞூ த்திய VIII சட்டமும்.

முக்கியமாக, குடியானவர்களுடைய நலங்களைப் பாதுகாக்கவேண்டுமென்ற நோக்கத்துடன்தான், சாசுவத செட்டில்மெண்ட் ரெகுலேஷனும், 1802-ம்ஞூ த்திய மற்ற ரெகுலேஷன்களும், ஏற்படுத்தப்பட்டன என்பது முன்னரே விளக்கப்பட்டது. எனினும், இந்த ஏற்பாடு குடியானவர்களுக்கு ஏதாவது நன்மையை விளைத்ததா என்பதை நாம் ஆராயவேண்டும். சாசுவத செட்டில்மெண்டில் உபயோகித்துள்ள, "நிலத்திலுள்ள உடைமை உரிமைகள்" (proprietary right to the soil) என்ற வார்த்தைகளை வைத்துக்கொண்டு, அவைகளின் பலனாக, தாம் நிலத்திற்கு உரியவராய்விட்டார் என்றும், குடியானவர்களுக்குத் தம் இஷ்டப்படி எதை வேண்டுமாகினும் செய்ய, தமக்கு உரிமை இருக்கிறதென்றும், ஜமீன்தார்கள் பிரசாரம் செய்யத் தொடங்கிவிட்டார்கள். சாசுவத செட்டில்மெண்ட் ரெகுலேஷனை ஏற்படுத்தி அதன் மூலமாக, இங்கிலாந்திலிருப்பதைப்போல, இந்தியாவிலும், ஒரு நிலப்பிரபுக்களின வகுப்பை, ஸ்தாபிக்கவேண்டுமென்பதே, கிழக்கிந்தியா கம்பெனி கோர்ட் ஆவ் டைரெக்டர்ஸ்களின் கருத்தென்று, உயர்ந்த பதவிகளை வகித்திருந்த ஒரு சில சர்க்கார் அதிகாரிகள் விவாதித்து, ஜமீன்தார் கக்ஷியை ஆதரிக்கலாயினர். இதற்கு எதிராக, சர்க்காரின் ஆமோதிப்பைப் பெற்ற, செல்வாக்குள்ள சிலரும், ரெவினியு போர்டும், ஜமீன்தார்கள், பரம்பரையாக வரிவசூல் செய்பவர்களைத்தவிர வேறல்ல என்றும், கூறுவாராயினர். இவ்விருதிறத்தாரும், இவ்வாறு மோதிக்கொள்ள, குடியானவன் வழக்கம்போல் பல கஷ்டங்களை அனுபவித்து வந்தான். சாசுவத செட்டில்மெண்ட் ரெகுலேஷன், ஒழுங்காக, அர்த்தம் செய்யப்பட்டு, செய்கையில் நிறைவேற்றப்பட்டிருந்தால், யாதொரு குழப்பமும் உண்டாயிராது. ஒரு கக்ஷியினர் கூறும் வியாக்கியானத்திற்கு, எதிராக, பிறிதொரு வியாக்கியானத்தைக்கூறுவதற்கு, மற்றொரு கக்ஷியினர், எப்பொழுதும், ஆயத்தமாகவேயிருந்தார்கள். 1802-ம்ஞூ த்திலிருந்து 1822-ம்ஞூ வரையும், மீண்டும், 1822-ம்ஞூ த்திலிருந்து 1865-ம்ஞூ வரையினும், சரியான மார்க்கத்திலிருந்து, சற்று பிறழாமல், சர்க்கார் வெகு ஜாக்கிரதையாக நடந்து வந்தார்கள். விதிக்கப்பட்ட நிலவரி வருமானத்தில் மூன்றில் இரண்டு பங்கு, சர்க்காருக்கு, பேஷ்கஷாகச் சேரவேண்டுமென்றும், மூன்றில் ஒரு பங்கு, ஜமீன்தாருக்கு, அவர் செய்யும் வரி வசூல் வேலைக்கு சம்பளமாகவாவது, பிரதிப்பயனாகவாவது சேரவேண்டுமென்றும், சாசுவத செட்டில்மெண்ட் ரெகுலேஷனால் ஏற்படுத்தப்பட்டது. ஜமீன்தாரால் செலுத்தப்பட்ட பேஷ்கஷ், "ரெவினியு" என்றும், தமது சொந்த நன்மைக்கு ஜமீன்தார் எடுத்துக்கொண்டது "ரெண்ட்" (வரி) என்று வழங்கப்பட்டாலும், சர்க்கார் இவ்விரு வார்த்தைகளுக்கும் யாதொரு வித்தியாசத்தையும் கல்பிக்கவில்லை. அது சரியே. எனெனில், முதலில், சர்க்காருக்கு குடியானவன் செலுத்த வேண்டியது, பாதியாகவோ, மூன்றில் ஒன்றாகவோ (அல்லது வழக்கத்தில் என்ன இருந்ததோ அதன் படியாக), கால் பாகமாகவோ தீர்மானிக்கப்பட்டது. அவ்வாறு ஏற்படுத்தப்பட்ட வருமானத்தில் மூன்றில் இரண்டு, சர்க்கார் பாகமாகவும், மிஞ்சியுள்ள மூன்றில் ஒன்று, ஜமீன்தார் பாகமாகவும் ஏற்படுத்தப்பட்டது. ஆதலால், சர்க்கார் பாகமும், ஜமீன்தார் பாகமும், ஆக, இரண்டும் சேர்ந்து மொத்த தொகைதான் குடியானவனால் வரியாக (ரெவினியு)ச் செலுத்தப்பட்ட மொத்தத் தொகையாகும். அவ்விரண்டும்தான், சாசுவத செட்டில்மெண்ட் காலத்தில் நிரந்தரமாக முடிவு செய்யப்பட்டன. இக்காரணத்தை முன்னிட்டே, சாசுவத செட்டில்மெண்ட் ரெகுலேஷனிலும், பட்டா ரெகுலேஷனிலும் உபயோகித்துள்ள "ரெவினியு" "ரெண்ட்" என்ற வார்த்தைகளைப்பற்றி சர்க்கார் யாதொரு வேறுபாட்டையும் செய்யவில்லை "ரெவினியு", "ரெண்ட்" என்ற வார்த்தைகளில் பிரமாதமான வித்தியாசம் ஒன்றும் இல்லையாகினும், பேஷ்கஷ் பாக்கி, வரி பாக்கி, இவைகள் சம்பந்தமாக வியவகாரம் ஏற்பட்டபொழுது, பல சங்கடங்கள் உண்டாயின. சட்ட சபையில் பிரரேபிக்கப்பட்ட ரெவினியு சட்டம் அடங்கிய விளக்கத்தில் (மசோதாவின் நோக்கங்களையும், காரணங்களையும் பற்றிய விளக்கம்) இது ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறது. வங்காள ரெவினியூ சட்டத்தின் பலவித விதிகள், இந்த ரெவினியூ மசோதாவில் அமைக்கப்பட்டன ஆனல், விஷயம் முற்றிவிடுவதற்குமுன், சர்க்கார் தங்கள் அபிப்பிராயத்தை மாற்றிக்கொண்டு, மசோதாவை பின் வாங்கிக்கொண்டார்கள். அதன்பிறகு, பழைய ரெவினியூ மசோதாவின் ஒரு பாகத்திற்கு மட்டும் சம்பந்தமான, மற்றொரு மசோதாவைக் கொண்டு வந்தார்கள். அதற்கு பெயர் வரி வசூல் மசோதா (Rent Recovery Bill). குடியானவர்களின் ஸ்திரமான நில உரிமைகளையும், வரி விகிதங்களையும், பாதுகாப்பதில் மசோதா போதிய அக்கரையைக் காட்டியது. ஆனல், ரெவினியூ கோர்ட்டுகள் மூலம், ஜமீன்தார்கள், துரிதமுறையில் செலுத்திவந்த ஜப்தி முறையும், குடியானவனை நிலத்திலிருந்து தள்ளுவது சம்பந்தமாகக் கையாண்ட முறையும், குடியானவர்களுக்கு பல கஷ்டங்களை விளைத்தன. எனெனில் "ஜப்தி", நிலத்திலிருந்து தள்ளுதல் (ejectment) இவைகள் சம்பந்தமாக ஜமீன்தார் தனது அதிகாரங்களை அக்ரமமாக உபயோகித்தால், மேற்படி ரெவினியூ கோர்ட்டுகளிலேயே, குடியானவன் அதற்கு பரிகாரத்தை அடைவதற்கு சட்டத்தில் வசதியில்லை. 1802-ம்ஞூ த்திய XXVIII ரெகுலேஷன்படி, ஒழுங்கான வியாஜ்ஜியத்தின் மூலமாகவே, சிவில் கோர்ட்டுகளில், குடியானவன் பரிகாரத்தை தேடவேண்டும் என்று, இது, ஏழைக்குடியானவனுக்கு, சுணக்கத்தையும், அதிக செலவையும் தரக்கூடிய விஷயம் ஆதலால் அது குடியானவனுக்கு முடியாத காரியமாயிருந்தது. அது சர்க்காரின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டது. அதன் பலிதமாக, குடியானவனுடைய நில உரிமையைப்பற்றி ஏற்பட்ட சந்தேகங்களை நிவர்த்தி செய்து, குடியானவனுக்கு ஆதரவளிப்பதற்கு, ரெகுலேஷன்கள் ஏற்படுத்தப்பட்டன. 1802-ம்ஞூ த்திய IV ரெகுலேஷன் நிலவரியை ஊர்ஜிதப்படுத்தியது ஜப்தி, குடியானவனை நிலத்திலிருந்து தள்ளுதல், இவை சம்பந்தமாக, ஜமீன்தார், கிரியாம்ச நடவடிக்கைகளில் அக்கிரமமாக நடந்தால், அதற்கு, குடியானவர்களுக்கு பரிகாரம் செய்ய, V ரெகுலேஷன், சிவில் கோர்ட்டுகளின் அதிகாரத்தை ரத்து செய்து, துரித கோர்ட்டுகளுக்கு அதிகாரம் தந்தது. 1802-ம்ஞூ த்திய V ரெகுலேஷனின் தயாரிப்புப்பிரதியின் பீடிகை, பின் வருமாறு தெரிவிக்கிறது :—

> "நில அனுபோகத்தைப்பற்றியும், சாகுபடி செய்வதைப்பற்றியும், நீர்ப்பாய்ச்சலைப்பற்றியும், திடீரென்று சண்டை சச்சரவுகள் ஏற்பட்டால், அவைகளை முடிவு செய்வதற்கு, 1802-ம்ஞூ த்திய XXXII ரெகுலேஷனில், தகுந்த விதிகள் இல்லை. ஆதலால், மேற்படி ரெகுலேஷனை ரத்து செய்து, ஜில்லா அடலத்து கோர்ட்டுகள் செலுத்திவந்த அதிகாரத்தை, துரித விசாரணைகள் செய்ய கலெக்டர்களுக்கு கொடுக்கவேண்டியது யுக்தமென்று தோன்றுகிறது. வரி பாக்கி சம்பந்தமாகவும், வரி விகிதங்கள் சம்பந்தமாகவும், ஏற்படும் வியவகாரங்கள், குடியானவர்களுக்கு

வசதியான முறையிலும், நியாய சாதகமாகவும், பஞ்சாயத்துகளால் சில சமயங்களில் முடிவு செய்யப்படுமாகையால், மேற்படி வியவகாரங்கள், பஞ்சாயத்துகளுக்கு, விசாரணை செய்ய அனுப்பப்படவேண்டும். அது சம்பந்தமாக, 1816-ம்ஞூ்த்திய XII ரெகுலேஷன் விதிகள் அனுசரிக்கப் படவேண்டும். மேலே கூறப்பட்ட காரணங்களை முன்னிட்டு, கௌரவமிக்க கவர்னர் கீழ்கண்ட விதிகளை ஏற்படுத்தியிருக்கிறார். விளம்பரம் செய்யப்பட்ட தினத்திலிருந்து அவை அமுலுக்கு வரும்."

அதன்படியே 1802-ம்ஞூ்த்திய ரெகுலேஷன் ரத்து செய்யப்பட்டு, நஷ்டஈடுகள், அபராதங்கள், செலவுகள், இவைகள் சம்பந்தமாக ஏற்படும் பாத்தியதைகளையும், வரி பாக்கிகள், வரி விகிதங்கள், இவைகள் சம்பந்தமாக ஏற்படும் வியவகாரங்களையும், துரிதமாக விசாரணை செய்து, கூடிய சீக்கிரத்தில் குடியானவனுக்கு, நியாயம் வழங்க, கலெக்டர்களுக்கு அதிகாரம் கொடுக்கப்பட்டது. சீக்கிரமாக விசாரித்து, முடிவு கூறுவதற்கு, எல்லா விதமான வியவகாரங்களையும், கலெக்டர்கள் பஞ்சாயத்திற்கு அனுப்பவேண்டுமென்று 1822-ம்ஞூ்த்திய IV, V ரெகுலேஷன்களின் தயாரிப்புப் பிரதிகளில் கண்டிருந்தது. ஆனால், முடிவான ரெகுலேஷன்களில் அது சேர்க்கப்படவில்லை. இந்த ரெகுலேஷன்கள் ஏற்பட்ட பிறகுங்கூட, வரிகளை உயர்த்துவதற்கும், குடியானவனை நிலத்திலிருந்து தள்ளுவதற்கும், தங்களுக்கு உரிமை இருக்கிறதென்று நிலைநாட்ட, ஜமீன்தாரர்கள் விடாமல் பிரயத்தனம் செய்தார்கள். இது நெடுநாளாக நடந்துவந்தது. முடிவில், இக்கேள்வி 1863-ம் வருஷத்தில் ஜில்லா நீதிபதி ஒருவர் விசாரித்த வழக்கில் தோன்றியது. குடியானவனுடைய நில அனுபோக உரிமையையும், வரி விகிதங்கள் சாசுவதமாக முடிவு செய்யப்பட்டன என்பதையும் அவர் அங்கீகரிக்க மறுத்துவிட்டார். இந்த நீதிபதியின் தீர்ப்புக்குப் பிறகுதான், "வரியை அடைவது சம்பந்தமாக உள்ள முறையை விளக்கும் சட்டங்களை, ஒருங்கு திரட்டுவதற்கும், திருத்தியமைப்பதற்கும்," சென்னை கவர்னரும் அவருடைய அந்தரங்க சபையும், ஒரு மசோதாவைக் கொண்டுவந்தார்கள். "ஜமீன்தார்களும், மற்ற நிலச்சுவான்தார்களும், சர்க்கார் வரி உரிமையைப் பெற்றவர்களின் நிலைமையிலும், சர்க்கார் வரியை வசூலிப்பவர்களின் நிலைமையிலும், வெகுவாக இருக்கிறார்கள்" என்று மேற்படி மசோதா சம்பந்தமாக ஏற்படுத்தப்பட்ட பொறுக்குக் . கமிட்டியார் (Select Committee) தங்கள் அபிப்பிராயத்தை தெரிவித்தார்கள். கல்கத்தா வழக்கின் (இஸ்லா கோஸ் v. ஹில்ஸ் 2 C.W.N. 683) தீர்ப்பில் தெரிவித்தபடி, வங்காளக்குடியானவர்களுக்குள்ள உரிமைகளைவிட, இங்குள்ள குடியானவர்களுக்கு, அதிகமான உரிமைகள் கிடையாதென்று மேலே சொல்லப்பட்ட சிவில் ஜட்ஜ் கூறியிருந்தபடியால், ரெவினியூ போர்டார், தங்கள் ஆய்ந்தோய்ந்த அபிப்பிராயத்தைத் தெரிவிக்கவேண்டுமென்றும், மசோதாவை புனராலோசனை செய்யவேண்டுமென்றும், கேட்டுக்கொள்ளப்பட்டார்கள். மேற்படி நீதிபதியின் வியாக்கியானம் திருத்தப்பட்ட பிறகு, 1822-ம்ஞூ்த்திய IV ரெகுலேஷன் ரத்து செய்யப்பட்டது. ஏனெனில் மேற்படி ரெகுலேஷனின் வியாக்கியானத்தை ஆதாரமாகக் கொண்டே அந்த நியாயாதிபதி தமது முடிவைக் கூறினார்.

இந்த விஷயத்தை ரெவினியூ போர்டார் பரிசீலனை செய்து சர்க்காருக்கு ஒரு அறிக்கையை அனுப்பினார்கள் (போர்டு நடவடிக்கைகள், நெ. 7743, 1864-ம்ஞூ டிசம்பர் 2௳) குடியானவனுடைய அந்தஸ்து, மனுவின் காலத்திலிருந்து, சாசுவத செட்டில்மென்ட் வரையும் ஆராய்ந்தறியப்பட்டது. சிவில் ஜட்ஜ் தவறாக முடிவு கூறினதைப்போல், ஆங்கில சம்பிரதாயப்படி, ஜமீன்தார் "நிலப்பிரபு" அல்லவென்றும், இந்தியக்குடியானவன் "டெனன்ட்" (நிலத்திற்கு வாடகை கொடுப்பவன்) அல்லவென்றும், ரெவினியூ போட்டார் முடிவுக்கு வந்தனர். இதைப்பற்றி செலக்ட் கமிட்டியார் தங்கள் அறிக்கையில் தெரிவித்ததாவது :—

"ஜமீன்தார்கள் தங்கள் ஜமீன்களுக்கு உடையவர்கள் அல்ல என்றும், அவர்கள் வரி வசூலிப்பவர்களே என்றும், அல்லது சர்க்கார் வரியைப்பெற்றவர்களே என்றும், சொல்லாவிட்டாலும், வரியை நிர்ணயித்து, குடியானவனுடைய நில அனுபோகத்தை ஸ்திரப்படுத்துவதற்கும், விதிக்கப்பட்டவரியை குடியானவன் செலுத்திவரும் வரை அவனை நிலத்திலிருந்து நீக்காமலிருக்கச் செய்வதற்கும், 1802-ம்ஞூ்த்திய ரெகுலேஷன்கள் ஏற்பட்டன என்ற ரெவினியூ போர்டாரின் அபிப்பிராயத்தை, கமிட்டி பூரணமாக அங்கீகரித்தது. 1802-ம்ஞூ்த்திய ரெகுலேஷன்களில் ஜமீன்தார்களுக்கு உடைமை உரிமை (proprietory right) வழங்கப்பட்டதின் சம்பந்தமாக ஏற்பட்ட, சந்தேகங்களையும், மயக்கத்தையும், நிவர்த்தி செய்து, குடியானவர்களுக்கு பாதுகாப்பளிப்பதற்கே, 1822-ம்ஞூ்த்திய IV, V ரெகுலேஷன்கள் ஏற்படுத்தப்பட்டன என்றுகமிட்டி அபிப்பிராயப்பட்டது."

ஆகையால், வரிவிகிதங்கள் சம்பந்தமான வியவகாரங்களை முடிவு செய்வதில் என்ன முறையை அனுசரிக்கவேண்டுமென்பதைக் குறிக்கும், மசோதாவின் 11-வது பிரிவு விஸ்தரிக்கப்படவேண்டுமென்று, கமிட்டி சிபார்சு செய்தது. இது விஷயமாக, அது மூன்று தத்துவங்களை ஏற்படுத்தியது—

(1) விதிக்கப்பட்ட வரியைக்கொடுத்து, சட்டப்படியாவது, நாட்டின் வழக்கப்படியாவது, நிலங்களை அனுபவிக்கும் குடியானவர்களின் நில அனுபோக உரிமை பாதுகாக்கப்படவேண்டும்.

(2) விளைச்சலை, நிலச்சுவான்தாரும், குடியானவனும் பங்கிட்டுக்கொள்வதே, புராதனமான வரியேற்பாடாகும். வரி சம்பந்தமாக ஏற்படும் வியவாகாரங்களைத் தீர்த்துக்கொள்வதற்கு வேறு வழியில்லாவிட்டால், அந்த அந்த இடங்களில் விளைச்சலைப் பங்கிட்டுக்கொள்வதற்கு என்ன வழக்கமிருக்கிறதோ அதைக்கொண்டே வியவகாரங்களைத் தீர்த்துக்கொள்ளலாம்.

(3) புதிதாக சாகுபடி செய்யும் நிலங்களுக்கு, ஜமீன்தார்கள் தங்களுக்கு உசிதமான வரி விகிதங்களை ஏற்படுத்திக்கொள்ளலாம்.

இரண்டாவது செலக்ட் கமிட்டியின் அறிக்கை, அனுபந்தமாகச் சேர்க்கப்பட்டிருக்கிறது.

வரி வசூல் மசோதாவும் ஒரு அனுபந்தமாகச் சேர்க்கப்பட்டிருக்கிறது.

இவை இரண்டும், மிகவும் முக்கியமான பத்திரங்கள், விசேஷம் வாய்ந்த ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும், குடியானவர்களுக்கு, பூரண ஆதரவை, சர்க்கார் அளித்து வந்திருக்கிறார்களென்பது, அவைகளைப்படிப்பவர்களுக்கு விளங்கும். மசோதா, சட்டமாகச் செய்யப்பட்டிருந்தால், இப்பொழுதுள்ள குழப்பம் ஏற்பட்டிராது.

மசோதாவின் முதலாவது உட்பிரிவில், வரி (rent) என்பது பின்வருமாறு விளக்கப்பட்டிருக்கிறது :—

1-வது பிரிவில் குறித்துள்ளபடி, சர்க்காருக்கு நேராகச் செலுத்தப்படாமல், முதல்த்தர நிலச்சுவான்தாருக்கு செலுத்தப்படும், "பொது நிலவரியே," இச்சட்டத்தின்படி, ரெண்ட் (rent ; வரி) என்ற பதத்திற்கு பொருள் ; ஜமீன்தார்களுடைய சொந்த வருமானமும், வரி (ரெண்ட்) என்றழைக்கப்படும்.

ஜமீன்தார், ஸ்ரோத்திரியம்தார், முதலியவரே முதல்தர நிலச்சுவான்தார்கள் ஆவார்கள். இத்தர கதிவரைக்கும் குடியானவன் ஜமீன்தாருக்குச் செலுத்தி வந்த வரியையும், ஜமீன்தார் சர்க்காருக்குச் செலுத்தி வந்த பேஷ்கஷ் தொகையையும், சர்க்கார் வேறுன முறையில் கருதவில்லை. நிலச்சுவான்தார்களை, இரண்டு வகுப்பினர்களாகப்பிரித்து, "நிலச்சுவான்தார்கள்" என்ற பதத்திற்கு, பொருளைக்குறித்த மசோதாவின் 1-வது பிரிவு, "வரி" யின் லக்ஷணத்தையும் தெரிவித்தது :—

முதல்த்தர நிலச்சுவான்தார்கள்—சன்னத்-இ-மில்கியத்—இஸ்திமிராரின் பிரகாரம் ஜமீன்களுக்குரியவர்களும், மற்ற ஜமீன்தார்களும், ஸ்ரோத்திரியதார்களும், ஜாகீர்தார்களும், இனும்தார்களும், சர்க்காருக்காக வரிவசூலிக்கும் இதரர்களும். ;

இரண்டாந்தர நிலச்சுவான்தார்கள்—ரயத்துவாரி ஏற்பாடுகளின் கீழ் நிலத்தை உடையவர்களும், சர்க்காருக்கு மொத்தத் தொகையைக் கொடுத்து நிலத்தை அனுபவிப்பவர்களும், மற்றபடி உடைமை உரிமை முறையிலாவது, ஜமீன்தார்களிடம் அடமானம் பெற்றுவது நிலத்தை அனுபவிப்பவர்களும்.

மசோதாவில் தெரிவிக்கப்பட்ட இருவகை நிலச்சுவான்தார்களும், வரி வசூல் சட்டத்தின் (**Rent Recovery Act**), 1-வது பிரிவில், குறிக்கப்பட்டார்கள். வரி வசூல் சட்டத்தில், ரயத்துவாரி குடியானவர்கள் கூட "நிலச்சுவான்தார்கள்" என்று தெரிவித்திருப்பது கவனிக்கத்தக்கது. இவ்வாறுக, அவ்வப்போது வரியை உயர்த்தும் செட்டில்மெண்டுகளின் பிரகாரமும், வரி மாற்றங்களின் பிரகாரமும், சர்க்காரோடு நேராக சம்பந்தத்தை வைத்துக்கொண்டிருக்கும் ரயத்து வாரி குடியானவர்களும், அவர்களுடன் ஒத்த நிலைமையிலில்லாத, வரி விகிதங்களை சாசுவதமாகக்கொண்ட ஜமீன் குடியானவர்களும், முதல் முதலாக ஒரு வரி வசூல் முறையின் கீழ் கொண்டுவரப்பட்டார்கள். வரி வசூல் சட்டம் பிரத்தியேகமாக ஜமீன் குடியானவர்களுக்குத்தான் செல்லும் என்றும், ரயத்துவாரி குடியானவர்கள், தங்கள் கீழ் இருப்பவர்களிடம் வரி வசூல் செய்வதற்கும், அதற்கும் யாதொரு சம்பந்தமும் இல்லை என்றும், இக்காலத்தில் பலர், தவருக அபிப்பிராயப்படுகிருர்கள், பழைய ரெகுலேஷன்களில் விவரித்துள்ள கொள்கைக்கும், யாதொரு மாறுதலாவது வித்தியாசமாவது கிடையாதென்று, இரண்டாவது செலக்ட் கமிட்டி அறிக்கை, தெளிவாக தெரிவிக்கிறது. சாசுவத செட்டில்மெண்ட் காலத்தில் ஏற்பட்ட வரி விகிதங்கள் உயர்ந்த விகிதங்கள் என்றும், தீர்மானிக்கப்பட்ட பேஷ்கஷை மாற்றமுடியாததைப்போலவே, அவைகளையும் மாற்ற முடியாதென்றும் நன்கு விளக்கிக்கூறினுர்கள். நில அனுபோக உரிமையுள்ள குடியானவர்கள் நிலத்திலிருந்து நீக்கமுடியாது என்பதை ஸ்டஷ்டப்படுத்தினுர்கள். தகுந்த விதிகளையும், முக்கியாம்சங்களையும், ஏற்படுத்தி, வரி வசூல் சட்டத்தின் 11-வது பிரிவின், (1) முதல் (4) வரையுள்ள உட்பிரிவுகளால், அவைகளை பின்னும் விஸ்தரிக்க விரும்பினுர்கள். இந்த உட்பிரிவுகளின் உண்மைப்போக்கையும், அவை எவருக்குச் செல்லுமென்பதையும், அர்த்தத்தையும் அறியவேண்டுமென்றுல், மசோதாவிலும், சட்டத்திலும், 1-வது பிரிவில், "நிலச்சுவான்தார்கள்" என்றபதத்திற்குக் கொடுக்கப்பட்டிருக்கும் லக்ஷணத்தை மனதில் வைத்துக்கொள்ளவேண்டும்.

இருவகை நிலச்சுவான்தார்கள் இருந்தார்கள் என்று நாம் அறியும்பொழுது, மசோதாவில் விளக்கியுள்ள வரி (**rent**) என்பது (முதல்த்தர நிலச்சுவான்தாருக்குச் செலுத்தும்பொழுது, அதாவது குடியானவன் ஜமீன்தாருக்குச் செலுத்தும்பொழுது) "பொது நில வரியையும்" குறிக்குமென்றுல், பேஷ்கஷுக்காவது ஜமீன்தாருடைய சொந்தப் பயனுக்காவது பிரயோஜனப்படும் குடியானவன் செலுத்துகிற வரி, பொது நில வரியே தவிர ரெண்ட் (வாடகை) அல்ல என்பது நன்கு விளங்கும்.

ஜெமீன் குடியானவனுக்கு அவன் கீழ் இருப்பவன் செலுத்தும் தொகையும், ஜமீன்தாருடைய பண்ணை நிலங்களுக்கு குடியானவன் செலுத்தும் வரியும், "பொது நிலவரி"யே என்று தெளிவு செய்யப்பட்டிருக்கிறது. இவ்வாறுக, ஜமீன்தாருடைய பண்ணை நிலங்களுக்கு குடியானவன் செலுத்தும் தொகைக்கும் நில அனுபோகக் குடியானவன் செலுத்தும் தொகைக்கும், வித்தியாசமில்லையென்று வரி வசூல் மசோதாவில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. அதாவது 1802-ம்வூத்திய **XXX** ரெகுலேஷன் 7, 9, 15-வது பிரிவுகளிலுள்ள விதிகள், மசோதாவின் 10-வது உட்பிரிவில் அமைக்கப்பட்டிருக்கின்றன. மசோதாவின் 10-வது விதியில் என்ன விஷயங்கள் அடங்கியிருக்கின்றன என்பதை கவனிக்கவேண்டியதவசியம். ஏனெனில் வரி வசூல் சட்டத்தில் 1802-ம் வூத்திய **XXX** ரெகுலேஷனின் 9-வது பிரிவு முழுவதும் அப்படியே அமைக்கப்படவில்லை. ரெகுலேஷனின் 7-வது பிரிவுக்குச் சரியான சட்டத்தின் (வரி வசூல் சட்டம்) 5-வது பிரிவு குடியானவர்களுக்கு போதிய பாதுகாப்பையளித்ததென்பதும் குறிக்கத்தக்கது. மசோதாவின் (**Bill**) 10-வது உட்பிரிவில் அமைத்திருந்த விஷயம் சட்டத்திலிருந்து (**Act**) ஏன் விலக்கப்பட்டதென்பதைப்பற்றி இப்பொழுது ஆராய்வோம். 10-வது உட்பிரிவு பின்வருமாறு :—

"குறிக்கப்பட்ட தொகையை (பேஷ்கஷ்)யே சர்க்காருக்குச் செலுத்த கடமைப்பட்டவர்களும், நிலத்தின் சம்பந்தமாக சர்க்காரின் ஸ்தானத்திலுள்ள முதல்த்தர நிலச்சுவான்தார்கள், எந்த முகாந்தரத்தைக் கொண்டாவது எந்தபேரைக் கொண்டாவதுஏற்பாட்டிற்கு விரோதமான, சர்க்கார் அனுமதியில்லாத வரிகளை குடியானவர்களிடம் வசூல் செய்யக்கூடாது. பணமாகவோ, தானியமாகவோ செலுத்தப்படும். வரி சம்பந்தமாக வழக்குகள் ஏற்பட்டால் வழக்கு சம்பந்தப்பட்ட நிலங்கள்மீது சாசுவத செட்டில்மெண்ட் காலத்தில் என்ன விகிதங்கள் ஏற்பட்டனவோ அவைகளின் பிரகாரமே முடிவு செய்யப்படவேண்டும். அவைகள் தெரியப்படாவிட்டால், ஒத்த தரத்தையுடைய பக்கத்து நிலங்களுக்கு என்ன விகிதங்கள் ஏற்பட்டிருக்கின்றனவோ, அவைகளின் பிரகாரமேமுடிவு செய்யப்படவேண்டும். ஆனுல் ஜமீன்தார் தன் சொந்தச் செலவில் செய்த நீர்ப்பாசன வேலைகளின் காரணமாகவும், மற்ற அபிவிருத்திகளின் காரணமாகவும், குடியானவன் நிலத்திற்கு அதிக மதிப்பும் விளைச்சலும் ஏற்பட்டால், அப்பொழுது ஜமீன்தார் கலெக்டரின் அனுமதியின்மீது வரியை உயர்த்தலாம் என்ற உரிமை பாதிக்கப்படகூடாது ; மேலும், ஒத்த தரத்தையுடைய அக்கம்பக்கத்து நிலங்களுக்கு நல்லெண்ணத்துடன், குறைந்த வரி விகிதங்களுக்கு குடியிருக்க வீடு கட்டிக்கொள்வதற்காவது, தொழிற்சாலைகள் முதலிய ஸ்திரமான கட்டிடங்களைக் கட்டிக்கொள்வதற்காவது, தரிசு நிலங்களை பண்படுத்தி சாகுபடி செய்வதற்காவது, அல்லது மற்ற எந்த சீர்திருத்தத்திற்காவது பட்டாக்கள் கொடுக்கப்படலாம், மற்றப்படி குறைந்த வரி விகிதங்களுக்கு கொடுக்கப்படும் பட்டாக்கள் ஜமீன்தாரைக் கட்டுப்படுத்தாது."

வரிவசூல் சட்டத்தின 11-வது பிரிவு.

மேலே தெரிவித்த, மசோதாவின் 10-வது உட்பிரிவையும், வரிவசூல் சட்டத்தின் 5, 13, 14-வது பிரிவுகளையும், 11-வது பிரிவில் 1 முதல் 4 வரையுமுள்ள உட்பிரிவுகளையும் ஒப்பிட்டுப்பார்ப்போம்.

வரிவசூல் சட்டத்தின் 11-வது பிரிவு பின்வருமாறு :—

8, 9, 10, 11-வது பிரிவுகளின்படி, கலெக்டர்கள் முன் கொண்டுவரப்படும், வரி விகிதங்கள் சம்பந்தமான வழக்குகளை முடிவு செய்வதில் கீழ்க்கண்ட விதிகள் அனுசரிக்கப்படவேண்டும் :—

(1) எல்லா வரி ஒப்பந்தங்களும் (வெளிப்படையானவைகளானுலும் சரி, அல்லது யூகித்துக் கொள்ளக்கூடியவைகளானுலும் சரி) செய்கையில் நிறைவேற்றப்படவேண்டும்.

(2) 1859-ம் ஜனவரி 1உக்கு முன் பிரிடிஷ் சர்க்காரால் சர்வே செய்யப்பட்ட ஜில்லாக்களில் அல்லது கிராமங்களில், நிலங்களுக்கு பணவரி ஏற்பட்டிருந்தால் (வரிக்காக, வெளிப்படையான அல்லது யூகிக்கக்கூடிய ஒப்பந்தமில்லாத சந்தர்ப்பத்தில்) அதுவே சரியான வரியாகக் கருதப்பட வேண்டும்.

(3) குடியானவனுக்கும், நிலச்சுவான்தாருக்கு மிடையே வெளிப்டையான அல்லது யூகிக்கக்கூடிய ஒப்பந்தமில்லாவிட்டால், நிலங்களின் மீது பண வரி ஏற்படுத்தியிருக்காவிட்டால், அந்த அந்த இடங்களிலுள்ள வழக்கத்தின்படி, வரி விகிதம் தீர்மானிக்கப்படவேண்டும். ஸ்தல வழக்கம், என்ன என்பது நிர்ணயம் செய்யாவிட்டால் ஒத்த தரத்தையுடைய பக்க நிலங்களுக்கு என்ன வரி விகிதங்களிருக்கின்றனவோ அவைகளின் பிரகாரமே முடிவு செய்யப்படவேண்டும்.

ஆனால் அவ்வாறு தீர்மானிக்கப்பட்ட வரி விகிதங்களைப்பற்றி, எவருக்காவது அதிருப்தி ஏற்பட்டால் அவர் வார முறைப்படி தானியமாக வரி செலுத்தப்படலாமென்று (அதாவது தானியத்தை சர்க்கார் அல்லது ஜமீன்தாரும், குடியானவனும் பங்கிட்டுக்கொள்வதற்கு, கிராமத்தில் ஏற்பட்ட விகிதத்தின்படி) பாத்தியம் கொண்டாடலாம். "வாரம்" என்ன என்பது நிர்ணயம் செய்ய முடியாவிட்டால், குடியானவனுடைய, முயற்சி அல்லது செலவின் காரணமாக அல்லாமல், சர்க்கார் அல்லது ஜமீன்தாரின் பிரயத்தனத்தால், நிலத்தின் வளப்பமாவது, விளைச்சலின் மதிப்பாவது, அதிகரித்திருக்கிறதா என்பதை விசாரித்து, தனக்கு நியாயமாகத் தோன்றும் வரி விகிதங்களை கலெக்டர் விதிக்கவேண்டும்.

(4) அனாதித் தரிசு நிலங்களுக்கும் குடியானவன் தானாகவே விட்டுவிட்டதின் காரணமாக அல்லது, அசட்டையின் காரணமாக சாகுபடி செய்யாத நிலங்களுக்கும், நிலச்சுவான்தார்கள் தங்களுக்கு யுக்தமான வரி விகிதங்களை ஏற்படுத்திக்கொள்ளுதல் நியாயமே; ஆனால், மேற்படி தரிசு நிலங்களிலும், சாகுபடி செய்யாத நிலங்களிலும், எவருக்காவது (நியாயப்படியாவது, வழக்கப்படியாவது சட்ட ரீதியான) பிரத்தியேக உரிமை இருந்தால், அவ்வுரிமை இப்பிரிவில் கூறப்படும் விதியால் பாதிக்கப்படமாட்டாது.

மேலும், தனது செலவால் உண்டான நீர்ப்பாசான வசதிகள், இதர அபிவிருத்திகள், காரணமாக நிலங்களின் மதிப்பு அதிகரித்தால், அப்பொழுது வரியை உயர்த்துவதற்கு ஜமீந்தாருக்குள்ள உரிமை இந்தப் பிரிவில் கூறப்பட்டிருக்கும் விதியால் பாதிக்கப்படமாட்டாது; அல்லது சர்க்கார் செய்த நீர்ப்பாசன வசதிகள், இதர அபிவிருத்திகள் காரணமாக, நிலங்களின் மதிப்பு அதிகரித்தால் (சர்க்காருக்கு ஏற்பட்ட செலவை ஜமீந்தார் கொடுக்க நேரிட்டால்) அப்பொழுது வரியை உயர்த்துவதற்கு ஜமீந்தாருக்குள்ள உரிமையை, இதில் கூறப்பட்டிருக்கும் விதி பாதிக்காது. ஆனால் மேற்கூறிய இரண்டு சந்தர்ப்பங்களிலும், நிலங்களின் வரியை உயர்த்துவதற்கு முன், உயர்த்தவேண்டிய தொகை எவ்வளவு என்பதின் சம்பந்தமாக, கலெக்டரின் அனுமதியை ஜமீந்தார் பெறவேண்டும். (1871-வது வருஷத்திய மதராஸ் சட்டம் **II**; 1890-வது வருஷத்திய மதராஸ் சட்டம் **III**.)

மேலும், ஒத்த தரத்தையும், அமைப்பையும் உடைய பக்க நிலங்களுக்குள்ள வரி விகிதங்களைவிட குறைந்த வரிவிகிதங்களையுடைய பட்டாக்கள், குடியிருக்க வீடு கட்டிக்கொள்வதற்காவது, தொழிற்சாலைகள் முதலிய ஸ்திரமான கட்டிடங்களுக்காவது, அல்லது தரிசு நிலத்தைப் பண்படுத்தி சாகுபடி செய்வதற்காவது, அல்லது அதைப்பற்றி ஏதாவது நிரந்தரமான அபிவிருத்தி செய்வதற்காவது கொடுக்கப்படலாம். மற்ற விஷயங்களுக்குக் கொடுக்கப்படாது. அப்படிக் கொடுக்கப்பட்டால் அது பின்வரும் ஜமீன்தாரைக் கட்டுப்படுத்தாது. குறைந்த வரி விகிதங்களைக்கொண்ட பட்டாக்களைப் பெறுபவர்கள் அது சம்பந்தமாக ஏற்பட்ட நிபந்தனைகளை, பெரும்பான்மையாக நிறைவேற்றவேண்டும்.

மசோதாவின் (மேலே தெரிவிக்கப்பட்ட) 10-வது உட்பிரிவையும், வரிவசூல் சட்டத்தின் 11-வது பிரிவையும் ஒப்பிட்டுப் பார்ப்போமாகில், பின்வரும் அம்ஸங்கள், புலப்படும். 1802-ம்ஷத்திய **XXX** ரெகுலேஷனின் 9-வது பிரிவு, முற்றிலும் விலக்கப்பட்டது. 11-வது பிரிவின் 4-வது உட்பிரிவின், 1-வது ஷரத்துக்கு இரண்டு ஷரத்துகள் ஏற்படுத்தப்பட்டன. வரிவசூல் மசோதாவில் (1863) ஒரு ஷரத்தே அமைக்கப்பட்டது. 1802-ம்ஷத்திய **XXX** ரெகுலேஷனில், ஒரு ஷரத்துகூட கிடையாது. 11-வது பிரிவில், 1 முதல் 3 வரையுள்ள உட்பிரிவுகள் புதிதாக ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. புதிய வரியை விதிப்பதற்கு, ஜமீந்தாருக்கு உரிமையில்லை என்ற விதி, மசோதாவின் 10-வது உட்பிரிவின் முதற் பாகத்தில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. வரிவிகிதங்கள் சம்பந்தமாக, வழக்குகள் ஏற்பட்டால், வழக்கு சம்பந்தப்பட்ட நிலங்களுக்கு சாசுவத செட்டில்மெண்ட் காலத்தில் என்ன வரி விகிதங்கள் தீர்மானிக்கப்பட்டனவோ, அவைகளே நியாயமான வரி விகிதங்கள் என்று முடிவு செய்யப்படவேண்டுமென்றும், அது அறியமுடியாவிட்டால், அவைகளுக்கு சாசுவத செட்டில்மென்ட் ஏற்படாவிட்டால் ஒத்த தரத்தையும், அமைப்பையும் உடைய அக்கம்பக்கத்து நிலங்களுக்கு என்ன வரி விகிதங்கள் ஏற்பட்டனவோ, அவைகளின் பிரகாரம் முடிவு செய்யப்படவேண்டுமென்றும், அடுத்த வாக்கியத்தில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. இவ்விரண்டு வாக்கியங்களே 1802-ம்ஷத்திய **XXX** பட்டா ரெகுலேஷனின் 7, 9-வது பிரிவுகளாகும். அடுத்த இரண்டு ஷரத்துகளும் புதிதாகச் சேர்க்கப்பட்டன. தனது செலவால் ஏற்பட்ட நீர்ப்பாசன வசதிகள், மற்ற அபிவிருத்திகள் காரணமாக, நிலத்திற்கு அதிக மதிப்பு உண்டானால், கலெக்டரின் அனுமதியைப் பெற்று, வரியை உயர்த்துவதற்கு ஜமீன்தாருக்குள்ள உரிமையைப் பற்றி, முதலாவது ஷரத்து தெரிவிக்கிறது. சாசுவத செட்டில்மெண்டு வரிவிகிதங்களைவிட குறைந்த வரி விகிதங்களை ஜமீன்தார் ஏற்படுத்தினால், அவை பின் வரும் ஜமீன்தாரைக் கட்டுப்படுத்தாது. ஆனால், குடியிருக்க வீடு கட்டிக்கொள்வதற்காவது, தொழிற்சாலை முதலிய ஸ்திரமான கட்டிடங்கள் கட்டிக்கொள்வதற்காவது, அல்லது தரிசு நிலங்களைப் பண்படுத்தி சாகுபடி செய்வதற்காவது, நல்லெண்ணத்துடன், குறைந்த வரி விகிதங்களை ஜமீன்தார் ஏற்படுத்தலாம். அவை, ஜமீன்தாரின் வார்ஸைக் கட்டுப்படுத்தும். இது இரண்டாவது ஷரத்தில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. 1802-ம் வருஷத்திய **XXX** ரெகுலேஷனின் 15-வது பிரிவில் இந்த ஷரத்து அடங்கியிருக்கிறது. சாகுபடி செய்யப்பட்ட நிலங்களுக்கும், சாகுபடி செய்யப்படாத நிலங்களுக்கும் வரிகளை உயர்த்துவது சம்பந்தமாக, சர்க்கார் செய்ய விரும்பிய சட்ட முழுவதும் மசோதாவின் 10-வது உட்பிரிவில் அடங்கியிருக்கிறது. ஒப்பந்தங்கள் சம்பந்தமான, வரி வசூல் சட்டத்தின் 11-வது பிரிவின், முதலாவது உட்பிரிவாவது, 1859-வது வருஷத்திற்கு முன் ஏற்பட்ட சர்வேயை ஆதாரமாகக்கொண்டு வரி விகிதங்கள் தீர்மானிக்கப்படுவதைக் குறிக்கும் 2-வது உட்பிரிவையாவது; அல்லது, ஸ்தல வழக்கத்தின்படியாவது பக்கத்து நிலங்களுக்குள்ள வரி விகிதங்களின்படியாவது, வரி விகிதங்கள் ஏற்படுத்தவேண்டுமென்பதைக் குறிக்கும் 3-வது உட்பிரிவாவது சட்டத்தில் காணப்படவில்லை. 1802-ம் வருஷத்திய **XXX** ரெகுலேஷனின், 7, 9, 15 பிரிவுகளில் உள்ள விஷயங்கள், சந்தேகமற்ற முறையில், மசோதாவின் 10-வது உட்பிரிவில் அடங்கியிருக்கின்றன. மசோதாவின் 9-வது உட்பிரிவின் விஷயங்கள் சட்டத்தில் அமைக்கப்பட்டிருந்தால், ஜமீன் குடியானவர்கள் கீழ் இருப்பவர்களும், ஜமீன்

தாரின் பண்ணை நிலங்களிலுள்ள குடியானவர்களும், குடியானவர்கள் (**Tenants**) என்ற ஒரு விளக்கத்தின் கீழ் கொண்டுவரப்படாதிருந்தால், நில அனுபோக உரிமையில்லாத குடியானவர்களுக்கும், ரயத்துவாரிக் குடியானவர்களுக்கும் பிரத்தியேகமான மசோதாவை ஏற்படுத்தியிருந்தால், நாளடைவில் விளைந்த குழப்பத்தை இலகுவாகத் தடுத்திருக்கலாம். 9-வது உட்பிரிவை நீக்கி அதன் ஸ்தானத்தில், சட்டத்தின் 11-வது பிரிவின், (1), (2), (3) உட்பிரிவுகளை ஏற்படுத்தியதே, உண்டான தொல்லையாவிற்கும் காரணம். 11-வது பிரிவின் (1) முதல் (4) வரையுள்ள உட்பிரிவுகள் நீக்கப்படாவிட்டாலும், ரெகுலேஷனின் 9-வது பிரிவு விலக்கப்பட்டாலும், ரெகுலேஷனின் 7-வது பிரிவும் மற்ற ஷரத்துகளும், வரிச் சட்டத்தில் அமைக்கப்பட்டதே, நில அனுபோக உரிமைக்கும் வரி ஸ்திரத்திற்கும் போதிய உத்தரவாதமாகும். வரி மசோதாவின் 11-வது பிரிவில் புதிதாக அமைக்கப்பட்ட (1), (2), (3) உட்பிரிவுகளோடு அனுபோக உரிமையில்லாத நிலங்களும், ரயத்துவாரி நிலங்களும் சட்டத்தில் கொண்டுவரப்பட்டிருப்பதைக் கொண்டே, 11-வது பிரிவில் புதிதாகச் சேர்க்கப்பட்டுள்ள உட்பிரிவுகள், இரண்டாம் தர நிலச்சுவான்தார்களுக்கும் அனுபோக உரிமையில்லாத நிலங்களையுடையவர்களுக்குத் தான் செல்லுமென்றும், 1802-ம் வருஷத்தில் வரி விகிதம் சாசுவதமாக முடிவு செய்யப்பட்ட நிலங்களின் குடியானவர்களுக்குச் செல்லாதென்றும் எந்தக் கோர்ட்டும் முடிவு கூறியிருக்கவேண்டும். மேற்கூறிய உண்மை, ரெவினியூ போர்டு காரியக் கிரமங்கள் நம்பர் 7743 (1864) இலும், 5-வது அறிக்கையில், ஹாட்க்ஸன் செய்த விளக்கத்திலும் வலியுறுத்தப்பட்டிருக்கிறது. இவைகளை ஆதாரமாகக்கொண்டே 1865-ம் வருஷத்திய வரி வசூல் சட்டம் ஏற்படுத்தப்பட்டது.

ஆயினும், 11-வது பிரிவின் 1-வது உட்பிரிவைப்பற்றியும், வரிச்சட்டத்தின் மற்ற ஷரத்துகளைப்பற்றியும், சில நீதிபதிகள் தவறுன அர்த்தத்தைச் செய்தார்கள். சொக்கலிங்கம் பிள்ளை வழக்கு (6 **M.H.C.R**, 164) மிகவும் பிரஸ்தாபிக்கப்பட்ட வழக்கானது புதிதாக ஸ்தாபிக்கப்பட்ட உயர்தர நீதி மன்றத்தின் (ஹைகோர்ட்டு) ஆங்கில நீதிபதிகளே அவ்வழக்கை விசாரித்தவர்கள். இந்நாட்டின் நியாயத்தைப்பற்றியும், சட்டைத்தைப்பற்றியும் அவர்களுக்கிருந்த அறியாமையின் காரணமாக, பட்டாவை ஒரு வருஷத்திற்குப் பெற்ற குடியானவனுக்கும் வருஷாந்திர “டெனன்டு”க்கும் வித்தியாசம் இல்லையென்றும்; இத்தகைய குடியானவர்களின் வரிகள் உயர்த்தப்படலாம் என்றும், அவர்கள் முடிவு கூறினர். இத்தீர்ப்பை பயன் படுத்திக்கொண்டு, சாஸ்வத செட்டில்மெண்ட் காலத்தின் பட்டாக்களில்லாத ஷரத்துகளை, தாங்கள் கொடுக்கும் பட்டாக்களில் ஜமீன்தார்கள் அமைத்துவந்தார்கள். வரி வசூல் சட்டத்தின் 11-வது பிரிவின், 1-வது உட்பிரிவின் அர்த்தப்படி, அவைகள் ஒப்பந்தங்களாகவும் அவைகளின் பிரகாரம் குடியானவர்கள் உயர்ந்த வரி கொடுக்கச் சம்மதித்துக்கொண்டார்களென்றும், வியாக்கியானம் செய்யப்பட்டது. பின்னல் வந்த தீர்ப்புகளால் ரத்து செய்யப்படும்வரை இவ்வபிப்பிராயம் நிலவி வந்தது. “வழக்குச் சட்டம்” (கேஸ் லா) என்ற அத்தியாயத்தில் இது விவரமாக ஆராய்ச்சி செய்யப்பட்டிருக்கிறது. (10-ம் அத்தியாயம்.)

சாசுவத செட்டில்மெண்டு காலத்தில் ஏற்படுத்தப்பட்ட வரி, உயர்வான வரி என்றும், ஏற்பட்டுள்ள வரியை குடியானவன், செலுத்தி வரும்வரை, அவனை நிலத்திலிருந்து தள்ளக்கூடாதென்றும் இரண்டு முக்கிய விதிகளைத் தெரிவித்துவிட்டு, வரி மசோதாவின் 11-வது பிரிவு விஸ்தரிக்கபடவேண்டுமென்று வரி மசோதாவின் செலக்ட் கமிட்டியார் கூறினர்கள். சாகுபடி செய்யப்பட்ட நிலங்களுக்கும் சாகுபடி செய்யப் படாத நிலங்களுக்கும் வரி சாசுவதமாக முடிவு செய்யப்பட்டது என்பதைத் தெரிவித்துவிட்டு, சில வகை நிலங்களுக்கு, சில சந்தர்ப்பங்களில், ஜமீன்தார்கள் தங்களிஷ்டப்படி, வரியை உயர்த்தலாம் என்ற ஷரத்தை அமைக்கவேண்டுமென்பதே 11-வது பிரிவு விஸ்தரிக்கப்படவேண்டுமென்பதின் அர்த்தமாகும். வரிச் சட்டத்தில் ஒன்று முதல் நான்கு வரை (1 to 4) உள்ள விதிகளால் உத்தேசிக்கப்பட்ட மற்ற சந்தர்ப்பங்கள் என்ன? அவைகள்; நிலச்சுவான்தார்களின்கீழ் குடியானவர்களின் பண்ணை நிலங்கள்; சாசுவத செட்டில்மெண்ட் வரி விகிதத்தைவிட குறைந்த வரி விகிதத்திற்கு, குடியானவனுக்கு வீடு கட்டிக்கொள்வதற்கும், தரிசு நிலங்களைச் சீர்திருத்துவதற்கும், கொடுக்கப்பட்ட காலி நிலங்கள் முதலியன. வரி வசூல் சட்டத்தின் 11-வது பிரிவின் ஷரத்துகளை, விவாமாக ஆராய்வதற்குமுன், (1) 11-வது பிரிவிலுள்ள விதிகள் எவர்களுக்குச் செல்லும் என்பதையும், (2) மேற்படி விதிகள், அனுபோக உரிமையுள்ள குடியானவர்களுக்கும், அனுபோக உரிமையில்லாத குடியானவர்களுக்கும், பொதுவாகச் செல்லுமா என்பதையும், (3) மேற்படி விதிகளை ஏற்படுத்தியதின் காரணங்கள் என்னவென்பதையும், முதலில் ஆராயவேண்டும். மேற்படி விதிகள் அனுபோக உரிமையில்லாத குடியானவர்களுக்குத்தான் செல்லும் என்றாலும் அல்லது நில அனுபோக உரிமையுள்ள குடியானவர்கள், நில அனுபோக உரிமையில்லாத குடியானவர்கள், ஆகிய இரு திறத்தாருக்கும் செல்லும் என்றாலும், வரி விகிதங்களை உயர்த்தும் பல உட்பிரிவுகளை, 11-வது பிரிவில், சர்க்கார் ஏன் அமைத்தார்கள்? முதலாவது 11-வது பிரிவைப்பற்றி ஆராய்வோம். செலெக்ட் கம்மிட்டியார் தங்கள் அறிக்கையில் குறித்த விதிகளையும், வரி வசூல் மசோதாவிலுள்ள விதிகளையும், வைத்துப் பார்ப்போமாகில், வரி உயர்த்துவது சம்பந்தமாகவுள்ள, 11-வது பிரிவில் 1 முதல் 4 வரையுள்ள விதிகள் அனுபோக உரிமையில்லாத நிலங்களுக்கே செல்லும் என்பது விளங்கும்.

11-வது பிரிவின், 1 முதல் 4 வரையுள்ள விதிகளின் சட்டப்போக்கு.—உட்பிரிவு (1) உயர்த்தப்பட்ட வரியை செலுத்தல், அல்லது, ஒப்பந்த ரீதியான முறையில் இறங்குதல். ஆகிய இவை அனுபோக உரிமையுள்ள குடியானவனின் அந்தஸ்த்திற்கு விரோதமானது. 1865-ம் வருஷத்திய VIII-வது சட்டத்தின் 11-வது பிரிவின் (1) உட்பிரிவில் “ஒப்பந்தங்கள்” அங்கீகரிக்கப்பட்டிருக்கின்றன. இது அனுபோக உரிமையுள்ள குடியானவர்களுக்குச் செல்லாது. ஆனால், (1) குடியானவர்களின் கீழ் உழுபவர்களுக்கும், (2) அனுபோக உரிமையில்லாத குடியானவர்கள் என்று கருதப்படுகிற, ஜமீன்தாரின் பண்ணை நிலங்களின் குடியானவர்களுக்கும், (3) வரி வசூல் சட்டத்தின் 1-வது பிரிவின் 2-வது உட்பிரிவிலும், 13-வது பிரிவிலும், தெரிவிக்கப்பட்டிருக்கிற ரயத்துவாரி குடியானவர்களுக்குத்தான் செல்லும். குறைந்த வரி விகிதங்களை விதிப்பதற்கு ஜமீன்தார் சம்மதித்து தரிசு நிலங்களை குடியானவர்களுக்கு சீர்திருத்தம் செய்யக்கொடுத்தால், அப்பொழுதேற்படும் ஒப்பந்தங்களுக்கும் செல்லும், அச்சந்தர்ப்பத்திலும், குடியானவனுடைய அனுபோக உரிமையும், சாசுவத செட்டில்மெண்ட் காலத்தில் நிரந்தரமாக முடிவு செய்யப்பட்ட வரியை உயர்த்தக்கூடாது என்ற ஜமீன்தாரின் கடமையும் மாறாது.

உட்பிரிவு (2).—இரண்டாவது உட்பிரிவின் கீழ், குறிக்கப்பட்டிருக்கும் வரி உயர்வுகள், 1859-ம் வருஷத்திற்குமுன் சர்வே செய்யப்பட்ட ரயத்துவாரி நிலங்களுக்குத்தான் செல்லும். ஏனெனில், 1859-ம் வருஷத்திற்குமுன் ஒரு ஜமீனிலும் சர்வே கிடையாது. ரயத்துவாரி பிரதேசங்களில் தான், சர்வே ஏற்பட்டது. விஜயநகரம் முதலிய சில ஜமீன்களில் தவிர, மற்ற ஜமீன்களில், சர்வேயாவது செட்டில்மென்டாவது இதுவரை கிடையாது. ஆகையால், முதலாவது பிரிவில், இரண்டாந்தர நிலச்சுவான்தார்களென்று விளக்கப்பட்டிருக்கும் ரயத்துவாரி குடியானவர்களுக்கே, இது பிரத்தியேகமாக ஏற்படுத்தப்பட்டது. ரயத்துவாரி குடியானவர்கள் இரண்டாந்தர நிலச்சுவான்தார்கள் என்று வரிச் சட்டத்தின் 13-வது பிரிவில் குறிக்கப்பட்டிருக்கிறது.

உட்பிரிவு (3).—முதலாவது உட்பிரிவில் குறிக்கப்பட்டிருக்கும் சந்தர்ப்பங்களுக்கே மூன்றுவது பிரிவு செல்லுமென்று நாம் கருதவேண்டும்.

உட்பிரிவு (4).—தரிசு நிலங்களுக்கு, ஜமீன்தார் தனக்கிஷ்டமான வரி விகிதங்களை ஏற்படுத்திக் கொள்ளலாமென்று 1865-ம் வருஷத்திய வரி வசூல் சட்டத்தின் 11-வது பிரிவின் 4-வது உட்பிரிவில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. இதனுல், தன்னிச்சையாக, தோன்றியவாறெல்லாம் வரி விகிதங்களை ஏற்படுத்திக் கொள்வதற்கு, ஜமீன்தாருக்கு பூரண உரிமையிருக்கிறதென்று முதலில் புலப்படலாம். சட்டத்தின் ஷரத்தைப் படித்தால், விஷயம் நன்ருக விளங்கிவிடும். ஷரத்தின் பிரகாரம், எல்லா பிரத்தியேக உரிமைகளும் பாதுகாக்கப்பட்டன. அப்படிப்பட்ட பிரத்தியேக உரிமைகள் எவை ? அவையே (1) தரிசு நிலங்களைப் பண்படுத்தி, சாகுபடி விஸ்தீரணத்தை, அதிகரிப்பதற்குள்ள உரிமை. சாசுவத செட்டில்மெண்ட் காலத்தில் நிரந்தரமாக முடிவு செய்யப்பட்ட வரியைச் (வாடகை அல்ல) செலுத்துவதற்குள்ள உரிமை.

மேற்படி ஷரத்து பின்வருமாறு :—

"இப்படிப்பட்ட தரிசு நிலங்களில் அல்லது காலி நிலங்களில், சட்டப்படியாவது, சட்டரீதியான வழக்கப்படியாவது, எவருக்காவதுள்ள பிரத்தியேகமான உரிமையை, இவ்விதி பாதிக்காது."

தரிசு நிலங்களில், குடியானவனுக்கிருந்த பிரத்தியேக உரிமை என்ன ? ஆதியிலிருந்தே குடியானவன் தன் நிலத்தை ஏகபோகமாக அனுபவித்து வந்திருக்கிறுன். தேச பரிபாலனத்தின் செலவிற்காக விளைச்சலில் ஒரு பாகத்தை அரசனுக்குச் செலுத்தவேண்டியதுதான் அவன் கடமை. தனது அனுபோகத்திலுள்ள நிலத்தில்மட்டுமன்றி மற்ற நிலங்களிலும் குடியானவனுக்கு பிரத்தியேக உரிமையுண்டு. கிராம எல்லைக்குள்ளிருந்த எல்லா நிலங்களும் சாகுபடி செய்யப்பட்ட நிலங்கள், சாகுபடி செய்யப்படாத நிலங்கள், தரிசு நிலங்கள், காடு, கரை, யாவும், அக்காலத்தில் கிராம சமுதாயத்திற்குச் சேர்ந்திருந்தன.

அத்தகைய கிராம ஐக்கியம், ரயத்துவாரி முறையால் கலைக்கப்பட்டு ஒவ்வொரு குடியானவனும், அவனவன் நிலத்திற்கு உரியவனுகச் செய்யப்பட்டான். கிராமவாசிகள் யாவருக்கும் கட்டுப்பாடாக இருந்த புராதன உரிமை இப்பொழுது தனித்தனிக் குடியானவர்களுக்கு வந்து சேர்ந்திருக்கிறது. ஆகையால், தரிசு நிலம், குடியானவனுடைய பிரத்தியேக உடைமையாயிருந்தது. சாசுவத செட்டில்மெண்ட் ஏற்பட்ட காலத்தில், சாகுபடி செய்யப்பட்ட நிலங்களிலிருந்து பிரிக்கப்பட்டு, தனி முறையில் அதற்கு விதிகள் ஏற்படுத்தப்பட்டன. இது பர்மனெண்ட் செட்டில்மெண்ட் ரெகுலேஷனிலும், பட்டா ரெகுலேஷனிலும், குறிக்கப்பட்டிருக்கிறது. ஆனுல், தரிசு நிலங்களில் ஜமீன்தாருக்கு பிரத்தியேகமான விசேஷ உரிமையைக் கொடுப்பதாக உத்தேசிக்கப்படவில்லை. தரிசு நிலங்களுக்கு சாசுவத செட்டில்மெண்ட் காலத்திற்கு முன் ஸ்தாபிக்கப்பட்ட வரியைவிட அதிகமான வரியை ஜமீன்தார் விதிக்கக்கூடாதென்றும், சாசுவத செட்டில்மெண்ட் காலத்தில் எடுத்த கணக்கில் தரிசு நிலங்கள் சேர்க்கப்படவில்லை என்று குடியானவன் பாத்தியம் கொண்டாடக்கூடாதென்றுமே உத்தேசிக்கப்பட்டன. சாசுவத செட்டில்மெண்ட் காலத்தில் சர்க்கார் ஜமீன்தாருடன் செய்துகொண்ட ஏற்பாடு என்னவென்ருல், தரிசு நிலங்களிலிருந்து, சாசுவத செட்டில்மெண்ட் தேதிக்குப்பிறகு, கிடைக்கும் வருமானம், சாகுபடி செய்யப்பட்ட நிலங்களுக்கு நிரந்தரமாக முடிவு செய்யப்பட்ட வரித்தொகையில் (பேஷ்கஷ்) சேர்த்துக்கொள்ளப்பட்டதாக கருதப்படாதென்றும், சாசுவத செட்டில்மெண்டுக்கு பிறகு, தரிசு நிலங்கள் சாகுபடி செய்யப்பட்டால், அவைகளுக்கு பேஷ்கஷ் விதிக்கப்படாதென்றும், செய்துகொண்ட ஒப்பந்தமே. நிலங்களை, சாகுபடி செய்யப்பட்ட நிலங்கள், சாகுபடி செய்யப்படாத நிலங்கள் (தரிசு), என்று இரண்டு வகுப்புகளாக பிரித்தபொழுது, சர்க்கார், ஜமீன்தாருக்குச் செய்தவிசேஷ நலம் மேற்கூறியதுதான்.

முதற்றலைப்பின் கீழ், 11-வது பிரிவின் (1) முதல் (4) வரையுள்ள உட்பிரிவுகளை ஆராய்ந்தோம். அவைகள், அனுபோக உரிமையுள்ள நிலங்களுக்கும், அனுபோக உரிமையில்லாத நிலங்களுக்கும், ரயத்துவாரி நிலங்களுக்கும், செல்லுமா என்பதைப்பற்றி இப்பொழுது தனியாக ஆராய்வோம். அப்படிச்செய்ய வேண்டியது, யுக்தமாய்த் தோன்றுகிறது. ஏனெனில், சாசுவத செட்டில்மெண்ட் காலத்தில் வரி விகிதம் நிரந்தரமாய் முடிவு செய்யப்பட்ட பட்டா நிலங்களுக்கும், செல்லவேண்டுமென்று (1) முதல் (12) வரையுள்ள பிரிவுகள் சட்டத்தில் (**Act**) தொகுத்து அமைக்கப்பட்டிருப்பது அதிக குழப்பத்தை உண்டாக்கிவிட்டது. சாசுவத செட்டில்மெண்ட் காலத்தில், வரி விகிதம் நிரந்தரமாக முடிவு செய்யப்பட்ட நிலங்களுக்கும் செல்லும் என்று, நாம் ஒப்புக்கொள்வோமாகில், (1) முதல் (4) வரையுள்ள, உட்பிரிவுகளுக்கு மேலே தெரிவிக்கப்பட்ட தாத்பர்யத்தைத்தான் கொடுக்கவேண்டும். அவ்வாருகில், மேற்படி உட்பிரிவுகளைப்பற்றி செய்யவேண்டிய விளக்கம் கீழே தெரிவிப்பதுபோல் இருந்திருக்கவேண்டும் :—

உட்பிரிவு 1.—இந்த உட்பிரிவில், "வரி சம்பந்தமான ஒப்பந்தம்" என்ற வார்த்தைகள் அனுபோக உரிமையுள்ள நிலங்களுக்கு உபயோகப்படுத்தப்பட்டால், அவை, சாசுவத செட்டில்மெண்ட் காலத்தில், (1802-ம்ளூ) அல்லது அதற்கு முன்பு செய்துகொள்ளப்பட்ட ஒப்பந்தத்தைக் குறிக்கும். 1802-ம் வருஷத்தின் XXX ரெகுலேஷனின் 9-வது பிரிவு (11-வது பிரிவு அமுலில் வந்தபொழுது) ரத்து செய்யப்பட்டது. அதனுடைய ஸ்தானத்தை வகிக்கவேண்டுமென்றே மேற்படி உட்பிரிவும், அதைத்தொடர்ந்த உட்பிரிவுகளும் ஏற்படுத்தப்பட்டன. ஆகையால் 1802-ம் வருஷத்திய IV, V ரெகுலேஷன்களிலும், 1863-ம் வருஷத்திய வரி மசோதாவிலும், விளக்கியுள்ளபடி XXX ரெகுலேஷன் 9-வது பிரிவின் நோக்கமே சர்க்காரின் நோக்கமாக இருந்திருக்கவேண்டும். இந்த உட்பிரிவின் வாசகம் சீராக அமைக்கபடாததால் ஜமீன்தார்கள் சார்பாக தவருன வியாக்கியானத்திற்கு இடம் தந்தது. ஏனெனில் இந்த உட்பிரிவிலுள்ள வார்த்தைகள் தெளிவாக இல்லை. ஆகையால், கோர்ட்டுகள், வியாக்கியானம் செய்ய நேர்ந்தபொழுது, முதலில் பல தவறுகளைச் செய்தன.

நிலவரிச்சட்டம் அமுலுக்கு வந்தபொழுது, ஒப்பந்தச்சட்டம் (**Contract Act**) ஏற்படவில்லை. ஆதலால் "வரிசம்பந்தமான ஒப்பந்தங்கள்," அனுபோக உரிமையுள்ள குடியானவர்களைப்பற்றி உபயோகிக்கப்பட்டால் அவைகளின் அர்த்தம், 1802-ம் வருஷத்திய XXX ரெகுலேஷனின் பிரிவில், உபயோகப்படுத்தப்பட்டிருக்கும் வார்த்தைகளின் சுவபாவமான, சரியான அர்த்தம்தான்.

இருதரத்தாருக்குமுள்ள எல்லா ஒப்பந்தங்களும் நிறைவேற்றப்படவேண்டுமென்ற தவருன அபிப்பிராயமே, 11–வது பிரிவின் (1) வது உட்பிரிவு ஏற்படுவதற்கு காரணம். வரி வசூல் சட்டம் ஏற்பட்டபொழுது, இந்திய ஒப்பந்தச்சட்டம் (**Indian Contract Act**) கிடையாது. இந்தியாவிற்கு ஸ்திரமான சட்டத்தொகுதியை ஏற்படுத்துவதற்கு, நியமிக்கப்பட்ட, மாக்ஷிமை பொருந்திய சக்ரவர்த்தினி அவர்களின் கமிஷனர்கள் அறிக்கையின் மீது, இந்திய ஒப்பந்த மசோதா 1866-ம்ளூ ஜுலைமீ 6உ யில் சட்டமாக்கப்பட்டது. ஆதலால் 11-வது பிரிவின் முதலாவது உட்பிரிவில் உபயோகித்திருக்கும் "ஒப்பந்தம் (**Contract**)" என்ற வார்த்

தையின் அர்த்தமும், ஒப்பந்தச்சட்டத்தில், உபயோகித்திருக்கும் ஒப்பந்தம் என்ற வார்த்தையின் அர்த்தமும், ஒன்றே என்று நாம் கொள்ள முடியாது. 11-வது பிரிவின் முதலாவது உட்பிரிவு, பல வழக்குகளில், விவாதிக்கப்பட்டு, வியாக்கியானம் செய்யப்பட்டது. பட்டாவில் குறிக்கப்பட்ட சில ஷரத்துகள் குடியானவனுக்கும், ஜமீன்தாருக்கும் ஏற்பட்ட ஒப்பந்தங்கள் என்று கூறி அவைகளை ஆதாரமாகக்கொண்டு பல ஜமீன்தார்கள், அதிக வரி வசூலிக்க குடியானவர்கள் மீது வழக்குத்தொடர ஆரம்பித்தார்கள். இம்மாதிரி பல வழக்குகள் கிளம்பின. ஆனால், பட்டாக்களிலும் முச்சலிக்கைகளிலும், வரி உயர்வு சம்பந்தமாக அமைக்கப்பட்ட ஷரத்துகள், ஒப்பந்தங்களாக கருதக்கூடாதென்று சில கோர்ட்டுகள் முடிவு கூறின. சொக்கலிங்கம் பிள்ளை வழக்கிற்கு முன் (குடியானவனுக்குள்ள உரிமை ஒருவருஷ கால உரிமையே என்றும், நிரந்தர அனுபோக உரிமையல்லவென்றும், சொக்கலிங்கம் பிள்ளை வழக்கில் தீர்ப்புக்கூறப்பட்டது). மதராஸ் ஹைகோர்டின் தீர்ப்புகள், குடியானவனுக்கு அனுபோக உரிமை இருக்கிறதென்றும், ஜமீன்தார்கள் வரி வசூலிப்பவர்களே என்றும், தாங்கள் வசூலிக்கும் மொத்த வரியில் விதிக்கப்பட்ட பேஷ்கஷ் தொகையை சர்க்காருக்குச் செலுத்தவேண்டுமென்றும், சர்க்காருக்குச் செலுத்தவேண்டியது அவர்கள் கடமை என்றும், எஞ்சியுள்ள பாகம், வரி வசூல் சம்பந்தமாக அவர்கள் எடுத்துக்கொள்ளும் ஸ்ரமத்திற்கு பிரதிப்பயனாக கொடுக்கப்படுகிறதென்றும், தரிசு நிலங்களிலிருந்து கிடைக்கும் வருமானத்தை அவர்கள் எடுத்துக்கொள்ளலாம் என்ற லாபமும், அவர்களுக்கு உண்டு என்றும், நிலை நாட்டின.

1802-ம் வருஷத்திய XXX, ரெகுலேஷனின் 9-வது பிரிவு நீக்கப்பட்டு அதனுடைய ஸ்தானத்தில், 11-வது பிரிவின் (1) (2) (3) உட்பிரிவுகள் அமைக்கப்பட்டன. குடியானவனுக்கு அதிக தொல்லையைத் தரக்கூடிய புதிய உட்பிரிவுகளை புகுத்தினதிற்கு பதிலாக, XXX ரெகுலேஷனின் 9-வது பிரிவை அப்படியே எடுத்து அமைத்திருந்தால் நலமாயிருக்கும். பின்னால் ஏற்பட்ட சங்கடங்களுக்கு வரிச்சட்டத்தின் (Rent Act) 11-வது பிரிவின் (1) (2) (3) உட்பிரிவுகளே காரணம். 11-வது பிரிவின் முதலாவது உட்பிரிவில் கண்டுள்ள, "வரி சம்பந்தமான ஒப்பந்தம்" என்ற வார்த்தைகள், பின்னால் அமுலில் வந்த இந்திய ஒப்பந்தச்சட்டத்திலுள்ள லக்ஷணத்தின்படி அர்த்தம் செய்யப்பட்டது. இந்தத் தவறான அபிப்பிராயம் கொஞ்சகாலம் இருந்து வந்தது. ஆனால், பிறகு அனுபோக உரிமையுள்ள குடியானவர்களைப் பொருத்தமட்டில் காலவரையறையும், வரி உயர்வும், குறிக்கப்பட்ட பட்டாக்கள், முச்சலிக்கைகள் ஆகிய இவைகளிலுள்ள ஷரத்துகள் 1802-ம் வருஷத்திய XXX ரெகுலேஷனில் தெரிவித்திருக்கும் அர்த்தத்தில், ஒப்பந்தங்கள் ஆகமாட்டா என்று நீதிபதிகளால் ஒப்புக்கொள்ளப்பட்டது. இந்த உட்பிரிவின்படி, சாசுவத செட்டில்மெண்டுக்குமுன் ஏற்படுத்தப்பட்ட வரியை விட அதிக வரியை கொடுப்பதற்கு குடியானவன் சம்மதித்தாலும் அது செல்லாது. பட்டாவில் அல்லது முச்சலிக்கையில், அத்தகைய ஷரத்துகள் இருந்தாலும், அவை குடியானவர்களைக் கட்டுப்படுத்தமாட்டா. தொகை வசூலிக்கப்பட்டாலும், அது சட்டத்திற்கு விரோதமான, அநியாயமான, ஒழுங்கீனமான வசூலாகும். சட்ட உத்தேசம், குடியானவன் சார்பாக இருப்பதாய் கருதப்பட்டது. வரிச்சட்டத்தின் 5-வது பிரிவு நியாயமாக ஏற்பட்டதற்குமேல், அதிகமாக வசூலிப்பதைக்கண்டிக்கிறது.

உட்பிரிவு (2).—1802-ம் வருஷத்திற்கு பின்னும் 1859-ம் வருஷம் ஜனவரிமீ 1வுக்கு முன்னும், பிரிடிஷ் சர்க்காரால் சர்வே செய்யப்பட்ட ஜில்லாக்களிலும், கிராமங்களிலும், பணவரி விதிக்கப்பட்டிருந்தால், அதுவே ஒழுங்கான வரியாக கருதப்படவேண்டும். இப்பிரிவு, ரயத்துவாரி, குடியானவர்களை குறிக்கிறதேயொழிய, ஜமீன் குடியானவர்களைக்குறிக்கவில்லை. ஏனெனில், 1859-ம் வருஷத்திற்கு முன் ஜமீன்களில் சர்வே ஏற்படவில்லை. ரயத்துவாரிக் குடியானவர்களுக்கும், அவர்கள் கீழ் இருப்பவர்களுக்குமுள்ள சம்பந்தத்தை ஒழுங்குபடுத்துவதற்கே, இது ஏற்படுத்தப்பட்டதாக கருதப்படுகிறது. 1-வது பிரிவில் ரயத்துவாரிக் குடியானவர்கள், நிலச்சுவான்தார்களென்று (landholders) குறிக்கப்பட்டிருக்கிறது. ஆதலால், இந்த உட்பிரிவைப்பற்றி இவ்வறிக்கையில் நாம் ஆலோசிக்கவேண்டியதில்லை. அதற்கு பதிலாக அனுபோக உரிமையுள்ள நிலங்களுக்கு இது செல்லுமா என்று பார்ப்போம். இந்த உட்பிரிவின் கீழ், ஒரு ஜில்லா அல்லது கிராமம், பிரிடிஷ் சர்க்காரால் சர்வே செய்யப்பட்ட பிறகு, பணவரி ஏற்பட்டிருந்தால், ஜமீன்தாருக்கும், குடியானவனுக்கும் வழக்கு உண்டானால், அது சம்பந்தமாக வெளிப்படையான அல்லது யூகிக்கக்கூடிய ஒப்பந்தம் இல்லாவிட்டால், மேற்கூறிய பணவரி விகிதமே சரியான வரி விகிதமென்று கருதப்படவேண்டும். முதல்வது, பர்மனெண்ட் செட்டில்மெண்ட் ஒப்பந்தம், தடையாக நின்றது. அப்படியில்லையென்று வைத்துக்கொண்டாலும் மேற்படி உட்பிரிவு செல்லாது. உதாரணமாக, 1859-ம்ஷு ஜனவரிமீ 1வுக்கு முன் சர்வே செய்யப்பட்டிருந்தும் 1865-ம் வருஷத்திய VIII வரி மசோதா சட்டமாகப்படுவதற்கு முன் 1864-ம்ஷு வரி விகித சம்பந்தமாக வழக்கு ஏற்பட்டால், 1802-வருஷத்திய XXX ரெகுலேஷனின் 9-வது விதியில் உள்ள நியாயப்படி அதை முடிவு செய்யவேண்டும். 1802-ம் வருஷத்திய XXX பட்டா ரெகுலேஷன் ஏற்படுவதற்கு முன் வருஷத்திய வரி விகிதமே ஒழுங்கான வரி விகிதமென்று 1802-ம் வருஷத்திய XXX ரெகுலேஷனின் 9-வது விதியில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. வரியை உயர்த்தி குடியானவனுக்கு அதிக கஷ்டத்தை தரக்கூடியதென்று (1) முதல் (3) வரையுள்ள உட்பிரிவுகள் முதலிலேயே புலப்படுகின்றன. (2) உட்பிரிவுக்குப் பதிலாக 1802-ம் வருஷத்திய XXX ரெகுலேஷனின் 9-வது விதியை சர்க்கார் மற்றொரு உருவத்தில் அமைத்திருக்கவேண்டும்.

அவசியமாகத்தோன்றினால், நிலங்கள் சர்வே செய்யப்பட்டிருந்தாலும், நிலத்தின் விஸ்தீர்ணம் அதிகரித்திருந்தாலும், (ஆசரணையிலுள்ள நில அளவின்படி) வரி சம்பந்தமாக வழக்கு ஏற்பட்டால், மேற்படி நிலங்களுக்கு சாசுவத செட்டில்மெண்டுக்கு முன்வருஷத்திய வரி விகிதங்களே நியாயமான வரி விகிதங்கள் என்றும் தெரிவிக்கவேண்டும். நான்கு எல்லைகளுக்குள் முன் விவரிக்கப்பட்ட விஸ்தீரணத்தை விட, சர்வே செய்யப்பட்ட பிறகு, 4 ஏக்கர் அதிகமாகக் காணப்பட்டபோதிலும், அதற்கு அதிக வரி விதிப்பதற்கு, சில வழக்குகளில், கோர்ட்டுகள் மறுத்துவிட்டன. அனுபோக உரிமைகளுக்கு அது செல்லுமானாலும், (2)-வது உட்பிரிவின் வியாக்கியானம் இப்படித்தானிருக்கவேண்டும். ஏனெனில், வரி விகிதம், 1802-ம் வருஷத்தில், சாசுவதமாகத் தீர்மானிக்கப்பட்டது. நூறு வருஷங்களுக்குப்பிறகு, ஆசரணையிலுள்ள நில அளவு ஏற்பாடுகளால் உண்டாகும் வித்தியாசங்கள் அதைப்பாதிக்காது.

உட்பிரிவு (3).—இது அனுபோக உரிமைகளுக்கும் செல்லுமென்று கருதப்படுமானல், 'வழக்கம்,' என்ற வார்த்தை சாசுவத செட்டில்மெண்டுக்கு, முன் வருஷத்தில் ஸ்தாபிதமாயிருந்த வழக்கம் என்றுகொள்ளவேண்டும். அதன்மீது ஆதாரப்பட்டே சாசுவத செட்டில்மெண்ட் விகிதங்கள் ஏற்படுத்தப்பட்டன. "பக்கத்திலுள்ள வரி" என்பது சாசுவத செட்டில்மெண்டிற்கு முன்வருஷத்திலிருந்த பக்கத்திலுள்ள வரி, என்று கருதவேண்டும். இந்த உட்பிரிவில், வரி விதிப்பது சம்பந்தமாக, குறிக்கப்பட்டிருப்பது XXX ரெகுலேஷனின் 9-வது பிரிவை ஒத்திருக்கிறது. ஆனல் அதே வார்த்தைகள் உபயோகிக்கப்படவில்லை. ஸ்தல வழக்கத்தின்படி, வரி விகிதங்கள் தீர்மானிக்கப்படவேண்டுமென்றும், அது அறிய முடியாவிட்டால், ஒத்த தரத்தையுடைய பக்க நிலங்களுக்கு, செலுத்தப்படுகிற அல்லது ஸ்தாபிக்கப்பட்ட வரி விகிதங்களின்படியே தீர்மானிக்கப்படவேண்டுமென்று தெரிவிக்கும் மூன்ருவது உட்பிரிவின் ஷரத்து, சாராம்சத்தில் 1802-ம் வருஷத்திய XXX ரெகுலேஷனின் 9-வது பிரிவை ஒத்திருக்கிறது. வரி விகிதங்கள் சம்பந்தமாக வழக்குகள் ஏற்பட்டால், சாசுவத செட்டில்மெண்டுக்கு, முன்வருஷத்தில் சாகுபடி செய்யப்பட்ட நிலங்களுக்கு என்னவரி விகிதங்கள் இருந்தனவோ, அவைகளின்படியே தீர்மானிக்கப்படவேண்டும். அந்த வரி விகிதங்கள் அறிய முடியாவிட்டால், ஒத்த தரத்தையுடைய பக்க நிலங்களுக்கு என்ன வரி விகிதங்கள் ஸ்தாபிக்கப்பட்டிருந்தனவோ அவைகளின் பிரகாரமே தீர்மானிக்கப்படவேண்டும்.

XXX ரெகுலேஷனின் 9-வது பிரிவிலுள்ள வார்த்தைகளின் அர்த்தத்தையே, "ஸ்தல வழக்கம்," "ஸ்தாபிக்கப்பட்ட விகிதங்கள்," என்ற வார்த்தைகள் தெரிவிக்கின்றன. மேலும், (3) உட்பிரிவில் கண்டுள்ள ஏற்பாடு 1802-வருஷத்திய XXX ரெகுலேஷன் 9-வது பிரிவு ஒத்திருக்கிறது என்பது ஷரத்திலிருந்து தெளிவாக விளங்குகிறது. ஷரத்தில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது :—

"ஆனல், அவ்வாறு தீர்மானிக்கப்பட்ட வரி விகிதங்கள் சம்மந்தமாக யாதாவது ஒரு கக்ஷியினருக்கு அதிருப்தியுண்டானல் அவர் வாரம் முறையில் தானியமாக வரிசெலுத்தலாமென்று பாத்தியம் கொண்டாடலாம். அதாவது சாசுவத செட்டில்மெண்ட் காலத்தில், கிராமத்தில், என்ன வாரமுறையிருந்ததோ அதன்படி செலுத்தலாம்."

சாசுவத செட்டில்மெண்டுகாலத்தில், கிராமத்தில் ஸ்தாபிதமாக இருந்த வரி விகிதங்களைப்பற்றி ஷரத்தின் முதற்பாகம் வெளிப்படையாகத் தெரிவிக்கிறது. ஆகையால், முக்கிய உட்பிரிவில் உபயோகித்துள்ள "வழக்கம்" "ஸ்தாபிதமான விகிதங்கள்" என்ற வார்த்தைகள், சாசுவத செட்டில்மெண்ட் காலத்தில் நிரந்தரமாக முடிவு செய்யப்பட்ட வரி விகிதங்களைக் குறிப்பதாகக் கருதப்படவேண்டும். சாசுவத செட்டில்மெண்ட் காலத்தில் கிராமத்தில், ஸ்தாபிதமாக இருந்த வரி விகிதங்களைக்குறிக்கும் ஷரத்து, சாசுவத செட்டில்மெண்ட் ஏற்பட்டு 60 வருஷங்களுக்கப்புறம் (உதாரணமாகச் சொல்கிறேம்). வழக்கப்படியுள்ள அல்லது பக்க நிலங்களுக்குள்ள வரி விகிதங்களுடன் இணைக்கப்படுவதாக எண்ணலாகாது. அவ்வாறு எண்ணினல் அது இயற்கைக்கு மாருன தாத்பரியமாகும். முக்கிய விதிகள் தெரிவிக்கிற காலத்தையே, ஷரத்தும் குறிப்பதாகக் கருதவேண்டும். பொது விதிக்கு, ஷரத்து ஒரு விலக்கைப்போலிருக்கிறது.

இப்படி அர்த்தம் செய்வோமாகில் பட்டா ரெகுலேஷனின் 9-வது பிரிவு (3)-வது உட்பிரிவில் அடங்கி இருக்கிறதென்று கொள்ளலாம். வார்த்தைகள் அப்படியே பின்பற்றப்படாவிட்டாலும், சாராம்சமும் போக்கும் இருக்கின்றன. "ஒப்பந்தம்" என்ற வார்த்தைக்கு பிரதானம் அளித்ததே, அவர்கள் இச்சந்தர்ப்பத்தில் இழைத்த தவருகும். மேற்படி 9-வது பிரிவிலுள்ள வார்த்தைகள், உள்ளவாறே, மசோதாவின் (10)-வது உட்பிரிவில், அமைக்கப்பட்டிருந்தால், விவாதங்களுக்கு இடம் இருந்திராது. தங்கள் அறிக்கையில் விதியையும், முக்கியதத்துவங்களையும் வெகு ஜாக்கிரதையாகவும் சரியாகவும் தெரிவித்த செலக்ட் கமிட்டியார், "ஒப்பந்தம்" என்ற வார்த்தைக்கு பிரதானம் அளித்து, 11-வது பிரிவை விஸ்தரிக்க முயன்றதில், ஒரு தவறைச் செய்துவிட்டார்கள். ஜமீன்தாருடைய செலவால், நிலத்தின் வளப்பமாவது, விளைச்சிலின் மதிப்பாவது அதிகரித்திருக்கிறுதா என்பதை அறிந்து தங்கள் இஷ்டப்படி வரி விகிதத்தை ஏற்படுத்தலாம் என்று கலெக்டர்களுக்கு அதிகாரத்தைக் கொடுத்தது, இச்சந்தர்ப்பத்தில் செய்த மற்றெரு தவருகும்.

தங்கள் அறிக்கையில் செலக்ட் கமிட்டி விரும்பிய விஸ்தரிப்பு இதுவே. 1802-ம் வருஷத்திய XXX ரெகுலேஷன் விதிகளுக்கு இது மாருனது. XXX ரெகுலேஷனின் 9-வது பிரிவில் உத்தேசிக்கப்பட்ட அனுபோக உரிமைகள் சாசுவத செட்டில்மெண்டு காலத்தில் வரி விகிதங்கள் நிரந்தரமாக தீர்மானிக்கப்படுதல் ஆகிய இவ்விரண்டும் எதிர்காலத்தில் உண்டாகும் அதிக விளைச்சலுக்கு உயர்ந்த வரி கொடுக்க, குடியானவன் ஒப்பந்தம் செய்துகொள்வதென்னும் கருத்தை நிராகரிக்கின்றன. ஆகையால், சட்டத்தில் ஏற்படுத்தப்பட்ட இந்த மாறுதல் விசித்திரமாயிருக்கிறது.

வரிச் சட்டத்தின் 11-வது பிரிவின் (3)-வது உட்பிரிவில் 1802-ம் வருஷத்திய XXX ரெகுலேஷன் 9-வது பிரிவிலுள்ள விதி ஒருவாறு பூராக அமைக்கப்பட்டிருக்கிறதென்பது தெளிவாக விளங்குகிறது. 1802-ம் வருஷத்திய XXX ரெகுலேஷனல் ஸ்தாபிக்கப்பட்ட மூலாதார உரிமைக்கு பதிலாக, ஒப்பந்தங்களுக்குப் பிரதானம் அளிக்கப்பட்டதே பெருந்தவருகும். ஆனல் "ஒப்பந்தம்" என்பது 1802-ம் வருஷத்திய சாசுவத செட்டில்மெண்ட் ஒப்பந்தத்தையே குறிப்பதாக ஒருவாறு விளக்கப்படலாம்.

மற்றெருபடியாக (3)-வது உட்பிரிவு இரண்டாம்தர நிலச்சுவான்தாருக்கும் செல்லும் என்று வைத்துக்கொண்டு ஆராய்வோம். அப்பொழுதும் கூட முக்கிய உட்பிரிவிற்கும் ஷரத்தையும் மேலே கூறிய அர்த்தத்தையே கூறவேண்டும். அனுபோக உரிமையில்லாத குடியானவர்களுக்கும் அதே சகாயத்தையும் பரிகாரத்தையும்தான் கொடுக்கவேண்டும். ஏனெனில் 1865-வது வருஷத்தில் வரி வசூல் சம்பந்தமாக ஏற்படுத்தப்பட்ட விதிகளில் அனுபோக உரிமையுள்ள நிலங்களுக்கும், அனுபோக உரிமையில்லாத நிலங்களுக்கும் வித்தியாசம் காட்டப்படவில்லை.

நிலங்களுக்கு வரி ஏற்பட்டிராவிட்டால், வரி சம்பந்தமாக ஒப்பந்தம் இல்லாவிட்டால் அப்பொழுது வரி எவ்வாறு தீர்மானிக்கப்படவேண்டும் என்பது 11-வது பிரிவின் (3)-வது உட் பிரிவில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. ஜமீன்தாருக்கு எவ்வகையிலாவது சாதகம் செய்ய வலிந்து செய்த பிரயத்தனமாகும். "பக்கத்து நிலங்களுக்குள்ள வரி விகிதத்தின்படி தீர்மானிக்கப்படவேண்டும்" என்று கண்டிருப்பதிலிருந்து ஏற்படுத்தப்பட்ட விதியின் அநீதி எளிதிற் புலப்படும். பக்கத்து நிலங்களுக்கு வரிகள் ஒழுங்கற்ற முறையில் உயர்த்தப்பட்டிருக்கலாம். குடியானவர்கள் தங்களுக்குள்ள அறி

யாமையாலும் எதிர்ப்பதற்கு சக்தியில்லாமையாலும் சும்மா இருந்திருப்பார்கள். ஆனால் சட்டப்படி அது நியாயமான ஆதாரமாய்விடுகிறது. மேலும் ஸ்தல "வழக்கத்தின்படி" வரி நிர்ணயம் செய்யப்படுதல் என்பதின் பொருள் என்ன? ஸ்தல வழக்கம் என்பது என்ன? ஜமீன்தார் வரி உயர்த்துவதை ஒன்றும் தெரியாத குடியானவர்கள் பல வருஷங்களாக ஆட்சேபிக்காமல் வரி உயர்வு சம்பந்தமான ஷரத்துகளடங்கிய பட்டாக்களைப் பெற்றுவந்தால், அது வழக்கமெனக் கொள்ளப்படலாமா? இவ்வாறாக நியாயமற்றதாகவும் ஒழுங்கற்றதாகவும் கண்டிக்கப்படவேண்டிய ஒரு "வழக்கம்" சட்டப்போர்வையைப்பெற்று ஒழுங்கான விதியாக பாவிக்கிறது. இந்த உட்பிரிவில் கண்டுள்ள விதிகள் நியாயமானவையா அல்லவா என்பதை சர்க்கார் விசாரிக்க மறந்து விட்டார்கள். "ஸ்தல வழக்கங்களும்" "பக்க நிலங்களின் வரி விகிதங்களும்" நியாயமற்றவையா யிருக்கலாம் என்பதை நன்குணர்ந்தே அதற்குத் தக்க பாதுகாப்பு ஏற்படுத்தப்பட்டது. அதாவது யாதாவது ஒரு கட்சியைச் சேர்ந்தவர் (ஜமீன்தாரோ, குடியானவர்களோ) தீர்மானிக்கப்பட்ட வரி விகிதங்களைப்பற்றி அதிருப்தி அடைந்தால் "வாரம்" முறைப்படி வரி தானியமாகச் செலுத்தப் படலாம் என்ற பாத்தியதை அவர் கொண்டாடலாம். அதாவது கிராமத்தில் ஏற்பட்ட விகிதத்தின் படி விளைச்சலை குடியானவனும், ஜமீந்தாரும் பங்கிட்டுக்கொள்ளலாம். இன்னும், வாரம் என்ன வென்று நிர்ணயம் செய்யமுடியாவிட்டால், குடியானவன் செலவுசெய்து நிலத்திற்கு உரம்வைத்த தின் பலனை அல்லாமல், ஜமீன்தாரது முயற்சியாலும், செலவாலும், விளைச்சலின் மதிப்பிலாவது, நிலத்தின் வளப்பத்திலாவது அதிகரிப்பு உண்டாயிருப்பதை நன்கு விசாரித்து, தனக்குச் சரி யாகத்தோன்றும் வரி விகிதங்களை ஏற்படுத்தலாம் என்று கலெக்டருக்கு அனுமதியைத் தரு கிறது. இது ஷரத்தில் மேலும் கண்டுள்ள விஷயம் 1859-ம் ஹு ஜனவரி மீ த்திற்கு முன் சர்வே செய்யப்பட்ட நிலங்களுக்கு விதிக்கப்பட்ட வரி விகிதங்கள், அக்காலத்தில், புதிதாக ஏற்பட்ட நாணயமாற்ற ஈவை (**exchange ratio**) முன்னிட்டு குடியானவர்களால் ஒப்புக்கொள்ளப்படாம லிருக்கலாமென்பது ஷரத்திலிருந்து தெரியவருகிறது. அக்காலத்தில் அதிக சம்பளம் பெற்றுவந்த மேலதிகாரிகள், தங்கள் சம்பளத்தை ரூபாயாகப்பெற்று இங்கிலாந்தில் தங்கள் குடும்பங்களுக்கு அனுப்பினார்கள். மேலும் அவர்கள் ஒரு பவுன் (**£**) மதிப்புள்ள தங்கள் சாமான்களை 15 ரூபாய்க்கு இங்கு விற்காமல் 10 ரூபாய்க்கு விற்க சம்மதித்து, இந்தியாவை தங்களுக்கு ஒரு வியாபார அரங்கமாக செய்துகொண்டார்கள். இந்த மேலதிகாரிகளின் நலத்திற்காகவே சற்றேறக்குறைய 1865–1871 உட்பட்ட காலத்தில் பவுன் (**£**) மதிப்பு 15 ரூபாயிலிருந்து 10 ரூபாயாக குறைக் கப்பட்டது. (நாணயமுறை சம்பிரதாயப்படி பவுன் ஈவு (**ratio**) 1 ஷில்லிங் 4 பென்னிலிருந்து 2 ஷில்லிங்காக உயர்த்தப்பட்டது.)

அதை விளக்கிக்கூறில், இந்தியாவிலுள்ள விவசாயிகளும், வியாபாரிகளும், தாங்கள் இங்கிலாந் திற்கு விற்கும் சாமான்களுக்கு நாணயமாற்ற ஈவு ஏற்படுவதற்கு முன் 15 ரூபாய் அடைந்து வந்தவர்கள் பிறகு 10 ரூபாய் விகிதமே அடைந்துவந்தார்கள். சற்றேறக்குறைய 1927 அல்லது 1928-ம் வருஷத்தில் ஒரு ரூபாய்க்கு 0–1–4-இல் இருந்து 0–1–6-க்கு நாணய மாற்ற ஈவு ஏற்படுத்தியதின் காரணமாக இன்று, இந்தியாவிலுள்ள விவசாயிகள் கஷ்டமடைந்து வரு கிறார்கள். விழிப்புற்ற இக்காலத்தில்கூட நாணயமாற்ற ஈவு உயர்ந்ததைக் கண்டிப்பதற்கு ஏற் பட்ட கிளர்ச்சி ஊக்கமிழந்து விரைவில் மறைந்துவிட்டது. இக்காலத்திலேயே இப்படியிருக்கும் பொழுது, விஷயம் அவ்வளவு அறியாத அக்காலத்தில், அதிகக் கிளர்ச்சி இருந்திராது. பொரு ளாதார சம்பந்தமாகவும், நாணயமுறை சம்பந்தமாகவும், நாணயமாற்ற ஏற்பாடு சம்பந்தமாகவும் அக்காலத்தில் சர்க்கார் வைத்தது சட்டமாயிருந்தது ஜனங்களிடமிருந்து வசூலித்த பணங்கள் விஷயமாக, சர்க்கார் தங்களுக்கிஷ்டமான ஏற்பாடுகளையே செய்துக்கொண்டார்கள். விளைச்சலின் மதிப்பு அதிகரித்தால் வரி உயர்த்தப்படலாமென்று 11-வது பிரிவின் 3-வது உட்பிரிவில் தெரி விக்கப்பட்டிருப்பதிலிருந்து, குடியானவனுடைய நலத்தை அசட்டைசெய்து ஜமீன்தார்களுக்கு சகா யம் புரிய, சர்க்கார் முயன்று வந்தார்களென்பது விளங்குகிறது. மேலும், நிலத்தின் வளப்பம் அதிகரித்தால் வரியும் உயர்த்தப்படலாமென்று ஷரத்தில் கண்டிருப்பது நியாயமானதல்ல. ஒழுங் கானதுமல்ல. ஜமீன்தார், தனது செலவால் நிலத்தின் வளப்பத்தை அதிகரித்து, விளைச்சல் அதிக மாக உண்டாகும்படி குடியானவனுக்கு ஒத்தாசைசெய்தால், அப்பொழுது வரி உயர்த்தப்படலா மென்பது, இந்த ஷரத்தின் அர்த்தமல்ல. ஆனால் தெய்வாதீனமாக நிலத்தின் வளப்பமும், விளைச்சலும் அதிகரித்தால்கூட, அப்பொழுதும் ஜமீன்தார் வரி உயர்த்தலாம் என்ற அர்த்தத்தை யும் இந்த ஷரத்து குறிக்கிறது இது நியாயமானதல்ல. பேஷ்கஷைப்போல, வரியும் சாசுவதமாக முடிவு செய்யப்பட்டது.

அதிக விளைச்சலின் காரணமாகவாவது உயர்ந்த விலைவாசிகளின் காரணமாகவாவது உண்டாகும் லாபம், நிலத்தில் பாடுபடுகிற குடியானவனுக்கே சேரவேண்டுமேயொழிய ஜமீன்தாருக்குச் சேரக் கூடாது.

உட்பிரிவு 4.—அனாதிக் கரம்பு நிலங்களுக்கும் குடியானவன் அசட்டையினாலாவது தானாகவே விட்டுவிட்டதினாலாவது சாகுபடிசெய்யப்படாமல் காலியாயிருக்கும் நிலங்களுக்கும் ஜமீன்தார் தனக் கிஷ்டமான வரி விகிதங்களை ஏற்படுத்திக்கொள்ளலாம்.

11-வது பிரிவின் 4-வது உட்பிரிவின் ஷரத்துக்கள்.

வரிச்சட்டம் (**Rent Act**) சாசுவத செட்டில்மெண்ட் காலத்தில் நிரந்தரமான வரி விதிக்கப்பட்ட தரிசு நிலங்கள், சாகுபடியாகிற நிலங்கள், காலி நிலங்கள், அனுபோகத்திலுள்ள நிலங்கள், யாவையும் இந்த ஷரத்து விலக்குகிறது. ஷரத்து பின் வருமாறு :—

"ஆனால் தரிசு நிலங்களிலும், காலி நிலங்களிலும், எவருக்காவது, சட்டப்படியாவது சட்ட ரீதி யான வழக்கப்படியாவது விசேஷ உரிமைகளிருந்தால் அவை இந்த விதியால் பாதிக்கப்படமாட்டா."

இந்த ஷரத்தோடு இன்னும் இரண்டு ஷரத்துக்கள் சேர்க்கப்பட்டன அவையாவன ; முதலாவது
சாசுவத செட்டில்மெண்ட் ஏற்பட்ட நிலங்களுக்கும் வரி உயர்த்தப்படலாமென்பது. இரண்டாவது, சர்க்கார்
செலவில் சீர்திருத்தம் செய்யப்பட்டு அப்படி உண்டான செலவு ஜமீன்தாரால் கொடுக்கப்பட்டால், குடியான
வன் செலுத்தும் வரி உயர்த்தப்படலாமென்பது. இவை இரண்டில் முதல் ஷரத்துதான் வரி வசூல்
மசோதாவில் சேர்க்கப்பட்டது. ஆனால் சட்டத்தில் (**Act**) இரண்டாவது ஷரத்தும் சேர்த்துக்கொள்ளப்பட்
டது.

ஆகையால், அனாதிக் கரம்பு நிலங்களுக்கும் இதர காலி நிலங்களுக்கும் ஜமீன்தார் தனக்கிஷ்டமான
வரி விகிதங்களை ஏற்படுத்திக்கொள்ளலாமென்பது சாசுவத செட்டில்மெண்ட் காலத்தில் நிரந்தரமாக வரி
விதிக்கப்படாத அனாதிக் கரம்பு நிலங்களுக்கும் இதர காலி நிலங்களுக்குமே செல்லும். அனாதிக் கரம்பு

நிலங்களும் இதர காலி நிலங்களும் சட்டத்தாலும் வழக்கத்தாலும், தனியாக பாதுகாக்கப்பட்டதால் சாசுவத செட்டில்மெண்ட் காலத்தில் ஏற்படுத்தப்பட்ட வரியைவிட அதிகமான வரியை வசூலிப்பதற்கு 1802-ம் வருஷத்திய XXX ரெகுலேஷன்கீழ் ஜெமீன்தாருக்கு உரிமை கிடையாது. ஆனால் வரிச் சட்டத்தில் இது சம்பந்தமாக இரண்டு விலக்குகள் ஏற்படுத்தப்பட்டன. ஒன்று ஜமீன்தார் நிலத்தை அபிவிருத்தி செய்யும்பொழுது, இரண்டாவது, சர்க்காரால் அபிவிருத்தி செய்யப்படும்பொழுது. இவை சாசுவத செட்டில்மெண்ட் காலத்தில் ஏற்படுத்தப்பட்ட உரிமைகளை அபகரிக்கின்றன. ரெகுலேஷன்பிரகாரம் குடியானவனடைந்த ஸ்வதந்திரத்திற்கு இவை முற்றிலும் மாறானவை. சர்க்காருக்கு அல்லது சர்க்காரின் பிரதிநிதியாகிய ஜமீன்தாருக்கு ஏற்பட்ட வரியை, குடியானவன் செலுத்திவரும்வரை அவனுக்கு நிலத்தில் சுயேச்சை உரிமையுண்டு. ஜமீன்தார் நிலத்திற் பிரவேசித்து அபிவிருத்தி செய்யவேண்டுமென்று பாத்தியம் கொண்டாட முடியாது. நிலத்தை அபிவிருத்தி செய்யுமாறு குடியானவனை நிர்ப்பந்தப்படுத்தி அதன் மூலம் வரியை உயர்த்துவதற்கும் ஜமீன்தாருக்கு உரிமை கிடையாது. அதைப்போலவே சர்க்கார் செலவில் ஏற்பட்ட நில அபிவிருத்திக்கும், ஜமீன்தார் வரி உயர்வைக் கேட்பதற்கு உரிமையில்லை. சர்க்கார் அல்லது ஜமீன்தார் நிலத்தின் சம்பந்தமாக அபிவிருத்தி செய்திருந்தால், அது அவர்கள் கடமையே தவிர வேறு அல்ல. அக்கடமையைச் செய்வதற்கே, ஜமீன்தார் குடியானவர்களிடமிருந்து நில வரி வசூலிக்கிறார்.

(4) **உட்பிரிவிற்கு மற்றொரு அர்த்தம் பின் வருமாறு** :—முக்கியமாக, இரண்டாந்தர நிலச்சுவான்தார்கள் வசமுள்ள அனாதிக் கரம்பு நிலங்களுக்கும், இதர காலி நிலங்களுக்குமட்டும், 4-வது உட்பிரிவு செல்லவேணுமென்று உத்தேசிக்கப்பட்டதெனக்கருதலாம். ஏனெனில், முதல்த்தர நிலச்சுவான்தார்களுக்கும் செல்லும் என்பது, உட்பிரிவிலாவது ஷரத்துகளிலாவது குறிக்கப்படவில்லை. 4-வது உட்பிரிவு, முதல்த்தர நிலச்சுவான்தார்களுக்கும், அவர்கள் குடியானவர்களுக்கும், செல்லும் என்பதற்கு, யாதொரு அறிகுறியும், இல்லாமலிருக்கும்பொழுது, வரி உயர்வு சம்பந்தமாக ஏற்பட்ட எல்லா விதிகளும், சாசுவத நில அனுபோக உரிமைகளுக்கு, முற்றிலும் பொருந்தாமலிருக்கும்பொழுது, நாம் செய்யக்கூடிய நியாயமான அர்த்தம், மேற்படி உட்பிரிவும், ஷரத்துகளும், இரண்டாந்தர நிலச்சுவான்தார்களுக்கும் அவர்கள் குடியானவர்களுக்கும்தான் செல்லும் என்பதே. 3-வது உட்பிரிவின்கீழ் ஒப்பந்தங்கள் சம்பந்தமாகவும், சர்வே, பணவரி, முதலியவைகள் சம்பந்தமாகவும், உத்தேசிக்கப்பட்ட வரி உயர்வுகளுக்கும் இதே அர்த்தம் செல்லும் இவ்வாறு தாத்பர்யம் செய்வோமாகில் வரிச்சட்டத்தின் 11-வது பிரிவின்கீழ் அனுபோக உரிமையுள்ள குடியானவர்களுக்கு வரி உயர்வு விதிகள் செல்லவேண்டுமென்பது சர்க்காரின் கருத்தல்ல என்பது வெளியாகும். இதுபற்றியே தொன்றுதொட்டு குடியானவர்களுக்குள்ள நிரந்தர உரிமைகளைப் பாதிக்கத்தக்க விதி ஒன்றும், 1865-ம் வருஷத்திய VIII சட்டத்தில் இல்லை என்று போர்ப்ஸ் (**Forbes**) துரை தமது பிரசங்கத்தில் கூறினார். இதுவே சரியான சகஜமான அர்த்தம். இந்த அர்த்தத்தைக்கொண்டே சாசுவத அனுபோக உரிமைகளும், சாசுவத வரி விகிதங்களும் ஏற்படுத்தப்பட்டன. இந்த அர்த்தத்தையே, 1802-ம் வருஷத்திலிருந்து 1908-ம் வருஷம்வரை சர்க்காரும், ரெவினியூ போர்டும், அங்கீகரித்து ஸ்தாபித்து வந்தார்கள். ஆனால், இப்பொழுது சிலகாலமாக (1) முதல் (4) வரையுள்ள உட்பிரிவுகளைப்பற்றி சில கோர்ட்டுகள் தவறான அர்த்தத்தையும், தவறான வியாக்கியானங்களையும் செய்து, தவறான தீர்ப்புக் கூறினார்கள். இந்தத் தீர்ப்புகள் குடியானவனின் சாசுவத அனுபோக உரிமைக்குப் பங்கம்செய்து, வரிச்சட்டத்தின் 11-வது பிரிவில் (1) முதல் (4) வரையுள்ள உட்பிரிவுகளின் பிரகாரம் வரியை உயர்த்துவதற்கு ஜமீன்தாருக்குள்ள உரிமையை அங்கீகரித்தன.

இத்தகைய தவறான அபிப்பிராயம் பின்னால் ஏற்பட்ட தீர்ப்புகளாலும், சட்டங்களாலும், நிராகரிக்கப்பட்டன என்பதை, முன்னரே தெரிவித்துள்ளோம். எஸ்டேட் நிலச் சட்டத்தில், ஒப்பந்த சம்பந்தமான ஷரத்து பூராவும் நீக்கப்பட்டது. ஆனால், வரி உயர்வுகளையும் கிரமமற்ற வசூலிப்பையும் நிராகரிக்கும் 1802-ம் வருஷத்திய XXX பட்டா ரெகுலேஷன் விதிகள் எஸ்டேட் நிலச் சட்டத்தின் (அத்தியாயம் VII) 135, 136 பிரிவுகளில் அமைக்கப்பட்டிருக்கின்றன.

வரி உயர்வு சம்பந்தமாக பல உட்பிரிவுகளை சர்க்கார் புகுத்தியதின் காரணங்கள்.

வரியை உயர்த்துவது சம்பந்தமாக, பல விதிகளை சர்க்கார் புகுத்தியதின் அர்த்தம் என்ன? ரயத்துவாரிக் குடியானவனுக்கும், அவன் கீழ் உள்ளவனுக்கும், வரிவசூல் சம்பந்தமாக தக்க ஏற்பாடுகளைச் செய்ய வேண்டியது அக்காலத்தில் அவசியமாயிருந்தது. ஆதியிலிருந்தே சர்வே, செட்டில்மெண்டுக்குப் பிறகாவது, ஒவ்வொரு செட்டில்மெண்டுக்குப் பிறகாவது, அல்லது வரி மாற்றங்களை ஏற்படுத்தியபொழுதாவது, சர்க்கார் வரி விகிதங்களை அதிகரித்தே வந்திருக்கிறார்கள். 1865-ம் வருஷம் மிகவும் முக்கியமான வருஷமாயிருந்ததென்பதை கீழே கூறப்படும் விஷயங்களிலிருந்து அறியலாம் :—

(1) சராசரி, வரி, வருமானத்தின்மீது 1802-ம் வருஷத்திலும் 1803-ம் வருஷத்திலும் ஜமீன்களில் சாசுவத செட்டில்மெண்ட் ஏற்பட்ட பிறகு, ரயத்துவாரிப் பிரதேசங்களின் வரி ஏற்பாட்டை (**Settlement**) ப்பற்றி சென்னை அரசாங்கத்திற்கும், கோர்ட் ஆவ் டைரக்டர்ஸுக்கும் கடிதப் போக்குவரவு நடந்தது. ரயத்துவாரி நிலங்களில், குடியானவர்களோடு சாசுவத ஏற்பாடு செய்துக்கொள்ளவேண்டுமென்று, சர் தாமஸ் மன்ரோ சிபார்சு செய்தார். சாசுவத ஏற்பாட்டின் ஆதாரத்தின்மீதும், 30 வருஷத்திய தற்காலீக ஏற்பாட்டின் ஆதாரத்தின்மீதும், சென்னை சர்க்கார் அதைப்பற்றி விரிவாக ஆராய்ந்தார்கள். சர் தாமஸ் மன்ரோவும், மற்ற அதிகாரிகளும் கூறிய ஆலோசனையை கோர்ட் ஆவ் டைரக்டர்ஸ் தள்ளிவிட்டார்கள். 30 வருஷத்திய ரீசெட்டில்மெண்டை அமுலில் கொண்டுவர அவர்கள் தீர்மானித்தார்கள்.

(2) அதே சமயத்தில் சற்றேறக்குறைய 1860-ம் வருஷத்தில் இனாம் செட்டில்மெண்ட் சம்பந்தமான ஏற்பாடுகளும் தீர்மானிக்கப்பட்டன. இது சம்பந்தமாக இனாம் கமிஷனரின் காரியக்கிரமங்களும் (ந 81, 1859-ம்ளு அக்டோபர்மீ 24உ) இனாம் விதிகளும் (போர்டின் நிரந்தர உத்திரவு 4-வது அத்தியாயத்தின் அனுபந்தங்கள், தொகுதி II) குறிக்கப்படவேண்டும். 1859-ம் வருஷம் அக்டோபர் மாதம் 24-ம் தேதிவாக்கில் ரயத்துவாரி செட்டில்மெண்டும், இனாம் செட்டில்மெண்டும், ஏற்படுத்தப்பட்டு 1860-ம் வருஷத்தில் அமுலில் வந்தன. 1867-ம் வருஷத்திய சர்வே செட்டில்மெண்ட் அட்டவணையிலிருந்து இது தெரியப்படுகிறது.

(3) விலைவாசிகள்.—1860-ம் வருஷத்திய விலைவாசிகள் மிகவும் குறைவாகவே இருந்தன. ஆனால், 1802-ம் வருஷத்திய விலைவாசிகளைவிட அவை அனுகூலமாகவேயிருந்தன. 1896-ம் வருஷத்திய B P. நெ 20-தில் குறிக்கப்பட்டிருக்கும் கரிசை, தஞ்சாவூர் கரிசை ஆகும். அது கோதாவரி கரிசையைவிட இரண்டு மடங்கு இரட்டிப்பானது. கோதாவரிக் கரிசை 1,200 குஞ்சங்கள் அல்லது 4 அரசாங்க (**Imperial**) சேர்களுக்குச் சமானமானது ஒரு அரசாங்க சேர் 82 தோலா எடைக்குச் சரியானது. மதராஸ் படி அல்லது சேர் 120 தோலாக்களுக்கு சமமானது. சித்தூர், விசாகப்பட்டணம் கரிசை 60 தோலாக்கள் அல்லது மதராஸ் கரிசை பாதிக்கு சமமானது. ஆகையால்

ஒரு விசாகப்பட்டணம் கரிசை 450 குஞ்சங்கள் அல்லது 4 அரசாங்க சேர்களுக்கு சமமானது; அல்லது 4—6 சேர்களைக்கொண்ட 600 குஞ்சங்களுக்குச் சமமானது. அக்காலத்தில் ரயத்துவாரிக் குடியானவர்களுக்கு சர்க்கார் என்ன வரியை விதிக்கவேண்டுமென்று தீர்மானிப்பதில், அப்பொழுதிருந்த விலைவாசிகளும், இனிமேல் உயரக்கூடிய விலைகளும் முக்கிய ஆதாரமாகக் கொள்ளப்பட்டன. விலைவாசிகள் அதிகரிப்பதின் காரணமாக ரயத்துவாரிக் குடியானவர்களுக்கு வரியை உயர்த்தலாம் என்று சர்க்கார் அபிப்பிராயம் கொண்டனர். குடியானவன் ஜமீன்தாருக்குச் செலுத்தவேண்டிய வரி விகிதத்தில் மாறுதல் ஏற்படவேண்டுமென்று கேள்வி பிறந்தபொழுது சர்க்கார் இதற்கும் மேற்படி கொள்கையையே உபயோகப்படுத்த விரும்பினார்கள். ரயத்துவாரி நிலங்களில் செட்டில்மென்ட், ரீசெட்டில்மென்ட் என்கிற பெயரால் அவ்வப்போது வரியை உயர்த்துவதற்கு ஏற்பட்ட விதிகளை ஜமீன் குடியானவர்கள் செலுத்தும் வரி விகிதங்களுக்கும் உபயோகப்படுத்த விரும்பினார்கள். 1857-ம் வருஷத்திய சிப்பாய் கலகத்திற்குப் பிறகு நாட்டிலிருந்த பரிஸ்திதிகளைக் கருதியும், எதிர்காலத்தில் நெருக்கடியான நிலைமை ஏற்பட்டால் அப்பொழுது ஜமீன்தார்களின் சகாயத்தைப் பெறுவதற்கும், மேற்கூறியவாறு செய்தார்கள்.

(4) ரயத்துவாரி நிலங்களில், அதிகவரி வசூலிப்பதின் விஷயமாக, சர்க்கார் அக்காலத்தில் எதிர்பார்த்த ஆதார அம்சங்கள் என்ன. பல பெரிய ஏற்பாடுகளால், நாட்டை அபிவிருத்தி செய்து, ஜனங்களுக்கு திருப்தியை யுண்டாக்கி, ஆங்கில ஆட்சியை ஸ்திரப்படுத்தவேண்டுமென்று, டல்ஹௌஸி பிரபு தயாரித்த திட்டத்தின் பலனாக, விலைவாசிகள் உயருமென்று சர்க்கார் எதிர்பார்த்தனர். டல்ஹௌஸி பிரபு செய்த அபிவிருத்திகள் பின்வருமாறு :—

(1) பல ராஜபாட்டைகளை ஏற்படுத்துதல்.

(2) இருப்புப்பாதைகளை ஸ்தாபித்தல்.

(3) கோதாவரி, கிருஷ்ணா, தஞ்சாவூர், திருச்சினாப்பள்ளி "புராஜெக்ட்கள்" அல்லது அணைக்கட்டுகளை ஏற்படுத்தல்.

(4) பென்னி தபால் கார்டுகள் ஏற்பட்டதின் மூலமாகவும், நெப்போலியன் யுத்தங்களுக்குப் பிறகு ஏற்பட்ட நீராவிக்கப்பல்கள் மூலமாகவும், இந்தியாவுக்கும் ஐரோப்பாவுக்குமுள்ள வியாபார சம்பந்தம் அதிகரிக்குமென்று கருதப்பட்டது. அக்காலத்தில்த்தான் வாட்ஸ் என்பவர் நீராவி யந்திரத்தைக் கண்டுபிடித்தார்.

(5) 1861-ம் வருஷத்தில் ஏற்படுத்தப்பட்ட காகித நாணயச் சட்டத்தின் **(Paper Currency Act)** பலிதமாக, கங்குகரையில்லாத விபரீதமான அளவில் பணப்பெருக்கமும் சுருக்கமும் ஏற்படக்கூடியதாயிருந்தது.

(6) நதிகள் மூலமாகவும், கால்வாய்கள் மூலமாகவும், வியாபாரப்போக்குவரவு ஏற்படுத்தல்; முக்கியமாக, பக்கிங்ஹாம் கால்வாய் மூலமாக.

(7) 1865-ம் வருஷத்திய VII நீர்ப்பாசன வரிச்சட்டம்.

தானிய விலை, கிரமமாக உயர்வதற்கு, மேற்கூறியவை சாதகமாயிருந்தன. இந்த மனோபாவத்துடனும், எதிர்காலத்தில் அதிக வருமானம் வரும் என்ற நம்பிக்கையுடனும், வரி வசூல் சட்டத்தின் 11-வது பிரிவின் நான்கு உட்பிரிவுகள் ஏற்படுத்தப்பட்டன. ஆனால் அவை அனுபோக உரிமையில்லாத நிலங்களுக்கும், சர்க்கார் ரயத்துவாரி நிலங்களுக்குமே (மேலே தெரிவித்ததைப்போல்) செல்லவேண்டுமென்று உத்தேசிக்கப்பட்டன. மேற்கூறிய விஷயங்களுடன், யுத்த சமயத்தில் பணத்தையும், ஆட்களையும் கொடுத்து ஜமீன்தார்கள் சர்க்காருக்கு உதவிபுரிவார்கள் என்று மேலதிகாரிகள் முதலில் அபிப்பிராயப்பட்டார்கள்.

இத்துடன், கோர்ட் ஆவ் டைரக்டர்ஸின் பொருளாதார முறையையும், நாணய முறையையும், நாம் மறந்துவிடலாகாது. வெகு காலமாக, கிழக்கிந்தியா கம்பெனியார் வியாபார விருத்திகளை நடத்தி வந்திருந்தாலும், முதல் ஆங்கில ரூபாய் 1667-ம் வருஷத்தில் பம்பாயில் செய்யப்பட்டிருந்தாலும், "8" என்னும் குறிப்பிட்ட போர்டிகலஸ் நாணயங்கள் இந்தியாவில் பரவி பழக்கத்திலிருந்ததாலும், 1758-ம் வருஷத்தில்தான் பிரிடிஷ் ஆட்சி இந்நாட்டில் ஸ்திரமாக ஸ்தாபிக்கப்பட்டது. அதாவது, 1758-ம் வருஷத்திற்குமுன், 81 வருஷகாலமாக, தங்கள் ஆட்சியை ஸ்தாபிப்பதற்கு ஏற்பாடுகள் செய்துவந்திருக்கிறார்கள். பட்டா ரெகுலேஷனும், சாசுவத செட்டில்மென்ட் ரெகுலேஷனும் ஏற்பட்ட 1802-ம் வருஷத்தில் ஆங்கிலர்கள் தங்கள் நாட்டில் பொருளாதார முறையாவது, நாணயச் சட்டங்களையாவது, சாஸ்திரோக்தமாய், அவ்வளவாக விருத்திசெய்துகொள்ளவில்லை. வரி வசூலிப்பவர்களிடம் அல்லது ஜமீன்தாரிடம் அரசாங்கத்தார் தங்கள் தொகையைப் பெறும் முறை வெகு குழப்பமான முறையிலிருந்தது. வரி, தானியமாக, விளைச்சலின் ஒரு பகுதியாய் செலுத்தப்பட்டுவந்தது. இதுவே அனுஷ்டானத்தில் இருந்த பெரும்பான்மையான முறை. இந்தியாவின் பல மாகாணங்களை, மகம்மதிய அரசர்களிடமிருந்து ஆங்கிலர் கைப்பற்றியபொழுது அவர்கள் அனுசரித்துவந்த பொருளாதார முறையையும், நாணய முறையையும், பிரிடிஷார் பின்பற்றினார்கள்.

இந்த நிலைமையில் 1802-ம் வருஷத்திலிருந்து 1865-ம் வருஷம் வரை, என்ன நிகழ்ந்ததென்பதைப் பற்றி ஆராயவேண்டும். 1865-ம் வருஷத்தில் 1802-ம் வருஷத்திய XXX ரெகுலேஷன் ரத்து செய்யப்பட்டு அதனுடைய ஸ்தானத்தில் 1865-ம் வருஷத்திய VIII வரி வசூல் சட்டம் ஏற்படுத்தப்பட்டது. ஜமீன்தார்களை அல்லது நிலச்சுவான்தார்களைப் பொருத்தமட்டில், அவர்கள் சர்க்காருக்குச் செலுத்திவந்த பேஷ்கஷ் தொகையில் (நிலவரி வருமானம்) யாதொரு உயர்வும் ஏற்படவில்லை. ஆனால் "வாரம்" முறை அனுசரிக்கப்படுகிற ஜில்லாக்களில்த், தவிர மற்ற இடங்களில் சாசுவத செட்டில்மென்ட் காலத்தில் ஏற்படுத்தப்பட்ட வரி விகிதங்கள் மாறாமல் இருக்கவில்லையென்பது எங்கள் கமிட்டி முன்பு தெரிவிக்கப்பட்ட சாக்ஷியத்திலிருந்து தெளிவாக விளங்குகிறது.

சென்னை ராஜதானியிலுள்ள பல ஜமீன்களில் சாக்ஷியம் ஒரே மாதிரியாக இருக்கவில்லை. வட சர்க்கார் பிரதேசங்களிலுள்ள ஜமீன்களில் முக்கியமாக பித்தாபுரம் ஜமீனிலும் மற்ற ஜமீன்களிலும் "ஒன்துவாரிமுறை" என்ற முறை வெகுநாளாக இருந்துவந்ததென்பது ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறது. இந்த "ஒன்துவாரிமுறை" யின்கீழ் அனுபோக ஸ்திரமாவது வரி ஸ்திரமாவது கிடையாது. குடியானவன் ஒரு வருஷம் சாகுபடிசெய்த நிலங்களை, ஜமீன்தாருக்கு அதிக வரி கொடுக்க மற்றொருவன் சம்மதித்தால் நிலங்களை அவனுக்கு விட்டுவிடவேண்டும். சாசுவத செட்டில்மென்டு காலத்தில் நிரந்தரமாக முடிவு செய்யப்பட்டது, மேற்கூறிய முறையால் ஒரு க்ஷணத்தில் பாழானது. பேஷ்கஷோடு குடியானவன் செலுத்தும் வரியையும் நிரந்தரமாக முடிவு செய்யவேண்டுமென்பதற்கு, கிழக்கு இந்திய கம்பெனியார் எடுத்த பிரயாசையெல்லாம், இம்முறையால் ஒரு நொடியில் மாயமானது. குடியானவர்களுக்குப் பிரதிகூலமாக, தனது வருமானத்தை எப்படியாவது பெருக்கிக்கொள்ளவேண்டுமென்று ஜமீன்தார் செய்த இத்தகைய தீய உபாயமே அதற்குக் காரணம்.

மற்ற ஜமீன்களில் கொடுக்கப்பட்ட சாக்ஷியத்திலிருந்து 1802-ம் வருஷம் முதல் 1938-ம் வருஷம் வரை பல சமயங்களில் வரிகள் உயர்த்தப்பட்டன என்பது தெரியவருகிறது. தங்களுக்கு சாசுவத செட்டில்மெண்டு ரெகுலேஷனுல் கொடுக்கப்பட்ட உரிமைகள் யாதொரு புதிய சட்டத்தாலும் ரத்து செய்யபடமுடியாதென்றும், அவ்வாறு செய்தால், அது தங்கள் உரிமைகளை அபகரிப்பதுபோல் ஆகும் என்றும், அவ்வாறு செய்ய மாகாண சட்ட சபைக்கு அதிகாரமில்லை என்றும், ஜமீன்தார்களும் மற்ற நிலச் சுவான்தார்களும் வாதாடு கிருர்கள். 1802-ம் வருஷத்திய XXV சாசுவத செட்டில்மென்டால் ஜமீன்தார் அடைந்த உரிமைகளை ரத்துசெய்ய முடியாதெனபதை பொது விதியாக நாங்கள் ஒப்புக்கொள்கிரேம்.

அதே விதியை அனுசரித்து 1802-ம் வருஷத்திய XXX பட்டா ரெகுலேஷன் பிரகாரம் குடியானவர்கள் அடைந்த உரிமைகளை ஜமீன்தாராவது, சர்க்காராவது அல்லது இருவராவது அபகரிக்க முடியாதென்பதையும் நாம் ஒப்புக்கொள்ளவேண்டும். 1802-ம் வருஷத்தில் ஏற்படுத்தப்பட்ட சட்டங்களின் பிரகாரம், அதிக வரி வசூலிக்க ஜமீன்தாருக்கு உரிமையில்லை. அதாவது, வரி விகிதங்களை எந்த வகையிலாவது, எந்த முகாந் தரத்தைக்கொண்டாவது ஜமீன்தார் உயர்த்தக்கூடாது என்பதே. பணமாகவாவது, விளைச்சிலின்பாகமாக வாவது, செலுத்தவேண்டிய வரிவிகிதங்கள் சம்மந்தமாக ஜமீன்தாருக்கும் குடியானவனுக்கும் வழக்கு ஏற்பட்டால், சாசுவத செட்டில்மெண்டுக்கு முன் வருஷத்திலிருந்த வரி விகிதங்களின் பிரகாரம் முடிவு செய்யப்படவேண்டுமென்று, 1802-ம் வருஷத்திய XXX ரெகுலேஷனின் 9-வது விதி வெளிப்படையாக தெரிவிக்கிறது. ஏற்பட்ட விதி இப்படியிருக்கும்பொழுது, வரி விகிதங்களை உயர்த்துவதற்காக, வரி ஏற் பாட்டு முறையை ஜமீன்தார் மாற்றிஞல் அல்லது அப்படி மாற்றுமலே வரி விகிதங்களை உயர்த்திஞல் அது நியாயமற்றதாகும். அப்படிச் செய்வதற்கு தனக்கு உரிமை உண்டென்பதை ருஜூப்படுத்துவது ஜமீன் தாரின் கடமை. அப்படி வரி ஏற்பாட்டை மாற்றுவதற்காவது, வரிவிகிதங்களை உயர்த்துவதற்காவது, 1802-ம் வருஷம் முதல் 1865-ம் வருஷம் வரை உட்பட்ட காலத்தில் ஆதாரமிருந்ததாக சாக்ஷியத்திலிருந்து தெரியவில்லை. ஜமீன்தார்கள் புரியும் பல உபத்திரவங்களை நீக்கி குடியானவர்களுக்கு பாது காப்பு அளிக்க வேண்டுமென்று சிறந்த எண்ணுத்துடன் 1802-ம் வருஷம் ஜூலைமீ 13உயில் XXV, XXX, XXVIII, XXVII, XXIX ரெகுலேஷன்கள் ஏற்படுத்தப்பட்ட போதிலும், 1865-ம் வருஷம் வரை தங்கள் வருமா னத்தை அவ்வப்போது அதிகரிப்பதற்கு ஜமீன்தார்கள் கையாண்ட முறையாலும், சட்டத்தை தவருக மாற்றுவதற்கு, சர்க்கார் அவ்வருஷத்தில் எடுத்துக்கொண்ட நடவடிக்கைகளாலும், அதிக குழப்பம் உண் டானது. சர்க்கார் அமைத்த வாசகம், சாசுவத செட்டில்மென்டை புறக்கணித்து, சாகுபடி செய்யப்பட்ட நிலங்களுக்கும், தரிசு நிலங்களுக்கும், ஜமீன்தார் வரி விகிதங்களை உயர்த்தலாம் என்ற தவருன அபிப் பிராயத்திற்கு இடம் தருவதாயிருந்தது. 1865-ம் வருஷத்திய வரி வசூல் சட்டத்தின் 11-வது பிரிவில் (1) முதல் (4) வரையுள்ள உட்பிரிவிகளைப்பற்றிய முதற் குற்றச்சாட்டு என்னவென்றால், மசோதா சட்டமாக்கப் படும் சமயத்தில் ஜமீன்தார்களுடைய உரிமைகளுக்கு ஆதரவு காட்டியதுபோல குடியானவர்களின் உரிமை களில் சர்க்கார் அவ்வளவு அக்கரையெடுத்துக்கொள்ளவில்லையென்பதே. (1)-வது உட்பிரிவின்கீழ் ஏற்பட்ட வரிஉயர்வுகள், குடியானவர்களின் கீழ் இருப்பவர்களுக்கும், அனுபோக உரிமையில்லாத ஜமீன்தாரின் பண்ணை நிலக்குடியானவர்களுக்கும் செல்லவேண்டுமென்று, உத்தேசிக்கப்பட்டன. வரி வசூல் சட்டத்தின் (1)-வது பிரிவின் (1)-வது உட்பிரிவின்படி இத்தகைய ரயத்துகள், நிலச்சுவான்தார்கள் என்று தெரிவிக்கப் பட்டிருக்கிறது. சாசுவத செட்டில்மெண்ட் காலத்தில், வரி விகிதங்கள் நிரந்தரமாக முடிவு செய்யப்பட்ட நிலங்களைப்பொருத்தமட்டில், வரி உயர்வுகள், அவைகளுக்குச் செல்லா என்பது 5-வது பிரிவிலும், 11-வது பிரிவின் (4)-வது உட்பிரிவிலுள்ள ஷரத்திலும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. 5-வது பிரிவின்படி, 1-வது பிரிவில் குறிக்கப்பட்டிருக்கும் நிலச்சுவான்தார்கள், தங்கள் குடியானவர்கள் மீது, எந்தப் பெயரைக் கொண்டாவது நியாயமற்ற வரியை விதிக்கக்கூடாது. பட்டாவில் குறிக்கப்பட்டிருக்கும் வரிகளையும், இதர தொகைகளையும் தவிர, அதிகமான தொகைகளை குடியானவனிடமிருந்து ஜமீன்தார் வசூலித்தால், குடி யானவன் துரித வழக்கு மூலமாக, தான் செலுத்திய தொகைக்கு இரட்டிப்பான தொகையை செலவு தொகையோடு பெறலாம்.

நிர்ப்பந்தப்படுத்தி தொகை வசூலித்ததாக, ஜமீன்தாருக்கு அபராதம் அல்லது சிறைத்தண்டனையும் விதிக்கப்படலாம். 1802-ம் வருஷத்திய XXX ரெகுலேஷனின் விதி ஒன்றிலிருந்து, இது, அப்படியே எடுத்து அமைக்கப்பட்டிருக்கிறது. இதனேடு, 1802-ம் வருஷத்திய XXX ரெகுலேஷனிலிருந்து உள்ள படியே எடுத்து அமைக்கப்பட்ட 4, 6 பிரிவுகளும் அல்லது 1802-ம் வருஷத்திய XXX ரெகுலேஷனின் 7, 9 பிரிவுகள் அடங்கியிருக்கும். வரிச்சட்டத்தின் 10-வது உட்பிரிவும், சட்டத்தில் சேர்க்கப்பட்டிருந்தால், குடியானவனுக்கு இப்பொழுதுள்ள தொல்லையில் முக்கால் வாசி போயிருக்கும். ஆனல், தொடக்கத்தில் ஜமீன்தார்கள் ஸமர்ப்பித்த மனுக்களின் நிர்ப்பந்தத்தால் இரண்டாவது முறையாக நியமிக்கப்பட்ட செலக்ட் கமிட்டியார் தங்கள் மனே உசிதம்போல் நடக்க முடியவில்லை. சட்டங்களையும், ரெகுலேஷன்களையும் ஏற்படுத்துவதற்காக, 1863-ம்ஞு நவம்பர்மீ 19உயிலும், டிசம்பர்மீ 3உயிலும் கூடிய சபை, ஜமீன்தார் கள் அனுப்பிய மனுக்களை செலக்ட் கமிட்டிக்கு அனுப்பினது. சபையென்றல், கவர்னரின் அந்தரங்க சபை. சட்டசபை அக்காலத்தில் கிடையாது. செலக்ட் கமிட்டி கவர்னர் சபையால் நியமிக்கப்பட்டது. ஜமீன்தார் களுடைய உரிமைகளையும், பாத்தியதைகளையும், அதிகாரங்களையும், நிலைநாட்ட விரும்புகிறவர்களாலேயே மனுக்கள் அனுப்பப்பட்டனவென்பதை செலக்ட் கமிட்டியார் ஒப்புக்கொண்டார்கள். "வரிகளை உயர்த்துவதற் கும், குடியானவர்களைத் தங்களிஷ்டப்படி நிலத்தினின்று விலக்குவதற்கும், தங்களுக்குள்ள உரிமையை" ஜமீன்தார்கள் வற்புறுத்திஞர்கள் என்றும் அவர்கள் தெரிவித்தார்கள். மனுக்கள் அனுப்பினது முக்கால் வாசி வட சர்க்கார் ஜமீன்தார்கள். இந்த சந்தர்ப்பத்தில் தங்கள் நெ. 1773 காரியக் கிரமங்களை, ரெவினியு போர்டார் சமர்ப்பித்திராவிட்டால் (1864-ம்ஞு டிசம்பர்மீ 2உ) 1812-ம் வருஷத்தில் பார்லிமெண்டுமுன் சமர்ப்பிக்கப்பட்ட செலக்ட் கமிட்டி (கிழக்கிந்தியா கம்பெனியாரின் விஷயங்களைப்பற்றி விசாரிப்பதற்கு ஏற் படுத்தப்பட்டது) யின் 5-வது அறிக்கையின் சாராம்சங்கள் கமிட்டிமுன் தெரிவிக்கப்படாவிட்டால், குடியானவர் களுடைய உரிமைகளைப்பற்றியும், பாத்தியதைகளைப்பற்றியும், கமிட்டிக்கு மிகவும் தவருன அபிப்பிராயம் உண்டாயிருக்கும். 5-வது அறிக்கையின் சாராம்சங்களுக்கும், ரெவினியு போர்டு தயாரித்த ஸ்ரேஷ்டமான பத்திரத்திற்கும், தாங்கள் மிகவும் கடமைபட்டிருப்பதாக கமிட்டியார் தெரிவித்தார்கள். ஜமீன்தார்கள் வரி வசூலிப்பவர்கள் அல்லது வரி வசூல் உரிமையைப்பெற்றவர்களே தவிர, ஜமீன்களுக்கு உடையவர் களல்ல என்று அவ்வளவுதூரம் கூருவிடினும், ஜமீன்களில் வரியை ஸ்திரப்படுத்தி அதன் மூலம் குடியான வனுடைய அனுபோக உரிமையைப் பாதுகாப்பதற்கும், ஏற்பட்ட வரியைச் செலுத்தும்வரை குடியானவனை நிலத்திலிருந்து நீக்கச் செய்யாமலிருப்பதற்கும், 1802-ம் வருஷத்திய ரெகுலேஷன் ஏற்படுத்தப்பட்டது என்ற ரெவினியு போர்டின் அபிப்பிராயத்தை தாங்கள் ஏகோபித்து அங்கீகரிப்பதாக கமிட்டியார் தெரிவித் தார்கள். ஜமீன்தாருக்கு "உடைமை உரிமை" (**proprietary right**) அளிக்கப்பட்டதாக 1802-ம் வருஷத்திய ரெகுலேஷன்கள் தெரிவித்ததின் காரணமாக ஏற்பட்ட சந்தேகத்தையும் மயக்கத்தையும் நிவர்த்தி செய்து குடியானவர்களின் அனுபோக உரிமைகளை மேலும் ஸ்திரப்படுத்துவதற்கே 1822-ம் வருஷத்திய IV, V ரெகுலேஷன்கள் ஏற்படுத்தப்பட்டனவென்றும் அவர்கள் தெரிவித்தார்கள். குடி

யானவர்களுடைய அனுபோக உரிமைகளைப்பற்றியும், ஜமீன்தார்களுடைய உரிமைகளைப்பற்றியும், சரியான நியாயமான அபிப்பிராயத்தைக்கொண்டு தயாரிக்கப்பட்ட மசோதாவின் தத்துவத்தில், மாறுதலைச் செய்ய வேண்டிய அவசியம் இல்லையென்றும் அவர்கள் தெரிவித்தார்கள். மேலே தெரிவித்தபடி, எவ்வளவு அதிகமான வரி நியாயமாக விதிக்கப்படலாமோ, அவ்வளவு அதிகமானவரி சாசுவத செட்டில்மெண்ட் காலத்தில் ஏற்படுத்தப்பட்டது ; உண்டான வரியைச் செலுத்தி வரும் வரை, குடியானவனை நிலத்திலிருந்து நீக்க முடியாது. ஆனால் 1802-ம் வருஷத்திய ரெகுலேஷன்களின் அர்த்தத்தைப் பற்றியும், அவை களுக்குப் பிறகு ஏற்பட்ட சில மாறுதல்களின் நோக்கத்தைப்பற்றியும் உண்டான சந்தேகங்கள், 1822-ம் வருஷத்திய IV, V சட்டங்களால் பூராக நிவர்த்தி செய்யப்படவில்லையாகையால், வரி வசூல் சட்டத்தின் 11-வது பிரிவைப் பிரயோகித்து, வரி விகிதங்கள் சம்பந்தமாக வழக்குகள் ஏற்பட்டால், அவைகளை எவ்வாறு தீர்மானிக்கவேண்டும் என்ற முறையை விவரமாக குறிக்கவேண்டியதாயிற்று. ஜமீன்தார்கள், குடியான வர்கள் ஆகிய இரு சாராரின் உரிமைகளைப்பற்றியும், கடமைகளைப்பற்றியும், என்ன இக்கட்டுகள் ஏற்பட்டாலும், வழக்குகளைத் தீர்மானித்த நியாயாதிபதிகளால் என்ன மாறுதல்கள் ஏற்பட்டாலும், முதல் முதலாக, சர்க்காரும் மசோதாவைத்தயாரித்தவர்களும், ரயத்துவாரிக்குடியானவர்களை இரண்டாம் தர நிலச்சுவான் தார்களாக 1-வது பிரிவில் குறித்து, அவர்கள் கீழிருப்பவர்களிடம், வரி வசூலிப்பது சம்பந்தமாக ஒரு பொதுவான காரியக்கிரமத்தை ஏற்படுத்தினதே அறிய முடியாமலிருக்கிறது. சர்க்கார் ரயத்துவாரி முறை யும் அதன் காணியாட்சியும், ஜமீன்களும் அவைகளின் காணியாட்சியும், பன்முறை இதற்குமுன் தெரிவித்த வாறு, முற்றிலும் வெவ்வேறானவை. ஜமீன் குடியானவர்களின் காணியாட்சியில் வரி விகிதங்கள், ஜமீன்தார் சர்க்காருக்குச் செலுத்தும் பேஷ்கஷைப்போலவே, நிரந்தரமாக முடிவு செய்யப்பட்டன. எந்தக் காரணத்தைக் கொண்டும் அவைகளை மாற்றமுடியாது. ஆனால், ரயத்துவாரி நிலத்தில் குடியானவனுக்கும் அவன் கீழுள்ள வனுக்கும் அப்படிப்பட்டதொன்றுமில்லை. ரயத்துவாரிக்குடியானவர்களுக்கு நிலத்தில் ஏகபோக உரிமை உண்டு. நிலத்திற்கேற்பட்ட வரியை சர்க்காருக்குச் செலுத்தவேண்டியதுதான் அவர்கள் கடமை. ஜமீன் பிரதேசங்களிலும், குடியானவனுக்கு நிலத்தில் ஏகபோக உரிமை உண்டு. நிலவரியைச் சர்க்காருக்கு அல்லது சர்க்கார் ஏஜண்டாகிய ஜமீன்தாருக்குச் செலுத்தவேண்டியதே அங்கும் குடியானவனுடைய கடமை. மேற்கொண்டு, வேறே நிபந்தனை கிடையாது. ஆனால் இரண்டு காணியாட்சிக்கும் உள்ள, முக்கியமான வித்தி யாசம் என்னவென்றால், ஜமீனில், பட்டா ரெகுலேஷன் பிரகாரம், நிலவரி சாசுவதமாக முடிவு செய்யப் பட்டது. 1822-ம் வருஷத்திய IV, V ரெகுலேஷன்களாலும், வரி வசூல் சட்டத்தாலும், எஸ்டேட் நிலச் சட்டத்தாலும் அது பின்னும் நிலை நாட்டப்பட்டது. ஜமீன்தாரிப் பிரதேசங்களில், இத்தகைய “ ரயத்தி ” நிலங்களுக்கு வரியை உயர்த்த முடியாது. ஆனால், சர்க்கார் குடியானவன் (ரயத்துவாரிக்குடியானவன்) தனது நிலத்தை எந்தக் குத்தகைத் தொகைக்காவது பிறருக்கு விடுவதைத் தடுப்பதற்கு, சட்டவிதி ஒன்றும் இல்லை. வரி வசூல் சட்டத்தில் இருசாராரும், ஒரு விதிக்கீழும், ஒரு முறைக்கீழும், ஏன் கொண்டு வரப்பட்டார்களென்பது அறிய முடியவில்லை. இருசாராருடைய அந்தஸ்தும் வரலாறும் வெவ்வேறானவை யாயிருக்கின்றன. முற்றிலும் மாறான இருவகைக்குடியானவர்கள் 1865-ம் வருஷத்திய VIII சட்டத்தில் ஒரு வகுப்பைச் சேர்ந்த நிலச்சுவான்தார்களாகச் சேர்க்கப்பட்டிருப்பதின் உண்மையான காரணங்களை அறிய வேண்டுமென்றால், நாம் விஷயங்களை ஆழ்ந்து ஆராயவேண்டும்.

சர்க்காரைப் பொறுத்தமட்டில், தங்கள் குடியானவர்கள் நிலத்தைப் பிறருக்குவிட்டு அவர்களுக்கு இஷ்டமான குத்தகைத் தொகையைப் பெறுவதை, சர்க்கார் பொருட்படுத்தவில்லை. அதற்காக, தாங்கள் குடியானவர்களிடம் வசூலித்து வந்த வரியை சர்க்கார் அதிகரிப்பதுமில்லை. தங்கள் குடியானவர்கள் கூடியவரை லாபம் அடைவதை சர்க்கார் அனுமதித்தார்கள். ஏனெனில் தாங்களும் குடியானவர்கள் செலுத்தும் வரியை அவ்வப்போது அதிகரித்து வந்தார்கள். செட்டில்மெண்ட், ரீசெட்டில்மெண்ட், வரி மாற்றம், நிலங்களை புதிய வகுப்புகளாக அமைத்தல், ஆகிய இவைகளின் மூலம் சர்க்கார் வரியை உயர்த்தி வந்தார்கள். இதன் பலனாக முடிவில், 1931-வது வருஷத்தில் பொருளாதார முறிவு ஏற்பட, ரீசெட்டில் மெண்ட் வரி உயர்வுகளை ரத்து செய்து, வருஷம் ஒன்றுக்கு 75 லக்ஷம் ரூபாய் வரி வஜா அளிக்க சர்க்கார் தீர்மானித்தார்கள். சர்க்கார் குடியானவனுக்கும், அவன்கீழ் இருப்பவனுக்கும் உள்ள சம்பந்த ஸ்திதி இவ்வாறிருக்க, ஜமீந்தாருக்கும் அவர் குடியானவனுக்கும், 1802-ம் வருஷத்திலிருந்து 1865-வது வருஷம் வரை மனவேறுபாடும், பூசலும் ஏற்பட்டுவந்தன. வரிகளை உயர்த்தி, குடியானவனை தன்னிஷ்டப்படி நிலத்திலிருந்து விலக்குவதற்கு தனக்கு உரிமையிருக்கிறதென்று ஜமீன்தார் பாத்தியம் கொண்டாடினார். குடியானவன் அதை ஆட்சேபித்து எதிர்த்து வந்தான். இப்போரில், குடியானவர்களின் அனுபோக உரிமையின் நிரந்தரத்தன்மையையும் வரி விகிதங்களின் நிரந்தரத்தன்மையையும், ஆதியிலிருந்து மாறு பாடிலாது, ஒரே நிதானமாக சர்க்காரும் ரெவினியு போர்டாரும் ஆதரித்து வந்தார்கள். இதை முன்னரே யாம் தெரிவித்துள்ளோம்.

இந்த பரிஸ்திதியில், இருவகையான குடியானவர்களையும், வரி வசூல் சட்டத்தில் ஒரு படியாகச் சேர்த்து, ஜமீன் குடியானவர்களுடைய வரிகளை உயர்த்துவதற்கு இடம் தரும் பல ஷரத்துகளை சர்க்கார் ஏற்படுத்தி, குடியானவர்களுக்கு ஏன் கஷ்டத்தை விளைத்தார்கள் ? சர்க்கார் குடியானவர்களுக்கும் அவர்கள் கீழ் உள்ளவர்களுக்கும் நன்மை செய்யவேண்டுமென்பதை முன்னிட்டே இவை ஏற்படுத்தப்பட்டனவே தவிர ஜமீன்தார்களுடைய நலத்தைக் கருதியல்ல என்பதில் சந்தேகமில்லை. ஆனால், இந்த நோக்கத்தை யும், வித்தியாசத்தையும், கோர்ட்டுகள் எல்லா சமயங்களிலும் கவனிக்கவில்லை. மசோதா ஆரம்ப நிலையி லிருந்தபொழுது, வரிகளை உயர்த்துவதற்கும், குடியானவனை நிலத்திலிருந்து தள்ளுவதற்கும், தங்களுக்கு உரிமையிருக்கிறதென்று வற்புறுத்தி, ஜமீன்தார் பலமனுக்களை அனுப்பினார்கள். தங்கள் மனுக்கள் மூல மாக 1863-ம் வருஷத்தில் கமிட்டி முன்பு ஜமீன்தார்கள் பிரஸ்தாபித்துக்கொண்ட மற்ற பாத்தியதைகள் என்ன என்பதை தொடர்ந்து விசாரிப்போம். சர்க்கார் பிரதேசங்களில் உள்ள வழக்கத்தைப் போலவே, வரி பாக்கிக்கு குடியானவனுடைய உடைமையும் உத்தரவாதமாக வேண்டுமென்று, தாங்கள் அனுப்பிய 6-வது மனுவில் ஜமீன்தார்கள் தெரிவித்துக்கொண்டார்கள். ஆனால், கமிட்டியார் அவ்வேண்டுகோளைத் தள்ளிவிட்டார்கள். குடியானவர்களுக்குத் தாங்கள் கொடுத்த கடன்களையும், முன் தொகைகளையும் துரித முறை **(summary process)** மூலமாக, வசூலிப்பதற்கு, தங்களுக்கு அதிகாரம் அளிக்கவேண்டுமென்பது, ஜமீன்தார்களின் அடுத்த வேண்டுகோள். இதையும் கமிட்டியார் தள்ளிவிட்டார்கள்.

கமிட்டி முன்பு ஜமீன்தார்கள், இன்னும் பல வேண்டுகோள்களைச் செய்து கொண்டார்கள். அவையாவன :—

செலக்ட் கமிட்டி முன்பும், சர்க்கார் முன்பும் ஜமீன்தார்கள் செய்து கொண்ட வேண்டுகோள்கள்.

(1) பட்டாக்களில் விவரமான பாரங்கள் குறிக்கப்படவேண்டும்.

(2) பட்டா கொடுப்பது என்றால் என்ன என்பதை மசோதா விளக்கவேண்டும்.

(3) வரிகள் விவரிக்கப்படவேண்டும்.

(4) பட்டாக்களுக்கும், ரசீதுகளுக்கும் ஸ்டாம்பு இருக்கவேண்டிய அவசியத்தை விதிக்கலாகாது.

(5) தாசில்தார் மூலமாக ஜப்தி நோட்டீஸ்களை கலெக்டர்களுக்கு அனுப்புவதற்கு தங்களுக்கு அதிகாரம் வேண்டும்.

(6) ஜப்தி செய்யப்பட்ட பொருள் பலவந்தமாக அகற்றிச் செல்லப்பட்டால், அச்செய்கை தண்டிக்கப்பட வேண்டும்.

(7) வரி சம்பந்தமான வழக்குகளை கோர்ட்டுகள் முதலில் விசாரிக்கவேண்டும்.

(8) பட்டா கொடுத்த ஒரு மாதத்திற்குள், பட்டாக்களை குடியானவர்கள் ஏற்றுக்கொள்ளவேண்டுமென்று கட்டாயப்படுத்த தங்களுக்கு அதிகாரம் கொடுக்கவேண்டும். மூன்று மாதகாலம் பொறுத்துப் பார்த்து, அதன் பிறகுதான், பட்டா கொடுக்கவேண்டுமென்று, ஜமீன்தார் மீது, குடியானவன் வழக்குத்தொடரலாம்.

கமிட்டி முன்பு, ஜமீன்தார்கள் வற்புறுத்திய முக்கிய வேண்டுகோள்கள் இவையே. அவைகளிற் சில ஏற்றுக்கொள்ளப்பட்டன. சில நிராகரிக்கப்பட்டன. இறுதியில் தெரிவிக்கப்பட்ட வேண்டுகோள் அளிக்கப்பட்டது. மேலே தெரிவிக்கப்பட்ட வேண்டுகோள்களிலிருந்து ஜமீன்தார்கள் தங்கள் செல்வாக்கை உபயோகித்து, சர்க்கார் முன்பும், கமிட்டி முன்பும், தங்கள் லட்சியங்களை எவ்வளவு அழுத்தமாகத் தெரிவித்திருப்பார்கள் என்பது விளங்கும். வரி விகிதங்களைப்பற்றியும், அனுபோக உரிமைகளின் நிரந்தரத்தன்மையைப்பற்றியும், செலக்ட் கமிட்டியார் செய்தமுடிவான தீர்மானத்தைப்பற்றி, முன்னரே விவரமாக ஆராய்ந்துள்ளோம். ஜமீன்தார்களுடைய செல்வாக்கும், சிபார்சுகளும், அதிதீவிரமாக இருந்தபோதிலும், கமிட்டியார் அதற்கு முற்றிலும் உட்படவில்லை. கமிட்டி நேர் வழியிலிருந்து பிறழாமல், சாசுவத செட்டில்மெண்ட் காலத்தில் உயர்வான வரி விகிதங்கள் ஏற்படுத்தப்பட்டனவென்றும், ஏற்பட்ட வரியை குடியானவன் செலுத்தும் வரை, அவனை நிலத்திலிருந்து விலக்கமுடியாதென்றும் கூறி, குடியானவனுடைய உரிமையைப் பாதுகாத்ததற்குக் காரணமாயிருந்தவை ரெவினியு போர்டும், V அறிக்கையுமே. **(Fifth Report.)** மசோதா, செலக்ட் கமிட்டி கையிலிருந்தவரை, குடியானவர்களுடைய உரிமைகள் பாதுகாக்கப்படுவதற்கு போதிய ஏற்பாடுகளிருந்தன. மசோதா, சட்டம் வரையும் இலாகாவிற்குச் சென்ற பொழுது, ஜமீன்தார்கள் தங்கள் இலட்சியங்களை இன்னும் தீவிரமாகத் தெரிவித்திருப்பார்கள். சர்க்கார் செய்த அபிவிருத்திகளுக்கு, ஜமீன்தார் வரிகளை உயர்த்தலாமென்று வரிச் சட்டத்தின் 11-வது பிரிவின் 4-வது உட்பிரிவில் தெரிவித்திருப்பதற்கும், 1, 2, 3 . உட்பிரிவுகள் சேர்க்கப்பட்டிருப்பதற்கும், இதுவே காரணமாயிருந்திருக்கவேண்டும். வரி வசூல் மசோதாவின் 10-வது உட்பிரிவினுள்ள முதல் ஷரத்தில், ஜமீன்தார் செலவால் ஏற்படும் அபிவிருத்திகளுக்கே வரிகள் உயர்த்தப்படலாம் என்று கண்டிருக்கிறது. ஆனால் சட்டத்தில் **(Act)** சர்க்காரால் செய்யப்பட்ட அபிவிருத்திகளுக்கும் வரி உயர்வு அனுமதிக்கப்பட்டிருக்கிறது. ஜமீன்தார்கள் தங்கள் செல்வாக்கை உபயோகித்து சர்க்காரை நிர்ப்பந்தித்திராவிட்டால், சர்க்கார் இதற்கு சம்மதித்திரார். ஜமீன்தார்களையும், எஸ்டேட் நிலச்சுவான்தார்களையும், ரயத்துவாரிக் குடியானவர்களையும் "நிலச்சுவான்தார்கள்" என்ற ஒரு விளக்கத்தின் கீழ் ஒருங்குசேர்த்துக்கொண்டு வந்ததும், மசோதாவின் 10-வது உட்பிரிவை சட்டத்தில் சேர்க்காததும், 1802-ம் வருஷத்திய பட்டா ரெகுலேஷனின் 7, 9, உட்பிரிவுகள் அடங்கிய மசோதாவின் 10-வது உட்பிரிவுக்குப் பதிலாக 11-வது பிரிவின் (1) முதல் (4) வரையுள்ள உட் பிரிவை ஏற்படுத்தியதுமே, 1865-ம் வருஷத்திய VIII வரி வசூல் சட்டம் ஏற்பட்ட பிறகு, உண்டான கஷ்டத்திற்கும், குழப்பத்திற்கும் காரணம். ஆயினும், கூர்ந்து பரிசீலனை செய்வோமாகில், தொன்றுதொட்டு, குடியானவன் அனுபவித்து வரும் உரிமைகளை ரத்து செய்யும் விதி சட்டத்திலொன்றுமில்லை. எனினும், அனுபோக உரிமையுள்ள குடியானவர்கள், அனுபோக உரிமையில்லாத குடியானவர்கள், என்ற வித்தியாசத்தை நீக்கி, இரண்டாந்தர நிலச்சுவான்தார்கள், அனுபோக உரிமையில்லாத குடியானவர்கள், ஆகிய இவர்கள் நலத்தையே முக்கியமாகக் கருதி, சட்டத்தில் செய்யப்பட்ட விதிகள் இந்த ராஜதானிக்கு புதிதிதாக வந்தவர்களும், இங்குள்ள காணியாட்சி முறைகளை அறியாதவர்களுமான, நீதிபதிகள் மனத்தில் அதிக குழப்பத்தை உண்டு பண்ணிவிட்டன. தங்கள் நாட்டு சட்ட முறைகளையும், பழக்க வழக்கங்களையும் தங்கள் மனத்திலிருந்து அகற்றி இங்குள்ள விஷயங்களை சாவதானமாக நிதானிப்பது அந்த நீதிபதிகளுக்கு முடியாதகாரியமே. ஆங்கிலக்காணியாட்சி முறையின் விதிகளை, சென்னை ராஜதானியிலுள்ள காணியாட்சி முறைகளுக்கும் பொருத்தமாக பிரயோகிக்கலாம் என்று அவர்கள் நினைத்தார்கள். ஆங்கில நிலப்பிரபுவின் உரிமைகளே இந்திய நிலச்சுவான்தாருக்கும் உண்டென்றும், இந்தியக் குடியானவன் வருஷாந்திரக் குடியானவன் என்றும், வருஷ முடிவில் தக்க நோட்டீஸ் மூலம், அவன் நிலத்தினின்று விலக்கப்படலாமென்றும், ஜில்லா நீதிபதி கொண்ட தவறான அபிப்பிராயத்தையே இவர்களும் கொள்வாராயினர். பின்னால் ஏற்பட்ட தீர்ப்புகளாலும், சட்டங்களாலும் மாற்றப்படும் வரை, இத்தவறான வியாக்கியானம் பரவி வந்தது. இது சம்பந்தமான வழக்குச் சட்டம், "வழக்குச் சட்டம்" (அத்தியாயம் X) என்ற தலைப்பின் கீழ் தனி அத்தியாயத்தில் ஆராயப்பட்டிருக்கிறது. ஜமீன்தாரின் சட்ட ரீதியான அந்தஸ்தைப் பொருத்தமட்டில், எஸ்டேட் நிலச்சட்டத்தின் 4-வது பிரிவினுள்ள ஷரத்துகளின் காரணமாக 1908-ம் வருஷத்தில் எல்லா விவாதமும் வித்தியாச அபிப்பிராயமும் ஒழிந்தன. ஜமீன்தார் வரி வசூல் செய்பவர் என்று 4-வது பிரிவில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. மேற்படி பிரிவுக்கு பிரிவீ கவுன்சிலும் இந்த வியாக்கியானத்தையே செய்திருக்கிறது. **(I.L.R. 45 Madras, 886.)**

நில அனுபோகமும், வரி விகிதமும் சாசுவத செட்டில்மெண்ட் காலத்தில் நிரந்தரமாக முடிவு செய்யப்பட்டதென்றும், அப்படி சாசுவதமாக முடிவு செய்யப்பட்ட வரியை அக்காலத்தில் சாகுபடி செய்யப்பட்ட நிலங்களுக்காவது, அதன் பிறகு (1802-ம் வருஷம்) சாகுபடி செய்யப்பட்ட தரிசு நிலங்களுக்காவது, ஜமீன்தார் உயர்த்த முடியாதென்றும், எஸ்டேட் நில மசோதாவை பிரரேபித்த கௌரமிக்க எப். ஜி. போர்ப்ஸ் **(Forbes)** துரை தமது பிரசித்தி வாய்ந்த பிரசங்கத்தில் தெரிவித்தார். தனது பண்ணை நிலத்திற்கும், அனுதிக்கரம்பு நிலத்திற்குமே ஜமீன்தார் வரியை உயர்த்தலாம் என்பதையும் அவர் தெளிவாகக் கூறினார். குடியானவன், ஜமீன்தாருக்குச் செலுத்திவந்த தொகை கிஸ்தித் தொகையே தவிர, வாடகைத் தொகையல்ல என்பதையும் அவர் ஸ்பஷ்டப்படுத்தினார்; அதாவது, சர்க்காருக்குச் சேரவேண்டிய வரியின் ஒரு பாகம் என்று பொருள்படும். ஜமீன்தாருக்கும் குடியானவனுக்குமுள்ள சம்பந்தத்தை, சந்தேகமின்றி விளக்குவதற்கு மசோதாவில் "ரெண்ட்" (வாடகை வரி) என்ற வார்த்தைக்குப் பதிலாக, "கிஸ்தி" என்ற வார்த்தையை உபயோகிக்க விரும்பினார். ஆனால், சட்டம் முடிவாக ஏற்படும் சமயத்தில் ஏதோ ஒரு மாயம் உண்டானதாகத் தெரிகிறது. மசோதா சட்டமான சமயத்தில் "ரெண்ட்" என்ற வார்த்தைக்குப் பதிலாக, "கிஸ்தி" என்ற வார்த்தை சட்டத்தில் காணப்படவில்லை. விலைவாசி அதிகரிப்பு, வண்டல் சேருதல், வரி மாற்றம் முதலியவைகளுக்கு வரியை உயர்த்த சட்டத்தின் 30-வது பிரிவில் சில புதிய ஷரத்துகள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. இவ்வாறாக, வியாக்கியானம் செய்வதில் ஒருவரை ஒருவர் மிஞ்சும் வக்கீல்கள், நீதிபதிகள் ஆகிய இவர்களின் பச்சாதாபத்திற்கும், பரிவுக்கும், குடியானவன் இலக்கானான். நீதிபதிகளையாவது, வக்கீல்களையாவது, நாங்கள் குறைகூற விரும்பவில்லை. சட்டங்களின் பிரிவுகளை ஆராய்வது, அவைகளை வியாக்கியானம் செய்வது ஏதோவொரு, சரியான, தவறான, அல்லது

ஒருவாறான முடிவிற்கு வருவது, இவையே அவர்களின் தொழில். சட்டங்களிலுள்ள விதிகளை மீறிப் போவதற்கு அவர்களுக்கு அதிகாரமில்லை. இம்மாதிரியாக, இந்தியக் குடியானவன் கோர்ட்டுகளின் பலி ஆடு ஆக இருக்கிறான். அக்காலத்திலிருந்த நியாய முறையைப்பற்றி, தாங்கள் கொண்டிருந்த அபிப்பிராயங்களை மாற்றி, கார்ன்வாலிஸ் பிரபுவும், ஸர் தாமஸ் ஷோரும், பிறகு ஸர் தாமஸ் மன்றோவும், நடை முறையையும், செலவையும் சுருக்கியிருந்தால், குடியானவன் பாதுகாப்புக்குச் செய்யப்பட்ட ஏற்பாட்டிற்கு அவ்வளவு தடையிருந்திராது. வரி ஸ்திரத்தைப்பற்றியும், அனுபோக ஸ்திரத்தைப்பற்றியும், இது வரை நாம் ஆராய்ந்த விஷயங்களை வெகு திறமையாக விளக்கும் கௌரமிக்க போர்ப்ஸ் துரை அவர்களின் பிரசங்க சாராம்சம் பின்வருமாறு :—

"இச்சட்டம், அனுசரிக்கவேண்டிய காரியக் கிரமத்தை விளக்கும் சட்டமாகும். அனுபோக உரிமையுள்ள குடியானவர்கள் என்றும், அனுபோக உரிமையில்லாத குடியானவர்கள் என்றும், குடியானவர்களை இருவகையாகப் பிரிப்பதாவது, அவர்களின் உரிமைகளை வரையறை செய்வதாவது, இச்சட்டத்தை தயாரித்தவர்களின் கருத்து அல்ல என்பதிற் சந்தேகமில்லை. இச்சட்டத்தில் குறிக்கப்பட்ட பலவகை நிலச்சுவான்தார்கள், தங்கள் குடியானவர்களிடமிருந்து நியாயமாக வரவேண்டிய தொகையை வசூலிக்க வசதி தருவதற்கு இச்சட்டம் ஏற்பட்டுள்ளது. மசோதாவில் தெரிவிக்கப்பட்ட இருவகை நிலச்சுவான்தார்கள் சட்டத்திலும் குறிக்கப்பட்டிருக்கிறார்கள். 1865-ம் வருஷம் வரை குடியானவர்களுக்குச் சில உரிமைகளிருந்தால் அவைகளை இச்சட்டம் பாதிக்காது இவ்விஷயத்தைப் பற்றி அதிகமாகக் கூறவேண்டிய அவசியமில்லை. சில சம்பிரதாயங்களின்மேல் ஆதாரப்பட்டிருந்த பழைய சத்தர் அடலத் கோர்ட் ஒழிந்த கொஞ்ச காலத்திற்குப் பிறகு 1865-ம் வருஷத்திய VIII-வது சட்டம் அமுலில் வந்தது. இச்சட்டத்தில் கண்டுள்ள சில ஆங்கிலச் சட்ட பதங்கள், இந்நாட்டின் சம்பிரதாயங்களுக்கும், சட்ட முறைக்கும் சம்மதமாக இருக்குமென்று புதிதாக ஸ்தாபிக்கப்பட்ட ஹைகோர்ட் நீதிபதிகள் தவறாக எண்ணினார்கள். ஒவ்வொரு வருஷத்திலுமுள்ள, சாகுபடி விஸ்தீரணத்தையும், சாகுபடி செய்யப்பட்ட தானியங்களையும், தெரிவிக்கும் பட்டாவானது வருஷாந்திர குத்தகைப்பத்திரம் என்று கருதப்பட்டது. ஆனால் அது குத்தகைப் பத்திரமல்ல. இப்படியாக இவ்விஷயம் 1871-ம் வருஷத்தில், சொக்கலிங்கம் பிள்ளை வழக்கில் முடிந்தது வருஷாந்திர பட்டாக்களை பெற்றுக்கொள்வதிலிருந்து, பட்டாதார். வருஷாந்திரக் குடியானவனே தவிர வேறல்ல என்பது ரூஜிக்கப்படும் என்று, அவ்வழக்கில் ஹைகோர்ட் தீர்ப்புக் கூறியது. குடியானவனுடைய மாமூலான அந்தஸ்தைப்பற்றி, கொஞ்சம் சாட்சியம் எடுத்து ஆராய்ந்திருந்தால் குடியானவன் உரிமை ரூஜிக்கப்பட்டிருக்கும். இதிற்சந்தேகமில்லை. ஆனால் மேற்படி வழக்கின் சட்ட பலிதம் பலராலும் தவறாக அறியப்பட்டு வந்தது. இவ்வாறு விளைந்த பலன்களுக்கே, சட்டப் பரிகாரம் தேடவேண்டும். இத்தவறான அபிப்பிராயம் அநேக விஷயங்களை தீவிரமாக பாதிக்க ஆரம்பித்தது ஜமீன்தார்கள் தங்களிஷ்டப்படி நிலத்தை பிறருக்கு குத்தகைக்கு விடலாம் என்ற ஒரே மாதிரியான ஷரத்தைக்கொண்ட பட்டாக்களை குடியானவர்களிடம் பெறுவதற்கு, ஜமீன்தார்கள் சலியா முயற்சி எடுத்துவந்தார்கள். இத்தகைய பட்டாக்கள், பெரும்பான்மையாய் அச்சடிக்கப்பட்டு, வட சர்க்கார் பிரதேசங்களில் ஆயிரக்கணக்காக வினியோகிக்கப்பட்டன. மூதாதயர்கள் காலத்திலிருந்து அனுபவித்து வந்த நிலங்களிலிருந்து விலக்கப்படுவார்களோ என்ற கொடிய பயத்தால், குடியானவர்கள் ஜமீன்தார்கள் கேட்டதைக் கொடுத்துவந்தார்கள். குடியானவர்களை ஜமீன்தார்கள் நிலத்திலிருந்து வலுவந்தமாக அகற்றுவது அபூர்வமாயிருந்தது. நிலத்திலிருந்து, தான் விலக்கப்படாத வரை, குடியானவன் எதற்கும் கையொப்பமிடுவான். இருதிறத்தாருடைய நிலைமையை யோசிக்கையில் இத்தகைய "ஒப்பந்தம்" (contract) சட்டசம்மதமானதல்ல ; செல்லவும் செல்லாது.

"போட்டி முறையான வரியைச் செலுத்துவதும், ஒப்பந்த சம்பந்தமும், அனுபோக உரிமையுள்ள குடியானவனுடைய அந்தஸ்துக்கு மாறானவை. ஆனால், இத்தகைய ஒப்பந்தம் செல்லக்கூடிய சில வகுப்பினவர்கள் 1865-ம் வருஷத்திய VIII-வது சட்டத்தில் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள். அதாவது, தற்போதிய மசோதாவில், "டெனன்ட்ஸ்" (குடியானவர்கள்) என்று குறிக்கப்பட்டவர்கள் குடியானவன் கீழிருப்பவனும், ஜமீன்தாரின் பண்ணை நிலங்களிலுள்ள குடியானவனும். இவர்கள் தான் அனுபோக உரிமையில்லாத குடியானவர்கள் என்று பொருத்தமாக அழைக்கப்படலாம் என்பதைப்பற்றி அதிக விவாதமில்லை. தரிசு நிலங்களைப் பண்படுத்தி, சாகுபடி செய்வதற்கு குடியானவர்கள் ஜமீன்தாரோடு ஒப்பந்தம் செய்துகொள்ளலாம். ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு, அவர்களுக்கு அனுகூலமான குறைந்த வரியைப் பெறுவதற்கு ஜமீன்தார் சம்மதித்துக்கொள்ளலாம். ஆனால் இத்தகைய ஒப்பந்தம் குடியானவன் அனுபோக உரிமை அடைவதைத் தடுக்காது ; ஜமீன்தார், பிறகு போட்டி முறையான வரியை ஏற்படுத்துவதற்கும் அது சாதகமாயிராது. ஜமீன்தார் அப்படிச் செய்தால் நியாயமாயிராது. 1898-ம் வருஷத்திய மசோதா சம்பந்தமாக, தாங்கள் அனுப்பிய மகஜரில், ஜமீன்தார்கள் சங்கம், இந்த வித்தியாசத்தை ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். அவர்கள் தெரிவித்ததாவது : "ஜமீன்தாரி நிலங்களை இரண்டு பிரிவுகளாகச் செய்தால் (அதாவது பட்டா நிலங்கள் என்றும், பட்டா இல்லாத நிலங்கள் என்றும்) சங்கடம் குறைந்துவிடும். 1865-ம் வருஷத்திய VIII-வது வரி வசூல் சட்டத்தின் 12-வது பிரிவு செல்லக்கூடிய நிலங்களை, பட்டா நிலங்களாகக் கருதலாம். இதர வகையான நிலங்கள் பட்டா இல்லாத நிலங்களாகக் கருதப்படலாம். அவையாவன : தரிசு நிலங்கள், பண்ணை நிலங்கள், அல்லது காஸ் நிலங்கள், அல்லது இனாம் நிலங்கள் முதலியன. இந்த ராஜதானி முழுவதும் பட்டா நிலங்கள், அனுபோக உரிமையுள்ள நிலங்களாக இருந்துவருகின்றன. அனுபோக உரிமை அங்கீகரிக்கப்படாத பிரதேசங்களிலுள்ள வித்தியாசமென்னவென்றால் : நிலங்களை விற்பனை முதலியவை மூலம் பிறருக்கு மாற்றக்கூடாது. இதுவே வித்தியாசம்.

"ஜமீனில் சாகுபடி செய்யக்கூடிய பொது நிலங்களில் குடியானவன் பிரவேசித்து சாகுபடி செய்தால், அதன் காரணமாகவே அவனுக்கு அனுபோக உரிமை சேருகிறது என்பது இதிலிருந்து நன்கு விளங்குகிறது. ஜமீன்தாருடைய சொந்த நிலங்கள், அல்லது பண்ணை நிலங்கள், அல்லாத மற்ற எல்லா நிலங்களும், சாகுபடி செய்யக்கூடிய பொது நிலங்களாகும் என்பதும் தெரியவருகிறது. நில உரிமையையும், நில வரியையும் கொண்ட சிறு இனாம்களை, இனாம் நிலங்கள் என்று நான் கருதுகிறேன். நிலச்சுவான்தார்களின் சங்கம், தரிசு நிலங்களையும் அவைகளோடு சேர்க்கிறது. நான் அதை ஒப்புக்கொள்ளவில்லை. அவ்விஷயத்தைப்பற்றி நான் இப்பொழுது பேச விரும்புகின்றேன். தரிசு நிலங்களில், தங்களுக்கு பிரத்தியேக உரிமைகள் இருக்கின்றனவென்று ஜமீன்தார்கள் தீவிரமாக வாதாடுகிறார்கள். அதாவது, அந்த நிலங்களுக்கு, குடியானவர்கள் மீது தாங்கள் தீவிரமாக வாதாடுகிறார்கள். அதாவது, அந்த நிலங்களுக்கு, குடியானவர்கள் மீது தங்களுக்கு இஷ்டமான தொகையை ஏற்படுத்தலாம் என்பதே. அதை இன்னும் விளக்கவோ

அத்தகைய நிலங்களுக்கு வரிக்குப் பதிலாக, வாடகை விதிப்பதற்கு, தங்களுக்கு உரிமை உண்டென்பது ஜமீன்தார்களின் வாதம். இத்தகைய விதர்க்கத்திற்கு சட்ட ஆதாரம் ஒன்றும் இல்லை. சட்டப்படி, ஜமீன்தார், பொது வரியை தம் சார்பாக பெற்றுக்கொண்டவரே தவிர வேறல்ல. ஆதிகாலத்திலிருந்து 1865-ம் வருஷம் வரையுள்ள, ஆட்சி அனுபோகமும், அரசியல் ஞானமும் வாய்ந்த சிறந்த மேதாவிகளின் அபிப்பிராயங்களை சாராம்சமாக கூறியிருக்கின்றேன். அவை களில், இந்த பாவனை பாத்தியதைக்கு ஒரு சிறு ஆதாரமுமில்லை. இவ்வளவு வருஷங்களாக அப்படிப்பட்ட உரிமைகள் இருந்திராவிட்டால் மத்தியில் ஏற்பட்ட சட்டங்களும், அத்தகைய உரிமை களை ஜமீன்தாருக்கு கொடுக்க ஏதுவில்லை. 1865-ம் வருஷத்திய VIII-வது சட்டத்தைப்பற்றி இந்திய அரசாங்கத்தாருக்கு, சென்னை அரசாங்கத்தார் எழுதிய கடிதத்தை, நான் வாசித்துக் காட்டினேன். அனுபோகக் குடியானவர்களுக்கு தரிசு நிலங்களைச் சாகுபடி செய்வதற்கும் உரிமை உண்டென்பது அக்கடிதத்தில் தெளிவாக நிலை நாட்டப்பட்டிருக்கிறது. ஜமீன்தார்கள், தங்க ளுக்கு யுக்தமான, வரி விகிதங்களை ஏற்படுத்திக்கொள்ளலாமென்று சட்டத்தின் II (iv)-வது பிரிவில் குறித்திருப்பது உண்மையே. ஆனால், எல்லா விசேஷ உரிமைகளும் பாதுகாக்கப்படும் என்ற ஷரத்தால் இப்பிரிவு, அதி ஜாக்கிரதையாக அமைக்கப்பட்டிருக்கிறது. அப்படி, பாது காக்கப்பட்ட விசேஷ உரிமைகள் இவையே: தரிசு நிலங்களிலும் சாகுபடி செய்ய குடியானவனுக் குள்ள உரிமை; நிலத்திற்கு ஏற்பட்ட வரியைக் கொடுக்கத்தான் குடியானவன் கடமைப்பட்டிருக்கி றானே யொழிய, வாடகை கொடுக்க கடமைப்பட்டவனல்ல என்ற உரிமை. இவ்வுரிமை, சாசுவத செட்டில்மெண்ட் காலத்திலிருந்தே அங்கீகரிக்கப்பட்டு வந்திருக்கிறது. தரிசு நிலங்களைப் பண் படுத்தி, சாகுபடி செய்வதற்கு, குடியானவர்களுக்கு அனுகூலமான குறைந்த வரி விகிதங்களை ஜமீன்தார்கள் சாதாரணமாக ஏற்படுத்திவந்தார்கள். 1865-ம் வருஷத்திய VIII-வது சட்டத் தின் விதிகளைப்பற்றி இருபது வருஷங்களுக்குமுன் என்ன அர்த்தம் செய்யப்பட்டாலும், பிற் காலத்தில் அதை வியாக்கியானம் செய்த நீதிபதிகள் சிறந்த வழக்கறிஞர்களாகவும் நாட் டின் சட்டங்களையும், சம்பிரதாயங்களையும், அவைகளின் உட்கருத்தையும், நன்கறிந்த மேதாவி களாகவும் இருந்தார்கள். பெருமை வாய்ந்த நீதிபதிகளாகிய, ஸர். முத்துசாமி அய்யர், ஸர். சுப்பிரமணிய அய்யர், ஆகிய இவர்களைக் குறிக்கின்றேன் என்பது சொல்லாமலே விளங்கும். இம்மசோதாவின் மூலாதார விஷயங்களைப்பற்றி மேற்படி நீதிபதிகள், அவ்வப்போது செய்த சட்ட விளக்கங்கள், இந்த மசோதாவைத் தயாரிப்பதில் அதிக ஆதரவையும், ஊக்கத்தையும், திடத்தையும், தந்திருக்கின்றன. இம்மசோதா சட்டமாகில் இந்த ராஜதானியிலுள்ள, விவசாயி கள் யாவரும், அவர்களுக்கு நன்றியைச் செலுத்தி அவர்கள் ஞாபகத்தை போற்றி வரவேண்டும்.

முடிவு.

குடியானவர்களிடமிருந்து, நிலச்சுவான்தார் வரி வசூலிப்பதற்கு ஏற்பட்ட விதிகளைத் தெரிவிக்கும் காரியக் கிரமச் சட்டமே இந்த வரி வசூல் சட்டம். ஜமீன்தாருடைய உரிமைகளையும், கடமைகளையுமாவது. அல்லது குடியானவர்களின் உரிமைகளையும், கடமைகளையுமாவது, வரி வசூல் சட்டம் குறைக்கவுமில்லை, பெருக்கவுமில்லை. ஆனால், ஜமீன்தார், வரியை உயர்த்தும் உரிமையை, வரி வசூல் சட்டத்தின் 11-வது பிரிவின் 3-வது உட்பிரிவும், 4-வது உட்பிரிவின் ஷரத்தும் நிராகரிக்கின்றன. 11-வது பிரிவால் வரி விகிதம் நிரந்தரமாக முடிவு செய்யப்பட்டதென்பது வரி வசூல் மசோதாவின் 10-வது உட்பிரிவிலிருந்தும், இரண் டாவது செலக்ட் கமிட்டியின் அறிக்கையிலிருந்தும் தெரியவருகிறது. 1802-ம் வருஷத்திய XXX-வது பட்டா ரெகுலேஷனின், 7, 9 பிரிவுகள், வரி வசூல் மசோதாவின் 10-வது உட்பிரிவில் அடங்கியிருக்கின்றன என்பதும் குறிக்கத்தக்கது. வரி உயர்வை குறிக்கும் 11-வது பிரிவின் (1), (2), (3) உட்பிரிவுகளும் 4-வது உட்பிரிவின் 2, 3, ஷரத்துகளும் அனுபோக உரிமைக் குடியானவர்களுக்கு செல்லா. அவைகள், அனுபோக உரிமையில்லாத குடியானவர்களுக்கும், வரிச் சட்டத்தின் முதலாவது பிரிவில், இரண்டாந்தர நிலச்சுவான்தார்கள் என்று குறிக்கப்பட்டுள்ள ரயத்துவாரி குடியானவர்களுக்குமே செல்லும். குடியான வன், வருஷாந்திரக் குடியானவன் என்றும், ஜமீன்தார் அவனை நிலத்திலிருந்து நீக்கலாமென்றும் வரி வசூல் சட்டப் பிரிவுகளைப்பற்றி தவறாகச் செய்த வியாக்கியானம் பின்னால் ஏற்பட்ட தீர்ப்புகளால் ரத்து செய்யப்பட்டன. (**I. L. R. 16 Madras, 20 Madras, 23 Madras**) வரி வசூல் சட்டத்தின் 11-வது பிரிவின், (1)-வது உட்பிரிவில் குறிக்கப்பட்டிருக்கும் ஒப்பந்தப்படி வரியை உயர்த்துதல், 1908-ம் வருஷத்திய எஸ்டேட் நிலச் சட்டத்தில் வெளிப்படையாக நீக்கப்பட்டது. வரி சட்டத்தின் முதலாவது பிரிவின் பிரகாரம் ரயத்துவாரி குடியானவர்களையும், அனுபோக உரிமையில்லாத குடியானவர்களையும், நிலச்சுவான்தார்கள் என்ற ஒரு இலக்ஷணத்தின் கீழ் கொண்டுவந்தது தவறாகும். வரி வசூல் சட்டத்தின் விதிகளையும், முக்கியமாக 11-வது பிரிவையும், வரி வசூல் மசோதாவைப்பற்றி செலக்ட் கமிட்டி செய்த அறிக்கையையும் நன்கு பரிசீலனைசெய்து, குடியானவன் தனது, உரிமையை, ஜமீன்தாரிடமிருந்து அடைய வில்லை என்றும், அவன் ஜமீன்தாருக்கு செலுத்திவந்த தொகை நிலவரியே தவிர வாடகையல்ல வென்றும், நிலத்திலிருந்து அவனை விலக்க முடியாதென்றும், மற்றொருவன் அதிக வரி கொடுக்க சம்மதிக்கிறான் என்றாவது, இதர காரணத்திற்காவது வரியை உயர்த்தக் கூடாதென்றும் சென்னை ஹைகோர்ட்டு தீர்ப்பு கூறினது. (**I.L.R. 20 Madras.**)

இதன் விளைவு என்னவென்றால்: 1865-ம் வருஷம் முதல் 1908-ம் வருஷம் வரை, உட்பட்ட கால முழு வதிலும் வரி விகிதம் மாறாமலிருந்ததென்பதும் அனுபோக முறையும், அனுபோக உரிமையும், ஸ்திரமாக இருந்தன வென்பதுமே.

7-ம் அத்தியாயம்.

1908-ம் வருஷத்திய எஸ்டேட்ஸ் நிலச்சட்டம் I—வரி உயர்வு, வரி மாற்றம், முதலியன அநாதிக் கரம்பு ரயத்து நிலங்களுக்கே செல்லும்

1865-ம் வருஷத்திய VIII-வது வரி வசூல் சட்டத்தால் ஏற்பட்ட தீமையை நீக்கி, குடியானவர்களுடைய உரிமைகளையும், ஜமீன்தார்களுடைய உரிமைகளையும், தெளிவாக சந்தேகமற்ற முறையில், தெரிவிப்பதற்கே சென்னை எஸ்டேட் நிலச்சட்டம் ஏற்படுத்தப்பட்டது. இது சிறந்த எண்ணத்துடன் தயாரிக்கப்பட்ட சட்டம். ஜமீன்தார்களுக்கும், குடியானவர்களுக்கும், சகாயமளிப்பதற்கு, வெகு திறமையாக யெத்தனித்தது. ஆனால் நல்ல எண்ணங்கள் யாவும், செயல் முறையில் சித்தி பெறுவதில்லை. மசோதா சட்டமாவதற்குமுன் பல மாறுதல்கள் ஏற்படுகின்றன; அநேக விவாதங்கள் ஏற்படுகின்றன. செலெக்ட் கமிட்டிகள் அறிக்கைகளை சமர்ப்பிக்கின்றன; தயாரிப்பு மசோதாக்கள் வெகு கவனமாக ஆராயப்படுகின்றன; மசோதா பிரரேபிக்கப் படுவதற்குமுன், பிரிவுகளும், ஷரத்துகளும், விதிகளும், ஆழ்ந்து பரிசீலனை செய்யப்படுகின்றன. சில சமயங்களில், மசோதா பிரரேபிக்கப்பட்ட பிறகுகூட, ஆரம்பத்தில் நினைக்கப்படாத பல மாறுதல்கள் ஏற்படுகின்றன. 1865-ம் வருஷத்திய வரி மசோதாவுக்கு நேர்ந்ததைப்போலவே, எஸ்டேட் நில மசோதா வுக்கும் சட்டத்திற்கும், பல மாறுதல்களிருக்கின்றன. எஸ்டேட் நில மசோதாவைச் செய்தவர்கள் ஒரு விஷயத்தில் உண்மையான நிலையை கிரஹித்தார்கள். நூறு வருஷ காலத்திற்குப் பிறகு, விஷயத்தின் மூல உட்கருத்தை நன்கு ஆராய்ந்து, ஜமீன்தார்களுடைய உரிமைகளையும் குடியானவர்களின் உரிமைகளை யும் தெளிவாக விளக்கினார்கள். குடியானவன் செலுத்தும் தொகை சர்க்காருக்குச் சேரவேண்டிய வரியே தவிர, வாடகை அல்ல என்பதை அவர்கள் உணர்ந்தார்கள். முதலாவது, விளைச்சலில் சர்க்காருககுச் சேரவேண்டிய பாகத்தை நிர்ணயம் செய்ய விரும்பினார்கள்; அதாவது விளைச்சலில் பாதியாக; அடுத்தபடி யாக, நிர்ணயம் செய்யப்பட்ட மொத்த நில வரி வருமானத்தில், மூன்றில் இரண்டு பங்கு சர்க்காருக்கு ஜமீன்தார் செலுத்தவேண்டிய தொகையாக ஏற்படுத்தப்பட்டது. எஞ்சிய மூன்றிலொரு பாகம் ஜமீன் தாரின் வரி வசூல் வேலைக்கு பிரதிப்பயனாகக் கொடுக்கப்பட்டது. குடியானவர்களிடமிருந்து சர்க்காருக்குச் சேரவேண்டிய மொத்த வரியே, சாஸ்வத செட்டில்மெண்ட் காலத்தில் நிரந்தரமாகத் தீர்மானிக்கப்பட்டதே யொழிய, பேஷ்கஷ் என்று அழைக்கப்பட்ட பாகமாவது, வரி என்று கூறப்படும் மிச்சமான பாகமானது அல்ல என்பது மேற்கூறியதிலிருந்து ஸ்பஷ்டமாகத் தெரியவருகிறது. 1802-ம் வருஷத்திய XXV-வது மதராஸ் ரெகுலேஷனால் உத்தேசிக்கப்பட்ட சாசுவத செட்டில்மெண்டின் அர்த்தம் இதுதான். இதற்குமுன் இருந்த அரசாங்கங்களின் கீழ், குடியானவர்களை ஹிம்ஸிப்பதாயும், நிலைவரமற்றதாயும் இருந்த வரி ஏற்பாட்டிற்கு பதிலாக, மித விகிதமாக, நிலத்தின்மேல் மொத்த வரி நிர்மாணம் செய்யப்பட்டது. குடி யானவன் நிலத்திற்குச் செலுத்தவேண்டிய மொத்த வரி நிரந்தரமாக முடிவு செய்யப்பட்டபொழுது, சர்க்காருக்குச் சேரவேண்டிய பேஷ்கஷும், அதுபோக, மிச்சமானதும், ஜமீன்தாருக்குச் சேரவேண்டியதுமான தொகையும் சாசுவதமாக முடிவு செய்யப்பட்டன.

இந்த நோக்கத்துடன், "ரெண்ட்" (வரி; வாடகை) என்ற வார்த்தையை மாற்றி, சட்டத்தில் "கிஸ்தி" என்ற வார்த்தையை அமைக்க விரும்பினார்கள். ரயத்துவாரிக் குடியானவன் சர்க்காருக்குச் செலுத்தும் வரி "கிஸ்தி" என்று கூறப்படுவது இங்கு குறிக்கத்தக்கது. இத்தகைய சுளுவான, ஆனால் காரிய பலிதமான மாறுதலைச் செய்து, அதன்மூலம், ஜமீன்தாருக்கும் குடியானவனுக்கும் உள்ள சம்பந்தம், ஆங்கில சம்பிரதாயப்படி, நிலப் பிரபுவுக்கும் (iandlord) "டெனண்டுக்கும்" (tenant) உள்ள சம்பந்தம் அல்ல வென்றும், குடியானவனுக்கு ஜமீன்தாருக்குச் சமானமான உரிமை உண்டென்றும் தெளிவாக்க விரும்பினார்கள். "ரெண்ட்" என்ற வார்த்தையை "கிஸ்தி" என்று மாற்றுவதற்கு மசோ தாவில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தபோதிலும், சட்டத்தில் "ரெண்ட்" என்ற வார்த்தையே அமைக்கப்பட் டது. இத்தவறு எப்படி வந்தது, ஏன் செய்யப்பட்டது என்ற கேள்விகளைப்பற்றி, இப்பொழுது நாம் விசாரிக்கவேண்டியதில்லை. ஆனால், குடியானவன் செலுத்துவது "கிஸ்தி" அல்லது வரியே தவிர, "ரெண்ட்" (வாடகை) அல்ல என்பது இனிச் செய்யப்போகும் சட்டத்தில் ஸ்பஷ்டப்படுத்தப்பட்டால், அது போதுமானது.

மீண்டும், ஆதிகாலத்திலிருந்து தங்கள் நிலங்களை அனுபவித்து வருபவர்களுக்கும், ஜமீன்தாருடைய சொந்த நிலங்கள் அல்லது பண்ணை நிலங்களல்லாத தரிசு நிலங்களை, மத்தியில் அனுபவித்து வருபவர் களுக்கும், எஸ்டேட் நிலச்சட்டத்தில், யாதொரு வித்தியாசமும் காணப்படவில்லை. குடியானவன் தரிசு நிலத்தில் பிரவேசித்து, உழுது, சாகுபடி செய்து, அதன் மூலம் அடையும் நில உரிமையை இது நியாய மாக அங்கீகரிக்கிறது. சாகுபடி செய்யப்பட்ட நிலங்களில் ஜமீன்தாருக்கு இல்லாத பிரத்தியேக உரிமைகளை, பட்டா ரெகுலேஷனும், சாசுவத செட்டில்மெண்ட் ரெகுலேஷன்களும், தரிசு நிலங்களில் அவருக்குக் கொடுக்கவில்லை. ஏற்பட்ட பேஷ்கஷைவிட அதிகமான பேஷ்கஷை சர்க்காருக்குச் செலுத்தாமல். தரிசு நிலத்திலிருந்து கிடைக்கும் வருமானத்தை தன் சொந்த வருமானமாக அனுபவிப்பதே, ஜமீன்தாருக்கு தரிசு நிலத்திலுள்ள பிரத்தியேகமான உரிமையாகும். அதைவிட வேறு உரிமை கிடையாது. சாஸ்வத செட்டில்மெண்ட் காலத்தில், சாகுபடி செய்யப்பட்ட நிலங்களுக்கு அனுபோக உரிமையும் வரி விகிதமும் எவ்வாறு நிரந்தரமாக முடிவு செய்யப்பட்டனவோ, தரிசு நிலங்களுக்கும் அவ்வாறே முடிவு செய்யப்பட்டன. இது நியாய சம்மதமான விஷயம். ஆயினும், தரிசு நிலங்களில் தங்களுக்கு பிரத்தியேக உரிமைகள் இருக்கின்றனவென்று, ஜமீன்தார்கள் ஒவ்வொரு சம்பந்தத்திலும் வாதாடி வந்திருக்கிறார்கள். 1863-ம் வருஷத்திலும், 1864-ம் வருஷத்திலும், வரி வசூல் மசோதாவின் செலக்ட் கமிட்டி முன்பு அவைகளை வற்புறுத்தினார்கள். எஸ்டேட் நிலச்சட்டம், 1908-ம் வருஷத்தில் சட்டமாவதற்கு முன்னும் அவைகளைப் பிரஸ்தாபித்தார்கள். இன்னும் அவைகளையே கூறிவருகிறார்கள்.

எஸ்டேட் நில மசோதாவை பிரரேபித்தவர் கௌரவமிக்க ஜி. எஸ். போர்புஸ் துரை. தரிசு நிலங்களில் தனக்கிஷ்டமான வரி விகிதங்களை ஏற்படுத்துவதற்கு ஜமீன்தாருக்கு உரிமை உண்டென்று கௌவரமிக்க வி. சி. தேசிகாசாரியார் கூறியதற்கு அவர் பின்வருமாறு விடையளித்தார் :—

> "கௌரவம் வாய்ந்த அங்கத்தினர் அதை தெளிவாகக் கூறினார் என்று நான் கருதவில்லை. எனினும், அவர் திருத்தியதை நான் ஒப்புக்கொள்கிறேன். வரிவிகிதங்களைப்பற்றி சில விஷ யங்களை பிறகு பேசுகிறேன். மசோதாவின் பிரகாரம், ஜமீன்தாருடைய அனுமதியில்லாமல், குடியானவன் தரிசு நிலத்திற் பிரவேசித்து அனுபோகம் அடையமுடியாது. அதாவது

1865-ம் வருஷத்திய VIII-வது சட்டப்படி தரிசு நிலங்களைப் பிரித்து, சாகுபடி செய்வதற்கு குடியான வர்களுக்குக் கொடுக்கும் ஏற்பாடு ஜமீன்தார் வசம் ஒப்புவிக்கப்பட்டது. ஜமீன்தாரின் உரிமைகள் குடியானவர்களுடைய அனுபவ உரிமைகளுக்கும் இதர நியாய உரிமைகளுக்கும் உட்பட்டவை. இது பழைய ரெகுலேஷன்களால் அங்கீகரிக்கப்பட்டிருக்கிறது.

அவ்வுரிமைகள், 1865-ம் வருஷம் வரையில் என்ன நிலைமையிலிருந்தனவென்பதை, நேற்று விவரித்தேன். நான் எடுத்துக்காட்டியபடி குடியானவர்கள், ஜமீன்தார்களுக்குச் செலுத்தவேண்டிய வரி நிர்மாணம், சில கட்டுப்பாடுகளுக்கு உட்பட்டிருக்கின்றனவென்பதை 1802-ம் வருஷத்திய XXX ரெகுலேஷன் தெளிவாக கூறியிருக்கிறது; நியாயமான வரி விகிதம் என்ன என்பதைப்பற்றி, வழக்கு ஏற்பட்டால் அதை கலெக்டர் விசாரித்து வரி விகிதத்தை நிர்ணயப்படுத்தவேண்டும். வரி விகிதம் எவ்வாறு விதிக்கபட வேண்டுமென்பதை, நான் நேற்று வாசித்த ரெகுலேஷன் 9-வது பிரிவு தெளிவாக விளக்கிகுறது. தரிசு நிலங்களைப்பற்றி இந்திய சர்க்கார் நன்கு ஆராய்ந்து தங்கள் அபிப்பிராயத்தை பின்வருமாறு தெரிவித்திருக்கிறார்கள் :—

"தரிசு நிலங்களில் தங்களுக்கிஷ்டமான ஏற்பாடுகளைச் செய்து கொள்வதற்கு, ஜமீன்தார்களுக்கு, பூரண உரிமை கொடுக்கப்பட்டது என்ற அபிப்பிராயத்தை அங்கீகரிப்பதற்கு இந்திய சர்க்கார் தயாராக இல்லை. வங்காளக் குடியானவர்களின் சட்டத்தை ஏற்படுத்தியபொழுது, இவ்விஷயம் விரிவாக பரிசீலனை செய்யப்பட்டது. அனுபோக உரிமையில்லாத ஜமீன்தாரின் பண்ணை நிலங்களில், தரிசு நிலம் சேர்ந்ததில்லை என்பது, வங்காள சாசுவத செட்டில்மென்டின் முக்கிய அம்சம், என்ற முடிவு ஏற்பட்டது. சாசுவத செட்டில்மென்ட் ரெகுலேஷன்களிலும், விதிகளிலும், வங்காளத்திற்கும், சென்னைக்கும், வித்தியாசங்கள் இருந்தால், அவைகள் குடியானவர்களுடைய உரிமைகளையும், பாத்தியதைகளையும், இன்னும் பலப்படுத்துபவைகளாகவே இருந்தன. இது சம்பந்தமாக 1793-ம் வருஷத்திய VIII வங்காள ரெகுலேஷன், 37, 39 பிரிவுகளையும், சென்னை சாசுவத செட்டில்மென்ட் சம்பந்தமாக கலெக்டர்களுக்கு அனுப்பிய குறிப்புகளின் 25, 34, உட்பிரிவுகளையும், கவனிக்குமாறு வேண்டுகின்றேன். சாசுவத செட்டில்மென்டால், தரிசு நிலத்தில் ஜமீன்தாருக்கு பூரண உரிமை கொடுக்கப்பட்டதென்ற கருத்தை மேற்படி குறிப்புகளின் 27-வது உட்பிரிவு ஆதரிப்பதாகத் தெரியவில்லை. நாட்டின் மாமூலான வழக்கங்களை அனுசரித்து, ஸ்தாபிதமான வரி விகிதங்களுக்கு தனது சொந்த நிலத்திற்காக, ஜமீன்தார் தரிசு நிலங்களை குடியானவர்களுக்கு விடலாம், என்பது மேற்படி பக்க உட்பிரிவின் சரியான அர்த்தம் என்று தெரிகிறது. ஜமீன்தாரின், பண்ணை நிலங்களில் குடியானவனுக்கு அனுபோக உரிமையில்லை என்பதை இந்திய சர்க்கார் ஆக்ஷேபிக்கவில்லை. ஆனால், தரிசு நிலங்களில் குடியானவர்களுக்கு அனுபோக உரிமையில்லை என்ற கூற்றை, அவர்கள் தீவிரமாக எதிர்க்கிறார்கள். அப்படிப்பட்ட ஏற்பாட்டை அவர்கள் ஆதரிக்கமுடியாது. தரிசு நிலத்தில் குடியானவனுக்குள்ள அனுபோக உரிமையை விலக்குவது, நாட்டின் சட்டத்திற்கும், சம்பிரதாயங்களுக்கும், பொது ஜன நன்மைக்கும், அரசியல் முறைக்கும், விரோதமானது என்று, இந்திய சர்க்கார் அஞ்சுகிறார்கள்.

"ஜமீன்தாரின் பண்ணை நிலமல்லாத தரிசு நிலத்தில், குடியானவனுக்குள்ள அனுபோக உரிமை வெகு ஜாக்கிரதையாக ஆலோசித்து தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. அது சம்பந்தமாக, நாட்டில் வெகுகாலமாகவுள்ள நியாய நீதிகளும், அரசியல் கொள்கையும் அனுசரிக்கப்பட்டிருக்கின்றன. மற்ற நிலங்களில் சாகுபடி செய்வதற்கு என்ன உரிமை உண்டோ அதே ஸ்திரமான உரிமையும் பாத்தியதையும், தரிசு நிலங்களிலும் தங்களுக்கு உண்டென்று, கிராமக் குடியானவர்கள் எக்காலத்திலும் கருதி வந்திருக்கிறார்கள். மற்ற எல்லா இடங்களை விட, செங்கற்பேட்டையில் இக்கொள்கை அதி தீவிரமாக இருந்து வருகிறது. இவ்வுரிமைகள், விசேஷ உரிமைகளாகவும், அனுபவ உரிமைகளாகவு மிருக்கின்றன (special and prescriptive rights). இவைகள் 1865-ம்வருஷத்திய VIII சட்டத்தால் ரத்து செய்யப்படவில்லை. இக்காரணத்தை முன்னிட்டும், பரிபாலனக்கொள்கை சம்பந்தமான இதர காரணங்களை முன்னிட்டும், அனுபோக உரிமை விஷயமாக, இம்மசோதாவில், வேறுபாடுகள் செய்யமுடியாது. தரிசு நிலங்களைக் குடியானவர்களுக்கு பிரித்துக்கொடுக்கும் உரிமை மட்டும் ஜமீன்தாருக்கு அளிக்கப்படும். தரிசு நிலங்களில், அனுபோக உரிமை இருக்கிறதென்று ஏற்பட்டால், ஜமீன்தார் அந்நிலங்களை சாகுபடி செய்வதற்கு, குடியானவர்களுக்குக் கொடுக்காமல், காலியாக விட்டுவிடுவார் என்ற அச்சத்தை கௌரவம் வாய்ந்த தேசிகாசாரியார் தெரிவித்தார். அது இடக்கான வாதமே தவிர நியாயவாதமென்று எவரும் கருதார்."

கௌரவம் வாய்ந்த தேசிகாசாரியார்.—"நான் சொன்ன காரணம் அதுமட்டுமல்ல. கூலியாட்களை நியமித்து தரிசு நிலங்களைத் தானாகவே ஜமீன்தார் சாகுபடி செய்வாரென்று கூறினேன். பல ஜமீன்தார்கள் அவ்வாறே செய்து வருகிறார்கள்."

கௌரவம் வாய்ந்த ஜி. எஸ். போர்ப்ஸ்.—"மெத்த சரி. ஜமீன்தார் கூலியாட்களை அமர்த்திக்கொள்வாறென்று வைத்துக்கொள்வோம். ஜமீனிலுள்ள தரிசு நிலம் ஏதாவது பயன் படக்கூடியதாயிருந்தால், குடியானவனுக்கு அனுபோக உரிமை ஏற்படுமே என்று, அஞ்சி, அவைகளைக் காலியா விட்டுவிடுவாரா? முகத்தை பழிப்பதற்கு மூக்கை வெட்டிக்கொள்வாரா? தனக்கு கிடைக்கக்கூடிய லாபத்தை ஜமீன்தார் விட்டுவிடமாட்டார். தரிசு நிலங்களில் அனுபோக உரிமையை யடைந்து குடியானவர்கள் திருப்தியாக இருப்பது ஜமீன்தாருடைய செல்வத்திற்கும், சுபிக்ஷத்திற்கும் சாதகமானதென்பதை யாவரும் ஒத்துக்கொள்வார்கள். கூலியாட்களையமர்த்தி நல்லெண்ணத்துடன் தரிசு நிலத்தைச் சாகுபடி செய்ய ஜமீன்தார் முற்பாடுவாராகில், அத்தகைய ஏற்பாட்டில் தனக்கு லாபத்தை தரக்கூடிய தகுந்த மேற்பார்வையை ஜமீன்தார் செலுத்தக்கூடுமா என்பது சந்தேகம். வரி வசூல் சம்பந்தமாக, இம்மசோதாவில் ஜமீன்தார்களுக்கு வேண்டிய வசதிகள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. தரிசு நிலங்களில் குடியானவர்களுக்கு அனுபோக உரிமையிருக்கிறதென்று தெளிவாகக் குறிக்கப்படுவது, ஜமீன்தார்களுக்கு பிரதிகூலமாக இராதென்பது அவர்களுக்கே பிறகு தெரியும்." மேற்கூறிய வாசகங்களிலிருந்தே 1802-ம் வருஷத்திய XXX ரெகுலேஷன் பிரகாரமும், 1865-ம் வருஷத்திய VII சட்டத்தின் பிரகாரமும், குடியானவனடைந்த உரிமைகள் மாறுமலிருந்து வந்திருக்கின்றன வென்பது தெரியவருகிறது. தரிசு நிலங்களில் ஜமீன்தார் தனக்கிஷ்டமான வரி விகிதங்களை ஏற்படுத்த முடியாதென்றும், இது சம்பந்தமாக நாட்டின் மாமூலான வழக்கங்களை அனுசரிக்கவேண்டுமென்றும், ஸ்தாபிக்கப்பட்ட வரி விகிதங்களையே ஏற்படுத்தவேண்டுமென்றும், இந்திய சர்க்கார் நிலைமையை நன்கு விளக்கிக் கூறினார்கள். தரிசு நிலங்களில் அனுபோக உரிமை ஏற்படுவதைத் தடுப்பது, நாட்டின் சட்டத்திற்கும் மாமூலான வழக்கத்திற்கும், அரசியல் கொள்கைக்கும் மாறானதென்று ஸ்பஷ்டப்படுத்தினார்கள். ஏற்பட்ட பேஷ்க்ஷைவிட அதிக பேஷ்க்ஷைச் செலுத்தாமல், தரிசு

நிலங்களிலிருந்து கிடைக்கும் வருமானத்தை அனுபவிக்கும் உரிமையும், அவைகளைக் குடியானவர்களு
க்குபிரித்துக்கொடுக்கும் உரிமையுமே, தரிசு நிலங்கள் சம்பந்தமாக ஜமீன்தாருக்கு, 1802-ம்வருஷத்திய
ரெகுலேஷன்களாலும், 1865-ம் வருஷத்திய VIII சட்டத்தாலும், 1908-ம் வருஷத்திய I சட்டத்
தாலும் கொடுக்கப்பட்ட உரிமைகள். தரிசு நிலங்களிலிருந்து கிடைக்கும் வருமானத்திற்கு பேஷ்
கஷை உயர்த்தும் உரிமையை சர்க்கார் தள்ளிக்கொடுத்து விட்டபடியால், இத்தகைய ஏற்பாடு செய்யப்
பட்டது. தரிசு நிலங்களை குடியானவர்களுக்குப் பிரித்துக்கொடுப்பதற்கு எவராவது ஒருவர் இருக்க
வேண்டுமென்பது சர்க்காரின் கருத்து. தங்களுடைய சார்பில், அப்படிப்பிரித்துக் கொடுக்கும் உரிமை
யை சர்க்கார் ஜமீன்தாருக்குக் கொடுத்தார்கள்.

மசோதா சட்டமாக்கப்படுவதற்குமுன், ஒப்புக்கொள்ளப்பட்ட விஷய நிலைமை இதுவே. ஆனால் சட்டத்தில்
என்ன ஏற்படுத்தப்பட்டது.? இது சம்பந்தமாக ஏதாவது மாறுதல் ஏற்பட்டதா ? இல்லை. ஆனால் எஸ்டேட்
நிலச்சட்டத்தின் 4-வது பிரிவில் இவ்விஷயம் இன்னும் பரிஷ்காரமாகத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. 4-வது
பிரிவின் வருமாறு :—

"இச்சட்டத்திலுள்ள விதிகளுக்கு உட்பட்டு, குடியானவன் அனுபோகத்திலுள்ள எல்லா 'ரயத்தி'
நிலங்களுக்கும் வரி வசூல் செய்ய ஜமீன்தாருக்கு உரிமையுண்டு."

"எல்லா 'ரயத்தி' நிலம் சம்பந்தமாக வரி வசூல் செய்ய ஜமீன்தாருக்கு உரிமையுண்டு,
என்ற வார்த்தைகளை உற்று நோக்கவேண்டும். குடியானவர்கள் அனுபவித்து வரும் 'ரயத்தி'
நிலத்திலிருந்து வரி வசூல் செய்யும் உரிமைதான் அங்கீகரிக்கப்பட்டிருக்கிறது. குடியானவர்
களிடமிருந்து வரி வசூல் செய்யும் உரிமைதான் ஜமீன்தாருக்குள்ள உரிமை யென்று சமீபத்தில்
ஏற்பட்ட வழக்கில் ப்ரீவிகௌன்சில் முடிவு கூறியிருக்கிறது. அது மேற்படி பிரிவிற்கு அந்த
வியாக்கியானத்தையே செய்தது. ரயத்தி, நிலத்தை ஜமீன்தார் தனது சொந்த நிலமாக அனு
பவிக்க முடியாததென்பதும், தெளிவுசெய்யப்பட்டது ஜமீன்தார் தனது சொந்தநிலமாக அனு
பவிக்கக்கூடிய நிலம் அவருடைய பண்ணை நிலமே தவிர வேறு அல்ல. "வழக்குச் சட்டம்"
என்ற அத்தியாயத்தில் இவ்விஷயம் ஆராயப்பட்டிருக்கிறது. ஜமீன்தார் கிஸ்தியை உயர்த்து
வது சம்பந்தமாக போர்ப்ஸ் துரை பின்வருமாறு கூறினர் :—

"பண்ணை அல்லது கம்பட்டம் நிலங்களில், ஜமீன்தாருக்கு, குடியானவனுடைய உரிமையும், ஜமீன்
தார் என்ற ஹோதாவில் தனது சொந்த உரிமையுமுண்டு. இந்த நிலங்களை அதிகரிப்பதின் சம்
பந்தமாக உள்ள சில கட்டுப்பாடுகளைக் குறித்து இப்பொழுது பேச விரும்புகிறேன். தனது
பண்ணை நிலங்களை அதிகரிப்பதற்கு குடியானவர்களுடைய நிலங்களை வாங்கவும், தரிசு நிலங்களை
எடுத்துக்கொள்ளவும், ஜமீன்தார் அனுமதிக்கபடவேண்டுமென்று சிலர் கூறலாம். முதலில் இது
பொருத்தமான யோசனையாகத் தோன்றலாம். அத்தகைய அனுமதி ஜமீன்தாருக்குக் கொடுத்
தால், குடியானவர்கள் வெகுகாலமாக அனுபவித்துவரும் உரிமைகள் அபகரிக்கப்படும். பண்ணை
நிலங்களல்லாத தரிசு நிலங்களில் ஜமீன் குடியானவர்களுக்கு யாவராலும் ஒப்புக்கொள்ளப்பட்ட
சில உரிமைகள் உண்டு. தரிசு நிலங்களில் சாகுபடி செய்யலாம் என்ற தொன்றுதொட்டு குடி
யானவர்கள் அனுபவித்து வரும் உரிமை அதில் ஒன்று. குடியானவர்களின் அனுபோக உரிமை
ஒருபுறமிருக்க, ஜமீன்தார்கள் தங்கள் சொந்த நிலங்களை பெருக்கிக்கொள்வதைத்தடுப்பது,
பரிபாலனக் கொள்கையைப்பொறுத்த விஷயமாக இருக்கிறது. சாகுபடி செய்யப்படும் எந்த நிலத்
தையும் ஜமீன்தார் தன்னிஷ்டப்படி பண்ணை நிலமாக்கிக்கொள்வதற்கு அதிகாரமளித்தால், இந்த
மசோதாவின் விதிகளை அவர் தந்திரமாக சமாளித்துக்கொண்டு ஜமீன் முழுவதையும் பண்ணை
நிலமாக்கிவிடுவார். குடியானவர்கள் வாடகை செலுத்தும் குடியானவர்களாவிடுவார்கள்.
எந்த சமயத்திலும் அவர்களை நிலத்திலிருந்தும் தள்ளிவிடலாம். பரிபாலனக்கொள்கையையும்,
முறையையும், கருதி, சர்க்கார் அத்தகைய நிலைமையை ஏற்படுத்துவதற்கு ஒரு காலத்திலும்
சம்மதிக்கமாட்டார்கள். அனுபவ பாத்தியதையைக் கருதியும், பரிபாலன முறையைக்கருதியும்,
ஜமீன்தார் பண்ணை நிலங்களை அதிகரிப்பது அங்கீகரிக்கப்படாது. அது மசோதாவின் மூலாதாரத்
தத்துவங்களில் ஒன்று. இதே தத்துவம் இந்தியாவின் இதர பாகங்களிலும் அனுசரிக்கப்பட்டு
வருகிறது.

"வரியை உயர்த்துவது சம்பந்தமாக ஜமீன்தாருக்கு இந்த மசோதாவில் கொடுக்கப்படும் விஷயத்தைப்
பற்றி, கௌரவம் வாய்ந்த கிருஷ்ணன் நாயர் அவர்கள் பிரஸ்தாபித்தார். அந்த முக்கியமான
விஷயத்தைப்பற்றி நான் அடுத்தபடியாக பேச விரும்புகிறேன். என்னைப்பொறுத்தமட்டில், கௌ
ரவம் வாய்ந்த அங்கத்தினர் தெரிவித்த அபிப்பிராயத்திற்கு நான் மிகவும் அனுதாபப்படுகின்றேன்.
நான் நேற்று கூறியதைப்போல இந்த ராஜதானியில் தொன்றுதொட்டுள்ள, வழக்கத்தை அனு
சரித்து குடியானவன் செலுத்தவேண்டிய வாரவிகிதத்தை நிர்ணயம் செய்வதற்கு முடிவான
ஏற்பாட்டை விதிப்பதே இம்மசோதாவின் பூர்வ நோக்கம். (இந்த மசோதா இந்திய சர்க்காருக்கு
அனுப்பப்பட்டபொழுது) 'வாரத்தை' முடிவான முறையாகக் கொள்வோமாகில் வரி உயர்வும், குறை
வும், இயற்கையாகவே ஏற்படும். 'வரிமாற்று' என்பது ஜமீன்தாருக்கும் குடியானவர்களுக்கு
முள்ள பரஸ்பர ஏற்பாடாகிவிடும். அதில் சர்க்காருக்கு யாதொரு சம்பந்தமுமிராது. அதில்
தவருன முறை அனுசரிக்கப்பட்டால், அப்பொழுதே பரிபாலன முறை விதிகளை முன்னிட்டு சர்க்கார்
தலையிடலாம். தீர்மானிக்கப்பட்ட வாரத்தைப்பற்றியும் அல்லது விளைச்சலின் விகிதத்தைப்பற்றி
யும் சில இடங்களில் தொந்தரவு எற்படலாமென்று சொல்லப்பட்டது. ஆனால் சில இடங்களில்
ஜமீன்தார்கள், பல வருஷங்களுக்கு முன் வாரத்தை பணவரியாக மாற்றியும், அப்பண வரியை
சில வருஷத்திற்குப் பிறகு அதிகரித்திருந்தாலும், ஆதியிலிருந்த வார விகிதம் என்ன என்பதை
அறிவது கஷ்டமல்ல. அது குடியானவர்களுக்கு நன்ருய்த் தெரிந்திருக்கும். குடியானவர்கள்
இம்சிக்கப்படுகிருர்கள் என்ருல் அவர்களுடைய உபத்திரவத்தின் முக்கிய ருஜு பழைய வரி
விகிதங்களை விட அதிகமான கிஸ்தித்தொகை ஏற்பட்டிருப்பதே. அதிக கிஸ்தித்தொகையிலிரு
ந்தே, குடியானவர்களுடைய கஷ்டத்தையும், தொல்லைகளையும் யூகிக்கலாம். ஆனால் தயாரிக்கப்
பட்ட மசோதாவில் சில சந்தர்ப்பங்களில் வரி உயர்த்தப்படலாம் என்று ஏற்பட்டிருக்கிறது. காலம்
செல்லச் செல்ல, பரிஸ்திதிகள் மாற ஜமீன்தாருக்கு இந்த விஷயத்தில் கொஞ்சம் சலுகை
காட்டலாம். என்னைப்பொறுத்த மட்டில், நியாயமாகச் செல்லவேண்டிய தொகையை விட
அதிகமான தொகையை ஜமீன்தார்கள் குடியானவர்களை நிர்ப்பந்தித்து வாங்குவதை நான்
ஆதரிக்கமாட்டேன். சாசுவத செட்டில்மெண்ட் காலத்தில் ஜமீன் ஆஸ்தியின் மொத்த மதிப்பில்,
மூன்றில் ஒன்று ஜமீன்தாருக்கு சொந்தமாகக்கொடுக்கப்பட்டது. சர்க்காருக்குச் செல்லவேண்டிய
வரியை ஜமீன்தார் வசூலித்து, அதின் மூன்றில் இரண்டு பாகத்தை சர்க்காருக்குச் கொடுத்து
மிச்சமான மூன்றிலொருபாகத்தை தான் எடுத்துக்கொண்டார். சாஸ்வத செட்டில் மெண்ட்
ஏற்பட்ட காலத்தில் கூட, ஜமீன்தார் எடுத்துக்கொண்ட மூன்றிலொரு பாகம் அதிக மதிப்பானதாக

இருந்திருக்கும். நாட்டின் பரிஸ்திதியில் அக்காலத்தில் சர்க்காருக்கு அவ்வளவு பரிச்சயம் இல்லை; ஜமீன் ஆஸ்திகள் அவ்வளவு சரியாகக் கணக்கெடுக்கப்பட்டிருக்கமாட்டா. அவைகளின் மதிப்பு இன்று எவ்வளவாக இருக்கும் என்பது, எளிதில் கணக்கிட முடியாது; கிராம உத்தி யோகஸ்தர்களின் மசோதாவைப்பற்றி, ஐந்து, ஆறு வருஷங்களுக்கு முன் நடந்த விவாதங்களில், ஜமீன் ஆஸ்தி மதிப்பில் குறைந்தது மூன்றில் இரண்டு பாகத்தை ஜமீன்தார் எடுத்துக்கொண்டார் என்று ஸர். பாஷியம் அய்யங்கார் கூறினார். அது இக்காலத்தில் ஏராளமாக உயர்ந்திருக்கிற தென்பதிற் சந்தேகம் இல்லை. இவ்வாறு அதிகமாக ஏற்பட்ட தொகை சர்க்கார் கஜானுவுக்குச் செல்லுமாகில், அது பொது ஜன நன்மைக்கு எவ்வளவோ சாதகமாக இருக்கும்; ஜனங்கள் செலுத்திவரும் இதர வரிகளை தாராளமாய் குறைப்பதற்கும் அது ஏதுவாயிருக்கும். ஜமீன்தார், குடியானவர்களைக்கொண்டு தரிசு நிலங்களைச் சாகுபடி செய்து அதன் மூலம் தன் வருமானத்தை அதிகரித்துக்கொள்ளலாமே தவிர, குடியானவர்களை வாட்டி வதைத்து வரிவசூலித்து, அதன் வாயி லாக, தனம் திரட்டி தருக்கி மகிழலாகாது. நாட்டின் நன்மைக்காக தரிசு நிலங்கள் சாகுபடி செய்யப்படவேண்டும். அதற்காக, ஜமீன்தார்கள் குடியானவர்களுக்கு ஊக்கமும் ஆதரவும் அளிப்பாராகில், நாம் அவர்களை மெச்சவேண்டும். சாசுவத ஏற்பாட்டில், எவ்வகையிலாவது தலை யிடவேண்டும் என்பது சர்க்கார் விருப்பம் அல்ல. ஆனால் மேற்படி ஏற்பாட்டின் பயனாக, ஜமீன் தார்கள் அனுபவித்து வரும் பல நலன்களை நாம் கவனிக்கும்பொழுது, தங்கள் உரிமைகள் பாதிக் கப்பட்டன, குறைக்கப்பட்டன என்று அவர்கள் செய்யும் பிரஸ்தாபத்திற்கு நாம் அனுதாபம் காட்டமுடியாது. 1802-ம் வருஷத்திய ஜமீன்தார்கள் செய்துகொண்ட வெகு நல்ல பேரத்தின் பலன்களை, இன்று அவர்களின் சந்ததியார் அனுபவித்து வருகிறார்கள். ஜமீன்தார்கள், தாறு மாறாகவும், வீணாகவும், ஆடம்பரமாகவும் செலவு செய்யாவிட்டால், அவர்கள் செல்வந்தர்களாக சீரிய நிலையிலிருப்பார்கள். வரி உயர்வைப்பற்றி சற்று முன் குறித்தேன். மசோதாவில் அது வரையறை செய்யப்படாமலில்லை. 22-வது உட்பிரிவின் ஷரத்தில், அதற்கு வரையறை விதிக்கப் பட்டிருக்கிறது முதலாவது, வாரமாக அல்லது விளைச்சலின் பாகமாக (தானியமாக) வரி செலுத்தப் படும் வரை, அதை உயர்த்துவதற்கு யாதொரு ஏதுவும் இல்லை. மசோதாவின் பிரகாரம், வாரக்கிஸ்தி உயர்த்தப்படமுடியாது பணக்கிஸ்திதான் உயர்த்தப்படலாம். அதுவும் கலெக்டர் முன் வியாஜ்ஜியத்தின் மூலமாகவே செய்யப்படலாம். ஷரத்து பின்வருமாறு கூறுகிறது.

"ஆனால் நிலம் அமைந்திருக்கும் கிராமத்தில் ஏற்படுத்தப்பட்ட "வாரம்" என்னவென்பது அறிய முடியாவிட்டால், 33-வது பிரிவினுள்ள விதியின் பிரகாரம் பணவரியாக மாற்றப்பட்ட வாரத்தின் மதிப்பிற்கு அதிகமாக வரியை உயர்த்த முடியாது என்று இந்தப் பிரிவில் தெரி விக்கப்பட்டிருக்கிறது." இவ்வாறாக, குடியானவன் செலுத்தும் வரியை ஒழுங்குப்படுத்தி வரை யறை விதித்த 1802-ம் வருஷத்திய ரெகுலேஷனின் நோக்கத்தை தொடர்ந்து நிறைவேற்று வதற்கு சர்க்கார் இந்த மசோதாவில் தக்க பிரயத்தனம் செய்திருக்கிறார்கள். பிரசங்க தொடக் கத்தில் நான் கூறியதைப்போல், இந்த மசோதாவின் கீழ்வரும் ஒரு வகுப்பினரைப்பற்றி எனக்கு சற்று கவலையாக இருக்கிறது. 1802-ம் வருஷத்திலிருந்து ஸ்திரமாக ஏற்படுத்தப்பட்ட வரியைச் செலுத்திவரும் குடியானவனை நான் குறிக்கிறேன். 1802-ம் வருஷத்திலிருந்து, ஸ்திரமான பணவரியைக் குடியானவன் செலுத்தி வந்திருந்தால், அது ருஜுப்படுத்தப்பட்டால் இப்பிரிவு வரி உயர்விலிருந்து அவனை எப்படித்தப்புவிக்கும் என்பது எனக்குத் தெளிவாக விளங்கவில்லை. ஆனால், குடியானவனுக்கு அதிக நஷ்டம் உண்டாகும் என்பதும் எனக்குச் சந்தேகமே. சட்ட அறிவிப்புகளில் (**Law reports**) சமீபத்தில் தெரிவிக்கப்பட்ட பல வழக் குகளில், பணவரிகள் ஒருபொழுதும் மாற்றப்படவில்லை என்பதை குடியானவர்கள் நிலை நாட்டியிருக்கிறார்கள். ஸ்தாபிதமான வரியைச் செலுத்திவர குடியானவர்கள் கடமைப்பட்டி ருக்கிறார்களே யொழிய, அதற்கதிகமான வரியைச் செலுத்த குடியானவர்கள் கடமைப்பட்டில்லை என்று தீர்ப்புக்கூறியிருக்கின்றன. கிராமத்தின் நியாயமான வார விகிதம், என்ன என்பதை ருஜுப்படுத்துவது, சிலர் நினைப்பதுபோல் அவ்வளவு கஷ்டமான காரியம் அல்ல. தெற்கி லுள்ள ஜில்லாக்களில் இந்த விகிதங்கள் என்னவாயிருந்தனவென்பது இலகுவாய் அறியப் படலாம். பெரும்பான்மையாக பண வரிகள் இருந்து வருகிற வட சர்க்கார் பிரதேசங்களில் கூட வார விகிதத்தையறிவதற்கு ஆதாரம் இருக்கிறதென்பது ஒத்துக்கொள்ளப்பட்டிருக்கிறது. 1898-ம் வருஷத்திய மசோதாவைப்பற்றி கஞ்சம் ஜில்லாவிலுள்ள கள்ளிகோட், அட்டகாட ஜமீன்களின் ஏஜெண்ட் சர்க்காருக்குத் தெரிவித்த அபிப்பிராயத்தில், அது நன்கு விளக்கப்பட்டி டிருக்கிறது. அவர் தெரிவித்ததாவது.—

"விளைச்சலில், ராஜபாகத்தை அல்லது ஜமீன்தார் பங்கை குடியானவன், ஒவ்வொரு வருஷமும் ஜமீன்தாருக்குச் செலுத்தவேண்டும்; ஆனால் வழக்கத்தில், ஏற்படக்கூடிய விளைச்சலை மதிப் பிட்டு ஒவ்வொரு வருஷமும் வரி நிர்ணயம் செய்யப்படுகிறது. நடக்கும் பசலிக்கு, என்ன வரி ஏற்படவேண்டும் என்பதை குடியானவர்களும் ஏஜெண்டும் கலந்து முடிவு செய்கிறார்கள். வரியானது, குறிக்கப்பட்ட ஓரளவு தொகையாகவோ, தானியமாகவோ ஏற்பாடு செய்யப்படுகிறது."

"வரி விகிதத்தைப்பற்றி குடியானவர்களும் ஏஜெண்டும் ஒப்புக்கொள்ளாவிட்டால், ஜமீன்தாருக்குச் சேரவேண்டிய பாதி பாகம், மத்தியஸ்தர்களால் விளைச்சலில் மதிப்பிடப்பட்டு முடிவு செய்யப் படுகிறது. . . . ."

"குடியானவர்களின் அனுபவ உரிமைகளை (**prescriptive rights**) இது நன்கு தெரிவிக்கிறது; ஜமீன்தார் அனுசரிக்கும் முறை எதுவாயினும், இவ்வுரிமைகள், குடியானவர்களுக்கு சகஜமாக எல்லாவிடங்களிலுமில்லை என்று சொல்வது அசம்பாவிதமாகும்."

குடியானவர்களுக்கும் ஜமீன்தாருக்கும் உள்ள உரிமைகளைப்பற்றி மேலே தெரிவித்த விளக்கத்தி லிருந்து, பின் வரும் மூலாதாரத்தத்துவங்களும் உரிமைகளும் தொன்று தொட்டு உள்ளன என்பது ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறது. அவையாவன :—

(1) ஜமீன்தார் வரி வசூலிப்பவரே தவிர வேறல்ல. அவருக்கு நில உரிமை கிடையாது.

(2) ஜமீன்தார் தனது பண்ணை நிலங்களை அதிகரிக்க முடியாது; அது அனுமதிக்கப்படாது.

(3) சாசுவத செட்டில்மெண்டின் பலிதமாக ஜமீன் ஆஸ்தி மதிப்பில் மூன்றிலொரு பாகத்தை ஜமீன்தார் அடைந்தார். ஜமீன்தார் சர்க்கார் வரியை வசூலித்து, அதில் மூன்றில் இரண்டு பாகத்தை சர்க்காருக்குச் செலுத்தவேண்டியது. மிச்சமான மூன்றிலொரு பாகத்தைத் தான் எடுத்துக்கொள்ளலாம்.

(4) ஜமீன்தாருக்குக் கொடுக்கப்பட்ட மூன்றிலொருபாகம், ஜமீன் ஆஸ்தி மதிப்பில் குறைந்தது மூன்றிலிரண்டு பாகம் இருக்கு மென்று, ஸர். பாஷியம் அய்யங்கார் மதிப்பிட்டிருக்கிறர். அதாவது, சாசுவத செட்டில்மெண்ட் காலத்தில் நிரந்தரமாக முடிவு செய்யப்பட்ட கிஸ்தி ("ரெண்ட்" என்றும் அழைக்கப்பட்டது) மாற்றமுடியாதது ; உயர்த்தமுடியாதது.

(5) தரிசு நிலங்கள்—

(a) சாசுவத பைசலுக்குப் பிறகு சாகுபடி செய்யப்பட்ட தரிசு நிலங்களில், குடியானவனுக்குள்ள அனுபோக உரிமை, அங்கீகரிக்கப்படுதல்.

(b) சாகுபடி செய்யப்பட்ட தரிசு நிலங்களின் வரி விகிதங்கள், சாசுவத பைசல் காலத்தில் சாகுபடி சய்யப்பட்ட நிலங்களுக்கு ஏற்பட்ட வரி விகிதங்களைவிட அதிகமாக இருக்கக்கூடாது.

(c) தரிசு நிலங்கள் சாகுபடி செய்யப்பட்டால், அவைகளுக்கு, ஜமீன்தார் தனக்கிஷ்டமான வரி விகிதங்களை ஏற்படுத்தலாகாது.

(d) சாகுபடி விஷயமாக, தங்களுக்குள்ள இதர நிலங்களில் குடியானவர்களுக்கு என்ன உரிமைகள் இருக்கின்றனவோ, அதே உரிமைகள், தரிசு நிலங்களிலும் உண்டு என்பது, அங்கீகரிக்கப்படுதல்.

(e) எக்காரணத்தைக் கொண்டும், வாரக் கிஸ்தி உயர்த்தப்படமுடியாது.

(f) பணக் கிஸ்திதான் உயர்த்தப்படலாம், அதுவும், சட்டத்தின் 30–34 பிரிவுகள் குறிக்கும் சந்தர்பங்களில்த் தான்.

(g) குடியானவன் ஜமீன்தாருக்குச் செலுத்தும் தொகை, "ரெண்ட்" (வாடகை) அல்ல ; "கிஸ்தி" யாகும், "கிஸ்தி" என்ற வார்த்தை, வரி என்று பொருள்படும். அதற்காகவே "ரெண்ட்" என்ற வார்த்தையை அகற்றி, அதன் ஸ்தானத்தில், வரியென்று பொருள்படும் "கிஸ்தி" என்ற வார்த்தையை உபயோகிக்கத்தீர்மானிக்கப்பட்டது.

மசோதா, முடிவில் சட்டமாகத்தோன்றியபொழுது, மேற்கூறிய அடிப்படைத் தத்துவங்களிலும், உரிமைகளிலும், எவை நிறுத்திக்கொள்ளப்பட்டன, எவை நீக்கப்பட்டன, அவை என்ன காரணங்களுக்காக அவ்வாறு செய்யப்பட்டன, புதிதாக ஏற்பட்ட உரிமைகள், கடமைகள் என்ன, என்பவைகளைப்பற்றி, இப்பொழுது நாம் ஆராய்வோம். எஸ்டேட் நிலச்சட்டம், ஜமீன்தாருக்கு, நிலத்தில் பிரத்தியேகமான "உடைமை உரிமைகளை" வழங்கினதா, என்பதைப்பற்றியும் ஆராய்வோம்.

உடைமை உரிமை (Proprietary right).

சட்டத்திலுள்ள விதிகளை அனுசரித்து, இவ்விஷயங்களைப் பரிசீலனை செய்வோம்.

1. "உடைமை உரிமை."—எஸ்டேட் நிலச்சட்டத்தின் 4-வது பிரிவின்படி, ரயத்தி நிலங்களிலிருந்து வரி வசூல் செய்யும் உரிமையே, ஜமீன்தாருக்குள்ள உரிமை என்பது முன்னரே எடுத்துக்காட்டப்பட்டிருக்கிறது. எஸ்டேட் நிலச்சட்டத்தின் 4-வது பிரிவின்படி, ஜமீன்தார், வரி வசூலிப்பவரே தவிர வேறல்லவென்றும், "ரயத்தி" நிலங்களை அடைந்து அனுபவிப்பதற்கு, ஜமீன்தாருக்கு உரிமையில்லையென்றும் பிரிவி கௌன்சில் தெரிவித்திருக்கிறது. **(I.L.R. 45 Madras, p. 586)** ஜமீன்தாருக்கு மேல்வாரத்திலேயே உடைமை உரிமையிருக்கிறது, குடிவாரத்தில் இல்லை.

வரி உயர்வுகள்.

2. வரி உயர்வு சம்பந்தமாக, ஜமீன்தாருக்குள்ள உரிமை என்னவென்பதைப்பற்றி, அடுத்த படியாக ஆராய்வோம்.

(a) 1802-வது வருஷத்தில், சாசுவத பைசல் காலத்தில், நிரந்தரமாக வரி விதிக்கப்பட்ட நிலங்கள் மீது,

(b) 1802-வது வருஷத்திற்குப் பிறகு, சாகுபடி செய்யப்பட்ட தரிசு நிலங்களில்.

வரியை உயர்த்துவது சம்பந்தமாக, ஜமீன்தாருக்குள்ள உரிமைகள் சட்டத்தின் 30–34 பிரிவுகளில் தெரிவிக்கப்பட்டிருக்கின்றன.

என்ன காரணங்களுக்காக, ஜமீன்தார் வரியை உயர்த்தலாம் என்பது, 30-வது பிரிவில், தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

தாலுகாவில் அல்லது ஜமீன் பகுதியில் (டிவிஷன்) முக்கிய உணவுத் தானியங்களின் சராசரி ஸ்தல விலைவாசிகள் அதிகரித்தால், ஜமீன்தார் அப்பொழுது உயர்ந்த வரி கேட்கலாம், என்று மேற்படி பிரிவின், 1-வது உட்பிரிவில் குறிக்கப்பட்டிருக்கிறது. விலை வாசிகள் உயர்வதும், குறைவதும், தவருன ஆதாரத்தின் மீது ஏற்பட்ட நியாயமற்ற வரி வசூல் முறையும், குடியானவர்களுடைய தொல்லைகளுக்கும், துயரங்களுக்கும் காரணமாயிருந்து வருகின்றன. விலை வாசிகள் உயர்ந்தால், அக்காரணத்தைக்கொண்டு வரி உயர்த்தப்படலாம் என்று விதிகள் இருந்தாலும், நிரந்தரமாக, வரி விதிக்கப்பட்ட நிலங்களுக்கு அவை செல்லா. (1)-வது உட்பிரிவிலுள்ள முதல் ஷரத்தில் இது தெளிவாகத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

முப்பதாவது பிரிவின், 1-வது [அதன் (a), (b) ஷரத்துகளுடன்] 2, 3, 4, உட்பிரிவுகள், அவைகளின் விளக்கங்களுடன் பின்வருமாறு தெரிவிக்கப்படுகின்றன :—

பிரிவு 30.—குடியானவன், தன் அனுபோகத்திலுள்ள நிலத்திற்கு, பண வரி செலுத்தினல், கீழ்க்கண்ட காரணங்களைக்கொண்டு, அல்லது தெரிவிக்கப்பட்ட ஏதாவதொரு காரணத்தைக்கொண்டு, ஜமீன்தார், வரியை உயர்த்தவேண்டுமென்று கலெக்டருக்கு மனுச்செய்துகொள்ளலாம். மற்ற காரணங்கள் செல்லா :—

(1) தற்போதைய வரி அமுலிலிருக்கும்பொழுது, தாலூகாவில் அல்லது ஜமீன்தாரி டிவிஷனில், முக்கிய உணவு தானியங்களின், சராசரி ஸ்தல விலைகள் உயர்ந்திருக்கின்றன—

(a) ஆனல், வரியானது, நிரந்தரமாக ஏற்பட்டிருந்தால், விலைவாசிகள் உயர்ந்திருக்கின்றன என்ற காரணத்தால் மேற்படி வரியை அதிகரிக்கமுடியாது.

(b) மேலும், இந்த உட்பிரிவின்படி முன்னிருந்த நில வரியை, ரூபாயில் இரண்டு அணுவுக்கு அதிகமாக உயர்த்தமுடியாது.

(2) தற்போதைய வரி, அமுலிலிருக்கும்பொழுது ஜமீன்தார் செலவால், அல்லது பிரயத்தனத்தால், நிலத்தின்விளைச்சல் அதிகரித்திருக்கிறது.

(3) சர்க்கார் செலவால், ஏற்பட்ட நீர்ப்பாசான அமைப்பு அல்லது அபிவிருத்திக்கு, ஜமீன்தார், சர்க்காருக்கு, கூடுதலான தொகை அல்லது விகிதத்தை நியாயமாகச் செலுத்த நேரிட்டிருக்கிறது.

(4) குடியானவனுடைய நிலத்தின் விளைச்சல், "ஆற்றுப்போக்கு" காரணமாக அதிகரித்திருக்கிறது.

விளக்கம்.—"ஆற்றுப்போக்கின் செயல்" என்பது, ஆற்றுப்போக்கு மாறினதின் காரணமாக, அதற்கு முன் இல்லாத புதிய நீர்ப்பாசான வசதி ஏற்படுதல்.

(a) ஷரத்தின்படி சாசுவத பைசல் காலத்தில் சாகுபடி செய்யப்பட்ட நிலங்களுக்கு விதிக்கப்பட்ட வரிகள், நிரந்தரமானவை; மாற்றமுடியாதவை. அதேபோன்று மேற்படி பைசலுக்கு பின்னுல், சாகுபடி செய்யப்பட்ட கரம்பு நிலங்களுக்கு விதிக்கப்பட்ட வரிகளும், சாசுவத பைசல் காலத்தில் சாகுபடியான நிலங்களுக்கு, நிரந்தரமாக ஏற்பட்ட வரிகளைவிட அதிகமாக உயர்த்தப்படமுடியாது.

இவ்விஷயத்தைப்பற்றி, சட்டம் வெகு தெளிவாக ஏற்பட்டிருக்கிறது. ஆனுல், வார்த்தைகள் அமைக்கப்பட்ட போக்கிலிருந்து, பட்டா ரெகுலேஷனுனும், 1802-ம் ஷூத்திய சாசுவத பைசல் ரெகுலேஷனுனும், அங்கீகரிக்கப்பட்ட குடியானவனது உரிமைகளை, வழக்கறிஞர்களும், நீதிபதிகளும், கண்டுபிடிக்க முடியவில்லை. இன்னும் அதை விளக்கிக்கூறில், 1802-ம்ஷூத்திய XXX ரெகுலேஷனின் 9, 7, பிரிவுகளிலுள்ள விதியானது, 1865-ம் ஷூத்திய, VIII நிலவரிச்சட்டத்திலும், 1908-ம் ஷூத்திய I சட்டத்திலும் அமைக்கப்பட்டு, ஜமீன்தார் செலுத்தவேண்டிய பேஷ்கஷைப்போலவே, சாசுவத பைசல் காலத்தில் (1802) குடியானவர்களின் நிலங்களின்மீது நிர்மாணிக்கப்பட்ட வரி விகிதங்களும், நிரந்தரமாக ஏற்பட்டவையென்று, விளக்கியிருந்தால், இப்பொழுதுள்ள சங்கடம் ஏற்பட்டிராது. அவ்வாறே, கௌரவமிக்க போர்ப்ஸ் துரையவர்கள் கூறியவாறு, கரம்பு நிலங்களில் குடியானவனுக்குள்ள அனுபோக உரிமை, அங்கீகரிக்கப்பட்டிருக்கிறதென்றும், சாசுவத பைசல் காலத்தில், சாகுபடியான நிலங்களுக்கு விதிக்கப்பட்ட மாமூலான விகிதத்தைவிட அதிகமான கிஸ்தியை, குடியானவன் கரம்பு நிலத்திற்குக் கொடுக்க கடமைப்பட்டவனல்ல என்றும், தெளிவாகத் தெரிவித்திருந்தால், யாதொரு இக்கட்டும் ஏற்பட்டிராது. ஆனுல், சாதாரணமாக, சட்டம் செய்வோர்களின் போக்கு அப்படிப்பட்டதல்ல. பிரிவுகளில் உபயோகித்துள்ள, பொதுவான நிச்சயமற்ற வார்த்தைகளை, வழக்கறிஞர்களும், நீதிபதிகளும், தங்கள் சொந்த அனுபவத்தைக்கொண்டு, பொருள்செய்து கொள்வார்கள் என்று எண்ணி, சுருக்கத்தை உத்தேசித்து, பிரிவுகளை மிகவும் நெருக்கியடக்கிய முறையில், செய்துவிடுகிருர்கள். அப்படி, பொதுவான, நிச்சிதமற்ற முறையில் 30-வது பிரிவின், (1)-வது உட்பிரிவிற்கு, (a) ஷரத்தை அமைத்திருப்பதற்கு பதிலாக, போர்ப்ஸ் துரையவர்கள், கூறிய விளக்கமான வார்த்தைகளை அவர்கள் அனுசரித்திருந்தால், தொல்லையாவும் தொலைந்துபோயிருக்கும். இக்காரணத்தை முன்னிட்டும், 1822-ம் ஷூத்தில் அங்கீகரிக்கப்பட்ட முறையும், கொள்கையும், நாளது தேதிவரை, சரியான நியாயமாகவும், இருதரப்பாருடைய (குடியானவன், ஜமீன்தார்.) உரிமைகளின் நேரான விளக்கமாகவும், நிலை நாட்டப்பட்டிருக்கிறதென்பதை எடுத்துக்காட்டுவதற்கே, நாங்கள் ஒவ்வொரு விஷயத்தையும், சட்டரீதியாகவும், நியாய ரீதியாகவும், சரித்திர முறையாகவும், பரிசீலனை செய்துவருகிறோம். சட்டப்பிரிவுகளில் உபயோகித்துள்ள வார்த்தைகள், எவ்வளவு குற்றம் குறையோடிருந்தபோதிலும், மேற்கூறிய உண்மை எப்பொழுதும் ஒப்புக்கொள்ளவேண்டியதே. 30-வது பிரிவின் (1)-வது உட்பிரிவில் அமைத்துள்ள விதி 1802-ம் ஷூத்தில் தீர்மானிக்கப்பட்ட நிலங்களுக்கும், அக்காலத்திற்கு பிறகு, சாகுபடிக்கு கொண்டுவரப்பட்ட கரம்பு நிலங்களுக்கும் செல்லாதென்றால், எவைகள் சம்பந்தமாக அது செல்லும், வரி, நிரந்தரமாக விதிக்கப்படாத நிலங்களுக்கே, அவ்விதி செல்லவேண்டுமென்பது சட்டத்தை இயற்றியவர்களின் கருத்தாகும். சாசுவத பைசல் காலத்தில், கணக்கில் சேர்க்கப்படாத தரிசு நிலத்திற்கே, வரி நிரந்தரமாக விதிக்கப்படவில்லை. அந்த தரிசு நிலங்களுக்குக்கூட சாசுவத பைசல் காலத்தில் விதிக்கப்பட்ட வரியைவிட அதிகமான வரியைக் கேட்பதற்கு ஜமீன்தாருக்கு உரிமையில்லை என்பதை முன்னரே தெரிவித்திருக்கிறோம். அதாவது தரிசு நிலத்தை சாகுபடி செய்யும் குடியானவனிடமிருந்து ஜமீன்தார் வசூலிக்கக்கூடியவரி, சாசுவதபைசல் காலத்தில், அத்தகைய நிலங்களுக்கு, ஏற்பட்ட வரியைவிட அதிகமாக இருக்கக்கூடாது. இத்தகைய உயர்வான வரி விகிதங்கள், தரிசு நிலங்களுக்குக் கூட அதிகரிக்கக்கூடாதென்பது ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறது. பண் படுத்தி, சாகுபடி செய்து, மற்ற நிலங்களைப்போல நல்ல விளைச்சலைத் தருவதற்கு, குறைந்த வரி விகிதத்திற்கு, குடியானவனுக்கு கொடுக்கப்படும் தரிசு நிலங்களுக்குத்தான், 30-வது பிரிவின் (1)-வது உட்பிரிவு செல்லும்.

குடியானவர்களுக்கு, குறைந்த வரி விகிதங்களுக்கு கொடுக்கப்பட்ட தரிசு நிலங்கள், குடியானவர்களின் உழைப்பாலும், முயற்சியாலும், மற்ற நிலங்களைப்போல் நல்லபலன் தருவதை, நாம் பல சமயங்களில் கண்கூடாகக் கண்டிருக்கிறோம். அப்பொழுது, மேற்படி நிலத்திற்கு விதிக்கப்பட்ட சொற்ப வரியை வசூலிப்பதற்கே ஜமீன்தாருக்கு உரிமை உண்டு; விலைவாசிகள் உயர்ந்து, அதன் மூலமாக, குடியானவர்களுக்கு ஏராளமான லாபம் ஏற்பட்டால், மேற்படி விலைவாசி உயர்வின் காரணத்தைக்கொண்டு, ஜமீன்தார் அதிக வரியைக் கேட்கலாம். 30-வது பிரிவுக்குள்ள இந்த ஷரத்து புதிதானதென்று இச்சந்தர்ப்பத்தில் குறிப்பிடத்தக்கது. அது, 1865-ம் ஷூத்திய வரி வசூல் சட்டத்தில் இல்லை. வரி வசூல் சட்டத்தில் உத்தேசிக்கப்பட்டுள்ள வரி உயர்வுகள், (11-வது பிரிவு,—உட்பிரிவுகள் 1—4) விலை உயர்வு சம்பந்தமான வரி உயர்வுகளையாவது, விலை குறைந்தது என்ற காரணத்தைகொண்ட வரிக் குறைவையாவது, குறிக்கவில்லை. 1802-ம் ஷூத்திலிருந்து, குடியானவனுக்கும், ஜமீன்தாருக்கும்உள்ள சம்பந்தத்தை தெரிவிக்கும் சட்டத்தில் விலை உயர்வுக்காக, வரி உயர்த்தலாம் என்ற ஷரத்து கிடையாது. ஏனெனில், சாசுவத பைசல்காலத்தில், சாகுபடியான நிலங்களுக்கு நிரந்தரமாக விதிக்கப்பட்டன. 1802-ம் ஷூத்திய XXX ரெகுலேஷன், 15-வது பிரிவின்படி, தரிசு நிலங்களுக்குகூட உயர்வான வரி (**maximum rate**) நிரந்தரமாக விதிக்கப்பட்டது. இவ்வாருக தரிசு நிலங்களுக்கு வரி உயர்த்தும் உரிமை, குறைந்த வரி விகிதங்களுக்கு, குடியானவர்களுக்குக்கொடுக்கப்பட்ட தரிசு நிலங்கள் சம்பந்தமாகவே செலுத்தப்படலாம். அப்பொழுதுங்கூட, மாமூலாக, ஏற்பட்ட வரி விகிதத்திற்கு அதிகமாக இருக்கக்கூடாது.

வரியை உயர்த்துவதற்கு, இரண்டாவது காரணத்தைத் தெரிவிக்கும், 30-வது பிரிவின் (2)-வது உட்பிரிவை இப்பொழுது ஆராய்வோம். அதாவது, ஜமீன்தார் தனது செலவால்செய்த அபிவிருத்தியின் பலிதமாக நிலத்தின் விளைச்சல் அதிகரித்து, குடியானவனுக்கு அதிகலாபம் ஏற்பட்டால், வரியை உயர்த்தலாம் என்பது.

இந்த ஷரத்திற்கும், 1865-ம் வருஷத்திய வரி வசூல் சட்டத்தின் 11-வது பிரிவின், (4)-வது உட்பிரிவிலுள்ள (2)-வது ஷரத்திற்கும், யாதொரு வித்தியாசமுமில்லை. குடியானவன் தானுகவே விட்டுவிட்டதின் காரணமாகவாவது, அல்லது அசட்டைமூலமாவது, சாகுபடி செய்யாமல் காலியாக இருக்கும் அனுதிக் கரம்பு நிலங்களுக்கே, (4) உட்பிரிவின் ஷரத்து செல்லும். சமீபத்தில் ஏற்பட்ட சட்டத்தின் காரணமாக, அனுதிக் கரம்பு என்ற பாகுபாடு மறைந்து விட்டது. 30-வது பிரிவின், (2)-வது உட்பிரிவின்படி, உயர்ந்த வரி கேட்கும் உரிமை எல்லா ரயத்தி நிலங்களுக்கும் செல்லும்படி ஏற்படுத்தியிருப்பது விரோதமாயி

ருக்கிறது. 1802-ம் வருஷத்தில், வரி விகிதங்கள் சம்பந்தமாக குடியானவனுக்குக் கொடுக்கப்பட்ட உரிமைகளுக்கு, அது முற்றிலும் மாறுனது. சாசுவத பைசல் விகிதங்களை விட குறைவான விகிதங்களுக்கு கொடுக்கப்பட்ட தரிசு நிலங்களுக்குத்தான் அது செல்லவேண்டும். மேற்படி நிலம், குடியானவனுக்குச் சொந்தமானது. அதற்கு, அபிவிருத்தி ஏற்பட்டாலும், ஏற்படாவிட்டாலும், நிரந்தரமாக விதிக்கப்பட்ட வரி ஒரே படித்தாக இருக்கவேண்டுமேயொழிய, உயர்த்த முடியாது. குடியானவனுடைய கடமையும், நிரந்தரமாக நிலத்தையே சார்ந்திருக்கிறது. ஆகையால், 1802-ம் வருஷத்தில், சாகுபடியான நிலங்களுக்கு, ஜமீன்தார் அபிவிருத்தியைச் செய்து, அதற்காக அதிக வரியைக் கேட்பது நியாயமானதல்ல ; அப்படிப் பட்ட உரிமை ஏற்படுவதற்கும் இடமில்லை. 1865-ம் வருஷத்திய VIII சட்டத்தின் 4-வது உட்பிரிவிலிருந்து, அது, வெகு கிரமமாக விலக்கப்பட்டிருக்கிறது. மேலும், எஸ்டேட் நிலச்சட்டத்தின் 30-வது பிரிவின் 2-வது உட்பிரிவாகிய இது, முதலாவது உட்பிரிவின் முதலாவது ஷரத்திற்கு மாறுனதாக இருக்கிறது. நிரந்தரமாக விதிக்கப்பட்ட எல்லா நிலங்களும் (சாகுபடியான நிலங்களும், தரிசு நிலங்களும்) 1-வது உட்பிரிவின் விதியிலிருந்து, மேற்படி உட்பிரிவின் (1)-வது ஷரத்தால் விலக்கப்பட்டிருக்கிறன. ஆதலால் 30-வது பிரிவின் (2)-வது உட்பிரிவின் கீழ், ஜமீன்தாருக்குக் கொடுக்கப்பட்ட உரிமை, நியாயமானதல்லவென்றும், அது நீங்கவேண்டுமென்றும், நாங்கள் அபிப்பிராயப்படுகிறோம்.

(3)-வது உட்பிரிவை இப்பொழுது எடுத்துக்கொள்ளுவோம். இதன்படி, சர்க்கார் செலவால் குடியானவன், நிலத்திற்கு அபிவிருத்தி ஏற்பட்டு, அதற்காக கூடுதலான பேஷ்கஷை, ஜமீன்தார், சர்க்காருக்கு கொடுக்க நேரிட்டால், அப்பொழுது, குடியானவன் செலுத்தும் வரியை, ஜமீன்தார் உயர்த்தலாம். வரி வசூல் சட்டத்தின் 2-வது பிரிவின் (4)-வது உட்பிரிவைச் சேர்ந்த (2)-வது ஷரத்திலுள்ள விதியையே இது அனுசரித்திருக்கிறது. 30-வது பிரிவின் (2) வது உட்பிரிவைப்பற்றி மேலே தெரிவித்ததெல்லாம், இந்த (3)-வது உட்பிரிவிக்கும், சமமாகவே (இன்னும் சொல்லப் போகில், அதிக பொருத்தத்துடன் செல்லும்) செல்லும். நிலத்திற்கு, சர்க்கார் அபிவிருத்தி செய்தார்கள் என்றால், அது, அவர்கள் பெறும் நிலவரி சம்பந்தமான கடமையாகும். பொது நல ஏதுவான, இத்தகைய அபிவிருத்திகளைச் செய்வதற்கும், குடியானவர்களுக்கும் இதர ஜனங்களுக்கும் பாதுகாப்பு அளிக்க ராணுவம் வைத்துக்கொள்வதற்கும், சர்க்காருக்குப்பணம் வேண்டுமென்ற காரணத்திற்காகவே நிலவரி வசூல் செய்யப்படுகிறது. சர்க்காருக்கு இக்கடமையில்லாவிட்டால், இக்கடமையல்லாத மற்ற விஷயங்களை சர்க்கார் செய்தால், அது வேறு விஷயம். ஆனால் அத்தகைய கடமை, ஜமீன்தாருக்கு ஒப்புவிக்கப்பட்டு, அதை ஜமீன்தார் நிறைவேற்றத்தவறினால், அது சம்பந்தமான செலவை, ஜமீன்தார் சர்க்காருக்குத்தரவேண்டு மென்று, சர்க்கார் வற்புறுத்தவது இயல்பே. சர்க்காருக்கும், ஜமீன்தாருக்கும், உள்ள (அத்தகைய) ஏற்பாடு, மிகவும் நியாயமானது, ஒழுங்கானது. வரி வசூலில், தாராளமாக ஒருபாகம் கொடுக்கப்பட்டிருக்கும்பொழுது, அக்கடமை, ஜமீன்தாருக்குக் கடினமானது என்று, எவர் கூறுவார் ? சாதாரண மதிப்பில், ஜமீன்தாருக்கு கொடுக்கப்பட்ட பாகம், உண்மையான பெறுமானத்தை விட அதிகமானது. போர்ப்ஸ் துரை அவர்களின், அரிய பிரசங்கத்தில் தெரிவித்தவாறு, ஜமீன்தாருக்கு கொடுக்கப்பட்ட மூன்றிலொரு பாகம் (மொத்த நிலவரியில்) உண்மையில், ஜமீன் ஆஸ்திமதிப்பில், மூன்றில் இரண்டு பாகத்திற்கு சமமான தென்று, நுட்ப அறிவும் நுண்மாணுழை புலமையும் வாய்ந்த சென்னை வழகறிஞர் ஸர் வி. பாஷியம் அய்யங்கார் கூறியுள்ளார். இதைக் கருத்தில்வைத்து, நில அபிவிருத்திசம்பந்தமாக, சர்க்கார் செலவு செய்தால், அதற்காகக் கூடுதலான பெஷ்கஷை, ஜமீன்தாரிடம் வசூலிப்பது பரம நியாயமான காரியமாகும். மொத்த நிலவரியைப் பெற்ற சர்க்காருக்கும், ஜமீன்தாருக்குமுள்ள கூட்டுக்கடமை அது. அக்கடமையை அவர்கள் பங்கிட்டுக் கொள்ளலாம். குடியானவனுக்கு, அதில் சம்பந்தமில்லை. ஆகையால், எஸ்டேட் நிலச்சட்டத்தின் 30-வது பிரிவின் (3)-வது உட்பிரிவில் தெரிவித்தபடி, சாகுபடி செய்யப்பட்ட நிலங்களுக்கும், தரிசு நிலங்களுக்கும், அபிவிருத்தி காரணமாக, வரி உயர்த்துவது, அநியாயமாகும். 1865-ம் வருஷத்திய VIII வரி வசூல் சட்டத்தின் 11-வது பிரிவின் (4)-வது உட்பிரிவின்படி, அனுதிக்கரம்பு நிலங்களுக்கும், மற்ற நிலங்களுக்கும் செல்லவேண்டிய விதி, சாகுபடி செய்யப்படும் நிலங்களுக்கும், பொதுவான தரிசு நிலங்களுக்கும், விஸ்தரித்திருப்பது, அறிய முடியாமலிருக்கிறது. ஆதலால் 30-வது பிரிவின், (3)-வது உட்பிரிவு ஒழியவேண்டும்.

முடிவில், ஆற்றுப்போக்கு மாறுதலால், நிலத்தின் விளைச்சல் அதிகரித்தது, என்ற காரணத்தைக் கொண்டு, வரியை உயர்த்துவதற்கு, ஜமீன்தாருக்கு உரிமை உண்டு என்று (4)-வது உட்பிரிவில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது ; " ஆற்றுப்போக்கின் " செயல், என்பது ஆற்றுப்போக்கு மாறி விஸ்தீரணமான நிலப் பரப்பின் மீது பரவியதின் காரணமாக, நிலம், அதிக வளப்பமடையும் சந்தர்ப்பங்களுக்கும், செல்லுமாறு, இந்த உட்பிரிவின் விளக்கத்தில், தெரிவிக்கப்பட்டிருக்கிறது. மிகவும் கேடான உப்பு நிலங்கள் மேற்படி " ஆற்றுச் செயலால் " வளப்பமடைவதையும், மேற்கூறிய விளக்கம் குறிக்கும் என்று நாம் கருதலாம்.

(4)-வது உட்பிரிவின்படி வரியை அதிகரிக்க, ஜமீன்தாருக்குக்கொடுக்கப்பட்ட உரிமை (மேலே சொல்லியதிலிருந்து) நியாயமற்ற தென்பதும், அது ஒழியவேண்டுமென்பதும், நன்கு விளங்குகின்றது. வரி விகிதங்களை உயர்த்துவது சம்பந்தமான விதிகளையும், முறைகளையும், தெரிவிக்கும் முக்கிய பிரிவு 30-வது பிரிவாகும். அதுசம்பந்தமான நான்கு விதிகளையும், கொள்கைகளையும் பற்றி இதுவரையே, நாங்கள் தெரிவித்திருக்கிறோம். அவைகள், நியாயமற்றவை, பொருந்தாதவை யென்று ருஜுவான பிறகு, அவைகளையொட்டியுள்ள 31, 32, 33 34-வது பிரிவுகளைப்பற்றி அதிககாலம் செலவழிக்கவேண்டியதில்லை.

(1)-வது உட்பிரிவின்படி, விலைவாசிகளின் உயர்வு காரணமாக, அதிக வரி கேட்கும் வழக்குகளைத் தீர்மானிக்கின்ற அதிகாரிகளுக்கு, ஆதாரமான விதிகளை 31-வது பிரிவு தெரிவிக்கிறது.

அவ்வாறே, (3), (4), உட்பிரிவுகளின்படி, சர்க்கார் செய்த அபிவிருத்திகளால் நிலத்தின் விளைச்சல் அதிகரித்தது என்ற காரணத்தைக்கொண்டாவது. ஆற்றுபோக்கால் வளப்பமடைந்தது, என்றாவது, அதிக வரி கேட்கும் வழக்குகள் சம்பந்தமாக அனுசரிக்கவேண்டிய நடைமுறை விதிகளை 33, 34-வது பிரிவுகள் தெரிவிக்கின்றன.

ஜமீன்தார் செலவில், ஏற்பட்ட அபிவிருத்திக்காக, வரி உயர்த்த வேண்டும், என்ற பாத்தியதைகளை முடிவு செய்வதில், அதிகாரிகள் அனுசரிக்கவேண்டிய விதிகளை, 32-வது பிரிவு தெரிவிக்கிறது. 31-34 பிரிவுகள், முக்கிய பிரிவிற்கு உட்பட்டவை என்ற காரணத்தைக் கொண்டு, நாம் அவைகளைப் பரிசீலனை செய்யாது விட்டுவிடலாம். ஆயினும், மேற்படி பிரிவுகளில் அடங்கியுள்ள சில கொள்கைகளை, ஆராய்ந்து, அவைகள் தவறு என்று நிரூபிப்போம்.

31–34 பிரிவுகளில், என்ன தெரிவித்திருந்தபோதிலும், மற்ற சந்தர்ப்பங்களைக்கருதி, வரியை உயர்த்துவது, ஒழுங்கல்ல அல்லது நியாயமல்ல என்று, கலெக்டர் நினைத்தால், அவர் வரி உயர்வுக்கு, உத்திரவிடக் கூடாதென்று, 35-வது பிரிவு, விஷயத்தைப்பூர்த்தி செய்துவிடுகிறது. இந்த ஷரத்தின் கருத்தென்ன? விலைவாசிகள் உயர்ந்திருந்தும், ஜமீன்தார் அல்லது சர்க்காரால், நிலத்திற்கு அபிவிருத்திகள் செய்யப்பட்டிருந்தும், தெய்வாதீனமாகிய ஆற்றுப்போக்கு மாறுதலால், நிலம் வளப்பமடைந்திருந்தும், வரியை உயர்த்துவது, சரியல்ல அல்லது நியாயமல்ல என்று கலெக்டர் கூறுவதற்கு ஏது இருந்தால், இச்சட்டத்தால் ஜமீன்தாருக்கு அளிக்கப்பட்ட உரிமைகள் என்ன? மேற்படி பிரிவுகளில், அத்தகைய உரிமைகளை ஏற்படுத்துவதற்கு, என்ன நியாயம் இருக்கிறது? இத்தகைய விதிகளைக்கொண்ட எஸ்டேட் நில மசோதாவை சட்டமாக்கிய சட்டசபை தற்போதைய சட்டசபையைப்போல், ஜனப்பிரதிநிதித்வம், வாய்ந்ததல்ல. அச்சட்டசபையில் அமர்ந்த கனவான்கள், செல்வந்தர்களின் நலங்களைப் பாதுகாப்பதற்கு அமர்ந்தவர்கள் ஆகவே நாம் கருதவேண்டும்.

கிராமத்தில், ஸ்தாபிதமாக ஏற்பட்ட வாரம் 40-வது பிரிவின் படி, பணவரியான தொகையை விட, வரி உயர்வு அதிகமாயிருந்தால், அதை கலெக்டர் நிராகரிக்கலாம், என்று மற்றொரு உட்பிரிவு கூறுகிறது. இந்த முறையாக, வரி உயர்வுகள் சம்பந்தமான அத்தியாயம் ஆரம்பித்து, 40-வது பிரிவு, தெரிவிக்கும் வரிமாற்றத்தோடு இணைந்து, லயம் அடைகிறது. வரிமாற்றம் (Commutation of rents) என்பது, ஒரு பிரத்தியேகமான விஷயம். அது சாசுவத பைசலைப்போலவே, மிகவும் பழைமை வாய்ந்தது. அது சம்பந்தமாக ஏற்பட்ட, பல தீமைகளால், குடியானவர்கள், சென்ற 150 வருஷங்களாக, சொல்லொணாத்துயரங்களை அனுபவித்து வருகிறார்கள். நாங்கள் ஒரு பிரத்தியேக அத்தியாயத்தில், வரி மாற்றத்தைப்பற்றி ஆராய்ந்து, ஆதியிலிருந்து இன்றுவரை, அதனால் உண்டான பலதரப்பட்ட விளைவுகளை எடுத்துக்காட்டியிருக்கிறோம்.

வரி உயர்வு விஷயத்தைப்பற்றி, போர்ப்ஸ் துரை அவர்கள், தமது பிரசங்கத்தில் பின் வருமாறு தெரிவித்திருக்கிறார் :—

"மசோதாவின்படி மாற்ற முடியாதது. உயர்த்தக்கூடிய கிஸ்தி, பணக்கிஸ்திதான். அதுவுங்கூட, கலெக்டர்தான் செய்யலாம். மேலும், நிலம் அமைந்துள்ள, கிராமத்தின் ஸ்தாபிதமான வாரம் என்ன என்னவென்பது தெரியக்கூடுமானால், 33-வது பிரிவின்படி, பணக்கிஸ்தியாக மாற்றப்பட்ட தொகை மேற்படி வாரமதிப்பிற்கு அதிகமாக, இப்பிரிவின்படி, உயர்த்தப்படக்கூடாது. அப்படியாக குடியானவன் செலுத்தவேண்டிய வரியை நிர்ணயம்செய்த 1802-ம் வருஷத்திய ரகுலேஷனின் நோக்கத்தை தொடர்ந்து நிறைவேற்றுவதற்கு. மசோதாவில், தக்கவிதிகளை ஏற்படுத்த சர்க்கார் முயன்றனர் என்றும் அவர் கூறினர். பிறகு, அவர் பேசியதாவது, 'பிரசங்கத் தொடக்கத்தில் நான் தெரிவித்தவாறு, இம்மசோதாவின்கீழ்வரும் ஒரு வகுப்பினரைப்பற்றி எனக்கு சற்று கவலையாகவே இருக்கிறது. 1802-ம் வருஷத்திலிருந்து, நிரந்தரமான வரிவிகிதத்தை செலுத்திவந்த குடியானவனையே, நான் குறிக்கின்றேன். 1802-ம் வருஷத்திலிருந்து, நிரந்தரமான பணவரியை, குடியானவன் செலுத்திவந்தான் என்று நிரூபிக்கப்பட்டால், அது, வரி உயர்வு விதியிலிருந்து, மேற்படி குடியானவனை எவ்வாறு தப்புவிக்கும் என்பது எனக்குப் புரியவில்லை. ஆனால், குடியானவனுக்கு, அது அதிக நஷ்டத்தை விளைக்குமென்று நான் கருதவில்லை. பணக்கிஸ்தி, எப்பொழுதும் உயர்த்தப்படவில்லையென்றும், நிரந்தரமாக விதிக்கப்பட்ட வரியையே குடியானவர்கள் செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறார்கள் என்று, கோர்ட்டுகள் கூறியிருக்கின்றன வென்றும், வலியுறுத்தும் (சமீபத்தில் நடந்த) பல வழக்குகள், சட்ட அறிக்கைகளில் தெரிவிக்கப் பட்டிருக்கின்றன'."

அந்த வழக்குகளுக்கு, அவ்வாறு தீர்ப்புக் கூறியதே சரியான முறையாகும். சாசுவத பைசல் காலத்தில், விதிக்கப்பட்ட பண வரியை, சில ஜமீன்களில், ஜமீன்தார்கள், எப்பொழுதும் உயர்த்தவில்லை யென்பதற்கு ஆதாரமாக, தக்க சாட்சியம், எங்கள் கமிட்டி முன்பு கொடுக்கப்பட்டது. இந்த நல்ல திருஷ்டாந்தத்தை, மற்ற ஜமீன்களும் பின்பற்றி நடந்திருந்தால், சாசுவத பைசல் காலத்தில், விதிக்கப்பட்ட வரிகள், மாற்ற முடியாது என்று நிரந்தரமாகச் செய்யப்பட்ட ஏற்பாடு, கலைக்கப்படாமல் சீராக இருந்திருக்கும். அது சம்பந்தமான, வழக்கு வியவகாரங்களுக்கு, கடந்த 150 வருஷங்களாக, குடியானவர்களும், ஜமீன்தார்களும், செய்த, அளவற்ற செலவுகள் மிச்சமாயிருக்கும். அது நல்ல முறையாகவும், சிறந்த விஷயங்களுக்கும், பயன்பட்டிருக்கும்.

31-வது பிரிவில் அமைத்துள்ள விஷயங்களையும், அவைகள் சம்பந்தமான முக்கிய விதிகளையும், இப்பொழுது ஆராய்வோம் :

இப்பிரிவின், (a) உட்பிரிவு பின்வருமாறு :—

"மனுக்கொடுத்த தேதிக்குமுன், 10 வருஷகாலத்தில், ஆசரணையிலிருந்துவந்த சராசரி விலைகளை, மனுக்கொடுத்த தேதிக்குமுன், 10 வருஷங்கள் தொடங்கியபோது முடிந்த 20 வருஷங்காலத்திலிருந்த சராசரி விலைகளோடு கலெக்டர் ஒப்பிட்டுப்பார்க்கவேண்டும்."

1934-ம் வருஷத்திய மதராஸ் எஸ்டேட் நிலச் (திருத்தம்) சட்டத்தின் (1934-ம் வருஷத்திய மதராஸ் சட்டம் VIII) 21-வது பிரிவில் "வியாஜ்ஜியத்தை தாக்கல் செய்தல்" என்ற வார்த்தைகளுக்குப் பதிலாக, "மனு" (Application) என்ற வார்த்தை, புதிதாக ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. இது பிரிவிலுள்ள விதிகளில் மிகவும் முக்கியமானது. விலைவாசி உயர்வை, நிர்ணயம் செய்யும் முறையை இது தெரிவிக்கிறது. மனுச்செய்துகொண்ட தேதிக்குமுன், 10 வருஷ காலமாக இருந்த சராசரி விலையை, முதலில் நிர்ணயம் செய்துகொள்ளவேண்டும். அது, அந்த காலத்திற்கு முன், 10 வருஷகாலமாக இருந்த சராசரி விலையோடு ஒப்பிட்டுப் பார்க்கப்படவேண்டும். (d) உட்பிரிவின்படி, பஞ்ச வருஷங்களைக் கணக்கில் சேர்க்க கூடாது. (e) உட்பிரிவின்படி, வரி உயர்வு எவ்வளவு இருக்கவேண்டுமென்பது, நிர்ணயம் செய்யப்படவேண்டும். மேற்படி உட்பிரிவின்படி, ஒப்பிட்டுப் பார்ப்பதற்குக் கணக்கெடுக்கப்பட்ட சராசரி விலைகளுக்கும், அதற்கு முந்திய 10 வருஷ காலத்திலிருந்த சராசரி விலைகளுக்கும், என்ன தாரதம்மியமிருக்கிறதோ, அதே தாரதம்மியம்தான், உயர்த்தப்பட்ட வரிக்கும், அதற்குமுன்னிருந்த வரிக்கும், இருக்கவேண்டிய தாரதம்மியம். இது, மற்றொரு நிபந்தனை அல்லது கட்டுப்பாட்டுக்கு உட்பட்டது. அதாவது இந்த தாரதம்மியத்தைக் கணக்கிடுவதில், முன்னால் தெரிவிக்கப்பட்ட காலத்திலிருந்த சாராசரி விலைகளைவிட உள்ள அரைவாசி அதிகத்தை, பின்னால் தெரிவிக்கப்பட்ட சராசரி விலைகளிலிருந்து நீக்கிவிடவேண்டும்.

மாகாண அரசாங்கங்களின் அதிகாரத்தின்கீழ் வெளியிடப்பட்ட சராசரி விலைகளே, கிரமமான சராசரி விலைகளென்றும், மாறாக நிரூபிக்கும் வரை, சர்க்கார் அடங்கல்களில் (ரிஜிஸ்டர்ஸ்) காட்டியிருக்கும் விலைகளே, கிரமமானவையென்று, கலெக்டர்கள் யூகிக்கவேண்டுமென்று (c) உட்பிரிவில் விதித்து இருக்கிறது.

உயர்த்தப்பட்ட வரியை, நிர்ணயமாக அறிவது சம்பந்தமாக, விதிக்கப்பட்ட நடைமுறையிலும், 31-வது பிரிவு, (a) உட்பிரிவிலுமுள்ள கொள்கைகள் புதிதானதல்ல. 10 வருஷகாலமாயிருந்தாலும், அல்லது 20 அல்லது 30 வருஷகாலமாயிருந்தாலும், அக்பர் காலத்திலிருந்து, கடைசி எஸ்டேட் நிலச்சட்டத் தேதி வரைக்கும். அனுசரிக்கப்பட்ட முறை, ஒரே முறையாகும். பிரிட்டிஷ் ஆட்சியில், அனுசரிக்கப்பட்ட இம்முறைகளால், குடியானவர்களுக்கு, மெத்த நஷ்டம் ஏற்பட்டிருந்ததாயினும், அவைகள், முன் காலத்தில், மிகவும் அனுகூலமாகவேயிருந்திருக்கின்றன. விலைகள் உயர்ந்தால், வரியை உயர்த்தவேண்டுமென்றுவது, விலைகள் குறைந்தால், வரியை குறைக்கவேண்டுமென்றுவது, யாதொரு விதியும், வரி வசூல் சட்டத்தில் கிடையாது. (Rent Recovery Act) 1865-ம் வருஷத்தில், அச்சட்டத்தைச் செய்தவர்களின் மனதில், வரி மட்டங்களின் சம்பந்தமான விதி தோன்றவில்லை. 1802, 1822-ம் வருஷங்களிலும், அதற்கு பின் வருஷங்களிலும், சட்டத்தைச் செய்தவர்களின் மனதிலும், மேற்படி விதி தோன்றவில்லை. ஏனெனில், விலை உயர்வுக்காக வரியை உயர்த்தவேண்டுமென்ற எண்ணம் உதிக்க அவகாசமில்லை. முன்னர் விளக்கிய வண்ணம், வரி விகிதம் (சாசுவத பைசல் காலத்தில் சாகுபடியான நிலங்களுக்கும், தரிசு நிலங்களுக்கும்), பேஷ்கஷோடு, நிரந்தரமாக ஏற்படுத்தப்பட்டது. அவை இரண்டும் மாற்ற முடியாதவை. ஜமீன்தார்களைப் பொறுத்தமட்டில், மாறுதலின்றி, தொடர்ந்து அமுலிலிருந்திருக்கவேண்டும். சாசுவத பைசல் வரி விகிதங்களைவிட, குறைந்த வரி விகிதங்களுக்கு குடியானவனுக்கு விடப்பட்ட தரிசு நிலங்களே, இதற்கு விலக்காகும். சாசுவத பைசல் தேதியிலிருந்து இன்று வரை, ரயத்துவாரிப் பிரதேசங்களில், சர்க்காரால் அனுசரிக்கப்பட்ட வரிமாற்ற விகிதங்கள், பிரத்தியேகமான அத்தியாயத்தில் ஆராய்ச்சி செய்யப்பட்டிருக்கிறது. 1908-ம் வருஷத்தில், முதன்முதலாக, ஜமீன்தாரிப் பிரதேசங்களில், விலை மட்டப் பரீக்ஷை அனுசரித்திருப்பதின் அநீதி, மேற்படி அத்தியாயத்தில் நன்கு விளக்கப்பட்டிருக்கிறது. இவ்விதி, தவறாக ஏற்படுத்தப்பட்டு, முதலில் உத்தேசிக்கப்படாத ஒருவகைக் குடியானவர்களுக்கு, தவறாக உபயோகப்பட்டிருக்கிறது. ரயத்துவாரிப் பிரதேசங்களில், பொருந்தாது தவறிய விதியை, ஜமீன் பிரதேசங்களில் புகுத்தியிருப்பது விபரீதமே.

1852-ம் வருஷத்திற்கு முன்னும், அதற்குப் பின்னும், அனுசரிக்கப்பட்ட வரி மாற்ற விகிதங்கள், செயல் முறையில், வெற்றி பெறவில்லை என்பதை மேலே தெரிவித்துள்ளோம். வரி விகிதங்கள் நிர்ணயம் செய்வதின் சம்பந்தமாக பின்பற்றப்பட்ட நடவடிக்கைகளின் நிலவரமற்ற தன்மையும், வரி விகிதங்கள் சம்பந்தமாக, போதிய தகவல்கள் கிடைக்காததுமே, அதற்கு காரணம். ரெவினியூ போர்டார் செய்த பரிசீலனைகள், ஆலோசனைகள், ஆகிய இவைகளின் பலிதமாக, 30 வருஷங்களுக்கு ஒரு முறை, ரீ-செட்டில்மெண்ட் ஏற்படல் நிலவரி நிர்மானத்திற்கு தக்க ஆதாரமாக இருக்குமென்று கருதப்பட்டது. முதல் ரீ-செட்டில்மெண்ட், 1866-ம் வருஷத்தில் நிகழ்ந்தது. அந்த ரீ-செட்டில்மெண்டின்படி நிலவரி 100-க்கு 18¾ வீதம் உயர்த்தப்பட்டது. மீண்டும். 1896-ம் வருஷத்தில் ஏற்பட்ட ரீ-செட்டில்மெண்டிலும், வரி உயர்வு ஏற்பட்டது. அதற்குப் பிறகு 1926-ம் வருஷத்தில் ஒரு ரீ-செட்டில்மெண்ட் நடந்தது. அதன்படி நிலவரி, உயர்த்தவேண்டுமென்று தெரிவிக்கப்பட்டது. அது சம்பந்தமாக, பெரிய கிளர்ச்சி ஏற்பட்டதால் மேற்படி உத்தேசிக்கப்பட்ட வரி விகிதங்கள், இந்த ராஜதானியின் பல பாகங்களில், அமுலுக்குக், கொண்டுவரப்படவில்லை. 4 அல்லது 5 வருஷங்களுக்குப் பிறகு, உயர்த்தப்பட்ட வரிகளை, சர்க்கார் வசூலிக்க விரும்புகிறார்கள், என்று தெரிந்தவுடன், கிளர்ச்சி மீண்டும் வலுத்தது. 1932-ம் வருஷத்திய சட்ட மறுப்பு இயக்கம் அல்லது வரி கொடா இயக்கத்தில் பலர் சிறை செய்யப்பட்டனர்.

1908-ம் வருஷத்தில், எஸ்டேட் நிலச்சட்டம் ஏற்பட்ட பொழுது, குடியானவன் அனுபோக உரிமைகள், முதன் முதலாக ஒப்புக்கொள்ளப்பட்டபொழுது, ஜமீன்தாரிப் பிரதேசங்களிலும், ரயத்துவாரிப் பிரதேசங்களிலும் இருந்த பரிஸ்திதிகள், குடியானவன் சுபிட்சத்திற்கு சாதகமாயிருக்குமென்று கருதப்பட்டது. அதன் காரணமாக, குடியானவர்களுக்கு நல்ல பலன்கள் உண்டாகுமென்றும் கருதப்பட்டது. ஆனால், குடியானவர்களுக்கு, கொடிய க்ஷாமகாலம் வரப்போகிறதென்பது அப்பொழுது எவருக்கும் தெரியாது. மூன்றுவது ரீ-செட்டில்மெண்ட் பூர்த்தியான பிறகு, அதனால் ஏற்பட்ட வரிப்பளுவை குடியானவன் தாங்கக்கூடுமென்றும், விரைவில் நல்ல நிலைமைக்கு வருவான் என்றும் நம்பப்பட்டது. 1926-ம் வருஷத்திய ரீ-செட்டில்மெண்ட் ஏற்பட்ட மூன்று வருஷத்திற்குள், எல்லா நாட்டையும் (அதிலும் முக்கியமாக இந்தியாவை) வாட்டக்கூடிய கொடிய உலகப் பொருளாதாரக் கஷ்டம் ஏற்படுமென்று ரீ-செட்டில்மெண்ட் அதிகாரிகளுக்காவது, சர்க்காருக்காவது (1926-ம் வருஷத்தில்) தெரியாது. விலை வாசிகள், அதி-நிஷ்ரோமாகக் குறைந்தன. விலை உயர்வுகளைக் குறித்து, ஒவ்வொரு ரீ-செட்டில்மெண்டிலும் செய்யப்பட்ட புள்ளி விவரங்களும், கணக்குகளும், சீர்குலைந்தன. எஸ்டேட் நிலச்சட்டம் ஏற்படுத்தப்பட்டு, 30—35 பிரிவுகளில் தெரிவித்துள்ளபடி, விலைவாசிகள் உயர்வதற்கு, நிலவரியை அதிகரிக்க விதிகள் அமைக்கப்பட்டபொழுது, உலகப்பொருளாதாரக் கஷ்டம், இந்த நாட்டையும், 1929-ம் வருஷத்தில் பாதிக்குமென்பது அவர்களுக்குத் தெரியவில்லை.

வரி மாற்றம் (Commutation of Rents.)

(பிரிவு 40, எஸ்டேட் நிலச்சட்டம்.)

"வாரத்தை", பணவரியாக மாற்றுவதற்கு விதிகள் ஏற்படுத்தப்பட்டன. (3)-வது உட்பிரிவில் வரி மாற்றம் எப்படி நிர்ணயம் செய்யவேண்டுமென்பது, தெரிவிக்கப்பட்டிருக்கிறது. அது, பின்வருமாறு :—

வரி மாற்றத்தைத் தீர்மானிப்பதில், கலெக்டர் கீழ்க்கண்ட நிபந்தனைகளை கருத்தில் வைத்துக்கொள்ள வேண்டும்.—

(a) மனுச் செய்துகொண்ட தேதிக்கு முன்னுள்ள 10 வருஷகாலத்தில், ஜமீன்தாருக்குச் சேர்ந்த வரியின் சராசரி மதிப்பு ; (சில பிரதேசங்கள் சம்பந்தமாக, பஞ்ச வருஷங்கள் என்று சர்க்காரால் அறிவிக்கப்பட்ட வருஷங்களை, இதில் சேர்க்கக்கூடாது). அல்லது, மேற்படி காலத்தின் சராசரி மதிப்பு அறிய முடியாவிட்டால் (பஞ்ச வருஷங்களைத் தள்ளி) அறியக்கூடிய வருஷங்களின் சராசரி மதிப்பு.

(b) ஒரே கிராமத்தில் அல்லது பக்கத்து கிராமங்களில், ஒத்த தரத்தையும், வசதிகளையுமுடைய நிலத்திற்கு, குடியானவர்கள் செலுத்தும் பணவரி. பணவரி அங்கு ஏற்படாவிட்டால், பக்கத்திலுள்ள தாலூகாவின் கிராமத்திலுள்ள பணவரி,

(c) நிலத்தின் சம்பந்தமாக, குடியானவன் அல்லது ஜமீன்தார் செய்த அபிவிருத்திகளும், அதைப் பற்றி 32-வது பிரிவில், தெரிவிக்கப்பட்டுள்ள விதிகளும்,

விலை மட்டங்களை (price levels) ஆதாரமாகக்கொண்டு, வரிகளை மாற்றும் முறை புதிதாக ஏற்பட்டதல்ல. அது அக்பர் காலத்திலிருந்து சகஜமாக நடந்துவந்த முறையாகும். அவைகள், சரியானயென்றுவது, பரீட்சார்த்தமென்றுவது நிரூபிக்கப்படவில்லை.

வரி மாற்ற விகிதங்களை நிர்ணயம் செய்யும்பொழுது, பக்கத்து நிலங்களுக்கும், கிராமங்களுக்கும், ஏற்பட்ட வரி விகிதத்தையும், நிலத்தின் சம்பந்தமாக, ஜமீன்தார் அல்லது குடியானவன் செய்த அபிவிருத்திகளையும், கணக்கிலெடுத்துக்கொள்ளவேணுமென்று, (b), (c), உட்பிரிவுகளில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

விலை உயர்வுகளைக் கருதியாவது, ஜமீன்தார் செய்த அபிவிருத்தியின் காரணமாக, நிலத்தின் விளைச்சல் அதிகரித்திருக்கிறதென்பதைக் கருதியாவது, நிலத்தின் விஸ்தீர்ணத்தில் மாறுதல் ஏற்பட்டிருக்கிறதென்பதைக் கருதியாவது, வரி மாற்றம் ஏற்படும்பொழுது, அடுத்த இருபது வருஷங்களுக்கு, வரி உயர்வு சம்பந்தமாக மனுச் செய்யக்கூடாதென்று, பாதுகாப்பு விதிமுறையில் (41)-வது பிரிவில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. மேலும், மேற்படி இருபது வருஷங்களுக்கு, எஸ்டேட் நிலச்சட்டம் (38)-வது பிரிவு, (1)-வது உட்பிரிவு. (a), (b) ஷரத்துகளின்படி, நில விஸ்தீர்ணத்தில் மாறுதல் ஏற்பட்டிருக்கிறதென்ற காரணத்தைத் தவிர, மற்ற காரணங்களுக்கு, நில வரி குறைக்கப்படமுடியாது.

43, 44-வது பிரிவுகளின்படி, வரிமாற்றத்திற்கு தகுந்த ஆதாரம்

வரிமாற்ற விகிதங்களை ஏற்படுத்துவதில், அதே கிராமத்தில் அல்லது பக்க கிராமங்களில், ஒத்த தரத்தையும், வசதிகளையுமுடைய நிலத்திற்கு குடியானவன் செலுத்தும் வரியையும், அப்படியில்லாவிட்டால் பக்கத்து தாலூகாவிலுள்ள கிராமங்களின் வரி விகிதங்களையும், விசாரித்தறிய வேண்டுமென்றும், குடியானவன் அல்லது ஜமீன்தார் நிலத்திற்குச் செய்துள்ள அபிவிருத்தியையும், 32-வது பிரிவில் குறித்துள்ள விதிகளையும் மனதில் வைத்துக்கொள்ளவேண்டுமென்றும், சட்டத்தில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. மேலும், நிலத்திற்குச் செய்யப்பட்ட அபிவிருத்தி, எஸ்டேட் நிலச்சட்டத்தின்படி, பதிவு செய்யப்பட்டிருந்தாலொழிய, அல்லது, 1908-ம்வருஷத்திற்குமுன், 15 வருஷங்களுக்குள் மேற்படி அபிவிருத்தி செய்யப்பட்டிருந்தாலொழிய, வரியை உயர்த்தத்தக்க, வரி மாற்றத்தை கலெக்டர் செய்யக்கூடாது ; வரி உயர்வு நிர்ணயம் செய்வதன்முன், கலெக்டர் கீழ்க்கண்ட விஷயங்களில் கவனத்தைச் செலுத்தவேண்டும் :—

(1) மேற்படி அபிவிருத்தியால், ஏற்பட்ட அல்லது ஏற்படக்கூடிய நிலத்தின் அதிக விளைச்சல்.

(2) மேற்படி நில அபிவிருத்தி, சம்பந்தமாக ஏற்பட்ட செலவு ; குடியானவனும், ஜமீன்தாரும், அச்செலவு சம்பந்தமாக, பொறுத்துக்கொண்ட தொகையும்.

(3) மேற்படி அபிவிருத்தியை, நல்ல நிலைமையில் வைத்திருப்பதற்கு, ஏற்படும் வருஷாந்திரச் செலவு. அது சம்பந்தமாக குடியானவனும், ஜமீன்தாரும் பொறுத்துக்கொண்ட தொகை ; சாகுபடிக்குப் பிறகு, அபிவிருத்திகளைப் பயன்படுத்திக்கொள்வதற்கு ஏற்பட்ட செலவு.

(4) முடிவாக, தற்போதுள்ள வரியைவிட, அதிக வரியைத் தாங்குவதற்கு, நிலத்திற்கு சக்தியுண்டா, என்று விசாரித்தல்.

வரியை உயர்த்துவதறகு (32)-வது பிரிவிலுள்ள எல்லா விதிகளையே அனுசரிக்கும், (40)-வது பிரிவின் ஷரத்துகள் (நிலவரியை உயர்த்துவதற்கு (30)-வது பிரிவில் வெளிப்படையாகத் தெரிவித்திருப்பதற்கு மாறாக) புதிய முறையை தெரிவிக்கிறது. மேற்படி பிரிவின் (1) முதல் (4) வரையுள்ள உட்பிரிவுகளின்படி வரி உயர்த்தலாமேயொழிய மற்ற காரணங்களுக்கு, வரி உயர்த்த முடியாது. ஆதலால், (40)-வது பிரிவு, வரிமாற்றம் விதிப்பதற்கு, தகுந்த ஆதார முறையை ஏற்படுத்தவில்லை.

மேலும், (40)-வது பிரிவின்படி வரிமாற்ற காலத்திலுள்ள விலைமட்டங்களை ஆதாரமாகக்கொண்டே வரிமாற்றம் செய்யவேண்டும். இது, சாசுவத பைசல் காலத்தில் குடியானவனுக்கு கொடுக்கப்பட்ட உரிமையை (அனுபோகஸ்திரம், வரிஸ்திரம்) விட்டுக்கொடுப்பதாகும். சாசுவத பைசலுக்கு வெகு காலத்திற்குபின், ஏற்படும் விலை உயர்வுக்குக் காரணம், போக்கு வரவு சாதனங்களின் அபிவிருத்தியும், நாணயப் பெருக்கமும், பிறிதொரு அத்தியாயத்தில், விவரிக்கப்பட்டுள்ள காரணங்களுமே ; ஜமீன்தார் நிலத்திற்குச் செய்த அபிவிருத்தியால் அல்ல என்பது இந்நாட்டின் நிலைமையையறிந்த எவரும் தெரிந்த விஷயமே.

சாசுவத பைசல் காலத்தில், நிரந்தரமாகச் செய்யப்பட்ட அனுபோக ஸ்திரத்தையும், வரி ஸ்திரத்தையும், கருதும்பொழுது சாசுவத பைசல் காலத்திலிருந்த விலைமட்டமே, (40)-வது பிரிவில் குறித்துள்ள விஷயங்களுக்கு அனுசரிக்கப்படவேண்டும். அதாவது சாசுவத பைசல் காலத்திலிருந்த பண வரி விகிதங்களையே, ஜமீன்தார் அடையலாம். (40), (41)-வது பிரிவுகளில் குறிக்கப்பட்டிருக்கும் வரி மாற்றம், வரி வசூல் சட்டத்தில் காணப்படவில்லை. முதன் முதலாக, அது எஸ்டேட் நிலச்சட்டத்தில் ஏற்படுத்தப்பட்டது.

அது, எதற்கு அவ்வாறு செய்யப்பட்டதென்பது அறியக்கூடவில்லை. (40)-வது பிரிவில், " வரிமாற்றம் " என்ற பெயரால், ஏற்படுத்தப்பட்ட வரி உயர்வு, முதலாவது ஒழியவேண்டும். அதற்குக் காரணம் என்னவென்றால், சட்டத்தின் (30)-வது பிரிவில் அத்தகைய வரிவுயர்வு உத்தேசிக்கப்படவில்லையென்பதும், ஆதலால், மேற்படி பிரிவின் விதிகளுக்கு, முற்றிலும் விரோதமானதென்பதும், மேற்படி (30)-வது பிரிவில், குறித்துள்ள சந்தர்ப்பங்களுக்கே, வரிவுயர்வு ஏற்படவேண்டுமென்பதும், மற்ற காரணங்களுக்கு கூடாதென்பதுமே.

எஸ்டேட் நிலச்சட்டத்தின் (30) முதல் (40) வரையுள்ள பிரிவுகளை எவர் தயாரித்தார் என்பது நமக்கு புரியவில்லை. ஒருவரே அவைகளைச் செய்திருந்தால் (30)-வது பிரிவில் தெரிவிக்கப்பட்ட விதிக்கு முற்றிலும் மாறான, (40)-வது பிரிவை சட்டத்தில் அமைத்திருக்கமாட்டார். ஒருவர் செய்ததை, மற்றொருவர் அறியாது, எஸ்டேட் நிலச்சட்டத்தின் பல பாகங்களை, பலர் தயாரித்ததாக, தெரியவருகிறது.

இனிமேல் ஏற்படுத்தப்படும் சட்டத்தில் (40), (41)-வது பிரிவுகள் இருக்கலாகாது. அதற்கு பதிலாக, 1802-ம் வருஷத்திய, XXX-வது ரெகுலேஷனின் 7, 9-வது பிரிவுகளை அமைத்து, " வாரத்தை " பண வரியாக செய்துகொள்பவருக்கு சாசுவத பைசல் காலத்திலிருந்த விலை மட்டங்களின் மீதே வரி மாற்ற விலைகள் ஏற்படுத்தவேண்டும்.

வழக்கு ஏற்படும் தேதியில், ஆசரணையிலிருக்கும், விலை மட்டங்களை ஆதாரமாகக்கொண்டு, வரி மாற்ற விகிதம் ஏற்படுத்துவதின், அநீதியும், அதனால் குடியானவனுக்கு ஏற்பட்ட பெருத்த நஷ்டமும், ரயத்துவாரிப் பிரதேசங்களில் அவ்வப்போது, சர்க்கார் ஏற்படுத்திய வரிமாற்ற விகிதங்கள், முற்றிலும் முறிவடைந்ததும், பிறிதொரு அத்தியாயத்தில், வரி மாற்ற விகிதங்கள் என்ற தலைப்பின் கீழ் ஆராயப்பட்டிருக்கிறது. சாஸ்திரோக்தமானது என்று சொல்லிக்கொள்ளப்படும் ஆதாரத்தின் மீது, புள்ளி விவரங்கள் கணக்கெடுக்கப்பட்டிருந்தும், எஸ்டேட் நிலச் சட்டத்தில் முதல் முதலாக வரி மாற்ற விதிகள் ஏற்படுத்தப்பட்ட இருபது வருஷங்களுக்குள், இந்நாட்டிலும், உலகம் முழுவதும், ஒரு கொடிய வியாபார மந்தம் ஏற்பட்டது. அவ்வியாபார மந்தத்தால், செல்வம் மிகுந்த தேசங்கள் யாவும், " பாப்பர் " நாடுகளாயின. அதற்குக் காரணங்கள் பல. ஆனால் முக்கிய காரணத்தை கீழே எடுத்துக் கூறுகிறோம்.

விலைவாசிகளின் வீட்சியும், உலக வியாபார மந்தமும்.

விரைவில், உலக நாணயமுறையே (Monetary system) சிதைவுறும் என்பதும், 1908-ம் வருஷத்திய எஸ்டேட் நிலச்சட்டத்தில் ஏற்படுத்தப்பட்ட வரிமாறற விலைகளால், விலைவாசிகளுக்கு, கொடிய வீழ்ச்சி ஏற்படுமென்பதும், அதன் காரணமாக குடியானவனுடைய நிலைமை, பாதிக்கப்படுமென்பதும், எஸ்டேட் நிலச்சட்டத்தின் (40), (41)-வது பிரிவுகளைச் செய்தவர்களுக்குத் தெரியாது. உலக யுத்த காலத்தில், விலை வாசிகள், உச்ச நிலையை அடைந்ததற்கு காரணம் ஜமீன்தார் அல்லது குடியானவன் செய்த (நில) அபிவிருத்திகளல்ல. அதைப்போலவே, 1929-30-ம் வருஷங்களில் ஏற்பட்ட விலைவாசிகளின் வீழ்ச்சி, குடியானவன் அல்லது ஜமீன்தார் நிலத்திற்கு அபிவிருத்திகள் செய்யாததின் காரணமாக அல்ல. விலைவாசிகளின் வீட்சிக்கும், வரிமாற்ற விலைகளின் முறிவுக்கும், காரணமாயிருந்த விஷயங்கள், கீழே சுருக்கமாகத் தெரிவிக்கப்பட்டிருக்கின்றன.

வரி மாற்ற விலைகளின் முறிவு.

உலக யுத்தத்தில், வெற்றியுற்ற வல்லரசுகளும், தோல்வியுற்ற தேசங்களும், அமெரிக்கா நாட்டிற்கு கடன்காரர்களாயின. அது மேற்படி கடன்களை, தங்கத்தில் செலுத்தவேண்டுமென்று வற்புறுத்தியது. கடனைத் தீர்ப்பதற்கு, இங்கிலாந்து, பிரான்சு, ஜர்மனி, ஆகிய இந்நாட்டின் கஜானுக்கள் எல்லாம் காலியாக்கப்பட்டன. ஜர்மானிய நாணயமுறையும் பொருளாதார முறையும், சிதைந்து அழிந்தன. ரைஹ்வங்கியும் (சர்க்கார் பாங்க்) ஜர்மனியிலிருந்த இதர, 26,000 வங்கிகளும் அதே சமயத்தில் முறிந்துபோயின. ஜர்மானிய நாணய முறையும் சிதைவுற்றது. அக்காலத்திலிருந்த நிலைமையின்படி, ஜர்மனி தேசத்திற்கு, பொருளாதாரச்சாவு சமீபித்திருந்ததென்றால், அது மிகையாகாது. பிரிடிஷ் தங்கம்யாவும், அமெரிக்கா தேசத்திற்கு அனுப்பி விட்ட பிறகு, பிரிட்டன் தேசமும் அதே நிலைமையில்த் தானிருந்தது. அகில தேச வியாபார அரங்கத்தில், பிரிடிஷ் பவுன் நோட்டுக்கு மதிப்பு ஏறவில்லை. அது, சில சமயத்தில், தனது மதிப்பின் அரைப்பாகத்தைக் கூட எட்டமுடியவில்லை. அதாவது 20 ஷில்லிங்குகளுக்குப் பதிலாக, 7 ஷில்லிங்குகளே பெறுமானதாக இருந்தது. இந்தியா மந்திரி (Secretary of State) இத்தேசத்திற்கு, ஒரு கீழான சூழ்ச்சியைச்செய்து, அதன் மூலமாக, இந்த தேசத்திலிருந்த தங்கத்தையெல்லாம், ஆங்கில நாட்டிற்கு அகற்றியிராவிட்டால், ஆங்கில தேசமும், ஜர்மன் தேசத்து கதியையே அடைந்திருக்கும். நிலைமை, சாவதா, பிழைப்பதா, என்ற நெருக்கடியிலிருப்பதாகவும், அதிலிருந்து தப்பித்துக்கொள்ள தாங்கள் எல்லா வகையான பிரயாசைகளையும், செய்யவேண்டியதாயிருக்கிறதென்றும், பிரிடிஷ் சான்ஸலர், அக்காலத்தில் கூறினார். ஒத்தாசைக்கு, இந்தியாவையே களைகண்ஆகக் கருதினார். இந்தியாவே தனக்குத் தங்கச் சுரங்கமென்றும், பிரிட்டனிலிருந்து அமெரிக்காவுக்கு அனுப்பப்பட்ட தங்கத்தை, இந்த தேசத்திலிருந்து சரிசெய்து கொள்வதாகவும், அவர் வெளிப்படையாகக்கூறினார். இதுவரை, இங்கிலாந்து தேசத்திற்கு, இந்தியாவே தங்கம் அனுப்பி வந்திருக்கிறது. "இந்தியா காரியதரிசி"க்குள்ள அதிகாரத்தின் பலிதமாக, இத்தேசத்திலுள்ள தங்கம் நிர்ப்பந்த முறையில் எவ்வாறு அகற்றிச் செல்லப்பட்டதென்பதை நாம் மறந்துவிடலாகாது. 20 ஷில்லிங் மதிப்புள்ள இங்கிலீஷ் பவுனை, இந்தியாவுக்கு 27, 30 ஷில்லிங்குகளுக்குத்தான் கொடுக்கப்படுமென்று அவர் கூறினார். தங்கத்தைப் பணமாக மாற்றி, கடன்களைத் தீர்த்துக்கொள்வதற்கு அது நல்ல சமயமென்று, இந்தியாவில் ஏழைகளும், பணக்காரர்களும், நினைத்தார்கள். ஆனால், இந்தியா காரியதரிசி அனுசரித்தது, நாணயமான கொள்கையுமல்ல, நாணயமான முறையுமல்ல. ஆனால், அது எப்படியோ ஏற்பட்டுவிட்டது. இந்தியா காரியதரிசியின் நோக்கமும் கைகூடியது. உலகமந்தத்திற்கும், பிற நாட்டுச் சரக்குகள் சம்பந்தமாகவும், இந்நாட்டுச்சரக்குகள் சம்பந்தமாகவும், ஏற்பட்ட விலைவாசிக் குறைவுக்கும், காரணங்கள் பெரும்பான்மையாக, மேலே தெரிவித்த விஷயங்களே. வல்லரசுகள், தங்கள் நாட்டு நலங்களையும், சௌகர்யங்களையும் கருதி, நாணயப்பெருக்கம், சுருக்கம் முதலியன சம்பந்தமாக, தந்திர உபாயங்களை அனுசரித்து, நாணய முறையையும், நாணயமாற்ற முறையையும், தங்கள் வசதிக்கேற்றுற்போல், மாற்றிக்கொண்டதும், ஒரு காரணமாகும்.

இக்காரணமும், மற்ற காரணங்களும் சேர்ந்து, விலை வாசிகளை மிகவும் குறைத்துவிட்டன. அதன் பலிதமாக, இங்கிலாந்து தேசம், தனது தங்க ஆதார ஏற்பாட்டை (gold standard) தொடர்ந்து சமாளிக்க முடியவில்லை. இந்தியா தனது கைவசம் ஏற்பாட்டிலிருக்கும்வரை, உலக வியாபார அரங்கத்தில் (world market) தனது அந்தஸ்தும், ஆதிக்கமும், ஸ்திரமாக இருக்குமென்பதே இங்கிலாந்தின் துணிபு. இந்திய தேசத்தின், தங்க உதவியைக்கொண்டு இங்கிலாந்து சமாளித்துக்கொண்டது. ஜர்மனி தேசம், தனது சொந்தத்திறமையாலும், முயற்சியாலும், தனது நிலைமையை சீர் செய்துகொண்டது. தனது, நாணய முறையும், வர்த்தகமும், சிதைவுற்ற பிறகுகூட, பண்ட மாற்ற முறையை அனுசரித்து பிற நாடுகளோடு, பண்டங்களை மாற்றிக்கொண்டு அதன் மூலம், ஜர்மனி தேசம், தனது இழந்த அந்தஸ்த்தை திரும்பிப்பெற்றதுமேயன்றி, பொருளாதாரத்துறையிலும், அரசியல்த்துறையிலும், முன்னணியில் வந்தது.

ஆனால், பிரிட்டன் தேசத்தின் சகாயம் கிடைக்காமல், வெகுகாலமாக இந்திய விவசாயிகள் அதிக கஷ்டமடைந்து வருகிறார்கள். செயல்முறையில், சித்திபெறக்கூடிய உண்மையான அனுதாபங்கூட, பிரிட்டன் தேசம் இந்திய நாட்டிற்குக் காட்டுவது அரிதாயிருக்கிறது. இந்த ராஜதானியிலுள்ள, அல்லது பொதுவாக இந்தியா முழுவதுமுள்ள ரயத்துவாரிக் குடியானவர்களைமட்டுமே மேற்படி கொடிய கஷ்டங்கள் பாதிக்கின்றன என்று சொல்வதற்கில்லை. ஆனால், இவைகள் ஜமீன் குடியானவர்களுக்கும், ரயத்துவாரி குடியானவர்களுக்கும் பொதுவாயிருக்கும் தொல்லைகளாகும். "தங்க ஆதார ஏற்பாட்டை பிரிட்டன் தேசம் கைவிட்ட பொழுது, அது தற்காலிக உபாயமென்றும், அது இரண்டு மூன்று வருஷங்களுக்குள், மீண்டும் அனுசரிக்கப்படுமென்றும் சொல்லப்பட்டது. விலைவாசிகளைக் கட்டுப்படுத்த சாத்தியப்படாமையால், பிரிட்டன் தேசத்தைப் பின்பற்றி, தங்க ஆதார ஏற்பாட்டைக் கைவிட்டு விட்டார்கள். ஏழு வருஷங்கள் ஆனபிறகுகூட, அத்தேசங்களால் தங்க ஆதார ஏற்பாட்டை அனுசரிப்பது இப்பொழுது மிகவும் கஷ்டமாயிருக்கிறது. இப்பொழுதுள்ள உலகப் பொருளாதார நிலைமையை, சாதாரண ஜனங்கள் அறிந்துகொள்வது சுலபமல்ல. கரன்ஸி நோட்டுகளும், கைநிறைய வெள்ளி ரூபாய்களும் உடையவர்கள், தாங்கள் பணம் படைத்தவர்கள் என்று கருதுகிறார்கள். ஆனால், மேற்படி கரன்ஸி நோட்டுகளுக்கு, பக்கபலமான "தங்க ஆதாரம்" (gold security) கிடையாதென்பது பலருக்குத் தெரியாது. "தங்க ஆதார" ஏற்பாடு அமுலிலிருந்த பொழுது, கரன்ஸி நோட்டுகளுக்கு "தங்க ஆதாரப்பாதுகாப்பு" இருந்தது. கரன்ஸி நோட்டுகளுக்கு பாங்குகளும், கேட்கும்போது, தங்கமளித்து வந்தன. ஆனால், அது சம்பந்தமாக, இப்பொழுது சட்ட மாறுதல் ஏற்பட்டிருக்கிறபடியால், லண்டனிலுள்ள, "இங்கிலாந்து பாங்க்"காவது, ரிஸர்வ் பாங்க்காவது, இந்தியாவிலுள்ள இம்பீரியல் பாங்க்காவது, எவராவது கரன்ஸி நோட்டுகளைக்கொடுத்து, அதற்குப் பதிலாக தங்கம் கொடுங்கள், என்று கேட்டால் தரமாட்டார்கள்.

இந்திய அரசாங்கத்தால், சட்டம் மாற்றப்படுமுன், 1908-ம் வருஷத்தில், ஏற்பட்ட நாணய மாற்ற ஈவு உயர்வைக்குறித்து, இந்தியாவிலுள்ள வர்த்தக சமூகத்தினர் யாவரும் கண்டனம் செய்தார்கள். ஆனால், "கரன்ஸி" மசோதா சட்டமானவுடன் கிளர்ச்சி ஒடுங்கிவிட்டது. இன்று, இந்தியாவின் வர்த்தக நிலைமை, பிரதிகூலமாயிருக்கிறபடியால், கிளர்ச்சியும், அதிருப்தியும், மீண்டும் தோன்றியிருக்கின்றன. இது ஏற்படும் வரைக்கும் விலைவாசிகளின் உயர்வால் இத்தேசத்திற்கு, எவ்வளவு கொடிய பொருளாதாரக் கஷ்டம் ஏற்படு மென்பது நம் நாட்டிலுள்ள வர்த்தக பிரபலஸ்தர்களுக்குத் தெரியவில்லை. எஸ்டேட் நிலச்சட்டத்தின் (40), (41) பிரிவுகளின் ஷரத்துகள் இருந்தும்கூட விலைவாசிகளின் குறைவு எப்படி ஏற்பட்டது. புள்ளி விவரங்களும், பாதுகாப்பு விதிகளும் என்ன ஆயின ? வரி மாற்ற விகிதங்களும், வரி மாற்ற விலைகளும், இந்த மாகாணத்திலும், இதர மாகாணங்களிலும், தானியப்பண்டங்களின் விலைகளைத் தாறுமாறாகக் குறைத்து விவசாயிகளுக்கு கொடிய கஷ்டங்களை விளைத்தன. 1852, 1855 வருஷங்களில் இருந்த குடியான வன் நிலைமையைவிட இப்பொழுதுள்ள குடியானவன் நிலைமை, அநேக மடங்கு கேவலமாக இருக்கிறது.

நெல்லூரில், 1852-ம் வருஷத்தில் ஏற்பட்ட விலைவாசிகளின் குறைவு, வரிமாற்ற விலைகளைவிட 100-க்கு 39 வீதம் கீழாக இருந்ததென்பது முன்பே தெரிவிக்கப்பட்டிருக்கிறது. உதாரணமாக, மதிப்பிடப்பட்ட விளைச்சலில் ஒரு கண்டிக்கு ரூபாய் 30 வரிமாற்ற விகிதமாக ஏற்படுத்தப்பட்டதென்றும், முந்திய 10 வருஷ காலத்தில் ஆசாமியிலிருந்த விலைகளில் மூன்று முக்கிய மகங்களின் சராசரி சுமார் 19 ரூபாயாக ஏற்படுத்தப்பட்டதென்று வைத்துக்கொள்வோம். எஸ்டேட் நிலச்சட்டத்தின் (40) 2-வது பிரிவின் (3)-வது உட்பிரிவு (A)-ல் கண்டுள்ளபடி, மேற்கூறிய கொள்கையே மதிப்பாதாரமாக, அனுசரிக்கப்பட்டது. ஆயினும், விலைவாசிகளில், இறக்கம் ஏற்பட்டபொழுது விவசாயிக்கு ஒரு கண்டிக்கு ரூபாய் 30 தான் கிடைத்தது. அதில், சர்க்காருக்கு வரி செலுத்தினதுபோக, மிஞ்சினது 8 ரூபாய்தான். தான் கிடைக்குமென்று எதிர் பார்த்ததைவிட (குடியானவனுக்கு) 25% குறைவாகக் கிடைத்தது. 1852-ம் வருஷத்தில் குடியானவனுக்கு ஏற்பட்ட தொல்லை அத்தன்மைத்தாகும். 1929, 1930-ம் வருஷங்களில் ஆரம்பித்து, இன்றும் தொடர்ந்து குடியானவனை வாட்டும் கஷ்டமும், மேற்கூறியதைப்போலவே இருக்கிறது. தற்போதுள்ள விலைவாசிகளை யாவது அல்லது இந்தியாவிலுள்ள விலைவாசிகளையாவது பொருளாதார வசதிகளுடைய எந்த நாடாவது ஒழுங்குபடுத்தக் கூடுமென்பது அசம்பவிதமாகும். வரிஉயர்வு சம்பந்தமாக (30), (35) பிரிவுகளில் ஏற்படுத்தப்பட்ட விதிகளும் (40)–வது பிரிவை ஆதாரமாகக்கொண்டு வரிமாற்ற விகிதங்கள் சம்பந்தமாக செய்யப்பட்ட (35), (40), (41) பிரிவுகளின் விதிகளும், தவறானவையென்றும், மயக்கத்தைத் தரக்கூடிய தென்றும் ரூபிப்பதற்கு மேற்கூறிய நிலைமையே தக்க சான்றாகும். ஜமீன்தார்கள் பாத்தியம் கொண்டாடி வந்த வரி உயர்வுகளால்தான் சென்ற 150 வருஷங்களாக, குடியானவன் நசுக்கப்பட்டு வந்திருக்கிறான். வரி உயர்வுகள் சம்பந்தமாகவும், வரிமாற்ற விகிதங்கள் சம்பந்தமாகவும், தற்போதுள்ள விதிகள் ஒழிக் கப்பட்டு, அவைகளுக்கு பதிலாக, புதிய விதிகள் அல்லது தத்துவங்கள், நிலவரி நிர்மாண ஆதாரமாக ஜமீன்களிலும், ரயத்துவாரிப் பிரதேசங்களிலும் அனுசரிக்கப்படவேண்டும். நாணயமுறை சம்பந்தமாக உண் டான மாறுதல்களால் நிலவரிகள் எவ்வாறு உயர்த்தப்பட்டனவென்பது, "நாணயமுறையும், வரியும்" என்ற பிரத்தியேகமான அத்தியாயத்தில் ஆராயப்பட்டிருக்கிறது. உலக விலைவாசிகளின் இறக்கத்திற்கும் தொடர்ச்சியாக இப்பொழுதுள்ள உலக வியாபார மந்தத்திற்கும் காரணம் என்னவென்பதும், அந்த அத்தி யாயத்தில் விவரமாக ஆராயப்பட்டிருக்கிறது. வரிமாற்ற விகிதங்களைப்பற்றி, சர்க்கார் தஸ்தவேஜிகளிலிருந்து எடுக்கப்பட்ட ஒரு சாராம்சம், இவ்வறிக்கையின் அனுபந்தத்தில் அமைக்கப்பட்டிருக்கிறது. விலை மட்டங்கள், எவ்வாறு, அவ்வப்போது, மாறிவந்தன என்றும் ; வரிமாற்ற விகிதங்களை சர்க்கார் எவ்வாறு, அவ்வக் காலத்தில், தவறாக ஏற்படுத்தி வந்தார்களென்றும், இது சம்பந்தமாக 100 வருஷ காலம், ஒழுங்கீனமான ஏற்பாடு நடந்துவந்த பிறகு, 1852-ம் வருஷத்தில், எந்த ஆதாரத்தைக்கொண்டும், எந்த தகவல்களைக் கொண்டும், மேற்படி வரி விகிதங்கள், விதிக்கப்பட்டன என்பது சொல்லமுடியவில்லையென்று சர்க்கார் தெரிவித்த அறியாமை விந்தையானதென்றும் மேற்படி சாராம்சத்தில் தெரிவிக்கப்பட்டிருக்கின்றன. 1852-ம் வருஷத்திற்குமுன் என்ன நடந்துவந்ததோ அதுவே 1852-ம் வருஷத்திற்குப் பிறகும் இதுவரை நடந்து வருகிறது. வரிமாற்றமென்ற பெயரால் (40), (41)-வது பிரிவுகளை சட்டத்தில் புகுத்தியது தவறென்பதும், அநீதியென்பதும், விலைவாசிகளின் இறக்கத்தையும், வரிமாற்ற விகிதங்களைப்பற்றிய அனுபந்தங்களையும், விளக்குகின்ற, அடுத்த அத்தியாயத்தைப் படிப்பவர்களுக்கு நன்கு புலப்படும். "ஒப்பந்தம்" என்ற பெய ரால், வரியை உயர்த்துவதற்கு ஜமீன்தார்களுக்கும், கோர்ட்டுகளுக்கும், சாதகமாயிருக்கும் மற்றொரு விதி (28) வது-பிரிவு, எஸ்டேட் நிலச்சட்டத்திலிருக்கிறது.

"ஒப்பந்தம்" என்ற வார்த்தை, எஸ்டேட் நிலச்சட்டத்திலிருந்து அகற்றியிருக்கும்பொழுது, மேற்கூறிய சட்ட நிலைமை விபரீதமாயிருக்கிறது. சாசுவத பைசல் ரெகுலேஷனிலும், பட்டா ரெகுலேஷனிலும் உள்ள விதிகளுக்கு மாறாக, முதல் முதலாக வரி வசூல் சட்டத்தின் (11)-வது பிரிவின் (1)-வது ஷரத்தில், "ஒப்பந்தம்" என்ற வார்த்தை உபயோகப்படுத்தப்பட்டது. அதனால் ஏற்பட்ட தீமையைப் போக்குவதற்கே எஸ்டேட் நிலச்சட்டத்தின் (135)-வது பிரிவு ஏற்படுத்தப்பட்டது. "நியாயமாய்ச் செலுத்தவேண்டிய நில வரியை அதிகரிக்கும் நிபந்தனையாவது, கட்டுப்பாடாவது, உட்கருத்தாவது அனுசரிக்கப்படக்கூடாதென்று மேற்படி பிரிவில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது." "ஒப்பந்தம்" என்ற பெயரால் வரி உயர்த்துவதைக் கண் டிக்கும் (135)-வது பிரிவும், (30)-வது பிரிவும் எஸ்டேட் நிலச்சட்டத்திலிருக்கும்பொழுது மேற்படி சட்டத் தின் (28)-வது பிரிவு நீக்கப்பட்டிருக்கவேண்டும். (28)-வது பிரிவு பின்வருமாறு :—

"இச்சட்டத்தின்படி எடுத்துக்கொள்ளப்படும் எல்லா நடவடிக்கைகளிலும், மாறாக நிரூபிக்கப்படும் வரை, குடியானவன் நியாயமாக தற்போது செலுத்தவேண்டிய வரியே ஒழுங்கான, நியாயமான வரி என்று கருதப்படும்."

இது, XXX ரெகுலேஷன் 9, 7, பிரிவுகளிலும், 1802-ம் வருஷத்திய XXV ரெகுலேஷன் 14-வது பிரிவிலும் விதிக்கப்பட்டுள்ள விதிகளுக்கு முற்றிலும் மாறாக இருக்கிறது. சாசுவத பைசல் காலத்தில் நிலவரி நிரந்தரமாகவும், என்றும் மாறாவண்ணமும் செய்யப்பட்டது. XXX ரெகுலேஷன், 9-வது பிரிவின்படி வரிவிகிதம் சம்பந்தமாக, வழக்கு, ஏற்பட்டால், சாசுவத காலத்தில் இருந்த வரிவிகிதப்படி மேற்படி வழக்கு தீர்மானிக்கப்படவேண்டும். சட்டத்தில் விதிக்கப்பட்ட முடிவான ரூஜுக்கள் இவைகளே சட்டத்தின் 28-வது பிரிவில் தெரிவித்துள்ள ஊகிப்பு, சாசுவத செட்டில்மெண்டு ரெகுலேஷனிலும், பட்டா ரெகுலேஷ னிலும் தெரிவித்துள்ள விதிகளுக்கு முற்றிலும் மாறாக இருக்கிறது. 28-வது பிரிவில் குறித்துள்ள யூகனையின் பலிதமாக (இச்சட்டத்தால் நிராகரிக்கப்பட்டுள்ள) "ஒப்பந்தம்" மூலம் வரி உயர்த்துவது என்பது அங்கீகரிக்கப்பட்டிருக்கிறது. நாம் மேலே தெரிவித்த வண்ணம் இது விந்தையான விஷயம். கன்னிவாடி ஜமீனில், ஜமீன்தாரும் குடியானவர்களும், ஒப்பந்தம் மூலம் செய்துகொண்டதாகச் சொல்லப் படும் "மனோராஜி வரி விகிதங்கள்" குடியானவர்களைக் கட்டுப்படுத்தும் என்று, மேற்படி "சட்ட யூகிப்பு" (Legal Presumption) ஜமீன்தாருக்கு அனுகூலமாக, கோர்ட்டுகளால் பிரயோகம் செய்யப்பட்டது. மனோராஜி வரி விகிதம் என்பது உயர்த்தப்பட்ட வரி விகிதம் ஆகும். 1909-வது வருஷத்தில், அதாவது, எஸ்டேட் நிலச்சட்டம் அமுலுக்கு வந்த ஒரு வருஷத்திற்குப் பிறகு, ஜமீன்தாரும் குடியானவர்களும், மேற்படி வரி விகிதங்களை ஒப்பந்த முறையாகச்செய்துகொண்டார்கள் என்பது ஜமீன்தார் தரப்பு வாதம்.

இச்சட்டத்தின்படி, வரியை உயர்த்த ஜமீன்தார் மனுச்செய்துகொள்ளவேண்டுமானால், 30-வது பிரிவில் தெரிவித்துள்ள நான்கு காரணங்களைக்கொண்டே மனுச்செய்து கொள்ளலாமே தவிர, சட்டத்தில் விதிக்கப்படாத "ஒப்பந்தம்" என்ற காரணத்தைக்கொண்டு மனுச்செய்ய முடியாது.

வழக்கை விசாரித்த நீதிபதி, சட்டத்தின் 135, 30, பிரிவுகளிலுள்ள விதிகளைப் புறக்கணித்து மனோராஜி வரி விதிதம் ஒழுங்கான வரி விதிதம் என்று முடிவு கூறினார். அது தவறான நியாயமாகும். அது சட்டத்தில் இருக்கலாகாது. எஸ்டேட் நிலச்சட்டத்தின் 28-வது பிரிவு நீக்கப்படவேண்டும். எங்கள் அறிக்கையின் II பாகத்தில், கன்னிவாடி ஜமீன் விஷயங்களைப்பற்றி, பரிசீலனை செய்கையில், மேற்கூறிய "மனோராஜி ஏற்பாடு" விரிவாக ஆராயப்பட்டிருக்கிறது.

முன் பணம் (premiums) சட்டத்திலுள்ள ஒரு பிரிவின்படி, நிலத்தைச் சாகுபடிசெய்ய, குடியானவரை, ஜமீன்தார் முதலில் அனுமதிக்கும்போது அவர்களிடம் ஜமீன்தார் முன் பணம் வசூலிக்கலாம். வரி வசூல் சட்டத்தில் இம்மாதிரி விதி யாதொன்றும் கிடையாது. முதல் முதலாக எஸ்டேட் நிலச்சட்டத்தில் தான் அது ஏற்படுத்தப்பட்டது. "ரயத்தி" நிலத்தைச் சாகுபடிசெய்ய குடியானவன் அனுமதிக்கப்பட்டால் அதற்கு முன் பணம் வாங்குவது சரியல்ல.

தரிசு நிலத்தைப் பண்படுத்தி, சாகுபடி செய்து, அதிக விளைச்சல் உண்டாகும்படி செய்வது, குடியானவனுக்கு சுவயமாக உள்ள உரிமையாகும். எஸ்டேட் நிலச்சட்டத்தின் 25-வது பிரிவின்படி, குடியானவர்களிடம் "முன் பணம்" வசூலிப்பது ரயத்துவாரிப் பிரதேசங்களில் ஆசாரணையிலுள்ள நடைமுறைக்கு விரோதமானது. கரம்பு நிலத்தைப் பண்படுத்தி சாகுபடிசெய்யத் தகுந்ததாக்கவேண்டுமென்றால் அதற்கு அதிகப் பணச் செலவு ஆகும். அதிக உழைப்பும் அவசியமானது. அதுபற்றி, குடியானவனுக்கு விதிக்கும் வரி விதிதம், சொற்பமாகவும் அனுகூலமானதாகவும் இருக்கவேண்டும். கூடுமானால், கொஞ்ச காலத்திற்கு வரியே இருக்கக்கூடாது. இம்மாதிரியான, படிப்படியான, அனுகூலமான வரி விதிதங்கள் சர்க்கார் ரயத்துவாரிப் பிரதேசங்களில், தேயிலை, காப்பி, வாழை, நெல், முதலியவை சாகுபடி செய்வது சம்பந்தமாக இருக்கின்றன. (ரெவினியூ போர்டு நிரந்தரக் கட்டளைகளைப் பார்க்கவும். நெம்பர்).

அனுமதியின்றி நிலத்தைச் சாகுபடி செய்தல்.

பழைய கரம்பு நிலங்கள் அனுமதியின்றி சாகுபடி செய்யப்பட்டால் அதற்கு $2\frac{1}{2}$ மடங்கான தீர்வையை ஜமீன்தார் விதிக்கலாம் என்று, எஸ்டேட் நிலச்சட்டத்தில் ஒரு விதியிருக்கிறது. கரம்பு நிலங்களைப் பண்படுத்தி, சாகுபடிசெய்வதற்குக் குடியானவர்களுக்குள்ள உரிமை இதனால் அபகரிக்கப்படுகிறது. சாகுபடி செய்யப்படும் நிலங்களும் சாகுபடியாகாத நிலங்களும், குடியானவர்களைச் சேர்ந்தவைகள். சாசுவத பைசல் காலத்தில், சாகுபடி செய்யப்பட்ட நிலங்கள் சாகுபடியாகாத நிலங்கள் என்று இருவகையான பாகுபாடு செய்யப்பட்டது. கரம்பு நிலங்கள் சாகுபடி செய்யப்பட்டால், விளைச்சலின் ஒரு பாகத்தை சர்க்கார் அல்லது அவர்களின் ஏஜெண்டாகிய ஜமீன்தார், வசூலிக்கலாம் என்ற கருத்தைக்கொண்டே, அந்த பாகுபாடு செய்யப்பட்டது. சர்க்கார் தங்களுக்குள்ள ஆதிபத்ய உரிமையின் பலிதமாக, அந்த பாத்யதையைக் கொண்டாடினார்கள். அந்த உரிமைதான் சாசுவத பைசல் காலத்தில், ஜமீன்தாருக்கு மாற்றப்பட்டது. கரம்பு நிலங்களில் குடியானவனுக்கு இருந்த "நில உரிமை" அதனால் பாதிக்கப்படவில்லை. இந்த நிலைமையில் அனுமதியின்றி, குடியானவன் நிலத்தைச் சாகுபடி செய்தான் என்று சொல்லி, அவனிடம் $2\frac{1}{2}$ மடங்கு தீர்வை வாங்குவது நியாயமல்ல; ஒழுங்கல்ல. உண்மையில், குடியானவன் அனுமதியின்றி சாகுபடி செய்தான் என்று கூறுவது தவறு. குடியானவன் தனக்குள்ள சொந்த உரிமையைப் பயன்படுத்தி, முற்றிலும் நியாயமான முறையில் சாகுபடி செய்தானே யொழிய வேறல்ல. அது சம்பந்தமான ஒரே நிபந்தனை என்னவென்றால் சர்க்காரின் அல்லது ஜமீன்தாரின் சம்மதத்தைக்கொண்டு சாகுபடி செய்யவேண்டும். குடியானவன் அனுமதி கேட்டால், அதை மறுப்பதற்கு ஜமீன்தாருக்கு உரிமையில்லை. ஆதலால், அதை "நியாய விரோதமாகச் சாகுபடி செய்தல்" என்பதாவது, அதற்கு $2\frac{1}{2}$ மடங்கு தீர்வையான தண்டனை விதிப்பதாவது தகாது. இவ்விதி நீக்கப்படவேண்டும்.

வரிவுயர்வுகள்.

1802-ம் வருஷத்திய பட்டா ரெகுலேஷன்—வரிவுயர்வு அனுமதிக்கப்படவில்லை. ஆனால் கரம்பை நிலங்களுக்கு, சில குறிப்பிட்ட விஷயங்களுக்கு குறைவான வரி விகிதங்கள் அனுமதிக்கப்பட்டன.	1863-ம் வருஷத்திய வரி வசூல் சட்டம் VI—ஜமீன்தார் செலவில் ஏற்பட்ட நில அபிவிருத்தியின் பலனாக, நிலத்திற்கு அதிக மதிப்பு ஏற்பட்டால், அப்பொழுதுமட்டும் வரிவுயர்வு அனுமதிக்கப்பட்டது. சில குறிப்பிட்ட விஷயங்களுக்கு குறைவான வரி விகிதங்கள் ஏற்படுத்துவதும் அனுமதிக்கப்பட்டது.	1865-வது வருஷத்திய வரி வசூல் சட்டம் 8— சில நிலங்களுக்கு அதாவது அனுபோக பாத்தியமில்லாத நிலங்களுக்கு வரி உயர்வு அனுமதிக்கப்பட்டது.	மதராஸ் குடியானவர்களின் மசோதா (1898) சட்ட சபையில் பிரரேபித்தபடி.	செலக்ட் கமிட்டியால் திருத்தியமைக்கப்பட்ட மதராஸ் குடியானவர்களின் சட்டம் (1898).	1908-வது வருஷத்திய எஸ்டேட் நிலச்சட்டம் I—பழைய கரம்பை ரயத்தி நிலத்திற்குமட்டும், கீழ்க்கண்ட தலைப்புகளின் கீழ், வரி வுயர்வுகள் அனுமதிக்கப்பட்டன.
(1)	(2)	(3)	(4)	(5)	(6)
பிரிவுகள்— 7. ஜமீன்தார்கள், எப்பெயராலாவது, என்ன காரணத்தைக் கூறியாவது, குடியானவர்களுக்கு அதிக வரி விதிக்கக்கூடாது ; பட்டாவில் மொத்தமாக தெரிவிக்கப்பட்ட தொகைக்கு அதிகமான தொகையையாவது, சர்க்காரால் அங்கீகரிக்கப்பட்டாத தொகையையாவது, ஜமீன்தார் வசூலித்தாரென்று ரூபிக்கப்பட்டால் அவ்வாறு வசூலித்த தொகைக்கு மூன்று மடங்கான தொகை மேற்படி ஜமீன்தாருக்கு அபராதமாக விதிக்கப்படும். 9. பணமாகவோ, விளைச்சலின் ஒரு பாகமாகவோ, செலுத்தப்படும் தீர்வை சம்பந்தமாக வழக்குகள் ஏற்பட்டால், மேற்படி நிலங்களுக்கு சாசுவத பைசலுக்கு முன் வருஷத்தில் ஏற்படுத்தப்பட்ட வரி விகிதங்களின் பிரகாரம் தீர்மானிக்கப்படவேண்டும் ; மேற்படி வரி விகிதங்கள் அறியக்கூடா விட்டால், வழக்கு ஏற்பட்ட நிலங்களின் தரத்தை ஒத்த நிலங்களுக்கு, அக்காலத்தில் என்ன தீர்வை	ஷரத்து 10— நிலத்தின் சம்பந்தமாக, சர்க்கார் ஸ்தானத்தை வகித்து, மேற்படி நிலத்திற்கு, ஒரு குறிப்பிட்ட தொகை வரைக்குமட்டும் வரி செலுத்த வேண்டிய முதற்தர நிலச்சுவான்தார்கள், தங்கள் கீழிருக்கும் குடியானவர்களுக்கு, எப் பெயராலாவது, என்ன காரணத்தைக் கூறியாவது, சட்ட சம்மதமில்லாத வரிகளை வசூலிக்கக் கூடாது.* பணமாகவோ, தானியமாகவோ, செலுத்த வேண்டிய தீர்வை சம்பந்தமாக வழக்குகள் ஏற்பட்டால், அவைகள், மேற்படி வழக்கு சம்பந்தமான நிலங்களுக்கு நிரந்தரமாக நிர்மாணிக்கப்பட்ட வரி விகிதங்களின் பிரகாரம், தீர்மானிக்கப்படவேண்டும், மேற்படி வரி விகிதங்கள் அறியக் கூடாவிட்டால், அல்லது மேற்படி நிலங்களுக்கு நிரந்தரத் தீர்வை ஏற்படாமல் இருந்தால், மேற்படி நில	பிரிவு 11—ஷரத்துகள் (1)-(4)— (1) வெளிப்படையாகவாவது, உள்ளர்த்தமாகவாவது, வரி விஷயமாக செய்துகொண்ட ஒப்பந்தங்கள் செய்கையில் நிறைவேற்றப்படவேண்டும். (2) 1859-வது வருஷம் ஜனவரி மாதம் 1-வது தேதிக்குமுன், பிரிட்டிஷ் சர்க்காரால் சர்வே செய்யப்பட்ட ஜில்லாக்களில் அல்லது கிராமங்களில், நிலங்களுக்கு பண வரி ஏற்பட்டிருந்தால், (வரி விஷயமாக வெளிப்படையான, அல்லது உள்ளர்த்தமான, ஒப்பந்தம் இல்லாவிட்டால்) அதுவே ஒழுங்கான வரியென்று கருதப்படவேண்டும். (3) நிலச்சுவான்தாருக்கும், குடியானவனுக்கும், வெளிப்படையான, அல்லது உள்ளர்ந்தமான ஒப்பந்தம் இல்லாவிட்டால், அல்லது, மேற்படி நிலங்களுக்கு பண வரி ஏற்படாதிருந்தால், ஸ்தல வழக்கத்தின்படி வரி விகிதங்கள் தீர்மானிக்கப்படவேண்டும். ஸ்தல வழக்கம் என்னவென்பது அறியக்கூடாவிட்டால், ஒத்த தரத்தையும் அமைப்பையும் உடைய பக்க நிலங்களுக்கு, என்ன வரி விகிதங்கள் இருக்கின்றனவோ, அவைகளின்படி தீர்மானிக்கப்படவேண்டும். ஆனால் அவ்வாறு நிர்ணயம் செய்யப்பட்ட வரி விகிதங்கள் சம்பந்தமாக இருதிறப்பார்களில் ஒருவருக்கு, அதிருப்தி ஏற்பட்டால், அவர், "வார முறைப்படி" தானியமாக தீர்வையைச் செலுத்துவ	பிரிவு 15.—அனுபோக பாத்தியதையுடைய குடியானவன் தற்போது செலுத்தும் வரி, (மாறாக ரூபிக்கப்படும் வரை) ஒழுங்கான, நியாயமான வரி என்று, கருதப்படவேண்டும். பிரிவு 16.—அனுபோக பாத்தியதையுடைய குடியானவன் செலுத்தும் வரி, சட்டத்தில் தெரிவிக்கப்பட்டிருக்கும் பிரகாரமே தவிர, மற்ற வகையில், உயர்த்தப்படக்கூடாது. பிரிவு 17.—அனுபோக பாத்தியதையுடைய குடியானவன், நிரந்தரமாக விதிக்கப்படாத பண வரியைச் செலுத்திவந்தால், கீழ்க்கண்ட காரணங்களில் ஏதாவதொரு அல்லது பல காரணங்களைக்கொண்டு, (இச்சட்டத்தின் விதிகளுக்குட்பட்டு) வரி உயர்த்துவதை அனுமதிக்கும்பொருட்டு, நிலச்சுவான்தார் கலெக்டர்முன்பு தாவா செய்துகொள்ளலாம். அவையாவயன :— (a) தற்போதுள்ள வரி, ஏற்பட்டபிறகு தாலூகாவில், அல்லது ஜமீன்தாரி டிவிஷனில் முக்கிய உணவுப்பொருள்களையும், சராசரி ஸ்தல விலைவாசிகளில் உயர்வு ஏற்பட்டிருக்கிறது. (b) தற்போதுள்ள வரி ஏற்பட்டபிறகு, நிலச்சுவான்தாருடைய, பிரயாசை அல்லது, செலவால், நில அபிவிருத்தியின் பலிதமாக, குடியானவன் அனுபவிக்கும் நிலத்தின் விளைச்சல் அதிகரித்திருக்கிறது. (c) தற்போதுள்ள வரி ஏற்பட்டபிறகு சர்க்கார் செலவில் ஏற்பட்ட நீர்ப்பாசன அமைப்பு முதலிய இதர அபிவிருத்திகளால், குடியானவன் அனுபவிக்கும் நிலத்தின் விளைச்சல் அதிகரித்திருக்கிறது ; மேற்படி சர்க்கார் செய்த செலவிற்காக, நிலச்சுவான்தார் கூடுதலான தொகை செலுத்தவேண்டியதாயிருக்கிறது. (d) "ஆற்றுப்போக்கின் செய்கையால்," குடியானவன் அனுபவிக்கும், நிலத்தின் விளைச்சல் அதிகரித்திருக்கிறது.	பிரிவு 10.—குடியானவன் செலுத்துகிற நிலவரியை, இச்சட்டத்திலுள்ள விதிகளின்படியே உயர்த்தக்கூடும். பிரிவு 16.—குடியானவர்கள் செலுத்தவேண்டிய நிலவரி விகித சம்பந்தமாக ஏற்படும் வழக்குகளை தீர்மானிப்பதில், கீழ்க்கண்ட விதிகள் அனுசரிக்கப்படவேண்டும் :— (i) 1859-ம் வருஷம் ஜனவரி 1உக்கு முன்பு, பிரிட்டிஷ் சர்க்காரால் சர்வே செய்யப்பட்ட எஸ்டேட்டுகளின், நிலங்களுக்கு நிலவரி ஏற்பட்டிருந்தால், அதுவே நியாயமாகச் செலுத்தவேண்டிய நிலவரியாகக் கருதப்படவேண்டும். (ii) இதர எஸ்டேட்டுகள் சம்பந்தமாக, (a) நிரந்தரமாக பேஷ்கஷ் நிர்மாணிக்கப்பட்ட வருஷத்திற்கு, முன் வருஷத்தில், சாகுபடி செய்யப்பட்ட நிலங்களுக்கு பணமாகவோ, தானியமாகவோ, என்ன தீர்வை விகிதங்கள், ஏற்பட்டிருந்தன	பிரிவு 30–35-ம், 40—41-ம்— 30. குடியானவன் நிலத்திற்கு பணவரி செலுத்தினால், கீழ்க்கண்ட காரணங்களில், ஒரு அல்லது பல காரணங்களைக்கொண்டுமட்டுமே (மற்ற காரணங்களுக்கு அல்லாமல் என்றபடி) நிலச்சுவான்தார், வரியை உயர்த்த, கலெக்டருக்கு மனுச்செய்துகொள்ளலாம்— (i) தற்போதுள்ள வரி அமுலில் இருக்கும்பொழுது, தாலூகாவில் அல்லது ஜமீன்தாரி டிவிஷனில், முக்கிய உணவு தானியங்களின், சராசரி ஸ்தல விலை வாசிகள் உயர்ந்திருக்கின்றன ; (a) ஆனால், இந்த உட்பிரிவின்படி, ஏற்படும் வரி வுயர்வு, இதற்குமுன் செலுத்திவந்த வரிக்கு, ரூபாயில் இரண்டணாக்களுக்கு கூடுதலாக இருக்கக்கூடாது ; (ii) தற்பொழுதுள்ள வரி அமுலில் இருக்கும்பொழுது, நிலச்சுவான்தாரின் சொந்தச் செலவால், அல்லது பிரயாசையால் ஏற்பட்ட அபிவிருத்தியின் பலிதமாக, குடியானவன் அனுபவிக்கும் நிலத்தின் விளைச்சல் அதிகரித்திருக்கிறது ; (iii) சர்க்கார் செலவால், நிர்ப்பாசன அமைப்பு, அல்லது இதர அபிவிருத்தி ஏற்பட, அதற்கு நிலச்சுவான்தார், சர்க்காருக்கு கூடுதலான தொகை செலுத்தவேண்டியதாய் இருக்கிறது ; (iv) ஆற்றுப்போக்கின் செய்கையால், குடியானவனுடைய நிலத்தின் விளைச்சல் அதிகரித்திருக்கிறது. விளக்கம்.—"ஆற்றுப்போக்கின் செய்கை" என்பது, ஆற்றுப்போக்கில் மாறுதலுண்டான காரணமாக, ஆற்று நீர், இதற்குமுன் இல்லாத புதிய நீர்ப்பாசன வசதியை அளிப்பதாகும். 31, 30-வது பிரிவின், (i) உட்பிரிவின்படி வரியை உயர்த்தவேண்டுமென்று, நிலச்சுவான்தார் மனுச்செய்துகொண்டால்,— (a) மேற்படி மனுச்செய்துகொண்ட தேதிக்குமுன் 10 வருஷகாலமாக இருந்த சராசரி விலைகளை, மேற்படி மனுச்செய்துகொண்ட தேதிக்குமுன், 20 வருஷ காலத்திற்கு முன்னே இருந்த 10

விகிதங்கள் இருந்தனவோ அவைகளின் பிரகாரம் தீர்மானிக்கப்படவேண்டும்.

11. குடியானவனுடைய முச்சலிக்கையில் குறிக்கப்பட்டுள்ள தொகைக்கு, அல்லது அளவிற்கு அதிகமான பணத்தையாவது, அல்லது தானியத்தை யாவது ஜமீன்தார் வசூலித்தால், அது குடியானவனை, ஹிம்ஸித்து வசூலித்ததற்கு சமமாகும். அவ்வாறு வசூலிக்கப்பட்ட தொகை, குடியானவனுக்கு திருப்பிக் கொடுக்கப்படவேண்டும். அவ்வாறு வசூலித்த தொகைக்கு இரட்டிப்பான தொகை ஜமீன்தாருக்கு அபராதமாக விதிக்கப்படும். செலவு தொகையையும் அவர் கொடுக்கவேண்டும்.

15. சர்க்கார் அனுமதியில்லாமலும், சர்க்கார் அதிகாரிகளின் அனுமதியில்லாமலும், பிரிட்டிஷ் பிரஜைகள் அல்லது ஐரோப்பியர்கள், அல்லது அவர்களுடைய சந்ததியார்கள், ஆகிய இவர்களல்லாத எவர்களுக்கும், ஜமீன்தார், கீழ்க்கண்ட விஷயங்களுக்கு நிலக் குத்தகைகளையாவது, அல்லது நிலப்பட்டாக்களையாவது, குறித்த சில வருஷங்களுக்காவது அல்லது சாஸ்வதமாகவாவது, பரஸ்பரமாக ஒப்புக்கொள்ளப்பட்ட நிபந்தனைகள்மீது கொடுக்கலாம் :—

குடிஇருப்பு வீடுகள் கட்டுவதற்கு, கைத்தொழிலுக்கு, அல்லது மற்ற விஷயங்களுக்கும், கட்டிடம் கட்டிக்கொள்வதற்கும், மேற்படி வீடுகள் அல்லது கட்டிடங்கள் ஆகியஇவைகளின் சேரிகளுக்கும், ங்களின் தரத்தையொத்த பக்க நிலங்களுக்கு என்ன வரி விகிதங்கள் இருக்கின்றவோ, அவைகளின்படி தீர்மானிக்கப்படவேண்டும். ஆனுல், நிலச் சுவான்தாரின் சொந்தச் செலவால் ஏற்பட்ட நில அபிவிருத்தியின் பலனுக, நிலத்திற்கு அதிக மதிப்பு ஏற்பட்டால், அப்பொழுது, கலெக்டர்† அனுமதியைப் பெற்று நிலச்சுவான்தார் வரியை அதிகரிக்கலாம். மேலும், ஒத்த தரத்தையுடைய பக்க நிலங்களுக்கு, கீழ்க்கண்ட விஷயங் களுக்கே, நிலச் சுவான்தார், நல்லெண்ணத்துடன் குறைந்த வரி விகிதங்களுக்கு பட்டா கொடுக்கலாம் :—

குடி இருப்பு வீடுகள், தொழிற்சாலைகள் முதலிய நிரந்தரமான கட்டிடங்கள் கட்டிக்கொள்வதற்கும், அல்லது கரம்பை நிலங்களை பண்படுத்தி சாகுபடி செய்ய லாயக்கு ஆக்குவதற்கும், அல்லது மேற்படி நிலங்களுக்கு நிரந்தரமான அபிவிருத்தி செய்வதற்கும், அனுகூலமான வரி விகிதங்களைப்பெற்ற குடியானவன், அவைதற்கு பாத்தியம் கொண்டாடலாம். அதாவது, நிலத்தின் விளைச்சலை சர்க்காரும் அல்லது நிலச்சுவான்தாரும், குடியானவனும், பங்கிட்டுக்கொள்வதற்கு, கிராமத்தில் நிலவரமாக உள்ள முறைப்படி, வாரம் என்னவென்று அறியக்கூடாவிட்டால், குடியானவனுடைய, செலவால் அல்லது பிரயாசையால் ஏற்படாத அபிவிருத்தியின் காரணமாக, நிலத்தின் விளைச்சல் அதிகரித்திருக்கிறதாயென்பதையும், அல்லது, நிலத்தின் மதிப்பில் உயர்வு ஏற்பட்டிருக்கிறதாயென்பதையும், கலெக்டர் விசாரணை செய்து, தனக்கு யுக்தமாகத் தோன்றும், வரி விகிதங்களை ஏற்படுத்தவேண்டும்.

(4) அனுதிக்கரம்பை நிலங்களுக்கும், குடியானவனுடைய அசட்டையாலாவது, தன்னிச்சையாக விட்டுவிட்டதின் காரணமாகவாவது, காலியாய் இருக்கும் நிலங்களுக்கும், நிலச்சுவான்தார்கள், தங்களுக் கிஷ்டமான வரி விகிதங்களை ஏற்படுத்திக் கொள்ளலாம். ஆனுல் சட்டப்படியாவது, சட்ட ரீதியான வழக்கப்படியாவது, மேற்படி கரம்பை நிலங்களில் அல்லது காலியாயிருக்கும் நிலங்களில், எவருக்காவது, விசேஷ உரிமைகள் இருந்தால், அவைகளை இச்சட்டத்திலுள்ள எவ்விதியும் பாதிக்காது.

ஆனுல், தனது செலவால் ஏற்பட்ட நீர்ப்பாசன அமைப்பு முதலிய இதர அபிவிருத்திகளின் பலிதமாக, நிலங்களுக்கு அதிக மதிப்பு உண்டானுல், அப்பொழுது நிலச்சுவானன்தார் மேற்படி நிலத்தின் வரியை உயர்த்தலாம். அதைத் தடுப்பதற்கு இச்சட்டத்தில் யாதொரு விதியும் இல்லை ; அல்லது சர்க்கார் செலவால் செய்யப்பட்ட, நீர்ப்பாசன அமைப்பு முதலிய இதர அபிவிருத்திகளின் பலனுக, நிலத்திற்கு அதிக மதிப்பு ஏற்பட்டால், மேற்படி சர்க்கார் செலவு தொகைகளை தான் கொடுக்க நேரிட்டால், அப்பொழுதும் நிலச்சுவான்தார் வரியை உயர்த்தலாம். ஆனுல், மேற்கூறிய இரண்டு சந்தர்ப்

விளக்கம்—"ஆற்றுப்போக்கின் செய்கை" என்பது, ஆற்றுப்போக்கில் மாறுதலுண்டான காரணமாக, ஆற்று நீர் இதற்குமுன் இல்லாத புதிய நீர்ப்பாசன வசதியை அளிப்பதாகும்.

ஆனுல் (a) உட்பிரிவில் தெரிவித்த காரணத்திற்கு, வரி உயர்வு ஏற்படுவது, சேலம், மதுரை, அல்லது திருநெல்வேலி ஜில்லாக்களிலுள்ள, ஜமீன்களுக்கு செல்லாது.

பிரிவி 18.—17-வது பிரிவின், (a) உட்பிரிவின்படி வரி உயர்த்தவேண்டுமென்று நிலச்சுவான்தார் தாவா செய்தால்—

(a) மேற்படி தாவா செய்யப்பட்ட வருஷத்திற்குமுன், 10 வருஷங்களின் சராசரி விலைகளை உபமான விஷயத்திற்கு நியாயமாகவும், சாத்தியமாகவும் கருதப்படுகிற, இதர 10 வருஷங்களின் சாரசரி விலைகளுடன் ஒப்பிட்டுப்பார்க்கவேண்டும் ;

(b) சென்ற 10 வருஷங்களின் சாராசரி விலைகளுக்கும், ஒப்பிட்டுப்பார்ப்பதற்கு எடுத்துக் கொள்ளப்பட்ட இதர 10 வருஷங்களின் சராசரி விலைகளுக்கும், என்ன தாரதம்மியமிருக்கிறதோ, அதே தாரதம்மியந்தான், தற்போதுள்ள வரிக்கும், உயர்த்தப்போகும் வரிக்கும், இருக்கவேண்டும். ஆனுல் இத்தகைய தாரதம்மியத்தை கணக்கிடுவதில், முன்பு தெரிவிக்கப்பட்ட 10 வருஷங்களின் சராசரி விலைகளுக்கு, கூடுதலாகவுள்ள பின்பு தெரிவிக்கப்பட்ட 10 வருஷங்களின் சராசரி விலைகளில் மூன்றில் ஒரு பங்கு குறைக்கப்படவேண்டும்;

(c) (a) உட்பிரிவில், தெரிவிக்கப்பட்டுள்ள 10 வருஷ காலத்தை கணக்கிடுவது, சாத்தியப்படவில்லை என்று கலெக்டர் கருதினுல், அதற்கு பதிலாக, தனக்கு யுக்தமாகத் தோன்றும், இதர குறைந்த காலத்தின் சராசரி விலைகளைக் கணக்கிட்டுக்கொள்ளலாம்.

(d) தவறு என்று ரூபிக்கப்பட்டாலொழிய, சர்க்கார் அதிகாரத்தின்படி, பிரசுரிக்கப்பட்டுள்ள சாரசரி விலைகளையே கலெக்டர், ஆதாரமாகக்கொள்ளவேண்டும்.

(e) சராசரி விலைகளை ஒப்பிட்டுப்பார்ப்பதற்கு எடுத்துக்கொள்ளப்படும் 10 வருஷங்களில், ஒரு குறித்த பிரதேசத்தின் சம்பந்தமாக, பஞ்ச வருஷங்கள் என்று சர்க்காரால் தெரிவிக்கப்பட்ட வருஷங்களைச் சேர்க்கக்கூடாது.

(f) இந்தப் பிரிவின்படி, பட்டிகளைத்தயாரிக்கும் அதிகாரிகளுக்கு ஆதாரமாக இருக்குமாறு, ஒரு குறித்த பிரதேசத்தின் சம்பந்தமாக முக்கிய உணவுதானியங்கள் என்னவென்பதைப்பற்றி, சர்க்கார் தகுந்த விசாரணை ஏற்படுத்தவேண்டும்.

பிரிவு 19.(1)—17-வது பிரிவின் (b) உட்பிவிரின்படி, வரியை உயர்த்தவேண்டுமென்று, நிலச்சுவான்தார் தாவா செய்துகொண்டால்—

(a) நிலத்திற்குச் செய்யப்பட்ட அபிவிருத்தி, இச்சட்டத்தின்படி, பூர்த்தி செய்யப்பட்டும், வோ, அவைகளையே கலெக்டர் அனுசரிக்கவேண்டும் ;

சாசுவத பைசல் ஏற்படாத எஸ்டேட்டுகள் சம்பந்தமாக மேற்படி எஸ்டேட்டுகள் கொடுக்கப்படுவதற்கு, அல்லது ஸ்திரப்படுத்துவதற்கு, அல்லது அங்கீகரிக்கப்படுவதற்கு, சமீபகாலத்திற்குமுன், மேற்படி நிலங்களுக்கு இருந்த தீர்வை விகிதங்களை அனுசரிக்கவேண்டும்.

(b) மேற்படி தீர்வை விகிதங்கள் அறியக் கூடாவிட்டால், கலெக்டர் ஸ்தல வழக்கத்தை அனுசரித்து வழக்கைத் தீர்மானிக்கவேண்டும் ; ஸ்தல வழக்கு என்னவென்பது, தெளிவாக அறியக்கூடாவிட்டால், ஜில்லாவில், ஒத்ததரத்தையும் அமைப்பையுமுடைய நிலங்களுக்கு வழக்கமாக என்ன் வரி விகிதங்கள் ஏற்பட்டிருக்கின்றனவோ அவைகளை அனுசரிக்கவேண்டும்.

ஆனுல், இருதரப்பாரில் ஒருவருக்கு மேற்கூறியவாறு நிர்ணயம் செய்யப்பட்ட வரி விகிதங்கள் சம்பந்தமாக அதிருப்தி ஏற்ப்ட்டால், (b) அவர் வார முறைப்படி, தீர்வையைச் செலுத்துவதற்கு மனுச்செய்து கொள்ளலாம். அதாவது, ஜமீன்தாரும் அல்லது சர்க்காரும், குடியானவனும் விளைச் வருஷ காலத்தின் சராசரி விலைவாசிகளோடு, கலெக்டர் ஒப்பிட்டுப் பார்க்கவேண்டும் ;

(a) (b) உட்பிரிவில் தெரிவிக்கப்பட்ட 10 வருஷ காலத்தைக் கணக்கிடுவது அசாத்தியமென்று, கலெக்டர் கருதினுல், அவர், தமக்கு யுக்தமாகத் தோன்றும் இதர குறைந்த காலத்தை, ஒப்பிட்டுப் பார்ப்பதற்கு எடுத்துக்கொள்ளலாம்.

(c) சர்க்கார் அதிகாரத்தின்மீது, பிரசுரிக்கப்பட்ட சராசரி விலைவாசிகளையே கலெக்டர் ஆதாரமாகக் கொள்ளவேண்டும். இச்சட்டம் அமுலில்வந்த பிறகு, எந்த வருஷத்திற்காவது தயாரிக்கப்பட்ட பட்டிகளில் தெரிவித்துள்ள விலையையே (மாருக ரூபிக்கப்படும்வரை) சரியான விலையாக, கலெக்டர் கருதவேண்டும். இச்சட்டம் ஏற்படுவதற்கு முன் ஏதாவது ஒரு வருஷத்திற்கு தயாரிக்கப்பட்ட பட்டாக்களில் தெரிவிக்கப்பட்டிருக்கும் விலையையும் (மாருக ரூபிக்கப்படும்வரை) சரியான விலையாக, கலெக்டர் கருதவேண்டும் ;

(d) ஒரு குறிப்பிட்ட பிரதேசம் சம்பந்தமாக, பஞ்ச வருஷங்களென்று, சர்க்காரால் தெரிவிக்கப்பட்ட வருஷங்களை, சராசரி விலைகளை ஒப்பிட்டுப் பார்ப்பதற்கு, கணக்கிடப்படும் 10 வருஷங்களிற் சேர்க்கக்கூடாது ;

(e) சென்ற 10 வருஷங்களின் சராசரி விலைகளுக்கும், ஒப்பிட்டுப்பார்ப்பதற்கு எடுத்துக்கொள்ளப்பட்ட இதர 10 வருஷங்களின் சராசரி விலைகளுக்கும், என்ன தாரதம்மியமிருக்கிறதோ, அதே தாரதம்மியந்தான், தற்போதுள்ள வரிக்கும், உயர்த்தப்போகும் வரிக்கும், இருக்கவேண்டும். ஆனுல் இத்தகைய தாரதம்மியத்தைக் கணக்கிடுவதில், முன்பு தெரிவிக்கப்பட்ட 10 வருஷங்களின் சராசரி விலைகளுக்கு, கூடுதலாகவுள்ள, பின்பு தெரிவிக்கப்பட்ட 10 வருஷங்களின் சராசரி விலைகளில் பாதிப் பங்கு குறைக்கப்படவேண்டும்.

32. (1) (ii)-வது உட்பிரிவின்படி வரியை உயர்த்தவேண்டுமென்று, நிலச்சுவான்தார் மனுச்செய்துகொண்டால்,—

(a) சட்டத்தின்படி, அபிவிருத்தி பதிவு செய்யப்படாவிட்டால், அல்லது, இச்சட்டம் ஏற்படுவதற்குமுன் 15 வருஷங்களுக்குள், மேற்படி அபிவிருத்தி செய்யப்பட்டிராவிட்டால், கலெக்டர் வரி வுயர்வை அனுமதிக்கக்கூடாது ;

(b) வரியை எவ்வளவு உயர்த்தலாமென்று தீர்மானிப்பது சம்பந்தமாக, கலெக்டர் கீழ்க்கண்ட விஷயங்களை கவனிக்கவேண்டும்—

(i) அபிவிருத்தியால் உண்டான, அல்லது உண்டாகக்கூடிய, விளைச்சலின் அதிகரிப்பு ;

(ii) மேற்படி அபிவிருத்தி சம்பந்தமாக ஏற்பட்ட செலவு ; அச்செலவில் ஜமீன்தாரும், குடியானவனும் பொறுத்துக்கொண்ட பாகம் ;

(iii) மேற்படி அபிவிருத்தியை பராமரிப்பதற்கு, பிரதி வருஷமும் ஏற்படக்கூடிய செலவு—

(a) நிலச்சுவான்தாருக்கு ;

(b) குடியானவனுக்கு ;

---

* 1802-வது வருஷத்திய ரெகுலேஷன் XXX-ன் V, VII பிரிவுகளின் படி, ஒழுங்கீனமான வரிகளை வசூலிக்கக்கூடாது.

† 1802-வது வருஷத்திய ரெகுலேஷன் XXX-ன் 15-வது பிரிவு.

வரிவுயர்வுகள்—தொடர்ச்சி.

1802-ம் வருஷத்திய பட்டா ரெகுலேஷன்—வரிவுயர்வு அனுமதிக்கப்படவில்லை. ஆனால் கரம்பை நிலங்களுக்கு, சில குறிப்பிட்ட விஷயங்களுக்கு குறைவான வரி விகிதங்கள் அனுமதிக்கப்பட்டன.	1863-ம் வருஷத்திய வரி வசூல் சட்டம் VI—ஜமீன்தார் செலவில் ஏற்பட்ட நில அபிவிருத்தியின் பலனுக, நிலத்திற்கு அதிக மதிப்பு ஏற்பட்டால், அப்பொழுதுமட்டும் வரிவுயர்வு அனுமதிக்கப்பட்டது. சில குறிப்பிட்ட விஷயங்களுக்கு குறைவான வரி விகிதங்கள் ஏற்படுத்துவதும் அனுமதிக்கப்பட்டது.	1865-வது வருஷத்திய வரி வசூல் சட்டம் 8— சில நிலங்களுக்கு அதாவது அனுபோக பாத்தியமில்லாத நிலங்களுக்கு வரி உயர்வு அனுமதிக்கப்பட்டது.	மதராஸ குடியானவர்களின் மசோதா (1898) சட்டசபையில் பிரேரபித்தபடி.	செலக்ட் கமிட்டியால் திருத்தியமைக்கப்பட்ட மதராஸ் குடியானவர்களின் சட்டம் (1898).	1908-வது வருஷத்திய எஸ்டேட் நிலச்சட்டம் I—பழைய கரம்பை ரயத்தி நிலத்திற்குமட்டும், கீழ்க்கண்ட தலைப்புகளின் கீழ், வரிவுயர்வுகள் அனுமதிக்கப்பட்டன.
(1)	(2)	(3)	(4)	(5)	(6)
பிரிவுகள்—தொடர்ச்சி.	ஷரத்து 10—தொடர்ச்சி	பிரிவு 11—ஷரத்துகள் (1)-(4)—தொடர்ச்சி.			பிரிவு 3035-ம், 40, 41-ம்—தொடர்ச்சி.
அல்லது தோட்டத்திற்கும், கரம்பை நிலங்களைப் பண்படுத்தி சாகுபடிசெய்ய, பட்டா கொடுப்பதற்கும், மேற்படி விஷயங்களுக்கு, ஜமீன்தாரால் நல்லெண்ணத்துடன் கொடுக்கப்பட்ட பட்டாக்கள், மேற்படி நிலங்களடங்கிய ஜமீன், பேஷ்கஷ் பாக்கிக்காக விற்கப்பட்ட போதிலும், பின் வரும் ஜமீன்தார்களைக் கட்டுப்படுத்தும். ஆனால் மேற்படி நிலங்கள், குத்தகை விடும்பொழுது, கரம்பை நிலங்களாக இல்லை என்றும், அல்லது சதியாலோசனையாலாவது, மோசம் செய்தாவது பெறப்பட்டனவென்றும் நீதிஸ்தலத்தில் ரூபிக்கப்பட்டால், அப்பொழுது மேற்படி பட்டாக்களும், நிலக் குத்தகைகளும் செல்லா.	சம்பந்தமான நிபந்தனைகளை பெரும்பான்மையாக நிறைவேற்றி இருக்க வேண்டும்.	பங்களிலும், வரி எவ்வளவு உயர்த்தலாம் என்பது சம்பந்தமாக, நிலச்சுவான்தார், கலெக்டரின் அனுமதியை முன்னதாகவே பெறவேண்டும். (1871-வது வருஷத்திய மதராஸ் சட்டம் II ; 1890-வது வருஷத்திய மதராஸ் சட்டம் III). மேலும், மேற்படி நிலங்களுக்கும், அல்லது அவைகளின் ஒத்த தரத்தையும், அமைப்பையும் கொண்ட பக்க நிலங்களுக்கும், செலுத்தவேண்டிய வரி விகிதங்களைவிட, குறைந்த வரி விகிதங்களுக்கு, பட்டாக்கள், கீழ்க்கண்ட விஷயங்களுக்கு நல்லெண்ணத்துடன், கொடுத்தால்மட்டுமே, அவைகள் பின்வரும் ஜமீன்தார்களைக் கட்டுப்படுத்தும் :—குடிஇருப்பு வீடுகள், தொழிற்சாலைகள் முதலிய நிரந்தரமான கட்டிடங்கள் கட்டிக்கொள்வதற்கும் ; அல்லது கரம்பை நிலங்களைப் பண்படுத்தி, சாகுபடி செய்ய லாயக்கு ஆக்குவதற்கும், அல்லது அவைகள் சம்பந்தமாக நிரந்தர அபிவிருத்திகளைச் செய்தவற்கும். மேற்படி குறைந்த வரி விகிதங்கள் சம்பந்தமாக ஏற்பட்ட நிபந்தனைகளை, குடியானவன், பெரும்பான்மையாக நிறைவேற்றி இருக்கவேண்டும். (5) 3-வது பிரிவில் குறிக்கப்பட்ட நிலச்சுவான்தார்கள், தங்கள் கீழிருக்கும் , குடியானவர்களுக்கு, எப்பெயராலாவது,	பதிவு செய்யப்பட்டும், இருந்தாலொழிய கலெக்டர் வரி உயர்வை அனுமதிக்கக்கூடாது. (b) வரி உயர்வுத் தொகையை நிர்ணயம் செய்வதில், கலெக்டர் கீழ்க்கண்ட விஷயங்களைக் கவனிக்கவேண்டும்— (i) நில அபிவிருத்தியால் உண்டான அல்லது உண்டாக்கக்கூடிய விளைச்சலின் அதிகரிப்பு ; (ii) மேற்படி அபிவிருத்தி சம்பந்தமாக ஏற்பட்ட செலவு; (iii) மேற்படி அபிவிருத்தியை பயன்படுத்தி, நிலத்தை பண்படுத்துவதற்கும், சாகுபடி செய்வதற்கும் ஏற்படும் செலவு; (iv) தற்போதுள்ள வரியும், அதற்கதிகமான வரியைத் தாங்குவதற்கு நிலத்திற்குள்ள சக்தியும். (2) இப்பிரிவின்படி கிடைக்கும் தீர்ப்பு, (குடியானவனுவது, அல்லது, அவனுடைய பாத்தியதையைப்பெற்றவராவது, மனுச்செய்துகொண்டால்) மேற்படி அபிவிருத்தி, எதிர்பார்க்கப்பட்ட பலனை கொடுக்கவில்லை, அல்லது, அவ்வாறு கொடுத்துவந்தது நின்றுவிட்டது, என்பது சம்பந்தமான புனராலோசனைக்கு உட்பட்டது. பிரிவு 20.—17-வது பிரிவின் (c) உட்பிரிவின் படி, வரி உயர்வு சம்பந்தமாக, நிலச்சுவான்தார் மனுச்செய்துகொண்டால், கலெக்டர் கீழ்க்கண்ட விஷயங்களைக் கவனிக்கவேண்டும்: (1) அபிவிருத்தியால் உண்டான, அல்லது, உண்டாகக்கூடிய, விளைச்சலின் அதிகரிப்பு ; (2) மேற்படி அபிவிருத்தியை பயன்படுத்தி, நிலத்தை சாகுபடி செய்வதற்கு ஏற்படும் செலவு. (3) அபிவிருத்தியின் சம்பந்தமாக, சர்க்காருக்கு நிலச்சுவான்தார் கொடுக்கவேண்டிய கூடுதலான தொகை. ஆனால், குடியானவ	சலைப் பங்கிட்டு கொள்வதற்கு, கிராமத்தில் வழக்கமாக உள்ள முறைப்படி ; மேற்படி வார விகிதம் அறியக்கூடாவிட்டால், தனக்கு நியாயமாகவும் ஒழுங்காகவும் தோன்றுகிற, வரி விகிதங்களை, கலெக்டர் விதிக்கலாம். ஆனால், மொத்த விளைச்சலில், சாகுபடிச் செலவு, அறுவடைச் செலவு, களத்திற் சேர்க்கும் செலவு, ஆகிய இச்செலவுகள்போக உள்ளதில், பாதிக்கதிகமான பாகத்தை நிலவரியாக விதிக்கக்கூடாது. முந்திய 10 வருஷங்களின் சராசரி மீது, அறுவடை காலத்தில் குடியானவனுக்கு கிடைக்கக்கூடிய சராசரி விலையை கணக்கிட்டு, மேற்படி பணவரி விகிதங்கள் நிர்ணயம் செய்யப்படவேண்டும். (iii) அனுதிக் கரம்பை நிலங்களுக்கு, நிலச்சு	முதலில் இருந்த உட்பிரிவுக்கு பதிலாக, (ii) உட்பிரிவு ஏற்படுத்தப்பட்டது. 1934-வது வருஷத்திய மதராஸ் எஸ்டேட் நில (திருத்த)ச்சட்டத்தின் 22-வது பிரிவின், (i), (a), ஷரத்தின்படி அது ஏற்பட்டது. (1934-வது வருஷத்திய மதராஸ் சட்டம் viii) (iii)-வது உட்பிரிவும், மேற்படி சட்டத்தின் 22-வது பிரிவின், (I), (c), ஷரத்தின்படி ஏற்படுத்தப்பட்டது. குறிப்பு.—முதலில் இருந்த (iii), (iv), உட்பிரிவுகள், மேற்படி சட்டத்தின் (iv), (v), உட்பிரிவுகளாக எண்ணிக்கை இடப்பட்டன. (iv) மேற்படி அபிவிருத்தியை பயன்படுத்தி நிலத்தை சாகுபடி செய்தவற்கு ஏற்படும் செலவு ; (v) தற்போதுள்ள வரியும், அதற்கதிகமான வரியைத்தாங்குவதற்கு, நிலத்திற்குள்ள சக்தியும் ; (2) நிலத்திற்கு அபிவிருத்தி செய்வதற்குமுன், கலெக்டர் அனுமதியைப்பெற்று, மேற்படி அபிவிருத்தியின் காரணமாக, அதிகமான வரியைச் செலுத்துவதற்கு, ஜமீன்தார், குடியானவனுடு ஒப்பந்தம் செய்துகொள்ளலாம். மேற்படி அபிவிருத்தி செய்தானபிறகு, அதைப் பதிவு செய்ய வேண்டுமென்று, நிலச்சுவான்தார் கலெக்டருக்கு மனுச்செய்துகொள்ளவேண்டும். அபிவிருத்தி செய்யப்பட்டதின் உண்மையை விசாரித்து கலெக்டர் அதைப்பதிவு செய்யலாம் (அதாவது ரிஜிஸ்தர் செய்யலாம்), இவ்வாறு பதிவு செய்த தேதியில், அல்லது அதற்குப் பிறகு, மேற்கூறிய ஒப்பந்தத்தை அமுலில் கொண்டுவருவதற்கு, நிலச்சுவான்தார் கலெக்டருக்கு மனுச் செய்துகொள்ளலாம். அதன் மீது கலெக்டர், வரிவுயர்வை அனுமதிக்கும் உத்தரவைப் பிறப்பிக்கலாம். அதன்படி விதிக்கப்படும் வரி, ஒப்பந்தத்தில் குறிக்கப்பட்டுள்ள வரிக்கு கூடுதலாக இருக்கலாகாது.

என்ன காரணத்தைக்கூறியாவது, சட்ட சம்மதமில்லாத வரியை, விதிக்கக்கூடாது. நியாயமாய்ச் செலுத்தவேண்டிய வரிக்கதிகமான தொகையையாவது, பட்டாவில் குறிக்கப்பட்ட தொகைக்கு அதிகமான தொகையையாவது, நிலச்சுவான்தார் வசூலித்தால், குடியானவன் அதைப்பற்றி, கலெக்டர்முன்பு, துரித தாவா செய்துகொள்ளலாம். செலவு தொகையுடன், நியாயமற்ற முறையில், ஜமீன்தார் வசூலித்த தொகைக்கு இரட்டிப்பான தொகை குடியானவனுக்குக் கொடுக்கப்படவேண்டும். இப்பிரிவின்படி, குடியானவனுக்கு ஜமீன்தார் நஷ்ட ஈடு கொடுத்தாலும், குடியானவன் விரும்பினுல், ஜமீன்தார்மீது கிரிமினல் கோர்ட்டிலும் பிரியாது செய்யலாம். (இம்சித்துப் பறித்த குற்றத்திற்கென்று).

னுக்கு விதிக்கப்பட்ட வரி உயர்வு, மேற்படி அபிவிருத்திக்காக, சர்க்காருக்கு நிலச்சுவான்தார் செலுத்தவேண்டிய தொகைக்கு அதிகமாக இருக்கக்கூடாது.

பிரிவு 21—17-வது பிரிவின் (d) உட்பிரிவின்படி வரி உயர்வு சம்பந்தமாக ஜமீன்தார் மனுச் செய்துகொண்டால்—

(a) தற்காலிகமாக அல்லது, அகஸ்மாத்தாக ஏற்பட்ட விளைச்சலின் அதிகரிப்பை, கலெக்டர் கணக்கில் எடுத்துக்கொள்ளக்கூடாது.

(b) தனக்கு ஒழுங்கானதாகவும், நியாயமான தாகவும் தோன்றுகிற தொகையை, கலெக்டர் வரி உயர்வாக ஏற்படுத்தலாம். ஆனுல் மேற்படி நிலத்தின் மொத்த விளைச்சலில் செலவுபோக உள்ளதில், பாதிக்கதிகமான தொகையை, வரி உயர்வாக ஏற்படுத்தக் கூடாது.

பிரிவு 22.—மேலே தெரிவிக்கப்பட்ட பிரிவுகளில் என்ன கூறப்பட்டிருப்பினும், உள்ள பரிஸ்திதியில் ஒழுங்கில்லாததுவும், நியாயமில்லாததுவுமான வரி உயர்வை கலெக்டர் அனுமதிக்கக்கூடாது.

பிரிவு 23.—வரி உயர்வை அனுமதிக்கும் கலெக்டர், அது சம்பந்தமான தமது தீர்ப்பு, பூர்ண மாக நிறைவேற்றப்பட்டால் குடியானவனுக்கு கஷ்டம் உண்டாகும் என்று கருதினுல் மேற்படி வரி உயர்வு படிப்படியாக, அமுலில் வரலாமென்று உத்தரவிடலாம். அதாவது அவ்வாறு ஏற்பட்ட வரி உயர்வு வருஷா வருஷமாக, கொஞ்சம் கொஞ்சமாக அமுலில் வரலாம். ஆனுல், மேற்படி வரி உயர்வுத் தொகை ஐந்து வருஷங்களுக்குள் நிறைவேற்றப்படவேண்டும்.

பிரிவு 24.—(1) தாவா செய்யப்பட்ட வருஷத்திற்குமுன், 15 வருஷங்களுக்குள், மேற்படி நிலத்தின் வரி ஒப்பந்தமூலமாக உயர்த்தப்பட்டு இருந்தால், அல்லது மேற்படி 15 வருஷங்களுக்குள், 27-வது பிரிவின்படி வரி மாற்றம் ஏற்பட்டிருந்தால், அல்லது, மேற்கூறிய காரணங்களுக்கு இச்சட்டத்தின்படி கோர்ட்டார் வரி உயர்வு தீர்ப்பு அளித்திருந்தால், அல்லது, வரி உயர்வு சம்பந்தமான தாவா தள்ளுபடி செய்திருந்தால், விலைவாசிகளின் காரணமாக வரியை உயர்த்தவேண்டுமென்று, நிலச்சுவான்தார் செய்துகொள்ளும் தாவா, கலெக்டரால் கருதப்படமாட்டாது.

(2) சிவில் ப்ரொசிஜர் கோடின் 373-வது பிரிவிலுள்ளவிதிகளே இப்பிரிவு பாதிக்காது.

வான்தார்கள், தங்களுக்கு யுக்தமாகத் தோன்றும் வரி விதிதங்களை ஏற்படுத்திக்கொள்ளலாம். ஆனுல், மேற்கூறிய விதிகளிற் தெரிவிக்கப்பட்ட வரி விகிதங்களுக்கு அதிகமான வரி விகிதங்களை ஏற்படுத்தக்கூடாது. மேலும், மேற்படி கரம்பை நிலங்களில் எவருக்காவது, சட்டப்படியாவது, சட்டரீதியான வழக்கப்படியாவது, விசேஷ உரிமைகள் இருந்தால், அவைகளே, இவ்விதி பாதிக்காது.

(iv) நிலச்சுவான்தார், தனது சொந்தச்செலவால் ஏற்பட்ட நீர்ப்பாசன அமைப்பு, அல்லது இதர அபிவிருத்தியின் பலிதமாக, நிலத்திற்கு அதிக மதிப்பு ஏற்பட்டிருந்தால், அப்பொழுது வரியை உயர்த்துவதற்கு அவருக்குள்ள உரிமையை, இவ்விதி பாதிக்காது; அல்லது சர்க்காரால் ஏற்பட்ட அபிவிருத்திக்கு, நிலச்சுவான்தார் கூடுதலான தொகையைச் செலுத்த நேரிட்டால், அப்பொழுது வரியை வுயர்த்துவதற்குள்ள உரிமையையும் இவ்விதி பாதிக்காது. ஆனுல், மேற்கூறிய இருசந்தர்ப்பங்களிலும், நிலச்சுவான்தார், வரியை உயர்த்துவதற்குமுன், என்னதொகை உயர்த்தப்படலாம் என்பது சம்பந்தமாக, கலெக்டரின் முன்னதான அனுமதியைப் பெறவேண்டும்.

(1)-வது பிரிவின் (b) ஷரத்தில் குறிக்கப்பட்ட விஷயங்களேயும், கலெக்டர் இது சம்பந்தமாகக் கவனிக்கவேண்டும்.

(3) மேற்கூறிய அபிவிருத்தியால் எதிர்பார்க்கப்பட்ட பலனேற்படவில்லை, அல்லது ஏற்பட்டுவந்த பலன் நின்றுவிட்டது என்ற காரணத்தைக்கொண்டு, குடியானவனுவது, அவனுடைய பாத்தியதையைப்பெற்ற எவனுவது, இச்சட்டத்தின்படி பிறப்பிக்கப்பட்டிருக்கும் வரி வுயர்வு உத்தரவை, புனராலோசனை செய்யவேண்டுமென்று, கலெக்டருக்கு மனுச்செய்துகொள்ளலாம்.

33. 30-வது பிரிவின், (iii) உட்பிரிவின்படி நிலச்சுவான்தார் வரியை உயர்த்தவேண்டுமென்று மனுச் செய்தால், ஏற்பட்ட அபிவிருத்திக்கு, நிலச்சுவான்தார், நியாயமாக சர்க்காருக்குச் செலுத்தவேண்டிய தொகைக்குத் தகுந்தாற்போல், வரி உயர்த்தப்படலாம்.

34. 30-வது பிரிவின் (iv) உட்பிரிவின்படி வரியை உயர்த்தவேண்டுமென்று நிலச்சுவான்தார் மனுச்செய்துகொண்டால்,—

(a) நிலத்திற்கு, தற்காலிகமாகவாவது, அல்லது, அகஸ்மாத்தாகவாவது, உண்டாயிருக்கும் விளைச்சலின் அதிகரிப்பை, கலெக்டர், கணக்கில் எடுத்துகொள்ளக்கூடாது.

(b) தமக்கு, ஒழுங்காகவும், நியாயமாகவும் தோன்றுகிற தொகையை, கலெக்டர் அதிக வரியாக அனுமதிக்கலாம். ஆனுல், மொத்த விளைச்சலில் செலவுபோக உள்ள விளைச்சலின் மதிப்பில் பாதிக்கதிகமான தொகையை, வரி வுயர்வாக ஏற்படுத்தக்கூடாது.

35. 31-வது பிரிவு முதல், 34-வது பிரிவு வரை, தெரிவிக்கப்பட்ட விஷயங்கள் எவ்வாறிருப்பினும், தற்போதுள்ள பரிஸ்திதியில், ஒழுங்கில்லாதவும், நியாயமில்லாததவுமான வரிஉயர்வையாவது, நிலம் அமைந்துள்ள கிராமத்தில் வழக்கப்படியுள்ள வார மதிப்பிற்கு (40-வது பிரிவின்படி வரி மாற்றம் ஏற்பட்ட பிறகு) அதிகமான தொகையை ஏற்படுத்தும் வரி உயர்வையாவது, கலெக்டர் அனுமதிக்கக்கூடாது.

40. (1) குடியானவன் தன்னுடைய நிலத்திற்கு, தானியமாகவாவது, விளைச்சலின் ஒரு பாகத்தின பணமதிப்பையாவது, அல்லது, விளைச்சலுக்கு தகுந்தாற்போல் மாறுதலடையும் தானியத்தையாவது, பணமதிப்பையாவது அல்லது மேற்கூறிய வகைகளில் ஒருவகையிற் கொஞ்ச பாகத்தையும், மற்றெரு வகையிற் கொஞ்ச பாகத்தையும், அல்லது மேற்கூறிய வகைகளில், ஒன்று அல்லது இரண்டு வகைகளில் கொஞ்ச பாகத்தையும், தீர்வையாகச் செலுத்திவந்தால், நிலவரி, நிஷ்கரணையான பணவரியாக மாற்றப்படவேண்டுமென்று, குடியானவன், அல்லது நிலச்சுவான்தார் மனுச் செய்துகொள்ளலாம்.

(2) இத்தகைய மனுவை விசாரித்து, தானியமாகவோ, மற்றவகையிலோ, செலுத்திவந்த தீர்வைக்கு பதிலாக, பணமாகச் செலுத்தவேண்டிய தீர்வைத் தொகையைத் தெரிவிக்கும் உத்தரவை கலெக்டர் பிறப்பிக்கலாம். உத்தரவு ஏற்பட்ட

வரிவுயர்வுகள்—தொடர்ச்சி.

1802-ம் வருஷத்திய பட்டா ரெகுலேஷன்—வரிவுயர்வு அனுமதிக்கப்படவில்லை. ஆனால் கரம்பை நிலங்களுக்கு, சில குறிப்பிட்ட விஷயங்களுக்கு குறைவான வரி விகிதங்கள் அனுமதிக்கப்பட்டன.	1863-ம் வருஷத்திய வரி வசூல் சட்டம் VI—ஜமீன்தார் செலவில் ஏற்பட்ட நில அபிவிருத்தியின் பலனாக, நிலத்திற்கு அதிக மதிப்பு ஏற்பட்டால், அப்பொழுதுமட்டும் வரிவுயர்வு அனுமதிக்கப்பட்டது. சில குறிப்பிட்ட விஷயங்களுக்கு குறைவான வரி விகிதங்கள் ஏற்படுத்துவதும் அனுமதிக்கப்பட்டது.	1865-வது வருஷத்திய வரி வசூல் சட்டம் 8—சில நிலங்களுக்கு அதாவது அனுபோக பாத்தியமில்லாத நிலங்களுக்கு வரி உயர்வு அனுமதிக்கப்பட்டது.	மதராஸ் குடியானவர்களின் மசோதா (1898) சட்ட சபையில் பிரரேபித்தபடி.	செலக்ட் கமிட்டியால் திருத்தியமைக்கப்பட்ட மதராஸ் குடியானவர்களின் சட்டம் (1898).	1908-வது வருஷத்திய எஸ்டேட் நிலச்சட்டம் 1—பழைய கரம்பை ரயத்தி நிலத்திற்குமட்டும், கீழ்க்கண்ட தலைப்புகளின் கீழ், வரி வுயர்வுகள் அனுமதிக்கப்பட்டன.
(1)	(2)	(3)	(4)	(5)	(6)
பிரிவுகள்—தொடர்ச்சி.	ஷரத்து 10—தொடர்ச்சி.	பிரிவு 11—ஷரத்துகள் (1)-(4)—தொடர்ச்சி.		பிரிவு 10—தொடர்ச்சி.	பிரிவு 30—35-ம், 40, 41-ம்—தொடர்ச்சி.
				(v) 1871-வது வருஷம் மே மாதம் 1-ந் தேதிக்குப் பின்தான், நியாயமாகச் செலுத்த வேண்டிய நிலவரி வுயர்த்தப்பட்டது என்ற காரணத்தைக்கொண்டு, குடியானவன்; வரியைக்குறைப்பதற்கு, தாவா செய்யலாம். (vi) இச்சட்ட விதிகளின்படி, எந்த நிலங்களுக்காவது, அல்லது அவைகளின் ஒத்ததரத்தையும் அமைப்பையும் உடைய நிலங்களுக்காவது நியாயமாகச் செலுத்தவேண்டிய வரியைவிட, குறைந்த வரிக்கு ஜமீன்தார் கொடுக்கும் பட்டாக்கள், கீழ்க்கண்ட விஷயங்களுக்கு நல்லெண்ணத்துடன் கொடுக்கப்பட்டாலொழிய, அவைகள் பின்வரும்	தேதிக்கு அடுத்த ரெவினியு வருஷ ஆரம்பத்திலிருந்து வரிமாற்றம் அமுலில்வரும். (3) மேற்கூறியவாறு தீர்வையை நிர்ணயம் செய்வதில், கலெக்டர் கீழ்க்கண்ட ஒவ்வொரு விஷயத்தையும் நன்கு விசாரிக்கவேண்டும் :— (a) நிலச்சுவான்தாருக்கு, அசலாகக் கிடைத்த தீர்வையின் சராசரி மதிப்பு; (மனுச்செய்து கொண்ட தேதிக்குமுன் பத்து வருஷ காலத்தில்) ஒரு குறிப்பிட்ட பிரதேசம் சம்பந்தமாக, சர்க்காரால் பஞ்சவருஷங்கள் என்று தெரிவிக்கப்பட்ட வருஷங்களை, கணக்கில் சேர்க்கக் கூடாது. அல்லது, மேற்கூறிய சராசரி மதிப்பு அறியக்கூடாவிட்டால், ஒரு குறைவான காலத்தின் சராசரி மதிப்பை எடுத்துக்கொள்ள வேண்டும். இதைக் கணக்கிடுவதிலும், பஞ்ச வருஷங்களை எடுத்துக்கொள்ளக்கூடாது. (b) அதே கிராமத்தில் அல்லது பக்க கிராமங்களில் ஒத்ததரத்தையும், வசதிகளையும் உடைய நிலங்களுக்குள்ள பணவரி (அப்படி இல்லாவிட்டால் பக்கத்திலுள்ள தாலூக்காவின் கிராம நிலங்களுக்குள்ள பணவரி). (c) நிலத்தின் சம்பந்தமாக, குடியானவன் அல்லது, நிலச்சுவான்தார் செய்த அபிவிருத்தியும், 32-வது பிரிவிலுள்ள விதிகளும். 41. (1) 40-வது பிரிவின்படி ஒரு நிலத்திற்கு பணத் தீர்வை ஏற்பட்டால், அதை 20 வருஷகாலத்திற்கு உயர்த்தவாவது, குறைக்கவாவது முடியாது. ஆனால், 30-வது பிரிவின் (ii), (iii) உட்பிரிவுகளில் தெரிவித்துள்ள காரணங்களுக்காவது, அல்லது, நில விஸ்தீர்ணத்தில் மாறுதல் ஏற்பட்டிருக்கிறது என்ற காரணத்திற்காவது, ஷெ தீர்வை உயர்த்தப் படலாம். அதே போல நில விஸ்தீர்ணத்தில் மாறுதல் ஏற்பட்டிருக்கிறதென்ற காரணத்திற்காவது, அல்லது, 38-வது பிரிவின் (1)-வது உட்பிரிவின், (a), (b) ஷரத்துகளில் தெரிவித்திருக்கும் காரணத்திற்காவது, ஷெ தீர்வை குறைக்கப்படலாம். (2) மேற்கூறிய 20 வருஷகாலம், வரி மாற்றம் ஏற்பட்ட தேதியிலிருந்து கணக்கிடப்படும்.

ஜமீன்தாரைக் கட்டுப்படுத்தா :—குடி இருப்பு வீடுகள், தொழிற்சாலைகள், அல்லது இதர நிரந்தரமான கட்டிடங்கள் கட்டிக்கொள்வதற்கு; அல்லது கரம்பை நிலங்களைப் பண்படுத்தி, சாகுபடி செய்ய லாயக்கு ஆக்குவதற்கு; அல்லது அவைகள் சம்பந்தமாக நிரந்தரமான அபிவிருத்தியைச் செய்வதற்கு; மேற்படி, குறைந்த வரி விகிதங்கள் சம்பந்தமாக ஏற்பட்ட நிபந்தனைகளை, குடியானவன் பெரும்பான்மையாக நிறைவேற்றி யிருக்கவேண்டும்.

வரிச்சட்டம் (Rent Act)—பிரிவு 11.

1. வரிச்சட்டத்தில், 11-வது பிரிவு (i)-வது உட்பிரிவின்படி "ஒப்பந்தங்கள்", என்ற ஆதாரத்தின்மீது ரயத்துவாரிக் குடியானவன் தன் கீழுள்ளவன் செலுத்தும் தொகையை அதிகரிக்கலாம். ஏனெனில், வரி சட்டத்தின் 1-வது பிரிவில், ரயத்துவாரிக் குடியானவன் இரண்டாம் தர நிலச்சுவான்தார் என்று குறிக்கப்பட்டிருக்கிறது. மேற்படி நிலச்சுவான்தார்கள், தங்கள் கீழ் இருப்பவர்கள் செலுத்தவேண்டிய பாக்கித் தொகைக்கு, அவர்கள் மீது சட்டத்தில் விதிக்கப்பட்ட முறைகள், நிபந்தனைகளின்படி, நடவடிக்கை யெடுத்துக்கொள்ளலாம் என்று வரி சட்டத்தின், 2-வது பிரிவில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. அதை அனு போக பாத்தியதைக்கு விரோதமாக உபயோகப்படுத்த விரும்பினால், சாசுவத பைசல் ஏற்பாடு பாதிக்கப் படும். நிரந்தர அனுபோக உரிமை என்பது "ஒப்பந்தம்" மூலம் வரி உயர்த்துவதைக்கூட நிராகரிக்கும்.

2. 1859-வது வருஷத்திற்கு முன் சர்வே செய்யப்பட்ட ரயத்துவாரி நிலங்களுக்கு 2-வது உட்பிரிவிலுள்ள, வரி உயர்வு விதி செல்லும். ஏனெனில் 1859-வது வருஷத்திற்கு முன், ரயத்துவாரிப் பிரதேசங்கள்தான் சர்வே செய்யப்பட்டனவே தவிர, ஜமீன்கள், சர்வே செய்யப்படவில்லை.

3. 11-வது பிரிவின், 3-வது உட்பிரிவில், வரி விகிதம் நிர்ணயம் செய்யப்பட்டிருப்பது, 1802-ம் வருஷத்திய XXX-வது ரெகுலேஷன், 9-வது பிரிவிலுள்ள விதிகள்போல் இருக்கிறது. ஆனால் வார்த்தை களில் சில மாறுதல்கள் இருக்கலாம். ஸ்தல வழக்கத்தின்படி, வரி விகிதம் நிர்ணயம் செய்யப்படவேண்டு மென்றும், அது அறிய முடியாவிட்டால், ஒத்த தரத்தையுடைய பக்க நிலங்களுக்கு, விதிக்கப்பட்டுள்ள வரி விகிதங்களின்படி தீர்மானிக்கவேண்டுமென்றும், 3-வது உட்பிரிவில் தெரிவித்திருப்பது, 1802-ம் வரு ஷத்திய XXX-வது ரெகுலேஷனின், 9-வது பிரிவின் சாராம்சத்தை ஒத்திருக்கிறது. வழக்குகள் ஏற் பட்டால், சாசுவத பைசல் காலத்தில் சாகுபடியான நிலங்களுக்கு, என்ன வரி விகிதங்கள் இருந்தனவோ அவைகளையே அனுசரிக்கவேண்டுமென்றும், அவைகள் அறியக்கூடாவிட்டால், ஒத்த தரத்தையுடைய பக்க நிலங்களுக்கு என்ன வரி விகிதங்கள் இருந்தனவோ அவைகளை அனுசரிக்கவேண்டுமென்றும், பட்டா ரெகுலேஷனில் 9-வது பிரிவு கூறுகிறது.

"ஸ்தல வழக்கம்", "விதிக்கப்பட்ட வரி விகிதங்கள்", என்ற வார்த்தைகள், 9-வது பிரிவு தெரிவிக் கும் அர்த்தத்தையே தெரிவிக்கின்றன. மேலும் 3-வது உட்பிரிவிலுள்ள ஷரத்து, 1802-ம் வருஷத்திய XXX-வது ரெகுலேஷனின் 9-வது பிரிவை ஒத்திருக்கிறதென்பது, இதிலிருந்து நன்கு விளங்குகிறது. இந்த ஷரத்து தெரிவிப்பதாவது :—

> "அவ்வாறு, நிர்ணயம் செய்யப்பட்ட வரி விகிதங்களைப்பற்றி எவருக்காவது, அதிருப்தி உண்டானால், வாரமாக வரி செலுத்த பாத்தியம் கொண்டாடலாம். அதாவது, சாசுவத பைசல் காலத்தில், கிராமத்தில் என்ன வார விகிதம் இருந்ததோ, அதன்படி என்க".

இந்த ஷரத்தின் முதற் பாகம், சாசுவத பைசல் காலத்தில், கிராமத்திலிருந்த வரி ஏற்பாட்டிற்குக் நம்மைக் கூட்டி செல்லுகிறது. ஆதலால், 1-வது உட்பிரிவில் கண்டுள்ள "வழக்கம்", "பக்கத்து நிலங்களுக்கு விதிக்கப்பட்ட வரி விகிதங்கள்" என்ற வார்த்தைகள், சாசுவத பைசல் காலத்தில் நிரந்தரமாக விதிக்கப் பட்ட வரி விகிதங்களை குறிக்கின்றன.

சாசுவத பைசல் காலத்தில், கிராமத்தில் ஏற்பட்டிருந்த வரி விகிதங்களைக் குறிக்கும் விதி, விவகாரக் காலத்தில் உள்ள வரி விகிதத்தைக் குறிக்கும் என்று கருதுதல் தவறு. உதாரணமாக, 1807-ம் வருஷத்தில் அதாவது, வரி சட்டம் ரத்து ஆவதற்கு முன்பு, வரி விகிதமாக வழக்கு ஏற்பட்டு, ஸ்தல வழக்கத்தின்படி அல்லது பக்க நிலங்களுக்குள்ள வரி விகிதங்களின்படி என்பது, வழக்கு காலங்களிலுள்ள பரிஸ்திதிகளைத் தான் குறிக்குமென்று, ஜமீன்தாரர்கள் வாதாடினால், அது தவறாகும். ஏனெனில், அவ்வாறிருந்தால், சாசுவத பைசல் காலத்திலிருந்த வார விகிதத்தை மேற்படி ஷரத்து குறித்திருக்காது. இரண்டு காலத்துக்கு முள்ள தாரதம்மியங்கள் அகாதமானவை. அவ்வாறு வியாக்கியானம் செய்வது, இயற்கைக்கு முரண் ஆகும். பிரிவின் முக்கிய பாகம் எந்த காலத்தைக் குறிக்கிறதோ, அக்காலத்திய பரிஸ்திதிகளையே, பிரி வின் ஷரத்தும், தெரிவிக்கிறதென்று கொள்வதோ, சட்ட விதிகளை ஒழுங்காக வியாக்கியானம் செய்யும் முறையாகும்.

இவ்வாறு, நாம் அர்த்தம் செய்வோமாகில், பட்டா ரெகுலேஷன் 9-வது பிரிவு, வரி வசூல் சட்டத்தின், 11-வது பிரிவின், (3)-வது உட்பிரிவில் அடங்கியிருக்கிறதென்பது வெளிப்படையாகும். வார்த்தைகள் உள்ள படி எடுத்துக் கையாளப்படாவிட்டாலும், சாராம்சமும், போக்கும், அனுசரிக்கப்பட்டிருக்கிறது. மசோதா வின் (10)-வது உட்பிரிவில் செய்யப்பட்டிருப்பதைப்போல, 9-வது பிரிவிலுள்ள வார்த்தைகள், யாதொரு மாறுதலுமின்றி, எடுத்து அமைக்கப்பட்டிருந்தால், விவாதங்களுக்கும், ஆசங்கைகளுக்கும் இடமிருந்திராது. ஒப்பந்தம் என்பதற்கு பிரதானம் அளித்ததே, பெரும் தவறாகும். தங்கள் அறிக்கையில், விதிகளையும், கொள்கைகளையும், வெகு ஒழுங்காகத் தெரிவித்த செலெக்ட் கமிட்டியார், 11-வது பிரிவை, விஸ்தரிக்க வேண்டுமென்று முயன்று, தவறைச் செய்தார்கள். நிலத்தின் விளைச்சலில், அதிகரிப்பு ஏற்பட்டதா என் பதை விசாரித்து, வரி விதிக்கவேண்டுமென்றும், குடியானவனது, சொந்தச் செலவால், அதிக விளைச்சல் ஏற்படவில்லை என்று, கலெக்டர் விசாரித்து தெரிந்துகொள்ளவேண்டுமென்றும், சட்டம் ஏற்பட்டது மற் றொரு தவறு. இந்த விஸ்தரிப்பே, செலெக்ட் கமிட்டியார், தங்கள் அறிக்கையில் செய்ய விரும்பியதாகும். இது XXX-வது ரெகுலேஷன் விதிகளுக்கு மாறானது. XXX-வது ரெகுலேஷன், 9-வது பிரிவில் உத் தேசிக்கப்பட்ட, நிரந்தர வரி விகிதங்களும், நிரந்தர அனுபோக உரிமைகளும், அதிக விளைச்சல் ஏற்பட்டால், அதிக வரி கொடுக்கவேண்டும் என்ற தத்துவத்தை நிராகரிக்கின்றன. இது தெளிவான விஷயம். இப் பொழுது, நாம் 11-வது பிரிவின் 4-வது உட்பிரிவை ஆராய்வோம்.

4. அனாதிக்கரம்பு நிலங்களுக்கும், குடியானவன் தன்னிச்சையாகவோ, அசட்டையாகவோ, சாகுபடி செய்யாது விடப்பட்ட நிலங்களுக்கும், ஜமீன்தார் தனக்கிஷ்டமான வரி விகிதங்களை ஏற்படுத்தலாமென்று, அனுமதிக்கப்பட்டிருக்கிறது.

5. ஆனால் சாசுவத பைசல் காலத்தில், நிரந்தரமாக, வரி நிர்மாணம் செய்யப்பட்ட எல்லா நிலங்களை யும் (சாகுபடி செய்யப்பட்ட நிலங்கள், கரம்பை நிலங்கள், அனுபோகமுள்ள நிலங்கள், காலியான நிலங் கள்) மேற்படி விதியின் ஷரத்து விலக்குகிறது. அந்த [illegible] வருமாறு :—

> "ஆனால், இத்தகைய கரம்பு நிலங்கள்[illegible], கா[illegible]யுள்ள நிலங்களிலாவது, சட்டரீதியாக வாவது, சட்ட பலிதமுள்ள வழக்[illegible]படியாவது, எ[illegible]க்காவது பிரத்தியேக உரிமைகள் இருந்தால் அவைகள் இந்த வி[illegible] பாதிக்கப்படமாட்[illegible] இந்த ஷரத்துக்கு இன்னும் இரண்டு ஷரத்துகள் சேர்க்கப்பட்[illegible] :—(a) ஒன்று, ஜமீன்[illegible] செலவால் நிலத்திற்கு அபி

விருத்தி ஏற்படும்பொழுது ; (b) இரண்டாவது, சர்க்கார் செலவால், அபிவிர்த்தி ஏற்பட்டு அத் தொகையை ஜமீன்தார் கொடுக்க நேரிடும்பொழுது, இவைகளில் முதற் கூறியது மட்டும், வரி மசோதாவில் சேர்க்கப்பட்டது. ஆனால், வரிச் சட்டத்தில், இரண்டாவது கூறப்பட்டதும் சேர்த்துக் கொள்ளப்பட்டது.

(a) ஜமீன்தார் செய்த நில அபிவிருத்தியின் காரணமாக, வரிகள் உயர்த்தப்படுதல் :—இது ரயத்து வாரிக் குடியானவர்களுக்கும் அவர்கள் கீழிருப்பவருக்கும்தான் செல்லும். ஏனெனில், குடியானவன் நிலங்களை அபிவிருத்தி செய்வதற்கு ஜமீன்தாருக்கு உரிமை இல்லை. ஏனென்றால், சாசுவத பைசல் காலத்தில், வரி நிரந்தரமாக விதிக்கப்பட்டது.

(b) சர்க்கார் செய்த செலவின் நிமித்தமாக குடியானவன் நிலம் அபிவிருத்தி அடைந்தால், அதற்கு, கூடுதலான தொகையைச் செலுத்தவேண்டுமென்ற கட்டுப்பாட்டை ஆராய்வோம். மேற்கூறிய சந்தர்ப்பத்தை போலவே, இதுவும் ரயத்துவாரிக் குடியானவர்களுக்குதான் செல்லவேண்டுமேயொழிய, சாசுவத பைசல் ஏற்பட்ட ஜமீன் நிலங்களுக்குச் செல்லாது. அவ்வாறில்லாவிட்டால், வரி விகிதங்கள் சம்பந்தமாகவும், நில அனுபோக சம்பந்தமாகவும், ஜமீன் குடியானவன் அடைந்த நிரந்தர உரிமைகள், பாதிக்கப்பட்டு, மேற்படி குடியானவனுக்கு அது ஒரு புதிய பாரமாக ஏற்படும். 1802-ம் வருஷத்திய XXX-வது ரெகுலேஷனில் தெரிவிக்கப்பட்டுள்ள, சட்டத்திற்கு முற்றிலும் விரோதமாய் இருக்கும்பொழுது மேற்கூறிய புதிய கடமையை, குடியானவன் மீது சுமத்துவது அநீதியாகும். மசோதாவில் ஒரு வரி உயர்வே உத்தேசிக்கப்பட்டிருந்தபொழுது அதற்குப் பிறகு, கொஞ்ச காலத்தில் ஏற்பட்ட சட்டத்தில் (வரிச் சட்டத்தில்) இரண்டு வரி உயர்வுகள், ஏன் அமைக்கப்பட்டன என்பது அறியக்கூடவில்லை. ரயத்து வாரிக் குடியானவர்களுக்குமட்டும் செல்லவேண்டிய இவ்விரண்டு வரி உயர்வுகளும், நிரந்தர அனுபோக உரிமை குடியானவர்களுக்கும், (ஜமீன் குடியானவர்கள்) செல்லுமாறு, பதங்கள் பிரயோகப்பட்டிருக்கின் றன. அதைப் போலவே, 1, 2, 3 உட்பிரிவுகளில் உத்தேசிக்கப்பட்ட வரி உயர்வுகள், XXX-வது ரெகு லேஷன் விதித்த சட்டத்திற்கும், சாசுவத பைசல் ஏற்படுவதற்கு ஆதாரமாய் இருந்த, சம்பிரதாயங்களுக் கும், வழக்கங்களுக்கும், மாறாகச் செய்யப்பட்டிருக்கின்றன. தங்கள் குடியானவர்களிடமிருந்து (ஏற்படுத் திக்கொள்ளப்பட்ட வரியைக் குறிக்கும்) எழுத்து மூலமான குத்தகை ஒப்பந்தப் பத்திரத்தை வாங்கியிருந் தால், இச்சட்டத்தின்படி, ரயத்துவாரிப் பிரதேசத்திலுள்ள நிலச்சுவான்தார்கள் (குடியானவர்களிடமிருந்து வரவேண்டிய) வரியை, கோர்ட்டு மூலம் வசூலிக்கலாமென்று, வரி வசூல் சட்டத்தின் 13-வது பிரிவில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

6. இவ்வாறு, ரயத்துவாரி குடியானவர்களையும், ஜமீன்தார்களையும், ஒருமிக்கச் சேர்த்து, இருவர்களுக் கும் ஒரே படியான விதிகளை ஏற்படுத்தியதால், பிரமாதமான குழப்பமும், மயக்கமும், ஏற்பட்டது. வரி மசோதாவிலிருந்த 10-வது உட்பிரிவு, வரிச் சட்டத்திலும், யாதொரு மாறுதலுமின்றி அமைக்கப்பட்டிருந் தால், ஒரே வரி உயர்வுதான் ஏற்பட்டிருக்கும். அதாவது, ஜமீன்தார் செய்யும் அபிவிருத்தி சம்மந்தமான வரி உயர்வு. ஆனால் புதிய ஷரத்து ஏற்பட்டதின் பலிதமாக ஜமீன்தார், அபிவிர்த்தி செய்யாதபொழுது கூட, அவருக்கு மற்றொரு புதிய, வரி உயர்வு உரிமை கொடுக்கப்பட்டது. சர்க்கார், நிலத்திற்கு அபி விருத்தி செய்தால், நில வரி வசூலிக்கும்வரை, அது, அவர்களுடைய கடமையாகும். அதேபோன்று, சர்க்காரின் ஏஜண்டுகளாகிய ஜமீன்தார்கள், அபிவிருத்தி செய்தால், அதுவும் அவர்கள் (ஜமீன்தார்கள்) கடமையாகும். அக்கடமை, சர்க்கார், ஜமீன்தார், ஆகிய இருதரத்தாரையும் பொறுத்தது. அதற்கு தகுந்த ஏற்பாடுகளைச் செய்துகொள்வது, அவர்களைப் பொருத்த விஷயமாகும். அதில் குடியானவனுக்கு யாதொரு சம்பந்த மும் இல்லை. மேற்படி அபிவிருத்தி சம்பந்தமாக ஏற்படும் செலவை, குடியானவன் வகிக்கவேண்டு மென்று சொல்வது நியாயமல்ல. ஆதலால், நில அபிவிருத்திக்கு குடியானவன், அதிக வரி கொடுக்க வேண்டுமென்பது, அநீதியானதாகும்.

7. கடைசி ஷரத்தின்படி, குறைந்த வரி விகிதங்களைச் செலுத்தும் நிலங்களுக்கு, வரி உயர்த்துவது உண்மையில், வரி உயர்வுகளாகக் கருதப்படாது. சாசுவத பைசல் காலத்தில் விதிக்கப்பட்ட வரி விகிதம் வரை உயர்த்தப்பட்டால் அது தவறாகாது.

8. எஸ்டேட் நிலச்சட்டத்தில் விதித்துள்ள வரி உயர்வுகள்.—எஸ்டேட் நிலச்சட்டத்தின் கீழ், முதல் முதலாக, விலை வாசிகளின் உயர்வு காரணமாக, " ரயத்தி " நிலங்களுக்கு வரி உயர்வுகள் அனுமதிக்கப் பட்டன. ஆனால், 1802-ம் வருஷத்திய சாசுவத பைசல் காலத்திலும், அதற்குப் பிறகும், இருந்த சாகுபடி செய்யப்பட்ட நிலங்களுக்கும், சாகுபடி செய்யப்படாத நிலங்களுக்கும், வரி உயர்வு அனுமதிக்கப்பட்ட தென்று, கொள்ளாகாது. நிரந்தரமாக வரி விதிக்கப்பட்ட இத்தகைய நிலங்களுக்கு, வரியை உயர்த் தக்கூடாதென்று, 30-வது பிரிவினுள்ள, 1-வது உட்பிரிவின், முதலாவது ஷரத்து தெரிவிக்கிறது. ஆத லால், விலை உயர்வுகளின் காரணமாகவும், ஜமீன்தார் செய்த அபிவிருத்தியின் பயனாக நிலத்தின் விளைச்சல் அதிகரித்தது என்ற காரணமாகவும், சர்க்கார் தங்கள் செலவால் அபிவிருத்தி செய்ய, மேற் படி தொகையை ஜமீன்தார் கூடுதலான பேஷ்கஷாகக் கொடுக்க நேரிட்ட காரணமாகவும், ஆற்றுப் போக் கின் செய்கையால் நிலம் அதிக வளப்பம் அடைந்தது என்ற காரணமாகவும், விதிக்கப்பட்ட வரி உயர் வுகள், நிரந்தரமான வரி விகிதங்கள் ஏற்பட்ட ஜமீன் ரயத்தி நிலங்களுக்குச் செல்லா. முதற் கூறியது, 30-வது பிரிவில், (i)-வது உட்பிரிவின் முதலாவது ஷரத்தால், தெளிவாக விளக்கப்பட்டிருக்கி றது. அப்படி இருக்கும்பொழுது, உயர்ந்த வரி விகிதங்கள் சம்பந்தமான விதிகளைத் தெரிவிக்கும் 30-வது பிரிவு செல்லக்கூடிய இதர ரயத்தி நிலம் ஏதாவது இருக்கின்றதா ? ஆம், இருக்கிறது. முதலாவது எஸ்டேட் நிலச்சட்டம் ஏற்பட்டபொழுது, 3-வது பிரிவின் 7-வது உட்பிரிவில், " பழய கரம்பை நிலம் " என்ன என்பது ; பின் வருமாறு விளக்கப்பட்டிருக்கிறது :—

> " பழய கரம்பை நிலம் " என்பது, ஜமீன்தாரின் பண்ணை நிலம் அல்லாத எல்லா நிலத்தையும் குறிக்கும்.

மேற்கூறிய அனுதிக்கரம்பை நிலம் என்பது, சில கட்டுப்பாடுகளுடன் பின்வருமாறு விளக்கப்பட்டிருக் கிறது. மேலே தெரிவிக்கப்பட்ட இலட்சணத்தில் " எல்லா நிலமும் " என்பதைக் கீழ்க்கண்டவாறு அர்த்தம் செய்து கொள்ளவேண்டும் :—

(1) மேற்படி நிலம் குடியானவனுக்கு விடுவதற்குமுன், குறைந்தது 10 வருஷகாலம் தொடர்ச்சியாக, ஜமீன்தார் வசத்திலாவது, அவர்களுக்கு முன்னிருந்தவர்கள் வசத்திலாவது, இருந்திருக்கவேண்டும். அக்காலத்தில், மேற்படி நிலம் தொடர்ச்சியாக சாகுபடி செய்யாமலிருந்திருக்கவேண்டும். மேலே குறிக்கப்பட்ட 10 வருஷகாலம், சட்டம் செய்த பிறகாவது, அல்லது ஷி சட்டம் செய்வதற்கு பாதி காலம் முன்பாவது அல்லது, பாதிகாலம் பின்பாவது, அல்லது சட்டம் ஏற்படுத்துவதற்கு 20 வருஷத்திற்கு முன்பாவது, இருக்கவேண்டும், அல்லது,

(2) இச்சட்டம், ஏற்பட்டபிறகு, மேற்படி நிலம் குடியானவனுக்கு, ஜமீன்தார் விடுவதற்குமுன், குறைந்தது தொடர்ச்சியாக 10 வருஷ காலத்திற்கு, அந்நிலத்தில் அனுபோக உரிமை இருந்திருக்கக் கூடாது ; இச்சட்டம் ஏற்படுத்துவதற்குமுன் குடியானவனுக்கு, அனுபோக உரிமை இல்லையென்று தக்க சிவில் கோர்ட்டால், ஜமீன்தார் சார்பாக தீர்ப்பு செய்யப்பட்ட ரயத்தி நிலமும், மேற்படி லக்ஷணத்தில் சேரும் ; ஆனால் மேற்கூறிய தீர்ப்பைப் பெற்ற பிறகு, அந்நிலத்தில் எக்குடியானவனுக்காவது, அனுபோக உரிமை ஏற்பட்டிருக்கக்கூடாது.

இதையெல்லாம் பகுத்து ஆராய்வோமாகில், அனுதிக்கரம்பு நிலமென்பது மூன்று வகுப்புக்களாகப் பிரிக்கப்படலாம் :—

(1) (a) ஜமீன்தார், குடியானவனுக்கு விடும் "ரயத்தி" நிலம், அவ்வாறு விடப்படும் காலத்தில், குறைந்தது 10 வருஷகாலம், தொடர்ச்சியாக ஜமீன்தார் வசத்திலிருந்திருக்கவேண்டும் ;

(b) தொடர்ச்சியாக அக்காலத்தில் சாகுபடி செய்யாமலிருந்திருக்கவேண்டும் ;

(2) சட்டம், ஏற்படுத்தப்பட்ட பிறகு, குடியானவனுக்குவிடப்பட்ட ரயத்தி நிலம், அவ்வாறு விடுவதற்கு முன், 10 வருஷகாலமாக அதில் அனுபோக உரிமைகள் இருந்திருக்ககூடாது ;

(3) சட்டம் ஏற்படுத்தப்படுவதற்கு முன், சிவில் கோர்ட்டால் அனுபோக உரிமை இல்லையென்று தீர்ப்புக் கூறப்பட்ட ரயத்தி நிலம் ; மேற்படி தீர்ப்புக்குப் பிறகும் அந்நிலத்தில், அத்தகைய உரிமை ஏற்பட்டிருக்கக்கூடாது.

எஸ்டேட்ஸ் நிலச்சட்டம் ஏற்படுத்தினபொழுது, மேற்கூறிய மூவகை ரயத்தி நிலங்கள், 3-வது பிரிவின் 16-வது ஷரத்தில் குறிக்கப்பட்ட ரயத்தி நில வகுப்பிலிருந்து விலக்கப்பட்டன. ஆதலால், அனுதிக்கரம்பு என்ற லக்ஷணத்தின் கீழ் வராததும் 16-வது பிரிவின், 3-வது ஷரத்தில் கண்டுள்ள, ரயத்தி நில லக்ஷணத்தில் சேராததுமான மேற்கூறிய மூவகை ரயத்தி நிலத்திற்கே, 30-வது பிரிவின், (1) (4) ஷரத்துக்கள், விதிக்கின்ற வரி உயர்வுகள் செல்லவேண்டுமென்று உத்தேசிக்கப்பட்டன. எஸ்டேட்ஸ் நிலச்சட்டம் அமுலில் வந்தபொழுது, மேற்படி சட்டத்தின்படி, ரயத்தி நிலத்தை (அதாவது பழைய கரம்பு ரயத்தி நிலம்) அனுபவித்துவந்த குடியானவனுக்கே 30-வது பிரிவின் (1—4) ஷரத்துகளில், விதிக்கப்பட்ட வரி உயர்வுகள் செல்ல வேண்டும். திருத்தியமைக்கப்படுவதற்கு முன்னிருந்த 50-வது பிரிவு, இக்கருத்தை ஆதரித்தது. முதலில் இருந்த பிரிவு பின்வருமாறு :—

"நிரந்தர அனுபோக உரிமையுடைய" எல்லா ரயத்துகளுக்கும், குத்தகைப்பத்திர மூலமல்லாது, மற்ற வகையில் பழைய கரம்பு நிலத்தை ஜமீன்தார் கீழ் அனுபவிக்கும் குடியானவர்களுக்கும், இந்த அத்தியாயத்தின் விதிகள் செல்லும்."

அதில், முக்கால்வாசி வார்த்தைகள், 1934-ம் வருஷத்திய VIII திருத்தச் சட்டத்தின் 34 (i)-வது பிரிவால் நீக்கப்பட்டன.

முதலிலிருந்த பிரிவின்படி, பட்டா முச்சலிக்கைகளுக்குச் செல்லும் அத்தியாயம், "பழைய கரம்பு நிலத்திற்கும்", செல்வதாயிருந்தது. பழைய கரம்பு நிலம் என்ற வார்த்தையையும், மேற்கூறிய இதர வார்த்தைகளையும், முறையே 7-வது பிரிவின் 2-வது ஷரத்திலிருந்தும் 50-வது பிரிவிலிருந்தும், விலக்கப்பட்டமையால், IV அத்தியாயம் (பட்டாக்களும், முச்சலிக்கைகளும்) குறுக்க மடைந்து, "ரயத்துக" ளுக்கே செல்வதாக ஏற்பட்டுவிட்டது. 1934-ம் வருஷத்திய சட்டதிருத்தத்திற்குமுன், பழைய கரம்பு நிலத்திற்கும், பட்டாக்களும், முச்சலிக்கைகளும், கட்டாயமாக மாற்றிக்கொள்ளவேண்டியதாயிருந்தது. 30-வது பிரிவின் (1—4) ஷரத்துகளில் உத்தேசிக்கப்பட்ட வரி உயர்வுகள், பழைய கரம்பு நிலத்தை சாகுபடி செய்ய அனுமதிக்கப்பட்ட குடியானவர்களுக்கு செல்லுமே தவிர, எஸ்டேட் நிலச்சட்டத்தின், 30-வது பிரிவின், 1-வது உட்பிரிவின், முதலாவது ஷரத்தால், விலக்கப்பட்ட ரயத்தி நிலத்திற்குச் செல்லாது. 50-வது பிரிவு, முதலிலிருந்தபடி, இருவகை ரயத்தி நிலங்கள் (அதில் பழைய கரம்பு நிலம் ஒன்று) அங்கீகரிக்கப்பட்டன. (30) (35) பிரிவுகளில் குறிக்கப்பட்டுள்ள வரிஉயர்வுகள், பழைய கரம்பு நிலத்திற்குச் செல்லவேண்டுமென்று உத்தேசிக்கப்பட்டதேயொழிய, சாசுவத பைசல் காலத்தில், நில அனுபோகமும், வரி விதிதமும், நிரந்தரமாக ஏற்படுத்தப்பட்ட குடியானவன் நிலங்களுக்குச் செல்லவேண்டுமென்று உத்தேசிக்கப்படவில்லை.

(30)-வது பிரிவின் முதலாவது ஷரத்து பின் வருமாறு :—"குடியானவன் நிலத்திற்கு பணவரி செலுத்தி வந்தால், கீழ்க்கண்ட காரணங்களுக்கு வரியை உயர்த்த வேண்டுமென்று ஜமீன்தார் கலெக்டருக்கு மனுச்செய்து கொள்ளலாம். வேறு காரணங்கள் செல்லா."

இப்பிரிவு செல்லவேண்டுமென்றால், எஸ்டேட் நிலச்சட்டத்தின் அர்த்தப்படி, நிலமானது குடியானவன் அனுபவத்திருக்கவேண்டும். "ஜமீனிலுள்ள ரயத்தி நிலத்தை, ஜமீன்தாருக்கு நியாயமாகச் செலுத்த வேண்டிய வரியைக்கொடுத்து விவசாய விஷயங்களுக்காக அனுபோகம் செய்து வருபவனே குடியானவன் எனப்படுவான் என்று (3)-வது பிரிவின் (15)-வது ஷரத்தில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. (3)-வது பிரிவின் (16)-வது ஷரத்தில், குடியானவன் அனுபோகம் செய்யும் ரயத்தி நிலம், "ஜமீன்தார் பண்ணை நிலம் அல்லாத மற்ற சாகுபடி செய்யக்கூடிய நிலம் என்றும், ஆனால் மேற்படி ரயத்தி நிலத்தில் கீழ்க்கண்டவைகள் அடங்காதென்றும், தெரிவிக்கப்பட்டிருக்கிறது :—

(a) குளத்தின் படுகைகள், குளக்கரைகள், நீர்ப்பாசன சம்பந்தமான வாய்க்கால்கள் ;

(b) களம், மாட்டுத்தொழுவங்கள், காலி மனைகள், கிராமஸ்தர்களின் பொது உபயோகத்திற்கு ஒதுக்கிவைக்கப்பட்ட இதர நிலங்கள் ;

(c) கிராம ஊழியத்திற்காக வரியில்லாமலோ, சொற்பவரிக்கோ, கொடுக்கப்பட்ட நிலங்கள் ; (இச்சட்டம் ஏற்படுத்துவதற்குமுன் கொடுக்கப்பட்டிருந்தால்) அல்லது சட்டம் ஏற்பட்ட தேதிக்குப் பிறகு வரியில்லாமல் கொடுக்கப்பட்டிருந்தால், மேற்கூறிய கிராம ஊழியம் செய்யும்வரை.

இவ்வாறு, விலக்கப்பட்ட அம்சங்களெல்லாம் ரயத்தி நிலம் என்ற லக்ஷணத்தின் கீழ் வரமாட்டா. ஆனால் முதலிலிருந்த சட்டத்தின் (7)-வது ஷரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ள, "பழைய கரம்பு நிலம்," என்பதில் மேலே விவரிக்கப்பட்ட ரயத்தி நிலமும் அடங்கியிருக்கிறது. எஸ்டேட் நிலச்சட்டத்தின் (30)-வது பிரிவு பழைய சட்டத்திலும், புதிய சட்டத்திலும் ஒரே மாதிரியாகத்தான் இருக்கிறது. ஆகையால், (3)-வது பிரிவின் 15–16 ஷரத்துகளின் அர்த்தப்படி, பழைய கரம்பு நிலந்தான் "குடியானவன் வசமுள்ள ரயத்தி நிலம்" என்பதற்குப் பொருளாகும். (30)-வது பிரிவின் 1–4 ஷரத்துகளில் உத்தேசிக்கப்பட்டுள்ள வரி உயர்வுகள், பழைய கரம்பு நிலத்தைச் சாகுபடி செய்ய ஜமீன்தாரால் அனுமதிக்கப்பட்ட குடியானவர்களுக்குத்தான் செல்லும். அதாவது :—

மேற்படி நிலங்கள் குடியானவர்களுக்கு விடுவதற்குமுன், தொடர்ச்சியாக 10 வருஷ காலம், ஜமீன்தார் வசமிருந்திருக்கவேண்டும்.

அதாவது, 10 வருஷ காலம் ஜமீன்தார் வசத்திலிருந்த நிலம் குடியானவனுக்கு விடப்பட்டால் அது ஜமீன்தாரின் உரிமையும், அனுபோகமும் அங்கீகரிக்கப்பட்ட ரயத்தி நிலத்தையே குறிக்கும். தனது (ஜமீன்தார்) உரிமையும், ஹக்கும், பூர்த்தியடைந்த நிலத்திற்கு, வரியை உயர்த்துவதற்கு ஜமீன்தாருக்கு அதிகாரமளிக்கப்பட்டது.

அடுத்தபடியாக, இரண்டாவது ரயத்தி நிலங்கள் : எஸ்டேட் நிலச்சட்டம் ஏற்பட்ட பிறகு, மேற்படி நிலங்கள், குடியானவர்களுக்கு விடுவதற்குமுன், 10 வருஷ காலமாக அனுபோக உரிமை இருந்திருக்கக்கூடாது.

கடைசியாக, மூன்றாவது ரயத்தி நிலங்கள் : சிவில் கோர்ட்டு தீர்ப்புகளால் அனுபோக உரிமையில்லாதவையென்று தெரிவிக்கப்பட்டவை. ஜமீன்தார் இந்த நிலங்களுக்கு வரியை உயர்த்தலாம். தீர்ப்பு எவருக்கு பிரதிகூலமாகச் செய்யப்பட்டதோ அவர்மீதும், குடியானவனுக்கு விடும்வரை, எவருக்கும் அனுபோக உரிமையில்லாத நிலங்களுக்கும், ஜமீன்தார் வரியை உயர்த்தலாம்.

எஸ்டேட் நிலச்சட்டத்தின் (30)-வது பிரிவின் கீழ் வரும் இந்த மூவகை ரயத்தி நிலங்களுக்கே ஜமீன்தார் வரியை உயர்த்தலாமேயொழிய மற்ற நிலங்களுக்கு வரியை உயர்த்த முடியாது. 1934-ம்ஞூ்த்திய, VIII எஸ்டேட் நிலத்திருத்தச் சட்டத்தைச் செய்தவர்கள், 3-வது பிரிவின் (7)-வது ஷரத்தை நீக்கி அதன்மூலம், "பழைய கரம்பு" என்ற பாகுபாட்டை ஒழித்தார்களாயினும் (30)-வது பிரிவின் (1-4) ஷரத்துகளையும், அதற்கு அனுசரணையாகவுள்ள, 31–35 பிரிவுகளின் ஷரத்துகளை ஒழிக்கவில்லை. இச்சட்டத் திருத்தம், எஸ்டேட் நிலச்சட்டம் ஏற்பட்ட 26 வருஷங்களுக்குப் பிறகு செய்யப்பட்டது. அந்த 26 வருஷ காலத்தில் சட்டத்தின் 3-வது பிரிவின் (7)-வது ஷரத்தில் தெரிவிக்கப்பட்ட, "பழைய கரம்பு நிலங்கள்," ஜமீன்தார் வரி உயர்த்தக்கூடிய நிலைமையிலிருந்துவந்தன. 3-வது பிரிவின் (7)-வது ஷரத்தின்படி மேற்கூறிய மூன்று வகுப்புகளில் ஒன்றைச்சேர்ந்த பழைய கரம்பு நிலம் என்று ஜமீன்தார் ரூபித்தால் போருமானது. 1934-ம்ஞூ்த்திய VIII திருத்தச்சட்டம், முதல் எஸ்டேட் நிலச்சட்டத்தை செய்தவர்களின் கருத்தை அறியாதவர்களால், அவசர அவசரமாக ஏற்படுத்தப்பட்டது. முதல் எஸ்டேட் சட்டத்தில் தெரிவிக்கப்பட்ட பழைய "கரம்பு நிலம்" என்பதின் லக்ஷணத்தையும், 30—35 பிரிவுகளில் வரி உயர்வு விதிகளையும், அவர்கள் கிரஹிக்கவில்லை.

3-வது பிரிவின் (7)-வது ஷரத்தோடு (பழைய கரம்பு நிலம்) 30–35 பிரிவுகளும் (30-வது பிரிவின் (1)-வது உட்பிரிவின் ஷரத்தைத் தவிர) நீக்கப்பட்டிருந்தால், 1802-ம் வருஷத்தில் ஏற்பட்ட வரி விகிதத்தின் நிரந்தரத்தன்மை கலைக்கப்படாமல் ஒரு சீராக இருந்திருக்கும். வரிச்சட்டத்தின் 11-வது பிரிவின் ("ஒப்பந்தம்" மூலம், வரியை உயர்த்துவதைக் குறிக்கும்) (i)-வது உட்பிரிவு இச்சட்டத்திலிருந்து நீக்கப்பட்டது, முக்கியமாகக் குறிக்கவேண்டிய விஷயம். அப்பிரிவு நீக்கப்பட்டதேயல்லாமல், 135, 136 பிரிவுகள் புதிதாகச் சேர்க்கப்பட்டிருக்கின்றன. இவைகளின்படி, அதிக வரி சம்பந்தமான நிபந்தனைகளும், உட்கருத்துகளும் செல்லா. சட்டவிரோதமாக அதிக வரி வசூலித்தால் அதற்கு அபராதம் விதிக்கப்படும். எஸ்டேட் நிலச்சட்டத்தின் 135–136 பிரிவுகள், 1802-ம்ஞூ்த்திய XXX பட்டா ரெகுலேஷனின் 7, 9 பிரிவுகளை ஒத்திருக்கின்றன. ஆனால், ஒரு வித்தியாசம் இருக்கிறது. அதாவது 136-வது பிரிவின்படி சட்டவிரோதமாக தொகை வசூலிப்பதற்கு அபராதம் அவ்வளவு கடுமையாக இல்லை. கிரிமினல் கோர்ட்டில் குற்றம் சாற்றப்படலாம் என்ற விதியும் நீக்கப்பட்டது.

வரி மாற்ற விகிதங்கள்.

சுமார் 100 வருஷ காலமாக, ரயத்துவாரிப்பிரதேசங்களில், அனுசரிக்கப்பட்ட பலனற்றமுறை 1908-ம் வருஷத்தில், முதல் முதலாக, எஸ்டேட் நிலச்சட்டத்தில் எவ்வாறு புகுத்தப்பட்டதென்பதையும், 1908-ம்ஞூ்த்தில் எஸ்டேட் நிலச்சட்டத்தில் ஏற்படுத்தப்பட்ட வரிமாற்றவிகிதங்கள், 1929-ம் வருஷத்தில் எவ்வளவு அலங்கோலமாக முறிவுற்றனவென்பதையும், சட்ட சபை அங்கத்தினர்கள் அறிந்துகொள்ளும்பொருட்டே வரிமாற்றவிகிதங்கள் சம்பந்தமான இந்த அத்தியாயம் எழுதப்பட்டிருக்கிறது. 1929-ம்ஞூ்த்தில் ஆரம்பித்து, இன்றுவரை தொடர்ந்துவரும் பொருளாதார நெருக்கடிக்குக் காரணம், சென்ற உலக யுத்தத்தில் வரிமாற்ற விலைகள் சிதைவுற்றதே.

1852-ம் வருஷத்தில், வரி மாற்ற விலைகள் சிதைவுற்றதையும், அதற்கு 25 அல்லது 30 வருஷங்களுக்கு முன் ஏற்படுத்தப்பட்ட வரிமாற்ற விகிதங்களுக்குக் குறைவாக அக்காலத்து விலைவாசிகள் இறங்கினமையால், விவசாயிகள் அடைந்த பெருத்த நஷ்டத்தையும், 1850, 1855-ம் வருஷங்களிலும், 1908-ம் வருஷத்திலும் (திருநெல்வேலி ஜில்லாவில், ரயத்துவாரி பிரதேசங்களிலும், இதர சில ஜமீன்களிலும்) இருந்த நிலைவரமற்ற தன்மையையும், விலைமட்டங்களில் அதிகரிப்பு ஏற்பட்டது என்ற காரணத்தைக்கொண்டு 1865-ம்ஞூ்த்திய வரி வசூல் சட்டத்தில், வரி உயர்வு விதிக்கப்படவில்லை யென்பதையும் நன்கு அறிந்து, 1908-ம்ஞூ்த்தில் சட்டம் செய்தவர்கள், விலைவாசிகளின் உயர்வு காரணமாக வரி உயர்வுகளையும், வரி மாற்றங்களையும், எஸ்டேட் நிலச்சட்டத்தில் ஏற்படுத்தியிருக்கக்கூடாது.

சாசுவத பைசல் காலத்தில் நிரந்தரமாக விதிக்கப்பட்ட வரி விகிதங்களைப் புறக்கணித்து, எஸ்டேட் நிலச்சட்டத்தில் 40-41 பிரிவுகளில், முதல் முதலாக விதிக்கப்பட்டபடி, வியவகாரம் ஏற்படும் காலத்தில், ஜமீன்களிலுள்ள விலைவாசிகளை ஆதாரமாகக்கொண்டு, வரிமாற்ற விகிதங்கள் அனுசரிக்கப்படுவதின் கொடிய தீமைகளை, சட்டசபை அங்கத்தினர்களும், சாதாரண ஜனங்களும் அறியவேண்டுமென்றால், 1802-ம் வருஷத்திலிருந்து 1852-ம் வருஷம் வரை என்ன நிகழ்ந்தனவென்பதையும், விலைவாசிகள் மிகவும் குறைந்திருந்தும் 1852-ம் வருஷத்திற்குமுன் 25 வருஷங்களாக, வரி மாற்ற விகிதங்கள் அமுலிலிருந்து வந்தன என்பதையும், எவ்வாறு அவைகள் மீண்டும் 1852-ம் வருஷத்திலும், 1908-ம் வருஷத்திலும், பயனற்று, கைகூடாமற்போனதென்பதையும், முதலில் அறிந்துகொள்ளவேண்டும்.

மேற்கூறிய விஷயங்களையும், சர்க்கார் பத்திரங்களிலிருந்து எடுக்கப்பட்டு, கீழே தெரிவித்துள்ள வரி மாற்ற விகிதங்களின் வரலாற்றையும், அவர்கள் அறிந்தாலொழிய, விலைவாசிகள் குறைந்தாலும் நில வரியைக் குறைப்பது இயலாதென்ற சர்க்கார் கொள்கையை நன்கு தெரிந்துகொள்ளமுடியாது.

சம்பந்தமில்லாத விஷயங்களை இங்கு பிரஸ்தாபிக்கக்கூடாதென்று நாங்கள் அதி ஜாக்கிரதையாக இருந்து வருகிறோம். ஆனால் வரிமாற்ற சம்பந்தமான விஷயமும், வரி உயர்வுகள் சம்பந்தமான விஷயமும், ஜமீன்தார்களுக்கும் குடியானவர்களுக்கும் உள்ள முக்கிய விவாத விஷயமாகும். ஆதலால், இந்த அத்தியாயத்தையும், எங்கள் அறிக்கையில் சேர்க்கவேண்டுமென்பது அவசியம் என்று நாங்கள் கருதுகிறோம். அது, வரி மாற்ற விகிதங்களைப்பற்றிய சர்க்கார் பத்திரங்களிலிருந்து எடுத்த சாராம்சமாகும். அறிக்கை அனுபந்தத்திலும் குறிக்கப்பட்டிருக்கிறது.

வரி மாற்ற விகிதங்களின் சரித்திரம், 1802-ம் ௵த்திய சாசுவத பைசல் எவ்வளவு பழைமையானதோ அவ்வளவு பழைமையானது. 1802-ம் வருஷம் வரையும், அதற்குப்பிறகு வெகு காலமும், சர்க்காருக்குச் செலுத்தவேண்டிய நிலவரி, விளைச்சலின் ஒரு பாகமாக தானியமாய்ச் செலுத்தப்பட்டது. ஏனெனில், நாணயங்களாவது, நோட்டுகளாவது, அக்காலத்தில் அவ்வளவாக பழக்கத்திலில்லை. இந்து, மகம்மதிய அரசர்கள் காலத்தில், தங்கசாலைகளில் செய்யப்பட்ட பொன் மோகர்களும், "தினார்களும்" வெள்ளி ரூபாய்களும், நாணயங்களாக வழங்கிவந்தாலும், அவை அவ்வளவு பழக்கத்திலில்லை. அக்காலத்தில், காகிதப் பணம் (Paper currency) கிடையாது. மேலும், தானியமாக வரி செலுத்துவது ஒழுங்கான வரி வசூலுக்கு சாதகமானதென்று கருதப்பட்டது. விளைச்சலைப் பங்கிட்டுக்கொள்ளும் முறையில் விலை வாசிகளின் உயர்வு, தாழ்வு என்ற கேள்வி ஏற்படாது. ஏனெனில், லாபமும், நஷ்டமும், சமமாகவே பங்கிட்டுக்கொள்ளப்பட்டது.

வரி மாற்றங்களும், பண வரிகளும், மகம்மதிய அரசர்கள் காலத்தில்தான் ஆசரணையில் வந்தது. ஆனால், அவ்வளவு அதிகமாக அனுசரிக்கப்படவில்லை. சாசுவத பைசல் காலத்தில் வரிகள் தானியமாக செலுத்தப்பட்டுவந்தபோதிலும் நிலத்தின் சரியான விஸ்தீரணத்தைத் தெரிந்துகொள்வதற்கு சர்வே செட்டில்மெண்ட் இல்லாதிருந்தபோதிலும், சரியானதென்று கருதப்பட்ட நிதானமும், துரிதமும்வாய்ந்த உபாயத்தை அனுசரித்து, "தயா" மதிப்பில் நிலம் அளக்கப்பட்டு, அக்காலத்திலிருந்த விகிதத்திற்குத் தகுந்தாற்போல், பணமாக மாற்றப்பட்டது. இம்முறையை ஆதாரமாகக்கொண்டே பேஷ்கஷும், வரி விகிதங்களும் (இவை இரண்டும் கலந்ததே நில வரி அல்லது சர்க்கார் வரியாகும்) சாசுவதமாக ஏற்படுத்தப்பட்டன. ஜமீன்தார் செலுத்தும் பேஷ்கஷையாவது, குடியானவன் செலுத்தும் வரியையாவது, எந்த முகாந்தரத்தைக் கொண்டாவது, உயர்த்தலாம் என்பது கிழக்கிந்தியா கம்பெனியாரின் கருத்தல்ல. அத்தகைய உரிமையை அவர்கள் செலுத்த விரும்பவில்லை. சாசுவத பைசலுக்குமுன்பு, நிலவரி நிர்மாணம் சம்பந்தமாக அனுசரிக்கப்பட்ட முறை மிகவும் சாதாரணமாகவும், சுலபமாகவும் இருந்தது. சமயானுகூலத்திற்கும், யுக்திபுத்திகளுக்கும் அவ்வளவு இடம் தரவில்லை.

முந்திய வருஷத்தின் விளைச்சலை மதிப்பிட்டு, அதில் சர்க்காருக்குச் சேரவேண்டிய பாகத்தை நிர்மாணிப்பதே அவர்கள் அனுசரித்து வந்த முறையாகும். காலக்கிரமத்தில், வரியைத் தானியமாகச் செலுத்துவதைவிட பணமாகச் செலுத்துவது சௌகர்யமான முறையென்று அறியப்பட்டது.

குடியானவர்கள், சர்க்காருக்கு அல்லது அவர்களின் வரி வசூல் ஏஜண்டுகளாகிய ஜமீன்தார்களுக்கு வரியாகச் செலுத்தவேண்டிய விளைச்சலின் பாகத்தை, பணமாக மாற்றுவது தான் வரி மாற்றம் எனப்படும் 1859-ம் வருஷம் வரை, சர்வே ஏற்படவில்லை. 1866-ம் ௵ வரை ரீ-செட்டில்மெண்டும் கிடையாது. ஆனால், 1792-ம் ௵த்தில் சேலத்திலும், 1801-ம் ௵த்தில் தத்த மண்டலத்திலும் (Ceded Districts) செட்டில்மெண்ட் ஏற்பட்டன. ரயத்துவாரி ஏற்பாட்டிற்கு அஸ்திவாரம் அங்குதான் ஏற்பட்டது. மேற்படி சர்வே, செட்டில்மெண்ட், ரீ-செட்டில்மெண்ட், இல்லாதபொழுது, நிலங்களின் விஸ்தீரணத்தையும், பலவகை தானிய விளைச்சலின் அளவையும், சரியாக அறிவது சுலபமான காரியமல்ல. ரயத்துவாரி நிலங்களுக்குமட்டுமே, செட்டில்மெண்ட், சர்வே, ரீ-செட்டில்மெண்ட் செய்யப்பட்டன. 1859-ம் ௵த்திற்கு முன், ரயத்துவாரி நிலங்களுக்கு, வரிமாற்றங்கள் சர்க்காரால் ஏற்படுத்தப்பட்டு, வெகுகாலமாக பயனற்ற முறையில் அமுலிலிருந்து வந்தன. இவ்வாறாக, நெடுங்காலமாய், செயல் முறையில் வரிமாற்றம் வெற்றிபெறாததின் காரணமாக, ரீ-செட்டில்மெண்ட் முறை ஏற்பட்டது. வரிமாற்ற விகிதங்களை அவ்வப்போது மாற்றியமைக்கவேண்டுமென்று 1866-ம் ௵த்தில் முடிவு செய்யப்பட்டது. மீண்டும், 70 வருஷகாலமாக பரீட்சார்த்தமாக இருந்த அம்முறை (ரீ-செட்டில்மெண்ட்) முடிவில் முறிவடைந்தது. 1866-ம் ௵த்திற்கு முன்னிருந்த வரிமாற்ற விகிதங்கள் முறிவடைந்ததற்கும், 1866-ம் ௵த்திற்கு பின் ஏற்பட்ட ரீ-செட்டில்மெண்ட் முறிவடைந்ததற்கும் முக்கிய காரணம், மேற்கூறிய இரண்டு முறைகளில் எதை அனுசரித்து, வரி மாற்றங்கள் திருத்தப்பட்டாலும், முடிவான பலிதம், வரி உயர்வாக ஏற்பட்டதேயொழிய வேறல்லவென்பதே. அதாவது, எக்காரணத்தைக் கூறியோ வரி உயர்த்தப்பட்டது. வரி குறைக்கப்படுவதென்பது, எங்கும் நிகழவில்லை. ஆனால், கடப்பை ஜில்லாவிலும், தத்த மண்டலத்திலும் மட்டும், அக்காலத்தில் சென்னை கவர்னராயிருந்த சர் தாமஸ் மன்றோ, 1231 பசலிக்கு, புஞ்சை நிலத்திற்கிருந்த தீர்வையில், 25 சதவிகிதம், கிணற்று நீர் மீது ஆதாரப்பட்டிருந்த நஞ்சை நிலங்களுக்கும், தோட்ட நிலங்களுக்குமிருந்த தீர்வையை, 33⅓ சதவிகிதம், கிணறுகள், குளங்கள், இவைகள் மீது ஆதாரப்பட்டிருந்த "புளுஸா" நிலங்களுக்கும், நஞ்சை நிலங்களுக்கும், இருந்த தீர்வையில் 25 சதவிகிதம் குறைத்தார். 1852-ம் ௵த்தில், வரி மாற்ற விகிதங்கள் ஆசரணையிலிருந்த நெல்லூர் ஜில்லாவிலும், இதர ஜில்லாக்களில், படிப்படியாக தானிய விலைகள் குறைவது கவனிக்கப்பட்டது. அதன்மீது வரிமாற்ற விகிதங்களையும், அப்பொழுது இருந்த தானிய விலைகளையும் ஒப்பிட்டுப்பார்த்து, ரீ-செட்டில்மெண்ட் அல்லது, சில வருஷங்களுக்கு ஒரு தடவை, வரியை மாற்றும் முறை சம்பந்தமாக தக்க ஆலோசனை கூறுமாறு, சர்க்கார், ரெவினியு போர்டாருக்கு உத்திரவிட்டனர். எல்லா ஜில்லா கலெக்டர்களும், அனுப்பித்த அறிக்கைகளை ரெவினியு போர்டார் நன்கு பரிசீலனை செய்து, வடமேற்கு மாகாணத்திலும், பம்பாயிலும் உள்ளபடி, 30 வருஷங்களுக்கு ஒரு முறை வரி விகிதங்களைத் திருத்தியமைத்துக்கொள்ளவேண்டுமென்று சர்க்காருக்கு ஆலோசனை கூறினார்கள். சர்க்கார் நிலங்களில், முதலில் 1866-ம் ௵த்திலும், அதற்கு பிறகு, 1896-ம் ௵த்திலும், 1926-ம் ௵த்திலும், ரீ-செட்டில்மெண்டுகள் ஏற்பட்டன. 1929-ம் ௵த்திலிருந்து, உலகத்திலும் இந்த தேசத்திலும், இருந்து வருகிற பொருளாதார முட்டுப்பாடின் காரணமாகவும், விலைவாசிகள் என்றும் இல்லாதபடி குறைந்ததின் காரணமாகவும், நிலவரிப் பளுவை குடியானவர்கள் தாங்கமுடியாத காரணமாகவும், 1932-ம் ௵த்திலிருந்து ரீ-செட்டில்மெண்ட் வரி உயர்வுகள் ஒத்திவைக்கப்பட்டிருக்கின்றன. சர்க்கார் ஒவ்வொரு வருஷத்திற்கும் வரிவஜா கொடுத்து வருகிறார்கள். சென்ற பசலியில், சர்க்கார், 75 லக்ஷம் ரூபாய் தள்ளிக்கொடுத்தார்கள். இத்தகைய மாறுதலான பரிஸ்திதிகளை முன்னிட்டு, சர்க்காரின் நிலைமையையும், பொது ஜனங்களின் நிலைமையையும், பொருளாதார முறையிலும், பண ஏற்பாட்டு முறையிலும், பாதிக்காவண்ணம், ரயத்துவாரி குடியானவர்களுக்கு நிவாரணம் அளிக்கத்தக்க, வரி ஏற்பாட்டை சர்க்கார் ஆலோசித்து வருகிறார்கள். இக்காரியத்தை, இக்கமிட்டிக்குத் தெரிவிக்காமல், சர்க்கார் தனியாகச் செய்து வருகிறார்கள். ஏனெனில், அது, சர்க்காரையும், குடியானவனையும், நேராகப் பொறுத்த விஷயமாகும். ஜமீன்களைப் போல, அங்கு மத்தியஸ்த்த நபர்கள் கிடையாது.

1852-ம் ௵த்திற்கு முன், 25 வருஷகாலமாக, வரிமாற்றம் ஏற்பட்ட காலத்திலிருந்ததை விட விலைவாசிகள் மிகவும் குறைவாக இருந்ததென்றும், 1852-ம் ௵த்திற்கு இரண்டு வருஷங்களுக்கு முன்புதான். பல ஜில்லாக்களில். பருவ மழை இல்லாத காரணமாக, விலைவாசிகள் மிகவும் உயர்ந்தனவென்றும், ரெவினியு போர்டார் 1852-ம் வருஷத்தில், தாங்கள் செய்த விசாரணையில் தெரிவித்தார்கள். ஆயினும், விலைவாசிகளின் நிலைவரமற்ற தன்மைக்குக் காரணம் என்னவென்பதை அவர்கள் பரிசீலனை செய்யவில்லை. ஏனெனில், நிலவரியையும், நிலத்தின் விளைச்சலையும், பாதிக்கும் பல விஷயங்களில் தானியவிலை ஒன்று

என்றும், விதிக்கப்பட்ட வரியை நிலத்தின் விளைச்சலிலிருந்து செலுத்துவது கஷ்டமாயிருந்தால், அப்பொழுது நிலவரியைக் குறைக்கலாமென்றும், அதற்குத்தக்க தகவல்களும், இதர விஷயங்களும் சேகரிக்கப்பட்டு வருகின்றனவென்றும், ஒவ்வொரு ஜில்லாவிலுள்ள பரிஸ்திதிகளின்படி விஷயத்தை ஆராய்தல் யுக்தமானதென்றும் அவர்கள் அபிப்பிராயப்பட்டார்கள். இப்பொழுதுள்ள வரி ஏற்பாடுகளுக்கு ஆதாரமாயிருந்த நடவடிக்கைகள், எவ்வளவு நிலைவரமற்றதாயும், நிஷ்கூஷயற்றதாயுமிருந்தனவென்பதையும், அவைகளைப்பற்றி தகுந்த தகவல் இப்பொழுது அரிதாக இருக்கிறதென்பதையும். மேற்படி வரிவிகிதங்கள் நிர்ணயம் செய்யப்பட்ட தேதியையாவது, என்ன தானியங்கள் மதிப்பிடப்பட்டனவென்பதையாவது, கிராமம் அல்லது தாலூகா அல்லது நகரத்திலிருந்த விலைவாசிகள் ஆராயப்பட்டனவா என்பதையாவது, சர்வேகளும், வரி நிர்மாணங்களும் எவ்வாறு நடத்தப்பட்டனவென்பதையாவது, நிச்சயமாக அறிவது முடியாத காரியமென்று அவர்கள் தெரிவித்தார்கள். சாதாரணமாக வெளிக்குத் தெரிந்த விஷயங்களைக்கொண்டு, ஒரு பொதுவான யூசிப்பாக நில அளவு மதிப்பிடப்பட்டது. மொத்த விளைச்சலிலிருந்து சர்க்காருக்குச் சேர வேண்டிய பாகம், கிராமத்தின் மீது மொத்தமாக விதிக்கப்பட்டு, அதன் பிறகு, அது பல நிலங்களுக்கு ஈவு செய்யப்பட்டது. இதைச் செய்தவர்கள், சொற்ப சம்பளம் வாங்கி வந்த கீழ்த்தர அதிகாரிகளாகும். இந்தகைய மதிப்பைக் கொண்டு செய்யப்பட்ட, வரிமாற்ற விகிதங்கள், பல இடங்களில் ஜனங்கள் முறையிடுவது போல், தாங்கமுடியாத வரி விகிதங்களை, ஏற்படுத்திவிட்டன. வரி விகிதம் சரியானதா என்பதை நிர்ணயம் செய்ய, வரிமாற்ற விகிதமாவது, கால விலைகளாவது (**current price**) தகுந்த ஆதாரமாக இல்லை.

ரெவினியூ போர்டார், மேலே தெரிவித்த அபிப்பிராயத்தை, சர்க்கார் பொதுவாக அங்கீகரித்தார்கள். ஆனால், வரி மாற்ற விஷயத்தைக் குறித்தாவது. சில வருஷங்களுக்கு ஒரு முறை வரியை திருத்தியமைக்கும் முறையைப்பற்றியாவது, அவர்கள் ஒன்றும் தெரிவிக்கவில்லை. ஏனெனில். ரெவினியூ போர்டார், வரி மாற்றத்தைமட்டும் மாற்றுவதோடல்லாமல், நிலவரி ஏற்பாட்டைக்கூட மாற்ற விரும்புகிறார்கள் என்றும், மேற்படி வரி விகிதங்கள். வரிமாற்றம் ஏற்பட்ட காலத்திலிருந்த விலைவாசிகள் மீதும், அதிகமான சாகுபடி விஸ்தீரணங்களின் மீதும், ஆதாரப்பட்டிருக்கிறதென்று, அவர்கள் நினைத்தார்கள். விவசாயத்துறையிலும், மற்ற துறையிலும், அபிவிருத்திகள் பொதுவாக, செலவைக் குறைக்கின்றன. அதன் காரணமாக, அபிவிருத்தி ஏற்பட ஏற்பட, சரக்குகளின் விலைகளும் குறைகின்றன. அபிவிருத்திகள் முன்னேறுவதின் காரணமாக வரிகள் குறைக்கவேண்டுமென்பது தவறு என்றும், கூடுமானால் அந்த சந்தர்ப்பத்தில் வரியை உயர்த்துவது யுக்தமாக இருக்குமென்றும், அவர்கள் கருதினார்கள். அவர்கள் கூறியதாவது :—

"இது, குறைவான விலைவாசியை நன்கு சரி செய்துகொள்ளும்படி, ஒரு நில விஸ்தீர்ணத்திலிருந்து, கிடைக்கும் அதிக விளைச்சலால் ஏற்பட்டிருக்கலாம் ; அல்லது, சில சமயங்களில், அகஸ்மாத்தாக மற்ற பண்டங்களைவிட விலை மதிப்பான உபலாகங்கள் செய்வதில் சொற்ப செலவு உண்டாவதாலும் ஒருவாறு ஏற்படலாம். விளைச்சலின் பணமதிப்பு அதிகரிக்கவில்லையென்றும், சில தானியங்களின் விலைக் குறைவுக்கு உள்ள ஈவைப்போலவே அது ஏற்படவில்லையென்றும், நிரூபிக்கப்பட்டாலொழிய விலை குறைந்தது என்ற காரணத்தைக்கொண்டு வரியைக் குறைக்கவேண்டுமென்று கேட்கலாகாது. இந்த ராஜதானியில், ஏறக்குறைய எல்லா ஜில்லாக்களிலும், இப்பொழுதுள்ள நிலைமை மேற்கூறியவாறு இருக்கலாம். ஆனால் சில இடங்களில் புதிய வஸ்துக்களாலும். விலை மதிப்பான பண்டங்களாலும், குடியானவனுக்கு அதிக லாபம் ஏற்பட்டிருக்கிறது. இதற்குப் பிறகாவது போக்கு வரவு சாதன வசதிகளால், தேசத்தின் வியாபாரம் தழைத்து, இந்நாடு, பிறநாடுகளோடு, வர்த்தக சம்பந்தம் வைத்துக்கொண்டு சுபிட்சமடையுமென்றும் ; முக்கிய உணவுப்பொருள்களின் விலை குறைவாக இருந்தாலும் (அது நீடித்திருக்காது) விலை மதிப்பான மற்ற பண்டங்களின், பெருக்கத்தால் குறைகள் நிவர்த்திக்கபடுமென்றும் நம்பிக்கையாக எதிர்ப்பார்க்கப்படுகிறது.

இக்கருத்தின்படி, விவசாய அபிவிருத்திக்கு வசதியளிக்கும், பரந்த, தாராளமான கொள்கையை அனுசரித்து, அதன் மூலம் வரி நிர்மாணத்தை செம்மை செய்யும் முறையில், நிலவரி விகிதங்கள் எதிர்காலத்தில் திருத்தியமைக்கப்படவேண்டுமேயொழிய விலைவாசிகளின் குறைவால் ஏற்படும் நஷ்டங்களை, சரி செய்யவேண்டுமென்ற கருத்துடன், வரி ஏற்பாடுகள் செய்யககூடாது. நிலத்தின் விளைச்சலில் குடியானவனுக்குச் செல்லவேண்டிய பாகம் போக, மிச்சமுள்ள எல்லா பாகத்தையும் அடையும், நிலச்சுவான்தார் நிலையில், சர்க்கார் இல்லை. சர்க்கார் லட்சியத்திற்குப் போதுமான வரியையே சர்க்கார் வசூலிக்கிறது. அதாவது (சர்க்கார் கடமை என்று இந்நாட்டில் கருதப்படுகிற) அமைதியையும், ஒழுங்கையும், நிலைநாட்டுவதற்கும், பொது ஜனங்களுக்கு நன்மை தரக்கூடிய ஏற்பாடுகளைச் செய்வதற்கும், வேண்டிய பணத்தையே சர்க்கார் வரியாக வசூலிக்கிறார்கள்.

"இவ்வாறு, ஜனங்கள் சர்க்காருக்கு செலுத்தவேண்டிய வரி நிர்ணயம் செய்யப்பட்ட பிறகு, சாகுபடி விஸ்தீரணம் அதிகரிக்க அதிகரிக்க, ஏக்ரா வீதம் நிர்ணயம் செய்யப்பட்ட வரியும், இயல்பாகவே குறைவடையும். ஜமீன்தாரி ஏற்பாட்டிலும், கிராம ஏற்பாட்டிலும், வரிக்குத்தகை ஏற்பாட்டிலும் கூட இம்முறையே இயற்கையாக நடந்துவருகிறது ; சென்னை ராஜதானியிலுள்ள நிலவரி நிர்மாணத்தின்படி, சர்க்கார் நேராகத் தலையிட்டால்தான், அது செயல் முறையில் பலிதமடையும்."

விலைவாசிகள் மிகவும் குறைந்துவிட்டன என்ற காரணத்தைக்கொண்டு, ரெவினியூ போர்டார் நிலவரியைக் குறைக்கவேண்டுமென்று தெரிவித்த பொழுதும், அது சம்பந்தமான தங்கள் அறிக்கையை சமர்ப்பித்த பொழுதும், சர்க்கார் செய்த முடிவுகள் மேற்கூறியவைகளே. நிலத்தின், மிச்சமான விளைச்சல் முழுவதையும் கேட்க சர்க்காருக்கு உரிமையில்லையென்றும், ஆனால், நாட்டில் அமைதியையும், சமாதானத்தையும் நிலை நாட்டுவதற்கும், பொது ஜன நன்மைக்குரிய ஏற்பாடுகளையும், வேலைகளையும் செய்வதற்கும் போதுமான வரியைத்தான் கேட்கலாமென்றும், தாங்கள், முன்பு கூறின விதியையே, மீண்டும், சர்க்கார் வலியுறுத்தினார்கள். இவ்விதி செய்கையில் அனுசரிக்கப்பட்டிருந்தால், குடியானவர்கள் சர்க்காருக்குச் செலுத்தும் வரியை உயர்த்தவேண்டுமென்ற அவா, இலகுவாக தடுக்கப்பட்டிருக்கும். ஆனால், சர்க்கார் அத்தகைய மேலோன விதியைத் தெரிவித்தார்களேயொழிய, அவர்களாவது, ரெவினியூ போர்டாராவது, விலைவாசிகளின் குறைவால் பல ஜில்லாக்களில் கஷ்டப்படும் குடியானவர்களுக்குச் சாதகமாக நிலவரியைக் குறைக்க முற்படவில்லை. விலைவாசிகளின் குறைவால், வரிமாற்ற விகிதங்கள் குடியானவர்களுக்கு பெருத்த நஷ்டத்தை உண்டாக்கியிருக்கிறதென்றும், நிலவரியைக் குறைத்து அதன் மூலம் அவர்களுக்கு சற்று சகாயம் செய்யவேண்டுமென்றும், பெரும்பான்மையாக எல்லா ஜில்லா கலெக்டர்களும், தெரிவித்தார்கள். அப்படியிருந்தும்கூட, நிலவரி நிர்மாணம், விலைவாசிகள் மீது மட்டும், ஆதாரப்பட்டிருக்கவில்லையென்றும், சாகுபடி விஸ்தீர்ணப் பெருக்கைக்கூட கணக்கில் சேர்த்துக்கொள்ளவேண்டுமென்றும், சர்க்காரும், ரெவினியூ போர்டாரும், கூறி வாளாயிருந்தனர். குடியானவர்கள், அதிக கஷ்டப்படுகிறார்கள் என்று அறிந்தவுடன், கடப்பை ஜில்லாவில், சர். தாமஸ் மன்ரோ எவ்வாறு வரியைக் குறைத்தாரோ அதைப்போல, சர்க்காரும் இங்கு, இப்பொழுது ஏன் வரியைக் குறைக்கக்கூடாது ? வரி மாற்ற விகிதங்கள், நிலங்களுக்கு வெகு காலத்திற்கு முன் விதிக்கப்பட்டு, அவ்வாறு விதிக்கப்பட்ட விகிதங்களைவிட, விலைவாசிகள் மிகவும் குறைந்துவிட்டால். ஆட்சேபணையின்றி, சடுதியாக வரியைக் குறைக்கவேண்டும். புதிதாக சாகுபடி செய்யப்பட்ட நிலங்

களுக்கு ஏற்பட்ட வழக்கத்தின்படி, தனியான வரி விகிதத்தை விதிக்கவேண்டும். இந்நாட்டின் நிலைமையையும், குடியானவர்களுடைய பரிஸ்திதியையும், நன்குணர்ந்த சர். தாமஸ் மன்ரோ ரயத்துவாரிப் பிரதேசங்களிலுள்ள குடியானவர்களுக்கும், சாசுவத ஏற்பாடு செய்யவேண்டுமென்று ஆலோசனை கூறினர். ஆனால், அந்த ஆலோசனை, இங்கிலாந்திலிருந்த மேலதிகாரிகளால் நிராகரிக்கப்பட்டு, மேலே விவரித்த முறையே அனுசரிக்கப்பட்டது. விலைவாசிகள் குறைந்தபொழுது குடியானவன் நிலவரியைச் செலுத்துவது மிகவும் கஷ்டமாயிருந்ததென்பதை சர்க்காராவது, ரெவினியூ போர்டாராவது மறுக்க முடியாது. வரி மாற்றங்களை, ஏற்படுத்திய முறை முழுவதும் தவறானதென்று, சர்க்கார் ஒப்புக்கொள்கிறார்கள். ஆனால், வரி மாற்றங்களை ஒழிக்க சம்மதியாது, சாசுவத பைசல் காலத்தில் ஜமீன்தாரிப் பிரதேசங்களில் நடந்ததைப் போல, அவைகளை, நிரந்தரமாக்க முயலுகிறார்கள். சர். தாமஸ் மன்ரோ கூறிய ஆலோசனையையும், தெரிவித்த ஏற்பாட்டையும், நிராகரித்து மேற்கூறிய முறையை அனுசரிப்பாராயினர்.

மேற்கூறிய கொள்கை, செட்டில்மெண்ட் அதிகாரிகளாலும், ரீ-செட்டில்மெண்ட் அதிகாரிகளாலும், சர்க்கார் உத்தரவாகக் கருதப்பட்டு, அவ்வப்போது வரி திருத்தும் ஏற்பாடு என்று சொல்லப்படும் ஏற்பாட்டில், எந்த சந்தர்ப்பங்களிலும், வரியைக் குறைப்பதென்பது, அரிய விஷயமாய்ப் போய்விட்டது. விதிக்கப்பட்ட ஒரு ஈவின்படி நிலவரியை உயர்த்துவதற்கு நியாயமான காரணத்தையோ, அநியாயமான காரணத்தையோ, சாஸ்திரோக்தமான முகாந்தரத்தையோ சாஸ்திரோக்தமில்லாத முகாந்தரத்தையோ, கூறுவதற்கு செட்டில்மெண்ட் அதிகாரிகளும், ரீ-செட்டில்மெண்ட் அதிகாரிகளும், அதிக முயற்சி எடுத்துக்கொண்டார்கள்.

இக்காலத்தில், அதாவது 1852-ம் வருஷம் முதல் இருந்த நிலைமையை ரெவினியூ போர்டார் பரீசீலனை செய்து, குடியானவர்களுடைய, நிர்ப்பந்தங்களையும், இக்கட்டுகளையும் நீக்குவதாகவும், வெவ்வேறு விளைச்சலுக்கு விதிக்கப்பட்ட வித்தியாசமான வரிகளை ஒழிப்பதாகவும், நிலத்திற்குள்ள தரத்தின்படியே வரி விதிப்பதாகவும், சர்க்கார் நீர்ப்பாசன மூலங்களிலிருந்து, தண்ணீர் வசதி தருவதாகவும், மொத்த விளைச்சலில், நியாயமான, மிதமான பாகத்தையே, சர்க்கார் வரியாக எடுத்துக்கொள்வதாகவும், நம்பிக்கை அளித்தார்கள். அதற்கிணங்க, கலெக்டர்களுக்கு தகுந்த குறிப்புகளை விடுத்து, நிலங்களை ஒழுங்காக சர்வே செய்து, நாட்டின் அபிவிருத்தியையும், முன்னேற்றத்தையும் கருதி, வெகு ஜாக்கிரதையாக, நிலவரி நிர்மாணம், செய்வதாகவும் வாக்களித்தார்கள்.

இக்காலத்தில், தொடக்கத்திற் தெரிவித்தவாறு, 1260-வது பசலியில், தானிய விலைகள், பல வருஷங்களாக தொடர்ந்து, குறைந்ததின் சம்பந்தமாக, விசாரணைகள் செய்யப்பட்டன. வரிமாற்ற விலைகளுக்கு, 39 சதவிகிதம் கீழாக, விலைவாசிகள் குறைந்தன. இந்த நிலைமை, நீடித்திருக்குமாகில் காலக்கிரமத்தில், குடியானவர்கள் எல்லோரும், தரித்திரமடைந்து தவிப்பார்களென்பதில் சந்தேகமில்லையென்று சர்க்கார் கூறினார்கள். அத்தகைய கஷ்டத்தால் குடியானவர்கள் எவ்வாறு பாதிக்கப்பட்டார்களென்பது, கீழ்க்கண்ட விஷயங்களிலிருந்து தெரியவரும்.

உதாரணமாக, மதிப்பிட்ட விளைச்சலில், ஒரு கண்டிக்கு, 30 ரூபாயாக வரிமாற்றம் செய்யப்பட்ட புஞ்சை தானியங்கள், காலவிலைகளில் குறிக்கப்பட்டுள்ள, மூன்று முக்கிய வகுப்புகளின் சராசரிமதிப்பைகாட்டுகின்றன. ஆகையால், 30 ரூபாய் நிலவரியைச் செலுத்தும் புஞ்சை நிலத்தை சாகுபடி செய்யும் குடியானவன், மேற்படி நிலத்திலிருந்து விளையக்கூடிய தானியத்தை (இரண்டு கண்டி தானியத்தை) சுமார் ரூ. 38-க்கு விற்கலாம். அதில் சர்க்காருக்குச் செலுத்தவேண்டிய 30 ரூபாய் போனால், குடியானவனுக்கு மிச்சமாயுள்ளது 8 ரூபாய் தான் அதாவது குடியானவன் தான் எடுத்துக்கொண்ட பிரயாசைக்கு எதிர்பார்த்த தொகையில், 100-க்கு 25 தான் தேறுகிறது.

"இதன் பலனாக, விவசாயம் வேண்டாவெறுப்பாகச் செய்யப்பட்டு வருகிறதே ஒழிய ஊக்கத்துடனும் உத்ஸாகத்துடனும் செய்யப்படவில்லை. விவசாய சம்பந்தமான, 'திட்டத் தொகை' கூட, பெரும்பான்மையாக கோக்குமாக்கான முறையிலும், கட்டாய வகையாகவும், தாசில்தார்களால் தயாரிக்கப்படுகின்றன, என்று நான் கூறுவேன்."

பருவ காலத்தில், ஏற்படும் பிரமாதங்களாலும், மனிதர்களிடையும், கால்நடையிடையும் ஏற்படும் கொள்ளை நோய்களாலும், அடிக்கடி, வறுமையும் கஷ்டமும் ஜனங்களுக்கு ஏற்படலாம். ஆனால் இத்தகைய விபத்துகள், குடியானவர்கள் அவைகளை எதிர்த்து சமாளிப்பதற்கு சக்தியற்றவர்களாயிருக்கும்பொழுது, இருவகைத் தீமைகளை, சதாரணமாக உண்டுபண்ணுகின்றன. நான் மேலே தெரிவித்தவாறு, நிலத்தின் விளைச்சல் வரிமாற்றத் தொகைக்கு சரியாகப் போகிறது என்று கருதுகிறேன். ஆனால், நான் இட்ட மதிப்பில்கூட, குடியானவனுக்கு அடிக்கடி நஷ்டம் உண்டாகிறது என்று எண்ணுவதற்கு இடமிருக்கிறது. தானிய விளைச்சலைப் சாதாரணமாக நிலத்தின் அசலான விளைச்சலைவிட அதிகமான மதிப்பிடப்பட்டுவிடுகிறது. தானிய விளைச்சலைப் பற்றி, கச்சேரியில் தகுந்த கணக்குகள் வைக்கப்படாததால், இவ்விஷயங்களைப் பற்றி விவரிப்பதற்காவது, உதாரணங்கள் கூறுவதற்காவது முடியாமலிருக்கிறது. தங்கள் சம்பளத் தொகையைப் பெறுவதற்கென்றே கிராமக் கர்ணங்கள் எழுதிவைத்த சுமாரான மதிப்புகள் மீது ஆதாரப்படமுடியாது.

"ஆதலால், இவ்விஷயமாக எதையாவது நிலை நாட்டிக்கூறுவதாவது, நேர்முகமான தக்க பரிகாரத்தைத் தெரிவிப்பதாவது கஷ்டமாயிருக்கிறது. மேலும் குடியானவர்களுடைய குறைகளை நீக்குவதற்கும், அவர்களுடைய நிலைமையைச் சீர்ப்படுத்துவதற்கும் தகுந்த ஏற்பாடுகள் செய்தால் அவைகளே போதுமானதென்றும் தெரிகிறது."

"இந்த லட்சியத்தை அடைவதற்கு, இப்பொழுதுள்ள வரிமாற்ற விகிதங்களை திருத்தியமைக்கவேண்டியதுதான் மிகவும் பொருத்தமான, நியாயமான விஷயம் என்று நான் தெரிவிக்க விரும்புகிறேன்."

"இந்த ஜில்லாவிலுள்ள முக்கிய நஞ்சை விளைச்சலாகிய மூவகை தானியங்களுக்கு, சென்ற 10 வருஷகாலமாகக் கிடைத்த அசல் சராசரி விலைகளை கவனிப்போமாகில், ஒரு கண்டிக்கு, மொத்த சராசரியாக ரூபாய் 20 கிடைப்பதே துர்லபமாயிருக்கிறது."

"மேற்கூறிய யோசனையை அனுசரிப்பதால், உடனே விளையக்கூடிய பயன் என்னவென்றால், சர்க்கார் நிலவரிகளில் பெருமிதமான குறைவு ஏற்படும் என்பதே. ஆனால், அவைகள் பிறகு சரி செய்து கொள்ளப்படலாம் என்று நினைப்பதற்கு ஆதாரம் இல்லாமற் போகவில்லை. ஏனெனில் குடியானவன், தனக்குள்ள அதிக வசதிகளைக்கொண்டு, அதிக விவசாயம் செய்து அதிக சுபிக்ஷம் அடைவதிலிருந்து சர்க்காருக்கும் அதிக வரி வருமானம் ஏற்படும்." கலெக்டர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

வரி நிர்மாண ஏற்பாட்டை சற்று வியாபகப்படுத்தி, எதிர்காலத்தில் அதிகமான சாகுபடி செய்வதற்கு வசதியளிக்கும் பரந்த, தாராளமான கொள்கையைக்கொண்டு, நிலவரி விகிதங்கள் திருத்தியமைக்கப்பட வேண்டுமேயொழிய, விலை வாசிகளின் குறைவால் நஷ்டம் ஏற்படுவதை சரி செய்யவேண்டுமென்ற ஆத்திரத்தால் தூண்டப்படக்கூடாதென்ற முடிவுக்கு, சென்னை சர்க்கார் வந்தனர் என்றும், 1852-53-ம்

வருஷங்களில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடி சம்பந்தமாகச் செய்யப்பட்ட விசாரணைகளின் பலிதமாக மேற்படி கருத்து சர்க்காருக்கு உதித்ததென்றும், மேற்படி கருத்தை செட்டில்மெண்டு அதிகாரிகள், சர்க்காரின் கட்டளையாகக் கருதினரென்றும் முன்னரே தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆதலால், செட்டில்மெண்ட் ஏற்படும்பொழுதெல்லாம் வரிகள் உயர்த்தப்பட்டன. கடைசியாக நடந்த ரீ-செட்டில்மெண்ட் ஏற்பாட்டில், 18¼ சத விகிதம் ஆக, வரி உயர்வு ஏற்பட்டது. ஆனால் அது முடிவில் அமுலில் வரவில்லை. அதனால் வரி ஏற்பாட்டைத் திருத்துவது மூலம் வரியை உயர்த்தும் வழக்கம் சில வருஷங்களாக நிறுத்தப்பட்டுவருகிறது. கடந்த இரண்டு வருஷங்களாக, குடியானவர்களுக்கு வரி வஜா கொடுக்கப்பட்டு வருகிறது.

1896-வது வருஷத்திய ரீ-செட்டில்மெண்டை ஆராய்ந்து, அவ்வருஷத்து ரீ-செட்டில்மெண்ட் ஏற்பாட்டில் வரி மாற்ற விதிகள் வெவ்வேறு அனுசரிக்கப்பட்டனவென்பதை கவனிப்போம். 1896-வது வருஷத்திய ரீ-செட்டில்மெண்டில் வரிவுயர்வு விஷயம் ஆலோசிக்கப்பட்டது. 1866-வது வருஷத்தில் முதலாவது ஏற்பட்ட செட்டில்மெண்டுக்குப் பிறகு, தானிய விலை வாசிகள், பெருவாரியாக உயர்ந்தனவென்றும் அதன் காரணமாக, குடியானவர்களுக்கு ஏராளமான லாபம் ஏற்பட்டதென்றும் சர்க்கார் செய்த பல போக்கு வரவு சாதனங்களுக்கும் மற்ற அபிவிருத்திகளுக்கும், நிலத்தின் விளைச்சலில் செலவு தொகை போக உள்ள பாகத்தில் பூராவான பாதிப் பாகத்தை சர்க்கார் நிலவரியாகக்கேட்கலாம் என்றும், அதன்படியே நிலவரி விகிதம் சௌகர்யமாக உயர்த்தப்படலாம் என்றும் சொல்லப்பட்டது. ஆற்றுமுகத்துறை (delta) நிலங்களுக்கு இப்பொழுதுள்ள வரிகள், நஞ்சை நிலங்களில் முக்கியமாக சாகுபடி செய்யப்படும் நெற் பயிருக்கு விதிக்கப்படும் வரி விகிதங்களைப்போல் அல்லாமல், புஞ்சைத் தானியங்களுக்குள்ள வரி விகிதங் களைப்போல ஏற்பாடு செய்யப்பட்டதென்றும் (புஞ்சைத் தானியங்கள் அந்நிலங்களில் சாகுபடி செய்யாதிருந் தும்) 1866-வது வருஷத்தில் ஏற்பட்ட ரீ-செட்டில்மெண்டிலும் அவ்வாறுதான் செய்யப்பட்டதென்றும் தெரியவருகிறது.

அடுத்தபடியாக, 30 வருஷ காலமாக ஏற்பட்டுள்ள கோதாவரி நீர்ப்பாசன வசதியால் நிலத்தின் வளப்ப மும், தன்மையும், முதலில் இருந்த நிலத்தரத்தைவிட எவ்வளவோ மாறியிருக்கிறதென்றும், அக்கார ணத்தைக்கொண்டு, வரிமாற்ற விகிதங்கள் உயர்த்தப்படக்கூடும் என்றும் சர்க்கார் சார்பாக தெரிவிக்கப் பட்டது. வரியை உயர்த்தவேண்டும் என்ற இந்த யோசனைக்கு எதிராக அக்காலத்தில் கோதாவரி ஜில்லா கலெக்டராகவிருந்த ஸ்ரீ வி. ஏ. போடி (Bodey) பின்வருமாறு எழுதியுள்ளார் :—

> "மண்வாசியைக் கூர்ந்து பரீட்சித்தால், சென்ற 30 வருஷங்களாக, நீர்ப்பாசனம், நிலத்திற்கு நன்மையைவிட தீமையைத்தான் அதிகமாகச் செய்திருக்கிறதென்று, ராமச்சந்திரபுரம் தாசில் தார் சொல்வதை நான் ஒப்புக்கொள்கிறேன்.
>
> "சில இடங்களில், தங்கள் செலவைக்கொண்டு குடியானவர்கள், கழி நிலங்களையும், உப்புப் பூத்த நிலங்களையும் பண்படுத்தி வளப்பமடையச் செய்திருக்கிறார்கள். நல்ல உரமிட்டு நிலத்தை அபி விருத்தி செய்யும் விஷயத்தில் கோதாவரி ஜில்லா, தஞ்சாவூர் ஜில்லாவை விட பிற்போக்காகத் தானிருக்கிறது."

1896-ம் வருஷத்தில், ரீ-செட்டில்மெண்ட் ஏற்பாட்டிற்காக அனுசரிக்கப்பட்ட வரி மாற்ற விதிகள், ஒருவாறு நன்மை பயப்பதாக இருந்ததென்று கூறலாம். முதல் ரீ-செட்டில்மெண்ட் ஏற்பட்டு 42 வருஷங் களான பிறகு, எஸ்டேட் நிலச்சட்டம் அமுலுக்கு வந்தது. மேற்படி சட்டத்தில் முதன் முதலாக 40, 41-வது பிரிவுகளில், வரிமாற்ற விகிதங்கள் ஏற்படுத்தப்பட்டன. 1896-ம் வருஷத்திய ரீ-செட்டில்மெண்டில், வரி மாற்ற விகிதங்களை விதிப்பதற்கு அனுசரிக்கப்பட்ட தத்துவங்கள் என்ன என்பதை 40, 41, 32 பிரிவு களிலுள்ள விதிகள் தெரிவிக்கவில்லை. 1908-ம் வருஷத்திய எஸ்டேட் நிலச்சட்டத்தில், முதன் முதலாக வரி மாற்ற விதிகள் ஏற்படுத்தினபொழுது, 1852, 1853-ம் வருஷங்களில் ஏற்பட்ட பொருளாதார நெருக் கடிக்குக் காரணமாயிருந்த மேற்படி முறையின் ஊனங்களையும், 1866-ம் வருஷத்திய ரீ-செட்டில்மெண்டு சம்பந்தமாக உத்தேசிக்கப்பட்ட நியாயமான கொள்கைகளையும், மேற்படி சட்டத்தைச் செய்தவர்கள் (எஸ்டேட் நிலச்சட்டம்) மறந்திருக்கக்கூடாது.

சர்க்கார் விதித்த தேதியில் குடியானவர்கள் கிஸ்தித் தொகையைச் செலுத்தவேண்டுமென்று, நிர்ப்பந்தம் செய்யப்படுவதால், அவர்களுக்கு எவ்வளவு நஷ்டம் ஏற்படுகிறதென்பது, பலருக்குத் தெரியவில்லை. வரித்தவணைகளை சர்க்கார் விதிக்கும்பொழுது, அவர்கள் குடியானவர்களுடைய வசதிப்பாட்டுகளை கவனிப்ப தில்லை. விதிக்கப்பட்ட தேதிகளில், வரியைச் செலுத்துவதற்கு குடியானவனுக்கு சக்தியுண்டாவென்பதை யும் அவர்கள் கவனிப்பதில்லை.

தானியத்தை விற்பனை செய்யும் காலத்தில் வரித்தவணைகள் குறிக்கப்படாமல், மற்ற காலத்தில் குறித் திருப்பது குடியானவர்களுக்கு பெருத்த கஷ்டத்தை விளைவித்திருக்கிறது. காலாகாலத்தில், சர்க்கார் கிஸ்தியைச் செலுத்துவதற்கு, குடியானவன் தனது தானியத்தை, குறைந்த விலைக்கு விற்க நேரிடுகிறதென் பதை சர்க்காரும் பொருட்படுத்துவதில்லை; ஜமீன்தாரும் பொருட்படுத்துவதில்லை. ஆதலால் இக்காரணங்களை முன்னிட்டு, 1896-ம் வருஷத்திய ரீ-செட்டில்மெண்டில், வரி மாற்ற விகிதங்கள் சம்பந்தமாக அனுசரிக்கப்பட்ட முதல் தத்துவம் பின் வருமாறு :—

(1) சர்க்காருக்கு விவசாய, பொருளாதார ஹக்கு அதிகமாயிருப்பதால், தங்களுக்குச் சேரவேண்டிய வரியை வசூலிக்கும் முறையில், தானிய விற்பனையில்லாத மாதங்களில், குடியானவன் பண்டங்களை குறைந்த விலைக்கு விற்குமாறு, மறைமுகமாக நிர்ப்பந்தம் செய்யலாம். ஆதலால் இது சம்பந்தமாக, குடியானவன் அடையும் நஷ்டம் வரி மாற்ற விகித ஏற்பாட்டில் கணக்கிடப்பட வேண்டும்.

இது ஒரு நியாயமான, ஒழுங்கான விதியாகும். இதுதான் ராஜதானி முழுவதும், ஜமீன்தாரிப் பிரதேசங்களிலும், ரயத்துவாரிப் பிரதேசங்களிலும், நடந்துவருகிறது. தானிய விற்பனை காலத்தில் வரித்தவணைகள் விதிக்கப்படவேண்டுமென்றும், அவ்வாறு செய்தால் தானியத்தை நல்ல விலைக்கு விற்று, அடைந்த பணத்தைக்கொண்டு ஜமீன்தாருக்கு வரி செலுத்தக்கூடுமென் றும், அப்படியில்லாமல் அகாலத்தில் வரித்தவணைகள் ஏற்பட்டிருக்கிறபடியால், வரியைச் செலுத்து வதற்கு தானியத்தைக் குறைந்த விலைக்கு விற்க நேரிடுகிறதென்றும், குடியானவர்கள் எங்கள் கமிட்டி முன்பு சாக்ஷியம் கொடுத்திருக்கிறார்கள்.

(2) இரண்டாவது தத்துவம் என்னவென்றால், வரிமாற்ற விகிதங்களை ஏற்படுத்துவதில், பஞ்ச வருஷங்கள் கணக்கில் சேர்க்கக்கூடாதென்பதே. இது, எஸ்டேட் நிலச்சட்டத்தில் அங்கீகரிக்கப் பட்டிருக்கிறது.

(3) ஒரு கரிசையின் (ஒரு கரிசை 6 "புட்டி"க்கு சமானமாகும்) விலையை ஏற்படுத்துவதில் மூன்றுவது விதி அனுசரிக்கப்பட்டது. அதாவது, (1) வியாபாரியின் லாபத்திற்கும், (2) வண்டிச் சத்தத்திற்கும், 15 சத விகிதம் அல்லது 20 சத விகிதம் அனுமதிக்கப்பட்டது. இந்தக் கணக்கின் பேரில்த்தான், செட்டில்மெண்ட் அதிகாரி, ஒரு "புட்டிக்கு" 19 ரூபாய்கள் என்று வரிமாற்ற விகிதம் ஏற்படுத்தினூர். ஆனால் இதற்கெதிராக, அசல் சராசரிப்படி ஒரு புட்டிக்கு, 16 அல்லது 17 ரூபாய்கள்தான் மதிப்பிடவேண்டுமென்று குடியானவர்கள் வாதித்தார்கள்.

தானியத்தை அளப்பதிலும், வரி விகிதங்களை விதிப்பதிலும், செட்டில்மெண்ட் இலாகா சில ஆதாரங்களை அனுசரித்தது. 320 தோலாக்களைக் கொண்ட 200 குஞ்சங்களாக ஒரு புட்டியை செட்டில்மெண்ட் இலாகா மதிப்பிடுகிறதென்றும், ஆனால், தானிய விற்பனையில் சாதாரணக் குஞ்சம் 360 தோலாக்களைக் கொண்டதென்றும், 1896-ம் வருஷத்திய ரீ-செட்டில்மெண்டில் குடியானவர்கள் முறையிட்டார்கள். மேலும், தானிய விளைச்சலைக் கணக்கிடுவதில், குவிக்கப்பட்ட குஞ்சங்களைக் கணக்கிடாமல், தூசிதும்பை நீங்கின குஞ்சங்களின்படி ரீ-செட்டில்மெண்ட் அதிகாரிகள் கணக்கிட்டார்கள் என்றும் சொல்லப்பட்டது. இது சுவல்ப விஷயமல்ல. குடியானவனுக்கு முக்கிய விஷயம். இதைப்பற்றி, வரிமாற்ற விதிகளைத் தெரிவிக்கும் எஸ்டேட் நிலச்சட்டத்தின், 40, 41, 32 பிரிவுகளில் ஒன்றும் தெரிவிக்கப்படவில்லை.

(4) நான்காவதாக, 1896-ம் வருஷத்திய ரீ-செட்டில்மெண்டில், பருவ மாறுதல்களுக்கு, சில தொகைகள் கழிக்கப்பட்டன :—

(i) விதை விதைப்பதற்கு, வேண்டியதாக, ஒரு ஏக்கரின் 1/10 பாகம் முடிவு செய்யப்பட்டது. அதற்காக, 5 சத விகிதம் கழிக்கப்பட்டது.

(ii) லாபகரமில்லாத வாய்க்கால் வரம்புகளும் கணக்கில் சேர்க்கப்பட்டன.

(iii) செட்டில்மெண்ட் மானுயல் 2-வது அத்தியாயம் 5-வது பிரிவின்படி சாகுபடி செய்யப்படாத நிலங்களுக்கும் ஒரு ஈவு அனுமதிக்கப்பட்டது.

(iv) பருவ மாறுதல்களுக்கும், லாபகரமில்லாத நிலப்பகுதிகளுக்கும், 15 சத விகிதம் முதல் 20 சத விகிதம் வரை ஒரு மொத்தத் தொகை ஒதுக்கிவைக்கப்பட்டது. சாகுபடி செய்யாது சும்மா இருக்கும் நிலங்களுக்கு கிளார்க்கு துரை புஞ்சைத் தீர்வை விதித்தார். இந்த நிலங்களைப் பொறுத்தமட்டில் சராசரி வருஷத்தின் விளைச்சலைக்கொண்டே கணக்கிடப்பட்டதேயொழிய, பருவ மாறுதல்களுக்கு ஒன்றும் கழிக்கப்படவில்லை.

(v) சரியான நீர்ப்பாசன வசதியில்லாமைக்கும், நீரை வடிப்பதற்குத்தக்க ஆதாரமில்லாமைக்கும், நிலம் நீரில் மூழ்கக்கூடிய தன்மைக்கும், சில தொகைகள் கழிக்கப்பட்டன.

இவைகளுக்காக 10 சத விகிதம் கிளார்க்கு துரையால் அனுமதிக்கப்பட்டு, அதுபோதுமானதாகக் கருதப்பட்டது.

(vi) ஒவ்வொரு ஏக்கர் முதல்த்தா நிலத்திற்கும், 19 ரூபாய் செலவு தொகையாக மதிப்பிடப்பட்டது. வயல் மட்டத்தை சரி செய்வதற்கு, ரூ. 0–10–0, செலவு தொகையாக ஒதுக்கப்பட்டது. மாடுகளின் தீனிக்காக ரூ. 1–12–9 மதிப்பிடப்பட்டது. இதர பாபத்துகளுக்கு, ஒன்றும் கொடுகப்படவில்லை. நிலப்பரப்பு சமமாக இருக்கும் பிரதேசங்களுக்கு, வயல் மட்டத்தைச் சரி செய்யும் செலவு ஏற்படாது. உரத்திற்கும், விவசாயக் கருவிகளுக்கும், தொகை ஒதுக்கப்பட்டது.

வரிமாற்ற விகிதங்களை ஏற்படுத்துவதில், செட்டில்மெண்ட் இலாகா அனுசரித்த விதிகளும், தத்துவங்களும், இத்தன்மைத்தாகும். மேற்படி முறையை அவர்கள் வியக்கத்தக்கவாறு அமைத்தார்கள் என்று சொல்லலாம்.

ஆனால், இத்தகைய சாஸ்த்திரோக்தமான முறை அனுசரிக்கப்பட்டும், வரி மாற்ற ஏற்பாடு செயலில்
வெற்றிபெறவில்லை. வரிமாற்ற விகிதங்கள் சம்பந்தமாக, மேலே தெரிவிக்கப்பட்ட கொள்கைகள்
ஆராயப்படவில்லை என்றும், அனுசரிக்கப்படவில்லை என்றுமே, 40, 41, 32 பிரிவுகளின் விதிகளிலிருந்து
தெரியவருகிறது. எந்த விதிகளையும் தத்துவங்களையும் கொண்டு, வரிமாற்ற விகிதங்கள் ஏற்படுத்தவேண்டு
மென்பதை 1908-ம் வருஷத்தில் சட்டம் செய்தவர்கள் நன்கு விளக்கியிருக்கவேண்டும். 40-வது பிரிவின்
(3)-வது ஷரத்து, (a) இல் குறிக்கப்பட்ட விதியே, வரிமாற்ற விகிதங்களுக்கு 1852-ம் வருஷத்திற்கு முன்
அனுசரிக்கப்பட்டது. அது செயல் முறையில் வெற்றிபெறவில்லை. அதே கிராமத்தில் அல்லது பக்க
கிராமங்களில், அல்லது பக்கத்திலுள்ள தாலூகாவின் கிராமங்களில், ஒத்த தரத்தையும், வசதிகளையு
முடைய நிலங்களுக்கு குடியானவர்கள் என்ன பண வரி செலுத்துகிறார்களோ அதையே கோர்ட்டு அனு
சரித்து முடிவு கூற வேண்டுமென்று தெரிவிக்கும் 3-வது உட்பிரிவின் (b) ஷரத்திலுள்ள விதி, கோர்ட்டுக்கு
அவ்வளவு ஆதாரமாக இருக்கமுடியாது. மீண்டும், ஜமீன்தார் அல்லது, குடியானவன், நிலத்திற்குச்
செய்யும் அபிவிருத்தி சம்பந்தமாயுள்ள (c) ஷரத்தின் விதி, விலை வாசிகளின் உயர்வையாவது, குறைவை
யாவது, கட்டுப்படுத்தாது. சற்று அதிக விளைச்சல் ஏற்படுவதற்குமட்டும் சாதகமாயிருக்கலாம். அதிக
மான நிலங்கள் சாகுபடி செய்வதின் காரணமாக அதிக விளைச்சல் ஏற்படும்பொழுது, அது விலை வாசிகளைக்
குறைக்குமேயொழிய அதிகப்படுத்தாது.

40-வது பிரிவின், 3-வது உட்பிரிவிலுள்ள (c) ஷரத்திற்கு ஆதாரமாயிருக்கும், 32-வது பிரிவின்
படி, செய்யப்பட்ட அபிவிருத்தியின் காரணமாக நிலத்தின் விளைச்சல் அதிகரித்ததா, என்ற விஷயத்தை
விசாரணை செய்யும் அதிகாரி ஆராயவேண்டும். மேற்படி அபிவிருத்தி சம்பந்தமான செலவும், அதில்
ஜமீன்தாரும், குடியானவனும் பொறுத்துக்கொள்ளவேண்டிய பாகமும், அபிவிருத்தி வேலையை நிர்
வகிப்பதற்குண்டாகும் செலவும், அதை (அபிவிருத்தி வேலையை) ப்பயன் படுத்தி சாகுபடி செய்வதற்கு ஏற்
படும் செலவும், கடைசியாக, தற்போதுள்ள வரியும், இனிமேல் அதிகவரியைத் தாங்குவதற்கு, நிலத்திற்கு
சக்தியிருக்கிறதாவென்பதும், ஆகிய இந்த விஷயங்களும், விசாரணையதிகாரியால் ஆராயப்படவேண்டும்.

எஸ்டேட் நிலச்சட்டத்தின்படி, வரிமாற்ற விகிதங்களை நிர்ணயம் செய்வதற்கு, பிரிவுகளில் கண்டுள்ள
எல்லா விதிகளையும், ஷரத்துகளையும், இதுவரை ஆராய்ந்தோம். அவைகளில் எதைக்கொண்டாவது,
வரிமாற்ற விகிதங்களை விதிப்பதற்கு, செட்டில்மெண்ட் இலாகா அனுசரித்த தத்துவங்கள் என்ன என்று
அறிவது, கஷ்டமாயிருக்கிறது. ரயத்துவாரி நிலங்களின், வரிகளை, திருத்தியமைப்பதில், சர்க்கார்,
அனுசரித்த கொள்கைகளை ஆதாரமாகக் கொள்ளாமல், எஸ்டேட் நிலச்சட்டத்தில் விதிகள், ஏற்படுத்தியி
பது ஒழுங்கானதல்ல. கூடியவரை, ஒழுங்காகக் காணப்பட்ட வரி மாற்ற முறை, ரயத்துவாரிப் பிரதேசங்
களில் பயனற்றபொழுது, வரி மட்டங்களையும், வரி மாற்ற விகிதங்களையும், எஸ்டேட் நிலச்சட்டத்தில் முதன்
முதலாக ஏற்படுத்துவதற்கு என்ன நியாயம் இருக்கிறது? பிரக்கியாதி வாய்ந்த ஸ்ரீ. பி. எஸ். சிவஸ்

வாமி அய்யர் எழுதிய அபிப்பிராயபேத யாதாஸ்த்துக்கு மாருக அது செய்யப்பட்டது. அது குறுகிய நோக்கத்துடன் செய்யப்பட்டதாகும். அது, குடியானவர்களுக்கு இக்கட்டையுண்டாக்கி, விஷயங்களைக் குழப்பி விட்டது.

எஸ்டேட் நிலச்சட்டம் ஏற்பட்ட 20 வருஷங்களுக்கு பிறகு, 1929-ம் வருஷத்திலும், 1930-ம் வருஷத்திலும், ஏற்பட்ட விலைவாசிகளின் குறைவு காரணமாக விலை மட்டங்களின் விதிகளும், வரி மாற்ற விதிகளும், முடிவாக முறிவடைந்தன என்பதை முன்னரே தெரிவித்திருக்கிறோம். நாணயப் பெருக்கத்தையும், சுருக்கத்தையும், தங்கள் சொந்த வசதிகளுக்குத் தகுந்தாற்போல், அரசாங்கங்கள் மாற்றி அமைத்துக் கொள்வதுதான், விலை வாசிகளின் குறைவுக்கும், வரிமாற்ற விகிதங்களின் வீழ்ச்சிக்கும், உலகப் பொருளாதாரக் கஷ்டத்திற்கும், காரணமாயிருந்ததென்பது இங்கு குறிப்பிடத்தக்கது. இறுதியில், உலக நாணய முறையும், பிரிடிஷ் அரசாங்கத்தால், ஸ்தாபிக்கப்பட்ட இத்தேசத்தின் நாணய முறையும், சிதைவுற்றது. உலக நாணய முறை, நிலை குலைந்ததென்றும், இந்திய நாணய முறைக்கு, நிரந்தரமான, பொருத்தமான ஒரு ஆதாரத்தை கண்டுபிடிப்பது கஷ்டமாயிருக்கிறதென்றும், 1934-ம் வருஷத்திய ரிஸர்வ் பாங்க் ஆவ் இந்தியா சட்டத்தின் பீடிகையில் ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறது. சட்ட சபை அங்கத்தினர்கள், நமது தேசத்தை அபிவிருத்தி செய்து, குடியானவர்களையும், விவசாயத் தொழிலையும், பாதுகாக்க விரும்பினுல், விலை மட்டங்களிலும், வரி மாற்ற விகிதங்களிலும், பிரிடிஷ் அரசாங்கத்தாரின், நாணய முறையிலும், நாணயமாற்று முறையிலும், நம்பிக்கை வைக்கக்கூடாதென்பதைத் தெரிவிப்பதற்கே நாங்கள் இந்த விஷயத்தை பலவகையிலும் ஆராய்ந்து வலியுறுத்திக் கூறியிருக்கிறோம். பிரிடிஷ் சர்க்காரின், நாணயமாற்றுமுறையைக் கைவிடும்படி கட்டாயப்படுத்த, தங்களுக்கு சக்தியில்லாதிருக்கும் வரை, ஜனப்பிரதிநிதிகள், பிறதேசங்களைப்போல், தங்கள் தேசத்தையும் சீரிய நிலைமைக்கு கொண்டுவர விரும்பினுல், அவர்கள் தங்களுக்கு யுக்தமாகத் தோன்றும், புதிய மார்க்கத்தை அனுசரிக்கவேண்டும்.

தீர்மானம் (முடிவு).

1908-ம் வருஷத்திய எஸ்டேட் நிலச்சட்டம், அனுசரிக்கவேண்டிய நடைமுறையைத் தெரிவிக்கும் சட்டமாகும். மேற்படி சட்டத்தின் விதிகளையும், அது சம்பந்தமான வழக்குத் தீர்ப்புகளையும் வெகு கவனமாக ஆராய்ந்து, நாங்கள் கூறும் அபிப்பிராயம் என்னவென்ருல், சாசுவத பைசல் காலத்தில், நிரந்தரமாக விதிக்கப்பட்ட வரியைச் செலுத்தி, மற்றபடி நிலத்தை ஏகபோகமாக அனுபவிப்பதற்கு குடியானவனுக்கு உரிமையிருக்கிறதென்பதும், அவ்வுரிமை, நாளது தேதி வரை யாதொரு மாறுதலுமின்றி இருந்து வந்திருக்கிறதென்பதுமே. சாகுபடியான நிலங்களுக்கும், சாகுபடியாகாத நிலங்களுக்கும், வரி விகிதம் நிரந்தரமாகச் செய்யப்பட்டதென்ற விஷயம், 1908-ம் வருஷத்திய எஸ்டேட் நில மசோதாவிற்குக் காரணபூதமாக இருந்த கௌரவமிக்க ஜி. எஸ். போர்ப்ஸ் துரை அவர்களால் ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறது. வரி மாற்றுமூலம், வரியை உயர்த்துவதற்கு 30, 35 பிரிவுகளிலும், 40, 41 பிரிவுகளிலும் ஏற்பட்டுள்ள விதிகள், பழைய கரம்பு ரயத்தி குடியானவர்களுக்குச் செல்லவேண்டுமென்று உத்தேசிக்கப்பட்டதேயொழிய, ரயத்துவாரிக் குடியானவர்களை அவை கட்டுப்படுத்தலாகாது. சாசுவத பைசல் காலத்தில், நிரந்தரமான வரி விதிக்கப்பட்ட நிலங்களுக்கு, எந்தக் காரணத்தைக் கொண்டும், வரியை உயர்த்த முடியாதென்பது, 30-வது பிரிவின் (1)-வது உட்பிரிவின் முதலாவது ஷரத்திலிருந்தும், 165-வது பிரிவின் (e) உட்பிரிவிலிருந்தும், 1934-ம் வருஷத்தில் திருத்தப்படுவதற்குமுன் 50-வது பிரிவிலிருந்தும், தெரியவருகிறது.

வரியை உயர்த்துவதற்கு, ஜமீன்தாருக்கு உரிமையிருக்கிறதா என்ற விஷயமாக, எங்கள் முன்பு, வாக்குமூலமாகவும், எழுத்துமூலமாகவும் கொடுக்கப்பட்ட சாட்சியங்களைக் கொண்டும், நீதிஸ்தல தீர்ப்புகளைக் கொண்டும், நாங்கள் கூறும் முடிவு என்னவென்ருல், குடியானவர்களுக்குள்ள நில உரிமை, இதுகாறும், யாதொரு மாறுதலுமின்றி, ஒரே சீராக இருந்துவந்திருக்கிறதென்பதும், வரியை உயர்த்துவதற்கு ஜமீன்தார் கொண்டாடும் பாத்தியதை நிராகரிக்கப்பட்டிருக்கிறதென்பதுமே. வரி உயர்வுகள் சம்பந்தமான, பிரிவுகள், தவருக அர்த்தம் செய்யப்பட்ட தீர்ப்புகள், ஒழுங்கானவையல்ல. விலை வாசிகள் உயர்வதின் காரணமாகவும், மற்ற சம்பவங்களின் காரணமாகவும், வரியை உயர்த்துவது, 30-வது பிரிவின், (1)-வது உட்பிரிவின் ஷரத்திற்கு முற்றிலும், மாறுனதாகும். அத்தகைய வரி உயர்வுகள், குடியானவர்களைக் கட்டுப்படுத்தா. பயிர் வாரி முறையிலும், விளைச்சலின் தரத்திற்கும், அளவிற்கும் தகுந்தாற்போலவும், வெவ்வேறு விதமான தீர்வைகளை விதிப்பது, சாசுவத பைசல் ஏற்பாட்டிற்கு, முரணுவதென்றும், அவைகளும், குடியானவர்களைக் கட்டுப்படுத்தாதென்றும், நாங்கள் அபிப்பிராயப்படுகிறோம்.

8-ம் அத்தியாயம்.

I பாகம்—எஸ்டேட்ஸ் நிலச் சட்டக் கமிட்டியின் அறிக்கை—பூஸ்திதிகளிலுள்ள நிலத்தைப்பற்றிய சென்னை 1908-ம்ஹூ௵த்து ஆக்ட்—தொடர்ச்சி

(1) 4-ம் அத்தியாயம்—பட்டாவும் முச்சிலிக்கையும்.

பட்டா ரெகுலேஷன் தலைப்பின்கீழ் விவரமாக பட்டா என்பதின் பொருளைப்பற்றியும் பட்டாவும் முச்சிலிக்கையும் ஒன்றுக்கொன்று மாற்றவேண்டிய தன்மையை உடைத்தாய் செய்யப்பட்டுள்ள அவஸியத்தைப் பற்றியும், நாம் நீண்ட வாதம் செய்திருக்கிறோம். சர்க்கார் எவ்வாறு நிலச்சுவான்தாருக்கு சந்நத்-இ-மிலிகியட் இஸ்திமிரார் அவஷியமாகத் தரவேண்டியதோ அதேமாதிரி நிலச்சுவான்தார் விவசாயிக்கு பட்டா கட்டாயமாகத் தரவேண்டியிருக்கிறது. பட்டா ரெகுலேஷன்படி, விவசாயிக்கு அனுபோக பாத்தியதையை தீர்மானிக்க பட்டா ஏற்பட்டதாகும். அது, இஸ்து எக்காலத்திலும் எக்காரணத்தை முன்னிட்டும் மாறுதல் இல்லாததென்று தீர்மானிக்கப்பட்டதென்பதைக் காண்பிக்கும். சர் ஜான் ஷோரும், லார்ட் கார்ன்வாலிசும் கூறியுள்ளபடி, 1802-ம் வருஷத்து ரெகுலேஷன்படி நிலச்சுவான்தாருக்கு எப்படி பேஷ்கஷ் மாறுதலின்றி ஏற்பட்டிருக்கிறதோ, அதேபோல் விவசாயிக்கும் நிரந்தர அனுபோக உரிமையும், வரியும் மாறுதலின்றி எக்காலத்துக்கும் உரிமை ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. 1908-ம்ஹூ௵த்து பூஸ்திதிகளிலுள்ள நிலத்தைப்பற்றிய ஆக்ட் ஒன்றைக் கொண்டுவருமுன் கனம் போர்ப்ஸ் அவர்கள் (மேற்படி மசோதாவைக் கொண்டுவந்தார்) 1802-ம் ஆண்டு முதல் 1908-ம் ஆண்டு வரையில் சட்டங்களையும் நடவடிக்கைகளையும் திரப்பார்த்து விவசாய உரிமையும், வரியும் மாறுதலில்லாத இயல்பை உடையதென்று சொல்லியிருக்கிறார். நிலச்சுவான்தாருக்கும் விவசாயிகளுக்கும் உள்ள தகராறுகளை மட்டும் கவனிக்கவேண்டிய விஷயமாய் பூஸ்திதிகளிலுள்ள நிலத்தைப்பற்றிய மசோதா இருக்குமாயின், மசோதாவும் சட்டமும் சாதாரண இயல்புடையதாய் 1802-ம்ஹூ௵த்திய பட்டா ரெகுலேஷன் 30, சாசுவத செட்டில்மெண்ட் ரெகுலேஷன் 25 போன்றிருக்கும். ஆனால் ஏதோ சில குறைகளால் அச்சட்டம் நிரந்தரமாய், அனுபோக உரிமை ஏற்பட்டுள்ள விவசாயிகளுக்குமட்டுமேயன்றி பழைய கரம்பை பயிரிடுபவர்களுக்குக்கூட அமுலில் கொண்டுவரப்பட்டது. பழைய கரம்பு, சட்டத்தில் விளக்கியுள்ளபடி, விவசாய உரிமையும் மாறுதலில்லாத வரியும் உள்ள அம்ஸங்களின்றியுள்ள ரயத் நிலமாகும். ஆனால் அதில் நிலச்சுவான்தாருக்கு பிரத்தியேக நிலத்திலுள்ள உரிமைபோலல்லாமல் ஒருவித சொந்த உரிமையைக் கொண்டதாகும். ரயத்து நிலத்திலில்லாதது போல் பழைய கரம்பில் நிலச்சுவான்தாருக்கு வரியை உயர்த்தவும், குடித்தனக்காரரை அப்புறப்படுத்தவும் அதிகாரமுண்டு. இவ்விதமாக இருவித தகராறுகளுள்ள விஷயங்களைப்பற்றி பூஸ்திதியிலுள்ள நிலசம்பந்தமான சட்டத்தின் கட்டுப்பாட்டில் கொண்டுவர, சட்ட சபைக்கு இருவித விஷயங்களுக்கும் பொருத்தமாக பிரிவுகள் ஏற்படுத்துவதில் பெருங் கஷ்டம் ஏற்பட்டது. அதேபோல் ரெண்ட் ரெகவரி ஆக்டில் முதற் பிரிவில் இருவித நிலச்சுவான்தார்களின் விவகார விஷயங்களைப் புகுத்தியதில் கஷ்டங்கள் ஏற்பட்டன. ஒன்றுக்கொன்று பொருத்தமில்லாத இரு விஷயங்களை புகுத்தியதால்தான் மேற்சொல்லிய இரு சட்டங்களிலும் இவ்வித குழப்பங்கள் ஏற்பட்டன. பட்டாவும் முச்சிலிக்கையும் என்கிற 4-ம் அத்தியாத்தைக்கொண்டு வருகையில் 50-ம் பிரிவு, 1908-ம்ஹூ௵ முதற் சட்டத்தில் இருவித விவசாயிகளுக்கும் அமுலில் உள்ளதாய் ஏற்படுத்தப்பட்டது. 50-வது பிரிவின் முதல் அம்சம், முதலில் கொண்டுவந்தபடி உள்ளது கீழ்க்கண்டவாறு :—

> "இந்த அத்தியாயத்திற் கண்ட நிபந்தனைகள் சாசுவதமான அனுபோக பாத்தியதையுள்ள சகல ரயத்துகளுக்கும் பிரயோகப்படுவதோடுங்கூட எழுத்துமூலமான குத்தகைச் சீட்டின்படிக்கன்றி மற்றப்படி ஒரு நிலச்சுவான்தாருக்கு கீழ்ப்பட்டு பழைய கரம்பை வைத்துக்கொண்டிருக்கிற ரயத்துகளுக்கு எவ்வளவுமட்டில் பிரயோகப்படக்கூடுமோ அவ்வளவுமட்டிலே அவர்களுக்கும் பிரயோகப்படும்."

இது 1908-ம் வருஷம் முதல் 1934-ம் வருஷம் வரையில் சட்டமாயிருந்து, 1934-ம் வருஷத்திய திருத்தச்சட்டம் 8-ல், "சாஸ்வதமான அனுபோக பாத்தியதையுள்ள" என்னும் வார்த்தைகள் விடப்பட்டன. அதனால் இந்த அத்தியாயத்திலுள்ள விஷயங்கள் எல்லா ரயத்துகளுக்கும் பிரயோகப்படும் என்ற சொற்கள்மட்டும் நின்றன. மேற்கண்ட சொற்களை விட்டுவிட்டதால், அதனால் ஏற்படக்கூடிய மாறுதல்களையெல்லாம் செய்யவேண்டி, பிரிவு 30 முதல் 35 வரையிலும், பிரிவுகள் 40, 41-லும் கண்டுள்ள வரி உயர்த்தல், குறைத்தல், 1-ம் அத்தியாயத்திலுள்ள வரி நிர்மாணிக்கும் விஷயத்தையொட்டி சர்வே செய்வதும், உரிமை தஸ்தாவேஜு ஏற்படுத்துவதும், குத்தகைத் தொகைகளை பைசல் செய்வதும், இன்னும் பழைய கரம்புக்கென்றுள்ள அம்சங்களை விட்டுவிடவேண்டிய அவசியத்தைப்பற்றியும் நாம் முன்பே குறிப்பிட்டோம். பட்டாவும், முச்சிலிக்கையும் என்பதைப்பற்றிய 4-ம் அத்தியாயத்தில் 9 பிரிவுகள் உள்ளன.

அப்பிரிவுகளின் விவரங்களாவன :—

(1) இவ்வத்தியாயம் யாராரைப்பற்றியதென்பதும்

(2) ரயத்து, நிலச்சுவான்தாரிடமிருந்து பட்டா அடையக்கூடிய உரிமையும்

(3) பட்டாவின் விபரங்களும்

(4) பட்டாவும் முச்சிலிக்கையும் எவ்வளவுகால அளவுள்ள தென்றும்

(5) பட்டா அளித்தலும்

(6) பட்டா பெறுவதற்காக வியாஜ்ஜியமும், பட்டா பதிவு செய்வதும்.

1802-ம் வருஷத்திய 30-வது ரெகுலேஷனிலும், 25-வது ரெகுலேஷனிலும் ரெண்ட் ரெகவரி ஆக்டிலும் இதேபோன்ற நிபந்தனைகள் இருந்தன. விவசாயிகளைத் தாக்குகின்ற விஷயங்கள் சர்க்காருக்கு தெரிந்தவுடனே சர்க்காரும் உத்தியோகஸ்தர்களும் விவசாயிகளைக் காப்பாற்ற தக்க ஏற்பாடுகள் செய்தார்கள். நிலத்திற்குடையவரும் ரயத்தும் ஒருவருக்கு ஒருவர் பட்டாவும் முச்சிலிக்கையும் மாற்றிக்கொள்ளும்படி ஏற்படுத்தப்பட்ட நிபந்தனைகள், ஒருவருக்கொருவர் உரிமையிலும் அனுபோகங்களிலும் மாறுதலான கொள்கைகளை உள்ளவர்களாதலால் பெரிய குழப்பங்களை உண்டுபண்ணின.

மேற்கூறியபடி கடந்த 138 வருஷங்களாக இப்பட்டா முச்சிலிக்கைக்காக இவ்வித தகராறுகள் இருந்து வந்தபடியால் அவைகளை ஒழித்து விவசாயிகளுக்கு நிரந்தர உரிமையும் முடிவான வரியும், சர்க்கார் எவ்விதம் நிலத்துக்கு உடையவர்களுக்கு சன்னது தருகிறார்களோ அதுமாதிரி செய்யவேண்டும். இப்போது பயிரிடும் நிலத்துக்கும், பயிர் இடாத நிலத்துக்கும் உள்ள நிபந்தனைகள் சாசுவத (permanent settlement) செட்டில்மெண்ட் காலத்தில் இருந்த கஷ்டம்போல் இல்லை. வெகு நிலங்கள் பயிராகி வருகின்றன. ஒன்றுமட்டும் தீர்மானமாகச் சொல்லலாம். பூரா விஷயமும் அவசியமானால் 1802-ம் வருஷத்திய பட்டா ரெகுலேஷனின் 28, 30-ல் உள்ள நிபந்தனைகளில் 1902-ம் வருஷத்திய 4, 5 ரெகுலேஷன்களில் உள்ள மாறுதல்களோடும் மற்றும் வேண்டிய மாறுதல்களோடும் இந்த புதுச் சட்டத்தில் நம் சட்டசபை ஏற்படுத்தலாம். 4-ம் அத்தியாயத்தில் உள்ள எல்லா நிபந்தனைகளை எடுத்து விட்டு புது நிபந்தனைகளை ஏற்படுத்தவேண்டும்.

(2) 6-ம் அத்தியாயம்—ஜப்தியும் நில விற்பனையும் அல்லது பொருள் விற்பனையும்.

இது 56 பிரிவுடைய பெரிய அத்தியாயம். நிலத்துக்குடையவர் கிஸ்தி பாக்கிக்காக வியாஜ்யமூலமாகவோ ஜப்தி செய்து ஜங்கப் பொருளை விற்றோ அல்லது நிலத்தை விற்றோ கிஸ்தியைப் பெறும் விஷயத்தைச் சொல்கிறது. நிலத்துக்குடையவருக்கும் ரயத்துக்கும் கஷ்டமின்றி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. ஆனால் இந்த சட்டம் 30 வருஷம் அமுலிலிருந்தபின் இந்தக் கமிட்டியின்முன் அதிலுள்ள குறைபாடுகளைக் கூறுகிறார்கள். நிலத்துக்குடையவர் தனக்குள்ள அதிகாரம் போதாதென்று, சர்க்கார், வரி வசூலிப்பதற்கு எவ்வளவு அதிகாரம் செலுத்துகிறார்களோ அவ்வளவு அதிகாரம் வேண்டுமென்று சொல்கிறார்கள். ரயத்துகளோ நிலத்துக்குடையவர்களுக்கு ஜப்தி செய்யும் அதிகாரம் இருப்பதால் அதிக ஹிம்சை இருக்கிறதென்று குறைகூறி நிலத்துக்குடையவர்களுடைய கொடுமையிலிருந்து நீக்குமாறு வேண்டுகிறார்.

தீர்வை விஷயத்தில் நாம் முன்கூறிய தீர்மானங்களைக்கொண்டு 6-வது அத்தியாயத்தை ஆராய்வோம். பயிரிடும் நிலங்களுக்கும் பெர்மனெண்ட் செட்டில்மெண்ட் காலத்தில் தீர்மானக் குத்தகையும் பெர்மனெண்ட் செட்டில்மெண்ட் காலத்துக்கு பிறகு கரம்பை நிலத்தை பயிரிடும்படி ஏற்படுத்தப்பட்ட குத்தகை, பெர்மனெண்ட் செட்டில்மெண்ட் காலத்துக்கு முன்னுள்ள குத்தகைக்கு உயர்வாக இருக்கக்கூடாதென்றும், குத்தகையோ, கிஸ்தியோ, விவசாயி, நிலத்துக்குடையவர்களுக்கு தரவேண்டியது பேஷ்கஷ்போன்று இருக்கவேண்டியது என்று தீர்மானித்தோம். நிரந்தரமாய் தீர்மானிக்கப்பட்ட எஸ்டேட்களுக்கு எக்காலத்துக்கும் "சன்னத்" தருவதுபோல் பயிருக்குக் கொண்டுவரும் நிலத்துக்கு பட்டா தர ஏற்பாடு செய்யவேண்டும். இதனால் 6-வது அத்தியாயத்தில் கண்டுள்ள குத்தகை பாக்கிக்கு ஜப்தி செய்து நிலத்தையோ, பொருளையோ விற்கவேண்டுவது அனுவசியம். முதலில் பட்டாவையும், முச்சிலிக்கையும் மாற்றிக்கொள்ளவேண்டியதென்று ஏற்பாடு செய்யப்பட்டது. 77-வது பிரிவின் பட்டாவும், முச்சிலிக்கையும் மாற்றிக்கொள்ளாவிட்டால் ஜப்தி செய்து பொருளையோ நிலத்தையோ விற்று, குத்தகை வசூல் செய்ய வழியில்லை. ஒரே வழியாக பட்டாவை கொடுத்துவிட்டால், பட்டாவையும் முச்சிலிக்கையும் வருஷா வருஷம் மாற்ற ஏற்பாடு செய்யவேண்டியதில்லை. சன்னதைப்போல் பட்டா நிரந்தரமானால் குத்தகை வசூல் செய்ய வேறு வழி தேடவேண்டும், அப்போது விவசாயி, விளைவு அதிகமாக செய்து இதுகாறுமுள்ள குத்தகை விஷயத்தில் நிலத்துக்குடையவர்கள் இன்னல்களிலிருந்து நீங்கி குத்தகையை தந்துவிடும்படி ஏற்பாடு எடுத்துக்கொள்வார்கள். எந்த விவசாயியும் 1802-ம் வருஷத்திய 25, 30 ரெகுலேஷனில் கண்டபடி, குத்தகையை முடிவாகத் தீர்மானித்த பிறகு பாக்கி வைத்துக்கொண்டு கஷ்டப்படமாட்டான். திட்டமான குடி உரிமையும், குத்தகையும் பெர்மனெண்ட் செட்டில்மெண்ட் காலத்தில் தீர்மானித்தும் துன்பங்கள் ஏற்பட்ட காரணங்களைப்பற்றி ஆலோசித்தோம். நிலத்துக்குடையவருக்கு சந்நத் தந்த போது விவசாயிக்கும் தரவேண்டிய பட்டாவும் நிர்மாணிக்கப்பட்டிருந்தால் கஷ்டங்கள் ஏற்பட்டிருக்காது. எவ்வளவு பேஷ்கஷ், எவ்விதம் கட்டவேண்டுமென சர்க்காருக்கும், ஜமீன்தாருக்கும் துன்பங்கள் ஏற்படவில்லை. நிலத்துக்குடையவர் தகராறு செய்தால் சர்க்கார் தக்க வழி மூலம் பேஷ்கஷ் வசூல் செய்ய ஏற்பாடு செய்துள்ளது. அதுபோல், விவசாயிகளிடமிருந்தும் குத்தகை வசூல் செய்ய ஏற்பாடு செய்யலாம். அதுமுன்பே செய்திருக்கவேண்டும். 1802-ம் வருஷ பட்டா ரெகுலேஷன் நெ. 30-ம் சட்டப்படி குத்தகை என்பது, விவசாயி நிலத்துக்குடையவருக்குத்தரும் குத்தகையல்ல. அது சர்க்காரால் தீர்மானிக்கப்பட்ட நிலத்தின் பூரா வரியின் ஒரு பாகமாகும். சாதாரணமாக பாதி மாசூல் சர்க்காருக்கு தரவேண்டிய வரியாகும். அப்பாதியில், மூன்றில் 2 பங்கு சர்க்காருக்குத் தந்துவிட்டு மீதியை வசூலிப்பதற்காக ஜமீன்தார் எடுத்துக்கொள்வதாகும். அவ்விதம், வரி இருவிதமாய், ஒன்று சர்க்காருக்கும், மற்றொன்று வசூலிப்பவருக்குமாகும். அதனால் 2-ம் பங்கை வரியென்றும் விவசாயியை குத்தகைதாரென்றும் கூறுதலும் பிசகு. விவசாயி ஜமீன்தாருக்குத்தருவது வரியன்றி குத்தகையாகாது என்று தீர்மானங்களிருக்கின்றன. அது தவிர 1802-ம் வருஷம் 28-ம் ரெகுலேஷனிலும் காணலாம். அதில் நிலத்துக்குடையவரும், விவசாயியும் தம்கீழ் பயிரிடுபவர்களிடமிருந்து குத்தகை பாக்கிக்காக ஜப்தி செய்து வசூலிக்க எது இருக்கிறது. அந்த ரெகுலேஷனில் முதற் பிரிவில் கீழ்க்கண்டவாறு இருக்கிறது :—

> " தக்கபடி பொது வரி பாக்கியும், வசூலிக்கவேண்டி, கோர்ட்மூலமன்னியில், பாக்கிதாரர்களிடமிருந்து ஒழுங்காய் வசூலிக்கவும், அப்படிச் செய்வதில் கீழ்க் குத்தகைகாரர்களுக்கும் இன்னலின்றியிருக்க மேன்மை தங்கிய கவர்னரவர்கள் தம் மந்திரிகளுடன் கீழ்க்கண்ட நிபந்தனைகளை ஏற்படுத்தியிருக்கிறார்கள்.

இதனால் குத்தகையென்று கொள்ளாமல் சர்க்கார் பொது வரியென்றே கொண்டார்கள் என்று கூறுதல் மிகையாகாது.

ஜப்தி செய்ய அதிகாரமிருந்தால் நிலத்துக்குடையவர் ஏதேனும் செய்யக்கூடும். அம்மாதிரி அதிகாரம் 1802-ம் வருஷம் நெ. 28 ரெகுலேஷனில் தந்தவுடன் விவசாயிகள் கொடுமைகளைப்பற்றி மனுச்செய்தார்கள். சர்க்காரும் அதை உண்மையென்று அறிந்தார்கள். அது எவ்வித கொடுமைகள் அதன்படி நிலத்துக்குடையவர் அதிக ஹிம்சை செய்தால் விவசாயி அதைத் தீர்க்க கோர்ட்டுக்குப் போகவேண்டியிருந்தது. அதனால் 1802-ம் வருஷம் 28-வது ரெகுலேஷன் 37-வது பிரிவை மாற்றி 1822 ரெகுலேஷன்கள் 4, 5 ஏற்படுத்தி சர்க்கார் கலெக்டரையே விசாரிக்கும்படி செய்தார்கள். ஆனால் பூஸ்திதிகள் உள்ள நிலத்தைப் பற்றிய சட்டத்தில் ஜப்தி செய்து விற்பனை செய்யும் அதிகாரம் நிலத்துக்குடையவர்களுக்கு இருப்பதால் விவசாயிகள் புகார் செய்கிறார்கள். நிலத்துக்குடையவர்களோ, தங்களுக்குள்ள அதிகாரம் போதாதென என்றும் சர்க்காருக்குள்ள அதிகாரம் வேண்டுமென்றும் கேட்கிறார்கள். குத்தகை பேஷ்கஷ்போல இருந்தால் நிலத்துக்குடையவர்கள் சர்க்கார்போன்ற நிலையில் இருக்கவேண்டுமென்பது எங்கள் எண்ணம். கிஸ்த் பொது வரியானால் நிலத்துக்குடையவர் சர்க்கார்போல் ஆவர். 1802-ம் வருஷத்து ரெகுலேஷன் 25, 30-ல் குத்தகை நிரந்தரமாயும் சாதாரணமாயும் இருப்பதாக ஏற்படுவதால் இந்த 6-வது அத்தியாயத்தை பூராவும் மாற்றவேண்டும். பூஸ்திதிகளைப்பற்றிய நிலச்சட்டத்தில் நிலத்துக்குடையவருக்கு மாசூலிலும், நிலத்திலும், போதுமானபாத்தியதை இருக்கிறது.

விவசாயி நிலத்துக்குடையவருக்குக் கொடுக்கும் குத்தகை பொதுவரியானதால் சர்க்கார் வசூலிப்பது போலவே இருக்கலாம். ரெவின்யு அதிகாரிகள்மூலம் சர்க்கார் ரயத்துகளிடமிருந்து வசூலிப்பதுபோல் இருக்கலாம். ஸிவில் கோர்ட் மூலம் விவசாயிகளை சிறையில் வைக்கக்கூடாது. மாசூல் பேஷ்கஷுக்காகிலும் நிலத்துக்குடையவர்கள் ஸிஸ்திக்காகிலும் போனாலும் அது முதலில் ஸிஸ்திக்கே உடையதாகும். அதனால் 6-வது அத்தியாயத்திலுள்ள நிபந்தனைகளையெல்லாம் மாற்றி குத்தகையை வசூலிக்க நிபந்தனைகளை ஏற்படுத்தவேண்டும்.''

(3) 8-ம் அத்தியாயம்—நீர்பாய்ச்சல்—மராமத்து.

4, 8-ஆம் கேள்விகள், நீர்ப்பாசனம், நீர்ப்பாசன ஆதாரங்கள் மராமத்துகள் முதலியனவாகும். (4) (அ) விவசாயிக்கு நீர்ப்பாசனம் நிலத்தோடு சேர்ந்த உரிமையா அல்லது தங்களுக்கும், நிலத்துக்குடையவர்களுக்கும் உள்ள ஒரு பொறுப்பா ?

(ஆ) நிலத்துக்குடையவருக்கு ஜலாதாரத்தில் ஒரு உயரிய அந்தஸ்துண்டா ? அப்படியானால் அது எம்மாதிரி ?

(8) (அ) கோர்ட்டார் அவர்களோ அல்லது ஜனங்களோ ஜலாதாரத்தையும் நீர்ப்பாசன வேலைகளையும் காப்பாற்ற எம்மாதிரியான ஏற்பாடுகள் செய்யவேண்டும் ?

(ஆ) நிலத்துக்குடையவர் நீர்ப்பாசன வசதிகளை கவனிக்காவிட்டால் மாகாண சர்க்காருக்கு அதை கவனிக்கவேண்டிய அதிகாரம் இருக்கலாமா ?

(இ) அப்படியானால், சர்க்கார் தாமே செய்யலாமா அல்லது கட்சியினர் வேண்டுகோளின்பிறகு செய்யலாமா ? 4-வது கேள்வியில் (அ) அம்சம் முக்கியமானது.

இது நிலத்திற்கு யார் சொந்தக்காரர் என்பதைப் பொறுத்தது. ஜமீன்தார் குத்தகை வசூலிப்பவர் என்றும், நிலத்தில் அவருக்கு உரிமை இல்லையென்றும் சொன்னோம். நிலத்தில் பொது உரிமையோடு காலாகாலமாய் சர்க்கார் அவர்களுக்குக்கீழ் ஜமீன்தார் ஜனங்களின் நன்மைக்காக பொது நீர்பாசன வசதிகளையும் ஆதாரங்களையும் காப்பாற்றவேண்டிய கடமை இருக்கிறது.

சர்க்கார் வரி வசூலிப்பதின் காரணம் அமைதியையும் ஒழுங்கையும் நிலை நாட்டவும் பொது மக்கள் உபயோகிப்பதற்கு வேலைகளுக்காகவும் என்றும் ரெவினியு போர்ட்டார் பகிரங்கமாகத் தெரிவித்திருக்கிறார்கள். அரசர்களால் காலாகாலமாய் நடத்திவந்த கடமையாகும். இதை இந்திய மன்னர்கள் ஜனங்களுக்குத் திருப்திகரமாக நடத்தி வந்தார்கள். மகமதிய மன்னர்களும் அவ்வாறே செய்தனர். நிலம் தானாகவே விவசாயிக்கு உணவு தராது. மழை பெய்து சர்க்காரும் நீர்பாசன வசதிகளை காப்பாற்றி புது வசதிகளை ஏற்படுத்தி விவசாயத்தை காப்பாற்றினால்தான் குடிகள் வரி கொடுப்பார்கள்.

ஜமீன்தார்கள் நீர்ப்பாசன வசதிகளை கவனிப்பதில்லையென்றும்,மராமத்துசெய்வதில்லையென்றும் நம்முன் விவசாயிகள் புகார் செய்துள்ளனர். சில ஜமீன்கள் நீர்ப்பாசனத்துக்கு உதவியற்றதாயிருக்கிறது. நீர்ப்பாசன வசதியில்லாவிட்டாலும் பாக்கியைமட்டும் வசூலிப்பார்கள். ஜமீன்தார்களே, விளைவு இருந்தாலும் இல்லாவிட்டாலும் வெள்ளத்தால் சேதமானாலும், வரியில் குறைவில்லாமல் பூராவும் வசூலிப்பதாக சொல்கிறார்கள். அப்படி ஏதாகிலும் வரி குறைத்தார்களேயானால் அது ஒரு தாராள சிந்தனையில்தான்.

இதனால் ஜமீன்தார்கள் நீர்ப்பாசன வசதிகள் செய்து அவைகளின் மராமத்தை கவனிக்கவேண்டுமா என்பதைத் தீர்மானிக்கவேண்டும். கார்வெட் நகர ஜமீன்தாருக்கும் மதராஸ் ரயில்வே கம்பெனிக்கும் நடந்த வழக்கில் ப்ரிவீ கவுன்ஸிலின் தீர்மானம் (1) I, A, 364 :—

"ஏரிகள் பழையன, இந்து மகமதிய அரசர்களால் தேசத்தின் நீர்பாசனத்திற்கு அங்கீகரிக்கப்பட்டது. ஈஸ்ட் இந்தியா கம்பெனியாரால் அங்கிகரிச்கப்பட்டது. சரித்திரகாலத்துக்கு முன்னிருந்தே இந்திய மக்களின் நன்மைக்கு அது அவசியமென ஏற்படுத்தியிருக்கிறது. அவைகளை காப்பாற்றும் வேலையும் புது வசதிகள் ஏற்படுத்தலும் இந்திய அரசாங்கத்தின் புதியவேலையென்றும், செட்டில்மெண்டுக்குப் பிறகு ஜமீன்தார்கள் அதைக் கவனிக்கவேண்டுமென்றும் ஏற்படுத்தியிருக்கிறது. ஜமீன்தார்களுக்கு அதை ஒழிக்க அதிகாரமில்லை. ஏனெனில் பொது மக்களின் நன்மை அதில்தானிருக்கிறது. அதனால் ஜமீன்தார்கள் தாங்கள் ஏற்றுகொண்ட கடமையால் அவைகளை காப்பாற்றவேண்டியதும், மாராமத்து செய்யவேண்டியதுமான அவசியமிருக்கிறது.''

ப்ரிவீ கவுன்ஸில் இவ்விஷயத்தில் எல்லா விசேஷங்களையும் கவனித்து இருக்கிறார்கள். ஏரிகள் நீர்ப்பாசன வசதிகள், நீர்ப்பாசன இலாகாவின் அங்கமாகி, அவைகளைக்காப்பாற்றுவதோடு புதிய ஏரிகள் உண்டுபண்ணுவதிலும் சர்க்காருக்கும், ஜமீன்தாருக்கும், கட்டாயப் பொறுப்பு உண்டென்று, உயர்ந்த கோர்ட்டாரால் சொல்லியிருக்கிறது. முதலில் இது அரசர்களாலும் பின்னால் அரசாங்கத்தாலும் நடத்தப்பட்டு வருகிறது. அரசாங்கத்தாரால் ஜமீன்தார்களுக்கு மேல்வார உரிமை தந்தபோதிலும், மேல்வார உரிமையோடு இந்தக் கடமையும் அவர்களுக்குத் தரப்பட்டது. இது ஜமீன்தாரி எல்லையிலுமன்றி, ரயத்துவாரி எல்லையிலும் உள்ளது. ரயத்துவாரி விஷயமாக 34, சென்னை, 352-ல் (செக்ரிடரி ஆப் ஸ்டேட்டுக்கும் முத்து வீரம்மாவுக்கும்), 24, சென்னை, 529, (அம்பலவாணனுக்கும், செக்ரிடரி ஆப் ஸ்டேட்டுக்கும்) தீர்மானிக்கப்பட்டுள்ளது. கோர்ட் மூலமாகவும், சட்டமூலமாகவும் இவ்விஷயங்கள் தீர்மானிக்கப்பட்டுள்ளன.

ரெண்ட் ரெக்கவரி ஆக்டில் இந்த நிபந்தனைகள் இல்லை. முதல் முதலாக பூஸ்திதிகளில் உள்ள நிலச்சட்டத்தில் 135, 142-ஆம் பிரிவுகளின் நீர்பாசன வசதி விஷயமாக சட்டங்கள் தோன்றியிருக்கின்றன. 1934-ம் வருஷத்து 8-ஆம் சட்டத்து 7, 8-ஆம் அத்தியாயத்தில் இதைப்பற்றிக் காணலாம். நம்முன் கிடைத்துள்ள அபிப்ராயங்களால் விவசாயிகளுக்கு இந்தச் சட்டத்தில் இப்பாதுகாப்பு இருக்கிறதா இல்லையா என்பதை கவனிப்போம். முதன்முதலாக ஜமீன்தார்களுக்கும் விவசாயிகளுக்கும் இதில் எவ்வித உரிமையும் காணோம். ஜமீன்தார்கள் மேலேயே பொறுப்பு இருக்கிறதென்று, பழைய நிபந்தனைகளை நிர்ணயித்திருப்பதாக எண்ணி இருக்கிறார்கள். இது சரியே.

138-ம் பிரிவு இவ்விஷயங்களைப்பற்றி விசாரணைசெய்வதாகும். முதல் பூஸ்திதிகளில் நில சட்டத்தின் 135-வது பிரிவைப்போல சில மாறுதல்கள் உடையது. 139-வது பிரிவு, மனுக்களின்பேரில் விசாரணை செய்வது. பழைய 136, 137, 139, 140-வது பிரிவுகள் இதில் சேர்க்கப்பட்டுள்ளன. 138-ஆம் பிரிவில் காணப்படும் தேசபந்தம் இனாமிலுள்ள நிபந்தனை புதிய 140-வது பிரிவு இருக்கிறது. 142-ஆம் பிரிவு சர்க்கார் நிலத்திற்கும் பூஸ்திதிகளில் உள்ள நிலத்திற்கும் உரிய நீர்ப்பாசன வேலைகளைப்பற்றியனதாகும்.

143-ஆம் பிரிவு ஒன்றுக்கு மேற்பட்ட எஸ்டேட்டுகளுக்காக 136-ஆம் பிரிவுக்காக 136 (b) (c) (d) விசாரணை பற்றி இருக்கிறது. 136 (a), (b) யும் பெரிய, சிறிய, நீர்ப்பாசன வேலைகளைப்பற்றியும் ஆயக்கட்டைப் பற்றியும் 137 (a) பிரிவு ஆயக்கட்டைத் தீர்மானிக்க 137 (c), (d) யும் நீர்ப்பாசன நிலத்தையும், அல்லது நீர்ப் பாசன தோட்டத்தையும் எவ்விதமாக வரி நிர்ணயிப்பபதென்பதாகும்.

144-வது பிரிவு ஸிவில் கோர்ட் பிரவேசிக்க அதிகாரமில்லாதது இவ்வளவு 8-ஆம் அத்தியாயத்தில் காணப் படுகிறது 7-ஆம் அத்தியாயத்தில் 135, 136 பிரிவுகள் உள்ள வரியைவிட அதிகம் வசூலிப்பதை தடுப் பதாகும். இந்த நிபந்தனை 1802-வது வருஷத்திய 30-வது ரெகுலேஷனும் 7, 8 பிரிவுகளின் அதிக வசூ லிப்பை ஒத்தது. 1802 வருஷத்திய 30-ஆம் ரெகுலேஷனில் அதிக வசூலிப்பைக் கண்டித்து கடுமையான நிபந்தனைகள் ஏற்படுத்தபட்டிருக்கின்றன. பூஸ்திதி உள்ள நிலச்சட்டத்தில் 135, 136-வதி பிரிவுகளில் 1802-வது 30-வது ரெகுலேஷனில் கண்டபடியாவது.

(VII) சொந்தக்காரர்களோ, குடித்தனகாரர்களோ எவ்விதமான புதுவரியும் விதிக்காமல் இருக்கவேண் டும் : விவசாயிடமிருந்து பட்டாவிலிருப்பதைவிடவோ கவர்மெண்டார் விதித்ததைவிடவோ எவ்வளவு அதிக மாக வசூலிக்கிறார்களோ அதைப்போல் மூன்றுமடங்கு அபராதம் விதிக்கப்படும்.

(XI) குத்தகையை பணமாகவோ, பொருளாகவோ, முச்சிலிக்காவில் கண்டதைவிட அதிகமாக வாங்கி னால் அது ஹிம்சை செய்து வசூலித்ததாகும். அதிக வசூலோடு இரண்டுபங்கு அபராதமும் செலவும் சேர்த்து திருப்பிக் கொடுக்கவேண்டும்.

குத்துகையை உயர்த்தும் 7-வது, 9-வது பிரிவுகள் இந்த சட்டத்தில் 1803-ம் ஆண்டு ரெண்ட் ரிகவரி மசோதா வில் சேர்த்திருப்பதுபோல் இருக்கவேண்டும். அந்த பிரிவுகளிலும் : இதர நிபந்தனைகளிலும் அதிக வசூலைப்பற்றி பூஸ்திதியில் உள்ள நிலச்சட்டத்தில் 30, 35, 40, 45, பிரிவில் இன்னும் இதர பிரிவு களுக்காக சேர்த்திருந்தால் ஜமீன்தார்களுக்கும் ரயத்துகளுக்கும் உள்ள தகராறுகள் 30 வருஷத்துக்கு முன்பே ஒழிந்திருக்கும். ஆனால் இது மறுமுறை சட்டம் செய்யும்போது நடக்கவில்லை. எவ்வித மான பாதுகாப்பும் காணவில்லை. 135-ஆம் பிரிவில் எந்த ரயத், அல்லது ஜமீன்தார் நீர்ப்பாசனத் தைப்பற்றி கவனிக்கவில்லை என்று கலெக்டருக்கு மனுத் தரலாமென்று இருக்கிறது. ரயத் ஆயக் கட்டில் $\frac{1}{4}$ பங்காவது குத்தகையாவது, நிலமாவது வைத்திருக்கவேண்டுமென்று இருக்கிறது. ஆனால் அப் பேர்ப்பட்டவர்கள் கலெக்டரின் உதவியில்லாமல் சாயக்கால் உள்ளவர்களாயிருப்பார்கள். ஏழைக் குடியானவ னுக்குத்தான் வசதி வேண்டும். அது இல்லாததினால் 138-வது பிரிவின் (c) அம்ஸம் சேர்க்கப்பட்டது இதில் பெரிய விவசாய வேலைக்கு ரூ. 200 டெபாஸிட்டும் சின்ன வேலைக்கு ரூ. 100 டெபாஸிட்டும் கட்டவேண்டும். இதுவும் சாதாரண விவசாயிக்குக் கஷ்டம். விவசாயிகள் கோர்ட்டுக்குபோய் பாழானார் கள். இதை லார்ட் கார்ணவாலீஸ் கவனித்தார். கேஸுகள் மாத்திரம் அதிகமாயிருந்தன தீர்ப்புகள் அதிக குறைவாக இருந்தன. அதனால் அவர் ஏழைக் குடியானவர்களுக்கு ஸ்டாம்பு செலவில்லாமல் ஒரு வழி செய்ய தீர்மானித்தார். எங்கள் நோக்கத்தில் பூஸ்திதிகளிலுள்ள நிலசட்டத்தில் 138-வது பிரிவின் (a), (b), (c) அம்ஸங்களை எடுத்துவிடவேண்டும், 138-வது பிரிவில் சேர்க்கப்பட்ட விளக்கம் பழைய சட்டத்தின் 135-வது பிரிவிலில்லை. அதில் சொல்லுவதாவது மராமத்து கால்வாய்களில் சேரும் துப்புவார்தலுக்கும் சின்ன மராமத்துக்கும், மராமத்து என்பது சேராது என்பதே. இவைகள் விவசாயிகளே செய்யவேண்டும் ஆனால் அவர்கள் அப்படிச் செய்யவில்லை.

1865-ம் ஆண்டு சட்டத்தாலும், 1908-ம் வருஷத்து சட்டத்தாலும். விவசாயிகள் பாதிக்காவிட்டால் தங்கள் கடமைகளை அவர்கள் மறந்திருக்கமாட்டார்கள். குடி மராமத்து சட்டமும் போய், அவர்கள் உதவி செய்வதும் நின்றுவிட்டது. தங்கள் கடனும் வரியின் சுமையாலும் தங்களுக்குள்ள அக்கரையை இழந்து விட்டார்கள். வழியும் சுருக்கமாகவும் உதவியும் சுலபமாகவும் இருக்கவேண்டும். ஜலவசதியும் நீர்ப்பாசன வசதியும் உடனே கவனிக்கவேண்டியவை மழைகாலத்தில் எதிர்பார்க்கப்பட்டால் நீர்த்தாரவசதி கள் இருக்கவேண்டும். விவசாயிகளுக்கு உதவி இல்லாத சட்டம் இருந்து உதவி என்ன ? 139-வது பிரிவை பார்ப்போம். விவசாயிகளின் மேல் குற்றமில்லாமல், நீர்ப்பாசன வசதிகளை கவனிக்கவில்லை என்று விசாரணை உத்தியோகஸ்தர்களுக்குத் தெரிந்தால், எதைச் செய்யவேண்டுமென்று செலவுடன் குறிப்பிடவேண்டும். நிலத் துக்குடையவர்களுக்கு இதைத் தெரிவிக்க வேண்டும். அவர் கவனிக்காவிட்டால் வரியைப் போல அதை வசூ லிக்கவேண்டும். பின்னர் அதிகாரிகள் மராமத்து வேலையைப் பார்க்கவேண்டும்.

இதுதான் சர்க்கார் விவசாயிகளுக்குச் செய்த வசதி. இதற்கு பதிலாக ஜமீன்தார் வசதிகளைச் செய் யத்தவறினால் சர்க்கார் அதைச் செய்து வரியைப் போல பாக்கியை வசூலித்தால் நலம். பழைய இங்கிலிஷ் அரசாங்கதிலிருந்ததைப் போல் எட்டணா ஸ்டாம்பில் குடிகளின் குறைகளை நிவர்த்திக்க சர்க்கார் முன்வர வேண்டும். ஏனென்றால் ரெவின்யு போர்டிலும், ஸிவில் கோர்ட்டைப் போல் சிலவு அதிகமாகிறது.

தேசபந்த இனாமிலும் இம்மாதிரி இருக்கவேண்டும். வேலை முடிவின் முன் குத்தகை குறைக்கவேண்டு மென்று 141-வது பிரிவில் சொல்லியபடி இருக்கவேண்டும். இதேபோல சர்க்கார் நிலத்திலும் சொந்த நிலத்திலும் உள்ள நீர்ப்பாசன விஷயங்களுக்கும் இருக்கவேண்டும். முதலில் ஜமீன்தார்களுக்கு நோட்டீஸ் தந்து வேலை ஆரம்பித்து சிலவை அவர்களிடமிருந்து வரிபோல் வசூலிக்க வேண்டும். 137 (c), (d) பிரிவு களில் நில வேறுபாடுகளைப்பற்றியும் நீர்ப்பாசன நிலம் நஞ்சை அல்லது புஞ்சை அதற்கு தக்க வரி அதன்படி நிலத்துக்குடையவர் அதிகவரி கேட்கவும் ரயத்குறைந்த குத்தகை கேட்கவும் ஏதுக்கள் இருக் கின்றன. இவைகளில் மாறுதல்கள் இருக்கக்கூடாது. கரம்பை பயிரிட்டால் செட்டில்மெண்ட்போது பயிரிடும் நிலங்களுக்கு விதிக்கப்பட்ட வரியை விட அதிகமாக விதிக்கக்கூடாது. விவசாயிகள் நீர்பாசன விஷய மனுக் களுக்கு ரூ. 200, ரூ. 100யும் டெபாஸிட் கட்டவேண்டிய அம்ஸம் போகவேண்டும்.

இதனால் 8-வது அத்தியாயத்தை விட்டு விட்டு விவசாயிக்கும், ஜமீன்தாருக்கும் குறைந்த சிலவில் வசதிகள் அளிக்க ஏற்பாடுகள் செய்யவேண்டும்.

நிலச்சுவான்தார் சங்கத்தினர் நீர்ப்பாசன விவகார காலங்களில் குத்தகையை குறைப்பதைநம்முன் தடுக் கிறார்கள். அவர்கள் இச்சட்டத்தின் 8-ம் அத்தியாயத்தில் தங்கள் கடமையைப்பற்றி விளக்கமாக இல்லை என்கிறார்கள். ஆனால் நீர்ப்பாசன வசதிகளைத் தாங்கள் தான் செய்யவேண்டுமென்றும், சிறிய வேலை களான துப்பு வாருதல் முதலியன விவசாயிகளே செய்யவேண்டுமென்கிறார்கள், அதற்குதக்க அதிகார மும் கேட்கிறார்கள். அதை எவரெவர் எதை செய்யவேணுமென முடிவு செய்தால் இருதரத்தாருக் கும் நலம். தன்வேலையைச் செய்யாமல் நஷ்டமடைய அவசியம் வராது. நீர்ப்பாசனத்தில் எவ்வளவுதான் பாய்ச்சலாம் என்பதிற் தங்களுக்குத்தான் அதிகாரம் உண்டு என, நிலத்துக்குடையவர்கள் சொல்லுகிறார்கள். அதைச் சட்டமூலம் நிர்ணயிக்குமாறு கேட்கிறார்கள். ஜமீன்தார் நிலங்களில்க்கூட ஜல சப்ளை விஷயத்தைத் தீர்மானிக்க சர்க்காருக்கே உரிமை இருக்கிறது. விவசாயிகளோ, நீர்ப்பாசன விஷயமும் ஜல சப்ளை விஷயமும் சர்க்கார் கையில் இருக்கவேண்டுமென்கிறார்கள். ஆற்றின் கரை விவசாயினிடம் இருந்தால்த் தானே ஜலத்

தைத் திருப்பிக்கொள்ள உரிமை உண்டு. கிராமன் ஆட்சி இருந்த பழய காலங்களில் ஜலம் வினியோகம் கிராமத்தார் கையில் இருந்தது. ரயத்வாரியான பிறகும் கிராமப் பஞ்சாயத்துகள் கவனித்து வந்தன. ஆங்கில அரசாங்கமும், கலெக்டர்களும் வந்த பின்னரும் கூட இவை கிராம பஞ்சாயத்திடமே இருந்தது. இப்பவும் முதலில் ஜல வினியோகவும், வரம்பு முதலிய தகராறுகள் கிராமப்பஞ்சாயத்தாலே யே தீரவேண்டுமென்ற 1803-ம் வருஷத்து 2-ம் கலக்டர் ரெகுலேஷன் அமுலில் இருக்கிறது. ஆனால் இப் போது உயிறற்ற கிராமப்பஞ்சாயத்துகள் தானிருக்கின்றன. இனிபுதிதாக கிராமப்பஞ்சாயத்துகள் ஏற்படுத்தி அவர்களிடம் இவ்வேலையை ஒப்பிவிக்கவேண்டும். அதுவரை சர்க்காரே கவனிக்கவேண்டும். ஜமீன் சங்கத்தார் நீர்ப்பாசன விஷயத்தில் எஸ்டேட் நிலச்சட்டத்தின் 139-ம் பிரிவில் உள்ள அதிகாரமே மாகாண சர்க்காருக்குப்போதுமென்றும் அதைத்திருத்தவேண்டியதில்லையென்றும் கூறுகிறார்கள் 8-ம் கேள்வி (c) படி அதிக அதிகாரம் சர்க்காருக்கு வேண்டாமென்கிறார்கள். ஆனால் சாக்ஷியங்களோ எதிராக இருக் கின்றன. 4-வது கேள்வியின் (a), (b) விஷயங்களைக்கவனிக்கையில் ஜமீன் சங்கத்தார் சொல்வதைக் கவனிப்போம். நிலத்தோடு சம்பந்தப்பட்ட உரிமையா நீர்ப்பாசன உரிமை அல்லது இருவருக்கு மிடையே உள்ள பொறுப்பா என்பது சுலபமாகத் தீர்மானிக்கமுடியாதென்கிறார்கள். ரயத்வாரி நிலங்களிலும் இது தீர்மானிக்கப்படவில்லை யென்கிறார்கள். அதன் சார்பாய் 39 சென்னை 793, 1 சென்னை 205, 28 சென்னை 72 முதலிய வழக்குகளைச் சொல்கிறார்கள். சர்க்கார் பார்வையிலுள்ள நிலத்தில் மட்டும் வழக்கப்படியுள்ள ஜலபாய்ச்சலை விட அவர்களுக்கு உரிமையுண்டென்றும் அதை திருத்துவதிலும் அவர்களுக்கு வேண்டிய உரிமை உண்டென்றும் சொல்லுகிறார்கள். அதனால் ஜமீன்தார் தரப்பிலுள்ள நிலங்களில் தங்களுக்கு சர்வதி காரம் உண்டென்கிறார்கள். ஆனால் அதை ஏற்க முடியாது. சர்காரிடமுள்ள குடிக்கும், ஜமீன்தாரிடமுள்ள குடிக்கும் வித்தியாசமுண்டு. ஜமீன்தார் நிலத்தில் பயரிடும் நிலங்களுக்கு வரி முடிவாக 1802-ம் வருஷம் தீர்மானிக்கப்பட்டது அதேபோல் பயிரிடாத நிலங்களுக்கும் பர்மெனண்ட் செட்டில்மெண்டு காலத்தில் ஏற்படுத்தப்பட்ட வரிக்கு உயராமல் தீர்மானிக்க அதிகாரம் தரப்பட்டிருக்கிறது. ஜமீன் சங்கத்தாரே கார்வெட் நகரம் ஜமீந்தார் வழக்கைக்குறிப்பிடுகிறார்கள். அதில் நீர்ப்பாசன வசதிகளைப்பற்றி விரிவாயிருக்கிறது. ஜமீந்தார் நிலங்களில் ஓடும் ஆறுகளிலும், ஓடைகளிலும், அவைகள் ரயத்துகள் நிலங்கள் பக்கம் போகும்போதும் அந்த ஆற்றின் ஓடையின் நீர்ப்பாய்ச்சல் விஷயத்தில் திட்டம் செய்ய தங்களுக்கு அதிகாரம் இருக்கிறதென்கிறார்கள். ஏனென்றால் சர்க்கார் நிலங்களில் அவ்வாறிருக்கிறதாம் அப்படிக்கின்றி ரயத்துகள் தங்கள் நிலத்தின் பக்கம் ஓடும் ஆறுகளிலும் ஓடைகளிலிருந்தும் நீர்பாய்ச்சிக்கொள் ள உரிமை யிருந்தாலும், ஜமீன்தார்கள் தங்களுக்கு நிலத்துக்கு ஏற்றவாறு வரிவிதிக்க அதிகாரம் இருப் பதாகச் சொல்கிறார்கள். எவ்வாறு ரயத்து சர்க்கார் நிலத்தைப்பயிரிட்டு வரி தருகிறானோ அவ்வாறே ரயத்தும் தண்ணீரை உபயோகித்து நீர்வரி தரவேண்டுமாம். இது ஏற்றுக்கொள்ள முடியாது, ஒரு விஷ யத்தை ஏற்கனவே முடிவாகத் தீர்மானித்திருக்கிறது. பெர்மெனண்ட் செட்டில்மெண்ட் காலத்தில் பயிர் ஏறிய நிலங்களுக்கும் பயிர் ஏறாத நிலங்களுக்கும் வரி விதிக்கும்போது நீராதாரம், நீர்பாய்ச்சல், பயிற் உற்பத்தியின் சக்தி முதலியன ஆலோசிக்கப்பட்டன. அதனால் விவசாயிடம் ஒரு உரிமை ஏற்பட்டு வரியும் நிர்ணயக்கப்பட்டதால் வேறு மாதிரி ஆலோசனைக்கு இடம் தராது.

I.L.R. 40 சென்னை, 864, ப்ரீவிகௌன்ஸிலில் சொல்வதை நிலச்சுவான்தார்கள் சொல்கிறார்கள். அதில் ஜமீன்தார் வஸந்தரா நதியும் நாலு ஓடைகளும் நீர்ப்பாசனத்திற்கு பிரயோசனப்பட்டு சர்க்கார்ருக்கு சேராமலும் அவர்களால் தோண்டபடாமலிருந்ததால் நீர்ப்பாசன வரி சர்க்கார் விதித்தது தவறு என்று ஜமீன்தார் சொல்கிறார். அதன் காரணங்கள் ஆவன :—

(1) வம்ஸத்தரா நதியின் ஜலம் சர்க்காருடைய பொருள் அல்ல.

(2) அப்படி இருந்தாலும் 1865-ம் வருஷம் 7-வது சட்டத்தின்படி சர்க்காருக்கு சொந்த மான ஆறு ஆகாது. தங்கள் மேல் விதிக்கப்பட்ட வரி பெரும்பாலும்,

(3) ஓடைகளிலிருந்து வந்ததென்றும் நதியிலிருந்து வந்ததன்று என்றும் அந்த சட்டத்தின் பொருள் ஆகும்.

(4) அந்த நதியிலிருந்து வரும் ஜலம் சர்க்காருடைய ஆற்றிலிருந்தோ ஊற்றிலிருந்தோ, ஓடையி லிருந்தோ, ஏரியிலிருந்தோ வரவில்லை.

இவைகளை சர்க்கார் மறுதளிக்கும் காரணம் :—

(1) வம்ஸத்தரா நதி சர்க்காருடையது. அதனுடைய ஜலம் நீர்ப்பாசனத்திக்கு உதவியது.

(2) அதில் உள்ள ஜலம் அணைக்கட்டு மூலம் சர்க்காரால் கட்டுப்பாட்டுடன் உதவப்பபட்டது.

(3) 1905 சென்னை 3-வது ஆக்டில் 2 பிரிவின் 1-வது உட்பிரிவில் சென்னை ராஜதானியிலுள்ள ஆறு கள், ஊற்றுகள் எல்லாம் ஓடும் ஜலத்துடன் சர்க்காருடைய தாகும்.

(4) ஆற்றில் ஓடும் ஜலம் சர்க்காருடையதே.

(5) ஜலம் சர்க்காருடைய ஆற்றிலிருந்து வருவதால் ஓடை சர்க்காருடையது அல்லாவிட்டாலும் ஜமீன்தாருக்கு அதைப்பயன்படுத்த உரிமை இருக்கிறது என்று சொல்ல முடியாது.

(6) ஓடைகள் கூட 1803-ம் வருஷம் முன்பு சர்க்காரலேயோ அல்லது குடிகளாலேயும் ஏற்படுத்தப்
பட்டன என்றும், சர்க்காருடையது என்றும் ஹூக்குளம், கோலகி, ஜாலமூர், என்னும் ஓடைகள்
ஜமீன்தார் நிலத்திற்குள் போகுமுன் ரயத்வாரி நிலங்களில் போவதாக அவைகளை சர்க்கார்
மராமத்து பார்கிறார்கள் என்றும் சர்க்காரால் செய்யப்பட்ட வேலைகளின் மூலம் நீர்பாய்ச்ச
படுகிறதென்றும் சொல்லப்படுகிறது. ஜமீன்தாருக்கும் சர்க்காருக்கும் இடையே இருந்த வழக்கு
இதுதான். விவசாயிகள் இதில் சம்பந்தப்பட வில்லை. அவர்கள் பொறுப்பையும் யாரும் இதில்
சொல்லவில்லை. இவ் வழக்கு விவசாயிகளைப் பந்தப்படுத்தாது.

தவிரவும் சர்க்காரோ ரயத்வாரி நிலங்களில் விவசாயிகளால் ஜமின்தாருக்கு நிலங்களை விற்கு முன்
வேலைப்பாடுகள் செய்திருப்பதால் சர்க்காரலே செய்யப்பட்டது என்று கொள்ளவேண்டும். அதனால்
விவசாயிக்கு, ஜல சப்ளை விஷயத்தில் ஆறுகளிலிருந்தும், ஓடைகளிலிருந்தும் எடுத்துக்கொள்ள உரிமைக்
யுண்டு. சென்னை இராஜதானியில் ஆங்கில அரசாங்கத்தாருக்கு முன் ஜமீன்தார்களுக்கும், நிலச்சுவான்
தார்களுக்கும் எவ்விதமான உரிமை இருந்தபோதிலும் பர்மமெனண்ட் செட்டில்மெண்ட் படி சர்க்
காரால் ஜமீந்தார்களுக்கும் அவர்கள் பரம்பரைக்கும் நிலத்தில் எக்காலத்திலும் சொந்த உரிமை நிய
மான, எப்போதும் மாற்றப்படாத ஒரு வரி விகிதம் என்பதாம். 1802-ம் வருஷத்திய சென்னை ரெகுலேஷன்
1-ம் பிரிவு.

இதனால் ஜமீன்தாருக்கு சர்க்கார் நிலத்தில் மேல்வாரம் உரிமை மட்டுதான் உண்டு. விவசாயிக்கோ பூமிக்கு உரிமையும் ஆறுகளின் மூலமாகவும் ஓடைகளின் மூலமாகவும் நீர்ப்பாசன உரிமையும் உண்டு. பர்மெனண்ட் செட்டில்மெண்ட் மாமூல் நஞ்சை நிலம் தவிர மற்ற நிலங்களில் நீர்ப்பாசன வரிபோட ஒரு அதிகாரம் இருந்தது. ப்ரீவிகௌன்ஸிலில் சொல்வதாவது பெர்மெனண்ட் செட்டில்மெண்ட்படி ஜமீன்தார்களுக்குத் தரப்பட்ட நிலங்களில் எக்காரணத்தை முன்னிட்டும் ஜம்மாவை உயர்த்துவதில்லை என்று உறுதி செய்திருக்கிறார்கள். ஜம்மா என்பது சர்க்காருக்கு பயிரிடும் நிலத்துக்காக தரும் வரி ஆகும். ஆதலின், ஜமீன்தார் நிலத்திலடைந்தது, மேல்வார உரிமையாகும் பேஷ்கஷ் மாத்திரமே, அதாவது பேஷ்கஷ் உள்பட்ட நிலத்தீர்வையாகும். அதனால் வரி உயர்வு இல்லை என்று ஜமீன்தாருக்கு மட்டும் அல்ல, விவசாயிகளுக்கும் உள்ள இதேதான் ஜமீன்தார்களுக்கும் கொடுக்கப்பட்டது. எப்படி ஜமீன்தார்களுக்கு நீர்பாசனவரி உயர்த்தப்படாதோ அப்படியே விவசாயிக்கும் ஜமீன்தார் உயர்த்தகூடாது அப்படி இருக்கையில் ப்ரீவிகௌன்ஸிலில் சொல்லப்பட்டது நிலத்தோடு நீர்பாசன உரிமை இருப்பதால் வரியை உயர்த்துவதில்லை என்பதே. 1865-ம் வருஷத்து சென்னை 7-வது சட்டத்தின் 1-வது பிரிவின் ஜமீன்தாருக்கு தனி வரி இல்லாமல் விவசாயம் செய்ய சன்னதில் ஏற்பட்டிருந்தால் உரிமை தரப்பட்டிருக்கிறது. 897-ம் பக்கத்தில் நீதிபதிகள் சாசுவத செட்டில்மெண்ட்படி ஜமீன்தார் செஸ் ஆக்ட்டில் சொல்லிய எந்த மூலத்திலாவது நீர்பாய்ச்சிக்கொள்ள நிலத்தோடு உரிமை இருக்கிறதென்றும் அதற்கு வரி உயர்த்தக்கூடாது என்றும் சொல்கிறார்கள்.

ஊர்லம் சன்னதில் நீர்ப்பாசனத்தைப்பற்றி ஒன்றும் காணோம். அதில் ஓடையைப்பற்றியாவது ஏரி குளம் பற்றியாவது ஒன்றும் காணப்படவில்லை. 1905 பக்கத்தில் நீதிபதிகள் சொல்வதாவது :—

> ஒவ்வொரு ஜமீன்தாரும் விவசாயிகளுக்கு இரண்டாம்போகத்தை விருத்தி செய்ய ஜல வசதி செய்து கொள்ளலாம் என அனுமதிக்க கூடுமா ? ஊர்லம் ஜமின்தாரிலும் குடிகளுக்கு இவ்வித வசதி அளிக்க ஏற்பாடு இருக்கிறது என்று கொள்ளபடும் என்று ஜமீன்தார் நிலங்களை ஏலமிட்டபோது சொல்லப்பட்டது. இந்தியாவின் இந்த பாகத்திலே விவசாயத்திற்கு நீர் தேவை இதனால் ஏற்படுவதாவது குடிகளுடைய நன்மைக்கு வேண்டிய நீரை செலவு செய்து கொள்ளலாம் என்பதே கீழே உள்ள இரண்டு கோர்ட்டும் சன்னது மூலம் வந்த நீர்ப்பாசன உரிமை பர்மெனண்ட் செட்டில்மெண்ட்படி மாமூலமாக கீழ்க்கண்டபடி நிறுவப்பட்டதாகும் :—
>
> (1) ஜமீன்தார் கட்டவேண்டிய ஜம்மா அந்த காலத்தில் உண்டான விளைவைப் பொறுத்தது.
>
> (2) நிலத்தின் விளைவிலிருந்து வருஷாந்தர வரவு ஏற்படுத்தி, அதின் ஒருபகுதியே ஜம்மாவாகும்.
>
> (3) இந்த ஜம்மாவில் வருஷத்திற்கு உபயோகிக்கும் தண்ணீருக்காகவும் வரி தீர்மானிக்கப்படுகிறது.
>
> (4) இதர விஷயங்களுக்கு உபயோகிக்கும் ஜலத்திற்கு வரி விதிக்கபடவில்லை. அதனால் அது சன்னதில் கண்டிருக்காது போயிருக்காது. ப்ரீவி கௌன்ஸில் நீதிபதிகள் மேற்கூறியவை இரண்டு காரணங்களால் நம்பதக்கது அல்ல என்கிறார்கள்.
>
> (1) ஒவ்வொரு ஜமீன்தாருக்கு ஜம்மா அதிகமானது.
>
> (2) ஜம்மாவில் சேர்க்கபடாதது விற்கப்பட்டது எனக்கூடாது.

அப்படியானல் ஜமீன்தாருக்குக் கொடுத்த உரிமையில் கரம்பு, கட்டிட மனைகள், மலைகள் குளங்கள், நீர்ப்பாசன கால்வாய்கள் முதலியன விலக்கப்படும். ராஜா ரஞ்சிட்சிங் பகதூருக்கும் காளி தாஸ் தேரிக்கும் நடந்த கேஸில் 1917 LRIA 44 9-எ 117 ஜம்மா நிர்மானித்தது எந்த நிலத்திற்காகவோ, அந்த நிலத்திற்கு ஜம்மாவிற்காக, எதை பாத்தியபடுத்துமோ அவைகள் எல்லாம்உரியன. இதனால் அப்போது வந்த விளைவு மாத்திரமன்றி பின்னும் விருத்தியால் அடையகூடிய விவசாயத்திற்கும் சேர்ந்தே ஜம்மா விதிக்கப்பட்டது. சர்க்கார் தப்பாக வரி வசூலித்தால், அதைத் திருப்பிவாங்க வழி உண்டு. அதனால் விவசாயிகளுக்கு இரண்டு போகத்திலும் வரி உயர்தப்படாமல் நீர்பாய்ச்சிக்கொள்ள உரிமையுண்டு. அப்படி இதுகாறும் ஜமீன்தார்கள் வசூலித்திருந்தாலும் இனி செய்யக்கூடாது. இதனால் மேற்கூறியது விவசாயிகளுக்கு, நிலத்திற்கும், நீர்பாசனத்திற்கும், உள்ள உரிமையைக் காட்ட ஒரு பெரிய சான்றாகும்.

(4) 2-ம் அத்தியாயம்—ரயத்து நில்ங்கள், காட்டு உரிமைகள், புறம்போக்கு முதலியன.

ஆறும் தரப்பில் 7-வது கேள்வி காட்டியுள்ள உரிமைகளை பற்றியதாகும்.

> 7 (a) விவசாயத்திற்காக மாடு மேய்க்கவும், தழை கழிக்கவும், உழவு சாமான் செய்ய மரம் வெட்டிக்கொள்ளவும், உள்ளூரிலுள்ள இயற்கை வசதிகளை எவ்வாறு உபயோகித்துக்கொள்ளலாம் ?
>
> (b) விவசாயிகளுக்கு, விவசாயத்திற்க்காகவும், குடும்பத்திற்காகவும்,இனமாக அப்படி உபயோகித்துக் கொள்ள உரிமையுண்டா ? பொதுவழிகளிலும் சமுதாய நிலங்களிலும் மலைகளிலும் காட்டுப் புறம்போக்கிலும் நிலத்துக்குடையவருக்கும் விவசாயிக்கு எம்மாதிரியான உரிமைகள் உள ?

நிலம் யாருக்குடையதோ அதைப்பொறுத்தது பதில். ஜமீன்தாரிடமிருந்து விவசாயி நிலத்தில் உரிமை பெற்றிருந்தால் ஜமீன்தார் ஏதேனும் செய்யலாம். விவசாயிக்கு நிலத்தில் உரிமையிருந்தால் தங்கள் முன்னோர்கள் அனுபவித்ததைப்போல் பூராவையும் அனுபவிக்க பாத்தியம் உண்டு. நிலத்தின் உரிமை விவசாயிக்கு என்று பெருவாரியாக விளக்கப்பட்டது. பர்மெனண்ட் செட்டில்மெண்ட் ரெகுலேஷனும் விவசாயிக்கு பயிரிடப்பட்ட நிலத்திலும், பயிரிடப்படாத நிலத்திலும் உரிமை உண்டென ஏற்றுக்கொள்ளுகிறது. காடுகள் பயிரிடாத நிலத்தில் அடங்கும், எப்படி பொது கிராமத்தாரிடத்தில் இவைகளை அனுபவிக்க பாதியதை உண்டோ, அப்படியே கிராமக் கட்டுபாடு போனபின் ஒவ்வொருவருக்கும் அந்த பாத்தியம் வந்தது.

எப்படி சர்க்காரால் ரயத்வாரி நிலங்களுக்கு, காடுகளிலும் உள்ள நன்மைகளை விவசாயிகள் அனுபவிக்கலாம் எனப்பட்டதோ, அதே மாதிரி ஜமீன்தார்களும் விவசாயிகளுக்கு அவ்வித உரிமை அளிக்கவேண்டும். 1802-ம் வருஷ சென்னை 5-வது மசோதா சென்னை ராஜதானி பூராவும் காட்டில் உள்ள உரிமையை அனுபவிக்க ஏற்பட்டதாகும். ஜமீன்தார் நிலங்களிலும், இவ்விஷயங்களிலும் விவசாயிகளுக்கு உரிமை கொடுக்கவேண்டும் என்பது இச்சட்டத்தின் நோக்கம். இந்த சட்டத்தின் 2-வது அத்தியாயம் காட்டைக் காப்பாற்று தலைப்பற்றி ரிசர்வ் காடுகளை உண்டுபண்ண சட்டம் செய்துக்கொண்டு நிலம் வாங்கி, காடுகள் செய்ய வரி உண்டு பண்ணியிருக்கிறது. சர்க்காருடைய நிலம் கரம்பு நிலமாயிருந்தால் அதைக் காடாய்திருத்த ஒரு உத்தரவு தேவையில்லை ஆனல் எல்லா நிலங்களும் ரயத்துகளின் அனுபோகத்தில் ரயத்து வாரி சட்டத்திலிருந்தது. விவசாயிகள் ஸ்திதியைக்கட்டிவிட்டு நிலத்தில் சொந்த உரிமையை வைத்திருந்தார்கள். ஜமீன்தார்களுக்கும் பூஸ்திதிகளைத் தரும்போது விவசாயிகளுக்கு இந்த உரிமை இருந்தது. ஜமீன்தார்கள் வரிவசூலிக்கும் ஆள்களே. சர்க்கார் காட்டுவிஷயமாய் எந்த சட்டம் செய்தாலும் ஜமீன்தார் குடிகளுக்கும் பொருந்தும். சர்க்கார்

ரயத்களிடமிருக்கும் நிலங்களை காடாக்கவேண்டும்போது ஒவ்வொருவருக்கும் தங்களுக்குள்ள ஆக்ஷேபனைகள் 4, 6-வது செக்ஷன்படி தெரிவிக்கவேண்டும். 8, 9, 10 பிரிவின்படி காட்டு இலாக்கா ஆபீஸர் அதை விசாரித்துத் தீர்மானம் சொல்வார். குடிவாரத்தைப்பற்றியும் சொந்தத்தைப் பற்றியும் இருவிதமாக 10-வது பிரிவு சொல்கிறது. நிலத்திலுள்ள பொது உரிமையை முதற் பாகத்தில் காணலாம். அனுபோக பாத்தியங்கள் ஆவன—

(1) பொதுப்பாதைகள்.

(2) நீர்ப்பாசன வாய்க்கால்.

(3) மேய்ச்சல்.

(4) காட்டு மாசூலில் உரிமை.

11-வது பிரிவில் அனுபோகபாத்தியத்தைப்பற்றி பேசுகிறது. 10-வது பிரிவு நிலத்திலுள்ள பொது உரிமையைப்பற்றிச் சொல்கிறது. 10-வது பிரிவில் 1-ம் உட்பிரிவில் சொல்வதாவது அப்படி ஆக்ஷேபனை பூராகவோ, பகுதியாகவோ, காட்டு அதிகாரிகள் ஒத்துக்கொண்டால் :—

(1) ஆக்ஷேபனைதாருடன் நிலத்தை விட்டுவிட ஒரு சமாதானத்திற்கு வருவது.

(2) அல்லது நிலத்தை விட்டுவிடுவது.

(3) 1870-ம் ஆண்டு நிலம்பற்றும் சட்டப்படி நிலத்தைப்பற்றுவது, இதனால் விவசாயிகளுக்கு காட்டிலுள்ள உரிமையை தெரிவிக்கிறது. இதேபோல் 11-வது பிரிவிலுள்ள விஷயங்களுக்கும் விசாரித்து தீர்மானிக்கப்படும். காட்டு மாசூல் என்பது கீழ்க்கண்டவை.

காட்டிலிருந்து கொண்டுவரப்பட்ட கீழ்க்கண்டவை உட்பட்டனவையாகும் :—

"உலோகங்கள், எண்ணெய், மரம், செடிகள், புல், பூண்டு, கொடி, பாசை, நார், இலை, பூ, பழம், விதை, கிழங்கு, வாசனைத் திரவியங்கள், சாறு, பட்டை, கோந்து, மர எண்ணெய், வார்நிஷ், கரி, தேன், தோல், தந்தம், எலும்பு, கொம்புகள், இவைகள் ஒவ்வொன்றிலும் ரயத்தின் உரிமை சர்க்காரால் அங்கீகரிக்கப்பட்டது."

12-ம் பிரிவில் மேய்ச்சலும், காட்டு மாசூலில் உரிமையும் எப்படி அனுபவிக்கவேண்டுமென்பது தெரிகிறது. ஒரு முறை விவசாயிக்கு அதில் பூராகவோ, ஒரு பகுதி உரிமை உண்டென்று ஏற்பட்டால், காட்டை மாற்றுதலில் அவர்கள் உரிமைக்கு வேண்டியவற்றை விட்டுவிடவேண்டும். அவர்கள் எவ்வளவு தூரம் அனுபவிக்கக்கூடுமென்பதையும் உத்தரவு செய்துவிடவேண்டும். அந்த உத்தரவில் எத்தனை கால் நடைகள் எந்த இடத்தில் மேயலாமென்றும் குறிக்கவேண்டும்.

எந்தக் காலத்தில், எந்த இடத்தில், எம்மாதிரி மரம் முதலியன எடுத்துக்கொள்ளலாமென்பது.

எப்படி எப்படி தங்கள் பாத்தியதைகளை அனுபவிக்கலாமென்று விபரமாக உட்பிரிவு (b)யில் சொல்லப்பட்டிருக்கிறது.

அவ்வித அனுபோகத்தைக் குறைக்க எத்தனித்தால், சர்க்கார் அதற்கு கைமாறு தந்து மாற்றிக்கொண்டோ அல்லது வேறுவழியில் இதர இடங்களில் அவைகளை அனுபவிக்க ஏற்பாடோ செய்துக்கொள்ளலாம். ஏதேனும் தனிக்காரணங்களால் ரிசர்வ் காடுகளில் நீர் வழியையும், வழியையும் நிறுத்த சர்க்கார் அவசியமிருந்தால் அதற்குத் தக்கபடி வேறுவழிசெய்து மாற்றிக்கொள்ள அதிகாரம் 20 பிரிவால் ஏற்பட்டிருக்கிறது.

12, 18 பிரிவுகளால் ஏற்பட்ட உரிமைகளைத் தவிர மற்றவிதமாய் துஷ்பிரயோகம் ஏதேனும் செய்தால் அதைக் கண்டிக்க ஏதுகள் உண்டாயிருக்கின்றன. 18-வது பிரிவில் சர்க்காருக்கும், விவசாயிக்கு, பொருப்பு மூலமாகவோ, எழுத்து மூலமாகவோ, தவிர, வேறு வழியில் கட்டாயமாக நிலத்தைப் பற்றிக்கொள்ளும் விஷயம்பற்றி சொல்லுகிறது.

தீர விசாரித்ததிலிருந்து, விவசாயிக்கு கேள்வியிலிருக்கும் (a) (c) பிரிவிலுள்ள விவசாய காரணத்திற்காவது, குடும்பக் காரணத்திற்காவது, பூரண உரிமை காட்டுப்பொருளை அனுபவிக்க இருக்கிறதென்று தெரிகிறது. ரயட்வாரி நிலத்தில் அவ்வித உரிமை இருப்பதால் ஜமீன்தாரின் கீழ் குடிகளுக்கும் அவ்வுரிமையுண்டு. 2-ம் அத்தியாயத்தில் மேல்க்கண்ட விஷயங்கள் ரயட் வாரி நிலங்களைப்பற்றியதாகும். 4-ம் அத்தியாயம், சர்க்காருக்கு அக்கு இல்லாமலோ, கொஞ்சம் உள்ளதோவான காட்டையும் நிலத்தையும் பற்றிய அதிகாரங்களைப்பற்றியது. ஜமீன்தார் எல்லைக்குட்பட்ட காடுகளும் அதில் வருகின்றன. சொந்தக்காரரின் வேண்டுகோளுக்கிணங்கி சர்க்கார், காடுகளைக் காப்பாற்ற ஏற்பாடு செய்ய இதில் அம்சங்கள் காணப்படுகின்றன. யார் சொந்தக்காரர் என்பது கேள்வி. 32-வது பிரிவுபடி ஜமீன்தார் தன்னது என்கிறார். விவசாயோ தன்னுடையதுதான் எனவாதிக்கிறார்.

நிலத்தின் சொந்தத்தைப்பற்றித் தீர்த்த பிறகு காடுகளையும் அதன் சொந்தக்காரர்களையும்பற்றித் தீர்க்கவேண்டும். பயிரிடாத நிலங்களின் சொந்தத்தைப்பற்றி, முடிவு செய்தபின் அதே தன் காடுகளுக்கு உரிமை என்பதாகும். சென்னை காட்டுச் சட்டத்தின் 32-ம் பிரிவில் ஜமீன்தாரைப்பற்றி, காட்டின் உரிமையில் ஒன்றும் காணோம். 1802-ஆம் வருஷத்திய ரெவென்யூ ரெகவரி சட்டம் எஸ்டேட் லாண்ட் ஆக்ட் பிரகாரம் சர்க்காரின் கொள்கை அதுவாகும். கிராமத்தார்களோ அல்லது ஜமீன்தாரின் ஒரு கிராமவாசியோ, சர்க்காரை பூராக் காட்டையும் தங்கள் பார்வையில் வைத்துக்கொள்ளவேண்டுமென மனுசெய்யலாம். அதன்படி 32-வது பிரிவின் கீழ் சர்க்காரும் சட்டத்தை அக்காட்டிற்கு அமுலில் செலுத்தலாம். அந்த வித விளம்பரத்தையும் மாற்றலாம்.

சென்னை காட்டுச் சட்டத்தின் 2, 4 அத்தியாயங்களைக்கண்டால், 2-ம் அத்தியாயத்தின் 10–14 பிரிவுகளும், 4-ம் அத்தியாயத்தின் 32-ம் பிரிவும், மற்ற பிரிவுகளும் ரயத்வாரி ஜமீன்தாரி நிலங்களுக்கும் பிரயோகப்படும் என்பதாகிறது.

26-ம் பிரிவில் விதி இயற்ற உத்தரவு இருக்கிறது. அதன்படி, சென்னை பாரஸ்ட் மான்யூல் என ரூலும் செய்திருக்கிறது.

ஒதுக்கப்பாடாத நிலத்தில் விவசாயிக்கு எல்லாவித இயற்கை பாத்தியதைகளும் 7-வது விதியில் அங்கீகரிக்கப்பட்டிருக்கிறது. அதில் இருப்பது கீழ்க்கண்டவாறு.

ஒதுக்கப்படாத நிலங்களில் எந்த கிராமத்திலும் (தென்கன்னடம் ஜில்லாவில் குமகி நிலம் தவிர) குடும்ப விஷயத்திற்கும், பயிரிடுவதற்கும், நிலங்களைச் சேர்ந்த கிராமங்களிலுள்ள குடிகளுக்கும், அடுத்தாற்போலுள்ள கிராமவாசிகளுக்கும், மேய்ச்சலுக்கும், புல் வெட்டவும், விறகு எடுக்கவும், தழை கழிக்கவும், முள் வெட்டவும், ஒதுக்கப்பாடாத மரங்களை வீழ்த்தவும், அதிகாரம் தரப்பட்டிருக்கிறது. கிராமாதிகாரிகள்தான் இந்த விஷயங்களை யாரும் துஷ்பிரயோகம் செய்யாமல் பார்க்கவேண்டும்.

ஏதாகிலும் தகராறுகள் இருந்தால் யார் அண்டை கிராமத்தாரென்று கலெக்டெர் தீர்மானிக்கவேண்டும்.

13-ம் விதி.—ஒதுக்கப்படாத நிலத்தில் இனமாக விவசாயிகள் விவசாயத்திற்காகவும், குடும்ப உபயோகத்திற்காகவும் கல்வெட்டி எடுக்கலாம். விற்பனைக்காக எடுக்கக்கூடாது.

"பாரஸ்ட் மான்யூலில்" சில பூஸ்திதிகள் 5-ம் நெ. விதிக்கு கட்டுப்பட்டிருப்பதைக் குறிக்கிறது. அது 26-ம் பிரிவின் 7 விதிக்கு சரியானதாகும். அது கீழ்க்கண்ட எஸ்டேட்களுக்கு பொருந்தும் :—

விஜயநகரம் எஸ்டேட்.—இதற்கு 10-ம் நெ. விதி அமுல் அதாவது : உள்விதி (2)-க்குட்பட்டு மலைப் பிரதேசங்களிலுள்ளவர்களும் அவர்களின் பரம்பரைகளும் இனமாக லைசென்ஸில்லாமல் பொது விவசாயத்திற்காகவும் குடும்ப உபயோகத்திற்கும் மரங்களை வெட்டிக்கொள்ளலாம்.

10 (1) எது விலக்கப்பட்டதென்றிருக்கிறதோ அந்த மரங்களை வீழ்த்தக்கூடாது. இதுவரையில் எம்மாதிரி அனுபவித்தார்களோ அப்படியே அனுபவிக்கவேண்டுமன்றி அதில இந்த விதி பிரவேசிக்கவில்லை.

(2) கோவ்டு பொது விவசாயம் கீழ்க்கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டது.

(i) எந்தக் குடும்பமும் 10 ஏக்கராவுக்கு மேல் பயிரிடக்கூடாது.

(ii) ஒதுக்கப்பட்ட நிலத்திலிருந்து 5 சங்கிலி தூரத்திலிருக்கும் எந்த நிலத்தையும் பயிரிடக்கூடாது.

(iii) 2 சங்கிலி தூரத்திலிருக்கும் நிலத்தில் ஆரஞ்சு வேறு பழ மரங்கள், அல்லது மா, பலா முதலிய மரங்கள் தவிர, வேறு காரணங்களுக்கு சாகுபடி செய்யக்கூடாது.

(iv) புளி, பனை, மைராபாலம், குரி மரம், சீக்காய் மரம், மாமரம், இவைகளை கொளுத்தக்கூடாது.

(2) எழுமலை எஸ்டேட் 361-ம் பக்கம். (ஆங்கில அறிக்கையில்)

(3) ஆரணி எஸ்டேட் 363-ம் பக்கம்.

(4) சிவகங்கை எஸ்டேட் 367-ம் பக்கம்.

(5) சத்திரம் எஸ்டேட் 371-ம் பக்கம்.

(6) கங்குந்தி அல்லது தீர்மஜியம்மா எஸ்டேட் 367-ம் பக்கம்.

விலக்கப்பட்டவைகள் தவிர குறிப்பிட்ட கட்டணத்திற்கு மேய்ச்சலுக்கும், புல் எடுக்கவும் மரம் வெட்டவும்தழை கழிக்கவும் விடப்படும். ஆடு தவிர மற்றவைகளுக்கு மேய்ச்சல் இனம். கிராமாதிகாரிகள் இதற்கு உத்தரவாதம்.

(7) உய்யூர் எஸ்டேட் 378-ம் பக்கம்.

(8) பர்லாகிமிடி எஸ்டேட் 381-ம் பக்கம்.

(9) ஜலந்திரா எஸ்டேட் 384-ம், 385-ம் பக்கம்.

(10) சொக்கம்பட்டி மிட்டா 388-ம் பக்கம்.

(11) சிவகங்கை எஸ்டேட் 391-ம் பக்கம்.

(12) பொப்பிலி எஸ்டேட் 397-ம் பக்கம்.

பொப்பிலி எஸ்டேட்டிற்கு 5-ம் விதியுடன் 11-ம் விதியும் உண்டு. 11-ம் விதி,

8-ம் விதிப்படி கலெக்டர் ஜில்லா கெஜட்டில் அடிக்கடி காட்டு மரங்களை வெட்டுவதற்கும், மேய்ச்சலுக்கும், பொருளை எடுப்பதற்கும் இவ்வளவு கட்டணம் என்று பிரசுரிப்பார். அது எவ்விடங்களுக்கு பொருந்தும் என்றும் அறிவிக்கப்படும் 8-ம் விதி கீழ்வருமாறு.

வீழ்த்தல், எடுத்தல் முதலியன ஒதுக்கப்பட்ட காடுகளிலும் 5-வது விதியில் உள்ளபடி ஒதுக்கப்படாத காடுகளிலும் :—

(a) டிபார்ட்மெண்ட் மூலமாயும், எஸ்டேட் உத்தியோகஸ்த்தர்களாலும், காட்டிலாக அதிகாரிகளாலும் அவர்கள் உத்தரவு பெற்றவர்களாலும்.

(b) ரசீது, காட்டு இலாகா அதிகாரிகளால் தரப்பட்டவர்களும்.

(c) காட்டு இலாக்கா அதிகாரிகளால் அல்லது அவர்கள் உத்தரவால் நியமிக்கப்பட்டவர்களால் குத்தகையோ, அல்லது ஒப்பந்தமோ பெற்றவர்களும் செய்யக்கூடும்.

(13) பெரிகை எஸ்டேட், 400–401.

5-ம் விதி.—ஒவ்வொரு கிராமத்திலும் சில ஒதுக்கப்படாத இடங்களில் இனமாக மேய்ச்சலுக்கும் விவசாயத்திற்கோ, குடும்ப உபயோகத்திற்கோ மரம் எடுத்தல், தழை கழித்தல், முள் எடுத்தல் அனுமதிக்கப்படும். மற்ற இடங்களில் வழக்கமான மேய்ச்சல் கட்டணத்திற்கு விடப்படும். ஏதாகிலும் யார் அடுத்த கிராமத்தார் என்பதில் தகராறு இருந்தால் கலெக்டர் தீர்மானிக்கவேண்டும். கிராமாதிகாரிகள் இவைகளை மீறுமல் பார்த்துக்கொள்ளவேண்டும்.

(14) தென் வல்லூரு எஸ்டேட் 407-ம் பக்கம்.

(15) சேத்தூர் கிராமம் 413-ம் பக்கம்.

(16) மருங்காபுரி எஸ்டேட் 417-ம் பக்கம்.

(17) பிஸ்ஸாம் கட்டாக் எஸ்டேட் 421-ம் பக்கம்.

(18) பார்வதிபுரம் எஸ்டேட் 425-ம் பக்கம்

(19) கங்குந்தி எஸ்டேட். இதற்கு 4-வது விதி செல்லும்.

அதாவது, ஒதுக்கப்படாத நிலங்களில் குறிப்பிட்ட கட்டணத்திற்கு மேய்ச்சல் முதலியன அனுமதிக்கப்படும்.

காடுகளை ஜமீன்தார் பேருக்கே உரிமை செய்திருந்தால் 1802-ம்ளூத்திய ரெகுலேஷனிலாவது, ரெண்ட் ரெகவரி ஆக்டிலாவது, எஸ்டேட் லாண்ட் ஆக்டிலாவது, அல்லது விவசாயிகளின் பாதுகாப்புக்கென செய்த காட்டுச் சட்டத்திலாவது அதைப்பற்றிக் கூறியிருக்கும். அதனுல் 7-ம் பிரிவில் சொல்லியுள்ள இயற்கையான சௌகர்யங்களெல்லாம் குடித்தனக்காருக்கே என நாங்கள் தீர்மானிக்கிறோம்.

சட்டம் இப்படியிருக்க, சர்க்காரும் அதேபோல் கொண்டாடிவர, விவசாயிகளை ஜமீன்தார்கள் கொடுமைக் குட்படுத்தி, தங்களுக்கு காடுகளில் யதேச்சாதிகாரமிருக்கிறதென்று சொல்லிக்கூவுகிருர்கள். நிலத்துக்குடையவர்கள் அதற்குப் பதில் கீழ்க்கண்டபடி சொல்லுகிருர்கள் :—

> சட்ட ரூபமாய் விவசாயிகளுக்கு மேய்ச்சல் முதலியவைகளுக்கு ஒன்றும் சொல்லவில்லையாம். அப்படி இருந்தாலும் அது பழக்கத்தில் தான். அதையும் எப்படி ருசுச் செய்யவேண்டுமோ அப்படிச் செய்யவில்லை. அவைகளை நன்ருய் விளக்கி, நியாயமாகவும் காலாகாலமாயுள்ளதென்றும் காட்ட வேண்டும். கிராமத்திற்கும் கிராமத்திற்கும், பூஸ்திதிக்கும் பூஸ்திதிக்கும் இதுமாறும். பல எஸ்டேட்டுகளில் சிரமமின்றி, சாதாரண ஒரு கட்டணத்திற்கு குடிகள் மேற்கண்ட மேய்ச்சல், இலை கழித்தல், மரம் வெட்டல் முதலியன செய்து வருகிருர்கள். இச்சந்தர்ப்பத்தில் வ்வசாய சாமான்கள் என்ருல் எதெது என தீர்மானிக்கப்படவேண்டும்.

இந்திய காட்டுச் சட்டத்தில் இவ்வித தடைகளுக்கு 10–14 பிரிவுகளிலும் 20, 32 பிரிவுகளிலும் விபரமாக பதில் கூறப்பட்டிருக்கிறது.

ஜமீன் சங்கத்தார் கூறியதுபோல பழக்கம் என்பது கிராமந்தோறும், நிலங்கள் தோறும் மாறுதலுடையது. விவசாயிகளுக்குள்ள உரிமைகள் அறியாமையாலோ ஜமீன்தார்களின் பலத்தாலோ, இழக்கப்பட்டிருந்தால் அதனுல் ஒரு வித்தியாசமுமில்லை. உழவு சாமான் எது என்ருல் ஆச்சர்யமானதே. அது பயிரிடாதவருக்கும் தெரிந்த விஷயம். ஜில்லாவிற்கு ஒரு மாதிரியிருக்கையில் அதை எவ்வாறு கூறுவது. ரயத்தின் உரிமை 1802-ம்ஸு முதல் விளக்கமாக விவரிக்கப்பட்டும், காலாகாலமானதென்றும், நியாயமானதென்றும் தெரிந்திருப்பதால் மேலும் விளக்கம் வேண்டியதில்லை.

7-ம் கேள்விகள் (b)-க்கு ஜமீன்தார் சங்கத்தாரின் பதிலாவது :—

> விவசாயத்திற்கும் குடும்பத்திற்கும் உபயோகிக்க 7 (2) கேள்வியிலுள்ள இயற்கை வசதிகளுக்கு உரிமையில்லை. நாம் விவசாயியின் இயற்கை உரிமையைப்பற்றி மிகவும் சொல்லிவிட்டோம். அடுத்தபடியாக 7, (c) கேள்வியிலுள்ள, ஜமீன்தார் நிலத்தில் பொது நடை வழி, குன்றுகள், காட்டு புறம்போக்கு, சமுதாய நிலங்களைப்பற்றி கவனிப்போம்.

பொது நடை வழிக்கும், சமுதாய நிலங்களுக்கும் காட்டு புறம்போக்குக்கும் சரியான விளக்கமில்லை. எஸ்டேட் லாண்ட் ஆக்டில் 3-வது பிரிவில் 16-வது கிளைப்பிரிவில் (a), (b), உட்பிரிவில் சற்ருன விளக்கம் இருக்கிறது. 3 பிரிவின் 10 உட்பிரிவு ரயத்து நிலத்தைமட்டும் விளக்கி சமுதாய நிலங்களையும், புறம்போக்குகளையும் விட்டுவிட்டது.

> ரயத்தின் நிலமென்பது, யாதொரு பூஸ்திதியில் சொந்தநிலமில்லாத பயிரிடத்தக்க வேறு நிலமென்றும், ஆனுல் அதிலே
>
> (a) ஏரியின் அடித்தரை நிலங்களும், அதேபோல் நீர்பாயும் கால்வாய்கள், அதிக நீரை வடிக்கும் கால்வாய்களும், ஜலம் கொண்டுவரும் வழிகளும் அருகே உள்ள நிலங்களும் அடங்கியிருக்கின்றன.
>
> (b) கிராமத்தாரின் பொதுவான உபயோகத்திற்கு யாதொரு பூஸ்திதியில் பிரத்தியேகமாய் விடப்பட்டிருக்கும் களத்துமேடுகளும், கால் நடைக்கொட்டில்களும், கிராம நத்தங்களும் இதர நிலங்களும் அடங்கமாட்டா. அவை 16-வது கிளைப்பிரிவின் (a), (b) உட்பிரிவில் சொல்லியுள்ள ரயத்து நிலத்தினின்றும் விலக்கப்பட்டும், பிரத்தியேகமான நிலமில்லாமலும் இருப்பது சமுதாய நிலம் அதாவது கிராமத்தாருக்கு காலகாலமாய் பொதுவாக இருப்பது பொது அல்லது வகுப்பு நிலம். ஏரியின் அடித்தரை நிலங்களும், நீர்ப்பாசனக் கால்வாய்களும், உபரி நீர்க்கால்வாய்களும் பொதுவானதால் அது பொது நிலமாகும். அது ஒரு ரயத்துக்காவது நிலத்துக்குடையாவருக்காவது, உரிமையானதல்ல, அதுபோல் கால்நடைக்கொட்டில்களும், கிராமநத்தங்களும், களத்துமேடுகளும் பொது நிமைாகும். எவரும் அவைகளை தன்னுடையவை என முடியாது. அது ஜமீன்தார் எல்லையிலிருந்தால் ஜமீன்தாருக்கும் குடிகளுக்கும் பொதுவானது. ஏவராவது கைப்பற்றினுல் அபருதம், விதிக்கப்படுகிருர்கள். கிராமாதிகாரம் கிாமத்தாரிடமிருக்கையில் இந்த பொது நிலபாதுகாப்பு கிராமத்தாரிடமிருந்தது. அதுமாதிரி சர்க்காரிடமும் ஜமீன்தாரிடமும் கிருமம் போனதும், இப்பொழுது நிலங்களில் குடிகளுக்கும், ஜமீன்தாருக்கும் கூட்டு உரிமை ஏற்பட்டது. எஸ்டேட் லாண்ட் ஆக்ட் வரும்போது ஜமீன்தார் இந்நிலங்கள் தங்களவை என்ருர்கள். ஆனுல் சட்டப்படியாவது உண்மைப்படியாவது அதற்கு ஆதாரமில்லை, மனித சரித்திரம் முதல் இதைப்பற்றி ஆருய்ந்தும் அதற்குசான்றில்லை.

சாசுவத செட்டில்மென்ட் காலத்தில் இந்த பொது நிலங்கள் விஷயத்தை கவனிக்கவில்லை. அதற்கு வரியும் போடவில்லை. லக்கிருஜ் நிலமாகவோ, வரியில்லா நிலமாகவோ விடப்பட்டன.

1908-ம்ஸு நில்ச்சுவான்தார் சங்கத்தார் எஸ்டேட் லாண்ட் ஆக்ட் மசோதா வருமுன் கொடுத்த ஒரு விண்ணப்பத்தில் "செட்டில்மெண்டில் வந்த நிலங்களிலிருந்து பொது கிராமத்திற்கென இருந்த நிலங்கள் விட்டுவிடப்பட்டனவென்றும், அந்த நத்தத்தைத் தவறி குடியானவன் வேறு நிலத்தில் பிரவேசித்தால் வரி விதிக்கப்படுவானென்றும் ஒத்துக்கொண்டிருக்கிருர்கள். கனம் போர்ப்ஸ் அவர்களும் மசோதாவைப் பற்றிப்பேசுகையில் இந்த பொது நிலங்கள் காலாகாலமாய் வரியிலிருந்து விலக்கப்பட்டவை என கூறியிருக்கிருர். பொது உபயோகத்திற்கேற்பட்டதென்றும் சொல்லியிருக்கிருர். இந்த பொது நிலத்தைப் பற்றி எஸ்டேட் லாண்ட் ஆக்டில் 20, 20–எ, 20–பி, 21, 22 பிரிவுகளில் குறிப்பிட்டிருக்கிறது. கலெக்டர் அவர்களே பொது நிலமென்பதை 3-வது பிரிவின், 16-வது உட்பிரிவின், (எ), (பி), (சி) கிளை பிரிவில் வருகிறதாவென்றும், பொது மக்கள் உபயோகத்தில் வழக்கமாய் இருந்துவருகிறதா என்றும் தீர்மானிக்க வேண்டும். கலெக்டர், ஒரு நிலத்துக்குடையவர் அல்லது ரயத்தின் மனு பேரில் பொதுவான நிலமொன்றை பொதுக்காரியத்தின் உபயோகத்திற்கு வேண்டாமாவென்றும், வேறு ஒருவித பொதுக்காரியத்திற்கு உபயோகிக்கவேண்டுமென்றும், அல்லது சர்க்காருடைய, அல்லது நிலத்துக்குடையவருடைய, அல்லது ரயத்துடைய நிலமென்றும், தீர்மானிக்கலாம், பொது நிலமாக வேண்டியதில்லையானுல் கிராண்ட்டுப்படியோ, சட்டத்தின்படியோ அது சர்க்காருடைய நிலமா, நிலத்துக்குடையவருடையதா என கலெக்டர் தீர்மானிக்கவேண்டும். அந்த உரிமையும், நிலத்துக்குடையவரின் அல்லது ரயத்தின் பழக்கமான காலாகால உரிமக்குக் கட்டுப்பட்டதாகும். அப்படி ஏற்பட்டால் அதற்கு தக்கமாதிரி வேறு ஏற்பாடு செய்ய வேண்டும். 2-வது நிபந்தனையில், நிலத்துக்குடையவரின் பாரம்பர உரிமையையும் கவனித்தே தான் கலெக்டர் தீர்மானம் செய்ய அனுமதி அளிக்கிறது. கிராமங்களோ இப்போது ஒன்றுமில்லா கூண்டுகள். 150 வருஷங்களுக்கு முன்பே சர்கூட் கமிட்டியார் கிராமங்களை வெறும் குடிசைகள் என்று சொன்னுல், இப்போது எத்தனை மடங்கு கேவலமானதாகும். அதற்குள் பொது நிலங்கள், பலதை ஜமீன்தார்கள் கைப்பற்றிக்கொண்டார்கள். அதுபோல சாயகால் உள்ள ரயத்துகளும் செய்திருக்கிருர்கள். இதைப்

பற்றிய கதையோ கமிட்டியாரின் முன் ஒரே மாதிரிதான். என் அப்படியானால் பொது உபயோகத்திற்கு பயனற்றன வென சிலதை எஸ்டேட் லாண்ட் ஆக்டை கொண்டுவந்தவர்கள் கூறினார்கள் ? ஆனாலும் ஜமீன் தாரின் உரிமைகளை மட்டும், ரயத்தின் காலாகாலமாக அனுபவித்துவந்த உரிமைகளைமட்டும் அவர்கள் எந்த சட்டத்திலும் விட்டுவிடவில்லை. கலெக்டர்களும் இதைக்கவனிக்குமாறு ஏற்பாடு செய்திருக்கிறது. ஒரு காலத்தில் பொது நிலமானால் அது எப்போதும் அவ்வாறே இருக்கவேண்டும். அதில் கவர்ன்மெண்டோ, நிலத்துக் குடையவரோ, ரயத்தோ பிரவேசிக்கக்கூடாது. இதனால் கிராம வாழ்க்கையின் நலத்தைக் கருதி பொது நிலத்தோடு கிராமங்களைத் திருத்தி அமைக்கவேண்டும். அதில்லாமல், பெரும் குழப்பங்கள் ஏற்பட்டுள்ளன.

பொது நிலத்தை, பராதீனமோடோ, அதிக்கிரமிப்போடோ எப்போதும் பாதிக்காது என்றால் நலம். 20-எ பிரிவின் 2-வது உட்பிரிவில் பொது நிலத்தை வேறு காரணங்களுக்குத் தரக்கூடாதென இருக்கிறது.

20–பி பிரிவில், கலெக்டர் பொது நலத்திற்காக நிலங்களை வாங்க அதிகாரமிருக்கிறது. இன்று நம் முன் பலர் இக்காலத்தில் சமுதாய, நிலங்களே கிடையாதென்கிறார்கள். எல்லாம் பலவிதமாககைப்பற்றி விடப்பட்டதாய் சொல்லுகிறார்கள்.

அதனால் கலெக்டர் அவைகளை விசாரித்து பரிகாரம் செய்ய ஏற்பாடு செய்யவேண்டும். கலெக்டருக்கு நிலத்தை வாங்கி பொது நிலமாக விட அதிகாரமிருந்தாலும், அது இதுகாறும் பொது நிலமில்லாத கிராமங்களுக்கு மட்டும் செய்யவேண்டும். அகாரணமாய் பொது நிலத்தில் பிரவேசித்திருப்பவர்களை அப்புறப்படுத்தவேண்டும் ஏனென்றால் பொது நல வசதிக்கும் பண்டைக்காலம் தொட்டு அனுபவித்து வந்த சுகங்களை கிராமத்தார்கள் அனுபவிக்கவேண்டியது நியாயம். நிலம் வாங்குவதென்றால் என்ன சிலவாகும். 20-பி பிரிவின் 1-வது உட்பிரிவில் 2-வது பாராவில் அவ்வாறு வாங்க சர்க்காருடன் ரயத்து களோ, நிலச்சுவான்தார்களோ தக்கபடி பண உதவி செய்யவேண்டும். இத்துடன் நாங்கள் அப்படி ஜமீந்தாரோ அல்லது ரயத்தோ தப்பாய் பொது நிலங்களைக் கைப்பற்றியிருந்தால், புதிதாக வாங்குகையில் பெரும் தொகை அவர்களால் தரப்படவேண்டுமென்றும், கூடுமானால் பூரா தொகையும் வாங்கவேண்டுமென்றும் சிபார்சு செய்கிறோம். 21-ம் பிரிவு அப்படி தப்பாய் பிரவேசித்தவர்களை அப்புறப்படுத்த அதிகாரம் அளிக்கிறது. அதற்கு 30 வருஷம் காலகதியாகும். (லிமிடேஷன்) நாங்கள் லிமிடேஷனே கூடாதென்கிறோம். சென்னை என்குரோச்மெண்ட் ஆக்ட் அவ்வாறு திருத்தப்படவேண்டும். கடைசிப் பிரிவில் அந் நிலத்தில் உண்டாகும் மர்சூல், கட்டப்பட்ட கட்டடம், இருக்கும் பொருள் எல்லாம் கலெக்டர் தீர்மானப்படி பொது மக்கள் பயனுக்காக என்றிருக்கிறது. அதை நிறுத்திக்கொண்டு அத்துடன் கட்டடங்களும் பொது உபயோகத்திற்கு வைத்துக்கொள்ளவேண்டுமென்று சேர்க்கவேண்டும். பொது நிலங்களைப்பற்றி சட்டமும் உண்மையும் இப்படியே. 34 நிலச்சுவான்தார்கள் சங்கத்தார் தங்கள் சார்பாய் சொல்வதாவது :—

கேள்வியில் பொதுவழி, பொது நிலம், குன்று, காட்டு புறம்போக்கு என்பவைகளின் வித்தியாசங்கள் கவனிக்கவேண்டும். பொது வழி உபயோகத்திலிருக்கும்மட்டும் யாரும் அதை வேறு விதமாய் உபயோகிக்கமுடியாது. 71 எம்.எல். 9. 749-ல் இருக்கிறபடி, புத்தாவில், டாங்காவில் மற்றும் பொது வழியெல்லாம், கீழ்நிலம் ஜமீந்தாருடையதாகும். மேல்நிலம் சுதேச அதிகாரிகளினுடையதானாலும், பொது உபயோகத்திலில்லாவிட்டால் உடனே அதன் உரிமை, அவ்வழி பர்மனெண்ட் செட்டில்மெண்ட் முன்னே இருந்தாலும் பின்னே இருந்தாலும் ஜமீன்தாரின் ஆக்ஞையில் இருக்கும். பர்மனெண்ட் செட்டில்மெண்ட் முன் சர்க்கார் வசமோ, ஜமீன்தார் வசமோ தொழுவம், நத்தம், களம் முதலியன எப்படி பொது உபயோகத்திலிருந்ததோ அப்படியே அவை பரம்பரையாக வருகிறதென 3-வது பிரிவின் 16 (சி) உட் பிரிவு கூறுகிறது. அது பொதுவாக உள்ளமட்டும் வேறுமாதிரி மாற்றமுடியாது. அப்படி உபயோகப்படாவிட்டால் வேறு பிரத்தியேக பொது பயனுக்கு உபயோகமாக கலெக்டர் 20-எ (1) (சி)(1) பிரிவுபடி உத்திரவிடலாம். அப்படியும் இல்லாவிட்டால் யாரிடம் சந்நத்படி பரம்பரை உரிமையுண்டோ அதுபடி ரயத்வாரி நிலமாகவாவது, பூஸ்திதிகளிலுள்ள நிலமாகவாவது கலெக்டர் மாற்றிவிடலாம். கலெக்டர் இந்த அதிகாரத்தை நிஷ்பிரயோகம் செய்ய இடம்தரும். சர்க்கார் ஒருபுறமும், ஜமீன்தார் ஒருபுறமுமிருக்க கலெக்டர் பக்ஷபாதமாகத்தானிருப்பார். இப்பொழுது உள்ள எஸ்டேட் லாண்ட் ஆக்ட்படி கலெக்டர் தான் கடைசித் தீர்ப்புகூறும் அதிகாரி. இதை மாற்றி கோர்ட்டாரே தீர்க்கும்படி செய்தல்வேண்டும். இது இருக்கவேண்டுமானால் லிமிடேஷன் காலத்திற்குள் கோர்ட்டுக்குப்போக பாதிக்கப்பட்டவருக்கு உரிமைவேண்டும்.

மேற்கண்டபடி கீழ் நிலத்திலும், உபயோகிக்காவிட்டால் மேல் நிலத்திலும், பொது நிலங்களில் ஜமீந்தார்கள் தங்களுக்கு உரிமையிருப்பதாய் சொல்லுகிறார்கள்.

பர்மனெண்ட் செட்டில்மெண்ட் முன்னும் பின்னுமுள்ள பொது வழிகளைப்பற்றியும் அவ்விதம் கூறுகிறார்கள். 71 எம்.எல்.ஜே. அதற்குச் சான்றாம். பர்மனெண்ட் செட்டில்மெண்ட் முன் பொது வழி முதலியன இருந்திருந்தால் அது சர்க்காருடையதாகவும், பின்னர் ஏற்பட்டிருந்தால் அது குடிகளுடையதாகவும் கொள்ளவேண்டும். இது ஏற்றுக்கொள்ளக்கூடியதல்ல. வேறு தலைப்பின் கீழ் இதை விபரமாக விளக்கியிருக்கிறோம். சொந்த உரிமை என்பது மேல்வாரத்துக்குமட்டும்தான். அது தான் பர்மனெண்ட் செட்டில்மெண்ட் காலத்தில் தரப்பட்டது.

கடந்த 170 வருஷ அதிகார மூலமாகவும், கோர்ட் மூலமாகவும், சட்டசபை மூலமாகவும், இது நிறுவப்பட்டிருக்கிறது. சிதம்பர சிவபிரகாச பண்டார சன்னதிக்கும் வீரம்மா ரெட்டிக்கும் 45 மாட் 602 ப்ரிவி கௌன்ஸிலால் தீர்மானிக்கபட்டதில் நீதிபதி சொல்லுவதாவது. சாதாரணமாக ஜமீன்தாராவது, பாளையக்காராவது வரி வசூலிப்பவரே அல்லது 1908-ம் வருஷம் 1-வது சட்டத்தில் 4-வது பிரிவுபடி குடிகளிடமிருந்து வரியை வசூலிக்க உரிமையுள்ளவர். நிலத்தை ஒப்பிவிக்கும் அதிகாரம் அவர்களுக்கு அவர்களுடைய சொந்த நிலத்திலும், பழைய கரம்பிலும் தான் இருந்தது. ரய்த்து நிலத்தில் இல்லை. 1934-ம் வருஷம் 8-வது திருத்தச் சட்டத்தில், பழைய கரம்பிலிந்த சட்டத்தை எடுக்கப்பட்டது. கரம்பிலுள்ள உரிமைகளைப்பற்றிக் கூறியிருக்கிறோம். ப்ரிவி கௌன்ஸில்படி வரி வசூலிக்கதான் ஜமீன்தாருக்கு அதிகாரம் இருக்கிறது. தனக்கு சொந்தமாக வைக்கக்கூடிய நிலத்தைக்கூட தான் சுதந்தரம் செய்துகொள்ள பாத்தியதை இல்லை. அப்படியிருக்க பொது நிலத்திலாவது பொது அல்லாத நிலத்திலாவது ஜமீன்தாருக்கு மேலும் கீழும் எவ்வாறு பரம்பரை உரிமை இருக்கிறது என்று கூறலாம் ? சர்க்காருக்கும் ஜமீந்தாருக்குமோ, ஜமீந்தாருக்குமோ ரயத்துக்குமோ வாதம் இருக்க இடமில்லை. இருந்தாலும் ப்ரிவி கௌன்ஸில் சொன்னபடிதான் சட்டம். இதில் யார் தீர்ப்பு செய்வது என்று எழவில்லை. தீர்மான சட்டமொன்று ஏற்படுத்தவேண்டும். எங்கு தீர்க்கவேண்டுமென்பதைப்பற்றி பின்னர் பேசுவோம். காட்டு புறம்போக்கும் குன்றுகளும் ஜமீந்தார்களுடையதாம். 40 சென்னை 886-ல் கூறியிருக்கும் கேசைக்குறிப்பிடுகிறார்கள். குன்றுகளும் காட்டு புறம்போக்கும் கிராமத்தாரிடமிருந்து பின்னர் ஒவ்வொரு கிராம வாசிக்கும் சேர்ந்ததே ஒழிய ஜமீந்தாருக்குச் சேரவில்லை. நிலச்சுவான்தார்களும் விவசாயிகளின் அனுபோகத்தைக் கட்டுப்படுத்திய தங்கள் உரிமைக்

யைக் கொண்டாடுகிறார்கள். இப்படியானால் அவர்கள் வாதிப்பது தவறு. பொது வழி, பொது நிலங்கள்போல குன்றுகளும் காட்டு புறம்போக்குகள் ஆகாது என்கிறார்கள் அது எங்களுககு விளங்கவில்லை. புறம்போக்கு என்றாலே பொது உடைமை என்பதைக் குறிக்கும் பொது நிலங்களுக்கும் செல்லும் அதனால் எல்லாம் ஒன்றே. மறுபடியும் நிலச்சுவான்தார்கள் குன்றுகள், காட்டுப் புறம்போக்குகள், பொது வழி, பொது நிலங்கள் ஆகா என்கிறார்கள். அது தவறு.

1802-ம் வருஷம் பர்மனெண்ட் செட்டில்மெண்ட் காலத்துக்கு 10 வருஷம் பின்னர் மசூலிபட்டணத்தில் ஜமீந்தாருக்கும் விறகு வியாபாரிக்கும் ஒரு தகராறு ஏற்பட்டது. திவி தீவிலிருந்து விற்பனைக்கு மரம் வெட்டி இனமாகச் சென்றதால் வந்தது. ஐகோர்ட்டுக்கு முன்பு, பெரிய கோர்ட்டாக இருந்த சுத்தர் அடலட் கோட்டிற்கு அது போயிற்று. காலட் என்னும் ஜில்லா ஜட்ஜ் 1863-ம்வருஷம் விவசாயி தன் உரிமையை தொலைத்தார் இது 1802-ம் வருஷம் 30 ரெகுலேஷனுக்கு எதிரானது. சர்க்கார் பிரவேசித்து ஒரு மசோதா கொண்டுவர ஒரு யாதாஸ்து தயார் செய்யும்படி கேட்டனர். ரெவினியு போர்டார் விவசாயிகளின் உரிமைகளைப்பற்றி 1864-ம் வருஷம் டிசம்பர் மாதம் 2-ம் தேதி பி.பி. நெ. 7743 ஆகிய பிரபலமான யாதாஸ்தை அனுப்பினார்கள் அதில் பூமியில் விவசாயிக்கு தான் உரிமை இருக்கிறதென்றும், ஜமீந்தார் வரி வசூலிப்பவர்தான் என்று சொல்லியிருக்கிறது. அதன் சார்பாய் மசூலிபட்டணம் விறகு வழக்கையும் திவி ஜமீந்தார் கேஸையும் குறிப்பிட்டார்கள். மேற் குறிப்பிட்ட யாதாஸ்தில் 56-வது பக்கத்தில் சொல்லியிருப்பது ஜட்ஜ்களில் கிரீனவே என்பவர் எழுதுகிறார். 1802-ம் வருஷம் 18-வது அப்பீல் சூட்டிலும் 1814-ம் வருஷம் 10-ம் நெம்பர் சூட்டிலும் மசூலிபட்டணத்தில் திவி காட்டில் சில விறகு வியாபாரிகள் ஜமீன்தாருக்கு கட்டணம் கொடுக்காமல் விறகு எடுக்க உரிமை உண்டென்று கூறினார்கள். ஜில்லா கோர்ட்டும் மாகாணக் கோர்ட்டும் அதை ஏற்றுக்கொண்டன. தனி அப்பீலில் சத்தர் கோர்ட் சொன்னதாவது: இந்த கேள்வி சாதாரண விஷயத்தில் பதிலளிக்ககூடும், அதாவது நிரந்தர வரி விதிக்குமுன் எப்படி உபயோகத்திலிருந்ததோ அதுதான் சர்க்காருக்குள்ள உரிமைதான், பர்மனெண்ட் செட்டில்மெண்டில் அளித்தார்கள். அதில் கூறப்படாத சுதந்தரங்கள் எல்லாம் பாதிக்காது. பர்மனெண்ட் செட்டில்மெண்ட் முன்னால் கட்டணமில்லை என்றால் விறகுவெட்ட கட்டணமில்லை. அதனால் முன்பே அவர்கள் இனமாக வெட்டி சென்றதால் இப்பவும் அப்படியே செய்யலாம் என்கிறார்கள். 1812-ம் ஆண்டில் இது 1865-ம் வருஷத்திற்குப் பின்னும் அமுலிலிருந்தது. 1802-ம் வருஷம் சென்னை காட்டு ஆக்ட்வரும் வரை இது சட்டம். இந்த சட்டத்திலும் இதை அங்கீகரித்து இருக்கிறது. ரயத்துவாரி நிலங்களுக்கும் ஜமீன்தார் நிலங்களுக்கும் இது ஒன்றே. நிலச்சுவான்தார்கள் காட்டும் ஐ.எல்.ஆர். 40 சென்னை 886. 1865-ம் வருஷம் 7-வது சட்டத்தில் கீழ் இது எப்படி குன்றுகளுக்கும் காட்டுப்புறம்போக்கும் ஒப்பிட முடியும்.? இந்த தகராறு ஜமீன்தாருக்கும் செக்ரடெரி ஆப் ஸ்டேட்டுக்கும் நடந்தது. விவசாயிகள் இதில் சம்பந்தப்படவில்லை ஆயினும் விவசாயிகளின் உரிமைகள் பாதுகாக்கப்படுகின்றன. ஒருக்கால் ஜமீன்தாருக்கு உபமானமாக இதைக்காட்டியிருக்கலாம் சென்னை பாசனவரி சட்டப்படி குன்றிலும் காட்டுப்புறம்போக்கிலும் அவர்களுடைய உரிமைகளைக் கொண்டாடலாம். நம்முன் கிடைத்துள்ள சாட்சியங்களை எல்லாம் ப்ரிவி கௌன்ஸில்களுக்குக் காட்டியிருந்தால் விவசாயிகளுக்கு தான் உரிமை இருப்பதாகக் கூறுவார்கள். அதனால்தான் ஜமீன்தார்களுக்கு விரோதமானது. 71 எம்.எல்.ஜ. 749: பித்தாபுரம் ஜமீன்தாருக்கும் காக்கிநாடா முனிசிபால்டிக்கும் நடந்த கேஸை நிலத்துக்குடையவர் காட்டுகிறார். இதிலும் விவசாயிகளுக்கு இடமில்லை. ஜட்ஜ் தீர்ப்பு சொல்லவேண்டியிருந்தது. மகாராஜாவுக்கு நிலத்தில் உரிமை இருக்கிறதா என்றும் சூட்டிற்கு முன்பு 12 வருஷகாலத்து அனுபோகத்திலிருந்து இருக்கிறாரா என்பதே, கீழ்க்கோர்ட்டிலும் ஐகோர்ட்டிலும் மகாராஜா இழந்தார். கேஸ் லோகல் போர்டாருக்கு சம்பந்தப்பட்ட ஒரு பொதுவழியைப்பற்றி: வாதி அதிலுள்ள மரமாசூலைப்பற்றியும், கீழ் நிலத்தைப்பற்றியும், உரிமை கொண்டாடினார். கோர்ட்டார் இருதரத்தார் தரப்பில் கவனித்தார்களே தவிர விவசாயியைப்பற்றிக் கவனிக்கவில்லை. விவசாயியின் உரிமைதான்கொண்டாடபட்டது. நிலச்சுவான்தார் சங்கத்தின் விஷயங்கள் இதோடு முடிகின்றது. நாங்கள் விவசாயிக்கு தான் எல்லா உரிமையிருக்கிறதென்று தீர்மானிக்கிறோம்.

(5) 1-ம் அத்தியாயம் சர்வே செய்வதும்: உரிமைப்பதித்திரம் ஏற்படுத்துவதும்.

5-ம் கேள்வி—

(ஏ) எல்லா நிலங்களையும் சர்வே செய்து உரிமை தஸ்தாவேஜ் அவசியமாய் ஏற்படுத்தவேண்டுமா?

(பி) அப்படியானால் எந்த விகிதமாக இருதரத்தாரும் செலவைப் பொறுப்பது?

தற்போது உள்ளபடி பாதி பூஸ்திதிகள் சர்வே ஆய்விட்டது, சர்வே அவசியம்தான். பர்மனெண்ட் செட்டில்மெண்ட் காலத்தில் குத்தகை நிர்மாணிக்காத இடத்திற்கு செட்டில்மெண்ட் செய்தாகவேண்டும் எல்லா சாட்சியங்களிலிருந்து வரி விகிதமும் குடிவாரமும் எக்காலத்துக்கும் பர்மனெண்ட் செட்டில்மெண்ட் ஆக ஏற்பட்டது. இது பயிரிடவும், பயிர் இடப்படக்கூடியதுமான நிலங்ளுக்குத்தான். அதனால் இதில் வரி விகிதத்தைப் பற்றிக்கவனிக்கவேண்டியதில்லை. பிரத்தியேக நிலத்துக்குடையவர் எஸ்டேட் லாண்ட் ஆக்ட்டுக்கு உட்படவில்லை. 3-வது பிரிவின் 7-வது உட்பிரிவுப்படி 1934-ம் வருஷம் 8-வது சட்டத்தில் பழைய கரம்பை எடுத்தாகி விட்டது. அதனால் இந்த ஆக்ட்டில் 11-வது படி வேறு சொத்து அடங்கவில்லை ரயத்து நிலங்களுக்கு பர்மனெண்ட் செட்டில்மெண்ட் காலத்தில் மாறாக வரியாக மாற்றப்பட்டிருக்கிறது. அதனால் இதைப்பற்றி கவனிக்கவேண்டிய விஷயம் எல்லாம் இந்த சட்டத்தில் ஒதுக்கப்பட்டுள்ளது. இந்த சட்டத்தின் 11-வது அத்தியாயம் வரி நிர்ணயிக்கப்படவில்லை என்று அமைந்ததுபோலும். 165-வது பிரிவின்படி கலெக்டர் 30-வது பிரிவின் (9) (I) உட்பிரிவின் நன்மைகளுக்கு ரயத்துக்குப்பாத்தியம் உண்டா என்றும் ரெக்கார்ட் ஏற்படும் காலத்தில் என்ன வரி என்றும் விசாரித்து 164-வது பிரிவுப்படி தீர்மானிக்கவேண்டும். வரி உயர்த்தலைப்பற்றிப் பேசும்போது 30-வது பிரிவின்படி (9)—(I) உட்பிரிவில் எதைப்பற்றி கூறி இருக்கிறது என்று சொல்லி இருக்கிறோம். குத்தகை மாறாத விகிதமாக ஏற்பட்டிருந்தால் விலை உயர்வால் உயர்த்தக் கூடியது அல்ல. 30-வது பிரிவில் விலை உயர்வால் வரி உயர்த்த இடம் தருகிறது. இது ஒரு மாறுதலாகும். அதனால் 11-வது அத்தியாத்தில் வரியை உயர்த்த ஏற்பாடு இல்லை. அவைகள் பழைய கரம்பிற்குத்தான் பொருந்தும்.

168-வது பிரிவில், 2-ம் உட்பிரிவு, வேறுவிதமாய் ருசுவாகும் வரை, இருக்கும் குத்தகையே நியாயமானதென கலெக்டர் நம்பவேண்டும். 165 (இ)-ல் விலக்கப்பட்டவைகளுக்கு இது பொருந்தாது. இவைகள் 1908-ம் வருஷம் முதற் சட்டத்தின் ரயத்தின் நிலத்தின் பழைய கரம்புகளுக்காகும். ரயத்தி நிலம் பழைய கரம்புகளுக்கு 30—35-ம் பிரிவுகளில் வரி உயர்த்தவும், குறைக்கவும் சாத்தியமுண்டு. பழைய கரம்புகள் ரயத்தின் நிலத்தில் மூன்று விதம். நியாயமான வரி விதிக்கவேண்டுமென்பது, பழைய கரம்புகளுக்கும் கூடத்தான். வரி உயர்த்திய நிபந்தனைகளோடு பழைய கரம்பை அழித்திருக்கவேண்டும். கலெக்டரே நியாயமான வரியைத் தீர்மானிக்கலாமென்றால் இருதரத்தாரும் கூட சம்மதித்தால் குறிப்பிட்டு

அனுப்பினால் அதை கலெக்டர் ஏற்றுக்கொள்ளலாம். இவைகளும் பழைய கரம்புகளுக்கேயன்றி பர்ம னெண்ட் செட்டில்மெண்ட் காலத்தில் ஏற்பட்ட மற்ற நிலங்களுக்கல்ல. அகம், புறம், இரண்டுவித சாக்ஷி யங்களாலும் நியாய வரி தீர்ப்பதென்பது பழைய கரம்புக்கேயன்றி மற்றதற்கல்ல.

சர்வே ஆகாத நிலங்களுக்கு சர்வே செய்து வரியை நிர்ணயித்து பர்மனெண்ட் செட்டில் மெண்டில் தீர்த்தவைகளோடு சேர்த்து விடவேண்டும்.

(6) வரியைக் குறைத்தால் (ரெமிஷன்ஸ்).

முதல் கேள்வி ஜாப்தாவில் 2-ம் கேள்வியின் (சி) பிரிவு :—

சட்டமூலமாக வரி குறைக்க ஏற்பாடு செய்யவேண்டுமா ? அப்படியானால் எந்தக் காரணங்களால் :—

மாசூலில், ராஜரீகத்திற்காக மன்னர்களுக்கு ஒரு பங்கு தரவேண்டுமானால், குடித்தனக்காரர் களுக்கு நிலத்துடன் வரியை குறைக்கவேண்டிய உரிமையும் கூட இருக்கிறது. ஹிந்து மக மதியர் ராஜரீகத்தில் மாசூலையே வரியாகக் கொடுக்கப்பட்டுவந்தது. அது எவ்வளவென்பதும் தீர்மானித்திருந்தது.

அக்காலங்களில் நாணயப் பழக்கம் அதிகமில்லை. கரன்சி நோட்டுகளுமில்லை. அதனால் மாசூலில் ஒரு பகுதி தரப்பட்டது. மழையில்லாததாலோ, வெள்ளத்தாலோ, வேறு காரணத்தாலோ, விளைவு பாதிக்கப்பட்டால் வரியைக் குறைத்தார்கள். விளைந்தால்தான் ஒரு பகுதி தரப்பட்டது. விளையாவிட்டால் இரு வரும் கஷ்டப்படவேண்டியதே. 1802-ம் வருஷம் பர்மனெண்ட் செட்டில்மெண்ட் பின்பும், நாணயமும் நோட்டுகளும் ஏற்பட்டவுடன் விளைந்தாலும் விளையாவிட்டாலும், சர்க்காருக்கு வரி கட்டிவிடவேண்டும். நிலத்துக்குடையவர் எக்காரணத்தினாலும் வரி குறைத்தல் கேட்கக்கூடாதென சன்னத்-இ-மில்கியத்-இஸ்தி மிரார் என்று ஒரு நிபந்தனை ஏற்றுக்கொண்டார்கள். வரி வசூலிப்பதில் கொஞ்சம் மீறுவதால் அதை அவர்கள் ஏற்றுக்கொண்டார்கள். அதனால் அவர்கள் விவசாயியிடமும் அச்சட்டத்தையே புகுத்தினார்கள். நிலத்துக்குடையவர் ரெமிஷனை எதிர்க்கிறார்கள். நாங்கள் அதை ஏற்றுக்கொள்ளவில்லை. விவசாயிக்கும் நிலத்துக்குடையவருக்கும் வித்தியாசமுண்டு. விவசாயி பாடுபட்டு விளைவு எடுக்கிறான். டெல்டா இல்லாத இடங்களில் மழை பெய்தாலன்றி விவசாயி பாடுபட்டு உழுது, விதைத்து ஏமாறுகிறான். டெல்டா இடங்களி லும் வெள்ளத்தாலும் நீர் பாய்ச்சாததாலும் நஷ்டமடையக்கூடும். இது தெய்வ சகாயமே ஒழிய மனிதர் ஏற்பாடல்ல. அதனால் விளையாவிட்டாலும் வரி கேட்பது பூஸ்திதிக்காரருக்கு நன்றல்ல. பர்மனெண்ட் செட்டில்மெண்ட் காலத்தில் வரி மாறாததாய் ஏற்பட்டிருப்பதை நாங்கள் ஏற்றுக்கொண்டாலும், விவசாயி களுக்கு மாசூலில்லாதபோது வரி குறைப்பதை சிபார்சு செய்கிறோம். இது இயர்க்கை உரிமை. பூஸ்தி திக்காரர், விளையுமட்டும்தான் குடியிடம் வசூலிக்கலாம். கண்டிப்பாய் விளையாவிடில் வரி குறைக்க கேட்பதும், வரி குறைக்கவேண்டியதும் இயற்கைச் சட்டமே. இவைகளை எஸ்டேட் லாண்ட் ஆக்ட் 38, 39 (எ) செக் ஷனில் சொல்லியிருக்கிறது.

38-வது செக்ஷனில், முதல் பிரிவில், ரெமிஷன் விஷயமாக பூஸ்திதிக்காரருக்கு பணமாக வரி செலுத்து பவரே கலெக்டரை கெட்கலாமென இருக்கிறது. இது தவறு. பணமானாலும் சரி மாசூலானாலும் சரி இருதரப்பிலும் கேட்கலாம். விளையாவிட்டால் மாசூலாகமட்டும் எப்படித்தருவது ? பணமாக வரி கட்டு பவர்க்குமட்டும் தான் இது என்பது தவறு. 38 (2) (சி) செக்ஷனில், விலை குறைவால் வரிக்குறைக்க உரி மையைக் கூறுகிறது. பணமாக வரி கட்டினாலும் கூட விலை ஏகமாய் குறைந்தால் கஷ்டமாய்த்தானிருக்கும். விலைக் குறைவின் காரணம் சர்க்காராலோ ஜமீன்தாராலோ ஆனால் நஷ்டம் கூட விவசாயி கேட்கலாம். இவ்வித பாதுகாப்பு சர்க்காரும் அவர்கள் ஏஜண்டும் தரவேண்டும்.

38 (1) (சி) யில் நீர்ப்பாசன நிலங்களில் நீர் பாய்ச்சாததினாலும் பூமி சாரம் குறைந்துவிட்டதாலும் விளையாவிட்டால் ரெமிஷன் தரவேண்டும்.

39-ம் செக்ஷனில் 38 (1) (சி) படி டிக்ரியோ, உத்தரவோ இருந்தால் 20 வருஷங்களுக்கு விவசாயி வரி குறைத்தல் கேட்கக்கூடாதென இருக்கிறது. விலை உயர்வால் 30-வது செக்ஷன்படி வரி உயர்த்தலாம் என சொன்னோம். ஆனால் அது மாற்றாதவிதம் வரி விதித்த நிலங்களுக்கல்ல. தப்பாக டிக்ரியாவது ஆர்ட ராவது இருந்தால் 20 வருஷத்தில் வரி குறைக்கக் கூடாதென்பது தப்பு. கோர்ட்டார் ரெண்ட் ரிகவரி ஆக்ட், எஸ்டேட் லாண்ட் ஆக்ட். இவைகளை தப்பபிப்பிராயத்தினால் முடிவு செய்தால் லிமிடேஷன் என்பது விவசாயிக்கு உதவாது. 31-வது செக்ஷனில், 30-வது செக்ஷனோ, 40-வது செக்ஷனோ, 11-வது அத்தியாயமோ, எதுவாலும் வரி உயர்த்தியோ, குறைத்து, நிலையாய் ஏற்படுத்தியோ இருந்தாலும் ஒரு விவசாயி பூஸ்திதி நிலத்தில் மார்ச் மாதம் முதல் தேதிக்குள் 12 மாத முடிவில் சராசரி விலையில் விளை பொருள் 18 3/4 சதம் குறைந்திருந்தால் வரிக்குறைவு கேட்கலாம். இது நியாயமற்ற நிபந்தனை. 1908-ம் வருஷம் எஸ்டேட் லாண்ட் ஆக்ட்படி விலை உயர்வால் ஜமீன்தார்கள் வரி உயர்த்த மனு செய்தார் கள் அதில் 18 3/4 சதம் இல்லை. 1930 முதல் இதுவரை விவசாயி வரி குறைத்தலுக்கு மனு செய்யவில்லை. ஏனென்றால் 18 3/4 சதம் குறையவில்லை. இந்த நிபந்தனையை ஒழிக்கவேண்டும். 38, 39-வது செக்ஷனி லுள்ள முறைகளை ஒழித்து. சுலபமான முறையில் வரி குறைக்க ஏற்பாடு செய்யவேண்டும். விவசாயிகள் நிரந்தரமான சட்டம், வரி குறைக்க ஏற்படுத்தவேண்டுமென்கிறார்கள். பூஸ்திதிக்காரர்களோ அப்படிச் செய்தால் நடைபெறாதென்கிறார்கள். ஹிந்து மகமதிய ராஜாக்கள் காலத்தில் வரி குறைத்தல் இருந்தது, சர்க்காரும் ரயத்வாரி நிலங்களுக்கு வரியைக் குறைக்கிறார்கள். இதனால் நாங்கள் வரியைக் குறைக்க ஏற்பாடு செய்யவேண்டுமென்று தீர்மானிக்கிறோம்.

உடன் சேர்க்கை (மிசலேனியஸ்).

ஜாப்தாவில், 2-ம் கேள்வி.—

மாகாண சர்க்கார், ரெவினியு செட்டில்மெண்ட் ஆபீசர் மூலம், உத்தியோக ஹோதாவில் அநியாய மென்று தோன்றும்போது வரியைக் குறைக்க, மாற்ற, அதிகாரம் வைத்துக்கொள்ளவேண்டுமா ?

பர்மனெண்ட் செட்டில்மெண்டில் வரியை மாற்றாவண்ணம் ஏற்பாடு செய்தபின் இது தேவையில்லை. பூஸ்திதிக்காரரையும், விவசாயியையும் சம்பந்தப்பட்ட விதிகளில் இதை சட்டசபை செய்யவேண்டும்.

6-வது கேள்வி.—

பூஸ்திதிக்காரர் வரிக்குமேல், பழக்கத்தாலோ வேறு மாதிரியோ விவசாயிக்கு கட்டணங்கள் விதிக்க லாமா ?

பர்மனெண்ட் செட்டில்மெண்ட் கால முதல் இதுவரையில் இதைக் கண்டனம் செய்திருக்கிறது. நம்பு முன்னுள்ள சாக்ஷியத்தில் இவ்வித வரி சில விடங்களில் இருப்பதாய்த் தெரிகிறது. பழக்கமே காரணமென சொல்லுகிறார்கள். இது நியாயமல்ல, இதைக் கண்டிக்கவேண்டும்.

9-ம் கேள்வி.—ரயத்வாரி கிராமங்களைப்போல வருஷாவருஷம் ஜமாபந்தி தேவையா ?

பெர்மனெண்ட் செட்டில்மெண்டு போது வரியை நிர்ணயித்துவிட்டதால் ஜமாபந்தி அவசியமல்ல. குடிகளுக்கு எவ்வளவு, எப்பொழுது, எம்மாதிரி கட்டவேண்டும், தவறினுல் என்ன நடக்குமென்பது தெரியும்.

10-ம் கேள்வி.—ஜமீன்தாரிடமும், பட்டதாரிடமும் கீழ்க்குடிக்கு என்ன அந்தஸ்து ?

பொப்பிலி, பித்தாபுரம் முதலிய எஸ்டேட்டுகளில் குடிகள், கீழ்க்குடிக்கு வெகு உயர்ந்த குத்தகைக்கு நிலத்தை விட்டு லாபம் பெறுகிருர்கள் என்று சாக்ஷியம் வருகிறது. அதனுல் ஜமீன்தார்கள் தாங்கள் விதிக்கும் வரி நியாயமானதென்கிருர்கள். இது சரியான சமாதானமானுல் இதை ஏற்றுக்கொள்ளவேண்டியது தான். பேஷ்கஷ்ஷையாவது வரியையாவது மாற்றவேண்டுமென்ருல் ஏற்றுக்கொள்வதற்கில்லை. குடியின் நன்மைக்கும், தேச நன்மைக்கும் அக்கரை எடுத்துக்கொள்ள உதவி புரியவே இவ்விதமாய் வரி நிர்ணயித்து வசதிகள் அளிக்கப்பட்டிருக்கின்றன. சர்ஜான் ஹோரும், லார்ட் காரன்வாலிசும் சம்பாஷித்ததில் இது தான் காண்கிறது. இதைத்தான் கலெக்டருக்கு கொடுத்த உத்தரவுகளிலும், டைரக்டர் கோர்ட்டு கடிதங்களிலும், ஸ்பெஷல் கமிஷன் ரிப்போர்ட்டிலும், 1802-ம்ஷு 25-ம் ரெகுலேஷனின் விளம்பரத்திலும் சொல்லியிருக்கிறது. கீழ்க்குடியிடம் உயர்ந்த தீர்வை வாங்குவது, விவசாயிக்கு எதிராக உபயோகிக்கக் கூடாது. இது விஷயமாய் கீழ்க்குடிகள் உயர்ந்த வரி கட்ட சம்மதப்பட்ட பத்திரங்கள் பயன்படா. பெர்மனென்ட் செட்டில்மெண்ட்பின் வரிமட்டும் உயர்த்தப்பட்டதோடு இல்லாமல் பலவிடங்களில் எவ்வாறு வரி தீர்மானிக்கப்பட்டதென்பதும் தெரிகிறது. பித்தாபுர எஸ்டேட்டில் ஒந்துவாரடி ஏற்பாட்டில் வரி மாற்றமோடு இல்லாமல் கால அளவிலும் நிச்சயமில்லை. இதனுல் எவன் அதிகமாகத்தருகிருனே அவன் புகுந்து இருப்பவனை வெளிப்படுத்த நேரிடுகிறது. அதிக வரி கட்டுவதை நிரூபிக்க பத்திரங்களைக் காண்பித்ததால் பழைய ஒந்துவாரடி ஏற்பாடு தெரிந்தது. 1890 வரை இது அமுலிலிருந்தது என பித்தாபுரம் திவான் மூலம் தெரிகிறது. கிராக்கி அதிகமானுல் குடிகள் நிலத்திற்கு அதிகப்பணம் தருகிருர்கள். யார் கீழ்க்குடி என்று எவ்வாறு தீர்மானிக்க முடியும் ? கீழ்க்குடி என்பது வழக்கமாய் நிலத்தில் தனக்கு பாத்தியதை உண்டென்பதை காண்பிக்கிறது. பர்மனெண்ட் செட்டில்மெண்டு காலத்திலும் கீழ்க்குடிகள் இருந்தார்கள். ஒவ்வொரு வருஷமும் ஜமீன்தாரிடம் போய், போட்டி போட்டு கீழ்க்குடியானுல், அவர்கள் கீழ்க்குடியாகமாட்டார்கள்.

கடனுல் முதலாளிகளுக்கு நிலத்தை கொடுத்துவிட்டு லாபமே வராதென்று தெரிந்தும் அதிக குத்தகைக்கு விவசாயிகள் நிலத்தை ஏற்றுக்கொள்கிருர்கள். இவைகளையெல்லாம் தனிப்பட கவனிக்கவேண்டும். கீழ்க்குடி நிலமையைத் தீர்க்க தகுந்த ஏதுக்களில்லை. சில பூஸ்திதிக்காரர்கள் கீழ்க்குடிக்கே கைப்பற்று நிலமாக விடவேண்டுமென்கிருர்கள். பட்டாதாரர்கள் அதை எதிர்க்கிருர்கள். இதற்கு சில சாக்ஷியம் வருகிறது. யார் கீழ்க்குடி என்பதே ஒரு கேள்வி. வருஷா வருஷம் பூஸ்திதிக்காரரிடம் ஓடும் ஒவ்வொருவரும் கீழ்க்குடியாவாரா ? பூரான காரணங்களின்றி இதைப்பற்றித் தீர்மானிப்பது நாங்கள் நல்லதென்று நம்பவில்லை. கீழ்க்குடிக்கு உரிமை செய்ய வருமுன் சட்டசபை பல விஷயங்களை ஆராயவேண்டும். அதனுல் இதை ஒத்தி வைக்கவேண்டியது தான்.

(7) 15-ம் அத்தியாயம் தீர்ப்பு ஸ்தலம்.

முக்கியமாய் வரி வசூல விஷயத்தில் பூஸ்திதிக் காரருக்கும் விவசாயிக்குமுள்ள வழக்கை யாரிடம் ஒப்புவிப்பது, பாக்கி, வசூலித்தல், தொடர்தல் முதலியன சாதாரண விஷயங்களல்ல. ஒரு காலத்தில் கலெக்டர் விவசாயியின், காப்பாளராக விளங்கியதுண்டு அவர்கள் விவகாரங்களை விரைவில் முடிக்கவேண்டுமென கட்டாயம் இருந்தது. லார்ட் கார்ன்வாலிஸ், சர்ஜான் ஹோர், சர் தாமஸ் மன்ரோ காலத்திலிருந்த கலெக்டர்களும், ரெவன்யூ அதிகாரிகளும், குடிகளிடம் தாராள சிந்தனையுள்ள மதிப்புடையவர்கள். நேர்மையாய் இருந்த அவர்களின் தீர்ப்பால் விவசாயிகள் அவர்களை நேசித்தார்கள். அவர்கள் கிராமாந்தரங்களிலேயே, பஞ்சாயத்தால் தகராறுகளைத் தீர்த்து வந்தார்கள். இக்காலத்தில் சிலர் கிராமாந்தர பஞ்சாயத்து உடைந்து வெகு காலமாயிற்றென்றும், இனி திருத்தி அமைக்கமுடியாதென்றும், கூறுகிருர்கள். அது அவர்கள் அறியாமை. 1882-ம்ஷு 4, 5 ரெகுலேஷனில் கிராமப்பஞ்சாயத்தே வரி, நீர்ப்பாசனம், இதர கிராம சம்பந்த தகராறுகளைத்தீர்ப்பதில் வல்லுனர்கள் எனத்தீர்மானித்திருக்கிறது. இப்பவும் 1803-ம் வருஷத்திய 2-ம் ரெகுலேஷன், கலெக்டருக்கு சில தகராறுகளை கிராமப்பஞ்சாயத்துக்கு அனுப்பி 2 வாரத்தில் தீர்க்கும்படி அனுமதி தருவது வழக்கத்தில் இருக்கிறது. பஞ்சாயத்தாரில்லாவிட்டால் ஆர்பிட்ரேஷன் மூலம் தீர்க்க சிவில் புரொசீஜர் கோடும் சொல்லுகிறது. ஆனுல் இக்காலத்திலுள்ள பல கோர்ட்டுகளால் இவைகள் மறக்கப்பட்டன. இதனுல் குடிகள் நீண்ட வழக்குகளில் ஈடுபட்டு ஏழையாகிருர்கள். 20 வருஷங்களாக் தீர்ப்பாகாத வழக்கு நமக்குத் தெரியும். இதைப்பற்றி 15 வருஷகாலமாய் எதிர்க்காமலிருக்கும் ஒரு கேசைப் பற்றி தற்போதுள்ள தலைமை நீதிபதியும் கூறியிருக்கிருர்.

இங்கிலீஷ் ராஜாங்கத்தால் ஏற்பட்ட கோர்ட்டால்தான் குடிகள் வழக்குகளால் இதுகாலம்வருந்துகிருர்கள். ஹைக்கோர்ட் பழைய அடாலட் கோர்ட்டுக்குப்பதில் 1860-ம் வருஷத்தில் வந்தது. அடாலட் கோர்டு நீதிபதிகள் கிராமாந்தர அனுபவமுள்ளவர்களானதால் அதைக்கொண்டு தக்க தீர்ப்புக் கூறினுர்கள். சில அடாலட் கோர்ட்டு நீதிபதிகள் 1802-ம்ஷு ரெகுலேஷனைக்கொண்டு வருவதில் அரும்பாடுபட்டவர்கள். ஹைக்கோர்ட்டு வந்தபின் கிராம வாழ்க்கையில் அனுபவமற்ற ஆங்கிலேயர்கள் இங்கிலாந்திலிருந்து வந்து நீதிபதியானுர்கள். பழக்க வழக்கம் தெரியாமல் நியாயம் கூற வந்தார்கள். இங்கிலாந்திலுள்ள குடிகளுக்கும் நிலத்துக்குடையவருக்குமுள்ள சட்டத்தை இங்கு புகுத்தினுர்கள். நிலத்துக்குடையவருக்கும், குடிக்கும் இடையே இருக்கும் பல சட்டங்களாகிய 1902-ம் ஷு 27, 28-ம் ரெகுலேஷன், 29-ம் கர்ணம் ரெகுலேஷன், 30-ம் பட்டா ரெகுலேஷன் 25 பர்மனெண்ட் செட்டில்மெண்டு ரெகுலேஷன், ரெண்ட் ரெகவரி ஆக்ட் முதலியவற்றை அவர்கள் தப்பாக பொருள் படுத்தினுர்களானதால் வெகு கஷ்டங்கள் ஏற்பட்டன. கனம் போர்ப்ஸ் அவர்கள் சட்ட சபையில் பேசிய போது இதைப்பற்றி வெகு தெளிவாகப்பேசியிருக்கிருர். அது மற்ருேர் இடத்தில் பிரசுரமாகிறது. 1930-ம் ஆண்டில் பணக்கஷ்டம் வரும் வரையில் வியாஜ்ஜியங்கள் அதிகமாயின. பிறகு வியாபாரம் விவசாயம், கைத்தொழில் முதலியன பாதிக்கப்பட்டு பணக்கஷ்டம் ஏற்பட்டுவிட்டது. அதனுல் வியாஜ்ஜியம் குறைந்தது. இக்காலத்தில் ஸ்டாம்புக்கும், வக்கீலுக்கும் தர பணமில்லாததால் தாவாயின்றி வக்கீல்களும் கோர்ட்டுகளும் பாதிக்கப்படுகின்றனர். மாகாண ஆட்சி வரவே கிராமப்பஞ்சாயத்து உயிர்ப்பிக்கவேண்டுமென்ற எண்ணம் பரவி, கோர்ட்டும், கேசும், பாதிக்கப்படுகின்றன. அது வருந்தத் தக்கதல்ல. ஆனுல் சந்தோஷப் படக்கூடியதே. பணக்கஷ்டத்தாலும், மாறிய அரசியல் திட்டத்தாலும் ஏற்பட்ட நன்மையாகும். இக்காரணங்களால் கலெக்டர்களும், ரெவின்யூ கோர்ட்டுகளும் வெறுக்கப்பட்டால் ஆச்சரியமானதல்ல. பல சாக்ஷிகள் நம்முன் பல ரெவின்யூ டிவிஷன் அதிகாரிகள் விவசாயிகளினிடையும் பூஸ்திதிக்காரர்களுக்குமுள்ள விவகாரங்களைத் தீர்ப்பதில் அக்கரையே செலுத்துவதில்லை. என்கிருர்கள். பண்டை நாள்போல இக்காலத்தில் டிப்டி கலெக்டர்களும், கலெக்டர்களும் செல்வாக்கில்லாமலிருந்தால் அவர்களை நாம் கண்டனம் செய்யக்கூடாது. பல வேலைகளினிடையே எவ்வாறு அவர்களிடம் இவ்விஷயத்தில் கவனம் செலுத்தவில்லையெனச் சொல்லலாம் ?

அதுபோல் காலதாமதத்தால் சிவில் கோர்ட்டுகளும் வெறுக்கப்படுகின்றன. அதனால் யார் விவசாய விசாரணைகளைத் தீர்ப்பதென்று நாங்கள் கூறவேண்டியிருக்கிறது. தீரக்கவனித்ததில் இப்போதுள்ள கோர்ட்டு களில் கூடாதென்பது எங்கள் அபிப்பிராயம்.

ஆனால் இப்போதுள்ள பண நெருக்கடியான நிலையில் கீழ் முதல் மேல் வரை தனி ஏற்பாடு செய்ய வேண்டுமென கூறுவதற்கில்லை. டிப்டி கலெக்டர்களும், அவர் கீழ்த்தர உத்தியோகஸ்தரிலும் தக்கவரைப் பொறுக்கி சிலரை சர்க்காருக்கும், ரயத்துக்கும், விவசாயிக்கும், பூஸ்திதிக்காரருக்கும், உள்ள தகராறுகளைத் தீர்க்க பிரத்தியேகமாய் நியமிக்கலாம். ரெவின்யூ போர்டார் அப்பீல் போர்டாகக்கூடாது. ஒன்று, இரண்டு, அல்லது மூன்று நியாய சபைகளை இவைகளைக் கவனிக்கக ஏற்படுததலாம். இவ்விஷயத்தில் நீதி இலாகாவை திருத்தியமைக்கும்போது 100 வருஷமுன் ஆங்கிலேய சர்க்கார் எவ்வாறு நடந்தார்களென்பதைக் கவனித்துச் செய்யவேண்டும். நீதி இலாகாவில் விருத்தி என்று கூறும் இன்னாளில், அதுகூட வெகு சிலவுள்ளதாயும், ஜனங்களுக்கு பரிகாரம் தருவதாயும் இல்லை.

புதுக்கோர்ட்டுகள் ஏற்படும்போது 1793-ம்ஞு பிப்ரவரி மாதம் 11-ம் தேதி லார்ட் காரன்வாலிஸ் அப்படி நியாயம் கிராமாந்தர வீடுகள்தோறும் போய் வழங்கப்படவேண்டுமென்று கூறியதை ஞாபகத்தில் கொள்ளவேண்டும். 1815-ம்ஞு மார்ச்சுமீ 23உயின் நீதி இலாகாவின் போர்ட் நடவடிக்கைகள் கீழே குறிப்பிடப்படுகிறது.

8-வது பாரா.—வங்காளம், பீகார், ஒரிசா மூன்று மாகாணங்களில் இப்போதுள்ள நீதியிலாக்காவை வைக்கும்போது திவானி அடலட் கோர்ட்டில் தீராமலிருந்த வழக்குகள் 1793-ம்ஞு பிப்ரவரிமீ 11-ம்உயில், லார்ட் காரன்வாலிஸ் 60,000 என்று சொன்னார். அதனால் ஏற்பட்ட தாமதத்தின் காரணத்தையும் கீழ் சொல்லியிருக்கிறது—வழக்காடுபவர்களுக்கு நியாயமின்றி குடிகெடுவதுடன் தேசத்தின் முன்னேற்றத்தை யும் குலைப்பதாகும். லார்ட் காரன்வாலிஸ் சீர்திருத்தம் செய்வதில் நீதிபதி குறைபாடுகளின்றி செய்ய வழியும், விரைவிலும் தங்கள் குறைகளை குடிகள் தீர்த்துக்கொள்ளவும் ஏற்பாடு செய்யவேண்டுமென்று கருதினார். மற்றும் ஹிம்சித்தலையும், துன்புறுத்திப் பிடுங்குவதையும், கண்டிக்கவும், குடிகள் திட்டமான வலிவுள்ள விதிகள் இருக்கிறதென்றும் சொல்லக்கூடிய நீதி மன்றங்கள் அமைக்கவேண்டுமென்றார்.

70-ம் பாரா.—உள்ளூர் அதிகாரிகளிடம் தரும் உரிமை சொந்தச்சொத்தில் 200 ரூபாய் வரை தீர்க்கவும், மல்கஜியில் அத்தொகைக்கேயும் 20 ரூபாயுக்கு மேற்படாமல் லக்கிருஜுக்கும், வேண்டுமானால் பஞ்சாயத்தால் கட்டிக்காரர் விரும்பினால் ஒத்தாசையுடனும், 5 வராகன் வரையில் அதிகாரமும் இருக்கவேண்டும். அவர் களில் அப்பீல் அதிகாரம், அப்பீலில் பஞ்சாயத்துக்கும் விட்டு 10 வராகனுக்கும் அதிகப்படக்கூடாது. ஜில்லா கோர்டார் மேல் கோர்ட்டுக்கும் அனுப்பலாம், சில வழக்குகளை.

71 ம் பாரா.—1815-ம்ஞு போர்டின் நடவடிக்கை.

பழைய கால முறைப்படி கிராமாதிகாரிகளையும், பஞ்சாயத்துகளையும் ஏற்படுத்துவதுடன் ஜில்லா பஞ்சாயத் தும் ஏற்படின் கீழ்த்தர கோர்ட் ஆபீசர்களால் சில இச்சைகளுக்கு கட்டுப்பட்டு நியாய மற்ற விஷயங்களைச் செய்து அதைக்கொண்டு நடவடிக்கை நடத்தி கஷ்டப்படும் ஆங்கிலேய நீதிபதிகளுக்கு ஒரு சகாயம் ஏற்படும். போர்டிலும் கர்ணமும் கவனிப்பதில் ஸ்டாம்பு செலவும் நீக்கி சௌகர்யம் அளிக்கப்படும். இதனால் பழயபடி வீடுகள்தோரும் அருகேயே நியாயம் வழங்க வசதி ஏற்படும். அத்துடன் அருகேயே இருப்பதால் உண்மை களும் நியாயங்களும் தெரிந்து நீதி வழங்க எது ஏற்படும்.

நீதி இலாகாவிற் கலந்து பேசியதில் ஏற்பட்ட 1815-ம்ஞு மார்ச்சுமீ 1உயில் விதித்த யதாஸ்தின் சுருக்கம்.

சென்னை சர்க்காரின் தலைமை காரியதரிசியின் முதல் கமிஷனரின் கடிதம் படிக்கப்பட்டது.

4. கீழ்க்கண்டன நீதிமுறையில் திருத்தங்கள். அவைகளைக்கட்டாயம் அமுலுக்கு கொண்டுவரவேண்டும். மாற்றவே இடமில்லை. இதில் சர்க்காருக்கு எப்படி செலுத்துவதென்பதைப்பற்றி வேறுவித அதிகாரமும் இல்லை.

(1) சுதேச பஞ்சாயத்திலிருந்தோ, ரிஜிஸ்டாரிடமிருந்தோ ஜில்லா கோர்ட்டிற்கு வந்த அப்பீலுக்கு வேறு அப்பீலில்லை.

(2) கிராம பஞ்சாயத்துகள் வழக்கு விசாரிக்கலாம்.

(3) ரெகுலேஷனில் கூறியபடி போர்டுகள் கமிஷனரின் வேலைகளை எப்படிச் செய்யவேண்டுமோ அப்படி தங்கள் அதிகாரத்தில் செய்யவேண்டும்.

(4) ஜில்லா கோர்ட்டுக்கும், கிராம கோர்ட்டுக்கும் இடையே உள்ள நீதிமன்றங்களை அழித்து, ஒரு ஜில் லாவில் மாருத சம்பளத்துடன் தாவாவுக்கு ஒரு கட்டணத்தோடு 3, 4 அல்லது 5 கோர்ட்டுகள் இருக்க வேண்டும் இவைகளை உடனே அமுலுக்குக்கொண்டுவரவேண்டும்.

(5) சுதேச ஜில்லா நீதிபதியின் கீழ், கிராம பஞ்சாயத்தை விட அதிகம் பேர் கொண்ட பெரிய பஞ்சா யத்துகள் வேண்டும்.

(6) போர்டுகளும் கர்ணங்களும் விசாரிக்கும் தாவாக்களுக்கு ஸ்டாம்பு இல்லை.

(7) கீழ் கோர்ட்டிலிருந்து சட்ட ரிபோர்டுகள் வாங்கி சர்க்காருக்கு வருஷம்தோறும், ஆறு மாதம் தோறும், எத்தனை எம்மாதிரி வழக்குகள் என்று கீழ்க்கண்ட விபரங்களுடன் அனுப்பவேண்டும்.

(1) எத்தனை வழக்குகள் இப்போதுள்ள, இனி ஏற்படும் கோர்ட்டுகளால் தீர்மானிக்கப்பட்டது. தள்ளப் பட்டது, அப்பீல் செய்தார்களா இல்லையா, எந்த கோர்ட்டிற்கு, காயமாயிற்று, மாற்றினார் களா ?

(2) புது வியாஜ்ய, அப்பீல் கோர்ட்டுகள் வழக்கு எத்தனை என்றும் எந்த விகிதம் உறுதி, தள்ளு படியாயிற்றென்றும் சராசரியாக எந்தத் தொகைக்கு வழக்கு நடக்கிறது, எந்த விஷயமாய் கக்ஷிக்காரரின் நிலைமை, நல்மானால் விபரம், வரி கவர்ன்மெண்டுக்கா ஜமீன்தாரருக்கா, நிலச் சுவன்தாருக்கா என்ற தகவல்கள்.

(8) கிராமப்போலீஸ் ஜமீன்களில் நாட்டுக்குத்தக்கபடி திருத்தியமைத்து மாஜிஸ்ட்ரேட் பார்வையில் வைத்தல். எங்கெங்கு சரியாக இல்லையோ ஆங்காங்கு பழைய திரனுக்கு சென்னை சர்க்காரின் ஆதிக்கத்திலுள்ள இடத்தில் வைத்தல்.

(9) கிராமப் போலீசானதும், தரோகா ஸ்தாபனத்தையும், போலீஸ் படையையும் குறைத்தல்.

(10) கிராம, ஜில்லா போலீஸ், கலெக்டர் மேல்பார்வையில் இருத்தல்.

(11) ஜில்லா போலீஸ்கள் தரோகா தலைமையில்லாமல் தாசில்தாரின் கீழ் இருத்தல்.

(12) கலெக்டர் ஏஜண்டுகள் போலீஸ் நிர்வாகத்தில் ஜில்லா அமில்தார்களும், தாசில்தார்களும், கிராம போர்டில் கர்ணம், பள்ளையர், வேண்டும்போது அமில்தார், பியூன் கப்வாலா அவர்கள் சேவகர்களாலும் உதவப்பட்டு இருப்பார்கள்.

(13) ஜில்லா மாஜிஸ்ட்ரேட் கலெக்டராக மாறுவார்.

(14) சரியான வழியாய் பட்டா ரெகுலேஷனை ஆதிக்கத்தில் கொண்டுவருவதும், கலெக்டருடைய மேற்பார்வையில் மாஜிஸ்ட்ரேட் ஹோதாவில் கவனித்தலும்.

(15) ஜமீன்தாரிடமிருந்து வரி பாக்கிக்காகவரும் விண்ணப்பங்களை கோர்ட்டார் பட்டா இல்லாமல் பார்க்கக்கூடாது.

(16) கலெக்டர் உத்தரவன்னியில் ஜமீன்தார்கள் ஜப்தி செய்யக்கூடாது.

(17) பஞ்சாயத்தின் சிபார்சுபேரில் கலெக்டர் எல்லையைப்பற்றி தீர்ப்புக்கூறவேண்டும்.

ரெவின்யூ விவகாரங்களைக் கவனிக்க, மேற்கண்ட அம்சங்களை கவனித்து சட்டசபை நீதியிலாகாவைத் திருத்தியமைக்கவேண்டும். லார்ட் காரன்வாலிஸ் 60,000 வழக்குகள் தீராமல் இருப்பதால் உள்ள கெடுதிகளைப்பற்றி எப்படி குடிகளையும், நாட்டு நலனையும் வேர் பறிக்கும் எனக் கூறியிருக்கிறார். அதனால் அவர் கோர்ட்டைத் திருத்தியமைப்பதில் நீதிபதிகள் ஸ்டாம்பு இல்லாமலும், தாவாக்கள் பேரில் உடனுக்குடனே நீதிபுரியக்கூடியபடி செய்யவேண்டுமென்றார். முன்சீப், கர்ணம் முன்வரும் வழக்குகளுக்கு ஸ்டாம்பு இல்லை என்றும் கூறினார். 1815-ம் வருஷம் மார்ச்சுமீ 23உயின் போர்டார் அபிப்பிராயப்படியும் 1815-ம் வருஷம் மார்ச்சுமீ 1உ நீதி இலாகா சிபார்சுப்படியும் விவசாயிக்கும் நிலச்சுவன்தாருக்குமுள்ள விவகாரங்களைத் தீர்க்க கோர்ட்டு திருத்தியமைக்கவேண்டுமென்பது எங்கள் அபிப்பிராயம். அது தக்க பரிகாரம் தரும்.

என் பிரயாணத்தில் தென்னாற்காடு ஜில்லாவில் ஒரு மனுகூட காணோம். இந்தியாவிலேயே எந்த பாகத்திலும் நான் அம்மாதிரி கண்டதில்லை. வந்திருந்த ஒரு சிறு தாவாகூட அற்ப விஷயங்களைப்பற்றி முன்னதே கலெக்டராலும் கவனிக்கப்பட்டதாயிருந்தது. கலெக்டரை நன்கு மதிக்க வேண்டியதே. அந்த கலெக்டர் எல்லோருக்கும் சுலபமாக பேட்டி கொடுத்து அக்கரையுடன் எல்லோருடைய குறைகளையும் விசாரித்து நியாயம் செய்து இருக்கிறார். பொறுமையாகவும் தீரவும் விசாரித்து முடிவு செய்வதால் குடிகளுக்கு அவரிடம் அன்புமிகுகிறது.

இந்த அத்தியாத்தில் எங்கள் முடிவுகள் பின்வருவன :—

பட்டாவும் முச்சிலிக்கையும்.

(1) ஆண்டாண்டு பட்டாவும் முச்சிலிக்கையும் மாற்றுவதை நிறுத்தவேண்டும். நிரந்தரமான குடிவார உரிமையும், வரியும், பட்டாவும் தரவேண்டும். சர்க்கார் எப்படி நிலச்சுவன்தாருக்கு கபூலியத்தும் சந்நதும் தருகிறதோ அம்மாதிரி நிரந்தரமாய் பட்டா தந்துவிடல் வேண்டும். எஸ்டேட் லாண்ட் ஆக்டின் 4-வது அத்தியாயம் ஒழியவேண்டும்.

ஜப்தியும் விற்பனையும்.

(2) (a) நிலச்சுவான்தாருக்கு ஜப்திசெய்யவும், பொருள் விற்கவும் அதிகாரம் இருக்கக்கூடாது.

(b) விவசாயியை ஜெயிலில் வைக்கக்கூடாது.

(c) வரிக்காக மாசூலில் நிலச்சுவன்தாருக்கு முதல் உரிமை இருக்கவேண்டும். எப்படி சர்க்கார், பேஷ்கஷை நிலச்சுவான் தாரிடமிருந்து வசூலிக்கிறார்களோ, அப்படி அறுவடையான பிறகு பிரத்தியேக ரெவின்யூ கோர்ட்டு மூலம் ஜப்தியும், விற்பனையும் செய்யவேண்டும்.

நீர்ப்பாசன வேலைகள்.

(3) (a) எஸ்டேட் லாண்ட் ஆக்டின் 8-ம் அத்தியாயத்தில் குறிப்பிடும் நீர்ப் பாசன வேலை விஷயமாய் நாங்கள், ஜமீன்தாருக்கு வரியில்லாமல் விவசாயி முதல் இரண்டாம் போகங்களுக்கு நீர் பாய்ச்சிக் கொள்ள உரிமை இருக்கவேண்டும். இது விவசாயிக்குள்ள சொந்த உரிமை. 1865-ம் வருஷம் மெட்ராஸ் இரிகேஷன் செஸ் ஆக்டுகளிலும், மற்ற சட்டங்களிலும், ஜமீன்தாரின் உரிமைகளைப் பற்றிப் பேசுகையில், விவசாயிக்கு மேற்சொன்ன உரிமை சொந்தமென்றுதான் முடிவு. விவசாயியின் உரிமையை காலத்தில் அனுபவிக்க, மெட்ராஸ் இரிகேஷன் செஸ் ஆக்டை திருத்தி அமைக்க வேண்டும்.

(b) பண்டைக்காலம் தொட்டு அரசர்களுக்கு வரி கொடுத்தது

(1) பொது உபயோகத்திற்குள்ள வசதிகளைக் காப்பாற்றுவது.

(2) ராஜாங்கம் நடத்தவும், ஜனங்களின் பாதுகாப்புக்கும் ஆனதால் இப்போதும் தரும் வரி சர்க்காருக்கானதாலும், ஜமீன்தாரிடமிருந்தாலும் சர்க்கார் சார்பிலுமானதாலும், நிலச்சுவான்தார்கள், நீர்ப்பாசன வேலைகளைக் காப்பாற்றுவதோடு விவசாயி தன் நன்மைக்காக புது வேலைகளும் செய்ய வேண்டும்.

(c) நிலச்சுவான்தார்கள் நீர்ப்பாசன வேலைகளை மராமத்து செய்வதாலும், புது வேலைகள் செய்வதாலும், விவசாயியிடமிருந்து அதிக வரி வாங்கவோ, செலவில் ஒரு பகுதி வாங்கவே கூடாது. முன்பே கூறியுள்ள கார்வெட்நகரம் ஜமீன்தார் வழக்கு இதற்குச் சான்று.

(d) இதனால் நாங்கள் எஸ்டேட் லாண்ட் ஆக்டின் 7-ம் அத்தியாயத்தைத் தள்ளிவிடவேண்டுமென்றும், அதற்கு பதில் சுலபமாக நிலச்சுவான்தார்களை மேல்க்கண்டபடி வேலைகள் செய்ய ஏற்பாடு செய்யவும், அப்படி மீறினால் சர்க்கார் அவைகளைச் செய்து, அவர்களிடமிருந்து வரியைப்போல் வசூலிக்கவும் ஏற்பாடு செய்யவேண்டுமென்கிறோம்.

8 அணா கட்டணத்தில், விவசாயிக்கு நீதி தரவேண்டும். காலமும், பணமும், செலவாகும் தாவா செய்ய விடக்கூடாது.

காட்டு உரிமைகள்.

கிராம ஏற்பாடுகள் இருந்தபோது கிராமத்தாரிடமும், அது மாறி ரயத்வாரி முறை வந்தபோது ஒவ்வொரு விவசாயியிடமும், மாசூலான, மாசூலாகாத காட்டுப்புறம்போக்கு, முதலிய இடங்களின் பூமிக்கு உரிமை இருந்தது. அதனால் காட்டுப்புறம்போக்கு, பொது நிலங்கள் முதலியவற்றில் நிலத்தின் உரிமை விவசாயிக்கே. அவைகள் கிராமத்தாரின் பொது உடமைகளாய் இருந்தன. நேராகவும், பத்திரம் மூலமும், சட்டமாயும், தீர்ப்பாலும், விவசாயிக்கு காட்டிலும் பொது நிலங்களிலும், மேய்ச்சல், விறகு வெட்டல், தழை கழித்தல் முதலிய உரிமைகள் உண்டு. இலவசமாய் குடும்ப உபயோகத்திற்கு இவைகளில் விவசாயிக்கு சொந்த உரிமை இருக்கிறது. பொது நடைவழி, பொது நிலம், குன்று, காட்டு புறம்போக்கு, விவசாயிகளின் பொது உடைமைகள் அவர்களுக்கு, காட்டிலுள்ள லோகங்களிலும் சுண்ணாம்பு, கல், பூமி, சாரம், மரம், செடி, கொடி, புல், நார், பூ, பழம், விதை, கிழங்கு, வாசனைத் திரவியங்கள், தேன், அரக்கு, கோந்து, கொம்பு, எலும்பு, தோல், தந்தம் முதலியவற்றிலும் பொது உரிமையுண்டு.

(4) பூமிக்குள்ளிருக்கும் உலோகங்களில் நிலச்சுவான்தாருக்கு உரிமையில்லை. சநந்தில் அவ்வித பாத்தியதை தரவில்லை. வரி வசூலிக்கவும், பயிர் நிலத்தை பயிரிட விட்டு பர்மனெண்ட் செட்டில்மெண்டில் ஏற்பட்ட வரிக்கு மேல் வரி விதித்து வாங்காமலும் செய்யத்தான் அவர்களுக்குள்ள அதிகாரம் சநந்த்-இ-மில்கியத்-இஸ்திம் ரார் மூலம் தரப்பட்டது.

"நீங்கள் விவசாயியிடம் நம்பிக்கையாக நடந்துகொள்ளவேண்டும். அவர்கள் நலம் உங்களுடையது. அவர்களை ஜாக்கிரதையாகவும், அன்பாகவும், தைரியம் சொல்லி விவசாயத்தை விருத்தி செய்ய உதவி நீங்கள் எப்போதும் சுகமாக இருக்க வழி தேடவேண்டும்". என்று கூறுகிறது.

எவ்விடத்திலும் பூமியிலுள்ள உலோகங்களில் உரிமையிருப்பதாய்க் கூறவில்லை. அது விவசாயிகளுடையதே. பூமி சாரத்தின் பழைய சொந்தக்காரர்களானதால் அவ்வுரிமை விவசாயிக்கே உடையது. ஆனால் அமுலில் இருக்கும் சர்க்காருடைய உரிமைகளுக்கு உட்பட்டது. ரயத்து நிலத்திலுள்ள உலோகங்களில் நிலச்சுவான்தாருக்கு ஒரு உரிமையும் இல்லை.

சுரங்கங்கள்.

நெ. 25 போர்ட் நிரந்தர உத்தரவில் சுரங்கங்கள் மூன்று வகைப்படும்—

(1) சர்க்கார் சுரங்கம்.

(2) சொந்தச் சுரங்கம்.

(3) பாகமுள்ள சுரங்கம்.

1871-ம் ஞு பின் ரயத்வாரி நிலங்களில் உள்ளேயிருக்கும் உலோகங்களில் சர்க்காருக்குத் தந்தவைகள் சர்க்கார் சுரங்கங்கள். 1871-ம் ஞு முன் நிலச்சுவான்தாருக்குக் கொடுத்த கரம்பு நிலங்களின் உலோகங்களில் சர்க்கார் பாத்தியதையை வைத்துக்கொள்ளவில்லை. 1871-ம் ஞு பின் இது சர்க்காரால் கைப்பற்றப்பட்டது. 1871-ம் ஞு பிறகு கொடுத்த நிலங்களும், கரம்புகளும் சர்க்கார் சுரங்கங்கள். இனாமும், பூஸ்திதிகளும் சொந்தச் சுரங்கங்கள். பர்மனெண்ட் செட்டில்மெண்டும்போது இனாம்தார்களுக்காவது, சொந்தக்காரர்களுக்காவது கொடுத்த கிராண்டின் பொருள் தெரியாமல் இப்பாகுபாடுகள் செய்யப்பட்டன.

ஆங்கில அரசாங்கத்தின் முன் விவசாயிகள் பயிரிட்டார்களேயன்றி சுரங்கவேலை செய்யவில்லை. சநந்துகள் பூமியின் மேல்ப் பாகத்தின் பாத்தியதையைப்பற்றித்தானிருக்கின்றன. சநந்தின் 12-ம் பிரிவு விவசாயம், அதன் விருத்தியைப்பற்றி பேசுகிறதேயன்றி, நிலத்தின் கீழேயுள்ள விஷயங்களைப் பற்றி ஒன்றுமில்லை.

(c) ரிசர்வ் செய்யாத காடுகளில் விவசாயிக்கு தடங்கலில்லாத உரிமையுண்டு. ரிசர்வ் காடுகளில்க்கூட எப்போதும் அனுபவித்த பாத்தியதைகளை, இலவசமாய், சர்க்கார், நிபந்தனைகளுக்குள், பொது நிலத்துக்கென வைத்திருப்பதால், அனுபவித்துக் கொள்ளலாம்.

(d) ரிசர்வ், இல்லாத காடுகளில் உண்டாகும் வரும்படியை விவசாயி, நிலச்சுவான்தார் சொந்த நிலமுடையவரானால், அவரும் சேர்ந்து அனுபவிக்க உரிமையுண்டு.

(e) காட்டில் விவசாயிக்கு உரிமையிருந்தாலும், காடு இருக்கவேண்டியது பொது நலத்துக்கு அவசியமானதால் அதை அழிக்க விடக்கூடாது. காடுகளை அழித்துவிட்டால் காலத்தில் தக்க மழை பொழியாது. கிராமப் பஞ்சாயத்து காட்டை கவனிக்கக்கூடிய பொறுப்பு ஏற்கும் நிலைமை வரும் வரையில், சர்க்கார் இதை கவனிக்கவேண்டும்.

(f) இப்போதுள்ள காட்டுப் பஞ்சாயத்துகள் சரியாய் நடக்கவில்லை. பல பிராதுகள் காட்டு பஞ்சாயத்து மீது வருகின்றன. சில இடங்களில் காடு காட்டுப் பஞ்சாயத்தாரிடம் விடப்பட்டிருக்கிறது. அவர்கள் அதை கண்ட்ராக்டர்களுக்கு லாபத்துக்கு விட்டு, குடிகளுக்கு பெரும் இடையூறுகளைத் தருகிறார்கள்.

காட்டு இலாகாவில் பெரும் பதவியில் வேண்டாத பல வேலைகள் இருக்கின்றன. திரம் குறையாமல் காட்டு இலாகாவை திருத்தியமைப்பதில் மேலே கூறிய வேலைகளில் குறைவு செய்து எடுத்துவிடலாம்.

பட்டா நிலங்களிலுள்ள மரங்கள் விவசாயிகளுடையன. ஹாவலி எஸ்டேட் விற்பனையில் நிலச்சுவான்தாருக்கு புளியமரத்தில் மட்டும் பாத்தியதை உண்டென்றும், தென்னமரத்திலும், தேங்காயிலும் உரிமையில்லையென்றும் சொல்லியிருக்கிறது. எஸ்டேட் லாண்டு ஆக்டுக்கு பின்பு 1911-ம் ஞு வெங்கடகிரி ராஜாவுக்கும், குடிகளுக்கும் மர உரிமைபற்றி ஒரு வழக்கு நடந்தது. 25-எம்-252-ல் வழக்கு 1908-ம் ஞு அக்டோபர் மீ 6உ-ல், மர உரிமை குடிகளுடையதென்று தீர்ப்புக் கூறியிருக்கிறார். அதனால் மரமும், மாசூலும், விவசாயிக்கே சொந்தம். ஜமீன்தாருக்கு மேல்வாரமும், குடிகளுக்கு குடிவார உரிமையும் உண்டு.

(5) சர்வேயும் குத்தகை பைசல் செய்வதும்.—எஸ்டேட் லாண்டு ஆக்டின் 11-ம் அத்தியாத்தில் சர்வேயும் உரிமை தஸ்தாவேஜு ஏற்படுத்துவதும் என்பதில், உண்மையான விலை விசாரணையின் உதவியைக்கொண்டு எப்படி நியாயமான வரியை கோர்ட்டார் முடிவு செய்வது என்பதைப்பற்றி ஏற்பாடுகள் இருக்கின்றன. இது ரயத்தின் நிலங்களுக்கல்ல. அதனால் இதைத் தள்ளிவிடவேண்டும். பர்மனெண்ட் செட்டில்மெண்டு போது இதை நிர்ணயித்திருக்கிறது. சர்வே செய்யாத இடங்களில் யார்யார் எவ்வளவு நிலம் வைத்திருக்கிறார்கள் என்று தெரிய சர்வே செய்யவேண்டும்.

குத்தகைத் தொகையைக் குறைப்பது (ரெமிஷன்ஸ்).—ஹிந்து அரசர் காலம் தொட்டு வரி குறைப்பது இருந்து வருகிறது. ஆதியில் ஏற்பட்ட வாரமுறைக் காலத்திலிருந்து இது ஒரு இயற்கை உரிமை. மாசூலில்லாதபோது சர்க்காரும் விவசாயியுடன் கஷ்டப்படவேண்டும். வரியைக் குறைக்கவேண்டும். 1802-ம் ஹு பர்மனெண்ட் செட்டில்மெண்ட் ரெகுலேஷன்படி பணமாக வரி முடிவுகட்டியபின் விவசாயிக்கு வரியைக் குறைப்பதில்லை. நிலச்சுவான்தாரோ வரி வசூலிக்கும் ஏஜெண்டானதால் தனக்குப் பெருமலாபமுள்ளதானாலும் வரிகுறைத்தல் கேளாமல் கட்டமுடியும். விவசாயிக்கோ மழையில்லாததாலும், வெள்ளத்தாலும், பூச்சிகளாலும் கஷ்டமேற்படுகிறது. கடவுள் செயலாலோ, மற்றபடியோ, விளையாவிட்டால் விவசாயிக்கு ரெமிஷன் தரவேண்டும்.

தீர்ப்பு ஸ்தலம்.—இப்போதுள்ளபடி இருதரத்தாருக்குமுள்ள வழக்கைத் தீர்க்க செலவோ, ரெவின்யூ கோர்ட்டோ தக்கதல்ல. அதிக செலவுள்ளது. வீண் காலதாமதமும் ஆகிறது. புது கோர்ட்டுகள் ஏற்படுத்த இந்த கஷ்ட காலத்தில் முடியாது. திரமையுள்ள சில ரெவின்யூ அதிகாரிகளை இதை மட்டும் விசாரிக்க விட்டுவிட வேண்டும். ரெவின்யூ போர்டார் அப்பீல் வைத்துக் கொள்ளக்கூடாது. சர்க்காரும் இதில் பிரவேசிக்கக் கூடாது. கவர்ன்மெண்ட் ஆப் இந்தியா ஆக்டிலுள்ளபடி பிரத்யேக நியாயாதிபதிகளைக்கொண்டு, அப்பீலும் ரிவிஷனும் கவனிக்கவேண்டி, 500 ரூபாய் சம்பளத்துக்குள் சென்னையை தலைமை இடமாகக் கொண்டு ஏற்பாடு செய்யவேண்டும். அந்தத் தீர்ப்பு முடிவானதாக இருக்கவேண்டும். முனிசிபல் கோர்ட்டார் ஒன்றும் இதில் பிரவேசிக்கக்கூடாது.

1210-ம் ஹு பசலியில் நில அளவைக்காட்டும் விபரம்.

எங்கள் முன்னுள்ள சாக்ஷியங்களிலிருந்து பர்மனெண்ட் செட்டில்மெண்டுக்கு பிறகு வரி மாறாமல் தீர்மானித்துவிட்டதால், இருதரப்பினரும் உயர்த்தவோ, குறைக்கவோ, கேட்பது சரியல்லவென்று சொன்னோம். அதே போல் குடிவாரத்தையும் நில உரிமையையும் மாற்ற முடியாதென்றோம். பர்மனெண்ட் செட்டில்மெண்டிற்கு 100, 150 வருஷம் பின்பும் ஏற்படும் தகராறுகளால் பர்மனெண்ட் செட்டில்மெண்டில் எப்படி வரி நிர்ணயித்தார்களோ அப்படியே பயிருள்ள நிலங்களுக்கும் செய்யவேண்டும்.

கரம்மை நிலங்களில் பயிர் செய்தால், குத்தகை பர்மனெண்ட் செட்டில்மெண்ட்படி பயிர் ஏறிய நிலங்களுக்கு உள்ள விகிதத்தைவிட அதிகம் கூடாது. இதற்குப்பின் எவ்வளவு நிலங்கள் உழவிலிருக்கிறதென்பதைக் கணக்கிடுவோம். மொத்தத்தில் பர்மனெண்ட் செட்டில்மெண்டில் ஏற்பட்ட நிலத்தைக் கழித்து புதிதாக உழவில் வந்த நிலக்கணக்கை எடுப்போம். அப்போது நிலச்சுவான்தார் விவசாயியிடம் எவ்வளவு மொத்த வரி வாங்கலாமெனத் தீர்மானிக்கலாம். நிலத்திற்குத் தக்கபடி, தரம்வாரி வரி தீர்ந்திருக்கிறதா என்பதைப் பற்றி கவனிப்பது கஷ்டம். அதனால் எல்லா பயிரேறிய நிலங்களுக்கும் பர்மனெண்ட் செட்டில்மெண்ட் போது ஏற்பட்ட வரியைப் போடுவதே சரி என்கிறோம். அப்படிச் செய்தால் அது ஒரு நிரந்தர நிலையில் போர்டாருடையவும், சர்க்காருடையவும், எண்ணப்படியாகும்.

இனிமேல் சாகுபடி செய்யப்படும் நிலங்களுக்கு வேறு தனிப்பட்டா கொடுத்து கிஸ்தி நிர்ணயித்து எப்போதுமுள்ளபடி செய்யவேண்டும்.

இதற்குத் தக்க உதவிகளும் ஆதாரங்களும் சர்க்கார் முன்னும், சட்டசபை முன்னும் வைக்கவேண்டும். இதற்காக பர்மனெண்ட் செட்டில்மெண்டுக்கு முன் 1210-ம் பசலியில் இருந்த நிரந்தர ஜமீன்தாரிகளையும் பயிரான நில விஸ்தீர்ணங்களையும்காட்டும் ஒரு தஸ்தாவேஜை ஏற்படுத்தியிருக்கிறோம். இது சர்க்கார் ரெக்கார்டுகளிலிருந்து தயாரித்தது. அப்போதைய விஸ்தீர்ணமும், வருவாயும், கரிசை வீதம் கணக்கிடப்பட்டிருக்கிறது. கீழே அந்தக் கணக்கை பிரசுரிக்கிறோம். அது நீண்டது. பார்ப்பதற்கும் புரிந்துகொள்வதற்கும் அது ஏதுவானது. அது சுமார் எல்லா எஸ்டேட்களையும் உடையது. மற்றவைகளுக்கு இவைகளை ஒத்திட்டுப் பார்த்துக்கொள்ளலாம். வெப்ஸ் ரிப்போர்ட்டில் "கன்வர்ஷன் ரேட்டில்" பர்மனெண்ட் செட்டில்மெண்ட்போது பயிரான நில விஸ்தீர்ணம் கிடைக்கிறது. "கன்வர்ஷன் ரேட்" என்ன என்பது விஜயநகரம் எஸ்டேட்டின் அத்தியாயத்தில் இருக்கிறது.

சாசுவத நிர்ணயமுள்ள ஜமீனும், பயிரான நிலக்கணக்கும், வரி நிர்ணயிக்கப்பட்ட வருமானமும், பேஷ்கஷூம்.

(1) கஞ்சம், (2) விசாகபட்டணம்—சர்க்கார் பிரதேச எஸ்டேட்டுகள்.

ஜமீன் பெயர். (1)	எத்தனை கிராமம். (2)	பயிரான நில அளவு. மேல் பூமி. (3-a) கர்ஸஸ் P. T. A.				பயிரான நில அளவு. கீழ் பூமி. (3-b) கர்ஸஸ் P. T. A.					எந்த வருமானத்தைக்கொண்டு வரி நிர்ணயம் செய்தது. (4)	வருவாய் மூலம். (5)	தற்போதிய பேஷ்கஷ். (6)	தீர்ந்த பேஷ்கஷ். (7)	ரிமார்க்குகள். (8)
						விசாகபட்டணம் 2-வது டிவிஷன்.									
விஜயநகரம் ..	1,157	24,849	0	0	0	54,712	0	0	0	(a) (b)	7,16,708 7,21,518	..	..	5,00,000	கரம்பு இருப்பதால் 2/3 வரவும் ரூ. 22,000.
பாலக்கொண்டா ..	225	1,915	0	0	0	10,226	0	0	0	(a) (b)	77,705 76,339	..	..	55,000	2/3 வரவும் ரூ. 3,600 நல்ல நிலம். குறையா வரவு.
மிங்கி	68	777	0	0	0	2,849	0	0	0	(a) (b)	29,045 29,468	..	..	18,500	2/3 வரவும் ரூ. 1,100 குறைவும் நிலம் நல்லதல்ல.
குருப்பம்	66	968	0	0	0	2,727	0	0	0	(a) (b)	24,991 25,210	..	..	14,500	2/3 வரவும் ரூ. 2,200 குறைவு. பியூன்கள் குறைவு.
சங்கம்வலசா ..	20	229	0	0	0	791	0	0	0	(a)	9,922 10,065	..	..	6,700	2/3 வரவும் ரூ. 100 நல்ல நிலம்.
பீமடு	15	222	0	0	0	571	0	0	0	(a)	9,278 9,589	..	..	5,000	2/3—ரூ. 2,000 நல்ல நிலம் இல்லை.
தாடபன்பேட்டை ..	15	1,622	0	0	0	234	0	0	0	(a) (b)	7,480 7,438	..	..	3,000	2/3 வரவு —ரூ. 2,000 குறைத்த பியூன்.

(a) என்பது ரிப்போர்ட்டிலிருந்து எடுக்கப்பட்டது. (b) என்பது ஸ்டேட்மெண்டிலிருந்து கிடைத்தது.

ஜமீன் பெயர். (1)	எத்தனை கிராமம். (2)	பயிரான நில அளவு. மேல் பூமி. (3-a)	கீழ் பூமி. (3-b)		எந்த வருமானத்தைக் கொண்டு வரி நிர்ணயம் செய்தது. (4)	வருவாய் மூலம். (5)	தற்போதிய பேஷ்கஷ். (6)	முடிவான பேஷ்கஷ். (7)	குறிப்புகள். (8)
வல்லூர்	153	2,105 0 0 0	5,670 0 0 0	(a)	5,0724	..	..	36,000	2/3 வரவு + ரூ. 2,200.
				(b)	53,243				
பொப்பிலி	193	2,735 0 0 0	12,033 0 0 0	(a)	1,28,240	..	..	90,000	2/3 வரவு + ரூ. 4,500, விருத்தி செய்லாம்.
				(b)	1,26,813				
ஆந்திரா	33	248 0 0 0	375 0 0 0	(a)	3,265	..	..	1,380	2/3 வரவு—ரூ. 800.
				(b)	3,235				
மட்கோல்	103	1,763 0 0 0	5,661 0 0 0	(a)	42,396	..	..	35,000	2/3+ ரூ. 6,800. ஆறுகள் அதிகம்.
				(b)	60,863				
கோல்கொண்டா ..	67	2,538 0 0 0	3,840 0 0 0	(a)	13,130	..	..	10,000	2/3+ ரூ. 2,200.
				(b)	13,124				
காசிபுரம்	1	...	..	(a)	816	..	..	600	2/3+ ரூ. 56.
செவ்வாப்பள்ளி பீமாவரம்.	13	88 0 0 0	32 0 0 0		815	..	..	400	2/3— ரூ. 143.
ஜெய்பூர்	..	..	..	(b)	43,947	..	..	16,000	
பெல்காம்	14	160 0 0 0	1,530 0 0 0	(a)	15,282	..	..	10,500	2/3— ரூ. 200.
				(b)	14,861				
விசாகபட்டணம் 3-வது டிவிஷன்.									
கிமிடி	..	..	..		1,05,742	..	80,000	80,000	2/3+ ரூ. 9,500.
சிகாகோல் ஹவலே— போலங்கி முதல் கரகசா வலாசா வரை.	..	2,621 13 0 0	214 2 0 0	உப்பு		..	..	..	
மொத்தம் ..	318				2,91,763			2,87,000	
தெக்கலெ	199	..	..		..	..	..	45,000	
இச்சாப்பூர் ஜில்லா—சிக்காகோலின் வடபாகம்.									
கும்சூர் ஜமீன் ..	501	..	..		71,297	..	..	70,000	
தாரகூட்	127	..	..		59,413	உப்பு	..	25,000	2/3— ரூ. 13,504.
ஹாட்டூர்	223	..	..		1,50,000	உப்பு	..	55,000	2/3— ரூ. 42,939.
விஜயநகரம் ..	..	..	..		90,000	..	..	23,000	2/3— ரூ. 35,335.
பிரதாகபெரி ..	110	..	..		70,881	..	..	20,000	2/3— ரூ. 26,480.
துர்லா	48	..	..		15,348	..	..	4,000	2/3— ரூ. 5,895.
பாலூர்	33	..	..		5,363	..	..	1,200	2/3— ரூ. 1,842.
உஜபா	9	..	..		..	..	..	1,200	2/3— ரூ. 1,714.
பிரிதா	71	..	..		11,886	காடு (உடன்)	..	4,500	2/3— ரூ. 2,902.
சுரங்கி	47	..	..		18,709	..	..	3,500	2/3— ரூ. 8,731.
சிகட்டி	107	..	..		..	..	..	34,000	2/3— ரூ. 11,797.
ஜெர்டா	30	..	..		8,993	..	..	2,000	2/3— ரூ. 3,589.
புர்ராக்பூர்	..	75	..		27,738	..	..	4,000	2/3— ரூ. 13,583.
சீர்கூர்	..	32	..		..	..	..	5,500	2/3— ரூ. 6,137.
சூர்டா	..	55	..		..	..	..	500	2/3— ரூ. 1,167.
பூடாசிங்கி	..	14	..		..	..	..	14,000	2/3— ரூ. 9,081.
மந்தசா	..	90	..		..	..	..	19,000	2/3— ரூ. 19,349.
கலிக்கொட்டா ..	..	58	..		..	..	..	7,000	2/3— ரூ. 3,381.
ஜலந்திரா	..	158	..		..	..	..	60,000	
மேகரி	..	182	..		..	..	..	..	
ஹேபேலீஸ் ..	..	..	..		..	..	..	..	
பார்வா பர்கார்ணு ..	..	..	..		..	..	..	7,800	
மாண்ட்ரெட்டி பர்காணு.	..	..	..		..	..	..	18,000	
மோகரி	182	..	..		,10,802	..	..	80,200	
கூர்லமூட்டா ..	7	..	..		..	..	..	4,800	
அன்னபூர்குண ..	7	..	..		..	..	..	10,700	
ஹில்கிலிமூத்தா ..	4	..	..		..	..	..	6,500	
தெ. பூர்குண ..	..	..	..		..	..	..	1,800	
ராமன்சி மூத்தா ..	..	..	..		..	..	..	3,200	
பவான்பூர்	..	..	..		..	..	..	5,000	
மசூலிப்பட்டணம் ஹாவலி நிலம்.									
நெல்லபில்லி ..	16	..	..		..	..	..	2,498	பகோடா.
பாடாமலங்கா ..	6	..	..		..	..	..	2,324	,,
(1) மசூலிப்பட்டணம் முகலத்தூர் ஹாவலி.									
அட்லிமூட்டா முதல் சிறுவீடு வரை.	312	17,140 14 10¾			1,98,873	37-64	..	1,82,757	
(2) கார்கொண்டா ஹாவலி டிவிஷன்.									
முறை	14	..	..		..	..	..	5,222 0	
கபாவரம்	15	..	..		..	..	..	4,626 0	
ரகுடாவபுரம் ..	13	..	..		..	..	..	5,989 0	
நாகம்பின்னி ..	13	..	..		..	..	..	4,392 0	
நபாப்பெட்	1	..	..		..	..	..	330	
நெல்லம் பொள்ளம்.	8	..	..		..	..	..	4,688 12	
ராஜமந்திரி	6	..	..		..	..	..	3,559	

(a) என்பது ரிப்போர்ட்டிலிருந்து எடுக்கப்பட்டது. (b) என்பது ஸ்டேட்மெண்டிலிருந்து கிடைத்தது.

ஜமீன் பெயர்.	எத்தனை கிராமம்.	பயிரான நில அளவு. மேல் பூமி.	பயிரான நில அளவு. கீழ்பூமி.	எந்த வருமானத்தைக் கொண்டு வரி நிர்ணயம் செய்யப்பட்டது.	வருவாய் மூலம்.	தற்போதிய பேஷ்கஷ்.	முடிவான பேஷ்கஷ்.	குறிப்புகள்.
(1)	(2)	(3)		(4)	(5)	(6)	(7)	(8)
	கரிசை.		கரிசை.					
4-வது டிவிஷன்—மசூலிபட்டணம்.								
கூண்டபள்ளி ..	14	..	..	3,886	..	..	4,500	
ஊலூர்	10	..	..	7,637	..	..	6,000	
குண்டூர்	32	..	..	8,135	..	..	7,600	
ஆச்சிமுனுல் ..	6	..	..	765	..	..	740	
இன்னிகுத்ரு ..	13	..	..	2,436	..	..	1,800	
பெத்தன்னு ..	17	..	..	3,074	..	..	2,660	
தீவி	16	..	..	21,812	..	..	17,000	
ஆறுதீவு	6	..	..	2,462	..	..	2,500	
ஹைஸாம்பட்டம் ..	36	..	..	2,03,022	..	..	17,600	
ஹடுகமா ஜமீன் ..	123	..	..	39,968	..	..	36,000	
தேவர்கோட்டா ..	66	..	..	44,014	..	..	29,340	
சார்மஹால் ..	68	..	..	52,229	..	..	34,820	
பிஜோரா	48	..	..	15,504	..	..	10,338	
மைலாவரம் ..	53	..	..	6,140	..	..	5,200	
மடுகுட்டோ	71	..	..	8,618	..	..	5,746	
முன்னிகலா ..	19	..	..	3,856	..	..	1,285	
லிங்காகிரி	6	..	..	409	..	..	139	

தென்னாட்டுப்பாளையங்கள்.

பெயர்.	எத்தனை கிராமம்.	நஞ்சை.	புஞ்சை.	மொத்த வரவு.	வரவுமூலம்.	முன் பேஷ்கஷ்.	தீர்மான பேஷ்கஷ்.	குறிப்பு.
(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)	(8)	(9)
ராமநாதபுரம் ..	2,152	..	..	1,42,100 0 0	..	60,857	94,733	வரவில் 2/3 பங்கு.
சிவகங்கை	1,937	..	..	1,25,626 0 0	..	50,000	75,000	
திருநெல்வேலிப் பாளையங்கள்.								
எட்டயாபுரம் ..	110	..	..	24,166 24 0	..	6,208 32	13,000	மொத்த வரவில் பெரிய பாளையங்களுக்கு 54·75 சதமும் சிறிய வைக்கு 41-49 சதமும்.
சிவகிரி	103	..	..	27,777 28 0	..	6,208 32	16,000	
ஊத்துமலே ..	64	..	..	15,000	..	4,515 20	7,777	
சொக்கம்பட்டி ..	55	..	..	13,333	..	3,668 32	31,300	
பரியூர்	24	..	..	6,666	..	1,851	3,500	
தலேவங்கோட்டை ..	5	..	..	1,777	..	338	800	
கொடும்பூர்	14	..	..	2,666	..	564	1,100	
பாவலி	14	..	..	1,944	..	649	800	
கொல்லப்பட்டி ..	9	..	..	1,944	..	649	1,000	
அல்லுமஞ்சை ..	20	..	..	2,222	..	564	1,050	
அளகாபுரி	7	..	..	666	..	60	200	
நடுவக்குரிச்சி ..	11	..	..	..	..	874	874	
மணியாச்சி	9	..	..	1,680	..	564	874	
சுருண்டை	7	..	..	440	..	282	200	
சென்னல்க்குடி ..	6	..	..	2,646	..	942	1,300	
மேல்மநதை ..	9	..	..	1,274	..	564	564	
ஆத்தங்கரை ..	6	..	..	2,168	..	959	1,000	
சுண்டியூர்	14	..	..	2,125	..	1,072	1,100	
ஊர்க்காடு	1	..	..	5,675	..	169	3,700	
சிங்கம்பட்டி	1	..	..	3,549	..	174	2,300	
மன்னார்கோட்டை ..	18	..	..	2,480	..	1,411	1,488	
ஆவடையாபுரம் ..	3	..	..	2,117	..	680	1,270	
சாத்தூர்	3	..	..	5,971	..	2,882	3,583	
உப்பத்தூர்	47	..	..	3,857	..	3,217	2,582	
கொல்லன்கொண்டான்	4	..	..	..	..	203	5	
பாஞ்சலம்குரிச்சி ..	104	..	..	23,477	..	6,208	7,042	
குளத்தூர்	10	..	..	1,961	..	564	589	
கவல்ப்பட்டி	19	..	..	4,259	..	733	1,277	
எலேயராம்பண்ணே ..	55	..	..	7,193	..	3,386	5,394	
கொலப்பட்டி ..	70	..	..	6,313	..	3,668	4,734	
நாகலாபுரம் ..	46	..	..	7,954	..	3,668	5,965	
மேற்குப் பாளையங்கள்.								
மேற்குப் பேஷ்கஷ்.								
வெங்கடகிரி ..	971	..	244,259	..	..	21,673	1,11,058	யுத்தத்தொகையுடன்.
காளாஸ்திரி ..	854	..	129,050	..	..	10,775	54,398	
பொம்ரபொல்லம்ஸ்.	653½	..	96,987	..	..	32,586	53,618	
சைதாபூர்	115	..	20,814	..	..	6,600	9,524	
மசூலிபட்டணம் 1-ம் டிவிஷன்.								
பெத்தாபூர் ..	..	..	284,178	..	..	1,94,628	1,90,805	ஷை
பித்தாபூர்	..	..	112,052	..	..	7,26,162	73,994	ஷை
நூஜ்விட் முதல் டிவிஷனும் 2-ம் டிவிஷனும்.								
நூஜ்விட் 1-ம் டிவிஷன்.	..	..	..	91,894	..	..	60,000	
நூஜ்விட் 2-ம் டிவிஷன்.	..	..	..	50,276	..	..	28,000	
				1,42,170			88,000	

மசூலிபட்டணம் 3-ம் டிவிஷன்.

பெயர்.	எத்தனை கிராமம்	நஞ்சை.	புஞ்சை.	மொத்தம் வரவு.	வரவு மூலம்.	முன் பேஷ்கஷ்.	தீர்மான பேஷ்கஷ்.	குறிப்பு.
(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)	(8)	(9)
சிந்தல்பூடி	..	..	..	6,264	..	3,300	3,300	
சென்னூபூந்தா	..	..	..	495	..	225	225	
ராமச்சந்திரபுரம் கோட்டா.	..	..	..	38,698	..	32,154	35,269	
போலாவரம்	..	..	..	57,101	..	32,652	30,200	
தெலசெர்லா	..	..	..	979	..	550	550	
வெள்ளா	..	..	..	616	..	191	413	
வெங்கடய்யாபாலம்.	..	..	..	629	..	250	556	
மூக்கமுல்லா	..	..	..	168	..	38	38	
ஜீனுமூடி	..	..	..	114	..	55	82	
உடலேசாபுரம்	..	..	..	264	..	182	182	
பனங்கபள்ளிபூடி	..	..	..	337	..	159	244	
வாகம்பேட்டா	..	..	..	3,749	..	2,750	2,500	

தெற்குப் பாளையங்கள்.

சாசுவத பைசல் ஏற்பட்ட ஜமீனும், பயிராகும் நிலமும், வரவும், பேஷ்கஷ் எவ்வளவு என்பதையும் காட்டும் குறிப்பு.

ஜமீன் பெயர்.	கிராமம் எண்ணிக்கை.	நஞ்சை. பயிரான சாகுபடி விஸ்தீர்ணம்.	புஞ்சை. பயிரான சாகுபடி விஸ்தீர்ணம்.	மேய்ச்சல் நிலம்.	மொத்த வரவு.	வரவு மூலம்.	முன்பேஷ்கஷ்.	நிர்ணய மானபேஷ்கஷ்.	சர்க்கார் ஜம்மாவுடன் சேர்க்கக்கூடிய தொகை.	விபரம்.
(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)	(8)	(9)	(10)	(11)
		ஸி. ஸ.	ஸி. ஸ.	திண்டுக்கல் டிவிஷன்.	ஏஸ். பி. எஸ்.					
1 வேடசெந்தூர் ..	.. 7	131 3–3/16	7,453 9–6/16	..	3,305 0 32	..	..	4,282	..	மொத்த வசூலும். அத்துடன் 100-க்கு 29 விகிதமும்.
2 தாடிப் கொம்பு ..	.. 2	326 2–15/16	5,571 4–6/16	..	3,399 15 28	..	..	3,627	33 40 73	மொத்த வசூலும் அத்துடன் 100-க்கு 6 விகிதமும்.
3 வடமதுரை ..	.. 2	246 14–11/16	3,612 14–15/16	..	3,250 27 0	..	..	3,251	233 27 22	மொத்த வசூல்.
4 பாலகிருஷ்ணபுரம்	.. 4	153 9–8½/16	4,421 6–3/16	..	2,289 25 46	..	..	2,599	12 5 36	மொத்த வசூலும், அத்துடன் 100-க்கு 13 விகிதமும்.
5 அதியநூர் ..	.. 5	102 11–6½/16	3,220 7¾	..	2,072 13 9	..	..	2,413	12 36 65	மொத்த வசூலும், அத்துடன் 100-க்கு 16 விகிதமும்.
6 எரியோடு ..	.. 6	221 10–5/16	4,038 4–12¼/16	..	2,220 12 78	..	..	2,619	8 2 58	மொத்த வசூலும், அத்துடன் 100-க்கு 11 விகிதமும்.
7 களத்தூர் ..	.. 4	314 3	3,887 11–13¾/16	..	2,232 6 75	..	..	2,680	3 4 7	மொத்த வசூலும், அத்துடன் 100-க்கு 20 விகிதமும்.
8 தாஹூர்	.. 11	189 13–12¼/16	6,034 4–5¼/16	..	2,289 14 63	..	..	2,820	49 39 42	மொத்த வசூலும், அத்துடன் 100-க்கு 23 விகிதமும்.
9 எர்ரகோட்டை ..	.. 13	136 6–5/16	8,256 2–11/16	..	2,949 1 25	..	..	3,477	2 38 15	மொத்த வசூலும், அத்துடன் 100-க்கு 17 விகிதமும்.
10 மாத்தூர்	.. 8	246 13–7/16	5,059 0–3/16	..	2,992 38 12	..	..	3,135	33 42 21	மொத்த வசூலும் அத்துடன் 100-க்கு 41 விகிதமும்.
11 சொக்கம்பட்டி ..	.. 7	188 13–14¼/16	3,883 14–5¾/16	..	1,909 39 60	..	..	1,878	35 42 21	மொத்த வசூல்
12 புலியப்பநாயக்கனூர்	.. 4	54 5¾	1,883 15½	..	946 13 23	..	..	1,177	..	மொத்த வசூலும், அத்துடன் 100-க்கு 24 விகிதமும்.
13 முருநூத்து ..	.. 10	240 6–11/16	3,188 13–7/16	..	1,208 20 26	..	..	1,677	49 26 31	மொத்த வசூலும், அத்துடன் 100-க்கு 38 விகிதமும்.
14 தென்கரை ..	.. 2	973 4¾	1,794 2½	..	3,670 18 68	..	..	3,598	30 9 61	மொத்த வசூல்.
15 மேல்மங்கலம் ..	.. 2	867 7½	1,467 5–2/16	..	4,109 13 74	..	..	3,858	62 14 25	ஷை
16 அல்லிநகரம் ..	.. 3	394 0–9/16	2,382 7½	..	1,275 39 59	..	...	1,706	48 16 29	மொத்த வசூலும், அத்துடன் 100-க்கு 33 விகிதமும்.
17 ஆண்டிபட்டி ..	.. 2	452 11–3/16	3,973 5½	..	1,594 28 0	..	..	2,327	34 30 ..	மொத்த வசூலும், அத்துடன் 100-க்கு 45 விகிதமும்.
18 உத்தமபாளையம்	.. 4	1,199 12–13/16	956 8–5/16	..	2,157 43 62	..	..	2,494	46 23 67	மொத்த வசூலும், அத்துடன் 100-க்கு 15 விகிதமும்.
19 சின்னமனூர் ..	.. 6	1,093 9–11/16	1,462 15¾	..	2,366 2 36	..	..	2,749	44 .. 56	மொத்த வசூலும், அத்துடன் 100-க்கு 16 விகிதமும்.
20 கம்பம் ..	.. 3	822 6–11/16	1,559 12–15/16	..	2,867 5 71	...	..	2,744	16 31 28	மொத்த வசூலில், 100-க்கு 4 விகிதம் குறைவு.
21 வத்தலக்குண்டு ..	.. 1	836 10–7/16	2,167 14–¼	..	3,828 5 4	..	..	3,950	124 8 14	மொத்த வசூலில், 100-க்கு 4 விகிதம் குறைவு.

22	கெங்குவார்பட்டி ..	..	1	380	1–14/16	1,470	5–2/16		..	1,891	24	71	..	..	1,934	13 ..	55	மொத்த வசூலும், அத்துடன் 100-க்கு 2 விகிதமும்.
23	ஆத்தூர் ..	..	1	880	8–2/16	493	15		..	2,305	35	4	..	..	2,331	.. 27	22	மொத்த வசூலும், அத்துடன் 100-க்கு 4 விகிதமும்.
24	நிலக்கோட்டை ..	..	6	206	14–2¾/16	3,675	10¾/16		..	1,486	7	66	..	..	2,315	25 26	47	மொத்த வசூலும், அத்துடன் 100-க்கு 25 விகிதமும்.
25	மணலக்கோட்டை ..	..	6	64	8¼	5,824	6–1/16		..	3,173	20	77	..	..	3,809	7 5	36	மொத்த வசூலும், அத்துடன் 100-க்கு 20 விகிதமும்.
26	சேவகம்பட்டி	..	7	249	9¾	3,938	5¼		..	1,903	18	54	..	..	2,510	65 ..	55	மொத்த வசூலும், அத்துடன் 100-க்கு 31 விகிதமும்.
27	வேதானப்பட்டி	..	5	229	13–7/16	1,019	3/16		..	1,601	5	73	..	..	1,549	55 42	50	மொத்த வசூலில் 10-க்கு 3 விகிதம் குறைவு.
28	சுண்டியூர் ..	..	24	182	12–13/16	2,723	7–1/16		..	1,118	18	7	..	..	1,654	11 17	58	மொத்த வசூலும், அத்துடன் 100-க்கு 47 விகிதமும்.
29	ஐயம்பள்ளி ..	..	3	1,131	10–2/16	464	2–14/16	5	2–10/16	2,579	13	10	..	..	3,078	99 9	43	மொத்த வசூலும், அத்துடன் 100-க்கு 19 விகிதமும்.
30	காளியங்கூத்தூர்	..	2	1,094	5–1/16	651	10 13/16	323	6–6/16	2,746	34	65	..	..	3,170	42 35	37	மொத்த வசூலும், அத்துடன் 100-க்கு 15 விகிதமும்.
31	ரெட்டையம்பேட்னட்	..	17	736	6–13/16	4,378	4–6/16	691	10–6/16	2,482	25	31	..	..	3,377	45 21	65	மொத்த வசூலும், அத்துடன் 100-க்கு 36 விகிதமும்.
32	கரிக்காடனூர் ..	..	6	379	8–7/16	5,265	5	945	11–14/16	2,442	16	2	..	..	3,048	6 ..	..	மொத்த வசூலும், அத்துடன் 100-க்கு 24 விகிதமும்.
33	கீரனூர்	..	5	578	9¾	4,244	7/16	438	4½	2,584	10	38	..	..	3,090	3 20	36	மொத்த வசூலும், அத்துடன் 100-க்கு 19 விகிதமும்.
34	வங்கரை ..	..	6		..	6,611	0	841	6–15/16	2,046	11	44	..	..	2,561	13 39	42	மொத்த வசூலும், அத்துடன் 100-க்கு 25 விகிதமும்.
35	வேலம்பட்டி ..	..	9		..	6,495	1–5/16	835	10–15/16	1,890	42	10	..	..	2,480	13 39	43	மொத்த வசூலும், அத்துடன் 100-க்கு 31 விகிதமும்.
36	காட்டம்பூண்டி ..	..	4	25	12–1/16	6,740	8½	761	2/16	1,858	19	9	..	..	2,439	23 42	76	மொத்த வசூலும், அத்துடன் 100-க்கு 31 விகிதமும்.
37	விருபாட்சி ..	..	15	42	1¾	5,381	6–11½/16	32	3–6½/16	1,326	25	55	..	..	2,587	78 ..	..	மொத்த வசூலும், அத்துடன் 100-க்கு 95 விகிதமும்.
38	வாஹூர் ..	..	8	88	2–4¾/16	5,578	4–5¼/16	38	10–2/16	1,578	44	38	..	..	3,010	9 21	11	மொத்த வசூலும் அத்துடன் 100-க்கு 109 விகிதமும்.
39	பறக்கோட்டை ..	..	12	132	1–15¼/16	5,122	8–8½/16	246	13–9¼/16	1,416	34	40	..	..	2,766	19 27	48	மொத்த வசூலும், அத்துடன் 100-க்கு 109 விகிதமும்.
40	கள்ளிமண்டி ..	..	6	79	12–14¼/16	5,650	10–4¼/16	48	15–1½/16	1,454	12	27	..	..	2,780	35 42	22	மொத்த வசூலும், அத்துடன் 100-க்கு 91 விகிதமும். (மொத்தத்தில் ஜம்மாவானது மொத்த வசூலில் 100-க்கு 16 விகிதம் நிர்ணயித்திருக்கிறது.)

குறிப்பு—1200–1214-ம் பசலிகளில், மேற்படி ஜமீன்களின் மொத்த வசூலின் சராசரியே, மொத்த வருமானமாக எடுக்கப்பட்டிருக்கிறது.

தெற்குப்பாளையங்கள்—தொடர்ச்சி.

சாசுவத பைசல் ஏற்பட்ட ஜமீனும், பயிராகும் நிலமும், வரவும், பேஷ்கஷ் எவ்வளவு என்பதையும் காட்டும்குறிப்பு—தொடர்ச்சி.

ஜமீன் பெயர்.	கிராம எண்ணிக்கை.	1211–ம் பசலியில் பயிரான நிலம். நஞ்சை.		புஞ்சை.		மொத்த வரவு.	வரவு மூலம்.	முன்கட்டிய பேஷ்கஷ்.	நிர்ணயமான பேஷ்கஷ்.	விபரம்.
										பரமஹால் டிவிஷன்.
										சேலம்.
		ஏக்கர்.	எ.	ஏக்கர்.	எ.	எஸ்.பி.எஸ்.			எஸ்.பி.எஸ்.	
1 கஸ்பா சேலம் ..	7	991	13	4,524	1	5,565	..	..	5,000	மொத்த வசூல் மைனஸ் 11 %
2 அளகாபூர் ..	3	68	6	1,586	10	960	..	..	890	ஷை 7 %
3 கண்ணன்குரிச்சி ..	6	336	12	3,490	8	2,979	..	..	2,681	ஷை 11 %
4 அந்தம்பட்டி ..	5	392	10	1,344	10	2,313	..	..	2,151	ஷை 7 %
5 கருப்பூர் ..	8	238	5	4,939	14	3,481	..	..	3,200	ஷை 8 %
6 திருமல்கிரி ..	6	240	0	3,082	6	2,722	..	..	2,450	ஷை 11 %
7 மூர்துரை	4	55	11	1,335	6	2,414	..	..	2,121	ஷை 13 %
8 கர்க்கிணவாரி ..	3	152	9	4,645	15	2,467	..	..	2,201	ஷை 12 %
9 சேலம் நகர் ..	3	..		..		1,262	..	..	1,101	ஷை 13 %
(எகபோக எஸ்டேட்டுகள்.)	3	..		..		..	..	..	..	
		2,476	2	26,949	6	24,153	..	..	21,794	
										சின்னகிரி.
10 சின்னகிரி ..	7	220	14	1,876	2	3,193	..	..	2,800	மொத்த வசூல் மைனஸ் 14 %
11 மூலூர்	2	305	7	2,518	2	3,064	..	..	2,700	ஷை 13 %
12 பனிவூர்ந்தபட்டி ..	3	259	10	3,354	14	2,558	..	..	2,249	ஷை 13 %
13 அல்லாய்வபட்டி ..	3	189	2	2,508	11	2,584	..	..	2,281	ஷை 13 %
14 ஆக்கர்ப்பட்டி ..	3	541	1	2,304	2	2,634	..	..	2,363	ஷை 11 %
15 வீரபாண்டி ..	7	367	10	2,287	3	2,855	..	..	2,550	ஷை 11 %
16 உத்தன்சோளபுரம்.	4	468	7	2,947	5	2,767	..	..	2,574	ஷை 9 %
17 எல்லம்பள்ளி ..	4	54	12	2,661	2	2,823	..	..	2,500	ஷை 12 %
		2,406	15	20,457	9	22,478	..	..	19,967	
										பெலூர்.
18 பெலூர்	5	412	6	4,494	9	3,034	..	..	2,800	மொத்த வசூல் மைனஸ் 8 %
19 எலப்பூர்	4	266	8	624	4	1,927	..	..	1,800	ஷை 7 %
20 நரிங்கபூர் ..	6	395	11	3,412	16	3,442	..	..	3,200	ஷை 7 %
21 பெத்தநாயகம் பாளையம்.	4	207	14	1,981	11	3,353	..	..	3,135	ஷை 6 %
22 சிங்கிபூர் ..	3	315	3	4,268	9	2,854	..	..	2,650	ஷை 7 %
23 அன்னபூர் ..	3	83	10	4,895	12	2,870	..	..	2,624	ஷை 9 %
24 வெல்லபாடி ..	4	180	14	2,392	6	2,119	..	..	2,000	ஷை 5 %
25 புல்லபட்டி ..	5	80	13	3,978	11	2,365	..	..	2,200	ஷை 7 %
26 மீனம்பள்ளி ..	8	55	14	3,800	10	2,638	..	..	2,400	ஷை 3 %
		1,998	13	29,048	14	24,592	..	..	22,809	
										ஆத்தூர்.
27 ஆத்தூர்	8	516	7	3,717	12	3,385	..	..	3,200	மொத்த வசூல் மைனஸ் 5 %
28 கட்டகோட்டை ..	4	220	6	3,986	4	2,857	..	..	2,700	ஷை 5 %
29 ஷார்வை	5	353	5	1,643	6	2,920	..	..	2,700	ஷை 8 %
30 பெரீரி	8	388	2	2,143	15	2,868	..	..	2,650	ஷை 8 %
31 ஸ்திரீவத்தூர் ..	6	159	7	3,829	15	3,426	..	..	3,200	ஷை 7 %
32 வேப்பம்பூண்டி ..	6	204	13	1,095	4	1,976	..	..	1,800	ஷை 9 %
33 கீரபட்டி	12	53	7	3,858	8	1,922	..	..	1,730	ஷை 11 %
		1,895	15	20,275	0	19,354	..	..	17,980	
										விராகனூர்.
34 விராகனூர் ..	5	240	13	1,270	1	2,864	..	..	2,650	மொத்த வசூல் மைனஸ் 8 %
35 லுடிவாரி ..	8	141	5	2,017	13	2,617	..	..	2,430	ஷை 7 %
36 துரூர்	3	330	12	482	13	3,536	..	..	3,320	ஷை 6 %
37 புங்கவல்லி ..	3	333	14	626	12	2,669	..	..	2,450	ஷை 7 %
38 கிஷ்ணுபுரம் ..	5	38	5	2,327	15	1,399	..	..	1,250	ஷை 11 %
39 சந்தர்பட்டி ..	7	148	9	2,502	15	1,858	..	..	1,750	ஷை 6 %
40 தொம்மபட்டி ..	22	3		2,365	1	1,159	..	..	1,100	ஷை 5 %
41 பெல்ல நர் ..	5	..		..		870	..	..	763	ஷை 14 %
42 கொண்டனி நர் ..	3	..		..		211	..	..	201	ஷை 5 %
43 பச்சமுல்லா ..	..	..		..		375	..	..	347	ஷை 8 %
		1,236	10	11,593	6	17,518	..	..	16,261	

தெற்குப்பாளையங்கள்—தொடர்ச்சி.

சாசுவத பைசல் ஏற்பட்ட ஜமீனும், பயிரும் நிலமும், வரவும், பேஷ்கஷ் எவ்வளவு என்பதையும் காட்டும் குறிப்பு—தொடர்ச்சி

ஜமீன் பெயர்.	கிராம எண்ணிக்கை.	1211 பசலியில் பயிரான நிலம். நஞ்சை.		1211 பசலியில் பயிரான நிலம். புஞ்சை.		மொத்த வரவு.	வரவு மூலம்.	மூன் கட்டிய பேஷ்கஷ்.	நிர்ணயமான பேஷ்கஷ்.	விபரம்.
பரமஹால் டிவிஷன்—தொடர்ச்சி சேந்தமங்கலம்.										
		ஏக்கர்.	எ.	ஏக்கர்.	எ.	எஸ். பி. எஸ்.			எஸ். பி. எஸ்.	
44 சேந்தமங்கலம் ..	8	646	13	6,460	6	3,782	..	..	3,800	மொத்த வசூலுடன் 0·5 %
45 வலகுரிச்சி ..	3	180	4	4,538	12	2,433	..	..	2,300	மொத்த வசூல் மைனஸ் 5 %
46 எவியூர்	7	311	7	5,215	6	3,091	..	..	2,900	ஷை 6 %
47 பட்டூர்	5	410	8	7,427	13	3,702	..	..	3,550	ஷை 4 %
48 மூருபட்டி ..	5	20	13	5,116	5	2,012	..	..	2,000	ஷை 0·6 %
49 கல்யாணி	4	362	15	2,080	13	2,098	..	..	1,986	ஷை 5 %
50 திருமல்பட்டி ..	1	33	11	2,222		1,067	..	..	1,050	ஷை 1 %
51 நவணி	7	413	6	3,887	9	3,378	..	..	3,050	ஷை 10 %
52 தொம்மகுரிச்சி ..	7	89	8	5,977		3,358	..	..	3,150	ஷை 6 %
53 புலஞ்சுரி ..	9	204	6	4,832	9	2,723	..	..	2,650	ஷை 2 %
54 கார்குரி	5	202	10	4,359	14	2,882	..	..	2,800	ஷை 2 %
55 தலிங்கர்பட் ..	6	351	6	3,612	11	2,535	..	..	2,500	ஷை 1 %
56 மலைதேவி ..	17	381		7,268	1	3,566	..	..	3,400	ஷை 4 %
57 செல்லூர் நர் ..	3	..		..		735	..	..	700	ஷை 5 %
58 கூந்து நர்	4	..		..		1,810	..	..	1,680	ஷை 7 %
(ஏகபோக எஸ்டேட்டுகள்.)	1	..		..		..	..	..	..	
		3,608	11	62,999	3	39,167	..	..	37,516	
ராசிபுரம் டிவிஷன். ராசிபூர்										
59 ராசீபூர்	4	654	0	1,539	2	2,731	..	..	2,500	மொத்த வசூல் மைனஸ் 9 %
60 ஷெரோபுலி ..	3	220	12	1,821	9	2,692	..	..	2,550	ஷை 5 %
61 பூடுபாளையம் ..	2	238	5	1,511	9	2,578	..	..	2,350	ஷை 9 %
62 பட்ணம்	2	250	13	1,201	2	2,415	..	..	2,174	ஷை 11 %
63 புதுப்பட்டி ..	2	151	6	1,349	7	2,222	..	..	2,000	ஷை 11 %
64 சிங்களனிதப்பூர் ..	2	401	10	1,268	10	2,468	..	..	2,250	ஷை 9 %
65 தாப்பாபட்டி ..	3	342	7	2,387	2	3,101	..	..	2,900	ஷை 6 %
66 பெலநல்லூர் ..	4	279	10	1,741	11	2,130	..	..	2,000	ஷை 6 %
		2,538	15	12,820	4	20,337	..	..	18,724	
நாமீல் டிவிஷன். நாமீல்										
67 நாமீல்	5	98	14	5,047	14	2,906	..	..	2,858	மொத்த வசூல் மைனஸ் 1 %
68 மூட்டஞ்சிட்டி ..	3	143	3	5.930	1	3,569	..	..	3,450	ஷை 3 %
69 பூனேரி	6	265	15	2,709	15	2,815	..	..	2,700	ஷை 4 %
70 தூசூர்	11	575	2	3,226	15	2,839	..	..	2,700	ஷை 5 %
71 ஆரூர்	5	403	6	1,534	3	2,596	..	..	2,500	ஷை 3 %
72 அரியூர்	4	96	2	4,749	8	2,656	..	..	2,580	ஷை 2 %
73 தூலூர்	4	5	15	4,169	1	2,034	..	..	1,950	ஷை 4 %
74 அக்ரார் வலவுண்டி	3	54	0	1,417	3	771	..	..	771	ஷை 0 %
75 வாலவுண்டி ..	1	96	6	5,479	4	2,482	..	..	2,400	ஷை 3 %
76 குமரபாளையம் ..	2	337	14	339	2	2,381	..	..	2,150	ஷை 10 %
77 மங்கனூர் ..	3	593	12	3,529	3	4,276	..	..	3,942	ஷை 8 %
78 புல்லூர்	6	134	2	8,388	1	3,257	..	..	3,200	ஷை 1 %
79 தெண்டமங்கலம் ..	6	146	6	4,361	9	2,141	..	..	2,100	ஷை 1 %
80 கீரம்பூர்	3	219	4	3,967	13	2,122	..	..	2,000	ஷை 6 %
81 கட்பாதூர்	5	799	4	2,603	10	5,181	..	..	4,600	ஷை 12 %
.. ஏகபோக எஸ்டேட்டுகள்.	1	..		..		..	..	..	..	
		3,971	9	58,053	6	42,026	..	..	39,901	
பர்முட்டி டிவிஷன். பர்முட்டி										
82 பர்முட்டி	6	253	7	6,843	2	3,253	..	..	3,200	மொத்த வசூல் மைனஸ் 1 %
83 புதுப்பாளையம் ..	3	253	6	3,004	4	2,870	..	..	2,684	ஷை 6 %
84 பந்தமங்கலம் ..	4	393	14	1,319	13	2,883	..	..	2,624	ஷை 9 %
85 விங்கரை	4	257	14	1,325	0	2,785	..	..	2,668	ஷை 4 %
86 உர்குரியத்தூர் ..	4	41	10	5,937	10	3,277	..	..	3,000	ஷை 9 %
87 செல்லூர் ..	5	38	9	5,785	0	3,074	..	..	2,800	ஷை 9 %
88 நஞ்சி எரியர் ..	2	419	1	..		2,163	..	..	2,000	ஷை 8 %
89 வயலூர்	1	425	4	6	7	2,665	..	..	2,413	ஷை 10 %
90 பெரியன்குரிச்சி ..	3	..		7,845	0	3,355	..	..	3,140	ஷை 6 %
91 நல்லூர்	3	22	9	5,671	14	3,221	..	..	2,900	ஷை 11 %
92 சிரக்கல்	5	167	13	5,386	7	3,113	..	..	2,850	ஷை 9 %
		2,273	7	43,124	9	32,659			30,279	

தெற்குப்பாளையங்கள்—தொடர்ச்சி.

சாசுவதபைசல் ஏற்பட்ட ஜமீன்களும் அவைகளின் சாகுபடி விஸ்தீர்ணங்களும், வருமானமும், பெஷ்காஷும்—தொடர்ச்சி

ஜமீன் பெயர்.	கிராமங்களின் எண்ணிக்கை.	1211-ம் பசலியில் சாகுபடி விஸ்திர்ணம். நஞ்சை.		புஞ்சை.		மொத்த வருமானம்.	வருமான ஆதாரம்.	இதற்குமுன் செலுத்தப்பட்ட பேஷ்கஷ் அல்லது வரி.	விதிக்கப்பட்ட பேஷ்கஷ்.	குறிப்புகள்.
(1)	(2)	(3)				(4)	(5)	(6)	(7)	(8)
சங்கரி துர்க் டிவிஷன்.										
		ஏக்கர்	அணி	ஏக்கர்	அணி	ஸ்டார்பகோடா				நூற்றுக்கு
93 சிங்கிரி துர்க் ..	7	151	1	6,168	6	3,710	..	..	3,300	மொத்த வருமானம் மைனஸ்12 வீதம்
94 கச்வோலி	3	155	15	7,232	9	3,553	..	..	3,200	ஷை 11 %
95 சமுத்திரம் ..	1	619	7	3,256	4	3,528	..	..	3,100	ஷை 13 %
96 கரியம்பேட்டை ..	4	141	13	6,310	8	3,538	..	..	3,184	ஷை 11 %
எர்ரகானஷல்லகர் 97 பல்நேரை ..	3	273	0	4,138	5	3,181	..	..	2,864	ஷை 11 %
98 கூன்வனபுரம் ..	4	229	7	6,095	13	3,198	..	..	2,917	ஷை 9 %
99 மங்களம் ..	6	241	11	4,648	1	2,820	..	..	2,580	ஷை 9 %
100 வைகுண்டம் ..	5	161	8	6,216	10	3,656	..	..	3,250	ஷை 12 %
101 மல்லசமுத்திரம்	4	594	12	4,365	9	3,391	..	..	3,000	ஷை 13 %
102 மீனும்பள்ளி ..	3	74	10	2,641	8	2,062	..	..	1,920	ஷை 7 %
103 பருதிபள்ளி ..	3	596	6	3,932	5	2,929	..	..	2,700	
104 கூர்மனூர் ..	..	42	15	2,662	13	1,774	..	..	1,600	
						புள்ளி விவரங்கள் விளங்கவில்லை				
105 புதவடி ..	..	48	3	8,100	11	4,262	..	..	4,000	மொத்த வருமானம் மைனஸ்10 வீதம்.
106 எமப்பள்ளி ..	4	114	14	6,689	10	3,270	..	..	2,947	ஷை ஷை
		3,445	10	72,459	0	44,872			40,562	
திருச்செங்கோடு டிவிஷன்.										நூற்றுக்கு
107 திருச்செங்கோடு ..	4	36	6	6,026	9	3,117	..	..	2,887	மொத்த வருமானம் மைனஸ்7 வீதம்
108 மோரூர்	2	96	13	4,366	0	2,907	..	..	2,650	ஷை 9 %
109 இல்லிபள்ளி ..	2	256	13	4,638	15	3,231	..	..	2,960	ஷை 9 %
110 மணலி	4	174	15	5,250	0	3,209	..	..	3,000	ஷை 6 %
111 முலபள்ளி ..	2	82	8	5,306	9	2,666	..	..	2,500	ஷை 6 %
112 குமாரமங்கலம் ..	2	76	8	4,008	12	2,850	..	..	2,621	ஷை 8 %
113 ஊஞ்சினை ..	2	140	7	5,773	10	3,402	..	..	3,100	ஷை 9 %
114 காக்கரப்பேட்டை ..	5	33	4	6,329	11	2,647	..	..	2,500	ஷை 5 %
..	2	..		..		..	..			
ஏகபோக எஸ்டேட்டுகள்.		897	0	41,700	2	24,029			22,218	
எர்ரபாண்டி டிவிஷன்.										நூற்றுக்கு
115 எரிபாண்டி ..	2	637	15	3,513	10	3,608			3,300	மொத்த வருமானம் மைனஸ் 9 வீதம்
116 ஆவணிபரூர் ..	3	497	5	5,122	12	3,319	..	..	3,027	ஷை 9 %
117 எலபள்ளி ..	4	56	13	6,543	15	3,858	..	..	3,448	ஷை 11 %
118 சித்தூர்	3	45	2	8,651	5	3,657	..	..	3,361	ஷை 8 %
119 கோனூர்பட்டி ..	5	133	3	5,683	15	2,619	..	..	2,410	ஷை 8 %
120 குமரபாளையம்	6	17	3	7,276	14	3,165	..	..	3,000	ஷை 5 %
..	1	..		..		..			..	
ஏகபோக எஸ்டேட்டுகள்.		1,387	11	36,702	5	20,226			18,546	
ஓமலூர் டிவிஷன்.										நூற்றுக்கு
121 ஓமலூர்	5	523	5	3,751	12	2,411	..	..	2,200	மொத்த வருமானம் மைனஸ்9 வீதம்
122 மாரமங்கலம் ..	5	228	3	3,236	0	2,468	..	..	2,200	ஷை 12 %
123 தாராபுரம் ..	6	670	9	5,928	14	3,678	..	..	3,500	ஷை 5 %
124 மிட்சேரி	3	73	14	5,705	15	3,028	..	..	2,700	ஷை 12 %
125 எயினுண்டி ..	5	102	11	8,355	11	3,844	..	..	3,472	ஷை 10 %
126 அரூர்பட்டி ..	3	63	6	2,985	14	2,138	..	..	1,880	ஷை 13 %
127 கூத்தபட்டி ..	3	140	7	4,500	7	3,197	..	..	2,821	ஷை 13 %
128 அமர்பூண்டி ..	7	52	10	3,228	8	2,189	..	..	1,977	ஷை 10 %
129 தாராமங்கலம் ..	7	234	12	3,020	14	2,013	..	..	1,800	ஷை 11 %
130 எழுவன்பட்டி ..	3	41	11	2,337	3	1,799	..	..	1,550	ஷை 16 %
131 திசைவிளக்கு ..	2	326	0	2,819	7	2,435	..	..	2,200	ஷை 10 %
132 பூனர்குரை ..	6	332	13	4,756	11	2,371	..	..	2,300	ஷை 3 %
..	..	..		..		..			..	
ஏகபோக எஸ்டேட்டுகள்.		2,790	5	51,127	4	31,571			28,600	
நங்கப்பள்ளி டிவிஷன்.										நூற்றுக்கு
133 நங்கபள்ளி ..	..	34	5	7,909	1	3,958	..	..	3,550	மொத்த வருமானம் மைனஸ்11 வீதம்
134 பட்டனேரி ..	..	24	4	7,890	6	3,573	..	..	3,250	ஷை 9 %
135 பெல்லாரி ..	..	51	2	9,003	9	3,395	..	..	3,100	ஷை 9 %
		109	11	24,803	0	10,926			9,900	
மொத்தம்		31,037	6	512,113	4	373,908			3,45,057	

குறிப்பு.—1201 பசலி முதல் 1211 பசலி வரை (இரண்டு பசலிகளும் உள்பட) உள்ள காலத்தின் நிலவரியின் சராசரியே மொத்த வருமானமாக எடுக்கப்பட்டிருக்கிறது.

தெற்குப்பாளையங்கள்—தொடர்ச்சி.

சாசுவத பைசல் ஏற்பட்ட ஜமீன்களும் அவைகளின் சாகுபடி விஸ்தீர்ணங்களும், வருமானமும் பெஷ்காஷூம்—தொடர்ச்சி.

ஜமீன் பெயர். (1)	இராமங்களின் எண்ணிக்கை. (2)	சாகுபடி விஸ்தீர்ணம். பள்ளம். (3)	சாகுபடி விஸ்தீர்ணம். மேடு. (4)	மேய்ச்சல் தரை. (5)	மொத்த வரவு. (6)	வரவு மூலம். (7)	முன்செலுத்திய ரொனி அல்லது பேஷ்கஷ். (8)	விதிக்கப்பட்ட பேஷ்கஷ். (9)
விசாகபட்டணம் முதல் டிவிஷன்—								
1 காசிம்கோட்டை ..	8	44 10-3/4	63 11	1 15	17,685 4 11-2/7	..	..	..
2 கொண்டகிர்லா ..	13	44 5-3/4	107 15-1/2	12 15	22,752 9 7-3/7	..	..	..
3 மூங்கபாக்	9	74 12-7/8	64 8-1/2	10 14	32,908 8 9-2/7	..	..	..
4 அனகாபள்ளி	11	80 12-1/4	80 9-1/2	4 14-1/2	29,387 0 5	..	..	..
5 மேல்பாக்	12	107 12-1/2	78 7	17 12-1/2	23,890 3 0-6/7	..	..	..
6 திமிலி	11	82 15-5/8	84 9-1/2	18 3-1/4	23,523 2 7-1/2	..	..	..
7 சர்வசித்தி	13	119 14-3/4	51 3	22 14	27,239 14 0-13/14	..	..	..
8 ராயவரம்	13	87 15-1/2	73 1	26 10-1/4	23,640 14 0-5/14	..	..	..
9 நாக்கபள்ளி	12	52 11-1/2	169 1-1/2	45 3-1/2	18,461 7 7-13/14	..	..	..
10 ஸ்ரீராம்புரம்	9	111 5-1/2	46 8	27 10	22,073 13 2/9/14	..	..	..
11 கூடிசெர்லா	13	99 14-1/4	125 11-3/4	26 8-1/2	21,148 13 5-2/7	..	..	..
12 ஊருதலா	12	92 1-1/4	121 1-5/8	17 11	25,536 12 4-5/14	..	..	..
13 வாமூலபூடி	14	72 9-1/8	138 13-1/4	24 7	24,674 4 10-12	..	..	..
14 கொட்டகொடா	12	75 12-1/4	61 10-1/2	15 91-1/4	22,564 1 3-9/14	..	..	..
15 பன்சாமிர்லா	28	112 2	242 10-1/2	18 15	45,500 3 0-5/7	..	..	..
16 வால்டர்	4	2 7	52 12	5 10	5,874 5 2	..	..	..
17 வூப்பாடா	2	2 7-3/4	4 5¾	2 9	3,331 14 5 3/14	..	..	..

குறிப்பு.—இந்த புள்ளி விவரங்கள் யாவும் கலெக்டர் அறிக்கையிலிருந்து எடுக்கப்பட்டிருக்கின்றன.

6-வது பந்தியிலுள்ள புள்ளி விவரங்கள், மானியங்கள், முதலிய இதர வரிகளையும் குறிக்கின்றன.

நிரந்தரமாக விதிக்கப்பட்ட பேஷ்கஷ் முதலியவைகளைப்பற்றி ஸ்பெஷல் கமிஷன் தெரிவித்த புள்ளி விவரங்கள் துலாம்பரமாக தெரியவில்லை.

ஜமீன் பெயர். (1)	கிராமங்கள் இரு கிராமங்கள் எண்ணிக்கை (2)	பயிரான நிலம். நஞ்சை. (3)	பயிரான நிலம். புஞ்சை. (4)	மொத்தம் வரவு. (5)	மூலம். (6)	முந்திய பேஷ்கஷ். (7)	நிர்ணயமான பேஷ்கஷ். (8)	ஷரா. (9)
தென்னாற்காடு டிவிஷன்.								
1 வீரப்பெருமாள்நல்லூர்	2	240 35	746 69	1,468	..	..	1,290	
திருவந்திபுரம் டிவிஷன்.								
2 அழகிநத்தம்	4	564 5	801 25	2,464	..	..	2,070	
3 அரியவெட்டி	2	246 88	594 58	772	..	..	720	
4 மனமேதன்றி	4	376 36	970 65	2,137	..	..	1,880	
5 தாண்டமாநத்தம்	6	572 92	786 4	2,672	..	..	2,355	
6 திருவந்திபுரம்	8	343 8	609 48	1,631	..	..	1,485	
கடலூர் டிவிஷன்.								
7 கடலூர்	14	689 15	882 42	5,773	..	..	4,877	
கிள்ளமநாயக்கன் பாளயம், நாயுடுபேட்டை	2	..	..	..	..	..	1,150	

குறிப்பு.—5-வது பந்தியில் தெரிவிக்கப்பட்ட புள்ளி விவரங்கள் 1770 வருஷத்திலிருந்து 30 வருஷ வருமானத்தின் சராசரி வருமானமாகும்.

குண்டூர் டிவிஷன்.

	கானி-கொண்டா-விர்ஸ்.						எம். பகோடாக்கள்.			ஸ்டார் பகோடா.
1 சின்தபள்ளி ..	1,806	40	15	120,360	71	8	177,093	..	..	1,22,314
2 ரேபள்ளி ..	4,227	29	7	34,653	88	7	51,166	..	..	35,135
3 ராசூக்	4,281	28	5	28,995	98	13	50,160	..	..	32,383
4 சிலகல்பண்டு ..	3,109	74	9	40,258	29	11	50,646	..	..	36,000
5 சாத்தன்பள்ளி ..	2,481	87	7	36,114	9	13	50,330	..	..	36,000
6 இனகொண்டா ..	271	45	6	32,485	77	10	45,778	..	..	31,618
7 பெல்லம்கோர்ட் ..	157	93	12	41,439	56	10	45,680	..	..	31,550
8 கொலூர் ..	468	17	3	3,506	3	6	6,955	..	..	5,000
மொத்தம் ..	16,804	12	3	337,814	35	14	4,77,811	..	..	3,30,000

4-வது பந்தியிலுள்ள புள்ளிகள் கலெக்டர் தெரிவித்த புள்ளிகள். அது சர்க்கார் பிரதேசம், சாவரம் நிலங்கள், ஆகிய இவைகளின் மொத்தத் தொகையாகும். 5-வது பந்தியிலுள்ள புள்ளிகள், கலெக்டர் தெரிவித்த புள்ளிகள். அது மிகவும் அதிகமதிப்பு என்று ஸ்பெஷல் கமிஷன் நினைக்கிறது. அப்புள்ளிகளில் மேய்ச்சல்த்தொகை, மொத்தர்பா முதலியன அடங்கியிருக்கின்றன புள்ளி மதிப்பு அதிகமென்று ஸ்பெஷல் கமிஷன் நினைக்கிறது. மேற்படி கமிஷன் மொத்த வருமானம் 2,51,285 ஸ்டார் பகோடாக்கள் என்றும். முடிவான வருமானம், 2,15, 275 ஸ்டார் பகோடாக்கள் என்றும் நினைக்கிறது.

ஜமீன் பெயர். (1)	கிராமங்களின் எண்ணிக்கை. (2)	1212-ம் பசலியில் சாகுபடியான நிலம். நஞ்சை. (3)	புஞ்சை. (4)	மொத்த வருமானம் (1211, 1212, 1213, பசலிகளின் சராசரி ஜம்மா அதில் மணியகார் சம்பளம், சொர்ணதாயம் முதலியன அடங்கியிருக்கின்றன. (5)			வருமான மூலம். (6)	முன் செலுத்தப்பட்ட பேஷ்கஷ். (7)	விதிக்கப்பட்ட பேஷ்கஷ். (8)			குறிப்புகள். (9)
		எக்கர்.	அணி.	பகோடா.	எப்.	வி.						
கிருஷ்ணகிரி டிவிஷன்.												
1 கஸ்பா கிருஷ்ணகிரி ..	31	3,706	13	2,308	8	43	..	..	1,923	35	10	
2 தல்ஹல்லி	20	3,515	6	1,970	0	0	..	..	1,663	30	54	
3 ஜகதேவு	49	5,553	1	1,616	14	8	..	..	1,293	39	75	
4 குந்தவபள்ளி ..	51	4,211	15	1,883	36	27	..	..	1,620	16	4	
5 பெல்லாரப்பள்ளி ..	65	4,193	3	1,938	17	15	..	..	1,676	3	17	
6 காவிரிப்பட்டணம் ..	48	5,956	1	2,860	19	0	..	..	2,364	5	83	
7 தட்டக்கால்	34	6,276	4	1,940	21	25	..	..	1,820	13	73	
8 மகாராஜ கர் ..	57	6,523	3	3,017	30	52	..	..	2,502	35	20	
ஏகபோக எஸ்டேட்டுகன்	6	..	..	....			..	..	....			
மொத்தம் ..	361	39,935	14	17,535	31	32	..	..	14,664	44	76	
9 வாணியம்பாடி ..	15	3,515	5	2,209	39	54	..	..	1,836	27	76	
10 ஏலகிரி	16	4,480	11	2,160	41	72	..	..	1,812	42	77	
11 ஆம்பூர்பேட்டை ..	19	5,012	2	2,661	27	70	..	..	2,184	42	61	
12 ஆம்பலூர்	4	740	13	1,620	26	66	..	..	1,378	36	35	
13 அலன்கிரி	13	5,531	0	3,009	34	15	..	..	2,463	21	62	
14 திரியாலம்	18	3,442	3	1,598	35	14	..	..	1,348	16	33	
15 நாட்ரம்பள்ளி	23	6,446	4	2,066	29	31	..	..	1,690	34	36	
16 லக்கிநாயகம்பட்டி ..	17	5,145	7	1,552	29	54	..	..	1,233	5	42	
17 பரந்தபள்ளி	17	5,165	8	2,018	37	60	..	..	1,673	13	4	
18 ஏலகிரிமலே	6	5,165	8	415	15	20	..	..	414	0	0	
ஏகபோக எஸ்டேட்டுகள்	6	5,165	8	415	15	20	..	..	414	0	0	
மொத்தம் ..	154	39,479	5	19,315	2	56	..	..	16,036	16	26	
19 திருப்பத்தூர்	8	2,746	0	3,290	13	13	..	..	2,716	22	40	
20 புத்தகரம்	19	4,571	10	2,445	23	58	..	..	2,044	30	0	
21 நாச்சார்குப்பம் ..	8	5,064	11	2,761	29	38	..	..	2,333	11	56	
22 இருணம்பட்	10	3,957	1	2,417	34	78	..	..	2,047	4	23	
23 பொம்மைகுப்பம் ..	21	5,296	15	2,543	4	53	..	..	2,128	7	20	
24 கலடம்பட்டை	14	3,678	3	2,052	22	49	..	..	1,690	0	0	
25 பீமகுளம்	7	..	..	3,016	0	0	..	..	3,016	0	0	
26 குப்பநத்தம்	4	..	..	1,397	0	0	..	..	1,397	0	0	
மொத்தம் ..	91	25,314	8	19,923	38	49	..	..	17,372	30	59	
27 குண்ணத்தூர் ..	30	10,115	2	3,238	23	64	..	..	2,627	19	37	
28 சிந்தலபூடி	20	7,822	15	2,586	44	4	..	..	2,108	0	19	
29 குரும்பேரி	21	6,607	6	2,777	41	13	..	..	2,305	24	42	
30 கொரட்டை	19	6,722	15	2,587	18	56	..	..	2,119	10	58	
31 பவக்கல்	43	6,177	3	2,588	21	48	..	..	2,132	11	47	
32 பசன்டை	41	7,880	2	2,809	22	3	..	..	2,201	44	56	
33 காப்பின்கிரி	21	6,252	..	2,077	29	28	..	..	1,754	39	8	
ஏகபோக எஸ்டேட்டுகள்	2	..	..	..			..	..	....			
மொத்தம் ..	197	51,577	11	18,466	20	50	..	..	15,249	15	27	
34 கம்மநல்தூர்	75	8,257	15	2,985	9	22	..	..	2,574	13	34	
35 மட்டூர்	44	6,682	17	2,398	29	12	..	..	1,993	26	0	
36 கொடுமேடுகள்ளி ..	26	5,742	3	2,282	14	40	..	..	1,880	11	43	
37 ஆனந்தூர்	19	2,122	0	1,015	14	8	..	..	893	39	39	
38 பரூர்	40	6,852	9	2,815	29	3	..	..	2,408	40	28	
39 பந்தர்கள்ளி ..	32	6,549	14	2,378	20	22	..	..	2,023	16	73	
40 கரிமங்கலம்	52	7,644	15	2,817	43	55	..	..	2,257	12	71	
41 கலவி	54	5,222	3	1,747	22	48	..	..	1,522	26	23	
ஏகபோக எஸ்டேட்டுகள்	3	..	..	....			..	..	....			
மொத்தம் ..	345	49,074	2	18,441	2	20	..	..	15,554	36	71	

ஜமீன் பெயர். (1)	கிராமங்கள், இது கிராமங்களின் எண்ணிக்கை. (2)	1211-ம் பசலியில் சாகுபடியான நிலம். நஞ்சை. (3)	புஞ்சை. (4)	மொத்த வருமானம் (1211, 1212, 1213 பசலிகளின் சராசரி ஜமமா அதில் மணியகார் சம்பளம், சொர்ணதாயம் முதலியன அடங்கியிருக்கின்றன). (5)			வருமான மூலம். (6)	முன் செலுத்தப்பட்ட பேஷ்கஷ் அல்லது வரி. (7)	விதிக்கப்பட்ட பேஷ்கஷ். (8)			குறிப்புகள். (9)
கிருஷ்ணகிரி டிவிஷன்—தொடர்ச்சி.												
		ஏக்கர்.	அணி.	பகோடா.	எப்.	வி.			பகோடா.	எப்.	வி.	
42 ராயக்கோட்டை ..	68	2,983	13	1,405	8	21	..	..	1,210	22	75	
43 ஏலகம்	49	4,624	15	1,248	37	8	..	..	1,058	35	19	
44 மணந்தகல்லி ..	58	3,767	8	2,331	37	14	..	..	1,990	21	7	
45 போலகாடு	45	4,891	13	2,386	41	23	..	..	1,971	25	38	
46 நானுமண்டபுரம் ..	57	4,166	13	2,489	3	44	..	..	1,968	35	59	
47 பிலகல்லி	55	4,688	6	1,090	1	54	..	..	957	13	45	
48 பாபாரப்பட்டி ..	64	3,686	1	2,161	36	28	..	..	1,834	42	74	
49 மகேந்தரமங்கலம் ..	45	6,831	1	1,531	32	75	..	..	1,290	40	46	
ஏகபோக எஸ்டேட்டுகள்	1	..	..	....			..	..	....			
மொத்தம் ..	442	33,640	6	14,654	18	27	..	..	12,283	12	43	
50 தர்மபுரி	46	6,447	0	3,122	41	69	..	..	2,668	6	72	
51 கிருஷ்ணபுரம் ..	41	7,415	5	2,213	25	5	..	..	1,896	7	68	
52 ஏலகிரி	42	6,430	11	1,877	21	5	..	..	1,652	0	0	
53 நோட்டஹல்லி	34	4,134	15	1,644	31	35	..	..	1,447	0	0	
54 புங்கநத்தம்	21	4,041	6	1,332	6	61	..	..	1,170	11	20	
55 ஆதமன்கோட்டை ..	47	8,630	10	3,177	23	37	..	..	2,733	0	0	
56 கடகத்தூர்	55	7,640	0	3,155	3	32	..	..	2,682	8	27	
57 பெரும்பாளை	36	6,803	10	1,981	17	49	..	..	1,704	0	0	
ஏகபோக எஸ்டேட்டுகள்	7	..	..	....			..	..	....			
மொத்தம் ..	329	51,543	9	18,504	35	53	..	..	15,592	34	27	
58 தெங்கரகோட்டை ..	26	5,015	1	2,153	43	13	..	..	2,470	2	10	
59 அடிகர்பேட்டை ..	31	6,723	4	2,335	29	23	..	..	2,547	33	8	
60 கொல்லபேட்டை ..	25	2,259	10	708	1	43	..	..	785	0	57	
61 ஹஸூர்	34	4,289	7	1,532	5	54	..	..	1,621	0	58	
62 மொரப்பூர்	53	5,939	11	2,078	10	46	..	..	2,272	8	23	
63 கணபதிபேட்டை ..	31	3,566	2	1,406	31	1	..	..	1,503	42	50	
64 கடமாத்தூர்	47	7,222	15	2,102	34	43	..	..	2,406	14	53	
65 பேப்பள்ளி	58	3,870	14	1,135	21	59	..	..	1,212	7	50	
மொத்தம் ..	305	38,887	..	13,452	42	42	..	..	14,818	19	69	
66 பெருநகரம்	41	8,028	2	2,222	39	72	..	..	1,933	0	0	
67 எரிபள்ளி	20	4,235	13	1,612	43	42	..	..	1,387	0	0	
68 இந்தூர்	23	3,440	13	1,237	1	7	..	..	1,088	0	0	
69 சோல்லபாடி	64	8,168	12	1,955	41	9	..	..	1,701	0	0	
70 கோடஹளி	52	6,587	15	1,516	14	16	..	..	1,334	0	0	
ஏகபோக எஸ்டேட்டுகள்	2	..	..	....			..	..	....			
மொத்தம் ..	202	30,461	7	8,545	4	66	..	..	7,443	0	0	
எல்லாம் சேர்ந்த மொத்தம்.	2,426	359,913	14	148,839	16	73	..	..	129,375	30	78	
திருச்சினாப்பள்ளி டிவிஷன்.												
1 துரையூர்	13	..	..	7,054	7	67	..	..	200	0	0	பேஷ்கஷ் செலுத்தின் பிறகு மிச்சமான தொகை பூர்வ ஜமீனின் மொத்த வருமானத்தில் 1/10 ஆக இருந்தது.
2 அரியலூர் ..	57	..	..	7,880	39	30	..	..	200	0	0	ஜமீன்தாருக்கு கிடைத்த தொகை பூர்வ ஜமீனின் மொத்த வருமானத்தில் 1/10-ம் அதோடு சன்னது கொடுப்பதற்கு முன் மானியங்களிலிருந்து ஜமீன்தாருக்கு வந்த தொகையும்.
3 உடையார்பாளையம் ..	65	..	..	7‘832	4	78	..	—	175	0	0	

ஜமீன் பெயர்.	கிராமங்களின் எண்ணிக்கை.	1211-ம் பசலியில் சாகுபடி விஸ்தீர்ணம். நஞ்சை.	புஞ்சை.	1208, 1211 பசலி வரை மொத்த வருமானத்தின் சராசரி.	வருமான மூலம்.	முன் செலுத்திய வரி அல்லது பேஷ்கஷ்.	விதிக்கப்பட்ட பேஷ்கஷ்.	குறிப்புகள்.
(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)	(7)	(9)
ஜாகீர் டிவிஷன்.								
		காணி.	காணி.	பி.எஸ்.			பி.எஸ்.	வருமானம் சதவீதம்.
1 ஊருட்டி	30	990¼	1,393	3,253	..	..	3,200	— 1 10
2 அச்சரவாக்கம் ..	39	2,005¾	1,919½	4,267	..	..	4,150	— 2 12
3 பாக்கம்	53	1,871¼	2,165¼	3,898	..	..	3,850	— 1 3¾
4 சூணும்பட்	61	2,648	1.701	3,522	..	..	3,200	— 9 2½
5 ஏந்தத்தூர்	47	2,263¼	1,203¾	2 806	..	..	2,850	+ 1 8
6 செய்யூர்	37	1,733¼	533	1,748	..	..	1,600	— 9 4
7 அணைக்கட்	63	3,377	1,329¾	3,611	..	..	3,400	— 5 13⅝
8 மதுராந்தகம் ..	16	2,089	509½	2,513	..	..	2,500	— 0 8¼
9 பழையனூர்	26	2,591¼	885¼	3,995	..	..	3,700	— 7 15½
10 மையூர்	12	1.898¼	466¼	4,572	..	..	4,250	— 7 9¼
11 சாலிவாக்கம் ..	24	2,2866	804	4,792	..	..	4,750	— 0 14¼
12 எதமச்சி	41	2,234¾	1,408	2,739	..	..	2,950	+ 7 2⅜
13 சிலைநகர்	30	2,198½	2,188	4.283	..	..	4,450	+ 3 12
14 ஒந்தரமலூர்	1	2,524½	232½	4,708	..	..	4 400	— 7 0
15 பெண்ணகூர் ..	25	1,782	1,860½	6,711	..	..	6,200	— 8 3⅞
16 மலைமிஸ்லம் ..	38	2,211¾	1,256¼	4,120	..	..	4,350	+ 5 4⅜
17 காவன்தண்டலம் ..	26	1,833¼	348¾	4,947	..	..	4,500	— 9 ½
18 ஆயபாக்கம் ..	16	962	238¾	2,397	..	..	2,200	— 8 3⅜
19 சாவிலிமேடு ..	27	1,472½	690½	6,480	..	..	5,700	—13 11
20 தேமர்லா	16	1,583	1,395¼	6,068	..	..	5,700	— 6 1⅛
21 திரிபகடல்	10	1,037¼	1,310¾	4,679	..	..	4,000	—14 8¼
22 பள்ளனூர்	20	1,700¼	1,153¾	6,602	..	..	6,600	— 0 ⅛
23 காஞ்சீவரம் ..	70	1,811½	333¾	6,785	..	..	6,500	— 4 3¼
24 நெவலூர்	39	3,840¼	899¾	6,290	..	..	6,000	— 4 1¾
25 தென்னேரி ..	36	2,710½	492½	5,943	..	..	5,600	— 6 2
26 பாலூர்	25	4,209½	1,710¼	6,669	..	..	6,200	— 7 ½
27 சித்திபூணியம் ..	45	3,275¾	1,066½	4,424	..	..	4,300	— 2 13
28 செங்கல்பட் ..	34	2,180½	584¾	4,272	..	..	4,200	— 1 11⅛
29 திருச்சிகுன்னம் ..	37	3,459	723¼	4,450	..	..	4,400	— 1 2⅛
30 நெரும்பூர் ..	56	3,143¾	743½	2,872	..	..	2,650	— 8 6
31 ஊரகடம்	49	2,241¼	518	2,012	..	..	2,000	— 0 9⅛
32 கரம்படி	39	2,394½	764½	3,682	..	..	3,650	— 0 14⅛
33 கையாறு	28	3,547¼	535¼	3,339	..	..	2,950	—11 10⅜
34 மாதம்பாக்கம் ..	41	3,282½	668¾	4,042	..	..	3,750	— 7 3⅝
35 பல்லாவரம் ..	36	2,872¼	1,078½	3,336	..	..	2,900	—15 ½
36 குண்ணத்தூர் ..	26	4,980¾	1,001½	6,282	..	..	6,600	+ 5 ⅞
37 மணிமங்கலம் ..	37	4,030¼	1,067½	6,430	..	..	5,800	— 9 12⅞
38 ஸ்ரீபெரும்பூதூர் ..	45	3,596¾	1,235¼	5,396	..	..	5,100	— 5 7¾
39 பெரும்பாக்கம் ..	18	2,798½	1,072	5,349	..	..	5,000	— 6 8½
40 ராமஞ்சரி	31	2,635	2,834	4,961	..	..	4,900	— 1 4
41 திரிபாசூர்	35	3,611¾	872½	4,572	..	..	4,570	+ 3 14¼
42 தெருவூர்	21	2,317¼	1,111½	3,930	..	..	3,900	— 0 12½
43 திருநளி	57	4,941	1,696¼	6,221	..	..	6,100	— 1 15
44 பூந்தமல்லி ..	39	3,392¾	466¼	4,618	..	..	5,000	+ 8 4¼
45 கொடும்பாக்கம் ..	34	3,263¾	754	3,957	..	..	4,200	+ 6 2⅛
46 திருவத்தூர் ..	39	5,691	484¼	4,677	..	..	4,300	— 8 1⅛
47 பெண்டாபட் ..	23	3,325¼	646½	3,801	..	..	3,600	— 5 4¾
48 தெண்ணனூர் ..	32	4,934½	1,300¼	4,353	..	..	4,500	+ 3 5¾
49 வடுத்தூர்	26	1,634¼	2,058¾	3,834	..	..	3,350	— 14 7
50 வடமடு	31	3,366¼	1,789	4,766	..	..	4,650	— 2 7
51 பெத்தபுல்லம் ..	33	3,856¾	999	4,734	..	..	4,200	—11 4¼
52 சின்னும்பட் ..	15	2,180½	363½	4,056	..	..	3,650	—10 ⅜
53 நாயர்	32	3,267	832	3,766	..	..	3,650	— 3 3
54 உள்ளூர்	5	1,884	515½	4,050	..	..	3,500	—13 9¼
55 வயலூர்	18	3,168½	698½	4,481	..	..	4,000	—10 11⅝
56 பொன்னேரி ..	23	1,643¾	429½	1,874	.	..	1,600	—17 2
57 பருவாயல்	8	1,761¾	371¼	2,475	..	..	2,100	—15 2¾
58 பெரும்பேட்டை ..	20	3,013¼	335¼	3,016	..	..	2,600	—13 12¾
59 கந்தூர்	21	1,706¾	215	2,538	..	..	2,300	— 9 6-3⅜
60 ஆவூர்	19	2,104½	507¼	3,398	..	..	2,850	—16 2½
61 சிக்கர்கோட்டை ..	3	1,233	576	5,184	..	..	4,200	— 1 15¾
				2,63,546			250,000	
மொத்தம் ..	1,884							

குறிப்பு.—(4)-வது பந்தியிலுள்ள புள்ளிகள் கிரீன்அவே அறிக்கையிலிருந்து எடுக்கப்பட்டிருக்கின்றன.

ஜமீன் பெயர். (1)	கிராம எண்ணிக்கை. (2)	சாகுபடி விஸ்தீரணம் (1269-வது பசலி சாகுபடி கணக்கிலிருந்து எடுக்கப்பட்டது ; நஞ்சை, புஞ்சையும். (3)	1259 பசலியிலிருந்து 1268 பசலிவரை உள்ள 10 பசலிகளுக்கு சராசரி பேரில் தொகை. (4)	வருமான மூலம். (5)	இதற்கு முன் செலுத்தப்பட்ட பேஷ்கஷ் அல்லது வரி. (6)	விதிக்கப்பட்ட பேஷ்கஷ். (7)
			மதுரை டிவிஷன்.			
		காணி.	ரூ.		ரூ.	ரூ.
கன்னிவாடி	..	27,766	59,678	..	38,140	38,140
அம்மயநாயகனூர்	..	15,142	35,310	..	13,970	13,970
போடிநாயகனூர்	..	17,150	32,463	..	15,347	15,347
கண்டமநாயகனூர்	..	15,689	21,405	..	13,415	13,415
ஆயக்குடி	..	12,427	21,614	..	16,785	16,785
எடயக்கோட்டை	..	5,797	9,010	..	9,779	9,779
எரசக்கநாயக்கனூர்	..	6,540	7,478	..	2,062	2,062
தேவாரம்	..	4,466	6,678	..	1,101	1,101
மாம்பரை	..	1,515	1,812	..	2,255	2,255
புளியங்குளம்	..	1,581	3,438	..	1,932	1,932
உத்தமநாயகனூர்	..	2,507	4,854	..	2,584	2,584
தொட்டப்பநாய்கனூர்	..	2,276	3,819	..	2,179	2,179
ஜோதில்நாயகனூர்	..	750	1,534	..	1,070	1,070
களக்கோட்டை	..	602	1,332	..	440	440
மேலக்கோட்டை	..	738	1,576	..	940	940
நடுவக்கோட்டை	..	725	1,320	..	809	809
வெள்ளியங்குன்றம்	..	1,344	3,557	..	2,184	2,184
சிறுமலே	..	749	1,542	..	904	904

ஜமீன் பெயர். (1)	கிராம எண்ணிக்கை. (2)	விஸ்தீரணம் (ஏக்கர்). (3)	மொத்த வருமானம். (4)	வருமான மூலம். (5)	இதற்குமுன் செலுத்தப்பட்ட வரி அல்லது பேஷ்கஷ்.	விதிக்கப்பட்ட பேஷ்கஷ். (7)
			வட ஆற்காடு டிவிஷன்.			
		ஏக்கர்.	ரூ.		ரூ. அ. பை.	ரூ. அ. பை.
பங்கரி	94	..	30,007	..	12,003 0 0	12,003 0 0
குடிபட்டி	7	..	7,435	..	2,974 0 0	2,974 0 0
நார்கந்தி	62	..	16,490	..	6,596 0 0	6,596 0 0
கள்ளூர்	8	..	10,346	..	4,138 0 0	4,138 0 0
புலிசெர்லா	39	..	13,922	..	5,569 0 0	5,569 0 0
தும்பா	10	..	4,441	..	1,776 0 0	1,776 0 0
			சேலம் டிவிஷன்.			
அங்குசகிரி	..	..	21,662	..	7,941 0 0	7,941 0 0
பாகலூர்	..	..	15,527	..	6,371 0 0	6,371 0 0
சுழகிரி	..	..	15,918	..	5,630 0 0	5,630 0 0
			திருச்சிறுப்பள்ளி டிவிஷன்.			
கடலூர்	..	51,712	..	..	..	13,410 10 6
மருங்காபுரி	79	..	..	..	..	20,590 3 10
			தஞ்சாவூர் டிவிஷன்.			
கந்தர்வக்கோட்டை	53	54,685	..	..	6,577 4 11	6,577 4 11
பாப்பநாடு	36	23,298	..	..	4,316 6 6	4,316 6 6
பாலேவனம்	52	13,860	..	..	3,767 12 0	3,767 12 0
சிங்கவனம்	..	8,636	..	..	3,261 9 10	3,261 9 10
மடசூர்	..	13,567	..	..	2,491 7 10	2,491 7 10
சில்லத்தூர்	10	14,338	..	..	2,165 13 9	2,165 13 9
சேந்தன்குடி	9	18,912	..	..	2,046 10 2	2,046 10 2
நடுவாசல்	..	9,502	..	..	2,037 6 6	2,037 6 6
கள்ளக்கோட்டை	17	15,500	..	..	1,701 13 6	1,701 13 6
பாதரன்கோட்டை	7	8,904	..	..	1,369 9 11	1,369 9 11
அத்திவட்டி	..	6,284	..	..	913 14 4	913 14 4
கோனூர்	2	1,612	..	..	433 3 11	433 3 11
புனவாசல்	..	2,528	..	..	350 15 7	350 15 7
மொத்தம்	..	191,626	..	..	31,434 0 9	31,434 0 9
			கோயம்புத்தூர் டிவிஷன்.			
ஊத்துக்குழி	..	7,599	..	..	4,393 0 8	4,393 0 8
சமூத்தூர்	..	4,791	..	..	1,683 2 6	1,683 2 6
கொட்டாம்பட்டி	..	4,472	..	..	1,860 15 5	1,860 15 5
நேகமம்	..	4,083	..	..	2,480 12 8	2,480 12 8
அனுவலப்பம்பட்டி	..	7,998	..	..	4,200 0 0	4,200 0 0
பொரவிப்பாளையம்	..	12,758	..	..	2,804 12 6	2,804 12 6
ராமபட்டணம்	..	6,227	..	..	1,436 9 3	1,436 9 3
மெட்ரவேண	..	6,679	..	..	2,073 15 0	2,073 15 0
தூங்காவி	..	5,657	..	..	888 10 8	888 10 8
ஜோதிம்பட்டி	..	1,956	..	..	177 9 5	177 9 5
வடப்பட்டி	..	1,267	..	..	177 9 5	177 9 5
மைவாடி	..	5,019	..	..	592 8 4	592 8 4
ஆண்டிபட்டி	..	22,817	..	..	5,250 0 0	5,250 0 0

ஜமீன் பெயர்.	கிராம எண்ணிக்கை.	விஸ்தீர்ணம்.	மொத்த வருமானம்.	வருமானமூலம்.	இதற்குமுன் செலுத்தப்பட்ட வரி அல்லது பேஷ்கஷ்.	விதிக்கப்பட்ட பேஷ்கஷ்.
(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)
			கடப்பை டிவிஷன்.			
					ஸ்டார் பகோடா.	
புங்கனூர்	..	..	..	..	18,000	
			வட ஆற்காடு டிவிஷன்.			
					ரூ. அ. பை.	
காங்குந்தி	..	..	..	..	23,073 10 8	
ஆரணி	..	..	..	..	6,000 0 0	
			கோதாவரி ஜில்லா.			
ரம்பா	..	..	..	..	இல்லை.	பேஷ்கஷ் ஒன்றும் ஏற்படவில்லை.
தோட்டபள்ளி	..	..	..	..	..	ஜமீன்தார் யுத்த சகாயந்தான் செய்யவேண்டியது.

" மாற்று விகிதத்தைக் கணக்கிட, பெர்மனண்ட் செட்டில்மெண்டு போது பூஸ்திதிகளில் இருந்த, பயிரிடப் படாத நிலங்களைப்பற்றியும் மற்ற விஷயங்களைப்பற்றியும், நமக்கு செய்தி தெரியவேண்டும். பல ஜமீன்தாரி களின் முந்தி இருந்த, இப்போதுள்ள மதிப்புடன், வெப்பும், அலெக்ஜாண்டரும் சிபார்சு செய்த ஜம்மாத் தொகையுடன், ஒரு கணக்கு ஜாபிதா, கீழே தரப்பட்டிருக்கிறது. இக்கணக்கு, அவர்களின் தீர்மானத் தின் காரணத்திற்கு, விபரமான சாக்ஷ்யத்துடன் 1803-ம௵ ஜூன்மீ 3உயில் அவர்களுக்குத் தரப்பட்ட அறிவிப்பிற்கிணங்க ஒத்திருப்பதைக் காண்பிக்கும். நிரந்தரமாய், பல ஜில்லாக்களில் நிஷ்கரிஷை செய்யப்பட்ட தீர்வைக்கு இது ஒத்திருப்பதாக அவர்கள் கூறுகிறார்கள். தெற்கேயும், வடக்கேயும் இருக்கும் பல ஜமீன் களைப்பற்றிய அறிக்கையை, இது பலப்படுத்துவதாகும். கீழ்க்குறித்திருக்கும் கணக்கு, விஜயநகரம் ஜில்லாவி லுள்ள பல ஜமீன்களைப் பற்றியது " :—

சர்க்கார் பிரதேசம்—விசாகப்பட்டணம் ஜில்லா—வெப்-அலெக்ஜாண்டர் அறிக்கை.

ஜமீன் பெயர்.	கிராம எண்ணிக்கை.	பயிரிடக்கூடிய நிலம்.					குறைக்க வேண்டியது.
		பயிரிடப்படுவது.		பயிரிடப்படாதது.		மொத்தம் பயிரிடக் கூடிய நிலம்.	விளையக் கூடாதது.
		மேடு.	பள்ளம்.	மேடு.	பள்ளம்.		
(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)	(8)
		கரிசை.	கரிசை.	கரிசை.	கரிசை.	கரிசை.	கரிசை.
		வெப் அறிக்கை.					
1 விஜயநகரம்	1,157	24,849	54,712	25,452	5,811	110,324	21,589
2 பாலக்கொண்டா..	225	1,915	10,226	2,551	..	14,691	2,536
3 மரிங்கி	68	777	2,849	1,044	15	4,684	990
4 குருப்பம்	66	968	2,727	906	..	4,600	895
5 சங்கம்வலசா	20	229	791	277	..	1,296	277
6 செம்முடு	15	222	571	208	..	1,001	202
7 தாடபஞ்சபேட்டா	115	1,622	234	304	3	2,163	263
8 சாகூர்	153	2,105	5,670	2,198	76	10,048	2,093
		அலெக்ஜாண்டர் அறிக்கை.					
9 பொப்பிலி	193	2,735	12,033	4,125	15	18,908	4,084
10 ஆந்திரா	33	248	375	70	..	692	70
11 மடகோல்	103	1,763	5,661	2,712	1,103	11,057	2,310
12 கோல்க்கொண்டா	67	2,538	3,840	1,502	121	8,000	1,371
13 காசிபுரம்	1	..	..	..	..	..	..
14 சர்வேபள்ளி பீமவரம்	13	88	52	42	..	162	42
15 ஜெயபூர்	..	..	..	..	..	..	..
16 பெல்காம்	14	160	1,630	422	..	2,111	422
ஆக மொத்தம் ..	..	40,219	101,251	41,813	6,644	189,737	87,144

ஜமீன் பெயர்.	குறைக்கவேண்டியது—தொடர்ச்சி.			பராதீனம் செய்யப்பட்டதையும் பயிரிடக்கூடாததையும் கழித்தபின் சர்க்கார் நிலம்.				
	பராதீனம் செய்யப்பட்டது.			பயிரிடப்பட்டது.		பயிராகாதது.		மொத்தச் சர்க்கார் நிலம்.
	மேடு.	பள்ளம்.	மொத்தம்.	மேடு.	பள்ளம்.	மேடு.	பள்ளம்.	
	(9)	(10)	(11)	(12)	(13)	(14)	(15)	(16)
	கரிசை.	கரிசை.	கரிசை.	கரிசை.	கரிசை.	கரிசை.	கரிசை.	கரிசை.
	வெப் அறிக்கை—தொடர்ச்சி.							
1 விஜயநகரம்	9,525	20,714	30,239	15,676	34,255	3,509	5,055	58,497
2 பாலக்கொண்டா..	1,053	5,396	6,449	860	4,831	14	..	5,706
3 மரிங்கி	252	1,207	1,459	525	1,641	53	15	2,235
4 குருப்பம்	193	856	1,049	774	1,871	11	..	2,656
5 சங்கம்வலசா	32	202	234	196	588	..	..	785
6 செம்முடு	32	149	181	190	421	6	..	618
7 தாடபஞ்சபேட்டா	298	58	356	1,323	176	41	3	1,544
8 சாகூர்	761	2,124	2,885	1,364	3,566	84	55	5,070
	அலெக்ஜாண்டர் அறிக்கை—தொடர்ச்சி.							
9 பொப்பிலி	715	2,667	3,382	2,036	9,365	25	15	11,442
10 ஆந்திரா	159	163	322	88	211	..	..	300
11 மடகோல்	1,082	2,987	4,069	747	2,886	333	887	4,855
12 கோல்க்கொண்டா	1,175	2,537	3,712	1,429	1,362	64	62	2,917
13 காசிபுரம்	..	..	..	..	..	..	..	..
14 சர்வேபள்ளி பீமவரம்	2	2	4	86	30	..	..	116
15 ஜெயபூர்	..	..	..	..	1,209	..	..	..
16 பெல்காம்	11	321	332	149	..	..	..	1,358
ஆக மொத்தம் ..	15,290	39,883	54,673	25,443	62,412	4,140	6,092	97,889

ஜமீன் பெயர்.	3 வருஷ மொத்த சர்க்கார் வரவு. (17)	பராதினம் செய்யப்பட்ட நிலத்தீர்வை குறைத்தல். (18)	மொத்த மீதி ஜம்மா. (19)	குறையவேண்டியது. உப்பு மண் சுதந்தரம். (20)	குறையவேண்டியது. மொடர்பா. (21)	குறையவேண்டியது. சுங்கம். (22)	குறையவேண்டியது. உப்பு. (23)
	ரூ.	ரூ.	ரூ.	ரூ.	ரூ.	ரூ.	ரூ.
வெப் அறிக்கை—தொடர்ச்சி.							
1 விஜயநகரம்	9,18,856	1,15,922	8,02,933	54,665	12,758	2,912	11,078
2 பாலக்கொண்டா	98,698	10,862	87,835	8,935	2,660	..	..
3 மரிங்கி	34,121	2,623	31,497	1,823	205	..	..
4 குருப்பம்	29,370	1,834	27,535	2,061	263	..	..
5 சங்கம்வலசா	11,407	759	10,648	546	36	..	..
6 செம்முடு	13,009	242	9,763	127	47	..	..
7 தாடபஞ்சபேட்டா	11,732	1,924	9,807	2,282	86	..	..
8 சாகூர்	65,221	8,675	56,555	2,574	727	..	..
அலெக்ஜாண்டர் அறிக்கை—தொடர்ச்சி.							
9 பொப்பிலி	1,39,640	4,331	1,35,308	6,868	1,626	..	..
10 ஆந்திரா	4,921	1,536	3,385	150	..	..	..
11 மடகோல்	71,757	7,467	64,289	3,426	..	..	..
12 கோல்கொண்டா	25,067	10,137	14,930	1,806	..	..	..
13 காசிபுரம்	1,501	..	1,501	685	..	..	..
14 சர்வேபள்ளி பீமவரம்	1,141	..	1,141	326	..	..	..
15 ஜெயபூர்	58,397	..	58,397	14,450	..	..	..
16 பெல்காம்	16,450	..	16,405	1,123	420	..	..
ஆக மொத்தம் ..	14,98,243	1,66,312	13,31,919	1,01,847	18,828	2,912	11,078

ஜமீன் பெயர்.	மொத்தம் குறைக்க வேண்டியது. (24)	ஜமீனின் மொத்த ஜம்மா. (25)	மொத்த ஜம்மாவில் 2/3 ஜமீன் தாருக்கு. (26)	சர்கூட் கமிட்டியார் எடுத்தபடி ஜமீன்தாரியன் சராசரி மதிப்பு. (27)	1703-க்கு முன் விஜயராம ருஜுக்கு கட்டிய கப்பம். (28)	விஜயநகரம் குடும்பத்திலிருந்து பிரித்தபின் முதல் வருஷமான 1206-ம் பசலியில் வெப்பால் தீர்மானிக்கப்பட்ட ஜம்மா. (29)	1209-ம் பசலி ஜம்மா. (30)
	ரூ.	ரூ.	ரூ.	ரூ.	ரூ.	ரூ.	ரூ.
வெப் அறிக்கை—தொடர்ச்சி.							
1 விஜயநகரம்	81,413	7,21,518	4,81,012	12,60,000	..	6,00,000	6,00,000
2 பாலக்கொண்டா	11,595	76,339	50,892	1,11,029	50,000	50,000	56,000
3 மரிங்கி	2,028	29,468	19,644	67,667	22,000	22,000	22,000
4 குருப்பம்	2,324	25,210	16,806			18,000	18,000
5 சங்கம்வலசா	582	10,065	6,710	74,871	..	7,000	7,000
6 செம்முடு	174	9,589	6,392	9,168	..	5,500	5,500
7 தாடபஞ்சபேட்டா	2,368	7,438	4,958	13,655	..	5,000	5,000
8 சாகூர்	3,301	54,243	35,494	65,865	..	40,000 இந்த வருஷம் சிறிய வயல்கள் குத்தகைக்கு விடப்பட்டன.	45,000
அலெக்ஜாண்டர் அறிக்கை—தொடர்ச்சி.							
9 பொப்பிலி	8,494	1,26,813	84,542	1,18,347	..	1,25,000	86,000
10 ஆந்திரா	150	3,235	2,156	4,783	..	1,545	1,545
11 மாடகோல்	3,426	60,863	40,574	97,014	..	25,000	30,000
12 கோல்கொண்டா	1,806	13,124	8,748	41,636	22,000	11,000	11,000
13 காசிபுரம்	685	816	544	..	..	..	1,200
14 சர்வேபள்ளி பீமவரம்	326	815	543	..	..	..	600
15 ஜெயபூர்	11,450	43,947	29,298	75,888	30,000	25,000	25,000
16 பெல்காம்	1,543	14,861	9,904	30,682	..	10,500	10,500
ஆக மொத்தம் ..	1,34,665	11,97,344	7,98,217	..	..	9,45,545	9,24,345

ஜமீன் பெயர்.	1211-ம் பசலி ஜம்மாவும் N.B.1210-ம் பசலி ஜம்மாவும் ஒன்றே. (31)	1796–97, 1797–98, 1798–99 வருஷங்களின் சராசரி மொத்த வரவு. (32)	1799–1800, 1800–1, 1801–2, 1802–3 மொத்த வரவின் சராசரி. (33)	டிமாண்டு வரவில் 1211-ம் பசலியின் முடிவில் மீதி நின்றது. (34)	அலக்ஜாண்டரும், வெப்பும், முதல் இரண்டாம் வருஷங்களுக்கு ஏற்படுத்திய ஜம்மா. (35)	4, 5, 6 வருஷங்களின் ஜம்மா. (36)	6-ம் வருஷத்திலிருந்து ஜம்மா நிஷ்கரிஷை செய்யப் பட்டது.)37)
	ரூ.	ரூ.	ரூ.	ரூ.	ரூ.	ரூ.	ரூ.
வெப் அறிக்கை—தொடர்ச்சி.							
1 விஜயநகரம்	6,00,000	5,51,376	5,30,550	3,61,813	5,30,000	5,30,000	5,44,000
2 பாலக்கொண்டா	56,000	54,866	59,917	26,400	57,000	57,000	57,000
3 மரிங்கி	22,000	19,554½	18,408	13,685	14,000	16,000	18,500
4 குருப்பம்	18,000	15,998½	14,750	12,940	10,500	12,000	14,500
5 சங்கம்வலசா	7,000	6,219½	6,833	3,000	7,000	7,000	7,000
6 செம்முடு	5,500	4,886	5,145	1,850	5,000	5,000	5,000
7 தாடபஞ்சபேட்டா	5,000	3,545½	2,779	13,892	3,000	3,000	3,000
				வெப்பால்.	40,000	40,000	40,000
8 சாகூர்	45,000	39,165	41,599	24,023 அலெக்ஜாண்டரால்.	30,000	36,000	36,000
அலெக்ஜாண்டர் அறிக்கை—தொடர்ச்சி.							
9 பொப்பிலி	86,000	73,507	83,445	25,628	90,000	90,000	90,000
10 ஆந்திரா	1,545	1,368½	1,481	916	1,380	1,380	1,380
11 மடகோல்	30,000	23,502½	22,222	1,28,589	25,000	30,000	35,000
12 கோல்கொண்டா	11,000	10,210½	8,295	66,908	10,000	10,000	10,000
13 காசிபுரம்	1,200	823½	1,250	400	600	600	600
14 சர்வேபள்ளி பீமவரம்	600	..	..	..	400	400	400
15 ஜெயபூர்	25,000	22,963½	24,999	..	5,000	25,000	25,000
16 பெல்காம்	10,500	9,625	10,500	..	10,500	10,500	10,500
ஆக மொத்தம் ..	9,24,345	8,37,611½	8,32,173	6,79,944	8,25,380	8,33,880	8,57,880

ஜமீன் பெயர்.	ரெவினியூ போர்டு நிஷ்கரிஷை செய்த ஜம்மா.								
	பசலி 1213. (38)	பசலி 1214. (39)	பசலி 1215. (40)	பசலி 1216. (41)	பசலி 1217. (42)	பசலி 1218. (43)	வராகனில் நிஷ்கரிஷிக்கப்பட்டது. (44)		
	ரூ.	ரூ.	ரூ.	ரூ.	ரூ.	ரூ.	வராகன்		
வெப் அறிக்கை—தொடர்ச்சி.									
	நிஷ்கரிஷை ஜம்மா.								
1 விஜயநகரம்	5,00,000	5,00,000	5,00,000	5,00,000	5,00,000	5,00,000	1,42,857	6	30
2 பாலக்கொண்டா	51,000	51,000	51,000	51,000	51,000	55,000	15,714	12	60
3 மரிங்கி	14,000	14,000	16,000	16,000	16,000	18,000	5,285	32	30
4 குருப்பம்	10,500 நிஷ்கரிஷை.	10,500	12,000	12,000	12,000	14,500	4,142	38	20
5 சங்கம்வலசா	6,700 நிஷ்கரிஷை.	6,700	6,700	6,700	6,700	6,700	1,914	12	60
6 செம்முடு	5,000 நிஷ்கரிஷை.	5,000	5,000	5,000	5,000	5,000	1,428	25	40
7 தாடபஞ்சபேட்டா	3,000 நிஷ்கரிஷை.	3,000	3,000	3,000	3,000	3,000	857	6	30
8 சாகூர்	36,000	36,000	36,000	36,000	36,000	36,000	10,285	32	30
அலெக்ஜாண்டர் அறிக்கை—தொடர்ச்சி.									
9 பொப்பிலி	84,000 நிஷ்கரிஷை.	84,000	87,000	87,000	87,000	90,000	25,714	12	60
10 ஆந்திரா	1,380	1,380	1,380	1,380	1,380	1,380	394	12	60
11 மடகோல்	25,000 நிஷ்கரிஷை.	25,000	30,000	30,000	30,000	35,000	10,000	0	0
12 கோல்கொண்டா	10,000 நிஷ்கரிஷை.	10,000	10,000	10,000	10,000	10,000	2,857	6	30
13 காசிபுரம்	600 நிஷ்கரிஷை.	600	600	600	600	600	171	19	10
14 சர்வேபள்ளி பீமவரம்	400 நிஷ்கரிஷை.	400	400	400	400	400	114	12	60
15 ஜெயபூர்	16,000 நிஷ்கரிஷை.	16,000	16,000	16,000	16,000	16,000	4,571	19	20
16 பெல்காம்	10,500	10,500	10,500	10,500	10,500	10,500	3,000	0	0
ஆக மொத்தம் ..	7,74,080	7,74,080	7,85,580	7,85,580	7,85,580	8,02,580	2,29,308	25	10

9-ம் அத்தியாயம்.

எக்ஸ்சேஞ்சும், கரன்சி திட்டமும்—ரேஷியோ உயர்ந்தால் நிலவரியும் உயர்தல்.

நாணய முறையும் வரியும்.

சர்கூட் கமிட்டியாரின் அபிப்பிராயத்தைப் பார்த்தால் இந்தியாவில் நிலச்சுவான்தார்கள் ஒருபுறம் சர்க்காரை ஏமாற்றி, பேஷ்கஷை குறைப்பதும், விவசாயியை துன்புறுத்தி அதிகவரி வாங்குவதுமான, தனக்கென ரெவன்யூ முறையும், நாணயமும், "கரன்சியும்" இல்லாத ஒரு கீழ்த்தர நாடாக இருக்கிறது. இப்பொழுதுள்ள ரெவன்யூ முரை அக்பர் காலத்திலிருந்ததைப் பின்பற்றியது. முன் காலத்திய இந்திய பொக்கிஷ முறையையும், இப்பொழுதுள்ள ஆங்கில கரன்ஸி முறையும் ஒத்துப்பார்த்து அது எவ்வாறு விவசாயியையும், நிலத்தில் வரும் வரும்படியையும் தாக்குகிறது என்று பார்ப்போம்.

பிரிட்டிஷாரின் லாண்ட் ரெவன்யூ முறையை புரிந்துகொள்ள அடுத்தடுத்து நாம் கவனிக்கவேண்டியவை—

(1) பிரிட்டிஷ் இந்திய கரன்ஸி முறை,

(2) பழைய இந்திய கரன்ஸி முறை,

(3) குத்தகை குறைத்தலும், விலைநிலையும்,

(4) குத்தகை, கரன்ஸி சட்டங்களில் மாறுதல்களும்.

இந்தப்படியாக நான்கு தலைப்பின்கீழ், மாறுதல்கள் ஆனதை விசாரித்துப்பார்த்தால், ஆங்கிலேயர்களின் மனப்பான்மையும், வரிச்சட்டத்தில் எவ்வாறு இதனால் மாறுபாடுகள் ஏற்பட்டதென்பதும் விளங்கும். அப்போதுதான் விவசாயி, 1802-ம்ஹூ த்திற்குப்பின் பலனை அடைந்திருக்கிறான் என்பது விளங்கும்.

பிரிட்டிஷ் நாணய முறைத் திட்டம்.

சரித்திரம்.

(1) ஹிந்து, மகமதிய மன்னர் நாளின் நாணயத்திட்டம்:—பிரின்சிப் என்பவர் பொது நாணயத்தை இந்தியாவில் புகுத்திய பிரக்யாதி உடையவர். அவர் ஹிந்து முஸ்லீம் ராஜ்யத்தில் நாணய திட்டம் எப்படி இருந்ததென்பதைப்பற்றி எழுதியிருக்கிறார். அதன்படி ஹிந்து அரசாங்கத்தின் கடைசி நாணயத்தின் மதிப்பு 60-லிருந்து 120 குண்டுமணிகனம். மகமதியர் காலத்தில் அடிக்கடி, ஷீர்ஷா கோல்ட் தினார், வெள்ளி திராக்மா, செப்பு பாலிஸ், என்பன வழங்கின.

(2) அப்போது நாணயங்கள் செய்ய தங்கசாலைகள் இருந்தன.

(3) பொன் பகோடா 1818-ம்ஹூ வரை இருந்து மறைந்தது. சர்க்கார் அப்போது விடுத்த பிரசுரத்தில் தேசத்தில் வழங்கும்படி தங்க நாணயங்கள் வெளிவந்திருக்கின்றன. ஜனங்களின் சௌகர்யத்திற்காக அவைகளை சர்க்கார் மதிப்புப்படி காரியாலயங்களினின்றும் கொடுப்பார்கள், வாங்கியும் கொள்ளுவார்கள். அப்போது ஒரு பொன் ரூபாய் 15 வெள்ளி ரூபாய்க்கு தரப்படும்.

அதனால் பகோடாமட்டும் ஒரே நாணயமல்ல. 15 ரூபாய் போதுமான 1 பவுன் மதிப்புள்ள பொன் நாணயமும் இருந்தது. ஆங்கில சர்க்கார் மொகல் திட்டத்தை, மக்களின் நன்மைக்காக வெள்ளி ரூபாய்த் திட்டமாக்கி, அதில் 165 குண்டுமணி சுத்த வெள்ளியும் 15 குண்டுமணி கலப்பும் இருக்கும்படி செய்தார்கள். இதுதான் இந்தியாவின் பொருளாதாரக் கஷ்டத்திற்கு காரணம். இது மொகல் ராஜாங்கத்தின் நாணய திட்டத்தை ஒட்டிச் செய்த ஏற்பாடில்லை. இந்த ராஜதானியிலுள்ள பல ஜில்லாக்களிலும் வேறு இடங்களிலும் இந்தியாவில் 18-ம் நூற்றாண்டின் இறுதியில் பல விதமான பொன் வெள்ளி நாணயங்கள் வழங்கிவந்தன. சர்க்கார் தங்கள் உத்தியோகஸ்த்தர்கள் தங்கள் நாட்டிற்கு அனுப்பிய பணத்தில் நஷ்டமேற்பட்டது என்று, அதற்குக் காரணம் இவ்வித நாணய மாற்றமெனக் கண்டனர். ஸ்டார் பகோடாவில் சம்பளம் வாங்கி ஊருக்கு அனுப்புவதில் லாபமில்லை. பொன்னிலிருந்து வெள்ளி நாணயமாக மாறுதலில் 1 ஷில்லிங் 4 பென்ஸி லிருந்து 2 பென்ஸுமாக ஒரு ரூபாய்க்கு மாற்றினார்கள். மேலும் ஒரு பொன் ரூபாயை 15 வெள்ளி ரூபாயிலிருந்து 10 வெள்ளி ரூபாய்க்கு குறைப்பதால், பிரிட்டிஷ் சரக்குகளைக் குறைந்த விலைக்கு இறக்குமதி செய்யலாமென்றும், இந்தியாவில் வியாபாரம் நிலைதிருந்தலாமென்றும், நினைத்தார்கள். அதனால் பொன் பகோடாவிலிருந்து, வெள்ளி ரூபாயாக மாற்றினார்கள். அதனால் பொன் நிலையும், பொன் நாணயமும் போய், இந்தியாவில் நாணயம் வார்க்கும் நிலையங்களும் போயின. வெளி உபயோகத்துக்கன்றி, உள் உபயோகத்திற்கு பொன்னை விலை குறைக்கவில்லை. அதனால் அவர்கள் வெள்ளி ரூபாய் மதிப்பை ஏற்றுக் கொண்டாலும் பொன் நாணய நடமாட்டத்தைக் குறைக்க விரும்பவில்லை. பொன் நாணயமும் வழக்கத்தி லிருக்கும். அது ரூபாய் போலவே அதாவது 180 குண்டுமணி (டிருய் குண்டுமணி) எடையாகவும், 105 குண்டுமணி சுத்தத் தங்கமாகவும், முழு, ½, ¼, மாதிரிகளில் இருக்கும்.

இரண்டு ஷில்லிங் மாறுதல் விகிதம் வைத்த காரணம்: பிரிட்டிஷார் அவர்கள் பொன் விலைக்கு 2/3 பங்கில் இந்திய சாமான்களை வாங்கக்கூடும். 1793-ம்ஹூ 35 வங்காள ரெகுலேஷன்படி வெள்ளி பொது நாணயமாக வட இந்தியாவிலிருந்தாலும் பொன் மோகர் ரூபாய், பகோடா முதலியன 1818-ம்ஹூ வரை தென் இந்தியாவில் இருந்தன. ஏன் என்றால் அதுவரை பிரிட்டிஷார் ஆதிக்கத்தில் தென் இந்தியா வரவில்லை. பிரிட்டிஷார் ஆதிக்கத்தில் வந்தவுடன் 1818-ம்ஹூ வெள்ளி ரூபாயை பொது நாணயமாக இருக்க பிரசுரித்தார்கள். அப்போது பொன் நக்ஷத்திர பகோடா 52·56 மணி எடை 10½ காரட் தங்கம்.

(4) 1835-ம்ஹூ பொன் நாணயம் இருக்கக்கூடாதென்றும், வழங்கும் நாணயம் ஒரு ரூபாய் ½ ரூபாய் ¼ ரூபாயாகவும், இரட்டை ரூபாயாகவும், ஒரு ரூபாய் 165 மணி நல்ல வெள்ளியும், 15 மணி கலப்பும், அது போல விகிதத்தில் மற்றவைகளும், இருக்கவேண்டுமென்றும் 17-வது ஆக்ட் செய்யப்பட்டது. அதே சமயத்தில் பொன் மோகர்கள் முன்போல 180 மணி எடையில், 11/12 பங்கு சுத்தப் பொன்னும், 1/12 பங்கு கலப்பும் சேர்ந்ததாயும், மற்றும் 30 ரூபாய், 10 ரூபாய், 5 ரூபாய் விலையில் பொன்னும், அச்சாகவேண்டுமென செய்விக்கப்பட்டது. 1835-ம்ஹூ வரை அது வழங்கிவந்தது. பொன்னிற்கு பதில் வெள்ளியை நாணயமாக்கியும், சந்தேகம்போக திட்டம் மட்டும். பொன் நாணயம் ஆக இருந்தது.

தங்கசாலையில் பொன் நாணயங்கள் செய்யவும், வாங்கவும் 1835-ம் வருஷ சட்டப்படி அமுலில் இருந்தது. சர்டிபிகேட்டுகள் பொன்னுக்காக இருந்தால் பொன்னே தரப்பட்டது. ஆனால் பொன்னுக்காக சர்டிபிகேட் வாங்கப்படவில்லை. சந்தேகத்தைப் போக்க இம்மாதிரி செய்தனர். ஆனால் பரபரப்பு அதிகமாயிருந்தது. 1835-ம் வருஷம் 17-ம் ஆக்ட்படி கிழக்கு இந்தியா கம்பெனியில் பொன் வழங்கப்படும் நாணயமில்லையென்று தெரிவித்திருந்தாலும் 1841-ம் வருஷம் கஜானக்களில் பொன் வாங்கலாமென்று அறிக்கையிட்டார்கள். வரிக்காக பொன் கொடுக்கப்பட்டது. ஆறு வருஷம் பின் மறுபடியும் பொன் வழங்கபட்டதென்று அறிக்கைவந்தது. கம்பெனியார் இஷ்டப்படி நடந்த காலம் அது விலைகுறைந்த காலமாகிய 1852-ம் வருஷம், 1841-ம் வருஷ பிரசுரம் தள்ளிவிடப்பட்டது. இதன் காரணம் பொன் வாங்கிக்கொள்வதில் லாபமில்லை. 1848-ம் வருஷம் காலி போர்னியா பொன் சுரங்கமும் 1851-ம் வருஷம் ஆஸ்த்ரேலியா பொன் சுரங்கமும் கண்டுபிடிக்கப்பட்டு உலகத்தில் ஏராளமான பொன் வெளிவந்துவிட்டது. 5,000,000 பவுனிலிருந்து 30,000,000, பவுனுக்குமேல் பல ஆயிரம் வருஷா வருஷம் வெளியாயிற்று. அதனால் பொன்னிற்கும் வெள்ளிக்கும் உள்ள மதிப்பு குறைந்தது. 1852-ம் வருஷம் இதனால்தான் பொன்னை கஜானவில் வாங்கவில்லை. 1857-ம் வருஷம் இந்தியன் கலகத்திற்குப் பிறகு ஈஸ்ட் இந்திய கம்பெனியார், பிரிட்டிஷ் மன்னருக்கு ராஜரீகத்தைத் தந்தபிறகும், 90 வருஷங்கள் வரை ஒரு ஒரு மாறுதலுடன் இவ்விதமான பொருளாதார திட்டத்தை அனுசரித்து வந்தனர். இந்தியக்கலகம் ஒரு கோடியிலிருந்து மற்றொரு கோடிக்கு இந்தியாவின் பொருளாதார நிலையை மாற்றிவிட்டது. சோதித்தலே கிடையாது. மோசம் செய்தால் கேட்பாரில்லை. அப்போதுதான் முதல் முதலாக பொருளாதார மந்திரியை சர்க்கார் 1859-ம் வருஷம் அமர்த்தினார்கள். அவர் பெயர் சர் ஜேம்ஸ் வில்சன். அவர் 8 மாதத்தில் இறந்து விட்டாலும் காகித கரன்ஸியை அவர் புகுத்தி, முதல் இந்திய கரன்சி ஆக்ட்டாக 1860-ம் வருஷம் அவரின் பின் வந்தவர்களால் செய்யப்பட்டது. வில்சன் பொன் நாணயத்தை தாக்கவில்லை. விக்டோரியா மஹா ராணியும் அதை அங்கீகரித்தார். இந்தியாவின் நிலைக்கு காகித கரன்ஸியே நல்லதென்றனர். பதினைந்து ஆண்டில் வில்சனைப் பின்பற்றியவர்கள் லெயிங்கும் மற்றும் மூவருமாவர். லெயிங் உண்மையும் உறுதியு மானவர். கிழக்கிந்திய கம்பெனியைப்பற்றி அவர் "சர்க்கார் விரும்பப்படத்தக்கதாயின் கடுமையான, கீழ்த்தர திட்டத்தைச் செய்யக்கூடாது. ஒரு சிறு சேகரிப்பு நாளை பத்துமடங்கு வீண் சிலவிற்கும் நூறு மடங்கு அவநம்பிக்கைக்கும் இடம்தரும்" என்றார் லெயிங். 1861-ம் வருஷம் சட்ட சபையில் கொண்டுவந்த பொன் கரன்ஸியைப்பற்றி செக்ரடரி ஆப் ஸ்டேட்டுக்கு அனுப்பிய ரிபோர்ட்டில்—

இங்கிலீஷ், ஆஸ்திரேலியா முறைப்படி ஒரு பவுனும், ½ பவுனும், சரியாக ராஜாங்க சாலையில்ச் செய்து வந்தால் இந்தியரால் ஒரு பவுனுக்கு 10 ரூபாய் வீதம் ஒத்துக்கொள்ளவேண்டும்.

இந்தியாவிலுள்ள தங்கசாலைகள் பொன்னை வாங்கி 100-க்கு ஒன்று வீதம் செலவுக்கு எடுத்துக்கொண்டு, நாணய மாக்கித்தரலாம். அதேபோல் வெள்ளிக்கும் 100-க்கு இரண்டு பங்கு கட்டணம். நோட்டைக்கொடுத் தால் ரூபாயாகவாவது, சவரன் 10 ரூபாய் வீதமாகவாவது கொடுக்கப்படும். நோட்டுக்கு பதில் சவரனாவது ரூபாயாவது வாங்கக்கூடாது. பவுன் 10 ரூபாய் விகிதம் இந்தியாவின் நன்மைக்கு சரியல்ல. ஆனால் பொன் திட்டம் சில, அதில் இருக்கிறது. சென்னை, பம்பாய் முதலிய இடங்களில் ஜனங்களும், வியாபார சங்கமும், 2 ஷில்லிங் ரேஷியோவை ஒப்புக்கொண்டனர். வங்காளம் அதைத்தடுத்தது. "இத்தகைய மாறுதல் வியாபா ரத்திற்கு ஊனமென்றார்கள். என்னென்றால் வெகு பொன், இம்மாறுதலால் வேண்டியிருக்கும்."

இந்திய வியாபாரத்தில் என்ன கெடுதி ஏற்பட்டிருக்கும், பொன் திட்டத்தால்? எப்படி இந்தியாவின் பொருள் நிலைகுலையும்? ஆங்கில வியாபாரம்தான் மடியும். அதனால் அதை செக்ரடரி ஆப் ஸ்டேட் தள்ளி விட்டார். முதன்முதல் அரசுரிமையில் ஆங்கிலேயர் தள்ளிய திட்டமிதுவாகும். 2-ம் பாகத்தின் ஆரம்பம், இந்தியாவின் பொருளாதார நிலையில், அரசுரிமைக்கப்புறம் இதுவாகும். அதன்பின் 80 வருஷகாலமாய் இதுகாறும் வந்த மாறுதல்களால் சிறுக சிறுக விவசாயம், வியாபாரம், கைத்தொழில், பொருள்நிலை கரன்சி, முதலியன சீர்குலைந்தன. காரணம் பொன் திட்டத்தை செக்ரடரி ஆப் ஸ்டேட் மறுத்ததுதான். டிரவிலியன் சிபார்சு தள்ளப்பட்டாலும், சர்க்கார் ஒரு பிரசுரம் வெளியிட்டார்கள். சவரனும், அரை சவரனும், ராஜாங்க தங்கசாலைகளிலிருந்து, இங்கிலாந்தானாலும்சரி, ஆஸ்த்ரேலியாவானாலும்சரி, கஜானக்களில் கொடுத் தால் 10 ரூபாய், 5 ரூபாய் தரவேண்டும். அதேபோல 3 ரூபாய் தருபவர்களுக்கும் அதைத் திருப்பித்தரவேண் டும்.

இதனால் யாருக்கு லாபம்? தவிரவும் நோட்டுகள் எவ்வளவு பங்கு நாணயங்கள் இருக்கிறதோ அதில் கால்பங்கு நோட்டாக வெளியிடுவதாயும் தெரிவிக்கப்பட்டது. பொன் நிலை காப்பாற்றப்பட்டதென்று ஒரு நாளும் மக்கள் நம்பவில்லை. நாணயத்தின் மதிப்பு குறைந்தது. இந்தியாவிலே தங்கசாலைகள் இருக்கையில் ஏன் இங்கிலாந்து, ஆஸ்திரேலியா பொன்களை? கொண்டுவரவேண்டும் வங்காள டைரக்டர்கள் குறும்பு செய்ய ஆரம்பித்தார்கள். அவர்கள் இந்திய செக்ரடரி ஆப் ஸ்டேட்டுக்கு ஒரு செய்தி அனுப்பினார்கள் :—

> "எங்கள் மூன்றுமாத அனுபோகத்தில் இந்திய நன்மைக்காக 10 ரூபாயுக்கும், 5 ரூபாயிக்கும் ஒரு சவரனையும் அரை சவரனையும் ஏற்றுக்கொள்ளுகிறோம். அதை சட்ட முறைபடி வழங்க ஏற் பாடு செய்யவேண்டும்."

வங்காளத்தின் பாங்க் இந்தியாவும் வேண்டுகோளை நன்றாய்க்கூறியும் சர் சார்லஸ் உட் கேட்கவில்லை. 1865-ம் வருஷம் 8-ம் சட்டமான ரெண்ட் ரெகவரி ஆக்ட் விளம்பரம் ஆகும்போது, பொன் நிலையைக் கொண்டு வர இது சந்தர்ப்பமில்லையென்று கூறிவிட்டார். 1865-ம் வருஷத்துக்குமுன் 15, 16 ஆண்டுகளால் அதிகமாக வந்த பொன்னால் விலைக் குறைவு ஏற்பட்டதாக பார்த்தோம். ஆங்கிலேயருடைய மனப்பான்மையும் தெரிந்தது. 1865-ம் வருஷத்தில் இந்தியாவுக்கும் உலகத்திற்குமே ஒரு பெரிய மாறுதல் பொருளாதார நிலையில் ஏற்பட்டது. பிரான்ஸ், பெல்ஜியம், இட்டலி, ஸ்விட்சர்லாண்ட் முதலிய நாடுகள் நாணய மாற்றத்தில் ஒற்றுமை ஏற்படுத்த ஒரு ஒப்பந்தம் செய்தார்கள். இதன் பேர், "லாடின் யூனியன் டிரீட." அந்நாடுகளில் வெள்ளியும் பொன்னும் வழங்கக்கூடிய பொது நாணயமாயிற்று. அப்படியிருக்க 2 ஷில்லிங் மாற்றவும், காகித கரன்சியும், வெள்ளி நாணயமும் இந்தியாவில் உலோக சுதந்தரமற்றிருந்தது. மேற்சொன்ன காரணங்களால் இந்தியா பாதிகப்பட்டதல்லாமல், ரெண்ட் ரெகவரி ஆக்ட்படி வரியும் உயர்த்தப்பட்டு எதிர்பாராத இன்னல்கள் விவசாயி களுக்கு விளைந்தன. இந்தச் சட்டம் ஆங்கிலேயர், லாபம் சம்பாதிக்கவே. இரண்டு ஷில்லிங் விகிதத்தையும் கரன்ஸி முறையையும் பலப்படுத்தவே.

கரன்ஸி—வரியை எப்படி உயர்த்துகிறது?

உலகத்திலே இங்கிலாந்தைப்போன்ற நாடுகளெல்லாம் காடுகளாய் இருந்த பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே இந்தியா எல்லாத்துறைகளிலும் சீரான தேசமாக இருந்தது. துணியென்பதே தெரியாத காலத் தில் இந்தியாவில் வெகு நேர்த்தியான துணிகள் நெய்யப்பட்டன. அதேபோல் வரி இலாக்காவும் நாணய மாற்றமும் கரன்ஸி திட்டமும். இந்து முஸ்லீம் அரசாட்சியில்க்கூட பொன் திட்டம் அமுலில் இருந்தது. பொன்னையும் வெள்ளியையும் செய்யும் சாலைகளிருந்தன. பொன் மோகர்களும் வெள்ளி ரூபாய், அரை

ரூபாய், கால் ரூபாய், செப்பு காசிகளும் இருந்தன. வேறு நாடுகளில் அப்போது மரத்துண்டுகளை, பணமாக கருதினார்கள். இப்படி நாணய நடமாட்டமிருந்தும், மாசூலே வரியாக வாங்கப்பட்டு வந்தது. இந்து அரசாங்கத்தில் ஆறில் ஒருபங்கு ஒரு வரி. மகமது காலத்திலும் அப்படியே. அக்பருடைய மந்திரி வரி இலாக்காவை சீர்திருத்தம் செய்ய, இன்யி அக்பாரி, எனும் திட்டம் ஒன்று இருந்தது. மகமதயருடைய வரி வசூல் அதிகமாக நாணயத்திலிருந்து மூன்றில் ஒருபங்கு சமானமாக இருந்தது. ஆங்கிலேயர் வருவதற்குமுன் அது அதிகமாக இருந்தது. இதற்கு சான்றாக காளாஸ்திரி ஜமீன்தாரின் ஒருபங்காகிய ராஜா பனங்கல் ஜமீனில் அதிக வரிகளைப்பற்றி பல பத்திரங்களை சாட்சியமாக காட்டுகிறார்.

கரன்ஸி—வரியின் இயற்கையும், கரன்ஸியால் ஏற்பட்ட பாதகங்களும்.

இந்து மகமதிய அரசாங்கத்திலும், ஆங்கிலேயர் அரசாங்கத்தின் ஆரம்பத்திலும், மாசூலின் ஒரு பங்கு வரியாக இருந்தது. அப்படியே இருந்தால் இப்போது பொருளாதார நிலை குன்றாது. மேலும் மாசூல் இல்லாவிட்டால் வரி கேட்க, அரசருக்கு உரிமையிருக்காது. நிலம், பயிர், வரவிட்டால் மன்னரும் நஷ்டத்தில் சேரவேண்டியதுதான். ராஜாங்கத்தை நடத்தவும், கஷ்டப்படவேண்டும். வரி குறைத்தல் என்பது இலகு இல்லை. இயற்கை நியாயம் நடந்தது. நாணயங்கள் சாலையில் செய்யப்பட்டு இந்து மகமதிய அரசாங்கத்தில் விவசாயம், வியாபாரம், கைத்தொழில், விருத்தியாக, வழங்கப்பட்டு வருகையில், கரன்ஸி குறுகியோ பெருகியோ சூழ்ச்சிகள் செய்யப்படவில்லை. கடந்த 100 ஆண்டுகளாக ஆங்கிலேயர்களால் செய்யப்பட்ட செயல்கள் எல்லாம் தெரியாது, அந்நியர்களால் கொள்ளையிடும் எண்ணம், மகமதிய மதத்திற்கு இல்லை. இங்கு சம்பாதித்து ஆங்கிலேய அதிகாரிகள் வெளியே அனுப்புவதுபோல இந்திய மன்னர்களுக்கு அவசியமில்லை. ஆங்கில அரசாங்கத்திலும் மாசூலின் பகுதியே, வரியாய்க் கொண்டு இந்த பண நடமாட்டத்தையும், அந்நிய கரன்ஸி முறையையும் புகுத்தாவிட்டால் விவசாயிகளுக்கு இந்தக் கஷ்டம் ஏற்பட்டிருக்காது. ஆரம்ப முதல் இந்திய மக்களின் தாழ்மைக்கே ஆங்கிலேயர் வழி தேடிவந்தனர். வியாபாரம் செய்யவந்த கிழக்கு இந்திய வியாபாரிகளும் அவ்வாறு செய்து கணக்குகளை இங்கிலாந்துக்கு அனுப்பிவந்தார்கள். மூன்று அரை ரூபாய் பெறுமான வராகனை, பொன் வராகனில் தங்கள் ஊருக்கு அனுப்பினார்கள். 1818-ம் வருஷம் வராகனில்தான் கணக்கு இருந்தது. அப்போது தான் அவர்கள் இவ்விதமான சூழ்ச்சியை, நாணய உலகத்தில் புகுத்தினார்கள். பொன் வராகனும் மொகரும் அனுபவத்தில் அவர்களுக்கு லாபம் தர இல்லை பொன் மொகரும் வெள்ளி ரூபாயும், செப்பு காசுகள் இருக்கையில் நாணயமாற்றும் திட்டம் கொண்டுவருவதில் பலம் இல்லை என்று நினைத்தார்கள். இந்தியர்கள் அனுபவித்த பொன் திட்டத்தை எடுத்துவிட நினைத்தார்கள். அதன்படி பொன் திட்டத்தை எடுத்துவிட்டு தங்கசாலைகளை மூடிவிட்டு, வெள்ளி ரூபாயை மதிக்கும் நாணயமாகச் செய்தார்கள். ஒரு பவுன் 10 ரூபாயாக முடிவு செய்தார்கள். ஒரே தீர்மானத்தால் மூன்றில் ஒரு பங்கு மதிப்பைக் குறைத்து விட்டார்கள். இதனால் ஆரம்பத்திலேயே நாணய மாற்றும் திட்டத்தை புகுத்தி விவசாயிக்கு, அதிக வரியால் சுமை கட்டினார்கள்.

1802—1862 வரையில் ஒருபுறம் சர்க்காருக்கு மற்றொருபுறம் ஜமீன்தாருக்கும் விவசாயி தரும் வரியை, முடிவு செய்கையில், இவ்விதமான நாணய மாற்றும் திட்டத்தால், புதிதாகவும் வரியை உயர்த்தி விட்டார்கள். இம்மாதிரி 2 ஷிலிங் திட்டம், வெகு நாளாக பொன் விலை, கெலிபோர்னியா, ஆஸ்திரேலியா, பொன் சுரங்களால் குறையும்மட்டுமிருந்தது. மறுபடியும் பொன் விலை ஏறும்போது மாற்றிவிட்டார்கள். இம்மாதிரி இங்கிலாந்து லாபம் அடையவும், இங்கிலீஷ்காரர்கள் பொருள் சேர்க்கவும், செய்தார்கள். இது விஷயமாக 1818-ம் வருஷம் முதல் 1938-ம் வருஷம் வரையில் இருந்த சில முக்கியமான சங்கதிகளைக் கவனிப்போம். பல காரணங்களுக்கு 1818-ம் வருஷத்தில் புகுத்தி 2 ஷிலிங்கு திட்டம் இந்து மகமதிய காலததிலிருந்த, 1 ஷிலிங் 4 பென்ஸ் திட்டத்திற்கு வந்தது. மறுபடியும் 1920-ம் வருஷம் 2 ஷிலிங் திட்டத்திற்கு வந்தது. 1928-ம் வருஷத்தில் 1 ஷிலிங்கு 6 பென்ஸு திட்டத்திற்கு வந்தது. இப்போதுகூட நாணய உயர்வால் நம் நாடு கஷ்டப்படுகிறது. இந்தியாவில் சேம்பர் ஆப் காமர்ஸ் 1 ஷிலிங்கு 4 பென்ஸ் வீதம் குறைக்கும்படி கேட்க முடியாது என்று ராஜப்பிரதிநிதியும், செக்ரடரி ஆப் ஸ்டேட்ஸும் சொல்லிவிட்டார்கள். இம்மாதிரியான உயர்வு விவசாயியை வாதித்தது.

பவுலர் கரன்ஸி கமிட்டியின் அங்கத்தினர்களான காம்பலும், ஜான்மூரும், 1898-ம் வருஷத்தில் இந்திய மக்களின் சார்பாக எதிர்ப்புத் தீர்மானமும் எழுதினார்கள். 1 ஷிலிங் 4 பென்ஸ் விற்கக்கூடாது. 1 ஷிலிங் 3 பென்ஸ்தான் விற்கவேண்டு மென்றார்கள். இறக்குமதியாகும் சாமான்களுக்கு நன்மையாக இருந்தாலும், உள்ளூரில் உண்டாகும் சாமான்களுக்கு இது அநியாய வரியாகும் :

> "இறக்குமதியால் ஏற்படும் லாபம், ஏற்றுமதியால் வரும் நஷ்டத்திற்கு ஈடாகும் என்பது ஒரு பதிலா ? உள்ளூரில் உண்டுபண்ணவர்கல்லவோ, நஷ்டமும், அதை வெளியூரிலிருந்து வாங்குபவர்க்கு லாபமுமாகும். இந்தியால், பல வெளி நாட்டுப் பொறுப்புகள் இருக்கையில் அதிக ஏற்றுமதி செய்வதில், இவ்விதமாய்ச் செய்தல் கெடுதியாகும்."

இவ்வித நாணயமாற்றம் வெளி நாட்டாருக்கும், நிலச்சுவான்தாருக்கும், உத்தியோகத்திலிருப்பவருக்கும், லாபமன்றி ஏழைக் குடியானவனுக்கு வெகு நஷ்டமாகும். கடன்காரர்கள் பணமாய்த் தருவதால் அவர்களுக்கும் நஷ்டம். 1920-ம் வருஷம் இப்படி இருந்ததால் பல கோடீஸ்வரர்கள் பராதியானார்கள். பொன் 15 ரூபாயிலிருந்து 10 ரூபாயாக்கப்பட்டது. 16 பென்ஸ் பொன்னை ரூபாயாக மாற்றலாமென்றனர். 15 ரூபாய் ஒரு பொன் என சட்டம் செய்ய வேண்டியது. இது ரூபாயை 1/15 சவரனுக்குக் குறையாமல் செய்யும். இதற்கும், நோட்டுகளையும், வெள்ளி நாணயங்களையும் குறைத்தால், இந்த நிலையையும், சண்டைக்கு முன் இருந்தபடியாவது திருத்தலாம். இது இந்தியாவுக்கு நல்லது. ஆனால் இதை ஸெக்ரடரி ஆப் ஸ்டேட் ஒத்துக்கொள்ளவில்லை.

சர் பேசில் பிளாக்கட், 1 ஷி. 6 பெ. விகிதத்தை 1927–28-ம் வருஷத்தில் சட்டமாகக் கொண்டுவந்தார். 1 ஷி. 4 பெ. தான் இயற்கை மதிப்பு. 1 ஷி. 6 பெ. ஒத்துக்கொள்ளாவிட்டால் 5 கோடி ரூபாய் நஷ்டம் வரும் என்றார். அதற்கு வரியில் அப்படி நஷ்டம் வந்தால் விவசாயிக்கும், விவசாயப் பொருள்களிலும் எவ்வளவு அதிக நஷ்டம் வரும் என்பதில் கொடுத்தனர். 9 மாதத்தில் 30 கோடி ரூபாய் நஷ்டம் வந்தது. நல்ல மழை உள்ளபோது இம்மாதிரி 6 வருஷங்கள் செய்ததில் வெகு நஷ்டம் விவசாயத்திற்கு ஏற்பட்டது. பாபிங்டன் ஸ்மித், 2 ஷி. விகிதத்தில் 38·4 கோடி நஷ்டம் என்கிறார். 1927–28-ம் வருஷத்துக்கு பின் விவசாயிகள் இம்மாதிரியான குறுக்கு வழியான வரியால் நஷ்டமடைகிறார்கள்.

இப்போது இம்மாதிரியாகி, 10 வருஷங்களுக்கு மேலாகின்றது. பணக்காரர்களும், ஏழைகளும், கரன்ஸி சங்கத்தால் இதைப்பற்றிக் கிளர்ச்சி செய்தார்கள். 1 ஷி. 4 பெ. வரும் வரை போராடுவதாகக் கூறினார்கள் ஆனால் பயத்தாலும், செலவாலும், சந்தேகத்தாலும் விட்டுவிட்டார்கள். காங்கிரஸ்காரரும் இதைப்பற்றி

ஒன்றும் செய்யவேயில்லை. முதல் முதலாக காங்கிரஸ் தலைவரான சுபாஸ் சந்திரபோஸ் இதைப்பற்றி அக்கரை செலுத்தினார். ஏற்றுமதிக் குறைவால் வியாபார சங்கத்தார் செய்த கிளர்ச்சியில் 1 ஷி. 4 பெ. விகிதம் நாணய மாற்றம் வேண்டுமென சொன்னதைப்பற்றி தலைவர் கவனித்தார். ஆனால் செக்ரடரி ஆப் ஸ்டேட்டோ கடுமையான பதிலில் மறுத்துவிட்டார். இங்கிலாந்து, இந்தியாவை என்ன செய்யும்படி வேண்டுகிறதோ அப்படிச் செய்யச் செய்யும் ஒரு சிறிய பதிலில் இந்த ஏற்பாட்டில் இந்தியாவை சும்மா இருக்கச் செய்கிறது. ஆனால் இக்கிளர்ச்சி இந்தியாவோடு நிற்கவில்லை. உலகமே, கரன்ஸி நாணய மாற்றம், முதலியவைகளில் சம்பந்தப்பட்டது. ரிசர்வ் பாங்க் சட்டத்தில் குறிப்பிட்ட 1 ஷி. 49/64 பெ. திட்டத்திதையும் மீறி, 1 ஷி. 5–27/32 பெ. இருந்த ரூபாய் ஸ்டெர்லிங் நிலை 1938-ம் வருஷம் ஜூன் மாதம் 2-ம் தேதி திடீரென 1 ஷி. 5-48/64 பெ. ஆக குறைந்துவிட்டது. 1937-ம் வருஷத்தைவிட ஏப்ரல் மாதத்தின் ஏற்றுமதியில் 3 கோடி ரூபாய் குறைவைக் காட்டுகிறது. சர்க்காரே ரிசர்வ் பாங்கில் இதை சமாளிக்க 160 கோடி ரூபாய் இருப்பில் இருக்கிறது என்கிறார்கள். ஆனால் இந்த திட்டத்தைக் காப்பாற்றுவதில் ஏன் வீண் நஷ்டம் என்பதுதான் கேள்வி. சீன ஜப்பான் யுத்தத்தால், ஏற்றுமதிக், குறைவால் அமெரிக்காவுக்கு வாங்கும் சக்தி குறைந்துவிட்டதால் அதனால் விலை உயர சந்தர்ப்பமில்லை. இந்தியாவுக்கும் ஏற்றுமதியில் குறைவால் நஷ்டம்தான் வரும். 1931-ம் வருஷத்துக்கு முன் இந்தியாவில் இறக்கப்பட்ட தங்கத்தில் இந்த 7 வருஷத்தில் 95 சதத்திற்குமேல் ஏற்றுமதியாகிவிட்டது. அதனால் ஏற்றுமதி குறைந்து நாணய மாற்றம் பாதிக்கப்படும். ரிசர்வ் பாங்க் இந்திய அரசாங்கத்தை இந்த விகிதத்தை மாற்றக் கேட்காதுபோல காண்கிறது. இந்திய சர்க்கார் எந்த விதத்திலும் 1 ஷி. 6 பெ. விகிதத்தை நிலைநாட்ட 160 கோடி ரூபாய் சக்தி இருப்பதாய்ச் சொல்லுகிறார்கள்.

1927-ம் வருஷத்திலிருந்து 1 ஷி. 6 பெ. விகிதத்தை இந்தியாவின் பொருளுக்கு நஷ்டத்தோடு சர்க்கார் நிலைநாட்டி வந்தனர். 150 வருஷத்திய அனுபோகம், உலகத்தையாவது, இந்தியா சர்க்காரையாவது புத்திசாலிகள்ஆக்கவில்லை. 1929–30-ம் வருஷம் ஆரம்பித்த இந்தியாவின் பொருளாதாரக் கஷ்டம் இம்மாதிரி நாணயமாற்றத்தில் ஏற்பட்ட உயர்வு, தாழ்வு மாறுதல்களால்த்தான் தப்பித்தார்கள் என்றால் ஏராளமான இந்தியாவின் பொன் இங்கிலாந்திற்கு போனதே காரணம். ஆனால் இது வெகு நாளைக்கு இருக்காது என்பதும், எப்போதும் கெட்டகாலம் ஆரம்பிக்கும் என்பதும் அவர்களுக்குத் தெரியும். இப்போது ஏற்பட்ட 1 ஷி. 5—48/64 பெ. விலையால் இந்தியாவின் ஏற்றுமதி 1930-ம் வருஷம் ஏப்ரல் மாதம் 3 கோடி ரூபாய் குறைவைக்காட்டிற்று. சர்க்காரோ ஆதாரம் இருப்பதாகவும் எப்படியும் இந்த நிலையை காப்பாற்றுவதாகவும் கூறுகிறார்கள். ஆனால் சர்க்கார் இம்மாதிரி பொதுஜனங்களின் பொருளை வீண்செலவுசெய்வதற்கு நியாயமிருக்கிறதா? மக்கள் இதைக் கவனித்து வருகிறார்கள். மஜூம்தார் ரிசர்வ் பேங்கில் உள்ள பணம் இப்படி வீண் விரயத்திற்கு அல்ல, காகித நோட்டுகள், ஏராளமாகயிருப்பதால் அது சர்க்காருடைய கடனுதால் அதற்காக நிறுத்திய பணம் பாங்கிலிருப்பது என்றார். காகித நோட்டுகள் மாத்திரம் இல்லாவிட்டால் சர்க்கார் நிலை என்னவாகும்? இப்பிடிவாதம் செய்ய முடியுமா? மஜூம்தார் இதை ஆராய்ந்து இருக்கிறார். ரிசர்வ் பாங்கின் பொருளாதார நிலையைக் கவனிப்போம். 1938-ம் வருஷம் மே மாதம் 27-ந் தேதி ரிசர்வ் பாங்கின் பணம் கொடுக்கப்படும் இலாக்காவில் 215 கோடி ரூபாய் கடன். இதற்கு சாமான்களும் பொன்னுமாக 44 கோடி ரூபாயும், பொன் ஜாமினில் 74 கோடி ரூபாய் இருக்கிறது. மீதி ரூபாய் ஜாமினிலும் ரூபாயுமாயிருக்கிறது. இது திரும்பவும் மாற்றும்போது நஷ்டத்தை விளைவிக்கும். மஜூம்தார் சர்க்கார் விடுத்துள்ள அறிக்கை முட்டாள்த்தனமானது என்று கீழ்க்கண்டவாறு சொல்கிறார்:—

> ரிசர்வ் பாங்கின் பொருளாதாரம்.—பொன், ஸ்டெர்லிங் சொத்தை ரூபாய் மாற்றத்தில் கவனித்தால் 44 கோடி ரூபாய் பெறும் பொன்னும், 78 கோடி ரூபாய் ஸ்டெர்லிங் ஜாமீனும் இருக்கிறது. இதில் 40 கோடி ரூபாய் பொன்னை எப்பொழுதும் பாங்கு சட்டப்படி இருப்பில் வைத்திருக்கவேண்டும். 4 கோடி ரூபாய்தான் ரேஷியோ நிலையை காப்பாற்ற உபயோகிக்கலாம். மீதி 78 கோடி ஸ்டெர்லிங் ஜாமீனில் 2/3 இருப்பிலிருக்கவேண்டும். அதனால் 40 கோடி ரூபாய்ப் பொன்னை இருப்பில் வைத்துக்கொண்டு 45 கோடி ஸ்டெர்லிங் சொத்தை இந்த பிரிவின்படி வைத்திருக்க வேண்டியிருக்கிறது. அதனால் 32 கோடி ரூபாய் ஸ்டெர்லிங் சொத்துக்கு அதிகமாக நிலுவை கரன்ஸி நோட் வெளியிலிருப்பது சட்டப்படி இருப்பதற்கு மாறாக இருக்கிறது. அதனால் ஸ்டெர்லிங் நிலுவையான 36 கோடியும், ரூபாய் மாற்றத்தை நிலை நிறுத்தயிருக்கிறது. செக்ரடரி ஆப் ஸ்டேட்ஸ் பொறுப்பை மட்டும் கவனிக்க 1938–39-ம் ஆண்டில் இந்தியா கவர்ன்மெண்டுக்கு, 40 அல்லது 45 கோடி ரூபாய் வேண்டும். அதனால் குறைவுதான் ஏற்படுகிறது. இப்பொழுது, பொன், 25 ரூபாய் விலை இருந்தபோதிலும், இது கணக்கைக் காட்டுவதற்குத்தான். வேறு எவ்வித சொத்து, இருக்கிறதென்று சொல்லமுடியும்?
>
> மேற்சொன்னதற்கு பதிலாக ரூபாய் நிலையைக் காப்பாற்ற பூரா இருப்பையும் உபயோகிக்கலாம் என்று சொல்லுகிறார்கள். ஆனால் 100 வருஷங்களானாலும், இந்தியாவிற்கு விடுதலை இல்லை. பாங்க ஆப் இங்கிலாந்து எப்படியோ அப்படி ரிசர்வ் பாங்கும். ஆனால் இந்த பாங்க் சட்டத்தை இந்தியாவுக்கு பொறுப்புள்ளவர்கள் செய்யவில்லை. காகித கரன்ஸிக்காக இருக்கும் இருப்பை இம்மாதிரி ரூபாய் மாற்றத்தை, மாற்ற உபயோகிப்பது, என்பது, நியாயம் அல்ல வென்று ஆங்கில அரசாட்சியின் ஆரம்பத்திலேயே சொல்லியிருக்கிறார்கள். காகித நோட்டிற்காக இருக்கும் இருப்பு நோட்டைக் கொடுத்தால் பணமாக மாற்றத்தான். மாற்றல் என்பதும் இதுதான். ஒரு காலமும் பணம் கொள்ளும் சக்தியில் உள்ள நலத்தைக்கருதி ஏற்றம் இறக்கம் பண்ணுவது இல்லை.

1865-ம் வருஷத்தில் பம்பாய் பாங்கில் ஒரு ஆபத்து நிலை ஏற்பட்டது. கவர்னர் உதவிக்கு ஓடினார். சர்க்கார் கையில், நியாயமாக எடுப்பதற்குப் பணம் இல்லை. காகித நோட்டுக்காக இருக்கும் இருப்பை (150 லக்ஷம் ரூபாய்) எடுக்க இந்திய சர்க்காரை உத்தரவு கேட்டார்கள். இந்தியா பூராவும் இந்த நிலை பரவாதற்கு இந்திய சர்க்காரும் உடன்பட்டு கவர்னருக்கு "உங்கள் யோஜனைப்படி செய்யலாம். நாங்கள் காப்பாத்துகிறோம். நிலையை அடிக்கடி தெரிவிக்கவும் என்று பதில் தந்தி கொடுத்தார்கள்."

பம்பாய் கவர்னருக்கு, சட்டப்படி இருப்புப் பணத்தை செலவு செய்ய அதிகாரமில்லை. சர்க்கார் பாங்கிக்கு உதவி பண்ணுவோம் என்பதை உண்மையாக இருப்பை எடுக்காமல் இந்த ஆபத்தான நிலையிலிருந்து காப்பாற்றப்பட்ட வழியாய் ஆயிற்று. இவ்விதமாக பம்பாய் கவர்னரும் இந்தியா சர்க்காரும் தீர்மானித்து ஒரு அறிக்கையை செக்ரடரி ஆப் ஸ்டேட்டுக்கு அனுபித்தார்கள். இதை அவர் அநியாயம், குற்றமானது, என்று கண்டித்தார். அவர் கொடுத்த தந்தியாவது, "சர்க்காருக்கும் பம்பாய் பாங்கிக்கும் உறவு இருக்கவேண்டுமானால் இவ்வாறு நடப்பதைக் கண்டிக்கவேண்டும். இம்மாதிரிப் நஷ்டப் பிரயோகம் செய்வது மிகவும் பிசகு. இம்மாதிரி நிலை, பணமாகக்கேட்க எல்லாரையும் தூண்டி கொடிய கஷ்டத்திற்கு உள்ளாகும். இனி இவ்வாறு நடத்தல் கூடாது."

மேற்கூறியபடி காகித கரன்ஸி சட்டம் வந்த 4-ம் வருஷத்தில் அது அமுலில் வர முடியாதபடி செய்து, வாங்கும் சக்தி இங்கிலீஷ்காரருடைய, இந்தியாவிலுள்ள சொந்த பாங்குகளில், மாற்றிவிடப்பட்டது. இது இப்படியிருக்கையில் செக்ரெடரி ஆப் ஸ்டேட் இப்பொழுது, இருப்பிலிருக்கும் பணத்தை ரேஷியோ மூலம் காப்பாற்றுவதாகச் சொல்லுகிறார். இந்த ரேஷியோவை அனுசரிப்பது இந்தியருக்கு லாபமில்லை என்று சொன்னோம். இதனால் விவசாயிகளுக்கு வரி உயர்கிறது. கோடிக்கணக்கான ரூபாயும் 1 ஷி. 6 பெ. ரேஷியோவை நிலை நாட்டுவதற்கு செலவாகுகிறது. இது நியாயம் அல்ல, தருமம் அல்ல. ஆனால் ஆங்கிலேயர்களுக்கு இந்தியா விஷயத்தில் நியாயமுமில்லை, தருமமுமில்லை. சர்பேஸில் ப்லேகட் அவர்களே 9 மாதத்தில் 1 ஷி. 4 பெ. இருந்ததை 1. ஷி. 6 பெ. ஆக மாற்றியதில் 30 கோடி ரூபாய் நஷ்டம் வந்தது என்று 1927-28-ம் வருஷத்தில் 1 ஷி. 4 பெ. லிருந்து 1ஷி. 6 பெ. விகிதத்தை நிறுத்த 9 மாதத்தில் 30 கோடி ரூபாய் செலவு செய்ததாக ஒத்துக்கொண்டிருக்கிறார். இதே மாதிரி இருக்க வேண்டுமானால், இன்னும் எவ்வளவு செலவாகுமோ, கடவுளுக்குத்தான் தெரியும். காங்கிரஸ் தலைவர்கள் இது விஷயமாக கவனம் செலுத்தியிருந்தால் சென்ற 20 வருஷங்களில் இந்தவிஷயம் முடிவுக்கு வந்திருக்கும். இவ்வளவு தூரம் இதைப்பற்றி சொல்வதின் காரணம் நமது மாகாண சட்டசபையாவது, இதில் கவனம் செலுத்தி, நாணய மாற்றத்திலிருக்கும், விகிதத்தைத்தடுத்து, வேண்டுமானால் பொருளை திட்டமாக உண்டாக்கி, பகிர்த்து விற்பனை செய்து, தக்கபடி ஜனங்களின் நன்மைக்காக பாடுபடவேண்டுமானால், மாகாணத்திற்கு மாகாணம் வியாபாரம் மாற்றமும் கூட்டுறவும் ஏற்பட வேண்டும்.

எங்கள் தீர்மானம்.

1835-ம் வருஷத்திய 17-வது சட்டத்தாலும், பிரிட்டிஷ் அரசாங்கத்தாரின் கரன்ஸி திட்டத்தாலும், நாணயமாற்ற உயர்வாலும், விவசாயம் நஷ்டப்பட்டது. இப்போது இருக்கும், பொருளாதாரத் தாழ்மை இம்மாதிரியான, ஒழுக்கமற்ற, ஏற்ற இறக்கமான, நாணய விஷயத்தால்தான். ரூபாயை 1 ஷி. 4 பெ. லிருந்து 2 ஷி. ஆக ஏற்றிவிட்டார்கள். 1818-ம் வருஷத்திலும் 1865-ம் வருஷத்திலும் 1920-ம் வருஷத்திலும் 1927–28 வருஷத்திலும் 1 ஷி. 4 பெ. லிருந்து 1 ஷி. 6 பெ. வீதம் ஏற்றப்பெற்றது. இது விவசாயிக்கு அநியாய வரியாக ஆயிற்று. அதனால் விலை வீழ்ச்சி உண்டாயிற்று. விற்பனையாகும் சரக்குகளுக்குத்தக்க விலை வரவில்லை. நாணய விகிதத்தைக்குறைக்கதக்க ஏற்பாடு செய்யவேண்டும். இதனால் சரக்கு உண்டுபண்ணி பகிர்ந்து விற்று, நம் மாகாணத்திலே நடத்தி, மற்ற மாகாணங்களுக்கும் அனுப்பி, வியாபாரம் செய்யவேண்டும்.

10-ம் அத்தியாயம்.

வழக்குத்தீர்ப்புகளால் உண்டாகும் சட்டங்கள் குடிவாரத்தையும், வரியையும் நிர்ணயித்தல்.

பூமிசாரத்தின் உரிமைக்கு, நீதிபதியாலும், சட்டத்தாலும், உண்டாகிய நியாயம்.

நிலச்சுவாந்தார் சங்கம், ஜமீன்தாருக்கு பூமியில் உரிமையிருக்கிறதென்றும், பிரிட்டிஷ் இந்தியா சட்டமும் எஸ்டேட் லாண்ட் ஆக்ட்டும் அதை அனுமதிக்கிறதென்றும், உறுதிசெய்கிறார்கள். குடிகளோ தங்களுக்கு உரிமை இருக்கிறதென்று, அதேபோல் சொல்லுகிறார்கள். குடிகள் அது காலாகாலமாய் பழக்கத்தால் வந்த உரிமை என்றும், அதை இந்து மகமதிய அரசர்களும், ஆங்கிலேய ராஜாங்கமும், கோர்ட்டுகளும் சட்டசபைகளும், அங்கீகரிக்கிறதென்கிறார்கள். ஜமீந்தார், வரி வசூலிப்பவர் என்கிறார்கள். ஜமீந்தார் இது மாதிரி சொல்வதை வெறுக்கிறார். இதைச் சட்ட மூலமாகவும், தீர்மானம் மூலமாகவும், கவனிக்கலாம். சட்ட சம்பந்தமான வரையில் விவசாயிக்குத்தான் உரிமை யிருக்கிறது. சொக்கலிங்கம் பிள்ளை வழக்கு முன்னால் விவசாயி, ஜமீந்தார் முன் குத்தகைக்காரன் என்று கொள்ளப்பட்டது. அதை 13 சென்னை, 60 பக்கம்; 20 சென்னை, 299-ம் பக்கம்; 16 சென்னை, 271-ம் பக்கம்; 23 சென்னை, 318-ம் பக்கம் மாற்றிவிட்டது.

13 சென்னை, 60 பக்கம்.—இந்த வழக்கில் நுஜ்விட் ஜமீந்தார், ஒரு டிக்ரியில் நிலத்தை ஏலத்தில் வாங்கினதில் விவசாயி அப்புறப்படுத்தக்கூடிய குத்தகைதாரர் என்றும், அனுபோக உரிமை இல்லையென்றும், சொன்னார். அனுபோக உரிமை இருக்கிறதென்று ருஜு செய்வது குத்தகைகாரருடையது என்று ஜமீன்தார் பக்கம் வாது செய்தார்கள். நீதிபதிகள் முத்துசாமி அய்யரும், வில்கின்சனும் ஒரு குடிக்குள்ள உரிமை வேறொருவருக்கு மாற்றக்கூடிய தன்மையுடையதென்று, "டிரான்ஸ்பர் ஆப் பிராப்பர்டி ஆக்டின்" 106-(8)-வது பிரிவின்படி கூறினார்கள்.

வெங்கடராம அய்யருக்கும், ஆனந்த செட்டியாருக்கும் நடந்த வழக்கில் ஐகோர்ட்டார் ஒழுங்காய் தீர்வை தரும் வரையில் அனுபோக உரிமை இருக்கிறதென்றும். அதில் தவறினால்தான் நிலச்சுவான்தாருடையவர் அனுபத்தவரலாமென்றும் அல்லது ரயத்தே எழுத்துமூலம் தன் உரிமையை நிலத்துக்குடையவருக்குக்கொடுத்துவிட்டால் போதுமென்றும் சொல்லியிருக்கிறார்கள். முத்துசாமி அய்யர் பல தீர்மானங்களைக்கொண்டும் இம்மாகாணத்தில் ஒரு நிலத்துக்குடையவர், குத்தகைத்தாரரை இருவருக்கு முள்ள ஒப்பந்தப்படியே காலி செய்துவிடலாம் என்றுள்ளார். குத்தகைதாரருக்குபழக்கத்தால் அனுபோக உரிமையிருக்கிறதென்று சொல்வதற்கில்லை. வரி கொடுக்கும்வரை இருக்கலாம். ஒருவன் நிரந்தர அனுபோக உரிமை இருக்கிறதா என்று கூற, நிலத்துக்குடையவருக்கும் உரிமை உண்டு. கல்கத்தா வழக்கையும், பிரீவி கௌன்ஸில் வழக்கையும், பார்த்து முத்துசாமி அய்யர் ஒரு ஜமீந்தார், ஒரு குத்தகைதாரின் உரிமை நிரந்தரமானது இல்லை என்று நிரூபித்தால் ஒழிய, காலி செய்ய அதிகாரமில்லை என்றார். நீதிபதி வில்கின்ஸனும் இந்த தீர்மானத்தை ஒத்துக்கொண்டார்.

16 சென்னை, பக்கம் 271.—வெங்கடமகாலக்ஷ்மி அம்மாளுக்கும், ராமஜோகிக்கும், நடந்த விசாகப்பட்டணத்தில், காஸிம் ஸ்டேட்டில், ஜமீந்தாரணி ஒரு வருஷத்துக்கு முச்சிலிக்கைக்காக குத்தகைத்தாரரை வெளிப்படுத்த வியாஜ்ஜியம் தொடர்ந்தார். இதில் நீதிபதிகள், முத்துசாமி அய்யரும், வில்கின்ஸனும் 120 வருஷங்களாக குத்தகைத்தாரர், நிலத்தில் இருந்துவருவதாகவும், வாதிதான் இதை அல்லவென்று நிரூபிக்கவேண்டுமென்றும், பிரதிவாதி ஒழுங்காக குத்தகை தரும் வரையில்தான் இருக்கலாமென்று தீர்ப்பு கூறினார்கள். வருஷாந்திர முச்சிலிக்காவைப்பற்றி, நம்பத் தகாதது ஒன்றும் இல்லை என்றும், அது வரியைக் காட்டக்கூடிய, வருஷா வருஷம் மாற்றகூடிய ஒரு அத்தாக்ஷி என்றும், 1865-ம் வருஷத்திய 8-வது சட்டப்படி, இதனால் இது வருஷாந்திர குத்தகை என்றும் தீர்மானிக்கக்கூடாது என்றார்கள்.

20 சென்னை, பக்கம் 299.—இது ஒரு குத்தகைத்தாரரை வல்லூர் ஜமீந்தார் அப்புறப்படுத்தச் செய்த வியாஜ்ஜியம். பல தீர்ப்புக்களைக்கூறியுள்ள நீதிபதிகள் சுப்பிரமணி அய்யரும், பென்ஸனும் கீழ்க்கண்ட நியாயத்தைத்தெரிவித்தார்கள் :—

" நிரந்தமாகிய பூஸ்திதியில் பயிரிடும் ஒரு குடியானவனுக்கு, குடிவார உரிமையிருக்கிறது. அவன் வருஷாந்தரக் குத்தகைதாரனாகமாட்டான். ஆங்கிலேயர் சட்டத்தை, இந்தியாவில்புகுத்திய விபரீதத்தை பலர் விளக்கியிருக்கிறார்கள். அரசர்கள் மாசூலில் ஒரு பகுதியை வரிக்கு வாங்கினார்களே ஒழிய நிலத்துக்கு உரிமை கொண்டாடினார்கள் இல்லை. ரெவினியூ போர்டார், விவசாயிகள், வேலைமூலமாகவோ, பணமாகவோ, பொருளாகவோ, அரசர்களுக்கோ, ஜாகீர்தார்களுக்கோ, ஜமீந்தார்களுக்கோ, பாளையர்காரர்களுக்கோ, மிட்டாதார்களுக்கோ, ஸ்ரோதிரியம்காரர்களுக்கோ, இனும்தாரர்களுக்கோ, அல்லது சர்க்கார் உத்தியோகஸ்தர்கள், தாஸில்தார், அமில்தார், அமீன் தண்டலைக்காரர் இவர்களுக்குக் கட்டிவந்த தொகை சர்க்காருக்கு, ஒரு கடன் போல என்றுச் சொல்லியிருக்கிறார்கள். இதனால் ஒரு ரயத்தை வருஷாவருஷ குத்தகைதாரர், என்று கொள்வது தவறான தென்றும, பல்லாயிரக்கணக்கான வவசாயிகளின் அழிவை உண்டு பண்ணக்கூடிய ஒரு வழி என்றும் கொள்ளவேண்டும். ஸர் தாமஸ் மன்ரோ இங்கிலீஷ் குத்தகைத்தாருக்கும், இந்திய குத்தகைத்தாருக்கும் அதிக வித்தியாசமிருக்கிறதென்று சொல்கிறார். என் அப்படி என்றால், இந்தியாவில் அரசர்களால் குடிகளுக்கு நிலங்கள் தரப்படவில்லை. குடியானவர்களே நிலத்திற் புகுந்து உழவு செய்து பயிர் ஏற்றினார்கள். அதனால் அவர்களுக்கு அந்த உரிமை ஏற்பட்டது. சிவசுப்பிரமணியருக்கும் செக்ரெடரி ஆப் ஸ்டேட்டுக்கும் நடந்த தாவாவில் நீதிபதிகள் டர்னரும், முத்துசாமி அய்யரும், மனு முதலிய இந்து ஆசிரியர்கள் சொந்தமாகபிரவேசிக்கப்பட்டதை, சொந்தச் சொத்து என்கிறார்கள் என்று சொல்லுகிறார்கள். இந்திய காரியதரிசிக்கும் வீரராயருக்கும் 9 சென்னை, பக்கம் 175-ல் மேற்கூறிய நீதிபதிகள் இந்து-லா-படி. முதன் முதலாக நிலத்தை பயனுக்காக உபயோகப்படுத்தும் ஒருவன், அதைக்கொள்ள உரிமை உடையவனாகிறான் என்றார்கள். அதனால்த்தான் இங்கு நிலத்திலுள்ள உரிமையை மேல்வார உரிமை என்றும், குடிவார உரிமை என்றும், இருவகைப் படுத்தினர். அதனாலேயே குடிவார உரிமை என்று, மேல்வார உரிமைக்காரரிடம், குத்தகைதாரர், அல்லாமல் பங்காளி ஆகிறான் ரயத்து ஸர் தாமஸ் மன்ரோ இதை வெகு நன்றாகச்சொல்லியிருக்கிறார்கள். ஒரு குடியானவன் சர்க்காருடன் நிலத்தில் பங்கு எடுத்துக்கொள்கிறான். சர்க்கார் எதை ஒதுக்கிவைக்கவில்லையோ, அதெல்லாம்

அவனுக்குடையது. ஜாமீன்தார் நினைத்தபோதாவது, குறிப்பிட்ட வருஷங்களிலாவது, வெளிப்படுத்தக் கூடிய குத்தகைதாரன், அல்ல. உயரிய குத்தகை வந்தாலும், வெளிபடுத்தக் கூடியவன் அல்ல. இதனால் ஜமீந்தாரும், குத்தகைதாரனும், மேல்வாரம், குடிவாரம், உரிமை உள்ளவர்கள் ஆகிறார்கள். ஜமீந்தார் குத்தகைத்தாரனை அப்புறப்படுத்த வியாஜ்யம்தொடுத்தால், குத்தகைதாரன் தனக்கு தொடர்ந்திருக்க, உரிமை உண்டென்று ஏன் ருஜு செய்யவேண்டும் ?

இதனால் ஜமீந்தார்தான், தனக்கு அப்புறப்படுத்த உரிமை இருக்கிறதென்று, ருஜு செய்யவேண்டும். ஜமீந்தார் கிராமத்திலிருக்கும் விவசாயிக்கும், சர்க்கார் கிராமத்திலிருக்கும் விவசாயிக்கும், வித்தியாசம் ஒன்றுமில்லை. வரி ஒழுங்காய்த்தரும் வரையில், அப்புறப்படுத்த முடியாது. சுப்பிரமணிய அய்யரும் டேரன்டும் 4 சென்னை 174-ல் கூறிய தீர்ப்பை, முத்துசாமி அய்யர் பின் தொடர்ந்தார்கள். இந்த தாவாவில் ஜமீந்தார் குத்தகைதாரர் எப்போது ஆரம்பித்து, எவ்வளவு காலமாக இருந்துவருகிறார்கள், என்று சொல்ல சர்க்கார் விடாததால் ஜமீந்தாரிடம் குடிவார உரிமை உண்டென்று சொல்லமுடியாது. இம்மாதிரியான குத்தகைதாரருக்கு உரிமையைக் காட்டும் தீர்ப்புக்கு இதுதான் முதல் வியாஜ்யமாகும். ஐ.எல்.ஆர். 23 சென்னை 318.

இதற்கு அடுத்த முக்கிய வழக்கு, சிக்கட்டி ஜமீந்தாருக்கும், ரணசூர துரைக்கும், நடந்தது. இதில் ஜமீந்தார் வருஷாந்திர கிஸ்தி கட்டும் குத்தகைதாரரை அப்புறப்படுத்த முயன்றார். தனக்கு மேல்வாரத்திலும் குடிவாரத்திலும், உரிமையிருப்பதாகவும், குத்தகைதாரர் தன்னிடம் உரிமைப் பெற்றதாலும் ஜமீந்தார் தனக்கு அப்புறப்படுத்தும் உரிமை, இருக்கிறதென்றும் கூறினார். நீதிபதிகள் ஷெப்பர்டும், சுப்பிரமணிஅய்யரும் தீர்ப்பு செய்தார்கள். இங்கிலாந்தில் "வருஷத்திற்கு வருஷம் குத்தகைதார்" என்பதை, உண்மையாக பாவிப்பதால் இந்தியாவிலும், அப்படித்தான் என்று சொல்ல வேண்டுமானால், தக்கபடி ருஜு செய்யவேண்டும். எவ்வளவு காலம் தனக்கு விருப்பமிருக்கிறதோ அவ்வளவு காலம் ஒரு ரயத், ஜமீந்தார் நிலத்தில், பயிரிட்டு அனுபவிக்கலாம். ஆனால் தங்களுக்கு உள்ள பொறுப்பை மாத்திரம் நிறைவேற்றவேண்டும். இதனால் மேற்கூறியபடி தீர்மானிக்க போதுமான ஆதாரமில்லை. குடிவாரத்திற்கும், மேல்வாரத்திற்கும், ஜமீந்தாரே சொந்தக்காரர் என்பதையும் அப்படி அல்ல என்பதையும் காட்டவேண்டியது, ரயத்தின்கடமையல்ல. அப்புறப்படுத்தவேண்டுமானால் ஜமீந்தார்தான், அந்த நிலத்தில் தனக்கு பூரா உரிமை இருக்கிறதென்று, அல்லது காலாகாலமாய் கரம்பையாயிருந்தது என்று, வேண்டும். வழக்கத்திற்கு மாறாகவே இருந்தது என்றும் சொல்லவேண்டும்.

45 சென்னை, 556.—சிதம்பர சிவபிரகாச பண்டார சன்னதிக்கும், வீரப்ப ரெட்டியாருக்கும், இனாம்தாருக்கும், கிராமத்தாருக்கும், நடந்த வியாஜ்யத்தில் ப்ரிவி கௌன்ஸிலர் தீர்ப்பு: இது நிரந்தரமாய் ஏற்பட்ட பூஸ்திதிக் குடியானவர்கள் 1829-ம் வருஷத்திற்கு முன்பே ஆதிக்கத்திலும் அனுபோகத்திலுமிருந்தனர். அனுபோக ரயத்துகளாக, பாகம் செய்துகொண்டும், மாற்றியும், அடமானம் செய்தும் வந்தார்கள். பொது விஷயங்களுக்காக, தங்கள் நிலங்களைக், கொடுத்தபோது, சர்க்காரிடம் ஈட்டுப்பணம் பெற்றிருக்கிறார்கள். இனாம்தாருக்கு இது தெரியும். விசாரித்த கோர்ட்டும், அபீல் கோர்ட்டும், இனாம்தாருக்கு இதில் குடிவாரமில்லை என்றார்கள். ப்ரிவி கௌன்ஸிலில் குத்தகைத்தாருக்கு அனுபோக பாத்திய உண்டென்றும் அவர்களை விலக்கமுடியாதென்றும் தீர்மானித்தார்கள். 1865-ம் வருஷத்திய 8-வது சட்டத்தைத் தள்ளிவிட்டபின், 1908-ம் வருஷத்திய 1-வது ஆக்ட் வந்த பிறகு ஏற்பட்ட வியாஜ்யமாகும். இதில் எல்லாம் விளக்கமாகக் கூறப்பட்டுள்ளது. 1843-ம் வருஷத்தில் சாசனம் தரப்பட்டிருக்கிறது. அதில் குடிவார உரிமையைக் காணோம், இனாம் என்னும் வார்த்தை பூமியினுள்ள சொந்த உரிமைக்கு, உபயோகப்பட்டது. இனாம் நிலம் என்பதைப்பற்றி நீதிபதிகள் கீழ்க்கண்ட மாதிரி கூறியிருக்கிறார்கள். இந்த வியாஜ்யத்தில், சாசனத்தில், குடிவாரம் தரப்பட்டதாக, இல்லை. இனாம் என்னும் பதத்திலும் காணோம். ஜமீன்தார், அல்லது பாளையகாரர், வரி, வசூலிப்பவரே; எஸ்டேட் லாண்ட் ஆக்டுபடி, குத்தகைததார்களிடமிருந்துதான் வரி வசூலிக்க, அவர்களுக்கு உரிமையிருக்கிறது. நிலத்தில் ஆதிக்கமிருக்கிறதென்றால் தங்கள் சொந்த நிலங்களிலும், பழைய கரம்பிலும்தான், ரயத்து நிலங்களில் இல்லை. ரெவினியு போர்டார், பயிரிடும் விவசாயிகளின் நிலையைப்பற்றி, 1818-ம் வருஷம் ஜனவரி மாதம் 5-ம் தேதி விடுத்துள்ள நடவடிக்கை அறிக்கையில், கீழ் வரும்மாறு உள்ளது. சாதாரணமாக ஒத்துக்கொள்ளப்பட்ட முக்கியமான சுதந்தரம், குடியானவர்களுக்கு பரம்பரையாக தங்கள் வசத்தில் நிலத்தையும், அதில் வரும் வசூலையும், எவ்வளவு காலம், மாசூலில் ஒரு பங்கை பணமாகவோ, பொருளாகவோ, பொது வரியாக கொடுக்கிறார்களோ, அவ்வளவு காலம், அனுபவிப்பது. இந்தப் பொது வரி, வேலையாகவும் செலுத்தலாம், பணமாகவும் தரலாம். பொருளாகவும் தரலாம், ராஜா, ஜாகீர்தார், ஜமீந்தார், அமீன், இவர்களுக்கு ரயத்தால் கொடுக்கப்பட்டது, சர்க்காருக்குக் கொடுக்கவேண்டிய வரியாகக் கொள்ளப்பட்டது. எஸ்டேட் நிலச்சட்டத்தை ஆராய்ந்தால் அது எப்படி இருக்கிறதென்பதைப்பற்றி ப்ரிவி கௌன்ஸில் நீதிபதிகள் பின்வருமாறு கூறி வருகிறார்கள் :—

அனுபோக பாத்தியதாரின் உரிமையும் நிலச்சுவான்தாருக்கு தன் சொந்த நிலத்திலும், அனுபோக நிலத்தில், ரயத்துக்கும், இருக்கும் வித்தியாசங்களைப்பற்றி, இந்தச் சட்டத்தில் வெகு காலமாய் அனுபவிக்கப்பட்டிருக்கும் உரிமையே அங்கீகரிக்கப்பட்டிருக்கிறது. எந்த மாதிரியாக, எப்போது ரெவினியு கோர்ட்டுகள் விசாரிக்கலாம் என்பதோடு அல்லாமல், இது சட்டத்தில், சுமார் 100 வருஷமாக நிலச்சுவான்தாருக்கும், குடிகளுக்கும் ஷி சச்சரவைப்போக்க ஒரு புது உரிமை தரப்பட்டிருக்கிறது. இந்தச் சட்டம் அங்கீகரிக்கப்படும்போது, ரயத்துகளுக்கு பூஸ்திதிகளிலுள்ள நிலத்தில் அனுபோக பாத்தியதை, கொடுக்கப்பட்டிருக்கிறது. முக்கியமாக கவனிக்கவேண்டியது என்னவென்றால், கிராமம் கட்டுபாடாயிருப்பதற்கு காலாகாலமாய் இருந்துவந்த அம்சங்களை இந்தச் சட்டப்படி தெளிவுப்படுத்தி நன்மையை உண்டுபண்ணிற்று. அதாவது நிலத்துக்குடையவர், சொந்த விவசாயத்தில் உள்ள நிலம், (2) குத்தகைதார் அல்லது, ரயத்துகள் அனுபவிக்கும் நிலம், நிலத்துக்குடையவர் பழையக் கரம்பில் கொண்டிருந்த உரிமைகள், இவைகளை எல்லாம் இந்தச் சட்டத்தில் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. ஒப்பந்தப்படி அல்லாமல் அனுபோக பாத்தியதை, ஒரு குத்தகைதாரன், பண்ணை நிலத்தில் அடையக் கூடாததை, அனுபோக பாத்தியதையால் எப்படி அடையலாம், என்பதை இது குறிக்கிறது. மேற்கண்டவற்றைத் தெரிவித்தபிறகுதான், ப்ரிவி கௌன்ஸில் நீதிபதிகள் தீர்மானம் கூறினார்கள். ஐ.எல்.ஆர். 41. 1002. ஐ.எல்.ஆர். 166. ப்ரிவி கௌன்ஸில் தாவாவில் இவைகளையும் கவனித்தே மேற்கூறிய நீதிபதிகள் தீர்ப்பளித்தார்கள். அவர்கள் இவ்விரண்டு தீர்ப்புகளையும் பிசகென்றே சொல்லியிருக்கலாம். இருந்தாலும்கூட, அவர்கள அதை ஒத்துக்கொள்ளவில்லை என்று எடுத்துக்கொள்வோம். இந்த இரண்டு தாவாக்களிலுள்ள தீர்ப்புகளை ஒத்துக்கொள்ளப்படவில்லை என்பது பொருள். பூஸ்திதிகள், சொந்த நிலம், பரம்பரை உரிமையை விற்றல், நிலத்தை குத்தகைதாரர் விருத்தி செய்தல், இந்தச் சட்டம் வந்தபோது ரயத்துக்குக் கொடுத்துள்ள பாத்

தியதை ஆகிய இவைகளைக் கவனிக்கும்போது, 1908-ல் சட்ட சபை, பூமியிலுள்ள உரிமை விவசாயிக்கே இருக்கிறதென்பதை அங்கீகரிப்பதாகச் சொல்லலாம். எஸ்டேட் நிலச்சட்டத்தின் 4-வது பிரிவுப்படி, ஜமீந்தாரோ, பாளையக்காரரோ, வரி வசூலிப்பவர்தான், என்று ப்ரிவிகௌன்ஸிலின் நீதிபதிகள் தீர்மானித்திருக்கிறார்கள். 1818-ம் வருஷத்திய ஜனவரி மாதம் 5-ம் தேதி சென்னை ரெவினியு போர்டார் நடவடிக்கைப்படி, அனுபோக பாத்தியதை, பரம்பரையாகக் குத்தகைத்தார கருத் தான் என்று நீதிபதிகள் சொல்லுகிறார்கள். இதைவிட வேறு தீர்ப்பு வேண்டியதில்லை.

நிலச்சுவான்தார்சங்கத்தார், 57 சென்னை, 413 தீர்ப்பைக்காட்டி, தங்கள் சார்பாக அதைத் தெரிவிக்கிறார்கள். சூரிய நாராயணவுக்கும், போத்தண்ணவுக்கும் ஐ.எல்.ஆர். 41, சென்னை 1012 விலுள்ள தீர்ப்புப்படி, குத்தகைதாரின் உரிமைப் பாதிக்கப்படுகிறது. இது தப்பானது. ஜமீன்தாருக்கு அனுகூலமான தீர்ப்புகளில் இது ஒன்று. "அனுபோகமில்லாத ஒரு பிராமணனுக்கு 1810-ல்கிராண்ட் தரப்பட்டிருக்கிறது. பிராமணன் நிலத்தை பயரிடுபவன் அல்ல." இது பிசகு. பல பிராமணர்கள் 40, 50, வருஷங்களாக முந்தியே நிலங்களைப் பயிரிடுகிறார்கள் இப்பவும் பிராமணர்கள் பலர், நிலத்தையே ஜீவனமாகக் கொண்டிருக்கிறார்கள். இரண்டாவதாக அக்ரஹாரத்திலிருப்பவருக்கு கிராண்ட் தந்திருப்பதால், குடியானவர்களுக்கு ஒன்றுமில்லை, என்கிறார்கள். 1802-ம் வருஷம் முதல், தீர்மானிக்கப்பட்ட வழக்கத்திற்கு, இது மாறானது. இதற்குக் காரணம் கல்வியுள்ளவர்களானாலும் இங்கிலீஷ் நீதிபதிகள் இந்தியாவிலுள்ள விவசாயிகளின் பழக்க வழக்கங்களைத் தெரியாதவர்கள். பிரபலப் நீதிபதிகளான முத்துசாமி அய்யர், சுப்பிரமணிய அய்யர், ப்ரிவி கௌன்ஸில் அமீர் ஆலி, இவர்கள் கூறிய தீர்மானங்களைக் கவனித்திருந்தால், இந்தப் பிசகு செய்திருக்கமாட்டார்கள். ஒவ்வொரு தடவையும், எஸ்டேட் லாண்ட் ஆக்ட், ரெண்ட் ரிக்கவரி ஆக்ட், ரெவினியு போர்ட் நடவடிக்கைகள், சென்னை ரெகுலேஷன்கள், 5-வது ரிபோர்ட்டின் வாக்குறுதிகள், முதலியவற்றில் இங்கேயே இருந்தவர்கள் நேராகப்பார்த்து செய்த திட்டத்தை, ப்ரிவி கௌன்ஸில் நீதிபதிகள் கவனிக்காததுதான் இதற்குக்காரணம்.

இதனால் ஜமீன்தாருக்கு பாதகமாக, தெரியாமல், எழுதியிருக்கிறதாக சொல்லியிருக்கிறார்கள். நிலச்சுவான்தார் காட்டும் I.L.R. 44, கல்கத்தா 841 P.C., சரியான தீர்ப்பு என்று நாம் கொள்ளமுடியாது. தவிரவும் 1802-ம் வருஷத்திய சென்னை 30-வது ரெகுலேஷன் சட்டம் வங்காளத்திற்கில்லை 5-வது அறிக்கையும், சர் கூட்டு கமிட்டியின் சாட்சியும், சென்னை தனிக் கமிஷனின் அறிக்கையும், கல்கத்தா நீதிபதிகள், முன்பு இல்லை. கடைசியாக சொந்த உரிமை ஜமீன்தாருக்கென்பது, நம் ராஜதானியில் கோர்ட்டு மூலமாகவும், சட்டசபை மூலமாகவும், நடவடிக்கை மூலமாகவும், இருப்பதற்கு மாறானது. சீதய்யாவும், சுப்பண்ணசாமிகளுக்கும் 52 சென்னை, தாவாவில் ப்ரிவி கௌன்ஸில் தீர்ப்பு பின்வருமாறு—

> ஒரு அக்கிரஹார கிராமம், 1689-ல் ஸ்ரோத்திரியமாக கொடுக்கப்பட்டது. அந்தகிராண்டில் "இந்த அக்கிராஹாரத்தை நாங்கள் உங்களுக்குக் கொடுத்திருப்பதால் நீங்கள் ஸ்ரோத்தியம்தாருக்கு பணம் கொடுத்துவிட்டு, பாரம்பரியமாய் சந்தோஷமாக அனுபவிக்கவேண்டியது. இந்த கிராண்ட், தேஷ் பாண்டியா, ரெவினியு அதிகாரிகள், அல்லது நிலச்சுவான்தாரால், ஒரு பெரிய உரிமையாக கிராமத்திற்கு 2 மைல் தூரம் அப்புறமுள்ள, ஒரு பிராமணருக்குக் கொடுக்கப்பட்டது. இந்தக் கிராமம மத்தி என்று சொல்லப்பட்டிருக்கிறது. இங்கிலீஷ் சர்க்காரால் அங்கீகரிக்கப்பட்டு, இந்த கிராண்ட், குடிவாரத்துக்கு உட்பட்டது அல்லவென்று சொல்லியிருக்கிறது. ப்ரிவி கௌன்ஸில், நிலவரிக்கு மாத்திரம்தான் கிராண்டு என்றும், இது பூஸ்திதியாகத்தான் கொள்ளப்படுமென்றும், அப்புறப்படுத்தக்கூடிய உரிமை, ஸிவில் கோட்டிற்கு இல்லை என்றும் கூறி இருக்கிறது. மாசி என்பது பயிரிடும் நிலத்தின், விவசாயச் சொந்தக்காரர்கள் என்று பொருள். ஆகும் இந்த தாவாவில் பழைய பத்திரம் தொலைந்துவிட்டது. ஆனால் அவர் வார்சுகள் ஒன்றைக் காண்பித்தார்கள். முன்னே உள்ளவர்களால் கை எழுத்துப்போடப்பட்ட பழைய பத்திரம் எங்களிடமிருக்கிறதென்றும், 1858-ல் நகல் தாக்கலாயிருக்கிறதென்றும் சொன்னார்கள். இந்த தாவாவில் 41 சென்னை, 43 சென்னை, 45 சென்னை, ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறது.

தீர்மானம்.

எல்லாவற்றையும் கவனித்துப் பார்த்ததில், பூமி யாருக்கு உரிமை உள்ளதென்பதும், நிலச்சுவான்தார் வரி உயர்த்தலாமா என்பதும் சம்பந்தமாக நாங்கள் ஐ.எல்.ஆர். 20, சென்னை 299, 20 சென்னை, 318, 45, சென்னை 586, இவைகளில் சொல்லியுள்ள சட்டமே சரி என்கிறோம். இதன்படி வரி செலுத்தும் குடியானவனை அப்புறப்படுத்த நிலச்சுவான்தாருக்கு அதிகாரமில்லை. சாசுவத பர்மனெண்ட் செட்டில்மென்டிற்கு முன் வருஷத்தில், நிரந்தரமாயுள்ள வரியையும், உயர்த்த நிலச்சுவான்தாரருக்கு உரிமை இல்லை.

11-ம் அத்தியாயம்.

இனும்.

மான்யம் என்பதும் இனுமென்பதும் இந்தியாவில் வெகு காலமாக இருந்துவருகிறது. வரி இல்லா மலோ குறைந்த நிலவரிக்கோ பட்டாளங்களுக்கு சம்பளத்துக்காகவும் உத்தியோகஸ்தர்களுக்கு சம்பளத் திற்கும், ஆலயங்களையும், அதிலுள்ள சிப்பந்திகளைக் காப்பாற்றுவதற்கும் தர்மசாலைகளை நடத்தவும், கற்ற வர்களுக்கும், புண்ணியாத்மாக்களுக்கும், உதவி செய்வதற்காகவும், பொதுவேலை செய்ததற்காகவெகுமதியாக வும் கொடுக்கப்பட்ட நிலமே, நமது பழைய இந்து அரசாங்கத்தில் இனுமாக்கப்பட்டது. அரசர்கள் இனும் தந்த போது, ஒரு சாசனமாவது, பத்திரமாவது, ஒரு அத்தாட்சியாக வழங்கப்பட்டது. தென்னிந்தியாவில் கொடுக்கப்பட்ட சாசனத்தில், சமஸ்கிருத சட்டப் புஸ்தகங்களில் கீழ்க்கண்டவாறு இருப்பதாய்ச் சொல்லி யிருக்கிறது :—

(1) கொடுப்பவரின் பரம்பரை.

(2) எந்த விதமாக, எதற்காகக் கொடுத்தது? யாருக்கு, எந்த விஷயத்திற்காக, எந்தத் தேதியில், எந்த கட்டுப்பாட்டோடுக் கொடுக்கப்பட்டது?

(3) கட்டுப்பாட்டை மீறினல் என்ன நடக்கும்?

(4) சாட்சிகளின் பெயர்கள்.

இவைகளை செப்புத் தகடுகளிலோ, கற்களிலோ வரையப்பட்டிருக்கும்; மகமதிய அரசர்கள் இதைப் பின் தொடர்ந்தார்கள்.

மகமதிய அரசர்கள், பெரிய உத்தியோகஸ்தர்களுக்கு ஏராளமான நிலங்களை ஜாகீர்களாக விடுத்தார்கள். 1822-ம் வருஷம் ஜனவரி மாதம் 2-ம் தேதியிலும், 1829-ம் வருஷம் மே மாதம் 27-ம் தேதியிலும் விடுத்த மேலதிகாரிகளின் கடிதப்படி ஆங்கில அரசாங்கத்தார்கள், இவ்வித பழக்கத்தை ஒழித்து கிராண்டிற்கு பதிலாய் பணத்தை பென்ஷனுகக் கொடுத்தார்கள். நிலமாய் கொடுப்பதைக் குறைத்துவிட்டார்கள். சென்ற நூற்றுண்டின் மத்தியில், வரி இல்லாத நிலங்களைப்பற்றி ஒரு ஆராய்ச்சிச் செய்தனர். 1858-ல் சென்னை இனும் கமிஷன் ஏற்படுத்தப்பட்டது. ஸர் சார்லஸ் ட்ரெவிலியன் சென்னை கவர்னராக வந்தார். அவர் போர்டார் தெரிவித்தப்படி ஆராய்ச்சி செய்து முடிவுக்கு வரும்படி சொன்னர். அதன்படி இனும் ரிஜிஸ்டர் தயாரிக்கப்பட்டது. இனும்களை கீழ்க்கண்டவாரும் வகுக்கப்பட்டன :—

(1) மத சம்பந்தமாயும், அதற்கு உழைப்பவர்களுக்காகவும் ஏற்படுத்தப்பட்டது.

(2) பொது உபயோகத்திற்காக ஏற்பட்டது.

(3) பொது வரி தரக்கூடிய நீர்ப்பாசன வேலைக்காக ஏற்பட்டது.

(4) பிராம்மணர்களாலும், இதர மதஸ்தர்களாலும், தனது சொந்த நிலத்திற்காக.

(5) பாளையக்காரர் குடும்பங்களுக்காகவும், சர்க்காரிடம் பரம்பரையாக உத்தியோகம் வகித்தவர்களுக் காகவும்.

(6) பாளையக்காரர்களுக்கும், ஜமீன்தார்களுக்கும், சொந்தக்காரர் அவர்களை அடுத்தவர்களுக்கும் விடப்பட்டது.

(7) இந்த நாட்டில் போலீஸ் உத்தியோகத்திலிருந்தவர்களுக்கு.

(8) கிராம வரி, கிராமப் போலீஸ்களுக்கு.

(9) பலவிதமான தொழிலாளிகளுக்கும், கிராமத்தாருக்காக உபயோகப்படுபவர்களுக்கும்,

இந்த ராஜதானியில் மொத்தம் 5,606,098 ஏக்கர் நிலம் இனுமாகவிடப்பட்டது.

சிறிய இனுமைச் சேர்ந்த ரயத்துவாரி நிலம் 68,917,146 ஏக்கராக்கள் இந்த யதாஸ்த்தின் 2-வது பாகத்தில் 6-வது அத்தியாயத்தில் ஒவ்வொரு ஜில்லாவிற்குமுள்ள கணக்கைப்பற்றிச் சொல்லி யிருக்கிறது.

இனும்களை இந்த அத்தியாயத்தில் மூன்று வகையாக பிரித்திருக்கிறது : (1) விலக்கப்பட்ட இனும் கள், (2) செட்டில்மெண்டிற்கு பிந்திய இனும்கள், (3) சேர்க்கப்பட்ட இனும்கள்.

1802-ம் வருஷம் 25-வது ரெகுலேஷன் 4-வது பிரிவுப்படி, பெர்மனெண்ட் செட்டில்மெண்ட் காலத்தில் மொத்த சொத்திலிருந்து விலக்கப்பட்டவைகள், விலக்கப்பட்ட இனும்கள்.

பெர்மனெண்ட் செட்டில்மெண்டுக்கு பின்பு, நிலத்துக்குடையவர்களால் தரப்பட்டவை பிந்திய இனும்கள். இவைகளெல்லாம் பர்மனெண்ட் செட்டில்மெண்ட் ரெகுலேஷன் 4–12 பிரிவுகள்படி செல்லத்தக்கவையல்ல. அப்படிச் செல்லுமானல் கொடுக்கப்பட்டவர் காலமட்டும்தான்.

பெர்மனெண்ட் செட்டில்மெண்ட் காலத்தில் கணக்கில் சேர்க்கப்பட்டவை சேர்க்கப்பட்ட இனும்கள். அதனல் நிரந்தரமாய் ஏற்படுத்தப்பட்ட பூஸ்திதிகளாகும். சேர்க்கப்பட்ட இனும்களில் விவசாயியின் நிலை பெர்மனெண்ட் செட்டில்மெண்ட்படி தீர்க்கப்பட்டதில், நிலத்துக்குடையவர் இனும்தாரருடைய பரம் பரை யாராயிருந்தாலும், அவரிடம் வாங்கப்பட்டவராணுலும், மாறுதலில்லை.

நாம் செய்யும் சட்டம் இத்தகைய இனும்தார்களுக்கும், அதிலுள்ள விவசாயிகளுக்கும் கூடத்தான். இனும்தார் குடியின் வார உரிமையும், நிரந்தரமான வரியையும் மாற்ற அதிகாரமில்லை.

முக்கியமான சாக்ஷியங்கள் கூறுவதைக் கவனித்து பிறகு விலக்கப்பட்ட இனும்களைக் கவனிக்கலாம்.

இந்த புதுச் சட்டம் விலக்கப்பட்ட இனம்களை பாதிக்காதென்பதைக் காட்டிவிட்டு, பிந்திய இனம்கள் செல்லாதது என்றும், அதற்கும் இச்சட்டம் பாதிக்காதென்றும், தீர்மானிப்போம். சேர்க்கப்பட்ட இனம்கள், ஆரம்பத்தில் இருந்த பூஸ்திதிகளென்றும், இந்த சட்டம் அவைகளுக்குப் பொருந்தும் என்றும் கூறுவோம்.

சாக்ஷியங்கள்.

1908-ம் வருஷம் எஸ்டேட் நிலச்சட்டத்தின்பின் இனம்தார்கள் கிளர்ச்சி செய்துவருகிறார்கள். சட்டம் கொண்டுவந்தபோதும், சட்ட சபையால் ஏற்றபின்பும், கிளர்ச்சியைவிடாமல் ராஜப்பிரதிநிதிக்கும் கூக்குரல் அனுப்பித்ததில், இந்தச் சட்டம் சொந்த உரிமையை அழிக்கிறதென்றும், தக்க பிரதிப்பலனுக்கு வழி செய்யாவிட்டால் செல்லாதென்றும் தள்ளிவிட்டார்.

1936-ம் வருஷம் 2-வது சட்டம் ஏதோ ஒரு பேருக்கு மாத்திரம் நஷ்டஈடு தர இடம்வைத்து, புகுத்தினார்கள். அந்த பிரதிப்பலன் ஒரு வருஷ வாடகைதான். இதற்கு எதிர்த்து லண்டனுக்கு செக்ரடரி ஆப் ஸ்டேட்டிடம் ஒரு மனு அனுப்ப யத்தனித்தார்கள். அதற்கு முன்னாகவே நம் சபையை (கம்மிட்டியை) உண்டாக்கி, ஜமீன்தாருக்கும், இனம்தாருக்கும், குடிகளுக்கும் உள்ள பந்தங்களையும் எஸ்டேட் நிலச்சட்டத்தையும் ஆராயுமாறு ஏற்படுத்தப்பட்டது. இந்த மாகாண சர்க்கார் பிரத்தியேகமாயிருப்பதாலும், மாகாண சட்டசபை இந்த சட்டத்தை தக்க விசாரணையின்பின் திருத்துவதாயும் இருந்ததால் அந்த மனுவை அனுப்பவில்லை.

இனம்தார்கள் இந்த கமிட்டியின்முன் சாக்ஷியம் கூறினார்கள். விசாகபட்டணம், ராஜமந்திரி, திருச்சினாப்பள்ளி, மதுரை, சென்னை, இந்த ஐந்து இடங்களில் 24 பேர் விசாரிக்கப்பட்டனர். விசாகபட்டணம் ஜில்லா இனம்தார் சங்கத்தின் சார்பாய் சாக்ஷியம் கூறிய சத்தியநாராயண அவர்கள் எல்லா சாக்ஷிகளைவிட எல்லா விஷயங்களைப்பற்றியும் விவாதித்தார்.

முதற் பிசகு இனம்தார்களை, எஸ்டேட் நிலச்சட்டத்தில் சேர்த்தது என்றார். 1908-ம் வருஷம் முதற் சட்டத்தில் காணாத, எஸ்டேட் என்னும் வார்த்தையை விளக்கம் செய்கையில் இந்த சட்டத்துக்குள் இனம்களும் வரும் என்றதே. இனம்தார்களை பாகம் பிரிக்க முடியாத, வரி வசூலிக்கும் நிலையிலுள்ள ஜமீன்தார் நிலைக்கு உயர்த்தக் கூடாதென்றார். அதிக வரி கட்டும் ஜமீன்தாராகாமல் இனம்தார்கள் ஜோடி, குவிட்ரெண்ட், நிலவரி கட்டும் சாதாரண ஜனங்கள். மற்றவர்கள் பயிரிடும்போது எப்படி குடிவார உரிமை வருகிறதென்றதற்கு, இனம்தாருக்கு மேல்வாரத்தில்தான் உரிமை இருக்கிறதென்று கொள்ளக்கூடாதென்றார்.

(1) 1802-ம் வருஷம் நிரந்தர செட்டில்மெண்ட் முன்பே அரசர்களால் கொடுக்கப்பட்ட நிலங்கள்.

(2) நிலத்தைப் பயிரிட்டுக்கொண்டிருந்த விவசாயிகளுக்கு அரசரால் தரப்பட்ட இனம்கள்.

(3) கரம்பை நிலம் தரப்பட்டு பின்னால் அவைகளை விவசாய நிலமாக விருத்தி செய்த இனம்தார்கள்.

(4) நிலத்தை விலைக்கு வாங்கி தர்ம விஷயங்களுக்காக ஜமீன்தாரால் விடப்பட்டது.

(5) பயிரிடுபவரிடமிருந்து குடிவாரத்தை வாங்கிக்கொண்ட இனம்தார்கள்.

இவர்களெல்லோருக்கும் குடிவாரம் தரப்பட்டது என்கிறார். நிலத்தில் இனம்தார்களுக்கு ஏகமான சொந்த உரிமை இருக்கிறதென்றும், குடிகளுக்கு, அப்புறப்படுத்துவதில் வேண்டுமானால் சில பாதுகாப்புகள் தர சம்மதப்படுவதாயும் கூறுகிறார்.

பூரா கிராமத்தையும் வைத்திருக்கும் இனம்தார்களை இச்சட்டத்தில் சேர்க்கக்கூடாதென்கிறாரில்லை. அவர் சிறிய இனம்தார்களுக்காகவே பேசுகிறார். பழய சட்டத்திலுள்ளபடியே நிலத்துக்குடையவர் என்பதின் பொருள் இருந்தால்ப்போதும் என்கிறார். அதனால் இனம்தார்களை பாதிக்கக்கூடாதென்கிறார். விவசாயிக்கு பாரம்பரிய உரிமை தந்துவிட்டால் நிலம் துண்டு துண்டாய்ப் போய்விடும் என்கிறார். நெடுநாளாக தரப்பட்ட குத்தகையே தரப்படவேண்டுமென்கிறார். குத்தகை, மாசூலில் பாதியாகும். ஒப்பந்தத்திற்கு நவம்பர் மாதத்தில் இருக்கும் விலையை ஏற்றுக்கொள்ளலாம் என்கிறார். நீர்ப்பாசன வசதிகளை இனம்தார் தனக்கு குடிவார உரிமையிருப்பதால் கவனித்து வருவதாகக் கூறுகிறார். எப்போதாவது ஒருவருடைய உரிமைகளைக் கைப்பற்றினால் தக்க நஷ்டஈடு தரவேண்டுமென்கிறார். இப்படி எல்லா விஷயங்களையும் பேசினார். ஆனால் எப்படி எப்பொழுது இனம்தார்களுக்கு 1802-ம் வருஷம் 31-வது ரெகுலேஷன்படியும் 1802-ம் வருஷம் இனம் சட்டப்படியும் உரிமை வந்தது என்பதைப்பற்றி விளக்கவில்லை.

வி. எஸ். குப்தா அவர்களும் அதேபோல்க் கூறினார். விளையாத காலத்தில் குடிகளுக்கு குத்தகை குறைப்பதுண்டென்றார்.

பி. வெங்கடேஸ்வரலு.—விசாகபட்டணம் ஜில்லா அக்கவலாசா அக்கிரகாரம் இனம்தார் (டிப்டி தாசில்தார் பென்ஷனர்) தன் இனம் கிராமம் 180 ஏக்கரா நஞ்சை நிலமென்றும், அதன் பூரா சரித்திரத்தையும் சொன்னார். அவர் அது செட்டில்மெண்டுக்குமுன் பெறப்பற்ற இனமென்றும் தனக்கு பாதி கிராமமிருக்கிறதென்றும் கரம்பை நிலங்களில் பயிரேற்றினதாகவும் 1930–37-ல் நடந்த வியாஜ்ஜியத்தில் நீர்ப்பாசன கால்வாய் அக்கிரஹாரத்தாருடையதென்றும், ஜமீன்தாரதல்லவென்றும் தீர்ப்பானதாய்க் கூறினார். பாதி விளைவு குத்தகை என்பதற்கு முச்சிலிக்கா காண்பித்தார். ரெண்ட் ரெகவரி சட்டம், எஸ்டேட் நிலச் சட்டம் இரண்டும் இனமைப்பற்றி குறிக்கவில்லையென்றும் தனக்கு 2 வாரத்திலும் பாத்தியதை உண்டென்றும் கூறுகிறார். 1936-ம் வருஷம் சட்டம் குடிவார உரிமையை அழிக்கவந்தது என்று குறைகூறினார். எஸ்டேட் நிலச்சட்டம் ஒழிய வேண்டுமென்றார். ஜமீன்தார் நிலைக்கில்லாமல் ரயத்துபோலக் கொள்ளவேண்டுமென்றார். குடிவார உரிமையை எடுத்துவிட்டால், நிலத்தை விருத்தி செய்யும் எண்ணம் போய்விடும். ஏன் என்றால் தங்கள் கஷ்டத்தில் ஏற்பட்ட லாபமெல்லாம் குடியானவன் அனுபவிக்கிறான் என்று வருத்தம் வரும் என்றார். குடிவார உரிமை போகாமல் சட்டத்தை சீர்திருத்தவேண்டுமாம். சர்க்கார் நிலத்தை வாங்கினால் 2/3 பங்கு தருவதால், இனம்தார்களுக்கும் நில விலையில் அப்படியே தரவேண்டுமாம்.

பொப்பிலி வெங்கபரி சின்னலு.—I.L.R. 38 Mad. 1012-ல் உள்ளபடி குடிவார உரிமை இனம்தாருடையது. இனம் கொடுத்த காலத்தில் கட்டுபடி வாங்கப்பட்டதென்றால் அது குத்தகைபோலல்லாது சொந்த உரிமையைக் கொடுத்ததாகாதென்கிறார்.

அப்படி கலெக்டர் கச்சேரியில் பிரிவினை செய்திருந்தால் அது சரியானதல்ல. மேல்வார உரிமையும் தரப்பட்டதாம்.

ஜமீன்தாரால் சாசுவத செட்டில்மெண்ட் ஆனபிறகு தரப்பட்ட உரிமை, 41 Mad. 1012 கூறியபடி யல்லாமல் இந்த சட்டம் இனம்தாருக்கு ஒரு அநியாயச் சட்டமாம். ஜமீன்தார், இனம்தார், இருவரில் இனம்தாருக்கு எல்லா அனுகூலங்களும் இருக்கிறது. இனம்தார்கள் கடன்காரர்களாயும், ஜனம், பணம் இல்லாமலும் இருக்கிறார்கள்.

திருத்தப்பட்ட எஸ்டேட் நிலச்சட்டப்படி இனம்தார்களுக்கு ஏற்பட்டிருக்கும் கஷ்டங்களை விளக்கி கூறினார். அவை :—

(1) காலிசெய்யப்பட ஏதுவல்லாததால் இனம்குடி வரி கட்டுவதில்லை.

(2) வரி வசூலிக்கும் சட்டத்தின் 112-ம் பிரிவுப்படி வரிவசூலிக்கும் முறை, அதிக சிலவும், கஷ்டமும், தாமதமுமானது.

(3) குடிவார உரிமையை ருசு செய்தல், இயற்கையற்ற விதிப்படி கஷ்டமாயும் செலவுள்ளதாயுமா யிருக்கிறது.

(4) 1936-ம் வருஷம் எஸ்டேட் நிலச்சட்டப்படி, பிரத்தியேக விசாரணைக் கமிட்டியார் இன்னும் நியமிக்கப்படவில்லை.

(5) குடிவார உரிமைக்குப் பதிலாகத்தரும் பணம் அதிகக் குறைவானது. சொந்த நிலம் என்பதின் விளக்கம் பழக்கவழக்கங்களுக்கு ஒத்ததல்ல. சேரி நிலங்களில் அனுபோக பாத்தியதை இல்லை யென்கிறார்.

நிலத்துக்குடையவர் என்பதை விளக்குவதில் செட்டில்மெண்டுக்கு முன்போ, பின்போ, அனுமதிக்கப் பட்டோ, பாகப்படுத்தப்பட்டோ, பூராவாகவோ, பங்காகவோ, இரண்டு காலத்தில் கட்டுபடிபோட்டிருந்தால் முக்கியமாகவும், இனம்தாரர்களானால், அவர்களை விலக்கவேண்டும்.

சொந்தமாய் பயிரிடப்படும் இனம் நிலங்கள் வேண்டும்போது இனம்தாரர்களுக்கு பயிரிடவிட்டுவிட வேண்டும்.

I.L.R. 38 Mad. 1128—1876-ம் வருஷம் சென்னை 1-ம் சட்டப்படி ஜமீன்தாருக்கு, ஜோடி, கட்டுபடி, பொறுப்பு, தரப்பட்டு நிலத்தை எக்காலத்துக்கும் ஒருவருக்கு விடப்பட்டிருந்தால் அவர்களுக்காக தனியாக ரிஜிஸ்டர்செய்து வரி விதிக்கக்கூடாது.

நிரந்தரக் குத்தகைதார் சொந்தக்காரராகமாட்டார். (1876-ம் வருஷம் முதற் சட்டம்.)

நிரந்தரக் குத்தகைதார் சொந்தக்காரரல்ல. (1802-ம் வருஷம் 25-வது ரெகுலேஷன், 1895-ம் வருஷம் 2-வது சட்டம்.)

அடுத்தபடி விசாகபட்டணம் ஸ்ரீ சுப்பராயடும் எஸ்டேட் நிலச்சட்டத்திலிருந்து இனம்தாரை எடுத்துவிட வேண்டுமெனறார். குடிவார உரிமையை எடுக்காவிட்டால் குத்தகையை இனம்தார் சரியாய் வசூல் செய்ய லாம் என்றார். குடிவார உரிமை இருந்தால் அப்போதாகிலும் குத்தகைதாரரை அப்புறப்படுத்தமுடியும் என்றார். இனி ராஜமந்திரியில் சொன்ன சாக்ஷிகளைக்கவனிப்போம்.

பி. ஆஞ்சநேயலு.—தான் 2 "பீச்சக்" இனம் வைத்திருக்கிறார். இனம் தந்தபோது அதில் எவரும் குடியிருந்ததில்லை. அப்போது வீடுகளும், விளக்கேற்ற நெருப்பும் இல்லை. 400, 500 வருஷங்களுக்கு முன்தரப்பட்ட இனம்களாம். உரிமை தஸ்தாவேஜுகளுமில்லையாம். ஆனால் பின்னால் வந்த ஜமீன்தார்களால் குறிப்பிடப்படுகிறதாம். அதில்த் தரப்பட்டது அஷ்டபோக உரிமைகள் அல்லது எட்டு பலன்கள் என்பது. சாக்ஷியால் நிலம் தரப்பட்டபோது பயிரேறின நிலமா கரம்பா என்று சொல்லமுடியவில்லை அவர் சர்க் காருக்கு 2,000 ரூபாய் கிஸ்தி கட்டுகிறார். முந்தி இனம்தாருக்கு மேல்வார, குடிவார உரிமை இரண்டும் இருந்ததாம். வழக்கு, அனுபோக உரிமையைப்பற்றி ஏற்பட்டால் கோர்ட்டார் தீர்ப்பு அளிப்பதாம். 1908-ம் வருஷம் எஸ்டேட் நிலச்சட்டமும் பின்னர்வந்த சட்டமும் எப்படி மாறுதலுடையன என நிரூபிக்கிறார். பழைய சட்டத்தில் பூரா கிராமமுள்ள இனம்கள்தான் சேர்க்கப்பட்டதென்றும் பாகமானவற்றை சேர்க்கவில்லை யென்றும் கூறினார். பின்புவந்த சட்டத்தில்த்தான் சிறிய இனம்களும் சேர்க்கப்பட்டதாய்ச் சொல்லுகிறார். இனம்தார் ருசச் செய்யவேண்டிய கடமையை ஏற்படுத்தக்கூடாதென்கிறார். பின்னர்வந்த சட்டத்தால் பல கிரிமினல் வழக்குகள் நடக்கின்றனவாம். அனுபோக பாத்தியதை குடிகளுக்கு கொடுப்பதை அவர் ஆக்ஷேபிக்கிறார். சட்டசபை இனம்தாரின் குடிவார உரிமையில் பிரவேசிப்பதையும் ஆக்ஷேபிக்கிறார். 1933-ம் வருஷம் வந்த கீழ்க்குடிக்கு தரப்படும் அனுபோக பாத்தியதையும் தவறு என்கிறார். இனம்தார் பயிரிட விரும்பாவிட்டாலும், விவசாயி ஒழுங்காய் நடந்துக்கொண்டாலும் விவசாயிகள் உரிமையோடு இருக்கலா மென்கிறார். பாரம்பரியமாய் விவசாயம் செய்துவந்தால் சில உரிமைகள் தரலாமென்கிறார். முந்திய, பிந்திய இனம்களுக்கு வித்தியாசமில்லை யென்கிறார். இனம்தாருக்கும் குடிகளுக்கும் ஏற்படும் வழக்கு, அனுபவ பாத்தியதை தம்மவையென்று குடிகள் கேட்பதால்த்தான். யார் குடிவாரம் இனம்த்தாருடையதல்ல வென்கிறாரோ அவர்தான் அதைச் ருசுசெய்யவேண்டும். பிரிவீ கவுன்ஸிலின் தீர்ப்புத்தான் சரியாம். ஜமீன் தார்கள் காமடம் நிலங்கள் வைத்திருக்கிறார்கள். இனம்தார்களுக்கு அப்படியொன்றுமில்லை. 1936 முதல் தரும் வரியே சரியான குத்தகை என்கிறார். பல ஜமீந்தார்களும், நிலத்துக்குடையவர்களும், மொக்கசதார் களும் உதவிக்குரியவர்கள் என்றும். அதனால் யார் ஒரு குறிப்பிட்ட வரி கட்டுகிறார்களோ அவர்கள்தான் இச்சட்டத்திற்குள் வரவேண்டுமென்கிறார்.

நரசராவ்பேட்டை சாம்பசிவ சாஸ்திரி.—இனம்தாரரை, இப்பொழுது அக்ரகாரமும், இனம் கிராமங்களும் இக்காலத்தில் பங்கிடப்பட்டு சிறியதாய் 20, 30 ஏக்கர் நிலமுடையதாய் இருப்பதால், அதை நிலத்துக்குடையவர் என்ற அங்கத்தின்கீழ் எஸ்டேட் நிலச்சட்டப்படி சொல்லக்கூடாதென்றார்.

I.L.R. 44 Mad. படி மேல்வாரம் கீழ்வாரம் இரண்டும் இனம்தாருடைய உரிமை என்கிறார். மொக்கசாவில் மேல்வார உரிமையும் இனமிலும் அக்ரகாரத்திலும் இரண்டு உரிமையும் உண்டாம். 1936-ம் வருஷம் இருந்த குத்தகையே சரி என்கிறார். நஞ்சையில்மட்டும் பங்கும், மற்ற நிலங்களில் குத்தகையும் வாங்குவது வழக்கமாம். நஞ்சையில் $\frac{1}{2}$ க்கு $\frac{1}{2}$ வாரம் அக்ரகாரம்காரர் வாங்கி பொறாப்புக் கட்டுவது. புஞ்சையில் 8 அல்லது 10 ரூபாய் குத்தகை. குடிகளுக்கு அனுபவ பாத்தியதை இல்லை. பாது காப்பில்லாமல் விவசாயிக்கு அனுபவ பாத்தியதை தரக்கூடாது. நிரந்தரக்குடி உரிமையும், அப்புறப்படுத்து வதில் பாதுகாப்பும் விவசாயிக்குத் தரவேண்டும் நிரந்தரகுடியென்றால் குறைந்தது 3 வருஷமாகிலும் இருக்க உரிமை. வரி தராதவனுக்கு இது ஒரு தடையாகும்.

நஷ்டஈடு, சென்னை ஹைகோர்ட்டில் கூறியபடி 12 பங்கு இருக்கலாம். குறைந்தது 10 பங்காகிலும் இருக்கவேண்டும். விவசாயிக்கு அனுபவ பாத்தியதை வேண்டுமானால் 20 பங்கு நஷ்ட ஈடு தரவேண்டும். குடிகளிடமிருந்து இச்சட்டம் வருமுன் நிலங்களை பலவந்தப்படுத்தி பிடுங்கப்பட்டதாம்.

அவைகளை திருப்பித்தரவேண்டும். பொது நிலங்களைப் பாதுகாத்து, குடிகளுக்கு வீடுகட்ட நிலம் தரவேண்டும். ரெவன்யூ விஷயங்களில் ரெவன்யூ கோர்ட்டைவிட சிவில் கோர்ட்டே நல்லது. ரெவன்யூ வழக்கில் ஸ்டாம்பு குறையவேண்டும். ஹிந்துமத பரிபாலன போர்டைப்போல வரியை தனி உத்தியோகஸ்தர் வசூலிக்கவேண்டும். பட்டா ஒரு வருஷத்திற்குமட்டும் கொடுத்து அதை மாற்றும்வரை அது செல்லவேண்டும். பட்டா வாங்க 3 மாத தவணையை விட்டுவிடவேண்டும்.

நீர்ப்பாசனங்கள் சரிவர கவனிக்கப்படவில்லை. ஏரிகரைகள் பயிர் செய்யவிடப்பட்டிருக்கின்றன. அக்ரகாரத்தார்களே நீர்ப்பாசன மராமத்துசெய்யவேண்டும். ஒவ்வொருவரும் நிலத்தில் ஆயகட் இருந்தால் நீர்ப்பாசன வசதியை கவனிக்க மனு போடலாம். பெரியார் திட்டம்போல, கட்டாய நீர் பாசன வசதிகளை சரியாய் வைத்திருக்க ஏற்பாடுசெய்யவேண்டும். கலெக்டர் இதைப்பற்றிக்கவனித்தால் அதை கேட்க அக்ரகாரம்தாருக்கு உரிமையிருக்கக்கூடாது. பெரிய, சிறிய இனம் எல்லாவற்றிற்கும் சுமார் 30, 40 ஏக்ரா நிலமாவது சொந்த நிலமாயிருக்கலாம். இந்த சாக்ஷி தனக்கு 400 ஏக்கர் நிலம் இருப்பதாயும், தானே 300 ஏக்கர் பயிர்செய்வதாயும் 100 ஏக்கர் குத்தகைதாரிடம்விட்டு இருப்பதாயும் சொல்லுகிறார். பயிரானுல் குத்தகைதாரிடம் பாதி மாசூல் வசூலிக்கிறாராம். விவசாயச் செலவு 10 சதமாகுமாம். சிலவைக்கழித்து மீதியை பகிர்ந்துக்கொள்ளுதலும் சில இனம்தார்கள் வழக்கமாம். இனம்தார்களை எஸ்டேட் நிலச்சட்டத்தினின்றும் விலக்கிவிடவேண்டுமாம். இச்சட்டத்தின்முன்பே, இனம்தாருக்கும் குடிகளுக்கும் நல்ல உறவு இருந்து வந்ததாம்.

நரசாராவ்பேட்டை ராமச்சந்திரராவ்.—தார்சி அக்ரகாரத்தின் சரித்திரத்தையும், அக்ராகரம் என்றால் பூரா கிராமமும் இனம் என்று விளக்கம்செய்தார். அவர் பாட்டனார் கோர்ட் ஏலத்தில் இனத்தை வாங்கினாராம். அது 50 ஏக்கருடையது. 30 ஏக்ராத்தான் பயிர் ஆகிறது. அக்ரகாரத்தாருக்கு ரூபாய் 6 கிஸ்த்து கட்டுகிறாராம். அந்த நிலங்களை குத்தகைக்கு விட்டால் ரூ. 40 முதல் ரூ. 200 வரை வரும்படி வருகிறதாம். அவர் சிறிய இனம்களை எஸ்டேட் நிலச்சட்டத்தில் சேர்க்கக்கூடாதென்கிறார்.

நரசாப்பூர் சீனிவாசாச்சாரி.—இவருக்கு ஒரு கிராமத்தில் 8 ஏ.5 செ., மற்றோர் கிராமத்தில் 24 ஏ. நிலங்களும் இனம் நிலங்களாம். தண்ணி வரியும், குவிட் வரியும் சர்காருக்குத்தருகிறார். அவர் இதை வாங்கும்போது 1922–23-ல் சில விவசாயிகள் இருந்தார்களாம். தனக்கு மேல்வார குடிவார உரிமை இருப்பதால், தான் வாங்கியதும் உயர்ந்த குத்தகைக்கு வேறு பேர்வழிகளுக்கு விட்டாராம். 24 ஏ. நிலத்தில் 10 ஏக்கருக்கு வழக்கு ஏற்பட்டு ரூ. 4,000 செலவு ஏற்பட்டதாம். வழக்கில் தனக்கு மேல்வாரம், குடிவாரம் உரிமை இருக்கிறதென்று சாதகமாய் எ.எஸ். நெ. 48–84-ல் 1929-ல் நடந்ததாம். சின்ன இனம்கள் 5 ஏ. நிலங்கூட இருப்பதால் இவைகளை இச்சட்டத்தில் கொண்டுவரக்கூடாதென்கிறார். தனுகில் இனம் நிலம் ஏக்கர் 2,500 ரூபாயுக்கும், பீமாவரத்தில் ரூ. 800 முதல் ரூ. 2,500 வரையில் விற்கிறதென்றார். இனம்தாரர் 2 வாரமும் அனுபவிக்கிறார்களாம். 1932-ல் வாய்க்கால் வழியிலுள்ள நிலங்கள் ரூ. 2,500 விற்கிறதென்றார். 9 ஏ. 16 செ. தனக்கு 116 மூட்டை நெல் வருகிறதென்கிறார். வாங்குமுன் குடிவாரம் இல்லாவிட்டாலும் பின்பு பெறலாம் என்றார். ஒரு ஊரில் ஏக்கர் 6 மூட்டையும், மற்றோரூரில் ஏக்கர் 8 மூட்டையும் குத்தகை தருவதாகச் சொன்னார். எஸ்டேட் நிலச்சட்டத்தில், இனம்தாருக்கு சொந்த நிலத்தில் தரும் உரிமை பிரயோசனமற்றதென்கிறார். இனம்தார் நிலங்களை தக்க விலைக்கு வாங்கியதால் சொந்தநிலமாய்க் கொள்ளவேண்டுமென்று கூறுகிறார்.

குண்டூர் ஹனுமந்தராவ்.—அக்ரகாரத்தார் கூலிக்காரரைக்கொண்டு சாகுபடி செய்துவந்தனர். பிள்ளைகள் கல்விக்கென்று பட்டணங்களுக்குச் செல்லவே குத்தகைதாரர்களிடம் விட்டனர். எந்த அக்ரகாரம் அரசராலும் எது ஜமீந்தாரராலும் விடப்பட்டதென்பது தெரியாததால், ஜமீந்தாரைப்போலல்லாது விட்டுவிடவேண்டும். அரசராலும், ஜமீந்தாரராலும் தரப்பட்ட உரிமைகளை பிரிட்டிஷாரும் அங்கீகரித்தனர். தான் வாங்கிய அக்ராகரத்தில் 50 குடிகளை ஏற்படுத்தி, வீடுகட்டி பயிர்செய்ய உதவினாராம். கிணறுவெட்டி சௌகர்யங்கள் செய்தாராம். 1928-ம் வருஷம் ரூ. 2,000 ஒரு அக்ராகரம் வாங்கி, 15 வருஷம் முன் வேறொன்று வாங்கி அதில் 4/5 பங்கு வைத்திருக்கிறார். குடிகளுக்கு அனுபவ பாத்தியதை தருவதில் இனம்தார் உரிமை இழக்கக்கூடாதாம். அப்படிச் செய்தால் தக்க "காம்பென்சேஷன்" தரவேண்டும். அதற்குபதிலாய் நிலத்தில் ஒரு பங்கையே இனம்தாருக்குத்தரலாம். வரிதராவிட்டாலும், தொந்தரவுதந்தாலும் குடிகள் அப்புறப்படுத்தப்படுவார்கள் என்றார். சொந்த நிலம் வைத்திருக்கும் இனம்தாருக்கு ஏற்பாடு செய்யவேண்டும். அனுபவ பாத்தியதை தரவேண்டுமானால், வம்பில்லாமலிருக்க, குடியானவனுக்கு 2/5 பங்கும், இனம்தாருக்கு 3/5 பங்கும் தரவேண்டும். அக்கிரகாரத்தாருக்கு பூமியில் சொந்த உரிமையுண்டு. விசாரித்தால் உண்மை தெரியும்.

குடிவாடா வெங்கடரத்தினம் மாதவரத்து இனம்களைப்பற்றிப் பேசினார்.

டி. ஆர். வெங்கடராம சாஸ்திரியார்.—ஜமீந்தாருக்கும் இனம்தாருக்கும் இருக்கும் வித்தியாசங்களை விளக்கிக்காட்டினார் :—

(1) ஜமீந்தார் வரியை வசூலித்து பேஷ்கஷ்ஷாய் சர்க்காருக்குக் கட்டுகிறார்.

(2) இனம்தாரருக்கு சர்க்காரால் வரும்படி தரப்பட்டிருக்கிறது. பயிரிடுபவர் நிலத்திலிருந்தாலும், சில வேளைகளில் தனிப்பட்டவர்களுக்கே இனம் தரப்பட்டிருக்கிறது. இனம்தார் மேலும், விவசாயி கீழும் என்பதில் ஜமீந்தாருக்கு ஒத்தது என்று ஏற்றுக்கொள்ளுகிறார். 1908-ம் வருஷம் சட்டம் செய்கையில் இவ்வாறு நினைத்திருக்கலாம். ஆனால் ஜமீந்தார் ஒரு அரசராய் நிலத்துக்குடையவராகிறார். இனம்தாரரோ விவசாயியாயிருந்து, சர்க்காரால் தரப்பட்ட வரும்படியை வசூலிக்கிறார்.

பிறகு அவர் பலவித இனம்தார்களைப்பற்றிப் பேசினார்.

(1) ஏற்கனவே சொந்தக்காரராக இருந்து, சர்க்காரால் வரும்படி தரப்பட்டது. இந்தப்படியானால் இவர் விவசாயியைப்போலத்தான். ஆனால் வரிமட்டும் கட்டவேண்டுவதில்லை.

(2) நிலம் தரப்பட்டிருக்கலாம். தனக்குக் கீழேயுள்ளவர்களால் தரும்படி செய்யப்பட்டிருக்கலாம். சர்க்காரால் விட்டுவிடப்பட்ட வரியும் விவசாயியால் தரப்பட்ட வரியும் சேருகிறது.

(3) விலைக்கு வாங்கியிருக்கலாம்.

(4) ஒருவருக்கும் உரிமையில்லாதபடி நிலத்தை ஜமீந்தாரர் வைத்திருந்து சிலருக்கு, இரண்டு வாரத்திலும் உரிமை வரும்படி இனமாய்த் தந்திருக்கலாம். அதில் நிலத்துக்காரர் உரிமையும், விவசாயியின் உரிமையும் வருகிறது.

இம்மாதிரி மூன்றுவகை இனம்கள்—(1) ஒன்றிலேயே இரண்டு உரிமை, (2) இரண்டு உரிமையில்லாதது, (3) சர்க்காரால் ஒரு உரிமை தந்து, பின்பு மற்றொன்றை சம்பாதித்தது. அவர் இரண்டு விஷயங்களைக் கவனிக்கும்படி சொல்லுகிறார். இப்பொழுது விஷயங்கள் இருக்கும் நிலைமை ஒன்று ;

மற்றென்று இக்கமிட்டி இவ்விஷயங்களில் எந்த திட்டத்தை அனுசரிப்பார்கள் என்பது. கோயில் இனும்கள் அப்படியே இருப்பதில் தனக்கு ஆக்ஷேபணை இல்லையென்கிறர். குடும்பங்களுக்குச் சொந்தமான இனும்களைப்பற்றித்தான் தனக்கு கஷ்டமாய் இருப்பதாய்ச் சொல்லுகிறர். அதில் பாகத்தால் சென்ற சில ஆண்டுகளாய் பயப்படக்கூடிய பிரிவுகள் ஏற்பட்டிருப்பதாய்க் கூறுகிறர். பல சின்ன இனும்களாகிவிட்டன. 50 அல்லது 60 செண்டுகள் துண்டாக இருக்கும்படியான நிலைகூட இருக்கிறதாம். வட்டிப்பரு என்னும் கோதாவரியிலுள்ள கிராமம் ஒரு உதாரணம் என்றர்.

இதில் 1,016 ஏக்கர் நிலம் இருக்கிறதாம். 5 பேர் வழிகள் ஒவ்வொருவரும் 30 ஏக்கர் நிலத்திற்குமேல் சுமார் 150 ஏக்கர் நிலம் வைத்திருக்கிறர்கள். 20 பேர் சுமார் 20 ஏக்கர் நிலம்வரை ஒவ்வொருவரும் வைத்திருக்கிறர்கள். 350 ஏக்கர் அப்படி 30 பேர்களிடம் இருக்கிறது. மீதி 666 ஏக்கர். அதில் 700 இனும்தாரர்கள். அதனல் சுமார் 675 பேர் 666 ஏக்கர் உடையவர்கள். சாதாரணமாய் 100 பேர் 1,016 ஏக்கராவையும் பயிர் செய்யலாம். இதன் பலனவது. ஒரு கிராமத்தில் 1,016 ஏகராவில் 100 விவசாயிகளுடன் 700 இனும்தார்கள் இருக்கிறர்கள். ஒவ்வொரு விவசாயியும் ஒரு ஏக்கர்கூட பயிர்செய்ய முடியாது. 10 இனும்தாருடையதை ஒருவன் பயர்செய்வான். இதனல் ஒரு சிறிய குடிகள்தான் லாபமடையலாம். இம்மாதிரி ஒவ்வொரு கிராமத்திலும் கொஞ்சம் நிலமுள்ள இனும்தார்களாய் இருக்கிறர்கள். ஒரு விவசாயி இப்படி 10 இனும்தார் நிலத்தை பயர்செய்து, அவர் ஒவ்வொருவருக்கும் தந்துவிட்டு அவர்களைவிட மேலாகவே இருக்கமுடியும்.

மொத்தம் 7,000 இனும் கிராமங்கள் இருக்கின்றன. இவைகள் ஆரம்பத்தில் ஒவ்வொரு கிராமமாய் இனுமாய்த் தரப்பட்டது. இப்பொழுது ஒரு கிராமம் ஒருவரிடமில்லை. 1,000 அல்லது 1,500 கிராமங்களில்த்தான் இனும்தார்கள் வரி வசூலிக்கிறர்கள். பயிரிட்டு, வரியும் குடிகள் செலுத்துகிறர்கள். அங்கு வழக்கில்லை. 5,500 கிராமங்களில்தான் சட்டசபை சொந்த உரிமையை அழித்து குடிகளுக்குத்தர வேலை செய்திருக்கிறது.

இன்று எஸ்டேட் ஏற்படுத்தினல் குடியானவர்களுக்கு நிரந்தர உரிமை தந்து எஸ்டேட் தருவீர்களா? முறையாக அப்படித் தரக்கூடாது. சட்டப்படி செய்யக்கூடாது. இன்று அவர்கள் அனுபவிக்கிறர்கள் என்று அவர்களுக்கு தந்துவிட்டால் சட்டம் அதை ஏற்காது. ஏழைகளுக்கு நலம் செய்வதாக, ஒரு ஏக்ரா நிலமுடையவரை ஏழையாக்கி அவர் உரிமையைப் பறித்து 10 அல்லது 15 ஏக்ரா பயிர் செய்பவருக்காக தருகிறீர்கள்.

இனும்களை ஜமீன்களுடன் சேர்ப்பது சரியல்ல. ஜமீன்தார்கள் வரி வசூலிப்பவர்களேயன்றி பயிரிடுபவர்கள் அல்ல. இனும்தார் வேறுமாதிரி. அவர் வரி வசூலிப்பவரல்ல. பொதுக் காரியத்தில் பொறுப்பற்றவர். தனக்கு வருமானம் தரப்பட்டவர். பிறறை அவர் வணங்கவேண்டும். அப்படி சிலர் இருப்பாராயின் நிலத்தை குத்தகைக்கு விட்டால் குத்தகைதார் நிரந்தரக் குடியாகமாட்டார்.

5 ஏக்ராவுக்குள் இருப்பவர்களை இந்த சட்டத்தில் சேர்ப்பதில்லையென்றல் 50 சததிற்குமேல் இனும்தார்கள் தப்புவார்கள். 30 ஏக்ராவானல் 96 சதம் போகும். தன் அபிப்ராயத்தில் இனும்தாரை ஜமீந்தாராக உயர்த்துவது இனும்தாரை அழிப்பதாகும் என்கிறர். சின்ன இனும்கள் இந்த சட்டத்திலிருந்து போகவேண்டும். நஷ்ட ஈடு 6 பங்கிலிருந்து 12 வரை பலவிதமாய் இருக்கிறது. மசோதா சமயத்தில் குடிவாரத்தை எந்த விலைக்கும் தர தயாராக இருக்கிறர்கள். பென்னடாவிலும், குண்டகடப்பாவிலும், சாசனங்கள் ரிஜிஸ்டர் ஆகி குடிவாரம் மாற்றப்பட்டு வருவதாகத்தெரிகிறது. 5 முதல் 12 வரை மதிப்பு இருக்கிறதாம். 50 ஏக்ராவுக்குமேல் தனி உரிமை உதவாது. இங்கிலாந்தில் அப்படியே, ஒருவருக்கு அது போதும். இங்கு 30 ஏக்கர் ஒருவருக்குப் போதும்.

வழக்கு விசாரிப்பதில் டிப்டி கலக்டரானல் என்ன, டிஸ்டிரிக்ட் முன்சீப் ஆனல் என்ன? வழக்கு விருத்தி செய்வதுதானே பலன். கிராம முனிசீபே அறுவடை காலத்தில் போய் குத்தகையை வாங்கி நிலத்துக்குடையவருக்கு கொடுத்துவிடலாம். குடியை அப்புறப்படுத்தும் உரிமை இனும்தாறருக்கு இல்லாமல் செய்யக்கூடாது.

இதுகாறும் பல சாக்ஷிகள் கூறியவற்றையும் டி. ஆர். வெங்கடராம சாஸ்திரியார் இனும்தார்களைப்பற்றி தெளிவுறச் சொன்னதையும் கேட்டோம். இனும் கிராமங்கள் துண்டு துண்டாக்கப்பட்டிருப்பது உண்மையே. சில தெரிவதற்கில்லாது துண்டுகளாகி சர்க்காருக்குச் சேர்ந்திருக்கிறது.

முக்கியமாய்த் தெரிவிப்பது, இனும்தார் ஜமீந்தாரைப்போலல்லாது, ரயத்துவாரி, ரயத்தைப்போலானதால் ஜமீந்தாரைப்போலவோ, நிலத்துக்குடையவர்போலவே இச்சட்டத்தில் சேர்த்தது சரியல்லவென்பதே. இதன் சார்பாய் பல தீர்ப்புகளையும், பிரிவீ கவுன்ஸில் தீர்ப்பையும் காட்டினர்கள். ஆனல் இனும் விடுவிப்பு சமயத்தில் அல்லது முன்னரோ, குடிவார உரிமை தரப்பட்டதென்று யாரும் ருசுச் செய்யவில்லை.

ஒரு இனும், ஒரு பூஸ்திதியிலோ, ஜமீனிலோ இருந்தால், அந்த எஸ்டேடிலும் ஜமீனிலும் உள்ள குடிகளுக்குள்ள உரிமை, அந்த இனுமிலுமுள்ள குடிகளுக்குமுண்டு, என்று குடிகள் சாபாபச சொல்லுகிறர்கள். குடிகள் கிராமங்களில் அவைகளை இனுமாகத் தருமுன்னரே இருந்து இன்றுவரை பாரம்பரியமாய் அனுபவித்து வருகிறர்கள். பெர்மனன்ட் செட்டில்மெண்ட், ரெகுலேஷனிலிருந்து விலக்கப்பட்டதா அல்லது ரயத்துவாரி உரிமைபோல், தனியான உரிமையாக இனும் உரிமையைக் கொள்ளப்பட்டாதாவென்று, சொல்லவில்லை. வேறு எம்மாதிரி அதைப்பற்றி நடப்பதென்பதையும் சொல்லவில்லை. சிவில் கோர்ட் சாதாரணமாய் பிரவேசிக்காமல், தனி சட்டத்தில் கவரப்பட்டதாகவும் கூறவில்லை. சில இனும்தார் தாங்களே நிலத்தைப் பயிரிடுவதாய் கூறுதல் உண்மையில்லாமலிருக்கலாம். சிலர் வைத்தியம், வக்கீல், ராஜாங்க உத்தியோகம் முதலியவற்றில் இருப்பதால், அவர்களே பயிரிட்டார்களென கூறுவதற்கில்லை. ஆனல் அவர்கள் முன்னேர் பயிர் செய்திருக்கலாம். இந்த சட்டம் அமுலில் வந்துவிடுமென்ற பயத்தால் இனும்தார்கள் தங்கள் வசத்தில் நிலத்தை வைத்துக்கொண்டிருக்கலாம். இதனல் இனும்தாருக்கு மேல்வாரத்தினும் குடிவாரத்திலும் உரிமை ஆரம்பமுதல் இன்றுவரை இருக்கிறதாவென்பதை அறிய இனும் சட்டங்களை ஆரம்பமுதல் கவனிக்கவேண்டும். 1936-ம் வருஷ திருத்த மசோதாவை ஒழித்துவிடவாவது திருத்தவாவது வேண்டுமென்று இனும்தார்கள் கூறுகிறர்கள்.

எஸ்டேட் நிலச்சட்டமும், இனும் சட்டமும்—விலக்கப்பட்ட இனும்கள்.

இனும் எப்படி 1908-ம் வருஷம் எஸ்டேட் நிலச்சட்டத்தில் புகுத்தி, பின்பு 1934, 36-ம் வருஷத்திலும், கொண்டுவரப்பட்டது? இனும் சம்பந்தப்பட்டவரையில் எஸ்டேட் நிலச்சட்டத்தையும், 1831-ம் வருஷம் 4-ம் ரெகுலேஷன், 1836-ம் வருஷம் 31-ம் சட்டம், 1862, 1866, 1869-ம் வருஷங்களின் இனும் சட்டங்

கள், 1871-ம் வருஷம் 23-வது சட்டம், இந்தியா சர்க்கார் சட்டம் முதலியவற்றையும் ஆராய்ந்து, எஸ்டேட் நிலச்சட்டப்படி, இனம் விஷயமாய் மசோதா செய்வது, முறைப்படி கூடியதுதானு, அல்லது செல்லத்தகாததா என்பதை கவனிப்போம்.

1862-ம் வருஷம் இனம் சட்டம் அமுலில் இருந்ததால் 1865-ம் வருஷம் வரி வசூலிக்கும் சட்டத்தில் நிரந்தர பூஸ்திதிகளோடு இனமைச் சேர்க்கவில்லை. முதல் முதல் 1908-ல்தான் சேர்க்கப்பட்டது. முதன் முதல் 1908-ல் **பூஸ்திதி** என்பது, எஸ்டேட் நிலச்சட்டத்தின் 3வது பிரிவின் 2-டி-ல் **எந்த கிராமத்தின் நிலத்தீர்வை மாத்திரம்,** அதன் குடிவார பாத்தியதை அடைந்திராத யாதொரு நபருக்கு இனமாக கொடுக்கப்பட்டிருக்கிறதோ அந்த கிராமம். ஆனால் அது பிரிட்டிஷ் கவர்ன்மென்டாரால் கொடுக்கப்பட்டாவது ஊர்ஜிதம் செய்யப்பட்டாவது, அங்கீகரிக்கப்பட்டாவது இருக்கவேண்டும்.

1934-ம் வருஷம் இதை கீழ்க்கண்டபடி மாற்றியமைக்கப்பட்டது. மாற்றப்பட்ட பிரிவு :—

"யாதொரு நபருக்கு குடிவாரமின்றி நிலத் தீர்வைமட்டும்."

1936-ம் வருஷம் மாற்றப்பட்ட பிரிவு :—

சர்க்காரால் தரப்பட்டாவது, ஊர்ஜிதம் செய்யப்பட்டாவது, அங்கீகரிக்கப்பட்டாவதுள்ள எந்த இனம் கிராமமும், கொடுக்கப்பட்டபின்பு நபர்களாலோ, அல்லது வம்சத்தாராலோ பிரிக் கப்பட்டிருந்தாலும் அது இனம் கிராமமாகும்.

(1) 1936-ம் வருஷத்தில் சொந்த நிலம் என்பதை நிலத்துக்குடையவரைச் சேர்ந்ததாய் கம் பத்தம், சீர் அல்லது, பண்ணை என்பது போன்ற எந்தப் பெயராலும் வழங்கும். நிலத்துக் குடையவரின் சொந்த அனுபவத்திலுள்ள நிலம், அல்லது வீட்டைச்சேர்ந்த, விவசாய நிலம், என்பது பொருள். அல்லது

(2) 1928-ம் வருஷத்துக்குமுன் 12 வருஷங்களாய் நிலத்துக்குடையவரே, தன் சொந்தச் செலவில், ஆட்களை வைத்து, குடிவார உரிமையைத் தன்னிடம் வைத்துக்கொண்டு ரயத்து நிலமாக்காமல் சொந்த நிலமாய் தானே பயிரிட்டிருப்பது.

(3) 1932-ம் வருஷத்துக்குமுன், முன்கூறியபடி 12 வருஷம் பயிரிட்டிருப்பது.

(4) 1932-ம் வருஷத்துக்குமுன் குடிவார உரிமையை மேல்வார உரிமையில்லாமல் குடிவாரமுள்ள வரிடம் தக்க விலைக்கு வாங்கி, தன் அனுபவத்தில் நிலத்துக்குடையவர் முன்கூறியபடி 1936-ம் வருஷத்துக்குமுன் 12 வருஷங்கள் அனுபவித்திருக்கவேண்டும்.

இத்துடன் 8-ம் பிரிவோடு சம்மந்தப்பட்ட திருத்தத்தை படிக்கவேண்டும். 8-வது பிரிவின் முன்னுள்ள "3-ம் பிரிவின் 10-சில் இருக்கும்படி இனமில் சொந்த நிலமெனக் கூறப்படும் எந்த நிலத்திற்கும் இது ஒக்கும்" என்பதை முதற் திருத்தத்தில் விடப்பட்டது.

8-வது பிரிவின் 2-வது திருத்தம் கீழ் வருவதைச் சேர்த்திருக்கிறது.

1933-ம் வருஷம் நவம்பர் மாதம் முதல் தேதிக்குமுன், எந்த நிலத்துக்காரர் கோர்ட்டு மூலம் ஒரு குடிக்கு அனுபவ பாத்தியதை இல்லையென்று தீர்ப்பு வாங்கியிருக்கிறாரோ அவர் அது சொந்த நிலமில்லாவிட்டால் 1936-ம் வருஷத்துக்குப்பின் 12 வருஷங்களுக்கு ஒருவருக்கு எந்த ஏற்பாட்டிலாவது குத்தகைக்கு விடலாம். 1936-ம் வருஷம் சட்டம் வருவதற்குமுன் ஏற்பட் டிருக்கும் ஏற்பாட்டை எதுவும் பாதிக்காது.

மொத்தத்தில் 1934-ம் வருஷம் ஒழிக்கப்பட்ட **"பழைய கரம்பை"** மறுபடியும் 1936-ம் வருஷத்தில் சொந்த நிலமாக மாற்றிக் கொண்டுவரப்பட்டது.

1908-ம் வருஷம் சிறிய இனம்களை சட்டசபைக்கு கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டது. முதலில் இருந் தபடி :—

எந்த கிராமத்தின் அல்லது பகுதியின் நிலத்தீர்வை மாத்திரம் யாதொரு நபருக்கு பிரிட்டிஷ் சர்க்காரால் கொடுக்கப்பட்டோ, ஊர்ஜிதம் செய்யப்பட்டோ, அங்கீகரிக்கப்பட்டோ இருப்பது இனம்.

பகுதி என்பதை எடுத்துவிட ஒரு திருத்தம் வந்தது. மைனர் இனம்களை எடுத்துவிடவேண்டுமென சர்க்கார் மெம்பரே இந்த தீர்மானம் கொண்டுவந்தார். பின்பு பூரா கிராமத்தையும் எடுத்துவிடவேண்டு மென ஒரு திருத்தம் வந்தது. முடிவாக, **எந்த கிராமத்தில்** குடிவார பாத்தியதையில்லாத நபருக்கு நிலத்தீர்வைமட்டும்" என்பன அங்கீகரிக்கப்பட்டது.

இதனால் மைனர் இனம்கள் விலக்கப்பட்டன. இதனால் உரிமையில் பல மாறுதல்கள் ஏற்பட்டிருக் கின்றன. 1933-ம் வருஷம் மீண்டும் இவைகளை இச்சட்டத்தில் கொண்டுவர வந்த முயற்சியை கவர் னரும் வைஸிராயும் தள்ளிவிட்டனர். 1936-ம் வருஷம் ஒரு வருஷ வரி "காம்பென்சேஷன்" வைத்து மறுபடியும் அதேபோல புகுத்தினார்கள். இப்போது இந்த கமிட்டியின்முன் பல இனம்தாரர்களும், சங்கங்களும் அவர்கள் வழக்கைக் கூறினர். பத்திரத்தாலும், தீர்மானங்களாலும், உரிமை தஸ்தா வேஜிகளாலும் தங்களுக்குள்ள உரிமைகளைக்காட்டி எப்படி சர்க்காரும் கோர்ட்டுகளும் அதை அங்கீகரித் திருக்கிறதென்றும் இச்சட்டம் அவைகளைப் புறக்கணிக்கிறதென்றும் காண்பித்தார்கள். 1933-ம் வருஷத்தில் நிலத்திற் பிரவேசித்தவனுக்கு உரிமை கொடுத்து, காலகாலமாய் இருந்தவர்களின் உரிமையை அழிக்கி றார்கள் என்கிறார்கள். . இதனால் இந்தச் சீர் திருத்தத்தைக் கவனிக்கவேண்டியது அவசியம். 1908-ம் வருஷத்துக்குமுன் இருந்தபடி செய்வதா, அல்லது தக்கபடி இந்தச் சட்டத்தையே திருத்துவதா என்பதைப் பற்றி நாம் யோசிக்கவேண்டும். இப்போது எப்படி சட்டங்களால் இனம் கவனிக்கப்படுகிறது, என்பதை உணரவேண்டும். 1908—ம் வருஷ முதல் சட்டம் 1936-ம் வருஷ 18-ம் திருத்தச் சட்டம் தவிர வேறு இருக்கிறதா, இந்த இனம்களைப்பற்றி, என்பதை கவனிப்போம். இருந்தால் இந்த இரண்டு சட்டத்திலும் அவைகளின் பிரயோகம் என்ன ? 2 சட்டங்களும் ஏக காலத்தில் இருக்கலாமா ? 1865-ம் வருஷ வரி வசூல் சட்டம், 1908-ம் வருஷ எஸ்டேட் நிலச்சட்டம், 1936-ம் வருஷ திருத்தச்சட்டமெல்லாம் 1862-ம் வருஷ இனம் சட்டம் 1866-ம் வருஷ 4-ம் சட்டம், 1869-ம் வருஷ திருத்தச்சட்டம் முதலியவற்றை எடுத்துவிடவில்லை. இனம்தாரர்களுக்கிருந்த உரிமைகளை எடுத்துவிடவுமில்லை. 1936-ம் வருஷ 18-வது சட்டம், 1869-ம் வருஷ 8-ம் சட்டத்தை மேற்கொண்டது. வரிச் சட்டமும், நிலச்சட்டமும் வரி வசூலிக்கும் முறையைத்தான் கூறுகிறது. 1908-ம் வருஷச் சட்டப்படி இனம்தாரர் வரி வசூலுக்கு ஒரு முறை ஏற் பட்டது. 1936-ம் வருஷத்தில் சின்ன இனம்களுக்கும் இவ்வசதி தரப்பட்டது. இதனால் இனம்தாரருடைய குடிவார உரிமை போகப்பட்டதாய் கொள்ளப்பட்டது. இதனால்த்தான் ஏற்பட்ட கிளர்ச்சியால் நம்மை சட்ட

சபைக்கு சிபார்சு செய்யும்படி ஏற்படுத்தியிருக்கிறது. முதலில் 1908-ம் வருஷச் சட்டமும், 1936-ம் வருஷச் சட்டமும் இனும்தாரர்வரை சரியென்றிருந்தோம். பின்னர் கவனித்ததில் இவ்விரு சட்டங்களும், 1862-ம் வருஷ 4-ம் சட்டம், 1866-ம் வருஷ 4-ம் சட்டம், 1869-ம் வருஷ 8-ம் சட்டம், 1871-ம் வருஷ, 1802-ம் வருஷ 31-வது ரெகுலேஷன், 1831-ம் வருஷ 4-ம் ரெகுலேஷன், 1836-ம் வருஷ 4-வது ரெகுலேஷன், 31-வது ரெகுலேஷன் இவைகளைத்தழுவிய இந்திய சர்க்கார் சட்டம் முதலியவற்றை கவனிக்காமல் செய்ததாயிருக்கிறது. அவைகள் இன்னும் சட்டமாயிருக்கின்றன. அவைகளுள்ளவரை 1908-ம் வருஷ சட்டமும் 1936-ம் வருஷச்சட்டமும் இனும்தார்களை பாதிக்காது. இது செல்லத்தகாத சட்டங்களாகும். I.L.R. 41, Mad. 1012-ல் பிரிவீ கவுன்சில் கூறுவதாவது :—

> இந்திய மன்னர்கள், ஆங்கில அரசுக்குமுன் தரப்பட்ட இனும்களில், மேல்வாரமட்டும் என்பதற்கு ஆதாரமில்லை. 400 வருஷங்களுக்குமுன் நெல்லூரில் ரெட்டி அரசர்களால் தரப்பட்ட இனுமான அக்ரகாரங்களிலும், 1802-ம் வருஷ 31-வது சென்னை ரெகுலேஷன் 15-வது பிரிவுப்படியும், 1862-ம் வருஷ 4-வது இனும் சட்டப்படியும் மேல்வாரம் குடிவாரமாகிய 2 உரிமைகளும் தரப்பட்டிருக்கிறது. அதனுல் சென்னை எஸ்டேட் நிலச்சட்டத்தின் 3-வது பிரிவின் 2(D) படி இந்த இனும்கள் எஸ்டேட் ஆகா. அக்கிரகாரம்தார்களுக்கு குடிகளை அப்புறப்படுத்த உரிமையுண்டு.

மேற்கூறிய தீர்ப்பில் நீதிபதி ஒக்ஸ் இனும் ரிஜிஸ்டரையும் 1802-ம் வருஷம் 31-வது ரெகுலேஷன் 15-வது பிரிவையும், கவனித்தார்கள். ஒக்ஸ் இனும் ரிஜிஸ்டரில் நெல்லூர் ரெட்டி அரசர் இவதூரி நகருதயாலுக்கு ஒரு அக்ரகாரம் தரப்பட்டு சென்ற 429 வருஷங்கள் அவர் வம்சத்தார் அனுபவித்து வருகிறுர்கள். அந்த ரெகுலேஷனின் 2-ம் பிரிவில் அவர்கள் கவனம் செனுத்தவில்லை. அதன்படி 50 வருஷமாவது அனுபவத்திலிருந்தாலன்றி உரிமை வராதென்றிருக்கிறது. போர்ட் நிரந்தர உத்தரவுப்படி இனும் கமிஷனுக்குமுன் 50 வருஷமாகினும் அனுபவத்திலிருக்கவேண்டும்.

இந்த வழக்கு 1918-ம் வருஷம் தீர்ப்பானது. 18 வருஷங்களுக்குப்பின் 1936-ம் வருஷத் திருத்தச் சட்டம் வந்தது. சர்க்காரும் சட்ட சபையும் இந்தத்தீர்மானம் 31-வது ரெகுலேஷன், 1862-ம் வருஷத் இனும் சட்டம், 1866-ம் வருஷ 4-ம் சட்டம், 1869-ம் வருஷ 8-ம் சட்டம் இவைகளைப்பின்பற்றியதென்றும் இனும் சட்டம் ஒழியாமல் எஸ்டேட் நிலச்சட்டம் செல்லாதென்றும் கவனித்திருக்கவேண்டும்.

31-வது ரெகுலேஷனையும், இனும் சட்டத்தையும் அதனுல் ஏற்படும் உரிமைகளையும் கவனிப்போம்

1802-ம் வருஷ 31-வது ரெகுலேஷனுக்கு பின் வந்தது, 1862-ம் வருஷ 4-வது சட்டமான இனும் சட்டம், 1802-ம் வருஷ 31-வது ரெகுலேஷன், பெர்மனெண்ட் செட்டில்மெண்டு ரெகுலேஷன், பட்டா ரெகுலேஷன் முதலியவற்ருேடு 1802-ம் வருஷம் ஜூலை மாதம் 13-ம் தேதியில் செய்யப்பட்டது.

1802-ம் வருஷ சாசுவத செட்டில்மெண்ட் ரெகுலேஷன்படி இந்த ராஜதானியில் கிழக்கு இந்திய கம்பெனியார் நிலங்களை மூன்று விதமாய் வகுத்தனர். அவை :—

(1) நிரந்தரமாய் செட்டிலான பூஸ்திதிகள்,

(2) இனும்கள்,

(3) ரயத்வாரி நிலங்கள்.

சாசுவத செட்டில்மெண்டில் வேண்டுமென இனும்களை விடப்பட்டு, தனிச்சட்டங்கள் அவைகளுக்கென்றிருக்க சட்டசபை அவைகளால் ஏற்பட்டிருக்கும் உரிமைகளை அந்த தனிச்சட்டங்களை ஒழிக்காமல், மாற்றமுடியுமா.

1802-ம் வருஷம் 25-வது பெர்மனெண்ட் செட்டில்மெண்ட் ரெகுலேஷனிலிருந்து இனும்கள் விலக்கப்பட்டது. ஜமீந்தார் உரிமை சர்க்காரின் மேல்வார உரிமை. விலக்குதரப்பட்டதால் ஏற்பட்டிருக்க இனும்தார் உரிமை அனுபோகம் இருப்பதால் ஏற்பட்டது. எல்லா இனும்களும் 1802-ம் வருஷ 25-வது ரெகுலேஷனில் 4-வது பிரிவுப்படி நிரந்தர வரி தீர்மானிப்பதிலிருந்தும் விலக்கப்பட்டது.

அந்த நாலாவது பிரிவு கூறுவதாவது: —

> சர்க்கார் தங்களிடம் லக்கிராஜ் நிலம், வரியில்லாமல் விலக்கப்பட்ட நிலங்கள், சிறிய "குவிட் ரெண்ட்" கட்டும் நிலங்கள், உப்பு வரி, சுங்க வரி, உத்தியோக வரி, ஆப்காரி வரி முதலியவற்றில் வரும் வருமானத்தை தொடர்வதா, ஒழிப்பதா என்பதை நிறுத்திக்கொண்டு நில வரியை திட்டப்படுத்துவதை எடுத்துக்கொள்ளும்.

இப்படி 1802-ம௵ 25 ரெகுலேஷனில் இவைகள் விலக்கப்பட்டு 1802-ம௵ 31 ரெகுலேஷன், பூராவரியும் இல்லாத அல்லது சொற்ப "குவிட் ரெண்ட்" கட்டும் இனும்களுக்கு செய்யப்பட்டது. அதன் தாத்பர்யம் கீழ்வருமாறு :—

> 31 ரெகுலேஷன் தலைப்பு.—வரியில்லாமல் அரசராலாவது, பாக்ஷாக்களாலாவது தரப்படாத, நிலத்துக் குடையவர்கள் வைத்திருக்கும் உரிமைகளைப் பரிசோதிக்கும் ரெகுலேஷன். இது எவ்வளவு வரி, வருஷாந்தரம், கட்டவேண்டுமென்றும், சென்னை அரசாங்க வரிக்குச்சேரவேண்டுமென்றும் கூறும் சட்டம்.
>
> அதில் விபரத்தில் காண்பதாவது :—சிலர் வரியில்லாமல் நிலம் வைத்திருப்பதாலும், அவைகள் அரசராலும், பாக்ஷாக்களாலும் தரப்படாததாலும், சிலவேலைகளில் பொய்யாகவோ, தப்பாகவோ உத்தியோகஸ்த்தர்களால் அனுமதிக்கப்பட்டும் இருப்பதால் இவைகளை நிரந்தர வரி நிர்ணய சட்டத்தில் சேர்ப்பதற்கில்லாததாலும், இவைகளைத் திட்டப்படுத்த ஏற்பட்ட சட்டமாகும், இதில் உரிமைகளையும் நிர்ணயிக்கவேண்டியிருப்பதால் இந்த சட்டம் செய்யப்படுகிறது.

இதனுல் இனும் நிலங்களைப்பற்றிய பரிசோதனை செய்வதாகத்தெரிகிறது. இனும்தாரருக்குள்ள உரிமைகளும் அவர் வரிகட்டவேண்டுமோ என்பதையும், அப்படியானுல் எவ்வளவு என்பதையும் ஆராச்சி செய்கிறதாகும். 1802-ம௵ 31 ரெகுலேஷனில் ஏமாற்றியோ சர்க்கார் உத்தியோகஸ்தர்களோடு உறவாடி பொய்யாகவோ, உத்தரவு இல்லாமல் அனுபவிக்கப்படும் நிலங்களில் சர்க்கார் சொந்த உரிமை வைத்துக்கொண்டு அதைப்பற்றி சீர்திருத்த ஏற்படுத்திய சட்டமாகும்.

2-வது பாகத்தின்படி கீழ்க்குறிக்கப்பட்ட தேதிகளுக்குமுன் வரியில்லாமல் கொடுக்கப்பட்ட நிலங்கள் செல்லத்தக்கன.

(1) வட சர்க்காரில் 1768-ம்ஞு பிப்ரவரிமீ 26உ.

(2) ஜாகீர்களில் 1768-ம்ஞு பிப்ரவரிமீ 26உ.

(3) கர்நாடக வயநாட்டிலும், தஞ்சாவூரிலும் 1792-ம்ஞு ஜூலைமீ 1உ.

(4) பாரமகால், சேலம், திண்டுக்கல், மலபார், 1792-ம்ஞு மார்ச்சுமீ 18உ.

(5) துங்கபத்ராவுக்கும் கிருஷ்ணுவுக்கும் தெற்கே நைஜாமால் கம்பெனிக்குத்தரப்பட்ட ஜில்லாக்களில் 1800-ம்ஞு அக்டோபர்மீ 12உ.

இவைகளைப் பாதிக்காமலும் வரியில்லாமலும் வைத்திருக்கலாம். இதற்கு இரண்டுவித நிபந்தனைகள் கட்டப்படாது. முதல் இழக்கப்பட்ட நிலமும் அல்லது திரும்பிப் பெறப்பற்ற நிலமும் இரண்டாவதாக இப்போதுள்ளவர்களும் அல்லது அவர்கள் முன்னேர்களும், பெற்று அனுபவித்து வரும் நிலங்கள் அவைகள் மேலே குறிப்பிடப்பட்ட தேதிகளுக்கு முன்னதாக இருக்கவேண்டும். போர்ட் நிரந்தர உத்தரவு நெ. 52 :—

செல்லத்தக்க உரிமை வேண்டுமானுல் மேலேகுறிப்பிட்ட தேதிக்கு முன்னர் 50 வருஷம் இனும்தார் அனுபவத்தில் இருக்கவேண்டும். 50 வருஷங்களாய் சந்நத் இருந்தோ இல்லாமலோ, இனுமாக நிலத்தை தடங்கலின்றி வைத்திருந்தால், ஆரம்பம் எப்படியிருந்தாலும் அது இனுமாகக் கொள்ளப்படும். இனும் கமிஷன் நடவடிக்கை நெ. 47 ; 18–2–1860.

50 வருஷம் இனும், கமிஷன் ஏற்பட்ட வரையில் என்பதாகக்கொள்ளவேண்டும். அனுமதிக்கப்பட்ட இனும்களுக்கு, இனிதரப்பட்ட உரிமை தஸ்தாவேஜுகள், குவிட் ரெண்டை திரும்ப வாங்கிக்கொள்ளுதல் ; இனிதரக்கூடாது. 1858-ம்ஞு வரையில் இதைப்பற்றி விசாரிக்கவே முயற்சி எடுக்கவில்லை. அப்போதான் இனும் கமிஷன் ஏற்படுத்தப்பட்டது. முன்னுலேயே கொடுக்கப்பட்டு அனுபவத்தில் இருக்கிறது என்று ருசுச்செய்தாலொழிய, சந்தேகமானபோது வழக்குகளை கவர்னர் மந்திரிகளுடன் தீர்க்கவேண்டும். இது 1802-ம்ஞு ஏற்பட்டது. 1831-ம்ஞு வேலை செய்ததற்கோ அல்லது வேலை ஒத்துக்கொண்டதற்கோ, ஜமீன்தாரிக்கு பதிலோ, பாளையத்திற்கு பதிலோ, விட்டு விட்டோ, துறந்து விட்டோ இருந்தாலும் சர்க்காரால் தரப்பட்ட பணமாவது, வரியாவது, அதே உபயோகத்திற்குத்தான் தரப்படவேண்டும். தனக்கு ஒரு உரிமையும் இல்லாதவருக்கும் தரப்படலாம். இந்த இரண்டுகளில் சிவில் கோர்ட்டுக்கு அதிகாரமில்லை. தலைமைக் காரியதரிசி, அல்லது வேறு, காரியதரிசி உத்தரவுடன் வராத பிராது சிவில் கோர்ட்டால் கவனிக்கப்படாது. கவர்னர் மந்திரிகளுடன் எல்லா விஷயங்களையும் தீர்க்கலாம். இப்பேர்ப்பட்ட கிராண்டுகளை வீணப்படுத்தவோ, ஜப்தி செய்யவோ கூடாது.

1831-ம்ஞு 4-வது ரெகுலேஷன் சுதேச சர்க்காரால் தரப்பட்ட கிராண்டுகளுக்கும், பிரிட்டிஸ் சர்க்காரால் ஊர்ஜிதம் செய்யப்பட்டோ தொடரப்பட்டோ இருப்பவைகளுக்கும் 1836-ம்ஞு 31-வது சட்டத்தால் அங்கீகரிக்கப்பட்டது. பழைய சட்டங்கள் அமுலிலிருக்க, புதுச்சட்டம் செய்வது சரியா என்பதை ஆறுய எல்லாம் கவனிக்க வேண்டும். முதலாவதாக 1831-ம்ஞு 4-ம் ரெகுலேஷனைப்பார்ப்போம்.

1831-ம்ஞு 4-வது ரெகுலேஷன் :—

இராஜாங்க வேலை செய்ததற்கோ, ஜமீன்களையும், பாளையங்களையும் உத்தியோகங்களையும், உரிமைகளையும் திரும்பிப்பெறறதற்கோ, அல்லது ஜப்தியாலோ, அல்லது பாதுகாப்பிலோ, சர்க்கார் உத்தியோகஸ்தாரால் பெறப்பட்டிருந்தாலும், அல்லது பென்ஷனுகவோ, தானுமாகவோ, ஒருவருக்கோ, பரம்பரையாகவோ தரப்பட்டிருக்கும் கிராண்டுகளைப்பாதுகாக்க, சென்னை கவர்னர் மந்திரிகளுடன் 1831-ம்ஞு மேமீ 6உ செய்யப்பட்ட ரெகுலேஷன் கரஞு சித்திரைமீ 25உ. 1754 சாலிவாகன.

(1) மேற்கூறப்பட்ட கிராண்டுகளைப்பற்றி சர்க்காரின் பிரதம காரியதரிசி, அல்லது காரியதரிசியால் உத்தரவுடன்வரும் பிராதுகளைத் தவிர வேறு வழக்குகள் வந்தால் அடலட்கோர்ட், அதில் பிரவேசிக்கக்கூடாது.

(2) கவர்னர் தன் மந்திரிகளுடன் தக்கபடி விசாரித்து, தீர்ப்புச்சொல்லுவார்.

(3) கடனுக்காகவோ, டிக்ரியிலோ மற்ற எந்த விதத்திலும் இந்த கிராண்டுகளை ஜப்தியோ மற்ற பராதீனமோ செய்யக்கூடாது.

(4) அடலட் கோர்ட்டால் முன்பாகவே, செய்யப்பட்ட டிகிரி இந்த ரெகுலேஷனுல் பாதிக்கப்பட்டது.

1836-ம்ஞு 31-ம் சட்டம்.

1836-ம்ஞு நவம்பர்மீ 28உயில் இராஜப்பிரதிநிதியால் மந்திரிகளுடன் அனுமதிக்கப்பட்ட சட்டம்.

பிரிட்டிஷ் சர்க்காரால் தரப்பட்ட பணமோ, நிலவரியோ இவைகளைப்பற்றிய சென்னை 1831-ம்ஞு 4-வது ரெகுலேஷன், அந்த ராஜதானியில் அதேபோல சுதேச சர்க்காரால் தரப்பட்டு, பிரிட்டிஷ் சர்க்காரால் ஊர்ஜிதம் செய்யப்பட்டோ, அங்கீகரிக்கப்பட்டோ இருக்கும் கிராண்டுகளுக்கும் பொருந்தும்.

இதனுல் சிவில் கோர்ட் பிரவேசிக்க இடமில்லையென்றும், சர்க்கார் தான் கவனிக்கலாமென்றும், தெரிகிறது. 1836-ம்ஞுக்கு 22-ம்ஞு பின்னர் இனும் கமிஷன் ஏற்படுத்தி இனும் விதிகள் செய்யப்பட்டன. இதில் 50 வருஷ அனுபவம் இந்த கமிஷனுக்கு முன் நிலத்துக்குடையவருக்கு இருக்கவேண்டுமென்ற திட்டம் குறிப்பிடப்பட்டது. இது சில குறிப்பிடப்பட்டவை தவிர எல்லா இனும்களுக்கும் செல்லும். சென்னை சர்க்காரின் ரெவின்யூ இலாக்காவின் நடவடிக்கையில் 10, 11, 12, 14 பாராக்களில் கீழ்வருவன இருக்கிறது.

10-வது பாரா.—நான் எந்த முறையால் கவனிக்கவேண்டுமென்பதைப்பார்க்கிறேன். இனும் உரிமைக்கு கால எல்லையைப்பற்றி முதலில் எது தக்க உரிமை தருமென்பது. முதல் உரிமையைப்பற்றி அல்லது அனுபோகத்தைப்பற்றி இனும் 3 வகையாகும் :—

(1) பாக்ஷாவாலோ, அல்லது முந்திய சர்க்காராலோ தரப்பட்டோ, தரப்படாமலோ, பிரிட்டிஷ் அரசுரிமைக்கு முன் உள்ளவை.

(2) பிரிட்டிஷ் அரசுரிமைக்குப்பின் பெறப்பற்று உண்மையான அல்லது பொய்யான உரிமையுடன் இருப்பது.

(3) சிறிது காலத்திற்குமுன் பிரிட்டிஷ் சர்க்காரால் தரப்பட்டோ சர்க்கார் உத்தியோகஸ்த்தர்களால் முறையின்றி தரப்பட்டோ ஜமீன்தார், பாளையக்கார், குத்தகைதார் முதலியவர்களால் தரப்பட்டோ இருக்கும் இனும்கள்.

(11) 50 வருஷம் வரிதராமலும் தடுக்கப்படாமலும் அனுபவிக்கப்பட்ட இனாம்கள் என்னும் நிபந்தனை, மேற்கூறிய மூன்றும் வகுப்புத் தவிர மற்ற எல்லாவற்றிற்கும் உரியது. இந்த 50 வருஷ நிபந்தனைக்குட்பட்ட எல்லா இனாம்களும் செல்லக்கூடியது. அவைகள் எப்பேர்ப்பட்ட வழியால் பெற்றிருந்தாலும் இந்த நிபந்தனை சரிப்படுத்திவிடுகிறது.

(12) 50வருஷ அனுபவத்திலிருந்தது என்பதற்கு பொதுக் கணக்குகளிலிருந்து காட்டலாம். காலம் கடந்ததால்த்தான் இதை ருசுச் செய்யமுடியவில்லை யென்றாலும், பூரா 50 வருஷமும் ருசு செய்ய வேண்டியதை கொஞ்சம் தள்ளப்படும். 50வருஷ அனுபவம் ருசு செய்யப்பட்ட இனாம்களின் ருசு செய்த உரிமைகள் அனுமதிக்கப்படும். முதல் வகுப்பில் இப்போது பரம்பரையாய் வைத்திருக்கும் இனாம்கள் எந்த அளவிடப்பட்ட உரிமைகளையுடையன என்பது. 2-வது பரம்பரை இனாம் தாருக்கு தன் உரிமையை பூரண உரிமையாக மாற்றிக்கொள்ள அனுமதிப்பது. மூன்று முதல் 5 வகுப்பு வரையில் இனாம்தாரர்களுக்குக் கொடுத்து, சர்க்கார் திரும்பிப்பெறக்கூடிய மதிப்புக்கு மூன்றுவித "குவிட்ரெண்ட்" விதிக்கப்படும் வகையானது.

இனாம் கமிஷனரால் 25—10—1858-ல் அனுப்பப்பட்டு சர்க்காரால் அங்கீகரிக்கப்பட்ட கடிதத்திலிருந்து அனுபவ உரிமை பலப்படபட்டிருக்கிறது. அக்கடிதத்தில்,

"இந்த் விஷயத்தை நான் உடனே தீர்க்கவேண்டுமென எதிர் பார்ப்பது எனக்குத் தெரியும். நீண்ட அனுபவம் தான் சர்க்காரால் அனுமதிக்கப்பட்ட நிபந்தனை என்பது தெரிகிறது. பல முறையற்ற இனாம்களை சரிப்படுத்த, மதிப்பு, லாபத்திற்கு, தக்கவாறு ஏற்படுத்தியிருக்கிறது.

1860-ம்வருஷ அக்டோபர்மீ 9உ—இனாம் கமிஷனர் டெய்லர் என்பவர் இந்தியா காரியதரிசிக்கு எழுதியிருப்பதாவது :—

எந்த விதத்தில் ஏற்பட்டிருந்தாலும் குறுகிய காலம் உள்ள இந்த இடத்தில் கவர்னர், ஆட்சேபனையில்லாத 50 வருஷ அனுபவமே இனாமுக்கு நல்ல உரிமை தருவது என்று பிரரேபிக்கிறார்.

8. இந்த திட்டங்களின்படி 50வருஷ இனாம் உரிமை, செல்லத்தக்க உரிமையை அளிக்கிறது.

இந்த 50 வருஷ திட்டத்தைப்பற்றி, சர்சார்ல்ஸ் டிராவலியனும், பிளேரும், சொல்லியுள்ளதைக்கொண்டு இனாம் கமிஷனர், உரிமை தஸ்தவேஜுகள் ஏற்படுத்தியது, இந்த நிபந்தனையை மற்றும், உறுதிப் படுத்திகிறது. சர்சார்லஸ் டிராவலியன்படி, இனாம் நிலம் என்பது சென்னை ராஜதானியில் வரியில்லாத உரிமையே. அவர் கூற்றுப்படி இங்கே வரியில்லாத உரிமை மற்ற ராஜதானிகளை விட மூன்று வகையில் வித்தியாசமுள்ளது.

(1) தனிப்பட்ட நபரின் சிறிய பூஸ்த்திதி.

(2) பழைய அரசர்களால் தரப்பட்ட சாசனங்கள் இல்லாதது.

(3) ரயத்வாரி முறைப்படி வரிதரப்படும் நிலத்திற்கும், வரி தரப்படாத நிலத்திற்குமுள்ள, நெருங்கிய சம்மந்தம். முதலில் கிராம வரி உத்தியோகஸ்தர்களும், போலீஸ் உத்தியோகஸ்த்தர்களும் இனாம் மூலம் சம்பளம் தரப்பட்டது. 1857-ம்வருஷத்தில் சில ஏற்பட்டன.

பாக்ஷாவாலும் அரசர்களாலும் தரப்படாமல் வரியல்லாமல் வைத்திருக்கும் நிலத்துக்குடையவர்களின் உரிமையை அங்கீகரிக்க 1802-ம் வருஷத்திய 31-வது ரெகுலேஷன் ஏற்பட்டது. இதன்படி கலெக்டர் இனாம்களை பதிவு செய்யவும், அனுமதிக்கப்படாதவைகளுக்கு வழக்காடி வரி வசூலிக்கவும் உரிமையளிக்கப்பட்டது. சர்க்காருக்கு காலகதியான தென்னும் சட்டமில்லாமல், செல்லத்தகாத உரிமையுடையவர்களிடமிருந்து அனுபவத்தைக் கவனியாமல் மற்ற நிபந்தனைகள் ஏற்படுத்தப்பட்டது. சிவில் கோர்ட், சர்க்கார் காரியதரிசி உத்தரவல்லாமல், கர்ணங்கள், இனாம் தவிர மற்றவைகளை விசாரிக்க அனுமதியில்லையென்று 1831-ம்வருஷத்து 4-ம் ரெகுலேஷனையும் 1836-ம்வருஷத்து 31 ரெகுலேஷனையும் குறித்து எழுதுகிறார். சர்க்காருக்கு காலகதி என்னும் சட்டம் பாதிக்காதென்றும், எப்பொழுது தப்பாக இனாம் அனுபவிக்கப்படுகிறதெனத் தெரிகிறதோ, அப்போது அதைப்பற்றி விசாரணை செய்ய உரிமையுண்டு. ஆனால் இது கடினமான நிபந்தனை. இதனால்த்தான் 50 வருஷ திட்டம் ஏற்படுத்தியது. இதைப்பற்றி பிரிவி கவுன்சில், மகாராஜா மோகேஸர் சிங்கு, இந்திய சர்க்கார், வழக்கில் கூறுவதாவது :—

நிலத்தைத் திரும்பக் கைப்பற்றவும், பிறகு வரி விதிக்கிறதும் நடை முறையில் கடுமையான திட்டங்களே. சர்க்கார் தரப்பில் எவ்வளவு நிலத்தை வரி விதிக்கலாமோ அவ்வளவு வரி விதிக்கவேண்டுமென்னும் கொள்கை நல்லதோ அதேபோல் சொத்திலுள்ள உரிமையைக் காப்பாற்றுவதிலும் அக்கரை சர்க்காருடையதே. இல்லாவிட்டால் தேசத்தின் சுதந்தரத்துக்கு பாதுகாப்பில்லை. இதனால் இந்த திட்டங்களை பொருள் செய்வதில் அவை சொத்தில் உள்ள உரிமைகளை காப்பாற்ற ஏற்பட்டதாகவே கொள்ளவேண்டுமன்றி அனவஸ்யமாக பிரவேசிப்பதைக் கண்டிக்கவேண்டியிருக்கிறது.

இந்தத் தீர்மானத்தால் வரம்பில்லாத அதிகாரத்தை சர்க்கார் இழந்தனர். நீண்ட அனுபவமே தக்க உரிமையென கோர்ட் ஆப் டெரக்டர்கள், சென்னை சர்க்காருக்கு அனுப்பிய கடிதத்தில் இருக்கிறது. அதேபோல் 1858-ம்வருஷத்து ரெவின்யூ தாவாவிலும் தீர்மானமாகியிருக்கிறது. மற்றும் டிரெவிலியன் சர் தாமஸ் மன்ரோவுக்கு, கீழ்த்தர வரி உத்தியோகஸ்தர்களுக்கும் அமீல்தாருக்கும் தரப்பட்ட இனாம்கள் 40 வருஷ அனுபோக மிருந்தால் போதுமென்று தெரிவித்தார். ஒருவர் 50 வருஷம் வரியில்லாமல் அனுபவித்திருந்தால் அது இனாம்தான் என்கிறார். இது தான் இனாம் கமிஷனில் அங்கீகரிக்கப்பட்ட உரிமை.

1802-ம் வருஷத்திய 31-ம் ரெகுலேஷன்படி நீண்ட அனுபவம் ருசு செய்யாவிட்டால் பலனில்லை என்றதால் இனாம் கமிஷன் தந்த உரிமை தஸ்தாவேஜிகள் இருந்தும் அவை ரயத்வாரி நிலங்கள் நிலையிலேயே இருந்தது.

1908-ம் வருஷத்திலும் 1936-ம் வருஷத்திலும் தக்க விபரங்கள் கிடைக்காமல் சட்டசபைக்கு, எஸ்டேட் நிலச் சட்டம் உண்டாக்கும் போது பெரும் குழப்பம் ஏற்பட்டிருக்கிறது. 1802-ம்வருஷத்திய ரெகுலேஷன் நிலம் 3 வகையாக பிரிக்கப்பட்டது :—

(1) நிரந்தரமாய் ஏற்படுத்தப்பட்ட பூஸ்திதிகள்.

(2) இனாம்.

(3) ரயத்வாரி நிலங்கள்.

1802 முதல் நபர்களின், நிலத்திலுள்ள உரிமைகளை ஏற்படுத்த வழிகள் தீர்மானிக்கப்பட்டு செய்யப்பட்டன. 1859-ல் இனாம்கள் தீர்மானிக்கப்பட்டன. 1861, 1862-ல் பொது சர்வேயும் நில வரியும் தீர்மானிக்கப்பட்டது.

இனும் செட்டில்மெண்டுக்கும், நிலம் சர்வேயுக்கும் தொடர்புண்டு. நிலம் சர்வேயானல் தான் எவ்வளவு இனும் நிலம் இருக்கிறதென்றும், நீக்கப்பட்ட இனும் நிலம், எவ்வளவென்ருல்த்தான் சர்வேயான நிலத்தின் மொத்த வரி எவ்வளவென்றும் தீர்மானிக்க முடியும். அதனுல் முதலில் சர்வேயான ஜில்லாக்களில்தான் இனும் செட்டில்மெண்டு எடுத்துக்கொள்ளப்பட்டது.

பிளேர்—அவர்கள் 50–வூ திட்டத்தைப்பற்றி, விளக்கமாய் தன்னுடைய அறிக்கையில் கவனித்து எழுதியிருக்கிருர். அவருடைய அறிக்கை இந்த அறிக்கையுடன் சேர்க்கப்பட்டிருக்கிறது. நஞ்சை, புஞ்சை, தோட்டம் முதலிய தலைப்புடைய இனும்களின் உரிமை தஸ்தாவேஜுகள், அவ்வறிக்கையில் காட்டப்பட்டிருக்கிறது. இனும் செட்டில்மெண்டுக்கு சட்ட உரிமை தரவேண்டி சட்டசபை சில சட்டங்கள் ஏற்படுத்தின. அதன்படி அங்கீகரிக்கப்பட்ட இனும்கள் கோர்ட்டின் கட்டுப்பாட்டிற்கு மற்ற உரிமையான சொத்துக்களைப் போல் கொண்டு வரப்பட்டது. மேற்கூறப்பட்ட சட்டங்கள் 1862-ம் வூத்திய 4-ம் சட்டம், 1866–ம் வூத்து 4-ம் சட்டம், கவர்னர் மந்திரிகளுடன் தரப்பட்ட உரிமை, இந்திய காரியதரிசியால் தரவேண்டியதானதால் அது செல்லாத உரிமையெனவே, பார்லிமெண்டும் அந்த உரிமைகளை அங்கீகாரம் செய்ய 32, 33 விக்டோரியா, காப் 29 என்றும் சட்டங்கள் ஏற்படுத்தின. இங்குள்ள சட்டசபையும் நிலம் என்பதை விளக்கி ஒரு சட்டம் செய்தது. பிளேர் இந்த நாட்டில் இனும் இரண்டுவகைப்படும் என்கிருர் :—

(1) பூமிக்குவுள்ள உரிமையும், வரிவசூலிக்க சர்க்காருக்குள்ள உரிமையும், ஒருவருக்கே சேரும்படியானது.

(2) ஒருவருக்கோ பலருக்கோ நில உரிமையிருக்கையில், சர்க்காருடைய வரி வசூலிக்கும், உரிமைக்கு, பாத்தியதை வேறெருவருக்கு இருப்பது.

இந்த இரண்டாம் வகுப்புப்படி மேல்வார உரிமை மட்டும் இருக்கையில், இனும்தார்கள் உரிமை தஸ்தாவேஜுகளைக் கொண்டு குடிவார உரிமையும் கொண்டாட வேண்டி விவசாயிகளிடமிருந்து கேட்க ஆரம்பித்தார்கள். வழக்குகள் அதிகமாயின. அதனுல் 1869-ல் 8-ம் சட்டம் ஏற்பட்டது. தெளிவாக ஏற்படுவதாவது. இனும் கமிஷனுக்கு முன் 50 வருஷ அனுபவமுள்ளவர்களுக்கு இனும் அங்கீகரிக்கப்பட்டு உரிமை தஸ்தாவேஜுகளும் தரப்பட்டன. மேல்வாரம் மட்டும் தரப்பட்ட இனும்தார்கள் குடிவார உரிமைக்கு வழக்கு செய்தால் வெற்றி பெற முடியாது. 1871-ம்வூ வரையில் இவ்வழக்குகளை சிவில் கோர்ட்டார் விசாரிக்க அதிகாரமில்லை. பிறகுதான் அதிகாரம் வந்தது. அது இன்றுவரை அமுலில் இருக்கிறது. இவைகளையெல்லாம் கவனிக்காமல் முதல் முதல் 1908-ம்வூ எஸ்டேட் நிலச் சட்டத்தில் இனுமும் சேர்க்கப்பட்டிருக்கிறது.

இந்த 50 வருஷ திட்டம் எல்லாரையும் பாதிக்காது. விவசாயிகள் இதில் கலப்பில்லாமல் இருப்பதால் அவர்கள் அனுப்புவித்திருந்த உரிமைகளை இது கட்டுப்படுத்தாது. அவர்கள் கவர்னர் முன்பாவது பின்பு கோர்ட்டிலாவது வழக்குச் செய்யலாம். அதனுல் இனும்தாரர் மட்டும் விசாரிக்கப்பட்டு 50 வருஷ திட்டப்படி உரிமை பெற்றுலும், அது அனுபவத்திலுள்ள விவசாயின் உரிமையை பாதிக்க முடியாது. அதனுல் தான் 1871-ம்வூத்து சட்டத்தில் சிவில் கோர்ட்டுக்கு அதிகாரம் தரப்பட்டிருக்கிறது. இந்த விதமாய் மூன்றும் பேர்வழிகளின் சந்தேகத்தை நிவர்த்திக்கவே 1869-ம்வூ 8-ம் சட்டம் செய்யப்பட்டது. ஒரு விவசாயி தன்னிடம் தான் அனுபோகமிருந்ததென்கையில் ஒரு இனும்தார் 50 வூ திட்டப்படி உரிமை பெற்றிருந்தால் இவைகளை விசாரித்து தீர்ப்பளிக்க தனி கோர்ட்டு ஏற்படுத்தப்படவேண்டுமென்றும் ரெவன்யூ கோர்ட்டார் விசாரிக்கக்கூடாதென்றுமிருந்தது.

இனும் சட்டத்தின்படியும், எஸ்டேட் நிலச்சட்டத்தின்படியுமுள்ள விசாரணையில் பெரு வித்தியாசமிருக்கிறது. இதனுல்தான் சட்டசபை தனி சட்டமிருக்கிறதா, என்று ஆராய்ந்து திருப்தி செய்துகொள்ளாமல் வேறு சட்டம் செய்யக்கூடாது. முன்னரே இருக்கும் சட்டங்களை ஒழிக்காமலே அவைகள் இருக்கும்போது புதுச் சட்டம் செய்யப்பட்டிருக்கிறது. அதனுல் 1908-ம்வூத்து எஸ்டேட் நிலச்சட்டம் ஒன்றும், 1936-ம்வூத்து திருத்தச் சட்டம் 18-ம் செல்லக்கூடியதல்ல.

அதனுல் இனும் கமிஷனரால், 50 வருஷ திட்டம் முன்னுல், கவனிக்கப்பட்டது. சரியான கிராண்டுகளும், உரிமை தஸ்தாவேஜுகளும், இல்லாவிட்டால் இனும் கமிஷனர், சென்னை ராஜதானியில் பிரிட்டிஷ் அரசாங்கத்தின் ஆரம்பத்திலிருந்த கிராமக் கணக்குகளிலாவது, பர்மனெண்ட் செட்டில்மெண்டு கணக்குகளிலாவது 1802-ம் வூ ரெகுலேஷன்படி ஏற்பட்ட கணக்குகளிலாவது, பழய சர்வேக்களிலாவது, அல்லது வேறு எவ்விதமான 50 வருஷங்களுக்கு முன்னிட்ட தக்க கணக்குகளிலாவது இந்த 50 வருஷ அனுபோகத்தை காட்டினுல் அதுவே இனும், அவ்வளவு காலமாக இருந்ததற்கு, தகுந்த சாக்ஷியமாகும். இனும் கமிஷனர் திருப்தியடைந்தால் அங்கீகாரம் செய்யலாம். இப்படித்தான் இனும்கள் அங்கீகரிக்கப்பட்டு 1862-ம்வூத்து 4-வது, 1866-ம்வூத்து 4-வது, 1869-ம் வூத்து 8-வது சட்டங்களால் ஊர்ஜிதம் செய்யப்பட்டன. இனும் விதிகள் ரூல்கள் பின்னுல் 22 பிரிவாக அச்சிடப்பட்டிருக்கின்றன.

எவ்வளவு தூரம் 1908-ம்வூத்து சட்டமும், 1936-ம்வூத்து சட்டமும் இனும் விஷயத்தில் சரியாய்ச் செய்யப்பட்டதென்பதற்கு இந்த 50 வருஷத்து திட்டத்தை மனதில் வைத்திருக்கவேண்டும்.

செட்டில்மெண்டுக்கு முன்னும் பின்னும் ஏற்பட்ட இனும்களைப்பற்றிய வித்தியாசங்களைக் கவனிப்போம். பிந்திய இனும்கள் பர்மனெண்ட்செட்டில்மெண்டுக்குப் பின்பு ஜமீன்தாரர்களால் தரப்பட்டது. பர்மனெண்ட் செட்டில்மெண்டுபடி ஜமீன்தார்களுக்கு தங்கள் வம்சத்தாரை பாதிக்கக்கூடிய இவ்வித இனும் தர அதிகாரமில்லை. அதனுல் செட்டில்மெண்டுக்கு பிந்திய இனும்கள் செல்லத்தக்கதல்ல.

இனும் விதி 17 (1859-ம்வூ ஆகஸ்டுமீ 12உ) :—

> 1802-ம்வூத்து 25 ரெகுலேஷன் 12-வது பிரிவுப்படி ஜமீன்தாரர்களாலும் பாளையக்காரர்களாலும் தரப்பட்ட இனும்கள் செல்லா. சர்க்காருக்குத் தெரியப்பட்ட அந்த இனும்கள் திரும்பப் பெறப்படும். பிறகு இவைகளின் நிலைமை சர்க்கார் அதிகாரிகளால் தக்கவாறு தீர்மானிக்கப்படும்.

1802-ம்வூத்து 25 ரெகுலேஷன் 12-வது பிரிவு :—

> எந்த நிலத்துக்குடையவரும், நிரந்தரமாய்வரி தீர்மானிக்கப்பட்ட பூஸ்திதியில் ஒரு பாகத்தை மத விஷயத்திற்கோ, தரும விஷயத்திற்கோ, மற்ற எதற்கோ, பொது வரியிலிருந்தும், விலக்கி ஏற்பாடு செய்யக்கூடாது. ஒரு நிலத்துக்குடையவர் பூஸ்திதிக்கு வரும் காலத்தில், அதிலுள்ள நிலத்தை தரும சம்பந்தமாகவோ, மத விஷயமாயோ, தேவாதயம், பிரம்ம தாயம், அக்ரகாரம், யாமியா, ஜீவதன் மதத் மாஸ், பிரான், பகீரான் அல்லது வேறு விதமாய் விலக்கப்பட்ட லக்கிராஜ் போன்ற நிலங்களாய் விடப்பட்டிருந்தால், அவர் அதைத் திரும்பிப் பெறவும் கூடாது. வரியும் மாற்றி விதிக்கக்கூடாது.

1802-ம் வருஷத்திய சட்டப்படி நிலத்துக்குடையவர்கள் இனும் தருவதற்கில்லை. இனும் கமிஷனர் இதை கவனிக்கும்படி ஏற்பாடு செய்யப்பட்டது. ஆனால் ஒருவர் ஆயுள்மட்டும், ஜமீன்தாரால் இனும் தரப் பட்டால் அது செல்லும். பர்மனெண்ட் செட்டில்மெண்ட்போதோ அல்லது முந்தியோ ஏற்பட்டபடி சர்க்கார் திரும்பிப் பெறக்கூடிய உரிமைக்கு மாறுதல், அது செல்லாது.

1802-ம் வருஷத்து 25-வது ரெகுலேஷன் 12-ம் பிரிவுப்படி, எப்படி செட்டில்மெண்டுக்குப் பிந்திய இனும்கள், செல்லாதென்று கூறிய பின், 1908-ம் வருஷத்து சட்டம் செய்தவர்களும், 1936-ம்வருஷத்தில் திருத்தம் செய்தவர்களும், கோர்ட்டாரும், ஏன் குழப்பம் செய்தார்கள் என்பதைக் கவனிப்போம். அவர்கள் 1802-ம் வருஷத்து 31-வது ரெகுலேஷன் 2, 3 பிரிவுகளையும், 1831-ம்வருஷத்து 4-ம் ரெகுலேஷனையும், 1936-ம்வருஷத்து 31-ம் ரெகுலேஷனையும், தயாரிப்பு இனும் விதிகள் 10, 11, 12, 14, இனும் விதிகள் 1 முதல் 3 வரையிலும், இனும் சட்டம் இவைகளைக் கவனிக்கவில்லை. 41, மெட்ராஸ் 1012-ம் 1802-ம்வருஷத்து ரெகுலேஷன் 15-வது பிரிவைக் கவனித்தார்களேயொழிய, 2–வது பிரிவுப்படியும், இனும் விதியில் 1–3 பிரிவையும் அனுபவ உரிமை விஷயத்தில் கவனிக்கவில்லை. பூரண நீதிபதிகள் 45, மதராஸ் 716-ல் (பிரம்மையா—அச்சிருஜு) தனிச்சட்டங்களால் அனுமதிக்கப்பட்ட, அனுபவ பாத்தியதைப் பற்றியும், உரிமை அங்கீகார விஷயங்களைப் பற்றியும், கவனிக்கவில்லை.

சென்னை எஸ்டேட் நிலச்சட்டம் 3 (5) பிரிவுப்படி நிரந்தர கட்டுபடியாய் ஒரு கிராமத்தின் பகுதியில் மேல் வார குடிவார உரிமை பெற்ற ஒருவர் பூஸ்திதிக்காரர், ஆவாரா என்று 5 நீதிபதிகள் உட்கார்ந்து ஆராய்ந்தார்கள். மூவர் நிலத்துக்குடையவரென்றும், இருவர் இல்லையென்றும் தீர்ப்பளித்தனர். இவர்கள் யாரும் 1802-ம்வருஷத்து 31-வது ரெகுலேஷனையோ, 1859-ம்வருஷத்து இனும் விதிகளையோ, அல்லது உரிமை தரப்பட்டபோது அனுபவம் இனும்தாரிடம் இருந்ததாவென்பதையோ, குறிப்பிடவில்லை. இவைகளையும், இனும்களுக்கென்று ஏற்படுத்தப்பட்ட மேற்கூறிய சட்டங்களையும், அவர்களுக்கும் 1908-ம்வருஷத்து சட்டசபை மெம்பர்களுக்கும், காட்டியிருந்தால் இந்த குழப்பம் ஏற்பட்டிராது.

எஸ்டேட் நிலச்சட்டத்தில் இனும்களைக் கொண்டுவந்து சேர்த்து சீர்திருத்த மசோதா கொண்டுவருமுன், இனும் சம்பந்தப்பட்ட பழைய சட்டங்களை ஒழித்துவிட்டு, பிறகு எப்படி இந்த புது சட்டத்தில் கொண்டுவருவது என்பதைப்பற்றிக் கவனிக்கவேண்டியது அவசியம். சட்டசபையில் எஸ்டேட் நிலச்சட்டத்திற்கு திருத்தத்தைப் பிரே ரேபித்து விடப்பட்டபோது பேசியிருப்பதைப் பார்த்தால், பெரிய அறிவாளிகளான சட்டசபை அங்கத்தினர்கள், எப்படி இனும்தாரர்கள் அனுபவ பாத்தியதை, உரிமை, அதற்கென்றுள்ள சட்டங்கள் முதலியவற்றை கவனிக்கவில்லையென்பது தெரியும். சில முக்கியஸ்தர்கள் இனுமை, பூஸ்திதியில் சேர்ப்பதை, ஆக்ஷே பித்திருக்கின்றனர். ஆனால் கொண்டுவரப்பட்டது முடிவில் தீர்மானிக்கப்பட்டபடியல்ல. குடிவார உரிமை யும் இருக்கும் இனும்களுக்கு அது செல்லுபடியானது. வாதத்திற்குப்பின், மேல்வார உரிமைமட்டுமுள்ள இனும்கள்தான் சேர்க்கப்பட்டது. இதன்படி சர்க்காராலும், இனும் கமிஷனராலும், 50 வருஷ திட்டப்படி ஏற்பட்ட இனும்கள் பாதிக்கப்படவில்லை. அத்தோடு நின்றிருந்தால் 1802-ம்வருஷ முதல், உள்ள சட்டங்கள் பாதிக்கப்பட்டிராது. இவ்விஷயத்தில் விவகாரங்களைத் தீர்ப்பதற்கு சர்க்கார்தான் என்றும், முந்திய சட்டங் களில் இருக்கிறது. 1871-ல் இது நிவர்த்திக்கப்பட்டது. சிவில் கோர்ட்டு விசாரிக்க இடம் கொடுத்தது. எப்படி இனும்களை எஸ்டேட் நிலச்சட்டத்தில் கொண்டுவந்து சேர்த்து சிவில்கோர்ட் விசாரிக்கும் அதிகா ரத்தை எடுத்துவிடுவது? ஏதாவது வழக்கு ஏற்பட்டால் எஸ்டேட் நிலச்சட்டத்தால் ஏற்படுத்தப்பட்ட கோர்ட்டு தானே விசாரிக்கவேண்டும்? இனும் நிலம் சம்பந்தப்பட்ட வரையில் சிவில் கோர்ட்டு விசாரிக்கவேண்டு மென்கிற சட்ட மிருக்கையில், அவைகளை ரத்து செய்யாமல், வேறு கோர்ட் விசாரிக்கும்படி எஸ்டேட் நிலச்சட்டம் எப்படி அதிகாரம் விதிக்கிறது? அதனால் மேல்வார உரிமை மட்டுமுள்ள இனும்களைக்கூட பூஸ்த்திதி என்பதன் பொருளில் அடங்கும் என்று 1908-ம்வருஷத்து எஸ்டேட் நிலச்சட்டத்தில் சொல்வது பிசகு. இம்மாதிரி குடிவாரமுள்ள இனும்களுக்கும் சிறிய இனுமென 45 மதராஸ் 716-ல் கூறும் இனும்களுக்கும் இந்த சட்டத்தை ஏற்படுத்துவதில் சச்சரவுகள் ஏற்பட்டன. செட்டில்மெண்டுக்குப் பிந்திய இனும்களை சர்க்கார் திரும்பப் பெற உரிமை யிருக்கிறது. மற்றும் அந்த இனும்கள் செல்லத்தக்கதல்ல. பேஷ்கஷ் கட்டுவதில் தவறு ஏற்பட்டால், முதலில் ஜமீன்தாரின் சொந்த சொத்திலும், பிறகு பூஸ்திதியாலும், பிரவேசிக்க சர்க்காருக்கு அதிகாரமுண்டு. அதனால்தான் ஜமீன்தார்கள், அப்படி சர்க்காருக்கு வரி செலுத்தும் பூஸ்திதி களை இனுமாகத் தருவதில் ஆக்ஷேபனை செய்கிறார்கள்.

இதனால் நிலத்துக்குடையவர்கள், சர்க்காருக்கு ஜாமீனாக இருக்கும் நிலத்தில், சர்க்காருடைய உரிமையைப் பாதிக்கும்படி ஒரு அங்குல நிலத்தைக்கூட வில்லங்கம் செய்வதற்கில்லை. இதனால்தான் 1802-ம்வருஷத்து 25-வது ரெகுலேஷன் 12-வது பிரிவில் இம்மாதிரி கிராண்டுகளைத் தடுத்திருக்கிறது. அதனால்தான் திரும்பவும் இனும் விதியில் 17 விதியிலும் இதைப்பற்றி உரிமை தஸ்தாவேஜு தருமுன் கவனித்துத்தரும்படி சொல்லுகிறது.

1908-ம்வருஷத்தில் எஸ்டேட் நிலச் சட்டம் செய்யும்போது 1802-ம்வருஷத்து ரெகுலேஷன், மற்றுமுள்ள இதர சட்டங்களையும் கவனிக்கவில்லையென்று முன்பே கூறினேம். திரு வி. கிருஷ்ணசாமி ஐயர், ஒரு பிரபல வக்கீல், இதைப்பற்றி வெகு தீவிரமாக வாதித்தவர் என்ன சொல்லியிருக்கிறார் என்பதைப் பார்ப் போம்.

"இனும் ஏற்பட்ட காரணங்களைப்பற்றி விரிவாய்ப் பேசிவிட்டோம். நான் இனும்களைப்பற்றி பல வழக்குகள் நடத்தியிருப்பதால், அனுபவத்தைக்கொண்டு சில பேசத் துணிகிறேன். இனுமைப்பற்றிய சரித்தி ரத்தைப் பேசுவது வெகு கஷ்டம். பலவிதமாக, பல இனும்கள் இருக்கின்றன. இனும் முட்கள் நிறைந் துள்ள ஒரு விஷயமாகும். ஒருவரும் அதைப்பற்றி தீர்மானமாய் எதுவும் சொல்லமுடியாது. ஒரு இனு மின் தன்மையைப்பற்றி, ஒரு வழக்கில் பல நிலைகளில் பலவித தீர்மானங்கள் கூறப்பட்டன. அது எனக்குத் தெரியும். சர்க்காருக்கு வரி தருபவர்கள் எப்போது இருப்பார்கள். சர்க்கார் அந்த வரியைக் குறைத்து "நிலத்துக்குடையவர்களே! நாங்கள் பூரா வரியையும் அல்லது பாதி வரியையும் குறைக்கிறோம். அல்லது கால் பங்காவது குறைக்கிறோம்" எனலாம். அதனால் அவர்கள் நிலத்துக்கு சொந்தக்காரர்கள் அல்லது அதில் இருப்ப வர்கள் அல்லது மிராசுதார்கள் அல்லது ரயத்துகள் எப்படியானாலும் முதலில் பூமிக்குச் சொந்தக்காரர்கள் பின்பு தங்களுக்குத் தரப்பட்ட வரிக்குச் சொந்தக்காரர்கள்.

இவ்விதமாக காலம் சென்ற, சர்க்கார் நிர்வாக சபை அங்கத்தினர் கூறியிருக்கிறார். அவரைப்போன்ற அறிவாளிகூட தான் பேசிய மசோதாவிலுள்ள பிரிவை விட வேறு கவனிக்கவில்லை, வேறு எந்த அங்கத்தின ரும்கூட 1802-வருஷத்து சட்டம் 1881-ம்வருஷத்து 4-வது ரெகுலேஷன், 1836-ம்வருஷத்து 31-ம் சட்டம் 1862, 1866, 1869-ம்வருஷ இனும் சட்டங்கள் முதலியவற்றைப்பற்றிப் பேசவில்லை.

முப்பது வருஷங்களுக்குப் பின்பு, 1934, 1936-ம்வருஷங்களில் திருத்த மசோதா வருகையில் திரு. கிருஷ் ணசாமி ஐயர் இனுமைப்பற்றி பேசியது அவ்வளவுகூட எவரும் பேசவில்லை. பிரிவீ கௌன்சில் தவிர, கோர்ட்டு களில்கூட 31-வது ரெகுலேஷன்பற்றியும், மற்றவைகளைப்பற்றியும் குறிக்கவில்லை. 41 மதராஸ் 1012-ல்

கூட 31-ல் ரெகுலேஷன் 15-வது பிரிவைத்தான் காட்டி அதன் பேரில் தீர்ப்பாகியிருக்கிறது. அதனால் 1862 முதல் 1936 வரை 1802-ம்வருஷத்திய திட்டத்தையும் மற்ற இனும் சம்பந்தமான திட்டங்களையும் கவனிக்க வில்லை. 1908-ம்வருஷத்துக்கு முன்னர் இதைப்பற்றி யாரும் ஆராயவேண்டிய அவசியம் இல்லாமற் போயிற்று. அதற்குக் காரணம் எவரும் விவசாயிக்கு குடிவார உரிமையைத் தர, இனும்களையும் அதன் பாகங்களையும், எஸ்டேட் என்பதின் விளக்கத்தில் கொண்டுவரவில்லை. இனும்தார்கள் இனும் விடுதலைக்குப் பிறகு இனும்தார்கள் பூரா உரிமையும் பெற்றுவிட்டார்களென்றும் வரியில்லாததாலும் நல்ல உரிமை இருப்பதாலும் எந்த விலைக்கும் வாங்கலாமென்றும் எல்லோரும் நம்பினார்கள். 1908-ல் முதன்முதல் எஸ்டேட் நிலச்சட்டம் வரும்போது அதிலுள்ள விஷயங்களைத் தவிர மற்ற இனும் விதிகளை எவரும் கவனிக்கவே யில்லை.

செட்டில்மெண்டுக்கு முந்திய இனும், அவை எவ்வாறு நடத்தப்பட்டது என்பதையும் கவனிப்போம் :—

(1) சர்க்காரின் வெளிப்படையான உத்தரவின் பேரில் தரப்பட்ட இனும்கள் கிராண்டிலுள்ள நிபந்தனைகள்படியாவது, அதைப்பற்றி நடந்த கடிதங்கள் பிரகாரமாவது தீர்க்கப்பட்டன.

(2) கீழ்த்தர ரெவின்யூ உத்தியோகஸ்தர்களால், அனுமதி யில்லாமல்தரப்பட்ட இனும்கள் 1802-வருஷத்து 25 ரெகுலேஷன 12-ம் பிரிவுபடிக்கில்லாமல் ஜமீந்தார்களாலும், பாளையக்காரர்களாலும் தரப்பட்ட இனும்கள். அவை மோசமானபடி ஏற்பட்டதானால் பூரா வரியும் விதிக்கப்பட்டது. ஆனால் உடையவர் மோசத்தால் வரவில்லையானால் $\frac{1}{4}$ தீர்வை விதிக்கப்பட்டது. நீண்ட காலமாய் மோசமின்றியிருந்தால் $\frac{1}{2}$ வரிவிதிக்கப்பட்டது.

(3) ஜந்தாரிகளிலும், பூஸ்திதிகளிலும் இருக்கும் இனும்கள் பூஸ்திதிகளின் தீர்வையினின்றும் விலக்கப்பட்டு சர்க்காருக்கு, திரும்பி பெறக்கூடிய உரிமையுள்ள இடங்கள், மற்ற தாலூக்காவிலுள்ள இடங்களைப்போல, இனும் கமிஷனரால் இப்போதுள்ள தீர்மானத்தில், சேர்த்து முடிவு செய்யப்படும் நிரந்தர செட்டில்மெண்டுக்குப் பிந்திய இனும்களைப்பற்றி தீர்மானிக்கப்பட்டது.

(4) ரெவின்யூ, போலீஸ் போன்ற தொழில்களுக்கு இனும்களாக முந்திய சர்க்காரால் தரப்பட்டதும், வாழ்கைக்கென, தொழில்விட்ட பிறகும் தரப்பட்டவைகளும், சொந்தமாய் அல்லது வாழ்க்கைக்கென தரப்பட்டதாய்க் கொள்ளப்பட்டது: தொழிலுக்காக தரப்படும், இன்னும் இருக்கவேண்டிய தொழிலுக்காக, இல்லாவிட்டால் இனும்கள், ஒரு சிறிய குவிட் ரெண்டுக்கு ஏற்பாடு செய்து உரிமை செய்யப்படும்.

(5) கிராமத் தொழில் இனும்கள்.—போலீஸ், ரெவின்யூ முதலிய கிராம உத்தியோகஸ்தர்கள் அத்தொழில்களில் தொடரப்பட்டனர்.

(6) கிராமப் பொது நன்மைக்கென கைத்தொழிற்காரர்களுக்கும் மற்றவர்களுக்கும் பரம்பரை கிராண்டாக தரப்பட்டது.

(7) தொழிலுக்கென விடப்பட்ட (இனும்) வாரங்களை அந்த வாரங்களின் தீர்வையில் ரூபாயுக்கு 10 அணு விகிதம் மதிப்பிட்டு விலக்கப்பட்ட பின் கிராம உத்தியோகஸ்தர்களை சம்பளத் திட்டத்தில் ஏற்படுத்தப்பட்டது. ஒவ்வொரு செட்டில்மெண்டு போதும் தீர்வையை மாற்றக்கூடியபடி பூராத் தீர்வைத் திட்டத்தில் விலக்கப்பட்ட தொழில் இனும்களைப் போலல்லாது, இவைகள் சர்க்காருடைய பிரவேசம் இல்லாமல் சுயேச்சையாய் செய்யப்பட்டது ; நிலத்தீர்வையின்றியோ, அனுகூல தீர்வையோடோ இருக்கப்பட்ட பூரா இனும் கிராமங்களும், அக்ரகாரங்களும், சுரோத்திரியங்களும் இனுமென படும். இவைகள் சிறிய இனும்களுக்குள்ள விதிகளின்படி நடத்தப்படும். இதனால் ஆரம்ப முதல் இனும்கள் பூஸ்திதிகளாகக் கொள்ளப்படவில்லை. 1802-ம்வருஷத்து 31-வது ரெகுலேஷன்படியும், பெர்மனெண்ட் செட்டில்மெண்டிலிருந்து விலக்கப்பட்டதாலும், இதற்குத் தனி முறை ஆரம்பிக்கப்பட்டது. உரிமையை ஊர்ஜிதம் செய்ய விதிகள் செய்யப்பட்டது. இன்னும் இந்த ரெகுலேஷன் அமுலில் இருக்கிறது. இனும் சட்டம் வருமுன், இனும்களைப்பற்றி விசாரிக்க 1858-ல் சென்னையில் இனும் கமிஷன் ஏற்படுத்தப்பட்டது. கமிஷனுக்கு முன் 50 வருஷ அனுபவமுள்ளவர்களுக்கு இந்த கமிஷன் இனும்களை அங்கீகரித்து உரிமை தஸ்தாவேஜுகள் தரப்பட்டது. மற்றவைகளை நிறுத்திக்கொண்டு சிலவற்றிற்குப் பண மூலம் பென்ஷனுக குறைக்கப்பட்டது. கமிஷனரின் முக்கிய வேலை, இனும்களை இராஜி செய்வதே. தன் சொந்த உபயோகத்திற்கென இருக்கும் இனும்கள், பராதீனம் செய்யக்கூடிய உரிமையில்லாமலும், குறிப்பிட்ட வார உரிமையோடும் தன் இஷ்டப்படி அதற்குடையவர் வைத்திருக்கலாம். குறிப்பிட்ட வருஷங்களுக்கு, ஒரு சிறிய குவிட் ரெண்ட் கட்டி விட்டு, இனுமைராஜி செய்து தன் சொந்தச் சொத்தாக மாற்றிக்கொள்ளலாம். இப்போது அதனால் மூன்று வகை இனும்கள் இருக்கின்றன.

(1) இராஜி செய்யப்பட்ட இனும்கள்.

(2) இராஜி செய்யப்பட்டும், ஜோடி அல்லது குவிட் ரெண்டு கட்டப்படவேண்டியவை.

(3) இராஜி செய்யப்பட்டு, ஆனால் மொத்தத் தொகையாக தீர்வை தீர்மானிக்கப்பட்டோ அல்லது விலா வரி செய்யப்பட்டோ உள்ள இனும்கள்.

31-வது ரெகுலேஷன்படி இராஜி செய்யப்பட்டு உரிமை தஸ்தாவேஜுகளும் தரப்பட்டபின், இனும் கமிஷனரால் தரப்பட்ட உரிமை தஸ்தாவேஜுகளை உறுதி செய்யவும், காயப்படுத்தவும், 1862-ம்வருஷத்து 4-வது சட்டம் செய்யப்பட்டது. அதில் 2 பிரிவுகள்தான் இருக்கின்றன. ஒன்று ஆரம்பம் :—

(1) மற்ற நிலங்களைப்போல வில்லங்கம் செய்யவும் பாரம்பரியமாய் அனுபவிக்கவும், சர்க்காருடைய அனந்தர உரிமையை ஒரு குறிப்பிட்ட வருஷத் தீர்வைக்கு இனும்தாரர்களுக்கு கொடுத்து, 1859-ம்வருஷ ஆகஸ்ட்மீ 9உயில் சர்க்காரால் விதிகள் செய்யப்பட்டபடி இனும்களை ராஜி செய்யப்பட்டதின் காரணமாய், கீழ்வருமாறு சட்டம் செய்யப்படுகிறது.

(2) இனும் முறையில் முன்பாகவே வைத்திருந்த நிலங்களை இராஜி செய்ததற்காக இனும் கமிஷனரால் தரப்பட்ட உரிமை தஸ்தாவேஜுகள் அல்லது இனும் கமிஷனரின் புத்தகத்திலிருந்தோ அல்லது கலெக்டரிடமிருந்தோ ஒரு தக்க குறிப்பு இருந்தால், அதுவே தக்க சாக்ஷியமாகும்.

இராஜி செய்வதால் சர்க்கார் தன் அநந்தர பாத்தியதையை, ஜோடி அல்லது குவிட் ரெண்டுக்காக, எவருக்குத் தரப்படுகிறதோ அவருக்கு எல்லாவித உரிமைகளையும் தந்துவிடுகிறது. இராஜிதான் எவ்வளவு தீர்வைக்கு சர்க்காரால் தன் அநந்தர உரிமையை விடப்பட்டது என்பதைத் தீர்மானிக்க ஒரு வழி. இது இனும்தாரின் குடிவார உரிமையை பாதிக்கக்கூடியதல்ல.

சர்க்கார் தங்கள் அனந்தர உரிமையையும், மற்ற எல்லாவித பெரிய உரிமைகளையும் இராஜி செய்ததின் பின் இனும்தாருக்குக்கொடுத்துவிட்டபடியால், அந்த நிலத்திற்காக வேறு எவ்விதத்திலும் தீர்வையை விதிக்க முடியாது.

தரப்பட்டவர் காலம் வரையில் இருக்கக்கூடிய இனாம்களாகிய செட்டில்மெண்டுக்குப், பிந்திய இனாம்கள் தான், எஸ்டேட் நிலச் சட்டத்தில் வரும். 1858-ம் ௵த்தில் இனாம் கமிஷன் அறிக்கையை வெளியிட்ட பின்பு, வரியில்லாமல் அனுபவிக்கப்பட்ட இனாம்களை, எப்படி நடை முறையில் கொண்டுவருவதென்பதற்கு 1859-ம் ௵த்தில் விதிகள் செய்யப்பட்டன. 1856-ம் ௵த்தில் சென்னை சர்க்கார் நடவடிக்கை நெ. 17-படி கோர்ட் ஆப் டைரக்டர்கள் 1856-ல் அனுப்பிய நிரூபத்துடன் எப்படி செட்டில்மெண்டுக்கு முந்திய ஜமீந்தாரி யிலும், சர்க்கார் தரப்பிலும் மற்றுமுள்ள இனாம்களை ராஜி செய்வதென ஒரு நிரூபம் போயிற்று. இதனால் தான் இனாம் கமிஷன் ஏற்படுத்தப்பட்டது. இனாம் கமிஷனின் அறிக்கையின் பின்பும், அதற்கான விதிகள் ஏற்படுத்திய பின்னரும் இனாம் கமிஷனரால் தரப்பட்ட உரிமை தஸ்தாவேஜுகளை ஊர்ஜிதம் செய்ய 1862-ம் ௵த்து 4-ம் சட்டமான சென்னை, ராஜி செய்யப்பட்ட இனாம் சட்டம் செய்யப்பட்டது. நான்கு வருஷங்களுக்கு பின்பு 1866-ம் ௵த்து சென்னை ராஜி செய்யப்பட்ட இனாம் சட்டம் செய்யப்பட்டது. அதன் முன்னுரையில் இச்சட்டத்தின் காரணங்களையும் விவரங்களையும் கூறியிருக்கிறது.

சென்னை ராஜதானியில் தாவாக்களை, ரெவின்யூ அதிகாரிகளால் 1831-ம் ௵ 6-வது ரெகுலேஷன்படி தீர்மானிக்கப்படக்கூடிய போலீஸ் ரெவின்யூ போன்ற பரம்பரை உத்தியோகஸ்தர்களுக்குத் தரப்பட்ட இனாம்களை மற்ற நிலங்களைப்போல வில்லங்கம் செய்யவும், பரம்பரையாய் அனுபவிக்க சர்க்கார் உத்தரவில் இராஜி செய் யப்படும் வண்ணம் கீழ்கண்டபடி சட்டம் செய்யப்பட்டது.

பிரிவு 1.—தொழில்க் கட்டுப்பாட்டிலிருந்து, இனாம் கமிஷனராலோ, சர்க்கார் அதிகாரியாலோ, இராஜி செய்யப்பட்டும், 1831-ம் ௵த்து 6-வது ரெகுலேஷன்படி இதுவரையிலும், ரெவின்யூ டிபார்ட்மென்டின் அதிகாரிகளால் தீர்மானிக்கப்பட்டும், இருக்கும் பரம்பரை கிராமத் தொழில் இனாம்கள், மேற்கூறிய ரெகுலேஷன் அமுலிலிருந்து விலக்கப்படும்.

பிரிவு 2.—முந்தியே தொழில் இனாமாக இருந்து, இராஜியானதிற்கு இனாம் கமிஷனராலாவது இதர தக்க உத்தியோகஸ்தர்களால் தரப்பட்ட உரிமை தஸ்தாவேஜுகளும், இனாம் கமிஷன் அல்லது மற்ற உத்தியோகஸ்தர்களின் தஸ்தாவேஜுகளிலுள்ள குறிப்புகளும் சாக்ஷியங்களாகும்.

பிரிவு 3.—இராஜி செய்வதற்கு முன் 1831-ம் ௵த்து 6-வது ரெகுலேஷன்படி, ரெவின்யூ அதிகாரி களால் தீர்மானிக்கப்பட்ட தொழில் இனாம்கள் விஷயமாய், அத்தீர்மானத்தைப் பாதிக்கும் முறை யில் சிவில் கோர்ட்டார் அதிகாரம் செலுத்த இந்தச் சட்டப்படி அதிகாரமில்லை.

1862-ம் ௵த்து 4-வது சட்டத்திலும், 1866-ம் ௵த்து 4-வது சட்டத்திலுமுள்ள சந்தேகங்களை நிவர்த் திக்க, 3 வருஷங்களுக்குப் பின்பு 1869-ம் ௵த்தில் 8-வது சட்டமாக சென்னை இனாம் சட்டம் செய்யப் பட்டது. இச்சட்டத்தின் முன்னுரையில் இது ஏற்படுத்தியதின் காரணம் கீழ்க்கண்டபடி சொல்லியிருக்கிறது.

சென்னை ராஜதானியிலுள்ள இனாம் நிலங்களைத் தீர்மானித்து, முடிவு செய்யவேண்டி, 1859-ம் ௵த்து அக்டோபர் மீ 4உயில் 1859-ம் ௵த்தில் சென்னை சர்க்காரால் விதிகள் அனுமதிக்கப்பட்டு, போர்ட் செயின்ட் ஜார்ஜ் கெஜெட்டில் பிரசுரமானபடி, சர்க்காரால் ஏற்படுத்தப்பட்ட முறைப்படி, இனாம்தாரர்களுக்கு உரிமை தஸ்தாவேஜுகள் தரும்படி சென்னை மாகாண இனாம் கமிஷனருக்கு உத்தரவிடப்பட்டது. அப்படித் தரப் பட்ட உரிமைகள் சட்டப்படி தரக்கூடியதற்கு அதிகமானதாலும், அது பிறர் உரிமைகளுக்கு பாதகரமாய் இருப்பதாலும், அம்மாதிரியான சந்தேகங்களை நிவர்த்திக்கவேண்டியிருப்பதாலும், 1866-ம் ௵த்து 4-ம், 1862-ம் ௵த்து 4-ம் சட்டங்களிலும் நிலம், நிலங்கள் என்னும் சொற்கள், இனாம் என்னும் வார்த் தைக்கு பொருந்தாததாலும், அந்த வார்த்தைகளின் சரியான பொருளை விளக்கவேண்டியிருப்பதாலும் கீழ்க்கண்ட சட்டம் செய்யப்பட்டது :—

முதற் பிரிவு.—இனாம் தரப்பட்ட நிலத்தில் இருப்பவர்களின், அல்லது வேறுவித உரிமை உடையவர் களின் உரிமைகளை விளக்கவோ, கட்டுப்படுத்தவோ, பாதிக்கவோ, அழிக்கவோ, இனாம்தாரர்களுக்குத் தரப்பட்ட உரிமை தஸ்தாவேஜுகள், அதிகாரமுடையதாகக் கொள்ளக்கூடாது. 1862-ம் ௵த்து சென்னை 4-வது சட்டப்படியும், 1866-ம் ௵த்து சென்னை 4-வது சட்டப்படியும், இனாம்தாரர்களுக்கு தங்களுக்கில்லாத எந்த உரிமையும் தரப்படாதென்று கொள்ளவேண்டும்.

1802-ம் ௵ முதல், இதுவரையிலும், இனாம்தார்களின் உரிமைகளும், பொறுப்பும், 1802-ம் ௵த்து 31-வது ரெகுலேஷன், 1862-ம் ௵த்து 4-வது சட்டம், 1866-ம் ௵த்து 4-ம் சட்டம், 1869-ம் ௵ 8-ம் சட்டம், 1871-ம் ௵த்து 28-ம் சட்டம் முதலியவற்றால் பிரயோகிக்கப்பட்டுவந்தது. இவைகள் 1908-ம் ௵ வரையில் அமுலில் இருந்தன 1908-ம் ௵த்தில் எஸ்டேட் நிலச் சட்டம் செய்யப்பட்டது. அவைகள் 1936-ம் ௵ வரையிலும் ஆக்ஷியிலிருந்தன. 1936-ல் 18-ம் சட்டமாக திருத்தச் சட்டம் செய்யப்பட்டது.

1908-ம் ௵த்து சட்டத்தாலாவது, 1936-ம் ௵த்து சட்டத்தாலாவது பழையசட்டங்களால் ஏற்படுத்தப்பட்ட உரிமைகள் ரத்து செய்யப்படவில்லை பழைய சட்டங்களில் பிரத்தியேகமாக இனாம்தாரர்களின் உரிமைகளைப் பற்றிபாதுகாப்பு இருக்க, 1908-ம் ௵த்திலும், 30 ஆண்டுகளுக்குப் பின்னர் 1936-ம் ௵த்திலும் இனாம்களி லுள்ள உரிமையைப் பாதிக்கும்படி வேறு சட்டம் செய்யும்போது, பழைய சட்டங்களை ஆராய்ந்து அதற்கு முற னில்லாமலாவது அல்லது அவைகளை ரத்து செய்தாவது வேறு சட்டம் செய்யவேண்டுமென்று யாரும் நினைக் காதது வெகு ஆச்சர்யம்தான். 1869-ம் ௵த்து இனாம் சட்டத்தை 1936-ம் ௵த்து 2-வது எஸ்டேட் நில மசோதாவிற்கு ஆதாரமாகக் கொள்ளப்பட்டது. 1869-ம் ௵த்து 8-வது சட்டத்தில் இந்த சட்டத்திற்காக உப யோகித்த பாரா பின்வருமாறு :—

“ இந்த சம்மந்தத்தில் 1869-ம் ௵த்து சென்னை இனாம் ஆக்டின் நிபந்தனைகளைப் பரிசீலனை செய்வது நியாயம். இப்போது உபயோகத்திலிருக்கும் இந்த சட்டம், இராஜி செய்யப்பட்டு இனாம்தாருக்கு உரிமை தஸ்தாவேஜு தருவதினால், இனாமாக தரப்பட்ட நிலத்திலிருப்பவர்களுடைய உரிமைகளை விளக்கவோ, கட்டுப்படுத்தவோ, பாதிக்கவோ, ரத்து செய்யவோ கூடுமானதில்லையென்றும், இனாம் தாரருக்கு உரிமை தஸ்தாவேஜில்லாத வேறெந்த உரிமைகளும் தரவில்லையென்றும் கூறுகிறது. இதனால் இனாம்தாரருக்கு பூரா உரிமையும் ஒரு கிராமத்தில் ஏற்படுகின்றதென்று கூறுவதற்கில்லை. ஏனென்றால் இனாம் தரும்போது, அந்த நிலத்தில் வேறு எவரும் இல்லையென்றாவது அல்லது குடிவார உரிமை பூராவும் இனாம்தாரருக்கு வந்துவிட்டதென்பதற்கில்லை. இதனால் 1802, 1822-ம் ௵த்து ரெகுலேஷன்படியும், 1865-ம் ௵த்து ரெண்ட் ரெகவரி ஆக்ட்படியும், 1894-ம் ௵த்து சென்னை பூஸ்திதிகளின் ஊழியச் சட்டப்படியும், இனாம்களையும், ஜமீன்களையும் இதர பூஸ்திதிகளைப் போலவே கொள்ளப்பட்டது என்று ஏற்படுகிறது. அதேபோல் 1905-ம் ௵த்து மசோதாவிலும் கொள்ளப்பட்டு, பின்னர் 1908-ம் ௵த்து எஸ்டேட் நிலச் சட்டத்தில் கொண்டுவரப்பட்டது. இந்த மசோதாவில் குடிவார உரிமையுள்ள இனாம்தாரை நிலத்துக்குடையவர்

என்பதினின்றும் விலக்கப்பட்டது. இதனால் இந்த சட்டம் இனாம்தாரருக்கு மேல்வாரத்தில் மட்டுமா அல்லது மேல்வாரம், குடிவாரம் இரண்டிலும் உரிமை இருக்கிறதா என்பதை கோர்ட்டு முடிவு செய்யவேண்டுமென விட்டுவிட்டது."

இதனால் 1908-ம் ஹு சட்டப்படியாவது, 1936-ம் ஹு சட்டப்படியாவது, 1802-ம் ஹு முதல் ஏற்பட்டுள்ள இனாம் சட்டங்களை ரத்து செய்ததாக ஏற்படவில்லை. அவைகள் அமுலில் இருப்பதாகவே கொள்ளப்பட்டிருக்கின்றன 1936-ம் ஹுத்தில் செய்த பிசகாவது இனாமை, பூஸ்திதியென்று 1802, 1822-ம் வருஷ ரெகுலேஷன்களில் கொள்ளப்பட்டதாக உண்மைக்கு மாறாகக் கொண்டதப்பு. இதற்குக் காரணம் சட்ட சபையினர் 1869-ம் ஹுத்திற்கு முந்திய சட்டங்களை கவனிக்கவில்லை. அப்படி இனாம் சட்டங்களைப் பார்த்திருந்தால் பூரா இனாம் கிராமங்களையும் மற்றும் மேல் குடிவாரமுள்ள இனாம்களைக்கூட எஸ்டேட் நிலச் சட்டத்தில் 1908-ம் ஹுத்திலும் 1936-ம் ஹுத்திலும் கொண்டுவந்திருக்கமாட்டார்கள். வழக்குகளைத் தீர்க்க கலெக்டர் கோர்ட்டில் விசாரிக்க பெரிய ஏற்பாடுகள் செய்திருக்கமாட்டார்கள்.

1936-ம் ஹுத்து 18-ம் சட்டத்தின் 3 பிரிவின் 5-வது உட்பிரிவின் 2-வது பாராவில் கோர்ட் அதிகாரத்தைப்பற்றி கீழ்வருவன கூறப்பட்டிருக்கின்றன :—

> இந்தச் சட்டத்தின்படியோ அல்லது அதன் சில விஷயங்களுக்காகவோ நிலத்துக்குடையவர் எவரென்று இரண்டு கூட்டுச் சொந்தக்காரர்களுக்குள்ளேயோ அல்லது இரண்டு நபர்களுக்கோ வழக்கு ஏற்பட்டால் ஸ்தல சர்க்காரால் விதிகள் செய்திருக்கும்படி சிவில் கோர்ட் உத்தரவுக்குட்பட்டு கலெக்டர் எவரை அங்கீகாரமோ அல்லது நியமனம் செய்கிறாரோ அவரே நிலத்துக்குடையவராவார்.

1802-ம் ஹுத்து 31-வது ரெகுலேஷன், 3, 8-வது பிரிவுகளும், 1831-ம் ஹுத்து 4-வது ரெகுலேஷன், 2-ம் பிரிவும் இதற்கு எதிராகக் குறிப்பிடலாம்.

1802-ம் ஹுத்து ரெகுலேஷன், 3-வது பிரிவுப்படி—

> ஒரு உத்தியோகஸ்தர் விலக்கப்பட்ட நிலங்களை கிராண்டு செய்வதற்கு அதிகாரம் உண்டா என்று சந்தேகம் ஏற்பட்டாலும், அல்லது விலக்கப்பட்ட நிலங்களை திரும்பவும் பெற்று தீர்வை விதிக்க அதிகாரம் உண்டா என்ற சந்தேகம் ஏற்பட்டாலும் அதை கவர்னர் தன் மந்திரிகளுடன் தீர்ப்புச் செய்யவேண்டும். அந்தத் தீர்ப்பை கோர்ட்டில் காண்பித்தால் அதன்படி அவர்கள் தீர்ப்பு செய்ய வேண்டும்.

1802-ம் ஹு த்து 31-வது ரெகுலேஷன், 8-வது பிரிவுப்படி—

> நீக்கப்பட்ட நிலங்களில் செல்லத்தகாத உரிமை நீண்ட அனுபவ பாத்தியதையால் ஒருவர் கொண்டாட முடியாது. அதனால் சர்க்கார் திரும்பவும் அந்த நிலத்தைப்பெற ஆக்ஷேபனை செய்பவர்கள் செலவுத் தொகையுடன் தோல்வி பெறுவார்கள்.

1802-ம் ஹுத்து 31-வது ரெகுலேஷன், 10-வது பிரிவு—

> ரெவின்யூ போர்டாரின் எழுத்து மூலம் உத்தரவு இல்லாமல், நீக்கப்பட்ட நிலங்களைத் திரும்பிப் பெற கோர்ட்டில் தாவா செய்ய கலெக்டருக்கு உரிமை இல்லை.

1831-ம் ஹுத்து 4-வது ரெகுலேஷன் 2-வது பிரிவுப்படி—

> பிரதம அல்லது வேறு காரியதரிசியால் தங்கள் வழக்கை அடலட் ட்கார்ட்டு மூலம் தீர்ப்பு செய்துக் கொள்ளும்படி தந்துள்ள உத்தரவுடன் மனு வந்தாலன்றி, ஒரு பொது உத்தியோகஸ்தர் மீதோ, அல்லது ஒரு நபர் மீதோ, பரம்பரையாகவோ, தனக்கோ, கவர்னரால் தொழில் செய்ததற்காக அல்லது தொழிலைத் திரும்பிப் பெற்றதற்கோ தரப்பட்ட பென்ஷன் அல்லது ஜமீன்களோ, பாளையங்களோ தீர்வை பாக்கிக்காக ஜப்தி செய்து சர்க்கார் உத்தியோகஸ்தர்களால் தங்கள் பார்வையில் வைத்திருந்தால், அல்லது யோமி தரும்படி அல்லது பென்ஷன் முதலியவற்றை தொடர்ந்து தரும்படியோ அவைகளைப்பற்றி வழக்கு வந்தால் அடலட் கோர்ட் விசாரணை செய்யக்கூடாது. இதை கவர்னர் தன் மந்திரிகளுடன் விசாரணை செய்து தீர்ப்பளிக்கவேண்டும்.

1871-ம் ஹுத்து 23-ம் சட்டமான இந்திய சர்க்கார் பென்ஷன் திட்டத்தால் 1836-ம் ஹுத்து 31-ம் சட்டமும் 1831-ம் ஹுத்து 4-ம் ரெகுலேஷனும் ரத்து செய்யப்பட்டு சிவில் கோர்ட்டுக்கு அதிகாரம் தரப்பட்டது. இந்த சட்டத்தின் 2-ம் பிரிவில் ஷெட்யூலில் கண்ட சட்டங்கள் ரத்து செய்யப்படுமென்று இருக்கிறது. பென்ஷன், பணம், தீர்வை முதலியன தருவதற்கும் யார் அதைப் பெறுவதென்பதற்கும் ஏற்பட்டுள்ள விதிகள் இந்த சட்டத்தால் ஏற்பட்டதாக கொள்ளவேண்டும். பணம் அல்லது நிலத்தீர்வை கொடுப்பது என்பதற்கு 3-ம் பிரிவில் சர்க்காரால் ஒருவருக்கு உரிமையால் அல்லது பாத்தியதையால் அல்லது தொழிலுக்காக தரப்படுவது என்று விளக்கியிருக்கிறது.

இந்த பென்ஷன் முதலியனவைப்பற்றியுள்ள வழக்குகளை ஸ்தல சர்க்காரால் செய்துள்ள விதிகளின்படி கலெக்டரோ, டிப்டி கமிஷனரோ விசாரித்து, தீர்ப்பு செய்யவேண்டும்.

7-ம் பிரிவின், 1-வது உட்பிரிவு.

1831-ம் ஹுத்து 4-வது ரெகுலேஷன்படியும், 1836-ம் ஹுத்து 31-வது சட்டப்படியும் சிவில் கோர்ட் அதிகாரத்தை இந்த சட்டத்தின் 4 முதல் 6 பிரிவுகளில் விலக்கப்படுகிறது. 1862-ம் ஹுத்து சென்னை 4-வது சட்டப்படி ஏற்பட்டுள்ள இனாம்கள் மேற்படி பிரிவின் நிபந்தனைக்குள் வரா.

1862-ம் ஹுத்து சென்னை 4-வது சட்டம், 1-ம் பிரிவில் இருக்கும் இனாம்களை 1871-ம் ஹுத்து 23-ம் சட்டமான இந்திய சர்க்கார் சட்டம் சிவில் கோர்ட் அதிகாரத்தினின்றும் எடுத்துவிட்டது ஒன்றுதான். மற்ற எல்லா நிபந்தனைகளும் இந்த இனாம்களுக்கும் பிரயோகப்படும்.

இனி ஏன் இவ்வாறு சிவில் கோர்ட் அதிகாரம் எடுக்கப்பட்டதென்பதைக் கவனிப்போம்.

சென்னை 1831-ம் ஹுத்து 4-வது ரெகுலேஷன், 2 (1)-ம் பிரிவில் சொல்லியிருக்கும் இனாம்கள்தான் 1871-ம் ஹுத்து 7 (1)-ம் பிரிவில் சொல்லியிருப்பது. இவைகளைத்தான் இனாம் கமிஷனர் ராஜி செய்து என்றைக்கும் சர்வ மானியங்களாக ஏற்படுத்தப்பட்டன. கவர்னர் மந்திரிகளுடன் ஒரு நபருக்கோ பரம்பரையாகவோ, பணமாகவோ, நிலத்தீர்வையாகவோ தரப்பட்ட இனாம்களாகும். இவைகள்தான் 1871-ம் ஹுத்து 23-ம் சட்டத்தில் 7 (1)-ல் சொல்லியிருப்பதும். இந்த சட்டத்தால் சிவில் கோர்ட் விசாரிக்கக்கூடாதென்ற நிபந்தனை எடுக்கப்பட்டுவிட்டது. அதற்குக் காரணம் எல்லாவித இனாம்களும் ராஜி செய்யப்பட்டது அல்லது இனாம் கமிஷனரால் ராஜி செய்யப்படவேண்டியதானதால்தான். முதலில் சிவில் கோர்ட் நிபந்தனையை எடுத்துவிட்டு பின்பு 1831-ம் ஹுத்து 4-வது ரெகுலேஷனையும், 1836-ம் ஹுத்து 31-வது சட்டத்தையும் ரத்து செய்யப்பட்டது. முன்பில்லா இனாம்களையும் ராஜி செய்துவிட்டதால் சிவில் கோர்ட்டு நிபந்தனை வேண்டியதில்லை. ராஜி செய்யாத

வரையில் சர்க்காருக்கு அனந்தர வார்சு இருந்தது. அதனால் கவர்னரே அல்லது அவரால் குறிக்கப்பட்டவரே விசாரிக்கவேண்டியதாயிருந்தது. சர்க்கார் தன் அனந்தர வார்சை விட்டுவிட்டு என்றைக்கும் இனுமை சர்வ மானியமாக விட்டுவிட்டால்த்தான் ராஜி செய்யப்பட்டதாகும். இனும் கமிஷனர் தன் வேலையை முடிக்கும் வரையில் சர்க்கார் அதிகாரத்தை வைத்திருந்தனர். இராஜி என்பது இனும்தாருக்கு உரிமை தருவதுமட்டு மல்லாமல் 50 வருஷத்திய விதிப்படி உரிமையும் இருக்கிறதென்பதே. இராஜியால் சர்வ மான்யம் தரப்பட்ட போது 1862-ம்ஹூ்த்து 4-வது இனும் சட்டம் செய்யப்பட்டது. அப்போது 1831-ம்ஹூ்த்து 4-வது ரெகு லேஷனையும், 1836-ம்ஹூ்த்து 31-வது ரெகுலேஷனையும் ரத்து செய்யவில்லை. அதனால்த்தான் இந்திய சர்க்கார் சட்டத்தால் 1871-ல் ரத்து செய்யப்பட்டது. அந்த சமயத்தில் ஜப்தி செய்யப்பட்டு சர்க்கார் தரப்பில் சில ஜமீன்களும், பாளையங்களும் இருந்ததால் செக்ரெடரி ஆப் ஸ்டேட் அனுமதியின்பேரில் கவர்னர் ஜனரல் 1871-ம்ஹூ்த்து சட்டத்தைச் செய்தார். இது இன்றைக்கும் அமுலில் இருக்கிறது. சென்னை 1862-ம்ஹூ்த்து 4-ம் இனும் ஆக்டும், 1866-ம்ஹூ்த்து 4-ம் ஆக்டும், 1869-ம்ஹூ்த்து 8-ம் ஆக்டும் இப்போது அமுலில் இருக் கிறது. இனும்களெல்லாம் மேற்கூறப்பட்ட சட்டங்களால் ஆளப்பட்டுவந்தன.

1869-ம்ஹூ்த்து 8-ம் இனும் சட்டம், 1936-ம்ஹூ்த்து சென்னை சீர்திருத்த சட்டத்திற்கு ஆதாரமாக இருந்தது. இனும்களைப்பற்றி மேற்கூறிய சட்டங்கள் அமுலில் இருக்கும்வரையில் 1908-ம்ஹூ்த்திய சட்டமும் 1936-ம்ஹூ்த்திய சட்டமும் அவைகளினுல் இருக்கும் உரிமைகளைப் பாதிக்காது. 1871-ம்ஹூ்த்துச் சட்டம் இருக்கையில் சென்னை சட்டசபை எஸ்டேட் நிலச் சட்டத்தால் மாறுதல் ஏற்படுத்தமுடியாது. இதனால் இனும்தார்கள் விஷயத்தில் 1871-ம்ஹூ்த்திய இந்திய சர்க்கார் சட்டத்தால் தரப்பட்ட உரிமைகளை 1908-ம்ஹூ்த் துச் சட்டமும், 1936-ம்ஹூ்த்துச் சட்டமும் பாதிக்கமுடியாது. அது செல்லவும் செல்லாது. சட்டத்துக்கும் விரோதமானது. நிரந்தரமாய் ஏற்படுத்தப்பட்ட பூஸ்திதிகளுக்கும், அதிலுள்ள குடிகளுக்கும் ஏற்படுத்தி யிருக்கும் சட்டத்தில் இனும்தாரர் களுக்கும் அவர் குடிகளுக்கும் இடம் கிடையாது.

இவ்வாறு இனும் சட்டங்கள் இருக்க அதற்கு மாருக எப்படி வேறு சட்டங்கள் ஏற்படுத்துவது. சில அங்கத்தினர் கூறியதைகேட்டு, அவசரப்படாமல் செய்திருந்தால் இந்த பெரும் பிசகை 1936-ம்ஹூ்த்தில் செய்திருக்கமாட்டார்கள். சர் ஏ. பி. பாத்ரோ அவர்கள் இவ்விதமான மசோதா, அந்த அரசாங்கம் முடியும் போதும், அந்த சட்டசபை முடியும்போதும் அவசரமாக புகுத்துவது சரியல்லவென்றார். அதன் பலனென்ன வென்றால் மேற்கூறிய இனும் சட்டங்கள் அமுலில் இருக்கையில் இச்சட்டம் பிரயோஜன மில்லாமற் போனதே. முன்னுரையில் இனும்களும் இதர பூஸ்திதிகளைப் போன்றவை என்று மசோதாவின் காரணத்தைச் சொல்லும்போது குறிப்பிடுவது பிசகு. எப்படியானாலும் 1871-ம்ஹூ்த்து சட்டத்தை அவர்களால் ரத்து செய்திருக்கமுடியாது.

இனும்தார்கள் சச்சரவு செய்துகொண்டேயிருந்தார்கள். அவர்கள் 1936-ம்ஹூ்த்து சட்டம் தங்களுடைய சொந்த உரிமைகளை அபகரிப்பதால் அச்சட்டத்தை அங்கீகரிக்கக்கூடாதென்று வைஸிராயிக்கும் தெரிவித்தார் கள். எப்படி உரிமை அபகறிக்கப்படுவதென்றுமட்டும் காட்டவில்லை.

மூன்றாவது திருத்த மசோதாவைப்போன்ற 2-ம் திருத்த மசோதாவான 1936-ம்ஹூ்த்து 18-ம் சட்டத்தை உரிமை ஒழிக்கும் சட்டமென்று வைஸிராய் தள்ளிவிட்டார். அப்போது வைஸிராய் அச்சட்டத்தில் இனும்தாரர் களுக்கு தகுந்த "காம்பென்சேஷன்" தராததால் தள்ளப்பட்டதென்றும், குடிகளுக்கு அனுபவ உரிமை தருவதாலல்லவென்றும் தெரிவித்தார். "காம்பென்சேஷன்" என்பது இனும்தாரரின் குடிவார உரிமையை பொருந்தியது. அதை சர்க்காரால் நியமிக்கப்பட்டவர்கள் தீர்மானம் செய்யவேண்டும்.

சென்னை எஸ்டேட் நிலச் சட்டத்தின் 185-ம் பிரிவுப்படி இனும்தாரர்கள் இரண்டு வருஷத்தில் குடிவார உரிமையை ருசு செய்யவேண்டும். எப்படி மனு செய்து விசாரணக்கு கொண்டுவருவதென்பதைப்பற்றிய ரூல்கள் 1938-ம்ஹூ்த்து ஜூன்மீ 21உ போர்ட் ஸெய்ன்ட் ஜார்ஜ் கெஜெட்டில் வெளிவந்திருக்கிறது. இதன் படி இரண்டு வருஷமென்பது உண்மையில் நான்கு மாதமாக குறைக்கப்பட்டுவிட்டது. அதனால் 1938-ம் வருஷத்தில் இந்த காலத்தை ஒரு வருஷம் நீடிக்க திருத்தச் சட்டம் கொண்டுவரப்பட்டது. அதுவும் இரண்டு சட்ட சபைகளாலும் 1938-ம்ஹூ ஆகஸ்ட்மீ 17, 18-ம் தேதிகளில் அங்கீகாரம் செய்யப்பட்டது. இதன்படி இனும்தாரர்களுக்கு குடிவார உரிமை பூரா கிராமத்திலும் அல்லது பகுதியில் இருக்கிறதாவென்பதை இச்சட்டப்படி ஏற்படுத்தப்பட்ட தனி விசாரணை செய்பவர்களால் தீர்மானிக்கப்படவேண்டும். இவையெல்லாம் 1862-ம்ஹூ்த்து 4, 1866-ம்ஹூ்த்து 4-வது இனும் சட்டங்களுக்கும், 1871-ம்ஹூ்த்து இந்திய சர்க்கார் சட்டத் திற்கும் மாருனவை. இனுமிற்கென்று வேறு சட்டங்களிருக்க இம்மாதிரி பூஸ்திதிகளுடன் அதைத் தவருகச் சேர்த்து சட்டங்களை முறையின்றி செய்திருக்கிறது. இதனால்த்தான் 1936-ம்ஹூ்த்தும் 1938-ம்ஹூ்த்தும் சட்டங் களால் ஏற்படுத்தும் தனி விசாரணைக் கூட்டத்தாரும், 1871-ம்ஹூ்த்து 23-ம் சட்டப்படி சிவில் கோர்ட்டும் சச்சரவு செய்ய நேரிடுகிறது. சிவில் கோர்ட்டார் 50 வருஷ திட்டத்தையும் கமிட்டியார் தனி விதிகளாலும் ஒரே விஷயத்தைத் தீர்மானிக்கும்படியிருக்கிறது.

தீர்மானம்,

(1) நீக்கப்பட்ட இனும்கள்.

சாசுவத செட்டில்மெண்டுக்குமுன், பூஸ்திதிகளில் சேர்ந்திருந்த இனும்கள், 25-வது ரெகுலேஷன், 4, 12 பிரிவுகளின்படி, நிலத்தீர்வை தீர்மானிக்கும்போது, மொத்த சொத்திலிருந்து விலக்கப்பட்டதால் 1802-ம்ஹூ்த்து பெர்மனென்ட் ரெகுலேஷனில், அது அடங்கவில்லை. பெர்மனென்ட் செட்டில்மெண்டு ரெகுலேஷனிலிருந்து இனும்கள் விலக்கப்பட்டு அதே தேதியில் செய்யப்பட்ட 31-ம் ரெகுலேஷனால், இனும் தாரருக்கும் சர்க்காருக்கும் ஒருபுறம், இனும்தாருக்கும் குடிகளுக்கும் மற்றொருபுறமுள்ள உறவுகளை ஏற் படுத்தப்பட்டது. இது 1869-ம்ஹூ்த்து 2-ம் சட்டத்தால் ரத்து செய்யும்வரை, அமுலில் இருந்தது. அது ரத்து செய்யப்படுமுன், அதிலுள்ள நிபந்தனைகளை விபரிக்க 1831-ம்ஹூ்த்து 4-வது ரெகுலேஷனும், 1836-ம் ஹூ்த்து 31-வது சட்டமும் செய்யப்பட்டது. இவைகள் 1871-ம்ஹூ்த்து 23-ம் சட்டமான இந்திய சர்க்கார் சட்டத்தால் ரத்து செய்யப்பட்டது. இவைகள் இப்படி இருக்க இனும் கமிஷனர் இனும்தார் உரிமைகளை விசாரித்து உரிமை தஸ்தாவேஜிகள் கொடுத்து இராஜி செய்தபின்பு 1862-ம்ஹூ்த்து சென்னை 4-வது இனும் சட்டம் செய்யப்பட்டது. இச்சட்டத்தை இன்னும் விருத்திசெய்து 1866-ம்ஹூ்த்து 4-வது இனும் சட்டம் செய்யப்பட்டது. இனும் கமிஷனரால் விசாரிக்கப்படாமல் தீர்ப்பு செய்ததால் பாதகரமடைந்த விவசாயி களின் குறைகளால் இனும்தாருக்குத் தரப்பட்ட உறிமைகளிலும் இராஜி செய்ததிலும் சந்தேகமேற்பட்டு அவைகளை நிவர்த்திக்க 1869-ம்ஹூ்த்து 8-ம் சென்னை விளக்கச் சட்டம் ஏற்பட்டது.

1869-ம்ஹூ்த்து சட்டம் வரும்வரை 1802-ம்ஹூ்த்து 31-வது ரெகுலேஷன் அமுலில் இருந்தது. இது சென்னை இனும் சட்டங்களில் பின்பு சேர்ந்தது. அவைகள் ரத்துசெய்யுமட்டும் இருந்தன. 1869-ம்ஹூ்த் தில் 1802-ம்ஹூ்த்து 31-ம் ரெகுலேஷன் ரத்து செய்யப்பட்டாலும், 1831-ம்ஹூ்த்து 4-வது ரெகுலேஷனும்,

1836-ம் வருஷத்து 31-வது சட்டமும், 1871-ம் வருஷத்து இந்திய சர்க்கார் சட்டம் வரும்வரையில் இருந்தது. இனும்களைப்பற்றி இவ்வாறு தனிச் சட்டங்களிருக்க 1865-ம் வருஷத்தில் சென்னை தீர்வை வசூலிக்கும் சட்டம் வந்தது. இதில் 1802-ஆம் வருஷத்து 25-ம் பெர்மனென்ட் செட்டில்மெண்டு ரெகுலேஷனுல் விலக்கப்பட்டும், அதே வருஷத்து 31-வது ரெகுலேஷனுல் தனிச்சட்டங்கள் செய்யப்பட்டுமுள்ள இனும்கள். முதன் முதலாக இத்தீர்வை வசூலிக்கும் சட்டத்தில் பூஸ்திதிக்காரர் என்பதோடு இணைக்கப்பட்டன. இது வரி வசூலிப்பதற்காக ஏற்பட்ட சட்டம். இச்சட்டம் புது நிபந்தனைகளை உண்டுபண்ணவாவது அல்லது பழையவற்றை எடுக்கவாவது இல்லை. இதற்கு ருசு, இச்சட்டத்தின்பின் 1802-ம் வருஷத்து 31-ம் சட்டம் நான்கு ஆண்டு அமுலில் இருந்தது. 1869-ம் வருஷத்தில் இனும் சட்டங்களோடு சேர்ந்தபின்னர் ரத்து செய்யப்பட்டது. இதனுல் பெர்மனென்ட் செட்டில்மெண்டு ரெகுலேஷனுல் விலக்கப்பட்ட இனும்களெல்லாம், தனி இனும் ரெகுலேஷன் களாலும், இனும் சட்டங்களாலும் 1871-ம் வருஷத்து இந்திய சர்க்கார் சட்டத்திலும் ஆளப்பட்டுவருகின்றன. எதுவும் இன்றுவரை ரத்து செய்யப்படவில்லை. எல்லாம் அமுலிலிருக்கின்றன.

இதனுல் இனும்களை 1908-ம் வருஷத்து சட்டத்திலும், பின்னர் சிறிய இனும்களை சீர்திருத்த சட்டங்களிலும், பூஸ்திதிகளுடன் சேர்த்தது, பிசகு என்பது எங்கள் அபிப்பிராயம். முன்னர், பூஸ்திதிகளுக்கென்றுள்ள திட்டங்களில் இனும்களுக்கு இடமேயில்லை. இனியும் நிரந்தரமாகவுள்ள பூஸ்திதிக்கு ஏற்படும் சட்டங்களிலும் இனும்களுக்கு இடமில்லை. அவைகளை சட்டத்தினின்றும் நீக்கிவிடவேண்டும். இதனுல் தக்க "காம்பன் சேஷன்" என்பதைப்பற்றி இனும்தார்களைப் பொறுத்தவரையில், 1936-ம் வருஷத்திய சீர்திருத்த எஸ்டேட் சட்டத்தின்படி நாம் ஆராயவேண்டியதில்லை.

இன்னும் சர்க்கார் அனந்தர உரிமை வைத்திராத பெர்மனென்ட் செட்டில்மெண்டுபோது விலக்கப் படாத சில இனும்கள், பூஸ்திதிகளுடன் சேர்ந்திருக்கலாம். அவைகளைப்பற்றி ஆராய்ச்சி வருகையில் நம் முடைய அபிப்பிராயத்தைத் தெரிவிப்போம்.

பெர்மனென்ட் செட்டில்மெண்டுகாலத்தில் சொத்திலிருந்து விலக்கப்படாத இனும்கள்.

(2) செட்டில்மெண்டுக்கும் பிந்திய இனும்கள்.

அவைகள்—

(1) செட்டில்மெண்டுக்குப் பிந்திய இனும்கள்.

(2) வேண்டுமென்றே அல்லது தவறுதலாகவோ சொத்துக்களுடன் பெர்மனென்ட் செட்டில்மெண்டு காலத்தில் சேர்க்கப்பட்ட இனும்கள்.

நாம் செட்டில்மெண்டுக்குப் பிந்திய இனும்களைப்பற்றியும், ஜமீன்தார் இனும் ஏற்படுத்தும் வகையில் உரிமையில்லாததைப்பற்றியும் சொல்லியிருக்கிறேம். பெர்மனென்ட் செட்டில்மெண்டு ரெகு லேஷன் 4, 12-வது பிரிவுகள்படி, அப்படித் தரப்பட்ட இனும்கள் செல்லாதென்றும், சர்க்காரைக் கட்டுப்படுத்தா தென்றும் கூறினேம். இதற்கு மாறாக கோர்ட்டுகள்கூட சிலவற்றை சரியென்று, தப்பு அபிப்பிராயத்தால் கூறியிருக்கின்றன. இப்படி செட்டில்மெண்டுக்குப்பிந்தி ஏற்படுத்தப்பட்ட இனும்கள் செல்லாதென்றும், சர்க்காரைக் கட்டுப்படுத்தாதென்றும் சர்க்காருக்குத் தெரிந்த உடன் அவைகளை திரும்பப் பெற்றுக்கொள்ளப்படும் என்றும் இனி செய்யப்படும் சட்டங்களில் ஏற்படுத்தப்படும். இதனுல் இனும்தாரருக்கும் விவசாயிக்கும் இப்பேர்ப்பட்ட இனும்களில் நிரந்தர, குடிவார உரிமையைப்பற்றி சச்சரவு ஏற்படுவதற்கில்லை. குடிவார உரிமை விவசாயியிடமே எப்பொழுதும் இருந்துவருகிறது.

(3) சேர்க்கப்பட்ட இனும்கள்.

சர்க்கார் தங்கள் அனந்தர வார்சை நிலத்துக்குடையவருக்குக் கொடுத்துவிட்டு, பூஸ்திதிகளிலுள்ள விவசாயிகளை எப்படி நடத்துகிறதோ அம்மாதிரியே இனுமிலுள்ள ரயத்துகளையும் நடத்தும்படிக்கு விட்டு விடும், பெர்மனென்ட் செட்டில்மெண்டுபோது சொத்தில்ச் சேர்க்கப்பட்ட இனும்கள் அடுத்தவகையாகும். இப்படி, சேர்க்கப்பட்ட இனும்களை பூஸ்திதிகளில்ச்சேர்த்து, அதிலுள்ள ரயத்துகளுக்கு நிரந்தர குடி உரிமையும், தீர்வையும், பெர்மனென்ட் செட்டில்மெண்டுபோது ஏற்பட்டபடி முடிவுசெய்துக் கொள்ள ஏது உண்டு. அதனுல் 1908-ம் வருஷத்திலும் பின்னர் வந்த திருத்தச் சட்டங்களிலும் இந்த இனும்கள் சேர்க்கப் பட்டிருக்கின்றன. இதில் இனும்தாரருக்கும் குடிகளுக்கும் ஏற்படும் சச்சரவுகளை ரெவினியூ கோர்ட்டு தீர்க்க தனி நிபந்தனைகள் ஏற்படுத்தவேண்டும். இனும்தாரருக்கு குடிவார உரிமை இருக்கிறதென்று ஏற்பட்டால் "காம்பன்சேஷன்' விஷயம் கவனிக்கவேண்டியிருக்கிறது.

1933–34-ம் வருஷத்தில் திருத்தச் சட்டங்களில் குடிவார உரிமை ரயத்துகளுக்கென்று ஏற்படுத்தியதை, உரிமையை ஒழிக்கும் சீர்திருத்தமென்று வைசிராய் தள்ளிவிட்டார். அப்போது வைசிராய், இனும்தாரர் களுக்கு குடிவார உரிமை போவதால் தக்க காம்பன்சேஷன் ஏற்படுத்தினுல், விவசாயிகளுக்கு அவ்வுரிமையைத் தருவதில் ஆக்ஷேபணையில்லை யென்ருர். 1935-ம் வருஷத்தில் வைசிராய் அனுமதி தராமல் நிறுத்திய பிரசுரத்தில் கீழ்க்கண்டவை காணகிறது :—

> "1934-ம் வருஷத்து எஸ்டேட் நிலச் சட்டம் சார்பாயும், எதிர்ப்பாயும் வந்துள்ள மனுக்களைப் பார்த்து தீரக் கவனித்து சொந்த உரிமையைப் பறிக்கும் ஒரு சட்டமென்று எனக்குத் தோன்றுவதாலும், இனும் நிலங்களில் குடிவார உரிமையை இனும்தார்கள் நிரூபிக்ககூடுமென்று ஏற்படுவதாலும், அப்படி சட்டம் செய்வதில் அவர்கள் உரிமைநீக்கத்திற்கு தக்க நஷ்டஈடு ஏற்படுத்தாததாலும் நான் என்னு டைய அனுமதியை இந்திய சர்க்கார் சட்டம் 81-ம் பிரிவு, (4)-ம் உட்பிரிவுப்படி இந்த சட்டத் திற்கு தரவில்லை. இனும்தாரர்களுக்கு நஷ்டஈடு தராததால்தான் நான் அனுமதிக்கவில்லை. இது இனுமிலிருக்கும் குடிகளுக்கு குடிவார உரிமை தருவதில் எனக்கு ஆட்சேபனை இருக்கிறதென்று கொள்ளக்கூடாது."

1934-ம் வருஷத்து திருத்தச் சட்டம் இவ்வாறு முடிந்தது.

கவர்னர்-ஜெனரலால் கூறப்பட்ட தடைகளை நீக்க 1931-ம் வருஷத்தில் இரண்டாவது மசோதாவாக சென்னை எஸ்டேட் நில திருத்தச் சட்டம் கொண்டுவரப்பட்டது. 1933-ஆம் வருஷத்தில் சொந்த நிலமில்லாத மற்றவைகளில் இனும்தாரர் குடிவார உரிமையை ருஜு செய்தால் விவசாயி தக்க நஷ்டஈடு கொடுத்துவிட்டு, குடிவார உரிமை பெறலாமென்று இந்த சட்டத்தில் கொண்டுவரப்பட்டு ஒரு வருஷ தீர்வையை நஷ்டஈடாக 1936-ம் வருஷத்து 18-ம் சட்டமாகச் செய்யப்பட்டது. இந்த நஷ்டஈடு தகுந்ததா என்பதை நாம் கவனிப்போம். ஒரு வருஷ தீர்வை, ஒரு தப்பிதத்திற்கு ஒரு தம்படி அபராதம் எப்படி பெயருக்காக விதிக்கப்படு கிறதோ, அதுபோல ஆகும். எங்கள் தீர்மானப்படி சர்க்கார் எப்படி, ஒருவரிடம் இருந்து நிலத்தைப் பெறும் போது தக்க விலை தருகிருரோ, அல்லது எப்படி ஒருவர் நிலத்தை விற்கும்போது, விலை பெறுகிருரோ அதன் படியே நஷ்டஈடு தீர்மானிக்கப்படவேண்டும்.

கடந்த நாலைந்து ஆண்டுகளாக இனுமைப்பற்றி பொதுமக்களிடை நடந்த கிளர்ச்சிகளுக்கு நாங்கள் சட்ட சபைக்கு செய்யும் சிபார்சு இதுதான். எஸ்டேட் நிலச்சட்டம், சேர்க்கப்பட்ட இனும்களுக்குத்தான் செல்லும். அதிலும் குடிவார உரிமை இனும்தாரர்களுக்கு இருந்தால் மேற்கூறியபடி நஷ்டஈடு தீர்மானிக்க வேண்டும்.

12-ம் அத்தியாயம்.

பொருளடக்கமும், சிபார்சும்.

சென்னை சட்டசபையாலும், மேற்சபையாலும் கீழ்க்கண்ட ஆறு விஷயங்கள் எங்கள் கமிட்டியின் விசாரணைக்கு விடப்பட்டன:—

(1) நிலச்சுவான்தாருக்கும், ரயத்துக்கும் இடையேயுள்ள சட்டமுறையான பொறுப்புரிமை.

(2) தீர்வை வசூலிப்பதும், குறைப்பதும்.

(3) சர்வே உரிமை ஏற்படுத்துவது ; நியாயமான தீர்வை விதிப்பது.

(4) ரயத்துகளிடமிருந்து தீர்வைக்கு மேற்பட்ட வசூலிப்பு.

(5) தங்கள் குடும்பத்திற்கும், பயிர்த்தொழிலுக்கு விவசாயிகள் இயற்கை வசதிகளை அனுபவிக்கும் உரிமை.

(6) நீர்ப்பாசன வேலைகளைக் காப்பாற்றுதல்.

பன்னிரண்டு கேள்விகள் விடுத்து அதற்கு பதில் தரும்படியாக, நிலச்சுவான்தார்களையும், விவசாயிகளையும் ஐந்து இடங்களில் விசாரித்து சாட்சியம் எடுக்கப்பட்டது. முதற்தொகுதி முதற் கேள்வியைப்பற்றியது ; அதாவது :—

(ஏ) உம் அபிப்பிராயப்படி யார் பூசாரத்துக்குச் சொந்தக்காரர், ஜமீந்தாரா, ரயத்தா ?

(பி) நிலச்சுவான்தாருக்கும், ரயத்துக்குய், நிலத்தில் எந்தவிதமான உரிமையிருக்கிறது ?
மற்ற கேள்விகளெல்லாம் இரண்டு முதல் பத்து வகுப்பு வரையில் பன்னிரண்டு அத்தியாயங்களில் ஆராயப்பட்டிருக்கின்றன.

ஒவ்வொரு விஷயமும், ஒவ்வொரு அத்தியாயத்தில் ஒவ்வொரு தலைப்பின்கீழ் விளக்கமாகச் சொல்லப்பட்டிருக்கிறது. நிலச்சுவான்தாருக்கும் விவசாயிக்கும் நூற்றுமுப்பத்தெட்டு வருஷங்களாக சச்சரவு இருப்பதால், விஷயம் வெகுஜாக்கிரதையாகக் கவனிக்கப்பட்டது. முக்கியமானவை இரண்டு விஷயங்கள்தான்.

(1) பூமிக்குச் சொந்தக்காரர் யார் ?

(2) விவசாயி நிலச்சுவான்தாருக்கு எந்த விதமாக தீர்வை தரவேண்டும் ?

இதைப்பற்றி, 1802-ம்ஸு முதல் இன்றுவரை வழக்குகள் இருந்துவருகின்றன. 1908-ம் வருஷத்தில் குடிகளுக்குத்தான் அனுபவ உரிமை இருக்கிறதென்று தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. அப்படியிருந்தும் நீர்ப்பாசன உரிமைகளைத் தடுப்பதாலும், மேய்ச்சல், தழை கழித்தல், விவசாயத்துக்கு மரம் வெட்டுதல் மற்றும் இவைப்போன்ற, நெடுங்காலமாக அனுபவிக்கப்பட்ட உரிமைகளைத் தடுத்ததினுல்தான் பூமிக்குச் சொந்தக்காரர் யார் என்று கேள்வி எழும்பியது. ஜமீந்தாருக்கு பூமியிலுள்ள உரிமையை முதல் அத்தியாயத்திலும், விவசாயிக்கு பூமியிலுள்ள உரிமையை இரண்டாவது அத்தியாயத்திலும் சொல்லியிருக்கிறது.

பொருளடக்கம்.

1-ம் அத்தியாயம்—ஜமீந்தார்—நிலத்துக்கு சொந்தக்காரரா அல்லது நிலத்தீர்வை தரப்பட்டவரா ?

முதல் அத்தியாயத்தை மூன்று பாகமாகப் பிரிக்கலாம்:—

(1) நிலச்சுவான்தாருக்கு பூமியிலுள்ள சொந்தம்.

(2) நிலச்சுவான்தாரின் வரி வசூலிக்கும் பொறுப்பு.

(3) சாசுவத செட்டில்மெண்டு ஏற்படுத்தப்பட்டதின் காரணம்.

எஸ்டேட் நிலச் சட்டப்படி ஜமீந்தார்கள், பாளையக்காரர்கள், ஹாவிலிஎஸ்டேட் சொந்தக்காரர்கள், ஜாகீர் தார்கள், சுரோத்திரியம்தாரர்கள், இனும்தாரர்கள் எல்லாரும் நிலத்துக்கு சொந்தக்காரர்களாவார்கள். இந்து, மகம்மதியர் அல்லது வேறுமத விஷயத்திற்காகவோ அல்லது தரும காரியத்திற்கோ விடப்பட்டது மட்டும்தான் இனுமல்ல. போலீஸ், ராணுவம் முதலிய தொழில்களுக்கும் இனும் தரப்பட்டது. சில பழைய ஜமீன்தாரர் களும், பாளையக்காரர்களும் இந்து அரசாங்கத்திலும், மகம்மதிய அரசாங்கத்திலும் சொத்துக்களை தங்கள் சொந்த உரிமையில் அனுபவித்தார்கள். ஆனுல் அவைகளின் தன்மை இந்து அரசர்களுக்குப்பின் மகம்மதிய அரசர்களிடம் மாறி அதற்குப்பின் ஆங்கில அரசாட்சியிலும் மாற்றப்பட்டது. இவர்கள் சர்க்காருக்கு ஏஜண்டு களாகவும், வரி வசூலிப்பவர்களாகவும் ஆகிவிட்டார்கள். 45 சென்னை, 586 பிரிவி கவுன்சில் தீர்ப்பிலும் 1802-ம்ஸுத்து 25-வது சாசுவத செட்டில்மெண்டு ரெகுலேஷனிலும் முப்பதாவது பட்டாவின் ரெகு லேஷனிலும் 1908-ம்ஸுத்து எஸ்டேட் நிலச் சட்டத்திலும் மேற்கூறியபடியே சொல்லியிருக்கிறது. முதல் இரண்டு அத்தியாயங்களில் சர்க்கார் பிரதேசத்திலுள்ள சில ஜமீந்தாரிகளையும், மேற்கிலும் தெற்கிலும் உள்ள பாளையங்களையும் விசாரித்து நிலத்துக்குடையவருடைய நிலைமையும் அவர்களுக்கு பூமியிலுள்ள உரிமையையும் சொல்லியிருக்கிறோம். பல ஜில்லா மான்யுவல்களிலும் தீர்ப்புகளிலும் ஜமீன்தார்கள் பூமிக்கு சொந்தமல்லாத வரி வசூலிப்பவர்களென்று சொல்லியிருக்கிறது. மனுச் சட்டப்படி பயிரிடப்படும் நிலம் எவர் காட்டை அழித்து பயிரிட்டார்களோ அவருக்குச் சொந்தமானது. இந்து அரசர்கள், ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு துண்டு நிலத்தில் சொந்தமிருப்பதாக அங்கீகாரம் செய்யவில்லை. ஒரு கிராமத்தாரையே, ஒரு அரசாங்க அங்கமாக, பூமிக்கு உரியவர் என்று அவ்வரசர்கள் அங்கீகரித்தார்கள். ஆகையால் இந்து அரசர் கள் பூமியிற் சொந்தம் கொண்டாடவில்லை.

கிராம ஐக்கியத்தைப்பற்றி " சர். ஹென்றி மெயின் " ஆழ்ந்த ஆராய்ச்சிக்குப் பின்பு எழுதிய புத்தகத்தில் ஒவ்வொரு கிராமத்தானும் தனக்கு நிலத்தில் உரிமை இருக்கிறதென்று பாடுபடுகிறுன் என்று சொல்லியிருக்கிறுர்.

1800-ம் வருஷத்தில் பிரபலமான சில கலெக்டர்களும் ரெவினியு போர்டு மெம்பர்களும் சர்க்கார் பிர தேசத்திலும் மேற்கு, தெற்கு பாளையங்களிலும் நிரந்தரத் தீர்வை வேலைகளில் உழைத்தார்கள். லஷ்ஷிங்டன் என்பவர், தொன்றுதொட்டு பூமிக்குரியவர் விவசாயி என்று சொல்லியிருக்கிறார். முகம்மதிய அரசர்களால் கொள்ளையடிக்கப்பட்ட காலத்திலும், மகம்மதிய சட்டம் இந்து சட்டத்தில் புகுந்தபோதும் குழப்பம் ஏற்பட்ட போதும் விவசாயி தன் உரிமையை அது பறிக்கவில்லை. மிராசு விஷயமாகவுள்ள குறிப்புகளில் எவர் முதலில் நிலத்தை உழுது பயிரிட்டாரோ அவர் சர்க்காருக்கு ஒரு பகுதி தரும்வரையில் உரிமையுள்ளவர் என்றுசொல்லியிருக்கிறது. திண்டுக்கல் கலெக்டரான ஹார்டிஸ் என்பவர் 1808-ம்வருஷம் மார்ச்சுமீ 28உயில் நாட்டாமைக்காரர்கள் தாங்கள்தான் நிலத்துக்குச் சொந்தக்காரர் என்று சொல்லியிருக்கிறார்கள் என்றுள்ளார்.

ஹாடக்ஸன் அவர்கள், ஜமீந்தார்களோ மற்ற நிலத்துக்குடையவர்களோ தங்கள் இஷ்டப்படியோ சட்டப் படியோ வழக்கப்படியோ பாத்தியதைபடியோ வரி உயர்த்துவதற்கு உரிமை இல்லை என்றும், உழவான நிலத்தில் பெர்மனென்ட் செட்டில்மெண்டில் குறிப்பிட்ட வரியைக் கொடுத்துவிட்டு விவசாயிகள் பூமிக்கு உரிமையுடையவர் என்று சொல்லியிருக்கிறார். அதனால், சர்க்காரோ அல்லது ஜமீந்தாரோ எப்பொழுதும் காலாகாலமாக நிலத்திற்கு சொந்தக்காரர் இல்லையென்று அவர் தீர்மானித்திருக்கிறார்.

பூமியிலுள்ள மிராசு உரிமையைப்பற்றி 1815-ம் வருஷத்தில் ஒரு ஆராய்ச்சி ஏற்பட்டது. சர்க்காருக் கும், ஜமீன்தார்களுக்கும் எதிராக விவசாயிக்கு பூமியில் உரிமை இருப்பதாக ஏராளமான சாட்சியம் கிடைத்தது. விவசாயிகளுக்கு, தொன்றுதொட்டு நிலங்களை விற்கவும் பாகம் பிரிக்கவும் தங்கள் இஷ்டப்படி வில்லங்கம் செய்யவும் உரிமையிருப்பதாக, சில ஜமீன்தார்களே இவர்களிடம் நிலத்தை வாங்கி சொந்தமாக அனுபவித்ததாகத்தெரிகிறது.

ஔரங்கசீப், கொண்டி, பாளன் முதலிய இடங்களில் நிலத்தை வாங்கினதிலிருந்து விவசாயிகளுக்கு நிலத்தில் உரிமையிருப்பது ருஜுவாகிறதென்று நீதிபதி பீல்ட் தன் "நில உரிமை" என்னும் புத்தகத்தில் எழுதியிருக்கிறார். அக்பர் தன் கோட்டைக்கை அக்பராபாதிலும், இலகாபாத்திலும் நிலம் வாங்கியிருக்கிறார். ஷாஜஹான் விவசாயிகளிடமிருந்து ஷாஜஹான்பாத்தை வாங்கியிருக்கிறார். பீல்ட் சொல்லும்படி முகம் மதியர் சட்டத்தில் அரசர்க்கு தீர்வை வாங்கத்தான் உரிமை இருக்கிறதென்றும், நிலத்தில் உரிமையில்லை யென்றும் ஏற்படுகிறது. இதனால் ஜமீன்தார்களுக்கு நில உரிமை எவ்விதம் ஏற்படும் ?

சென்னை எஸ்டேட் நில மசோதாவை பிரரேபித்த கனம் போர்பஸ் அவர்கள் பெர்மனன்ட் செட்டில் மெண்டபடி ஜமீன்தாருக்கு சட்டரீதியாக பொது வரியை வசூலிக்கக் கொடுத்தவருடைய உரிமையைவிட அதிகமாகாது என்று சொல்லியிருக்கிறார். இக்காரணங்களால் நிலத்துக்குடையவர் வரி வசூலிப்பவரே தவிர நிலத்தில் அனுபவமாவது சொந்த உரிமையாவது கிடையாது. சர்கூட் கமிட்டியால் 1802-ம் வருஷத்திற்கு முன் 44 வருஷங்களாக நிலத்துக்குடையவரின் வரி வசூலிக்கும் பொறுப்பைப்பற்றி கூறி யிருக்கின்றனர். அதைப்பற்றி அவர்கள் இந்திய சரித்திரத்தில் திருப்திகரமாகச் சொல்லவில்லை. 1802-ம் வருஷத்தில் பெர்மனெனட் ஸெட்டில்மெண்ட் ஏற்படுத்தவேண்டிய அவசியத்தின் காரணத்தை அவர்கள் கீழ்க்கண்ட சந்தர்ப்பங்களால் முடிவு செய்தனர் :—

(1) சோம்பேரித்தனத்தாலும், பேராசையாலும் நிலத்துக்குடையவர்கள் கொடுமையாய் குத்தகைத் தாரர்களுக்கு விவசாயிகளைவிற்றனர்.

(2) தம் இஷ்டத்திற்கென்று இல்லாமல் அவசியத்திற்காகவே விவசாயம் தாழ்மையான நிலைமை யில் ஏற்கப்பட்டது.

(3) அருகாமையிலுள்ள காடுகளும், ஊர்களும் ஆபத்தான இடங்களாய் இராவிட்டால், விவசாயிகள், மாற்ற முடியாத கேவலமான நிலைக்கு விவசாயம் வந்துவிட்டால், ஓடியிருப்பார்கள்.

(4) சர்க்காருடைய கஜானாவிற்கு விவசாயிகள் பங்கு கொடுத்தபோதிலும் அதற்குப் பயனாக அவர்களுக்கு பாதுகாப்பும் நிலவிர்த்தியும் செய்யவில்லை.

(5) கஷ்டப்படுபவர்களின் மனுக்களை விசாரிக்கும் குத்தகைதாரர்களுக்கு கிராமக் கணக்கர்கள் உடந் தையாயிருந்தார்கள்.

(6) நிலத்துக்குடையவர்கள் நிலங்களுக்கு தாராளமாக மானியம், மொகாசா, தராஸ் முதலிய வில்லங் கங்கள் செய்தார்கள்.

(7) கிராமங்கள் பாவிகளின் குகைகளாகி, விவசாயிகளுக்கு உயிர் வாழவே நிலையில்லாமலிருந்தது.

(8) அரசர்களுடைய நண்பர்கள் வருவாயில் ஆறில் ஒருபங்கு எடுத்துக்கொண்டு விவசாயிகளுக்கு, பதிலாக ஒன்றும் தருவதில்லை.

(9) கிராமத் தலைவர்களுக்கு ஒரு குத்தகைக்கு நீண்ட நாளைக்கு ஜமீந்தார்கள் நிலத்தைவிட ஆரம்பித் தார்கள்.

(10) குத்தகைதாரர்களும், நிலத்துக்குடையவர்கள் ஏஜெண்டுகளும் லாபத்தை மறைத்து ரயத்து களை தீர்வை கட்டும்படி செய்தனர்.

(11) இதனால் ஜமீன்தார்கள் தங்கள் உரிமைகளை இழந்தார்கள். குடிகளும் ஜமீந்தாருக்கு பரம்பரை உரிமை இல்லையென்று நம்பினார்கள். அதனால் குத்தகைதாரர்களுடைய கொடுமையை அடக்க முடியவில்லை.

இதனால் சர்கூட் கமிட்டியார் ஜமீந்தாரியை அழித்துவிட்டு கம்பெனியாருக்கு ஒரு கோடி ரூபாய் வரும்படியான ரயத்துவாரி முறையை அனுசரிக்கும்படி கோர்ட் ஆப் டைரக்டர்களுக்கு சொன்னார்கள். இப்படி ஜமீந்தார்களின் அதிகாரத்தைக் குறைப்பது அவர் கையில் தீர்வை வசூலிக்கும் அதிகாரம் இருக்கும் வரையில் ஆபத்து என்று தள்ளிவிட்டார்கள். கட்டாயத்தாலன்றி ஜமீந்தார்களை அப்புறப்படுத்துவது அவர் களுக்கு கஷ்டமாயிருந்தது. ஒவ்வொரு ஜமீந்தாருடைய ராணுவத்தையும், போலீஸையும் கலைத்து கத்தி முனையில் தங்கள் இஷ்டத்துக்கு ஒத்துக்கொள்ளும்வரை ராணுவத்தை ஒவ்வொரு ஸ்தானத்தில் பெருக்கும்படி கம்பெனியாருக்கு புத்தி கூறப்பட்டது. ஒவ்வொரு விவசாயியும் எப்படி அநியாயமுறையில் அதிக வரி வசூலிக்கப்பட்ட கொடுமையால் தங்கள் ஜில்லாக்களைவிட்டு வேறு தேசங்களுக்கு ஓடிவிட தீர்மானித்தார்கள் என்று கமிட்டியார் கூறியிருக்கின்றனர்.

சர்க்கார் பிரதேசத்தில் ஐம்பது லக்ஷ ரூபாய் ஜமாபந்தியில் ஜமீந்தாருக்கு 10 சதம் விகிதம் ஐந்து லக்ஷ ரூபாய் தரப்பட்டது. இதர விதமாகக் கொடுமைசெய்து ஐந்து லக்ஷத்து நாற்பதனாயிரம் வசூலிக்கப் பட்டது. இவ்விதமாக ஐம்பது லக்ஷ ரூபாய் ஜமாபந்தியில் பத்து லக்ஷத்து நாற்பதனாயிரம் வசூலிக்கப் பட்டது. இந்தக் கட்டுரையின் பின்னால் இப்போதுள்ள நிலைமையை மேற்கூறியவற்றோடு ஒத்துப்பார்ப்போம்.

சர்கூட் கமிட்டியாரின் சிபார்சுகள்.

உத்தியோக நடமுறையையும் ரெவினியு முறையையும் வரி முறையையும் திருத்தி அமைக்குமாறு சர்கூட் கமிட்டியார் சிபார்சு செய்தனர். பத்து லக்ஷ ரூபாய்க்கு ஒரு ஜில்லாவாகவும் இரண்டு லக்ஷ ரூபாய்க்கு ஒரு சப்-டிவிஷனாகவும் தேசத்தை பிரிக்குமாறு கம்பெனியாருக்கு புத்தி கூறினர். கமிஷன் முறையை எடுத்துவிட்டு ரெவினியு உத்தியோகஸ்தர்களுக்கு சம்பளம் உயர்த்தவேண்டுமென்றனர். வரி வசூலிப்பதில் பழைய முறையை அதாவது மதிப்புத் திட்டத்தை பின்பற்ற வேண்டுமென்றனர். தக்க பாதுகாப்பால் மாசூலே களவு போகாமலோ வீணுகாமலோ குறையாமலோ பாதுகாத்தால் பொருளாகவே வரி வசூலிப்பது நலமென்றனர். தகுந்த காலம் கொடுத்து மாசூல் விற்றபின் பணமாகவும் வசூலிக்கலாமென்றனர். உயரிய வட்டி இருப்பதாகக் கூறினுர்கள். ஆங்கிலேயர்களுக்கு அதிகத் தொந்தரவு கொடுத்த மகம் மதியர்களை வேறு வழியில் விருத்தியாகாமல் தடுக்க சிப்பாய்களாகச் செய்யும்படி கிழக்கிந்திய கம்பெனி யாருக்கு சிபார்சு செய்தனர். தங்கள் அரசை இழந்த இந்துக்களை பொறுமைசாலிகளென்று நம்பினர்.

வங்காளத்திலிள்ள நிரந்தரத்தீர்வை முறையை சென்னை ராஜதானியிலும் புகுத்த கோர்ட்ஆப் டைரக்டர்கள் தீர்மானித்தார்கள். ஐந்தாவது அறிக்கையின் இருபத்தொன்பது பிரிவுகளும் முதல் அத்தியாயத்திலிருக் கின்றன. அவைகள்தான் இருபத்தைந்தாவது பெர்மனண்ட் செட்டில்மெண்ட் ரெகுலேஷனிலும் மற்ற ரெகுலேஷனிலும் உள்ளன. விவசாயிகளின் விடுதலைக்கென்றும் தொழிலாளர், வியாபாரிகள் நன்மைக் கென்றும் இது ஏற்பட்டதாகச் சொன்னுர்கள். வரியை நிரந்தரமாக எக்காலத்துக்கும் ஏற்படுத்துவதாகவும் கூறினுர்கள். இதனுல் விவசாயிகள் நன்மையடையக்கூடும் என்றனர்.

2-ம் அத்தியாயம்—விவசாயி—வாரம் நிர்ணயமான தீர்வை.

இந்த அத்தியாயத்தில் விவசாயியின் நிலை ஆரம்பத்திலிருந்து வளர்ந்து விருத்தியாகி இப்போதுள்ள நிலமையைப்பற்றியும் அவர்களுக்கு பூமியினுள்ள உரிமையைப்பற்றியும் கூறியிருக்கிறது. கூட்டுப் பண்ணை யின் முறையையும் அவர்களுக்கு பூமியினுள்ள உரிமை, அதிகாரத்தையும் சொல்லியிருக்கிறது. முதலில் ஒரு கிராமக் கூட்டத்தார் பூராக்கிராமத்திலும் அதன் சொத்திலும் அதிகாரம் செலுத்தினர். இந்தக் கூட்டத்தார் கணக்குப் பிள்ளை அல்லது அவருக்குப் பதிலாக ஒருவரைக் கொண்டு ஒரு கட்டாக கிராமத்தார் பெயரில் விற்கவும் வில்லங்கம் செய்யவும் தரும காரியங்களை நடத்திவரவும் மதாசார விஷயங்களில் பாதுகாக்கவும் அப்பணத்தை வட்டிக்கு விட்டு மதச் சொத்துக்களை காப்பாற்றியும் வந்தனர். சிலசமயங்கள் வரியின்றி அரசர்க்கு பாதிக்காமல் நிலத்தையும் கொடுத்து வந்தனர். இச்சரித்திரம் பழைய காலத்து கல்வெட்டுகளிலிருந்து கிடைத்திருக்கின்றது. கிராமக் கூட்டுப்பண்ணை நிலத்துக்குச் சொந்தக்காரர்களாயிருந்தா ரென்னும் உண்மையை எவராலுல் மறுக்கமுடியாது. இக்கூட்டுப் பண்ணைதான் கிராமப் பஞ்சாயத்தாக மாறி தனி குடியரசாகக் கருதப்பட்டது. இக்கூட்டுப் பண்ணையை உடைத்துத்தான் 1802-வது வருஷத்து பெர்மனண்ட் செட்டில்மெண்ட்படி ரயத்துவாரி, ஜமீன்தாரி, இனும் முதலிய முறைகள் ஏற்படுத்தப்பட்டன. மெயின் சொன்னதைப்போலவே விலிங்கியும் கிராமத்தாருக்குத்தான் நிலத்தில் சொந்தமிருக்கிறது என்று சொல்லியிருக்கிருர். ராயல் கமிஷனும் இதை அங்கீகரித் திருக்கின்றனர். போலன் அவர்களும் அப்படியே கூறியிருக்கிருர். ஐந்தாவது ரிப்போர்ட்டில் கீழ்கண்டவாறு சொல்லியிருக்கிறது. தொன்று தொட்டு இருந்த முறையிலேயே கிராமத்தார்கள் இருந்து வருகிருர்கள். ஒவ்வொரு கிராமமும் தனி அரசாங்கமாக இருக்கிறது. சர்க்கார் மாறுதல்களைக் கவனியாமல் விவசாயிகள் தங்கள் வேலையை கவனித்து வருகின்றனர். ஏரில் மாடுகளைப்பூட்டி அதன் வழியே போகின்றனர். அருகில், உள்ள ஓடையிலோ குளத் திலோ ஜலம் கொண்டுவருகின்றனர். அதற்கு சண்டையும் இடுகின்றனர். விதையை விதைத்து நடவுநட்டு அறுவடைசெய்து வந்தனர். முறையாகவும் ஒழுங்காகவும் குடும்பங்கள் நடைபெற்றன. கிராமத்தலைவர்கள் வரியைக்கொடுத்து அமைதியோடு இருந்தனர். ஜமீன்தார் வீட்டின் விசேஷத்தாலோ அல்லது சேவகர்களின் அதிக வரி வேண்டுகோளாலோ பணம் கேட்கப்பட்டபோது சிறிதுகஷ்டமடைந்தனர்.

இந்தியாவிலுள்ள விவசாயி இங்கிலாந்திலுள்ள விவசாயி, அல்லது நிலத்துக்குடையவர்போலல்லர் என்று சர். தாமஸ் மன்ரோ கூறியிருக்கிருர். சர்க்காரால் நிறுத்திக்கொண்டதுபோக மீதியெல்லாம் ரயத்து எடுத்துக் கொண்டார். ஒரு குறிப்பிட்ட வருஷங்களுக்கோ, இஷ்டத்திற்கோ ரயத்து குத்தகைதார ரல்ல. பிறர் அதிகம் தரவந்தால் ரயத்தை அப்புறப்படுத்த முடியாது. சர் தாமஸ் மன்ரோ சொன்னதை 1905-ல் சர்க்காரும் அங்கீகரித்து அதுபடியே எஸ்டேட் நில சட்ட மசோதாவைப்பற்றிப் பேசுகையில் ஜி. எஸ். போர்ப்ஸ் அவர்களும் கூறினுர்கள். 1890-ம௵ ஜனவரிமீ 5உயில் ரெவின்யூ போர்டாரும் நிலத்துக் குடையவருக்கு விவசாயி கட்டும் தீர்வை, சர்க்காருடைய கடனென்றும் குத்தகையல்லவென்றும் கூறியிருக்கின் றனர். இங்கிலாந்தில் நிலத்துக்குடையவருக்குக் கொடுக்கும் குத்தகைபோலல்ல என்றிருக்கிறது.

“பலே” அவர்களும் நிலத்திலுள்ள சொத்துரிமை ஏகபோகமாகத் தனக்குள்ள சொந்த அதிகாரத்தைக் குறிப்பதென்ருர். 5-வது அறிக்கையிலும் மற்ற எல்லாப் புத்தகங்களிலும் இது அங்கீகரிக்கப்பட்டிருக்கிறது. இப்போதுள்ள நிலத்துக்குடையவர்களும், விவசாயிக்கு அனுபவ பாத்தியதையுண்டென்றும் ஆனுல் ஆரம் பத்தில் நிலத்துக்குச் சொந்தக்காரரில்லையென்றும் அம்மாதிரி ஹோதாவில் தொடரவில்லையென்றும், சர்க் காருக்கு நிலவரிமட்டும் கட்டவேண்டிய உரிமையோடு நிற்கவில்லை யென்றும் சொல்லுகின்றனர்.

முதற் கேள்விக்கு எங்கள் தீர்மானம் பின்வருவன :—

(a) விவசாயிதான் நிலத்துக்கு சொந்தக்காரர். ஜமீன்தார் நிலத்துக்குச் சொந்தக்காரரல்ல.

(b) விவசாயியின் நிலத்துக்குள்ள உரிமை, பூமியினுள்ள சொந்தத்தை அனுபவத்தில் வைத்திருக் கவும், விற்கவும், அடமானம் செய்யவும் மற்ற தனக்கு இஷ்டப்படி வில்லங்கம் செய்யவும் உண்டு.

(c) சாதாரணமாக அனுபவ பாத்தியதை என்றுல் பொருள் கொள்ளத்தக்க உரிமைமட்டும்தான் விவசாயிக்கு இருப்பதாக கொள்ளக்கூடாது. நிலத்திலுள்ள உரிமை, பூமிக்கும், பூமி சாரத் திற்கும், அதன் கீழுள்ள சுரங்கங்களுக்கும், காட்டு மாசூலுக்கும், மற்ற இதர உரிமைகளுக்கும் விவசாயிக்கு உண்டு. இதனுல் இயற்கையான எல்லாவித உறிமைகளையும் விவசாயி அனுபவிக்க லாம். நீர்ப்பாசன வேலைகளிலும், ஆறுகளிலும், கால்வாய் முதலிய விவசாயியின் நிலத்தருகே யுள்ள மற்றவற்றிலும் அவருக்கு சொந்த உரிமையுண்டு. அவற்றிலுள்ள நீரை, சர்க்காருக்குத் தரவேண்டிய கிஸ்த்தைக் கட்டிவிட்டு எடுத்துக்கொள்ளவும் கூடும்.

3-ம், 4-ம், 5-ம் அத்தியாயங்கள்—பட்டா ரெகுலேஷன், பெர்மனெண்ட் செட்டில்மெண்டு ரெகுலேஷன்—கர்ணம் ரெகுலேஷன்.

பெர்மனெண்ட் செட்டில்மெண்டு ரெகுலேஷனுக்கு முன் விவசாயி பூமிக்குச் சொந்தக்காரரென்றும், நிலத்துக்குடையவர் வரி வசூலிப்பவரென்றும் தீர்மானித்த பிறகு, 1802-ம்ஹூ்த்துச் சட்டங்களுக்குப் பின்னர் இவர்களின் உரிமை பாதிக்கப்பட்டதா என்பதைக் கவனிக்க பெர்மனெண்ட் செட்டில்மெண்ட் ரெகுலேஷன் 25, பட்டா ரெகுலேஷன் 30, மற்றும் 1802-ம்ஹூ ஜூலைமீ 13உயில் ஏற்பட்ட சட்டங்களைக் கவனிப்போம். பர்மனெண்ட் செட்டில்மெண்ட் ரெகுலேஷன், பட்டா ரெகுலேஷன், கர்ணம் ரெகுலேஷன், 1802-ம் ஹூ்த்து 27, 28, 31-வது ரெகுலேஷன்கள் 1868-ம்ஹூ்த்து 8-ம் வரி வசூலிக்கும் சட்டம் வரும்வரை அமுலிலிருந்தது. வரி வசூலிக்கும் சட்டம் 1908-ம்ஹூ்த்து எஸ்டேட் நிலச் சட்டத்தால் ரத்து செய்யும்வரை இருந்தது. இச்சட்டம் திருத்தங்களாகி இன்றுவரை இருக்கிறது. இதைப்பற்றித்தான் 3 முதல் 12 அத்தியாயங்கள் வரையில் கவனிக்கப்பட்டிருக்கிறது.

3, 4, 5 அத்தியாயங்களில் நாம் கவனித்திருக்கும் நிரந்தரத் தீர்வை, பட்டா, கர்ணம் ரெகுலேஷன் களைக்கொண்டு சுருக்கமாக எப்படி 1802-ம் ஹூ்த்து ரெகுலேஷன்களால் விவசாயி நிலத்துக்குடையவர், ரயத்துமுதலியவரின் உரிமை உறுதி செய்யப்பட்டது என்பதைக் காண்போம். அவைகள் நிலத்துக்குடையவர் வரிவசூலிப்பவரென்றும் விவசாயிக்கு நிலத்தில் சொந்த உரிமை இருக்கிறதென்றும் அவர்கள் வரியை உயர்த்த அதிகாரமில்லையென்றும், அவர்கள் வரியைக் கட்டிவருமட்டும் அப்புறப்படுத்தவும் கூடாதென்றும் விளக்கமாக கூறியிருக்கின்றன :—

> 1802-ம் வருஷத்து 27, 28-வது ரெகுலேஷன்களுடன் பெர்மனெண்ட் ரெகுலேஷன் 25, பட்டா ரெகுலேஷன் 30 முதலியன விவசாய நிலத்துக்குடையவர் இருவரின் உரிமைகளையும் பொறுப்பையும் என்றைக்கும் ஏற்படுத்திவிட்டன. பர்மனெண்ட் செட்டில்மெண்டின் அபிப்பிராயம், நிலத்துக்குடையவர் சர்க்காருக்குத் தரவேண்டிய பேஷ்கஷ்ஷைமட்டும் நிர்ணயித்துவிட்டு விவசாயியைக் கெடுக்க நிலத்துக்குடையவருக்கு விட்டுவிடவில்லை. சர்க்காருக்குத் தரவேண்டிய தீர்வையைச் செலுத்திவிட்டு தனக்காகவும் தன் குடும்பத்துக்காகவும் தேசத்தின் கைத்தொழில், வியாபாரம், விவசாயம் அபிவிருத்திக்கும், நிலத்தை விருத்தி செய்து வாழ பாதுகாப்பு அளித்திருக்கிறது. இப்படியிருக்கையில் நிலத்துக்குடையவர்கள் இன்றுவரையில் விவசாயி தன் அனுபவ பாத்தியதைத் தவிர மற்றவற்றில் போராடி வருகின்றனர். அவர்கள் இன்று 1802-ம் வருஷத்து சட்டங்கள் விவசாயியின் நன்மைக்கல்ல என்கிறார்கள். விவசாயி பூமிக்கு சொந்தக்காரர் அல்லவென்றும் தாங்கள் வரியை உயர்த்தலாமென்றும் கூறுகின்றனர். தீர்வை நிரந்தரமாக ஏற்படவில்லை என்கின்றனர். பர்மனெண்ட் செட்டில்மெண்ட் ரெகுலேஷன், பட்டா ரெகுலேஷன் ஆகிய, இவைகளில் ஒவ்வொன்றிலும் பதினைந்து பிரிவுகளிருக்கின்றன. இவ்விரண்டிலும் என்றைக்கும், நிரந்தர அனுபோக உரிமையும், நிரந்தரத் தீர்வையும் குறிக்கப்பட்டிருக்கிறது.

பர்மனெண்ட் ஸெட்டில்மெண்ட் ரெகுலேஷனின் முக்கிய காரணமானது விவசாயிகளின் விடுதலைக்கும் அதனால் கைத்தொழில், வியாபாரம் விருத்தியாகி தேசம் நன்மையடைய வேண்டுமென்பது. அதனால் தீர்வையை நிர்ணயித்து விவசாயிக்குப் போதுமான வரும்படியை உண்டுபண்ணி தேசம் முன்னேற்றம் அடையலாமென்பது இதன் சார்பாய் 1799-ல் கலெக்டருக்கு விடுத்துள்ள அறிக்கையில் 8-வது விதியில் கீழ்வருவன இருக்கிறது.

பொதுத் தீர்வையோடு, சர்க்காருடைய நோக்கம் ஒவ்வொருவருடைய உரிமையைத் தெரிவித்து அதைக் காப்பாற்றுவதாகும். இதற்கு விவசாயிகளின் உரிமையைக் காப்பாற்ற, அடிக்கடி வரி உயர்த்துவதிலிருந்தும் காப்பாற்றவேண்டும். வரி வசூலிப்பவர்களாலோ மற்றவர்களாலோ, கஷ்டப்படுத்தப்படாமல் இருக்க வேண்டும். அப்பொழுதுதான் வியாபாரம் முன்னேறும். அதனால் அமைதியையும், பாதுகாப்பையும் நிறுவ சர்க்கார் பொறுப்பு ஏற்றுக்கொள்ளவேண்டும்.

எட்டாவது விதியில் இருப்பதை 10-வது விதி பலப்படுத்துகிறது என்று கோர்ட் ஆப் டைரக்டர்கள் சொல்லுகிறார்கள்.

நிரந்தரத் தீர்வை தேசத்தின் சக்திக்கு ஏற்றபடி பொருள் உண்டாக்கும் தன்மையைக்கொண்டது. சொத்திலுள்ள உரிமையையும் அதை அனுபவிக்கும் சுதந்தரமும் விவசாயத்தை விருத்திசெய்யும் கைத்தொழிலை பரவச்செய்யும். பொருளாதரத்தை வலுக்கச்செய்யும். தேச முன்னேற்றத்தையும் உண்டுபண்ணும். நல்லகாலத்திலுள்ள பலன் கெட்டகாலங்களில் தாங்கும். நிரந்தர தீர்வையால் ஏற்படும் பலன்கள் இவ்வாறு பலவாகும்.

கலெக்டருக்கு முக்கியமாகத் தரப்பட்ட திட்டம் 37-வது விதியில் இருக்கிறது.

இதுகாறும், நிலத்துக்குடையவர்களும், தாலுக்தாரர்களும் விவசாயிகளுடன் அடிக்கடி ஒப்பந்தங்கள் செய்துகொண்டு பலவிதமாக வரிவசூலித்து வந்தனர். இதனால் தகக பாதுகாப்பு இல்லாமல் விவசாயிகள் இன்னல்கள் பலவற்றால் தாழ்மையுற்றனர். விவசாயிகள் நன்மையடையவேண்டி ஜமீன்தார்கள் அவர்களுடன் கலந்து ஒரு நிரந்தரமாக தீர்வையை ஏற்படுத்தி இருசாரார்க்கும் நன்மை ஏற்படுத்திக்கொள்ளவேண்டும்.

1802-ம் வருஷத்து 25-வது திட்டம் 2-வது பிரிவுப்படி சன்னது தருவதற்குமுன் நிரந்தர வார உரிமையும் நிரந்தர வரியையும் கலெக்டர்களுக்கு விடுத்துள்ள அறிக்கைகளில் 32 முதல் 35-வது விதிகளில் கீழ் வருவன உளகாணகின்றன :—

விதி 32.—நிலத்தில் சொந்த உரிமை இல்லாவிட்டாலும் விவசாயிகளுக்கு, தாங்கள் பயிரிடும் நிலம் வரையில், வழக்கப்படி மாசூலாகவோ பணமாகவோ சர்க்காருக்கு ஒரு பகுதியைக் கொடுத்துவிட்டு நிலத்தில் தங்கள் அனுபவ பாத்தியதை உண்டென்பது விளக்கமானது.

விதி 33.—சர்க்காருடைய வருமானத்தைத் தீர்மானிக்க விதிகள் ஏற்படுத்தப்பட்டிருக்கின் கோர்ட்டுகள் இவைகளை முறைப்படி கவனிக்கவேண்டும். நிலத்துக்குடையவருக்கும் விவசாயிக்கும் அல்லது விவசாயிக்கும் குத்தகைத்தாரர்களுக்கும் சந்தேகங்கள் ஏற்படாதபடி தீர்வை இவ்வளவுதானென்று பட்டா மூலம் ஏற்படுத்திக்கொள்ளவேண்டும். தீர்வை மாசூலில் பகுதியானால் அதை எப்படித் தீர்மானிப்பது என்பதையும் முடிவு செய்துகொள்ளவேண்டும்.

விதி 34.—ஜமீன்தார்களும், தாலூக்காரர்களும், நிலத்துக்குடையவர்களும் தங்களுக்குள்ள வழக்கப்படி பட்டா தயார்செய்து கலெக்டர் அனுமதி பெற்ற ரயத்துகளுக்குத் தரவேண்டும். மற்ற பட்டாக்கள் செல்லா.

நாற்பத்தொன்பதாவது விதியில் நிரந்தரத் தீர்வை விதிப்பதைப்பற்றிக் கூறப்பட்டிருக்கிறது.

விதி 49.—இதன்படி கிராமக்கணக்கர் அல்லது பட்டாவாரிகள் தவிர மற்ற எல்லா ரெவினியு அதிகாரிகளும் எடுத்துவிடப்பட்டனர். வங்காள ரெகுலேஷன் இவர்களுடைய வேலைகளைப்பற்றிக்கூறும் :—

(1) ஒவ்வொரு ஜமீன்தாரியிலும் வரும் வருமானத்திலிருந்து நிரந்தர ஜம்மா தீர்மானிக்கப்படும்.

(2) விளையும் மாசூலைப்பார்த்து வருஷ வருமானம் தீர்மானிக்கப்பட்டது. அதில் ஒரு பகுதி பேஷ்ஷாகக் கொள்ளப்படும், மற்றவை ஜமீன்தாருக்குச் சேரும்

(3) நிலம் நீர்ப்பாசனத்தால் பாய்ச்சப்பெற்ருல் எவ்வளவு ஜலம் பாயப்பட்டதென்று கணக்கிடப்படும். பிறகு விவசாய விருத்திக்கு வேண்டிய ஜலம் எவ்வளவென்று கணக்கிடப்படும். கரம்பு, வீட்டுத் தோட்டங்கள், ஏரிகள், கால்வாய்கள் மற்ற சன்னதில் கூறப்படாதவைகள் எல்லாம் கணக்கில் எடுக்கப்படும்.

(4) 25-வது ரெகுலேஷன் 4-வது பிரிவில் சொல்லியுள்ள தீர்வை விலக்கப்பட்டதும் அல்லது சாதகமான குவிட் ரெண்ட் விதிக்கப்பட்டதும் நிரந்தர நிலத்தீர்வையிலிருந்து விலக்கப்படும்.

கிராம உத்தியோகஸ்தர்களை எடுத்துவிட்டு. அவர்களுக்கு விடப்பட்ட நிலங்கள் திரும்பி பெறப்பட்டன.. நியாயமான வரி விதித்ததால் வெள்ளம் பஞ்சம் அல்லது கெட்டபருவம் முதலியவற்றிற்கு வரி குறைக்கப்படவில்லை. நிர்ணயமாக விதிக்கும்போது இவைகளெல்லாம் கவனிக்கப்பட்டன. சன்னது தரும் முன், வரி நிர்ணயிக்க, முறைகளை 2, 3, 4 பிரிவுகளில் சொல்லியிருக்கிறது. உரிமையும் வரியும் ஏற்பட்டு சன்னது தரும் வரையில் நிலத்துக்குடையவருக்கோ, விவசாயிக்கோ உரிமையும் பொறுப்பும் தரப்படவில்லை. நிலத்துக்குடையவருக்கு வரியும் உரிமையும் ஏற்பட்ட பின்புதான் நிரந்தர பேஷ்கஷ் கட்டவேண்டிய பாத்தியதை ஏற்பட்டது. நிலத்தீர்வை பூராவும் வசூலித்து சர்காருக்கு அதில் ஒரு பகுதியைத் தரும் மேல்வார உரிமை (நிலத்துக்குடையவர்) ஆயிரத்து எண்ணூற்று இரண்டாம் வருஷத்தில் 30-வது பட்டா ரெகுலேஷன் 7, 9 பிரிவுகளுக்குக் கட்டுப்பட்டதாகும். நிலத்திலுள்ள சொந்த உரிமையென்பது விவசாயிகளிடமிருந்து வரியை வசூலித்து சர்க்காருக்கு பேஷ்கஷ் கட்டிவிட்டு மிகுதியை அனுபவிப்பதே. விவசாயிகளின் உரிமையின் பொறுப்பையும், 1802-ம் வருஷதது 30-வது பட்டா ரெகுலேஷனில் சொல்லியிருக்கிறது. இதன்படி வரி நிர்ணயித்திருக்கிறது. ஏதாவது வழக்கு ஏற்பட்டால் கோர்ட்டார் விசாரித்து பர்மணன்ட் ஸெட்டில்மெண்ட் முந்திய வருஷத்து வரியை ஏற்படுத்தவேண்டும். பட்டா, ரயத்துகளுக்கு உரிமை தஸ்தாவேஜாகும். பட்டாவில் உரிமையும், வரியும் இல்லாவிட்டால் செல்லாது. நிலத்துக்குடையவர் பட்டா கொடுத்து முச்சிலிக்கை வாங்கிக்கொள்ளவேண்டும். அதில் என்றைக்கும் வரியை மாருதபடி தீர்மானித்திருக்கவேண்டும். அப்பொழுதுதான் நிலத்துக்குடையவருடைய சன்னது செல்லும். இல்லாவிட்டால் அபராதமும் கிரிமினல் வழக்கும் ஏற்படும். 1802-ம் வருஷத்து 25, 30-வது ரெகுலேஷன்களால் ஏற்பட்ட பலன் :—

(1) சாசுவத செட்டில்மென்ட் ஏற்பட்டபோது பயிரான நிலத்திற்கு நிலத்தீர்வை நிரந்தரமாக்கப்பட்டது.

(2) பயிரிடப்படக்கூடிய கரம்பை நிலத்திற்கு சாசுவத ஸெட்டில்மெண்ட் ஏற்பட்டபோது பயிரான நிலத்திற்கு விதித்திருக்கும் வரியைவிட் அதிகமாக விதிக்கக்கூடாது.

கலெக்டருக்கு விடுத்த அறிக்கைகளிலும், விற்பனைப் பிரசுரங்களிலும், பிரத்தியேக அறிக்கைகளிலும் பட்டா முச்சிலிக்கை, சன்னத், கபூலியத் முதலியவற்றிலுள்ள ஏற்பாட்டின்படியும் நிலத்துக்குடையவர் கிஸ்தை உயர்த்துவதற்கில்லை.

1802-ம் வருஷத்து 25, 30-வது ரெகுலேஷன்படி நிலத்துக்குடையவர், (1) விலை உயர்வாலும், (2) நிலத்துக்குடையவரால் செய்யப்பட்ட விருத்திகளாலும், (3) சர்க்காரால் செய்யப்பட்ட விருத்திகளாலும், (4) பூசாரத்தின் தன்மையாலும், (5) ஒப்பந்தத்தாலும், வரி உயர்த்துவதற்கில்லை. பர்மெணண்ட் ஸெட்டில்மெண்ட் என்பதே வரி உயர்த்தக்கூடாதென்பதாகும். இந்த இரண்டு ரெகுலேஷன்களும் நிரந்தரமாய் ஏற்பட்ட பூஸ்திதியிலுள்ள நிலத்துக்குடையவருக்கும் விவசாயிக்கும் உள்ள தொடர்பை ஒழுங்கு செய்வதாகும்.

இனும்தாராவது **சர்க்கார்** ஜிராயிதி நிலம் பயிரிடும் ரயத்தாவது 1802-ம் வருஷத்து ரெகுலேஷன் நிலத்துக்குடையவர் ஆகமாட்டார்கள். இனும்தார்களுக்கு என்று அதே தேதியில் 1902-ம்வருஷத்து 31-வது ரெகுலேஷன் செய்யப்பட்டது. 1902-ம் வருஷத்து 30-வது ரெகுலேஷன் 1865-ம் வருஷத்து வரி சட்டத்தால் ரத்து செய்யப்பட்டவரையில் இருந்தது. 1802-ம் வருஷத்து 25, 29-வது ரெகுலேஷன்கள் இன்னும் அமுலில் இருக்கின்றன.

நிரந்தர உரிமையும் வரியும் ஏற்பட்டபின்பு ரெவினியு அதிகாரிகள் குறைக்கப்பட்டனர். கர்ணம் ஒருவரே, சர்க்கார், நிலத்துக்குடையவர் விவசாயினர் இவர்கள் கணக்கை கவனித்துக்கொள்ளலாமென்று தீர்மானித்தனர். இதனுல்த்தான் கர்ணம் ரெகுலேஷன் ஏற்படுத்தப்பட்டு கர்ணங்கள் நிஷ்கரித்த வரியைக் காட்டும்படியாகவும் வருஷாவருஷம் விலையைக் காட்டும்படியாகவும் கணக்குப் புஸ்தகம் காப்பாற்றவேண்டி நிபந்தனை ஏற்பட்டது. வழக்குகள் ஏற்பட்டால் கணக்குப் புத்தகத்தில் உள்ள விலை சாட்சியமாகும். கர்ணம் சர்க்காருக்கோ, ஜமீன்தாருக்கோ வேலையாளல்ல. நிலத்துகுடையவரால் நியமிக்கப்பட்டாலும் அவரால் விலக்க முடியாது. கலெக்டருக்கும் கர்ணம்மேல் அதிகாரம் இல்லை. இவர்களுடைய கணக்குப் புத்தகங்களை நீதிபதிகள் சாட்சியமாககொண்டு வரியை நிர்ணயித்து விரைவில் தீர்ப்பு அளிப்பார்கள். உரிமையையும் வரியையும் காட்டும் தஸ்தாவேஜி இதுவாகும். ஆனுலும் நீண்ட காலத்தாலும், சட்டத்தை சரியாக உணராததாலும் கர்ணத்தின் வேலையையும் அதிகாரத்தையும் எல்லோரும் தப்பாக நினைத்து ஒருவருக்கும் உபயோகப்படக் கூடாத உத்தியோகஸ்தராய்விட்டார். நிலத்துக்குடையவர் அவரை விலக்க உரிமை உண்டு என்கிருர்கள். விவசாயிகளோ கர்ணங்களால் பிரயோஜனமில்லை என்கிருர்கள்.

இப்பொழுது விவசாயிகள் நிலத்துக்குடையவருக்குத் தரவேண்டியது பர்மெணண்ட் ஸெட்டில்மெண்ட் முந்திய வருஷத்தில் தீர்மானித்த வரியாதலால் கணக்கர்களுக்கு இப்பொழுது வேலையில்லை. ஆனுல் ஸெட்டில்மெண்டுக்கு முந்திய வரியைத் தீர்மானிக்க இனி ஏற்படுத்தப்போகும் ஸ்பெஷல் கமிஷனர்களின் கடமையாகும். அதனுல் நிலத்துக்குடையவரும் ரயத்தும் சமானமாக சம்பளம் கொடுத்து கர்ணங்கள் வேலையில்த் தொடரும்படி செய்யவேண்டும்.

6-ம், 7-ம் அத்தியாயங்கள்—வரி மசோதாவும், எஸ்டேட் நிலச்சட்டமும்—நிலத்தீர்வையின் உயர்வு.

1802-ம் வருஷத்து 25, 30-வது ரெகுலேஷன்படி பெர்மனெண்ட் ஸெட்டில்மெண்ட் முந்திய வருஷத்தில் நிர்ணயித்த வரியும் நிலத்திலுள்ள உரிமையும் தீர்மானமாயிருக்கச்செய்த சட்டம், 1865-ம் வருஷம் நில வரி வசூல் சட்டம் வரையில் இருந்தது. அப்போது 1802-ம் வருஷத்து 30-வது பட்டா ரெகுலேஷன் மட்டும் ரத்து செய்யப்பட்டது. ஏனென்றால் இது 1863-ம் வருஷத்து "ரெண்ட் ரெகவரி மசோதாவில்" சேர்க்கப்பட்டு 1865-ம் வருஷத்து 8-வது சட்டத்திலும் கீழ்க்கண்டவற்றிற்கும் பொருந்துமாறு இணைக்கப்பட்டது.

(1) அனுபவ ரயத்துக்கள்,

(2) அனுபவமில்லாத ரயத்துகள்,

(3) சர்க்கார் ரயத்துவாரி ரயத்துகள்,

(4) இனும்தாரர்கள்.

1802-ம் வருஷத்து 30-வது ரெகுலேஷன் 7, 9-வது பிரிவில் சேர்க்கப்பட்ட ரெண்ட் மசோதாவின் பத்தாவது பிரிவான நிபந்தனை இருந்திருக்குமாயின் இவ்வளவு குழப்பங்கள் ஏற்பட்டிருக்காது. ஆனால் மசோதா தயாராகி 1865-ம் வருஷத்து 8-ம் சட்டமாக இரண்டு வருஷங்களாயின. 30-வது பட்டா ரெகுலேஷன் 63-வது வருஷங்கள் இருந்தது. நிலத்துக்குடையவர்கள் வரியைப்பற்றியும் வாரத்தைப்பற்றியும் பட்டா ரெகுலேஷனும், பர்மனெண்ட் ரெகுலேஷனும் இருந்தும் சச்சரவு செய்துவந்தனர். பேஷ்கஷ்தான் மாறத்தகாதது என்றும் வரியை மாற்றமுடியுமென்றும் கூறினர். நீதிபதி காலட் அவர்கள் நிலத்துக்குடையவர்களுக்கு அனுகூலமாக வரி உயர்த்தக்கூடிய உரிமை இருப்பதாகத் தீர்மானஞ் செய்தவரையில் இவ் வழக்குத்தொடர்ந்துவந்தது. விவசாயிகளின் உரிமைகளை ஜாக்கிரதையாகப் பாதுகாத்துவந்த சர்க்கார் இந்தப் பிசகான தீர்ப்பைப்பார்த்து விவசாயிகளுக்கு நிரந்தர உரிமையும் நிரந்தர வரியும் ஏற்படுத்த வேண்டி ஒரு மசோதா தயார் செய்யும்படி ரெவினியு போர்டாரை வேண்டினர். 1863-ம் ஆண்டில் போர்டு நடவடிக்கை நெம்பர் 7743-ல் இவ்விஷயத்தை மீண்டும் தீரப்பரிசிலனை செய்து தீர்மானமான அறிக்கை வெளியிட்டனர். அதில், நிலத்துக்குடையவருக்கும் விவசாயிக்குமுள்ள உரிமைகளை மனு நாள் முதல் இன்று வரை ஆராய்ந்து வரியும் உரிமையும் நிரந்தர தீர்ப்புப்படி தீர்மானிக்கப்பட்டதென்றும், விவசாயியிடமிருந்து நிலத்தை உயர்ந்த குத்தகைக்கு வேறொருவருக்கு விடுவது, விவசாயியின் நியாய உரிமையைப் பறிப்பதாகுமென்றும் அந்தக் கொள்ளையில் ஒரு பகுதியை, புதுக் குத்தகைதாரருக்குப் பகிர்ந்து கொடுப்பதாகுமென்றும் வெளிப்படையாகக்கூறினர். இதைச் செலக்ட் கமிட்டியார் மனப்பூர்வமாக அங்கீகரித்து, வரியை உயர்த்த நிலத்துக்குடையவருக்கு அதிகாரமில்லையென்றனர். ஜமீன்தார்களோ, செலக்ட் கமிட்டியார்முன் மனுக்களும், மகஜர்களும், மெமோரியல்களும் அனுப்பி வாதாடினர். இம்மசோதா இரண்டு ஆண்டுகளுக்குப் பின்பு 1865-ம் வருடத்து 8-வது சட்டமாகச் செய்யப்பட்டது. செலக்ட் கமிட்டியார், விபரீதமாக நிலத்துக்குடையவர் என்பதில் பர்மனெண்ட் செட்டில்மெண்டில் விலக்கப்பட்ட இனும்தார்களையும் ரயத்துகளையுஞ் சேர்த்துவிட்டனர். இவர்கள் மட்டும் இவ்விதமாகப் பலவித நிலத்துக்குடையவர்களையும் இச்சட்டத்திற் புகுத்தியிராவிட்டால் இவ்வளவு சச்சரவுகள் ஏற்பட்டிருக்கமாட்டா. இனும்தாரர்களையும் ரயத்துகளையும் தனியாக விட்டிருக்கவேண்டும். ஆனால் சட்டசபை அங்கத்தினர்களோ பெரிய விஷயங்களைச் சுருக்கிச் சிறிய இடத்தில் அடக்கி விளக்குவதே தங்களுக்குப் பெருமையென்று நினைக்கிறார்கள். இதனால் வரி உயர்வதுகூட கவனிக்கப்படவில்லை. வரி மசோதா, நீதிபதி காலட்டால் ஏற்பட்ட சந்தேகத்தை நிவர்த்திப்பதற்கில்லாமல் இவ்வித ஒற்றுமையற்ற நிலத்துக்குடையவர்களுக்கு வரி உயர்த்தும் விஷயத்தில் சட்டமேற்பட குழப்பத்தையுண்டுபண்ணிற்று. சுதேச விவகாரங்களில் தேர்ந்த இந்திய நீதிபதிகள் நிறைந்த சத்தர் அடலத் கோர்ட்டு ஒடுக்கப்பட்டு இந்திய சட்டமும், இந்திய நில உரிமையும் இன்னதென்று தெரியாத ஆங்கிலேய நீதிபதிகளைக்கொண்ட ஹைகோர்ட்டு ஏற்படுத்தப்பட்டது. இங்கிலாந்திலுள்ள நிலத்துக்குடையவருக்கும் விவசாயிக்கும் உண்டான பொறுப்பைப்போலவே இந்தியாவிலும் இருப்பதாகத் தப்பான எண்ணங்கொண்டு இரக்கமின்றி ஆங்கிலச் சட்டத்தை இங்குப் புகுத்தினர். சொக்கலிங்கம்பிள்ளைவழக்கிலுள்ள தீர்மானம் அம்மாதிரியானது. காலெட்டால் செய்யப்பட்ட தப்பான தீர்மானம் சொக்கலிங்கம் பிள்ளை வழக்கிலும் மீண்டும் உபயோகிக்கப்பட்டது. இந்து பொதுச்சட்டத்தில் நிபுணர்களான நீதிபதிகள் முத்துசாமி அய்யரும், சுப்பிரமணிய அய்யரும் இதை மாற்றும்வரை இந்தத் தப்பான முறை கையாளப்பட்டு வந்தது. இதற்குப்பின்னும் சிலர் தவறு செய்து வந்தனர். இம்மாதிரியாக 1908-ம் ஆண்டுவரை ஒழுங்கற்ற நீதி நிலவி வருவதாயிற்று. அப்போதுதான் எஸ்டேட் நிலச்சட்டம் செய்யப்பட்டது. 1865-ம் வருஷம்வரை சட்டசபை கிடையாது. 1908-ம் ஆண்டிலிருந்து சட்டசபை இப்போது ஏற்படுத்தப்பட்டுள்ள சட்டசபைபோலல்லாது, வேறு விதமானது.

1908-ம் ஆண்டுவரை விவசாயிகளின் அனுபவ உரிமை மட்டும் அங்கீகரிக்கப்பட்டதேயன்றி வரி உயர்த்தும் விஷயத்தில் கலவரங்கள் இருந்துவந்தன. பலமூலமாக ஏற்கெனவே வரி யென்பது தீர்மானமாக நிர்ணயிக்கப்பட்ட நில வரி மதிப்பென்றும் பேஷ்கஷ் அல்லவென்றும், விவசாயிகளால் நிலத்தீர்வையாக நிலத்துக்குடையவருக்குத் தரப்பட்டதல்லவென்றும் கொள்ளவேண்டுமென குறிக்கப்பட்டிருக்கிறது. ரயத்வாரி நிலங்களில் ரயத் சர்க்காருக்குக் கட்டுவது கிஸ்த். வரியென்பதை விடுத்து நிலத்தீர்வை மதிப்பு என்று குறிப்பிட்டிருந்தால் இந்த சந்தேகம் வந்திராது. "ரெண்ட்" என்பதை சில நீதிபதிகள் இங்கிலாந்தில் உள்ளதைப்போல பாவித்துவிட்டனர். இந்தியாவில் விவசாயிதொன்றுதொட்டு நிலத்தில் அனுபவ பாத்தியதையுடையவரென்றும், தன் உரிமையை நிலத்துக்குடையவரிடம் பெறவில்லையென்றும் சில நீதிபதிகளுக்குத் தெரியாது. இதைப்பற்றி போர்ப்ஸ் அவர்கள் விளக்கிக் கூறியிருக்கிறார். "ரெண்ட்" என்னும் வார்த்தையை எடுத்துவிட்டு கிஸ்த் என்று மாற்றலாம் என்று கொண்டுவந்தார். நிலத்துக்குடையவர்களும் அவர்கள் வக்கீல்களும் தங்கள் திறமையையெல்லாம் விவசாயிக்கு எதிராக உபயோகித்தனர். 1905-ல் தான் எஸ்டேட் மசோதா நினைக்கப்பட்டதல்ல. சென்னை "டெனன்சி பில்" என்று 1898-ம் ஆேத்தில் செலக்ட் கமிட்டி அறிக்கையுடன் வந்தது. அதில் "ரெண்ட்" என்ன வார்த்தை உபயோகித்திருந்தது. ஆனால் அதை நிலத்தீர்வையென்று செலக்ட் கம்மிட்டியால் மாற்றப்பட்டது. 15, 16, 17-வது பிரிவுகள் அந்த முதற் பிரிவில் கீழ்கண்டபடி கூறியிருக்கிறது :—

15. அனுபவ ரயத்தால் தரப்பட்ட "வரி" மாறாக ருசு செய்யுமட்டும் நியாயமானதாகக் கொள்ளப்படும்.

16. அனுபவ ரயத்தால் கட்டப்படும் வரி இந்தச் சட்டப்படிக்கல்லாமல் உயர்த்தப்படக்கூடாது.

நாம் செலக்ட் கம்மிட்டியாரால் மாற்றப்பட்ட 16, 17 பிரிவுகளுடன் ஒத்திட்டுப்பார்ப்போம்.

16. ரயத் கட்டவேண்டிய நிலத்தீர்வையைப்பற்றி ஏற்படும் வழக்குகளைத் தீர்மானிப்பதில் கீழ்கண்ட விதிகள் கவனிக்கப்படும்.—

17. இந்த சட்டத்திற்கு மாறாக நிலத்தீர்வை கட்ட ஒப்பந்தங்கள்

இதனால் "ரெண்ட்" என்பதற்குப் பதிலாக நிலத்தீர்வையென்று திருத்தப்பட்டிருப்பது தெரியவருகிறது.

சென்னை எஸ்டேட் நில மசோதாவில் அதாவது 1898-ம் ஆண்டுத்து மசோதாவில் 17-வது பிரிவில் வரி உயர்த்த ஏற்பட்ட காரணங்களாவன—

(1) " விலை உயர்வு,

(2) நிலச்சுவான்தாரால் அல்லது அவரது செலவால் செய்யப்பட்ட விருத்திகளுக்காக,

(3) நீர்ப்பாசன வசதிகள் சர்க்காரால் செய்யப்பட்டு, அதனால் நிலச்சுவான்தாரை அதிக வரி கட்டும்படி செய்ததால்,

(4) பூமி சாரத்தால் விளைவின் விருத்தியால் " என்பன.

சென்னை டெனன்ஸி மசோதாவின் 16-வது பிரிவு 1, 2 உட்பிரிவுகளில் செலக்ட் கம்மிட்டியாரின் திருத்தம் கீழ்க்கண்டவாறு :—

" (16) ரயத்துக்களால் தரவேண்டிய நிலத்தீர்வை விஷயங்களில் வழக்குகளைத் தீர்ப்பதில் கீழ் உள்ள விதிகள் அனுசரிக்கப்படவேண்டும்.

(1) 1859-க்கு முன் பிரிட்டிஷ் சர்க்காரால் சர்வே செய்யப்பட்ட நிலங்களுக்கு பணமாக தீர்வை மதிக்கப்பட்டிருந்தால் அந்த மதிப்பு சரியானதென்று கொள்ளவேண்டும்.

(2) மற்றைய எல்லா பூசதிகளிலும்,

(a) நிரந்தர பேஷ்கஷ் ஏற்பட்ட முந்திய வருஷத்தில் அனுஷ்டிக்கப்பட்ட முறையாக பணமாகவோ, மாசூலாகவோ தீர்வையைக் கலெக்டர் மதிப்பிடவேண்டும். நிரந்தரமாய்த் தீராத இடங்களில் கிராண்ட் கொடுத்தோ, ஊர்ஜிதம் செய்தோ அங்கீகரித்தோ இருக்கும் வருஷத்தின் முந்திய மதிப்பை எடுத்துக்கொள்ளவேண்டும்.

(b) நிச்சயமாய் மதிப்பு ஏற்படாவிட்டால் கலெக்டர் சுதேச வழக்கப்படியோ அல்லது நிலைக்குத் தக்கபடியோ மதிப்பிடவேண்டும். இருதரத்தாருக்கும் அதிருப்தியானல் வாரப்படி மாசூலாக தருவதை அனுசரித்து செலவுபோக மீதியில் பாதி தொகையாக ஊரிலுள்ள விலைப்படி மதிப்பிட்டுக்கொடுத்துவிடலாம்.

1898-ம் வருஷத்து சென்னை டெனன்ஸி மசோதாவில் 17-வது பிரிவில் ஒரு அனுபோக ரயத்து நிரந்தர மற்ற பணக்குத்தகைக்கு நிலம் வைத்திருந்தால் நிலத்துக்குடையவர் இந்த சட்டத்துக்குட்பட்டு கீழ்க்கண்ட காரணங்களால் வரி உயர்த்த கலெக்டரிடம் வழக்குத் தொடரலாம் :—

(a) குத்தகை நிர்ணயித்த பிறகு விலைவாசி ஏற்றமானபடியாலும்,

(b) குத்தகை நிர்ணயித்த பிறகு சொந்தக்காரரால் செய்யப்பட்ட அபிவிருத்தியால் நிலம் நல்ல பலன் அளிப்பதாலும்,

(c) குத்தகை நிர்ணயித்த பிறகு நீர்ப்பாசன வசதிகளை சர்க்காரால் விருத்தி செய்யப்பட்டு, அதற்காக நிலச்சுவான்தாரை அதிக தீர்வை கட்டும்படி செய்ததாலும்,

(d) நிலம் அதிக மாசூலைத் தரும்படி பூமி சாரம் விருத்தியானதாலும்.

1865-ம் ஆண்டுத்து ரெண்ட் ரெக்கவரி ஆக்ட், எஸ்டேட் நிலச்சட்டத்தின் 30-ம் பிரிவு இவைகளிலுள்ள நிபந்தனைகளை வரி உயர்த்தும் விஷயத்தில் எப்படி அனுசரிப்பதென்பதைப்பற்றி இதைவிட பலமாக விளக்கமுடியாது.

கனம் போர்ப்ஸ் அவர்கள் இதைப்பற்றி விபரமாகப் பேசியிருக்கிறார். சென்னை டெனன்ஸி மசோதா 17-வது பிரிவில் ஒரு அனுபவ ரயத்து நிலத்தை நிரந்தரமாயில்லாமல் பணக்குத்தகைக்கு வைத்திருந்தால், ஜமீன்தார் கீழ்க்கண்ட காரணங்களால், வரியை உயர்த்த கலெக்டருக்கு மனுச்செய்யலாம்.

பங்கு முறையும், தீர்மானமும்.

தீர்வை நிரந்தரமானதற்குமுன் பங்கு முறைதான் நல்ல முறையாக இருந்தது. விலை உயர்வாலோ, நாணய மாற்ற விகிதத்தாலோ இதில் நஷ்டம் வராது. இந்த முறை வேண்டுமானல் சர்க்கார் கிராமங்களில் அனுசரிக்கப்பட்டு, தானியங்களைச் சேர்த்து, சர்க்காருக்கும் விவசாயிக்கும் லாபம் வரும்படி விற்கவேண்டும். ஆனல் பங்குமுறை இருந்தவரையில் விவசாயிகளிடமிருந்து சில அநியாய வரும்படிகள் வசூலிக்கப்பட்டன. இதை ஒழிக்கவே பெர்மனென்ட் செட்டில்மெண்டு நிரந்தரத் தீர்வை மதிப்பிட்டது. கிராம புனருத்தாரணம் செய்து, கைத்தொழில் விருத்தியாகி, பங்குகள் முதலியன கட்டி, பாங்க் முதலியன ஏற்பாடு செய்து, கிராமத்தார்களின் வாழ்வை நிலை நாட்டி சௌகார்களிடம் போய் கஷ்டப்படாத நிலை வந்தாலன்றி, பங்குமுறை நல்லதானலும், அதைப் புகுத்துவது யுக்தமல்ல.

நாம் பெர்மனென்ட் செட்டில்மெண்டுபோது எவ்வளவு தீர்வை ஏற்பட்டதென்பதைக் கொண்டு பணமாக தீர்வை கட்ட சட்ட சபைக்கு சிபார்சு செய்வோம். பெர்மனென்ட் செட்டில்மெண்டுபோது நிர்ணயித்த தீர்வையை இப்போது தீர்மானித்தால், அதே விவசாயிகளுக்கு பெரிய நன்மையைத்தரும். அப்படியே வரியைத் தீர்மானித்து, வரியை உயர்த்துவதை தடுத்து, விவசாயிக்கு பூமியினுள்ள உரிமையை உறுதிசெய்து கொடுத்தால், விவசாயிகளின் சுகத்திற்கும், தேசமுன்னேற்றத்திற்கும் நன்மையாகும். இன்றைக்கும் ராமநாதபுரம் போன்ற ஜமீன்களில் மாசூலையே பங்காக வாங்குகிற முறை இருந்துவருகிறது.

இன்றைக்கு வரியை, பெர்மனென்ட் செட்டில்மெண்டுக்கு முந்தி இருந்ததைப்போல தீர்மானித்தால், தானிய முறையாகத் தரும் பல விவசாயிகளும் பணமாகத் தர முன் வருவார்கள். அப்படியானல் வாரமுறையை பணமாக மாற்றுவதில் பெர்மனென்ட் செட்டில்மெண்டுபோது இருந்த விலைப்படி செய்வதா, இப்போதுள்ள விலைப்படி செய்வதா என்று கேள்வி யெழும். அதற்கு பெர்மனென்ட் செட்டில்மெண்ட்டுக்கு முந்திய வருஷத்து விலைக்கே மதிப்பிடவேண்டும். அப்படி ஏற்பட்டதை மாற்றாமல் தீர்மானித்துவிடல்வேண்டும்.

சாக்ஷியங்கள்.

1802-ம் வருஷம் முதல் இதுவரையில் சர்க்கார் உயர்த்தாமல் பேஷ்கஷ் வசூலித்து வருகிறார்கள். சந்தர்ப்பங்கள் உண்டானபோது குறைத்தும் வந்திருக்கின்றனர். ஆனல் ஜமீன்களிலோ இரக்கமின்றி அடிக்கடி குத்தகையை உயர்த்தி ரயத்துகள் பெரும்பாடுபட்டு ஏழைகளாகி துன்பமுற்றார்கள்.

கடவூர் ஜமீனில் இம்மாதிரியான விஷயத்தைப்பற்றி சாக்ஷியம் எங்கள் முன் கிடைத்தது. 15 கர்ணங்கள் ஒரு மனுக்கொடுத்தார்கள். இது ஒரு முக்கியமான தஸ்தாவேஜானதால் இதை இத்துடன் அச்சடித்திருக்கிறது.

இந்த பூஸ்திதியில் 16 கிராமங்கள் உண்டு. 1803-ம் வருஷத்தில் நிலத்திற்கேற்றபடியும், தாரத்திற்கேற்றபடியும் பணமாக குத்தகை தீர்மானிக்கப்பட்டது.

(3) 1803-ம் வருஷத்தில் மதிப்பிட்ட குத்தகை இன்றுவரை உயராமலும், குறையாமலும் ரயத்துகளிடமிருந்து வசூலிக்கப்பட்டு வருகிறது.

(4) (a) சில ரயத்துகள் விஷயத்தில் குத்தகை ஏற்றத்தாழ்வு கீழ்கண்ட காரணங்களால் ஏற்பட்டிருக்கலாம் :—

(1) ஜமீன் கரம்பை நிலங்களை பயிராக்கி பட்டாதரப்பட்டதாலும்.

(2) அருகாமையிலுள்ள குத்தகை மதிப்பிடாத நிலம் பட்டா நிலத்தோடு இணைக்கப்பட்டதாக கண்டுபிடிக்கப்பட்டதாலும்.

(3) மேய்ச்சல் நிலத்தில் குறைந்த குத்தகைக்கு புஞ்சை பயிர் செய்வதாலும்.

வரி உயர்த்தப்பட்டது.

(b) (1) பட்டா நிலத்தை இராஜினுமா செய்துவிட்டதாலும்,

(2) புல் விளைப்பதால், புஞ்சை நிலங்களில் குறைந்த குத்தகை விதிப்பதாலும்

வரி குறைக்கப்படும்.

(6) வாக்கு மூலத்தில் இருப்பதைக்காண்போம்.

கஸ்பா, எடையப்பட்டி கிராமக் கர்ணத்தால் தரப்பட்ட ஓலைப்பத்திரங்களில் வரி மதிப்பைப்பற்றி விபரமாக இருக்கிறது. அதுவே ஜமீனில் அமுலில் இருக்கிறது. அவை தரம்படியும் சாரம்படி தீர்த்தது. அதில் மாறுதலில்லை. நாங்கள் சத்தியமாக மேற்கூறியது உண்மை என்கிறோம்."

கரம்பை நிலத்தை பயிராக்கியதற்கு வரி உயர்த்தியது நியாயமானது. வரிவிதிக்காத நிலத்தை இணைக்கப்பட்டதைக் கண்டுபிடித்து அந்தப் பகுதிக்காக உயர்த்தியதும் சரியே. ஆனல் அது உண்மையாக இணைக்கப்பட்டதா என்பதைமட்டும் பார்த்துக்கொள்ளவேண்டும். ஆனல் பெர்மனண்ட் செட்டில்மெண்ட் காலத்து அளவிற்கும் இப்போதுள்ள அளவிற்கும் வித்தியாசமுண்டு. மேற்கு ஜில்லாக்களில் மாகூல் முறையில் நிலத்தை அளந்து 8 ஏக்கர் என்று தீர்மானிப்பது உண்மையாக 16 ஏக்கராவாக இருப்பதுண்டு. இந்த 8 ஏக்கர் வித்தியாசத்தை அதிகமாகவோ, இணைக்கப்பட்டதாகவோ, கொள்ளமுடியாது. இவைகளால் ஏற்பட்ட உயர்வை ரத்து செய்துவிடவேண்டும்.

புஞ்சைப் பயிர் மேய்ச்சல் நிலத்தில் குறைந்த குத்தகைக்கென்பதை ஆராய்வோம். லக்ஷ்மணப் பிள்ளை என்னும் விவசாயி கடலூர் சமஸ்தானத்திற்கு எழுதுவதாவது—

"என் புஞ்சை நிலத்தில் கிணறு தோண்டி தோட்டப்பயிர்செய்தால் நான் ஜமீனிலுள்ளபடி தோட்ட குத்தகை தருகிறேன். புல் விளைத்தால் சமஸ்த்தானத்திற்கு செப்டம்பர் மாதத்தில் மனுச்செய்து குறைந்த வரி கேட்கிறேன். ஒரு குழிக்கு ஒரு காசு பணம் விகிதம் குறைதல் வேண்டும். தோட்டவரி கட்டாதவர்களுக்கு, மேய்ச்சல் நிலத்தில் இக்குறைந்தவரி கிடையாதென்பது எனக்குத் தெரியும்." இம்மாதிரி முச்சிலிக்கையில் இருக்கிறது.

லக்ஷ்மணப்பிள்ளை இந்த பத்திரத்தின் மதிப்பை எதிர்த்தார். அவர் அது குத்தகை உயர்த்துவதென்றும் 1865-ம் வருஷத்துச் ரெண்ட் சட்டப்படி செல்லாதென்றும் கூறினர். குறைந்த குத்தகையென்பது சரியானதல்லவென்றும், வழக்கப்படி தோட்டவரி தருவதாகக் கூறுவதென்றால் அப்படி ஒரு வழக்கம் ருசு செய்யவேண்டுமென்றும் கூறினர்.

1865-ம் வருஷத்து சட்டம், 11-ம் பிரிவுபடியும் ஐ.எல்.ஆர். 8, மதராஸ் 164-ல் ஊர்ஜிதம் செய்யப்பட்டபடியும், விவசாயியால் விருத்திசெய்யப்பட்டால் வரி உயர்த்தக்கூடாதென்றிருக்கிறது. ஹைகோர்ட், "பழக்கம்" என்பதை அங்கீகரிக்கவில்லை. நியாயமான விஷயங்களை சூழ்ச்சியால் வெல்ல முயல்வது சட்டப்படி செல்லாது என்று கூறியிருக்கிறது.

சிவகிரி ஜமீனிலும் இவ்வித வரி உயர்த்தும் முறை கையாளப்படுவதாக ஒரு ரயத்து சாக்ஷியம் கூறினர்,

இதனல் நியாயமான வரியெனக் கூறப்படும் 4-வது பாரா (எ) பிரிவு, 2-வது, 3-வது உட்பிரிவு முதலியவற்றில் காணப்படும் முறை சட்டப்படி சரியானதல்ல. கடலூர் கர்ணங்கள், வரி இன்று உயர்த்தப்படவில்லை. முந்தியவரியே இருக்கிறது என்பதை நாங்கள் ஏற்றுக்கொள்ளவில்லை.

பர்மனெண்ட் செட்டில்மெண்டுக்கு முந்தி நஞ்சை, புஞ்சை நிலங்களுக்கு விதித்திருந்த வரியைப் பார்ப்போம்.

பிஷ்ஷர் - குத்தாலம் பிள்ளை வழக்கு.

மதுரையில் பிஷ்ஷருக்கும், ராசிங்கபுரம் சாகர குத்தாலம் பிள்ளைக்கும் வழக்கு நடந்தது. 1865-ம் வருஷத்து, 8-வது சட்டம், 9-ம் பிரிவுபடி பட்டாவை ஏற்றுக்கொள்ளும்படி கொடுத்த வழக்கு. இதில் விவசாயிகள் தங்கள் செலவில் கிணறுதோண்டி புஞ்சை நிலங்களில் தோட்டப்பயிர் செய்தார். வாதி கிராமத்திலுள்ள வழக்கத்தையொட்டி தோட்டவரி கேட்டார். ஹைகோர்ட்டார் விவசாயியே விருத்திசெய்தபொழுது அதிகவரி உயர்த்தமுடியாதென்று தீர்ப்பளித்தனர். அதற்கு சான்றாய் தீர்ப்பில் கீழுள்ளதைக் கூறினர் :—

"வழக்கம் எப்படியிருந்தபோதிலும், 1865-ம் வருஷத்து, 8-ம் சட்டத்து, 11-ம் பிரிவுபடி குத்தகை தாரரே அபிவிருத்திசெய்திருந்தால் குத்தகை உயர்த்தமுடியாது."

மதுரை ஜில்லா நீதிபதி எந்தவழியில் மாகூல்செய்தாலும், மகூலுக்குத்தக்கபடி குத்தகை மாறும் என்னும் பழக்கம் மேற்கூறிய தீர்ப்புக்கு மாறானதல்லவென்று முடிவுகட்டினர். "பைசல்க்கணக்கில் நிலத்துக்குத் தகுந்தபடி வரிவிதித்திருந்தால், விவசாயியே நிலத்தை விருத்திசெய்ததற்காக வரி உயர்த்தும் பழக்கமென்பது தப்பானது, சட்டத்திற்கு விரோதமானது. ஆனல் மாகூலுக்குத் தகுந்தபடி வரிவிதிப்பதென்றால், தோட்டப்பயிருக்காகச் சொந்தச்செலவில் நிலத்தை விருத்திசெய்திருந்தாலுங்கூட வரி உயர்த்துவது சரியே." என்றனர்.

மேற்கூறிய வழக்கில் உதவி கலெக்டர் பிரயண்ட் அவர்களால் தீர்ப்பளிக்கப்பட்டது. அதில் இரண்டு விஷயங்கள் விசாரிக்கப்பட்டன—

(1) போடிநாய்க்கனூர் ஜமீனில் நிலத்துக்குத்தகுந்தபடியா, அல்லது மாகூலுக்குத்தகுந்தபடியா வரி விதிப்பது என்று பைசல்க் கணக்கில் ஏற்படுகிறது.

(2) மாறக்கூடிய தீர்வையை அங்கீகரித்தால், வாதி தோட்டப்பயிருக்கு உயர்ந்தவரி கேட்பது சம்பிரதாயவரியா ?

உதவி கலெக்டர் விவசாயி கிணறு வெட்டியபோதிலும் தோட்டவரி தரவேண்டுமென்றே தீர்ப்பளித்தார். மிளகாய்க்குப் பன்னிரண்டு பணமும் புகையிலைக்குப் பதினைந்து பணமும் அதேபோல வித்தியாசமான வரி பயிர்களுக்குத் தகுந்தபடி போடிநாயக்கனூர் ஜமீனில் விதித்திருப்பதால், வாதியின் வழக்கு சரியானதுதானென்றார். ஹைகோர்ட்டு தீர்ப்பை உதவி கலெக்டர் மாற்றிவிடக்கூடுமென்று கருதினார்போலும்! ஏழை விவசாயிகள், பணக்கார ஜமீன்தாரர்களுடன் வழக்காடுவதில் கிடைக்கும் 'நியாயம்' இதுவே. ஒரு முறை தோல்வியுற்றால் பெரும்பாலும் அப்பீலுக்குப் போக ஏதுவில்லை. அப்படிப்போனாலும் பலவந்த முயற்சியால் ஜமீன்தாரர் இஷ்டப்படி அப்பீல் தீருமுன் ராஜி செய்யப்படும்.

ஆள்வாராசாரிக்கும், எட்டையாபுரம் ஜமீன்தாரருக்கும் நடந்த வழக்கு, மேற்கூறிய விவகாரத்தில் பிரிவி கவுன்சிலுக்கு அப்பீல் செய்யப்பட்டது. பி.சி.எ. நெ. 86/1916. வழக்கின் விவரமாவது—

ரயத்துகளிடமிருந்து சம்பிரதாயப்படி கீழ்க்கண்ட முறையாகத் தீர்வை ஜமீன்தாரரால் வாங்கப்பட்டது. தோட்டப்பயிருக்கு ஒரு குழிக்கு 8 முதல் 10 பணம் வரையில். 1210-ம் பசலியில் 15 பணமாக முடிவாயிருக்கிறது. 8 பணம்தான் சம்பிரதாயப்படி கொடுக்கப்பட்டதாக ஜமீன்தார் கூறுகிறார். ரயத்து அதை மறுத்து தோட்டவரி உயர்த்தப்பட்டதென்று சொல்கிறார். உதவி கலெக்டர் ஜமீன்தார் கூறிய சம்பிரதாயக் கூற்றை ஏற்றுக்கொள்ளவில்லை. இவ்விஷயம் ஹைகோர்ட்டுக்குச் சென்றது. நீதிபதி சுப்பிரமணிய ஐயர் இந்தச் சம்பிரதாயமும், ஒப்பந்தமும் உண்மையா என்பதை அறிய கீழ்க்கோர்ட்டு விசாரணைக்கு அனுப்பினார். கீழ்க்கோர்ட்டார் விவசாயிகள் பக்கம் தீர்ப்பளித்தனர். ஹைகோர்ட்டு அதை அங்கீகரித்தது. விவசாயிகள், அது நான்கணா வரியுள்ள புஞ்சை நிலமென்றும், தாங்கள் கிணறு வெட்டியபிறகு 8 முதல் 15 அணா வரை வரி உயர்த்தப்பட்டதென்றும் கூறினார்கள். கோர்ட்டார், அப்பீலில் நியாயமாகவே வரி உயர்த்தவேபட்டதென்றும் முடிவுகட்டினர்.

இதேபோல் திண்டுக்கல் வழக்கொன்றிலும் தீர்ப்பளிக்கப்பட்டது.

மாசூல் முறை அல்லது பயிர்வாரி முறை.

பயிர்வாரி முறை யென்றொரு வழியாய் வரி உயர்த்தப்பட்டது. உடையார்பாளையம் ஜமீன் சுப்ரமணிய அய்யர் கிராமவாரி முறையாலும் சர்வே யில்லாததாலும் விவசாயியின்பாடு பரிதாபகரமானதென்றும், ஜமீந்தார் விவசாயி இருசாரர் தரப்பிலும் பயிர்வாரி முறை ஒழிந்தால் நலமென்றார். இம்முறைப்படி பயிரானாலும் ஆகாவிட்டாலும் வரி கட்டவேண்டுமாம். ஒவ்வொருவித மாசூலுக்கும் தக்கபடி வரி யுண்டாம் வரி பணமாக வசூலிப்பதாம். பொருளுக்குத் தக்கபடி விலை மதிப்பிட்டு வரி விதிப்பதாம். இவ்விலை கடை விலைக்கு மாறுதலானது. இதனால் கணக்கரும், மத்தியஸ்தர்களும் தஸ்தாவேஜுகளைத் திருத்த இடம் ஏற்பட்டதாம். இம்முறை ஒழியவேண்டுமென்றார்.

சிவகிரி ஜமீன் ரயத் ஒருவர் பயிர்வாரி முறையை விளக்கிக் கூறினார். "முறையான புஞ்சை விகிதமாவது 0–12–4, 0–15–5, 0–7–8. ஆனால் விவசாயி கிணறு தோண்டி வாழை, கத்திரி, வெங்காயம், விளைத்தால் தனி வரி விதிக்கப்படும். ஒரு ஏக்கரில் ரூ. 14 விகிதம் கத்தரிக்கும், வெங்காயத்திற்கும், வாழைக்கும் விதிக்கப்படும். அதாவது ஒரே ஏக்ராவில் 3 ஏக்ராவுக்கு ரூபாய் 42 வரியாம். இம்மாதிரி பெர்மனண்ட் செட்டில்மெண்டுக்குப் பின்பு ஏகதேசமாய் வரி உயர்த்தப்பட்டிருக்கிறது. கலக்டர்களுக்கு விடுத்த அறிக்கையில் 39-வது விதி கீழ்வருவன கூறுகிறது. :—

"நிலத்துக்குடையவர்கள், தாலுக்தாரர்கள், ஒரு குறிப்பிட்ட அளவுள்ள நிலத்திற்கு, குறிப்பிட்ட வரி ஏற்படுத்தி, விவசாயி எப்பயிரானாலும் விளைவு செய்யலாமென்று ஒப்பந்தம் செய்துகொள்ள வேண்டும். விவசாயி தனக்கு லாபமுள்ள எப்பயிரும் செய்யலாம். இதை மீறி வரி உயர்த்தினால் அதிக அபராதம் விதிக்கவேண்டும். விவசாயிகளுக்கு இதன் மத்தியில் பாதுகாப்பளிக்க வேண்டும்."

இதிலிருந்து நிலம்தான் நிரந்தரமாய் வரி மதிப்பிடப்பட்டதன்றி பயிரில்லை யென்பது தெளிவாய் விளங்குகிறது. பயிர்வாரி முறை சரியானதல்ல. சிவகிரி சாக்ஷி ஒரு ஏக்கர் புஞ்சை நிலத்துக்கு ஒரு ரூபாய்க்கு குறைவாய் வரி ஏற்பட்டிருக்க, 42 ரூபாய் வசூலிப்பதால்த்தான் விவசாயி கடன்காரனாகி ஏழையாகிறான் என்றார்.

உள்குடி, புறக்குடி.

சென்னைக்குத் தெற்கு ஜில்லாக்களில் மிராசுதார்கள், உள்க்குடி, புறக்குடி, கௌல்தாரர் என்று பலவித விவசாயிகள் உண்டு. ஒவ்வொருவருக்கும் அவரவர்களுக்குள்ள உரிமைப்படி வரி விதிக்கப்பட்டிருக்கிறது. உள்ளூரிலுள்ளவர்கள் உள்க்குடிகள். அவர்களுக்கு சில ஏதுக்கள் உண்டு. வெளியூரிலிருந்து வந்தவர்கள் புறக்குடிகள். பலவித வேறுபாடு இருந்தாலும் வரிதரும்வரை பாரம்பரியமாய் அனுபவ பாத்தியதை அங்கீகரிக்கப்பட்டது.

இதைப்பற்றி கனம் போர்ப்ஸ் அவர்கள் கூறுவதாவது :—

"இவ்வித பாகுபாடு கிராமத்தாருடையதே. எஸ்டேட் நிலச் சட்டம் அனுபவ ரயத்து அனுபவமில்லாத ரயத்து இருவருக்கும் பொருந்தியது. எஸ்டேட் நிலச்சட்டத்தை ஊன்றிப்பார்த்தால், வரி உயர்த்துவது, வரி மதிப்பு பர்மனண்ட் செட்டில்மெண்டுபோது தீராத நிலங்களுக்குமட்டும்தான் பாதிக்கும்." இந்த ராஜதானியில் அனுபவமுள்ள ரயத்துக்கும் அனுபவமில்லாத ரயத்துக்கும் வித்தியாசம் இருந்ததில்லை. 1865-ம்வருஷத்து 8-ம் சட்டம் கவர்னர் ஜனரலுக்குப் போகும்போது இந்த உரை அவரை அதிசயிக்கச் செய்தது. அதைப்பற்றி சென்னை சர்க்கார் அவர் விடுத்த கேள்விக்கு கீழ்க்கண்ட பதிலனுப்பினது :—

இந்த ராஜதானியில் ஆரம்பகால முதல் உள்ளூர் விவசாயி தங்கள் நிலங்களை வைத்திருக்கும் உரிமையோடு, கரம்பை நிலங்களில்கூட பரவ உரிமை இருக்கிறதென்று சாம்பிரதாய மூலம் தெரிகிறது. உள்ளூர் விவசாயிகள், மிராசுதார்களென்றும், உள்க்குடியென்றும், "கடிமிஸ்" என்றும், சில பொது உரிமைகளோடும், இதர சௌகர்யங்களோடும் இருக்கின்றனர்.

அவர்களோடு, அவர்களைப்போல உரிமையுடன் புறக்குடிகளுமிருக்கின்றனர். ஆனால் ஆரம்பத்தில் கிராமத்தில் அவர்களுக்கு உரிமையில்லாததால் உள்க்குடிகள் போல சில தனி சௌகர்யங்களில்லை. ஆனால் அது குறைந்த வரியால் சரி செய்யப்பட்டது. மற்ற விஷயத்தில் பாரம்பரியமாய் அனுபவிக்க உரிமையுண்டு."

இதன்பேரில் வைஸ்ராய் இந்த மசோதாவிற்கு அனுமதி தந்தார்.

இதனுல் உள்க்குடி, புறக்குடி யென்பதெல்லாம் கிராமத்தாரின் பிரத்தியேக விவகாரங்கள். இதனுல் இச்சட்டம் அனுபவ ரயத்து, அனுபவமில்லாத ரயத்து என்பதைப் பற்றிச் சொல்லவில்லை. இது ஒரு முறையைக் கையாள ஏற்பட்ட சட்டம். இது பலவிதமான நிலத்துக்குடையவர்களும் வரி வசூலிக்க ஏற்பட்டது. 1865-ம் வருஷம் வரையில் ரயத்துகளுக்கு ஒரு உரிமையிருந்தது. இச்சட்டத்தால் அது ரத்து செய்யப்பட்டவில்லை.

மேற்குப்பாளையங்களில் வெங்கடகிரி சமஸ்தானத்தைப் பார்ப்போம். அங்கு மஞ்சள் வரி விதித்து வருவதாக மகராஜா உரிமை பாராட்டுகிறுர். ஒரு ரயத்து முச்சிலிக்கையில் எழுதிகொடுத்திருப்பதில் ஒரு பகுதி கீழ் காணப்படுவது :—

"மூன்றுண்டுக்கொரு முறை மஞ்சள் பயிரிடவேண்டும். தவறினுல் மஞ்சள் மாசூலுக்குள்ள வரி விதிக்கப்படும். அதாவது மூன்றும் வருஷத்தில் மஞ்சள் விளைந்ததாகக் கொள்ளப்படும். இதற்கு முந்திய பட்டாவில் நிலம் உழுது, எருவிட்டு, விதைத்து, காலத்தில் பயிரிடாவிட்டால் அடுத்த நிலத்துக்குத்தகை வசூலிக்கப்படும். ஆனுல் வழக்கிலுள்ள நிலத்திற்கு அது தகுந்ததல்ல. இந்தப் பட்டாவைக்கொண்டு நிலத்துக்குடையவர் வழக்கிட்டார். விவசாயி இது வரி உயர்த்தல் என்று எஸ்டேட் நிலச் சட்டம் 11-ம் பிரிவுபடி ஆக்ஷேபித்தார். 187-வது பிரிவுபடியும் ஒப்பந்தம் செல்லாதென்பதையும் காண்பித்தார். நீதிபதி இதனுல் மஞ்சள் விளைக்கவேண்டுமென்பது சரியல்ல எனத் தீர்ப்பளித்தார். இதன் தீர்ப்பை பின்னர் காணலாம்."

பித்தாபூரில் ஒந்துவார் முறை யென்றுென்றிருக்கிறது. கன்னிவாடி சமஸ்தானத்தைப் போல சில் வரி யுயர்த்தும் முறைகள் இங்குண்டு. பெர்மனண்ட் செட்டில்மெண்ட் வரி அதிகமென அது பக்கத்து சர்க்கார் நிலத்து வரியைப்போல 15, 16 ஆண்டுகளுக்குப் பிறகு குறைக்கப்பட்டது. முடிவாய், எஸ்டேட் நிலச் சட்டத்திற்குப்பிறகு அதற்கு முரனுய் மனோராஜி என்னும் ஒப்பந்த முறை ஏற்பட்டது. எஸ்டேட் நிலச் சட்டத்தில் 4 வகையாக வரி உயர்த்தலாமென இருக்கிறது. இங்கு ஒப்பந்தத்தால் பலவிதமாக உயர்த்தப்பட்டது. கன்னிவாடியிலும் அவ்விதமே உயர்த்தப்பட்டது. இதை விசித்திரமாக ஹை கோர்ட்டார் அனுமதித்தனர். அது பிசகு என மற்றெரு இடத்தில் குறித்திருக்கிறேம்.

மேற் சொல்லியுள்ள சில சந்தர்ப்பங்களிலிருந்து வரி எவ்வாறு உயர்த்தப்பட்டது என்பது தெரிகிறது. இதுபோல மற்ற பூஸ்திதிகளிலும் அடிக்கடி வரி உயர்த்தப்பட்டு வருகிறது.

இதனுல் விவசாயி ஏழையாகி வந்தனர் என்பது விளங்குகிறது. சாசுவத செட்டில்மென்டுக்குப் பின்பு, 1822-ல் 4-வது, 5-வது ரெகுலேஷன்கள், நிலத்துக்குடையவர்கள் சந்தேகங்களைத் தீர்க்க ஏற்படுத்தப்பட்டது. திரு. காலட் அவர்களுடைய தீர்ப்பால் ஏற்பட்ட குழப்பங்களை நீக்க போர்டார் நடவடிக்கை நெ. 7743, வெளியிடப்பட்டது. 185-ல் லண்டனிலிருந்து கோர்ட் ஆப் டைரக்டர்கள் சென்னை சர்க்காருக்கு ஒரு நிருபம அனுப்பினர். அது கீழ்க்கண்டவாறு :—

(1) "சர்க்கார் ஜமீந்தாரிகளிடமிருந்து வாங்கும் தீர்வையை தீர்மானித்து இருந்தும், ஜமீந்தார்கள் விவசாயிகளிடம் தங்களிஷ்டம் போல வசூலிப்பதால் பெர்மனண்ட் செட்டில்மெண்டுக்கு பின்பு விவசாயிகள் க்ஷீணதசையடைந்துவருகின்றனர். "டெனன்சி" சட்டங்கள் ரயத்துகளின் நன்மைக்காக ஏற்படுத்தப்பட்டன.

(2) "சர்க்கார் வசூலிக்கவேண்டியது நிலத்தீர்வை தவிர விவசாயியின் செலவுபோக மிகுந்த லாபத்திலோ, தானியத்திலோ இல்லை."

ரெண்ட் ஆக்டில் அனுபவ ரயத்துக்கும் அனுபவமில்லாத ரயத்துக்கும் வித்தியாசமில்லை.

பெர்மனண்டு செட்டில்மெண்ட்படி ஏற்பட்ட நிலத்துக்குடையவர்கள் வரி உயர்த்தாமல் வசூலிக்க வேண்டும். ரயத்வாரி நிலத்துக்குடையவர், நிலங்களைக் வாடகைக்கு தம்மிஷ்டப்படி வரி வசூலிக்கின்றனர். குடிவார உரிமையுள்ள இனும்தார்களும் தங்களிஷ்டப்படியே வரி வசூலித்தனர். இவர்களுக்கென வரி யுயர்த்த ஏற்பாடுகள் செய்யப்பட்டன. இவை பெர்மனண்ட் செட்டில்மெண்டு நிலத்துக்குடையவர்களுக்குப்பொருந்தாது. 11-வது பிரிவிலுள்ளது (ரெண்ட் ரெகவரி ஆக்ட்) ரயத்வாரி, இனும், இவ்விருவித நிலச்சொந்தக்காரர்களுக்குத்தான் வரி உயர்த்த உரிமை தருகிறது. பெர்மனண்ட் செட்டில்மெண்டுக்கும், ஒப்பந்தம், சம்பிரதாயம் என்பது உபயோகிக்கலாமென்றுல், அதை பெர்மனண்ட் செட்டில்மெண்டுபோது ஏற்பட்டது என்றே சொல்லவேண்டும்.

ரெண்ட் ரெகவரி ஆக்டால் ஏற்பட்ட குழப்பங்கள் பல, தீர்ப்புகளால் சரி செய்யப்பட்டன.

எஸ்டேட் நிலச் சட்டப்படி, வரி உயர்த்தல் என்னும் விஷயத்தைப்பற்றி ஆராய்வோம். 1908-ல் அனுபவ ரயத்து அனுபவமில்லாத ரயத்து என்று வித்தியாசம் பாராட்டப்படவில்லை. ஆனுல் இரண்டு வித ரயத்துகள், ரயத்து, ரயத்து நிலம் என்னும் சொற்கள் விளக்கத்தில் கொண்டுவரப்பட்டிருக்கிறது. அனுபவமில்லாத ரயத்துகள் பழய கரம்மைப்பயிர்செய்து, வரி விஷயத்தில் அனுபவ ரயத்தைப்போலவே நடத்தப்பட்டனர். இது 1898-ம்வுஷத்து சென்னை டெனன்ஸி மசோதாவின் 17-ம் பிரிவில் தெரியும். அதில் ரெண்ட் என்னும் வார்த்தை உபயோகிக்கப்படவில்லை. நிலத் தீர்வையென்னும் சொல்தான் இருக்கிறது.

1905-ம் வருஷத்தில் எஸ்டேட் நில மசோதா ஏற்பாடாகி 1908-ம் வருஷத்தில் சட்டமாயிற்று. 1898-ம் வருஷத்தில் சில சந்தேகங்களை நிவர்த்திக்க ஏற்பட்ட மசோதா சட்டமாகாமல் எஸ்டேட் நிலச்சட்டம் ஏற்பட்டு பெருங் குழப்பங்களை உண்டுபண்ணினது. வக்கீல்களுக்கும் நீதிபதிகளுக்கும் சந்தேகம் ஏற்படுத்திவிட்டது. 30, 35-வது பிரிவுகளில் வரி உயர்த்தலைப்பற்றி வருகையில், விலை ஏற்றத்தாழ்வால்த்தான் செய்யமுடியுமென்றும் 1898-ம் வருஷத்து மசோதாவின் 17-ம் பிரிவில் இருந்த மற்ற மூன்று காரணங்களையும் விட்டுவிட்டனர். வரி உயர்த்தலைப்பற்றியும் குறைத்தலைப்பற்றியும் 30, 35-வது பிரிவுகளில் எஸ்டேட் நிலச்சட்டம் கூறியிருப்பது பர்மனண்ட் செட்டில்மெண்ட் ரெகுலேஷனுக்கு எதிரானது.

இச் சட்டத்திற்குப் பிறகு நீதிபதிகளும் ஜட்ஜுகளும் எஸ்டேட் நிலச் சட்டத்தின் 30 (1) பிரிவிற்கு மாறுக வரி நிர்ணயித்த இடங்களில்க்கூட வரி உயர்த்த அனுமதி யளித்திருக்கின்றனர். வரியுயர்தல் அனுபவ உரிமையுள்ள ரயத்து நிலத்துக்கல்லவென்பது தெரிந்த விஷயமே. 30-35, 40, 41-ம் பிரிவுகளில்க்கூறும் வரி குறைத்தல் பழய கரம்பிற்கே. 1934-ம் ஆண்டில் பழய கரம்மை ரத்துசெய்து 1936-ம் வருஷத்து எஸ்டேட் நிலத் திருத்தச் சட்டத்தில், அவைகளை பூஸ்திதிக்குடையவரின் சொந்த நிலத்தில் சேர்த்தபோது, வரி யுயர்த்தும் திட்டமும் ரத்துசெய்திருக்கவேண்டும். 40, 41-வது பிரிவில் வரிபணமாக முடிவுசெய்தல்பற்றி கூறியிருப்பதும் சரியல்ல. நிலத்தீர்வை நிரந்தரமாய் ஏற்பாடு ஆன நிலங்களில் பெர்மனண்ட் செட்டில்மெண்டுக்கு முந்திய வருஷத்து விலைப்படி வரி முடிவு செய்யவேண்டும். நிலத்தை விருத்திசெய்ய விவசாயிகளுக்கு பல உதவி

புரியவேண்டும். சில வருஷங்களுக்கு நிலத்தைப் பண்படுத்த வரியே விதிக்கக்கூடாது. அக்பர் ஆட்சியில் இது நடந்தது. எஸ்டேட் நிலச் சட்டத்தில் கூறும் **பிரிமியம்** என்பது சரியான முறையல்ல. அது எடுபட வேண்டும். தான்யமாகக் கொடுத்துவந்த தீர்வை பணமாக முடிவு செய்வதில் வரி உயர்த்தப்படுகிறது. இதைக் கவனிக்கவேண்டும்.

1802-ம் வருஷத்து 25, 30-ம் ரெகுலேஷன்களில் ஒருவித நிலத்துக்குடையவரும், ஒருவித ரயத்தைப் பற்றியும் கூறியிருப்பதால் வரி உயர்த்த நிபந்தனைகளே ஏற்படவில்லை. 1802-ம் வருஷத்து ரெகுலேஷன் 1865-ம் வருஷம்வரையில் இருந்தது. இதில் இரண்டுவித உரிமையும் நிர்ணயமாய் ஏர்படுத்தப்பட்டது. சந்நத்களிலும் காபூலியத்துகளிலும் வரி உயர்த்தக்கூடாதென்றும், விவசாயியை அப்புறப்படுத்தக்கூடாதென்று மிருக்கிறது.

வரியைக் குறைத்தல்.

எஸ்டேட் நிலச் சட்டத்தில் வரி உயர்த்த ஏற்பாடு இருக்கிறதேயன்றி வரி குறைக்க ஒன்றுமில்லாததைப் பார்த்தால் இச்சட்டம் எவ்வளவு நீதியற்றதென்று விளங்குகிறது. 26 ஆண்டுகளாக இதை மாற்ற ஒரு முயற்சியும் செய்யவில்லை. 1934-ம் வருஷத்தில் 39-எ பிரிவு என்று ஒரு புதுப்பிரிவு ஏற்படுத்தி திருத்தச் சட்டம் கொண்டுவந்தனர். தாலுகாவிலோ, ஜமீனிலோ ஆகஸ்ட் மாதம் 31-ம் தேதிக்குமுன் 12 மாதங்களில் வரி ஏற்பட்ட விலையிலிருந்து $18\frac{3}{4}$ சதம் குறைந்திருந்தால், வரி குறைக்கப்படுமென்றிருந்தது. இது ஒருவருக்கும் பயனளிக்கக்கூடியதில்லையானதால் ரத்துசெய்ய வேண்டும்.

எஸ்டேட் நிலச் சட்டம் ரயத்துகளிடமிருந்து நிலத்துக்குடையவர் தீர்வையை வசூலிக்க ஏற்பட்ட சட்டம். இதன்படி ரயத்துகள் 2 வகை. (1) அனுபவ ரயத்து. (2) அனுபவமில்லாது பழய கரம்பையைப் பயிர்செய்யும் ரயத்து.

அனுபவ ரயத்து தீர்வை நிர்ணயமானது. ஆனால் பழைய கரம்பு ரயத்துகளிடம் நிலத்துக்குடையவர்கள் ஒப்பந்தம்செய்துகொண்டு எப்படியானாலும் வரியை உயர்த்தக்கூடும். அப்புறப்படுத்தவும் முடியும். இந்த சட்டம், ரயத்து எவ்விதமான பயிர் செய்தாலும் கிராமவாரி முறையாகவோ, வேறுவிதமாகவோ வரி உயர்த்தக்கூடாதென்பதற்கு ஏற்பட்டது. 11-வது பிரிவும் 187-ம் பிரிவும் இதைப்பற்றிக் கூறுகின்றன.

11-ம் பிரிவு " நிலம் விவசாயத்திற்குக் கெடுதல் இல்லாமலும், அதன் மதிப்பு குறையாமலும், ஒரு விவசாயி தன் நிலத்தை எப்படியாவது உபயோகிக்கலாம்.

187-ம் பிரிவு இச் சட்டத்திற்குப் பின், ஒப்பந்தத்தால் மேற்கூறிய 11-ம் பிரிவிலுள்ள உரிமையைப் பறிக்க முடியாது.

இதனால் நிலம்தான் மதிக்கப்பட்டதென்றும் பயிரல்லவென்பதும் தெரிகிறது. எந்தப் பயிரானாலும் பயிரிடலாம்.

24-ம் பிரிவில் ரயத்தின் வரி உயர்த்தக்கூடாதென்றிருக்கிறது. 30-ம் பிரிவு வரி உயர்த்தலைப்பற்றிக் கூறுகிறது. எஸ்டேட் நிலச் சட்டம் 30-ம் பிரிவு (1—4) உட் பிரிவில் வரி உயர்த்தல் என்பது பர்மனண்ட் செட்டில்மெண்டில் தீர்வை திட்டமாய் நிர்ணயிக்காத நிலங்களுக்குமட்டும் தான் ஏற்பட்டது. இதனால் இச்சட்டத்திலும் தீர்மானமான வரியும், உரிமையும், பயிரிடுதலில் சொந்த இஷ்டமும் அங்கீகரிக்கப்பட்டிருக்கிறதென்று தெரிகிறது. "**சொந்த உரிமை**" என்பது வரி வசூலிக்கும் உரிமைமட்டும் என்று இச்சட்டத்திலும் 4-ம் பிரிவில் கூறியிருக்கிறது. அதை பிரிவீ கௌன்சிலிலும் I.L.R., 45, Mad. 586-ல் ஊர்ஜிதம் செய்யப்பட்டிருக்கிறது.

8-ம் அத்தியாம்—எஸ்டேட் நிலச்சட்டம்.

பட்டாவும் முச்சிலிக்கையும்.—சர்க்காருக்கும், நிலச் சுவான்தாரும் சந்நதும், கபூலியத்தும் மாற்றிக்கொள்வதைப்போல, நிலச் சுவான்தாரும், ரயத்தும் பட்டாவும் முச்சிலிக்கையும் மாற்றிக்கொள்ளவேண்டும். கபூலியத்தில் தீர்வையும், வார உரிமையும் குறித்திருக்கிறது. பட்டாவிலும் முச்சலிக்கையிலும் அது இருக்கவேண்டும். 4-ம் அத்தியாயத்தில் இதைப்பற்றி விவரமாக இருக்கிறது. இதை எடுத்துவிட்டு பட்டா முச்சலிக்கை மாற்றிக்கொள்ளவும், நிரந்தரத் தீர்வை திட்டமும் குறிப்பிட நிபந்தனைகளுடன் ஒரு அத்தியாயம் ஏற்படுத்தவேண்டும். பர்மனண்ட் செட்டில்மெண்ட் பட்டா ரெகுலேஷன்களைப்போல உரிமைகளைப்பற்றி சுருக்கமாயும் 27, 28-ம் ரெகுலேஷனைப்போல் வரி வசூலிக்கும் முறைக்கும் ஏற்படுத்தவேண்டும்.

கூட்டுப் பட்டாக்கள்.

கூட்டுப் பட்டாவால் ஏற்படும் கஷ்டங்களைப்பற்றி பல இடங்களில் பல சாக்ஷிகள் கூறினார்கள். ஒன்றுமறியாதவர்களை வரி தரும்படி வற்புறுத்துவதை நிறுத்தவேண்டும். முதலில் யார்பேரில் பட்டா இருந்ததோ அவர்கள், நிலத்தை விற்றுவிட்டு, வெளியேபோய்விட்டார்கள். யார் நிலத்தை அனுபவிக்கிறரோ அவர் சுகமாக இருக்க, விற்றுவிட்டு வெளியே போனவர்மீது தொடரப்படுகிறது. அதனால் கூட்டுப் பட்டாவை எடுத்துவிட்டு, பிரித்து, யார் உடையவரோ, அவர்மீது தொடரவேண்டும். அதற்கு, அவ்வித நிலங்களை சர்வேசெய்து பிரிக்க ஏற்பாடு செய்யவேண்டும். இதன் செலவு ஜமீன்தார் பொருத்துக்கொள்ளவேண்டும்.

ஜப்தியும் விற்பனையும்.—எஸ்டேட் நிலச் சட்டத்தில் இதைப்பற்றியுள்ள அத்தியாயம் எடுபடவேண்டும். நிலத்துக்குடையவர் ஜப்தி செய்யக்கூடாது. வேண்டியமட்டும்தான் ஜப்தி செய்யவேண்டும். விவசாயியை சிறையில் வைக்கக்கூடாது. வரிக்காக, மாசூலில் முதல் உரிமை நிலத்துக்குடையவருக்கு இருக்கவேண்டும்.

நீர்ப்பாசன வேலைகள்.—நிலச்சுவான்தார் நீர்பாசன வேலைகளைப் பாதுகாக்கவேண்டும். புது வசதிகளும் செய்து தரவேண்டும். தன் நிலத்தில் ஓடும் கால்வாய், ஆறு, ஊற்று முதலியவற்றிலிருந்து நீர் எடுத்துக்கொள்ள விவசாயிக்கு உரிமை இருக்கவேண்டும். 1865-ம் வருஷத்து 7-வது சென்னை நீர்ப்பாசன வரி சட்டத்திலுள்ள உரிமையெல்லாம் இருக்கவேண்டும். சர்க்காராலோ, ஜமீன்தாரராலோ செய்யப்பட்ட வசதிகளுக்காக பெர்மனண்ட் செட்டில்மெண்டு ஏற்படுத்திய வரிக்குமேல் விவசாயிகளை தரும்படி இம்சை செய்யக்கூடாது.

" பிரசிடென்ஸி நோட்ஸ் " என்று 2-ம் பாகத்தில் ஒரு அத்தியாயத்தில் நீர்ப்பாசன வேலைகளைப்பற்றி ஜமீன்தார்கள் கூறியுள்ள சாக்ஷ்யங்கள் பிரசுரிக்கப்பட்டிருகின்றன. 1659 பேர்களில் சிலர்தான் சாக்ஷியம் கொடுத்தனர். அதிலும் 30 எஸ்டேட்கள்தான் தீரத் தெரிவித்தன. பர்மனண்ட் செட்டில்மெண்டுபோது இருந்த " ரெண்ட் ரோலும் " இப்போதைய " ரெண்ட் ரோலும் " காண்பிக்கப்பட்டன. சென்ற 136 வருஷங்களாக்

சில பெரிய ஜமீன்களில் இதற்கு செலவுசெய்யப்பட்டிருக்கிறது. வரி உயர்த்தியதற்கு எவ்வளவோ மடங்கு அதிகம் என்று சொல்லுகின்றனர். எல்லா விதத்திலும் சட்டம், தேசம், உண்மை முதலியவற்றிற்கும் இது ஒருமுக்கியமான விஷயம். நீர்ப்பாசனங்களைக் கவனிக்காததால் விவசாயிகள் படும் துன்பம் பெரிது. ராமநாத புரம் உதவி கலெக்டர், சென்னை கலெக்டருக்கு எழுதிய கடிதமொன்றில் கீழ்க்கண்டவாறு இருக்கிறது :—

"சொந்தக்காரரோ, விவசாயியோ, நீர்ப்பாசனவேலைகளை பாதுகாக்கும் விஷயத்தில் சரியான திட்ட மில்லை. நான் வரும்போது கேவலமாக இருந்த சிலதைக் கவனித்து, இன்னும் சிலவற்றின் வேலை களை நடத்திவருகிறேன்."

பஞ்சம் பற்றிய கேள்வியில் திரு. டர்னர் விடுத்த பதிலின் பகுதி "நஷ்டத்திற்கு தாவா செய்தா லொழிய ஜமீன்தார்கள் இவ்விஷயத்திலொன்றும் செய்வதில்லை. நான் கவனிக்கும் ராமநாதபுர ஜமீனில் ஏரி முதலிய நீர்ப்பாசன வசதிகளின் மராமத்து வேலை பலகாலமாக நடைபெறுமல் குடிகளும் ஏழையாகி விட்டனர். இங்குள்ள நிலை வெகு பரிதாபகரமானது.

இது 60 வருஷத்திற்கு முந்திய தஸ்தாவேஜாகும். இப்போது அந்த ராமநாதபுரம் எஸ்டேட் கோர்ட் ஆப் வார்ட்ஸ் பார்வையில் இருந்ததால் சீர் திருத்தம் செய்யப்பட்டு பல வேலைகள் கவனிக்கப்பட்டிருக் கிறது.

விஜயநகரம் கோர்ட் ஆப் வார்ட்ஸ் மேற்பார்வையில் இப்போது இருப்பதால் அதைப்பற்றி கலெக்டர் கூறுவதாவது. இப்பேர்ப்பட்ட நல்ல எஸ்டேட்டில்கூட பல காலமாக நீர்ப்பாசன வேலைகளை கவனிக்காமல் இருக்கின்றன. இவைகளைச் சரிசெய்ய வெகு காலமாகும்.

சில நிலத்துக்குடையவர்கள் இவ்வேலை தங்களால் கவனிக்கப்படவேண்டுமென்று ஒத்துக்கொண்டா லும், பலர் சரியாக விடை தரவில்லை. சிலர் பதிலே சொல்லவில்லை.

வெங்கடகிரி ராஜா இதற்கு பதில் தரவில்லை. அவர் நீர்ப்பாசனங்களைக் காப்பாற்றினாலும் காப்பாற்று விட்டாலும், பயிர் விளைந்தாலும், விளையாவிட்டாலும் வரிமட்டும் வசூல் செய்யவேண்டுமென்னும் அபிப் பிராயம் உள்ளவராய்த் தெரிகிறது. அப்படியானல் சிறிய நிலத்துக்குடையவர்கள் என்ன நினைப்பார்கள். இக்கேள்வி வெங்கடகிரி ராஜாவின் 48 வழக்குகளில் ஏற்பட்டது. வழக்குகள் வரி பாக்கிக்காக 3 ரயத்துகள் மீது தொடரப்பட்டன. ரயத்துகள் நஞ்சை மாசூல் சாவியாய்விட்டதால் வரி தரமுடியாதென்றனர். ராஜா நீர்ப்பாசனங்களைக் கவனிக்காததால் நீர் இல்லாமல் பயிர் சாவியாய் போய்விட்டதென்றனர். ஆனல் ராஜா எஸ்டேட் நிலச் சட்டம் 4-ம் பிரிவுப்படி, விளைந்தாலும், விளையாவிட்டாலும், நீர்ப்பாசனம் காப்பாற்றப்பட்டாலும், படாவிட்டாலும் வரி தரவேண்டுமென்றர். இவர்தான், விளைந்தாலும், விளையாவிட்டாலும், மூன்றாண்டுக் கொருமுறை மஞ்சள் வரி கேட்டவர். கலெக்டர் இவ்வழக்கில் நிஜமாய் ராஜாவின் அஜாக்கிரதையால் நீர்ப்பாசன வசதிகள் கெட்டு அதனல் பாழான நிலங்களுக்கு ரெமிஷன் கொடுத்தார். நீதிபதியும் இதைப் பற்றி ஆராய்ந்து விவசாயி பக்கம் தீர்ப்பளித்தார். இது 1928-ல் நடந்த வழக்கு. இதின் தீர்ப்பு எக்ஸிபிட் 706-ம் ஆக அச்சிட்டிருக்கிறது. 8-வது அத்தியாயத்தில் குறிப்பிட்டபடி சுலபமான முறையை ஏற் படுத்தி நீர்ப்பாசன வசதிகளைக் கவனிக்க ஏற்பாடு செய்யவேண்டும். இப்போதுள்ள அத்தியாயத்தை எடுத்து விடவேண்டும்.

நீர்ப்பாசன அறிக்கையின் பொது உரை.

1938-ம் ஞு ஏப்ரல் மீ 25௳ யில் இவ்விராஜதானியில் 10,000 வருமானத்திற்கு மேற்பட்ட எஸ்டேட்டெல் லாம் நீர்ப்பாசனங்களைப்பற்றி கீழ்க்கண்டவாறு ஒரு அறிக்கை அனுப்புமாறு எங்கள் கமிட்டியின் காரியதரிசி ஒரு சுற்றறிக்கை எல்லோருக்கும் அனுப்பினர் :—

(1) சாசுவத செட்டில்மென்ட்போது எஸ்டேட்டிலுள்ள ஒவ்வொரு கிராமத்திலும் இருந்த நீர்ப் பாசனங்கள்.

(2) சாசுவத செட்டில்மென்ட் பின்பு செய்யப்பட்ட வேலைகள், அதன் செலவு கணக்கு இருந்தால் அதுவும் அதன் சார்பாக.

(3) பழைய வேலைகளுக்கு செய்த மராமத்துக்கள்—மதகு, கால்வாய்ச் செலவும், கணக்கும்.

(4) வருஷ மராமத்துச் செலவு, ஆயகட்டின் வரவு.

இந்த ராஜதானியில் 1659 எஸ்டேட்கள் இருக்கின்றன. இக்கமிட்டியின் முன் சாக்ஷியம் கூறினவர் சிலர். இக்கேள்விக்கு பதில் கொடுத்தவர் 53 பேர்கள்.

அதில் 8 பேர் தங்கள் எஸ்டேட்டில் நீர்ப்பாசன வேலைகளே இல்லையென்றும், சர்க்கார் கால்வாய்களால் ஜலம் வருவதாயும் சில டெல்டாவாயிருப்பதாயும் கூறினர்.

நால்வர் இன்னும் சில காலம் பதிலளிக்கவேண்டுமென்றனர். 11 பேர்கள் பூரா விஷயங்கள் தெரி விக்கவில்லை. இவைகளில் செட்டில்மெண்டுக்குப்பின் புது வேலைகளாவது மராமத்து வேலையாவது நடை பெறவில்லை.

முப்பது எஸ்டேட்டுகளில் புது வேலைகளும் மராமத்தும் செய்ததாக சில கணக்கும் காண்பித்தனர். இதில் சில சந்தேகமிருக்கின்றன. கீழே ஷை 30 எஸ்டேட்கள் கொடுத்த விபரங்கள் காணப்படும் :—

(1) காளாஸ்த்திரி	விபரம் தரவில்லை. புது வேலைகளும், அபிவிருத்தியும் செய்தார்க ளாம்.
(2) எர்ரம்பேட்டை	புது வேலை செய்யவில்லை. 2,850 ரூபாயில் சில சிறு விருத்திகள் 6 ஏரிகளுக்கும் ஒரு குறி விதிக்கும் செய்யப்பட்டதாம்.
(3) கபிலேஸ்வரபுரம்	இது இரகஸ்யமென ஒரு பதிலும், கபிலேஸ்வரம் தாணுதார் சேஷய்யா வின் சாக்ஷியமும் அனுப்பியிருக்கிறர்.
(4) ஆயக்குடி	கடந்த 10 வருஷத்தில் மராமத்தில் ரூ. 5,006-0-9 செலவு செய்யப் பட்டது. புதுவேலை ஒன்றுமில்லை. இது சந்தேகமானது.

(5) கன்னிவாடி	புது வேலை செய்யப்படவில்லை. 27 வேலைகளில் பெரிய அபிவிருத்திகள் செய்யப்பட்டன. அதில் 9 ஏரிகள் இரண்டிற்கு மட்டும் ரூ 31,000 செலவு செய்யப்பட்டது. 1909–1920 வரை மிதுனபுரி ஜமீந்தார் கம்பெனியார் கையில் இருக்கையில் ரூ. 17,558–13–4 செலவு செய்யப்பட்டது. இப்போதுள்ளவர், அதை வாங்கி ரூ 1,27,158–7–9 அபிவிருத்திக்காகச் செலவு செய்தார். 1909–1938 வரையில் ரூ 1,44,717–5–1 அபிவிருத்திக்கு மட்டும் செலவாயிற்று. மொத்தம் 4,276 ஏக்கர் 19 செண்ட் பயிராகி இருக்கிறது. மொத்தத் தீர்வை ரூ. 20,265–8–9.
(6) சேத்தூர்	சாசுவத செட்டில்மென்டுபோது இருந்த நிலை, தெரியாது. 1908-க்கு பின் தான் தெரியும். 31 ஏரிகள் இருக்கின்றன. புது வேலை செய்யவில்லை. 1908-லிருந்து 1,2,3,150 ரூபாய் அபிவிருத்திக்காகச் செலவு செய்யப்பட்டது. கணக்குப் புத்தகங்களும் சிட்டாக்களும் இருக்கின்றன.
(7) கம்பலகூடம்	5 கிராமத்தில் 11 ஏரிகள் செட்டில்மெண்ட் காலத்தில் இருந்தன. 11 புது ஏரிகள் வெட்டப்பட்டன. 1299 பசலியிலிருந்து 1346-ம் பசலி வரை ஒரு லக்ஷ ரூபாயில் பல விருத்திகள் செய்யப்பட்டன. பழய 11 ஏரிகளின் ஆயக்கட் 13,51,060 ஏக்கராக்கள். புது ஏரிகளில் 675.42 ஏக்கராக்கள். பழைய ஆயகட் வரும்படி ரூ. 13,156–5–3, புது ஆயகட்டில் ரூ. 7,156–2–2.
(8) பித்தாபுரம்	சாசுவத செட்டில்மென்டுபோது 193 நீர்ப் பாசன வேலைகள் இருந்தன. அவைகளுக்கு ரூ. 4,17,583–1–2 விருத்திக்காக செலவு செய்யப்பட்டது. செட்டில்மெண்டுக்குப் பிறகு ரூ 3,61,850 புது வேலைக்கு செலவு செய்யப்பட்டது. மொத்தம் 41,181 எக்கர் நீர்ப்பாச்சலில் இருக்கிறது. வரப்பட்ட தீர்வை ரூ. 3,12,000.
(9) கொல்லப்புரோலு	சாசுவத செட்டில்மென்டுபோது நீர்ப் பாசன வேலைகளில்லை. பிறகு பல வேலைகள் செய்யப்பட்டன. 1303-ம் பசலியிலிருந்து இதுவரை 80,366–6–2 ரூபாய் செலவு செய்யப்பட்டிருக்கிறது.
(10) கொண்டூர்	இதை ஒருவர் புதிதாக வாங்கியிருக்கிறார். இது முதலில் காளாஸ்திரியைச் சேர்ந்தது. 1910-ல் 3,000 ரூபாயில் ஒரு ஏரி கட்டப்பட்டது. பிறகு மதகுகள் கட்டப்பட்டன. மொத்த வரவு ரூபாய் 3,138–3–6.
(11) ஜக்கம்பேட்டை	இதில் 125 செட்டில்மென்டுக்கு முந்திய வேலைகள் இருந்தன. பிறகு 224 புதிய வேலைகள் செய்யப்பட்டன. அபிவிருத்தி வேலைகள் ரூ. 18,659–14–6-க்கு செய்யப்பட்டது. மொத்த வருமானம் ரூ. 84,573–12–2.
(12) மன்னார்கோட்டை	செட்டில்மென்டுக்கு முன் 43 வேலைகள் இருந்தன. பிறகு ஒன்றும் கவனிக்கப்படவில்லை. புது வேலை செய்யப்படவில்லை. 1328 முதல் 1346 பசலி வரை 17,089 ரூபாய் விருத்திகள் செய்யப்பட்டன. வருஷம் 1,326 ரூபாய் வரவு.
(13) பிஷ்ஷர் எஸ்டேட்	புது வேலை செய்யப்படவில்லை. பழைய வேலைகளுக்கு விருத்தி செய்வதில் 2,434 ரூபாய் செலவு. வருஷ வரவு ரூ 24,361.
(14) கங்கோல்	பெர்மனண்ட் செட்டில்மெண்ட்போது 30 வேலைகள் இருந்தன. புது வேலை செய்யப்படவில்லை. பரந்த விருத்தி செய்யப்பட்டது.
(15) கிர்லம்பூடி	பெர்மனண்டு செட்டில்மெண்டுபோது 41 ஏரிகள் இருந்தன. இப்போது 42 இருக்கின்றன, 14 கால்வாய்களும் இருக்கின்றன. செட்டில்மெண்டுக்கு முந்தியதா, பிந்தியதா என்பது தெரியவில்லை. ரூ. 20,452–15–0 விருத்தி வேலை செய்யப்பட்டது.
(16) குலசேகரமங்கலம் .. .. (17) திருப்பதி திருமலை தேவஸ்தானம்.	ஏராளமான ஏரிகள் இருக்கின்றன. செட்டில்மெண்டுக்கு முந்தியதா என்பது தெரியவில்லை. தாலூகாக்களெல்லாம் பல காலத்தில் பகுதியாக வாங்கப்பட்டது. 1,230-ல் சிவகிரியில் 10,650 ரூபாயில் ஒரு ஏரி கட்டப்பட்டது.
(18) கோட்டம்	147 செட்டில்மெண்டுக்கு முந்திய வேலைகளும், 179 புது வேலைகளும் இருக்கின்றன. புதிது 1,09,769–10–7 ரூபாயில் செலவு செய்யப்பட்டது. பழய வேலைகளை சீர்ப்படுத்த ரூ. 42,454–9–2 செலவு செய்யப்பட்டது. பூஸ்திதி சர்வேயாகவில்லை. ஆயக்கட்டின் விஸ்தீர்ணமும் வருஷ வரவும் தாவில்லை.
(19) பொப்பிலி	இதில் நீர்ப்பாசனத்திற்கு பணம் ஒதுக்கப்பட்டு செலவு செய்ததாகச் சொல்லப்படுகிறது. ஆனால் விருத்தி செய்யலாமா மராமத்தா என்பதைப்பற்றி சொல்லவில்லையானதால் சந்தேகமாயிருக்கிறது. 1802 ரெண்ட் ரோல் ரூ. 1,28,240. இப்போது ரெண்ட் ரோல் ரூ. 6,26,895–1–11.
(20) சிவகங்கை	1802-ல் பழைய ரெண்ட் ரோல் ரூ. 4,39,146. இப்போது ரூ 11,37,146 –13–8. பழைய செட்டில்மெண்டுபோது எத்தனை ஏரிகள் இருந்தனெனச் சொல்ல முடியவில்லை. ஆனால் நீர்ப்பாசனங்களெல்லாம் ஏரி மூலமானதால் முந்தியதென்றே கூறலாம். 1,14,061 ரூபாய் புது வேலைகள் செய்யப்பட்டிருக்கிறது. மதகுகளுக்கும் மற்ற விருத்திகளுக்கும், 2,57,905 ரூபாயில் செலவு செய்து வேலை செய்யப்பட்டது. ஆயக்கட்டிலிருந்து வருஷம் 11½ லக்ஷம் வருமானம்.

(21) ஆரணி .. .. 1802-ல் இது நிரந்தரமாக செட்டில் ஆகவில்லை. இதில் 176 ஏரிகள், 27 ஆற்றுக்கால்வாய், 13 மதகு, 2 கொண்டங்கள் இருக்கின்றன, எல்லாம் பழையவை, 8 புது வேலைகள் செய்யப் பட்டன. 6 கொண்டங்களும், 2 ஆற்றுக்கால்வாய்களும் அதிக செலவில் செய்யப்பட்டன. கணக்கு கிடைக்கவில்லை. 1326 முதல் 1347 பசலி வரையில் விருத்திக்காக 4,39,038 ரூபாய் செலவு செய்யப்பட்டது.

(22) காசிம்கோட்டை .. .. .. 6 அணைகளும், பல ஏரிகளும், கால்வாய்களும் இருக்கின்றன. பழைய வைகளே, புதியதோ நல்ல நிலையில் இருக்கின்றன. மேல்வழி யாமலிருக்க சாரதா ஆற்றுக்கும், மலை அருவிகளுக்கும் கரை கட் டப்பட்டிருக்கிறது. வெள்ளம் தடுக்க 15 மைல் கரை கட்டியிருப்ப தால் பல லக்ஷங்கள் செலவாகியிருக்கவேண்டும். இவைகளைக் காப் பாற்றவே 1925 முதல் 1935 வரையில் ரூ. 53,409–12–0 செலவு செய்யப்பட்டது. இக்கரை நஞ்சை நிலங்களுக்கு உதவி செய்வ தால் அதினின்றும் 70,000 ரூபாய் வருமானம் வருகிறது.

(23) தென்வள்ளூர் .. .. .. ஏரிகளும், கால்வாய்களும் 43 இருக்கின்றன எப்போதயவை என்பது தெரியவில்லை. ஆனால் உள்ளூர் விசாரணையில் அவை காலா காலமாய் இருப்பதாய்த் தெரிகிறது. புது வேலைகள் செய்யப்பட வில்லை. கோர்ட் ஆவ் வார்ட்ஸ் பார்வையிலிருக்கும்போது 1318–1326 பசலியில் ரூ. 66,350–12–0 விருத்தி வேலைகள் செய்யப் பட்டது. 1346 பசலியில் மொத்த வரவு ரூ. 19,236–10–0.

(24) செம்முடு .. .. 416 ஏரிகளும், கால்வாய்களும் இருக்கின்றன. சாசுவத செட் டில்மென்டுக்கும் பின் ரூ. 15,526–4–2, புது வேலைகள் 16 செய் யப்பட்டன. ரூ. 47,622–0–4-ல் பழய வேலைகளை சீர்திருத்த செலவு செய்யப்பட்டது. ஆயக்கட்டில் வருஷ வரவு ரூ. 2,74,824–14–10.

(25) புங்கனூர் .. .. 120 சர்க்கார் ஏரிகளும், 1,148 தசபந்தம் ஏரிகளும் இருக்கின்றன. இவை செட்டில்மெண்டுக்கு முந்தியவைகள். பிறகு 20,00,000 ரூபாயில் 47 புது வேலைகள் செய்யப்பட்டன. 1878 முதல் 1931-ம் ஆண்டு வரை சீர்திருத்தத்தில் ரூ. 33,864–11–6 செலவாயிற்று. சராசரி வருஷ வருமானம் ரூ. 1,36,439–10–10.

(26) ராமநாதபுரம் .. .. 1696 பழைய வேலைகள் இருக்கின்றன. செட்டில்மெண்டுக்குப் பிறகு புது வேலை செய்யப்படவில்லை. 1283–1299 பசலி வரையில் கோர்ட்–ஆவ்–வார்ட்ஸ் பாதுகாப்பில் ரூ. 8,29,110–1–3 சீர்திருத்த வேலைகள் செய்யப்பட்டன. 1345-ம் பசலியில் 4,71,971 ரூபாய் செலவு செய்யப்பட்டது. 1346-ம் பசலியில் ஆயக்கட்டின் விஸ்தீ ரணம் 50,042,41 ஏக்கர்கள். அப்போது தீர்வை ரூ. 4,66,907–14–10. 1802-ம்ஆண்டு்த்து ரெண்ட் ரோல் ரூ. 4,97,350. இப்போ துள்ள ரெண்ட் ரோல் ரூ. 13,10,175–1–7.

(27) மந்தாசா .. .. செட்டில்மென்டுபோது 19 நீர்ப்பாசன வேலைகளும் ஒரு ஆறும் இருந் தது. இப்போது 164 இருக்கிறது. விஸ்தீர்ணம் 65,93·44 ஏக்கர். வருஷ தீர்வை ரூ. 60,916–12–11.

(28) பாப்பாஞட் .. .. சாசுவத செட்டில்மென்டுபோது 20 நீர்ப்பாசன வேலைகளிருந்தன. ஒரு புது வேலைகூட செய்யவில்லை.

(27) கடம்பூர் .. .. சில சிறிய சீர்திருத்த வேலைகள் செய்யப்பட்டன.

(30) துறையூர் .. .. வருஷ வருமானம் ரூ. 8,405–4–0.

ஜமீன்தார்களால் தரப்பட்ட கணக்கைக் கொண்டு சிலவற்றை ஆராய்வோம். பித்தாபுரம், ராமனுதபுரம், சிவகங்கை இம்மூன்றையும் எடுத்துக்கொள்ளுவோம். பித்தாபுரத்தில் ரூ. 7,79,433–1–3 புது வேலைகளிலும் சீர்திருத்தத்திலும் செலவு செய்யப்பட்டது. இது 1803-ம் வருஷம் முதல் 1938-ம் வருஷம் வரையில் 136 வருஷங்களில் நடந்த வேலை. தீர்வை ஜாப்தா 1802-ல் 3,92,182 ரூபாயிலிருந்து ரூ. 8,02,711–11–6 உயர்ந்திருக்கிறது.

சிவகங்கையில் கடந்த 136 வருஷங்களில் ரூ. 3,71,966 நீர்ப் பாசனத்திற்கு செலவாயிருக்கிறது. தீர்வை ஜாப்தா ரூ. 4,39,691 ரூபாயிலிருந்து 11,37,146–13–8 ரூபாய்க்கு உயர்ந்திருக்கிறது.

ராமநாதபுரத்தில் சீர்திருத்தத்திற்காக கடந்த 136 வருஷங்களில் ரூ. 13,01,081–1–3 செலவாயிருக் கிறது. தீர்வை ஜாப்தா 1802 வருஷத்தில் 4,97,350 ரூபாயிலிருந்து இப்போது ரூ. 13,10,175–1–7 உயர்ந் திருக்கிறது.

இதனால் செலவு செய்திருப்பதையும் தீர்வை உயர்வையும் பார்த்தால் யாதொரு உவமானமும் இல்லை. அவ்வளவு குறைந்த தொகை சீர்திருத்தச் செலவில் செய்யப்பட்டிருக்கிறது. அதிலிருந்தே தீர்வை உயர்த்த நீதியில்லையெனத் தெரிகிறது. 1802-ம் வருஷம் முதல் செய்துள்ள வேலைகள், சொந்தக்காரர்கள் தாங் கள் பெறும் வருமானத்திற்காக செய்யவேண்டிய வேலைகள். அதனால் சட்டப்படியோ, உண்மையாகவோ அதிகத் தீர்வை கேட்க உரிமையில்லை, நம் முன் சாக்ஷியங்கள் கூறுத பூஸ்திதிகள் சீர்திருத்தத்தில் ஒரு வேலைக்கும் செலவு செய்திருக்கமாட்டார்கள். இத்துடன் நீர்பாசனங்களைப்பற்றிய அறிக்கை இருப் பதால் அதைப் பார்க்கில் தெரியும். சர்க்காரிடம் மாற்றமில்லாத பேஷ்கஷ்பேரில் பூஸ்திதிகளை ஏற்றுக் கொண்டு கடந்த 136 வருஷங்களாக தங்கள் வேலையான நீர்ப்பாசனங்களை கவனிக்கும் பொறுப்பைகூடச் செய்யவில்லை, மாறுக வரி உயர்த்துவதிலும், விவசாயிகளின் உரிமைகளை வழக்காடி பறிப்பதிலுமே காலம் கழித்தனர். விவசாயிகள் ஏழையானர்களென்றுல் இப்படி உயரிய வரி தரவேண்டி கடன்பட்டு ஏழையானர்கள் என்பதில் ஆச்சர்யமில்லை.

நிலச் சுவான்தார்கள் வரியுயர்த்த முறைப்படி இடமேயில்லை. ஏதாகிலும் செய்திருந்தாலும்கூட அது இஷ்டமின்றி ஏற்றுக்கொண்ட பொறுப்புக்கு மிகக் குறைவாகவே செய்திருக்கின்றனர்கள். எந்தபடி விவசாயிகள் வரிதர ஏற்றுக்கொண்டனரோ அதன்படி நீர்ப்பாசன வசதிகளை செய்யவேயில்லை.

காடுகள்.—விவசாயிக்கு நிலத்தில் உரிமையிருக்கிறதென்றதால் காட்டில் விளையும் பொருள்களிலும் இயற்கை போகங்களிலும் உரிமை உண்டு என்பதாகும். ஆனால் விவசாயிகள் காட்டை அழித்து உழவு நிலமாக்கிவிடக்கூடாது. காட்டை அழித்துவிட்டால் மழை பெய்யாது. பஞ்சம் வரும். அதனால் சர்க்கார் காடுகளைக் காப்பாற்றி விவசாயிகளுக்கு இயற்கையின்பங்களை வழங்கவேண்டும். ஜமீன்தார்களோ இவ்வித உரிமைகளை விவசாயிகளுக்கு மறுப்பதோடல்லாமல், பணம் சம்பாதிக்கும்பொருட்டு பரந்த நிலங்களை விவசாயத்திற்கென விடுகிறார்கள். அதன் சார்பாய் ஒரு தஸ்தவேஜு கிடைத்திருக்கிறது. சென்னை கவர்னர் அவர்களுக்கு திருநெல்வேலி ஜில்லா தாம்பரபரணி ஆற்றின் விவசாயிகள் ஒரு மனு அனுப்பியிருக்கிறார்கள். அங்கு 68,716 ஏக்கர், இரண்டு போக நிலங்களும், 4,802 ஏக்கர் ஒரு போக நிலங்களும் இருக்கிறதாம். இருபோக நிலத்திற்கு, எங்குமில்லாத தீர்வை, ஏக்கரா ஒன்றுக்கு ரூ. 22-8-0 விதித்து இருக்கிறதாம். ஆனால் நீர்ப்பாசன வசதியோ பூராவும்கவனிக்கப்படவில்லையாம்.

மற்றும் ஜமீன்தார் 8,000 ஏக்ரா நிலங்களை மலைச்சரிவில் தேயிலை, ரப்பர், விளைவதற்கு பர்மா கார்பரேஷன் கம்பெனிக்கு குத்தகைக்குவிட்டு இருக்கிறாராம். மற்றும் வேறு ஒரு ஒப்பந்தம் அதேபோல செய்திருக்கிறாராம். இது 10,000 ஏக்கர் நிலத்திற்காம். இது மலைமேலிருக்கும் காடுகளை அழிப்பதாகும். அதனால் மழை பொழியாமல் ஜலம் குறைந்து பயிர்களை நாசம் செய்து, சர்க்காருக்கு வரும் வரியைக் குறைப்பதாகும் என்கின்றனர். இந்த மனு எக்ஸ்பிட் 476-ஆக அச்சிட்டிருக்கிறது.

காட்டு இலாக்காவில் வேலையில்லாத பல உத்தியோகங்கள் இருப்பதால் அவைகளை எடுத்துவிட்டு, தக்க பயிற்சி அளித்து கிராமத்தாரின் பாதுகாப்பில் காடுகளை விட்டுவிடவேண்டும்.

சர்வேயும் செட்டில்மெண்டும்.—நிரந்தரமாய் தீர்வை மதிப்பிட்ட நிலங்களைப்பற்றி செட்டில்மெண்டு வேண்டியதில்லை. அதனால் எஸ்டேட் நிலச்சட்டத்தில் இதைப்பற்றியுள்ள நிபந்தனைகளை எடுத்துவிடலாம். சர்வே செய்வதற்கு ஏற்பாடு செய்யவேண்டும்.

தீர்ப்பு ஸ்தலம்.—நீதி இலாகாவையும், நடைமுறை இலாக்காவையும் காங்க்ரஸ்க்காரர் சென்ற 50 ஆண்டுகளாக பிரிக்கவேண்டுமென்றபடி பிரிக்கவில்லை யென்கின்றனர். ஆங்கில அரசாட்சி ஏற்படுத்திய இராஜாங்க முறையால் முன்பு கிராமங்களிலே தீரும் வழக்குகள் தூரமுள்ள பட்டணங்களுக்குப்போய், ஸ்டாம்ப் முதலியவற்றிற்கு அதிகச் செலவு செய்து ரயத்துகளைக் கடன்காரர்களாக்கும் படி ஏற்பட்டுவிட்டது. அதனால் வழக்குகள்கூட குறைந்து கோர்ட்டுகளுக்கு வேலையற்றுப் போயிற்று. இதனால் ஸ்டாம்புகளைக் குறைத்து விவசாயிகளுக்கு அருகாமையிலேயே வழக்குகளை விசாரிக்க தக்க முறை கையாளவேண்டும். கிராம வாழ்க்கை விருத்தியாகி தாங்களே இவ்விஷயங்களைக் கவனிக்கும் வரையில் தக்க ஏற்பாடு செய்யவேண்டும். இல்லாவிட்டால் கோர்ட்டுகளை மூடவேண்டிய காலம் வந்துவிடும்.

9-ம் அத்தியாயம்—நாணய மாற்றமும், கரன்ஸியும் முடிவு.

ஹிந்து, முகமதிய அரசாட்சியில் மாசூலாகவே அரசர்களுக்கு இராஜங்கத்தை நடத்தவும், பொது வேலைகளைக் கவனிக்கவும் தீர்வை தரப்பட்டு வந்தது. அக்காலத்தில் வெளிநாட்டார் கொள்ளை அடித்துப்போகாமல் அரசர்கள் இங்கேயேயிருந்து வந்தார்கள். ஆங்கிலேயே அரசாட்சியில் அரசன் வெளிநாட்டிலிருந்து தன் ஆட்களைக்கொண்டு ஆட்சி புரிகிறார். ஆரம்பத்தில் இங்கு வியாபாரத்திற்காக வந்து தங்கள் அரசை நிலை நாட்டியபின் தங்கள் வியாபாரத்திற்கும் கைத்தொழிலுக்கும் யந்திரசாலைகளுக்கும் சாதகமாக கொள்ளையடிக்க ஆரம்பித்தனர். சர் ஜான் ஷோரும், லார்ட் கார்ண்வாலிசும் இந்தியாவின் விவசாயம், வியாபாரம், கைத்தொழில் முதலியவற்றை விருத்தி செய்வதோடு தங்கள் நாட்டு நலனையும் மேம்படுத்தினர். பெர்மனன்ட் செட்டில்மெண்டுக்குமுன் இந்தியா நல்ல நிலையிலிருந்ததென்றே சொல்லவேண்டும். இந்தியர்கள் படகுகளும் கப்பல்களும் உள்நாட்டு வியாபாரத்திற்கும் வெளிதேச வியாபாரத்திற்கும் செய்துவந்தனர். ஜமக்காளம், நெசவு, முதலிய கைத்தொழில் ஒவ்வொரு ஜில்லாவிலுமிருந்தது. கடைகளிலெல்லாம் உள்ளூர்ப் பொருள்கள் நிறைந்திருந்தன. அதை மட்டும் வளர்த்தி அத்துடன் தங்கள் வியாபாரத்தைப் பலப்படுத்தியிருந்தால் இங்கிலாந்து நல்ல நிலையிலிருக்கலாம். அதில்லாமல் ஒவ்வொரு வேலையையும், கைத்தொழில், ஜமக்காளம் செய்தல், நெசவு, கப்பல், துறைமுகம் முதலியவெல்லாம் கெடுத்து க்ஷீணதிசையில் விட்டுவிட்டார்கள். கிராமங்கள் சர்கூட் கமிட்டியார் சொன்னதைப்போல பொந்துகளாகிவிட்டன. மாசூலில் பங்கு வாங்கு முறையைமாற்றி பணமாக வாங்கும் வழக்கம் தலைப்பட்டவுடன், ஆங்கிலேயர் வர்த்தகம் விருத்தியாவதற்குத் தக்கபடி நாணயமாற்றம் செய்யப்பட்டது. நிலையான நாணயமாற்றமிருந்தால் நன்மையாயிருந்திருக்கும். முதலில் ஸ்டார் பகோடா என்னும் பொன்னை கம்பெனியார் வழங்கிவந்து பின்னர் வெள்ளி ரூபாய்க்கு மாற்றினர். அதனால் ஆங்கிலேயர் வெகு நன்மையடைந்தனர். விவசாயிகள் பாதிக்கப்பட்டனர். 1818-ம் வருஷத்தில் 1 ஷி. 4, பெ. 2 ஷி. மாற்றப்பட்டது. அது போலவே ரேஷியோ 1920-ம் வருஷத்திலும் 2 ஷி. விகிதம் செய்யப்பட்டது. அதனால் விவசாயிக்கு 15 ரூபாய்க்கு பதில் 10 ரூபாய் தரப்பட்டது. 1927-ம் வருஷத்தில் 15 ரூபாய்க்கு பதில் ரூ. 13-5-4 கிடைத்தது. அதைப்பற்றி மூரும், கேம்பலும் கண்டித்து எழுதியிருக்கின்றனர். இவ்வித நாணயமாற்றம் இங்கு விளைவுசெய்யும் விவசாயிகளை பாதிக்கிறது. ஏற்றுமதி இறக்குமதி ஒன்றானதால் பாதிக்காதென்பது பிசகு. உண்மையில் விவசாயி பாதிக்கப்படுகிறார். இது நல்ல முறையல்லவென்று பலர் எழுதியிருக்கின்றனர்.

லாங்கு அவர்கள் கூறியதாவது :—ஒரு நல்ல சர்க்கார் கீழ்த்தரமான, கொடிய திட்டத்தால் கொஞ்சம் மீறினால் விரைவில் 10 மடங்கு செலவு அதிகமாகி 100 மடங்கு நம்பிக்கையை இழக்கும்படி நேரிடும்." அதன்படி இன்று இங்கிலீஷ் சரக்குகள் இங்கு இல்லை. ஜப்பானியர் வந்துவிட்டனர். இவ்வித இங்கிலீஷ் நாணய முறையே இக்கேட்டிற்குக் காரணம். இதற்கு மருந்து உள்நாட்டுப் பொருளை விருத்திசெய்து உள்நாட்டில் விற்று பிறகு மற்ற மாகாணங்களில் பேரம் செய்யவேண்டும். இதற்குத் தக்கபடி சட்டசபை ஏற்பாடுகள் செய்யவேண்டும்.

10-ம் அத்தியாயம்—வழக்குத் தீர்ப்புகளின் சட்டம்.

இதைப்பற்றி 10-ம் அத்தியாயத்தில் கூறியிருக்கிறது. இதன்படி நிலத்துக்குடையவர் விவசாயியை அப்புறப்படுத்துவதற்கில்லை. தீர்வையையும் உயர்த்துவதற்கில்லை. வரி வசூலிக்கும் உரிமையோடு, தங்கள் சொந்த நிலத்தில் உரிமையுண்டே ஒழிய மற்ற உரிமை நிலத்துக்குடையவர்களுக்கில்லை. எந்த நல்ல நோக்கத்தோடு லார்ட் வெல்லஸ்லி, லார்ட் கார்ன்வாலிஸ் கோர்ட்டுகள் ஏற்படுத்தினார்களோ அதன்படி நடக்கவில்லை. இவைகளை எடுத்துவிட்டு நல்லமுறையில் கிராமத்தாருக்கு தக்க பயனளிக்கும்படி கிராமப் பஞ்சாயத்தார்களுக்கே அதிகாரம் தரவேண்டும்.

11-ம் அத்தியாயம்—இனும்.

பெர்மனெனன்ட் செட்டில்மெண்டுபோது மதிக்கப்பட்ட பூஸ்திதிகளிலிருந்து இனும்கள் விலக்கப்பட்டன. இதற்கென, 1802-ம்வருஷத்தில் 31-வது ரெகுலேஷன் ஏற்பட்டது. 1869-ம்வருஷம் வரை அது அமுலிலிருந்தது, 1831-ம்வருஷத்து 4-வது ரெகுலேஷன், 1836-ம்வருஷத்து 31-வது ரெகுலேஷன், 1831-ம்வருஷத்து 6-வது ரெகுலேஷன்களெல்லாம் 1802-ம்வருஷத்து 31-வது ரெகுலேஷனுக்கு சார்பாய் ஏற்பட்டன. இவைகளோடு 1862-ம்வருஷத்து 4-ம் இனும் சட்டம், 1866-ம்வருஷத்து 4-வது, 1869-ம்வருஷத்து 8-வது இனும் சட்டங்களும் செய்யப்பட்டன. 1871-ம்வருஷத்தில் 23-ம் சட்டமாக இந்திய சர்க்கார் சட்டமும் செய்யப்பட்டு சில பாகங்கள் ரத்து செய்யப்பட்டன.

சேர்க்கப்பட்ட இனும்கள்.

விலக்கப்பட்ட இனும்களை எஸ்டேட் நிலச் சட்டத்தில் சேர்க்கமுடியாது என்று விளக்கமாய் சட்டங்களில் கூறிவிடவேண்டும். மற்றபடி எதைச் சேர்க்கவேண்டுமென்றால், ஒப்பந்தத்தாலே சர்க்கார் அனந்தர வார்சை ஒரு நிலத்துக்குடையவருக்குத் தந்துவிட்டால் அப்பேர்ப்பட்ட இனும்களைச் சேர்த்துவிடலாம். இதுமாதிரி பல இருக்காது. இதற்குமுன்கூட ஜமீன்தார்களுடனும் பாளையக்காரர்களுடனும் சர்க்கார் ஒப்பந்தம்செய்திருக்கக் கூடிய விவகாரங்கள் பல இருக்கமுடியாது.

செட்டில்மெண்டுக்குப் பிந்திய இனும்கள்.

இவைகளெல்லாம் செல்லத்தகாதவை என தீர்மானிக்கப்பட்டன. நிலத்துக்குடையவர் வரி வசூலிப்பவரே யன்றி சொந்தக்காரரில்லை. பேஷ்கஷ் கட்டாவிட்டால் சர்க்கார் ஜப்தி செய்து பிரவேசிக்கமுடியும். அதனால் முதல் உரிமை சர்க்காருக்கு இருக்கும்போது, தங்கள் இஷ்டப்படி இனும் தர அவர்களுக்கு உரிமையில்லை. இது 25 ரெகுலேஷனால் 12-ம் பிரிவுப்படி தடுக்கப்பட்டிருக்கிறது. அப்படி கிராண்ட் செய்திருப்பது சர்க்காருக்குத் தெரிந்தால் அதை வாபீஸ் வாங்க சர்க்காருக்கு அதிகாரமுண்டு. கொடுத்தவர் ஆயுள்வரைதான் செல்லும். இதில் அனுபவ உரிமை வராது. ஏற்கனவே விவசாயி நிலத்திலிருப்பதால் அவனுக்குத்தான் அனுபவ உரிமை உண்டு. இதனால் இனும்தாருக்கு, இவ்வித இனும்களின் மேல்வார உரிமைதான் உண்டு. இதனால் புதுச் சட்டத்தில் விலக்கப்பட்ட இனும்கள், பர்மனென்ட் செட்டில்மெண்டு ரெகுலேஷனுக்கு கட்டுப் பட்டதல்லவென்றும், எஸ்டேட் என்னும் சொல்லின்கீழ்வரும் இனும்களெல்லாம் இந்த ரெகுலேஷனுக்குட் பட்டதென்றும் தீர்மானிக்கவேண்டும். செட்டில்மெண்டுக்குப் பிந்திய இனும்கள் செல்லாதென்றும் சர்க்கார் அவைகளைப்பற்றி அறிந்தவுடன் வாபீஸ் வாங்கிக்கொள்ளலாமென்றும் ஏற்படுத்திவிடவேண்டும்.

ஏஜன்ஸி பாகங்கள்.

கஞ்சம், விசாகபட்டணம், கோதாவரி முதலிய ஜில்லாக்களிலுள்ள ஏஜென்ஸி பாகங்களைப்பற்றி. அவைகள் இந்திய சர்க்கார் சட்டப்படி நடைமுறையிலிருந்து ஒருவாறு விலக்கப்பட்ட பாகங்களானதால் தனி அத்தியாயத்தில் கவனிக்கவேண்டும். அந்த இடங்களில் வேலை செய்பவர்கள் கவர்னர் ஏஜெண்டுகளாக இருக் கிறார்கள். ஜனங்கள் பிரதிநிதிகளாகக் காரியங்களைச் செய்யவில்லை. முன்பு அந்த பாகங்கள் வசிப்பதற்கில்லாமல் மலேரியா முதலிய பிணிகள் நிறைந்த இடமாக இருந்தன. ஐம்பது, அறுபது ஆண்டுகளாக வியாபாரிகள்போய், போக்குவரத்து சௌகரியங்கள் ஏற்படவும், கோர்ட்டு, தாலூகா கச்சேரிகள் உண்டாகவும், அங்குள்ள பொருள் கள் ஏராளமாகவும் விலை குறைவாயும் கிடைப்பதால் பலரால் இப்போது பிரவேசிக்கப்பட்டுவிட்டன. முன்பு அங்கே பொதுப் பண்ணை நடந்துவந்தது. தீர்வை செலுத்திவிட்டு அங்கிருப்பவர்கள் காடுகளையும் நிலங்களையும் சொந்தமாக அனுபவிக்கலாம். ஜமீந்தார்களுக்கோ, முட்டாதார்களுக்கோ, சர்க்கார் ஏஜெண்டுகளுக்கோ, தீர்வை செலுத்தவேண்டும். இப்போது முட்டாதார்களுக்கு சந்நது தரப்பட்டு தீர்வை வசூலிக்கப்படுகிறது. முட்டா தார்கள் சுதேசப் பிரதேசத்து நிலத்துக்குடையவர்கள் போலாவார். ஆனால் அவர்கள் மிகக் கொடுமையாக ஆட்சி புரிகிறார்கள் என்று மலைவாசிகள் கூறுகிறார்கள். செட்டில்மெண்டும் சர்வேயும் செய்யப்படவில்லை. விஸ்தீர்ணத்திற்கு தக்க குடிவளமில்லை. ஒவ்வொரு விவசாயியும் தன் இஷ்டப்பட்ட அளவு நிலம் மாசூல் செய்யலாம். விஜயநகரம், மட்கோல், ஜெயபூர், பர்லாகிமிடி ஜமீன்களிலும், கஞ்சம், விசாகபட்டணம் ஜில்லாக்களிலும் ஏராளமான பிரதேசங்கள் இருக்கின்றன. சாக்ஷிகள் தாங்கள் படும் கஷ்டங்களைப்பற்றிக் கூறினர். உத்தியோகஸ்தர்களும் கூலியின்றி வேலை வாங்குவதாக சாக்ஷியம் சொன்னார்கள். தவறினால் அவர்கள் விற்பனைக்குக் கொண்டுவரும் காட்டுப்பொருள்களுக்காக அநியாயமாய் பணம் பறிப்பதாய்க் கூறுகிறார் கள். பல விலையுயர்ந்த சாமான்கள் காடுகளில் உண்டாகின்றன. பழங்கள் பல லக்ஷக்கணக்காய் விளைகின்றன. புளி ஏராளமாக காய்க்கின்றது. அங்கிருந்து எல்லாம் இங்கு கொண்டுவர தக்க வசதியில்லாததால் பாழாகப் போகின்றன. போக்குவரவு சாதனங்களை விருத்தி செய்யவேண்டும். மடகோலுக்கும் கோதாவரியின் மேல்ப் பாகத்திற்குமே வழியில்லை. நிலங்களை விற்க சுதந்தரம் தரப்பட்டிருக்கிறது. “லாண்ட் எலியனேஷன்” ஆக்ட் இருந்தும் பிரயோகிக்கப்படவில்லை. விவசாயிகள் அதிகத் தீர்வையால் பாதிக்கப்படுவதாக குறைகூறுகிறார்கள்.

தீர்ப்பும் சிபார்சுகளும்.

நாங்கள் நேராகவும், தஸ்தாவேஜுகள் மூலமாகவும் இருதரப்பிலும் வந்த சாக்ஷியங்களை ஆராய்ந்து எங்கள் தீர்ப்பையும் சிபார்சுகளையும் எழுதுகிறோம். எங்கள் கேள்விகள் 10 தலைப்பின்கீழ் இந்த அறிக்கையின் முதலில் வந்திருக்கின்றன.

முதற் கேள்வி :—

(ஏ) உங்கள் அபிப்பிராயப்படி நிலத்துக்குச் சொந்தக்காரர் யார்? ஜமீந்தாரா அல்லது விவசாயியா?

(பி) ஜமீந்தாரை ஒத்திட்டு விவசாயிக்கு நிலத்தில் என்ன உரிமை இருக்கிறது?

எஸ்டேட் நிலச் சட்டம் 4-ம் பிரிவின்படியும், நிலத்தின் பொதுச் சட்டப்படியும், உண்மைப்படியும் சாக்ஷியங்கள்படியும் நாங்கள் விவசாயிதான், நிலத்துக்குச் சொந்தக்காரரென்றும் ஜமீந்தாருக்கு அனுபவ உரிமைகூட இல்லையென்றும் அவர் வரி வசூலிப்பவரென்றும் தீர்மானிக்கிறோம். தன் சொந்த நிலத்தில்தான் அவருக்கு அனுபவ உரிமையுண்டு. பெர்மனென்ட் செட்டில்மெண்டு ரெகுலேஷனில் கூறியிருப்பதற் கும் எஸ்டேட் நிலச்சட்டத்தின் 4-ம் பிரிவிற்கும் ஒத்துமையுண்டு. அது சரியாக விளக்கப்பட்டிருக்கிறது.

ரயத்வாரி நிலத்து ரயத்துபோல ஜமீன் ரயத்துகளுக்கும் நிலத்தில் சொந்த உரிமையுண்டு. நிலத்துக் குடையவருக்குமட்டும் சர்க்கார் ஏஜெண்டாக தீர்வை செலுத்திவிடவேண்டும். சாசுவத செட்டில்மெண்ட்போது ஏற்பட்ட தீர்வையைச் செலுத்திவிட்டு, பூமியிலுள்ள சொந்தம் அதை வும், அனுபவிக்கவும், மற்றொருவருக்குக் கொடுத்துவிடவும் பாத்தியதை உண்டு. ஜமீன் தாருடன் ஒப்பந்தத்தாலோ குத்தகையாலோ விவசாயிக்கு உரிமை வரவில்லை. தன் சொந்த ஹோதாவில் தன்முன்னோர்களைப்போல வைத்துக்கொண்டும் நடத்திக்கொண்டும் விவசாயி வரு கிறார்.

இரு விஷயங்களிலும் ரயத்துக்கு அனுகூலமாக தீர்ப்பளித்தபிறகு சட்ட சபைக்கு நிரந்தரமாய் ஏற்பட்ட பூஸ்திதிகளைப்பற்றி, ரயத்துதான் பூமிக்குச் சொந்தக்காரரென்றும், பெர்மனெண்ட் செட் டில்மெண்டுபோது பூஸ்திதிக்காரருக்கும் தனக்குமுள்ள ஒப்பந்தத்திற்கு கட்டுபட்டு, தீர்வை செலுத்தி நிலத்தை தன் சொந்தமாக ஆண்டு அனுபவித்துக்கொள்ளும்படி ஒரு நிலத்தீர்வை மசோதா கொண்டுவரும்படி சிபார்சு செய்கிறோம்.

2-ம் தலைப்பில் 2-வது, 3-வது கேள்விகள் நியாயமான குத்தகையைப்பற்றித் தெரிவிக்கின்றனன்.

(ஏ) நியாயமும் பாரபக்ஷமல்லாமலுமுள்ள வரிவிகிதம் எது? சாக்ஷியங்களையும் நீதியையும், சட்ட முறையும் நாங்கள் அலசிப்பார்த்ததில் சாசுவத செட்டில்மெண்டுபோது ஏற்பட்டதே நியாயமான வரியென்று ஏற்படுகிறது. பெர்மனண்ட் செட்டில்மெண்டுபோது நிலத்தீர்வை மதிப்பென்பதற்கு ரெண்ட் என்று பிசகாக வரி சொல்லிவிட்டார்கள். நிலத்தீர்வை மதிப்பிடுமுன் சர்க்காருக்குத்தரும் மாகூல் பங்கு நிர்ணயம் செய்யப்பட்டது. ஹிந்து மன்னர் காலங்களில் 6-ல் ஒரு பங்கு இருந்தது. மகமதியர் காலத் தில் 3-ல் ஒரு பங்காயிற்று. ஆங்கிலேயர்காலத்தில் நிரந்தரமாகுமுன் மாறிமாறி இருந்தது. அது சர்க்கார் ஜமீன்தாருக்குத் தந்த அரசுரிமையாகும். இதற்கு நல்ல உபமானம் உடையார்பாளையம் இதற்கு அறுநூற்றுச்சில்லரை ரூபாய்கள் பேஷ்கஷாக ஏற்பட்டது. வெங்கடகிரி, கார்வெட்நகரம், காளாஸ்த்திரி முதலிய இடங்களில் ராணுவத்தையொட்டி ஏற்பட்டது. வரி விஷயத்தில் பலர் பலமாதிரி ஏற்பாடு செய்ய வேண்டுமென்றனர்.

நாங்கள் சாசுவத செட்டில்மெண்டுபோது நிரந்தரமாய் ஏற்படுத்திய நிலத்தீர்வை சரி என்கி றோம். அதனால் சட்ட சபைக்கு, சாசுவத செட்டில்மெண்டுபோது பணமாக ஏற்பட்ட நிலத் தீர்வை சரியென்று அங்கீகரித்து விளம்பரம் செய்யுமாறு சிபார்சு செய்கிறோம். அல்லது மாகூலானால், அப்போது தரப்பட்ட மொத்த மாகூலையும், மொத்த நிலங்களால் வகுத்து ஒரு ஏக்கருக்கு வருவதை நிச்சயிக்கவேண்டும்.

கீழ்க்கண்ட சிபார்சுகளை நாங்கள் சட்டசபைக்குத் தெரிவித்திருக்கிறோம் :—

நாங்கள் செய்யவிருக்கும் திருத்தங்கள் தீவிரமானவையாதலின் எஸ்டேட் நிலச்சட்டம் பூராவும் ரத்து செய்துவிடவேண்டும். அதற்கு பதில் 1898-ம் வருஷத்தில் "டெனன்சி பில்" செலக் கமிட்டி யாரால் திருத்தப்பட்டதையொட்டிய "சென்னை பூஸ்திதிகளிலுள்ள நிலத்தின் தீர்வை மசோதா" என்ற சட்டம் கொண்டுவரவேண்டும்.

(2) எஸ்டேட் நிலச்சட்டத்திலுள்ள "ரெண்ட்" "குத்தகை" என்ற வார்த்தை நீக்கப்பட்டு "நிலத் தீர்வை" என்று கொண்டுவரவேண்டும்.

(3) எஸ்டேட் நிலச்சட்டத்தின் 30—35 பிரிவுகளுக்குப் பதிலாக பட்டா ரெகுலேஷனின் 7-ம் பிரிவு 9-ம் பிரிவு இரண்டும் சேரவேண்டும்.

சாசுவத செட்டில்மெண்டுபோது நிர்ணயித்த வரியே சரியென்று விளம்பரம் செய்ய வேண்டும். பர்மனெண்ட் செட்டில்மெண்டுக்கு முந்திய வருஷத்தில் குத்தகையை மதிக்க பலவிதங்களாகத் தீர்மானிக்கலாம்.

(1) பொப்பிலி, பித்தாபுரம், விஜயநகரம், ராமனாதபுரம் போன்ற பூஸ்திதிகளில் சாசுவத் செட்டில்மெண்டுக்கு, சொத்து, கணக்கு எடுத்து இருப்பதால், அங்கு "கன்வர்ஷன் ரேட்" உபயோ கிக்கலாம்.

(2) ஹாவலி எஸ்டேட்போன்ற இடங்களில் சாசுவத செட்டில்மெண்டுபோது இருந்த சர்க்கார் நிலங்களைப்போல விதிக்கலாம்.

(3) சாசுவத செட்டில்மெண்டுபோது இருந்த மதிப்புப்படி பழய கணக்குகளிலிருந்து தெரிந்தால் அப்படியே ஏற்படுத்தலாம். அவைகள் ராமனாதபுரம், மருங்காபுரி, ஆண்டிப்பட்டி கலெக்டர் களால் தரப்பட்டிருக்கிறது.

(4) நஞ்சை, புஞ்சை நிலங்களுக்கு மேல்வாரம்தாருக்கு தரப்பட்ட மதிப்புபடி ஏற்படுத்தலாம். அல்லது தக்கபடி விசாரணை செய்து ஒரு ஏக்ராவுக்கு சராசரி எவ்வளவு மாகூல் ஆகும் என தெரிந்துகொண்டு, அதில் எவ்வளவு மேல்வாரம்தாருக்குத் தரப்படுகிறதே அதை சாசுவத செட்டில்மெண்டுக்கு முந்திய வருஷத்து விலைப்படித் தீர்மானிக்கலாம். அதற்காக விசாரணை கீழ்க்கண்டபடி செய்யவேண்டும் :—

(1) தக்கபடி ஒரு இடம் தெரிந்தெடுக்கவேண்டும்.

(2) முறைப்படி சர்வே செய்யவேண்டும்.

(3) விசாரணைசெய்து ஒரு ஏகராவில் என்ன மாகூல் என அறியவேண்டும்.

(4) மேல்வாரம் எப்படி தரப்படுகிறதென்று தெரியவேண்டும்.

(5) சாசுவத செட்டில்மெண்டுக்கு முந்திய வருஷத்து விலைப்படி மதிப்பிடவேண்டும்.

இப்போது முன் காலத்தைவிட எஸ்டேட்டுகள் நன்றாகவே கவனிக்கப்படுவதாய்க் கொள்ளவேண்டும். அதனால் மாகூலும் அதிகமென்றால் முன்முறைப்படி ஜமீன்தாரின் வருமானமும் அதிகமாகும். அதனால் இது தக்க முறையென்றே கொள்ளலாம்.

2-ம் கேள்வியின் (பி) பிரிவு நியாயமான தீர்வையென்பதைப்பற்றியது. 1802-ம் வருஷத்தில் பேஷ்கஷ் எப்படி நிர்ணயித்து மாறுதலன்றியிருக்கிறதோ அதுபோல நிலத்தீர்வை (ஜமீன்தாருக்குக் கட்டவேண் டியதும்) மாறுதலன்றி இருப்பதாகவே கொள்ளவேண்டும் ஒப்பந்தமோ, குத்தகையோவானால் அப்படி இஷ்டம்போல உயர்த்தலாம் விவசாயி ஜமீன்தாரிடம் உரிமைபெறவில்லை விவசாயிக்கும் சர்க்காருக்கும் தான் தீர்வையைப்பற்றிய ஏற்பாடு. ஆனால், ஜமீன்தாருக்கு சர்க்கார், வசூலிக்கும் அதிகாரத்தைத்

கொடுத்தனர். சன்னதுகளிலும் கபூலியத்துகளிலும் நிர்ணயமாய் முடிவுகட்டிய தீர்வையை உயர்த்தாமல் வசூலிக்கவேண்டுமெனவே இருக்கிறது. அது தவறினால் முறையற்றது. நம்பிக்கை மோசமானது பெர்மனெனட் செட்டில்மெண்டு ஏற்பாட்டிற்குமாருனது.

2-வது கேள்வியின் (ஸி) பிரிவு —வரி குறைப்பதைப்பற்றியது. விவசாயி, தன் பிசகாலில்லாமல், விளை யாவிட்டாலும், பயிரிடமுடியாவிட்டாலும், வரியைக் குறைக்கக் கேட்கலாம். தன் கட்டுக்கு மீறி விளையாத போது வரி குறைக்க சட்டமுறையாக விளம்பரம் செய்யவேண்டும்.

(டி) பிரிவுபடி.—நாங்களா வரி நிர்ணயம்செய்வது ? நாங்கள் முறையைக் குறிப்பிட்டோம். சட்ட சபை ஒரு கமிஷன் ஏற்பாடு செய்து முறைப்படி விசாரணை செய்து, முடிவுசெய்யலாம்.

2-ம் கேள்வியின் (இ) பிரிவு.—நிலத்துக்குடையவருக்கு ஜப்தி செய்யவும் நிலத்தை விற்கவும் அதி காரம் தரக்கூடாது. வேண்டுமானுல் வரி பாக்கிக்காக எவ்வளவுவேண்டுமோ அவ்வளவுமட்டும் செய்யலாம். விவசாயியை சிறையிலிடக்கூடாது. பூஸ்திதிக்காரருக்கு சர்க்காரைப்போல மாகூலில் முதல் உரிமை இருக்கலாம். மீதிக் குத்தகையை வசூலிக்க அதிக செலவில்லாமல் சுருக்கமான முறையாக இருக்க வேண்டும்.

இரண்டாம் தலைப்பின்கீழ் நாங்கள் பர்மனெனட் செட்டில்மெண்டுக்கு முன் வருஷம் ஏற்படுத்திய தீர்வையே சரியென்றும் அதனால் அதன்படி தீர்மானிக்கப்பட்டவரியுடன் நிரந்தரப்பட்டாவை நிலத்துக்குடைய வர் விவசாயிக்குத் தரவேண்டுமென்றும் அப்பேர்ப்பட்ட பட்டாவும் முச்சிலிக்கையும், நிலத்துக்குடையவருக்கும் விவசாயிக்கும் ஒரு பெரிய சாஷியமாக இருக்கவேண்டுமென்றும் கூறுகிறோம்.

கரம்பை நிலங்கள் மாகூலுக்குக் கொண்டுவரப்படுவதால் அவைகளுக்கும் தீர்வை நிர்ணயித்து மாறு தலில்லாதபடி பட்டா தரவேண்டும். அதற்கென ஒரு செட்டில்மெண்ட் ஆபீசர் நியமிக்கவேண்டும். விஜயநகரம், பித்தாபுரம், ராமனுதபுரம், கார்வெட்நகரம் போன்ற இடங்களுக்கு ஏற்படுத்திய முறைப்படி அவர் தீர்வை தீர்மானிக்கவேண்டும்.

மேற்கூறியபடி வரி மாற்றமில்லாமலும், தங்களுக்கு நிலத்தில் உரிமையிருக்கிறதென்றும் விவசாயி களுக்கு ஏற்பட்டால், தீர்வையும் முறையாகவரும். வழக்கும் குறையும். சர் ஜான் ஹோர், லார்ட் கார்ன்வாலிஸ் சொன்னபடி இத்தேசம் முன்னேற்றமடைய ஆரம்பிக்கும்.

2, 3 கேள்விகளுக்கு எங்கள் தீர்ப்பபையும் சிபார்சையும் கூறிவிட்டோம். இப்போது சட்டம் செய்ய ஒரு முறைதருகிறோம். அதன் முன்னுரையில் கீழ் வருவன இருக்கவேண்டும் :—பர்மனெனட் செட்டில்மெண்டுக்கு முந்திய நிலை பர்மனெனட் செட்டில்மெண்டின் நோக்கம் எப்படி நிரந்தர மாய் ஏற்பட்ட தீர்வை மாற்றப்பட்டது ? ஏன் விவசாயிகளின் உரிமை பாதிக்கப்பட்டது ? சட்டங் களாலும், கோர்ட்டுகளாலும் ஏன் குழப்பம் உண்டாயிற்று. ? இன்று கடந்த 138 ஆண்டுகளாக விவசாயிகள் பட்ட கஷ்டம் எப்படித் தெரிந்தது ? எப்படி பேஷ்கஷ்மட்டும் மாறுதலின்றியிருந்து வருகிறது ? அதனல் நியாயமான தீர்வை ஏற்படுத்தவேண்டிய அவசியம் அல்லவா ? 1802-ம் வருஷத்து முன் வருஷத்து தீர்வையே சரியென்று கூற வந்த காரணம் யாது ? இவைகளைப்பற்றி விபரமாகத் தெரிவிக்கவேண்டும்.

முதலிலேயே, "சென்னை பூஸ்திதிகளிலுள்ள நிலத்தீர்வை மசோதா" என்பது சாசுவதமாக ஏற் பட்டுள்ள பூஸ்திதிகளுக்கும், அதில் அடங்கிய ஜமீன்தார்கள், விவசாயிகளுக்கு மட்டுமென்றும், ரயத்வாரி ரயத்துகளுக்கும், இனும்தார்களுக்கும், அல்லது இச்சட்டத்தில் நிலச்சுவான்தார், நிலத்துக்குடையவர், எவர் என்பதிலடங்காதவர்களுக்குமில்லையென்று தெளிவாகத் தெரிவிக்கவேண்டும்.

மேற்கூறியவற்றைத் தெரிவித்துவிட்டு, பிறகு பட்டா ரெகுலேஷன், பெர்மனெனட் செட்டில்மெண்டு ரெகுலேஷன்போல சட்டமொன்று செய்யவேண்டும். சுமார் 50 பிரிவுகளில், பூரா விஷயங்களுக்கும் ஒரு மசோதா செய்யலாம்.

1802-ம் வருஷத்து 28-ம் ரெகுலேஷன்படி, தீர்வை வசூலிக்கவும், பாக்கியைக் கைப்பற்றவும், முறையை அனுஷ்டிக்கவும் தக்க நிபந்தனைகள் ஏற்படுத்தவேண்டும். பெர்மனன்ட் செட்டில்மெண்டில் உள்ள விதி களையும் முறைகளையும் புது மசோதாவில் பிரிவுகளாய் கொண்டுவரவேண்டும். தற்காலத்துக்கேற்றபடி தொட ரும் முறை (எக்ஸிகூஷன்) விதிகளும் செய்யவேண்டும்.

அடுத்த தலைப்பு 4-ம் கேள்வியும் 8-ம் கேள்வியும், நீர்ப்பாச்சல், ஜல ஆதாரங்கள், நீர்ப்பாசன வசதிகள், முதலியன பற்றியதாகும் :—4-ம் கேள்வி (ஏ), (பி) என்றும் இரு பிரிவும், 8-ம் கேள்வி (ஏ), (பி), (ஸி) என மூன்று பிரிவுடையதாகும்.

விவசாயிக்கு நீர் பாய்ச்சலுக்கும், ஜல ஆதாரத்திற்கும் நிலத்துக்குடையவர் ஏற்பாடு செய்யவேண்டியது நாட்டுநீர்ப்பாசன முறையாக இப் புதுச் சட்டத்தின் பிரிவாக விளக்கிவிடவேண்டும். 1865-ம் வருஷத்து 7-வது சென்னை நீர்ப்பாசன வரிச் சட்டத்தை ரத்து செய்துவிட்டு அதை இச்சட்டத்துடன் புகுத்திவிடவேண்டும்.

(ஏ) நிலத்துக்குடைய உரிமையாக விவசாயிக்கு நீர்ப்பாசன உரிமை ஏற்படுகிறதா அல்லது பூஸ்திதிக் காரருடன் அது ஒரு ஒப்பந்தமா ?

நீர்ப்பாசன உரிமை விவசாயிக்கு நிலத்தோடுகூடிய உரிமை. ஜமீன்தாருடன் செய்துகொண்ட தால் ஏற்பட்டதன்று. இதனல் தக்கபடி விவசாயிக்குள்ள உரிமையையும் நிலத்துக்குடைய வரின் பொறுப்பையும் விளக்கி சட்டங்கள் செய்யவேண்டும்.

(பி) ஜமீன்தாருக்கு நீர்ப்பாசனத்தில் உயரிய உரிமை உண்டா ? அப்படியானல் எத்தன்மையது ?

ஜமீன்தாருக்கு உயரிய உரிமை இல்லை. அவருக்கு சொந்த நிலங்களிருந்தால் மற்ற விவசாயி களைப்போலவே அவரும் உரிமை பாராட்டலாம்.

8-ம் கேள்வி :—

(ஏ) நீர்ப்பாசன வேலைகளையும், ஆதாரங்களையும், காப்பாற்ற எவ்விதமான முறையை கையாள வேண்டு மென கோர்ட்டார் தீர்மானிப்பது ?

(பி) ஜமீன்தார் நீர்ப்பாசன வசதிகளைக் கவனிக்காவிட்டால் சர்க்கார் அதை செய்யவேண்டுமா ?

(vii) அப்பேர்ப்பட்ட அதிகாரம், ஒருவர் மனுவின்பேரிலேயே சர்க்கார் எடுத்துக்கொள்ளலாமா ?

எஸ்டேட் நிலச் சட்டத்தில் இதைப்பற்றிய சந்தேகமான பாகங்களையெல்லாம் எடுத்துவிடவேண்டும். நிலத்துக்குடையவர் நீர்ப்பாசன வசதிகளைக் கவனிக்கவேண்டுமென்றும், தவறினால் சர்க்கார் தங்கள் சொந்த செலவில் அதைச்செய்து, நிலத் தீர்வைபோல நிலத்துக்குடையவரிடம் வசூலிக்க எளிய முறைகளடங்கிய பிரிவுகள் செய்யவேண்டும். ஒவ்வொரு பூஸ்திதியிலும் மொத்த ஆயக்கட்டு வருவாயில் ஒரு பகுதியை எடுத்து நீர்ப்பாசனத்திற்கென ஒதுக்கி, அதைக் கொண்டு சர்க்கார் முறையே வேலைகள்செய்யவேண்டும்.

(a) சர்க்காருக்கு ஒருவர் மனுவின்பேரிலேயே நீர்ப்பாசன வேலைகளைச் செய்ய அதிகாரம் தரவேண்டும்.

4-ம் தலைப்பில் 5-ம் கேள்விமட்டும் சொல்லப்படுகிறது :—

எல்லா பூஸ்திதிகளிலும் சர்வே செய்து உரிமை தஸ்தவேஜு வைத்துக்கொள்ளவேண்டுமா ?

செலவதிகமாகாவிட்டால் கட்டாயம் சர்வே செய்யவேண்டும்.

(b) செலவை நிலத்துக்குடையவரும் சர்க்காரும் பங்கிட்டுக்கொள்ளவேண்டும். விவசாயிக்கு சிரமம் தரக்கூடாது.

6-ம் தலைப்பு 6-வது கேள்வியைப்பற்றியது :—

குத்தகைக்குமேல் சம்பிரதாயப்படியோ மற்ற வகையிலோ ஜமீன்தார் வேறு கட்டணம் பெறலாமா ?

எல்லாவித நீதியற்ற கட்டணங்களும் நீக்கப்பட்டிருக்கின்றன. ஆனால் தெரியமுடியாத, பார்க்க முடியாத முறைகள் இருக்கின்றன. எங்கள் முன் ஒரே ஒரு ஜமீன்தார் தப்பான முறையில் வசூலிப்பதை ஏற்றுக்கொண்டார். அவைகளைத் தடுக்க தக்க முறைகளை ஏற்படுத்தித் தண்டனையும் விதிக்கவேண்டும்.

7-ம் தலைப்பில் 7-வது கேள்வியைப்பற்றியிருக்கிறது :—

(a) மேய்ச்சல், தழை கழித்தல், விவசாயத்திற்கு மரம் வெட்டல்போன்ற இயற்கை வசதிகளில் விவசாயிக்குள்ள உரிமை என்ன ?

(b) வீட்டு உபயோகத்திற்கும், விவசாயத்திற்குப் பயனாகவும் இவைகளை உபயோகிக்க இயற்கை உரிமையுண்டா ?

(c) பொதுப்பாதைகளிலும், பொது நிலங்களிலும், குன்றுகளிலும், காடுகளிலும், புறம்போக்குகளிலும், நிலத்துக்குடையவருக்கும், விவசாயிக்குமுள்ள உரிமை என்ன ?

எங்கள் தீர்மானமாவது :—

(a), (b) நிலத்துக்குச் சொந்தக்காரர் விவசாயியானதாலும் பூஸ்திதிக்காரர் வரி வசூலிப்பவரானதாலும் இயற்கை வசதிகளுக்கு விவசாயிக்கு இயற்கை உரிமையுண்டு.

(c) இவைகளிலும், தடையில்லாத உரிமை விவசாயிகளுக்குண்டு. இவ்வுரிமைகள் சரித்திரப்படியே தொன்றுதொட்டு அனுபவித்துவரும் உரிமையாகும். பொதுப்பாதை, தொழுவம், புதைகாடு, சுடுகாடு, ஏரிகள், கால்வாய்கள், காடு, மலை முதலியவற்றில் விவசாயிக்கே உரிமை உண்டு. ஜமீன்தாருக்கு உரிமையே இல்லை.

ஆதலின் இதை விளக்கிச் சட்டம் ஏற்படுத்தவேண்டுமென்று சிபார்சு செய்கிறோம். மற்றும் கட்டாயம் சர்வேசெய்ய வேண்டுமென்றதில், இவைகளைப்பற்றி தீர்மானித்து தஸ்தாவேஜுகள் ஏற்படுத்த வேண்டும்.

1884-ம் வருஷத்தில் திரு. பார்மர் அவர்கள் "சொந்த புறம்போக்கு" என்பதைப்பற்றி கீழ் வருவன எழுதியிருக்கிறார் :—

2-வது பாராவில் சொல்லியிருப்பது :—

சர்க்கார் 1882-ம் வருஷம் செப்டம்பர் மாதம் திரு. பார்மரால் எழுதப்பட்ட முன் பாகத்தைப் பார்த்து, புறம்போக்கு ஜமீன்தாருக்குத் தரப்படவில்லை யென்றும், பொது மக்கள் உபயோகத் திற்குக் கட்டுப்பட்டு சர்க்காருக்கு அனந்தரவார்சு உரிமையுடையதென்றும் தெரிந்து அவருக்கு 1883-ம் வருஷம் மே மாதம் வரையில் இதைப்பற்றி தீர விசாரித்துத் தெரிவிக்குமாறு பிரத்தியேக வேலையிட்டனர். இதை அவர் தீர விசாரித்து பெர்மனன்ட் செட்டில்மென்ட்டுபோது ஏற்பட்ட தஸ்தாவேஜுகளை எல்லாம் பார்த்து இம் முறையை செங்கற்பட்டு ஜில்லாவில் ஏற்படுத்தியதைப்பற்றி எழுதினார்.

4-ம் பாரா :—

"புறம்போக்கு" என்றால் விலக்கப்பட்ட இடங்கள் என்பது பொருள். சாதாரணமாக உபயோகிக் கப்பட்டதில் கிராம நத்தங்கள், குளங்கள், ஏரிகள், கால்வாய்கள், தெருக்கள், தொழுவங்கள், சுடுகாடு, புதைகாடும், பரந்த விளைவு இல்லாத மலைகள், காடுகள், உப்பளங்கள், மண்மேடுகள், மற்றும் பயிரிடக்கூடாத விடங்களெல்லாம் புறம்போக்காகும். புறம்போக்கு, சொந்த புறம்போக்கு என்றும், அதில் சாதாரண ஏரி முதலியவற்றை நிரந்தரமான பொதுப்புறம்போக் கென்றும், மற்ற காடு மலைபோன்றவற்றை தற்காலிக பொது புறம்போக்கென்றும் திரு. பார்மர் கூறுகிறார். தற்காலீக புறம்போக்கு நிலங்கள் சில பயிரிடத்தக்கனவாதலால் அவை முக்கியமானவை.

5-ம் பாரா :—

சாசுவத செட்டில்மென்டுபோது கரம்பை நிலங்களை "நீக்கிவைக்கவேண்டு" (ரிசர்வ்) மென்பது. ஆனால் சர்க்காரின் ஆங்கிலேய உத்தியோகஸ்தர்கள் தங்கள் லஞ்சம் வாங்கும் துபாஷ்களாலும், கீழ்த்தர உத்தியோகஸ்தர்களாலும் தூண்டப்பட்டு அவைகளை ஜமீனுடன் சேர்ந்ததாக ஒத்துக்கொண்டனர்.

இவைகளில் விவசாயிக்கு உரிமை இருப்பதைப்பற்றி கேள்வியே இல்லை. அதைப்பற்றி சந்தேகமில்லாமல் இச்சட்டத்தில் விளம்பரம் செய்யவேண்டும்.

8-ம் தலைப்பில் ஜமாபந்தியைப்பற்றிக்கூறுகிறது :—

நிலவரி மாறுதலின்றி தீர்மானித்து விட்டால் ஜமாபந்திக்கே அவசியமில்லை.

8-ம் தலைப்பில் 10-ம் கேள்வி.—கீழ்க்குத்தகைதாரர்களைப்பற்றிக்கூறுகிறது. அதைப்பற்றி நாங்கள் ஒன்றும் சொல்ல முன்வராததின் காரணம் முன்பே சொல்லிவிட்டோம். ஏன் இந்த விசாரணையில் அதைப்பற்றி எடுத்துக்கொள்ள வில்லை யென்பதைப்பற்றி இச்சட்டத்தில் ஒரு பிரிவு சொலலவேண்டும். நாங்கள் அதைப்பற்றி கேள்வி விடுத்தும் தக்க சாக்ஷிகள் முன்வரவில்லை. இப்பெரிய விவகாரத்தைத்தீர்க்க போதுமான தகவல்கள் எங்கள் முன் இல்லை. அதனால் அதைப்பற்றி தனி விசாரணை செய்யவேண்டும். பெரிய முயற்சியும், ஆராய்ச்சியும்வேண்டும். 1802-ம் வருஷத்திய இக் கேள்வியைப்பற்றி நாங்கள் ஒரு முடிவுக்கும் வரத்தீர்மானிக்கவில்லை.

9-ம் தலைப்பு. விசாரணை ஸ்தலத்தைப்பற்றிக்கூறுகிறது.—வழக்கு விசாரிப்பதைப்பற்றி எஸ்டேட் நிலச்சட்டத்தில் சொல்லியுள்ள முறையெல்லாம் ரத்து செய்து, குறைந்த செலவிலும் துரித தீர்ப்பும் தரக்கூடிய கோர்ட்டுகள் ஏற்படுத்தவேண்டும். இதைப்பற்றிய சிபார்சுகளைக்கொண்டு சில பிரிவுகளுள்ள ஒரு அத்தியாயத்தை இச்சட்டத்தில் ஏற்படுத்தவேண்டும்.

10-ம் தலைப்பு கடைசியானது.—12 (ஏ) (பி) கேள்வியைப்பற்றியது—

12 (A) உத்தரவன்னியில் அனுபவத்தில் விவசாயிகள் வைத்திருக்கும் நிலங்களைப்பற்றி ஜமீன்தார்களுக்கு என்ன பரிகாரம் செய்யவேண்டும் ?

(B) ஜோடி, பொருப்பு, கட்டுபடி, முதலியன இனும்தார்களிடமிருந்து ஜமீன்தார் வசூலிக்கும் ஏற்பாட்டில் ஏதாவது மாறுதல் வேண்டுமா ?

உத்தர வன்னியில் வைத்திருக்கும் நிலங்களில் அனுபவபாத்தியதை ஏற்படாது. விவசாயி இந்த மசோதாவின் 154, 155 பிரிவுகளுக்குக்கட்டுப்பட்டவராவார். அவர்களுக்கு அபராதம் விதிக்கக்கூடாது.

ஜோடி, பொருப்பு, கட்டுபாடி முதலியன வசூலிக்கதக்க ஏற்பாடுகள் செய்யப்படும்.

சற்று விலக்கப்பட்ட பிரதேசங்களைப்பற்றி எங்கள் சிபார்சாவது :—

(1) நரசாபட்டணம் பக்கமுள்ள சிந்தப்பள்ளிவரை பஸ்மூலமாய் போகக்கூடியதும், வால்டேர் பக்கமுள்ள அனந்தகிரி, அர்க்கு முதலியவற்றிற்கும் பஸ் இன்னும் மற்ற போக்குவரத்து சாதனங்களால் போகக்கூடியதுமான கஞ்சம், விசாகப்பட்டணம் ஏஜன்ஸி இடங்களும், விருத்தியாகாத மடகோல் முதலியவும் மட்டப்பிரதேசத்துடன் சேர்த்து விடலாம். அதைப்போல கிழக்கு கோதவரி ஜில்லாவில், பத்ராஜலம், போலாவரம், சோடவரம், ஏலேஸ்வரம் முதலிய தாலுகாக்களும் சமபூமியுடன் சேர்த்துவிடலாம். கூரும், விசாகபட்டணம் ஜில்லாவில் சிந்தப்பள்ளிக்கு அப்பாலுள்ள இடங்களும் சேர்க்கவேண்டுவதில்லை.

(2) அந்த எல்லை பூராவும் சர்வே செய்து, காலி செய்யப்பட்ட இடங்களில் குடியேற்றி மற்றவைகளை நிறுத்திக்கொள்ளலாம். மலேரியா பயமில்லாமல், அதன் அருகே, படித்தும், படிக்காமலும் வேலையின்றியிருப்பவர்கள் போய் குடியேறக் கட்டாயம் விரும்புவார்கள். இப்போது நுகூரும், சிந்தப்பள்ளிக்கு வடக்கேயுமிருப்பதைப்போல் ராஜமந்திரியும், விசாகபட்டணமும் 50, 60, ஆண்டுகளுக்கு முன்னர் மலேரியா நிறைந்த இடங்களாக இருந்தன. சர்வேயும், போக்கு வரத்து சாதனங்களும் ஏற்பட்டுவிட்டால் பல பொருளாதாரக்கஷ்டங்கள் தீர்ந்து, அங்குள்ள உயர்ந்த பொருளெல்லாம் விற்பனைக்கு தாராளமாக வரும்.

(3) சர்வேயானவுடன், நிலங்களை ஒவ்வொருவருக்குக் கொடுத்துவிட்டு, அவைகளை பராதீனப்படுத்தக்கூடாதென நிபந்தனை ஏற்படுத்தி, சட்டமும் செய்யவேண்டும். அதைப்போலவே முறைப்படி நிரந்தரமாகவோ, தற்காலிகமாகவோ குடியேறுபவர்களுக்குக்கூட அந்த நிபந்தனை ஏற்படுத்த வேண்டும்.

இப்போது நாங்கள் கொண்டுவரும் மாற்றங்கள் புதிதல்ல. சாசுவத செட்டில்மென்டு போது விதித்த வரியே விதிக்க வேண்டுமென்பதும் புதிதல்ல. 1898-ம் வருஷத்து சென்னை டெனன்ஸி மசோதா விவசாயிகள், நிலத்துக்குடையவர்கள், இருவர்களின் உரிமைகளை விளம்பரம் செய்ய உண்மையாக முயற்சித்து அந்த மசோதாவில்தான் "ரெண்ட்" என்னும் சொல்லை எடுத்துவிட்டு "நிலத்தீர்வை" என கொண்டுவர ஏற்பாடுசெய்தது. அந்தமசோதவில் தீர்வையைப்பற்றி வழக்குகள் ஏற்பட்டால், கோர்ட்டுகள், செட்டில்மென்டுக்கு முந்திய வருஷத்து வரியை முறையாக கொள்ளவேண்டுமென சொல்லப்பட்டது. நாங்கள் நியாயமான தீர்வையென இந்த ரிப்போர்ட்டில் கூறுவதை 1898-ம் வருஷத்திய சென்னை டெனன்ஸி மசோதாவிலும் கூறப்பட்டது. அப்படி அப்போதே செய்திருந்தால் இவ்வித அநியாய முறைகளாலும் வரியேற்றத்தாலும் சென்ற 43 ஆண்டுகளில்விவசாயிகள் 45 கோடியிலிருந்து 200 கோடி ரூபாய் கடன்காரர்களாகியிருக்கமாட்டார்கள். பொருளாதாரவிசாரணைக் கமிட்டியார் 1895-ல் விவசாயிகளின் கடன் 45 கோடி ரூபாய் என்று கண்டுபிடித்தனர். 1898-ல் மட்டும் இம்மசோதா வந்திருந்தால் இவ்வளவு கேடு ஏற்பட்டிராது. 1802 முதல் சரியென்று சென்னை சர்க்காரும் ரெவன்யூ போர்டாரும் ஏற்றுக்கொண்ட, 1898-ம் வருஷத்து மசோதாவிலும் சொல்லப்பட்ட பர்மனன்ட் செட்டில்மென்டுக்கு முந்திய தீர்வையே சரியென இச்சட்டசபையும் தீர்மானிக்கவேண்டும் என்று நாங்கள் கேட்டுக்கொள்ளுகிறோம்.

1908-ம் வருஷத்து சென்னை எஸ்டேட் நிலச் சட்டம் "வந்ததும்" மற்றும் பல யோசனைகள் ஏற்பட்டுவிடப்பட்டது. சென்னை எஸ்டேட் நிலச்சட்டத்தை பிரரேபித்தவர் ரெண்ட் என்பது சரியல்லவென்றும், அது நிலத்தீர்வை அல்லது கிஸ்த்தென்பதைப்போன்றதென்றும், ரயத்வாரி இடங்களில் கிஸ்த்தென்றும் கூறினார். ஆனால் அச்சட்டம் வந்த ஒரு ஆண்டில் பல சந்தேகங்கள் புகுந்து பல வழக்குகள் ஏற்பட்டு கோர்ட்டுக்கு வரும்படியாகிவிட்டன. அதனால் 1909-ம் வருஷத்தில் சில திருத்தங்கள் செய்யப்பட்டன பல குறைகள் ஏற்பட்டதால் ரெவின்யூ போர்டாரே 1913-ம்வருஷத்தில் திருத்தம் செய்ய முற்பட்டனர். 1914-ம் வருஷம் நான்கு தனி திருத்தம் மசோதாக்கள் வந்தன. ஆனால் அதைப்பற்றி விசாரணை வருமுன் பெரிய யுத்தம் 1914-ம் வருஷத்தில் தொடங்கிவிட்டதால் இவைகள் ஒத்திவைக்கப்பட்டன. சண்டைக்குப் பின்பு மீண்டும் இது கவனிக்கப்பட்டது. 1922, 1924-ம் வருஷத்தில் பெரிய கமிட்டியை ஏற்படுத்தி திருத்தங்கள் கவனிக்கும்படி செய்யப்பட்டது. 1928-ம் வருஷத்தில் ஒரு மசோதா ஏற்பட்டு 1934-ம் வருஷத்தில் 18-ம் சட்டமாக வந்தது. அப்போதுதான் காலஞ்சென்ற திவான் பகதூர் முனுசாமி நாயுடு ஜமீன் விவசாயிகளின் சார்பாய் பல திருத்தங்கள் கொண்டுவந்தார். சர்க்காரால் பல திருத்தங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டன. நீர்ப்பாசனத்தைப்பற்றியும், வரி வசூலிப்பைப்பற்றியும் மிகவும் திருத்தப்பட்டது. அப்போதுதான் பழைய கரம்பை இச்சட்டத்திலிருந்து ஒதுக்கப்பட்டு, விவசாயிகளின் உரிமை தீர்மானிக்கப்பட்டு, பொது நிலங்களும் அங்கீகரிக்கப்பட்டது. அப்போதுதான், விவசாயிகள் விரும்பினால் மாசூலிலிருந்து பணமாக தீர்வையை மாற்றவும் ஏற்பாடு செய்யப்பட்டது. இப்பேர்ப்பட்ட மாறுதல்களெல்லாம் 1934-ம் வருஷத்து 18-ம் சட்டத்தால் செய்யப்பட்டது. ஒரு திட்டத்திலிருந்து விலைவாசி குறைந்துவிட்டால் தீர்வையைக் குறைக்கவேண்டி திரு. பட்னாய்க் அவர்கள் ஒரு மசோதா கொண்டுவந்தார்.

இது 1936-ம் வருஷத்து 6-வது சென்னை சட்டமாக அங்கீகரிக்கப்பட்டது. அப்போது ரெவின்யூ போர்டார் தீர்வை நிச்சயிப்பதைப்பற்றியும் உரிமை தஸ்தாவேஜு பதிவு செய்வதைப்பற்றியும், எஸ்டேட் நிலச்சட்டத்திலுள்ள 11-ம் அத்தியாயத்தைத் திருத்த ஏற்பாடு செய்துவந்தனர். "ஹை கோர்ட்டால் குறிக்கப்பட்ட விஷயங்களுக்கு போர்டார் பதில் நிறுத்தியிருந்தாலும், 11-ம் அத்தியாயத்தை சர்க்கார் அனுமதி கொடுத்தால் பூராவும் திருத்தி உரிமை, முறை, முதலியவற்றைக் கவனித்து திருத்தங்கள் சட்ட சபைமுன் கொண்டு வருவதாக ரெவின்யூ போர்டார் கூறினர்.

அப்போதுதான் இனும்கள், சிறிய இனும்கள் முதலியவற்றைப்பற்றி திருத்தங்கள் கொண்ட எஸ்டேட் நிலச்சட்டத்தை 1936-ம் வருஷத்து 2-வது மசோதாவாக கொண்டுவரப்பட்டு சட்டமானது.

ரெவின்யூ போர்டார் அபிப்பிராயத்தை சர்க்கார் ஏற்றுக்கொண்டனர். ஆனால், கோர்ட்டாலும், தீர்ப்புகளாலும் வக்கீல்களாலும் ஏற்பட்ட குழப்பங்களால் சரியான முறை ஏற்படவில்லை. தீர்வை நிர்மாணிப்பதைப்பற்றி சரியான திட்டம் கண்டுபிடிக்கவில்லை.

1937-ம் வருஷம் ரயத்துவாரி நிலங்களுக்குள்ளதுபோல "பூஸ்திதிகளிலுள்ள நிலங்களுக்கும் பருவகால வரி குறைத்தலுக்கு ஏற்பாடு செய்யவேண்டுமென ஆலோசனை செய்யப்பட்டது. ஆனால் அப்போதிருந்த பொருளாதார மந்திரி, சட்டத்தை திருத்தவேண்டுமென்றும், சட்டசபை உதவியின்றி ஒன்றும் செய்ய முடியாதென்றும் விட்டுவிட்டார். அப்போது கலெக்டர்கள் நீர்ப்பாசன வேலைகளைத்தாங்களே செய்யலாமா என்பதும் கவனிக்கப்பட்டு விடப்பட்டது. நியாயமான வரி ஏற்படுத்த, கோர்ட் அமைக்கவேண்டுமெனவும் யோசனை செய்து கைவிடப்பட்டது. அப்போதுதான் தற்காலிக மந்திரி சபை சர் நார்மன் மார்ஜரி பாங்க் தலைமையில் ஒரு நிலத் தீர்வைக்கமிட்டி ஏற்படுத்தி, அவர்கள் அறிக்கையும் பெறப்பட்டது. அதுவும் சட்ட சபையில்லாததால் சட்டமாக முடியவில்லை. அந்த அறிக்கையில் 1914-ம் வருஷத்துக்குப் பிந்திய மறுசெட்டில்மெண்டில் உயர்த்தப்பட்ட வற்றையெல்லாம் ரத்து செய்யவேண்டுமென சிபார்சு செய்யப்பட்டிருந்தது. காங்கிரஸ் மந்திரி சபைக்கு முன்பே தர்காலிக மந்திரி சபை, தைரியமாக, தாங்களும், இம் மாறுதலமைந்த காலத்தில் அரிய காரியங்கள் செய்ய முடியுமென்பதைக் காட்ட, சீர்திருத்தங்களைப் புகுத்தியது. ஆனால் அச்சபை சட்ட சபையால் ஆதரிக்கப்பட்டதல்ல. ஏனென்றால் காங்கிரஸ் மெஜாரட்டியுள்ள கக்ஷித் தலைவர் ஆங்கிலேயரால் சில பாதுகாப்புகள் தரும்வரை மந்திரிப் பதவி ஏற்றுக்கொள்ள மாட்டோமென்றதால் சட்டசபை நடக்கவில்லை.

1898-ம் வருஷம் முதல் 1937-ம் வருஷம் வரை சென்னை எஸ்டேட் நிலச்சீர்திருத்தம் மேற்கூறியபடியெல்லாம் மாறுதல்கள் அடைந்துவந்தன.

நாங்கள் செய்யும் சிபார்சு புதிதல்ல. சர்ஜான் ஷோர் முதல் லார்ட் கார்ன்வாலிஸ் வரையுள்ள அரிய அபிப்பிராயங்களையெல்லாம் அப்படியே அமைத்து இருக்கிறோம். இதில், பெரிய மாறுதல் ஒன்றுமில்லை. 138 வருஷங்களாக விவசாயிகளுக்குத் தரப்படாத நீதியைத் தருவதே இதன் நோக்கம்.

எங்களுடன் ஒத்துழைத்த அனைவருக்கும் எங்கள் வந்தனம், எங்கள் செகிரிடேரியட், ரெவின்யூ போர்ட், சர்வே டிபார்ட்மெண்ட், கவர்ன்மெண்ட் பிரஸ், பிரத்தியேக கௌரவ உத்தியோகஸ்தர்கள் முதலிய யாவருக்கும் எங்கள் வந்தனம்.

சமரசப்பேச்சுகள் குறிக்கப்பட்டன. ஆனால் நிலசுவான்தார்களாலும், ரயத்துகளாலும் ஒரு வித ஏற்பாடும் எங்கள் முன் வரவில்லை. எங்களுக்கு விசாரணை செய்து அறிக்கை செய்யுமாறு உத்தரவிருக்க அப்படியே செய்திருக்கிறோம். சமரசம் செய்வது எங்கள் கடமையில்லை.

சாசுவத செட்டில்மெண்டும்போது தீர்வை நிச்சயிக்கப்பட்டதென்பதை ஏற்றுக்கொண்டு, அடுத்த சர்க்கார் நிலங்களுக்குள்ள தீர்வையை ஏற்படுத்தலாமென எங்கள் கமிட்டி அங்கத்தினர் திரு. மாஹபூப் அலிபேக் ஒரு தீர்மானம் கொண்டுவந்தார். அதைப்பற்றி இவ்வறிக்கையில் ஆலோசிக்கப்பட்டிருக்கிறது.

இம்மசோதாவில் இனும்தார்களுக்கும் குத்தகைதார்களுக்கும் உள்ள தொடர்பைபற்றிய சீர்திருத்தங்கள் தவிர மற்ற இனும்கள் விஷயமாக சர்க்கார் தனி சீர்திருத்தம் செய்ய முன் வரலாம்.

மசோதா.

நாங்கள் செய்துள்ள சிபார்சுகள்படி நாங்கள் ஒரு மசோதா சமர்ப்பிக்கின்றோம். எங்கள் தீர்மானத்திற்கொத்தபடி சில முக்கிய விஷயங்கள் சேர்க்கப்பட்டும், விடப்பட்டும், அது செலெக்ட் கமிட்டியாரால் திருத்தப்பட்ட பெரும்பாலும் 1898-ம் வருஷத்து மதராஸ் டெனன்சி மசோதாவைப் போன்ற ஒரு மசோதாவாகும். 1898-ம் வருஷத்து மசோதா திருத்தத்துடன் விடப்பட்டு 1908-ம் வருஷத்து முதல் சட்டமாக எஸ்டேட் நிலச் சட்டம் வெளி வந்தது வெகு விசித்திரமே !

1938-ம் வருஷத்து சென்னை எஸ்டேட்ஸ் நிலவரி மசோதா.

1938-ம் வருஷத்து சென்னை பூஸ்திதிகளிலுள்ள நிலத்தைப்பற்றிய தீர்வை மசோதா.

அட்டவணை.

1-ம் அத்தியாயம்.

பீடிகா விதிகள்.

பிரிவுகள்.

2-ம் அத்தியாயம்.

நிலத்தைப்பற்றிய பொதுவான பாத்தியதைகள்.

3-ம் அத்தியாயம்.

ரயத்துகள்.

4-ம் அத்தியாயம்.

பாயக்காரிகள் (குத்தகைக் குடியானவர்கள்).

5-ம் அத்தியாயம்.

நிலத்தீர்வையைப்பற்றிய பொதுவான நிபந்தனைகள்.

ரசீதுகள்.

நிலத்தீர்வையை டெபாசிட் செய்வது.

6-ம் அத்தியாயம்.

தீர்வை வசூலிப்பு.

பட்டாவும் முச்சலிக்கையும்.

பிரிவுகள்.

31. நிலச்சுவான்தார் ரயத்துக்கு பட்டா தரவேண்டிய கடமை.
32. இன்னவிதமாக பட்டா கொடுக்கவேண்டுமென்பது.
33. பட்டாவும் முச்சிலிக்கையும் கையெழுத்திடப்படவேண்டும்.
34. பட்டாவிலும் முச்சிலிக்கையிலும் காண வேண்டியவைகள்.
35. எவ்வளவு காலத்துக்கு, பட்டா கொடுத்து முச்சிலிக்கை பெற்றுக்கொள்ளலாமென்பது.
36. பட்டா பெறுவதற்கு வியாஜ்ஜியம்.
37. பட்டாவை அங்கீகரிக்கும்படி கட்டாயப்படுத்துவதற்காக வியாஜ்ஜியம்.
38. பட்டாவை அங்கீகரிக்கும்படி கட்டாயப்படுத்துவதற்கு கொண்டுவரும் வியாஜ்ஜியத்தை தீர்மானிக்கையில் இன்னது செய்யவேண்டுமென்பது.
39. மாற்றிக்கொள்ளப்பட்ட, அல்லது தீர்ப்பான பட்டா முச்சிலிக்கா முதலியவற்றின் கால அளவு.
40. சிவில் கோர்ட் அதிகாரம் விலக்கப்பட்டது.

7-ம் அத்தியாயம்.

வியாஜ்ஜிய மூலமாகவாவது ஜங்கம்மச் சொத்தை ஜப்தி பண்ணி நிலத் தீர்வை வசூல் பண்ணுவது.

41. எப்பேர்ப்பட்ட சமயங்களில், நிலச்சுவான்தார் ஜப்தி பண்ணலாம்.
42. இன்ன விதமாய் ஜப்தி செய்யவேண்டுமென்பது.
43. ஜப்தி செய்யும் நோட்டீஸ் எப்படி விளம்பரம் செய்து சர்வ் செய்யப்படவேண்டும்.
44. ஜப்தி செய்கிறவர் போலீசார் உதவியைப் பெறலாமென்பது.
45. ஜப்தி சொத்து, பாக்கிக்கு சரியாயிருக்கவேண்டுமென்பது செய்யப்படும்.
46. ஜப்தி செய்யவேண்டிய காலம்.
47. ஜப்தி செய்கிறவர் இன்ன இடங்களை பலாத்காரமாய் திறக்கலாமென்பது.
48. போலீஸ் உத்தியோகஸ்தர் முன்பாக கதவுகளைப் பலாத்காரமாக திறக்கவும் அந்தப் புறத்தில் நுழையவும் அதிகாரம்.
49. ஜப்தி செய்யப்பட்ட கால்நடைகளையாவது, சரக்குகளையாவது உபயோகிக்ககூடாதென்பது.
50. மாசூலை அறுவடை செய்து காப்பாற்றிவர சுதந்தரம்.
51. டெபாசிட் செய்வதன் மேலாவது, தொகை செலுத்துவதின் மேலாவது ஜாமீன் சவதரித்துக் கொடுப்பதின் மேலாவது ஜப்தி விடுதலை செய்வது.
52. நிலச்சுவான்தாருடைய பாக்கியைக் கட்டுவது.
53. ஜப்தி செய்யப்பட்ட சொத்து காணமற்போனாலும், கெட்டுப்போனாலும், ஜப்திக்காரர் உத்தரவாதம்.
54. மூன்றும் மனிதர் தாவா உத்தரவாதம் பண்ணவேண்டுமென்பது.
55. ஜப்தி செய்வதைத் தடுக்க சொத்தை மோசகரமாக அப்புறப்படுத்துவதற்கு அபராதம்.
56. ஜப்தி செய்த சொத்தை பலாத்காரமாகவோ, கள்ளத்தனமாகவோ எடுத்துக்கொண்டு போவதால் ஏற்படும் அபராதம்.
57. ஜப்திப் பொருளை விற்க விளம்பரம்.
58. விற்பனை இடம்.
59. இன்னபடிக்கானல், மாசூலை விற்பனை செய்யலாமென்பது.
60. விற்பனை செய்யும் விதம்.
61. விற்பனையைத் தள்ளிவைப்பது.
62. கிரயத் தொகையைச் செலுத்துவது.
63. ஜப்தி செய்வதில் கிரமப் பிசகிருந்தால் அதைத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருப்பது.
64. ஜப்தி செய்வதில் கிரமப் பிசகிருப்பதினால் உண்டாவதின்னதென்பது.
65. கிரயதாரருக்கு செர்டிபிகேட் கொடுக்கவேண்டுமென்பது.
66. விற்றுவந்த பணத்தை ஒரு வகை செய்வது.
67. இன்னார் வாங்கக்கூடாதென்பது.
68. பாயக்காரி நிலச்சுவான்தார்க்கு செலுத்தியிருக்கிற தொகையை நிலத் தீர்வையிலிருந்து கழித்துக்கொள்ளுதல்.
69. நிலச்சுவான்தார் ஜப்தி செய்வதும் கோர்ட்டார் ஜப்தி செய்வதும் முறண்படுவது.
70. ஜாமீன்தாரர்பேரில் பிரவேசிக்க நிலச்சுவான்தாரின் உரிமை.
71. தப்பான ஜப்திக்கு நஷ்ட ஈடு வழக்கிடுதல்.

8-ம் அத்தியாயம்.

ரயத்தின், கைப்பற்றும் நிலத்தை ஜப்தி செய்து விற்பனை செய்வது.

72. சர்க்கார் , விதிகள் இயற்ற அதிகாரம்.
73. கைப்பற்றும் நிலத்தை எப்போது ஜப்தி செய்யலாம்.
74. ஜப்தி செய்வதைப்பற்றி அறிக்கை.
75. எப்போது, எப்படி கைப்பற்றும் நிலத்தை விற்பனை செய்வது.
76. கைப்பற்றும் நிலத்தின்மீது நிலத்தீர்வை முதற் பொறுப்பாகும்.
77. வில்லங்கங்களில் வாங்குபவற்குள்ள பொறுப்புகள்.
78. விற்பனை சாமான்களை முடிவு செய்ய விதிகள்.
79. கைப்பற்றும் நிலத்தை ஜப்தியிலிருந்து எப்போது விடுதலை செய்வது.
80. சில வழக்குகளில் விற்பனையைத் தடுக்கக் கட்டிய பணம் கைப்பற்றும் நிலத்திற்கு அடமானப் பணம் போன்றது.
81. கீழ்த்தர பாயக்காரி விற்பனையைத் தடுக்க கட்டிய பணம் நிலத்தீர்வையிலிருந்து கழித்துக்கொள்ளலாம்.
82. விற்பனையில் நிலச்சுவாதார் ஏலம் கேட்கலாம்.
83. பாக்கிதாரான் ரயத்து விற்பனையை தள்ளுபடி செய்ய, போடும் மனு.

9-ம் அத்தியாயம்.

நீர்ப்பாய்ச்சல் சம்பந்தமான கட்டுவேலைகளின் மராமத்து.

84. நீர்ப்பாய்ச்சல் சம்பந்தமான கட்டு வேலைகளின் மராமத்துக்காக ஜில்லா கலெக்டரிடத்தில் விண்ணப்பம் செய்துகொள்வது.
85. விண்ணப்பத்தின் மேல் விசாரணை.
86. விசாரணையின் மேல் உத்தரவு.
87. கலெக்டர் உத்தரவை நிலச்சுவான்தார் மறுதளித்தாலும், ரயத்து வேலையைச் செய்ய முடியாவிட்டாலும், மேல் நடக்கவேண்டிய முறைகள்.

பிரிவுகள்.

88. கட்டு வேலையானது சிறிது பாகம் ஒரு பூஸ்திதிக்கும் சிறிது பாகம் சர்க்கார் நிலத்துக்கும் உபயோகப்படுகிற விஷயத்தில், நடத்தவேண்டிய நடவடிக்கை.
89. மராமத்து செலவை ரயத்துகளிடமிருந்து வசூல் செய்வது.
90. மராமத்து செய்து முடிக்கும் நபர்களுக்கு தொகை செலுத்துவது.
91. மராமத்து செலவுக்காக, வசூலித்த தொகையை நிலத்தீர்வையிலிருந்து கழித்துக் கொள்வது.
92 அப்பீல் செய்துக்கொள்ள சுதந்தரம்.
93. நஷ்டத்திற்கு வழக்குத்தொடர ரயத்துக்குள்ள நிபந்தனை.

10-ம் அத்தியாயம்.

சட்டத்துக்கு விரோதமான ஸெஸ்ஸுகள் (வரியிறைகள்).

94. சட்டத்துக்கு விரோதமாய் பலாத்காரமாக தொகை வசூல் செய்வதற்கு தண்டனை.

11-ம் அத்தியாயம்.

கட்டிடம் கட்டுவதற்காகவும் வேறு காரியங்களுக்காகவும், நிலமெடுத்துக் கொள்ளுவது.

95. கட்டம் கட்டுவதற்கும் வேறு, காரியங்களுக்காகவும், நிலமெடுத்துக்கொள்வது.

12-ம் அத்தியாயம்.

நிலத்தை விட்டுவிடுவது.

96. நிலத்தை விட்டுவிடுவது.

13-ம் அத்தியாயம்.

கைப்பற்றும் நிலங்களை உட்பிரிவினை செய்வதும், பிறகு மாற்றுவதும்,

97. கைப்பற்றும் நிலத்தை உட்பிரிவினை செய்வது நிலச்சுவான்தாரை பந்தப்படுத்தும்.
98. ரயத்து டிரான்ஸ்பர் நோட்டீஸ் தருவது.
99. நிலத்துக்குடையவர் டிரான்ஸ்பர் நோட்டீஸ் தருவது.

அப்புறப்படுத்துவது.

100. கலெக்டர் பிறப்பிக்கும் வாரண்டின்மேல் பாயக்காரியை நீக்கி விடுவது.
101. வாரண்டில் கண்டிருக்கவேண்டிய விஷயங்கள்.
102. வாரண்டை நிறைவேற்றுவது.
103. 99-ம் பிரிவுபடி மனுவில் பொய் கூறியதற்கு அபராதம்.
104. பாயக்காரி பாத்தியதை முடிவாவது.

14-ம் அத்தியாயம்.

ஸர்வே செய்வதும் உரிமை தஸ்தாவேஜு ஏற்படுத்துவதும், நிலத்தீர்வை பைசல் செய்வதும்.

105. ஸர்வே செய்வதற்கும், உரிமை தஸ்தாவேஜு ஏற்படுத்தும்படிக்கும், உத்தரவு செய்ய அதிகாரம்.
106. எழுதிவைக்கவேண்டிய விபரங்கள்.
107. நிலச்சுவான்தார் மனுவின்பேரில் விபரங்களை எழுதிவைக்க அதிகாரம்
108. பிரதம தஸ்தாவேஜைப் பிரசுரம் செய்வதும் அதற்குண்டான ஆக்ஷேபனைகளை வரப் பெற்றுக்கொள்வதும்.
109. பிரதம தஸ்தாவேஜுக்கு ஆக்ஷேபனைகளைத் தீர்க்கும் முறை.
110. முடிவான தஸ்தாவேஜைப் பிரசுரம் செய்வது.
111. நிலத் தீர்வையை பைசல் செய்வது.
112. உரிமை தஸ்தாவேஜு செய்யும் உத்தியோகஸ்தர்களின் தீர்ப்புக்கு அப்பீல்.
113. நிலத் தீர்வை பைசல் எந்த கால முதல் செலவாணியாக வேண்டுமென்பது.
114. உரிமை தஸ்தாவேஜு தயார் செய்யும் காலத்திலே நடவடிக்கைகளை நிறுத்தி வைப்பது.
115. இவ்வத்தியாயத்தில் கண்டுள்ள விஷயங்களால் ஏற்படும் செலவுகள்.

15-ம் அத்தியாயம்.

நிலச்சுவான்தாரின் சொந்த நிலத்தைப்பற்றிய தஸ்தாவேஜு.

116. நிலச்சுவான்தாரின் சொந்த நிலத்துக்குப் பாதகமுண்டாக மாட்டாதென்பது.
117. நிலச்சுவான்தாரின் சொந்த நிலத்தை ஸர்வே செய்யும்படிக்கும் அதற்குத் தஸ்தாவேஜு ஏற்படுத்தும்படிக்கும் உத்தரவு செய்ய அதிகாரம்.
118. நிலச்சுவான்தார் அல்லது ரயத்து விண்ணப்பத்தின்மேல் சொந்த நிலத்துக்குத் தஸ்தாவேஜு ஏற்படுத்த அதிகாரம்.
119. சொந்த நிலத்துக்கு இன்ன விதமாக தஸ்தாவேஜு ஏற்படுத்த வேண்டுமென்பது.
120. நிலச்சுவான்தாரின் சொந்த நிலமென்று தீர்மானிப்பதற்கான விதிகள்.

16-ம் அத்தியாயம்.

அதிகாரமும், நடவடிக்கையும்.

121. (1) ரெவின்யு கோர்ட்டாக, கலெக்டர் அதிகாரம் செலுத்தக்கூடிய வழக்குகள்.
(2) மேற்கண்ட வழக்குகளில் அப்பீல்களும் இரண்டாவது அப்பீல்களும்.
(3) ரெவின்யு வழக்குகளில் போர்டுதான் முடிவான தீர்ப்பளிப்பது.
(4) ரெவின்யு வழக்குகளுக்கு போர்ட் ஏற்படுத்துவது.
122. (1) கலெக்டர் கவனிக்கக்கூடிய மனுக்கள்.
(2) மேல்கூறியதில் கலெக்டரின் தீர்ப்பே முடிவானது.
(3) தள்ளுபடிகள்.
(4) நீர்ப்பாசனங்களைப் பற்றிய மனுக்களை தீர்மானிப்பது.
(5) உரிமை தஸ்தாவேஜு ஏற்படுத்தவேண்டிய மனுக்களில் தீர்ப்பு.
123. 121, 122-ம் பிரிவுகளில் உண்டான அப்பீல்களுக்கு கால நிர்ணயம்.
124. ரெவின்யு உத்தியோகஸ்தர்கள், கோர்ட்டுகள் முதலியவைகளின் மேல்ப் பார்வையும் அதிகாரம் செலுத்துவதும்.

பிரிவுகள்,

125. வேலையைப் பங்கிடவும், வியாஜ்ஜியங்களை விசாரணையினின்றும் எடுத்துவிடவும், மாற்றவும் அதிகாரம்.
126. ரெவின்யு ஆபீஸர்கள், ரெவின்யு கோர்ட்டுகளின் நடவடிக்கைக்குறிப்புகளை வரவழைத்துப் புனராலோசனை செய்ய அதிகாரம்.
127. நடவடிக்கைகளை ஹைகோர்ட் தீர்ப்புக்கனுப்ப அதிகாரம்.
128. ரெவின்யு அல்லது ஜுடிஷியல் ஆபீஸருக்கு கலெக்டர் அதிகாரங்களைக் கொடுக்க அதிகாரம்.
129. இச்சட்டத்தின் நடவடிக்கைகளுக்கு அதிகாரம்.
130. ஏஜண்டுகள் நியமனம் செய்யலாம்.
131. வழக்குகளுக்கு தனி ரெஜிஸ்டர்.
132. கலெக்டர் முன் வழக்குகள் நடைமுறை.
133. மூன்றும் பேர்வழிக்கு தரவேண்டுமென ஒத்துக்கொள்ளப்பட்ட தொகையைக் கட்டுவது.
134. நிலச்சுவான்தார் தரவேண்டுமென ஒத்துக்கொண்ட தொகையைக் கட்டுவது.
135. ஒரு பகுதித் தொகையைக் கட்ட ஏற்பாடு.
136. கோர்ட்டாவது கலெக்டராவது ரசீது கொடுக்கவேண்டுமென்பது.
137. அன்னியர் பிரவேசிப்பதை அப்புறப்படுத்துவதற்குப் பதிலாக நியாயமான நிலத்தீர்வை கட்ட வீதம் விதிக்க கலெக்டருக்குள்ள அதிகாரம்.

17-ம் அத்தியாயம்.

ஒப்பந்தமும், சம்பிரதாயமும்.

138. கலெக்டராவது கோர்ட்டாவது நிலச்சுவான்தார் எந்த ஒப்பந்தத்தை அனுசரிக்கலாம் என்பதை அங்கீகரிப்பது.
139. ஒப்பந்தத்தால் சட்டத்தை மீற ஏற்பாடு கூடாது.
140. வீடுகள்.
141. சாம்பிரதாய விளக்கம்.

18-ம் அத்தியாயம்.

கால நிர்ணயம்.

142. 2-ம் ஷெட்யூலில் கண்டுள்ள வியாஜ்ஜிய முதலியவற்றிற்கு கால நிர்ணயம்.
143. இந்து தேச கால நிர்ணய சட்டத்திலே அப்படிப்பட்ட வியாஜ்ஜியங்கள் முதலியவைகளுக்குப் பிரயோகப்படாத பாகங்கள்.

19-ம் அத்தியாயம்.

உடன் சேர்க்கையானது.

தண்டனை.

144. மாசூலின் விஷயத்தில் சட்டத்துக்கு விரோதமாய்ப் பிரவர்த்திப்பது முதலியவைகளுக்குத் தண்டனை.

வியாஜ்ஜியம் கொண்டுவர, பொதுவான பாத்தியதை.

145. நஷ்ட ஈடுக்காக வியாஜ்ஜியம் கொண்டுவருவதைப்பற்றிய பொதுவான பாத்தியதை.

நிலச்சுவான்தாரின் ஏஜெண்டுகளின் வேலைகள்

146. ஏஜண்டு மூலமாக பிரவர்த்திக்க நிலச்சுவான்தார் அதிகாரம்.
147. பொது நிலத்துக்குடையவர்கள் மொத்தமாக ஏஜண்டு மூலம் பிரவர்த்தி செய்வது.

இச்சட்டம் விளம்பரமாகுமுன், உயர்த்திய தீர்வையை தடுப்பது.

148. இச்சட்டம் விளம்பரமாகுமுன் உயர்த்தியவரி செலாவணியாகாது.

இச்சட்டப்படி, அனுசரிக்கவேண்டிய விதிகளை விளம்பரம் செய்தல்.

149. முன் விளம்பரம் செய்து பின் விதிகள் செய்தல்.

அதிகாரங்களை பிறர் வசம் ஒப்புவிப்பது.

150. ரெவின்யு வழக்குகளுக்கு போர்ட்டுக்கு அதிகாரங்களைத் தருவது.
151. கலெக்டர் அதிகாரத்தை உத்தியோகஸ்தர்களுக்குத் தருதல்.

ஷெட்யூல் (அட்டவணை).

1-ம் ஷெட்யூல்.—ரசீது எப்படியிருப்பது என்பது.
2-ம் ஷெட்யூல்.—கால நிர்ணயம்.

சுருக்கங்கள்.

M.T.B.—1898-ம்வருஷத்து சென்னை குடிவார மசோதா (செலெக்ட் கமிட்டியாரால் திருத்தப்பட்டபடி).

பாயக்காரி—"டெனண்ட்" தமிழில் மொழிபெயர்க்கப்பட்ட பழைய சட்டங்களில், இப்பதம் உபயோகப்படுத்தப்பட்டிருக்கிறது.

மசோதாவின் நோக்கங்களையும், முகாந்தரங்களையும் விளக்கும் முகவுரை.

ஆதிகாலத்திலிருந்து, 1802-ம் வருஷத்திய சாசுவத பைசல் ரெகு
லேஷன் XXV ஏற்பட்ட தேதி வரை, நிலவரி நிர்மாணம், நிர்ணயமாக
ஏற்படவில்லையென்பதும் ; மிதமான நிலவரி தொடர்ந்து அமுலிலிருப்
பதற்கு, .ஜமீன்தார்களுக்காவது, குடியானவர்களுக்காவது, நிஷ்கரணை
தராததாகவும், வரித்தொகை நிர்ணயம் செய்யப்படுவதற்கு ஸ்திரமான
கொள்கைகளில்லாததாகவும், பழைய மகம்மதிய அரசாங்கத்தின் கீழும்,
ஹிந்து அரசாங்கத்தின் கீழும், நிலவரி முறை நிலைவரமற்றதாயிருந்த
தென்பதும் ; நிலவரியை உயர்த்துவதற்கு மகம்மதிய அரசர்களும், ஹிந்து
அரசர்களும், அடிக்கடி விசாரணைகளை நடத்திவந்தார்களென்பதும்; அர
சாங்கத்தால் நியமிக்கப்பட்ட ஸ்தல உத்தியோகஸ்தர்களின், விசாரணை
களையும், அபிப்பிராயங்களையும் அனுசரித்து வரியை உயர்த்துவது வழக்க
மாயிருந்ததென்பதும் ; மேற்கூறியவாறு அதிக வரிவருமானம் பெறு
வதற்கு சர்க்கார் பழைய ஜமீன்தார்களை நீக்கி அவர்கள் ஸ்தானத்தில்
ஜமீன்களை நிர்வாகிப்பதற்கு புதிய மனிதர்களை நியமித்து வந்தார்களென்
பதும், அதன் மூலம் தங்களுக்கு எல்லா நிலங்கள் சம்பந்தமாகவுள்ள
அதிகாரத்தை செயல்முறையில், சர்க்கார் நிரூபித்து வந்தார்களென்
பதும் ; ஜமீன்தார்கள், குடியானவர்களுக்கு வரிஸ்திரத்தை அளிக்க
வில்லையென்பதும், குடியானவர்கள் செலுத்தவேண்டிய வரியை ஜமீன்
தார்கள் அவ்வப்போது அதிகரித்து வந்தார்கள் என்பதும், சென்னை
ராஜதானி மஹாஜனங்களின் மாகாண அரசாங்கத்திற்கு உட்பட்ட பிர
தேசங்களிலுள்ள ஜமீனதார்களுக்கும், மிராசுதார்களுக்கும், ரயத்துகளுக்
கும், கிருஷிகர்களுக்கும், நன்கு தெரிந்த விஷயமே. இத்தகைய பரிபா
லன முறை நாட்டின் சுபிட்சத்திற்குப் பாதகமானதென்பதும், விவசாய
அபிவிருத்திக்கும், பொருளாதாரத்திற்கும், இடையூறாக இருந்ததென்
பதும், ஜனங்களுடைய சுயேச்சையையும், பொருள்ஸ்திரத்தையும், குறை
த்து, அவர்களுடைய சௌகர்யங்களை அழித்தன என்பதும், மேற்கூறிய
ஜமீன்தார்களுக்கும், மிராசுதார்களுக்கும், ரயத்துகளுக்கும், கிருஷிகர்களுக்
கும் வெளிப்படையாகத் தெரிந்த விஷயமே. ஆதலால், நிலைவரமற்ற
தாயும், கவலைக்கிடந்தருவதாயும், உள்ள தீய நிலைமையை, தங்கள் ஆட்சி
முறையினின்று நீக்குவதற்கு பிரிட்டிஷ் சர்க்கார் தீர்மானித்திருக்கிறார்கள்.
அதை முன்னிட்டு, ஜமீன்தார்களுக்கும், இதர நிலச்சுவான்தார்களுக்கும்,
அவர்களுடைய வார்சுகளுக்கும், சந்ததிகளுக்கும், நிலத்தில், நிரந்தர
மேல்வார உரிமையை சாசுவதமாக கொடுப்பதற்கும், அவர்கள் நிலத்தில்
நிரந்தர உரிமையைக் குடியானவர்களுக்கு சாசுவதமாக அளிப்பதற்கும்,
சாசுவத பைசல் காலத்தில் ஏற்படுத்தப்பட்ட வரி, எந்த சந்தர்ப்பத்திலும்,
என்ன முகாந்தரத்தைக்கொண்டும், மாறாமலிருக்கும் வண்ணம் மேற்
படி நிலங்களுக்கு மிதமான சர்க்காரர் வரியை சாசுவதமாக விதிப்பதற்
கும், சர்க்கா தீர்மானித்தார்கள். மேற்படி தீர்மானத்தை செயல் முறை
யில் கொண்டுவருவதற்கு குடியானவனுடைய விளைச்சலைப் பங்கிட்டும், மா
மூலான சொர்ணதாய வரிகளைக் கணக்கிட்டும், நிலவரி விதிக்கும் அக்
காலத்திய நிலைவரமற்ற முறையை ஒழித்துவிடுவது யுக்தமெனக் கருதப்
பட்டது ; அவ்வாறு அதை ஒழித்த பிறகு, குடியானவர்கள் தங்கள்
ஜமீன்தார்களோடும், சர்க்காரோடும், செய்துகொண்ட சாசுவதமான ஏற்
பாட்டின் நலத்தையும் பாதுகாப்பையும் அடையுமாறு, அவர்கள் செலுத்
தும் நிலவரியையும், அவர்களின் காணியாட்சியையும், நிரந்தரமாகச் செய்த
சாசுவத பைசல் ரெகுலேஷன் XXV-ம், பட்டா ரெகுலேஷன் XXX-ம்,
கர்ணங்களின் ரெகுலேஷன் XXIX-ம், XXXI ரெகுலேஷனும் (எல்
லாம் ஒரே தேதியில் அதாவது 1802-ம் ௵ ஜூலை ௴ 13௳) சட்டமாக்கப்
பட்டன மேற்கூறியவாறு காணியாட்சியும், நிலவரி விகிதங்களும், என்
றும் மாறாவண்ணம் நிரந்தரமாகச் செய்யப்பட்ட பிறகு (மேலே சொல்லப்
பட்ட ஸ்திர ஏற்பாடு உண்டாயிருந்தும்) வழக்குகள் ஏற்பட்டால், அப்
பொழுது, சாசுவத பைசல் வருஷத்தின் முன் வருஷத்தில் சாகுபடி
செய்யப்பட்ட நிலங்களுக்கு ஏற்பட்ட வரி விகிதங்களே ஒழுங்கான வரி
விகிதங்கள் என்று நீதிஸ்தலங்கள் தீர்மானிக்கவேண்டுமென்றும், மேற்
படி வரி விகிதங்கள் அறியமுடியாவிட்டால், வழக்கு சம்மந்தமான நிலத்
தைப் போன்ற ஒத்த தரத்தையுடைய நிலங்களுக்கு என்ன வரி விகிதங்
கள் அக்காலத்திலிருந்தனவோ, அவைகளே ஒழுங்கான வரி விகிதங்கள்
என்று தீர்மானிக்கவேண்டும் என்ற விதிகள் ஏற்படுத்தப்பட்டன. ஆனால்
சாசுவத பைசல் ரெகுலேஷனின் ஷரத்துகளைப்பற்றியும், 1802-ம் வருஷத்
திய பட்டா ரெகுலேஷன் ஷரத்துகளைப்பற்றியும், ஒரு தவறான வியாக்
கியானம் ஏற்பட்டதின் காரணமாக, குடியானவனின் நிரந்தரக் காணி
யாட்சி உரிமையும், நிரந்தர நிலவரி நிர்மாண உரிமையும், ஜமீன்தார்
களாலும், சில அன்னிய நீதிபதிகளாலும், நிராகரிக்கப்பட்டுவந்தன.
பிரிட்டிஷ் ஆட்சியின் ஆரம்பத்தில் நாட்டின் நியாயங்களையும், சம்பிரதாயங்
களையும் அறியாத, மேற்படி நீதிபதிகள், “ நிலப்பிரபுவும், வாடகைக் குடி
யானவனும் ” என்ற ஆங்கிலச் சட்ட விதியை இந்தியக் காணியாட்சி முறை
சட்டத்தில் புகுத்திவிட்டார்கள். ஆனால் பிறகு ஏற்பட்ட தீர்ப்புகளில்,
நீதிகலா வல்லுனர்களாகிய (அறக்கலை வல்லுனர்களாகிய) சில இந்திய
நீதிபதிகள், சென்னை ராஜதானியில் குடியானவர்கள்தான் நிலத்திற்குச்
சொந்தக்காரர்கள் என்றும், சாசுவத பைசல் காலத்தில் நிர்மாணிக்கப்
பட்ட நில வரி விகிதம் நிரந்தரமானதென்றும், அது எச்சந்தர்ப்பத்திலும்,

என்ன முகாந்தரத்தைக் கொண்டும், மாற்றமுடியாதென்றும் முடிவு கூறினார்கள். சாசுவத பைசல் வரி நிர்மாணம் ஆதாரப்பட்டுள்ள பட்டா ரெகுலேஷன் 9-வது பிரிவு, 1869-ம் வருஷத்திய II-வது சட்டத்தால் ரத்து செய்யப்படும்வரை சரியான சட்டமாக அங்கீகரிக்கப்பட்டு வந்தது. செலெக்ட் கமிட்டியால், திருத்தப்பட்ட 1898-ம் வருஷத்திய மதராஸ் குடியானவர்களின் சட்டத்திலும், 1863-ம் வருஷத்திய மதராஸ் வரி மசோதாவிலும், மேற்படி விதி (பட்டா ரெகுலேஷன் 9-வது பிரிவு) அமைக்கப்பட்டிருந்தது. ஆனால், அனுபோக உரிமையில்லாத நிலச் சுவான்தார்களுக்கு சில ஷரத்துகளை ஏற்படுத்துவதின் நிமித்தம் 1865-ம் வருஷத்திய மதராஸ் சட்டம் VIII-யிலும், 1908-ம் வருஷத்திய எஸ்டேட் நிலச்சட்டம் I-லும், சில விஸ்தரிப்பு மாறுதல்கள் ஏற்படுத்தப் பட்டன. அவ்வாறு ஏற்படுத்தும்பொழுது உபயோகிக்கப்பட்ட சந்தேகாஸ்பத மான வார்த்தைகள், தவறான வியாக்யானங்களுக்கும் தவறான சட்டங் களுக்கும், அவ்வப்போது, இடம் தந்தன. அனுபோக உரிமையில்லாத நிலங்களுக்கு உத்தேசிக்கப்பட்ட, 1865-ம் வருஷத்திய VIII-வது மதராஸ் வரி வசூல் சட்டத்தின் 11-வது பிரிவில் (1) முதல் (4) வரையுள்ள உட் பிரிவுகளும், வரி உயர்வு சம்பந்தமான (30) முதல் (35) வரையுள்ள பிரிவுகளும், ஒழுங்கான நியாயமான வரி விகிதத்தைப்பற்றிய யூகிப்பு களைத் தெரிவிக்கும் 27 முதல் 28 வரையுள்ள பிரிவுகளும், தவறாக, அனு போக உரிமையுள்ள நிலங்களுக்கும் உபயோகப்படுத்தப்பட்டன. அக்கார ணத்தாலும், சாசுவத பைசல் ரெகுலேஷனிலும், பட்டா ரெகுலேஷனி லும், விதிக்கப்பட்ட சட்டத்திற்கு மாறாகவும், சன்னதுகளிலும், கபூலியத்து களிலும், கண்டுள்ள நிபந்தனைகளுக்கு மாறாகவும், ஜமீன்தார்கள் தங் கள் இஷ்டானுசாரமாக விதிவிதரணையில்லாமல், வரியை உயர்த்தி வந்த தாலும், குடியானவர்கள் நிலைவரமற்ற, சதா அதிகரிக்கின்ற, நிலவரியைச் செலுத்தவேண்டியதாயிற்று. அதன் பலிதமாக, குடியானவர்கள் பொறு க்கமுடியாத கடன் பளுவை தாங்கநேரிட்டது. பல இடங்களில் சகிப்பதற் கரிய நில்வரியைச் செலுத்த முடியாமலும், ஜமீன்தார்களும், அவர்களின் சிப்பந்திகளும், இம்சித்து கேட்கும் அநியாயமான தொகைகளைக் கொடுக்க முடியாமலும், குடியானவர்கள், தங்கள் உரிமைகளை கடன் கொடுத்த வர்களிடமே ஒப்படைக்க நேர்ந்தது. மேற்கூறிய காரணங்களை முன்னிட்டு குடியானவனுக்கு நிலத்தில் நிரந்தர உரிமை இருக்கிறதென்றும், சாசு வத பைசல் காலத்தில் நிலங்களுக்கு விதிக்கப்பட்ட மிதமான, சர்க்கார் (பொது) வரி, நிரந்தரமாக ஏற்பட்டதென்றும், நிலைநாட்டிக் கூறுவதற்கு சென்னை மாகாண அரசாங்கத்தார் தீர்மானித்திருக்கிறார்கள். சாசுவத பைசல் காலத்தில் நிர்மாணிக்கப்பட்ட நிலவரி விகிதங்களின் நிரந்தரத் தன்மை, கீழே குறிக்கப்பட்ட விழுமிய சாசனங்களால் சாசுவத பைசலுக்கு முன்பே, வலியுறுத்தப்பட்டிருக்கிறது :—(i) கலெக்டர்களுக்கு அனுப் பிய குறிப்புகள், (ii) அரசாங்கப்பத்திரங்கள், (iii) கோர்ட் ஆவ் டை ரெக்டர்ஸ் விடுத்த நிரூபங்கள், (iv) ஐந்தாவது அறிக்கை, (v) ஹாவலி நிலங்களின் விற்பனை விளம்பரங்கள், (vi) சர். ஜான் ஷோருக்கும், காரன் வாலஸ் பிரபுவுக்கும் நடந்த கடிதப் போக்கு வரவு. 1802-ம் வருஷத்திய ரெகுலேஷன்கள் சட்டமான பிறகு அவைகளுக்கும் மேற்கூறிய அர்த்தம் தான் 1863-ம் வருஷம் வரை செய்யப்பட்டு வந்தது. 1863-ம் வருஷத்திய வரி மசோதாவிலும், செலெக்ட் கமிட்டியால் திருத்தம் செய்யப்பட்ட 1898-ம் வருஷத்திய மதராஸ் குடியானவர்களின் மசோதாவிலும், பட்டா ரெகுலேஷனின் 7, 9 பிரிவுகள், யாதொரு மாறுதலில்லாமல், உள்ளபடி யே எடுத்து அமைக்கப்பட்டிருந்தன. சாசுவதபைசல் காலத்தில் ஏற்படுத்த பட்ட வரியை உயர்த்துவதற்கு ஜமீன்தாருக்கு உரிமையுண்டென்பது ரெவி னியூ போர்டாலும், (1864-ம் வருஷத்திய பி.பி. நெ. 7743), 1905-ம் வருஷத்திய எஸ்டேட் நில மசோதாவின் சம்பந்தமாக, கௌரவம் வாய் ந்த போர்ப்ஸ் (Forbes) துரை செய்த சீரிய சொற்பொழிவிலும் நிரா கரிக்கப்பட்டிருக்கிறது. இத்தகைய நிகரற்ற, ஆட்சேபிக்க இயலாத, மேற் கோள்களின் மீது ஆதாரப்பட்டு சாசுவத பைசல் காலத்தில் ஏற்படுத்தப் பட்ட நிலவரி, நிரந்தரமாக ஏற்படுத்தப்பட்டதென்றும், பேஷ்கஷைப் போலவே அதுவும் எக்காலத்திலும் மாற்ற முடியாதென்றும், குடியான வன் நிலத்திற்குச் சொந்தக்காரனென்றும் நிலைநாட்டும் இப்புதிய சட்ட த்தை ஏற்படுத்த சென்னை மாகாண அரசாங்கத்தார் இப்பொழுது தீர் மானித்திருக்கிறார்கள்.

சென்னை ராஜதானியில் நிலத்தை ஆண்டு அனுப விப்பதின் சம்பந்தமாகவுள்ள சட்டத்தை திருத் திக்கூறும் மசோதா.

I-ம் அத்தியாயம்.

பூர்வாங்கம்.

பீடிகை.

சாசுவத பைசலுக்குமுன், சர்க்கார் சார்பான ஜமீன்தார்களுக்கு, குடி யானவர்கள் செலுத்திவந்த நிலவரியை உயர்த்துவது சம்பந்தமாக இருந்த நிலைவரமற்ற இம்சிப்பான முறையும், நிலத்தின் சம்பந்தமாக குடியான வர்களுக்கும் ஜமீன்தாருக்கும் இருந்த நிர்ணயமற்ற காணியாட்சியும், ஒழிக்கப்பட்டமையாலும்; அவைகளின் ஸ்தானத்தில் குடியானவர்கள் ஜமீன் தார்களுக்குச் செலுத்தவேண்டிய நிலவரி விகிதங்களும், ஜமீன்தார் சர்க்கா

ருக்குச் செலுத்தவேண்டிய பேஷ்கஷும், குடியானவனுக்கு நிலத்திலுள்ள உரிமையும், நிரந்தரமாகவும் என்றும் மாறாவண்ணமும், ஏற்படுத்தப்பட்டனவென்று (பேஷ்கஷை சாசுவதமாக நிர்மாணிக்கவேண்டுமென்ற முக்கிய கருத்துடன் செய்யப்பட்ட) **XXI** சாசுவத பைசல் ரெகுலேஷனாலும், பட்டா ரெகுலேஷன் **XXX** ஆலும், கர்ணம் ரெகுலேஷன் **XXIX** ஆலும், 1802-ம் வருஷத்திய ரெகுலேஷன்கள் **XXVII**, **XXVIII**, ஆலும், ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறபடியாலும் ; ஆனால், காணியாட்சி சம்பந்தமாகவும், நிலவரி சம்பந்தமாகவும், குடியானவனுக்குள்ள உரிமைகள், மேற்கூறியவாறு ஐயம் திரிபற, பட்டவர்த்தனமாகத் தெரிவிக்கப்பட்டும், அங்கீகரிக்கப்பட்டுமிருந்தும், ஜமீன்தார்கள், சட்டத்தின் வெளிப்படையான கருத்திற்கு மாறாக, மேற்படி உரிமைகளை அவ்வப்போது நிராகரித்தும், சில சமயங்களில், நீதி ஸ்தலங்களின் மூலம் தவறான தீர்ப்புகளைப்பெற்றும், இவ்வாறு, குடியானவர்களின் பாத்தியதைகளுக்கு, தற்காலிகமான தடை விளைத்து வந்தமையாலும் ; ரயத்துவாரிக் குடியானவர்கள் தங்கள் கீழ் இருப்பவர்களிடம் (டெனண்ட்ஸ்) உயர்ந்த வரி கேட்கும் உரிமையை அங்கீகரிக்கும் கருத்துடன் (நில அனுபோகஸ்திரத்தையும், சாசுவதமாய் ஏற்பட்ட நிலவரி ஸ்திரத்தையும் அங்கீகரித்த) 1863-ம்௵த்திய வரிவசூல் மசோதாவின் 10-வது உட்பிரிவு, 1865-ம்௵த்திய வரிவசூல் மசோதாவின் 11-வது பிரிவில் நீக்கப்பட்டு, அதற்குப் பதிலாக (1) முதல் (4) வரையுள்ள உட்பிரிவுகள், ஏற்படுத்தப்பட்டமையாலும், இவ்வாறு இருவகை நிலச்சுவான்தார்களும் வகைதொகையில்லாமல் ஒன்று சேர்க்கப்பட்டதால், தவறான சட்ட வியாக்கியானங்களுக்கும், தீர்ப்புகளுக்கும், வசதி ஏற்பட்டமையாலும்; அனுபோக உரிமைக் குடியானவர்களையும், பழைய கரம்பு நிலக்குடியானவர்களையும் "ரயத்து" என்ற, ஒரு லக்ஷணத்தின் கீழ்கொண்டுவந்தும், அனாதிக்கரம்பு நிலக்குடியானவனுக்குச் செல்லவேண்டிய 30—35, 40, 41, 27, 28 முதலிய பிரிவுகளை சந்தேகாஸ்பதமான உருவிலமைத்தும், மற்றொரு தவறு ஏற்பட்டமையாலும், அக்காரணத்தால் சட்டமிருக்கிறதென்று சாற்றியும், ஒப்பந்தமிருக்கிறதென்று கூறியும், சாசுவத பைசல் காலத்தில் நிரந்தரமாக ஏற்பட்ட வரி விகிதங்களை ஜமீன்தார்கள் அவ்வப்போது உயர்த்தி வந்தமையாலும் ; அத்தகைய அநியாயமான, ஒழுங்கற்ற, வரி உயர்வால் குடியானவர்களுக்கு சொல்லமுடியாத நஷ்டமேற்பட்டிருக்கின்றமையாலும், சாசுவத பைசல் காலத்தில் நிரந்தரமாக ஏற்பட்ட வரியை "நிலவரி" என்று குறிக்காமல் "ரெண்ட்" (வாடகை, வரி) என்ற வார்த்தையை உபயோகித்திருப்பதின் காரணமாக, அதிக குழப்பம் உண்டாக்கப்பட்டமையாலும் ; "ரெண்ட்" என்ற வார்த்தையை நீக்கி அதற்கு பதிலாக, "நில வரி" என்ற வார்த்தையை உபயோகித்த, 1898-ம்௵த்திய மதராஸ் குடியானவர்களின் மசோதாவும் (செலக்ட் கமிட்டியார் திருத்தம் செய்தபடி) "ரெண்ட்" என்ற வார்த்தைக்குப் பதிலாக "ஷிஸ்து" (கிஸ்தி) என்ற வார்த்தையை உபயோகித்த 1905-ம்௵த்திய மதராஸ் எஸ்டேட் நில மசோதாவும் எக்காரணம்பற்றியோ, சென்னை எஸ்டேட் நிலச் சட்டங்களிலிருந்து விட்டுவிடப்பட்டமையாலும் ; "ரெண்ட்" என்ற வார்த்தையை நீக்கி (செலக்ட் கமிட்டியால் திருத்தியமைக்கப்பட்ட) 1898-ம்௵த்திய மதராஸ் குடியானவர்களின் மசோதாவில் உபயோகித்துள்ளபடி "நிலவரி" என்ற வார்த்தையை உபயோகிப்பதும், மேற்படி குடியானவர்களின் மசோதாவிலுள்ள பெரும்பான்மையான விதிகளையும், சாசுவத பைசல் ரெகுலேஷன் **XXV**, பட்டா ரெகுலேஷன் **XXX**, 1802-ம்௵த்திய **XXVIII**, **XXVII**, ஆகிய இவைகளின் முக்கிய ஷரத்துகளையும் அனுசரித்து அமைப்பதும், அவசியமென அரசாங்கத்தார் கருதுகிறார்கள். வெகுகாலமாக, வழக்கத்தில் மறுக்கப்பட்ட உரிமைகளை, குடியானவர்களுக்கு திருப்பியளிக்க அரசாங்கத்தார் தீர்மானித்திருக்கிறார்கள். மேலும் அநியாயமான வரி உயர்வுகளால், இந்த ராஜதானியில் 1895-ம்௵த்தில் 45 கோடியாயிருந்த விவசாயக்கடன், இன்று, ஜமீன் பிரதேசங்களிலும், சர்க்கார் பிரதேசங்களிலும், 200 கோடியாக உயர்ந்து, குடியானவனுடைய பொருளாதார நிலைமையில் பெருத்த நெருக்கடி ஏற்பட்டிருக்கின்றமையாலும் ;

குடியானவனுடைய நில உரிமையையும், ஜமீன்தாரின் மேல்வார பாத்தியதையையும், 1802-ம்௵த்தில் அல்லது, அதற்கு அண்மையில் சாசுவத பைசல் காலத்தில் ஏற்படுத்தப்பட்ட நிலவரியின் நிரந்தரத்தன்மையையும், தெரிவித்துக் கூறுவதற்கும், மேற்படி ஆதாரத்தின்மீது குடியானவர்களுடைய உரிமைகளையும், கடமைகளையும், அமுலில் கொண்டு வருவதற்கு தக்க விதிகளை ஏற்படுத்துவதற்கும், "சென்னை எஸ்டேட் நிலவரி மசோதா" என்ற நாமம்கொண்ட இம்மசோதாவை சட்டமாக்க சென்னை அரசாங்கத்தார் தீர்மானித்திருக்கிறார்கள்.

சுருக்கமான தலையங்கம்.

1. இச்சட்டம் "சென்னை எஸ்டேட் நிலவரிச் சட்டம்" என்று அழைக்கப்படலாம். இது -ம்௵ ௴ ௳யில் அமுலுக்கு வரும். **புதிது.**

சட்டம் செல்லக்கூடிய பிரதேசங்கள்.

மலபார் ஜில்லாவையும், தென்கிழக்கு வைநாடு என்றழைக்கப்படும், நீலகிரி ஜில்லாவின் ஒரு பகுதியையும் தவிர, ராஜதானி நகரத்தின் (சென்னை) எல்லைகளுக்கு புறம்பாயுள்ள, சென்னை ராஜதானி முழுவதிற்கும் இச்சட்டம் செல்லும். **M.T.B. 1.**

ஆனால், விளம்பரத்தில் குறிப்பிடப்படும் ஒரு தேதியிலிருந்து, இச்சட்டத்தின் எல்லா விதிகள், அல்லது ஒரு சில விதிகள், விலக்கப்பட்ட எல்லா பிரதேசங்

களுக்கும், அல்லது ஒரு சில பிரதேசங்களுக்கும், அல்லது அவைகளின் ஒரு பாகத்திற்கும் இச்சட்டம் செல்லலாமென்று மாகாண அரசாங்கம் தெரிவிக்கலாம்.

புதிது. 2. 1908-ம்ஞூ௵த்திய சென்னை எஸ்டேட் நிலச் சட்டம் I-ம் 1909-ம் ஞூ௵த்திய IV சட்டமும், 1934-ம்ஞூ௵த்திய சென்னை சட்டங்கள் VIII, 1936-ம்ஞூ௵த்திய I, VI, XIII, XVIII, சட்டங்களும், இச்சட்டத்தால் ரத்து செய்யப்படுகின்றன.

சட்டங்களின் ரத்து.

M.T.B. 3. 3. இச்சட்டத்தில், விஷயத்தைப்பற்றியாவது, சந்தர்ப்பத்தைப்பற்றியாவது, ஏதாவது வியதிரேகமாயிருந்தாலொழிய—

இலக்ஷணங்கள்.

எஸ்டேட்.

(1) எஸ்டேட் என்றால்—

(ஏ) சாசுவத பைசலான ஒவ்வொரு எஸ்டேட்; ஜமீனாயினும், ஜாகீராயினும், மிட்டா ஆயினும், பாளையம் ஆயினும் சரி;

(பி) கலெக்டர் கச்சேரியில் தனியாகப் பதிவு செய்யப்பட்ட, மேற்படி சாசுவத பைசலான எஸ்டேட்டின் ஒரு பாகம்;

(ஸி) சாசுவத சைபல் ஏற்படாத பாளையம் அல்லது ஜாகீர்;

(டி) இனும் அல்லது ஸ்ரோத்ரிய கிராமம், அல்லது சர்க்காரால் கொடுக்கப்பட்ட கிராமத்தின் ஒரு பாகம், முடிவிற் கூறியது பிரிடிஷ் சர்க்காரால் கொடுக்கப்பட்டாவது, அல்லது காயம் செய்யப்பட்டாவது அங்கீகரிக்கப்பட்டாவது இருக்கவேண்டும்:

புதிது. ஆனால் மேற்கூறியவை சாசுவத பைசல் காலத்தில் எஸ்டேட் ஆஸ்தி மதிப்பில் சேர்க்கப்பட்டிருக்கவேண்டும். மேலும், விலக்கப்பட்ட இனாம்களும், சாசுவத பைசலுக்கு பிறகு ஏற்பட்ட இனாம்களும், எஸ்டேட் என்ற லக்ஷணத்தின்கீழ் வரா.

கிராமம்.

(2) கிராமம் என்றால்—

ஒரு எஸ்டேட்டிலுள்ள குறிக்கப்பட்ட ஒரு நில விஸ்தீரணம்; அல்லது எஸ்டேட் அடங்கிய ஒரு கிராமம்;

திருத்தப்பட்டது. அது, ரெவின்யூ கணக்குகளில், கிராமம் என்று குறிக்கப்பட்டிருக்க வேண்டும். மேற்படி ரெவின்யூ கணக்குகள், ஒரு கர்ணம் அல்லது பல கர்ணங்களால் தனியாக எழுதிவைக்கப்பட்டிருக்க வேண்டும்; அல்லது அது கிராமம் என்று மாகாண அரசாங்கத்தாரால் அங்கீகரிக்கப்பட்டிருக்கவேண்டும், அல்லது இச்சட்ட சம்பந்தமாக இனிமேலாவது "கிராமம்" என்று சர்க்காரால் அழைக்கப்படவேண்டும்.

"நிலச்சுவான்தார்."

(3) நிலச்சுவான்தார் என்றால்—

ஒரு எஸ்டேட்டை உடையவர்; சர்க்கார் நில வரியை தம் சார்பாக மாற்றிப் பெற்றுக்கொண்டவர்; இன்னும் அது ஒவ்வொரு குத்தகைதாரையும், சக்கார் வரி மாற்றிப் பெற்றுக்கொண்டவரையும், ஒரு எஸ்டேட் சம்பந்தமாக அனுபவ அடமானமுடையவரையும், மேற்படி பாத்தியதையை விலைக்கு வாங்குபவரையும், மேற்படியாருக்குச் செல்லவேண்டிய நிலவரியை வசூலிக்க உரிமையடைந்தவரையும் குறிக்கும். சட்ட அருகதையில்லாத நிலச்சுவான்தார்களின் எஸ்டேட்டுகளை நிர்வகிக்கும் மானேஜர்களையும், ஜாமீனுக்காக எஸ்டேட்டுகளை தங்கள் வசம் வைத்திருக்கும், சர்க்கார் அதிகாரிகளையும், வரி பாக்கிகளுக்காவது, சிவில் கோர்ட்டின் உத்திரவுகளின் பிரகாரம் ஜமீன்களை கைவசப்படுத்தி வைத்திருக்கும் சர்க்கார் அதிகாரிகளையும், அவ்வார்த்தை ("நிலச்சுவான்தார்") குறிக்கும்.

M.T.B. விளக்கம்.—ஜமீனுக்கு உரியவர் எவர் என்பதைப்பற்றி வழக்கு ஏற்பட்டால், அல்லது ஜமீன் கூட்டுப் பங்காளர்களில் நிலச்சுவான்தார் என்ற ஹோதாவில் இச்சட்டத்தின் பிரகாரம் எவர் வியாஜ்ஜியம் செய்யவேண்டுமென்பதைப்பற்றி கேள்வி ஏற்பட்டால், ஜமீன் அமைந்துள்ள ஜில்லாவின் கலெக்டர் கச்சேரியில் எவர் பெயரால் ஜமீன் பதிவு செய்யப்பட்டிருக்கிறதோ அவரே இச்சட்டத்தின்படி வியாஜ்ஜியமிடலாம்; கூட்டுப்பங்காளர்களாக இருவர் அல்லது மூவர் பெயரால் ஜமீன் பதிவு செய்யப்பட்டிருந்தால், ஜமீனை நிர்வகிப்பவராக இதர கூட்டுப் பங்காளர்களால் எவர் கருதப்படுகிறாரோ, அவர், அல்லது வழக்கு ஏற்பட்டால் கலெக்டர் எவரை மூத்த பங்காளராக பதிவு செய்திருக்கிறாரோ அவர், இச்சட்டத்தின்படி நிலச்சுவான்தாராக வியாஜ்ஜியம் தொடரலாம்.

ரயத்து. (4) நியாயமாகச் செலுத்தவேண்டி நிலவரியை பணமாகவோ தானியமாகவோ, ஜமீன்தாருக்குச் செலுத்தவேண்டியது என்ற நிபந்தனையின்மீது நிலத்தை அனுபவிப்பவனுக்கு, குடியானவன் என்று பெயர் (ryot):

ஆனால், நிலத்திற்கு சம்பந்தமான வீட்டில் அல்லது இதர கட்டிடத்தில் வாசம் செய்வதால் மட்டும் அவன் "குடியானவனாகக்" கருதப்படமாட்டான்.

(5) ஜமீன்தாருக்கு, குடியானவன் செலுத்தவேண்டிய நிலவரி என்பது. சாசுவத பைசல் காலத்தில், நிலத்திற்கு நிரந்தரமாக விதிக்கப்பட்ட நிலவரி விகிதமாகும். அதில் கீழ்க்கண்டவைகளும் அடங்கியிருக்கின்றன :—

" நிலவரி."

(a) நிலத்திற்கு வேருகவுள்ள மரங்களைப் பயன்படுத்திக்கொள்வதற்காக செலுத்தவேண்டிய தொகை ;

(b) நிலத்திற்காகப் பாய்ச்சப்படும் தண்ணீருக்கு ஏற்பட்ட வரி. நிலத்திற்குச் செலுத்தவேண்டிய நில வரியில் இது மொத்தமாக சேர்ந்திருந்தாலுஞ் சரி, அவ்வாறு இல்லாவிட்டாலும் சரி ;

(c) நில வரியோடு செலுத்தவேண்டிய, சட்ட சம்மதமான அல்லது சட்ட ரீதியான வழக்கத்தின்படியுள்ள எல்லா வரிகளும், தொகைகளும், கட்டணங்களும் ;

(d) அமுலிலுள்ள எச்சட்டத்தின் பிரகாரமாவது, நிலத்தின் சம்பந்தமாகவும், மரங்களின் சம்பந்தமாகவும் தண்ணீரின் சம்பந்தமாகவும், வரியாக வசூலிக்கக்கூடிய தொகை ;

(e) நில அனுபோகத்திற்கு, குடியானவன் இச்சட்டத்தின்கீழ் செலுத்தவேண்டிய இதர தொகை அல்லது தொகைகள்.

விளக்கம்.—வரிக்குத்தகைக்காரன் நிலச்சுவான்தாருக்குச் செலுத்தும் தொகையாவது, குடியானவன் கீழ் இருப்பவன், குடியானவனுக்குச் செலுத்தும் தொகையாவது, " நிலவரி " என்று கருதப்படமுடியாது.

" நிலப் பிரபு."

(6) நிலப் பிரபு என்பவர் தன் நிலத்தை சாகுபடி செய்ய பிறருக்கு விடுபவர். அதாவது பண்ணை நிலங்களையுடைய நிலச்சுவான்தார்.

" டெனண்ட்."

(7) டெனண்ட் (தற்காலீக குடியானவன்) என்பவன், வாடகை செலுத்த ஒப்பந்தம் செய்துகொண்டு, நிலப் பிரபுவின் நிலத்தை சாகுபடி செய்பவன். அதாவது ஜமீன்தாரின் பண்ணை நிலங்களைச் சாகுபடி செய்பவன்.

" வாடகை."

(8) "ரெண்ட்" (வாடகை) என்பது விவசாயத்திற்காகவது, தோட்டச்சாகுபடிக்காவது, மேய்ச்சலுக்காவது, நிலத்தை உபயோகிப்பதற்கு, நிலச்சுவான்தாரோடு ஒப்பந்தம் செய்துகொண்டு, பணமாகவோ, தானியமாகவோ, வாடகைக் குடியானவன் நியாயமாகச் செலுத்தவேண்டிய தொகை. அதாவது, ரயத்துக்கு ; வாடகைக் குடியானவன் செலுத்தவேண்டிய தொகை ; அல்லது, ஜமீன்தாரின் பண்ணை நிலத்திலுள்ள குடியானவன் ஜமீன்தாருக்குச் செலுத்தவேண்டிய தொகை.

" சாகுபடி செய்யக்கூடிய பொது நிலம்."

(9) " சாகுபடி செய்யக்கூடிய பொது நிலம் " என்பது, நிலவரி செலுத்தவேண்டிய நிலத்தைக் குறிக்கும்.

" காணி."

(10) குடியானவனுக்குச் சொந்தமான, ஒரு குறிப்பான துண்டு நிலம் அல்லது பல துண்டு நிலங்களுக்கு " காணி " என்று பெயர்.

" ரெவினியூ நிலம்."

(11) ரெவினியூ நிலம் என்பது, ஒரு நிலத்தை அல்லது ஒரு சர்வே நிலத்தை, குறிப்பிட்ட அளவு தானியமாகவோ, பணமாகவோ வரியைச் செலுத்தி வருகிற அல்லது செலுத்தவேண்டிய துண்டு நிலத்தைக் குறிக்கும்.

" நிர்ணயமான தொகை."

(12) சாசுவத பைசலுக்கு முன்வருஷத்தில் நிரந்தரமாக முடிவு செய்யப்பட்ட வரி விகிதங்களே, " நிர்ணயமான தொகையாகும்." புதிது.

" கையொப்பமிட்டது. "

(13) கையொப்பமிடுபவரின் பெயர் ஒரு முத்திரையாலும் குறிக்கப்பட்டால் அவ்வாறு முத்திரையிடப்பட்டதும், " கையொப்பமிட்டது " என்பதைக் குறிக்கும்.

" விதிக்கப்பட்ட."

(14) சர்க்கார் கெஜட்டு அறிவிப்பில், மாகாண அரசாங்கத்தால் அவ்வப்போது விதிக்கப்படுவதே, " விதிக்கப்பட்ட " என்ற வார்த்தையின் பொருளாகும்.

" ரெவினியூ வருஷம்."

(15) ரெவினியூ வருஷம் என்பது ஜூன்மீ 30உயில் முடியும் வருஷத்தைக் குறிக்கும்.

“ கலெக்டர்.”

(16) கலெக்டர் என்பது ரெவினியூ பிரிவின் அதிகாரியைக் குறிக்கும். இச்சட்டத்தின் பிரகாரம் கலெக்டரின் ஏதாவதொரு அதிகாரத்தைச் செலுத்துவதற்கு, பெயரைத் தெரிவித்தோ, அல்லது உள்ள உத்தியோகத்தின் பலிதமாகவோ, மாகாண அரசாங்கத்தால் நியமிக்கப்படுபவரையும் அது குறிக்கும்.

“ கமிஷனர்.”

(17) இச்சட்டத்தின்கீழ் வரக்கூடிய அப்பீல் அதிகாரத்தையும், தீர்ப்புத்திருத்தும் அதிகாரத்தையும், செலுத்துவதற்கு ரெவினியூ போர்டு அங்கத்தினராக நியமிக்கப்பட்டவருக்கு கமிஷனர் என்று பெயர்.

ரெவினியு விவகாரங்களுக்கு ஏற்பட்ட போர்டு.

(18) ரெவினியூ விவகாரங்களுக்கு ஏற்பட்ட போர்டு என்பது, எல்லா ரெவினியூ வழக்குகளிலும் அப்பீல் அதிகாரத்தையும், புணர் விசாரணை அதிகாரத்தையும் செலுத்தி முடிவான தீர்ப்புக் கூறுவதற்கு மாகாண அரசாங்கத்தால் நியமிக்கப்பட்ட நீதி சபை ஆகும்.

“ வாங்கப்பட்ட நிலங்கள்.”

நிலவரி பாக்கிக்காக, தீர்ப்புகளை நிறைவேற்றும், விற்பனை நடவடிக்கைகளிலாவது, வலத்திலாவது, அதிக தொகை கேட்பவர்களில்லாதபோது, ஜமீன்தாரால் வாங்கப்படும் நிலங்களே “ வாங்கப்பட்ட நிலங்களாகும். ”

விளக்கம்.—அவைகள், ஜமீன்தாருடைய, அல்லது நிலச்சுவான்தாருடைய, சொந்த நிலங்கள் ஆக முடியாது. அவைகளின் பூர்வ அந்தஸ்து மாருது. அவைகள் மீண்டும் குடியானவர்களுக்கு விடப்பட்டால், அவைகளிலுள்ள அனுபோக உரிமை குடியானவர்களுக்கு இயற்கையாக உடனே சேர்ந்துவிடும்.

2-ம் அத்தியாயம்.

நிலத்தின் சம்பந்தமாகவுள்ள பொதுவான உரிமைகள்.

M. T. B. 4. திருத்தியமைத்தது.

பொதுவான உரிமைகள்.

4. (1) இச்சட்டத்திலுள்ள விதிகளுக்குட்பட்டு, குடியானவன் அனுபோகத்திலுள்ள சாகுபடி செய்யக்கூடிய எல்லாப் பொது நிலங்களிலிருந்தும் வரி வசூலிக்கும் உரிமை நிலச்சுவான்தாருக்கு உண்டு.

(2) நிலமும் அதன் விளைவும், நிலத்தைச் சார்ந்துள்ள கட்டிடங்களும், குடியானவன் ஜமீந்தாருக்குச் செலுத்தவேண்டிய நிலவரிக்கு உத்தரவாதமாக இருக்கும். எல்லா உடைமைகளிலும், நிலவரிக்கு முதல் ஹக்கு உண்டு.

(3) இச்சட்டத்திலாவது, இப்பொழுது அமுலிலுள்ள ரெகுலேஷனிலாவது என்ன தெரிவிக்கப்பட்டபோதிலும், பட்டாவில் குறிக்கப்பட்ட தனது எல்லா நிலங்களிலும் குடியானவனுக்கு உடைமை உரிமை உண்டு. ஜமீன்தாருக்குக் கிடையாது, நிலவரியைத் தவிர, குடியானவனுக்கு வேறு கடமையாவது உரிமைக் கட்டுப்பாடாவது கிடையாது.

(4) நிலத்திற்கு, குடியானவன் செய்த அபிவிருத்தி, பூரணமாக அவனுக்கே சேரும். இத்தகைய அபிவிருத்தியின் காரணமாக, விளைச்சலின் (தானியத்தின்) மதிப்பு அதிகரித்தாலும், விளைச்சல் அதிகரித்தாலும், அதற்கு குடியானவன் இயற்கையாகச் செலுத்தும் வரி, நேராகவாவது;, மற்றவகையிலாவது உயர்த்தப்பட முடியாது.

தனது நிலத்தின் பெறுமானத்தையும் வளப்பத்தையும் அதிகரிக்க, குடியானவன் செய்யும் எச்செய்கையும் “ அபிவிருத்தி ” எனப்படும்.

(5) மாருக நிரூபிக்கப்படும்வரை, (4)-வது உட்பிரிவின்படி, கீழ்க்கண்டவைகளே அபிவிருத்திகள் என்று கருதப்படும் :—

(a) கிணறுகள், குளங்கள், நீர்க்கால்வாய்கள் கட்டுதல் ; விவசாய விஷயங்களுக்கும் அல்லது சாகுபடி செய்வதில் ஈடுபட்டுள்ள மனிதர்கள், கால்நடைகளின் உபயோகத்திற்கும், நீரை அளிப்பதற்கும், தேக்குவதற்கும் வினியோகிப்பதற்கும் ஏற்பட்ட அமைப்புகள்.

(b) நிலத்தை சமப்படுத்தி ; வரப்பு கட்டி ; நீர்ப்பாசனத்திற்கு லாயக்காகச் செய்தல்.

(c) நிலத்திலிருந்து நீரை வடிகட்டுதல் ; ஆற்று நீராலாவது, மற்ற நீராலாவது நிலம் முழுகப்படுவதைத் தடுத்தல், விவசாய விஷயங்களுக்கு உபயோகப்படுத்தப்பட்ட நிலத்தை அல்லது சாகுபடி செய்யக்கூடிய தரிசு நிலத்தை வெள்ளத்திலிருந்தாவது, நீர்க்கமுவிலிருந்தாவது, தண்ணீரால் ஏற்படும் இதர பிரமாதத்திலிருந்தாவது, பாதுகாத்தல்.

(d) சாகுபடி விஷயங்களுக்கு நிலத்தை சீர் செய்தல், களை, செடி, புதர் முதலியவைகளை அகற்றல் ; வேலி வரப்பு கட்டுதல், ஸ்திரமான அபிவிருத்தியைச் செய்தல்.

(e) மேற்கூறிய அமைப்புகளில் ஏதாவதொன்றுக்கு, மராமத்துச் செய்தல், புதுப்பித்தல், புதிதாகக் கட்டுதல்; அல்லது அவைகளுக்கு மாறுதல்கள் ஏற்படுத்தல் அல்லது சேருமானங்கள் உண்டாக்குதல்.

(f) குடியானவனுக்கும் அவனுடன் வசிக்கும் அவன் குடும்பத்தினருக்கும் தகுந்த குடியிருப்பு வீட்டைக் கட்டுதல்; வீட்டுடன் அவசியமான வெளி வீடுகளையும், விவசாயக் கட்டிடங்களையும் அமைத்தல்.

(g) மரங்களையும், உபயோககரமான செடிகளையும் நடுதல்.

(h) நன்கு பறம்படித்து உழுதல், உயர்ந்த உரமிடுதல், உர வஸ்துவை உபயோகப்படுத்தல்; இவை மூலமாக நிலத்தின் அல்லது நிலத்தின் ஒரு பாகத்தின் வளப்பத்தை அதிகரித்தல்.

(6) இச்சட்டத்தின் விதிகளின் பிரகாரமே தவிர; மற்ற முறையில் நிலவரி செலுத்தாததற்கு, அனுபோக உரிமையுள்ள குடியானவன் தன் நிலத்திலிருந்து நீக்கப்படமுடியாது.

(7) தரிசு நிலங்களை சாகுபடி செய்வதற்கு, ஜமீன்தார் குடியானவர்கள் வசம் ஒப்புவிக்கும்போது, விதிக்கப்பட்ட அல்லது வழக்கமான நிலவரியையே ஏற்படுத்தவேண்டும். அதாவது, சாசுவத பைசல் காலத்தில் சாகுபடி செய்யப்பட்ட நிலங்களுக்கு விதிக்கப்பட்ட வரியை, ஏற்படுத்தவேண்டும்.

(8) கிராம சமுதாய விஷயங்களுக்கு ஒதுக்கி வைக்கப்பட்ட நிலங்களும், கிராம சமுதாய விஷயங்களுக்குப் பயன்படும் நிலங்களாகிய, கிராம விடுதி நிலங்களும்; பொதுப் பாதைகளும், மாட்டுத் தொழுவங்களும், கால்வாய்களும், புறம்போக்குகளும் கிராமப் பொது ஜனங்களைச் சேர்ந்தவை. அவைகளில்; ஜமீன்தாருக்கு தற்போதிய உரிமையாவது, உத்தராதிகார உரிமையாவது கிடையாது. இத்தகைய பொது உடைமைகளை கிராமவாசிகள் உபயோகிப்பதையாவது, அனுபவிப்பதையாவது ஜமீன்தார்கள் தடுக்க உரிமையில்லை. அவைகளைப் பிறருக்கு மாற்றுவதற்காவது, பிறர் வசம் ஒப்புவிப்பதற்காவது, அவர்களுக்கு உரிமையில்லை. சமுதாய நிலங்களை ஜமீன்தார்கள் பராதீனம்செய்வதாவது, பிறர் வசம் ஒப்புவிப்பதாவது செல்லாது. கட்டாய வரியாதார சர்வே நடக்கும்பொழுது, சமுதாய நிலங்களை சர்வே செய்யவும், அவைகளைப்பற்றி ஒரு பதிவு தயாரிக்கவும், தங்களுக்கு யுக்தமாகத் தோன்றுகிறபடி, அதிகாரிக்கு அல்லது அதிகாரிகளுக்கு மாகாண சர்க்கார் உத்தரவிடலாம்.

(9) கிராமத்தின் பொது விவசாய உபயோகத்திற்கு ஒதுக்கிவைக்கப்பட்டுள்ள சமுதாய நிலங்களை, குடியானவன் வேறு விஷயங்களுக்கு (ஜமீன்தார் அனுமதியில்லாமல்) உபயோகப்படுத்தக்கூடாது.

(10) (a) சாசுவத பைசல் காலத்தில் இருந்த பொது நீர்ப்பாசன அமைப்புகளையும், அதற்குப் பிறகு ஏற்படுத்தப்பட்டு, எக்காலத்திலாவது நீர்ப்பாசனத்திற்கு உபயோகமாயிருந்த எந்த நீர்ப்பாசன அமைப்பையும் ஜமீன்தார்கள் மராமத்து செய்து நல்ல நிலைமையில் வைத்துக்கொள்ள வேண்டும்.

(b) சாகுபடிக்கு ஆதாரமான புதிய நீர்ப்பாசன அமைப்புக்களை ஏற்படுத்துவதற்கு ஜமீன்தார்கள் கடமைப்பட்டிருக்கிறார்கள். அதற்காக எந்த சந்தர்ப்பத்திலும், ஜமீன்தார் நில வரியை உயர்த்தக்கூடாது.

(c) தற்போதுள்ள நீர்ப்பாசன அமைப்புகளுக்கும், இனிமேல் புதிதாக கட்டப்படும் அமைப்புகளுக்கும், சிறு பழுதுகளைப்பார்ப்பதற்கு குடிமராமத்து என்ற வழக்கப்படி குடியானவர்கள் ஆட்களை அனுப்பவேண்டும்.

(11) (a) எல்லாக் காடுகளிலும், குடியானவர்களுக்கு நிலத்தில் உரிமையுண்டு. ஆடுமாடுகளை மேய்ப்பதற்கும், உரத்திற்காக குழை தழைகளை எடுத்துக்கொள்வதற்கும், சொந்த வீட்டு விஷயத்திற்கும், விவசாய விஷயங்களுக்கும்; மரம் வெட்டிக்கொள்வதற்கும் வழக்கமான உரிமைகளும் உண்டு, இவ்வுட்பிரிவு 1882-ம் வருஷத்திய சென்னை காட்டுச்சட்ட விதிகளுக்கு உட்பட்டது.

(b) மேற்படி காடுகளில், ஜமீன்தாருக்கு நில உரிமை கிடையாது. மேற்கூறிய இயற்கை வசதிகளை குடியானவர்கள் அனுபவிப்பதை ஜமீன்தார்கள் தடுக்கமுடியாது.

(12) (a) தரிசு நிலங்களிலும், காடுகளிலும், தனது நிலத்திற்கு நேராகக் கீழே உள்ள, சுரங்கத்தைப் பயன்படுத்திக்கொள்வதற்கும், கற்பாறைகளை வெட்டிக்கொள்வதற்கும், உலோகப் பொருளைத் தோண்டி எடுத்துக்கொள்வதற்கும்; சரளை; களிமண் இவைகளை எடுத்துக்கொள்வதற்கும் குடியானவனுக்கு உரிமையுண்டு. சுரங்கச் சட்டப்படி; சர்க்காருக்கு கட்டணம் செலுத்தவேண்டியதே, இது சம்பந்தமான நிபந்தனை.

(b) குடியானவன், ஆண்டு அனுபவித்துவரும் நிலத்தின் மேல் பரப்புக்குக் கீழே உள்ள சுரங்கங்களுக்காவது, கற்பாறைகளுக்காவது ஜமீன்தார்களுக்கு யாதொரு உரிமையும் கிடையாது.

(c) ஜமீன்தார் தனது பண்ணை நிலத்திலுள்ள சுரங்கத்தைப் பயன்படுத்திக்கொள்வதற்கும், உலோகத்தை எடுத்துக்கொள்வதற்கும், கற்பாறைகளை வெட்டி எடுத்துக்கொள்வதற்கும் உரிமையுண்டு.

(d) தன் நிலத்திலுள்ள சுரங்கத்தைப் பயன்படுத்திக்கொள்வதற்காவது, கற்பாறைகளை வெட்டிக்கொள்வதற்காவது, உலோகத்தை எடுத்துக் கொள்வதற்காவது, சாளை, களிமண் முதலியவைகளை உபயோகப்படுத்திக் கொள்வதற்கும், குடியானவன் அல்லது ஜமீன்தார் விரும்பினால், மேற்படி நிலத்திற்கு ஏற்பட்ட வரியைச் சரிசெய்து திருத்தியமைக்கவேண்டுமென்று கலெக்டருக்கு மனுச் செய்துகொள்ளவேண்டும்.

(e) சர்க்கார் நிலங்கள், மேற்படி விஷயங்களுக்கு உபயோகப்படுத்தும்பொழுது, என்ன விதிகள் அனுசரிக்கவேண்டுமோ அவைகளையே அனுசரித்து, கலெக்டர் மனுவுக்கு உத்தரவிடவேண்டும்.

M.T.B. 5.

அனுபோக உரிமை.

5. இச்சட்டத்தின் விதிகளுக்குட்பட்டு, சென்னை ராஜதானியிலுள்ள ஒவ்வொரு குடியானவனுக்கும், தனது நிலத்தில் நிரந்தர அனுபோக உரிமையுண்டு.

M.T.B. 6 திருத்தியமைக்கப்பட்டது.

ரயத்துகள், நிலச்சுவான்தார்கள், ஆகிய இவர்களுக்கும், இவர்கீழ் இருப்பவர்களுக்கும் உள்ள சம்பந்தம்.

6. (1) 14, 100, 101, 102, 104-வது பிரிவுகளில் தெரிவிக்கப்பட்ட சந்தர்ப்பங்களில் தவிர, மற்ற எல்லா சமயங்களிலும், ரயத்துகளுக்கும், அவர்கள் கீழ் உள்ளவர்களுக்கும், ஜமீன்தார்களுக்கும், அவர்கள் பண்ணை நிலங்களிலுள்ள குடியானவர்களுக்கும், இதர நிலச்சுவான்தார்களுக்கும் அவர்கள் கீழ் இருப்பவர்களுக்கும், உள்ள சம்பந்தம் இச்சட்டத்தின் விதிகளால் கட்டுப்படவில்லை. ஆனால், அது, அவரவர்கள் செய்துகொள்ளும் ஒப்பந்த நிபந்தனைகளைப் பொறுத்தது.

(2) விலக்கப்பட்ட இனாம்களுக்கு இச்சட்டத்தின் விதிகள் செல்லா.

(3) சாசுவத பைசல் ரெகுலேஷன் 4, 12-வது பிரிவுகளின் பிரகாரம், சாசுவத பைசலுக்குப் பிறகு ஏற்பட்ட இனாம்கள், சட்டப்படி செல்லாதவையாகும். அவைகள் சட்டத்தின் கீழ்வரவில்லை.

இச்சட்டத்தின்படி இனாம்கள் மூன்று வகுப்புகளாக கருதப்படுகின்றன :—

(1) விலக்கப்பட்ட இனாம்கள்.

(2) சேர்க்கப்பட்ட இனாம்கள்.

(3) சாசுவத பைசலுக்கு பின் ஏற்பட்ட இனாம்கள்.

சாசுவத பைசல் காலத்தில் ஜமீன் ஆஸ்தி மதிப்பில் சேர்க்கப்படாத இனாம்களும் 1802-ம் வருஷத்திய XXXI ரெகுலேஷன் தொடங்கி இதுவரை ஏற்படுத்தப்பட்ட எல்லா விசேஷ சட்டங்கள் கீழும், ரெகுலேஷன் கீழும் வரும் இனாம்களும், விலக்கப்பட்ட இனாம்கள் எனபடும்.

சேர்க்கப்பட்ட இனாம் என்றால், சாசுவத பைசல் காலத்தில் ஜமீன் ஆஸ்தி மதிப்பில் சேர்க்கப்பட்டு அதன்காரணமாக ஜமீனில் ஒரு பாகமாக கருதப்படும் இனாம்களாகும்.

சாசுவத செட்டில்மென்டுக்கு பிறகு ஜமீன்தார்களால் கொடுக்கப்பட்ட இனாம்கள் "போஸ்ட் செட்டில்மெண்ட்" இனாம்கள் ஆகும். அவைகள், சட்டப்படி செல்லாதவையென்று சாசுவத பைசல் ரெகுலேஷன் 4, 12, விதிகள் தெரிவிக்கின்றன.

(4) சாசுவத பைசல் காலத்தில், சாகுபடி செய்யாது காலியாக இருந்ததும், குடியானவர்களின் வழக்கமான உரிமைகளுக்குட்பட்டு, பிறகு ஜமீன்தாருக்கு மாற்றப்பட்டதும், ஜமீன்தார் தனது சொந்த நிலத்தைப் போல் பிரவர்த்திப்பதற்கு உரிமை இல்லாததுமான நிலமே "தரிசு நிலம்" எனப்படும் தரிசு நிலத்தை, குடியானவர்களுக்கு பிரித்துக் கொடுக்கும் உரிமையே சாசுவத செட்டில்மென்டால் மேற்படி நிலம் சம்பந்தமாக ஜமீன்தாருக்கு கொடுக்கப்பட்ட உரிமை. தரிசு நிலத்தில் ஜமீன்தாருக்கு வேறு உரிமை கிடையாது இவ்வுரிமையைச் செலுத்துவதில் ஜமீன்தார் தனக்கிஷ்டமான வரி விகிதங்களை ஏற்படுத்தக்கூடாது. ஜமீன்தார் தரிசு நிலங்களை, குடியானவர்களுக்கு விடும் உரிமை, விளைச்சலை பாகம் செய்துகொள்ளுவதற்கு ஏற்பட்ட வரி விகிதங்களையும், நாட்டின் வழக்கங்களையும், அனுசரிக்கவேண்டுமென்ற நிபந்தனைக்குட்பட்டது. அதாவது, சாகுபடி செய்யப்பட்ட நிலங்களுக்கு, சாசுவத பைசல் காலத்தில் என்ன வரி ஏற்பட்டதோ அதைவிட அதிகமான வரியை ஜமீன்தார் விதிக்கக்கூடாது.

3-ம் அத்தியாயம்.

ரயத்துகள்.

M.T.B. 7.

அனுபோக உரிமையின் தொடர்ச்சி.

7. இச்சட்டம் அமுலுக்கு வருவதற்கு முன், வேறு எந்த சட்டம், வழக்கம், ஒப்பந்தம் முதலியவைகளின் பலிதமாக குடியானவனுக்கு நிலத்தில் அனுபோக உரிமையிருந்தால், அவ்வுரிமை, இச்சட்டம் அமுலுக்கு வரும்பொழுதும் மேற்படி குடியானவனுக்கு இருப்பதாகக் கருதப்படும்.

8. மாருக உள்ள ஸ்தல வழக்கமிருந்தாலொழிய தனது நிலத்தி லுள்ள மரங்களை, அனுபவிப்பதற்கும், வெட்டுவதற்கும், பிறவகைகளில் உபயோகித்துக் கொள்வதற்கும், குடியானவனுக்கு உரிமையுண்டு மாருன ஸ்தல வழக்கமிருக்கிறதென்று ஜமீன்தார் கூறினுல், அதை ருஜூப்படுத்துவது அவர் கடமை குடியானவன் நிலத்தில் பிரவேசிப்பதற்குமுன், பிறருக்கு மாற்றப்பட்ட மரங்களில், குடியானவனுக்கு மேற்கூறிய உரிமைகள் கிடையா. M.T.B. 8

மரங்களை உபயோகிக்க உரிமை.

9. (a) பின்னுல் தெரிவிப்பதின் பிரகாரம், நியாயமான ஒழுங்கான வரியை, குடியானவன் தனது நிலத்திற்குச் செனுத்த வேண்டும். M.T.B. 9.

நியாயமான, ஒழுங்கான வரியைச் செனுத்தவேண்டும்.

(b) மாருக நிரூபிக்கப்பட்டாலொழிய, தற்பொழுது, குடியானவன் செனுத்திவரும் நிலவரி, ஒழுங்கானதாகவும், நியாயமானதாகவும் கருதப்படும்.

ஒழுங்கான வரியின் யூகிப்பு.

10. இச்சட்டத்தில் விதிக்கப்பட்ட பிரகாரமே, வரி உயர்த்தப்படலாமேயொழிய வேறு முறையில் உயர்த்தப்படலாகாது. M.T.B. 10.

வரி உயர்வு கட்டுப்பாடு.

நில அனுபோக உரிமை மாற்றக்கூடியது.

11. நில அனுபோக உரிமைகள், தானுதிவிக்கிரயமூலமாக மாற்றப்படலாம். M.T.B. 11.

12. (1) நில மாறுதல் மூலமாவது, வார்சு பாத்தியதை மூலமாவது, பிற வகையிலாவது, ஜமீன்தார், குடியானவன் ஆகிய இருவர்களின் பூரண உரிமை ஒருவரிடம் ஐக்கியமானுல், அப்பொழுது அனுபோக உரிமை நீங்கிவிடும்; ஆனுல், மூன்றுவது நபரின் உரிமைகளை இவ்வுட்பிரிவு பாதிக்காது. M.T.B. 12

ஜமீன்தாருக்கு அனுபோக உரிமை சென்றுல் அதனுல் விளையும் பலன்.

(2) ஜமீன்தார் என்ற ஹோதாவில், நிலத்தில் கூட்டுரிமை உடைய ஒருவருக்கு, அனுபோக உரிமை மாற்றப்பட்டால், அப்பொழுது அது நீங்கிவிடும் ஆனுல் இவ்வுட்பிரிவில் தெரிவித்திருக்கும் மூன்றுவது நபரை பாதிக்காது.

(3) ஜமீன்தாரின் வரிக்குத்தகைக்காரன், தன்வசமுள்ள நிலத்தை அனுபவித்துவந்தால், அதனுல் மேற்படி நிலத்தில் அவனுக்கு அனுபோக உரிமை உண்டாகாது.

(4) இனுமையாவது, சாசுவத பைசல் ஏற்படாத ஜமீனையாவது உடைய ஒருவருக்கு, சிலசமயங்களில் அனுபோக உரிமையுண்டு. அதாவது, சன்னதில் குறிக்கப்பட்ட எல்லா நிலத்திலும், அல்லது அவைகளின் சில பாகங்களிலும், அவருக்குமுன் இருந்த அக்குதாருக்கு, அனுபோக உரிமை இருந்திருக்குமாகில், அவ்வுரிமை இவருக்குமுண்டு அப்பொழுது, இவ்வுட்பிரிவு செல்லாது.

விளக்கம்—நிலத்தில் அனுபோக உரிமையுள்ள ஒருவன், பிறகு, அதில் ஜமீன்தாராக கூட்டுரிமையடைந்தால், அல்லது அதைக் குத்தகையெடுத்தால் ஆதியிலிருந்து அனுபோக உரிமை, அவரைவிட்டு நீங்காது.

13. அனுபோக உரிமை சம்பந்தமாக உயில் ஒன்றுமில்லாமல் ரயத்து இறப்பானுகில், அப்பொழுது ஸ்தாவர சொத்திற்கு என்ன சட்டம் செல்லுமோ, அச்சட்டம் அதற்கும் செல்லும். M.T.B.

" ரயத்தின் மரணமும், அனுபோக உரிமையும்.

4-ம் அத்தியாயம்.

வாடகைக் குடியானவன் (டெனன்ட்)

14. 100, 101, 102, 104 பிரிவுகளின் விதிகளுக்குட்பட்டு, கீழ்கண்ட சந்தர்ப்பங்களைத்தவிர மற்ற சமயங்களில், வாடகைக் குடியானவன் நிலத்திலிருந்து விலக்கப்படமுடியாது:— M.T.B. 14.

வாடகைக் குடியானவர்களை நிலத்திலிருந்து விலக்குவது சம்பந்தமான நிபந்தனைகள்.

(a) குத்தகைப்பத்திரத்தில் குறிக்கப்பட்ட காலம் முடிந்த பிறகு;

(b) குத்தகைப்பத்திரமூலமல்லாமல் மற்ற முறையில் நிலத்தை அனுபவித்துவந்தால், நிலத்தைக் காலி செய்வதற்கு, நிலச்சுவான்தார் நோட்டீஸ் கொடுத்த ஒரு வருஷத்திற்கு அடுத்த ரெவினியூ வருஷம் முடிவடைந்த பிறகு.

15. செனுத்தவேண்டிய வாடகையைக்குறிக்கும் ஒப்பந்தத்தை, எழுத்து மூலமாக வாங்கியிருந்தாலொழிய வாடகைக்குடியானவன் செனுத்தவேண்டிய, வாடகைக்கு வியாஜ்ஜியம் தொடர முடியாது. M.T.B. 15.

எழுத்துமூலமான ஒப்பந்தம்.

5-ம் அத்தியாயம்.

வரிசம்பந்தமான பொதுவிதிகள்.

சாசுவத பைசலின் வரி ஸ்திரமும், குடியானவனின் நில உரிமையும்.

16. (1) பீடிகையில் விவரிக்கப்பட்ட கொள்கைகளை, பின்வருமாறு, தெரிவிக்கப்படுகிறது

(i) குடியானவன் (ரயத்து) நிலத்துக்குச் சொந்தக்காரன்.

(ii) சாசுவத பைசல் காலத்தில் சாகுபடி செய்யப்பட்ட நிலங்களுக்கு விதிக்கப்பட்ட வரி, சாசுவதமாக விதிக்கப்பட்டது ; எந்த சந்தர்ப்பங்களிலாவது, எந்த முகாந்தரத்தைக் கொண்டாவது, அதை ஜமீன்தார் உயர்த்தமுடியாது குடியானவனும் அதைக் குறைக்க முடியாது

(iii) சாசுவத பைசல் காலத்திலிருந்து, இதுவரை, சாகுபடி செய்யப்பட்ட தரிசு நிலங்களுக்கு, சாசுவத பைசல் காலத்தில் சாகுபடி செய்யப்பட்ட நிலங்களுக்கு ஏற்பட்ட வரியைவிட அதிக வரியை விதிக்கக்கூடாது.

(iv) சாசுவத பைசல் ஏற்பட்டு, வெகு காலமானதென்பதைக் கருதியும், குறைந்த வரி இருந்த அக்காலத்தில், பலவகையான நிலங்களுக்கு இருந்த பலவகையான வரிகள் என்ன என்று அறிவது, அதிக சிரமமானகாரியம் என்று கருதியும், காலஹரணத்தைத் தடுப்பதற்கும், சௌகரியத்தை முன்னிட்டும், சாசுவத பைசல் காலத்தில், நஞ்சை நிலங்களுக்கு, நிரந்தரமாக என்ன வரி விதிக்கப்பட்டதோ அதையே, ஒருபடியாக, இதுவரை சாகுபடி செய்யப்பட்ட தரிசு நிலங்களுக்கு விதிப்பது யுக்தமாய்த் தோன்றுகிறது. ஆதலால், சாசுவத பைசல் காலத்தில் சாகுபடி செய்யப்பட்ட நிலங்களுக்கு, நிரந்தரமாக என்ன வரி விதிக்கப்பட்டதோ அதையே 1802-ம் வருஷத்திலிருந்து இதுவரை சாகுபடி செய்யப்பட்ட தரிசு நிலங்களுக்கு விதிக்க வேண்டுமென்று இச்சட்டம் கூறுகிறது.

(v) சாசுவத பைசல் காலத்தில் சாகுபடி செய்யப்பட்ட எல்லா நிலங்களுக்கும், ஏற்பட்ட வரி விகிதங்களை நிர்ணயமாய் அறிந்து, அவைகளை இதுவரை சாகுபடி செய்யப்பட்ட தரிசு நிலங்களுக்குள்ள வரிகளோடு ஒன்று சேர்த்து, அதன் மூலம் சாகுபடி செய்யப்பட்ட நிலங்களுக்கும், சாகுபடி செய்யப்படாத நிலங்களுக்கும், ஒரேபடியான வரியை ஏற்படுத்தவேண்டும் மேற்படி வரி. சாசுவத பைசல் காலத்தில் சாகுபடி செய்யப்பட்ட நிலங்களுக்கு ஏற்பட்ட வரியைவிட அதிகமாயிருக்கக்கூடாது;

(vi) இம்முறையால், சாசுவத பைசல் விகிதப்படி, மொத்த நிலத்திற்கு ஏற்படும் நிலவரி நிர்மாணம் என்னவென்பது நிர்ணயம் செய்யப்படவேண்டும் ;

குடியானவர்களுக்கும், ஜமீன்தாருக்கும் இச்சட்டம் அளிக்கும் உரிமைகள்.

இத்தகைய நிரந்தர நிர்மாணத்தின் பலிதமாக நிலத்தின் உரிமையை குடியானவர்களுக்கும், அவர்களுடைய வார்சுகளுக்கும், நியாயமான சந்ததியார்களுக்கும், சாசுவதமாகக் கொடுக்கப்படுகின்றன. 1802-ம்ஞூ்த்திய XXV சாசுவத பைசல் ரெகுலேஷன் 2-வது பிரிவின்படி குடியானவர்களிடமிருந்து நிலவரியை வசூலிக்கும் மேல்வார பாத்தியதை, ஜமீன்தாரர்களுக்கும், இதர நிலச்சுவான்தார்களுக்கும், அவர்களுடைய வார்சுகளுக்கும், நியாயமான சந்ததியார்களுக்கும், நிரந்தரமாகக் கொடுக்கப்படுகிறது.

(2) சாசுவத பைசல் காலத்தில் நிரந்தரமாக முடிவு செய்யப்பட்ட நிலவரியை, அக்காலத்தில் சாகுபடி செய்யப்பட்ட நிலங்கள் சம்பந்தமாகவும், அதன் பிறகு சாகுபடி செய்யப்பட்ட தரிசு நிலங்கள் சம்பந்தமாகவும், உயர்த்தியதெல்லாம், XXV சாசுவத பைசல் ரெகுலேஷன்களுக்கும், 1802-ம்ஞூ்த்திய பட்டா ரெகுலேஷன் XXX-ன் விதிகளுக்கும், விரோதமானதென்றும், அநியாயமானதென்றும், அத்தகைய வரி உயர்வுகள், தன்னிச்சையாக ஏற்பட்டிருந்தாலும், வலுவந்தமாக ஏற்பட்டிருந்தாலும், வரிவசூல் சட்டத்தின் விதிகள், அல்லது எஸ்டேட் நிலச்சட்டத்தின் விதிகள், ஆகிய இவைகளுக்கிணங்க ஏற்பட்டிருந்தாலும், குடியானவர்களைக் கட்டுப்படுத்தாது.

(3) சாசுவத பைசல் காலத்தில் சாசுவதமாக விதிக்கப்பட்ட நிலவரி விகிதங்கள், பின்வரும் உபாயங்களால் நிர்ணயம் செய்யப்படலாம்.

(a) கிடைக்கக்கூடுமானவரை, கிராமக்கணக்குகளைக்கொண்டு, சாசுவத பைசலுக்கு, முன் வருஷத்தில் என்ன வரி விகிதங்கள் இருந்தனவென்று நிர்ணயம் செய்தல் ;

(b) கிராமக்கணக்குகளிலிருந்து மேற்படி வரி விகிதங்கள் அறியக் கூடாவிட்டால், ஜமீன் ஆஸ்த்தி மதிப்பின் ஆதாரத்தைக்கொண்டு சாசுவத பைசல் ஏற்பட்டு, பிறகு சர்வேயான எல்லா ஜமீன்களுக்குமுள்ள வரி மாற்ற விகிதங்களை நிர்ணயம் செய்து அறியப்படவேண்டும்;

(c) ஜமீன் ஆஸ்திமதிப்பை ஆதாரமாகக்கொண்டு, சாசுவத பைசல் ஏற்படாத எஸ்டேட்டுகளுக்கு, அதாவது, ஹாவலி நிலங்களைப் போல சர்க்கார் நிலங்களிலிருந்து வகுக்கப்பட்ட எஸ்டேட்களுக்கு, மேற்படி நிலங்கள் ஏலத்தில் விடுவதற்குமுன், ஏற்பட்ட சர்க்கார் வரி விகிதங்களையே, நிரந்தரமாக விதிக்கப்பட்ட விதிகளாகக் கருதவேண்டும் ;

(d) ஜமீன் ஆஸ்தி மதிப்பை ஆதாரமாகக் கொள்ளாது, யுத்தசகாய முறையில் அல்லது சிற்றரசு முறையில் சாசுவத பைசல் ஏற்பட்ட ஜமீன்களுக்கு—அக்காலத்திய ஜமீன்தார்களின் கணக்குப் புஸ்தகங்களில் குறிப்பிட்டுள்ள வரி விகிதங்கள், அல்லது சாசுவத பைசலை முன்னிட்டு, ஜமீன்தார்களின் புஸ்தகங்களிலிருந்து, பொறுப்பு வாய்ந்த சர்க்கார் அதிகாரிகளால் தயாரிக்கப்பட்ட கணக்குகளில் குறிக்கப்பட்டுள்ள வரி விகிதங்கள், சரியான வரி விகிதங்களாகக் கருதப்படலாம். ஆனால் மேற்படி வரி விகிதங்கள் அவ்வாறு நிர்ணயம் செய்யக்கூடாவிட்டால், கூடுமான வரை, பக்கத்து ஜமீன்களுக்கு இருந்த வரி விகிதங்கள். ஒழுங்கான ஆதாரமாக ஒப்புக்கொள்ளப்படலாம்; பக்கத்து ஜமீன்களின் வரிவிகிதங்கள் அறியமுடியாவிட்டால், அதே ஜில்லாவில் அல்லது பக்கத்து ஜில்லாக்களில் ஒத்த தரத்தையுடைய நிலங்களுக்கு என்ன சர்க்கார் வரி விகிதங்கள் இருக்கின்றனவோ அவைகளை தகுந்த ஆதாரமாக ஒப்புக்கொள்ளப்படலாம்.

(e) மேற்கூறிய எந்த உபாயத்தை அனுசரித்தும் சாசுவத பைசல் காலத்தில் என்ன வரி விகிதங்கள் இருந்ததென்பது அறியமுடியாத ஜமீன்களுக்கு, சாசுவத பைசல் காலத்திலிருந்த நிலவரி விகிதங்களை நிர்ணயம் செய்வதற்கென்று, சட்டசபைகளாலும், அரசாங்கத்தாலும், நியமிக்கப்படும் ஸ்பெஷல் கமிஷன் (வரி விகிதங்களை சரியாகவாவது, சற்றேறக்குறையவாவது, தீர்மானிக்கத்தக்க வேறெந்த முறையையாவது அனுசரித்து) வரியை விதிக்கலாம்.

(4) சாசுவத பைசல் காலத்தில் நிரந்தரமாக விதிக்கப்பட்ட வரி விகிதங்கள் ஸ்பெஷல் கமிஷனால் நிர்ணயம் செய்யப்பட்ட பிறகு, ஜமீன்தார்கள், ரயத்துகளுக்கு (அல்லது நிலத்தின் சொந்தக்காரர்களுக்கு) பட்டாவை (அல்லது சாசுவத உடைமைப்பத்திரத்தை)க் கொடுக்கவேண்டும் ; ஒவ்வொரு குடியானவன் (அல்லது நிலத்திற்குச் சொந்தக்காரன்) பட்டாவுக்குச்சரியான முச்சலிக்கையை ஜில்லா கலெக்டருக்கு எழுதிக்கொடுக்க வேண்டும்.

நிலத்தை ஆண்டு அனுபவிப்பதின் சம்பந்தமான நிபந்தனைகளும் ஷரத்துகளும் மேற்படி பட்டாவிலும் முச்சலிக்கையிலும் குறிக்கப்படவேண்டும்.

(5) சாசுவத பைசல் காலத்தில் சாகுபடி செய்யப்பட்ட நிலங்களையும், 1802-ம் வருஷத்திலிருந்து இச்சட்டத்தின் தேதி வரைக்கும் சாகுபடிக்குக் கொண்டுவரப்பட்ட நிலங்களையும், ஒருங்கு சேர்த்து ஒரு விஸ்தீர்ணமாகச் செய்த பிறகு, சாசுவத பைசலுக்கு முன் வருஷத்திய வரி விகிதத்தை நிரந்தரமான வரி விகிதமாகக் குறிக்கும் சாசுவத பட்டாக்களையும், முச்சிலிக்கைகளையும், வரி விகிதங்கள் நிர்ணயம் செய்யப்பட்ட ஆறுமாத காலத்திற்குள், ஜமீன்தார்களும், குடியானவர்களும் மாற்றிக்கொள்ளவேண்டும்.

(6) நிரந்தர நிலவரி நிர்மாணத்தின் நிபந்தனைகள் அவ்வாறு ஏற்படுத்தப்பட்டால், சாசுவதமாகவும், என்றும் மாறுவண்ணமும், உள்ள நிலவரியைக் குறித்துள்ள சாசுவத பட்டா (அல்லது சாசுவத உடைமைப் பத்திரத்தை) வை, ஜமீன்தார் குடியானவர்களுக்குக் கொடுக்கவேண்டும்; குடியானவர்களும் அதே நிபந்தனைகளும், மற்ற நிபந்தனைகளுமுள்ள முச்சலிக்கைகளை எழுதித்தரவேண்டும்.

1802–ம் வருஷத்திய மதராஸ் ரெகுலேஷன் XXV 3–வது பிரிவு.

(7) தங்கள் நிலங்களுக்கு விதிக்கப்பட்ட நிரந்தர வரித்தொகையை, தங்கள் மாகாணங்களில் பழக்கத்திலுள்ள நாணயத்தில், எல்லாப்பருவ காலத்திலும் குடியானவர்கள் ஒழுங்காகச் செலுத்திவரவேண்டும். நாட்டின் வழக்கப்படி, மழையில்லாமை, வெள்ளம், அல்லது இதர, பருவப் பிரமாதம், ஆகிய இவைகளுக்காக, அவ்வப்போது சர்க்கார் அளிக்கும் வரிவஜா முன்போலவே அமுலிலிருந்துவரும் ; பண ஒப்பந்தங்களை, குடியானவர்கள் நிறைவேற்றத்தவறினால், அதற்கு அவர்கள் சொத்து உத்தரவாதமாகும்.

1802–ம் வருஷத்திய XXV மதராஸ் ரெகுலேஷன் 6–வது பிரிவு.

(8) ஏற்பட்ட தவணைகளின் பிரகாரம், குடியானவன் நில வரியைச் செலுத்தத்தவறினால், முதலில் அவனுடைய சொந்தப் பொருள் கைப்பற்றப்படும். இறுதியில், அவசியமானால் அவன் நிலங்கள் சர்க்கார் வரிக்காக விற்கப்படும். ஆனால், அவன் மைனராயிருந்தால் அப்படிச் செய்ய முடியாது. (1831-ம் வருஷத்திய மதராஸ் ரெகுலேஷன் X, பிரிவு 2, உட்பிரிவு 1-ல் குறித்துள்ளபடி, நிலவரி பாக்கிக்கு மைனரின் எஸ்டேட் விற்கப்பட முடியாது.)

1802–ம் வருஷத்திய மதராஸ் ரெகுலேஷன் XXV உட்பிரிவு 7.

1802–ம் ௵த்திய மதராஸ் ரெகுலேஷன் XXV பிரிவு ப்க்க உட்பிரிவு 3.

(9) வரிசம்பந்தமாக ஏற்படும் எல்லா விவகாரங்களிலும், கோர்ட்டுகள், பட்டாக்களையும், முச்சலிக்கைகளையும், கவனித்து ஒவ்வொரு வழக்கின் சம்பந்தமாக இருக்கும் ஒப்பந்தத்தின் நிபந்தனைகளுக்கிணங்க, அனுபோகஸ்திரத்திலும், வரி ஸ்திரத்திலும், விசேஷ கருத்தைச் செலுத்தி, தீர்ப்புக் கூறவேண்டும்.

1802–ம் ௵த்திய மதராஸ் ரெகுலேஷன் XXX பிரிவு 9.

(10) பணமாகவோ, தானியமாகவோ, செலுத்தவேண்டிய வரி விகிதங்கள் சம்பந்தமாக வழக்குகள் ஏற்பட்டால், சாசுவத பைசலுக்கு முன் வருஷத்தில் சாகுபடி செய்யப்பட்ட நிலங்களுக்கு என்ன வரி விகிதங்கள் இருந்தனவோ அவைகளையே ஒழுங்கான வரி விகிதங்களாகத் தீர்மானிக்க வேண்டும் ; மேற்படி வரி விகிதங்கள் அறியப்படாவிட்டால் வழக்கு சம்பந்தப்பட்ட நிலங்களைப்போன்ற மற்ற நிலங்களுக்கு சாசுவத பைசல் காலத்தில் என்ன வரி விகிதங்கள் இருந்தனவோ அவைகளையே, ஒழுங்கான வரி விகிதங்களாகத் தீர்மானிக்கவேண்டும்.

1802–ம் ௵த்திய மதராஸ் ரெகுலேஷன் XXX பிரிவு 7.

(11) எந்தப் பெயரைக்கொண்டாவது, என்ன சாக்குச் சொல்லியாவது, ஜமீன்தார்களாவது, அல்லது வரிக்குத்தகைக்காரர்களாவது, குடியானவர்கள்மீது, புதிய வரி ஒன்றையும் விதிக்கக்கூடாது; சாசுவத பைசல் காலத்தில் ஏற்படுத்தப்பட்டு, பட்டாவில் குறித்திருக்கும் நிரந்தர, நிலவரியைத்தவிர, இதர தொகைகளை, ஜமீன்தார்கள் அல்லது வரிக்குத்தகைக்காரர்கள் வசூலித்தார்கள் என்று ருஜுப்படுத்தப்பட்டால், அப்படி வசூலிக்கப்பட்ட தொகைக்கு, இரட்டிப்பான தொகை அபராதமாக விதிக்கப்படும்.

1802–ம் ௵த்திய மதராஸ் ரெகுலேஷன் XXX பிரிவு 11.

(12) முச்சலிக்கையில் குறித்திருப்பதைவிட, அதிகமான வரியை, தானியமாகவோ பணமாகவோ ஜமீன்தாரர்கள் அல்லது வரிக்குத்தகைக்காரர்கள் வசூலித்தால், அது குடியானவர்களைப் பலவந்தப்படுத்தி வசூலித்த தொகையாகக் கருதப்படும். அவ்வாறு வசூலித்த தொகைகளை குடியானவர்களுக்குத் திருப்பிக்கொடுத்துவிடவேண்டும். மேற்படி தொகைகளுக்கு இரட்டிப்பான தொகைகள் அபராதமாக விதிக்கப்படும். ஜமீன்தார் அல்லது வரிக்குத்தகைக்காரர்கள்; ஏற்பட்ட செலவு தொகையையும் கொடுக்க நேரிடும்.

(13) சாசுவத பைசல் காலத்தில், சாகுபடி செய்யப்பட்ட நிலங்களுக்கும், அதற்குப் பிறகு சாகுபடி செய்யப்பட்ட தரிசு நிலங்களுக்கும் கொடுக்கப்பட்ட நிரந்தரப் பட்டாக்கள், சாசுவதமாக அமுலிலிருக்கும். சன்னதுகள், கபூலியத்துகளைப்போலவே. அவைகள் புதுப்பிக்கவாவது, திருத்தியமைக்கவாவது வேண்டியதில்லை, ஏனெனில் அவைகளில் கண்டிருக்கும் வரி விகிதங்கள் நிரந்தரமானவை. ஆனால் மேற்கூறிய சாசுவதப் பட்டாக்கள் கொடுத்த பிறகு, தரிசு நிலம் ஏதாவது சாகுபடி செய்யப்பட்டால் அதற்கு ஒரு வருஷத்திற்கு பட்டா கொடுக்கப்படவேண்டும். மேற்படி பட்டாவில் மாற்றமுடியாத நிரந்தர வரி விகிதங்கள் குறிக்கப்படவேண்டும். அப்பட்டா, பசலி முதலில் புதுப்பிக்கப்படலாம் அவ்வாறு, புதுப்பிக்காவிட்டால், மீண்டும் புதுப்பிக்கும் வரை, அப்பட்டா அமுலிலிருக்கும் ; அதில் குறிப்பிக்கப்பட்டுள்ள நிலவரி விகிதம் நிரந்தரமான நிலவரி விகிதமாகும். அதை உயர்த்தவோ, குறைக்கவோ, இயலாது.

1802–ம் ௵த்திய மதராஸ் ரெகுலேஷன் XXV பிரிவு 8.

(14) ஜமீன்தாருடைய முன் அனுமதியில்லாமலும், அல்லது இதர அதிகாரிகளின் முன் அனுமதியில்லாமலும், தங்கள் நிலங்களில் அல்லது அவைகளின் சில பாகங்களில் தங்களுக்குள்ள நில உரிமையை, குடியானவர்கள் தங்களுக்கிஷ்டமானவர்களுக்கு தானவிக்கிரயம் மூலமாக பராதீனப்படுத்தலாம். அத்தகைய நிலப்பராதீனங்கள், சட்டப்படி செல்லக்கூடியவை ; கோர்ட்டுகளும், சர்க்கார் அதிகாரிகளும் அவைகளை அங்கீகரிக்கவேண்டும் சர்க்காருக்காவது ரெகுலேஷன்களுக்காவது, ஹிந்து, மகம்மதிய சட்டங்களுக்காவது, அவைகள் வியதிரேகமாயிருந்தால், அப்பொழுதுதான் அவைகள் சட்டப்படி செல்லா. ஆனால், மேற்படி தானவிக்கிரயம் முதலியன கலெக்டர் கச்சேரியில் ஒழுங்காகப் பதிவு செய்யப்பட்டாலொழிய, அப்படித் தனியாகப் பிரிக்கப்பட்ட நிலங்களுக்கு கலெக்டர் முன்னதாகவே விசாரணை செய்து ஒழுங்கான வரியை ஏற்படுத்தியிருந்தாலொழிய, மேற்படி தானவிக்கிரயம் முதலியவைகளுக்கு சட்டப் பலிதமாவது, சட்ட பலமாவது இராது ; மொத்த நிலத்துக்கேற்பட்ட சர்க்கார் நிலவரியின் ஒரு பாகத்தை மேற்படி தானவிக்கிரயத்தைக் கருதி, குடியானவன் கொடுக்காமலிருக்க முடியாது. ; ஆனால் தானவிக்கிரயம் நிகழாததாகக் கருதப்பட்டு, மொத்த நிலவரிக்கு, குடியானவன் நிலம் முழுவதும் உத்தரவாதமாகும்.

(15) சர்க்கார் (பொது) நிலவரிக்காக நிலத்தின் ஒரு பாகம் விற்கப்பட்டால், அல்லது கோர்ட்டுகளின் தீர்ப்பை நிறைவேற்றுவதற்காக விற்கப்பட்டால், அல்லது நிலத்தின் ஒரு பாகம் தானவிக்கிரயம் முதலியன மூலம் பராதீனம் செய்யப்பட்டால், மேற்படி விஷயத்தைப்பற்றியும், தனியாகப்பிரிக்கப்படும் நிலத்தின் சம்பந்தமாக தகுந்த சமயத்தில் விசாரணை செய்து வரி ஏற்படுத்துவதற்கும், குடியானவன் கலெக்டருக்கு தகவல் கொடுக்கவேண்டும். ஜமீன் முழுவதிற்கும், ஏற்பட்ட நிரந்தரமொத்த பேஷ்கஷுக்கும், மொத்த ஜமீன் அசல் ஆஸ்தி மதிப்பிற்கும் என்ன தாரதம்மியம் இருக்கிறதோ அதே தாரதம்மியம், தனியாகப் பிரிக்கப்பட்ட நிலங்கள் மீது ஏற்படும் வரி நிர்மாணத்திற்கும், மேற்படி பிரிக்கப்பட்ட நிலங்களின் அசல் ஆஸ்தி மதிப்பிற்கும் இருக்கவேண்டும்.

(16) நிலவரி பாக்கிக்கு எஸ்டேட்டுகள் அல்லது எஸ்டேட்டுகளின் பாகங்கள், விற்கப்பட்டால் அல்லது பராதீனம் செய்யப்பட்டால், முந்திய நிலச்சுவான்தார் (ஜமீன்தார்) கொடுத்த பட்டாக்கள், மேற்படி நிலங்கள் விற்கப்பட்ட பசலி முடிவில் காலாந்தரமாகிவிடும். மேற்படி எஸ்டேட்டுகளை வாங்கினவர்கள் அடுத்த பசலி ஆரம்பத்தில் புதிய பட்டாக்களைக் கொடுக்கவேண்டும்.

1802-ம் வருஷத்திய மதராஸ் ரெகுலேஷன் XXX பிரிவு 13.

(17) குடியிருக்க வீடுகள் கட்டிக்கொள்வதற்காவது, கைத்தொழில் நடத்துவதற்காவது, வஸ்துக்கள் முதலியவை தயாரிப்பதற்காவது, மற்ற விஷயங்களுக்காவது, மேற்படி வீடுகள், கட்டிடங்களைச் சேர்ந்த கச்சேரிகளுக்காவது அல்லது தோட்டங்களுக்காவது, தரிசு நிலங்களை சீர் படுத்தி சாகுபடி செய்வதற்கும், ஜமீன்தாரர்கள், சர்க்காரின் அனுமதியில்லாமலும், சர்க்கார் அதிகாரிகளின் அனுமதியில்லாமல் எவர்களுக்கும் (பிரிட்டிஷ் பிரஜைகளல்லாத, அல்லது ஐரோப்பியர்கள் அல்லது அவர்களின் சந்ததியார்களல்லாத), பரஸ்பரமாக ஒப்புக்கொள்ளப்பட்ட நிபந்தனைகள், ஷரத்துகள், ஏற்பாடுகளின்படி சாசுவதமாகவோ, ஒரு சில வருஷங்களுக்கோ, குத்தகைகளையாவது, நிலப்பட்டாக்களையாவது கொடுப்பதற்கு உரிமை உண்டு. நல்லெண்ணத்துடன் மேற்கூறிய விஷயங்களுக்குக் கொடுக்கப்பட்ட பட்டாக்கள் பின்வரும் ஜமீன்தாரர்களைக் கட்டுப்படுத்தும். குத்தகைக்கு விடும்போது மேற்படி நிலங்கள் தரிசு நிலங்களாக இல்லையென்று கோர்ட்டில் ருஜுப்படுத்தினாலொழிய, அல்லது சதியாலோசனைக்காகக் கொடுக்கப்பட்டது என்று நிரூபிக்கப்பட்டாலொழிய, அல்லது மோசமாகப் பெற்றதாக ருஜுப்படுத்தினாலொழிய, மேற்படி நிலங்களடங்கிய எஸ்டேட்டுகள் சர்க்காருக்குச் சேரவேண்டிய வரி (பேஷ்கஷ்)க்கு விற்கப்பட்டாலும், மேற்படி பட்டாக்கள் ஸ்திரமாக இருக்கும்.

1802-ம் வருஷத்திய மதராஸ் ரெகுலேஷன் XXX பிரிவு 15.

(18) பணமாகவோ, தானியமாகவோ, செலுத்தவேண்டிய நில வரிக்கு, ஜமீன்தார்கள் (அல்லது நிலச்சுவான்தார்கள்) ரயத்துகளுடன் ஒப்பந்தங்கள் செய்துகொண்டு நியாயமான காலத்திற்குள் ஒப்பந்தத்தின் ஒவ்வொரு நிபந்தனையையும் விளக்கி, செலுத்தவேண்டிய வரித் தொகையைக்குறிக்கும், பட்டாவை அல்லது கவுலை குடியானவர்களுக்குக் கொடுக்கவேண்டும். குடியானவர்கள், நிலவரியைப் பணமாகவோ, தானியமாகவோ செலுத்துகிற செல்லுபடிகளுக்கு, ஜமீன்தார்கள் (அல்லது நிலச்சுவான்தார்கள்) ஒழுங்கான ரசீதுகளைக் கொடுக்கவேண்டும். தான் கபூலியத் எழுதிக்கொடுத்தபின் நியாயமான கால வரையறை ஆன பிறகு தனது கீழ் உள்ள வரிக்குத்தகைக்காரர்களாவது ரயத்துக்களாவது மேலே கூறப்பட்ட பட்டாக்களைக் கேட்டும், ஜமீன்தார் கொடுப்பதற்கு மறுத்தால், அல்லது அசட்டை செய்தால், மேற்படி ஜமீன்தார்மீது, சிவில் கோர்ட்டுகளில் வியாஜ்ஜியம் தொடரலாம். பிரியாது செய்பவருக்கு, அடலத் கோர்ட்டு, தீர்ப்புக் கூறும் நஷ்ட ஈட்டை ஜமீன்தார் செலுத்தவேண்டும்—

1802-ம் வருஷத்திய மதராஸ் ரெகுலேஷன் XXV பிரிவு 14.

(19) பட்டாக்களும் முச்சலிக்கைகளும் மூவகைப்பட்டவைகளாக இருக்கலாம்—

முதலாவது—சாசுவதப்பட்டாக்கள். இவைகளில், சாசுவத பைசல் காலத்தில் சாகுபடி செய்யப்பட்ட நிலங்களும், அதற்குப் பிறகு, அதாவது 1802-ம் வருஷத்திலிருந்து இச்சட்டத்தின்படி, நியமிக்கப்படும் ஸ்பெஷல் கமிஷனல் வரிவிகிதங்கள் நிர்ணயம் செய்யப்படும் வரை, சாகுபடி செய்யப்பட்ட தரிசு நிலங்களுக்கும், சாசுவத பைசல் காலத்தில் நிரந்தரமாக விதிக்கப்பட்ட நிலவரி விகிதம் சாசுவத நிலவரியென்று குறிக்கப்பட்டிருக்கவேண்டும்.

1802-ம் வருஷத்திய மதராஸ் ரெகுலேஷன் XXX பிரிவு 14.

இரண்டாவது—இச்சட்டத்தின்படி, சாசுவதப் பட்டாக்கள் கொடுத்த பிறகு, புதிதாக சாகுபடி செய்யப்படும் நிலத்திற்குக் கொடுக்கும் பட்டாக்களும் முச்சலிக்கைகளும். இவைகளிலும் சாசுவத பைசலுக்கு, முன் வருஷத்தில் விதிக்கப்பட்ட நிலவரி விகிதம், பட்டா கொடுக்கப்பட்ட வருஷத்திற்கும், அதற்குப் பின் வரும் வருஷங்களுக்கும், எந்த முகாந்தரத்தைக் கொண்டும், உயர்த்தப்படாததும் குறைக்கப்படாததுமான நிரந்தரவரியென்று குறிக்கப்படவேண்டும்.

மூன்றாவது—“ வார ” முறைப்படி நிலவரியை தானியமாகச் செலுத்தும் நிலங்களுக்குக் கொடுக்கப்படும் பட்டாக்களும் முச்சலிக்கைகளும்—அதாவது—விளைச்சலை சர்க்கார் அல்லது ஜமீன்தாரும் குடியானவனும் பங்கிட்டுக்கொள்வதற்கு கிராமத்தில் ஏற்பட்ட விகிதப்படி, அவ்வார விகிதம் நாளது வரை மாறாததாக இருக்கவேண்டும்.

நான்காவது—சாசுவத பைசல் காலத்தில் சாகுபடி செய்யப்பட்ட நிலங்களுக்கு ஏற்பட்ட வரி விகிதத்தைவிட அதிகவரி விதிக்கக் கூடாது என்ற நிபந்தனைக்கு உட்பட்டு, ஜமீன்தார் தனக்கு யுக்தமாகத் தோன்றும் வரி விகிதத்தை விதிக்கக்கூடிய அனுதி தரிசு நிலங்களை சீர்படுத்தி சாகுபடி செய்வதற்குக் கொடுக்கும் பட்டாக்களும் முச்சலிக்கைகளும்.

(a) விளைச்சலைப் பங்கிட்டுக் கொள்வதற்குக் கொடுக்கப்படும் பட்டாக்களில் கிராமத்தின் பெயரும், குடியானவன் சாகுபடி செய்யும் நிலத்தின் விஸ்தீரணமும், சாகுபடி செய்யப்படும் பலவகை தானியங்களில் குடியானவனுக்குள்ள பாகமும் குறிக்கப்படவேண்டும்.

(b) நிலவரி பணமாக ஏற்பட்ட நிலங்களுக்குக் கொடுக்கப்படும் பட்டாக்களில், நிலத்தின் பெயரும் அதிலுள்ள நிலங்களின் விஸ்தீர்ணமும், வருஷத்திற்கேற்பட்ட நிலவரித் தொகையும், ஏற்பட்ட முறைப்படி, அறுவடை செய்யும்பொழுதோ, தானியத்தை விற்கும்பொழுதோ, குடியானவன் கிஸ்தி செலுத்தவேண்டிய காலங்களும், வரி எந்த நாணயத்தில் செலுத்தவேண்டுமென்பதும் குறிக்கப்படவேண்டும். வழக்கத்திலுள்ள நில அளவின்படி மேற்படி நிலங்களுக்கு என்னவரி விகிதம் என்னவென்பதும், அனுசரிக்கப்படும் வழக்கப்படி ஒவ்வொரு தரமான நிலத்திற்கோ, தானியத்திற்கோ ஏற்பட்ட நிலவரி என்னவென்பதும்கூட அவைகளில் குறிக்கப்படவேண்டும்.

(c) வரி, தானியமாகச் செலுத்தவேண்டிய நிலங்களுக்குக் கொடுக்கப்படும் பட்டாக்களில், மேலே தெரிவிக்கப்பட்ட விவரங்களோடு, நிலத்தின் விஸ்தீரணமும், செலுத்தவேண்டிய தானிய அளவும், என்ன தானியமென்பதும், குறிக்கப்படவேண்டும்.

(d) பட்டாக்களிலும், முச்சலிக்கைகளிலும், அவைகள் கொடுக்கப்பட்ட வருஷம், மாதம், தேதியும், ஒப்பந்தம் செய்து கொள்பவர்களுடைய பெயர், விலாசம் முதலியவைகளையும், குறிக்கவேண்டும்.

புதியது. (20) ஜமீன்தார், தன் சொந்தச் செலவால் செய்த அபிவிருத்தி அல்லது நீர்ப்பாசான அமைப்பின் பலனுக ஏதாவது ஒரு நிலத்திற்கு அதிக மதிப்பு ஏற்பட்டால், மேற்படி நிலத்திற்கு ஏற்பட்ட வரியை ஜமீன்தார் உயர்த்துவதற்கு இச்சட்டம் இடம் தராது. சர்க்கார் செலவில் செய்யப்பட்ட அபிவிருத்தி அல்லது நீர்ப்பாசான அமைப்பின் பலிதமாக ஏதாவது ஒரு நிலத்திற்கு அதிக மதிப்பு ஏற்பட்டு, மேற்படி செலவை ஜமீன்தார் கொடுக்க நேரிட்டாலும், அப்பொழுதும் ஜமீன்தார் வரியை உயர்த்துவதற்கு இச்சட்டம் இடம் தராது.

புதியது. (21) விலைவாசி குறைவாலும், மற்றகாரணத்தாலும், தான் செலுத்தும் வரி மிகவும் அதிகமாயிருக்கிறதென்று, அதைக்குறைப்பதற்கு குடியானவன் வியாஜ்ஜியம் செய்ய முடியாது.

புதியது. (22) சாசுவத பைசல் காலத்தில் சாகுபடி செய்யப்பட்ட நிலங்களுக்கு நிரந்தரமாக ஏற்பட்ட வரி விகிதங்களைவிட குறைந்தவரி விகிதங்களுக்கும், தரிசு நிலங்களுக்கு, மேற்படி நிலங்களுக்கு விதிக்கக்கூடிய வரி விகிதங்களுக்கு குறைவாகவும் கொடுக்கப்படும் பட்டாக்கள், ஜமீன்தாரின் வார்சுகளை கட்டுப்படுத்தா. ஆனால், குடியிருப்பு வீடுகள், தொழிற்சாலைகள் அல்லது இதர ஸ்திரமான கட்டிடங்கள் கட்டிக்கொள்வதற்கு அல்லது, தரிசு நிலத்தை சீர்செய்து சாகுபடி செய்வதற்கு அல்லது மேற்படி நிலத்திற்கு நிரந்தரமான அபிவிருத்தி செய்வதற்கு, ஜமீன்தார் நல்ல எண்ணத்துடன் குறைந்த வரி விகித பட்டாக்களைக் கொடுத்தால் அவை செல்லும். மேற்படி பட்டாவில் குறிக்கப்பட்ட நிபந்தனைகளை குடியானவன் கூடியவரை நிறைவேற்றியிருக்கவேண்டியதும், பட்டாக்கள் சட்டப்படி செல்வதற்கு அவசியம்.

M.T.B. 16. திருத்தியமைக்கப்பட்டது.

நிலவரி வியவகாரங்களின் விதிகள்.

(23) குடியானவன் செலுத்தவேண்டிய நிலவரி சம்பந்தமாக வழக்கு ஏற்பட்டால், கீழ்கண்ட விதிகளின்படி மேற்படி வழக்குகள் தீர்மானிக்கப்படவேண்டும் :—

(a) சாசுவத பைசலுக்கு முன் வருஷத்தில் சாகுபடி செய்யப்பட்ட நிலங்களுக்கு பணமாகவோ தானியமாகவோ ஏற்பட்ட வரி விகிதங்களை, சரியான வரி விகிதங்கள் என்று கலெக்டர் முடிவு செய்யவேண்டும் ; சாசுவத பைசல் ஏற்படாத ஜமீன்களில்,—மேற்படி எஸ்டேட்டுகளின் பட்டயம்கள் கொடுக்கப்பட்ட அல்லது காயம் செய்யப்பட்ட, அல்லது அங்கீகரிக்கப்பட்ட தேதிக்குமுன் அமுலிலிருந்த வரிவிகிதங்களை, கலெக்டர் சரியான வரி விகிதங்களாக முடிவு செய்யவேண்டும்.

புதியது. (b) குடியானவன் தானியத்தை விற்று பணம் பெறுமலிருக்கும் பொழுதும், பொருளாதார நெருக்கடியால், கடன் மூலம் பணம் பெறமுடியாமலிருக்கும்பொழுதும், நிலவரியை "வார"மாகச் செலுத்த பாத்தியம் கொண்டாடலாம் ; அதாவது, நிலத்தின் விளைச்சலை சர்க்கார் அல்லது ஜமீன்தாரும், குடியானவனும் பங்கிட்டுக்கொள்வதற்கு சாசுவத பைசல் காலத்தில் கிராமத்திலிருந்த வழக்கப்படி.

(c) வரி, வார முறையில் செலுத்தப்படும் ஜமீனில், இச்சட்டம் அமுலுக்கு வந்த பிறகு, தானியவரி பணவரியாக மாற்றப்படவேண்டுமென்று குடியானவன் கேட்டால், சாசுவத பைசல் காலத்தில் ஆதாரமாக இருந்த விலைவாசிகளைக் கொண்டே வரி மாற்றங்கள் ஏற்படுத்தவேண்டுமேயொழிய, வரிமாற்ற சமயத்திலுள்ள விலைவாசிகளை ஆதாரமாகக் கொள்ளக்கூடாது.

M.T.B. 17. திருத்தியமைக்கப்பட்டது. 17. இச்சட்டத்தில் என்ன விதிகள் இருந்தபோதிலும், சாசுவத பைசல் வருஷத்திற்கு, முன் வருஷத்திலிருந்த வரி விகிதத்தைவிட குறைவான நிலவரியை, அல்லது அதிகமான நிலவரியை குடியானவன் செலுத்தலாமென்னும் ஒப்பந்தங்கள் செல்லா.

18. எந்த ரெவினியூ வருஷத்திலாவது, குடியானவன் செலுத்த வேண்டிய நிலவரியைப்பற்றி கேள்வி ஏற்பட்டால், அல்லது பட்டாவிலுள்ள நிபந்தனையைப்பற்றி கேள்வி ஏற்பட்டால், மாருக நிரூபிக்கப்படும் வரை, சாசுவத பைசல் வருஷத்திற்கு, முன்வருஷத்தில் ஏற்பட்ட நிபந்தனைகளின் பிரகாரமும், வரி விகிதத்தின் பிரகாரமும், குடியானவன் தன் நிலத்தை ஆண்டு அனுபவிக்கிறுனென்று கருதப்படும். **M.T.B. 18. திருத்தியமைக்கப்பட்டது.**

19. (1) ஒப்பந்தத்தின்படியாவது, ஒப்பந்தமில்லாதபொழுது, கிராமத்திலுள்ள வழக்கத்தின்படியாவது, செலுத்தவேண்டிய சமயத்தில் குடியானவன் நிலவரியைச் செலுத்தாவிட்டால், அவ்வாறு செலுத்தாத தொகை நிலவரி பாக்கியமாகக் கருதப்படும். **M.T.B. 19. திருத்தியமைக்கப்பட்டது.**

(2) பஞ்சத்தை முன்னிட்டாவது, அல்லது நாடெங்கும் பரவியுள்ள கஷ்டம், நெருக்கடி ஆகிய இவைகளை முன்னிட்டாவது, ஜமீன்தாரிடமிருந்து ஜமீன் முழுவதற்கு அல்லது ஜமீனின் ஒரு பாகத்திற்கு வசூலிக்கவேண்டிய பேஷ்கஷை, ஒத்திவைக்கவேண்டுமென்று சர்க்கார் கட்டளையிட்டால், மேற்படி ஜமீனில் அல்லது ஜமீனின் ஒரு பாகத்தில் குடியானவர்களிடமிருந்து வசூலிக்கக்கூடிய நிலவரியையும், ஜமீன்தார் ஒத்திவைக்கவேண்டும். மேற்படி பேஷ்கஷ் ஒத்திவைப்பது சம்பந்தமான சர்க்கார் உத்தரவு அமுலிலிருக்கும் வரை, நிலத்தை ஜப்தி செய்வதற்கும், கைப்பற்றுவதற்கும், விற்பதற்கும், அல்லது குடியானவனை நிலத்திலிருந்து விலக்குவதற்கும், தனக்குள்ள அதிகாரத்தை ஜமீன்தார் உபயோகிக்கக்கூடாது.

இரண்டாவது உட்பிரிவும், அது சம்பந்தமான மாகாண அரசாங்கத்தின் விதிகளும்.

(3) இரண்டாவது உட்பிரிவின் ஷரத்துகளை நிறைவேற்றுவதற்கு தக்க விதிகளை மாகாண அரசாங்கம் ஏற்படுத்தலாம்; அதிலும் விசேஷமாக இந்த உட்பிரிவிலுள்ள ஷரத்துகளை பாதிக்காமல், மேற்படி சர்க்கார் உத்தரவு அமுலிலிருக்கும்வரை, நிலத்தை ஜப்தி செய்வதற்கும், கைப்பற்றுவதற்கும், விற்பதற்கும், ஜமீன்தாருக்குள்ள அதிகாரங்களை ஒழுங்குபடுத்தும் விதிகளை சர்க்கார் ஏற்படுத்தலாம்.

மாகாண அரசாங்க விளம்பரமும் அதன் பலிதமும்.

(4) மாகாண அரசாங்கத்தின், மேற்படி உத்தரவு சம்பந்தப்பட்ட ஜில்லா கெஜட்டில் விளம்பரம் செய்யவேண்டும். முதலாவது உட்பிரிவில் குறித்தபடி சர்க்கார் உத்தரவில் குறிக்கப்பட்ட ஒத்திவைப்பு காலத்தில் நிலவரி வசூலிக்கக்கூடாது என்பதற்கு மேற்படி விளம்பரம், சட்ட ஆதாரமாகயிருக்கும்.

எதிர்ப்பாராத விபத்தும், வரித் தவணையும்.

(5) ஜமீன்தார் நிலவரியை வசூலிப்பதற்கு இச்சட்டத்தின் 40-வது பிரிவின் பிரகாரமும், 7, 8 அத்தியாயங்களின் பிரகாரமும், நடவடிக்கையெடுக்கப்பட்டால், எதிர்பாராத விபத்தால் நஷ்டம் ஏற்பட்டதென்று குடியானவன் நிரூபிக்கமுடியுமானுல், நிலவரியைத் தவணையாகக் கொடுக்கலாமென்று கலெக்டர்கள் உத்தரவிடலாம்.

M.T.B. 20.

வரிபாக்கிக்கு வட்டி.

20. வரி செலுத்தவேண்டிய தேதியிலிருந்து வரிபாக்கிக்கு, குடியானவன், மாதம் ஒன்றுக்கு, ரூபாய் ஒன்றுக்கு, சல்லி (தம்பிடி) ஒன்ருக, சாதாரண வட்டி செலுத்தவேண்டும். மாதத்தின் சொச்ச தினங்களும், ரூபாயின் சொச்சத் தொகையும் கணக்கில் சேர்த்துக்கொள்ளப்படாது.

M.T.B. 21.

நிலவரி ரசீது சம்பந்தமாக, குடியானவனுக்குள்ள உரிமை.

21. (1) குடியானவன் நிலவரிக்காக தொகை செலுத்தும்பொழுது மேற்படி தொகை எந்த அம்சத்திற்கு கொடுக்கப்பட்டதென்பதைக் குறிக்கவேண்டும். அப்படி செலுத்தப்பட்ட தொகைக்கு ஜமீன்தார் அல்லது ஜமீன்தாரின் ஏஜெண்டு எழுத்து மூலமான ரசீதை உடனே குடியானவனுக்குக் கொடுக்கவேண்டும்.

(2) ஜமீன்தாராவது அவருடைய ஏஜெண்டாவது மேற்படி ரசீதுக்கு ஒரு நகலைத் தயாரித்து அதைத் தன் வசம் வைத்துக் கொள்ளலாம்.

(3) இச்சட்டத்தின் I-வது பட்டியிலிருக்கும் (3) ரசீது பாரத்தில் காட்டப்பட்ட பல அம்சங்கள், மேற்படி ரசீது நகலிலும், குறிப்பிட்டிருக்கவேண்டும். ஆனுல் மாகாண அரசாங்கம் அவ்வப்போது சில பிரதேசங்களுக்காவது, அல்லது சிலசந்தர்ப்பங்களிலாவது, அல்லது பொதுவாகவாவது, மேற்படி ரசீது பாரத்தை திருத்தியமைக்கலாம். அல்லது திருத்தியமைக்க அனுமதிக்கலாம்.

(4) இச்சட்டத்தின்படி குறிக்கவேண்டிய அம்சங்கள், ரசீதில், பெரும்பான்மையாகக் குறிக்கப்படாவிட்டால், மாருக நிரூபிக்கும் வரை ரசீது கொடுத்த தேதி வரைக்கும் குடியானவன் நிலவரி சம்பந்தமாக செலுத்த வேண்டிய, எல்லாத்தொகைகளும், பூராகத் தீர்க்கப்பட்டன என்று கருதப்படும்.

M.T.B. 22.

ரசீது கொடுக்காததற்கு அபராதம்.

22. குடியானவன் செலுத்தும் நிலவரிக்கு 21-வது பிரிவில் விதிக்கப்பட்டுள்ள அம்சங்கள் அடங்கிய ரசீதைக் கொடுப்பதற்கு, தகுந்த காரணமில்லாமல், ஜமீன்தார் அசட்டை செய்தால், அல்லது மறுத்தால், வரி செலுத்தின தேதியிலிருந்து மூன்று மாத காலத்திற்குள்,

குடியானவன் கலெக்டர் முன் வியாஜ்ஜியம் செய்யலாம். செலுத்தப்பட்ட தொகைக்கு இரண்டு மடங்குக்கு அதிகமான தொகையை, குடியானவன் ஜமீன்தாரிடமிருந்து அபராதமாக வசூலிக்கலாம். கலெக்டருக்கு யுக்தமாகத் தோன்றும் செலவு தொகையும் குடியானவனுக்குக் கொடுக்கப்படும்.

M.T.B. 23

எவருக்கு, எப்படி நிலவரி, கொடுக்கவேண்டும்.

23. வரி வசூல் விஷயங்களுக்கு, கிராமத்திலாவது கிராமத்தில் மூன்று மைல் தூரத்திற்குள் வசிக்கும் எவரையாவது அல்லது வரி வசூல் செய்வதற்கு கிராமத்தில் ஆஜராகும் எவரையாவது, தனது அதிகாரம் பெற்ற ஏஜண்டாக ஜமீன்தார் நியமித்தாலொழிய 21, 22 பிரிவுகளின்படி நிலவரி வசூலிப்பதற்கும், அது சம்பந்தமாக ரசீதுகள் கொடுப்பதற்கும், கிராம முனிசீபு தான் ஜமீன்தாரின் அதிகாரம் பெற்ற ஏஜெண்டாகக் கருதப்படுவார்.

நிலவரியைக் கட்டுவதற்கு மனு.

24. (1) நிலவரியை, பணமாகச் செலுத்தவேண்டிய கீழே தெரிவிக்கப்படும் ஏதாவதொரு சந்தர்ப்பங்களில், அதாவது :—

(a) குடியானவன் நிலவரியைச் செலுத்த முன்வந்தும், ஜமீன்தார் அதைப் பெறுவதற்கு மறுத்தால், அல்லது ஜமீன்தார் நிலவரியைப் பெற்று அதற்கு ரசீது கொடுக்க மறுத்தால் ;

(b) நிலவரியைப் பெறக்கூடியவர், அதைப்பெற்றுக்கொள்ள இணங்கமாட்டாரென்றாவது, அல்லது தான் தெரிவிக்கும் அம்சங்களுக்குக் செல்லும்படி செய்துகொண்டு ரசீது கொடுக்கமாட்டாரென்றாவது, நிலவரி செலுத்தவேண்டிய குடியானவன் கருதினால் ;

(c) நிலவரி இரண்டு அல்லது மூன்று பேர்களுக்கு, கூட்டாகச் செலுத்தவேண்டியபொழுது, அவர்களிடமிருந்து, குடியானவன், தான் செலுத்திய தொகைக்கு கூட்டு ரசிதை பெற முடியாத பொழுது ; அவர்கள் சார்பாக வரியைப் பெறுவதற்கு தனியாக வேறுயாராவது நியமிக்கப்படாதபொழுது ; அல்லது

(d) தான் செலுத்தவேண்டிய, வரியைப் பெறுவதற்கு எவருக்கு உரிமை உண்டென்று குடியானவன் நியாயமாக சந்தேகித்தால் ;

குடியானவன், கலெக்டருக்கு அல்லது அரசாங்கத்தாரால் நியமிக்கப்பட்ட எந்த அதிகாரிக்கும் மேற்படியார் கச்சேரியில், தான் செலுத்தவேண்டிய பூரா நிலவரித் தொகையைக் கட்டுவதற்கு மனுச் செய்துக்கொள்ளலாம்.

(2) எந்த காரணங்களுக்காக மனுச் செய்யப்பட்டது என்பது மனுவில் தெரிவித்திருக்கவேண்டும். எந்த அம்சம் அல்லது அம்சங்களுக்கு தொகை செலுத்தப்படுகிற தென்பதும் குறிப்பிடவேண்டும். அத்துடன் கீழ்கண்ட விஷயங்களும் குறிக்கப்படவேண்டும்—

(a), (b) சந்தர்ப்பங்களில், பணம் எவர்பேருக்குக் கட்டப்பட்டிருக்கிறதோ அவர் பெயரும் ;

(c) சந்தர்ப்பங்களில், நிலவரித் தொகை எவர்களுக்குச் செல்லவேண்டுமோ அவர்களின் பெயர்களும், அல்லது அவர்களில் குடியானவனுக்கு தெரிந்தவர்களின் பெயர்களும்,

(d) சந்தர்ப்பத்தில்—எவருக்கு நிலவரி கடைசியாகச் செலுத்தப்பட்டதோ அவர் பெயரும், தற்போது நிலவரி கேட்பவர் அல்லது கேட்பவர்களின் பெயர்களும்.

(3) சிவில் புரொசீஜர் கோடு 52-வது பிரிவில் தெரிவித்த முறைப்படி, கொடுக்கப்பட்ட மனு, குடியானவனல் கையொப்பமிடப்பட்டு, சரிபார்க்கப்பட்டிருக்கவேண்டும் ; வியவகாரத்தின் விஷயங்கள் குடியானவனுக்கு நேராகத் தெரியாவிட்டால் மேற்படி விஷயங்களை நேராக அறிந்த ஒருவரால், மனு கையொப்பமிடப்பட்டு சரிபார்க்கப்பட்டிருக்கவேண்டும். மனுவுடன், மாகாண அரசாங்கம் அவ்வப்போது ஏற்படுத்தும் தொகையையும், கட்டவேண்டும்.

M.T.B 25.

கட்டண ரசீது குடியானவன் நிலவரிக்கு செல்லுபடியாகும்.

25. (1) மேலே தெரிவிக்கப்பட்ட பிரிவின் பிரகாரம். நிலவரியை கச்சேரியில் கட்டுவதற்கு உரிமை உண்டென்று மனுவை விசாரிக்கும் கலெக்டர் அல்லது இதர அதிகாரிக்கு தோன்றினல், அவர் கட்டப்பட்ட தொகையைப் பெற்றுக்கொண்டு, அதற்கு ரசீது தரவேண்டும்.

(2) இந்தப் பிரிவின் பிரகாரம் கொடுக்கப்பட்ட ரசீது மேற்கூறியவாறு, குடியானவனல் கச்சேரியில் கட்டப்பட்ட நிலவரிக்குச் செல்லுபடியாகும். மேற்படி நிலவரித் தொகை, கீழ்க்கண்டவர்களால் பெற்றுக்கொண்டால் என்ன பலிதம் உண்டாகுமோ, அப்பலிதமே மேற்படி ரசீதின் பலிதமாகும்—

மேற்கூறிய பிரிவில் தெரிவிக்கப்பட்ட (a), (b) சந்தர்ப்பங்களில்,—எவர் பேருக்கு, பணம் கட்டப்பட்டதென்று மனுவில் தெரிவிக்கப்பட்டதோ அவரால் ;

(c) சந்தர்ப்பத்தில்,—நிலவரி எவருக்குச் சேரவேண்டுமோ அவரால் ;

மேற்கூறிய பிரிவில் தெரிவிக்கப்பட்ட (d) சந்தர்ப்பத்தில்,—நிலவரியை அடைய உரிமை உள்ளவரால்.

கட்டண ரசீதின் விளம்பரம்.

26. (1) பணக்கட்டணத்தைப் பெறும் கலெக்டர் அல்லது இதர அதிகாரி, ரசீதைப்பற்றியும், ரசீது சம்பந்தமான விஷயங்களைப்பற்றியும், தெரிவிக்கும் ஒரு விளம்பரத்தை தனது கச்சேரியில் பகிரங்கமான ஒரு இடத்தில் ஒட்டிவைக்க உத்தரவிடவேண்டும். M.T.B. 26.

(2) பின்வரும் பிரிவின் பிரகாரம், மேற்படி விளம்பரம் செய்யப்பட்ட தினத்திற்கு அடுத்த 15 தினங்களுக்குள் கட்டணத்தொகை, கொடுக்க வேண்டியவர்களுக்குச் செலுத்தாவிட்டால், கலெக்டர் அல்லது இதர அதிகாரி உடனே—

24-வது பிரிவின் (a) (b) சந்தர்ப்பங்களில்,—மனுவில் எவர் பேருக்கு செலுத்தவேண்டுமென்று குறிக்கப்பட்டதோ அவருக்கு, பணம் கட்டியிருக்கப்பட்ட விஷயத்தைப்பற்றி, செலவு விதிக்காமல் நோட்டீஸ் சமர்ப்பிக்கவேண்டும் ;

மேற்படி பிரிவில் (c) சந்தர்ப்பத்தில்,—இரண்டாவது உட்பிரிவில் தெரிவித்திருக்கும் (c) சந்தர்ப்பத்தில் குறிக்கப்பட்டுள்ளவர்களுக்கு, செலவு விதிக்காமல் கட்டண ரசீதைப்பற்றி நோட்டீஸ் சமர்ப்பிக்கவேண்டும். அந்த நோட்டீஸ், வியவகாரம் சம்பந்தப்பட்ட நிலம் இருக்கும் கிராமத்தில் பகிரங்கமான இடத்திலும் ஒட்டப்படவேண்டும்.

மேற்படி பிரிவின் (d) சந்தர்ப்பத்தில்,—கட்டணத்தொகைக்கு, பாத்தியம் கொண்டாடுபவருக்கும் அல்லது மேற்படி தொகைக்கு உரிமை உடையவரென்று கலெக்டரால் அல்லது இதர அதிகாரியால் கருதப்படுபவருக்கும், செலவு விதிக்காமல், மேற் கூறியபடி நோட்டீஸ் சமர்ப்பிக்கவேண்டும்.

கட்டணத் தொகையைத் திருப்பிக் கொடுத்தல், அல்லது குறிக்கப்பட்டவனுக்குச் செலுத்தல்.

27. (1) கட்டணத்தொகைக்கு உரிமை உடையவரென்று, எவர், கலெக்டர் அல்லது இதர அதிகாரிக்கு தோன்றுகிறரோ அவருக்கு மேற்படி கலெக்டர் அல்லது இதர அதிகாரி மேற்படி தொகையைக் கொடுக்கலாம் ; அல்லது யுக்தமாகத்தோன்றினல், சரியான உரிமை உடையவர் எவரென்று, தகுந்த நீதிஸ்தலம் தீர்ப்புக்கூறும்வரை மேற்படி தொகையை, தன்வசம் நிறுத்திக்கொள்ளலாம். M.T.B. 27.

(2) மாகாண அரசாங்கம் உத்தரவிட்டால், உரிமை உடையவருக்கு, கட்டணத்தொகை போஸ்டல் மணியார்டர் மூலமாக அனுப்பலாம்.

(3) இப்பிரிவின்படி பணம்கட்டி மூன்று வருஷம் ஆவதற்குள், உரிமை உடையவருக்கு, கட்டணத் தொகை அனுப்பப்படாவிட்டால், தகுந்த கோர்ட்டின் வியதிரேகமான உத்தரவு ஏற்படாதபொழுது, மேற்படி தொகை, கட்டினவர் விண்ணப்பித்துக்கொண்டால் அவருக்குக் கொடுக்கப்படலாம். முதலில் பணம் கட்டிய காலத்தில் கலெக்டர் அல்லது இதர அதிகாரி கொடுத்த ரசீதை அவர் திருப்பிக்கொடுத்து விடவேண்டும்.

(4) மேற்கூறிய பிரிவுகளின்கீழ், கட்டணத் தொகையைப் பெற்ற கலெக்டர் அல்லது இதர அதிகாரி செய்த எச்செயல் சம்பந்தமாகவும், இந்தியா காரியதரிசியின்மீதாவது மற்ற சர்க்கார் அதிகாரிமீதாவது, வியாஜ்ஜியம் தொடரவாவது, இதர நடவடிக்கை எடுத்துகொள்ளவாவது முடியாது ; ஆனல் கட்டணத்தொகைக்கு உரிமையுடைய எவரும் இச்சட்டத்தின்படி எவரிடம் பணம் கட்டப்பட்டதோ அவரிடமிருந்து மேற்படி தொகை வசூலிப்பதை இச்சட்டத்திலுள்ள ஒரு விதியும் தடுக்காது.

விளைச்சலை மதிப்பிடுவதற்காவது அல்லது பாகம் செய்வதற்காவது உத்தரவு.

28. (1) விளைச்சலை மதிப்பிட்டாவது, பாகம் செய்தாவது நிலவரி வசூலிக்கப்பட்டால்— M.T.B. 28.

(a) விளைச்சலை மதிப்பிடுவதற்காவது, பாகம் செய்வதற்காவது, தகுந்த சமயத்தில் ஜமீன்தாராவது, குடியானவனுவது, நேராகவாவது, ஏஜண்டு மூலமாவது, ஆஜராகத் தவறினல் ; அல்லது

(b) விளைச்சலின் மதிப்பைப்பற்றியாவது, பாகத்தைப்பற்றியாவது, அளவைப்பற்றியாவது, வியவகாரம் ஏற்பட்டால்,

குடியானவன், அல்லது ஜமீன்தார், மனுச்செய்துகொண்டு, கலெக்டர் தெரிவிக்கும் செலவு தொகையைக் கட்டினல், அவர் விளைச்சலை மதிப்பிடுவதற்காவது, பாகம் செய்வதற்காவது தனக்கு யுக்தமாகத் தோன்றும் ஓர் அதிகாரியை நியமிக்கலாம்.

(2) மேற்கூறியவாறு கலெக்டர் உத்தரவிடுவது, சமாதான பங்கத்தைத் தடுக்கும் என்று ஜில்லா அல்லது சப்-டிவிஷனல் மாஜிஸ்ட்ரேட் அபிப்பிராயப்பட்டால், வேறொருவரும் மனுச் செய்துகொள்ளாமலே, கலெக்டர் மேற்படி உத்தரவைச் செய்யலாம்.

(3) இப்பிரிவின்படி, கலெக்டர் உத்தரவிடும்போது விளைச்சல், மதிப்பிடும் வரைக்கும் அல்லது பாகம் செய்யும்வரைக்கும், விளைச்சலை எவரும் அகற்றக்கூடாதென்ற தடை உத்தரவையும் செய்யலாம்.

M.T.B. 29.

அதிகாரியை நியமிக்கும்போது அனுசரிக்கவேண்டிய முறை.

29. (1) மேலே தெரிவிக்கப்பட்ட பிரிவின்படி, கலெக்டர் ஒரு அதிகாரியை நியமிக்கும்பொழுது, தான் சரியென்று கருதினுல், மேற்படி அதிகாரி, தன்னேடு சில மத்தியஸ்தர்களைச் சேர்த்துக் கொள்ளலாமென்றும் தெரிவிக்கலாம். மேற்படி மத்தியஸ்தர்களின் யோக்கியதாம்சங்களைப்பற்றியும், அவர்கள், எவ்வாறு தேர்ந்தெடுக்கப்பட வேண்டுமென்பதைப்பற்றியும், விளைச்சல், எவ்வாறு மதிப்பிடவேண்டும் அல்லது பாகம் செய்யப்படவேண்டுமென்பதைப்பற்றியும், தகுந்த குறிப்புகளை, கலெக்டர் மேற்படி அதிகாரிக்குத் தெரிவிக்கலாம்.

(2) விளைச்சலை மதிப்பிடுவதற்கு அல்லது பாகம் செய்வதற்குமுன், மேற்படி பாகம் செய்கிற, அல்லது மதிப்பிடுகிற, இடத்தையும் காலத்தையும்பற்றி ஜமீன்தாருக்கும், குடியானவனுக்கும், அதிகாரி தெரிவிக்கவேண்டும். தான் கொடுத்த நோட்டீசின் பிரகாரம் குடியானவனுவது ஜமீன்தாராவது ஆஜராகத் தவறினுல், தானே, விளைச்சலை மதிப்பிடலாம் அல்லது பாகம் செய்யலாம்.

(3) விளைச்சலின் மதிப்பை அல்லது பாகத்தை அதிகாரி செய்து முடித்தவுடன், தான் எடுத்துக்கொண்ட நடவடிக்கைகளைப்பற்றி கலெக்டருக்கு ஒரு அறிக்கை சமர்ப்பிக்கவேண்டும்.

(4) இரு கக்ஷிக்காரர்களுக்கும், அவரவர்கள், தங்கள் வழக்கைத் தெரிவிப்பதற்கு வசதியளித்து, தனக்கு யுக்தமாகத் தோன்றுகிற விசாரணையைச் செய்து, மேற்படி அறிக்கையை ஆலோசித்து, அதன்மீது, தான் நியாயமாகக் கருதும் உத்தரவை இடலாம்.

(5) தனக்கு சரியென்று தோன்றினுல் இருகக்ஷிக்காரர்களுக்குமுள்ள வழக்கின் எந்த அம்சத்தையும், சிவில் கோர்ட்டுக்கு விசாரணைசெய்ய அனுப்பிவிடலாம். அவ்வாறு செய்யாவிட்டால்த்தான் (கலெக்டர்) செய்யும் உத்தரவே முடிவானதாகும். அதை கலெக்டரின் தீர்ப்பாக அமுலிற் கொண்டுவரலாம்.

(6) 5-வது உட்பிரிவின்படி, கலெக்டர் வியவகார விஷயத்தை சிவில் கோர்ட்டுக்கு தெரிவிக்கும்பொழுது, மேற்படி கோர்டின் தீர்ப்பு தெரியும் வரை, விளைச்சலைப் பாதுகாப்பதற்கும், அல்லது அது சம்பந்தமாக வேறு ஏற்பாடு செய்வதற்கும், தனக்கு யுக்தமாகத் தோன்றும் எந்த உத்தரவையும் இடலாம்.

M.T.B. 30.

விளைச்சலைப்பற்றிய உரிமைகளும் கடமைகளும்.

30. (1) நிலவரி விளைச்சலை மதிப்பிட்டு வசூலிக்கப்பட்டால், விளைச்சல் குடியானவனின் பூரண வசத்திலிருக்கவேண்டும்.

(2) விளைச்சலைப் பாகம்செய்து வரி வசூலிக்கப்பட்டால், பாகம் செய்யும்வரையும், பூரா விளைச்சலும், குடியானவனின் பூரண வசத்திலிருக்க வேண்டும். ஆனுல் தக்க சமயத்தில் ஒழுங்காக பாகம் செய்வதைத்தடுக்கும் தன்மையாக எந்த சமயத்திலாவது, எந்த வகையிலாவது, களத்திலிருக்கும் தானியத்தில் எந்த பாகத்தையும், குடியானவன் அகற்றக்கூடாது.

(3) எவ்வகையிலும் வழக்கமான விவசாய முறையில், ஜமீன்தார் தலையீடில்லாமல் கதிரை அறுத்து, களத்தில் சேமிப்பதற்கு குடியானவனுக்கு உரிமை உண்டு.

(4) தக்க சமயத்தில், விளைச்சலை மதிப்பிடுவது அல்லது பாகம் செய்வதைத் தடுக்கும் தன்மையாக, எச்சமயத்திலும், எந்த வகையிலும், விளைச்சலின் எந்த பாகத்தையும் குடியானவன் அகற்றினுல், மேற்படி விளைச்சல், அதே வருஷத்தில் ஒத்த தரத்தையுடைய பக்க நிலத்தின் அதே பயிருக்கு எவ்வளவு அதிகமான விளைச்சல் உண்டோ அதே விளைச்சலாகக் கருதப்படும்.

6-ம் அத்தியாயம்.

நிலவரி வசூல்.

M.T.B. 31.

ஜமீன்தார், குடியானவனுக்கு பட்டா கொடுக்கவேண்டிய கடமை.

31. (1) ஜமீன்தாரும் குடியானவனும் பட்டா, முச்சலிக்கை மாற்றிக்கொண்டாலொழிய, அல்லது மாற்றிக்கொள்ளும்வரைக்கும், அல்லது குடியானவன் ஏற்கக் கடமைப்பட்டுள்ள பட்டாவைக் கொடுத்தாலொழிய அல்லது கொடுக்கும் வரைக்கும், குடியானவன் செலுத்தவேண்டிய வரிக்கு ஜமீன்தார் நடவடிக்கை எடுத்துக்கொள்ளமுடியாது.

குறிப்பு.—இச்சட்டத்தின்படி கொடுக்கப்பட்ட பட்டாவுக்கு, இது செல்லாது.

(2) கலெக்டர், அபிப்பிராயப்படி, ஒரு பட்டா, முற்றிலும் சரியாக இல்லாவிட்டாலும், சரியாகக் கருதப்படும் பாகம் வரை, அப்பட்டா செல்லும்.

(3) பட்டாவில், சாகுபடியைத் தடைசெய்யும் நிபந்தனையாவது, அறுவடைசெய்வதைத் தடைசெய்யும் நிபந்தனையாவது, குறிப்பிட்ட ஒரு காலத்தில் குடியானவன் தன் நிலத்தை ஜமீன்தார் வசம் ஒப்புவிக்கவேண்டுமென்ற ஷரத்தாவது செல்லாது. அதற்கு யாதொரு பலிதமும் இல்.

M.T.R. 32.

பட்டா எவ்வாறு கொடுக்கவேண்டும்.

32. பட்டா, குடியானவனுக்கு நேராகவே கொடுக்கப்படவேண்டும் ; அல்லது, ஏதாவது ஒரு ஜமீன் சம்பந்தமாக அல்லது, ஒரு ஜமீனின் பாகத்தின் சம்பந்தமாக கலெக்டர் அனுமதித்தால், கலெக்டர் கச்சேரியிலாவது, அல்லது பொதுவான, அல்லது பிரத்தியேகமான உத்தரவால் மாகாண அரசாங்கம் நியமிக்கும் அதிகாரியின் கச்சேரியிலாவது, பட்டாவைத் தாக்கல் செய்யலாம் ; அப்படி, தாக்கல் செய்யப்படும் பட்டாவை 43-வது பிரிவில் நோட்டீஸ் சார்வு செய்வதற்கு ஏற்பட்ட முறைப்படி, ஜமீன்தார் செலவில், கலெக்டர் அல்லது மேற்படி அதிகாரி குடியானவன் மீது சார்வு செய்யவேண்டும்.

M.T.B. 33.

பட்டாக்களும் முச்சிலிக்கைகளும் கையொப்பமிடவேண்டும்.

33. பட்டாக்களும், முச்சலிக்கைகளும், முறையே இருதரத்தாராலும் அல்லது அவர்கள் சார்பாக, ஒழுங்கான அதிகாரம் பெற்றவர்களாலாவது, கையொப்பமிடப்படவேண்டும்.

M.T.B. 34.

பட்டாவிலும் முச்சிலிக்கைகளிலும் குறிக்கப்படவேண்டியவை.

34. பட்டாவில் இருதரத்தாருடைய பெயர்களும் ; நிலத்தின் விஸ்தீரணமும், விவரமும் ; பணமாகவோ, தானியமாகவோ, அல்லது விளைச்சலின் பாகமாகவோ, செலுத்தவேண்டிய வரி விகிதமும் ; சட்டப்படியாவது, சட்ட ரீதியான வழக்கப்படியாவது, வரித் தொகையுடன் தனியாகச் செலுத்தவேண்டிய தொகைகளும், கட்டணங்களும் ; நில வரி, இதர தொகைகள், கட்டணங்கள், ஆகிய இவைகள் செலுத்தப்படவேண்டிய காலமும், காலங்களும் ; பட்டாவின் தேதியும் ; இரு தரத்தாரையும் கட்டுப்படுத்தும் விசேஷ நிபந்தனைகளும், குறிக்கப்படவேண்டும் ஜமீன்தார் விரும்பினால், முச்சலிக்கை, பட்டாவின் பிரதிபாகமாக இருக்கலாம் ; அல்லது ஏற்பட்ட நிபந்தனைகளின்படி நடந்துகொள்ளவேண்டிய சாதாரணமான ஒப்பந்தமாகவும் இருக்கலாம்.

புதியது.

எவ்வளவு காலத்துக்காக பட்டா கொடுத்து முச்சிலிக்கை பெற்றுக் கொள்ளலாமென்பது.

35. பட்டாவும், முச்சலிக்கையும், நிரந்தரமாயிருந்தால் சன்னத், கபூலியத்போல, ஒரே வகையாக மாற்றிக்கொள்ளலாம். வருஷா வருஷம் பயிரிடப்படும் கரம்பை நிலத்தைப்பற்றியதானால், இச் சட்டப்படி நிரந்தரபட்டா கொடுத்த பின்பு, இப் பட்டாவைப்பற்றிய கால ஆரம்பமுதல் 12 மாதத்திற்குள் பட்டா கொடுப்பதாகக் காட்டவேண்டும்.

ஆனால் ஒரு ரெவினியூ வருஷத்துக்கு மேற்பட்ட ஒரு கால வரையறைக்காக எந்த நிலச்சுவான்தார் பட்டா கொடுப்பதாகக் காட்டவும், எந்த ரயத்தும் அதை அங்கீகரிக்கவும் கடமைப்பட்டவராகார்.

M.T.B. 36.

பட்டா பெற வியாஜ்ஜியம்.

36. கேட்டுக்கொண்டபிறகு மூன்றுமாத காலம்வரையில் ஒரு நிலச்சுவான்தார் யாதொரு ரயத்து என்ன ஷரத்துகளின்படி பட்டா பெற்றுக்கொள்ள சுதந்தரமுடையவராயிருக்கிறாரோ, அதன்படி பட்டா தரத்தவறினால், அப்பட்டாவின் நிமித்தம் அந்த ரயத்து கலெக்டரிடம் வியாஜ்ஜியம் தொடருவது சட்ட சம்மதமாகும்.

கலெக்டர், கொடுக்கப்படவேண்டிய பட்டாவின் முறைகளைத் தீர்மானிக்கவேண்டும் குறித்த காலத்திற்குள் கொடுக்கத் தவறினால், டிக்ரிக்கு பட்டா, முச்சிலிக்கையை மாற்றிக்கொண்ட பலமிருக்கும்.

M.T.B. 37.

பட்டாவை அங்கீகரிக்கும்படி கட்டாயப்படுத்துவதற்காக வியாஜ்ஜியம்.

37. கொடுக்கக் காட்டினபின் மூன்று மாத காலம் வரையில் யாதொரு ரயத்து-தமக்குக், கொடுப்பதாகக் காட்டப்பட்ட பட்டாவை அங்கீகரிக்கவும் அதற்குப் பரிவர்த்தனமாக ஒரு முச்சிலிக்கை கொடுக்கவும் தவறினால் நிலச்சுவான்தார் அந்த பட்டாவை அங்கீகரிக்கும்படி கட்டாயப்படுத்தும் பொருட்டு கலெக்டரிடம் வியாஜ்ஜியம் தொடரலாம்.

M.T.B. 38.

பட்டாவை அங்கீகரிக்கும்படி கட்டாயப்படுத்தக் கொண்டுவரும் வியாஜ்ஜியத்தைத் தீர்மானிக்கையிலே இன்னது செய்யவேண்டுமென்பது.

38. மேற்கூறிய பிரிவின்படி தொடரப்பட்ட வியாஜ்ஜியங்களைத் தீர்மானிக்கையிலே, கலெக்டர் யார்மேல் வியாஜ்ஜியம் தொடரப்பட்டதோ அவர் பட்டாவை அங்கீகரிக்கக் கடமைப்பட்டவர்தானா என்று முதலில் விசாரிக்கவேண்டும். இது ருஜுவானால் கொடுக்கப்பட்ட பட்டா சரிதானா என்று கலெக்டர் விசாரிக்கவேண்டும்.

சரியானதென்று காணப்பட்டால் கலெக்டர் பிரதிவாதியை பட்டாவை அங்கீகரிக்கும்படியும் அதற்கு பதிலாக முச்சிலிக்கை கொடுக்கவேண்டுமென்றும் கட்டளையிட்டு டிக்ரி செய்யவேண்டும். கொடுக்கக் காட்டப்படுகிற பட்டா சரியானதல்லவென்று கலெக்டருக்குத் தோன்றினால் அவர் அப் பட்டாவில் இன்ன ஷரத்துகள் கண்டிருக்கவேண்டுமெனத் தீர்மானித்து, பிறகு அதன்படி பிரதிவாதியை பட்டாவை அங்கீகரித்து முச்சிலிக்கை தரும்படி உத்தரவிடவேண்டும். அவ்வுத்தரவுபடி பிரதிவாதி நடக்கக் குறிப்பிட்ட காலத்திற்குள் நடக்கத் தவறினால் அவ்வுத்தரவு, பட்டா முச்சிலிக்கை மாற்றிக்கொண்டதற்கு சமானமாகும்.

M.T.B. 39.

டிக்ரி அல்லது பரிவர்த்தனமான பட்டா முச்சிலிக்கையின் கால அளவு.

39. உடன் சேர்க்கையாக பட்டா முச்சிலிக் கைகள் பரிவர்த்தனம் செய்யப்பட்டு, ரயத்துகளால் புதிதாக சேர்க் கப்பட்டோ விடப்பட்டோ உள்ள நிலங்கள் தவிர, நிலச்சுவான்தாருக்கும் ரயத் தும், டிக்ரியானதோ பரிவர்த்தனமானதோ ஆகிய பட்டா முச்சிலிக்கை, புது ரெவின்யூ வருஷம் வரை அமுலில் இருக் கும். பிறகு, புதுப் பட்டா, முச்சிலிக்கை பரிவர்த்தனமோ டிக்ரியோ செய்ய லாம்.

M.T.B. 40 புதியது.

சிவில் கோர்ட்டின் அதிகாரம் நீக்கம்.

40. நிலத்தீர்வை பாக்கி வசூல் சம்பந்தமான எல்லா வழக்குகளையும் கலெக்டர் ரெவின்யூ கோர்ட்டாக விசாரித்து முடிவு செய்யலாம். சிவில் கோர்ட் இதைப் பற்றி அதிகாரம் எடுத்துக்கொள்ளக்கூடாது. ரெவின்யூ வழக்குகளில், கலெக்டருக்குமேல் போர்டுக்கு அப்பீல் கிடையாது.

7-ம் அத்தியாயம்.

ஜங்கமச்சொத்தை ஜாரிசெய்து விற்று நிலத்தீர்வை வசூல் செய்வது.

M.T.B. 41 திருத்தியமைக் கப்பட்டது.

நிலசுவான்தார் எப்போது ஜப்தி செய்யலாம்.

41. கலெக்டர் மூலமாகவாவது, அல்லது அவரால் உத்தரவு பெறப் பட்டவராவது, ஒரு நிலசுவான்வாதார், நிலத் தீர்வை பாக்கி யேற்பட்ட வருஷத் திற்கு அடுத்த வருஷத்தில் ஜாமீன் ஏற்றுக் கொள்ளாமலிருந்தால், இச் சட்டப்படி யுள்ள மற்ற ஹேதுக்களோடு, ரயத்தின் அசையும்பொருள், விளையும் பொருள், அறுவடையான மாசூல் அல்லது நிலத்திலுள்ள மரம் முதலி யவற்றையும் ஜப்தி செய்யலாம்.

36, 37 பிரிவுபடி வழக்குத் தொடரப்பட்டிருந்தால், கலெக்டர் டிக்ரி யானதுமுதல் அல்லது அதன் மேல் அப்பீல் செய்திருந்தால், கடைசி அப்பீல் கோர்ட் தீர்ப்பானதிலிருந்து பாக்கி ஏற்பட்டதாகக்கொள்ளவேண்டும.

பாக்கிக்குப் போதுமான இதர சொத்துக்கள் கிடைக்கும்வரையில், விவசாய சாமான்களையோ, உழவு மாடுகளையோ, விதைகளையோ ஜப்தி செய்யக்கூடாது.

M.T.B. 42 திருத்தியமைக் கப்பட்டது.

இன்னவிதமாய் ஜப்தி செய்யவேண டுமென்பது.

42. நிலத்துக்குடையவர் அல்லது அவர் உத்தரவுள்ள ஏஜண்டு கை யொப்பமிட்ட நோட்டீஸை ரயத்துக்கு நிலச் சுவான்தாரின் சொந்தப் பொறுப்பில் சேர்ப் பிக்கவேண்டும். அந்த நோட்டீஸில் கீழ்க் கண்டன இருக்கவேண்டும் ;—

(1) சேரவேண்டிய பாக்கித்தொகையும் அதற்கு வட்டியும்,

(2) அது, எந்த கைப்பற்று நிலத்தின் விஷயமாக பாக்கியாகிறதோ அந்தக் கைப்பற்று நிலம்.

(3) அது, எந்த காலம்வரையறைக்காகப் பாக்கியாகிறதோ அந்த கால வரையறை.

(4) ஜப்தி செய்யப்பட்ட சொத்தின் மதிப்பும் மாதிரியும்.

அச் சொத்தை நிலச்சுவான்தார் அல்லது அவருக்காக அவர் உத்தரவு பெற்ற ஏஜன்டோ, வைத்திருக்கவேண்டும். ஜப்தி செய்யப்பட்ட சொத்தை ரெவின்யூ உத்தியோகஸ்தர் முத்திரை செய்துவைக்கவேண்டும்.

சேமித்து வைக்கத்தக்க பொருளாக ஜப்தி செய்யப்பட்ட பொருள் இல்லாவிட்டால், அதை அறுவடைக்குமுன் 20 தினங்களுக்கு முன்பே ஜப்திசெய்யவேண்டும்.

M.T.B. 43 திருத்தியமைக் கப்பட்டது.

ஜப்தி நோட்டீ எப்படிஸை சார்வ் செய்வது விளம்பரம் செய்வது.

43. 42-ம் பிரிவில் சொல்லியுள்ள ஜப்தி நோட்டீஸை பாக்கிதாரருக்கு சார்வ் செய்தோ அல்லது அவர் உத்தரவு பெற்றவருக்கு சார்வ் செய்தோ அல்லது ஜப்தி செய்யவேண்டிய பாக்கியுள்ள நிலத் தருகேயுள்ள வீட்டிலுள்ள வயதுவந்த புருஷர்பேரில் சர்வ் செய்தோ, அல்லது பாக்கிதார் கடைசியாக வசித்த வீட்டின் சுவற்றில் ஒட்டியோ அல்லது அந்நிலத்தில் வெளிப்படையான இடத் தில் ஒட்டியோ சார்வ் செய்யலாம்.

சார்வ் செய்த 48 மணி நேரத்தில் பாக்கி ஏற்பட்ட நிலமுள்ள கிரா மத்தில் ஜப்தி நோட்டீஸ் ஒன்றை வெளிப்படையான இடத்தில் ஒட்டியும் கலெக்டருக்கு ஒரு நகலை அனுப்பியும் வைக்கவேண்டும்.

M.T.B. 44.

ஜப்தி செய்கிறவர் போலீசார் உதவி யைப்பெறலாம்.

44. ஜப்திசெய்ய அதிகாரம் பெற்றிருக்கும் யாதொரு நபர் - எவ்வித கலகமும் நேரிடாதபடி செய்வதற்கு என்ன சகாயம் அவசியமாயிருக்குமோ அந்த சகா யத்துக்காக அதி சமீபத்திலுள்ள போலீஸ் ஸ்டேஷனுக்கு விண்ணப்பஞ் செய்துக் கொள்ளலாம். அப்படிப்பட்ட விண்ணப்பம் யாருக்குச்செய்து கொள்ளப் படுகிறதோ அந்த அதிகாரியானவர் ஷெ காரியத்துக்காக அந்தப்படி ஜப்தி செய்யுங் காலத்திலே ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட போலீஸ் உத்தியோகஸ்தர்கள் வந்திருக்கும்படி அனுப்பவேண்டும்.

ஜப்தி செய்யப்பட்ட சொத்து பாக்கிக்கு சரியா யிருக்கவேண்டும்.

45. ஜப்தி செய்யப்பட்ட சொத்து அதிகமாயிருக்கக்கூடாது, எனவே, ஜப்தி செய்யப்பட்ட சொத்தின் மதிப்பானது சேர வேண்டிய பாக்கித் தொகைக்கு கூடுமான மட்டில் சரியாயிருக்கவேண்டும். M.T.B. 45.

ஜப்தி செய்யவேண்டிய காலம்.

46. சூரியோதயத்துக் பிறகும், சூரியாஸ்தமனத்துக்கு முன்னும் ஜப்தி செய்யவேண்டுமன்றி, மற்றபோது செய்யக் கூடாது. M.T.B. 46.

ஜப்தி பண்ணுகிறவர் இன்ன இடங்களை பலாத்காரமாய் திறக்கலாமென்பது.

47. லாயம், பசுமாட்டுத் தொழுவம், களஞ்சியம், கிடங்கு, வீட்டைச் சார்ந்த வெளியே அருகிலுள்ள அறை, அல்லது வேறே கட்டிடத்தை ஜப்தி பண்ணுகிறவர் பலாத்காரமாய்த் திறப்பது சட்ட சம்மதமாகும். மேலும் அவர் வெளிக் கதவு திறந்திருக்கிற யாதொரு குடியிருப்பு வீட்டிலும் பிரவேசிக்கலாம். அல்லாமலும் பாக்கிதாருடையதாகி உள்ளே வைக்கப்பட்டிருக்கிற சொத்தை ஜப்திசெய்யும் காரியத்துக்காக அப்படிப்பட்ட குடியிருப்பு வீட்டிலுள்ள எந்த அறையின் கதவையும் உடைத்துத் திறக்கலாம். ஆனால், எப்போதும், இதன் பின்னால் நிபந்தனை கண்டிருக்கிறபடிக்கன்றி மற்றபடி, அந்த குடியிருப்பு வீட்டில் ஸ்திரீகள் வாசஞ் செய்வதற்காகிலும், அந்தப்புரமாயாகிலும் உபயோகிக்கப்படும் யாதொரு அறையையும் மேற்கண்ட ஜப்திதார் உடைத்துத் திறப்பதாவது அதில் நுழைவதாவது சட்ட சம்மதமாகாது. M.T.B. 47.

போலீஸ் உத்தியோகஸ்தர் முன்பாகக் கதவுகளை பலாத்காரமாய்த் திறக்கவும் அந்தப்புரத்தில் நுழையவும் அதிகாரம்.

48. வெளிக் கதவு மூடியிருக்கிற யாதொரு குடியிருப்புவீட்டிற்குள்ளே யாவது, ஸ்திரீகளால் உபயோகிக்கப்பட்டுத் தேச வழக்கப்படி அந்தரங்கமாகப் பாவிக்கப்படுகிற யாதொரு அறைக்குள்ளேயாவது பாக்கிதாருடைய சொத்து வைக்கப்பட்டிருக்கிறதென்று நம்ப ஜப்திதாருக்கு நியாயமிருக்கிற பட்சத்திலே அந்த ஜப்திதாரர், அந்த சங்கதியை அதி சமீபத்திலுள்ள போலீஸ் ஸ்டேஷன் விசாரணை உத்தியோகஸ்தருக்கு அறிவிக்கவேண்டும். அந்தப்படி அறிவித்ததின்மேல் ஷெ ஸ்டேஷன் விசாரணை உத்தியோகஸ்தர் அந்த இடத்திற்கு ஒரு போலீஸ் உத்தியோகஸ்தரை அனுப்பவேண்டும். ஜப்திதாரர் அந்த குடியிருப்பு வீட்டின் வெளிக் கதவையும் ஷெ வீட்டிற்குள்ளே அந்தப்புரம் தவிர வேறே யாதொரு அறையின் கதவையும் ஷெ போலீஸ் உத்தியோகஸ்தருக்கு முன்பாக உடைத்துத் திறக்கலாம். அல்லாமலும் அந்தப்புரத்திற்குள்ளே இருக்கும் ஸ்திரீகளை அப்புறப்படுத்துவதற்காகக் கிரமப்படி நோட்டீஸ் கொடுத்தபிறகும் (அந்த ஸ்திரீகள் தேச வழக்கப்படி பகிரங்கத்தில் வரக்கூடாத அந்தஸ்துள்ள ஸ்திரீகளாயிருந்தால் அவர்களை தகுதியான விதமாக அப்புறப் படுத்துவதற்கான சாதனங்களை ஏற்படுத்திக்கொடுத்தபிறகும், ஷெ ஜப்திதாரர் - அந்தப்புரமாய் உபயோகிக்கப்படும் அறைகளிலே ஜப்திதாரருடைய சொத்து ஏதாகிலும் வைத்திருந்தால் அதை ஜப்தி பண்ணுவதற்கு மேலே கண்ட போலீஸ் உத்தியோகஸ்தருக்கு முன்பாக அந்த அறைகளுக்குள் நுழையலாம். அப்படிப்பட்ட சொத்து ஏதாவது காணப்படுகிற பட்சத்திலே, அந்த அறைகளில் முன்னிருந்தவர்கள் மறுபடியும் உள்ளே தாராளமாய்ப் போகும்படி அந்த அறைகளிலிருந்து ஷெ சொத்தை உடனே எடுத்துவிடவேண்டும். M.T.B. 48.

ஜப்தி செய்யப்பட்ட கால்நடைகளை யாவது சரக்குகளையாவது உபயோகிக்கக்கூடாதென்பது.

49. ஜப்திதாரர் - ஜப்தி செய்யப்பட்ட எருது முதலிய கால்நடைகளிடத்திலே வேலை வாங்கவும்கூடாது, ஜப்தி செய்யப்பட்ட சொத்தை உபயோகிக்கவும் கூடாது. அவர் கால்நடை முதலிய ஜீவப் பிராணிகளுக்கு வேண்டிய தீனிபோடவேண்டும். அதற்கான செலவை பாக்கிதாரரான ரயத்து ஏற்றுக்கொள்ளவேண்டியதோடும் கூட ஜப்தி செலவைப்போல அது வசூல் செய்யப்படத்தக்கதாகும். M.T.B. 49.

மாசூலை அறுவடை செய்து காப்பாற்ற உரிமை.

50. பாக்கிதாரரோ, அவர் உத்தரவுபெற்றவரோ தக்க காலத்தில் செய்யத் தவறினால் ஜப்திசெய்பவர் மாசூல் விளைய எரு முதலியவற்றிற்கு தக்க ஏற்பாடுகள் செய்து, விளைந்தபின் அறுவடை செய்து தொம்பைகளிலோ அல்லது அருகேயுள்ள சேமிக்குமிடங்களிலோ சேகரித்து பாதுகாக்கவேண்டும். எந்த விதத்திலும் ஜப்தியான பொருள் ஜப்திதாரர் அவர் உத்தரவு பெற்றவர் வசத்திலோ இருக்கவேண்டும். M.T.B. 50.

டெபாசிட் செய்வதின் மேலாவது, தொகை செலுத்துவதின் மேலாவது ஜாமீன் தருவதின் மேலாவது ஜப்தி விடுதலை செய்வது.

51. (1) இந்த அத்தியாத்தின்படி ஜப்தி செய்யப்பட்டிருக்கிற பிறகும், விற்பனைக்காக ஏற்பட்டிருக்கும் தேதிக்கு 48 மணி நேரத்திற்குமுன்னும், பாக்கிதாரராகிலும், சொத்தின் சொந்தக்காரராகிலும் கலெக்டர் கச்சேரியிலோ அல்லது மாகாண சர்க்காரால் நியமிக்கப்பட்டவரிடமோ பாக்கித் தொகையை செலவுடன் கட்டலாம். அல்லது ஜப்திதாரர் திருப்திக்கு ஜாமீன் தரலாம். அப்போது கலெக்டரோ, இதர உத்தியோகஸ்த்தரோ, டெப்பாசிட்டுக்கோ, ஜாமீன் கட்டியதற்கோ அங்கீகரித்திருப்பதாக எழுதிக்கொடுத்து உடனே ஜப்தியை விடுதலை செய்யலாம். M.T.B. 51.

(2) ஜப்தி செய்யப்பட்ட சொத்தை விற்பனை செய்யுமுன் பாக்கிதாரராவது, சொந்தக்காரராவது விற்பனைசெய்யும் உத்தியோகஸ்தரிடத்திலே பாக்கித் தொகையை செலவு வட்டி யுள்பட செலுத்தினால் ஷை உத்தியோகஸ்தர் அதற்காக ரசீது கொடுத்து உடனே ஜப்தியை விடுதலை செய்ய வேண்டும்.

M.T.B. 52.

நிலச்சுவான்தாருக்கு பாக்கியைத் தருவது.

52. மேற்கூறிய பிரிவில் கண்டபடி, டெபாசிட் செய்த ஒரு மாதத்திற்குப் பின், ஜப்தி செய்தவருக்கு கலெக்டர் அதிலிருந்து அவருக்கு சேரவேண்டிய தொகையை (பாக்கிதாரர் ஜப்தியை மறுத்தோ, நஷ்டஈட்டிற்கோ வழக்கு போட்டிருந்தாலன்றி) தரவேண்டும்.

M.T.B. 53.

ஜப்தி செய்யப்பட்ட சொத்து காணாமற்போனாலும், கெட்டுப்போனாலும், ஜப்திதாரர் உத்தரவாதம் செய்ய வேண்டும்.

53. ஜப்தி செய்யப்பட்ட சொத்து, அவர் வசமிருக்கையில் அவர் அதை காப்பாற்றவேண்டிய, நியாயமான, முன்னெச்சரிக்கையான ஏற்பாடுகள் செய்யாமையினாலே, திருட்டுப்போனாலும், காணாமல்ப் போனாலும், சேதப்பட்டாலும், அழிந்துபோனாலும் ஜப்திதாரரே உத்தரவாதம் ஆவார். சொந்தக்காரர் மனுப்பேரில், காணாமல்ப் போனதோ சேதப்பட்டதோ, உண்மையென ருசுவானால், தக்கபடி சரி செய்ய வேண்டுமென்று ஜப்திதாரருக்கு உத்தரவிடலாம்.

M.T.B. 54.

மூன்றும் மனிதர் தாவா.

54. விளையும் மாசூலையும், அறுவடையாகாத மாசூலும், நிலச்சுவான்தாரின் நிலையும் குறித்து தீர்வை பாக்கிக்காக ஏற்பட்டுள்ள முந்திய தாவாவை ஷை மாசூல் 41-ம் பிரிவுபடி செய்யப்படும் ஜப்தி பாதிக்காது. ஆனால் அதை விற்க ஏற்பாடான தினத்திற்கு முன் அந்த மாசூலில் உரிமை இருப்பதாக மூன்றும் பேர்வழி கலெக்டர் முன் தாவா செய்தால், கலெக்டர் ஒரு விசாரணை ஏற்படுத்தியோ, செய்தோ, அவ் விசாரணை செய்யவேண்டியதற்கு தக்க காரணங்கள் இருப்பதாக அறிந்தால், விற்பனை தினத்தை ஒத்திவைக்கலாம். ஜப்தி செய்தவர், தாவா செய்தவர், தாவாவை விசாரித்து தக்க உத்தரவு செய்யலாம். தாவாதாரர் தன் உரிமையை ருசுச் செய்யாவிட்டால் விற்பனைசெய்ய உத்தரவிடலாம்.

M.T.B. 55.

ஜப்தியைத் தடுக்க, மோசகரமாக பொருளைப் பராதீனம் செய்வதற்கு, தண்டனை.

55. பாக்கிக்காக ஜப்தி செய்வதைத் தடுக்கும் பொருட்டு பாக்கிதாரர் பொருளை மோசமாய் பராதீனம் செய்கிறுரென்று ஜப்திதாரர் விண்ணப்பத்தின்பேரில் கலெக்டருக்கு திருப்தியாகும்படி ருஜுசெய்யப்பட்டால், கலெக்டரானவர் ஜப்திதாரருக்கு ஷை பொருளை திரும்பவும் கொடுத்து விடவேண்டுமென்றுயினும், அதன் மதிப்புக் கிரயத்தை செலுத்திவிடவேண்டுமென்றுயினும் உத்தரவு பிறப்பிக்க வேண்டும். பாக்கிதாரர் அத்துடன் இந்தியன் தண்டனை சட்டப்படி, 424 பிரிவிற்கேற்பட்ட தண்டனைக்கு உட்படவேண்டும்.

M.T.B. 56.

ஜப்தி செய்யப்பட்ட பொருளை பலவந்தமாகவோ, ரகஸ்யமாகவோ எடுத்துக்கொண்டு போவதால் ஏற்படும் தண்டனை.

56. ஒருமுறை ஜப்தி செய்யப்பட்ட பொருளை யாதொரு நபர் பலவந்தமாகவோ, ரகஸ்யமாகவோ எடுத்துக்கொண்டு போயிருக்கிறுரென்று, கலெக்டருக்கு திருப்தியாகும்படி ருஜு செய்யப்பட்டால், கலெக்டரானவர் ஜப்திதாரர் மனுப்பேரில் ஜப்திதாரருக்கு ஷை பொருளை திரும்பவும் கொடுத்துவிடவேண்டுமென்றுயினும், அதன் மதிப்புக் கிரயத்தைச் செலுத்திவிடவேண்டுமென்றுயினும் ஏற்பாடு செய்யவேண்டும். பாக்கிதாரர் இத்துடன் இந்தியன் பீனல் கோட் 424-ம் பிரிவுபடி தண்டனைக்குள்ளாவார்.

M.T.B. 57.

ஜப்தி பொருளை விற்க விளம்பரம்.

57. ஜப்திசெய்த 30 நாளைக்குள் ரயத்து ஷை ஜப்தியை ரத்து செய்வதற்காக கலெக்டரிடம் வழக்கு தாக்கல் செய்யாவிட்டாலும், அப்படி தாக்கல் செய்யப்பட்டு ரயத்துக்கு விரோதமாக தீர்மானிக்கப்பட்டாலும், ஜப்திதாரர் அந்த 30 நாளைக்குப் பின் 15 தினத்திற்குள் அல்லது அந்த தீர்மானத்தின் 15 தினத்திற்குள் ஜப்தி செய்யப்பட்ட பொருளை விற்பனை செய்யும்படி, 1839-ம் வருஷத்து 7-ம் சட்டப்படி பொது உத்தியோகஸ்தரால் விற்பனையாக, கலெக்டருக்கு மனுச் செய்யவேண்டும். அந்த உத்தரவின்பேரில் எந்த சொத்தை எப்போது எந்த இடத்தில் விற்கப்படுமென்று அந்த கிராமத்தில் ஒரு விசேஷமான இடத்தில் ஒட்டவேண்டும். பாக்கி ஏற்பட்ட நிலமுள்ள கிராமத்தில் அவ் விற்பனையைப்பற்றி தமுக்கு மூலம் பகிரங்கப்படுத்தவேண்டும். பொது விளம்பரத்திற்கு ஏழு நாளைக்குக் குறையாமல் ஒரு தினத்தை விற்பனைக்கு ஏற்பாடு செய்யவேண்டும்.

M.T.B. 58.

விற்பனை நடத்தவேண்டிய இடம்.

58. சொத்தானது எவ்விடத்தில் ஜப்தி செய்யப்பட்டதோ அல்லது வைக்கப்படுகிறதோ அந்த கிராமத்திலாவது, அதற்கு மிகவும் அருகாமையில் ஜனங்கள் விசேஷமாய் வந்து சேரக்கூடிய இடத்தில் ஷை சொத்து வெகுவாய் நல்ல விலைக்கு விற்கலாமென்று கலெக்டர் அபிப்பிராயப்படுகிறபட்சத்தில் அவ்விடத்திலாவது, சாதாரணமாய் விற்பனையை நடத்தவேண்டும். எந்த சந்தர்ப்பத்திலாயி

னும் சரி, விற்பனை நடத்தவேண்டிய இடத்திலும் காலத்திலும் நிலச்சுவான்தார் ஷை சொத்தை கொண்டுவரக் கடமைப்பட்டவராவார். அதைக் கொண்டுவருவதற்காகப் பிடிக்கும் செலவை ஜப்தி செய்வதற்குப் பிடித்த செலவில் ஒரு பாகமாகக் கொள்ளவேண்டும். மாசூலோ, விளைபொருளோ அழியும்தன்மையதானுல் மாகாண சர்க்காரால் ஏற்படுத்தப்படும் சட்டப்படி ஜப்திதாரரால் அதிக விரைவில் விற்கப்படவேண்டும்.

விற்பனை செய்வது இன்னபடிக்கானல் மாசூல்களை விற்கலாமென்பது.

59. (1) சேர்த்து வைக்கக்கூடிய லக்ஷணத்தையுடைய விளைபொருள்கள் அல்லது மாசூல்களை அறுவடை செய்தோ அல்லது குவித்தோ சேர்த்து வைப்பதற்காகச் சித்தப்படுத்துவதற்கு முன்னே அவைகளை விற்கக்கூடாது. M.T.B. 59.

(2) சேர்த்து வைக்கக்கூடாத லக்ஷணத்தையுடைய மாசூல்களையோ, விளைபொருள்களையோ அறுவடை செய்வதற்கு அல்லது குவிப்பதற்கு முன்னே விற்றுவிடலாம். மேலும் கிரயதாரர் தாமாகவேயாகிலும், இந்த விஷயத்தில் தாம் நியமிக்கும் யாதொரு நபர் மூலமாகவாகிலும் நிலத்தில் பிரவேசிக்கவும் அவைகளை பாதுகாத்தறுப்பதற்கோ, குவிப்பதற்கோ அவசியமான எல்லாக் காரியங்களைச் செய்யவும் சுதந்தரமுடையவராவார்.

விற்பனைசெய்யும் விதம்.

60. சொத்தை விற்பனை நடத்தும் உத்தியாகஸ்தருக்கு யுக்தமாகத் தோன்றுகிறபடி ஒரு தொகுதியாகவோ பல தொகுதிகளாகவோ செய்து பகிரங்கமான ஏலத்தில் விற்கவேண்டும். டிமாண்டும், ஜப்தி விற்பனை இவைகளுக்குண்டான செலவும் ஷை சொத்தின் ஒரு பாகத்தை விற்பதனுலே ஈடுசெய்யப்படும் பக்ஷத்தில் உடனே மற்ற பாகத்தை ஜப்தியினின்றும் விடுதலைசெய்துவிடவேண்டும். M.T.B. 60.

விற்பனை தள்ளிவைப்பது.

61. சொத்தை விற்பனைக்குவிட்டதன்மேல், விற்பனை நடத்தும் உத்தியோகஸ்தருக்குத் தக்க விலை வரவில்லையென்று ஏற்பட்டால் சொத்தின் சொந்தக்காரரோ அல்லது அவர் பாமாயிருந்து காரியம் நடத்த அதிகாரம்பெற்ற யாதொரு நபரோ, மறுநாள்வரை விற்பனையைத் தள்ளிவைக்கவேண்டுமென்று விண்ணப்பஞ் செய்துகொள்ளுகிற பக்ஷத்தில் அல்லது விற்பனை நடத்துமிடத்தில் ஒரு சந்தை கூடுகிறபட்சத்தில், சந்தர்ப்பத்துக்கேற்றபடி, மறுநாள்வரையிலுமாவது, மறு சந்தைநாள்வரையிலுமாவது, விற்பனையைத் தள்ளி வைத்திருந்து அன்றைக்கு ஷை சொத்துக்கு என்ன விலை வந்தாலும் விற்பனையை முடித்துவிடவேண்டும். M.T.B. 61.

கிரயத் தொகையைச் செலுத்துவது.

62. பிரதி தொகுதியின் விலையையும் விற்பனை காலத்திலேயாகிலும், அதற்குப் பிற்பாடு எவ்வளவு சீக்கிரமாகச் செலுத்தவேண்டுமென்று விற்பனை நடத்தும் உத்தியோகஸ்தர் கட்டளையிடுகிறுரோ அவ்வளவு சீக்கிரமாகவாகிலும் செலுத்திவிடவேண்டும். அப்படி செலுத்தத் தவறிய கிரயதாரர் அதனுலும் ஏற்படும் நஷ்டத்திற்கும், மறு விற்பனைக்காக ஏற்படும் செலவிற்கும் உத்தரவாதமாவார். M.T.B. 62.

ஜப்தி செய்வதில் கிரமப் பிசகிருந்தால் அதைத் தெரிவிக்க கடமைப்பட்டிருப்பது.

63. விற்பனை நடத்தும் உத்தியோகஸ்தரானவர் - ஜப்திதாரர் இந்த சட்டத்தைச் சாக்கிட்டுக்கொண்டு செய்திருக்கக்கூடிய யாதொரு முக்கியமான கிரமப் பிசகைக் கலெக்டருக்குத் தெரிவிக்கவேண்டும். அப்படிப்பட்ட சந்தர்ப்பத்தில் கலெக்டருடைய உத்தரவு கிடைக்கிறவரையிலே அவர் விற்பனையைத் தள்ளிவைக்கவேண்டும். M.T.B. 63.

ஜப்தி செய்வதில் கிரமப்பிசகிருப்பதினுல் உண்டாவதின்னதென்பது.

64. ஜப்திதாரர் 42-ம் பிரிவில் கண்டபடி எழுத்துமூலமான ஒரு நோட்டீஸை ரயத்துக்கு சேர்ப்பிக்கவில்லையென்றுகிலும், 43-ம் பிரிவில் சொல்லியிருக்கிற பத்திரிகையை விளம்பரம் செய்யவில்லையென்றுகிலும் 41-ம் பிரிவுபடி உத்தரவிற்காக கலெக்டரிடம் விண்ணப்பஞ் செய்துகொள்ளத் தவறிவிட்டாரென்றுகிலும், ஜப்தியானது அதிகமென்றுகிலும் கலெக்டருக்குத் தெரியவந்தால் ஜப்தி செய்யப்பட்ட பொருளை சொந்தக்காரருக்கு மீண்டும் கொடுத்துவிடவேண்டுமென்று அவர் உத்தரவுசெய்யலாம். அதன்பின், ஜப்திதாரர் இவ்வத்தியாயத்தின்கீழோ அல்லது இச்சட்டத்தின் வேறு அத்தியாயத்தின் கீழோ, பாக்கி வசூலிக்க ஏற்பாடு செய்யக்கூடாது. ரயத்து தனக்கேற்பட்ட நஷ்டத்திற்கு கலெக்டரிடம் தாவா செய்யலாம். M.T.B. 64.

கிரயதாரருக்கு சர்டிபிகேட் கொடுக்கவேண்டுமென்பது.

65. கிரயத்தொகை பூர்த்தியாய்ச் செலுத்தப்பட்டிருக்கிறபோது, விற்பனை நடத்தும் உத்தியோகஸ்தர் சொத்தைக் கிரயதாரரிடத்தில் ஒப்பிப்பதோடும்கூட, வாங்கப்பட்ட சொத்தையும் செலுத்தப்பட்ட கிரயத்தையும் விவரமாகக் கண்ட ஒரு ஸர்டிபிகேட்டில் தாம் கையெழுத்திட்டு அதையும் அவருக்குக் கொடுக்க வேண்டும். M.T.B. 65.

M.T.B. 66.

விற்றுவந்த பணத்தை ஒரு வகை செய்வது.

66. இந்த சட்டத்தின்படி ஜப்தி செய்யப்பட்ட சொத்தின் ஒவ்வொரு விற்பனையிலும் கிடைத்த பணத்திலிருந்து விற்பனை நடத்தும் உத்தியோகஸ்தர் விற்பனைக்குப் பிடித்த செலவும் ஜப்திச் செலவும் கொடுக்கவேண்டும். எதற்காக ஜப்தி செய்யப்பட்டதோ அந்த பாக்கியைத் தீர்ப்பதற்காக, விற்பனை தேதிவரையில் பாக்கிக்கு வட்டியுள்படவும் மற்றும், ஜப்திசெய்த தேதிமுதல் விற்பனைநாள் வரை ஏற்பட்ட மற்ற பாக்கிக்கும் மிகுந்திருக்கும் தொகையை சரிப்படுத்த வேண்டும். மிகுதி இருப்பதை பாக்கிதாரருக்கு கொடுத்துவிடவேண்டும். விற்பனை செய்த உத்தியோகஸ்தரிடமிருந்து பாக்கிதாரர் பாக்கி தீர்க்கப்பட்டதற்காக ரசீது பெற்றுக்கொள்ளவேண்டும்.

M.T.B. 67.

யார் வாங்கக்கூடாதென்பது.

67. இந்த சட்டத்தின்படி சொத்தை விற்பனைசெய்யும் உத்தியோகஸ்தர்களும், அவர்களால் வேலையில் வைத்துக் கொள்ளப்பட்டோ, அல்லது அவருக்கு கீழ்ப்பட்டோ இருக்கும் எந்த நபரும், தாமாகவாகிலும், இதரர்கள் மூலமாகவாகிலும், அந்த உத்தியோகஸ்தர்களால் விற்கப்படும் சொத்தை வாங்கக்கூடாது.

M.T.B. 68.

பாயக்காரி தன் நிலத்துக்காரருக்காகச் செலுத்தியிருக்கும் தொகையை குத்தகைத் தொகையிலிருந்து கழித்துக்கொள்ளவேண்டும்.

68. இச் சட்டத்தின்படி ஒரு பாயக்காரியின் மாசூலை சட்டப்படி ஜப்தி செய்யப்பட்டு, அதை ஜப்தியிலிருந்தும் விலக்க, பணம் கட்டினால், அந்தத் தொகையை பாக்கிக் குத்தகையிலிருந்து கழித்துக்கொள்ள, அந்த பாயக்காரிக்கு உரிமையுண்டு.

அந்த பாயக்காரிக்கு உண்டான மற்ற சுதந்தரம் இந்தப் பிரிவிலுள்ள தெதனுலும் பாதிக்கப்படமாட்டாது.

M.T.B. 69.

நிலச்சுவான்தார் ஜப்தி செய்வதும் கோர்ட்டார் ஜப்தி செய்வதும் முரண்படுவது.

69. இச் சட்டப்படி, ஒரு நிலச்சுவான்தாரால் செய்யப்பட்ட ஜப்திக்கும், அந் நிலச்சுவான்தாரால் ஜப்தி செய்யப்பட்டபொருளை ஒரு சிவில் கோர்ட்டாரால் ஜப்திசெய்து ஏலத்திற்கு கொண்டுவரும்படி உள்ள உத்தரவிற்கும் முரண்படும்போது, ஷெ நிலச்சுவான்தார் சுதந்தரமே பலமானதாகும். ஆனால், அப்படிப்பட்ட நிலச்சுவான்தார் செய்த ஜப்தி காரணமாகக் கலெக்டர் ஷெ சொத்தை விற்றால் அப்படி விற்றுக் கிடைத்த பணத்தில் மிகுதியாக நிற்கும் தொகையை எந்த கோர்ட்டிலிருந்து ஜப்தி செய்து விற்க உத்தரவு பிறந்ததோ அந்த கோர்ட் உத்தரவன்னியில் பாக்கிதாருக்குக் கொடுக்கப்படமாட்டாது.

M.T.B. 70.

ஜாமீன்தார்பேரில் நடவடிக்கை யெடுக்க நிலச்சுவான்தார் அதிகாரம்.

70. ரயத்துமீதாவது, ஜாமீன்தார்மீதாவது, இருவர்மீதாவது, பாகஜ வட்டியுள்பட செலவுடன், அதற்கு அதிகமாகாமல் இச் சட்டப்படி நிலச்சுவான்தார் நடவடிக்கை எடுத்து வசூலிக்கலாம். பாக்கிதாரரை, பாக்கிக்கு டிமாண்ட் செய்யாமல், பாக்கிதாரர், ஓடாமலும் மறையாமலும், இருக்கும்போது ஜாமீன்தார் சொத்தை ஜப்தி செய்யக்கூடாது.

M.T.B. 71.

குற்றமாக ஜப்தி செய்தால் நஷ்ட ஈடு தாவா செய்ய உரிமை.

71. 51, 58, 64 பிரிவுகளின்படி, ஏற்பட்ட கலெக்டர் உத்தரவுக்கு அப்பீல் கிடையாது. ஆனால், யாராகிலும் தன் நிலச்சுவான்தாரால் 41-ம் பிரிவுபடி தன் சொத்தை ஜப்திசெய்தபோது, அப்பிரிவுபடி அந்த ஜப்தி அனுமதிக்காததாயுள்ளபோது, ஷெ நிலச்சுவான்தார்மேல் நஷ்ட ஈடு தாவா போடலாம்.

M.T.B. 72.

விதிகள் செய்ய மாகாண சர்க்காருக்குள்ள அதிகாரம்.

72. ஜப்தி செலவிற்கும், சொத்தைக் காப்பாற்றவும், விற்கவும் ஏற்பாடு செலவு விஷயத்தைப்பற்றியும் 53 முதல் 56-ம் பிரிவு வரையிலுள்ள விசாரணைகளை கலெக்டர் செய்யவும், இச்சட்டப்படி ஜப்தி செய்து, ஜங்கமப் பொருளை விற்கவும், இவ் வழக்கு களை விசாரிக்கும் முறைகளுக்கும் இம்மாகாண சர்க்கார் இச் சட்டத்திற்கேற்றபடி விதிகளை அவ்வப்போது செய்யலாம்.

8-ம் அத்தியாயம்.

ரயத்தின், கைப்பற்று நிலத்தை ஜப்திசெய்வதும் விற்பதும்.

M.T.B. 73.

கைப்பற்று நிலத்தை விற்பது.

73. யாதொரு பாக்கியானது எந்த வருஷத்தில் பாக்கியாக இருக்கிறதோ அந்த ரெவின்யூ வருஷத்திற்குள் செலுத்தப்படாவிட்டால் ஷெ பாக்கிக்கும் அதற்குள்ள வட்டிக்கும், ஜப்திக்கும், விற்பனைக்கும் செலவு பிடித்திருந்தால் அதற்கும் ஈடாய், இதன் பின்னல் நிபந்தனை கண்டிருக்கிறவிதமாக நிலச்சுவான்தார் பாக்கிதாரரின் கைப்பற்று நிலத்தை யாவது, யாதொரு பாகத்தையாவது, ஜப்தி செய்து, விற்பது சட்ட சம்மதமாகும்.

74. யாதொரு பாக்கி யாதொரு நிலச்சுவான்தாருக்கு சேரவேண்டியதாயிருக்கிறதோ, அவர் இதற்கடுத்த பிரிவின்படி கொடுக்கப்பட்ட அதிகாரங்களை உபயோகப்படுத்திக்கொள்ள உத்தேசிக்கிற பட்சத்திலே, அவர் பாக்கிதாரருக்கு, தனக்கு விற்க எண்ணமுள்ளதாக எழுத்துமூலமான, நோட்டீஸ் சேர்ப்பிக்கவேண்டும். அந்த நோட்டீஸ், பாக்கிக்காகவும், வட்டிக்காகவும், செலவேதாவதிருந்தால், அதற்காகவும் எவ்வளவு தொகை சேரவேண்டுமென்பதையும், நோட்டீஸ் சேர்ந்த ஒரு மாதத்திற்குள் அத்தொகையைக் கட்டாவிட்டால், நோட்டீஸில் குறிப்பிட்ட கைப்பற்று நிலத்தையோ, பகுதியையோ விற்கப்படுமென்றும் தெரிவிக்க வேண்டும். M.T.B. 74.

ஜப்தி செய்வதைப்பற்றி நோட்டீஸ்.

43-வது பிரிவில் சொல்லியுள்ளபடி அந்த நோட்டீஸை சேர்ப்பித்து, அதன் நகலை எப்படி எப்போதுசே சர்ப்பிக்கப்பட்டதென்பதோடு கலெக்டருக்கு அனுப்பவேண்டும்.

75. நோட்டீஸ் சேர்ந்த 30 தினத்திற்குள், நோட்டீஸைச் தள்ளுபடி செய்ய கலெக்டர்முன் தாவா செய்யாவிட்டாலும், அல்லது பாக்கிதாரருக்கு எதிராக அவ் வழக்கு தீர்மானிக்கப்பட்டாலும், பாக்கிக்காக ஜப்தி செய்யப்பட்ட ஜங்கம சொத்தை விற்க ஏற்பட்டுள்ள நிலத்தை விதிகளின்படி விற்க, நிலச்சுவான்தார் ஏற்பாடு செய்யலாம். விற்பனைசெய்யும் உத்தியோகஸ்தர், வாங்குபவர்வசம் ஒப்பிவிக்கவேண்டும். M.T B. 75.

எப்போது, எப்படி கைப்பற்று நிலத்தை விற்பது.

76. சர்க்கார் தாவா தவிர, நிலத் தீர்வை, கைப்பற்று நிலத்தில் முதல்க் கடன். ஆகும் எந்த வில்லங்கங்களும் நிலச்சுவான்தாருக்குள்ள, விற்கும் உரிமையை பாதிக்காது. M.T.B. 76.

நிலத்தீர்வை கைப்பற்று நிலத்தில் முதல் கடன்.

77. பாக்கிக்காக ஜப்தி செய்யப்பட்டோ, தீர்ப்பு நடவடிக்கையிலோ ஜங்கமப் பொருளை விற்கும்படிக்குள்ள விதிகளின்படி ஒரு கைப்பற்று நிலத்தையோ, அதன் பகுதியையே அதற்காக ஏற்பட்ட பாக்கிக்கு விற்றால், சர்க்காருக்குள்ள வில்லங்கமுடன், அதற்குமுன் ஏற்பட்டுள்ள வில்லங்கங்களோடு நிலத்தை வாங்குபவர் ஏற்றுக் கொள்ளவேண்டும். M.T B. 77.

வாங்குபவருக்கு வில்லங்கங்களின் பாதகரம்.

78. 66-வது பிரிவுப்படி, ஜப்தி செய்யப்பட்ட பொருளின் விற்பனைத் தொகை எப்படி பங்கிடப்படுகிறதோ அதேபோல, கைப்பற்று நிலத்தையோ, அதன் பகுதியை பாக்கிக்காக விற்ற தொகை பங்கிடப்படல் வேண்டும். பாக்கிதாரர், விற்பனைசெய்த உத்தியோகஸ்தரிடமிருந்து, விற்பனைத் தொகையிலிருந்து பாக்கி பைசல் ஆனதற்கு ரசீது பெறவேண்டும். இச் சட்டப்படி பாக்கிக்காக விற்கும் முறைக்கு சிவில் ப்ரோஸீஜர் கோர்ட் 295-ம் பிரிவு செல்லாது. M.T.B. 78.

விற்றுவந்த பணத்தை, ஒரு வகை செய்ய விதிகள்,

79. பாக்கியையும் வட்டியையும் செலவுத்தொகையுடன், கிரயதாரர் பேருக்கு ஏலம் கூறுமுன் கட்டியாவது, வேறு மார்க்கமாய் அந்த பாக்கி திருப்தி செய்யப்பட்டுவிட்டதாக நிலச்சுவான்தார் அச் சொத்தை ஜப்தியிலிருந்து விடுதலை செய்யும்படி மனு மூலமாகவாவது தெரிவித்தாலன்றி தீர்ப்பு நடைமுறையில் கைப்பற்று நிலத்தையோ, பகுதியையோ விற்க உத்தரவானபின், ஜப்தியிலிருந்து விடுதலை செய்யமுடியாது. M.T.B. 79.

கைப்பற்று நிலத்தை ஜப்தியிலிருந்து எப்போது விடுதலை செய்வது,

கைப்பற்று நிலத்திலோ, அதன் பாகத்திலோ, விற்பனையால் செல்லாத உரிமையும், அனுபவ பாத்தியதையுமுடைய ஒரு நபர், அந்த நிலம் பாக்கிக்காக விற்கப்படுவதானால், பாக்கிதாரர், தீர்ப்பு நடவடிக்கையில் விற்பனை உத்தரவாயிருந்தால், விற்பனை உத்தியோகஸ்தரிடம் இப் பிரிவின்படி கட்டவேண்டிய தொகையைக் கட்டி, அல்லது 75-ம் பிரிவுபடி விற்பனை உத்தரவாகியிருந்தால் அத்தகைய விற்பனை உத்தியோகஸ்தரிடமோ, கலெக்டரிடமோ, அல்லது மாகாண சர்க்காரால் உத்தரவிடப்பட்ட உத்தியோகஸ்தரிடமோ கட்டி, அதன்பின் ஜப்தியை ரத்து செய்யலாம்.

80. யாதொரு நபருக்கு, விற்க விளம்பரம் செய்யப்பட்ட ஒரு கைப்பற்று நிலத்திலோ, அதன் பகுதியிலோ, விற்பனையால் செல்லத்தகாத உரிமை யிருக்கிறதோ அவர், விற்பனைசெய்யும் உத்தியோகஸ்தருக்கோ, ரெவின்யூ கோர்ட்டுக்கோ, கலெக்டருக்கோ, அல்லது மற்ற மேற்கூறிய உத்தியோகஸ்தருக்கோ விற்பனையைத் தடுக்கவேண்டிய தொகையைக் கட்டிவிட்டால், M.T.B. 80.

விற்பனையைத்தடுக்கக் கட்டிய பணம் சில வேளைகளில் கைப்பற்று நிலத்தில் அடமானத்திற்கொப்பாகும்.

(a) அந்தத் தொகை 100-க்கு வருஷத்திற்கு $6\frac{1}{4}$ வீதம் வட்டியோடு ஒரு கடனாக, அனுபவ பாத்தியதையை அடமானமாக உள்ள உரிமையாகக் கொள்ளப்படும்.

(b) சர்க்கார் தாவா, வரி பாக்கி, தவிர கைப்பற்று நிலத்தின்மீதுள்ள கடன்களில் இவ் வடமானக் கடன் முந்தியதாகும்.

(c) பிறகு விற்பனையை நிறுத்தி, பணம் கட்டுபவர் கைப்பற்றும் நிலத்தை தன் வசப்படுத்திக் கொண்டு அக்கடன் வட்டியுடன் பைசலாகும் வரையில், அந்நிலத்தை அடமானத்திற்காக வைத்துக்கொள்ளலாம்.

(2) யாதொரு நபருக்குள்ள பரிகாரங்கள் இப்பிரிவால் பாதிக்கப்பட மாட்டா.

(3) ஒரு நபருக்கு மேற்பட்டவர்களுக்கு, மேற்கூறிய உட் பிரிவு 11-ல் ஏற்படும் உரிமை இருந்தால், அவர்கள் மேற்கூறியபடி, கட்ட முன் வந்தால், யாருக்கு முதல் பாத்தியதை உண்டோ அவருக்கு பிரதானம் அளிக்கப்படும்.

விற்பனையைத் தடுக்க கீழ்த்தரபாயக்காரியால், தொகை கட்டப்பட்டால், அதைகுத்தகைத் தொகையிலிருந்து கழித் துக்கொள்ளலாம்.

81. ஒரு கைப்பற்று நிலத்தையாகிலும், அதன் பாகத்தையாகிலும், ஒரு ரயத்தால் பாக்கி யேற்பட்டதாலோ, தீர்ப்பு நடவடிக்கை முறையிலோ, விற்கப் போகிறதாகப் பிரசித்தஞ் செய்திருந்து விற்பனையால் பாதிக்கக்கூடிய பாத்தியதை யுடையவராய் உள்ள ஷெ நிலத்தைச் சேர்ந்த யாதொரு கீழ்த்தர பாயக்காரியும் அவ்விற்பனையைத் தடுக்கும் பொருட்டு, கட்டவேண்டிய தொகையை ரெவின்யு கோர்ட்டிலாகிலும், கலெக்டரிடமாகிலும் விற்பனை செய்யும் உத்தியோகஸ்தரிடத்திலாகிலும் செலுத்தினல் அவர் தமக்குச் சட்டபடி ஏற்பட்டிருக்கும் வேறு யாதொரு பரிகாரத்தோடுங் கூட, அப்படி செலுத்தின தொகை முழுவதையுமாவது, அதில் யாதொரு பாகத்தையாவது, தமக்கடுத்து மேற்பட்டுள்ள நிலத்துக்காரருக்கு தாம் செலுத்தவேண்டிய யாதொரு குத்தகைத் தொகையிலிருந்து கழித்துக் கொள்ளலாம்.

நிலச்சுவான்தார் நிலத்தை ஏலத் தில் விலை கேட்கலாமென்பது.

82. சிவில் புரொசீஜர் சட்டம் 294-ம் பிரிவுபடி, யாதொரு விஷயமும் இருந்த போதினும், ரெவின்யு கோர்ட்டார் அல்லது கலெக்டர் உத்தரவில்லாமல் சமயோசிதமாக ஒரு ரயத்தின் கைப்பற்று நிலத்தையோ அதன் பாகத்தையோ பாக்கிக்காக விற்பனைக்குக் கொண்டு வந்திருக்கிற ஒரு நிலத்துக்குடையவர் ஷெ கைப்பற்று நிலத்தையோ அதன் பாகத்தையோ விலைக்குக் கேட்கலாம், வாங்கலாம்.

பாக்கிதாரரான ரயத்து விற்பனையை ரத்து செய்ய வேண்டுமென்று விண்ணப்பஞ் செய்துக்கொள்வது.

83. (1) ஒரு ரயத்தின் கைப்பற்று நிலத்தையாவது அதன் பாகத்தையாவது, அதற்குச் சேரவேண்டிய பாக்கிக்காக விற்கிறபோது, பாக்கிதாரராயுள்ள ரயத்து, விற்பனை தேதி முதல் முப்பது தினத்துக்குள்ளாக எப்போதாயினும் ரெவின்யு கோர்ட்டிலோ, கலக்டரிடமோ, மற்ற உத்தியோகஸ்தரிடமோ, சந்தர்ப்பம் போல், நிலச்சுவான்தாருக்குச் செலுத்தும் பொருட்டு, பாக்கியை வட்டி, செலவு உள்பட, நூற்றுக்கு ஐந்து சதம் வீதம் கிரயதாரருக்குக் கொடுக்கவும் கட்டி, விற்பனையை ரத்து செய்யவேண்டுமென்று ஷெ கலெக்டருக்கு விண்ணப்பஞ்செய்துக்கொள்ளலாம்.

(2) அந்த 30 தினத்துக்குள்ளாக மேலே கண்டபடி பணம் கட்டப்பட்டால், ரெவின்யு கோர்ட்டோ, கலெக்டரோ அந்த விற்பனையை ரத்து செய்து உத்தரவு பிறப்பிக்கவேண்டும். அந்தபடி, ரத்து செய்யப்பட்ட விற்பனை விஷயத்தில் ஸிவில் ப்ரொஸீஜர் சட்டத்தின் 315-வது பிரிவிற் கண்ட நிபந்தனைகள் பிரயோகிக்கப்படும்.

ஸிவில் ப்ரொஸிஜர் ரயத்தின் 311-ம் பிரிவுபடி பாக்கிதாரரான ரயத்து விற்பனையை ரத்து செய்யும்படி விண்ணப்பஞ் செய்தால், இந்த பிரிவுபடி விண்ணப்பஞ் செய்ய அவருக்கு உரிமையில்லை.

(3) ஸிவில் ப்ரொஸீஜர் சட்டத்தின் 313-ம் பிரிவு, இச்சட்டப்படி நடக்கும் விற்பனைக்கு செல்லாது.

9-ம் அத்தியாயம்.

நீர்ப்பாசனம் சம்பந்தமான கட்டுவேலைகளின் மராமத்து.

நீர்ப்பாய்ச்சல் சம்பந்தமாக வேலைகளின் மராமத்துக்கு கலெக்டரிடம் விண்ணப்பஞ்செய்வது.

84. நீர் பாய்ச்சப் பெற்ற நிலத்தை ஒரு நிலச்சுவான்தாருக்குக் கீழ்ப்பட்டு வைத்துக்கொண்டிருக்கிற யாதொரு ரயத்தாவது ரயத்துகளாவது - தம்முடைய அல்லது தங்களுடைய கைப்பற்றிலிருக்கும் நிலத்துக்கு எந்த நீர்ப்பாய்ச்சற் கட்டு வேலையினல் நீர் பாய்ச்சப்படுகிறதோ அந்த கட்டுவேலை லேகமாயிருக்கிறதென்றும் ஷெ கட்டு வேலையை மராமத்து செய்வதற்காக 137-வது பிரிவின்படி உத்தரவு பிறப்பிக்கவேண்டுமென்றும் ஜில்லா கலெக்டரிடத்தில் விண்ணப்பஞ் செய்துக்கொள்ளலாம் ஷெ விண்ணப்பத்தில் அவசியமென்று எண்ணப்படும் மராமத்துகள் இன்ன விதமானவையென்பதையும் அதற்கு சுமார் இவ்வளவு செலவாகுமென்பதையும் அந்த நீர்ப்பாய்ச்சலால் நிலத்தினல் வரக்கூடிய குத்தகை இவ்வளவென்பதையும் விபரமாகக் காணவேண்டும். அதன் பிறகு ஜில்லா கலெக்டர் தாமாகவேயாவது, தமக்குக் கீழ்ப்பட்டுள்ள ஒரு உத்தியோகஸ்தருக்கு விசாரணை செய்யும்

அதிகாரத்தைக் கொடுத்து, அவர் மூலமாகவாவது, ஷை விண்ணப்பத்துக்கு நகலையும் ஒரு நோட்டீஸையும் நிலத்துக்குடையவருக்குச் சேர்ப்பித்து கேட்டுக்கொள்ளப்பட்ட உத்தரவை ஏன் பிறப்பிக்கக்கூடாது, என்றும் அதற்குக்காரணத்தை அந்த நோட்டீஸில் குறிக்கப்படும் தேதியன்றைக்குக் காட்டவேண்டுமென்றும் அந்த நோட்டீஸ் மூலமாகக் கட்டளையிடவேண்டும். மேலும், நீர் பாய்ச்சப்பெற்ற நிலம் இருக்கும் கிராமம், அல்லது கிராமங்களில் ஷை நோட்டீஸ் ஒட்டப்படவேண்டும்.

விண்ணப்பஞ் செய்து கொள்வதன்மேல், விசாரணை.

85 மேற்படி நோட்டீஸில் குறிக்கப்பட்ட தேதியிலாவது அல்லது விசாரணையை எந்தத் தேதியில் தள்ளிவைத்திருக்கிறதோ, அந்தத் தேதியிலாவது ஜில்லா கலக்டரோ, மேலே கண்ட உத்தியோகஸ்தரோ, விண்ணப்பதார் அல்லது விண்ணப்பதார்களுக்கும், நிலச்சுவான்தாரும் ஷை கட்டு வேலையினால் நீர் பாய்ச்சப்பெற்ற நிலத்தைச் சேர்ந்த ரயத்துகள் எவர்களாயினும் ஹாஜராயிருந்தால், அவர்களும் சொல்வதைக் கேட்கவேண்டும். மேலும், அவருக்கு யுக்தமாகத் தோன்றும் யாதொரு சாக்ஷியத்தையும் யெடுத்துக்கொள்ளலாம். ஷை விசாரணையானது ஜில்லா கலெக்டரல்லாத வேறு உத்தியோகஸ்தரால் செய்யப்பட்டால் அவர் ஜில்லா கலெக்டருக்கு அதைப்பற்றித் தெரிவிக்கவேண்டும்.

விசாரணை செய்வதன்மேல் உத்தரவு.

86. நீர்ப்பாய்ச்சல் கட்டு வேலையை, ஆதாரமாகக் கொண்ட நிலங்களுக்கு நீர்பாய்வதை விசேஷமாய் விக்னப்படுத்தும்படியான அளவுக்கு அந்த கட்டுவேலை பழுதான ஸ்திதியிலிருக்கிறதென்றும், இச்சட்டப்படி நிலச்சுவான்தாரே வரே அம்மராமத்துவேலைகளை கவனிக்கவேண்டுமென்றும், தக்க காரணமின்றி அவர் அதை கவனிக்கத் தவறிவிட்டாரென்றும் ஜில்லா கலெக்டருக்குத் திருப்திகரமாகத் தோன்றினால் ஷை கலெக்டர் கீழ்க்கண்ட உத்தரவிடலாம்.

(1) குறித்த ஒரு காலத்துக்குள்ளாக நிலச்சுவான்தார் செய்து முடிக்கவேண்டுமென்று கட்டளையிட்டு உத்தரவு பிறப்பிக்கலாம். அல்லது

(2) மனுதாரோ, மனுதார்களோ, அவர்களோடு ஷை வேலை செய்ய சம்மதப்படும் ரயத்துகளோ, மனுவில்க் குறிக்கப்பட்ட வேலையை அல்லது, விசாரணையில் நீர்ப்பாய்ச்சலுக்கு தகுதியாக இருக்கும் நிலைமையில் இருக்கவேண்டிய வேலைகளை அதற்கு ஏற்படக்கூடிய செலவு இவ்வளவென்றும் குறிப்பிட்டு, செய்து முடிக்க அதிகாரம் தரலாம். அவ்வுத்தரவில் ஒரு நியாயமான காலத்துக்குள்ளாக ஷை வேலைகளைச் செய்து முடிக்க வேண்டுமென்று நிர்ணயிக்கலாம்.

ஆனால் அப்படிப்பட்ட வேலைகள் மராமத்து வேலைகளாக மாத்திரமேயிருக்கவேண்டும். நிலச்சுவான்தாருடைய சம்மதமின்றி மற்றப்படி விஸ்தாரப்படுத்துவதோ, சீர் திருத்தங்கள் செய்வதோ ஷை வேலைகளில் சேரக்கூடாது; ஜல வருவாய்க்கால்களிலிருந்தும் ஜலத்தைப் பங்கிடு செய்யும் கால்களிலிருந்தும் குப்பை முதலியவற்றை வருஷவாரியில் அப்புறப்படுத்துவதைப் போல், தேசாசாரப்படி ரயத்துகள் செய்து முடிக்கவேண்டிய சொற்ப வேலைகளெதுவும் ஷை வேலைகளில் சேரக்கூடாது.

நிலச்சுவான்தார் கலெக்டர் உத்தரவுபடி செய்யாவிட்டாலும் ரயத்தால் வேலை நடத்த சக்தியில்லாவிட்டாலும், உரிய ஏற்பாடு.

87. கலெக்டர் உத்தரவை நிலச்சுவான்தார் நிறைவேற்ற மறுத்தாலும், செய்யாவிட்டாலும், ரயத்து, ஏழ்மையாலோ அல்லது செய்யமுடியாத காரணத்தாலோ, கலெக்டர் தீர்மானப்படி செய்ய முடியாதென்று ஏற்பட்டால், மாகாண சர்க்காரின் முன்பே பெற்றிருக்கும் அனுமதியின்பேரில், கலக்டரே அவ்வேலையை நடத்தி, நிலச்சுவான்தாரிடம் அந்தத் தொகையை நிலத்தீர்வை போல வசூலிக்கலாம்.

கட்டுவேலையானது சிறிதுபாகம் ஒரு பூஸ்திதிக்கும், சிறிதுபாகம் சர்க்கார் நிலத்துக்கும் உபயோகப்படுகிற விஷயத்தில், நடத்த வேண்டிய நடவடிக்கை.

88. நீர்ப்பாய்ச்சற்கட்டு வேலையானது சிறிது மட்டில் ஒரு பூஸ்திதிக்கும் சிறிது மட்டில் சர்க்காருக்கும் சேர்ந்ததாயிருந்தால் மேலே கண்ட மராமத்துகளை எப்போதும், மாகாண சர்க்காரின் முந்திய அனுமதியின் பேரில் ஜில்லா கலெக்டர் செய்து முடிக்கவேண்டும். அச் செலவை சர்க்காரும், நிலச்சுவான்தாரும் இருவருக்குமுள்ள பாத்தியதைக்குத் தக்கபடி பொறுத்துக் கொள்ள வேண்டும். நிலச்சுவான்தாருக்கு ஏற்படும் பாக்கி, சர்க்காருக்குச் சேர வேண்டிய நிலத் தீர்வை பாக்கி போல வசூலிக்கப்படும்.

மராமத்து செலவை ரயத்துகளிடமிருந்து வசூல் செய்வது.

89. ரயத்துகள், யாதொரு வேலையைச் செய்து முடிக்க வேண்டுமென்று கலெக்டர் உத்தரவு செய்திருந்தால் அதைச் செய்து முடிக்க அதிகாரம்பெற்ற நபர்கள் அப்படிப்பட்ட வேலையைச் செய்து முடித்த பிறகு, செலவுகளுக்காக உத்தரவு பிறப்

பிக்கவேண்டுமென்று, ஜில்லாகலெக்டரிடத்தில் விண்ணப்பஞ் செய்து கொள்ளலாம். பிறகு ஜில்லா கலெக்டர், வேலைகள் சரியாகவும் குறிக்கப்பட்ட காலத்துக்குள்ளாகவும் செய்து முடிக்கப்பட்டதென்றும், கேட்கப்படும் செலவுகள் அதிகமல்லவென்றும் தாம் தெரிந்து திருப்தியாவதற்கு அவசியமாகத் தோன்றும் காரியங்களைச் செய்ய வேண்டும். அப்படி அவருக்குத் திருப்தி யுண்டானால், செய்து முடித்த வேலைக்காக நியாயமாய்ச் சேரவேண்டியதென்று அவருக்குத் தோன்றும் தொகையை, அந்நீர்ப்பாசன வழியால் பாய்ச்சப்படும் நிலத்தின் ஒரு வருஷ தீர்வைக்கு மேற்படாமல், ஷை நிலத்தை வைத்துக்கொண்டிருக்கிற ரயத்து களிடமிருந்து ஷை தொகையை வசூலிக்க உத்தரவு பிறபிக்கவேண்டும். ஒவ்வொரு ரயத்தும் வைத்துக்கொண்டிருக்கிற நிலத்தின் குத்த கைத் தொகைக்குத்தக்கபடி அவர் செலுத்தவேண்டிய தொகை ஷை உத்தரவில் கண்டிருக்கவேண்டும். அது, சர்க்காருக்குச் சேரவேண்டிய நிலத் தீர் வை போல வசூலிக்கப்படும்.

மராமத்து செய்து முடிக்கும் நபர் களுக்கு, தொகை செலுத்துவது.

90. வசூல் செய்யப்பட்ட தொகையில், செய்து முடித்த வேலைகளைப் பார்வையிடுவதற்காக, ஏதாவது செலவு ஏற்பட்டிருந்தால் அதுபோக மிகுதியை 86-வது பிரிவின்படி, வேலைகளைச் செய்து முடிக்க அதிகாரம் கொடுக்கப் பெற்ற நபர்களுக்குச் செலுத்த வேண்டும். மதிப்புக்கு ஏற்பட்ட செலவையும் பார்வையிடுவதற்கேற்பட்ட செலவையும், 86-வது பிரிவுபடி ஏற்படும் உத்தரவில்க் குறிப்பிடும் தொகையுடன் சேர்க்கவேண்டும்.

மராமத்து செலவுகளை வரித் தொகையிலிருந்து கழித்துக்கொள் வது மூலமாக வசூல் செய்ய சுதந்த ரம்.

91. நீர்ப்பாய்ச்சல் சம்பந்தமான யாதொரு கட்டுவேலை விஷயமாய் 89-வது பிரிவுபடி, யாரிடத்திலிருந்து யா தொரு தொகை வசூலிக்கப்படுகிறதோ, அப் படிப்பட்ட ஒவ்வொரு ரயத்தும் தாம் நிலச் சுவான்தாருக்குச் செலுத்தவேண்டிய நிலத் தீர்வையிலிருந்து அத் தொகையை கழித்துக்கொள்ள பாத்தியதையுள்ளவரா வார். அதற்காகப் பெறப்பட்ட ரசீது நிலத் தீர்வைக்குப் பெறப்பட்ட ரசீதுக் கு சமமாகும்.

அப்பீல் செய்ய உரிமை.

92. இந்த அத்தியாயத்தின்படி, ஜில்லா கலக்டர் நடத்தின நட வடிக்கைகள் சம்பந்தமாக எந்த ஸிவில் கோர்ட்டாரும் யாதொரு தடையுத்தரவும் பிறப்பிக்கக்கூடாது. வியாஜ்ஜியத்தையும் தடுக்கக் கூடாது. ஆனால் ஜில்லா கலக்டர் பிறப்பித்த வேறே யாதொரு உத்தரவின் மேல் ரெவின்யு போர்டாரிடத்தில் அப்பீல் செய்துக்கொள்ளலாம். அவர்களுடைய தீர்ப்பு முடிவானதாகும்.

ரயத்தின் நஷ்டஈடு தாவா செய்யும் உரிமை.

93. ரயத்து நீர்ப்பாய்ச்சல் மராமத்து கட்டு வேலையை சரிவர கவனிக்க வில்லையென்று நிலச்சுவான்தார்மீது கலக் டரிடம் தாவாசெய்யும் உரிமையை, இவ்வத்தியாயத்திலுள்ள எந்த நிபந்தனை யும், அல்லது இவ்வத்தியாயத்தின் கீழ் எடுக்கப்பட்ட நடவடிக்கையும் பாதிக்காது.

10-ம் அத்தியாயம்.

சட்டத்துக்கு விரோதமான வரிகள்.

சட்டத்துக்கு விரோதமாய் வரி வாங் குவதற்கு தண்டனை.

94. நிலச்சுவான்தார், ரயத்துகளுக்கு அனுமதிக்கப்படாத வரி யையும், மற்ற கட்டணங்களையும் எந்த பெயரிட்டாவது, எந்த சாக்கிட்டாவது விதிக் கக்கூடாது. ஒவ்வொரு ரயத்தும் நிலச் சுவான்தாருக்குத் தரவேண்டிய நிலதீர் வைக்கு மேலோ, அல்லாது பட்டாவில் குறிக்கப்பட்ட கட்டணத்திற்கு மேலோ யாதொரு தொகையும் அதிகமாக வாங்கியிருந்தால், அவர் கலெக்டரிடம் வியாஜ்ஜியம் தொடர்ந்து அப்படி அதிகமாய் வாங்கப்பட்ட தொகையோடுங்கூட, அதைப்போல 10 பங்குக்கு அதிகப்படாமல் கலெக்டருக்கு யுக்தமாக தோன்றுகிற யாதொரு அபராதத் தொகையையும் வசூல் செய்துக்கொள்ள சுதந்தரமுள்ளவராவார்.

அப்படி, அதிகமாய் செலுத்துவதைப்பற்றிய சகல ஒப்பந்தங்களும் நிபந்தனைகளும் செல்லமாட்டா.

நிரந்தரமாய் ஏற்பட்ட பூஸ்திதிகளுக்கு விதிக்கப்பட்ட பேஷ்கஷில், சேர்க்கப்படட, சொத்திலில்லாமலிருக்கும் மரவரி, இதரவரி, ஸெஸ், கட்டணம் முதலியன சட்டத்துக்கு விரோதமானவையாகும்.

11-ம் அத்தியாயம்.

கட்டிடம் கட்டுவதற்கும், இதர விஷயங்களுக்கும் நிலம் பெறுவது.

கட்டிடம் கட்டவும் வேறு காரியங்களுக்கும் நிலச்சுவான்தார் நிலம் ஸ்வீகரிப்பது.

95. அசல் அதிகாரவரம்புள்ள ஒரு பிரதான ஸிவில் கோர்ட்டார் நிலச்சுவான்தார் விண்ணப்பஞ் செய்துக் கொள்வதன்மேல், அதை கலெக்டர் எழுத்து மூலம் அங்கீகாரம் செய்தபின், தம்முடைய பூஸ்திதியின் அல்லது அந்த பூஸ்திதியிலுள்ள, கைப்பற்றும் நிலத்தின் நன்மைக்குச் சம்பந்தப்பட்டு நியாயமானதாகவும், போதுமானதாகவுமுள்ள ஏதோ ஒரு காரியத்துக்காவது, யாதொரு மத சம்பந்தமான - வித்தியா சம்பந்தமான அல்லது தர்மார்த்தமான காரியத்துக்காவது ஷை கைப்பற்றும் நிலம் முழுவதையோ அதன் பாகத்தையோ எடுத்துக்கொள்ள நிலச்சுவான்தார் விரும்புவதாய், கலெக்டருடைய அனுமதியின் மூலமாய் அந்தக் காரியம் நியாயமானதும், போதுமானதுமென்று தாங்கள் திருப்தியடைவதன் மேலும், கோர்ட்டுக்கு யுக்தமாகத் தோன்றுகிறபடி ஷை நிலச்சுவான்தார் எடுத்துக்கொள்ள அதிகாரம் கொடுத்து ரயத்துக்கு பூர்த்தியான பிரதிப் பலன் உட்பட, கோர்ட்டார் அங்கீகரிக்கும் ஷரத்துகளின் மேல் ஷை கைப்பற்று நிலம் முழுவதிலுமோ அல்லது அதில் தாங்கள் அங்கீகரிக்கும் யாதொரு பாகத்திலோ ரயத்துக்குள்ள பாத்தியதையை நிலச்சுவான்தாருக்கு விற்று விடும்படி ரயத்துக்குக் கட்டளையிடலாம்.

(2) பிரதிப்பலன் தீர்மானிக்கும் விஷயத்தில் நிலமெடுத்துக்கொள்வதற்கான 1894-ம் ௵ 1-வது சட்டம் 23-வது, 24-வது பிரிவுகளில் கண்ட நிபந்தனைகளை அனுசரித்து, கோர்ட்டார் கூடியமட்டில் நடந்துகொள்ளவேண்டும்; மேலும் பலவந்தட்டடுத்தி எடுத்துக்கொள்வதற்குப் பிரதிபலனாக நிலம் - ரயத்தினால் செய்யப்பட்ட சீர்திருத்தங்கள் இவைகளின் முழு மதிப்புக் கிரயத்தோடு, நூற்றுக்குப் பதினைந்து வீதம் சேர்க்க வேண்டும்.

12-ம் அத்தியாயம்.

நிலத்தை விட்டுவிடுவது.

நிலத்தை விட்டுவிடுவது.

96. (1) ஒரு ரெவினியு வருஷ முடிவிற்கு முன், ஒரு ரயத்து தன் நிலத்தையோ அதன் பாகத்தையோ ராஜிநாமா செய்ய அனுமதிக்கலாம்.

(2) அம்மாதிரியான ராஜிநாமா செய்தல் சர்க்காரால் அடிக்கடி தீர்மானிக்கும் தேதிகளில் நடைபெறலாம்.

13-ம் அத்தியாயம்.

கைப்பற்று நிலங்களை உட்பிரிவினை செய்வதும், பிறருக்கு மாற்றுவதும்.

கைப்பற்று நிலத்தைப் பிரிவினை செய்வது, நிலச்சுவான்தாரைக் கட்டுப்படுத்தும்.

97. கைப்பற்று நிலத்தை உட்பிரிவினை செய்வதற்கு ஆட்சேபிக்க, நிலச்சுவான்தாருக்கு அதிகாரமில்லை அதற்காக செலுத்தப்படும் நிலத்தீர்வையையும் வீதப்படி பங்கிட்டு, கூட்டுப்பங்குதாரர்களுடன் தனியாக ஒப்பந்தம் செய்து கொள்ளுவதையும் தடுக்க அதிகாரமில்லை.

அந்த ரெவினியு புலத்தை பிரிவினையோ, உட்பிரிவினையோ செய்வதையும், அந்த நிலத்திற்கோ, பகுதிக்கோ உள்ள நிலத்தீர்வையைப் பங்கிடுவதையும், நிலச்சுவான்தாரை ஒத்துக்கொள்ளும்படி கட்டாயப்படுத்த முடியாது.

கைப்பற்றுநிலத்தை பிறருக்கு மாற்றுவதால் ஏற்படும் பலன்.

98. கைப்பற்று நிலத்தையோ, அதன் ஒரு பகுதியையோ, ஒரு ரயத்து (அதில் தனக்குள்ள உரிமையை) மற்றொருவருக்கு மாற்றினால் அவ்விஷயத்தை நிலச்சுவான்தாருக்கு எழுத்து மூலம் அறிவித்துவிட வேண்டும். அப்படி நோட்டீஸ் தரும்வரையில் இருவரும் கூட்டாக அத்தேதி முதல் ஏற்பட்ட நிலத்தீர்வை பாக்கிக்கு உத்தரவாதமாவார்கள். இச்சட்டப்படி, ரயத்து மீது தொடரும் எல்லா விவகாரங்களும் யார் பேருக்கு மாற்றப்பட்டதோ அவர் பேரில் தொடரப்பட்டதைப்போலாகும்.

நிலச்சுவான்தார் நில மாற்றத்தைப் பற்றி அறிவிப்பது.

99. ஒரு நிலச்சுவான்தார், தன் நிலத்தை பூராவும் அல்லது பகுதியை, மற்றொருவர் பேருக்கு மாற்றிவிட்டால் அந்நிலச்சுவான்தாரும், தன் பேருக்கு மாற்றப்பட்டவரும் எழுத்து மூலமாக அம்மாறுதலைப்பற்றி, மாகாண சர்க்கார் விதிக்கும் விதிமுறைப்படி, மாற்றப்பட்ட நிலத்திலுள்ள பாயக்காரிகளுக்குத் தெரிவிக்க வேண்டி ஜில்லா கெஜட்டில் பிரசுரம் செய்யவேண்டும். அப்படி நோட்டீஸ் தரத்தவறினால், ஷை மாற்றப்பட்ட தேதிக்குப் பின், நிலத் தீர்வையை நிலச்

சுவான்தாருக்குக் கட்டிவிட்டால், நிலத்தை வாங்கினவர்க்குப் பாயக்காரி ஜவாப்தாரியல்ல. ரயத்தோ, பாயக்காரியோ, நிலச்சுவான்தார்மீது தொடங்கும் எல்லா விவகாரங்களும், நிலத்தை வாங்கினவர் மீது தொடர்ந்ததற்கு சமானமாய், அவரைப் பாதிக்கும்.

பாயக்காரியை நிலத்திலிருந்து நீக்கிவிடுவது.

கலெக்டர் வாரண்டு மூலம் பாயக்காரியை அப்புறப்படுத்துவது.

100. ஒரு பூஸ்திதியிலுள்ள சொந்த நிலத்தைச் சேர்ந்த யாதொரு பாயக்காரியிடத்திலிருந்து, ஒரு ரெவின்யு வருஷக்கடைசியில் பாக்கிவரவேண்டியிருந்து, அந்த பாக்கியைத் தீர்ப்பதற்கு போதுமான ஜப்தி செய்யப்பட்டவளவில் சொத்தில்லாவிட்டால் நிலச்சுவான்தாரோ அதிகாரம் பெற்ற அவருடைய ஏஜண்டோ இருவரில் ஒருவர் ஷை வளவில் தாமே பிரவேசித்து அதை ஸ்வாதீனம் செய்துக்கொள்ள தமக்கதிகாரம் கொடுப்பதற்கான வாரண்டுக்காகக் கலெக்டரிடத்தில் விண்ணப்பஞ் செய்துக்கொள்ளலாம். அப்படிப்பட்ட வாரண்டுக்காக விண்ணப்பஞ் செய்துக்கொள்ளும் நபருடைய எழுத்து மூலமான தெரிவிப்பை ஆஜர்ப்படுத்துவதன்மேல் ஷை வாரன்டைக் கொடுக்க வேண்டும். பாக்கிதாருடைய பெயரையும், நிலத்தின் விவரத்தையும், விஸ்தீர்ணத்தையும், பாக்கிக்காகவும், வட்டிக்காகவும், ஜப்தி செலவு ஏதாவதிருந்தால் அதற்காகவும், சேரவேண்டிய தொகை இவ்வளவென்பதையும், பாக்கி செலுத்தியிருக்கவேண்டிய தேதியையும் ஷை நிலத்தின் மேல் போதுமான ஜப்தி செய்யத்தக்க சொத்து இல்லையென்பதற்கு உறுதிமொழியையும் மேலே சொன்ன தெரிவிப்பில் கண்டெழுதவேண்டும். எந்த கச்சேரியிலிருந்து ஷை வாரன்ட் பிறப்பிக்கப்படுகிறதோ அந்தக்கச்சேரியில் அப்படிப்பட்ட அறிவிப்பை தாக்கல் செய்யவேண்டும்.

வாரன்டில் இருக்க வேண்டியதின்னதென்பது.

101. அந்த வாரன்டில் பாக்கிதாருடைய பெயரையும் சேரவேண்டிய மொத்த தொகையையும், நிலத்தின் விவரத்தையும், விஸ்தீர்ணத்தையும் காணவேண்டும்; மேலும், 15 தினத்துக்குள்ளாகத் தொகை செலுத்தப்படாவிட்டால் பாக்கிதார் (நிலத்தின்) ஸ்வாதீனத்திலிருந்து நீக்கப்படுவாரென்றும் அதில் கண்டிருக்கவேண்டும். இந்தப் பிரிவிற் சொல்லியிருக்கிற 15 நாள் காலவரையறையைக் கலெக்டரானவர், விசேஷ காரணங்களைக்கொண்டு அதிகப்படுத்தலாம்.

வாரன்டை நிறைவேற்றுவது.

102. இந்த வாரன்டை ஒரு போலீஸ் உத்தியோகஸ்த்தரிடத்தில் ஒப்பிவிக்க வேண்டும். அவர் இச்சட்டத்தின் 43-ம் பிரிவில் சொல்லியிருக்கிற விதமாக அதைச் சேர்ப்பிக்கவேண்டும். சேர்ப்பித்தது முதல் 15 தினத்துக்குள்ளாகவோ, அடுத்த முந்திய பிரிவின்படி கலெக்டர் அதிகப்படுத்தின காலவரையறைக்குள்ளாகவோ ஷை வாரன்டில்க் கண்ட தொகை செலுத்தப்படாமலிருந்து, அந்த வாரன்டை ரத்து செய்யவேண்டுமென்று பாக்கிதார் கலெக்டரிடத்தில் யாதொரு வியாஜ்ஜியமும் தாக்கல் செய்யாதிருக்கிற பக்ஷத்தில், அல்லது அப்படிப்பட்ட வியாஜ்ஜியம் பாக்கிதாருக்கு விரோதமாய்த் தீர்ப்பு செய்யப்பட்டிருக்கிற பட்சத்தில் ஷை போலீஸ் உத்தியோகஸ்த்தரானவர் நிலச்சுவான்தாருக்கு நில சுவாதீனமளிக்கவேண்டும்.

99-ம் பிரிவுபடி தரும் வாக்குமூலம் பொய்யானல் தண்டனை.

103. 100-ம் பிரிவுபடி வாரன்டு பிறப்பிக்கவேண்டுமென்று கொடுக்கும் மனுவில், நிலச்சுவான்தாரோ அவர் ஏஜென்டோ ஏதாவது முக்கிய விபரங்களில் ஏதாவது பொய் வாக்கு மூலம் கொடுத்திருந்தால், அப்படி, பொய் வாக்கு மூலம் கொடுப்பவர் 1-வது, 2-வது, மாஜிஸ்ட்ரேட் தண்டனை செய்ததின் பேரில், 500 ரூபாய் வரையில் அபராதத்துக்குள்ளாகவேண்டும்.

பாயக்காரி பாத்தியதை முடிவாவது.

104. ஸ்வாதீனம் ஒப்பிவிக்கப்பட்ட பிறகு பாக்கிதாருக்கு ஒரு மாதத்திற்குள்ளாக, சிவில் கோர்ட்டில் தாவாசெய்து. இவ்விவகாரங்களை ரத்துசெய்ய உத்தரவாகி பாயக்காரிக்கு ஸ்வாதீனம் திரும்பத் தரப்பெற்றாலன்றி, நிலத்தின்மீதுள்ள உரிமை சுதந்தரம்யாவும் போய்விடும்.

14-ம் அத்தியாயம்.

சர்வே செய்வதும், உரிமை அடங்கல் ஏற்படுத்துவதும், நிலத்தீர்வை பைசல் செயவதும்.

சர்வே செய்யும்படிக்கும் உரிமை அடங்கல் ஏற்படுத்தும்படிக்கும் உத்தரவு செய்வது.

105. (1) மாகாண சர்க்கார் ஒரு பூஸ்திதியை அல்லது உள்ளூர் நிலத்தை, இதற்குத் தக்கவரென்று கருதி உத்தரவிடப்பட்டு அதிகாரமுடைய ஒரு உத்தியோகஸ்தரையோ, உத்தியோகஸ்தர்களையோ, சர்வே செய்யவேண்டுமென்றும், உரிமைகளைப்பற்றிய அடங்கலைத் தயார் செய்யவேண்டுமென்றும் உத்தரவு செய்யலாம்.

(2) மாகாண சர்க்கார், எந்த தாவாவிலும் நியாயமென்று ஏற்படும் உத்தரவை, கீழ்க்கண்ட வழக்குகள் உள்பட உத்தரவிடலாம் :—

(a) நிலச்சுவான்தாரோ, பெரும்பான்மை ரயத்துகளோ மாகாண சர்க்கார் நியமிக்கும் தொகையைக் கட்டி, செலவிற்காக ஜாமீன் கொடுத்தோ, தொகையைக் கட்டியோ, அவ்வுத்தரவு பிறப்பிக்கும்படி மனுச்செய்யலாம்.

(b) நிலச்சுவான்தார் அல்லது ரயத்துகள் என்னும் முறைமையில் அனுபவிப்பதை பாதுகாக்கும்பொருட்டு, அப்படிப்பட்ட ஒரு அடங்கலை தயார்செய்வது அவசியமென்று ஏற்பட்டாலும், அல்லது ரயத்துகளுக்கும், நிலச்சுவான்தாருக்கும் ஏற்பட்டிருக்கிற அல்லது இனி ஏற்படக்கூடிய ஒரு பிரமாதமான விவாதமானது முடிவடையக்கூடியதாகுமென்று ஏற்பட்டாலும், மேற்கண்ட உத்தரவைக் கோரலாம்.

(c) அந்த இடம் பூஸ்திதியாயிருந்து சர்க்காருடைய நிர்வாகத்திலும் அல்லது கோர்ட் ஆவ் வார்ட்ஸ் மேல் விசாரணையின்கீழ் இருந்தாலும், மேற்படி உத்தரவைக் கோரலாம்.

(3) இப் பிரிவின்படிக்கான உத்தரவை சர்க்கார் கெஜட்டில் பிரசுரம் செய்வது, அந்த உத்தரவு கிரமமாய் செய்யப்பட்டிருக்கிறதென்பதற்கு முடிவான சாட்சியமாகும்.

106. முந்திய பிரிவின்படி உத்தரவு செய்யும்போது இன்ன விவரங்களை எழுதிவைக்கவேண்டுமென்று அந்த உத்தரவில் காணவேண்டும். அவைகளில் மற்ற விவரங்களில்லாமலாகிலும், மற்ற விவரங்களுடன் அடியில்கண்டவைகளெல்லாம் அல்லது அவைகளில் சில அடங்கியிருக்கவேண்டும் :—

எழுதி வைக்கவேண்டிய விபரங்கள்.

(a) நிலச்சுவான்தாரின் பெயரும், ரயத்தைச் சேர்ந்த நிலத்துக் குடையவரின் பெயரும்.

(b) ரயத்தின் பெயரும், பாயக்காரியின் பெயரும்.

(c) எந்த வகுப்பைச் சேர்ந்தவரென்பது, அதாவது ரயத்தா பாயக்காரியா வென்பது.

(d) ரயத்து, அல்லது பாயக்காரி வைத்துக்கொண்டிருக்கிற நிலம், கிராம ஸர்வே படத்தில் காட்டியிருக்கிறபடி எங்கே யிருக்கிறதென்பதும், அதன் விஸ்தீரணமும், எல்லைகளும்

(e) உரிமைப்பத்திரம் தயார் செய்யப்படும் காலத்திலே செலுத்தத்தக்க நிலத்தீர்வையும்.

(f) கலெக்டர் உத்தரவுபடியோ, ஒப்பந்தப்படியோ, வேறு எவ்விதமாகவோ, குத்தகையோ, நிலத் தீர்வையோ நிஷ்கரிஷை செய்யப்பட்டிருக்கிறதென்பது.

(g) நிலத்தின் சம்பந்தமாக பிரத்தியேகமான நிபந்தனைகளும் பாத்தியதைகளும்.

107. பதிவு செய்யப்பட்ட கூட்டு நிலச்சுவான்தார்களில் ஒருவர், அல்லது நிலச்சுவான்தார் செலவுக்குத்தக்க தொகையை கட்டியோ, ஜாமீன் கொடுத்தோ மனுக் கொடுத்தால், மாகாண சர்க்காரால் செய்யப்பட்டுள்ள விதிகளுக்குட்பட்டு கலெக்டர் ஒரு உத்தியோகஸ்தரையோ, உத்தியோகஸ்தர்களையோ, ஒரு பூஸ்திதியைப்பற்றியோ அதன் பாகத்தைப்பற்றியோ முந்திய பிரிவில் கூறியபடி விபரங்களைத் தீர்மானித்து எழுதும்படி உத்தரவிடலாம்.

நிலச்சுவான்தார் மனுவின்பேரில் விபரங்கள் குறிப்பது.

ஒரு பூஸ்திதியோ அதன் பாகமோ, குத்தகைக்கு விடப்பட்டோ, வேறொருவருக்கு மாற்றப்பட்டோ, ஸ்வாதீன அடமானம் வைக்கப்பட்டோ இருந்து, நிலச்சுவான்தாருக்கும், குத்தகைதாருக்கும், அஸைனிக்கும், அடமானதாருக்கும் மனுச்செய்யும் விஷயத்தில் தகராறு ஏற்பட்டால், குத்தகைதாரோ, அஸைநீயோ, அடமானதாரோ, ஷை மனுச்செய்ய உரிமையுள்ளவராவார்.

108. (1) உரிமை தஸ்தாவேஜு செய்கிற உத்தியோகஸ்தர், தமக்கு யுக்தமாகத் தோன்றுகிற விசாரணைசெய்த பிறகு பூஸ்திதிக்காவது அதன் பாகத்துக்காவது ஒரு பிரதம பத்திரத்தைப் பூர்த்திசெய்திருந்தால், மாகாண சர்க்காரால் இவ்விஷயமாய் ஏற்படுத்தும் விதிகளின்படி, 2 மாதத்திற்கு அந்த மசோதாவினுள்ள யாதொரு பதிவைப்பற்றியாகிலும் அதனின்றும் யாதொரு அம்சம் விட்டுவிடப்பட்டிருப்பதைப்பற்றியாகிலும் மேலேகண்டபடி பிரசுரித்திருக்கிற காலத்தில் கொண்டுவரப்படும் யாதொரு ஆட்சேபனையை வரப்பெற்றுக்கொண்டு அதைக்குறித்து ஆலோசனை செய்யவும் வேண்டும்.

பிரதம தஸ்தாவேஜை பிரசுரம் செய்வதும், அதன் ஆட்சேபனைகளை வரப்பெற்றுக்கொள்வதும்.

(2) குறிப்பிட்ட காலத்திற்குள் ஆக்ஷேபனை செய்யப்படாவிட்டால் அம் மசோதாவிலுள்ள யாதொரு பதிவைப்பற்றியும் செய்யும் ஆக்ஷேபனை கவனிக்கப்படாது. அந்த கால முடிவில் அம் மசோதாவின் பிரசுரம், அம் மசோதா சரியாக செய்யப்பட்டதென்பதற்கு தக்க சாக்ஷியமாகும்.

பிரதம பத்திரத்தின் ஆட்சேபனைகளைத் தீர்க்கும் முறை.

109. அம்மசோதாவிலிருக்கும், குறிப்பிற்குட்பட்ட ஆட்சேபனைகளை விசாரணைசெய்வதில், மாகாண சர்க்கார் அடிக்கடி இவ்விஷயத்தில் ஏற்படும் விதிகளின்படி, இச்சட்டத்திலுள்ள முறையை, கலெக்டர் விசாரிக்கும் வழக்குகளில் அனுசரித்துச் செய்யவேண்டும். அப்படிச் செய்யும் தீர்ப்பு, டிக்ரிக்குள்ள முழு அதிகாரமும் உடையதாகும்.

அம்மசோதாவிலுள்ள குறிப்பில், ஒரு ஆட்சேபனையால் பூஸ்திதிக் குடையவர், ரயத்தின் நிலத்துக்குச் சொந்தக்காரர், ஆகிய இவர்களின் உரிமையைக் குறிப்பதைப்பற்றியோ, அல்லது ரயத்து, பாயக்காரி இவர்களின் உரிமையைக் குறிப்பதைப்பற்றியோ, நிலத்தை நிலத்தீர்வையின்றியோ, குத்தகையின்றியோ குறிப்பதைப்பற்றியோ நியாயமான வழக்கு ஏற்பட்டால், உத்தியோகஸ்தர், மற்றும் தனக்கு சரியென்று ஏற்படும் விஷயங்களிலும் நடவடிக்கைகளை நிறுத்த, சிவில் கோர்ட்டுக்கு அந்த ஆட்சேபனைகளை அனுப்பலாம். அவ் வுத்தரவிற்கு 30 தினத்தில் ஆட்சேபித்த குறிப்பை தள்ளுபடிசெய்ய சிவில் கோர்ட்டில் மனுச் செய்யாவிட்டால், உத்தியோகஸ்தர் ஆட்சேபனையை வழக்கு இல்லாததுபோல் விசாரித்து முடிவுசெய்யலாம்.

முடிவான பத்திரம் பிரசுரம் செய்வது.

110. அப்பேர்ப்பட்ட ஆட்சேபனைகளை ஆலோசித்து பைசல்செய்வதன்மேல் உத்தியோகஸ்தர் முடிவான பத்திரத்தை முடித்து, மாகாண சர்க்காரால் ஏற்படுத்தப்படும் இவ் விஷயத்திற்கான விதிகளின்படி விளம்பரம் செய்விக்கவேண்டும். அப்படிப் பிரசுரம் செய்வது, இவ் வத்தியாயப்படி இந்தப் பத்திரத்தை தக்கபடி செய்ததற்கு சாக்ஷியமாகும். பிரசுரமானதிலுள்ள குறிப்புகள் அதற்கு மாறாக ருஜு செய்யும் வரையில் சரியென்று கொள்ளப்படும்.

ஆனால், அந்த உத்தியோகஸ்தருக்கு பிரதம ரிக்கார்டிலுள்ள ஆட்சேபனைகளின் மனுக்களையும் அப்பீல்களையும் தீர்மானிக்குமட்டும் விளம்பரம் செய்யாதிருப்பதால் அகாரணமான தாமதமாகுமென்று ஏற்பட்டால், முதலில் வழக்கோ, அப்பீலோ இல்லாதவற்றை பிரசுரம்செய்து, பின்னர் அவ்வப்போது வழக்கும், அப்பீலும் தாக்கலானவற்றைப் பிரசுரம் செய்யலாம்.

நிலத் தீர்வை பைசல் செய்வது.

111. (1) இவ்வத்தியாயத்தில் ஏதேனும் விவகாரங்களில் நிரந்தரப்படாத நிலத்திற்கு நிலத்தீர்வை தீர்மானிக்கும்படிச் சுவான்தாரோ, ரயத்தோ விண்ணப்பஞ்செய்தாலும், ஒரு ரயத்து தான் கட்டும் நிலத்தீர்வையைவிட அதிகமாக நிலம் வைத்திருந்தாலும், நிலத்தீர்வை கட்டவேண்டுமென்பது ஒப்புக்கொள்ளப்படும். எவ்வளவு என்பதைப்பற்றி வழக்கு ஏற்பட்டாலும், ரயத்தால் வைத்திருக்கப்பட்ட நிலத்திற்கு அவ்வுத்தியோகஸ்தர் நியாயமான ஒரு தீர்வையை நிர்ணயிக்கலாம்.

(2) இப்பிரிவுபடி, நிலத்தீர்வை தீர்மானிக்கும் விஷயத்தில், மாறுதலாக ருஜு செய்யுமட்டும் சாசுவத செட்டில்மென்டுபோது ஏற்பட்ட நிரந்தர நிலத்தீர்வையே நியாயமானதென்று கொள்ளவேண்டும். நிலத்தீர்வை வழக்குகளைத் தீர்மானிக்கும் விஷயத்தில் இச்சட்டத்தில் ஏற்பட்டிருக்கும் விதிகளுக்கு கலெக்டர் தக்க மதிப்புத் தரவேண்டும்.

உரிமை பத்திரம் ஏற்படுத்தும் உத்தியோகஸ்த்தர் தீர்மானத்தின் மேல் அப்பீல்.

112. (1) இவ்விஷயத்தின்கீழ் தீர்மானம்செய்யும் உத்தியோகஸ்தர்களின் தீர்ப்பின் அப்பீல்களை விசாரிக்க மாகாண சர்க்கார் ஒருவரையோ ஒருவருக்கு மேற்பட்டவரையோ, ஸ்பெஷல் கலெக்டர் அல்லது ஸ்பெஷல் கலெக்டர்களாக நியமிக்கலாம்.

(2) ஒரு உத்தியோகஸ்தரின் (இவ்வத்தியாத்தின் கீழுள்ள) தீர்ப்புக்கு மேல், ஸ்பெஷல் கலெக்டரிடம், அப்பீல் செய்துகொள்ளலாம். சிவில் ப்ரொஸீஜர் சட்டத்தின் நிபந்தனைகள் கூடுமானவரை இந்த அப்பீல்களுக்கு பிரயோகப்படுத்தலாம்.

நிலத் தீர்வைத் தொகை பைசல் எந்தக் கால முதல் செலாவணியாக வேண்டுமென்பது.

113. யாதொரு நிலத்தீர்வைத் தொகை, இந்த அத்தியாயத்தின்படி பைசல் ஆகிறதோ அந்தப் பைசல் ஏற்பாடானது, நிலத்தீர்வை முடிவான தஸ்தாவேஜு பிரசுரமானபின் அடுத்து வருகிற ரெவின்யூ வருஷ ஆரம்ப முதல் செலாவணியாகும். 16-ம் பிரிவின் 4-வது, 5-வது விதிகளில் ஏற்பட்ட நிபந்தனைகளைத் தவிர மற்றபடி தீர்வை மாற்றப்படாது.

உரிமைப் பத்திரம் தயார் செய்யும் காலத்தில் நடவடிக்கைகளை நிறுத்திவைப்பது.

114. 105-ம் பிரிவின்படி உத்தரவான பின் :—

(1) முடிவான ரிக்கார்டு பிரசுரமாகும்வரையில் நிலத்தீர்வையை மாற்ற, வழக்கையோ, விண்ணப்பத்தையோ எந்த கலெக்டரும் எடுத்துக்கொள்ளக்கூடாது. அந்த உத்தரவு செலவாணியாகும் எல்லையிலோ, பூஸ்திதியிலோ இருக்கும் ரயத்தின் அந்தஸ்த்தைத்

தீர்மானிக்க வழக்கையோ, விண்ணப்பத்தையோ எந்த சிவில் கோர்ட்டும், முடிவான ரிக்கார்டு பிரசுரமாகும்வரை ஏற்கக் கூடாது.

(2) நிலத்தீர்வையை மாற்றும்படிக்கோ, 106-ம் பிரிவில் கூறியிருக்கும் எந்த விஷயத்தை தீர்ப்பதற்கோ கலெக்டர் முன்போ, சிவில் கோர்ட் முன்போ, நடவடிக்கையிலிருக்கும் எந்த விவகாரத்தையும், தஸ்தாவேஜு ஏற்பாடுசெய்யவும் உத்தியோகஸ்தரிடம், ரெவின்யூ போர்டோ, ஹைகோர்ட்டோ, சரியென்று ஏற்பட்டால் மாற்றலாம்.

செலவுகள்.

115. இந்த அத்தியாயத்தின்படி உத்தரவு செய்யப்பட்டால் யாதொரு பூஸ்திதியிலாவது, எல்லையிலாவது இந்த அத்தியாயத்தில் கண்ட நிபந்தனைகளை அமுலுக்குக் கொண்டுவருவதற்காக சர்க்காருக்கு ஏற்படும் செலவையாகிலும் சர்க்கார் கட்டளையிடுகிற செலவின் ஒரு பாகத்தையாகிலும், அந்த எல்லை அல்லது பூஸ்திதியிலுள்ள ரயத்துகளும், நிலச்சுவான்தாரும் சர்க்காரால் சந்தர்ப்பங்களையெல்லாம் கவனித்து நிர்ணயிக்கப்படுகிற சங்கியா பரிமாணங்களின்படி கொடுக்கவேண்டும். அந்த செலவுத்தொகையில், யாதொரு நபர் செலுத்தவேண்டிய பாகத்தை நிலத்தீர்வை பாக்கியை எப்படி சர்க்கார் வசூலிக்கவேண்டுமோ அப்படி வசூலிக்கலாம்.

15-ம் அத்தியாயம்.

நிலச்சுவான்தாரின் சொந்த நிலத்தின் ரிகார்டு.

நிலச்சுவான்தாரின் நிலத்துக்கு பாதகமுண்டாகமாட்டாதென்பது.

116. 3-வது அத்தியாயத்திற் கண்டதெதனுலும் அனுபோக பாத்தியதை உண்டாகமாட்டாது. 4-வது அத்தியாயத்திற் கண்டதெதுவும் நிலத்துக்குடையவரின் சொந்த நிலமென்று சொல்லப்படும் கம்பத்தம், காஸ், சேரி, பண்ணை முதலியவற்றிற்கு பிரயோகப்படவுமாட்டாது.

நிலச்சுவான்தாரின் சொந்த நிலத்தை ஸர்வே செய்து, தஸ்தாவேஜு ஏற்படுத்த அதிகாரம்.

117. இம்மாகாண சர்க்கார் அவ்வப்போது, தங்களுக்கு இவ்விஷயத்தில் தக்கவரென்று படும் உத்தியோகஸ்தருக்கோ, உத்தியோகஸ்தர்களுக்கோ அதிகாரம் தரலாமென்று எண்ணினுல், குறிப்பிட்ட ஒரு எல்லையுள், மேற்கூறிய பிரிவின்படி, ஒரு நிலச்சுவான்தாரின் சொந்த நிலத்தை சர்வேசெய்து தஸ்தாவேஜு ஏற்படுத்த உத்தரவிடலாம்.

நிலச்சுவான்தார் அல்லது ரயத்தின் விண்ணப்பத்தின்மேல் நிலத்துக்கு தஸ்தாவேஜு ஏற்படுத்துதல்.

118. நிலச்சுவான்தாரின் சொந்த நிலமென்று சொல்லப்படுகிற யாதொரு நிலத்தின் விஷயத்திலே அவராவது, ரயத்தாவது விண்ணப்பஞ்செய்து கொள்வதன்மேலும், செலவுக்காக வேண்டிய தொகையை டெபாசிட்டாகக் கட்டுவதன் மேலும் கலெக்டர், மாகாண சர்க்காரால் இவ்விஷயத்தில் ஏற்படுத்தும் விதிகளுக்குட்பட்டு ஒரு உத்தியோகஸ்தரை பிரஸ்தாப நிலமானது நிலச்சுவான்தாரின் சொந்தமான நிலமா அல்லவா என்பதைக் கண்டறிந்து, தஸ்தாவேஜு ஏற்படுத்த உத்திரவிடலாம்.

சொந்த நிலத்துக்கு இன்ன விதமாக தஸ்தாவேஜு ஏற்படுத்தவேண்டுமென்பது.

119. ஒரு உத்தியோகஸ்தர் இதற்கு முந்திய இரண்டு பிரிவுகளின்படி பிரவர்த்திக்கும்போது 108-வது முதல் 110-வது பிரிவு வரையிலும், 112-ம் பிரிவிலும் கண்ட நிபந்தனைகளை பிரயோகப்படுத்த வேண்டும்.

நிலதுக்குடையவரின் சொந்த நிலமென்று தீர்மானிப்பதற்கான விதிகள்.

120. (1) தஸ்தாவேஜு செய்யும் உத்தியோகஸ்தர், நிலத்துக்குடையவரின் சொந்த நிலமென்று, கீழ்கண்டவகையில் ஏற்படுத்த வேண்டும்.

(a) இச் சட்டத் தொடக்கத்து தேதியிலிருந்து அடுத்து முன் 12 வருஷங்களாகத் தொடர்ந்து கூலிவேலைக்காரர்களோ, சொந்த வேலைக்காரர்களாலோ தன் சொந்த கால்நடை வகையராக்களைக் கொண்டு, கம்பத்தம், காஸ், சேரி, பண்ணை என்று கூறும் நிலத்தைப்பயிர் செய்திருப்பதாக ருஜு செய்யப்பட்ட நிலம்.

(b) கிராம சம்பிரதாயப்படி கிராமத்தாரால் நிலச்சுவான்தாரின் கம்பத்தம், காஸ், சேரி, பண்ணை எனப்பட்ட பயிரிடும் நிலம்.

(2) வேறு எந்த நிலத்தையாகிலும் நிலச்சுவான்தாரின் சொந்த நிலமென்று தீர்மானிக்கவேண்டுமானல் அந்த உத்தியோகஸ்தர் அவ்வவ்விடத்திய வழக்கத்தையும் அந்த நிலம்—முன்னமே சொந்த நிலமென்று குறிப்பிட்டு குத்தகைக்கு விடப்பட்டதா என்னும் விஷயத்தையும் கொண்டுவரப்பட்ட யாதொரு சாக்ஷியத்தையும் கவனிக்கவேண்டும். ஆனல் அந்த நிலம் சொந்த நிலம்தானென்று ருஜு செய்யப்படுகிறவரையில் அதை சொந்த நிலமாயிராததாகவே பாவிக்கவேண்டும்.

(3) யாதொரு நிலம் நிச்சுவான்தாரின் சொந்த நிலமா அல்லவா என்று ஒரு கேள்வி சிவில் கோர்ட்டு முன் எழுந்தால் இப் பிரிவில் கூறியுள்ள விதிகளை அதை நிலச்சுவான்தாரின் சொந்த நிலத்தைப் பற்றி தஸ்தாவேஜுசெய்யும் உத்தியோகஸ்தர்கள் பின்பற்றியதாய் கோர்ட்டார் கருதவேண்டும்.

16-ம் அத்தியாயம்.

அதிகாரமும் நடவடிக்கையும்.

ரெவினியூ கோர்ட்டாக கலெக்டர் விசாரணை செய்யத்தக்க வியாஜ்ஜியங்கள்.

121. (1) ரெவின்யூ கோர்ட்டாக அமர்ந்து கலெக்டர் கீழ்கண்ட வழக்குகளை விசாரித்துத் தீர்மானம் செய்யவேண்டும். அவை சம்பந்தமாக எந்த சிவில் கோர்ட்டுக்கும் அதிகாரம் கிடையாது :—

(a) ரயத்தால் கட்டப்படவேண்டிய நிலத்தீர்வை வீதத்தைப்பற்றிய வழக்குகள்.

(b) நிலத்தீர்வை பாக்கியை வசூலிப்பதற்காக வழக்குகள்.

(c) நிலத்தீர்வை கட்ட ஒப்பந்தப்படி ஏற்படும் வழக்குகள்.

(d) நிலத்தீர்வை குறைப்பதற்காக.

(e) ரசீது கொடாதிருப்பதற்கு தண்டனைத் தாவா.

(f) பட்டா பெற்றுக்கொள்ள.

(g) பட்டா அங்கீகரிக்கும்படி கட்டாயப்படுத்த.

(h) ரயத்தால், ஜப்தியை ரத்துசெய்யத் தொடர்ந்த வழக்குகள்.

(i) அநீதியான வசூலிப்பிற்கும் தப்பான ஜப்திக்கும் நஷ்ட ஈடுத் தாவா.

(j) கைப்பற்று நிலத்தை விற்பதாகக் கொடுத்த நோட்டீசை தள்ளும்படி செய்ய.

(k) சட்டத்துக்கு விரோதமான வரிகளுக்குத் தண்டனை.

(l) பிரதம தஸ்தாவேஜில், குறிப்பு ஏற்படுத்துவதைப்பற்றி.

(m) அன்னியரை அப்புறப்படுத்த.

(n) வேறுவிதமாய் ஏற்பாடாகாதவற்றிற்கு நஷ்ட ஈடு.

மேற்கண்ட வழக்குகளில் அப்பீலும், 2-வது அப்பீலும்.

(2) இதற்கு முந்திய பிரிவின் உட் பிரிவில் சொல்லிய வழக்குகளுக்கு ரெவின்யூ கோர்ட்டின் தீர்ப்பு மேல் ஜில்லா கலெக்டருக்கு அப்பீல்செய்யவும் ரெவின்யூ வழக்கை போர்டாருக்கு, (கலெக்டர் அனுமதி தந்த அப்பீல்களின்) மேல் அப்பீல்செய்ய, உரிமை யுண்டு.

(3) பிரத்தியேக நியாயாதிபதிகளின் தீர்ப்பே முடிவானது.

(4) (a) " ரெவினியூ வழக்கு போர்டு போர்ட்பார் ரெவின்யூ கேஸஸ் " என்று, மாகாண சர்க்கார் பிரத்தியேக நியாயாதிகளை ஏற்படுத்த வேண்டும். இவ்வத்தியாயத்தின்படி ஏற்படும் வழக்குகளில் அதுதான் கடைசி அப்பீல், ரிவிஷன் கோர்ட்டாகும்.

(b) ரெவின்யூ வழக்கு போர்டுக்கு ஒரு பிரசிடென்டும், மாகாண சர்க்காரால் மூவருக்கு மேல்படாமல் கமிஷனர்களும் நியமனம் செய்யப்படலாம்.

(c) இந்த போர்ட் நிரந்தரமான கார்பொரேஷனாகவும், நிரந்தர தொடர்ச்சி உரிமையும், பொது முத்திரையும் உடையதாகவும் இருக்கும்.

(d) அந்த போர்டின் பிரசிடென்ட் :—

(1) 15 வருஷ அனுபவமுள்ள பிளீடராகவோ அட்வகேட்டாகவோ இருக்கவேண்டும்.

(2) சென்னை ஸ்மால் காஸ் கோர்ட் முதல் நீதிபதி அல்லது ஜில்லா நீதிபதி பதவிக்குக் குறையாமல் வகித்தவராக இருக்கவேண்டும்.

(3) ரெவின்யூ வழக்கு போர்டின் கமிஷனராக 2 வருஷத்துக்குக் குறைவுபடாமலிருக்கவேண்டும்.

(e) ரெவின்யூ வழக்கு போர்டின் கமிஷனர் :—

(1) பிளீடராகவோ, அட்வகேட்டாகவோ 10 வருஷ அனுபவமுடையவராகவோ,

(2) சப்-ஜட்ஜோ, சென்னை ஸ்மால் காஸ் கோர்ட்டின் ஒரு நீதிபதியாகவோ, அந்த அந்தஸ்திற்கு குறைவுபடாதவராகவோ,

(3) இச் சட்டப்படி 5 வருஷமாகிலும் கலெக்டராக இருந்த ஒருவராகவோ, இருக்கவேண்டும்.

(5) ஒரு கமிஷனரை, ப்ரசிடெண்டின் வேலையைச் செய்யும்படி மாகாண சர்க்கார் உத்தரவிடலாம்.

(6) பிரசிடெண்டின் ஸ்தானம் காலியாயிருப்பதாலோ, அவர் ரஜாவில் இருப்பதாலோ, கமிஷனர் ரஜாவில் இருப்பதாலோ ரெவினியூ வழக்கு போர்டின் எந்த வேலையும் செல்லத்தகாததாகாது.

(7) (a) பிரசிடென்டு தவிர ஒவ்வொரு கமிஷனரும் உத்தியோகமான தேதி முதல் மூன்று ஆண்டுகள் உத்தியோகம் வகிக்க சுதந்தரமுண்டு.

(b) பிரசிடென்டு உத்தியோகமான தேதி முதல் ஆறு வருஷம் உத்தியோகம் வகிக்க சுதந்தரமுண்டு.

ஆனால், பிரசிடென்டான தேதியில், தான் கமிஷனராயிருந்தால், கமிஷனர் வேலை பார்க்கும் காலம் வரையில் தான் பிரசிடென்டாக இருக்கலாம்.

(c) விலகும் கமிஷனரோ, பிரசிடென்டோ, வேறுவிதமாய் உத்தியோகம் வகிக்ககூடியவரானால், மறுபடியும் வேலைக்கு வர லாயக்குள்ளவராவார்.

(8) பிரசிடென்டோ கமிஷனரோ தங்கள் வேலைக்கு, தங்கள் கவனம் காலம் பூராகவும், செலுத்தவேண்டும். மாகாண சர்க்கார் உத்தரவில்லாமல் அவர்கள், வேறு வேலையிலோ, வியாபாரத்திலோ, தொழிலிலோ இறங்கக் கூடாது. ஸ்தலஸ்தாபனங்களில் அங்கத்தினராகவும் இருக்கக் கூடாது. பொதுத்தேர்தலுக்கும் நிற்கக் கூடாது.

(9) (a) மாகாண சர்க்காரால் நிர்ணயிக்கப்படும் சம்பளத்தை பிரசிடென்டும் ஒவ்வொரு கமிஷனரும் பெறலாம்.

(b) பிரசிடென்ட், கமிஷனர் ஆகிய, இவர்களின் உத்தியோக நிபந்தனைகளைப் பற்றியும், அவர்கள் பிரயாணச் செலவு முதலிய செலவுகளைப் பற்றியும் ஏற்பாடுசெய்ய மாகாண சர்க்கார் விதிகள் செய்யலாம்.

(10) போர்டின் தலைமை ஸ்தலம் சென்னையிலிருக்கவேண்டும். சென்னைக்கு வெளியே போய் வேலைபார்க்க, மாகாண சர்க்கார் பிரசிடென்டையும் கமிஷனரையும் அனுமதிக்கலாம்.

(11) இச் சட்டப்படிக்கும், இதன் ஷெட்யூல்படிக்குமுள்ள ரிவிஷன் மனுக்களையும், அப்பீல்களையும், போர்டார் விசாரித்துத் தீர்ப்பளிக்க வேண்டும்.

(12) இந்தச் சட்டப்படி அதிகாரம் செலுத்தும் ரெவின்யூ கோர்ட், ரென்ட் கோர்ட், இவைகளில் போர்டார் பொதுப் பார்வையிடலாம்.

(13) போர்டிலும், அதன் கீழுள்ள கோர்ட்டுகளிலும் வேலை நடத்தும் முறைகளைப்பற்றிய விதிகளை மாகாண சர்க்கார் ஏற்படுத்தலாம்.

(14) மாகாண சர்க்காரின் அதிகாரத்திற்குட்பட்டும் மாகாண சர்க்கார் ஏற்படுத்தும் விதிகளுக்குட்பட்டும்—

(a) போர்டுக்கு வேண்டிய உத்தியோகஸ்தர்கள், வேலைக்காரர்கள், இவர்களின் தொகை, பெயர், சம்பள விகிதம், படித்திறம், இதர வெகுமானங்கள் முதலியவற்றைப்பற்றி பிரசிடென்டு அவ்வப்போது தீர்மானிக்கலாம்.

(b) குறிக்கப்பட்ட உத்தியோகஸ்தர்களை உத்தியோகத்திற்கு நியமிக்கவும், மாற்றவும், அபராதம் விதிக்கவும், குறைக்கவும், தற்காலிகமாக வேலையிலிருந்து நீக்கவும், அஜாக்கிரதையாலோ, லாயக்கில்லாததாலோ, வேலை கவனிக்காததாலோ தப்பு நடத்தைக்காகவோ, விதிகளை மீறியதற்காகவோ ஒழுங்கீனமாக இருந்ததற்கோ, தக்க காரணங்களால் குற்றமேற்பட்டால், பிரசிடென்டுக்கு, மேற்கூறியபடி செய்யஅதிகாரமுண்டு.

(c) அவர்களின் உத்தியோக காலத்தை அதிகப்படுத்த சிபார்சும் செய்யலாம்.

(15) (1) இச்சட்டத்திலும், ஷெட்யூலிலும் சொல்லியுள்ள மனுக்களையும், விண்ணப்பங்களையும் விசாரிக்கும் கலெக்டரும், ஒரு ஜில்லா கலெக்டரும், அதன்மேல் அப்பீலும், ரிவிஷனும் விசாரிக்கும் "ரெவினியூ வழக்கு போர்டு" அப்போப்பட்ட மனுக்களையும், விண்ணப்பங்களையும், ரெவின்யூ கோர்ட்டுபோல விசாரணை செய்யலாம்.

மேற்படியாக மனுக்களும், விண்ணப்பங்களும் கொண்டுவரக்கூடிய விஷயங்களைப்பற்றி ஏற்படும் வழக்குகளை எந்த சிவில் கோர்ட்டும் விசாரணை செய்யக்கூடாது.

(2) முதல் உட்பிரிவில் கூறிய விண்ணப்பங்களும், வழக்குகளில் செய்யப்பட்ட தீர்ப்புகளும், டிக்ரிக்களும், ஷெட்யூலில் கூறியபடி அப்பீலுக்கு உரியவையாகும்.

(3) ரெவின்யூ கோர்ட் அதிகாரத்துக்கு உட்பட்ட இச்சட்டப்படி ஏற்படும் விவகாரங்களிலும் வழக்குகளிலும், ரெவின்யூ கோர்ட், அப்பீல் கோர்ட், ரிவிஷன் கோர்ட் முதலியவற்றின் தீர்ப்பு; சிவில் கோர்ட்டில் அதே விஷயம் எந்தக் கக்ஷிக்காரருக்கு மேற்படி தீர்ப்பு ஏற்பட்டதோ அவர்களுக்கும் அவர்கள் மூலம் உரிமை கொண்டாடுபவர்களுக்கும், வழக்கோ, விவகாரமோ, அதே விஷயத்தைப்பற்றி இருந்தால், ஷை தீர்ப்பு முடிவானதும், பந்தப்படுத்தக்கூடியதாயும் இருக்கும்.

(4) சிவில் கோர்ட் அதிகாரத்துக்குட்பட்ட விவகாரங்களில் ஏற்படும் தீர்ப்பு, அந்தக் கக்ஷிக்காரர்களுக்கும், அவர்கள் மூலம் உரிமை கொண்டாடுபவர்களுக்கும், அந்த விஷயம் தீர்மானமாக வேண்டியதாக ரெவின்யூ கோர்ட், அப்பீல் கோர்ட், ரிவிஷன் கோர்ட் முன்போ, வழக்காகவோ, நடவடிக்கையிலோ இருந்தால், சிவில் கோர்ட்டு தீர்ப்பே அவர்களைக் கட்டுப்படுத்தும்.

(16) ரெவினியூ வழக்கு போர்டுக்கு அப்பீலோ, ரிவிஷனோ செய்ய 60 நாள் கால நிர்ணயமாகும்.

(17) இச்சட்டத்திற்கும், அதிலுள்ள விதிகளுக்கும் விரோதமாக இல்லாத 1908-ம் வருஷத்து ஸிவில் ப்ரொஸீஜர் சட்டத்தின் நிபந்தனைகள், வழக்குகளுக்கும் விண்ணப்பங்களுக்கும், அப்பீல் மற்றும் இச்சட்டப்படியுள்ள இதர விவகாரங்களுக்கும் செல்லும்.

(18) ரெவின்யூ கோர்ட்டால் கட்டளையிடப்பட்டு பணம் செலுத்தும்படி உத்தரவான தீர்ப்பும், உத்தரவும், விசாரணைக்கு சிவில் கோர்ட்டுக்கு மாற்றலாம்.

(19) (1) ஒரு கலெக்டர் முன் விசாரிக்கக்கூடிய ஒரு வேலை உசிதமென்று ஏற்பட்டால் எழுத்து மூலமான உத்தரவால் ஒரு ஜில்லா கலெக்டர் அவ்வேலையை தக்கபடி வழங்கவும், அதேபோல ஒரு கலெக்டர் முன்னுள்ளதை தான் விசாரித்து தானே முடிவு செய்யவும் அல்லது எழுத்து மூலம், வேறொரு கலெக்டர் விசாரிக்கும்படியும் செய்யலாம். அப்படி ஜில்லா கலெக்டர் ஒரு வழக்கையோ விவகாரத்தையோ வரவழைத்து தீர்ப்புச் செய்தால் அது கலெக்டர் செய்த தீர்ப்பைப்போல அப்பீலுக்கும் ரிவிஷனுக்கும் ஏற்றுக்கொள்ளப்படும்.

(2) ஜில்லா கலெக்டர் தன் கீழுள்ள கலெக்டரிடன் மேற்கூறிய 1-வது உட்பிரிவுபடி ஏற்படுத்தும் உத்தரவு போல் ரெவினியூ வழக்கு போர்டும் கேஸ்ஸும், எல்லா ஜில்லா கலெக்டர்களிடமும் வழக்குகளைக்கொடுக்கவும் வரவழைத்துக்கொள்ளவும், அதிகாரமுண்டு.

(20) ஒரு விஷயத்தில் கலெக்டர் தீர்ப்புக்கு மேல் அப்பீல் இல்லாதபோது, "ரெவினியூ வழக்கு போர்டு" அக்கலெக்டரிடமிருந்து அவ்விவகாரத்தின் தஸ்தாவேஜுகளை வரவழைக்கலாம். சட்ட ரீதியாக தனக்கில்லாத அதிகாரத்தை அக்கலெக்டர் செலுத்தியிருப்பதாக ஏற்பட்டாலும், அல்லது தனக்கு இருக்கும் அதிகாரத்தை செலுத்தாவிட்டாலும், அப்படி அதிகாரம் செலுத்தியதில் உண்மைக்குப் பாதகமாக சட்ட வரம்பை மீறிவிட்டதாகவும் அப்படித் தவறியதால் பெரிய அநீதி ஏற்பட்டிருப்பதாகவும் தெரிந்தால். கக்ஷிக்காரர்கள் வந்திருந்தால் விசாரித்ததின் பின் தங்களுக்கு யுக்தமென்று தோன்றுகிறபடி "ரெவினியூ வழக்கு போர்டு" தக்க உத்தரவிடலாம்.

(21) யாதொரு நபருக்கு ஒரு சுதேச எல்லைக்குள், இச்சட்டப்படி செய்யப்படும் அசல் வழக்கு விவகாரங்கள் முதலியவற்றில் எல்லாவற்றையும் அல்லது சில வகையானதைமட்டும் விசாரிக்க கலெக்டருக்குள்ள எல்லா அல்லது சில அதிகாரத்தை மாகாண சர்க்கார் கொடுக்கலாம். அப்படித் தரப்பட்ட அதிகாரத்தைத் திரும்பவும் பெற்றுக்கொள்ளலாம்.

அப்படி, அவரால் செய்யப்பட்ட தீர்ப்பு, கலெக்டரால் செய்யப்பட்ட தீர்ப்பைப்போலவே அப்பீல், ரிவிஷன் முதலியவற்றிற்கு லாயக்குள்ளதாகும்.

(22) ஜில்லா கலெக்டர் அதிகாரம் பூராவும் அல்லது சிலதைமட்டும் செலுத்த அதிகப்படியாக ஒரு உத்தியோகஸ்தரை மாகாண சர்க்கார் நியமிக்கலாம்.

(23) ஷெட்யூல் ஜில்லாக்களாகிய விசாகபட்டணம் கோதாவரி முதலிய விடங்களில், இச்சட்டத்திற்காக சர்க்கார் ஏஜெண்டும், உதவிஏஜெண்டும், ஜில்லா கலெக்டரும், கலெக்டருமாக கொள்ளப்படுவார்கள்.

(24) (1) இச்சட்டப்படி கலெக்டர் அதிகாரத்துக்குட்பட்ட வழக்குகளும், விண்ணப்பங்களும், விவகாரங்களும், அவைகள் எந்த கைப்பற்று நிலம் அல்லது அதன் பாகத்தைப்பற்றியதோ, அது இருக்கும் ரெவின்யூ டிவிஷனில் கொண்டுவரவேண்டும்.

(2) ஜில்லா கலெக்டரின் உத்தரவுக்குத் தவிர மற்றபடி ஒரு கலெக்டர் இச்சட்டப்படியுள்ள வழக்குகளையும், மனுக்களையும், விவகாரங்களையும் ஜில்லாவில் எந்த இடத்திலாவது அமர்ந்து தீர்ப்பு செய்யலாம்.

(25) கீழ்வரும் பிரிவுக்கு உட்பட்டு தாக்கல் செய்யப்பட்ட ஒவ்வொரு வழக்கும், அப்பீலும், விண்ணப்பமும், இச்சட்டத்தில் கூறியபடி கால நிர்ணயம் தவறியிருந்தால், அதை ஆட்சேபணையாக எதிரி கூறாவிட்டாலும், தள்ளுபடி செய்யப்படும்.

(26) மேற்கூறிய பிரிவில்க் கண்ட நிபந்தனை தவிரவும், 1908-ம் வருஷத்து இந்தியாவின் லிமிடேஷன் சட்டத்தில், 6, 7, 8, 9, 19, 20-வது பிரிவுகள் தவிரவும் மற்றவையெல்லாம் எல்லா வழக்குகளுக்கும், அப்பீல்களுக்கும் விண்ணப்பங்களுக்கும் செல்லும்.

(27) (1) யாதொரு நபர் தனக்கு பாதகமேற்பட்டதென்கிறாரோ அவர்.

(a) இச்சட்டத்தின்படிக்கோ, அதனால் ஏற்பட்ட விதிப்படியோ தொடரப்பட்ட வியாஜ்ஜியங்களாலும்.

(b) அஜாக்கிரதையாலோ, விதிகளின் நிபந்தனைகளைத் தவறியதாலோ, பாதகம் ஏற்பட்டால் அதன் பரிகாரத்திற்காக கலெக்டர் முன் நஷ்ட ஈடு தாவா செய்துகொள்ள சுதந்தரமுண்டு.

(2) மேற்கூறிய உட்பிரிவுபடி, ஒரு கலெக்டர் முன் நஷ்ட ஈடு தாவா செய்த பின், அதே விஷயத்திற்கு சிவில் கோர்ட்டு முன் தாவா செய்ய முடியாது.

(28) (1) நிலச்சுவான்தாரால் செய்யவேண்டுமென்று இச்சட்டப்படி அதிகாரம் தரப்பட்டோ வேண்டப்பட்டோ இருக்கும், ரெவினியூ வழக்கு போர்டு, ஜில்லா கலெக்டர், கலெக்டர் அல்லது உத்தியோகஸ்தர் முன்பு வரும் யாதொரு வேலே, விண்ணப்பம், முதலியன பற்றி நிலச்சுவான்தாரின் கையெழுத்துள்பட எழுத்து மூலம் அவர் ஏஜெண்டுக்கு அதிகாரம் தரலாம்.

(2) இச்சட்டப்படி நிலத்துக்குடையவரின்மேல் சேர்ப்பிக்க வேண்டிய ஒவ்வொரு நோட்டீஸும் மேற்கூறியபடி அதிகாரம் பெற்ற ஏஜென்டுக்குச் சேர்ப்பித்து விட்டால், நிலச்சுவான்தாருக்கு சேர்ப்பித்ததாகும்.

(3) நிச்சுவான்தாரால் கையெழுத்திட வேண்டிய ஒவ்வொரு பத்திரமும், நிலச்சுவான்தாரின் எழுத்து மூலமான உத்தரவின்பேரில் அவர் ஏஜெண்டு கையெழுத்திடலாம், சர்டிபிகேட்டும் கொடுக்கலாம்.

கலெக்டரால் அதிகாரம் செலுத்தக்கூடிய விண்ணப்பங்கள்.

122. (1) கீழ்க்கண்ட விண்ணப்பங்களில் சிவில் கோர்ட்டார் அதிகாரம் செலுத்தும் கலெக்டரே தீர்ப்புச்செய்ய அதிகாரம் உண்டு.

(a) ஊதியத்திற்கு நிலத்திலுள்ள கற்பாறை வெட்டுவதாய் ஒரு ரயத்து நோட்டீஸ் கொடுத்து நிலத்தீர்வையை சரிப்படுத்தும்படி வேண்டும் விண்ணப்பம்.

(b) நிலத்தீர்வையை நிர்ணயித்து உத்தரவிடும்படி விண்ணப்பம்.

(c) நிலத்தீர்வையை டிபாசிட் செய்ய உத்தரவு தரும்படி கோரும் விண்ணப்பம்.

(d) மாசூலை எடுத்துக்கொள்ளவோ, பங்கிடவோ மனு.

(e) கலெக்டர் கச்சேரியிலோ, இதர கச்சேரியிலோ பட்டாவை தாக்கல் செய்ய மனு.

(f) ஜப்தி செய்த பொருள் கெட்டுப்போனதற்கு ஈடு செய்ய உத்தரவளிக்க மனு.

(g) ஜப்தி செய்யப்பட்ட பொருளைப்பற்றி மூன்றும் பேர்வழி செய்யும் மனு.

(h) மோசகரமாக ஜப்தி செய்யப்பட்ட பொருளைத் திரும்பித் தரும்படி உத்தரவளிக்க மனு.

(i) ஜப்தி செய்யப்பட்ட பொருளைத் திரும்பிப்பெற மனு.

(j) ஜப்தி செய்யப்பட்ட பொருளை விற்க உத்தரவு தர மனு.

(k) பாக்கிதாரான ரயத்து கைப்பற்று நில விற்பனையை ரத்து செய்ய மனு.

(l) நில ஸ்வாதீனம் பெற்றுக்கொள்ள வாரண்டு பிறப்பிக்க மனு.

(m) ஸ்வாதீனம் செய்வதற்கு காலம் அதிகமாக்கவேண்டும் விண்ணப்பம்.

(2) வேறு விதமாய் இப்பிரிவில் கூறியபடிக்கன்றி மேற்கூறிய 1-ம் உட்பிரிவில் கூறிய விஷயங்களில் கலெக்டர் தீர்ப்பு முடிவானதாகும்.

(3) கீழ்க்கண்ட மனுக்களில் கலெக்டர் தீர்மானம், ஜில்லா கலெக்டருக்கு அப்பீலுக்குட்பட்டு, அவர் தீர்ப்பே முடிவானதாகும்.

(a) நிலத் தீர்வை சரி செய்ய மனு.

(b) நிலத்தீர்வை சேர்க்க உத்தரவு தரும்படி மனு.

(c) மாசூலை எடுத்துக்கொள்ளவோ, பகிர்ந்துகொள்ளவோ மனு.

(d) பாக்கிதாரான ரயத்து, விற்பனையை ரத்து செய்யவேண்டும் மனு.

(e) நிலத்தை ஸ்வாதீனம் செய்ய வாரண்டு வேண்டும் மனு.

(4) இச்சட்டப்படி நீர்ப்பாசன மராமத்து கட்டு வேலைகளைப் பற்றிய மனுக்கள் ஜில்லா கலெக்டரால் தீர்மானிக்கப்படும். அதன்மேல் செய்யும் விண்ணப்பங்களில் ரெவினியூ வழக்கு போர்டுக்கு அப்பீல் செய்யலாம். அதன் தீர்ப்பே முடிவானதாகும்.

(5) சர்க்காரால் நியமிக்கப்பட்ட ஸ்பெஷல் கலெக்டருக்கு, இச்சட்டப்படியுள்ள நிபந்தனைகளின்படி செய்யும் உரிமைப்பத்திரங்களைப்பற்றிய விண்ணப்பங்கள் செய்யப்படவேண்டும். அவர் தீர்ப்பிலிருந்து ரெவினியூ வழக்கு போர்டுக்கு நிலத்தீர்வை நிர்ணயிப்பதைப்பற்றியும் மற்றவை பற்றியும் அப்பீல் செய்யலாம்.

121, 122-வது பிரிவின் அப்பீலுக்கு கால நிர்ணயம்.

123. மேற்கூறிய இரண்டு பிரிவின் கீழ் வரும் அப்பீலுக்கு, கால நிர்ணயம். அப்பீல் செய்யப்பட்ட தீர்ப்பு, உத்தரவு தேதியிலிருந்து தொடங்கும்: அதாவது.—

(a) அப்பீல் ஜில்லா கலெக்டருக்கானல், 30 தினம்.

(b) ரெவினியூ வழக்கு போர்டுக்கு அப்பீல் 60 நாள்.

மேற் பார்வை.

124. ரெவின்யூ அதிகாரிகளும், ரெவின்யூ கோர்ட்டுகளும்—(1) ரெவினியூ வழக்கு போர்டுக்கு கீழ்ப்பட்டு, அவைகளின்மேல் பொது மேல்பார்வையும் அதிகாரமும் செலுத்த உரிமையுண்டு.

(2) ரெவினியூ வழக்கு போர்டு மேற்பார்வைக்குட்பட்டு இச் சட்டத்தின் காரணத்திற்காக, ஒரு ஜில்லா கலெக்டர், ஜில்லாவிலுள்ள மற்ற ரெவின்யூ அதிகாரிகள் மேலும், ரெவின்யூ கோர்ட்டு மீதும் அதிகாரம் செலுத்தலாம்.

வேலே வழங்குவது.

125. (1) ரெவினியூ வழக்கு போர்டு ஜில்லா கலெக்டர் எழுத்து மூலம் தமக்கு யுக்தமென்று தோன்றுகிறபடி தம் அதிகாரத்துக்குட்பட்ட கலெக்டருக்கோ, ரெவின்யூ கோர்ட்டுக்கோ வேலையை வழங்கலாம்.

(2) ரெவினியூ வழக்கு போர்டு அல்லது கலெக்டர் தம் அதிகாரத்துக்குட்பட்ட கலெக்டரிடமோ, ரெவின்யூ கோர்ட்டிடமோ இருக்கும் வழக்குகளை வாபீஸ் வாங்கி, அவர்களேயாகிலும் அல்லது எழுத்து மூலம் உத்தரவின்பேரில் மற்ற கலெக்டராகிலும், ரெவின்யூ கோர்ட்டாகிலும் விசாரிக்கும்படி உத்தரவிடலாம்.

ரெவின்யூ கோர்ட், ரெவின்யூ அதிகாரிகளின் நடவடிக்கைகளை வரவழைத்து புனராலோசனை செய்ய அதிகாரம்.

126. (1) ரெவினியூ வழக்கு போர்டு தம் கீழுள்ள ரெவின்யூ கோர்ட்டோ, ரெவின்யூ அதிகாரியோ அவர்கள் முன் நடவடிக்கையில் இருக்கின்ற வழக்குகளேயோ, தீர்மானமான வழக்குகளேயோ அவ்வற்றின் தஸ்தாவேஜுகளேயோ எப்போதாவது வரவழைக்கலாம்.

இவ்விஷயத்தைப்பற்றி, மாகாண சர்க்காரால் ஏற்படுத்தப்படும் நிபந்தனைகளுக்கும், இச்சட்டப்படிக்குள்ள விதிகளுக்கும், இச்சட்டப்படி கலெக்டரால் விசாரிக்கப்படும் எல்லா வழக்குகளுக்கும் சிவில் ப்ரொஸீஜர் சட்டத்தின் நிபந்தனைகள் பிரயோகிக்கப்படும்.

(2) தன் அதிகாரத்திற்குட்பட்ட ரெவின்யூ கோர்ட்டோ, ரெவின்யூ அதிகாரியோ விசாரித்த அல்லது தீர்மானித்த வழக்கின் தஸ்தாவேஜுகளை ஒரு ஜில்லா கலெக்டர் வரவழைக்கலாம்.

(3) அப்படி ஜில்லா கலெக்டரால் வரவழைக்கப்பட்ட தஸ்தாவேஜுகளில் எதிலாவது, அதில் எடுத்துக்கொள்ளப்பட்ட நடவடிக்கையிலோ, அல்லது உத்தரவிலோ தீர்ப்பிலோ மாற்றமோ, ரத்தோ செய்ய வேண்டுமென்று அவருக்குத் தோன்றினால் தன் அபிப்பிராயத்துடன் அந்த தஸ்தாவேஜுகளை அவர் ரெவினியூ வழக்கு போர்டுக்கு அனுப்ப வேண்டும்.

(4) 1-ம் உட்பிரிவுபடி தங்களாலேயே வரவழைக்கப்பட்ட தஸ்தாவேஜுகளை பரிசீலனை செய்யப்பட்டதாலோ அல்லது 3-ம் உட்பிரிவுபடி தங்களுக்கு அனுப்பப்பட்ட தஸ்தாவேஜுகளோ ரெவினியூ வழக்கு போர்டின் அபிப்பிராயப்படி, அந்த நடவடிக்கைகளிலோ, உத்தரவிலோ, தீர்ப்பிலோ பிரவேசிப்பது அவசியமென்று ஏற்பட்டால், அப்படியே உத்தரவிடலாம்.

(5) ஹைகோர்ட்டார் ரிவிஷன் அதிகாரத்தில் அவ்வப்போது சட்டத்துக்கேற்றபடி சிவில் கோர்ட் நடவடிக்கை, உத்தரவு, தீர்ப்பு இவைகளில் பிரவேசிப்பதைப்போல, தஸ்தாவேஜுகளை பரிசீலனை செய்ததின் பின், ரெவினியூ வழக்கு போர்டு அந்நடவடிக்கைகளிலோ, உத்தரவிலோ, டிக்ரியிலோ பிரவேசிக்கவேண்டுவது அவசியமென்று நினைத்தால் அவ்வழக்கை விசாரிக்க ஒரு நாளைத் தீர்மானித்து, தீர்மானித்த தினத்திலோ மறு நாளோ, தள்ளிவைத்த தினத்திலோ தங்களுக்கு சரியென்று ஏற்பட்ட உத்தரவைச் செய்யலாம்.

(6) இப்பிரிவின்படி அதிகாரம் செலுத்துகையில் மேற்கூறியபடி விசாரணைக்கென்று ஒரு தினம் குறிப்பிட்டாலன்றி எந்தக் கக்ஷிக்காரருக்கும் ஒரு தினத்தில் போர்டார் தன்னை விசாரிக்கவேண்டும் என்ற உரிமை கொண்டாட முடியாது.

வழக்கையோ நடவடிக்கையையோ ஹைகோர்ட்டு விசாரணைக்கு அனுப்பல்.

127. ரெவின்யூ கோர்ட்டு முன்போ, ரெவினியூ வழக்கு போர்டு முன்போ இருக்கும் வழக்கோ, நடவடிக்கையோ எழுத்து மூலம் குறிக்கப்படும் காரணங்களால் ரெவினியூ வழக்கு போர்டுக்குக்கு நலமென்று தோன்றினால், ஹைகோர்ட்டின் தீர்ப்பிற்கு அவற்றை அனுப்பலாம்.

ரெவின்யூ அல்லது நியாய உத்தியோகஸ்தருக்கு கலெக்டர் அதிகாரம் தருவது.

128. இச்சட்டப்படி செய்யப்படும் எல்லாவிதமான, அல்லது சில விதமான அசல் வழக்குகளிலும், நடவடிக்கைகளிலும், ஒரு குறிப்பிட்ட எல்லைக்குள் அதிகாரம் செலுத்த ரெவின்யூ அல்லது நியாய அதிகாரிக்கு மாகாண சர்க்கார் அதிகாரம் தரலாம். அப்படித் தரப்பட்ட அதிகாரத்தையும் திரும்பப்பெறுக்கொள்ளலாம். அப்படி அவர்களால் செய்யப்பட்ட தீர்ப்பு, அவர்கள் நியமனம் செய்யாதபோது கலெக்டரால் செய்யப்பட்ட தீர்ப்பு எப்படி அப்பீலுக்கு உரியதோ அதுபோல அப்பீல் செய்யக்கூடியதாகும்.

சட்டப்படியாக நடவடிக்கைகளில் அதிகாரம்.

129. (1) வழக்குத் தொடரப்பட்ட கைப்பற்றும் நிலத்தின் ஸ்வாதீனத்திற்காக போடப்பட்ட வழக்கு எந்த சிவில் கோர்ட்டு அதிகாரம் செலுத்தலாமோ அந்த எல்லையில், சிவில் கோர்ட்டால் நிலச் சுவான்தாருக்கும் ரயத்துக்கும், நிலத்துக்குச் சொந்தக்காரருக்கும் பாயக்காரிக்கும், ஏற்படும் வழக்கில் விவகாரங்கள் நடந்ததாக சிவில் ப்ரொஸீஜர் கோடின் நடமுறைப்படி கொள்ள வேண்டும்.

(2) ஒரு வழக்கு கலெக்டரால் தீர்மானிக்க வேண்டியதானுல் அதன் விவகாரம் அந்நிலம் இருக்கும் ரெவின்யூ ஜில்லாவில் ஏற்பட்டதாகக் கொள்ளவேண்டும்.

ஏஜண்டுகள் நியமிக்கலாமென்பது.

130. கலெக்டர் முன், இச்சட்டத்தின் கீழ் கொண்டுவரும் வழக்குகளில் வாதியும், பிரதிவாதியும், தங்களுக்காக, வேலைக்காரரையும், அல்லது உத்தரவு பெற்ற ஏஜண்டுகளையும் தங்களுக்காக ஆஜராகி வேலை செய்ய நியமிக்கலாம்.

131. ஒவ்வொரு கலெக்டரும் கீழ்க்கண்ட முறைபடி தங்களால் விசாரிக்கப்பட்டு தீர்மானம் வழக்குகளுக்கு ஒரு ரெஜிஸ்டர் வைத்திருக்கவேண்டும்.

வழக்கின் நம்பர்.	மனுவின் தேதி.	தாவாவின் சுருக்கம்.	ஆட்சேபணையின் சுருக்கம்.	தீர்ப்பின் சுருக்கமும் தேதியும்.

கலெக்டர் முன் இருக்கும் வழக்குகளின் நடை முறை.

132. கீழ்க்கண்ட நிபந்தனைகளுடன், மாகாண சர்க்காருக்கு, இச்சட்டபடி கலெக்டர்கள் வழக்குகளை விசாரிக்கவும், முடிவாகத் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளைப் பற்றி அறிக்கை, பிரசுரம் செய்யவும், இச்சட்டத்திற்கேற்றபடி விதிகள் செய்யவும் அதிகாரம் தரப்பட்டிருக்கிறது.

(1) வழக்கை விசாரிக்க ஒரு தினம் ஏற்படுத்தி, கக்ஷிக்காரர்கள் தாங்களாகவோ, ஏஜண்டு மூலமோ விசாரிக்கப்படவேண்டியதைத் தெரிவித்து, வேறு விதமாக கலெக்டரால் உத்திரவிடப்பட்டாலன்றி முடிவான தீர்மானத்திற்கு சம்மன் போகவேண்டும்.

(2) கக்ஷிக்காரர்கள் சாக்ஷிகளைக் கொண்டுவர உரிமையுண்டு. எந்த சாக்ஷியின் சாக்ஷியம் வேண்டுமென்று சொல்லுகிறார்களோ அவர்களை சாக்ஷியாக சம்மன் செய்யக் கோரலாம். விசாரணை உத்தியோகஸ்த்தர் எழுத்து மூலமான காரணங்களினுல் அப்படிச் செய்வது அவசியமில்லையென்றுலொழிய, அந்தக் கோரிக்கைப்படி நடக்க வேண்டும்.

(3) வழக்கை விசாரிக்கும் உத்தியோகஸ்த்தர், சாக்ஷியத்தின் முக்கியமான பாகத்தை இங்கிலீஷில் தன் கைப்பட குறித்துக்கொள்ள வேண்டும். அதுபோல தானுக அல்லது சுருக்கெழுத்தாளரிடம் சொல்லி அவர் குறிப்பைதான் வேண்டிய இடத்தில் திருத்தம் செய்து, தன் தீர்மானத்தையும், அதற்கேற்ற காரணங்களையும் கையெழுத்திடவேண்டும்.

(4) இச்சட்டப்படிக் கேற்பட்ட கலெக்டருடைய எந்தத் தீர்ப்பும் ,கோர்ப்டின் தவறுதலுக்கோ, முறை பிசகுக்காகவோ ரத்து செய்யப்படாது. அதன் யோக்கியதாம்சத்தில்த்தான் அப்படி ரத்து செய்யலாம்.

(5) இச்சட்டப்படி எந்த வழக்கினும் செய்யப்பட்ட டிக்ரியிலோ, உத்தரவிலோ, கலெக்டர் தனக்கு யுக்தமென்று தோன்றுகிற எந்த வகையிலும், வழக்கினும், விண்ணப்பத்தினும் செலவு தரும்படி சொல்லவும், அல்லது செலவை பாகமாக உத்தரவிடவும் பூர்ண அதிகாரமுண்டு. அவர் ஒவ்வொரு கக்ஷிக்காரருக்கும் பூராகவோ, எந்த பாகமாகவோ, வீதமாகவோ யாரால் செலவுத் தொகைத் தரப்படவேண்டுமென்றும் உத்தரவிடலாம்.

(6) இச்சட்டத்தின்படி, மாகாண அரசாங்கத்தார் செய்த விதிகளுக்கும், இச்சட்டத்திலுள்ள விதிகளுக்கும் உட்பட்டு, இச்சட்டத்தின்படி, கலெக்டர் விசாரிக்கும் தாவாக்களுக்கு சிவில் ப்ரொஸீஜர் கோடு செல்லலாம்.

மூன்றும் பேர்வழிக்கு தரவேண்டு மெனப்படும் தொகை செலுத்துவது.

133. (1) நிலத்தீர்வை, குத்தகை விஷயமாய், வழக்குகளில் இச்சட்டப்படி வசூலிக்க ஏற்படும் நடவடிக்கைகளில், ஒரு ரயத்து பாக்கியை ஏற்றுக்கொண்டு, வாதிக்கோ, விண்ணப்பதாரருக்கோ உரியதல்லவென்றும், மூன்றும் பேர்வழிக் குரித்தானதென்றும் கூறினால், ரயத்தோ, பாயக்காரியோ ரெவின்யூ கோர்ட்டிலோ, கலெக்டர் ஆபீஸிலோ ஒத்துக்கொண்ட தொகையைக் கட்டினாலன்றி, எழுத்துமூலம் குறிக்கப்பட்ட தனிக் காரணங்களின்றி, ரெவின்யூ கோர்ட்டோ, கலெக்டரோ அந்த சமாதானத்தை ஏற்றுக்கொள்ளக் கூடாது.

(2) அப்படிப் பணம் கட்டப்பட்டால் ரெவின்யூ கோர்ட்டோ, கலெக்டரோ மூன்றும் பேர்வழிக்கு தொகை கட்டியதைப்பற்றி, உடனே நோட்டீஸ் தெரிவிக்கவேண்டும்.

(3) நோட்டீஸ் சேர்ந்த மூன்று மாதத்திற்குள் அம் மூன்றும் பேர்வழி வாதியின்மேல் கலெக்டரிடம் வழக்குத் தொடர்ந்து, பணத்தை தரக்கூடாதென்று தடை உத்தரவு வாங்கினாலன்றி, வாதியின் விண்ணப்பத்தின்பேரில் வாதிக்கு பணம் தந்துவிடப்படும்.

(4) மூன்றும் பிரிவுபடி வாதியிடம் தரப்பட்ட பணத்தைப் பெறுவதற்கு ஒருவருக்குள்ள உரிமையை இந்தப் பிரிவிலுள்ள எதுவும் தடைப்படுத்தாது.

நிலச்சுவான்தாருக்கென்று ஒப்புக்கொள்ளப்பட்ட தொகையைக் கட்டுவது.

134. நிலத்தீர்வைக்காக எந்த வழக்கிலும், நிலத்தீர்வை வசூலிக்க இச்சட்டப்படிக்கான எந்த விவகாரத்திலும், நிலத்தீர்வைக்காக வாதிக்கோ, விண்ணப்பதாரருக்கோ பாக்கி, தான் தரவேண்டியது என்று ஒரு ரயத்து ஏற்றுக்கொண்டு, கேட்கப்பட்ட தொகை தரவேண்டியதற்கு அதிகமென்றால், ஒத்துக்கொள்ளப்பட்ட தொகையை அந்த கோர்ட்டிலோ, கச்சேரியிலோ கட்டினாலன்றி, ரெவின்யூ கோர்ட்டோ, கலெக்டரோ பிரத்தியேக காரணங்களின்றி அந்த ஆட்சேபணையை ஏற்றுக்கொள்ளக்கூடாது.

தொகையில் ஒரு பகுதியைக் கட்ட நிபந்தனை.

135. மேற்கூறிய இரண்டு பிரிவுகளில் எதன்படியாவது ரெவின்யூ கோர்ட்டிலோ, கலெக்டர் கச்சேரியிலோ ஒரு ரயத்து பணம் கட்டவேண்டுமானால், அந்த ரெவின்யூ கோர்ட்டோ, கலெக்டரோ, தக்க காரணங்களால் அப்படிக் கட்டுவதற்கு நியாயங்களிருப்பதாக எண்ணினால், நியாயமான ஒரு பகுதித் தொகையை ரெவின்யூ கோர்ட்டோ, கலெக்டரோ உத்தரவிடும்படி கட்டினால் ரயத்தின் சமாதானத்தை ஏற்றுக்கொள்ளலாம்.

கோர்ட்டோ, கலெக்டரோ ரசீது தரவேண்டும்.

136. மேற்கூறிய பிரிவுபடி ரயத்து பணத்தைக் கட்டினால் ரெவின்யூ கோர்ட்டோ, கலெக்டரோ, ரயத்துக்கு ஒரு ரசீது தரவேண்டும். அப்படித்தரப்பட்ட ரசீது, வாதியோ, மனுதாரரோ, மூன்றும் பேர்வழியோ கொடுத்த ரசீதுக்கு சமானமானதாகும்.

அன்னியரை அப்புறப்படுத்துவதற்குப் பதிலாக கலெக்டர் ஒரு நியாயத் தீர்வையை நியமித்தல்.

137. அன்னியரை அப்புறப்படுத்த ரெவின்யூ கோர்ட்டில் ஒரு வாதி மனு போட்டால், அவர் தனக்கு சரியாக ஏற்பட்டால், அதற்குப் பிரதிப்பலனாக, பிரதிவாதி வசத்திலிருக்கும் நிலத்திற்கு கலெக்டரால் நியாயமென்று கருதப்படும் நிலத்தீர்வையைக்கட்டும்படி உத்தரவிடவேண்டுமெனக் கோரலாம். கலெக்டரும் அதன்படி உத்தரவிடலாம்.

17-ம் அத்தியாயம்.

ஒப்பந்தமும், சமுதாயமும்.

கலெக்டரோ, கோர்ட்டோ எந்த ஒப்பந்தத்தை அங்கீகரிப்பது.

138. நிலத்தீர்வையை உயர்த்தவோ, குறைக்கவோ, இச்சட்டப்படி, ஒரு நிலச்சுவான்தார் ஆதாரப்படும் ஒரு ஒப்பந்தத்தை ஒரு கலெக்டரோ, கோர்ட்டோ அங்கீகரிக்கக்கூடாது.

சம்மதத்தால் சட்டத்தை தள்ளி வைப்பதைப்பற்றிய நிபந்தனை.

139. (1) இச்சட்டம் அங்கீகரிக்கப்பட்ட பின்போ அதற்கு முன்போ ஒரு நிலச்சுவான்தாருக்கும் ரயத்துக்கும் ஏற்பட்டிருக்கும் எந்த ஒப்பந்தமும்

(a) நிலத்தில் அனுபோக உரிமை பெறுவதை எக்காலத்திற்குமே பாதிக்காது,

(b) ஒப்பந்தத் தேதியிலிருக்கும் அனுபோக உரிமையை எடுத்துவிடாது.

(c) இச்சட்டப்படிக்கான முறைகளாலன்றி நிலச்சுவான்தார் ரயத்தை விலக்க முடியாது.

(டி) ஒரு ரயத்துக்கு விருத்திசெய்யக்கூடியதற்குள்ள உரிமையை எடுத்துவிடாது.

(2) ஒரு ரயத்துக்கும், நிலச்சுவான்தாருக்கும் . . . . ஏற்பட்ட ஒப்பந்தம் நிலத்தில் ரயத்து இச்சட்டப்படி அனுபோக உரிமை பெறுவதைத் தடுக்காது.

(3) ஒரு நிலச்சுவான்தாருக்கும், ரயத்துக்கும் . . . . பின் ஏற்பட்ட ஒப்பந்தப்படி . . . . .

(a) ரயத்து, நிலத்தில் அனுபவ உரிமை பெறுவதைத் தடுக்காது.

(b) இச்சட்டத்தின் 4-வது பிரிவின், 11-வது உட்பிரிவுபடி ஒரு ரயத்துக்கு நிலத்தை அனுபவிக்கும் உரிமையை எடுத்துவிடவோ, குறைக்கவோ முடியாது.

(c) இச்சட்டத்தின் 95-வது பிரிவுபடி பாயக்காரி தன் கைப்பற்றும் நிலத்தையோ, அதன் பாகத்தையோ விட்டுவிடும் உரிமையை எடுத்துவிடாது.

(d) தன் கைப்பற்றும் நிலத்தையோ, அதன் பாகத்தையோ, ஒரு பாயக்காரி தான் கட்டுப்பட்ட சட்டப்படியோ, வழக்கப்படியோ மாற்றவோ சாசனம் செய்யவோ இருக்கும் உரிமையை எடுத்துவிடாது.

(e) இச்சட்டத்தின் 20-வது பிரிவில் கூறியபடி நிலத்தீர்வைக்கு ஏற்பட்ட வட்டியைப்பற்றிய நிபந்தனையைப் பாதிக்காது.

குடிகளின் வசதி.

140. ரயத்து அனுபவிக்கும் நிலத்தின் பாகமல்லாமல், தான் வசிக்கும் வீட்டுடன் விவசாயத்திற்கு வேண்டிய தொழுவம், மற்றும் இதர இடங்கள் வைத்திருந்தால் அவைகளைக் கொண்டாடும் உரிமை, சுதேச வழக்கப்படியும், சம்பிரதாயப்படியும், இச்சட்டத்தில் வழக்கம், சம்பிரதாயம் என்பதைப்பற்றிய நிபந்தனைப்படியும் கொள்ள வேண்டும்.

வழக்கம் நீக்கல்.

141. எந்த வழக்கத்தையும், சாம்பிரதாயத்தையும் இச்சட்டப்படி தள்ளப்பட்டோ, திருத்தப்பட்டோ இருப்பதற்கு மாறுதலில்லாமல் இருந்தால் இச்சட்டத்திலெதுவும் அவைகளைப் பாதிக்காது.

18-ம் அத்தியாயம்.

கால நிர்ணயம்.

2-ம் ஷெட்யூல் வழக்கு முதலியனவற்றிற்கு கால நிர்ணயம்.

142. இச்சட்டத்தில் சேர்க்கப்பட்டிருக்கும் 2-ம் ஷெட்யூலில் குறிக்கப்பட்ட வழக்குகளும், விண்ணப்பங்களும் அதில் குறிக்கப்பட்ட காலத்திற்குள் தாக்கல் செய்யப்படவேண்டும்.

(1) காலவரையறையானதென்று எதிர்க் கக்ஷியார் வாதிக்காவிட்டாலும், மேற்கூறியவாறு விதிக்கப்பட்ட காலவரையறை (லிமிடேஷன்) யானபிறகு செய்துகொண்ட தாவாவாவது, மனுவாவது. தள்ளுபடி செய்யப்படவேண்டும்.

(2) இச்சட்டம் அமுலில் வருவதற்குமுன், காலவரையறையான (காலாந்தரமான) வழக்கிற்காவது, மனுவிற்காவது, புத்துயிர் அளிப்பதற்கு இச்சட்டத்தில் யாதொரு விதியும் இல்லை.

இந்தியன் லிமிடேஷன் சட்டத்தின் சில பாகங்கள், தாவா முதலியவைகளுக்குச் செல்லா.

143. (1) மேலே குறிக்கப்பட்ட பிரிவில் தெரிவிக்கப்பட்டுள்ள தாவாக்களுக்கும், மனுக்களுக்கும், 1877-ம் வருஷத்திய இந்தியன் லிமிடேஷன் சட்டத்தின் 7, 8, 9 பிரிவுகள் செல்லா. M.T.B. 143.

(2) 1877-ம் வருஷத்திய இந்தியன் லிமிடேஷன் சட்டத்தின் விதிகள் மேற்படி 142 பிரிவில் குறிக்கப்பட்டுள்ள எல்லா தாவாக்களுக்கும், அப்பீல்களுக்கும், மனுக்களுக்கும், இது, இந்த அத்தியாயத்தில் கண்டுள்ள விதிகளுக்கு உட்பட்டது.

19-ம் அத்தியாயம்.

அநுபந்த விதிகள், அபராதங்கள்.

சட்டவிரோதமாக, விளைச்சலில் தலையிடுவதற்கு, விதிக்கப்படும் அபராதங்கள்.

144. (1) இச்சட்டத்திற்கு மாறுக அல்லது அமுலிலிருக்கும் இதர சட்டத்திற்கு மாறுக, எவராவது— M.T.B. 144.

(a) வாடகைக் குடியானவனுடைய அல்லது ரயத்தினுடைய விளைச்சலை ஜப்தி செய்தால், அல்லது ஜப்தி செய்ய முயன்றால்; அல்லது

(b) இச்சட்டத்தின்படி ஒழுங்காக ஜப்திசெய்வதை எதிர்த்தால், அல்லது இச்சட்டத்தின்படி ஒழுங்காக ஜப்திசெய்யப்பட்ட தானியத்தை வலுவந்தமாகவோ, கள்ளத்தனமாகவோ அகற்றினால்; அல்லது

(c) ரயத்து அல்லது வாடகைக் குடியானவனுடைய சம்மதமாவது, அதிகாரமாவது பெறாமல், கதிரறுத்தல், கதிரைச் சேமித்தல், களஞ்சியத்தில் சேர்த்தல், அப்புறப்படுத்தல், அல்லது விளைச்சல் சம்பந்தமாக மற்ற ஏற்பாடுகள் செய்தல், ஆகிய இவைகளைத் தடுத்தால், அல்லது தடுக்க எத்தனித்தால் :

மூன்று மாதம் வரை போகக்கூடிய கடுமையான அல்லது சாதாரணமான சிறைத் தண்டனை அல்லது, 500 ரூபாய் வரை போகக்கூடிய அபராதமாவது, அல்லது சிறையும் அபராதமும் சேர்ந்தாவது, தண்டனையாக விதிக்கப்படும்.

(2) இந்தியன் பீனல் கோடிலுள்ள அர்த்தப்படி, மேற்கூறிய 1-வது உட்பிரிவில் தெரிவிக்கப்பட்ட எச்செயலுக்காவது எவராவது உடந்தையாக இருந்தால், அவர் மேற்படி பீனல்கோடின் பொருளின்படி, அச்செயலுக்கு உடந்தையாக இருந்ததாகக் கருதப்படுவார்.

(3) இச்சட்டத்தில் கண்டுள்ள விதிகளுக்கு மாறாக, பெண்கள் வசிக்கும் அறைகளிற் பிரவேசித்தால் அல்லது குடியிருப்பு வீட்டுகளின் வெளிக் கதவுகளை வலுவந்தமாக உடைத்து உட்புகுந்தால், இந்தியன் பினல் கோடில் கண்டுள்ள பொருளின்படி "சட்ட விரோதமாக வீடு புகுதல்" என்ற குற்றத்தைச் செய்ததாகக் கருதப்படுவார்.

தாவாசெய்வது சம்பந்தமான பொது உரிமை.

M.T.B. 145. நஷ்ட ஈடு தாவா செய்துகொள்ள உரிமை.

145. (1) (a) இச்சட்டத்தின் தோரணையில் எடுத்துக்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளால், அல்லது

(b) இச்சட்டத்தின் விதிகளை புறக்கணித்ததால் அல்லது அசட்டை செய்ததால் தனக்கு நஷ்டம் ஏற்பட்டது, அல்லது அநியாயம் செய்யப்பட்டது என்று எவராவது கருதினால், அவர் நஷ்ட ஈடு பெறுவதற்கு, கலெக்டர்முன் தாவா செய்து கொள்ளலாம்.

(2) இச்சட்ட அதிகாரத்தின்கீழ்வரும் எந்த தாவாவுக்காவது, சிவில் கோர்ட்டில் பரிகாரம் தேடுவதற்கு இப்பிரிவு உரிமையளிப்பதாகக்கருதக்கூடாது.

நிலச்சுவான்தார்களின் ஏஜன்டுகள்.

M.T.B. 146. ஏஜண்டு மூலம் காரியம் நடத்துவதற்கு உள்ள அதிகாரம்.

146. (1) ரெவின்யூ கோர்ட்டிலாவது, கலெக்டர்முன்பாவது, இதர அதிகாரிமுன்பாவது, இச்சட்டப்படி நிலச்சுவான்தார் செய்யவேண்டிய, அல்லது செய்ய அனுமதிக்கப்பட்ட மனுவாவது, சொந்த ஆஜராவது, அல்லது எச்செயலாவது (மேற்படி கோர்ட்டு, கலெக்டர் அல்லது அதிகாரி வேறுவகையில் உத்தரவிட்டாலொழிய), நிலச்சுவான்தாரின் எழுத்து மூலமான அதிகாரத்தைப் பெற்ற ஏஜண்டால் செய்யப்படலாம்.

(2) இச்சட்டத்தின்படி, நிலச்சுவான்தாருக்குக் கொடுக்கவேண்டிய அல்லது சார்வு செய்யவேண்டிய நோடீஸ், மேற்கூறியவாறு அதிகாரம்பெற்ற அவர் ஏஜன்டுக்கு கொடுக்கப்பட்டால் அல்லது சார்வு செய்யப்பட்டால், அதற்கு, இச்சட்டத்தின்படி நிலச்சுவான்தாருக்கு நேரே கொடுத்தால், அல்லது சார்வு செய்தால், என்ன பலன் உண்டோ அதே பலன் உண்டு.

(3) இச்சட்டத்தின்படி நிலச்சுவான்தார் கையொப்பமிடவேண்டிய, அல்லது அத்தாட்சி கூறவேண்டிய ஒவ்வொரு பத்திரமும் (ஏஜன்டுக்கு அதிகாரமளிக்கும் அல்லது ஏஜன்டை நியமிக்கும் பத்திரத்தைத் தவிர) எழுத்துமூலமாக நிலச்சுவான்தாரின் அதிகாரத்தைப்பெற்ற ஏஜன்டால் கையொப்பமிடப்படலாம், அல்லது அத்தாட்சி கூறப்படலாம்.

M.T.B. 147. கூட்டு நிலச்சுவான்தார்கள் ஒருங்கு சேர்ந்தாவது அல்லது தங்கள் பொது ஏஜன்டு மூலமாவது காரியம் நடத்தல்.

147. இருவர், அல்லது அதற்கதிகமானவர்கள் கூட்டு நிலச்சுவான்தார்களாயிருந்தால், இச்சட்டத்தின்படி செய்யவேண்டிய அல்லது செய்ய அனுமதிக்கப்பட்ட எச்செயலும், இருவர்களாவது, அல்லது மற்ற எல்லாரும் ஒருங்கு சேர்ந்தாவது, அல்லது தங்கள் சார்பாக அதிகாரம்பெற்ற ஏஜன்டாவது செய்யப்படலாம்.

சட்ட விளம்பர காலத்தில், உயர்த்தப்படும் நிலவரி செல்லாதென்பது.

M.T.B. 148. சட்ட விளம்பர காலத்தில் ஏற்படும் நிலவரி உயர்வு செல்லாது.

148. இச்சட்டம் அமுலுக்குவரும் தேதியில் செய்துகொள்ளப்பட்ட அல்லது ஒப்புக்கொள்ளப்பட்ட வரி உயர்வு, (சட்டப்படி) செல்லாது ; குடியானவனையும் கட்டுப்படுத்தாது.

இச்சட்டத்தின்படி, விதிகளின் விளம்பரம்.

M.T.B. 149. முன்னதாக விளம்பரம் செய்யப்பட்டு, பிறகு விதிகள் ஏற்படவேண்டும்.

149. இச்சட்டத்தின்படி, விதிகள் ஏற்படுத்துவதற்கு மாகாண அரசாங்கத்திற்குக் கொடுக்கப்பட்ட அதிகாரம், முன்னதாக விளம்பரம் செய்து, அதற்குப் பின்பே விதிகள் ஏற்படுத்தவேண்டும் என்ற நிபந்தனைக்குட்பட்டது.

அதிகாரங்களின் ஒப்புவிப்பு.

150. கீழ்க்கண்ட பிரிவுகளிலும், 1, 3, (2) 105, 112, 117, 128, பிரிவுகளிலும், கண்டுள்ள அதிகாரங்களைத் தவிர, மற்ற எல்லா அதிகாரங்களையும் அல்லது சில அதிகாரங்களையும், ரெவின்யூ வழக்குகள் சம்பந்தமாக, போர்டுக்கு, மாகாண அரசாங்கம் ஒப்புவிக்கலாம். M.T.B. 150.

ரெவின்யூ வழக்குகள் சம்பந்தமாக போர்டுக்கு அதிகார ஒப்புவிப்பு.

151. ஜில்லா கலெக்டரோடு, இச்சட்டத்தின்படி ஜில்லா கலெக்டருக்குள்ள எல்லா அதிகாரங்களையும், அல்லது ஏதாவதொரு அதிகாரத்தையும், செலுத்த மாகாண அரசாங்கம் அவ்வப்போது ஒரு அதிகாரியை நியமிக்கலாம். M.T.B. 151.

ஜில்லா கலெக்டர் அதிகாரங்களை, அதிகாரிக்கு வழங்கல்.

152. (a) ஒரு நிலம், அல்லது அதிலொருபாகம், மாற்றப்பட்டால், அல்லது அது சட்டமுறையாக பிறருக்குச் சென்றால் (வார்சு பாத்தியம் முதலியன) அத்தகைய மாறுதலை அல்லது வார்சு பாத்தியதையை நிலச்சுவான்தார் அங்கீகரிக்கவேண்டும். அவசியமானல் புதிய ஒப்பந்தம் அல்லது ஒப்பந்தங்களைச் செய்துகொள்ளவேண்டும்.

(b) உட்பிரிவு (a) -ல் உள்ள விதிகளை நிறைவேற்றுவதற்கு, மாகாண அரசாங்கம் தகுந்த விதிகளை ஏற்படுத்தலாம்.

153. ஜமீன்தார் (நிலச்சுவான்தார்) தனது ஜமீனை அல்லது பூமியை, அல்லது அதிலொரு பாகத்தை, பிறருக்கு மாற்றினால், அல்லது, ஜமீனை (அல்லது பூமியை) பங்காளிகள் பிரிவினை செய்துகொண்டால், ஜமீன்தாரும், ஜமீனைப் பெற்றுக்கொண்டவரும் (transferee) அல்லது, பங்காளியும், (சந்தர்ப்பத்திற்குத்தகுந்தாற்போல்) ஜில்லா கெஜெட்டில் விளம்பரம் செய்தும், மாகாண அரசாங்கம் விதிகள் மூலமாக தெரிவிக்கும் முறைப்படியும், மேற்படி நிலமாறுதலைப்பற்றி, அல்லது நிலப்பிரிவினைப் பற்றி, மாற்றப்பட்ட அல்லது பிரிவினை செய்யப்பட்ட, நிலத்திலுள்ள குடியானவர்களுக்கு, நோட்டீஸ் மூலமாக தெரிவிக்கவேண்டும். அவ்வாறு, நோட்டீஸ் கொடுத்தாலொழிய, அல்லது கொடுக்கும் வரை; மேற்படி மாறுதல், பிரிவினைக்குப் பிறகு, செலுத்தவேண்டிய வரியை, குடியானவன் ஜமீன்தாருக்குச் செலுத்தினால், புதிதாக ஜமீனைப்பெற்றவர் அல்லது பங்காளி அதைக் குடியானவனிடமிருந்து மீண்டும் கைப்பற்ற முடியாது. அது சம்பந்தமாக, குடியானவர்கள் ஜமீன்தார் மீது எடுத்துக்கொள்ளும் நடவடிக்கைகள், ஜமீனைப்பெற்றவரையும், பங்காளியையும், (அவர்கள் மீது முதலில் நடவடிக்கைகள் எடுத்துக்கொண்டதாகக் கருதப்பட்டு) கட்டுப்படுத்தும்.

154. ரயத்து அனுபோகத்திலில்லாத "ரயத்தி" நிலத்தில் எவராவது அனுமதியின்றி, பிரவேசித்தால் அவர், மேற்படி நிலத்தின் மீது விதிக்கப்பட்ட வரியை ஒவ்வொரு ரெவின்யு வருஷத்திற்கும், அல்லது ஒவ்வொரு ரெவின்யு வருஷத்தின் பாகத்திற்கும், செலுத்தவேண்டும். மேற்படி நிலத்திற்கு நிலவரி ஏற்படாதிருந்தால், ஒழுங்கான, நியாயமான, வரியை நிர்ணயம் செய்யவேண்டுமென்று, கலெக்டருக்கு மனுச்செய்ததின்பேரில், அவர் என்ன வரி விதிக்கிறாரோ, அதைச் செலுத்தவேண்டும்.

155. (1) வார்சு பாத்தியதையில்லாமல், அல்லது, தானுதி விக்கிரய மூலமாகயில்லாமல், எஸ்டேட்டிலுள்ள ரயத்தி நிலத்தில் பிரவேசித்தால், அவர், ரயத்தாக ஒப்புக்கொள்ளப்படாவிட்டால், அல்லது இச்சட்டத்தின் விதிகளின்படி ரயத்தென்று கருதப்படாவிட்டால், சட்ட விரோதமாய் நிலத்தில் பிரவேசித்ததாக, கலெக்டர் முன், தாவா செய்யப்பட்டு நிலத்திலிருந்து நீக்கப்படலாம்.

(2) அந்த தாவா, நிலம் பிரவேசிக்கப்பட்ட தேதியிலிருந்து மூன்று வருஷத்திற்குள், செய்யப்படவேண்டும்.

(3) இப்பிரிவின்படி நிலத்திலிருந்து விலக்குவதற்கு செய்யும் தாவாவில், இச்சட்ட விதிகளின்பிரகாரம், கலெக்டர் என்ன மத்திய கால நஷ்டியை நிர்ணயம் செய்கிறாரோ அதைப் பெறுவதற்கும் ஜமீன்தாருக்கு உரிமையுண்டு.

ஆனால் எந்த வருஷத்திற்காவது, ஜமீன்தார், நிலவரியைப் பெற்றிருந்தால், அந்த வருஷத்திற்கு மத்திய கால நஷ்டியடைய ஜமீன்தாருக்கு உரிமையில்லை.

156. (1) வரி மாற்றம், வரி உயர்வு, வரியைக் குறைத்தல், வரியைத் திருத்தியமைத்தல், இவை சம்மந்தமாக குடியானவர்கள் தனியாகவாவது, ஒருங்கு சேர்ந்தாவது மனுச் செய்துகொள்ளலாம். மேற்படி விஷயங்கள் சம்பந்தமாக, குடியானவர்கள்மீது தனியாகவோ, அல்லது பலர் மீது ஒருங்காகவோ, ஜமீன்தார் மனுச்செய்துகொள்ளலாம். மேலும், மேற்படி ரயத்துகளெல்லாம், ஒரே ஜமீன்தாரின் ரயத்துகளாயிருக்க வேண்டும். மனுச் செய்துகொண்ட நிலங்கள் ஒரே கிராமத்திலிருக்க வேண்டும். வரி மாற்றம், வரி உயர்வு, வரியைக் குறைத்தல், வரியைத் திருத்தியமைத்தல் (சந்தர்ப்பத்திற்கேற்றாற்போல்) ஆகிய இவை

களை சம்பந்தமாகத் தெரிவிக்கும் காரணங்களும் ஒரே தன்மைத்தாக இருக்கவேண்டும். மேலும், மனுவை மொத்தமாக விசாரிக்க முடியாதென்று, ரெவின்யு கோர்ட் கருதினால், மேற்படி கோர்ட்டு, தனது சொந்த உத்தரவின்மீது விசாரிக்கும் முதற்றவணையிலாவது, அல்லது, கட்சிக்காரர்களில், எவராவது ஒருவர் செய்துகொண்ட மனுவின்மீதாவது, பிறகாவது, கட்சிக்காரர்கள் சம்மதித்தால், மனு சம்பந்தமாக வெவ்வேறு விசாரணை செய்யலாம், அல்லது, மேற்படி கோர்ட்டு, அவசியம் அல்லது யுக்தம் என்று தோன்றுகிற இதர உத்தரவையாவது செய்யலாம்.

(2) மேற்குறித்த உட்பிரிவின் பிரகாரம் செய்துக்கொள்ளப்பட்ட மனுவின்மீது, பிறர் உரிமைகளை பாதிக்கத்தக்க உத்திரவை செய்வதற்குமுன், மேற்படியாரின் வழக்கு விஷயங்களை தெரிந்துகொள்வதற்கு சந்தர்ப்பம் அளிக்கப்பட்டதா என்பதை கோர்ட்டு முதலில் நிர்ணயம் செய்யவேண்டும்.

(3) குடியானவர்களுடைய உரிமைகளைப்பற்றி என்ன தீர்ப்புக் கூறப்பட்டதென்று, மேற்படி உத்தரவில் தெரிவித்திருக்கவேண்டும்.

157. இச்சட்டத்திலுள்ள ஷரத்துகளை நிறைவேற்றுவதற்கு, முதலில் விளம்பரம் செய்து, அதன் பிறகு மாகாண அரசாங்கத்தார் தக்க விதிகளை ஏற்படுத்தலாம்.

மேற்கூறிய பிரிவுகளுக்கு வியதிரேகமின்றி, மாகாண அரசாங்கம், கீழ்க்கண்ட விஷயங்களுக்கு, தகுந்த விதிகளைச் செய்யலாம் ;—

(1) இச்சட்டத்திலுள்ள எந்தப் பிரிவையாவது, அத்து மீறி நடந்தால் அதற்கு அபராதங்கள் ஏற்படுத்தல்.

(2) இச்சட்டத்தில் விதிக்கப்பட்ட எக்கடமையையாவது ஜில்லா கலெக்டர், அல்லது கலெக்டர்கள், எவ்வாறு நிறைவேற்றவேண்டும் என்ற விதிகள்—அத்தகைய விதிகள் மூலம், மேற்படி அதிகாரி அல்லது அதிகாரிகளுக்கு, கீழே தெரிவிக்கப்பட்ட அதிகாரங்களைக் கொடுக்கலாம் —

(a) வழக்கு விசாரிப்பது சம்பந்தமாக சிவில் கோர்ட் செலுத்தும் அதிகாரம் ;

(b) சர்வே செய்வதற்கும், எல்லைவரையறை செய்வதற்கும், நிலத்திற் பிரவேசிக்க 1923-ம் வருஷத்திய மதராஸ் சர்வே எல்லைகளின் சட்டப்படி, எந்த சர்க்கார் அதிகாரிக்காவதுள்ள அதிகாரம் ;

(c) நிலத்தின் வளப்பத்தை மதிப்பிடுவதின் நிமித்தம், எந்த நிலத்திலுமுள்ள கதிரை அறுவடை செய்வதற்கும், களத்தில் அடிப்பதற்கும், நிறுப்பதற்கும், அளவிடுவதற்குமுள்ள அதிகாரம் ;

(d) மனுக்களை ஒருமிக்க விசாரிக்கும் நிமித்தம், மேற்படி மனுக்களை ஒருங்கு திரட்டியமைக்க அதிகாரம் ;

(3) 132 பிரிவின்படி, குடியானவர்கள் மொத்த மனுச் செய்து கொள்வதற்கு, தகுந்த நிபந்தனைகளைத் தீர்மானிக்கும் அதிகாரம் ;

(4) இச்சட்டத்தின்படி சார்வு செய்யவேண்டிய நோட்டீஸ்களுக்கு, இச்சட்டத்திலாவது, இதர சட்டத்திலாவது, முறையாவது, பாரமாவது இல்லாவிட்டால், தகுந்த முறையையும், பாரத்தையும் செய்ய அதிகாரம் ;

(5) இச்சட்டத்தின்படி செய்துக்கொள்ளும் மனுக்கள் சம்பந்தமாக, என்ன நடை முறை அனுசரிக்கவேண்டும் என்பதைத் தெரிவிக்க அதிகாரம் ;

(6) இச்சட்டத்தின்படி செலுத்தவேண்டிய கட்டணம், செலவு தொகை முதலியவைகள் சம்பந்தமான அதிகாரம் ;

(7) களங்கள், மாட்டுத் தொழுவங்கள், கிராமத்திலுள்ள காலி மனைகள், மேய்ச்சல் தரைகள், குன்று, காட்டுப்புறம்போக்கு, குளங்களின் உள்வாய் வரம்புகள், ஆகிய இவைகளை உபயோகித்துக் கொள்வது சம்பந்தமாக அதிகாரம் ; நீர்ப்பாய்ச்சல், நீரை வடித்தல், நீரைத் தேக்குதல், நீர்ப்பாசனக் கால்வாய்கள், சமுதாய விஷயங்களுக்காக ஒதுக்கிவைக்கப்பட்ட, இதர நிலங்கள் ஆகிய இவைகள் சம்பந்தமாக உள்ள அதிகாரம் ;

(8) ஜப்தி செய்யப்பட்ட, சீக்கிரமாய் அழியக்கூடிய, கதிர் அல்லது தானியங்களை விற்பனை செய்ய அதிகாரம் ;

(9) நிலங்களை சர்வே செய்வதற்கும், உரிமையடங்களை தயாரிப்பதற்கும், கிஸ்த்தி சம்பந்தமான செட்டில்மெண்டு ரிகார்டை தயாரிப்பதற்கும் அதிகாரம் ;

(10) இச்சட்டத்தின்கீழ் பைசல் செய்யப்படும், தாவாககள, மனுக்கள், இதர நடவடிக்கைகள் சம்பந்தமான ரிஜிஸ்டர்கள், என்ன பாரத்திலிருக்கவேண்டும் என்பதைத் தெரிவிக்க அதிகாரம் ;

(11) இச்சட்டத்தின்படி, குறிக்கப்பட்ட எல்லா விஷயங்களுக்கும் விதிகள் ஏற்படுத்த அதிகாரம்.

158. கீழ்க்கண்ட விஷயங்களை மாற்றும், அல்லது அவைகளோடு புதிதாக எதையாவது சேர்க்கும், அல்லது ரத்து செய்யும் விதிகளை மாகாண அரசாங்கம் செய்யலாம்.

(1) இச்சட்டத்திலுள்ள அட்டவணை அல்லது அட்டவணைகளின் ஒரு பாகம்.

(2) மேற்கூறிய அட்டவணை சம்பந்தமாக இச்சட்டத்தில் தெரிவிக்கப்படும் விதிகள், 1-வது உட்பிரிவில் கண்டுள்ள அதிகாரத்தைச் செலுத்தி திருத்தியமைக்கப்பட்ட அட்டவணைக்கும் செல்லுமென்று கருதப்படவேண்டும்.

தற்காலிக விதிகள்.

159. இச்சட்டம் ஆரம்பமாகும் தேதியில், கலெக்டர் அல்லது ஜில்லா கலெக்டர், ரெவினியூ போர்டு, ஆகிய இவர்கள் முன், பைசலாகாத தாவாக்கள், மனுக்கள், அல்லது இதர நடவடிக்கைகள், ஆகிய இவைகளை, (இச்சட்டம் ஏற்படாததாக பாவித்து) மேற்படி கலெக்டர், ஜில்லா கலெக்டர், அல்லது ரெவினியூ போர்டு, (சந்தர்பத்திற்கேற்றுற்போல்) விசாரித்து முடிவு கூறலாம்.

160 இச்சட்டம் தொடங்கிய பிறகு, தாவாக்கள், மனுக்கள், இதர நடவடிக்கைகள் மீது கலெக்டர் (அல்லது ஜில்லா கலெக்டர்) செய்யும் தீர்ப்புகளுக்கும் உத்தரவுகளுக்கும், இச்சட்ட விதிகளின்படி, அப்பீல்களும், ரிவிஷன் மனுக்களும் செய்துகொள்ளலாம்.

1. பி. வெங்கடாசலம் பிள்ளை.
2. வி. வி. ஜோஹையா.
3. எம். பல்லம் ராஜு.
4. பி. எஸ். குமாரஸ்வாமி ராஜா.
5. பி. நாராயணஸ்வாமி நாயுடு.*
6. எம். வெங்கடராமைய்ய அப்பாராவ், மிர்ஜாபுரம் ஜமீன்தார்.*
7. எ. ரங்கஸ்வாமி.*
8. மஹபூப் அலிபெய்க்.*
9. டி. பிரகாசம் (தலைவர்).

1938-ம் வருஷம் நவம்பர் மீ 7உ.

* தன் அபிப்பிராயபேத யதாஸ்த்தைத்தழுவி.

அட்டவணை I.

ரசீதுபாரம்.

பட்டா நெ. பசலி

குடியானவன் தனது நிலத்திற்குச் செலுத்தியவரி முதலிய தொகைகளுக்குக் கொடுக்கப்பட்ட ரசீது. குடியானவன் பெயர் கிராமத்தின்பெயர் தாலூகா ஜில்லா

தொகை செலுத்திய வருஷம், மாதம், தேதி.	செலுத்துபவனின் பெயர்.	எந்த பசலிக்காக செலுத்தப்பட்டது.	அம்சங்கள்.	செலுத்திய தொகை		ரசீது பெற்றுக்கொண்டதாக, ஜமீன்தாரின் அல்லது அவர் ஏஜண்டின் அல்லது கிராமஅதிகாரியின் கையொப்பம்.
				பணமாக.	தானியமாக.	

தொகை செலுத்திய வருஷம், மாதம், தேதி.	செலுத்துபவனின் பெயர்.	எந்தப் பசலிக்காக செலுத்தப்பட்டது.	அம்சங்கள்.	செலுத்திய தொகை	
				பணமாக.	தானியமாக.

அட்டவணை II.

காலாந்தரம் (Limitation)

பாகம் I—தாவாக்கள்.

தாவா விவரம்.	காலாந்தரவரையறை. (லிமிடேஷன் காலம்.)	லிமிடேஷன் காலம் ஆரம்பிக்கும் தேதி.
* (16)-வது பிரிவின்படி செலுத்தவேண்டிய வரி விகிதங்கள் சம்பந்தமான தாவா.	....	....
(40)-வது பிரிவின்டி, நிலவரி பாக்கிகளை வசூலிக்க தாவா ..	மூன்று வருஷங்கள்	பாக்கி செலுத்தவேண்டிய தேதியிலிருந்து.
(17)-வது பிரிவின்படி, நிலவரி சம்பந்தமான ஒப்பந்தங்களுக்கு தாவா.	மூன்று வருஷங்கள்	ஒப்பந்தம் முறிந்த தேதியிலிருந்து
(16-வி) -வது பிரிவின்படி, நிலவரியைக் குறைக்க தாவா ..	மூன்று வருஷங்கள்	வரி உயர்த்தப்பட்ட தேதியிலிருந்து.
† (22)-வது பிரிவின்படி, ரசீது கொடுக்காததற்கு அபராதம் விதிக்க தாவா.	....	....
(36)-வது பிரிவின்படி, பட்டா பெறுவதற்கு தாவா	மூன்று மாதங்கள்	பட்டா கேட்டு மூன்று மாதங்கள் ஆன தேதியிலிருந்து.
(37), (38)-வது பிரிவுகளின்படி பட்டாவை ஒப்புக்கொள்ளச் செய்ய தாவா.	மூன்று மாதங்கள்	பட்டாவை மறுத்த அல்லது அசட்டை செய்த பின் ஒரு மாதமான தேதியிலிருந்து.
† (57)-வது பிரிவின்படி, ஜப்தி செய்யப்பட்டதை அகற்ற குடியானவன் செய்யும் தாவா.	....	....
(71), (78)-வது பிரிவுகளின்படி, ஒழுங்கீனமாக அல்லது சட்ட விரோதமாக செய்யப்பட்ட ஜப்திக்கு குடியானவனின் நஷ்டஈடு தாவா.	மூன்று மாதங்கள்	தவருக ஜப்தி செய்யப்பட்ட தேதியிலிருந்து.
* (75)-வது பிரிவின்படி, நிலத்தை விற்பதாகத் தெரிவித்த நோட்டீஸை அகற்ற தாவா.	....	....
(94)-வது பிரிவின்படி, சட்ட விரோதமாக வசூலிக்கும் வரித் தொகைக்கு அபராதம் விதிக்க தாவா.	ஆறு மாதங்கள்	சட்ட விரோதமாக வரி வசூலிக்கப்பட்ட தேதியிலிருந்து.
* (108), (109)-வது பிரிவுகளின்படி, பூர்வாங்க ரிகார்டில், பதிவு செய்யவேண்டியதின் சம்பந்தமாக தாவா.	....	....
(133)-வது பிரிவின்படி, பணம் செலுத்துவதைத் தடுக்க தாவா.	....	....
* (137)-வது பிரிவின்படி, அனுமதியில்லாமல் நிலத்தில் பிரவேசித்தவரை மேற்படி நிலத்திலிருந்து விலக்க தாவா.	....	....
(145)-வது பிரிவில் தெரிவிக்கப்படாத இதர நஷ்ட ஈடுகள் சம்பந்தமான தாவா.	மூன்று மாதங்கள்	தாவா செய்ய உரிமை ஏற்பட்ட தேதியிலிருந்து.

பாகம் II—மனுக்கள்.

* 4 (13), (சி) பிரிவின்படி, சுரங்கத்தைத் தோண்டுவதாக, அல்லது கற்பாறையை வெட்டுவதாக, குடியானவன் நோட்டீஸ் கொடுத்தால் அப்பொழுது நில வரியைத் திருத்தியமைக்க மனு.	....	....
* 16-வது (iv) பிரிவின்படி, கூடுதலான நிலவரியை விதிக்க அனுமதி கேட்கும் மனு.	....	....
(24)-வது பிரிவின்படி, நில வரியை கச்சேரியில் கட்ட மனு ..	ஆறுமாத காலம்	வரி செலுத்தவேண்டிய தேதியிலிருந்து.
(28), (29), (30) பிரிவுகளின்படி, விளைச்சலை மதிப்பிடுவதற்கு அல்லது பாகம்செய்வதற்கு மனு.	....	....
* (32)-வது பிரிவின்படி, பட்டாவை கலெக்டர் கச்சேரியிலாவது, மற்ற கச்சேரியிலாவது தாக்கல் செய்ய மனு.	....	....
(53)-வது பிரிவின்படி, ஜப்தி செய்யப்பட்ட, பொருளுக்குண்டான நஷ்டத்தை சரி செய்யவேண்டுமென்ற உத்தரவிட மனு.	மூன்று மாதங்கள்	ஜப்தி செய்யப்பட்ட சொத்துக்கு, நஷ்டம் அல்லது சிதைவு ஏற்பட்டதென்று சொந்தக்காரனுக்குத் தெரிந்த தேதியிலிருந்து.
(55)-வது பிரிவின்படி, மோசக்கருத்துடன் அகற்றிய சொத்தை திருப்பிக் கொடுக்க உத்தரவிடவேண்டுமென்று மனு.	மூன்று மாதங்கள்	மோசக்கருத்துடன் அகற்றப்பட்டது, ஜப்தி செய்பவருக்கு தெரிய வந்த தேதியிலிருந்து.
(56), (64)-வது பிரிவுகளின்படி, ஜப்தி செய்யப்பட்ட சொத்தை திருப்பிக்கொடுக்கவேண்டுமென்ற மனு.	மூன்று மாதங்கள்	கள்ளத்தனமாகவாவது, வலுவந்தமாகவாவது, சொத்து அகற்றியது, ஜப்தி செய்பவருக்கு தெரியவந்த தேதியிலிருந்து, அல்லது, ஜப்தி செய்ததில் ஏற்பட்ட ஒழுங்கீனம், முதலியவை, சொந்தக்காரருக்கு தெரிய வந்த தேதியிலிருந்து.
† 57-வது பிரிவின்படி, ஜப்தி செய்யப்பட்ட சொத்தை விற்பனை செய்ய உத்தரவிடவேண்டும் என்னும் தாவா.	....	....
† 83-வது பிரிவின்படி, நிலவிற்பனையை நீக்க, குடியானவன் மனு.	....	....
100-வது பிரிவின்படி, இடத்தை கைவசம் செய்ய வாரண்டு அளிக்கவேண்டும் என்னும் மனு.	....	....
101-வது பிரிவின்படி, கைவசம் செய்யும் காலத்தை அதிகரிப்பதற்கு மனு.	....	....

* லிமிடேஷன் செல்லாது.

† தேவையில்லை. பிரிவிலேயே காலம் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

அபிப்பிராயபேத யாதாஸ்துகள்:

(1)

ஸ்ரீமான் எ. ரங்கசுவாமி அய்யங்கார், எம். எல். ஸி., சமர்ப்பித்த அபிப்பிராயபேத யாதாஸ்து.

பெரும்பான்மை அறிக்கையிற் (Majority Report) கண்டுள்ள பல முடிவுகளை நான் மகிழ்ச்சியுடன் ஒப்புக் கொள்கிறேன். ஆயினும், முக்கிய விஷயத்தைப்பற்றி, அதாவது, நிலவரி விகிதம் எவ்வாறு நிர்ணயம் செய்யப்படவேண்டும் என்னும் விஷயத்தைப்பற்றி, பெரும்பான்மை அறிக்கையிற் தெரிவித்துள்ள முடிவுகளை ஒப்புக்கொள்வதற்கு அசக்தனுயிருக்கின்றேன். இதர சில விஷயங்களைக் குறித்தும், யான் செய்யும் சிபார்சு கள், பெரும்பான்மை அறிக்கையிற் செய்துள்ள சிபார்சுகளைவிட சற்று வித்தியாசமாகவே இருக்கும்.

பெரும்பான்மையாக, நில விளைச்சலின் ஒரு பாகமாக, குடியானவனுல் சர்க்காருக்குச் செலுத்தப்பட்ட நிலவரி, அக்காலத்திலிருந்த விலைவாசிகளுக்குத் தகுந்தாற்போல் பணமாக மதிப்பிடப்பட்டு நிரந்தரமாக விதிக்கப்பட்டது. மேற்கூறிய தொகையில் மூன்றில் இரண்டு பாகம் ஜமீன்தார் சர்க்காருக்கு பேஷ்கஷாகச் செலுத்தவேண்டியது ; எஞ்சிய மூன்றிலொரு பாகத்தை, வரிவசூல் விஷயமாக தான் எடுத்துக்கொள்ளும் பிரயாசைக்கு பிரதிப்பயனுக, ஜமீன்தார் வைத்துக்கொள்ளவேண்டியது. அனுல் அனுபவத்தில், மேற்கூறிய மூன்றிலொரு பாகம் என்பது அதிகமாகவே இருந்தது. பொதுவாகக்கூறில், இதுவே சாசுவத பைசல் ஏற் பாட்டின் அடிப்படைக் கொள்கையாகும். பேஷ்கஷ் மட்டும் அல்லாது, குடியானவன் செலுத்தவேண்டிய மொத்த நிலவரிகூட அக்காலத்தில் நிரந்தரமாக ஏற்படுத்தப்பட்டது. குடியானவன் செலுத்தும் நிலவரியை உயர்த்துவதற்கு ஜமீன்தாருக்காவது, சர்க்காருக்காவது, அதிகாரமில்லையென்று கருதப்பட்டது குடியானவன் செலுத்தும் தீர்வையை எந்த முகாந்தரத்தைக்கொண்டும் உயர்த்துவதற்கு ஜமீன்தாருக்கு உரிமை கிடையாது. ஆனுல், குடியானவர்களுக்கு கரம்பு நிலங்களை, சாகுபடி செய்யக்கொடுத்து, அவ்வாறு அதிக நிலங்கள் சாகுபடி செய்யப்படுவதின் பலனுகக் கிடைக்கும் அதிக வரி வருமானத்தை ஜமீன்தார் அடையலாம். உள்ள நீர்ப் பாசன வேலைகளையும் அமைப்புகளையும் நிர்வகித்துக் காப்பதும், புதிய நீர்ப்பாசன அமைப்புகளைக் கட்டுவதும் ஜமீன்தாரின் கடமையாக ஏற்படுத்தப்பட்டது. தன் ஆதிபத்யத்தின் கீழ் இருப்பதாகக் கருதப்படும் குடியான வர்களுக்கு, கூடுமான இகபர சாதனங்களை உதவுவதும் ஜமீன்தார் கடமையாக எண்ணப்பட்டது. அதை முன்னிட்டு, வித்தியாசாலைகள், வைத்திய சாலைகள், கால்நடை வைத்தியசாலைகள் (இவைபோன்ற பிறவும்) ஸ்தாபிப்பதற்கும் ; விவசாய முன்னேற்றத்திற்கும் "குடியானவர்களின் கஷ்ட நிவாரணத்திற்கும், அவர் களுக்கு கஷ்டம் உண்டாகாமல் தடுப்பதற்கும்," தன் வருவாயில் ஒரு பாகத்தை ஜமீன்தார் செலவழிக்க வேண்டுமென்றும் எதிர்பார்க்கப்பட்டது. சுருங்கக் கூறில், இதுவே சாசுவத பைசல் ஏற்பாட்டின் ஆதார முறையும் அடிப்படைத் திட்டமுமாகும். சர்க்கார், ஜமீன்தார்களோடு செய்துகொண்ட ஒப்பந்தங்களின் உட் கருத்துகளும் நோக்கங்களும், மேற்கூறியவைகளே.

ஒரு வகையில் வரி வசூலிப்பவரின் தன்மையும், ஒரு வகையில், சர்க்கார் நிர்வகிப்பாளரின் தன்மையும், ஒரு வகையில் சொந்த நிலங்களை (ஜமீன்தாரின் பண்ணை நிலங்களைப் பொறுத்தமட்டில்) யுடையவர் தன் மையுமே, சாசுவத பைசல் ஏற்பாட்டின்படி ஜமீன்தாரின் சட்ட ரீதியான தன்மையாகும். இதுபற்றியே, ஜமீன் தாரின் நிலைமையைப்பற்றியும் அந்தஸ்தைப்பற்றியும், அவருடைய அதிகாரங்கள், கடமைகளைப்பற்றியும்பல வகைப்பட்ட, முரணுன, குழப்பத்தைத் தரும் கொள்கைகளும், கருத்துகளும் ஏற்பட்டுள்ளன. ஆனுல் ஆங்கில அர்த்தப்படி, இந்தியக் குடியானவன் "டெனன்ட்" (வாடகைக் குடியானவன்) அல்ல என்பது தெளிவான விஷயம். ஜமீன்தாரின் அனுமதி பெற்று, குடியானவன் நிலத்தை அனுபவிக்கவில்லை. குடி யானவன் ஜமீன்தாருக்குச் செலுத்துவது, ஆங்கில அபிப்பிராயப்படி "ரென்ட்" (வாடகை) அல்ல ; அது சர்க்காருக்குச் செலுத்தும் வரியேயாகும். குடியானவன், ஜமீன்தார் கீழுள்ள குத்தகைக்காரன் அல்லவென் றும் ஆனுல், நிலத்திற்கு, ஜமீன்தாருக்குச் சமானமான பங்காளியென்றும், நியாயத் தீர்ப்புகளால் நிலை நாட்டப்பட்டிருக்கிறது.

அடுத்தபடியாக, ஒழுங்கான, நியாயமான தீர்வை என்னவென்பதைப்பற்றி ஆராய்வோம். 1802-வது வருஷத்திலிருந்த விலைவாசிகளுக்கு தகுந்தாற்போலவே பேஷ்கஷ் ஏற்படுத்தப்பட்டமையால், மேற்படி தொகையைக்குறித்து, அதே தத்துவம் இப்பொழுது அனுசரிக்கப்பட்டால், அதற்கு ஜமீன்தார் ஆட்சேபனை செய்யமுடியாது. அதாவது, 1802-வது வருஷத்திற்கு முன் விளைச்சலின் ஒரு பாகமாக குடியானவன் செலுத்திவந்த நிலவரி, அக்காலத்திலிருந்த விலைவாசிகளுக்குத் தகுந்தாற்போல் மதிப்பிடப்பட்டு நிரந்தர மாகச் செய்யப்பட்டது ஜமீன்தார் சர்க்காருக்குச் செலுத்தவேண்டிய பேஷ்கஷும் அதே ஆதாரத்தின்மீதே சாசுவதமாக விதிக்கப்பட்டது. ஆதலால் அவ்வாறு விதிக்கப்பட்ட தீர்வையைவிட அதிகமான தீர்வையைச் செலுத்துவதற்கு குடியானவன் நியாயப்படியும் நடு நிலைமைப்படியும், கடமைப்பட்டவனல்ல. இதுவே எங்களிற் பெரும்பான்மையானவர் செய்த சிபார்சு ஆகும். தீர்வையை நிர்ணயம் செய்து விதிப்பதற்கு, மேற்கூறிய முறை சுத்த தத்துவார்த்த வகையில் சரியாக இருக்கலாம். சாசுவத பைசலின்படி ஏற்பட்ட உரிமைகள் பாதிக்கப்படுகின்றன என்ற ஆட்சேபனையை ஜமீன்தார்கள் எழுப்பாமலிருக்கலாம். ஆனுல் செயல் முறையில் நோக்கினுல், பல சங்கடங்கள் கட்டாயம் ஏற்படும். மேற்கூறிய கொள்கையையும் முறையையும் அனுசரிப்பதில் செட்டில்மெண்டு அதிகாரிகளுக்கு பல பெருத்த சிரமங்களும் இடுக்கண்களும் ஏற்படும் ; இத் தகைய நிலவரி நிர்ணய முறை புதிய, பழக்கமில்லாத முறையாகும். தனக்கு யுக்தமாகத் தோன்றும் யோசனையின்படி செட்டில்மெண்ட் அதிகாரி சில சமயங்களில் நடக்கவேண்டியதாயிருக்கும். அப்பொழுது அவ்வதிகாரி தவறுகள் செய்தால், அவைகளைத் திருத்துவதற்காவது, எடுத்துக்கூறுவதற்காவது, ஏழைக் குடியானவனுக்கு பொருளாதார வசதியாவது, தகுந்த தகவல்களாவது இரா ஆனுல், ரயத்துவாரி செட்டில்மெண்ட் சம்பந்தமாக செட்டில்மெண்ட் இலாகா அதிகாரிகள் தகுந்த, நிஷ்களங்கமான விளக்கமான விதிகளையும் முறையையும் ஏற்படுத்தியிருக்கிறார்கள். பக்கத்திலுள்ள ரயத்துவாரி தீர்வை விகிதங்களை நன்கறிந்த குடியானவன், செட்டில்மெண்ட் அதிகாரி அனுசரிக்கும் முறையால் ஏமாற்றப்படமாட்டான். எங் கள் முன்பு வாக்கு மூலம் கொடுத்த ஏராளமான சாக்ஷிகளில் ஒருவர்கூட, பெரும்பான்மை அறிக்கையிற் கண்டுள்ள முறையை, அதாவது 1802-வது வருஷத்திய தத்துவத்தை வற்புறுத்தவில்லை. ஜமீன்தார் தரப்பில் வந்த சாக்ஷிகளாவது, குடியானவர்கள் தரப்பில் வந்த சாக்ஷிகளாவது இதைப்பற்றி ஒன்றும் பிரஸ் தாபிக்கவில்லை எங்கள் முன் தாக்கல் செய்யப்பட்ட எண்ணிக்கையற்ற யாதாஸ்துகளில்கூட இதைப்பற்றி ஒரு சிறு சத்தமும் கிடையாது. இம்முறை ஜமீன்தார்களையாவது குடியானவர்களையாவது எப்படி

அறிக்கையில் குறிக்கப்பட்டுள்ள அனுபந்தங்களின் ஜாபிதா.

பாதிக்கும் என்பதை அறிவதற்கு, ஆதாரமோ சாக்ஷியமோ ஒன்றும் இல்லை. இப்பொழுதுள்ள விஷயங்களை ஆராய்ந்து, தற்காலத்திய பரிஸ்திதிகளின்படி ஏற்பாடு செய்வதே யுக்தமாகும். சாசுவத பைசல் ஏற்பாடு உண்டாகி நூறு வருஷங்களுக்கு மேலாகிறது. அக்காலத்திலிருந்த குடியானவர்களோடாவது ஜமீன்தார்களோடாவது நாம் இப்பொழுது ஏற்பாடு செய்து கொள்ளவில்லை. வெவ்வேறான விலை விகிதங்களின்படி, ஜமீன்களும் குடிவார பாத்தியங்களும் விற்பனையாகி வந்திருக்கின்றன.

இந்த விஷயமாக, மற்றொரு காரணத்தை முன்னிட்டும், பெரும்பான்மை அறிக்கையை யான் ஒப்புக்கொள்ளமுடியவில்லை. சாசுவத பைசல் ஏற்பாட்டால் தங்களுக்கு பெருந்தீங்கு இழைக்கப்பட்டதென்று ஜனங்கள் வெகுகாலமாகச் சொல்லிவருகிறார்கள். சாசுவத பைசல் ஏற்பாடு என்று சொல்லிக்கொள்ளப்படும் முறையின் அரசியல் ஒழுங்கையாவது தரும நீதியையாவது ஜனங்கள் எக்காலத்திலும் ஒப்புக்கொள்ளவில்லை. சமயம் வாய்த்தால் மேற்படி ஏற்பாட்டை நிராகரிப்பதற்கு ஜனங்களுக்கு உரிமையுண்டு. ஆனால் பெரும்பான்மை அறிக்கை, சாசுவத பைசல் ஏற்பாட்டை அங்கீகரித்து ஸ்திரப்படுத்துவதாக யான் கருதுகிறேன்; அதை அங்கீகரிக்கும்படி சர்க்காரையும் பெரும்பான்மை அறிக்கை அழைக்கிறது; தனி நபர்களின் பிரத்தியேக உரிமைகளைவிட மிகவும் மேலான அரசாங்கத் தேவைகளையும், அவைகளுக்குத் தகுந்தாற்போல் வரிகள் ஏற்படுத்தும் உரிமையையும் அரசாங்கத்தார் கைவிடவேண்டுமென்றும் மறை முகமாகக் கேட்கிறது. சாசுவத பைசல் ஏற்பாட்டால் உண்டான உரிமைகளை நாங்கள் பாதிக்க விரும்பவில்லையென்று கூறுவது ஒரு விஷயம்; ஆனால் (தயாரிப்பு மசோதாவின் பீடிகையிலுள்ளபடி) மேற்படி ஏற்பாட்டை நாங்கள் அங்கீகரித்து, சட்ட சம்மதம் அளிக்கிறோம் என்று சொல்வது, முற்றிலும் மாறான மற்றொரு விஷயமாகும். ஆதலின், தயாரிப்பு மசோதாவின் பீடிகையையாவது, அதற்கு இசைவாயுள்ள சிபார்சுகளையாவது நான் சற்றும் ஆதரிக்கவுமில்லை.

மேலும், குடியானவன் செலுத்துவது "ரென்ட்" (வாடகை) அல்ல; ஆனால்அது சர்க்கார் வரியேயாகும் என்ற முடிவுக்கு எப்பொழுது வந்தோமோ, அப்பொழுது, ஜமீன் குடியானவன் வரியின் பாரத்திற்கும் சர்க்கார் குடியானவன் செலுத்தும் வரியின் பாரத்திற்கும் நாம் யாதொரு வித்தியாசத்தையும் காட்டக்கூடாது. ஏனெனில் இருவகையினர்களுக்கும் ஒருபடியான வரிகள் தான் விதிக்கப்படவேண்டும். ஆதலால், தற்போதுள்ள பரிஸ்திதியில், சர்க்கார் நிலங்களுக்கு ரயத்துவாரி செட்டில்மெண்டுகளில் என்ன தத்துவங்கள் அனுசரிக்கப்படுகின்றனவோ (அதாவது, செலவுபோக மீதியுள்ள விளைச்சலின் பாகத்தில் பாதி பாகம்) அவைகளைக்கொண்டே, வரி விகிதங்கள் நிர்ணயம் செய்யப்படவேண்டுமென்று கருதுகிறேன். ஆனால் சில அபூர்வமான சந்தர்ப்பங்களில், சர்க்கார் வரி விகிதங்களைவிட ஜமீன்வரி விகிதம் குறைவாக இருந்தால் அவைகள் உயர்த்தப்படக்கூடா. குடியானவர்கள் சார்பாகக் கொடுக்கப்பட்ட பெரும்பான்மையான சாக்ஷியம் இந்த அபிப்பிராயத்தை ஆதரிக்கிறது. பக்கத்திலுள்ள சர்க்கார் வரி விகிதங்கள் அனுசரிக்கப்படவேண்டுமென்று குடியானவர்கள் சார்பாக ஏகோபிதமாகக் கொடுக்கப்பட்ட சாக்ஷியம், ஆராய்ந்தறிந்து கொடுக்கப்படாத சாக்ஷியமென்றாவது, குடியானவர்களின் உரிமைகளையும் கடமைகளையும் பூரணமாக உணர்ந்து கொடுக்கப்படாத சாக்ஷியமென்றாவது நான் கருதவில்லை.

வாரமுறை பல இடங்களில் இன்னும் அமுலில் இருந்து வருவதைக் கருதியும், வார முறையின் பல சௌகர்யங்களைக் கருதியும் (வரிவஜா இயற்கையாக ஏற்படுவது; நாணயமாற்ற மாறுதல்களுக்குத் தகுந்தாற்போல் சுவயமாகவே சரிப்படுத்திக்கொள்வது) தீர்வை செலுத்தும் முறையில் குடியானவர்களுக்கு ஒரு வகையான தன்னிச்சையும் யுக்தமும் அளிக்கவேண்டுமென்று விரும்புகிறேன். அதாவது, குடியானவர்கள் தீர்வையை தானியமாகச் செலுத்த விரும்பினால், அவர்கள் மொத்த விளைச்சலில் மூன்றிலொரு பாகத்தைத் தரலாம்; இது பொதுவாக, மொத்த விளைச்சலில் செலவு போகவுள்ள பாகத்தில் பாதி பாகத்துக்குச் சமமாயிருக்கிறது; அல்லது அமுலிலுள்ள வார விகிதம் மேற்கூறிய மூன்றிலொரு பாகத்திற்குக் குறைவாயிருந்தால் அந்த வாரவிகிதப்படியாவது குடியானவர்கள் தீர்வை செலுத்தலாம்.

பணவரி ஏற்பாட்டில் மாறுதல் செய்யவேண்டுமென்று குடியானவர்கள் விரும்பும் சந்தர்ப்பங்களில்க் கூட அமுலிலுள்ள வரி விகிதங்கள் அனுபவத்தில் கஷ்டம் விளைப்பதாயிருந்தால், இரண்டு வருஷம் முதல் மூன்று வருஷம் வரை, குடியானவர்கள் வார முறையை அனுசரிக்க அனுமதிக்கப்படவேண்டும். அதாவது பணவரி முறை அமுலில் வந்த பிறகுகூட குடியானவர்கள் விரும்பினால் மூன்று வருஷ காலம் வரை வார முறையை அனுசரிக்க அனுமதி தரவேண்டும். நாணய முறை ஏற்பாடு, ஜனநாயக அரசாங்கத்தின் வசம் இல்லாதவரை, பிறநாடுகளின் நன்மைக்கு நாணய முறை அன்னிய அரசாங்கத்தால் சூழ்ச்சி வகையாக திருத்தி அமைக்கப்படும் வரை, பண வரியால் என்ன சௌகர்யங்கள் இருந்தபோதிலும், குடியானவர்கள் அதைக் கட்டாயமாக ஒப்புக்கொள்ளவேண்டுமென்று நாம் நிர்ப்பந்தம் செய்வது நியாயம் அல்ல.

பட்டாக்கள்.—நிலங்களில் குடியானவர்களுக்குள்ள உரிமைகளை விளக்கமாகத் தெரிவிக்கும் பட்டாக்கள் இனிமேல் கலெக்டரால் கொடுக்கப்படவேண்டும். இப்பொழுதுள்ளபடி ஜமீன்தார்கள் கொடுக்கும் முறை கர்நாடகமானதென்றும் காலாந்தரமானதென்றும் கைவிடப்படவேண்டும். பட்டாக்கள், நிரந்தரமானவைகளாகவும், நில சம்பந்தமாக குடியானவர்களின் உரிமைப்பத்திரங்களாகவும் இருக்கவேண்டும். வார்சு பாத்தியத்தை முன்னிட்டாவது, தானதி விக்கிரயம் ஒப்புவிப்பு முதலியவை காரணமாகவாவது பட்டா பிறர் பெயருக்கு மாற்றவேண்டிய விஷயத்திற்கு, சர்க்கார் பிரதேசங்களில் இருப்பதைப்போல தக்க விதிகள் அமைக்கப்படவேண்டும். பட்டா மாறுதல் சம்பந்தமாக ஜமீன்தாருக்கு நோட்டீஸ் அளிக்கவேண்டும். ஜமீன்தார் அதை அங்கீகரித்து, ஒவ்வொரு கிராமத்திலும் அதை வைத்துக்கொள்ளவேண்டும். ஜமீன்தார் (Record of Rights) பதிவு செய்துகொள்ளவேண்டும். அவ்வாறு செய்தால் முச்சலிக்கைகள் எழுதிக் கொடுப்பது அனுவசியமாகும். உரிமையடங்கலில்

காடுகள்.—காடுகளும், உலோகங்களும், பொது ஜனங்களின் சொத்தென்பதும், அரசாங்க நலங்களைக் கருதி அவைகள் பாதுகாக்கப்படவேண்டுமென்பதும் அபிவிருத்தி செய்யப்படவேண்டுமென்பதும் எனது அபிப்பிராயம். காடுகள் யாவும் கலெக்டர் மேற்பார்வையில் இருக்கவேண்டுமென்பது எனது சிபார்சு. குடியானவர்களுக்கு, வழக்கம்போல் மேய்ச்சல் உரிமையும், விவசாயக் கருவிகள் முதலியவைகளுக்கு மரம் வெட்டிக் கொள்ளும் உரிமையும், இன்னும் இதர உரிமைகளும் உண்டு.

உலோகப்பொருள்.—இப்பொழுது, ஜமீன்தாருக்கு ஏதாவதொரு உலோக சம்பந்தமாக தனது ஜமீனில் உரிமையிருந்தால் அது பாதிக்கப்படக்கூடாது. ஆனால் இனிமேல் கண்டுபிடிக்கப்படும் சுரங்கங்கள், உலோகங்கள், பூமியின் கீழுள்ள இதர பொருள்கள், சர்க்காருக்குச்சேரவேண்டும். மேல்வாரம்தார் உரிமைகளுக்கும், நிலப்பரப்பில் குடியானவனுக்குள்ள உரிமைகளுக்கும் சர்க்கார் விலை கொடுத்துவிடவேண்டும்.

சமுதாய நிலங்கள்.—எல்லா சமுதாய நிலங்களும், புறம்போக்குகளும், நீர்மூலங்களும், வாய்க்கால்களும், பொதுப்பாதைகளும் பிறவும் கலெக்டர் மேற்பார்வையிலிருக்கவேண்டும். அவைகளை உபயோகப்படுத்திக்கொள்வதற்கு குடியானவர்களுக்குள்ள மாமூலான உரிமைகள் பாதிக்கப்படக்கூடாது. மேற்படி சமுதாய நிலங்கள் தனக்குச் சொந்தமானவையென்று ஜமீன்தார் பாத்தியம் கொண்டாட முடியாது. அவைகள் சம்பந்தமாக கலெக்டருக்குள்ள மேற்பார்வை அதிகாரம், தகுந்த சந்தர்ப்பங்களில் ஜமீன்தார்வசம்

ஒப்புவிக்கப்படலாம். ஏனெனில் மேற்படி நிலங்களை எவராவது சட்ட விரோதமாகப்பயன்படுத்துவதை
யாவது, அவைகளை சட்ட விரோதமாக அதிக்கிரமிப்பதையாவது, ஜமீன்தார், தர்மகர்த்தா என்ற முறையில்
சுலபமாகத் தடுத்துவிடக்கூடும்.

கிராமக்கணக்குகள்.—ஜமீன்தார்கள், சர்க்கார் வரியை வசூலிக்கும் பொது ஊழியர்கள் என்பது
எங்கள் அபிப்பிராயம். ஆகையால், கிராமப்பைமாஷ், சாகுபடிகணக்குகள் முதலியவைகளிற் வழக்கமாகக்
குறிக்கப்படும் பல விவரங்கள் அடங்கிய சரியான கிராமக்கணக்குகளை ஜமீன்தார் தனது ஆதீனத்தின்
கீழுள்ள கிராமங்களுக்கு எழுதிவைக்கச்செய்யும்படி சட்ட ஏற்பாடு இருக்கவேண்டும்.

வரி வசூல் வேலை.—குடியானவர்கள் ஜமீன்தாருக்குச் செலுத்துவது சர்க்கார் வரியின் ஒருபாகமா
கையால், வரி வசூல் வேலை, இறுதியிற், சர்க்கார் கண்காணிப்பிலும் சர்க்கார் அதிகாரத்திற்கு உட்பட்டும்
இருக்கவேண்டும். வரி வசூல் வேலைக்கு ஜமீன்தார் தனது சொந்த ஆட்களை நியமித்திருந்தாலும், யுகத
மாகத்தோன்றினல், சர்க்கார் எந்த சமயத்திலும், வரிவசூல் வேலையைப்பூராவும் தங்கள் வசம் எடுத்துக்
கொள்ளவேண்டும். வரி வசூல் வேலையை சர்க்கார் ஒப்புக்கொள்ளவேண்டும். சிறு ஜமீன்தார்கள் விரும்
பினல் அப்பொழுது, வரி வசூல் வேலையை கலெக்டர் நிர்வகிப்பதற்கு, சட்டத்தில் ஏற்பாடு செய்யவேண்டும்.
வரி வசூல் வேலைக்கு நியாயமான தொகையாக சர்க்கார் வரி வசூலிப்பில் 10 சத **விகிதம்** எடுத்துக்கொள்
ளலாம். கிராம அதிகாரிகள் கலெக்டர் அதிகாரத்திற்கு உட்பட்டு அவர் உத்தரவுகளை நிறைவேற்றவேண்டும்.
நிலவரியை வசூலிப்பது எனும் சர்க்கார் காரியத்தை ஜமீன்தார்கள் செய்து வருகிறார்கள் என்பது
எங்கள் அபிப்பிராயம். ஆகையால், மேற்படி வேலையிலிருந்து விடுவிக்கப்படவேண்டுமென்று ஜமீன்தார்கள்
சர்க்காருக்கு மனுச்செய்துகொண்டால், அப்பொழுது நியாயமான நஷ்ட ஈட்டுத்தொகையைக் கொடுத்து,
அவர்களின் உரிமைகளை சர்க்கார் கைப்பெறலாம். இதற்கு, சட்டத்தில் விதிகள் ஏற்படவேண்டும்.

பொது.—நிலவரியை வசூலிக்கும்பொருட்டு, கிழக்கிந்தியா கம்பெனியார் ஜமீனதாரி முறையை ஏற்படுத்
தியதற்கு சரித்திர சம்பந்தமான காரணங்கள் என்ன இருந்தபோதிலும், இன்று அது காலாந்தரமான
முறையாக வும் விபரீதமான முறையாகவும் போய்விட்டது. சர்க்கார் வரியை வசூலிப்பதற்கு ஆதாரமா
யிருந்த அம்முறை இப்பொழுது பிரயோஜனமற்றதாய்ப்போய்விட்டது. ஆயினும், நூறு வருஷங்களுக்
கதிகமாக, கபடமாக அல்லாமல், முன்னைய அரசாங்களின் துணிபான கொள்கையாலும், திரிகரண சுத்தி
யாகச்செய்துகொண்ட ஒப்பந்தத்தாலும் ஜமீன்தார்கள் விசேஷமான, விலைமதிப்பான, உரிமைகளை அடைந்
திருக்கிறார்கள். இவ்வுரிமைகளுக்கு தக்கபரிகாரம் செய்யாமல் ஜமீன்தாரி முறையை ஒழித்துவிட
முடியாது. ஜமீன்தார்களின் உரிமைகளுக்கு நஷ்ட ஈடாக சர்க்கார் ஒரு நியாயமான தொகையைக
கொடுத்துவிடுவதுதான், குடியானவர்களுக்கும் ஜமீன்தார்களுக்கும் நியாயம் வழங்குவதற்கு சரியான
வழியாகும். அவசியமாகக்கருதினல், மேற்படி தொகையை, சர்க்கார் "பாண்டுகள்" (**bonds**) மூலமாக
வும் சாசனங்கள் மூலமாகவும் ஜமீன்தார்களுக்குச் செலுத்தி, எல்லாப் பிரதேசங்களையும், சர்க்கார்,
ரயத்துவாரிப்பிரதேசமாகச் செய்துவிடலாம். இந்த உபாயம்தான், ஜமீன்தாருக்கும் குடியானவனுக்கு
முள்ள விவகாரங்களையும் சச்சரவுகளையும் நிரந்தரமாக ஒழிக்கும்.

இனாம்கள்.—இவ்விஷயத்தைப்பற்றியும் பெரும்பான்மை அறிக்கையின் அபிப்பிராயத்தைதழுவ என்
னல் இயலவில்லை. எந்தவகை இனாம்களையும் எஸ்டேட் நிலச்சட்டத்தில் சேர்த்திருக்கக்கூடாதென்பது எனது
அபிப்பிராயம். எல்லா இனாம்களுக்கும் தனியான ஒரு சட்டம் இருக்கவேண்டும். ஒருவகை இனாம்களை சட்டத்
தில் சேர்ப்பதாலும், மற்றொருவகை இனாம்களை சட்டத்திலிருந்து விலக்குவதாலும், அந்தந்த இனாம்
களின் வரலாற்றைப்பற்றியும் தன்மையைப்பற்றியும் வழக்குகள் உண்டாக்கி, அவைகள் சம்பந்தமாக,
நியாயஸ்தலங்களில் தக்க ருஜுக்களைத்தருவது கஷ்டமாயிருக்கும் ஒரு இனாம் எஸ்டேட் நிலச் சட்டத்திற்கு
உட்பட்டதென்று ஒரு கக்ஷிக்காரர் வாதிப்பார். அதிற் சேரவில்லையென்று மற்றொரு சாரார் தர்க்கம்
செய்து எதிர்ப்பார். ஏழைக்குடியானவர்கள் சிவில் கோர்ட்டிலிருந்து ரெவினியு கோர்ட்டுக்கும் அங்கு இருந்து
மீண்டும் சிவில் கோர்ட்டுக்கும், இப்படியாக பல கோர்ட்டுகளுக்கு இழுபட நேரிடும். ஒரு இனாம் ஒருவகுப்பைச்
சேர்ந்திருந்தாலும் அல்லது மற்றொரு வகுப்பைச்சேர்ந்திருந்தாலும், இனாம்தாருக்கும் இனாம் குடியான
வனுக்கும் உள்ள சம்பந்தத்தில் யாதொரு வித்தியாசமும் கிடையாது. உத்தராதிகார உரிமை (**reversionary**
right) சம்பந்தமாகத்தான், ஒரு இனாம் எந்த வகுப்பைச்சேர்ந்ததென்ற கேள்வி பிறக்குமேயொழிய,
இதர எல்லா விஷயங்களிலும் வித்தியாசம் இருக்கக்காரணம் இல்லை. சாசுவத பைசலுக்கு முன் உண்
டான இனாம்கள், பின் உண்டான இனாம்கள், விலக்கப்பட்ட இனாம்கள், சேர்க்கப்பட்ட இனாம்கள் என்ற
வித்தியாசங்கள் இல்லாமல், இனாம்கள்யாவும் ஒரே வகுப்பாகக்கருதப்படவேண்டும் என்பது, எனது அபிப்
பிராயம். பிரத்தியேகமான சட்டம் ஏற்படுவது அவசியமானலும், அச்சட்டத்தின் கொள்கைகளை, இங்கு, இப்
பொழுதே அறிவித்தல் நலம். பெருந்தர இனாம்களை மட்டும் எஸ்டேட் நிலச் சட்டத்திலிருந்து விலக்குவது
குழப்பத்திற் கொண்டுபோய் விடும். இது சம்பந்தமாக, சடுதியில் சட்டத்தை ஏற்படுத்துவது சர்க்கார் கட
மையாகும் ஆதலின், இனாம்கள் விஷயமாக எனது கருத்துகளைத் தெரிவிக்கவிரும்புகிறேன்.

எல்லா இனாம்களும் ஜமீன்களுக்கு வேறான முறையில் கருதப்படவேண்டும். ஜமீன்களை அனு
பவிப்பதில் ஜமீன்தார்கள் மீது விதிக்கப்பட்ட பல நிபந்தனைகளும், கட்டுப்பாடுகளும் அரசாங்கக் கொள்கையின்
காரணமாக ஜமீன்தார்கள் வகிக்கும் நிர்வஹிப்பு அந்தஸ்தும் இனாம்தார்களுக்குச் செல்லா. உண்மை
யில், இனாம் குடியானவன் கீழ்த்தரக்குடியானவனுகும் (**under-tenant**) இனாம்தார்கள்,
ரயத்துவாரி நிலச்சுவான்தார்கள், ஜமீன் ரயத்துகள் ஆகிய இவர்களோடு ஒப்பிடப்படவேண்டுமே
யொழிய ஜமீன்தார்களோடு ஒப்பிடக்கூடாது. எல்லா சந்தர்ப்பங்களிலும், இனாம்தாருக்கு குடிவார உரிமை
(ஜமீன்தாரைப்போல்) எந்த நாளிலும் இருந்ததில்லை. கரம்பு
நிலங்களைப்பிறருக்கு விடுவது, மேல் வார. குடிவார உரிமைகளின் சங்கமம், பண்ணை நிலங்களை வைத்துக்
கொள்ளுதல், வரி பாக்கிக்காக ஏலத்தில் விடப்படும் குடியானவர்களின் நிலத்தை வாங்குதல், ஒப்பந்தம்
செய்துகொள்ளுதல், நிலங்களைச் சாகுபடி செய்ய குடியானவர்களுக்கு விடுதல், முதலியன சம்பந்தமாக
ஜமீந்தார்களுக்குள்ள நிபந்தனைகளும் கட்டுப்பாடுகளும் இனாம்தார்களுக்கும் செல்லவேண்டுமென்பதற்கு
தக்க காரணம் ஒன்றும் இல்லை. இனாம்தார்களும் குடியானவர்களும் ஒப்பந்தங்கள் செய்துகொள்ளும்
விஷயத்தில், சற்று தாராளமான முறை அனுமதிக்கப்படவேண்டும். ஒருவகையான சர்க்கார் காரியங்
களைச்செய்து வரும் ஒருவகையான சர்க்கார் ஊழியர்களாகிய ஜமீன்தார்களைக்கட்டுப்படுத்தும் நிபந்தனைகள்,
இனாம்தார்களைக் கட்டுப்படுத்தக்கூடாது. இப்பொழுதுள்ள எஸ்டேட் நிலச்சட்டத்தின் 19-வது பிரிவின்
கொள்கை எல்லா வகையான இனாம்தார்களுக்கும் அவர்கள் குடியானவர்களுக்கும் செல்லலாம், தான்
சாசனமூலமாவது நீடித்த அனுபவபாத்தியம் மூலமாவது, மற்றவகையிலாவது ரயத்துவாரி பட்டாதார்
கீழுள்ள குடியானவன் அனுபவ பாத்தியம் அடைவதைப்போல், இனாம்தார் கீழுள்ள குடியானவன் தனது
நிலத்தில் அனுபவ பாத்தியம் அடைந்திருந்தாலொழிய, ரயத்துவாரி பட்டாதாரின் அல்லது ஜமீன் ரயத்தின்
கீழ்த்தரக்குடியானவர்கள் விஷயமாக நடப்பதைப்போல், இனாம் குடியானவர்களுக்கும் ஒப்பந்தமுறையான
வரி விகிதங்கள் ஏற்படக்கூடாதென்பதற்கு யாதொரு காரணமும் இல்லை. (ரயத்துவாரிப்பட்டாதாரின் கீழ்

உள்ள குடியானவன் அனுபோக உரிமை அடையும் உதாரணத்திற்கு, 43-மதராஸ் 567 பி.வி. யைப் பார்க்கவும்) தான சாசனத்தையாவது, நீடித்த அனுபவ பாத்தியத்தையாவது ஸ்திரம்செய்வது சம்பந்தமான ருஜுவின் விதிகளும் சட்டயூகிப்பு விதிகளும், குடியானவர்களின் அறியாமையின் காரணமாகவும், படிப்பின்மையின் காரணமாகவும், அவர்களுக்கு கஷ்டத்தை விளைவிக்கலாம். அப்படியானால், தன்னிச்சையான குடியானமுறையை (**tenancy-at-will**) ஏற்படுத்தியதாக இனாம்தார், எழுத்துமூலமான ஆதாரத்தைக் கொண்டு நிரூபிக்க முடியாதபொழுது, இனாம்தாரின் கீழ் 12 வருஷகாலமாக குடியானவன் நிலத்தைச்சாகுபடி செய்திருக்கிறான் என்று ஏற்பட்டால், அவனுக்கு நிலத்தில் அனுபோக உரிமை கொடுக்கப்படலாம். அதற்கேற்றாற்போல், விதிகள் திருத்தியமைக்கப்படலாம். ஏதோ ஒரு தேதியில், குடியானவன் நிலத்திற் பிரவேசித்து உழ ஆரம்பித்தான் என்ற காரணத்தால், அவனுக்கு சட்டப்படி குடிவார உரிமை சேர்தலும், அதன்பிறகு இனாம்தாரின் பாத்தியதா பாத்தியதைகள் சம்பந்தமாக விசாரணை ஏற்படுவதும், அவ்விசாரணையில் இனாம்தாருக்கு சகஜமாகவும், வழக்கப்படியும் கிடைக்கக்கூடிய ருஜு ஆதாரங்கள் நிராகரிக்கப்படுவதும், இவ்வ எல்லாம் சமாளித்துக்கொண்டு இனாம்தார் ஜயம் அடைந்தால், அவரின் உரிமைகளுக்கு, கேவலமான முறையில், ஒரு வருஷ விளைச்சலின் மதிப்பு, நஷ்ட ஈடாக அளிப்பதும், ஆகிய இவைகளே 1936-வது வருஷச்சட்டத்தின் விசித்திர சாஹசச்செயல்களாகும். 1936-வது வருஷத்திய சட்டம் ரத்தாக வேண்டும் என்கிற பெரும்பான்மை அபிப்பிராயத்தை யான் ஆமோதிக்கின்றேன். மேலும், கோர்ட்டு ஏலம் மூலமாகவும், மற்ற வகையினும் இனாம்தார் குடிவார உரிமையை வாங்கினால், அதை ஏகபோக முறையில் அனுபவிக்கக்கூடாதென்தற்கும் காரணம் இல்லை. ஆகையால், இனாம்கள் பிரத்தியேகமான முறையில் கருதப்படவேண்டும் என்பது எனது விருப்பம் கூடுமானால், மேற்கூறிய தத்துவங்களை ஆதாரமாகக்கொண்டு ஒரு தனிச்சட்டம் ஏற்படவேண்டும். எவ்வாறாயினும், கொஞ்ச ஏக்கர்களைக்கொண்ட (சுமார் 25 ஏக்கர்களைக் கொண்ட) இனாம்களை, எஸ்டேட் நிலச்சட்டத்திலிருந்து விலக்கவேண்டும். 1936-வது வருஷத்திய சட்ட முழுவதும், ரத்து செய்யப்படாவிட்டால், எஸ்டேட் நிலச்சட்டத்தின் 8-வது பிரிவிலிருந்த பழைய விலக்காவது மீண்டும் அமைக்கப்படவேண்டும். தங்கள் மேல்வாரத்தொகைக்கு, செல்வாக்குள்ள குடியானவர்களின் கையை எதிர்பார்க்கும் சிறு இனாம்தார்கள் விஷயத்தில், எஸ்டேட்டுகள் சம்பந்தமான சிக்கலான விதிகள் அதிக கஷ்டத்தைத்தருகின்றன.

கீழ்த்தரக்குடியானவர்கள் (**under-tenants**) விஷயமாக, விரிவான சட்டம் ஒன்று உடனே கருதப்படவேண்டும் என்பது எனது அபிப்பிராயம். ரயத்துவாரிப்பட்டாதார்களின் அல்லது ஜமீன்பட்டாதார்களின், அல்லது இனாம்தார்களின், கீழ்த்தரக்குடியானவர்களுக்கு, சட்டமூலம் உடனே அனுபோக உரிமைகள் அளிக்க, நாட்டின் பரிஸ்திதிகள் இன்னும் பக்குவமடையவில்லை. பட்டாதார்களால் அல்லது இனாம்தார்களால், கீழ்த்தரக்குடியானவர்கள் அல்லது அவர்கள் வாரிசுகள் நிலத்திலிருந்து அநியாயமாக நீக்கப்படாமலிருப்பதற்கு சட்ட ரீதியான பாதுகாப்புகள் ஏற்படுத்துவது சிறந்ததாகும். ஆனால், சட்டமுறைப்படி கீழ்த்தரக்குடியானவன், அனுபோக பாத்தியம் அடைய முடியாதென்பதாவது, 1936-வது வருஷத்திய சட்டத்திற்குமுன் அவன் அனுபோக பாத்தியம் அடைந்திருந்தால், நான் தெரிவிக்கும் புதுச்சட்டம் அதைப்பாதிக்குமென்பதாவது இதன் பொருள் அல்ல.

நியாயஸ்தலம்.—ஜமீன்களுக்கு ஏற்படுத்தப்போகும் விசேஷ மன்றத்திற்கு (**Special Tribunal**) இனாம்தாருக்கும் அவன் குடியானவனுக்கும் ஏற்படும் விவகாரங்களைத் தீர்மானிப்பதற்கும் அதிகாரம் அளிக்கவேண்டும். ரெவினியு கோர்ட்டுகள், சிவில் கோர்ட்டுகளைப்போல் அவ்வளவு கற்றறிந்தவையல்லவாயினும், குடியானவர்களுடைய சௌகர்யங்களைப் பொறுத்தமட்டில், அவை திருப்திகரமாகவே இருக்கின்றன. தற்போது அமைந்துள்ள சிவில் கோர்ட்டுகள், சட்ட சம்பிரதாயங்களிலும், சட்ட வியாக்கியானங்களிலுமே ஆழ்ந்திருக்கின்றமையால், ஜனங்களின் நன்மையையும் சீர்திருத்தத்தையும் கருதி, சர்க்கார் ஏற்படுத்தும் பரந்த, உபகார யேதுவான முறைகளை நிறைவேற்றுவது அவைகளுக்கு இயலவில்லை. ரெவினியூ கோர்ட்டுகள், துரிதமுறையில், சுணக்கமில்லாது தீர்ப்புக்கூறுவதை, ஜமீன்தார்கள் வரவேற்பார்கள் என்பதில் சந்தேகம் இல்லை.

கமிட்டி அறிக்கையோடு சேர்க்கப்பட்டுள்ள தயாரிப்பு மசோதாவின் பல ஷரத்துகளையும் ஏற்பாடுகளையும் பற்றி எனது கருத்துக்களைத்தெரிவிக்கிறேன் என்றாவது, விரிவாகக் குறைசாற்றுகிறேன் என்றாவது தப்பு அபிப்பிராயம் கொள்ளக்கூடாதென வேண்டுகின்றேன். ஏனெனில், அவைகளை தீர ஆராய்வது, மசோதாவை அரசாங்கத்தார் பிரரேபிக்கும்பொழுது, சட்ட சபைகளால் நியமிக்கப்படும் செலக்ட் கமிட்டியின் (பொறுக்குக் கமிட்டி) நியாயமான கடமையாகும்.

எ. ரங்கசுவாமி.

(2)

ஜனுப் மஹ்பூப் அலிபெய்க் சாஹிப் பகதூர், பி.ஏ., பி.எல்., எம்.எல்.ஏ. (பெஜவாடா), சமர்ப்பித்த அபிப்பிராயபேத யாதாஸ்து.

சிலவிஷயங்களைப்பற்றி, என் சொந்த அபிப்பிராயத்தைத் தெரிவிக்கும் உரிமை பாதிக்கப்படாத வகையில்,
எஸ்டேட் நிலச்சட்டக்கம்மிட்டி அறிக்கையிற் கையொப்பமிட்டேன். அறிக்கையின் முக்கிய அம்சங்களையும்,
அறிக்கையிற் கண்டுள்ள முடிவுகளுக்கு ஆதாரமான மூலாதாரக் கொள்கைகளையும் நான் ஒப்புக்கொள்கி
றேன். ஆனால், அறிக்கையில் அமைந்துள்ள சில முடிவுகளையும் சிபார்சுகளையும் யான் ஆதரிக்க இயலா
மைக்கு மிகவும் வருந்துகிறேன்.

இந்தியாவில், ஆதிகாலத்தில், கிராமத்திலுள்ள நிலங்கள் கிராம சமுகத்திற்குச் சொந்தமாயிருந்த
தென்றும், பிறகு, குடியானவனுக்கு நிலத்தில் ஏகபோக உரிமை ஏற்பட்டதென்றும், சர்க்காருக்குச் சேர
வேண்டிய ராஜபாகத்தை குடியானவன் செலுத்தவேண்டிய கடமையைத் தவிர மற்ற கடமையாவது நிபந்
தனையாவது கிடையாதென்றும் கூறும் கொள்கையை நான் முற்றிலும் ஒப்புக்கொள்ளுகிறேன். அரசருக்காக
வாவது, அவர்கள் சார்பாக நிலவரி வசூலிப்பவருக்காவது, எக்காலத்திலும் நில உரிமை கிடையாது. சர்க்கா
ருக்கும் குடியானவனுக்கும் இருந்த சம்பந்தம் இது தான் என்பது, அறிக்கையிற் பல இடங்களில், விசேஷ
மாக, I, II அத்தியாயங்களில், சிறந்தமேற்கொள்களையும் ஆதாரங்களையும்கொண்டு ரூபிக்கப்பட்டிருக்கிறது.
இந்தியாவில், சர்க்காருக்கும் குடியானவனுக்கும் இருந்து வந்த சம்பந்தம் ஒப்பந்த முறையாக ஏற்பட
வில்லையென்பது எனது அபிப்பிராயம். அது, ஒரு நிலைமை, அந்தஸ்தைப் பொறுத்தது, நாட்டை ஆட்சிபுரிந்து
பாதுகாக்கும் கடமையைக் கொண்ட சர்க்கார் என்ற ஹோதாவில், நிலத்தின் வருமானத்திற்கு ஒரு
பாகத்தை சர்க்கார் அடைவதற்கு உரிமை இருந்தது.

மேற்கூறிய சர்க்கார், குடியானவன், ஆகிய இருதரத்தாரின் சம்பந்தத்திலிருந்து இரண்டு விஷயங்கள்
தெளிவாகத் தெரியவருகின்றன. (1) ஜன சமூகத்தில் அங்கத்தினனான குடியானவன் சர்க்கார் கஜானாவுக்கு
ஒரு தொகையைச் செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறான். (2) கட்டாயமாகச் செலுத்தவேண்டிய தொகையைவிட
அதிகமான தொகையை ஜன சமூக அங்கத்தினனிடமிருந்து வசூலிக்க சர்க்காருக்கு உரிமை கிடையாது.
இவ்வுரிமை சர்க்காருக்குப் பிரத்தியேகமானது. ஆதலால், இவ்வுரிமையை அரசு நிலைமையில்லாத மற்
றொருவருக்கு சர்க்கார் மாற்றுவது அரசுரிமைக் கொள்கைகளுக்கும் தத்துவங்களுக்கும் முற்றிலும் விரோத
மானது.

முற்காலத்தில், சில அரசாங்கங்கள், ஜனங்களிடமிருந்து வசூலிக்க வேண்டிய வரிகளை பிறர் வசம் ஒப்பு
வித்தார்கள் என்பது உண்மையே. ஆனால், அப்படி வரி வசூலிப்பவருக்கு, அவர்கள் வரி வசூலிக்கும் நிலங்க
ளில் யாதொரு உரிமையும் இருக்கவில்லை. சர்க்கார் வசூலிக்கக்கூடிய வரியைவிட அதிகமான வரியை
வசூலிப்பதற்கும் அவருக்கு உரிமை கிடையாது. மேலும், அவ்வாறு வரி வசூலிப்பவர்கள் நிரந்தரமாக
நியமிக்கப்படவில்லை. ஒரு சில வருஷங்களுக்கே நியமிக்கப்பட்டனர். ஆனால், சர்க்காருக்கு ஒரு குறிப்பிட்ட
மொத்தத் தொகையைச் செலுத்தவேண்டும் என்ற நிபந்தனையின் மீது, சர்க்கார் வரிகளை வசூலிக்கும் உரி
மையை தனி நபர்களுக்குக் கொடுப்பது விவேகமான பரிபாலன முறைக்கு விரோதமானது மட்டுமல்லாமல்
பல தீமைகளுக்கும் அபாயங்களுக்கும் காரணமாயிருக்கும். உண்மையில் இத்தகைய முறை குடியானவர்
களை உபத்திரவிப்பதற்கு ஒரு கருவியாக இருக்கிறது. ஜனங்களின் க்ஷேமத்தை நாடும் ஒவ்வொருவரும் இந்த
முறையை நிராகரிக்கவேண்டும். வரி வசூலிக்கும் உரிமையை பிறர் வசம் ஒப்புவிப்பது, சர்க்கார் சௌகரி
யத்தை முன்னிட்டு முதலில் ஏற்பட்டது. துரதிர்ஷ்டவசமாக, காலக்கிரமத்தில், அது ஒரு பலாஷ்டிகம்
வாய்ந்த ஸ்தாபனமாய்விட்டது. அதைச்சுற்றி பல புதிய உரிமைகள் எழ ஆரம்பித்தன. தனக்கு நியாய
மான பாத்தியதைகளைவிட பல புதிய பாத்தியதைகளையும் வரி வசூலிப்பவர் அல்லது ஜமீன்தார்கள் தனது செல்
வாக்கால், நியாயமற்ற முறையில் கைப்பற்ற ஆரம்பித்தார்கள். இப்படியாக நாளடைவில், ஜமீன்தார்
நிலத்திற்குரியவரென்றும், தன்னிஷ்டப்படி வரி வசூலிக்கும் உரிமையே அன்றி, குடியானவனை தன்
இச்சைப்பிரகாரம் நிலத்திலிருந்து விலக்குவதற்கு அதிகாரமும் ஜமீன்தாரருக்கு உண்டு என்றும் தவறாகக்
கருதப்பட்டது.

கிழக்கிந்தியா கம்பெனியார் இந்தியாவில் அரசுரிமைகள் அடைந்துவந்த காலத்தில், குடியானவன்
சம்பந்தமாக, வரி வசூலிப்பவருக்கு (ஜமீன்தார்) இருந்த அந்தஸ்து இதுவே. மொகலாய சாம்ராஜ்ஜியம்
க்ஷீணதசை அடைந்தபொழுது நாடெங்கும் பல சிற்றரசர்கள் தோன்றினர். வரி வசூலிப்பவரும், தனது
பலத்தையும் அதிகாரத்தையும் நிலை நாட்ட ஆரம்பித்தார். இச்சிற்றரசர்களும் ஜமீன்தாரர்களும் நிலங்கள்
தங்களுக்குச் சொந்தமானவையென்று பாத்தியம் கொண்டாடி, சாதாரண காலத்தில் சர்க்கார் வசூலித்து
வந்த தொகையைவிட மிகவும் அதிகமான தொகையை நிலவரியாக ஏற்படுத்தினர்.

பிரிட்டிஷார் இந்நாட்டை ஆள ஆரம்பித்த பொழுது, சர்க்கார் வருமானத்தை ஸ்திரப்படுத்திக் கொள்
வதிலேயே, அதிக ஆவல் காட்டிவந்தனர். அக்காலத்தில் நாட்டின் பரிஸ்திதியையும், சிற்றரசர்களும் ஜமீன்
தார்களும் நிலவுரிமை கொண்டாடுவதையும், அகாதமான வரிகளை வசூலிப்பதையும் கண்ட பிரிட்டிஷ்
மேலதிகாரிகள், குடியானவனுக்கும், வரி வசூலிப்பவருக்கும் அல்லது ஜமீன்தாருக்கும் அல்லது சிற்றர
சருக்கும் உள்ள சம்பந்தம், பிரிட்டிஷ் நிலச்சுவான்தாருக்கும் வாடகைக் குடியானவனுக்கும் உள்ள சம்
பந்தம் போன்றது என்று தவறாக எண்ணினர். இத்தகைய தவறான உவமானமே சாசுவத பைசல் உட்
பட்ட சட்டங்களுக்கும் நடவடிக்கைகளுக்கும் காரணபூதமாயிருந்தது. தீர்க்கமான பரிசீலனைகள் நிகழ்ந்து
குடியானவர்களின் துயரங்கள் மேலதிகாரிகளுக்குத் தெரியப்படுத்தினவரைக்கும், மேற்கூறிய தவறான கருத்
தில் மாறுதல் ஏற்படவில்லை.

சாசுவத பைசல் ஏற்பாடென்பது, ஜமீன்தாரின் உரிமைகளையும், குடியானவர்களின் உரிமைகளையும்
நிரந்தரமாக்கவேண்டுமென்று சர்க்கார் நல்லெண்ணத்துடன் செய்த பிரயத்தனமாகும். ஆனால் கிரி
யாம்சையில் அது அபாயகரமான கொடிய சட்டமாய் முடிந்தது. ஏனெனில், அது, ஜமீன்தார்களுக்கு, அது
வரையில்லாத புதிய உரிமைகளை உண்டுபண்ணி ஸ்திரப்படுத்தினது. குடியானவர்கள் தொன்றுதொட்டு
அனுபவித்துவந்த நியாயமான உரிமைகளை அபஹரித்தது. அதற்குப்பின் ஏற்படுத்தப்பட்ட சட்டம், சாசுவத
பைசல் ஏற்பாட்டை விளக்குவதற்கும் வியாக்கியானம் செய்வதற்கும் முயன்றது. ஆனால், அதை ஸ்திரப்
படுத்தி ஆதரிக்கமுடியவில்லை. பத்தொன்பதாவது நூற்றாண்டின் பிற்பகுதியிலும், எஸ்டேட் நிலச்சட்டம்
ஏற்படுவதற்கு முன்னும், ஜமீன்தார்கள் அக்காலத்திலிருந்த விலைவாசிகளின் உயர்வைப் பயன்படுத்திக்
கொண்டு வார விகிதங்களை பணவாரியாக மாற்றினார்கள். 1908-வது வருஷத்திய எஸ்டேட் நிலச்சட்டம்
ஏற்பட்ட பொழுது, விளையக்கூடிய தீமையெல்லாம் முன்பே விளைந்துவிட்டது. 1908-வது வருஷத்திய சட்டம் I

குடியானவர்களுக்கு அனுபோக உரிமைகள் அளித்தாலும், மற்றபடி எல்லா விதிகளையும் ஜமீன்தாருக்கு அனுகூலமாகவே செய்தது. இது விஷயமாக, சாசுவத பைசலால் உண்டான தவறான நிலைமை, அதற்குப் பிறகு பல சட்டங்களால் ஸ்திரப்படுத்தப்பட்டு, 1802-வது வருஷத்திலிருந்து, கோர்ட்டுகளின் தீர்ப்புகளால் நியாய சம்மதமும் பெற்றுவந்தது.

தவறாக உத்தேசிக்கப்பட்டு, கிரியாம்சையில் நியாயமற்ற முறையில் நிறைவேற்றப்பட்ட, யுக்தமற்ற, அதிவிவேகமான சட்டமே சாசுவத பைசல் ஏற்பாடு என்பது, ஆராய்ந்தறிந்த எனது முடிவான அபிப்பிராய மாகும். முதலாவது, சர்க்காரின் விசேஷ உரிமையாகிய வரி வசூலிக்கும் அரசுரிமையை தனி நபருக்கு மாற்றுவது முற்றிலும் கண்டிக்கத்தக்கது. அது சிறந்த அரசியல் தத்துவங்களுக்கு விரோதமானது. ஜன சமூக அங்கத்தினரின் வருமான விகிதம், அதாவது, நியாயப்படி சர்க்கார் வசூலிக்கக்கூடிய வரி விகிதம், அரசாங்கத் தேவைகளை முன்னிட்டு அவ்வப்போது மாறுதல் ஏற்படக்கூடியது. அத்தகைய விசேஷ உரி மையை அதிஜாக்கிரதையாகத் தற்காக்கவேண்டுமேயொழிய சர்க்கார் பிறருக்கு ஒப்படைத்துவிட முடியாது. இரண்டாவதாக, ஜமீன்தார் நிலவரி பாத்தியத்தை அடைந்தவரேயொழிய நிலத்திற்குரியவரல்ல. ஜமீன் தார், நிலப்பிரபுவாகவும் (landlord) குடியானவன் வாடகைக்குடியானவனாகவும் (tenant) கருதப் படலாகாது. சாசுவத பைசல் ஏற்படாத மற்ற பிரதேசங்களில், குடியானவனுக்கும் சர்க்காருக்கும் உள்ள உண்மையான சம்பந்தத்தை சர்க்கார் சரியாக உய்த்துணர்ந்திருக்கிறார்கள். ரயத்துவாரிக் குடியானவ னுடைய பூரண நில உரிமையை சர்க்கார் அங்கீகரித்திருக்கிறார்கள். சாசுவத பைசல் ஏற்பட்டுள்ள ஜமீன் களிலுள்ள குடியானவர்களும், ரயத்துவாரிப் பிரதேசங்களிலுமுள்ள குடியானவர்களும் வெவ்வேறான முறையில் நடத்தப்படுவது நியாயமாகுமா? ஒழுங்காகுமா? மக்கள் நினைவுக்கு எட்டாத காலத்திலிருந்து, மேற்கூறிய இருவகைக் குடியானவர்களும், மாமூலான வரி விகிதத்தைச் சர்க்காருக்குச் செலுத்தி, சரி யான சட்டப்படியும், வழக்கப்படியும் சம்பிரதாயப்படியும் ஒரே மாதிரியான உரிமையை அனுபவித்து வந் திருக்கும்பொழுது, அவர்கள் நிலைமையில் வித்தியாசம் கல்பித்தல் தகுமா? சர்க்காரும் ஜமீன்தார்களும் செய்து கொண்ட ஒப்பந்தங்களும் உடன்படிக்கைகளும் குடியானவனுக்கு நிலத்திலுள்ள நியாயமான உரி மைகளை அபகரிக்கக்கூடுமா? ஜமீன் குடியானவர்களை, மற்ற குடியானவர்களுக்குள்ள நிலைமைக்கு வேறு பாடான நிலைமையில் வைப்பதற்கு, சட்டப்படியாவது நியாயப்படியாவது யாதொரு ஆதாரமும் இல்லை யென்பது எனது அபிப்பிராயமாகும்.

இக்கருத்தின்படி, தீய முறையாகிய ஜமீன்தாரி முறையை ஒழிப்பது, யுக்தமென்றும், அவசியமென்றும் யான் நினைக்கிறேன்; இப்பொழுது இயலாவிடினும், கூடிய விரைவில், தகுந்த சட்டமூலம் (இதர குடியான வர்களுக்கு வித்தியாசமாக நடத்தப்படாமல்) ஜமீன் குடியானவர்களுக்கு அவர்களின் நியாயமான பூர்வ அந்தஸ்தை அளிப்பது இந்தியாவிலுள்ள ஒவ்வொரு அரசாங்கத்தின் நோக்கமாயிருக்கவேண்டும். என் கருத்தின்படி, எதிர்கால அமைப்பு எவ்வாறிருக்கவேண்டுமென்றால், ஒரே வகையான குடியானவர்க ளிருக்கவேண்டுமேயொழிய, ஜமீன் குடியானவர்கள், ரயத்துவாரிக் குடியானவர்கள் என்று இருவகையான குடியானவர்களிருக்கக்கூடாது. அவர்கள் தங்கள் சக்திக்கேற்றபடி தங்களாலியன்ற தொகையை சர்க்கார் கஜானாக்களுக்குச் செலுத்தும் கடமையும் பெருமையும் வாய்க்கப்பெறவேண்டும்.

2-ம் அத்தியாயம்.

1802-ம் வருஷத்தில் வரி நிர்ணய விஷயமாக ஏற்படுத்தப்பட்ட சாசுவத செட்டில்மெண்டு ரெகுலேஷன், பட்டா ரெகுலேஷன், இன்னும் இதர ரெகுலேஷன்களை ஆதாரமாகக் கொண்டு அறிக்கையிலுள்ள முடிவு கள் வரையப்பட்டிருக்கின்றன. சாசுவத செட்டில்மெண்டு விதிகள் மாற்றப்பட்டால், 1935-வது வருஷத்திய இந்திய அரசாங்கச் சட்ட ஷரத்துகளும், குறிப்புப்பத்திரமும் (Instruments of Instructions) ஆட்சேபனை கூறி, ஜமீன்தார்களின் உரிமைகளைப் பாதிக்கும் சட்டத்திற்கு தடை ஏற்படுத்தலாம் என்று நன்குணர்ந்து, அச்சங்கடத்தைத் தவிர்ப்பதற்கு, பெரும்பான்மை யறிக்கையில் அதிகப்பிரயாசை எடுக்கப்பட்டிருக்கிறதென் பது, மேற்படி விஷயத்தை ஆராயும் அத்தியாயங்களிலிருந்து வெளிப்படையாகத் தெரியவருகிறது. சாகுபடி விஸ்தீரணத்தின்படி, ஒரு கிராமத்தின் வரி விகிதத்தை நிர்ணயம் செய்து அதன் மூலம் வரி ஸ்திரத்தை ரூபிக்கும் முறையில், மேற்படி ரெகுலேஷன்களின் விதிகள் வியாக்கியானம் செய்யப்பட்டிருக்கின்றன. பட்டா ரெகுலேஷனை சரியாகத் தாத்பரியம் செய்தால், இப்பிரயத்தனம் பலிதமடையாது. மேற்படி ரெகு லேஷன்களில், முக்கியமாக, பட்டா ரெகுலேஷனில், வரி குறிப்பிடப்படும் பொழுதெல்லாம், சாசுவத பைசல் வருஷத்திற்கு முன் இருந்த வரி விகிதம் குறிப்பிடப்பட்டிருக்கிறது.—பட்டா ரெகுலேஷனின், 4-வது பிரி வின், 3, 4, 5, ஷரத்துகளையும், 9-வது பிரிவையும் பார்க்கவும். அறிக்கையிற் சிபார்சு செய்யப்பட்டபடி, ஜமீன் ஆஸ்திமதிப்பை ஆதாரமாகக்கொண்டு, வரி விகிதத்தை தீர்மானிப்பதற்கு மேற்கோள் எங்கும் இல்லை. வரி விகித விஷயமாக (சாசுவத செட்டில்மெண்டு ரெகுலேஷனோடு சேர்த்துப்படிக்கவேண்டிய) பட்டா ரெகு லேஷன் மீது ஆதாரப்படுவது சாசுவத பைசலுக்கு முன் இருந்த வரி விகிதத்திற்கே கொண்டுபோய் விடும். அக்காலத்தில், மொத்த விளைச்சலில் பாதிபாகமாக சர்க்கார் பாகம் இருந்ததென்பதற்கு கமிட்டிமுன் போதுமான சாக்ஷியம் கொடுக்கப்பட்டது.

முந்திய அத்தியாயத்தில் கூறியதுபோல, குடியானவனை தங்களிஷ்டப்படி நிலத்திலிருந்து விலக்கக் கூடிய வாடகைக் குடியானவனாகவும், அவன் செலுத்தும் வரியை, வாடகைத் தொகையாகவும் (குத்தகைத் தொகையாகவும்) ஜமீன்தார்கள் அநியாயமாக பாவித்து நடந்து வந்தமையால்த் தான், குடியானவன், மொத்த விளைச்சலில் பாதி பாகமும், சில சமயங்களில் அதற்கு அதிகமான பாகமும் கொடுக்க நேரிட்டது. அந்த அத்தியாயத்தில் தெரிவித்துள்ள காரணப் பிரகாரம், சாசுவத பைசல் காலத்தில் இருந்த வரி விகித முறை முற்றிலும் தவறானது. குடியானவன் சர்க்காருக்குச் செலுத்தவேண்டிய மாமூலான பாகத்திற்கு மிகவும் அதிகமான (மொத்த விளைச்சலில்) பாதி பாகம் தரவேண்டுமென்று சர்க்காரும் ஜமீன்தாரும் ஏற்பாடு செய்தால்—அத்தகைய ஏற்பாடாவது, சட்டமாவது, ரெகுலேஷனாவது, ஒப்பந்தமாவது, ஜமீன்தார்—சர்க்கார் உடன்படிக்கையாவது, குடியானவர்களைக் கட்டுப்படுத்தாது.

அவ்வாறாயின், குடியானவன் கடமை என்ன? குடியானவன் நியாயமாகச் செலுத்தவேண்டிய தீர்வை என்ன? முந்திய அத்தியாயத்தில் விளக்கியுள்ளபடி, சர்க்காருக்குச் சேரக்கூடிய பாகம், சர்க்காரின் தேவை களைப் பொறுத்து, அவ்வப்போது மாறக்கூடியது. ஹிந்து அரசர்கள் ஆட்சியில், ராஜபாகம் மொத்த விளைச்ச லில் ஆறிலொருபாகத்திலிருந்து, பன்னிரண்டில் ஒரு பாகம் வரை இருந்து வந்ததென்று மனுப்பெரியார் கூறியுள்ளார். மகமதிய அரசாங்கத்தில், சர்க்கார் பாகம் மொத்த விளைச்சலில் மூன்றிலொருபாகமாய் இருந்தது. டில்லி அரசாங்கம் க்ஷீணித்து சிதைவுற்ற காலத்தில், சிற்றரசர்களும் ஜமீன்தார்கள் தங்கள் செல்வாக்கையும் பலத்தையும் பெருக்கிக்கொண்டு, நிலவரி விகிதத்தை 100-க்கு 50 வரை உயர்த்தினால், அதை, குடியானவன் நியாயமாகச் செலுத்தவேண்டிய வரி விகிதம் என்று கருதலாமா? சாசுவத பைசல் காலத்தில் மேற்கூறிய 100-க்கு 50 விகிதத்தைஆதாரமாகக்கொண்டே, வரி விகிதங்களை ஏற்படுத்தினார்கள்.

அதே வரி விகிதமே ரயத்துவாரிப் பிரதேசங்களிலிருந்ததென்பதும், குடியானவர்களின் கஷ்ட நிலைமையைக் கண்டு, தற்போதுள்ள ரயத்துவாரி முறையை சர்க்கார் ஏற்படுததிஞர்கள் என்பதும், அதன்படி மொத்த விளைச்சலில் செலவுபோக வுள்ள பாகத்தில், பாதி பாகத்தை சர்க்கார் நிலவரியாகச் செய்தார் என்பதும் தக்க சாக்ஷியம் மூலம் வலியுறுத்தப்பட்டிருக்கிறது. அந்த அரைப்பாகமே, அதிகமாக விதிக்கக்கூடிய வரி யின் வரையறையாகும். "ரூபாய் நாணய ஈவால்" (rupee ratio) குடியானவர்கள் எவ்வளவு கஷ்டப் படுகிருர்கள் என்பது, நாணய மாற்றைப்பற்றியும், நாணய முறையைப்பற்றியும் ஆராயும் அறிக்கையின் அத்தியாயங்களில், வெகு திறமையாக விளக்கப்பட்டிருக்கிறது. ரயத்துவாரி வரி நிர்ணய முறைகூட குடி யானவர்களின் க்ஷேமத்திற்கு பாதகமா யிருக்கிறதென்று அனுபவத்தில் தெரியவருகிறது. ரயத்துவாரி நிலவரி குறைக்கப்படவேண்டும் என்று, இப்பொழுது இருந்துவரும் கிளர்ச்சியைப்பற்றி, யான் இங்கு கூறத் தேவையில்லை. ரயத்துவாரிக் குடியானவன் செலுத்தவேண்டிய வரி விகிதம், ஜமீன் குடியானவன் செலுத்த வேண்டிய வரிவிகிதம், ஆகிய இவை சம்பந்தமாக, ஜனநாயக அரசாங்கம் என்ன தத்துவங்களை அனுசரிக்க வேண்டுமென்பதும், அவரவர் சக்திக்கேற்றுற்போல், வரிப்பளுவு, நியாயமான முறையில் ஈவு செய்யப்பட வேண்டும் என்ற குடியானவர்களுடைய வேண்டுகோளின் நியாயமும், இந்த அத்தியாயத்திலிருந்தும், இதற்கு முந்திய அத்தியாயத்திலிருந்தும் நன்கு விளங்கும்.

3-ம் அத்தியாயம்.

ஆனுல், தற்போது, நிலைமை முற்றிலும் மாறிவிட்டது. 1802-வது வருஷத்திற்குமுன் நூறு வருஷங்க ளாக இருந்த நிலைவரமற்ற பரிஸ்திதிகளும், அக்காலத்தில் இந்தியாவில் நிகழ்ந்துவந்த போரும், அக்கிரம மும், கொடுமையும் அநீதியும்; சாசுவத பைசல் ஏற்பாடு, தீமைகளைப் போக்க முயன்றும், அக்காலத்தி லிருந்த நிர்ணயமற்ற தேச நிலைமையால் பாதிக்கப்பட்டு, குடியானவனுக்கும் ஜமீன்தாருக்குமுள்ள சம்பந் தததைத் தீர்மானிப்பதில் தவருன ஆதாரத்தை அனுசரித்ததும்; அதற்குப்பிறகு, சாசுவத பைசலின் உட்கருத்துகளையும் கொள்கைகளையும் நிறைவேற்றுவதற்கு, ஏற்படுத்தப்பட்ட சட்டங்களும்; அக்காலத்தி லிருந்த சட்டத்தை அனுசரித்துச் செய்த, பல வழக்குத் தீர்ப்புகளும், தேசத்தின் நிலைமையை, விசேஷமாக, ஜமீன் பிரதேசங்களின் நிலைமையை, அடையாளம் கண்டுகொள்ளாத வகையில், பூரணமாக மாற்றிவிட்டன. அநேக நூற்றுண்டுகளாக, தங்களுக்கு நியாயப்படி சேராத பல உரிமைகளை, ஜமீன்தார்கள், கிரமமற்ற முறை யில் அனுபவித்து வந்திருக்கிருர்கள். குடியானவனுக்கும் ஜமீன்தாருக்கும் அக்காலத்தில் இருந்துவந்த முறைதான், மெய்யான, சட்ட சம்மதமான முறையென்று, சர்க்காரும் குடியானவனும், ஜமீன்தாரும் நெடுநாளாக நினைத்து வந்திருக்கிருர்கள். அதன் காரணமாக, குடியானவன் பல தொல்லைகளுக்கு ஆளா ஞன் என்பதிற் சந்தேகம் இல்லை. ஆனுல் ஜமீன்தார் தனக்கு சில உரிமைகள் சட்டப்படி இருக்கிறதென்று கருதி, அந்த ஆதாரத்தின்மீது காரியங்களை நடத்திவந்திருக்கிருர். பலர், ஜமீன் பாத்தியதைகளை அதிக விலை கொடுத்து வாங்கிஞர்கள். அதே ஆதாரத்தின்மீது ஜமீன் அடமானங்களும் பராதீனங்களும் ஏற்பட்டன. குறைந்தபக்ஷம், கடந்த 136 வருஷங்களாக, விஷயங்கள் இவ்வாறு நடந்தேறியிருக்கின்றன. ஆனுல், மறு புறத்திலோ, குடியானவர்களின் பரிதாபகரமான நிலைமை நெஞ்சைப் புண்படுத்துகிறது. அவர்களின் துயரம் இருதயத்தைப் பிளக்கிறது. நாச நிலைமையில் மூழ்கியிருக்கும் குடியானவனுக்கு, காலம் தாழ்த்தாது, துரித நிவாரணம் அளித்து, உதவிபுரிவது, முற்றிலும் அகத்தியமானது.

4-ம் அத்தியாயம்.

இக்கஷ்டமான விஷயத்திற்கு என்ன பரிகாரம் தேடவேண்டும்? அக்கேள்வியின் விடையை இரு பகுதிகளாக வகுக்க விரும்புகிறேன். உடனே செய்யவேண்டிய பரிகாரம்; எதிர் காலத்தில் நிரந்தரமாகச் செய்யவேண்டிய ஏற்பாடு. குடியானவனுக்கும் ஜமீன்தாருக்கும் உள்ள சம்பந்த முறை, தவருகக் கருதப் பட்ட காரணத்தால், ஜமீன்தார்கள் பல உரிமைகளை அடைந்திருந்தபோதிலும், மேற்படி உரிமைகளை திடீ ரென்று ஒழித்துவிடுதல் தத்துவ முறையல்ல. அப்படிச்செய்வது, நஷ்ட ஈடுதராமல் பறிமுதல் செய்வதற்கு சமமாகும். அது கூடாது. மேற்கூறிய சங்கடத்தை நிவர்த்திப்பதற்கு யான் கூறும் உபாயம் பின் வருமாறு:
ஜமீன் பிரதேசங்களுக்கும், ரயத்துவாரிப் பிரதேசங்களுக்கும் உள்ள வித்தியாசங்களை ஒழித்து விடுவது
சர்க்காரின் இறுதியான நோக்கமாயிருக்கவேண்டும். குடியானவன் பழைய உரிமைகளை அனுபவிக்க வேண்
டும். பழைய கடமைகளே இருக்கவேண்டும் குடியானவர்களில், பல வகுப்புகள் இருக்கக்கூடாது. அவர்கள்
சர்க்கார் வரியை சர்க்காருக்கே செலுத்தவேண்டும். வரி வசூலுக்கு மத்தியஸ்தர்கள் இருக்கக்கூடாது.

ஜமீன்தார்களை விலக்கிவிடும் முறை, இயல்பாக கொஞ்ச காலம் பிடிக்கும். நஷ்ட ஈடு தராமல் ஜமீன்
தாரின் உரிமைகளை ரத்துசெய்வது முடியாத விஷயம். ஜமீன்தார்களின் உரிமைகள் அளவுக்கு மீறி
பாதிக்கப்படாமல், அதேசமயத்தில், குடியானவர்களுக்கு தகுந்த சகாயம்செய்து, ஜமீன் பரிஸ்திதிகளை,
ரயத்துவாரிப் பிரதேசங்களின் பரிஸ்திதிகளுக்குச் சமமாக்குவதே, உடனே செய்யக்கூடிய பரிகாரமாகும்.
அதற்கிடையே, ஜமீன்தார்களுக்கு நஷ்ட ஈடு தந்து, அவர்கள் உரிமைகள் ரத்து செய்யப்படலாம். ஜமீன்
பிரதேசங்களில், ரயத்துவாரி வரி விகிதங்கள் ஏற்பட்டால், குடியானவர்களுக்கு அதிக சௌகர்யம் உண்
டாகும் என்பதற்கு, குடியானவர்கள் தரப்பில் பெருவாரியான சாக்ஷியம் கொடுக்கப்பட்டிருக்கிறது. குடி
யானவர்களுக்கு நியாயமாக உள்ள உரிமைகள், குடியானவர்களுக்கே தெரியாது என்ற உண்மையை நான்
ஒப்புக்கொள்கிறேன். ஆனுல் இது விஷயமாக, குடியானவர்கள் கொடுத்த சாக்ஷியத்தை நான் இங்கு
குறிப்பதின் காரணம் என்னவென்ருல், அவர்கள் கமிட்டி முன்பு தெரிவித்தபடி, ரயத்துவாரி விகிதங்கள்
ஏற்பட்டால், அவர்களுக்கு போதுமான சௌகர்யம் உண்டாகும் என்பதும், அதைக்கொண்டு தற்போது
திருப்தியடைவார்கள் என்பதுமே, நான் தெரிவிக்கும் சீர்திருத்தம், மேற்கூறிய விஷயத்திற்கு முடிவான
பரிகாரம் என்று நான் கருதவில்லை. அது தற்கால சாந்தியாக உடனே அளிக்கக்கூடிய பரிகாரமாகும்.
ஜமீன்தாரின் உரிமைகளுக்கு நஷ்ட ஈடு தந்து ரத்து செய்வதற்கு சர்க்காரிடம் போதிய பணம் இருக்கு
மாகில், அப்பொழுது, தேவையற்ற, விபரீதமுறையான ஜமீன்தாரி முறையை ஒழித்துவிட வேண்டியது
சர்க்காரின் கடமையாகும். ஆதலால் ஜமீன் பிரதேசங்களில், ரயத்துவாரி முறைப்படி வரிவிகிதங்கள் ஏற்
படுத்தவேண்டுமென்பது நான் செய்ய விரும்பும் சிபார்சு ஆகும். ஆனுல் ரயத்துவாரி வரிவிகிதங்களை
விட ஜமீன் வரிவிகிதங்கள் குறைவாக இருக்கும் இடங்களில், ஜமீன் விகிதங்களே இருக்கவேண்டும்.
தற்போது, இது ஒழுங்கான, நியாயமான, வரி நிர்ணயம் என்று நான் கருதுகிறேன்.

இக்கருத்தைக்கொண்டே, அறிக்கை விவாதம் செய்யப்பட்டபொழுதும், முடிவில் அறிக்கை ஏற்றுக்
கொள்ளப்பட்ட சமயத்திலும், ரயத்துவாரி முறையும், கொள்கைகளும், ஜமீன் பிரதேசங்களில் அனுசரிக்கப்
படவேண்டுமென்று, ஒரு திருத்தம் கொண்டுவந்தேன். இறுதித் தேதியில், யான் பிரரேபித்த திருத்தம்
பின்வருமாறு :—

"தவருன சட்டத்தின் காரணமாகவும், சாசுவத பைசல் காலத்திலிருந்து வெகுகாலமாக சிவில்
கோர்ட்டுகள் செய்து வந்த தீர்ப்புகளாலும், பரிஸ்திதிகள் மாறுதல் அடைந்திருப்பதை முன்னிட்
டும்; சாசுவத பைசல் காலத்தில் தீர்மானிக்கப்பட்ட வரி விகிதங்களுக்கு வித்தியாசமாக, ஜமீன்

தார்கள் வெகுகாலமாக வரிகள் வசூலித்து அனுபவித்துவந்திருப்பதை முன்னிட்டும்; அந்த ஆதாரத்தின் மீது, நூறு வருஷங்களுக்கு அதிகமாக, பலர், ஜமீன் பாத்தியதைகளை தக்க விலை கொடுத்து வாங்கியிருப்பதை முன்னிட்டும்; ஜமீன் குடியானவர்களுக்கும், ரயத்துவாரிக் குடியானவர்களுக்குள்ள அந்தஸ்தை யளிப்பது யுக்தமென்பதை முன்னிட்டும்; ஜமீன்தார், குடியானவன் ஆகிய இருதரத்தாரின் நியாயமான உரிமைகளைக் கருதி, ரயத்துவாரி செட்டில்மென்டின் தத்துவங்களை ஆதாரமாகக் கொண்டு, ஜமீன் பிரதேசங்களில் நில வரி நிர்மாணம் செய்தல், ஒழுங்கான, நியாயமான வரி நிர்ணயமாகும் என்று கருதுகிறோம். அதற்கிணங்க, ரயத்துவாரி முறைப்படி, ஜமீன் நிலங்களுக்கு வரிவிகிதங்கள் ஏற்படவேண்டுமென்று நாங்கள் சிபார்சு செய்கிறோம்."

5-ம் அத்தியாயம்.

வரி விகிதம் விஷயமாக அறிக்கையில் கண்டுள்ள தீர்மானங்கள்.

தவறான தத்துவங்கள் மீது ஆதாரப்பட்டிருக்கின்றன. அவைகளை, கிரியாம்சையில் நிறைவேற்றுவதில் பல சங்கடங்கள் ஏற்படும். போதியநிச்சயமான தகவல்கள் கிடைக்காதாகையால், மேற்படி தீர்மானங்களின் லட்சியங்கள் பலிதமடையா. I, II அத்தியாயங்களில் தெரிவித்தபடி, சாசுவத பைசல் வரி விகிதங்கள், குடியானவன் நியாயமாக, மாமூலாகச் செலுத்தி வந்த சரியான வரி விகிதங்கள் அல்ல. அக்காலத்திலிருந்த வரி விகிதங்கள், அமைதியான நிலைமையில், ஸ்திரமான சர்க்கார் நியாயமாகவும் வழக்கப்படியும் வசூலிக்கக்கூடிய வரி விகிதங்களுக்கு மிகவும் அதிகமாக இருந்தன. ஆதலால், சர்க்கார் வரியை நிர்ணயம் செய்தவற்கு அப்பொழுது அனுசரிக்கப்பட்ட, மொத்த விளைச்சலில் பாதிபாகம் என்னும் முறையை இப்பொழுது அனுசரித்தால், குடியானவர்களுக்கு அதனால் அதிக கஷ்டம் ஏற்படும் என்பது வெளிப்படை. 1802-வது வருஷத்தில், வாரம் கொடுத்துவந்த குடியானவர்களுக்கு இம்முறை சங்கடத்தை யுண்டுபண்ணும் என்பதிற் சந்தேகம் இல்லை. அக்காலத்தில், பொதுவாக, குடி யானவர்கள் தீர்வையை தானியமாக செலுத்தி வந்தார்கள் என்பது ஒப்புக்கொள்ளப்படவேண்டும். இன்றும், சில ஜமீன்களில் வாரமுறை அமுலில் இருந்துவருகிறது. 1802-வது வருஷத்திலிருந்த விலைவாசிகளின்படி, வார விகிதங்களை, பண விகிதங்களாக மாற்றுவதற்கு நியாயம் இல்லை. அக்காலத்திய விலைமட்டம் அனுசரிக்கப்பட்டாலும், 1802-வது வருஷத்தில் வார விகிதங்கள் செலுத்தின குடியானவர்களும், இப்பொழுது வார விகிதம் செலுத்தும் குடியானவர்களும், அதனால் ஏதாவது நன்மையடைவார்கள் என்று நான் கருதவில்லை. அறிக்கையில், ஒரு ஆதார முறையாக உத்தேசிக்கப்பட்டுள்ள ஜமீன் ஆஸ்தி மதிப்பு ஆதாரமுறை, மிகவும் கடினமானது. எவ்வாறாயினும், குறிக்கப்பட்டுள்ள இதர உபாயங்களும், செயல் முறையில் பல சிக்கல்கள் உள்ளனவாயிருக்கின்றன. அவைகளிற்தக்க தத்துவங்கள் இல்லை. விதி விதரணையற்றவைகளாக இருக்கின்றன. அவைகள் குழப்பத்தை உண்டாக்கி, பல தவறுகளுக்கு இடம் கொடுக்கும். அனுபவமுறையில் பலிதம் ஏற்படுவதற்கு பல வருஷம் செல்லும். வரி விகிதங்கள் மிகவும் அதிகமாயிருக்கிற சில ஜமீன்களில்த்தவிர, மற்ற ஜமீன்களில், 1802-ம் வருஷத்திய வரிவிகிதங்களை ஏற்படுத்துவது, குடியானவர்களுக்கு எவ்வகையிலாவது சகாயமாயிருக்கும் என்று நான் நம்பவில்லை. ஆதலின் மேற்படி தீர்மானங்களை ஆதரிக்க முடியாமைக்கு, யான் மிகவும் வருந்துகிறேன். அறிக்கை, சாசுவத பைசல் ஏற்பாட்டை ஊர்ஜிதப் படுத்துவதேயல்லாமல் வற்புறுத்தியும் கூறுவது, அதிக ஏமாற்றத்தைத் தருகிறது. சாசுவத பைசல் ஏற்பாட்டை நான் முழு மனதுடன், அழுத்த மாகக் கண்டித்து, நிராகரிக்க விரும்புகிறேன். குடியானவர்களின் நியாயமான உரிமைகளை அபகரித்து, அவர்களை தற்போதுள்ள துர்பாக்கிய நிலைமைக்கு ஆழ்த்தின, மிகவும் அநியாயமான, அவிவேகமான ஏற்பாடே, சாசுவத பைசல் ஏற்பாடு என்பது எனது துணிபு.

6-ம் அத்தியாயம்.

இனும்கள்.

அறிக்கையில் மிகவும் ஏமாற்றத்தைத் தரக்கூடிய அத்தியாயம், இனும்களைப் பற்றி ஆராயும் XI அத்தியாயமாகும். சட்ட சபை அங்கத்தினர்கள் இக்கமிட்டிக்குத் தெரிவித்த விஷய விசாரணைக் குறிப்பு சம்பந்தமாக, தவறான எண்ணத்தைக்கொண்டு, மேற்படி அத்தியாயத்தில் பல அம்சங்கள் விவாதிக்கப்பட்டிருக்கின்றன. ஜமீன்களிலும் இதர "சுவாம்யப் பிரதேசங்களிலும்" உள்ள பரிஸ்திதிகளை விசாரித்து, அவை சம்பந்தமாக, தேவையெனக்கருதப்படும் சட்டத்தை குறித்துக்காட்டி, அறிக்கை பிறப்பிக்கவேண்டியது இக்கமிட்டிக்கு ஒப்புவிக்கப்பட்ட கடமையாகும். மேற்கூறிய விசாரணைக் குறிப்பு அறிவிக்கப்பட்டபொழுது தான சாசனம் பிரிட்டிஷ் சர்க்காரால் கொடுக்கப்பட்ட அல்லது ஸ்திரப்படுத்தப்பட்ட, அல்லது அங்கீகரிக்கப்பட்ட பூராவான இனும் கிராமங்கள், 1936-வது வருஷத்திய XVIII சட்டத்தால் திருத்தியமைக்கப்பட்ட மதராஸ் எஸ்டேட் நிலச்சட்டத்தின் (1908) 3-வது பிரிவின் 2-வது உட் பிரிவின், D ஷரத்தின்படி, எஸ்டேட்டுகளாகக் கருதப்பட்டன. மேல்வாரம் மட்டும் இனும்தார்களுக்குக் கொடுக்கப்பட்டதென்பதை குடியானவர்கள் ரூபிக்க வேண்டிய அவசியமில்லாமல், பூராவான இனும் கிராமம், எஸ்டேட்டாக கருதப்படவேண்டும் என்று 1936-வது வருஷத்திய திருத்தச் சட்டம் தெரிவித்தது; மேல்வாரம் மட்டும் இனும்தார்களுக்குக் கொடுக்கப்பட்டதென்பது ஸ்தாபிக்கப்படவேண்டுமென்று 1908-வது வருஷத்திய I சட்டம் தெரிவித்தது. 1908-வது வருஷத்திய சட்டத்தின் விதிகளும், 1936-வது வருஷத்திய சட்டத்தின் விதிகளும், ஜமீன்களிலுள்ள இனும்களுக்குமட்டும் செல்லக்கூடியவையல்ல. ஒரு இனும், ஜமீன் பிரதேசங்களில் இருந்தாலும், அதற்குப் புறம்பாக இருந்தாலும், பிரிட்டிஷ் சர்க்காரால் கொடுக்கப்பட்டிருந்தால் அல்லது காயம் செய்யப்பட்டிருந்தால், அல்லது அங்கீகரிக்கப்பட்டிருந்தால், "எஸ்டேட்டாக", கருதப்பட்டது. XI அத்தியாயத்தில் "விலக்கப்பட்ட இனும்கள்" என்ற வார்த்தைகள் உபயோகத்திருப்பதிலிருந்தும், உத்தேசிக்கப்பட்ட மசோதாவின் 3-வது பிரிவின் (1) வது உட் பிரிவின் D ஷரத்திற்கு விதி ஏற்படுத்தப்பட்டிருப்பதினின்றும், அறிக்கையும் மசோதாவும் ஜமீன்களிலுள்ள இனும்களையே கட்டுப்படுத்த விரும்புகின்றன என்று தெரியவருகிறது. இது, மசோதாவையும் அறிக்கையையும் ஆதரிப்பவர்கள் செய்த பெரிய தவறாகும். இனும்களை மசோதா வரம்பினின்றும் அறிக்கையின் வரம்பினின்றும் விலக்கியதற்கு இத்தவறே காரணம் என்று நான் கருதுகிறேன். பூராவான இனும் கிராமங்கள் எங்கு இருந்தாலும், அவைகளின் பரிஸ்திதிகளை ஆராய்ந்து, விசாரணைக் குறிப்பிற் தெரிவித்துள்ள விஷயங்களுக்குதக்க சட்டத்தைத் தெரிவிப்பது கமிட்டியின் கடமையாகும்.

மைனர் இனும்கள்: கொடுக்கப்பட்ட காலத்தில், பூரா கிராமமாக இல்லாமல், நில தானங்களாக இருந்தால், அவைகள் ஒரு காலத்திலும் எஸ்டேட்டுகளாகக் கருதப்படவில்லை. அந்த இனும்களிலுள்ள குடியானவர்கள் அனுபவ பாத்திய மூலமாக அனுபோக உரிமைகள் அடைந்திருந்தாலொழிய, அல்லது அவர்கள் நிலத்தில் குடிவார உரிமைகளை ஸ்தாபித்திருந்தாலொழிய, அவர்களுக்கு அனுபோக உரிமைகள் இருப்பதாக எப்பொழுதும் கருதப்படவில்லை. ஆனால் பூரா இனும் கிராமங்கள் எப்பொழுதும் வேறு படியாகக் கருதப்பட்டன. அதற்கு வெளிப்படையான காரணம், ஒரு பூரா கிராமம் இனுமாகக் கொடுக்கப்பட்டால், கட்டாயமாக, சர்க்காருக்கு குடியானவர்கள் செலுத்தவேண்டிய நிலவரியும் இனுமாகக் கொடுக்கப்பட்டது என்று கொள்ளவேண்டுமென்பதே. அதாவது, இச்சந்தர்ப்பங்களில், இனும்தாருக்கு மேல்

வார உரிமை கொடுக்கப்பட்டதே யொழிய, குடிவார பாத்தியம் கொடுக்கப்படவில்லை. குடியானவர்களைப் பொறுத்தமட்டில், இனாம் காணியாட்சிக்கும், ஜமீன்தாரி காணியாட்சிக்கும், ரயத்துவாரிக் காணியாட்சிக் கும், இதுவே சரியான சட்ட ஆதாரமாகும். சட்ட விளக்கம் வேறொன்றும் இல்லை. இந்த யாதாஸ்தின் முந்திய அத்தியாயங்களில் தெரிவித்துள்ளபடி, இந்திய சரித்திரத்தின் எல்லாக் காலங்களிலும், நில உரிமை குடியானவர்களுக்கே சொந்தமாயிருந்திருக்கிறது. இக்கொள்கையே, அறிக்கையிலும் விஸ்தரிக் கப்பட்டிருக்கிறது. இதற்கு மாறான கருத்தை, அறிக்கையை ஆதரிப்பவர்கள், இனாம் ரயத்துகள் விஷய மாகக்கொண்டிருப்பது ஆச்சரியமாக இருக்கிறது. கிராமத்திலுள்ள நிலம் குடியானவர்களுக்குச் சேர்ந்த தென்றும், விளைச்சலின் ஒரு பாகத்திற்குத்தான் சர்க்காருக்கு உரிமை யுண்டென்றும் ஒப்புக்கொண்டால், பூரா இனாம் குடியானவன், ரயத்துவாரிக் குடியானவனின்றும், ஜமீன் குடியானவனின்றும் வேறுபட்ட வன் என்று கூறுவதற்கு யாதொரு நியாய முகாந்தரமும் இல்லை யென்பது எனது அபிப்பிராயம். நிலத்தை ஆண்டு அனுபவித்து, விளைச்சலின் ஒரு பாகத்தை, பணமாகவோ, தானியமாகவோ சர்க்காருக் குச் செலுத்திவந்த ஒரே வகைக் குடியானவர்கள்தான் எப்பொழுதும் இருந்து வந்திருக்கிறார்கள். முற்போக்கும், அபிவிருத்தியும் அடைந்த எந்த அரசாங்கத்திலும், குடியானவர்கள் பல வகுப்புகளாகப் பிரிக்கப்படுவது கண்டிக்கப்படவேண்டும். நாட்டில், குடியானவர்கள் திருப்தியுற்று வாழ்வதற்கு, குடி யானவர்களின் உரிமைகள் கூடுமானவரை விஸ்தரிக்கப்படவேண்டும். தீர்வை அல்லது நிலவரியை, குடி யானவன் சர்க்காருக்குச் செலுத்தவேண்டும் என்ற ஒரு நிபந்தனையைவிட வேறு நிபந்தனை இருக்கக் கூடாது.

கமிட்டி முன்பு, இனாம்தார்களின் பக்ஷம், கற்றறிந்த இனாம்தார்களால் வெகு திறமையாக விவாதிக் கப்பட்டது. 1908-வது வருஷத்திய சட்டம் ஏற்படும் சமயத்திலும், 1936-வது வருஷத்திய XVIII சட்டம் தயாரிக்கப்பட்ட சமயத்திலும், இனாம்தார்கள் தங்கள் பாத்தியதைகளை பலமாகப் பிரஸ்தாபித்தார்கள். விசாரித்து முடிவு கூற தகுந்த யோக்கியதை வாய்ந்தவர்கள் இனாம்தார்களின் வழக்கை சாங்கோபாங்க மாக பரிசீலனை செய்திருக்கிறார்கள். இனாம்தார்கள் மூன்று முக்கிய வாதங்களைப் பிரஸ்தாபித்திருக்கிறார் கள். முதல் விஷயம் பின் வருமாறு :—இனாம் காணியாட்சி ஜமீன்தாரிக் காணியாட்சியைப் போன்ற தல்ல. ஏனெனில், நிலவரி மட்டும் தங்களுக்கு (இனாம்தார்களுக்கு)க் கொடுக்கப்பட்டது என்று ஸ்பஷ்ட மாக ரூபிக்கும் வரை, தாங்கள் நிலத்திற்குச் சொந்தக்காரர்கள்; குடிவார உரிமையும் தங்களுக்கு உண்டு. இந்த யாதாஸ்தின் முந்திய அத்தியாயங்களில் விவரிக்கப்பட்டுள்ள கொள்கையின் பிரகாரமும், அறிக்கையில் விளக்கப்பட்டுள்ள கொள்கையின் பிரகாரமும், இந்த தர்க்கத்திற்கு சமாதானம் கூறுதல் மிகவும் சுலபமானது. பூரா இனாம் கிராமங்களிலும், ஜமீன் கிராமங்களிலும், ரயத்துவாரிக் கிராமங்களி லும் உள்ள குடியானவர்களுக்கு, அவர்கள் நிலங்களில் பூரண உரிமை உண்டென்பதற்கு, விழுமிய மேற்கோள்களும் ஆதாரங்களும், அறிக்கையில் விஸ்தாரமாக எடுத்துக்கூறப்பட்டிருக்கின்றன. இந்த ஆதா ரத்தின் மீதே, ஜமீன்களுக்கு சாசுவத ஏற்பாடு செய்யப்பட்டது. ரயத்துவாரிக் காணியாட்சிக்கும் அதே ஆதா ரம்தான் அனுசரிக்கப்பட்டது. அப்படி இருக்கும்பொழுது, இனாம் கிராமக் குடியானவனுக்கு மட்டும் (கிரா மங்கள் இனாம்தார்களுக்குக் கொடுக்கப்படுவதன்முன்) நிலத்தில் உரிமை கிடையாது என்று கூறுவது எவ்வாறு பொருந்தும்? பக்ஷபாதமில்லாத எந்த நீதிபதியும் இக்கேள்விக்கு எதிர் மறையான ("பொருந் தாது" என்ற) விடையையே தருவார். அடுத்தபடியாக, இனாம்தார்கள் வற்புறுத்தும் விஷயம் என்னவென் றால், இனாம் தங்களுக்குக் கொடுக்கப்படும் சமயத்தில், சாகுபடி செய்யும் குடியானவன் ஒருவனும் இல்லையென்று ரூபிப்பதற்கு சந்தர்ப்பம் தரவேண்டும் என்பதே. 1908-வது வருஷத்திய சட்டத்தால் உத்தேசிக்கப்பட்டது இதுவே. இனாம்தாருக்கு மேல்வாரம்மட்டும் கொடுக்கப்பட்டதென்பதை அல்லது இரு வாரங்களும் கொடுக்கப்பட்டதென்பதை ரூபிக்கும் பொறுப்பு சாற்றுக் கூறுபவரைச் சேர்ந்தது என்ற பிரிவு கௌன்ஸில் தீர்ப்புக்குக் காரணமாயிருந்த சட்ட நிலைமையும் இதுவே. 1908-வது வருஷத்திலிரு ந்து, கொடிய செலவுகளுக்குக் காரணமாயிருந்த பல வழக்கு விவகாரங்கள் ஏற்பட்டன. ஒரு சமயம் குடியானவர்கள் ஜயம் அடைந்தார்கள். மற்றொரு சமயத்தில் இனாம்தார் வெற்றியுற்றார். இக்கடும் போரில், ஏழைக் குடியானவன் ஊனமான நிலைமையிலிருந்தான். படிப்பு வாசனை இல்லாத குடியான வன், தன் வழக்கிற்கு ஆதாரமான பத்திரங்களைச் (இவை பெரும்பான்மையாக இனாம்தார்கள் வசம் இருந்தன) சேகரித்து, கோர்ட்டு முன் ஆஜர் செய்வது முடியாத காரியமாகும். சாற்றுக் கூறுபவர் மீது ரூபிக்கும் பொறுப்பைச் சுமத்திய பிரிவிகௌன்ஸில் தீர்ப்பால், குடியானவன் வழக்கு ஜயம் பெறுவது அசாத்தியமானதாய்விட்டது. அக்காலத்தில், சர்க்காரும், சட்ட சபையும், கொண்டிருந்த அபிப்பிராயப்படியும், (அந்த அபிப்பிராயமே அறிக்கையிலும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது). அதாவது, குடியானவன் நிலத்திற்குச் சொந்தக்காரன் என்ற கொள்கைப்படியும், இனாம்தாருக்கும் குடியானவனுக்கும் ஏற்படும் வழக்கு வியாஜ் ஜியங்கள் அசமானமான முறையில் நடப்பதை முன்னிட்டும், இனாம் கிராமங்களில் அனுபோக உரிமைகள் சம்பந்தமாக ஏற்படும் விவகாரங்களை ஒழித்துவிடுவது யுக்தமென்பதை முன்னிட்டும், இனாம்தாருக்கும் குடி யானவனுக்கும் உள்ள சம்பந்தத்தின் உண்மையான தத்துவத்தை, 1936-வது வருஷத்திய திருத்தச்சட்டம் வெகு தெளிவாகவும், விளக்கமாகவும், தெரிவித்தது. அதாவது, செல்வாக்கும், தனமும் படைத்த இனாம் தாரால் நெடுங்காலமாக மறுக்கப்பட்ட நியாயமான, மெய்யான உரிமையை, இனாம் குடியானவனுக்குத் திருப்பிக் கொடுக்க மேற்படி சட்டம் முயன்றது. இனாம்தார்கள் வற்புறுத்திய மூன்றாவது விஷயமாவது: இனாம்தாரின் குத்தகைக்காரனாகவாவது, அல்லது அனுமதியில்லாமல் நிலத்தில் பிரவேசித்தவனாகவாவது, நிலத்தை அனுபவிப்பவனுக்கு, அனுபோக உரிமைகள் கொடுப்பது, இனாம்தாரின் நியாயமான, பிரத்தியேக உரிமைகளை அபகரிப்பதற்கு சமானமாகும் என்பதும், யாதொரு பாத்தியதையும் இல்லாத அன்னியனுக்கு உரிமைகள் கொடுப்பதாகும் என்பதுமே. அவ்வாறு கூறுவது சரிதான் என்று எனக்கும் படுகிறது. சட்ட விரோதமாக நிலத்திற் பிரவேசிப்பவனுக்காவது, ஒப்பந்தம் மூலம் நிலத்தை அனுபவிப்பவனுக்காவது அனு போக உரிமைகள் கொடுப்பது நம்பக்கூடாத விஷயமாயிருக்கிறது. அநாதி கால முதல், இனாம் நிலத்தை அனு பவித்து வரும் பரம்பரைக் குடியானவனாவது, குறைந்த பக்ஷம் பன்னிரண்டு வருஷங்களுக்கு அதிகமாக நிலத்தை அனுபவித்து வருபவனாவது, இனாம் கொடுக்கப்பட்ட காலத்தில் நிலத்தை அனுபவித்து வந்த குடியானவர்களுடன் தொடர்ச்சி காட்டக்கூடிய ஒருவனாவது, அனுபோக பாத்தியம் கொண்டாடுவதை நான் கிரஹிக்கக்கூடும். ஆனால், 1936-வது வருஷத்திய சட்டத்தை ஏற்படுத்தும்பொழுது, சர்க்காரும் சட்ட சபைக்கும் எதிர்ப்பட்ட சங்கடமென்னவென்றால், ஒரேபடித்தான நடை முறையை உண்டுபண்ணி, இனாம் தாருக்கும் குடியானவனுக்கும் பல வருஷங்களாக நடந்துவரும் விரும்பத்தகாத கொடிய வழக்கு விவ காரங்களை முடிவாக ஒழிக்கும் தகுந்த சட்டத்தை எவ்வாறு செய்வதென்பதே. நிலத்திற்குச் சொந்தக் காரன் குடியானவனே என்ற தத்துவத்தின் உண்மையை நன்கு உணர்ந்தும், பூரா இனாம் கிராமம் கொடுக்கப்பட்ட பொழுது, பொதுவாக இனாம்தாருக்கு நில வரி உரிமையே வழங்கப்பட்டதென்பதை நன் குணர்ந்தும், எப்பொழுதாவதொரு காலத்திலிருந்து நிலத்தை அனுபவித்து வரும் குடியானவனுக்கு அனுபோக உரிமைகள் தருவது, சட்ட சம்மதத்திற்கும், தர்ம நியாயத்திற்கும் உகந்தது என்று சர்க்காரும் சட்ட சபையும் கருதின. குடியானவனிடமிருந்து, இனாம்தார் என்ன வரி விதித்தை வசூலிக்கவேண்டும் என்ற விஷயம், அறிக்கையில், இனாம்தார்களுக்கு வெகு அனுகூலமாக முடிவு செய்யப்பட்டிருக்கிறது. குடியானவனிடமிருந்து இனாம்தார் வசூலிக்கும் வரி, போட்டித் தரமான வரியாயிருக்கிறதென்றும், அது வருஷந்தோறும் உயர்த்தப்படுகிறதென்றும், அதிகமான வரி கொடுக்க முன் வருபவர்களுக்கே நிலம்

விடப்படுகிறதென்றும் ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறது. "மாறுக ரூபிக்கப்படும் வரை", 1933-வது வருஷம் நவம்பர் மாதம் 1-ந் தேதியில், குடியானவன் நியாயமாகச் செலுத்தவேண்டிய வரியே, ஒழுங்கான, நியாயமான வரியாகக் கருதப்படவேண்டும் என்று திருத்தச் சட்டம் அமைத்தது. "மாறுக நிரூபிக்கப்படும்வரை" என்ற ஷரத்தைப்பற்றி பிறகு வியாக்கியானம் கூறுகிறேன். இருவாரங்களும் தனக்கு கொடுக்கப்பட்டதென்று இனாம்தார் ரூபிக்கக்கூடும் என்று வைத்துக்கொண்டாலும், தன் இஷ்டப்படி குடியானவனை நிலத்திலிருந்து விலக்கும் உரிமையை மட்டுமே, (1936-வது வருஷத்திய சட்டத்தால்) இனாம்தார் இழந்தார். வரியைப் பொறுத்தமட்டில், நியாயமானதாகவும் ஒழுங்கானதாகவும் விதிக்கப்பட்ட வரி, போட்டித் தரமான வரியாயிருக்கிறபடியால், இனாம்தார் யாதொரு நஷ்டத்தையும் அடையவில்லை. ஜமீன்தாரி வரி விகிதத்தையாவது, ரயத்துவாரி வரி விகிதத்தையாவது ஒப்பிட்டுப் பார்த்தால் இனாம் வரி விகிதம் மிகவும் கூடுதலாக இருக்கிறது. தனக்கிஷ்டமான வரியைக் கேட்கும் உரிமையை இனாம்தார் வெகு காலமாக அனுபவித்து வந்திருக்கிறார் என்ற காரணத்தைக்கொண்டு, இனாம்தார் விஷயத்தில் இத்தகைய வரி விகிதம் அனுமதிக்கப்பட்டது. "மாறுக ரூபிக்கப்படும் வரை" 1933-ம்௵ நவம்பர்௴ 1௳யில் குடியானவன் செலுத்தும் வரி, ஒழுங்கான நியாயமான வரியாகக் கருதப்படவேண்டும் என்ற ஷரத்து, விவாதத்தை உண்டாக்குகிறது. அது சம்பந்தமாக வழக்கு விவகாரங்கள் கட்டாயம் ஏற்படும். ஆதலால் இந்த ஷரத்து நீக்கப்படவேண்டும். முந்திய அத்தியாயங்களில் விவரிக்கப்பட்ட திட்டப்படி, நியாயமான, போதிய நஷ்ட ஈடு கொடுத்து ஜமீன்தார்களோடு, இனாம்தார்களும் ஒழிக்கப்படும் வரை, இப்பொழுதுள்ள வரி விகிதம் மாறாமலிருக்கவேண்டும். அரசாங்கக் காரியங்களுக்கு சர்க்காருக்கு வரி செலுத்தும் ஒரு கடமையையே கொண்ட ஒரே வகைக் குடியானவர்கள்தான் இருக்கவேண்டுமென்பதை மீண்டும் வலியுறுத்துகிறேன். இனாம்தாருக்கு இருவாரமும் சொந்தமாயிருக்கின்றன என்று நீதிஸ்தலம் தீர்புக் கூறும்பொழுது, 1936-ம் ௵ சட்டத்தால் அனுமதிக்கப்பட்ட நஷ்ட ஈட்டுத் தொகை மிகவும் குறைவாயிருக்கிறதென்பது இனாம்தார்களின் மற்றொரு வாதம். இவ்விஷயத்திற்கு ஆதரவு காட்டி, தக்க ஒழுங்கை ஏற்படுத்தவேண்டும். நான் முன்பு தெரிவித்ததைப்போல், குடியானவனை நிலத்திலிருந்து விலக்கும் உரிமையையே இனாம்தார் இழக்கின்றபடியாலும்—அனுமதிக்கப்பட்ட வரி விகிதம் போட்டித் தரமான வரி விகிதமாயிருக்கிறபடியாலும்— இனாம்தார் இழக்கும் உரிமைக்கு சரியான நஷ்ட ஈடு என்ன என்பதே நாம் தீர்மானிக்க வேண்டிய கேள்வியாகும். தற்போது நிலத்தின் ஒரு வருஷ வரியே நஷ்ட ஈடாக அனுமதிக்கப்பட்டிருக்கிறது. இது மிகவும் குறைவான தொகையென்பதிற் சந்தேகம் இல்லை. ஆயினும், குடியானவனால் கொடுக்க முடியாத தொகையை நஷ்ட ஈடாக ஏற்படுத்துவதும் பொருந்தாத முறையாகும். இதைப்பற்றிய ஆலோசனையை சட்ட சபை அங்கத்தினர்களுக்கு விட்டுவிடுகிறேன். அதே சமயத்தில், ஐந்து வருஷ வரியை நஷ்ட ஈடாகத் தருவது நியாயமானதாயிருக்கும் என்னும் எனது சொந்த அபிப்பிராயத்தைத் தெரிவிக்கிறேன். அறிக்கையிலுள்ள தவறான ஒரு கருத்தை விளக்க விரும்புகிறேன். 1862, 1866, 1869 ஆகிய இவ்வருஷங்களின் இனாம் சட்டங்கள் ரத்து செய்யப்படவில்லையென்றும், ஆதலால் 1908-ம் ௵த்திய I-வது சட்டத்திலுள்ள இனாம்கள் சம்பந்தமான விதிகளும், 1936-வது வருஷத்திய XVIII திருத்தச் சட்டமும் செல்லாதென்றும் தவறாகக் கருதப்பட்டிருக்கிறது. 1862, 1866 ஆகிய இவ்வருஷங்களின் இனாம் சட்டங்கள், இனாம்தார்கள் குடியானவர்கள் ஆகிய இவர்களின் சம்பந்தத்தைப்பற்றியும், அந்தஸ்தைப்பற்றியும், உரிமைகளைப்பற்றியும், ஒன்றும் தெரிவிக்கவில்லையென்று, 1869-வது வருஷத்திய VIII சட்டத்தில் ஸ்பஷ்டமாகத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. பீடிகை அதைத் தெளிவுபடுத்தியிருக்கிறது. சட்டப்பிரிவிலும் பின்வருமாறு விளக்கமாகத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது :—"இனாம்தாருக்கு, அதுவரை நிலத்திலில்லாத உரிமையை, 1862-வது வருஷத்திய IV சட்டத்திலுள்ள எந்த விதியாவது அல்லது 1866-வது வருஷத்திய IV சட்டத்தின் எந்த விதியாவது, புதிதாகக் கொடுப்பதாய்க் கருதலாகாது ; இனாம்தார்களுக்குக் கொடுக்கப்படும் உரிமைப்பத்திரம், இனாம் நிலங்களைச் சாகுபடி செய்து அனுபவிக்கும் எவ்வகையினரின் உரிமைகளை, வரையறை செய்வதாகவாவது, குறைப்பதாகவாவது பாதிப்பதாகவாவது, அழிப்பதாகவாவது மேற்படி உரிமைப்பத்திரத்தில் குறிக்கப்பட்டுள்ள இதர நபரின் உரிமையை பாதிப்பதாகவாவது கருதப்படக்கூடாது" சர்க்காருக்கும், இனாம்தார்களுக்கும், முறையே இருந்த உரிமைகளைப்பற்றியே மேற்படி இனாம் சட்டங்கள் தெரிவிக்கின்றனவேயொழிய, இனாம்தார், குடியானவன், ஆகிய இவர்களின் சம்பந்தத்தைப்பற்றியாவது, உரிமைகளைப்பற்றியாவது ஒன்றும் கூறவில்லை. இனாம்களை ஏக விஷயமாக பரிசீலனை செய்து, அவைகள் சம்பந்தமாக தக்க சட்டத்தைத் தெரிவிக்கவேண்டுமென்ற எனது திருத்தங்கள் நிறைவேற்றப்படாதது மிகவும் வருந்தத்தக்கது என்று கூற விரும்புகிறேன். இனாம் கிராமங்களிலுள்ள காணியாட்சி முறை வேறுபாடானதாகையால், அதை ஜமீன்களோடு ஒரே சட்டத்தில் கலப்பது, குழப்பத்திற்கும், மயக்கத்திற்கும், இடம் தரும் என்று ஒரு ஆட்சேபனை பிறந்தது. அவ்வபிப்பிராயம் எனக்கில்லையாயினும், பிரத்தியேகமான சட்டம் செய்யவேண்டுமென்பதற்கு சம்மதித்து, அது சம்பந்தமான தீர்மானங்களைத் தெரிவிக்குமாறு கமிட்டியைக் கேட்டுக்கொண்டேன். யான் கூறிய இந்த யோசனை, கமிட்டியின் நான்கு அங்கத்தினர்களால் ஆதரிக்கப்பட்டும், பிறர் அதற்குத்தக்க சிந்தனையயளிக்காது நிராகரித்தது வருந்தற்பாலதாகும்.

7-ம் அத்தியாயம்.

காடுகளும், குன்றுகளும்.

காடுகள், குன்றுகள், (3)-வது பிரிவின் (16)-வது உட்பிரிவின் (a) (b) ஷரத்துகளில் அடங்காத மற்ற நிலங்கள் ஆகிய இவைகள் சம்பந்தமாக, குடியானவர்களுக்கும், ஜமீன்தார்களுக்கும் உள்ள உரிமைகளும், கடமைகளும், ரயத்துவாரிப் பிரதேசங்களில் சர்க்காருக்கும், குடியானவர்களுக்கும் உள்ள உரிமைகள், கடமைகளைப் போலவே யிருக்கவேண்டுமென்று கமிட்டி முன்பு யான் ஒரு திருத்தம் கொண்டு வந்தேன் ; மேற்கூறிய இரண்டு ஷரத்துகளுக்கு உட்பட்ட நிலங்களைப்பற்றிப் பின்வருமாறு பிரேரேபித்தேன். சமுதாய விஷயங்களுக்கு ஒதுக்கி வைக்கப்பட்டுள்ள, கிராம மனைகள், பொதுப்பாதைகள், மாட்டுத் தொழுவங்கள், மயானங்கள், புதை நிலங்கள், "புந்தைகள்" குளங்கள், கால்வாய்கள் முதலியவைகள் பொது ஜனங்களைச் சேர்ந்தவை ; தற்போதைய உரிமையாவது, உத்தராதிகார உரிமையாவது, ஹக்காவது, அவைகளில் ஜமீந்தாருக்குக் கிடையாது என்றும் அவைகள் சம்பந்தமாக பொது ஜனங்களுக்குள்ள உரிமைகள், தற்காக்கப்படுவதற்கு சட்ட விதிகள் ஏற்படுத்தப்படும் என்றும் விளக்கமாகத் தெரிவிக்கவேண்டுமென்றும் கூறினேன். அறிக்கையிற் சிபார்சு செய்யப்பட்டுள்ள கட்டாய சர்வேயில் மேற்படி நிலங்கள் நிர்ணயம் செய்யப்பட்டு, அவைகளைப் பற்றி சரியான பதிவுப் புஸ்தகங்கள் தயாரிக்கப்படவேண்டுமென்றும் ; தீர்மானிக்கப்பட்ட மசோதாவின் 4-வது பிரிவின் 8-வது ஷரத்து, மேற்படி நிலங்களைப்பற்றி அறிக்கையிற் செய்துள்ள (அத்தியாயம் VIII) சிபார்சுகளுக்கும் முடிவுகளுக்கும் முரணாக இருக்கிறபடியால், மேற்படி 8-வது ஷரத்து தகுந்த முறையில் திருத்தியமைக்கப்படவேண்டும் என்றும் தெரிவித்தேன். காடுகளையும், குன்றுகளையும்பற்றி எனது அபிப்பிராயம் என்னவென்றால், ஜமீன்தாரிப் பிரதேசங்களிலுள்ள காடுகளிலும் குன்றுகளிலும் ஜமீன்தார்கள் அனுபவித்து வரும் உரிமைகளுக்கு நஷ்ட ஈடு கொடுத்து, ஜமீன்கள் ஒழிக்கப்படும்வரை, ரயத்துவாரிப் பிரதேசங்களிலுள்ள பரிஸ்திதிகள் ஜமீன் பிரதேசங்களிலும் இருக்கவேண்டும் என்பதே.

மஹபூப் அலி பெய்க்,

பெஜவாடா, 1938-ம் ௵ நவம்பர்௴ 13௳.

ஸ்ரீமான். பி. நாராயணசுவாமி நாயுடு, எம்.எல்.ஸி., சமர்ப்பித்த அபிப்பிராயபேத யாதாஸ்து.

பெரும்பான்மை அறிக்கையிலுள்ள அபிப்பிராயங்களையும், கருத்துக்களையும், எண்ணங்களையும், சிபார்சுகளையும், இந்த யாதாஸ்தில் தெரிவித்துள்ள அபிப்பிராயங்களுக்கு உட்பட்டு, யான் ஆமோதிக்கிறேன் என்று கொள்ளலாம்.

“ஜமீன்தார்கள் சம்பந்தமாக குடியானவர்களுக்குள்ள நியாய உரிமை என்ன என்பதே விசாரணையின் முதற் கேள்வியாகும்.” இக்கேள்விக்கு விடையளிப்பதற்கு, சாசுவத பைசல் ஏறபடுவதற்குக் காரணமாயிருந்த சம்பவங்களின் சரித்திரத்தைச் சுருக்கமாக அறிவிப்பது அவசியமாகும். இந்த ராஜதானியத்தின் வட பாகத்திலும், தென் பாகத்திலும், பல பிரதேசங்களை, சர்க்கார், கர்நாடகம், ஜாகீர் முதலிய பிரதேசங்களை, பிரிட்டிஷார் கைப்பற்றியபொழுது, சர்க்காருக்கு உரிய வரிகளை பணமாகவோ, தானியமாகவோ செலுத்தி வந்த பெருவாரியான குடியானவர்கள் நாட்டிலிருப்பதையும், நாட்டின் ஸ்தாபிதமான வழக்கப் பிரகாரம், தங்கள் தங்கள் ஜமீன்களிலும், பாளையங்களிலும் குடியானவர்கள் சர்க்காருக்குச் செலுத்தவேண்டிய வரியை வசூலித்துவந்த ஜமீன்தார்களும் பாளையக்காரர்களும் இருப்பதையும், அவாகள் (பிரிட்டிஷார்) கண்டார்கள். இத்தகைய ஜமீன்தார்களும் பாளையக்காரர்களும் இல்லாத பிரதேசங்களில், குடியானவர்கள் சர்க்காருக்குச் செலுத்தவேண்டிய தீர்வைகளை சர்க்காரே நேராக தங்கள் அதிகாரிகள் மூலமாகவாவது அல்லது குத்தகைக்காரர்கள் மூலமாவது வசூலித்துவந்தார்கள்.

பிரிட்டிஷ் அரசாங்கத்தார் இந்நாட்டை ஆட்சிபுரிய ஆரம்பித்தபொழுது, முதலில் வருஷாந்தரமாகவும், பிறகு சில வருஷங்களுக்கு ஒரு முறையாகவும் விதிக்கப்பட்ட ஜம்மாத்தொகையை (பேஷ்கஷை)ச் செலுத்த வேண்டும் என்ற நிபந்தனையின்மீது, யதாப்பிரகாரம் ஜமீன்தார்களையும் பாளையக்காரர்களையும் குடியானவர்களிடமிருந்து தீர்வைகள் வசூலிக்க அனுமதித்தனர்.

சாசுவத பைசல் ஏற்படுவதற்குமுன் ஜமீன்தார்களுடைய அல்லது பாளையக்காரர்களுடைய அந்தஸ்தும் நிலைமையும் எவ்வாறிருந்ததென்பது, கலெக்டர்களுக்கு ரெவினியூ போர்டார் 1799-ம் வருஷம் அக்டோபர்மீ 15உயில் அனுப்பிய குறிப்புகளின் 4-வது ஷரத்திலிருந்து தெரியவருகிறது. 4-வது ஷரத்து பின் வருமாறு :—

> “தற்போது, ஜமீன்தார்களுக்கு தங்கள் ஜமீன்களில் இருக்கும் காணியாட்சி உரிமை நிலைவரமற்றதாயிருக்கிறது. ஜமீன்தார்களுக்கு நில உரிமை இருக்கிறதா என்பதும் விளங்கவில்லை. அதற்கு யாதொரு ஆதாரம் காண்பதும் அரிதாயிருக்கிறது. ஜமீன்கள் பரம்பரை உடைமைகளாகக் கருதப் படுகின்றன. ஆயினும், பேஷ்கஷ் நிர்மாணம் நிலைவரமற்றதாயிருக்கிறது ; அதற்கு விதி விதரணைகள் கிடையா. ஜமீன்தார், பேஷ்கஷின் ஒரு பாகத்தைக் கொடுக்கத் தவறினாலும், சர்க்கார் இஷ்டப்படி ஜமீன் முழுவதும் கைப்பற்றப்படும்.”

அதாவது ஜமீன்தார்களுக்கு பரம்பரைப் பாத்தியம் இருப்பதாகக் கருதப்பட்டாலும், ஜமீன்களை சர்க்கார் கைப்பற்றக்கூடும். சர்க்கார் கேட்கக்கூடிய பேஷ்கஷுக்கும் வரையறை ஏற்படவில்லை. ஜமீன்களைப் பராதீனம் செய்யும் உரிமையும் சர்க்கார் இஷ்டத்தைப் பொறுத்திருந்தது. ஷை உரிமை சாதாரண விற்பனை மூலமாவது, கோர்ட்டு விற்பனை மூலமாவது பிறருக்கு மாற்றக்கூடுமா என்பதும் சந்தேகமாய்த்தான் இருந்தது. ஜமீன்தார்கள் குடியானவர்களிடம் தீர்வைகளை வசூலித்து, சர்க்காருக்குச் செலுத்தும், சர்க்கார்காரியத்தை செய்து வந்தாலும், அவர்களுக்குத் தங்கள் ஜமீன்களிலாவது பாளையங்களிலாவது நில உரிமை இடையாது. அப்படியிருந்தால் அது சர்க்கார் இஷ்டத்தையும் தயையும் பொறுத்தது. ஷை பாத்தியதையை உடைமை, பொருள் அல்லது சொத்தாக மாற்றி, சன்னது மூலம் ஜமீன்தார்களுக்குக் கொடுக்கவேண்டுமென்பது சாசுவத பைசல் ஏற்பாடு உத்தேசித்த விஷயமாகும். தங்கள் அதிகாரிகள் அல்லது குத்தகைக்காரர்கள் மூலம் நேராக வரி வசூலிக்கப்பட்ட பிரதேசங்களிலும்கூட, ஜமீன்தாரி முறை அனுசரிக்கவேண்டுமென்று, அப்பொழுதிருந்த சர்க்கார் விரும்பியது. அக்காலத்திலிருந்த ரெவினியூ பரிபாலனக் கொள்கைகளின் போக்கைத் தெரிவிக்கிறது. அதன்படி, சிலருக்கு சர்க்கார்ப் பிரதேசங்களில், தீர்வை வசூலிக்கும் உரிமை கொடுக் கப்பட்டது. இவைகளே அறிக்கையில் குறிக்கப்பட்டுள்ள ஹாவலி நிலங்களாகும். ஆதலால், உண்மையாக, சாசுவத பைசல் ஏற்பாடு, ஒரு வகையான புதிய உடைமையை சிருட்டித்தது ; அதாவது ஜமீன்தாரின் அல்லது வரிக் குத்தகைக்காரரின் உத்தியோகம் நிரந்தரமாகச் செய்யப்பட்டது ; அதன் பாத்தியம் பாரம்பரியமாகவும், தானுதிவிக்கிரயம் மூலம் பிறருக்கு மாற்றக்கூடியதாகவும், கடன் கொடுத்தவர்களுக்கு கோர்ட்டுகள் மூலம் பராதீனம் பண்ணக்கூடியதாகவும் செய்யப்பட்டது. அதுபற்றியே சாசுவத பைசல் ரெகுலேஷனில் கீழ்க்கண்ட ஷரத்துகள் இருக்கின்றன :

> 2-வது ஷரத்து, பேஷ்கஷை நிரந்தரமாக்குகிறது. பேஷ்கஷ் செலுத்தத் தவறினால் ஜமீன் ஏலத்துக்கு விடப்படும் என்று 7-வது ஷரத்து தெரிவிக்கிறது. சர்க்கார் அனுமதியில்லாமல், தானுதி விக்கிரய மூலமாக, ஜமீன் முழுவதில், அல்லது அதன் ஒரு பாகத்தில் தங்களுக்குள்ள உடைமை உரிமையை ஜமீன்தார் பராதீனம் செய்யலாம் என்று 8-வது ஷரத்து தெரிவிக்கிறது. மேற்கூறியதிலிருந்து ஜமீந்தார்கள் தங்கள் பாத்தியதைகளை, தானுதி விக்கிரயம் மூலமாக பராதீனம் செய்யலாம், என்ற அர்த்தத்தில், அவர்கள் (ஜமீன்தார்கள்) உடைமையாளர்களாகச் (**proprietors**) செய்யப்பட்டனர் என்று எனக்குத் தோன்றுகிறது. அப்படியாக, பராதீனம் செய்யக்கூடியதும், பங்கிட்டுக்கொள்ளக் கூடியதும், பாரம்பரியமானதும், தீர்ப்புகள் முதலிய பாத்தியங்களுக்கும் கோர்ட்டுகள் மூலம் கைப்பற்றக்கூடியதுமான ஒருவகை உடைமைப் பொருள்களாக ஜமீன்கள் ஏற்படுத்தப்பட்டன. இவ்வாறு உண்டாக்கப்பட்ட உடைமை, ஜமீன்களிலுள்ள நிலங்கள் சம்பந்தமான உடைமையாகும் என்ற தவறுன எண்ணமாவது, மயக்கமாவது, கொள்ளலாகாது. நாட்டின் வழக்கப்படி, சர்க்காருக்குத் தீர்வையைச் செலுத்தி, நிலங்களை அனுபவித்துவந்த பெருவாரியான குடியானவர்களின் உரிமைகளைப் பாதிக்கவேண்டுமென்பது சாசுவத பைசல் ஏற்பாட்டின் நோக்கம் அல்ல என்பது கீழ்க்கண்ட விஷயங்களிலிருந்து தெளிவாக விளங்குகிறது.

சாசுவத பைசல் ஏற்பாடு சம்பந்தமாக கலெக்டர்களுக்கு அனுப்பப்பட்ட குறிப்புகளில், இந்த விஷயத்திற்கு ஆதாரமான சிறந்த ருஜு இருக்கிறது.

29-வது ஷரத்து பின்வருமாறு தெரிவிக்கிறது :—

"பல ஜில்லாக்களில், தாலுக்தார்கள், கீழ்த்தரக் குடியானவர்கள் ஆகிய இவர்களின் உரிமைகளைப் பற்றி அவசியமான ஒவ்வொரு தகவலும் சேகரிக்கப்படவேண்டுமென சர்க்கார் உத்தரவிட்டிருப்பது நீங்கள் அறிந்ததே. ஏனெனில் ஜமீன்தார்களின் உடைமை உரிமைகள் **(proprietory rights)** ஸ்திரப்படுத்தும்பொழுது, பிற நபர்களின் நிர்ணயமான உரிமைகள் பாதிக்கப்படக்கூடாதென்பது சர்க்கார் விருப்பமாகும்."

32-வது ஷரத்து பின்வருமாறு :—

"இந்த பாத்தியதைகளுக்கு புறம்பாகவும், பிரத்தியேகமாகவும், நிலத்தைச் சாகுபடி செய்யும் குடியான வர்களின் உரிமைகளும் ஹக்குகளும் இருக்கின்றன. இவர்களுக்கு நிலத்தில் சண்டிதமான உடைமை இல்லாவிடினும், தங்கள் சக்திக்கேற்றாற்போல், நிலத்தைச் சாகுபடி செய்து, சர்க்காருக்கு அல்லது ஜமீன்தாருக்கு பணமாகவோ, தானியமாகவோ விளைச்சலின் வழக்கமான ஒரு பாகத்தைச் செலுத்திவரும்வரை அவர்களுக்கு அனுபோக உரிமை உண்டு."

33-வது ஷரத்து பின்வருமாறு :—

"சர்க்காரின் அல்லது ஜமீன்தாரின் வரி வருமானத்தை ஸ்திரப்படுத்துவதற்கு, நீதி ஸ்தலங்களால் தகுந்த விதிகள் ஏற்படுத்தப்படும் என்று முன்னரே தெரிவித்திருக்கிறோம். அதே விதிகள் ரயத்து களுக்கும் கீழ்த்தரக் குடியானவர்களுக்கும் பாதுகாப்பளிக்கும். ஆயினும், இவர்களுக்குள் நிர்ணய மான கட்டுப்பாடு இருப்பதற்கு, ஜமீன்தார் அல்லது வரிக் குத்தகைக்காரன், நிஷ்கரணையான, எழுத்து மூலமான ஒப்பந்தங்களை (அல்லது பட்டாக்களை) ரயத்துகளோடும், கீழ்த்தரக் குடியானவர்களோடும் செய்துகொள்ளவேண்டும். எந்த வழக்கப்படியாவது, விதிப்படியாவது, குடியானவன் செலுத்த வேண்டிய வரி, பட்டாவில் விளக்கமாகத் தெரிவிக்கப்படவேண்டும். என்ன தொகையென்பது விசிதமாகக் குறிக்கப்படவேண்டும். வரி விகிதம் மட்டும் குறிப்பிடக்கூடியபொழுது, அதாவது சாகுபடியான பிறகு நிலம் அளக்கப்பட்டு, வரி விகிதம் நிர்ணயம் செய்யப்படும்பொழுது அல்லது பயிரைப் பார்வை இட்டு வரி நிர்ணயம் செய்யும்பொழுது, அல்லது வரி தானியமாகச் செலுத்தப்படும் பொழுது எவ்வாறு செலுத்துவது, விளைச்சலில் எவ்வளவு பாகம் செலுத்துவது, என்பது சம்பந்த மான ஒவ்வொரு நிபந்தனையும் ஸ்பஷ்டமாகத் தெரிவிக்கப்படவேண்டும்."

34-வது ஷரத்து பின்வருமாறு :—

"மேலே தெரிவிக்கப்பட்ட விதிகளுக்கு இணங்கவும், தனது ஜமீனிலுள்ள பரிஸ்திதிகள், வழக்கங் களுக்கு இணங்கவும், ஒவ்வொரு ஜமீன்தாரும், தனி உரிமையுள்ள தாலுக்தாரும் அல்லது இதர நிலச்சுவான்தாரும், பட்டா அல்லது பட்டாக்களின் "பாரத்தை" தயாரிக்கவேண்டும். அது கலெக்டர் அங்கீகாரத்தைப் பெற்று அவருடைய பெயரும் உத்தியோக தோரணையும் தெரிவிக்கப்பட்டு, கையொப்பமிடப்படவேண்டும். அதன் நகல் ஜில்லா அடலத் கோர்ட்டில் பதிவு செய்யப்படவேண்டும். ஜமீனில் அல்லது தாலுகாவிலுள்ள ஒவ்வொரு முக்கிய கச்சேரியிலும் ஒரு நகல் தாக்கல் செய்யப்பட வேண்டும். மனுச் செய்துகொண்டால் அதற்குச் சரியான பட்டாக்கள் குடியானவர்களுக்குக் கொடுக் கப்படும். விதிக்கப்பட்ட முறைக்கு மாறான பட்டாக்கள் செல்லா."

35-வது ஷரத்து பின்வருமாறு :—

"தீர்வை நிர்ணயம் செய்யப்பட்ட பிறகு, ஜமீன்தாரையாவது, தாலூக்தாரையாவது, வரிக் குத்தகைக்கார ரையாவது, தனக்கு பட்டா கொடுக்கவேண்டுமென்று குடியானவன் கேட்கலாம். பட்டா கொடுக்க மறுத்தார்கள் என்பது ஜில்லா அடலத் கோர்ட்டில் ரூபிக்கப்பட்டால், குடியானவனுக்கு உண்டான செலவிற்கும் சிரமத்திற்கும் தகுந்தபடி, ஜமீன்தார் முதலியவர்களுக்கு அபராதம் விதிக்கப்படும். நிர்ணயம் செய்யப்பட்ட வரிக்கு, ஜமீன்தார் அல்லது வரிக் குத்தகைக்காரர், மேலே தெரிவிக்கப்பட்ட விதிகளின்படி தயாரிக்கப்பட்ட பட்டாவை குடியானவனுக்குக் கொடுக்கவேண்டும். அவர் நேராகக் கொடுக்கலாம் ; அல்லது தங்கள் விசேஷ அதிகாரம் பெற்ற ஏஜெண்டுகள் மூலம் கொடுக்கலாம். குடியானவன் பட்டா பெற மறுத்து எதிர்க்க ஆரம்பித்தால், அதன் காரணமாக, மேலே தெரி விக்கப்பட்ட முறைப் பிரகாரம் நடந்துகொள்பவர்களுக்கு நஷ்டம் ஏற்பட்டால், அதற்கு பரிகாரம் அளிப்பதற்கு தக்க விதிகள் ஏற்படுத்தப்படும். வரிக் குத்தகைக்காரர்கள் கொடுக்கும் பட்டாக்கள் தங்கள் குத்தகையின் கால வரையறைக்கு உட்பட்டதாயிருக்கவேண்டும். ஜமீன்கள் அடிக்கடி பிரிவினை செய்யப்படுகின்றமையாலும், அவைகளிற் சில பாகம் பிறருக்கு பாராதீனம் செய்யக் கூடுமாகையாலும், ஜமீந்தார்கள் கொடுக்கும் பட்டாக்களுக்கும் காலவரையறை குறிக்கப்படவேண்டும். பத்துவருஷ காலம் குறிக்கப்படலாம்."

36-வது ஷரத்து பின்வருமாறு :—

"கீழ்த்தர தாலூக்தார்கள், கீழ்த்தர வரிக் குத்தகைக்காரர்கள், ரயத்துகள் முதலியவர்களிடம் வரி அல்லது குத்தகை வசூலிக்கும் ஒவ்வொரு ஜமீன்தாரும், தனி உரிமையுள்ள தாலூக்தாரும், எவ்வகையான வரிக்குத்தகைக்காரனும் தாங்கள் பெறும் தொகைகளுக்கு ரசீதுகள் கொடுக்க வேண்டும். ஒவ்வொரு அம்சத்தையும்பற்றி, குடியானவன் செலுத்தவேண்டிய தொகை முழு வதும் செல்லுபடியானபிறகு அதற்கு ஜமீன்தார் முதலியவர்கள் பூரா ரசீது கொடுக்கவேண்டும். தனக்கு ரசீது மறுக்கப்பட்டதென்று ஜில்லா அடலத் கோர்ட்டில் ரூபிக்கும் குடியானவனுக்கு அவன் செலுத்திய தொகைக்கு ரெட்டிப்பான தொகையை, ஷை ஜமீன்தார் முதலியவர்கள் நஷ்ட ஈடாகத் தரவேண்டும். கீழ்த்தர வரிக் குத்தகைக்காரர்களும், ரயத்துகளும், தங்களுக்கு செலுத்தவேண் டிய வரித்தவணைகளை ஷை ஜமீன்தார் முதலியவர்கள் அறுவடை காலத்திற்கும் தானிய விற்பனை காலத் திற்கும் தகுந்தபடி ஏற்படுத்தவேண்டும். இந்த விதிக்கு மாறாக நடந்தால் அபராதம் விதிக்கப்படும்."

37-வது ஷரத்து பின் வருமாறு :—

"ஜமீன்தார்களும், தாலூக்தார்களும், வரிக் குத்தகைக்காரர்களும், ரயத்துகளும், ஒரு குறித்த நில விஸ்தீர்ணத்திற்கு, வரி இவ்வளவு என்று ஒப்பந்தம் செய்துகொண்டு, எந்த தானியம் பயிர் செய்தால், அதிக லாபம் கிடைக்கும் என்றும் குடியானவர்கள் நினைக்கிறார்களோ அதைப் பயிர் செய்யும்படி அவர்களை அனுமதிப்பது பரஸ்பர நன்மையை விளைக்கும் என்று அவர்கள் காலக்கிரமத்தில் அறிவார்கள். அதற்கிடையே, குடியானவர்கள் செலுத்தும் வரியை, எந்த முகாந்தரத்தைக் கொண்டும், எந்த சாக்குக்கூறியும் உயர்த்தலாகாது. அப்படி யாராவது உயர்த்தினர் என்று தெரிந்தால் அவருக்கு அபராதம் விதிக்கப்படும், இப்பொழுது குடியானவர் களிடம் வசூலிக்கப்படும் பலவித வரிகள், விதி விதரணையில்லாமல், குடியானவர்களுக்கு அதிக

உபத்திரவத்தைத் தருகின்றன என்பதை உங்களுக்குத் தெரிவிக்க விரும்புகிறோம். குடியான வர்களின் சம்மதத்தின்பேரில் மேற்படி பலவித வரிகளை, ஜமீன்தார்கள் ஒருங்கு திரட்டி ஒரு தொகையாகத் திருத்தியமைத்தால் வரி நிர்ணயம் சுளுவாயிருக்கும். குடியானவர்களுக்கும் ஜமீன்தார்களுக்கும் உள்ள அசௌகர்யமும் மறைந்துவிடும்."

தங்கள் ஜமீன்தாரி பாத்தியதைக்கு ஜமீன்தார்கள் உடைமையாளர்களாகச் செய்யப்பட்டபோதிலும், தங்கள் பிரதேசங்களிலுள்ள பெருவாரியான குடியானவர்களுக்கும் தங்களுக்கும் உள்ள சம்பந்தம் முன்போலவே, பழைய மாமூலான வழக்கத்தின்படியும், அது விஷயமாக சர்க்கார் இயற்றும் சட்டங் களின்படியும், இருந்து வரவேண்டுமென்பது, மேலே தெரிவித்த ஷரத்துகளால் தெளிவாக நிலை நாட்டப்பட் டிருக்கிறது. ரெவினியூ போர்டுக்கு 1799-ம் வருஷம் செப்டம்பர் மாதம் 4-ம் தேதியில் சர்க்கார் அனுப்பிய உத்தரவிலும் இதே கருத்துதான் அறிவிக்கப்பட்டிருக்கிறது. தங்கள் தங்கள் ஜமீன் களுக்கு அல்லது எஸ்டேட்டுகளுக்கு, ஜமீன்தார்கள், உடைமையாளர்களாக ஏற்படுத்தப்படவேண் டும் என்று கூறும் மேற்படி உத்தரவில் பின்வரும் விஷயம் கூட குறிக்கப்பட்டிருக்கிறது:—

"பல ஜில்லாக்களில், தாலூக்தார்களுக்கும் கீழ்த்தரக் குடியானவர்களுக்கும் உள்ள உரிமை களைப்பற்றி அவசியமான ஒவ்வொரு தகவலையும் நீங்கள் சேகரிக்கவேண்டும். ஏனெனில், ஜமீன்தார்களுக்கு, உடைமை உரிமைகளை ஸ்திரப்படுத்தும்பொழுது, பிற நபர்களின் நிர்ணயமான உரிமைகள் பாதிக்கப்படக்கூடா."

முடிவில், பெரும்பான்மை அறிக்கையில் 45-வது பக்கத்தில் எடுத்தெழுதப்பட்டுள்ள கீழ்க்கண்ட வாச கங்களும் அதே கருத்தை ஆதரிக்கின்றன :—

"இதுவரையே தங்கள் யஜமானியத்தில் இருந்துவரும் நிலங்கள் சம்பந்தமாக, ஜமீன்தார் களுக்கு உடைமை உரிமைகள் அளிப்பதாவது, இனிமேல் ஏற்படுத்த இருக்கும் ஜமீன்தார்களுக்கு உடைமை உரிமையளிப்பதாவது, அவர்கள் அதிகாரத்திற்கு உட்பட்ட குடியானவர்கள் இதுவரை அனுபவித்துவந்த உரிமைகளைப் பாதிப்பதாகக் கருதக்கூடாதென்றும்; குடியானவர்கள் பாது காப்புக்கு அவசியமானவையென்று தோன்றும் சட்டங்களை சர்க்கார் இயற்றுவதை தடுப்பதாகக் கருதக்கூடாதென்றும், சாசுவத பைசல் ஏற்பாடுகளை அங்கீகரித்த கவர்னர் ஜெனரல், சென்னை சர்க்காருக்கு தெளிவாகத் தெரிவித்தார்."

மேற்கூறியதிலிருந்து, ஜமீன்தார்கள் நிலத்தின் உடைமையாளராகச் செய்யப்படவேண்டுமென்பதே சாசுவத பைசல் ஏற்பாட்டின் கருத்து என்று சொல்வதற்கு இடம் இல்லை. அவ்வாறிருப்பின் குடியான வர்களின் உரிமைகள், குடியானவர்களுக்கும் ஜமீன்தார்களுக்கும் உள்ள சம்பந்தத்தை ஒழுங்குபடுத்து வதற்குச் செய்யவேண்டிய விதிகள், அவைகள் சம்பந்தமாக சர்க்கார் வைத்துக்கொண்ட சட்டமியற்றும் அதிகாரம், ஆகிய இவைகளைப்பற்றி விசாரணை நடத்தியது அனாவசியமாகும். ஜமீன்தார்கள், தங்கள் ஜமீன்களுக்கு அல்லது எஸ்டேட்டுகளுக்கு மட்டும் உடைமையாளர்களாகச் செய்யப்பட்டார்கள் என்ற முடி வைத்தான் நாம் செய்யவேண்டியதாயிருக்கிறது. ஆனால், சாசுவத பைசலுக்கு முன் குடியானவர்களுக் கும் ஜமீன்தாருக்கும் இருந்துவந்த சட்ட ரீதியான சம்பந்தத்தை கலைக்கவேண்டுமென்பது அதன் கருத் தல்ல. மேற்படி சம்பந்தம், நாட்டின் வழக்கத்தாலும், சம்பிரதாயத்தாலும், சர்க்கார் சட்டங்களாலும் ஒழுங்கு படுத்தப்பட்டு, அவைகளுக்கு உட்பட்டது.

மேற்கூறிய நிலைமையின் உண்மையான கருத்தின்படியும், கொள்கையின்படியும், 1802-ம் வருஷம் ஜூலை மாதம் 13-ம் தேதியில், சாசுவத பைசல் ரெகுலேஷனும், பட்டா ரெகுலேஷனும் இன்னும் சில ரெகுலேஷன்களும் சட்டமாக்கப்பட்டன. மேற்கூறிய இரண்டு ரெகுலேஷன்களையும், கர்ணம் ரெகுலேஷனை யும், ஆராய்ந்து பார்த்தால் அதே கருத்துதான் வெளிப்படும்.

1802-வது வருஷத்திய XXV ரெகுலேஷனின் 11-வது ஷரத்தும்; (கர்ணங்களைப்பற்றியது) தீர்வை விஷயமாக ஜமீன்தார்கள் குடியானவர்களுடன் ஒப்பந்தம் செய்துகொண்டு, அவர்களுக்கு பட்டா அல்லது கௌல் கொடுக்கவேண்டுமென்றும், அப்படிச் செய்யத்தவறினால் அவர்களுக்கு (ஜமீன்தார்களுக்கு) அபராதம் விதிக்கப்படும் என்றும் தெரிவிக்கும் 14-வது ஷரத்தும், குடியானவர்கள் அனுபவத்தில் இருக்கும் நிலங்களில், ஜமீன்தாருக்கு உடைமை உரிமையிருக்கிறதென்பதற்கு முற்றிலும் ஒவ்வாதவை யாகும்.

1802-வது வருஷத்திய XXX பட்டா ரெகுலேஷனின் 10-வது ஷரத்தின்படி, பட்டா பெறுவதற்கு
குடியானவன் மறுத்தால்மட்டுமே, ஜமீன்தார்கள், அவர்கள் நிலங்களை பிறருக்குத் தரக்கூடும். ரசீது தருவ
தைப்பற்றியும், புதிய வரி விதிப்பதுபற்றியும், பட்டா ரெகுலேஷனில் இன்னும் சில ஷரத்துகள் இருக்கின்
றன. குடியானவனுக்கும் ஜமீந்தாருக்கும் உள்ள சட்ட ரீதியான சம்பந்தம் நிலப்பிரபுவுக்கும் (land-
lord) குத்தகைக்குடியானவனுக்கும் உள்ள சம்பந்தமென்றால், பட்டா ரெகுலேஷன் முழுவதும் பிர
யோசனமற்றது; அர்த்தங்கெட்டது. பட்டா ரெகுலேஷன், குடியானவர்களுக்கு அக்காலத்திலிருந்த மாமூலான
உரிமைகளை எடுத்துக்கூறும் விளக்கவுரையல்ல. ஆனால் "நிலத்தின் விளைச்சலைப் பங்கிட்டுக்கொள்வதிலும்,
சில நிலங்களுக்கு பண வரியைக் கணக்கிடுவதிலும், இப்பொழுதுள்ள நிலைவரமற்ற முறை ஒழிக்கப்பட
வேண்டும்" என்பதை முன்னிட்டு, ஜமீந்தார்களும் குடியானவர்களும் பட்டா உபயோகித்துக்கொள்ளவேண்
டும் என்பதையே மேற்படி ரெகுலேஷன் தெரிவிக்கிறது. இவ்வாறு நாட்டின் மாமூலான சட்டம் நிஷ்
கரணையற்றதாயிருந்தமையாலும், சாசுவத பைசல் வாசகமும், பட்டா ரெகுலேஷன் வாசகமும் தவறாக
அர்த்தம் செய்யக்கூடுமாகையாலும், குடியானவனுடைய உரிமை, பாரம்பரியமானதா, அவன் செலுத்தும்
வரி, ஒப்பந்தத்தால் அல்லது வழக்கத்தால் கட்டுப்படலாமா, என்பதை விளக்கும் அவசியம், விரைவில்
ஏற்பட்டது. எவ்வகை நிலச்சுவான்தார்களுடைய அல்லது குடியானவர்களுடைய உரிமைகளை குறைப்பதற்
காவது, பாதிப்பதற்காவது, அழிப்பதற்காவது, 1802-வது வருஷத்திய XXV, XXVIII, XXX ரெகு
லேஷன்கள் ஏற்படுத்தவில்லையென்றும்; ஆனால் குடியானவர்கள் நியாயமாகச் செலுத்தவேண்டிய வரி
யைக் கொடுக்கத் தவறினால், அப்பொழுது அவர்கள் மீது என்ன நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளலாம்
என்பதைப்பற்றியும், அப்படிப்பட்ட நடவடிக்கைகளால் குடியானவர்களுக்கு நஷ்டம் ஏற்பட்டால் அவர்கள்
கோர்ட்டுகள் மூலம் நஷ்ட ஈட்டையும், பூரா செலவு தொகையையும் பெறலாம் என்பதையும், தெரிவிப்ப
தற்கே ஏற்படுத்தப்பட்டன என்பதை விளக்குவதற்கு 1822-வது வருஷத்திய IV ரெகுலேஷன் செய்யப்
பட்டது. மற்ற காரணங்களோடு, கீழ்க்கண்ட காரணங்களுக்கும் 1822-ம் வருஷத்திய IV சட்டம் செய்யப்
பட்டது: (1) "அனுபோக உரிமை விஷயமாகவாவது, சாகுபடிசெய்வது விஷயமாகவாவது, நீர்ப் பாசன
விஷயமாகவாவது திடீரென சண்டை சச்சரவுகள் ஏற்பட்டால், அதற்கு 1802-வது வருஷத்திய XXXII
ரெகுலேஷனில், போதிய துரிதமான பரிகாரம் கிடையாது; (2) வரி பாக்கி சம்பந்தமாகவும், வரி விகிதம்

சம்பந்தமாகவும், அனுபோக பாத்தியம் சம்பந்தமாகவும், சாகுபடி சம்பந்தமாகவும் ஏற்படும் விவகாரங்கள், சில சமயங்களில் குடியானவர்களுக்கு சௌகர்யகரமாக பஞ்சாயத்துகளால் விசாரிக்கப்படலாம்." மேற்படி 1822-வது வருஷத்திய V ரெகுலேஷனின் 8-வது ஷரத்து பின்வருமாறு :—

> "ஜமீன்தார்கள் அல்லது வரிக்குத்தகைக்காரர்கள், கலெக்டரின் அனுமதியைப் பெற்றிருந்தாலொழிய, 1802-வது வருஷத்திய XXX ரெகுலேஷனின், 10-வது பிரிவின்படி, கீழ்த்தர வரிக்குத்தகைக்காரர்களுடைய அல்லது குடியானவர்களுடைய நிலங்களைப் பிறருக்குக் கொடுக்க முடியாது"

மேற்படி ரெகுலேஷன் 15-வது ஷரத்து பின்வருமாறு :—

> "இந்த ரெகுலேஷன்படி, தன் முன் கொண்டுவரப்படும், வரி பாக்கி சம்பந்தமான விவகாரங்களையும், பணமாகவோ தானியமாகவே செலுத்தவேண்டிய வரி விகித சம்பந்தமான விவகாரங்களையும், அனுபோக பாத்தியம், நிலங்கள் அல்லது பயிரின் உரிமை, ஆகிய இவை சம்பந்தமான விவகாரங்களையும், இருகக்ஷிக்காரர்களும் சம்மதித்தால், கலெக்டர், ஜில்லா பஞ்சாயத்திற்காவது, கிராமப் பஞ்சாயத்திற்காவது, விசாரணை செய்து தீர்ப்புக்கூற அனுப்பலாம்."

இதற்கிடையே, குடியானவன் நிலத்தின் பரம்பரைத் தன்மையைப்பற்றி, கோர்ட்டுகளில் விவாதம் ஏற்பட்டது. நாட்டின் மாமூலான சட்டம் என்ன என்பது உயர்தர நீதிமன்றத்தால் பரிசீலனை செய்யப்பட்டு, குடியானவனுக்கு அனுகூலமாக ஸ்திரப்படுத்தப்பட்டது (20, மதராஸ், 299; 23, மதராஸ், 318), இறுதியில், தனது நிலத்தில் ஒவ்வொரு குடியானவனுக்கும் அனுபோக உரிமை உண்டென்று, 1908-வது வருஷத்திய எஸ்டேட் நிலச் சட்டத்தின் 6-வது பிரிவில் ஏற்படுத்தப்பட்டது. நாட்டின் வழக்கமான சட்டத்தைத் தெரிவிப்பதற்கு இது போதுமானதா என்பதே முக்கிய கேள்வியாகும்.

சாசுவத காலத்திற்குமுன் குடியானவர்களுக்கு இருந்த உரிமைகளை விஸ்தாரமாக ஆராயும் ரெவினியூ போர்டு யாதாஸ்தில் (1918-ம் ஆண்டு ஜனவரி 5உ) பின்வருமாறு விளக்கமாகத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது :—

> குடியானவர்கள் தங்கள் கிராமங்களின் பரம்பரையான நிரந்தர விவசாயிகள். அவர்கள் சர்க்கார் வரியைச் செலுத்தும்வரை அவர்களை நிலத்திலிருந்து நீக்க முடியாது; நிலங்கள் இப்பொழுது விற்பனை செய்ய முடியாமலிருந்த போதிலும் (எனெனில் அவைகள் அவ்வளவு பெறாது.) தலைமுறை தலைமுறையாக குடியானவனைச் சேர்ந்தவை"

1908-வது வருஷத்தில் ஹாட்க்ஸன் துரையாலும், அதே அபிப்பிராயம்தான் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. பெரும்பான்மை அறிக்கையில் விரிவாய் ஆராயப்பட்டுள்ள B.P. 7743 லும் அது வலியுறுத்தப்பட்டிருக்கிறது. சாசுவத பைசலுக்குமுன், குடியானவர்களுக்கும் ஜமீன்தார்களுக்கும் இருந்த சம்பந்தத்தைக் கட்டுப்படுத்திய நாட்டின் மாமூலான சட்டத்திற்கும், குடியானவர்கள் சர்க்காருக்கு நேராக வரி செலுத்தும்பொழுது குடியானவர்களுக்கும் சர்க்காருக்கும் உள்ள சம்பந்தத்தைக் கட்டுப்படுத்தும் நாட்டின் மாமூலான சட்டத்திற்கும், யாதொரு வித்தியாசமும் இல்லையென்பது எனது அபிப்பிராயம். சர்க்காருக்கும், குடியானவனுக்கும் உள்ள சம்பந்தம், சர்க்காருக்கு வரியைச் செலுத்தும் நிலத்தின் சொந்தக்காரனுக்கும், சர்க்காருக்கும் உள்ள சம்பந்தமாகையால், ஜமீன்தாருக்கும் குடியானவனுக்கும் உள்ள சம்பந்தம், வரியைச் செலுத்தும் நிலத்தின் சொந்தக்காரனுக்கும் வரியை வசூலிக்கும் ஜமீன்தாருக்கும் உள்ள சம்பந்தமாகும், அதற்கு இணங்க, குடியானவன் நிலத்திற்குச் சொந்தக்காரன் என்று விளக்கமாகக் கூறவேண்டும்; நிலத்திலுள்ள எல்லா உரிமைகளும் குடியானவனைச் சேர்ந்ததென்றும், குடியானவன் நியாயமாகச் செலுத்தவேண்டிய வரியை வசூலிக்கும் உரிமையே ஜமீன்தாருக்குள்ளதென்றும் தெரிவிக்கப்படவேண்டும்.

இதைக் கேவலம், தர்க்கவாதம் என்றாவது, பள்ளிக்கூடக் கேள்வியென்றாவது கருதலாகாது தங்கள் நிலங்களில் குடியானவர்கள் வீடு கட்டினால், எஸ்டேட் நிலச்சட்டத்தின் 11-வது பிரிவின்படி, அவர்களை நிலத்திலிருந்து தள்ளுவதற்கு ஜமீன்தார்கள் வியாஜ்ஜியம் போடுகிறார்கள் என்று சாக்ஷியம் கொடுக்கப்பட்டிருக்கிறது. வீடு கட்டிக்கொள்வதற்கு கிராமத்தில் போதுமான காலி மனைகள் இல்லாத குறைவால், ரயத்தி நிலத்தில் வீடு கட்டிக் கொள்ள வேண்டியதாயிருக்கிறது என்று குடியானவர்கள் சாக்ஷியம் கொடுத்திருக்கிறார்கள். ஜமீந்தார் தனது அதிகாரத்தை விதிவிதரணையில்லாமல் செலுத்தி, பெருத்த தொகைகளைக் கேட்கலாம். நாட்டில் உள்ள சாதாரண வழக்கப்படியும், சட்டப்படியும், ஜமீன்தாருக்கு "நஜர்" தொகை கொடுக்காமல், குடியானவன் தனது நிலத்தில் வீடுகட்டிக்கொள்ள முடியாது என்று சொல்வது விபரீதமான விஷயமாயிருக்கிறது. சாதாரண அனுபவத்தில் அதற்கு மாறான முறையே அனுசரிக்கப்பட்டிருக்கவேண்டும். குடியானவர்கள், கிராமத்தில் தங்கி, நிலங்களை சாகுபடி செய்வதற்கு ஊக்கம் அளிக்க, வாடகை, "நஜர்" தொகை, இல்லாமல், குடியானவர்கள் கிராமத்தில் வீடு கட்டிக்கொள்வதற்கு வசதிகள் கொடுத்திருக்கவேண்டும். இந்த உரிமை குடியானவர்களுக்கு மறுக்கப்படக்கூடாது என்று ஸ்ரீ வெங்கடபதி ராஜூ அவர்கள் தமது சாக்ஷியத்தில் கூறியிருக்கிறார். விவசாய விஷயங்களுக்கு மட்டும்தான், நிலம் உபயோகிக்கப்படவேண்டும் என்ற நிபந்தனை, நாட்டில், கைத்தொழில் அபிவிருத்தி அடைந்து, பரவும் பொழுது கஷ்டத்தையும் அசௌகர்யத்தையும் உண்டாக்கும்.

குடியானவர்கள் தெரிவித்த மற்றொரு கஷ்டம் என்னவென்றால், குடியானவர்கள், நிலத்திலுள்ள கற்கள், மணல், முதலியவை, ஜமீன்தார் தனக்குச் சொந்தமானவை என்று கூறுவதும் அவைகளைக் குடியானவர்கள் தன் அனுமதியில்லாமல் உபயோகம் படுத்த கூடாதென்று நிர்ப்பந்தம் செய்வதுமே. ராஜமகேந்திரவரத்தில் நடந்த விசாரணையில், பெண்டியாலா கிராமவாசி இதைப்பற்றி சாக்ஷியம் கொடுத்திருக்கிறார்.

தங்கள் நிலத்திலுள்ள மரங்கள் விஷயமாக, குடியானவர்கள் தங்கள் கஷ்டங்களைத் தெரிவித்திருக்கிறார்கள். எஸ்டேட் நிலச்சட்டம் 1908-வது வருஷத்தில் ஏற்படுத்தப்பட்டும், இன்னும் இது விஷயமாக குடியானவர்களுக்கும் ஜமீன்தார்களுக்கும் விவகாரங்கள் ஒழிந்தபாடில்லை. அதற்குக் காரணம் என்னவென்றால், குடியானவன் நிலத்திற்குச் சொந்தக்காரன் என்று கருதப்படாததே.

குடியானவர்கள் தெரிவித்த மற்றொரு குறை, பயிர்வாரி விகிதத்தைப் பற்றியது. ஜமீன்தார்கள் கூடிய சீக்கிரத்தில் இந்த முறையை நிறுத்திவிட்டு, பணவரி விகிதத்திற்கு குடியானவர்களுடன் ஒப்பந்தம் செய்துகொண்டு, குடியானவர்கள் தங்களுக்கிஷ்டமான தானியத்தை சாகுபடி செய்யும்படி விட்டுவிடவேண்டுமென்றும், கலெக்டர்களுக்கு அனுப்பிய குறிப்புகளில், தெளிவாக அறிவிக்கப்பட்டிருக்கிறது. தானியங்களுக்குத் தகுந்தாற்போல் வரிகள் வித்தியாசப் படுவது, குடியானவன் நிலத்திற்குச் சொந்தக்காரன் என்று நிலை நாட்டப்பட்டால், உண்டாகாது. ஆதலால், விவசாய விஷயங்களுக்கல்லாமல் மற்ற விஷயங்களுக்கு நிலம் உபயோகப் படுத்தக்கூடாதென்றும், தன் நிலத்திலுள்ள உலோகப் பொருளுக்கு குடியானவனுக்கு, உரிமை

யில்லையென்றும், பயிருக்குத் தகுந்தாற்போல் வரி விதிக்கலாம் என்றும், குடியானவன் நிலத்திலுள்ள மரங்களுக்கு வரி கொடுக்கவேண்டுமென்றும் கூறும் எஸ்டேட் நிலச் சட்டத்தின் பிரிவுகள் ரத்துசெய்யப்பட வேண்டும். நான் முன் கூறியவாறு, குடியானவன் நிலத்திற்குச் சொந்தக்காரன் என்றும், நியாயமான நிலவரியைக் கொடுக்கவேண்டிய கடமையைத் தவிர குடியானவனுக்கு வேறு கடமை கிடையாதென்றும், நிலவரியை வசூலிக்கும் உரிமையே ஜமீன்தாருக்குள்ள உரிமையென்றும் திடமாக எடுத்துக்கூறப்படவேண்டும்.

ஆயினும், கரம்பு நிலங்களிலுள்ள உலோகப் பொருள்கள் ஜமீன்தாரைச் சேர்ந்ததல்லவென்று பெரும் பான்மை அங்கத்தினர்கள் கூறுவதை நான் ஒப்புக்கொள்ளவில்லை. இது சம்பந்தமாக, அறிக்கையில் பெரும் பான்மை அங்கத்தினர்கள் தெரிவித்திருப்பதை கிரஹிப்பதாவது, பொருத்தமாயிருக்கிறதா என்று உணர்வ தாவது கஷ்டமாயிருக்கிறது. தரிசு நிலங்களைக் கண்காணித்து, குடியானவர்களுக்கு வினியோகிக்கும் உரிமை ஜமீன்தாருக்குள்ளது என்று, ஒரு புறத்தில் ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறது. மற்றொரு புறத்தில், மேற்படி நிலங்களிலுள்ள உலோகப் பொருள்கள் ஜமீந்தாரைச் சேர்ந்ததல்ல என்று அறிவிக்கப்படுகிறது. கரம்பு நிலங்களைப்பற்றிய எனது அபிப்பிராயம் மற்றொரு அத்தியாயத்தில் தெரிவிக்கப்படும்.

2-ம் அத்தியாயம்.

முந்திய அத்தியாயத்தில் தெரிவித்திருக்கிறபடி, நிலத்திற்குச் சொந்தக் காரனுக, ஜமீன்தாருக்கு வரி செலுத்தும் சம்பந்தமே, குடியானவனுக்கும் ஜமீன்தாருக்கும் உள்ள சம்பந்தமாகும். இத்தகைய நில உரிமையின் இலட்சணம், பரம்பரைத்தன்மையும், பராதீனத்தன்மையுமாகும் என்றும், அது நாட்டின் மா மூலான சட்டத்தை (நியாயத்தை) ஆதாரமாகக் கொண்டதென்றும், 6-வது பிரிவு சாற்றுப்பிரிவேயாகும் என்றும், அதிலும்கூட விஷயத்தைப் பூராகச் சாற்றவில்லையென்றும் முந்திய அத்தியாயத்தில் தெரிவித்தி ருக்கிறேன். நில உரிமையின் அல்லது உடைமை என்பதின் மற்றொரு இலட்சணம் என்னவென்றல், சர்க்காருக்கு மட்டுமே வரி செலுத்தவேண்டிய கடமையைத் தவிர, பிறர் எவருக்கும் வரி செலுத்தவேண் டாமை. நிலத்திற்குரிய குடியானவன் விளைச்சலில் ஒரு பாகத்தை சர்க்காருக்குச் செலுத்தவேண்டும் என் பது நாட்டின் பொதுவான நியாயமாகும். மனுப் பெரியாரின் படி, ஆறிலொரு கடமையிருந்தது. மகமதிய அரசர் காலத்தில் தீர்வை ஆறிலொரு பங்கிலிருந்து மூன்றிலொரு பாகமானதென்பதற்கு சரித்திர ஆதாரங் கள் இருக்கின்றன. இது சம்பந்தமாக, அறிக்கையின் I அனுபந்தத்தில் அயினி-அக்பர் குறிப்பிடப்பட்டிருக் கிறது. குடியானவன் பாகத்தை ஆராயும் XII அனுபந்தம், சாசுவத பைசல் காலத்திற்கு முன் அது எவ்வளவாக இருந்ததென்பதையும், சாசுவத பைசல் காலத்தில் எவ்வளவாக இருந்ததென்பதையும் தெரி விக்கிறது. இவ்வாறு உயர்த்தப்பட்டு வந்த விளைச்சலின் பாகத்திற்கும், குடியானவர்களின் தீர்வையை ஜமீன் தார் உயர்த்துவதற்கும் யாதொரு ஒப்பு உவமையும் கிடையாது. அவை இரண்டையும் கலந்து மயக்கம் அடையக்கூடாது. முன்னர் தெரிவித்தது, சர்க்காரின் தேவைகளைக் கருதி உயர்த்தப்பட்டன. அப்பொழுது குடியானவன் சக்தி என்னவென்பதைத் தெரிந்து கொள்ளக்கூடிய புத்தி சாதுர்யமும், குடிகள் கஷ்டப் படாமல் திருப்தியுடன் வாழவேண்டுமென்ற ராஜ நீதியும் அனுசரிக்கப்பட்டன. அது பற்றியே, அமைதியும் விவேக பரிபாலனமும் இருந்த காலத்தில், சர்க்கார் வரி ஆறிலொருபாகத்திலிருந்து மூன்றிலொரு பாகம் வரை இருந்ததென்றும், நாட்டில், போர், கலகம், புரளி ஏற்பட்ட காலத்தில், $\frac{1}{2}$ பாகம் வரைக்கும் உயர்ந்த தென்றும் தெரியவருகிறது. இது யுத்தச் செலவிற்கும், மற்ற தேவைகளுக்கும் வேண்டியதாயிருந்தது. அப்படிப்பட்ட வரியைச் செலுத்துவதற்கு குடியானவனுக்கு சக்தியிருந்தாலும், இல்லவிட்டாலும், அது வலு வந்தமாகவே வசூலிக்கப்பட்டது.

சர்க்காருக்கு குடியானவன் செலுத்தி வந்த விளைச்சலின் பாகம், வரியே தவிர வாடகை (அல்லது குத் தகைத் தொகை) இல்லையென்று தெரிவித்த பிறகு, சாசுவத பைசல் காலத்தில் அது எவ்வாறு கருதப்பட்ட தென்பதை அடுத்தபடியாக ஆராய்வோம். வரிவசூலிக்கும் உரிமையை ஜமீன்தார் அடைந்தமையாலும், அவர் அவ்வுரிமையின் உடைமையாளராகச் செய்யப்பட்டமையாலும், வரியை உயர்த்துவதற்கு அவருக்கிருந்த அதிகாரத்தை வரையறை செய்வது அவசியமாயிருந்தது. ஜமீன்தாருக்கு ஒப்புவிக்கப்பட்ட உரிமையின் தன்மையிலிருந்தே இவ்விஷயம் எழுகிறது. ஜமீன்தாருக்கு ஒப்புவிக்கப்பட்டது குடியானவனுடைய உடை மை என்றல், குடியானவன் விஷயமாக ஜமீன்தார் தன்னிஷ்டப்படி நடந்துகொள்ளலாம். தனக்கிஷ்டமான வரிகளை ஏற்படுத்தலாம்.

இது சாதரண சட்டப்படி, நிலத்திற்குரியவருக்கும், குத்தகைக்காரனுக்குமுரிய சம்பந்த முறையாகும். ஜமீன்தாருக்கு கொடுக்கப்பட்டது, குடியானவனுடைய உடைமையல்ல; ஆனல் குடியானவர்களிடமிருந்து வரிவசூலிக்கும் உரிமையே கொடுக்கப்பட்டது. ஆதலால், குடியானவன் செலுத்தும் வரியை ஜமீன்தார் உயர் த்தக்கூடாது என்று கட்டுப்பாடு செய்யவேண்டியது அவசியமாயிற்று. அதனுல்தான், பட்டா ரெகுலேஷனின் 9-வது ஷரத்து ஏற்பட்டிருக்கிறது. அது பின்வருமாறு :—

"பணவரி விகிதங்களைப் பற்றியாவது, தானிய வரி விகிதங்களைப் பற்றியாவது, வழக்குகள் ஏற்பட்டால் சாசுவத பைசல் காலத்திற்கு முன் வருஷத்தில் சாகுபடி செய்யப்பட்ட நிலங்களுக்கு என்னவரி விகிதங்கள் இருந்தனவோ அவைகளே நியாயமான வரி விகிதங்கள் எனத் தீர்மானிக்கப்படவேண் டும்; அல்லது மேற்படி வரி விகிதங்கள் அறியக் கூடாவிட்டால், வழக்கு சம்பந்தமான நிலங்களின் ஒத்ததரத்தையும் அமைப்பையும் உடைய பக்க நிலங்களுக்கு என்ன வரி விகிதங்கள் இருந்தன வோ, அவைகளையே அனுசரிக்கவேண்டும்."

சாசுவத பைசலுக்கு, முன் வருஷத்தில் இருந்த வரி விகிதங்களே வரையறையாக ஏற்படுத்தப்பட்டன. ஏனெனில், பெரும்பான்மையான ஜமீன்களுக்கு, பேஷ்கஷ் நிர்மாணம் செய்வதில் மேற்படி விகிதங்களே ஆத ரமாக எடுத்துக்கொள்ளப்பட்டன.

மேலும், சாசுவத பைசலுக்குமுன், குடியானவர்கள் நிலவரியைமட்டும் அல்லாமல், இதர பல வரிகளை யும் செலுத்தி வந்தார்கள். இதர வரிகள் எத்தன்மை வாய்ந்தன என்பதை அறிவதற்கு, உதாரணமாக, சிகாகோல் சர்க்கார், காசிம்கோட்டா டிவிஷனைப்பற்றி, சர்கூட் கமிட்டி அறிக்கையின் 6-வது பக்கத்திலிருந்து ஒரு சாராம்சம் இங்கு எடுத்தெழுதப்படுகிறது :—

வரி வசூல் முறை.

வரி வசூல் சம்பந்தமாக முன்னிருந்த முறையும், இப்போழுதிருக்கும் முறையும், மிகவும் வேறுபா டானவை. சேனைகளுக்கும், சிப்பந்திகளுக்கும், பணமாக சம்பளம் கொடுக் கப்படாமல், தானியம் முதலிய தேவையான பொருள்கள் கொடுக்கப்பட்ட பொழுதும், பணப்பழக்கம் அவ்வளவு அதிகமாக இல்லாதிருந்தபொழுதும், மொத்த விளைச்சலின் சமமான பாகத்தை அரசனும் குடியானவனும் எடுத்துக்கொள்வதே, பழைய சுதேச மன்னர்கள் அனுசரித்த முறையாகும். அம்முறைப்படி, சாகுபடி செலவுகள் முதலியவை குடியானவனைப் பொறுத்தவை. குடியானவர்கள், சர்க்கார் சிப்பந்திகள், இவர்கள்

முன்னிலையில், அறுவடை செய்வதற்கு முன்பு பயிர், அக்கரையில்லாத சில அதிகாரிகளால் மதிப்பிடப்பட்டது. அவ்வாறு செய்யப்பட்ட மதிப்பு கிராமக் கர்ணத்தால் பதிப்பிக்கப்பட்டது. தானியம் களத்தில் அடித்த பிறகு சர்க்கார் அதிகாரிகள் சர்க்கார் பாகத்தை பெற்றுக்கொண்டார்கள். ஆனால், மகம்மதியர்கள் வந்தகாலத்திலிருந்தும், அதிலும் சென்ற 60 வருஷகாலமாக, விஜயநகர ஜமீன்தார்கள் புதிய முறையை அனுசரித்து வந்திருப்பதாக தெரியவருகிறது. இப்புதிய முறைப்படி, சாகுபடி செய்யக்கூடிய நிலங்களின் விஸ்தீர்ணத்தை நிர்ணயம் செய்து ஒவ்வொரு கரிசைக்கும், ஸ்திரமான வரியாக 10 ரூபாய் விதித்தார்கள். அதற்கு "சிஸ்து" என்று பெயர். இந்த சிஸ்தைச் செலுத்தும் குடியானவன் தன் நிலத்தின் விளைச்சல் முழுவதையும் தன்னிஷ்டப்படி விற்கலாம், மற்ற வகைகளில் உபயோகப்படுத்திக்கொள்ளலாம். இப்புதிய மாறுதல், குடியானவனுக்கு அனுகூலமாய் இருக்கிறதென்று முதலில் தோன்றினாலும், முக்கியமாக ஜமீன்தார்களுடைய செளகரியத்தையும் லாபத்தையும் கருதியே வரி ஏற்படுத்தப்பட்டது. ஏனெனில் கிஸ்தியை முன்னதாகப் பெறுவதற்கு வசதியையும், இனிமேல் தீர்வைகள் உயர்த்தலாமா என்பதற்கு ஆதாரத்தையும் அது தந்தது. நிலம் அபிவிருத்தியடைந்ததென்று கருதப்பட்டவுடனே, முன்னிருந்த கிஸ்தித் தொகைக்கு, 10 % அல்லது 15 % விகிதமாக "முலுமட்டி" வரியும் சேர்க்கப்பட்டு, அப்பொழுதிருந்து, அதுவே நிரந்தர வரியாகக் கொள்ளப்பட்டது. நல்ல விளைச்சல் காலத்தில் வசூலிக்கப்படும் நஜர் தொகை ஸ்திரமாக ஏற்பட்ட தொகை அல்ல. ஆனால் அது சாதாரணமாக, கிஸ்தித் தொகையில் 50 % விகிதமாக இருந்தது. சிறுதானியங்கள் பயிராகக்கூடிய மட்டமான நிலத்திற்கு ஏற்படும் மதிப்பே "பில் முத்தா" என்று பெயர். அதன்படி மேற்படி நிலம் ஒரு குறிப்பிட்ட தொகைக்கு குத்தகைக்கு விடப்பட்டது. அந்த நிலத்திற்கு, குத்தகைத் தொகையோடு "சாரி" பணத்தைவிட இதரத் தொகை ஒன்றும் செலுத்தவேண்டியதில்லை. நாட்டில் அமைதியை ஸ்தாபிப்பதற்கும் விவசாய தொழிற்கு ஊக்கமளிப்பதற்கும், வசூலில் 10 % விகிதம் முகலாய தர்பாரால் ஜமின்தாருக்கு வெகுமதியாகக் கொடுக்கப்பட்ட தொகையே சாரி யென்று பெயர். இந்தத் தொகைகள் எல்லாம்போக, குடியானவனுக்குத் தேறியது, விளைச்சலில் மூன்றில் ஒரு பாகமே. இந்த விகிதமே பொதுவாக ஏற்படுத்தப்பட்ட விகிதமென்று தெரியவருகிறது. ஆனால் கிராமக் கணக்கில் (நெ. 9) விவரமாகத் தெரிவித்திருக்கிறபடி ஜமீன்தார்கள் பல புதிய தொகைகளைச் சேர்த்திருக்கிறார்கள். அவைகளின்படி குடியானவனுக்கு விளைச்சலில் ஐந்தில் ஒரு பாகம் தேறுவதே அரிதாய் இருக்கிறது."

இம்மாதிரியான தொகைகளை வசூலிப்பது நியாயமல்ல. விளைச்சலுக்கும் அவைகளுக்கும் யாதொரு சம்பந்தமும் கிடையாது. அத்தகைய தொகைகளை வசூலிப்பதற்கு, சர்க்காருக்கு அதிகாரம் உண்டென்று ஆதாரம் கூறினால்மட்டுமே அது ஒருவாறு பொருந்தும். ஆயினும், சாசுவத பைசல் காலத்தில் மேற்படி தொகைகள் ஜமீன்களின் வருமான மூலங்களாகக் கருதப்பட்டு, பேஷ்கஷ் தொகை விதிக்கப்பட்டது. அவ்வாறாக, மேற்கூறிய தொகைகள் சட்ட சம்மதமும் பெற்றன. அதுபற்றியே 1802-ம் வருஷத்திய XXX ரெகுலேஷனில் கீழ்க்கண்ட ஷரத்து காணப்படுகிறது :—

> "ஜமீன்தாருக்குச் செலுத்தவேண்டிய விளைச்சலின் பாகத்துடன், 'கனங்காய்' 'காவலிருசும்' முதலிய பெயர்களால் தானியமாகவோ பணமாகவோ, இதர தொகைகள் வசூலிக்கப்பட்டால், அவைகள் பட்டாவில் ஒருங்கு திரட்டி ஒரு பணத்தொகையாகவோ அல்லது ஒரு தானிய அளவாகவோ குறிப்பிடப்படவேண்டும் ; பேஷ்கஷ் நிர்மாணிக்கப்பட்டு இரண்டு வருஷகாலமானபிறகும், மேற்படி தொகைகள் பட்டாவில் ஒருங்கு திரட்டி ஒரு தொகையாக அமைக்கப்படாவிட்டால், அவைகள் (மேற்படி தொகைகள்) சம்பந்தமாக குடியானவர்கள்மீது, ஜில்லா அடலத் கோர்ட்டில் ஜமீன்தார் தொடரும் வழக்கு தள்ளுபடி செய்யப்படும். செலவு தொகைகளும் ஜமீன்தார் கொடுக்கவேண்டும்."

ஜமீன்தார்களுக்கு இதுவரை இருந்த ஒருவகையான அரசாங்க அதிகாரம் ஒழிக்கப்பட்டு, தங்கள் ஜமீன்களுக்கு, உடைமையாளர்களாகச் செய்யப்பட்டிருப்பதால், அவர்கள் இப்பொழுது "அப்புவாக்கள்" வசூலிக்கும் அதிகாரம் சட்டப்படி அங்கீகரிக்கப்படவேண்டும் ; அவர்கள் புதிய "அப்புவாக்கள்" விதிக்கக்கூடாதென்று தடுக்கப்படவேண்டும். அதன்படி, VII ஷரத்தில் பின்வருமாறு காணப்படுகிறது :—

> எந்தப்பைசலிலாவது, என்ன முகாந்தரத்தைக்கூறியாவது, ஜமீன்தார்கள் அல்லது வரிக்குத்தகைகாரர்கள், குடியானவர்களுக்கு புதிய வரி, ஏற்படுத்தக்கூடாது; பட்டாவில் ஒருங்கு திரட்டி அமைக்கப்பட்ட அல்லது சர்க்காரால் அனுமதிக்கப்பட்ட தொகைகளைவிட இதர தொகைகளை ஜமீன்தார்கள் வசூலித்தார்கள் என்று ரூபிக்கப்பட்டால், அப்படி வசூலிக்கப்பட்ட தொகைக்கு மூன்று மடங்கான தொகை அபராதமாக விதிக்கப்படும். பட்டா முச்சலிக்கைகளை மாற்றிக்கொள்ள வேண்டுமென பதைப்பற்றியும், குடியானவன் செலுத்தும் தொகைகளுக்கு ரசீதுகள் கொடுக்கவேண்டும் என பதைப்பற்றியும், ஜப்தி அதிகாரங்களைப்பற்றியும், பட்டா ரெகுலேஷனில் ஏற்படுத்தியுள்ள விதிகளை, வரி வசூல் சம்பந்மான சர்க்கார் அதிகாரங்களை ஒத்திருக்கின்றன. சாசுவத பைசலின்படி, அநேக கிராமங்களில் இருந்த பெருவாரியான குடியானவர்கள், நிரந்தர ஏற்பாடடைந்த ஜமீன்தார்கள் வசம், ஒப்புவிக்கப்பட்டு, அன்று முதல் சர்க்கார் வரிகளை ஜமீன்தார்களுக்கு செலுத்திவரும்படி, ஏற்பாடு செய்யப்பட்டதென்பது மேற்கூறிய விஷயங்களில் இருந்து, வெகு தெளிவாகத் தெரியவருகிறது. குடியானவர்கள், செலுத்தும் தீர்வை உடைமையாளர்களாக (Proprietors) ஏற்படுத்தப்பட்ட ஜமீன்தார்களுக்குச் செலுத்தும் வரியே தவிர, குத்தகைப்பணமல்ல. அதுபற்றியே ஜமீன்தார்கள் உடைமையாளர்களாகச் செய்யப்பட்டாலும், குடியானவர்களுக்கும் ஜமீன்தார்களுக்கும் உள்ள சம்பந்தத்தை ஒழுங்குபடுத்தி விளக்குவதற்கு பல ரெகுலேஷன்கள் ஏற்படுத்தப்பட்டன. குடியானவர்களுக்கும் ஜமீன்தார்களுக்கும் உள்ள சம்பந்தம், ஒரு நிலத்திற்குரியவருக்கும் குத்தகைதாரருக்கும் உள்ள சம்பந்தமாய் இருந்தால், இந்த ரெகுலேஷன்கள் ஏற்படவேண்டிய அவசியம் இராது. ஆனால் வரி வசூலிப்பவருக்கும், வரி கொடுப்பவருக்கும் உள்ள சம்பந்தம் போன்றதென்றால் இந்த ரெகுலேஷன்கள் இலகுவாகப் புரியக்கூடும்.

மேற்கூறிய ஆராய்ச்சியிலிருந்து, ஜமீன்தாருக்கும் குடியானவருக்கும் உள்ள சம்பந்தம், நிலத்திற்குரியவருக்கும் குத்தகைகாரனுக்கும் உள்ள, சம்பந்தம் இல்லை என்பதும் ஆனால் சர்க்காருக்கும் வரி செலுத்துபவனுக்கும் உள்ள சம்பந்தம் என்பதும், அது நாட்டின் பழக்க வழக்கங்களுக்கும் சர்க்கார் தனது அரசாங்க அதிகாரங்களை செலுத்தி ஏற்படுத்தும் சட்டங்களுக்கும் உட்பட்டது என்பதும், நன்கு விளங்குகிறது.

ஆதலால், ஒருபுறத்தில் ஜமீன்தார் சர்க்காருக்குச் செலுத்தவேண்டிய பேஷ்கஷும், மற்றொருபுறத்தில், குடியானவர்கள் ஜமீன்தார்களுக்குச் செலுத்தவேண்டிய தீர்வையும் சாசுவத பைசலின்படி நிரந்தரமாக்கப்பட்டன, என்று பெரும்பான்மை அறிக்கை கூறுவதை நான் ஒப்புக்கொள்கிறேன்.

ஆனால் குடியானவனுக் கெதிராக நிரந்தரமாக விதிக்கப்பட்டது என்ன என்பதே முக்கிய கேள்வியாகும். இந்த விஷயத்தைப்பற்றி எனது அபிப்பிராயத்தைத் தெரிவிப்பதற்குமுன், பெரும்பான்மை அறிக்கையில் இதைப்பற்றி என்னக்கூறியிருக்கிறதென்பதை அறிவது யுத்தமென்று கருதுகிறேன். மிக்க கவனத்துடனும், மிக்க அபிமானத்துடனும், பெரும்பான்மை அறிக்கையை, நான் படித்தபோதிலும், இது விஷயமாக அதிற் கூறியிருக்கும் கருத்தை அறிவது எனக்குக் கடினமாய் இருக்கிறது. எனினும், என்னாலியன்றவரை, அதைவிவரிக்கிறேன்.

(i) சாசுவத பைசலுக்குமுன், சர்க்காரால் அல்லது ஜமீன்தார்களால் பணவரி விதிக்கப்பட்ட கிராமங்கள் சம்பந்தமாக : இம்மாதிரியான சந்தர்ப்பங்கள் **1792** வருஷத்தில், கம்பெனியாருக்கு கொடுக்கப்பட்ட பரமகாலிலும், சேலம் ஜில்லாக்களிலும் ஏற்பட்டிருக்கின்றன. கர்னல் ரீடும் **(Colonel Read)** அவர்கீழ் இருந்தவர்களும், பழைய ரயத்துவாரி முறையையும் சர்வே ஏற்பாட்டையும் செய்தார்கள். அதன்படி, சாகுபடி செய்யப்பட்ட ஒவ்வொரு நிலமும், இதர தரிசு நிலமும், அளவெடுக்கப்பட்டு, அவ்வாறு அளவெடுக்கப்பட்ட நிலங்களுக்கு பணவரி விதிக்கப்பட்டது. இவ்வாறு வரி விகிதங்கள் ஏற்பட்ட நிலங்கள் மீது சாசுவத ஜமீன்தாரி முறைப்படி, பிறகு பேஷ்கஷ் நிர்மாணம் செய்யப்பட்டது. சாசுவத ஏற்பாட்டின் கீழுள்ள இத்தகைய கிராமங்களைப்பற்றி பெரும்பான்மை அறிக்கை செய்யும் சிபார்சு என்ன என்பதே கேள்வி. கிராமங்கள் சர்வே செய்யப்பட்டு, பணவரி விகிதங்கள் ஏற்படுத்தப்பட்டன என்று, 1802-ம் வருஷத்திய வரி வசூல் சட்டத்தில் தெரிவித்திருப்பது, மேற்படி கிராமங்களையும், அவைகளைப்போல் இதர ஜில்லாக்களிலுள்ள கிராமங்களையுமே குறிக்கும். மேற்படி பிரதேசங்கள் சம்பந்தமான **11**-வது ஷரத்தைப்பற்றி பெரும்பான்மை அறிக்கை செய்யும் விளக்கம் முற்றிலும் தவறானது என்று நான் அபிப்பிராயப்படுகிறேன். பெரும்பான்மை அறிக்கை செய்யும் சிபார்சு பின்வருமாறாகும் என்று கொள்ளலாம் ; 1802-ம் வருஷத்திற்கு முன் மேலே தெரிவிக்கப்பட்ட சர்வே செட்டில்மெண்ட்படி விதிக்கப்பட்ட பணவரி விகிதங்கள், எக்காரணத்தைக் கொண்டும் மாறக்கூடாமல். நிரந்தரமாக ஏற்படுத்தப்பட்டவையா, அல்லது சாசுவத பைசலுக்கு முன்வருஷத்தில் சாகுபடி செய்யப்பட்ட நிலங்களுக்கு மொத்த சர்க்கார்வரி நிர்மாணிக்கப்பட்டு, அதன் பிறகு ஏக்கர் வாரியாக மேற்படி தொகை ஈவு செய்யப்பட்டது என்று கொள்ளலாமா? முன்கூறியது, என்று வைத்துக்கொள்வோமாகில், அது குடியானவர்களுக்கு பெருத்த கஷ்டத்தை விளைவிக்கும். மேற்படி வரி விகிதங்கள் அநியாயமானவை என்பதை ரெவின்யூ போர்டாரின், யாதாஸ்திலிருந்து (1818-ம் வருஷம் ஜனவரிமீ 5உ) எடுத்தெழுதப்பட்ட கீழ்கண்ட சாராம்சம் தெரிவிக்கிறது :—

> "புதிதாக நிர்ணயம் செய்யப்பட்டவரி விகிதங்கள் நியாயமற்றவை என்பதற்கும், அதிகமானவை என்பதற்கும், தக்க ஆதாரங்கள் காட்டப்பட்டிருக்கின்றன. பழைய ரயத்துவாரிவரி நிர்ணயப்படியும், அதன்படி உண்டான வசூல், தொகைகளின்படியும், இந்த ஜில்லாக்களில் உள்ள நிலங்களுக்கு பிறகு ஜமீன்தார் முறைப்பிரகாரம். பேஷ்கஷ் விதிக்கப்பட்டபொழுது, தீர்வைகளை உடனே குறைக்கவேண்டியது அவசியமென்று ஜமீன்தார்களுக்கும் தோன்றினது. சாகுபடி செய்யப்பட்ட நிலங்களில் பாதி நிலங்களுக்கு இவ்வாறு தீர்வைகள் குறைக்கப்பட்டன. சேலத்திலும், இதர தென் பகுதியிலும் ஜமீன்களுக்கு (கர்னல் மாக்லீயாட் செய்தல் உயர்ந்த ரயத்துவாரித் தீர்வைகளின் காரணமாக) விதிக்கப்பட்ட பேஷ்கஷ், அளவுக்கு மிஞ்சி இருந்ததின் பலிதமாக, சாசுவத ஜமீன்தாரி ஏற்பாடு அந்த ஜில்லாவில் முடிவடைந்தது. கர்னல் மாக்லீயாட் **(Colonel Macleod)** ஏற்படுத்திய தீர்வைவிகிதங்கள் 1202-வது வருஷத்திய செட்டில்மெண்ட் தீர்வையைவிட சுமார் 36½ சதவிகிதம் அதிகமாய் இருந்தன. முடிவில், சேலம் ஜில்லாவில் இருந்த எஸ்டேட்டுகள் சர்க்கார் வசம் வந்தன. அங்கிருந்த தீர்வைகளைக் குறைக்கும்படி ரெவின்யூ போர்டார் ஏற்பாடு செய்தார்கள். பரமஹாலில் தவிர மற்ற இடங்களில் சர்வே வரி விகிதங்கள் அவ்வளவு சீராக இருந்ததாகத் தெரியவில்லை. பரமஹாலில், தீர்வைகளை ஏற்படுத்திய மன்றோ, நிஷ்களங்கமான ஆதாரத்தைக்கொண்டு, அதாவது முன்பு அசலாகக் கிடைத்த வரி வசூலைக்கொண்டு, தீர்வைகளை திருத்தி அமைத்திருக்கிறார். ஏனெனில் அவர் ஏற்படுத்திய வரி நிர்மாணம் 1802-ம் வருஷத்திய செட்டில்மெண்ட் வரி விகிதங்களைவிட 3½ சதவிகிதம் அதிகமாய் இருந்தன ; ஆனால் கர்னல் கிரஹாம் **(Colonel Graham)** செய்த வரிவிகிதங்கள் 29½ சதவிகிதம் அதிகமாய் இருந்தன: கர்னல் மாக்லியாட் செய்த வரி விகிதங்கள் 36½ சதவிகிதம் அதிகமாய் இருந்தன.

இம்மாதிரியான கிராமங்கள் அடங்கிய ஒரு ஜமீனைப்பற்றி (கன்னிவாடி ஜமீன்) பெரும்பான்மை அறிக்கையில், பாகம் 2, 155—166 பக்கங்கள், ஆராயப்பட்டிருக்கிறது. 164—வது பக்கத்தில் பின்வருமாறு தெரிவிக்கப்பட்டிருக்கிறது :—

> இது சம்பந்தமாக, குடியானவர்களுக்கு கஷ்டம் ஏற்பட்டுவாலாம். ஏனெனில், 1802-ம் வருஷத்திய சாசுவத பைசலில், ஹார்டிஸ் **(Hardis)** விதித்த வரிவிகிதங்கள் அளவுக்குமிஞ்சி அதிகமாய் இருக்கின்றன.

இதிலிருந்து, 1802-ம் வருஷத்திற்குமுன் அமுலில் இருந்த பணவரிவிகிதங்களையே இன்று அனுசரிக்க வேண்டுமென்று பெரும்பான்மை அறிக்கை சிபார்சு செய்வதாகத் தோன்றுகிறது. அப்படியானால், 1802-ம் 163-வது பக்கத்திலும், 164-வது பக்கத்திலும், காணப்படும் புள்ளி விவரங்கள் அவசியம் இல்லை. வருஷத்தில் கணக்கிடப்பட்ட மொத்த வருமானமும் தேவையில்லை.

(ii) பழைய முறைப்படி, விளைச்சலின் ஒருபாகத்தை வரியாகச் செலுத்தும் கிராமங்கள், குறிப்பிட்டதானியவரியோடு பணவரியையும், அல்லது தானியவரியை மட்டும் செலுத்தும் கிராமங்கள்; அல்லது, பயிருக்குதகுந்தாற்போல் மேற்படி வரி விகிதங்களைச் செலுத்தும் கிராமங்கள்.—இம்மாதிரியான கிராமங்கள் விசேஷமாக, விசாகபட்டணம், ராமநாதபுரம், திருநெல்வேலி ஜில்லாக்களில், பல இருக்கின்றன.

மசோதாவின் 23-வது ஷரத்திலிருந்து அறியக்கூடியபடி, பெரும்பான்மை அறிக்கையின் தயாரிப்பு.—மசோதா சட்டமானபிறகு, தீர்மானம் பின்வருமாறு:—ஒரு ஜமீனில் பழைய வாரமுறை அனுசரிக்கப்பட்டால், இம்மசோதா சட்டமானபிறகு, வாரமாகச் செலுத்தி வந்த வரி, பணமாகச்செலுத்துவதற்கு அனுமதிக்கப்படவேண்டும் என்று குடியானவன் விரும்பினால், சாசுவதபைசலுக்கு ஆதாரமாயிருந்த விலைகளையே, வரிமாற்ற விலைகளாக ரெவினியூகோர்ட்டுகள் அனுசரிக்கவேண்டும் என்றும், வரிமாற்றம் ஏற்படும் பொழுது உள்ள விலைகளை அனுசரிக்கக்கூடாதென்றும் விதிக்கப்பட்டிருக்கிறது. ஆதலால் இந்த கிராமங்களைப் பொறுத்தமட்டில், 1210-வது பசலிக்கு முன்வருஷத்தில், மேற்படி கிராம நிலங்களுக்கு, மொத்த வரிவருமானம் என்ன இருந்ததென்பதை ஆராயவேண்டிய அவசியம் இல்லை. ஏனெனில், அதனால் யாதொரு பயனும் ஏற்படாது. இத்தீர்மானத்தின்படி செய்யவேண்டியது பின்வருமாறு. முதலில், நிலத்தின் விளைச்சல் என்னவென்பது நிர்ணயம் செய்யப்படவேண்டும் ; பிறகு, 1802-வது வருஷத்தில் சர்க்கார் பாகம் என்ன இருந்ததோ, அதன் படியும், 1802-வது வருஷத்தில் இருந்த விலைகளின் படியும், வரி விகிதங்களை ஏற்படுத்தவேண்டும். நான், முன்பு தெரிவித்தபடி

1802-வது வருஷத்திற்கு முன்வருஷத்திலிருந்த பாகம், உயர்வானதாயிருந்ததேமட்டுமல்லாமல் சர்க்காரால் சர்வே செய்யப்பட்ட பாரமஹாலிலும், சேலத்திலும், அளவுக்குமிஞ்சின வரியாகவும் இருந்தது. தற்போதுள்ள நிலங்களின் விளைச்சலுக்கு, 1802-வது வருஷத்திய விலைகளை அனுசரித்து, குடியானவர்களுக்கு சகாயம் புரிய வேண்டுமென்பது ஆட்சேபனைக்கு இடம் தரும். ஏனெனில், குடியானவன் 1802-வது வருஷத்திலிருந்து வெகுகாலமாக, நிலத்தை அபிவிருத்தி செய்து வந்திருக்கிறான்.

(iii) மூன்றாவது வகையான கிராமங்கள்: இவைகளிலுள்ள நிலங்கள், 1210-வது பசலிக்கு முன், விளைச்சலின் ஒரு பாகத்தையாவது, ஸ்திரமான தானிய வரியையாவது தீர்வையாகச்செலுத்தி வந்தன. பிறகு இவைகளுக்கு பணவரி விதிக்கப்பட்டு அதையே இப்பொழுது இவை செலுத்தி வருகின்றன. சாசுவத பைசலின் கீழ் இத்தகைய கிராமங்களே ஏராளமாயிருக்கின்றன. இந்த கிராமங்களிலுள்ள நிலங்களைப்பற்றி, பெரும்பான்மை அறிக்கை என்ன சிபார்சு செய்திருக்கிறதென்பதை அறிவது எனக்கு அசாத்தியமாயிருக்கிறது.

உத்தேசிக்கப்பட்ட மசோதாவின், 3-வது பிரிவின், 5-வது ஷரத்து பின்வருமாறு:—

"ஜமீன்தாருக்கு, குடியானவன் செலுத்தவேண்டிய நிலவரி என்பது சாசுவத பைசல் காலத்தில் நிலத்திற்கு நிரந்தரமாக ஏற்படுத்தப்பட்ட நிலவரி விகிதமாகும்."

நாம் இப்பொழுது ஆராயும் கிராமங்களின் நிலங்கள், ருசூம் முதலிய தொகைகள் உள்பட, விளைச்சலில் ஒரு ஸ்திரமான பாகத்தையாவது அல்லது விதிக்கப்பட்ட தானிய வரிகளையாவது தீர்வையாகச் செலுத்தி வந்தன. இப்பொழுதுள்ள விளைச்சலின் தன்மைப்படியும், 1802-ம் வருஷத்திய விலைவாசிகளுக்கு தகுந்தாற்போலவும், மேற்படி கிராமங்களின் நிலங்களுக்கு சர்வே செட்டில்மெண்ட் ஏற்படவேண்டும் மென்பதா, பெரும்பான்மை அறிக்கையின் உத்தேசம்? அப்படியானால், அது மசோதாவில் தெரியப்படவில்லை. மேலும், அது குடியானவர்களுக்கு சகாயம் செய்யாது; குடியானவர்களுக்கு நஷ்டத்தை உண்டாக்கி, அவர்களுடைய நிலைமையைத் தாழ்த்திவிடவும் கூடும். பெரும்பான்மையான நிலங்களுக்கு, பணவரிகள் ஏற்பட்டிருக்கின்றன. வாரவரி கொடுக்கும் நிலங்களைப்போலல்லாமல், இந்த நிலங்களுக்கு குடியானவன் எவ்வளவோ அபிவிருத்தி செய்கிறான். ஏனெனில் தீர்வைபோக மிஞ்சியுள்ள பாகம் முழுவதும் குடியானவனைச் சேர்கிறது. ஆதலால், இந்த நிலங்களுக்கு 1802-ம் வருஷத்திய தீர்வைவிகிதத்தை அனுசரிக்க வேண்டுமென்பது, அறிக்கையின் உத்தேசமல்லவென்று நான் கருதுகிறேன்.

அறிக்கையில் 2-வது பாகத்தில், 74-வது பக்கத்தில் காணப்படும் புள்ளி விவரங்களிலிருந்து, அறிக்கையின் உத்தேசம் பின்வருமாறு இருக்கலாம்:—

சாசுவத பைசலுக்கு முன்வருஷத்திலிருந்த சர்க்காரின் மொத்த நிலவரிவருமானம், சாகுபடி செய்யப்பட்ட நிலங்களுக்கு ஈவு செய்யப்பட்டு, அவ்வாறு நிர்ணயம் செய்யப்பட்ட தொகையே மேற்படி நில விஸ்தீரணத்திற்கு, தீர்வையாக ஏற்படவேண்டும். கார்வெட்டி நகர் ஜமீனைப்பற்றி பின்வருமாறு தெரிவிக்கப்பட்டிருக்கிறது:—சாகுபடி செய்யப்பட்ட அயன் புஞ்சை நிலங்களின் மொத்த விஸ்தீரணம் . . . 532, 371·4–4/16 குண்டாக்கள்; அவைகளுக்கு மொத்த நிலத்தீர்வை. 19'742 13–5/16 ஸ்டார் பகோடாக்கள், அவைகளை வகுத்தால், சாசுவத பைசல் காலத்தில் புஞ்சை நிலத்திற்கு ரூபாயில் இரண்டு அணுக்கள் தீர்வையாக ஏற்படுகிறது. அதேவாறு, சாகுபடிசெய்யப்பட்ட நஞ்சை நிலங்களின் மொத்த விஸ்தீரணம் 313,046–14 குண்டாக்கள்; அவைகளின் மொத்த தீர்வை 49,801·10–4/16 ஸ்டார் பகோடாக்கள். அவைகளை வகுத்தால், ஒரு குண்டாவுக்கு 8 அணு 11 பை தீர்வையாக ஏற்படுகிறது. ஒரு குண்டா சுமார் 37 செண்டுகளாய் இருக்கலாம். அதன்படி ஒரு எக்கரா நஞ்சை நிலத்திற்கு சுமார் ரூ. 1–8–0. தீர்வையாக ஏற்படுகிறது. ஆகையால் 1801-ம் வருஷத்திலிருந்த வரிவிகிதங்களை அனுசரிக்கவேண்டுமென்பது, இந்த புள்ளிவிவரங்களின் உத்தேசமல்லவென்றும், ஆனால் மொத்த நிலவிஸ்தீரணத்திற்குக் கிடைத்த வரி வருமானமே அவைகளின் நோக்கம் என்றும் யூகிக்கவேண்டியதாய் இருக்கிறது விஷயத்தின் சிக்கலான முக்கியபாகம் இதுதான். குடியானவர்களிடமிருந்து வசூலிக்ககூடிய தீர்வைக்கு, சாசுவத பைசல் ஏற்பாடும், பட்டா ரெகுலேஷனும் என்ன வரையறையைச் செய்திருக்கின்றன. 1802-ம் வருஷத்தில் இருந்த வரிவிகிதந்தானா அது, அல்லது மொத்தத் தீர்வையில் குடியானவன் தனது நிலத்திற்குச் செலுத்தவேண்டிய ஒருபாகமா? சாகுபடிசெய்யப்பட்ட நிலங்களுக்கு 1210-வது பசலியிலிருந்த சர்க்கார் வரிகளை ஸ்திரப்படுத்தவேண்டுமென்பது சாசுவத பைசல் ஏற்பாட்டின் நோக்கமல்ல; அவ்வாறு அது செய்யவும் இல்லை. ஆனால் உயர்வான வரிவிகிதங்களின் வரையறையே சாசுவத பைசல் ஏற்பாட்டாலும், பட்டா ரெகுலேஷனாலும் விதிக்கப்பட்டது. எனது காரணங்கள் பின்வருமாறு:—பணவரி விகிதங்களையும், விளைச்சலின் பாகத்தையுமே பட்டாரெகுலேஷன் 9-வது ஷரத்து, தெளிவாகத் தெரிவிக்கிறது; சாசுவத பைசலுக்கு முன்வருஷத்தில் சாகுபடிசெய்யப்பட்ட நிலங்களுக்கிருந்த வரிவிகிதங்களைத் தெரிவிக்கவில்லை. ரெவன்யூ போர்டு யாதாஸ்தில் (1818-ம் வருஷம் ஜனவரி மீ 5உ) தெரிவித்துள்ளபடி, "இந்த காணியாட்சிமுறை, வரிவிகிதத்தை ஏற்படுத்தியதே ஒழிய ஜமீன்தாருக்குச் செலுத்தவேண்டிய வரிகளின் தொகையைக் குறிக்கவில்லை. ஆனால் ஜமீன்தார் சர்க்காருக்குச் செலுத்தவேண்டிய பேஷ்கஷ் மட்டும் நிரந்தரமாக தீர்மானிக்கப்பட்டது. இந்த முறைப்படி, ஜமீன்களும் பாளையங்களும், அப்பொழுதிருந்த ஜமீன்தார்களுக்கும் பாளையக்காரர்களுக்கும் சாசுவதமாகக் கொடுக்கப்பட்டன", பெரும்பான்மை அறிக்கை, ஆதாரமாகக்கொண்டு, 56-வது பக்கத்தில் எடுத்தெழுதியுள்ள விற்பனை விளம்பரமும், இந்த அபிப்பிராயத்தையே வலியுறுத்துகிறது. 18-வது ஷரத்து: "1210-வது பசலி டௌலில் குறித்துள்ள வாரவிகிதத்தைவிட அதிகமான வாரத்தைக் கேட்பதற்கு, குடியானவர்களுக்குஉரிமை இல்லை என்று நிலத்தை விலைக்கு வாங்குபவர்கள் யாவருக்கும் தெரிவிக்கப்படுகிறது; அதேபோல சர்க்கார் பாகம் என்று ஏற்பட்டிருக்கும் விளைச்சலில், குறிப்பிட்ட ஒருபாகத்தைவிட அதிகமான பாகத்தை(சர்க்கார் உரிமைகளை அடையும்) நிலத்தை வாங்குபவர்கள் கேட்கக்கூடாது". வரிவிகிதங்களே நிரந்தரமாகத் தீர்மானிக்கப்பட்டது என்பதும், 1210-வது பசலியின் சர்க்கார் வரிகள் (பேஷ்கஷ்?) நிரந்தரமாகச் செய்யப்படவில்லை என்பதும் B.P. ந. 7743-ல் தெரிவிக்கப்பட்டிருக்கும் அபிப்பிராயம் ஆகும். இது பெரும்பான்மை அறிக்கையில் விஸ்தாரமாக எடுத்து எழுதப்பட்டிருக்கிறது. 1822, 1865, 1908, ஆகிய இந்த வருஷங்களில் ஏற்பட்ட சட்டங்களில், வரிவிகிதங்கள்தான் நிரந்தரமாக விதிக்கப்பட்டன என்பது ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறது.

1863-ம் வருஷத்திய வரிமசோதா சம்பந்தமாக, நியமிக்கப்பட்ட செலக்ட் கமிட்டியும் அதே அபிப்பிராயத்தைத்தான் கொண்டிருந்தது. குடியானவனிடமிருந்து வசூலிக்கக்கூடிய உயர்வான வரிவிகிதத்தை பட்டா ரெகுலேஷன் தீர்மானித்தது, என்பதும் மேற்படி கமிட்டியின் அபிப்பிராயம் ஆகும். நாட்டின் புராதன சம்பிரதாயமும், சாதாரண நியாயமும், வரிவிகிதங்களை ஏற்படுத்தின என்றும், பட்டா ரெகுலேஷன் அவைகளை ஸ்திரப்படுத்தினதே தவிர மாற்றவில்லை என்றும் நீதிஸ்தலங்களும் தெரிவித்தன. ஆதலால் 1210-வது பசலியின் மொத்தத் தீர்வையை சாசுவத பைசல் தீர்மானித்ததே தவிர மேற்படி பசலியின்

வரிவிகிதங்களே உயர்வான வரிவிகிதங்களாகத் தீர்மானிக்கவில்லை என்பது பெரும்பான்மை அறிக்கையின் அபிப்பிராயமானுல், நான் அதை ஆதரிக்கமுடியாது. இந்த விஷயத்தை பூர்த்திசெய்வதற்குமுன் நான் சொல்லவிரும்புவது என்னவென்ருல், மேலே தெரிவித்த அம்சங்களைப்பற்றி, ஜமீன்தார்கள் சார்பாகவந்த சாக்ஷிகளைக் கேட்கவில்லை. இவ்விஷயத்தைப்பற்றி சாக்ஷிகள் ஒன்றும் கூறவில்லை. தாக்கல் செய்யப்பட்ட பத்திரங்களிலும் ஒன்றும் கிடைக்கவில்லை. 1802-வது வருஷத்திற்குமுன் இருந்த பழைய நிலஅளவுகளைப் பற்றியாவது, தானிய அளவுகளைப்பற்றியாவது, அவைகள் இப்பொழுதுள்ள அளவுகளுக்கு மாற்றப்பட்ட புள்ளிவிவரங்களைப்பற்றியாவது, சாக்ஷிகள் விசாரிக்கப்பட்டு, அவர்களின் அபிப்பிராயம் தெரிந்துகொள்ளப் படவில்லை. இம்மாதிரியான விசாரணை செய்யாமல், கரிசைகள், குர்ருகள், குண்டாக்கள் முதலிய பழைய அளவுகள், தற்போதுள்ள அளவுகளின்படி மாற்றப்பட்டிருக்கின்றன. அது சம்பந்தமாக, அறிக்கையில் குறிக்கப்பட்டிருப்பவை அவை சரியானவை அல்ல என்பது, கார்வெட்டி நகர் ஜமீனைப்பற்றி 75-வது பக்க உட்பிரிவில் கமிட்டி செய்த முடிவில் இருந்து தெரியவருகிறது : “இவ்வாறு ஒப்பிட்டுப்பார்த்ததிலிருந்து சாசுவத பைசல் காலத்திற்கு பிறகு சாகுபடி விஸ்தீர்ணம் கொஞ்சம்கூட பெருக்கமடையவில்லை என்றும், ஆனுல் குறைந்திருக்கிறதென்றும் தெரியவருகிறது. இதற்குக் காரணம் ஜமீன்தார் வசூலித்துவந்த உயர்ந்த தீர்வையே.” புள்ளி விவரங்கள் எவ்வாறு இருந்தபோதிலும், கார்வெட்டிநகர் ஜமீனைப்பற்றி எனக்கு சொந்தபரிச்சயம் உண்டாகையால், சாசுவதபைசலுக்குப் பிறகு சாகுபடி விஸ்தீர்ணம் அதிகரிக்கப்படவில்லை என்பதை நான் சற்றும் ஒப்புக்கொள்ளமாட்டேன். புள்ளிவிவரங்கள். உண்மையான விஷயவிவரங்களை மிஞ்சமுடியாது.

வரிவிகித விஷயமாக, பெரும்பான்மை அறிக்கை, செய்த சிபார்சுகளை பரிசீலனை செய்தபிறகு, வரி விகிதங்களைத் திருத்தி அமைப்பதற்கு, குடியானவர்கள் தக்க ஆதாரங்களைக்காட்டி இருக்கிருர்களா, அவ்வாறு செய்திருப்பின், என்ன தத்துவங்களை அனுசரித்து அவைகளைத் திருத்தி அமைக்கவேண்டுமென்பதை இப்பொழுது கூற விரும்புகிறேன்.

சாக்ஷிகள் விசாரிக்கப்பட்ட ஐந்து நடுநகரங்களிலும், இப்பொழுதுள்ள வரிவிகிதங்கள் அதிகமாய் இருக்கிறதென்றும், அவைகள் தங்கள் சக்திக்கு மிஞ்சினவை என்றும், பல இடங்களில் ரயத்துவாரி விகிதங்களைவிட மிகவும் அதிகமாய் இருக்கிறதென்றும், குடியானவர்கள் முறையிட்டிருக்கிருர்கள். சர்க்கார்ப் பிரதேசங்களில் இருக்கும் வரிவிகிதங்களைவிட ஜமீன்களில் உள்ள வரிவிகிதங்கள் அதிகமாய் இருப்பதற்குக் காரணங்கள் பின்வருமாறு :—

(1) பட்டா ரெகுலேஷன்படி விதிக்கப்பட்ட மேல்த்தர வரிவிகிதங்கள் மிகவும் அதிகமான வரிவிகிதங்களாக இருக்கிறதென்பதை முன்னரே விளக்கி இருக்கின்றேன். சர்க்கார்ப் பிரதேசங்களில் கூடுதலான வரிவிகிதங்கள் கண்டுபிடிக்கப்பட்டபொழுது சர்க்கார் அவைகளை திருத்தியமைத்து முடிவில் மொத்த விளைச்சலின் பாதிபாகம் என்ற ஆதாரமுறையை ஒழித்து விட்டார்கள். சர்க்கார்ப் பிரதேசங்களில் முதன்முதலாக, சர்வே செட்டில்மெண்ட் ஏற்பட்டு, புதியகொள்கைகள் அனுசரிக்கப்பட்டபொழுது, இது செய்யப்பட்டது.

(2) பட்டா ரெகுலேஷன், ஒரு வரையறையை ஏற்படுத்தியபோதிலும், இப்பொழுதுள்ள எஸ்டேட் நிலச்சட்டத்தில் இருப்பதைப்போல, வரி உயர்வைத் தடுக்கும் குறிப்பான விதி ஒன்றையும் ஏற்படுத்தவில்லை. எழுத்துமூலமான ஒப்பந்தம் இல்லாவிட்டால் மட்டுமே செல்லும் என்ற அர்த்தத்திற்கு, பட்டாரெகுலேஷனின் 9-வது ஷரத்து இடம் தரக்கூடும்.

(3) ஜமீன்தார் அல்லது குடியானவன் தானியவரியை, பணவரியாக மாற்றவிரும்பினுல், பட்டா ரெகுலேஷனில், அதற்கு யாதொரு ஏற்பாடும் இல்லை. அது இருதிறத்தாருடைய ஒப்பந்தத்திற்கு விடப்பட்டது குடியானவர்களுக்குள்ள அந்தஸ்து, ஜமீன்தார்களுக்குள்ள அந்தஸ்திற்கு சமமானதல்ல. ஏனெனில் பிரிட்டிஷ் ஆட்சிக்கு முன்பு, ஜமீன்தார்களுக்கு, ஒருவகையான அரசாங்க அதிகாரமும் இருந்தது. சாசுவத பைசல் ஏற்பாட்டிற்குப் பிறகு, அவர்கள், தேசத்தில், தங்கள் செல்வாக்கையும் ஆதிக்கத்தையும் பெருக்கிவந்தார்கள்.

(4) சாசுவத பைசலுக்குமுன், அமுலில் இருந்த வரிவிகிதங்களைத் தெரிவிக்கும் ஆதாரப் பத்திரங்களைச் சேகரித்துப் பயன்படுத்திக்கொள்வது, குடியானவனுக்கு, அசாத்தியமாய் இருந்தது. அவைகள் கிடைக்காதபொழுது, பக்கத்தில் இருந்த நிலத்தின் வரிவிகிதத்தையே ஆதாரமாகக்கொள்ள நேரிட்டது.

(5) தரிசு நில சம்பந்தமான வரிவிகிதங்கள், குடியானவனுக்கும் ஜமீன்தாருக்குமுள்ள ஒப்பந்தத்தைப் பொறுத்தது என்று, வரிவசூல் சட்டம் தெரிவித்தது. நாட்டின் பழக்கப்படி, கிராமத்தில் சாகுபடி செய்யக்கூடிய எல்லா நிலமும் (சாகுபடி செய்திருந்தாலும் செய்யாதிருந்தாலும்) சர்காருக்கு வரிசெலுத்தவேண்டும். அந்த வரி, சாகுபடி செய்யப்பட்ட நிலத்திற்கு ஒருவகையாகவும் சாகுபடி செய்யப்படாத நிலத்திற்கு ஒருவகையாகவும், வித்தியாசப்பட்டதாய் இல்லை. கிராமத்திலுள்ள மாமூலான வரிவிகிதங்களுக்கு பதிலாக, தரிசு நிலங்களுக்கு, ஒப்பந்த விகிதம் ஏற்பட்டகாரணமாக பக்கத்து நிலத்தின் வரிவிகிதம் பாதிக்கப்பட்டது.

(6) ஜமீன்தார் செய்யும் அபிவிருத்திகள் சம்பந்தமாக, ஒப்பந்தமூலம் வரிவிகிதங்கள் ஏற்படுத்திக் கொள்ளலாம் என்று வரிவசூல் சட்டம் தெரிவித்தது. முன்கூறியவாறு, ஏழைக் குடியானவன் ஜமீன்தாரை எதிர்க்கமுடியாதாகையால், கடுமையான தீர்வைகளுக்கும் சம்மதிக்கவேண்டியதாயிற்று. ஜமீன்தார் தனது சொந்தச்செலவில் செய்த நில அபிவிருத்திகளுக்கு ஒப்பந்தமூலம் வரிவிகிதங்கள் ஏற்படுத்திக்கொள்வதென்பது எஸ்டேட் நிலச்சட்டத்தால் நீக்கப்பட்டது. ஆனுல், 1908-ம் வருஷத்தில் அமுலில் இருந்த பழைய ஒப்பந்த வரிவிகிதங்களை அது பாதிக்கவில்லை.

(7) சொக்கலிங்கம் பிள்ளை வழக்குத் தீர்ப்பின் பலிதமாக, பல ஜில்லாக்களில் ஜமீன்தார்கள் வரியை உயர்த்த ஆரம்பித்தார்கள். 1905-ம் வருஷத்திய எஸ்டேட் நிலச்சட்ட மசோதாவின் கீழ்க் கண்ட ஷரத்து குறிப்பிடத் தக்கது. 30-வது பிரிவு 1-வது ஷரத்து பின்வருமாறு கூறுகிறது :—

“பணக்கிஸ்தியைசெலுத்தும் குடியானவன், கீழ்க்கண்ட காரணங்களின்மீது (மற்ற காரணங்களுக்கு அல்ல) கிஸ்தித் தொகையைச், குறைக்கவேண்டும் என்று, கலெக்டர் முன்பு தாவா செய்யலாம்—அதாவது, 1871-ம் ஞு மேமீ 1உக்குப் பிறகு, கிஸ்தித் தொகை, நியாயமற்ற முறையில் உயர்த்தப்பட்டது என்ற காரணத்தைக்கொண்டு.”

1908-ம் வருஷத்திய மசோதாவில், இந்த ஷரத்து நீக்கப்பட்டு, 1908-ம் வருஷத்தில் இருந்த வரி விகிதங்கள், நியாயமான, ஒழுங்கான வரிவிகிதங்கள் என்று ஏற்படுத்தப்பட்டன.

(8) எஸ்டேட் நிலச்சட்டப்படி வாரம் செலுத்திய நிலங்கள் பண வரிவிகிதங்கள் செலுத்தும் நிலங்களாக மாற்றப்படுவது. இது சம்பந்தமான விதிகள் அரசாங்க வரி நிர்மாணம் என்ற கொள்கையின் மீது ஏற்படுத்தப்படவில்லை. ஆனால் நிலத்திற்குரியவர் குத்தகைகாரனிடம் குத்தகைத் தொகையை வசூலிக்கும் முறையை அனுசரித்து. வரிமாற்ற நடவடிக்கைகளில் விதிக்கப்பட்ட உயர்ந்த வரிவிகிதங்களைப்பற்றி கமிட்டி முன்பு சாட்சிகள் பன்முறை முறையிட்டிருக்கிறார்கள்.

9) எஸ்டேட் நிலச்சட்ட விதிகளின்படி விலைவாசிகள் உயர்வதின் காரணத்தை முன்னிட்டு வரியை உயர்த்துதல். விலைவாசிகளின் உயர்வு காரணமாக வரிகளை உயர்த்திக்கொள்ளலாம் என்று எஸ்டேட் நிலச்சட்டத்தில் உள்ள விதிகளை, பித்தாபுரம், விஜயநகரம், முதலிய பெரிய ஜமீன்கள் தங்களுக்கு லாபகரமாக பயன் படுத்திக்கொண்டிருக்கின்றன. விலைவாசிகள் உயர்ந்திருக்கும் சமயத்தில் வியாஜியங்களும் நடவடிக்கைகளும் எடுத்துக்கொள்ளப்பட்டன. ஆனால், வரி உயர்த்தப்பட்ட பிறகு விலைவாசிகள் திடீரென்று, இறங்க ஆரம்பித்தன.

(10) "விலைமட்டத்தின்" தாழ்சி காரணமாக பணவரிவிகிதங்களின் பாரத்தை குடியானவன் தாங்க முடியவில்லை.

மேற்கூறிய காரணங்களாலும் இதர பல காரணங்களாலும், வரி விகிதங்கள் பொறுக்கமுடியாதபடி அதிகமாக இருக்கின்றன என்னும் குடியானவர்களுடைய முறை ஈடு நம்பப்படவேண்டும். அதற்காக இப்பொழுதிருக்கும் வரி விகிதங்களை திருத்தி அமைத்து நியாயமான, ஒழுங்கான வரி விகிதங்களாகச் செய்வது முற்றிலும் அவசியம்.

இச்சந்தர்ப்பத்தில், சென்னை சட்டசபையில், நிலவரி பரிபாலனத்தைப்பற்றி திருவாளர் சாமி வெங்கடாசலம் செட்டியார் செய்த பிரசங்கத்தின் சாராம்சத்தை இங்கு எடுத்துக்கூற விரும்புகிறேன் :—

"ஜமீன்தாரப் பிரதேசங்களில் உள்ள வரி விகிதங்கள், பக்கத்திலுள்ள சர்க்கார் வரி விகிதங்களைவிட மிகவும் அதிகமாய் இருக்கின்றன. அதற்குக் காரணம் என்னவென்றால், 1802-வது வருஷத்தில், ஜமீன்களுக்கு சாசுவத பைசல் ஏற்பட்டமையால், அக்காலத்தில் சர்க்கார் பிரதேசங்களில் இருந்த பைமாஷ் விகிதங்களைப் போன்ற (இப்பொழுது சர்க்காரப் பிரதேசங்களில் தள்ளுபடி செய்யப்பட்ட "தோட்ட வரி" உள்பட) விகிதங்களை ஜமீன்தார்கள் ஏற்படுத்திக்கொண்டார்கள். அப்படிப்பட்ட கட்டுப்பாடு இல்லாத சந்தர்ப்பங்களில், அவர்கள், குடியானவர்களோடு ஒப்பந்தம் செய்துகொண்டு அதன்மூலம் தங்களுக்கு லாபகரமானதீர்வை விகிதங்களை ஏற்படுத்திக் கொண்டார்கள்; அல்லது வார முறைப்படி தங்களுக்குக் கிடைத்துவந்த தானியத்தீர்வைகளை, தங்களிஷ்டமான விகிதப்படி, பணத்தீர்வையாக மாற்றிக்கொண்டார்கள்.

கோர்ட் ஆவ் வார்டின் மேற்பார்வையிலிருக்கும் ஒரு ஜமீன்தாரியில் உயர்ந்த நஞ்சை நிலத்தீர்வை ஒரு ஏக்கருக்கு 45 ரூபாய் என்றும், அந்நிலத்தில் ஒரு ரயத்து தான் விரும்பினால் 2 மாசூல் செய்துகொள்ளலாமென்றும், தோட்டப்பயிருக்கு ஒரு ஏக்கருக்கு 15 ரூபாய் வரை தீர்வை இருக்கிறதென்றும் போர்டார் தெரிவித்திருக்கின்றனர். இவைகள் ஏற்றமான படித்தரம்தான். ஆனால் உண்மையாகக் கட்டப்படுகின்றது. வெற்றிலைத் தோட்டத்திற்கு ஏக்கருக்கு 32 ரூபாய் தீர்மானித்திருக்கிறது. அருகாமையிலுள்ள மூன்று ஜில்லாக்களில் சர்க்கார் நிலத்தீர்வை நஞ்சை நிலங்களுக்கு ஏற்றமானதே 10 ரூபாய், 8 ரூபாய், 7½ ரூபாய். இரண்டாம் மாசூல் செய்தால் அதற்காக பாதி வரி அதிகமாக, தீர்வையுடன் தரவேண்டும். சர்க்காருடைய நடுத்தரமான விகிதத்தை இவ் வரிக்கணக்கிலிருந்து தெரிந்துக்கொள்ளலாம். கோதாவரி டெல்டாவில் ஏராளமான இடங்களில் நெல் விளைப்பதற்காக பாயக்காரிகளுக்கு ஜமீன்தாரிகளின் நிலங்கள் சர்க்காரின் நீர் வரியோடு ஏக்கர் 25 முதல் 30 ரூபாய் வரை தீர்வைக்கு விடப்படுகிறது. கரும்பு பயிர் செய்ய அதைவிட உயர்ந்த தீர்வைக்கு விடப்படுகிறது. போர்டார் இந்த தீர்வையை எதிர்க்கவில்லை. ஆனால் அவைகள் கட்டப்படவேண்டியதாய் கட்டி வரப்படுகிறது."

உயர்ந்த தீர்வையைப்பற்றிய இவ்விதமான குறை புதிதல்ல. 1908-ம் வருஷத்திலே இது விசாரிக்கப்பட்டு முடிவாக 1908-ம் வருஷத்து நிலைபோல வரிப் படித்தரம் தீர்மானிக்கப்பட்டது. 1934-ம் வருஷத்து மசோதாவில் சாமி வெங்கடாசலம் செட்டியார், ஜமீன்தாரி நிலத்தின் குத்தகைகளை சர்க்கார் எல்லைக்குள் இருக்கும் நிலத்தைப்போல சரி செய்யவேண்டுமென்று கொண்டுவந்த தீர்மானம் முறைப்படியானதல்லவென்று தள்ளப்பட்டது.

சென்னை பூஸ்த்திதிகளிலுள்ள நிலச்சட்டத்தைத் திருத்த 1934-ம் வருஷத்தில் ஒரு மசோதாவைக் கொண்டுவர முயற்சிக்கப்பட்டது. தீர்வையைப்பற்றி அம்மசோதாவின் 12-ம் பிரிவில் கீழ்க்கண்டபடி தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

விளக்கம்.—அடுத்தாற்போலுள்ள சர்க்காரின் ரெவின்யூ தாலுகாவில் ரயத்துவாரி பட்டா நிலங்கள் ஜமீன் நிலங்களைப்போல சுயஅனுபவத்தையும், அனுகூலங்களையுமுடையதாகவும் இருந்து அந்த ரயத்துவாரி நிலத்தீர்வையை விட சட்டப்படி கொடுக்கப்படும் ஜமீன் நிலத்தீர்வையோ, தீர்வை விகிதமோ அதிகமானதென்று ருசு செய்யப்பட்டாலும், 1898-ம் வருஷம் ஜூலை மாதம் 1-ம் தேதிக்குப்பின் தீர்வையோ தீர்வை விகிதமோ அதிகமாக்கப்பட்டதாக ருசு செய்யப்பட்டாலும், இதற்கு மாறானது ருசு செய்யப்பட்டதாகக் கொள்ளப்படும்."

என் சிபார்சைச் சொல்லுமுன் வேறொரு விஷயத்தைப் பற்றிக்கூறவேண்டியது அவசியம். அதாவது சட்ட முறைப்படி ஜமீன்தாருக்கும், ரயத்துக்குமுள்ள சம்பந்தம் வரி வசூலிக்கும் உரிமையுடைய ஜமீன்தாரிடம் சொந்தக்காரர் வரி கட்டுவதைப்போலானால் விலை உயர்வால் வரி உயர்த்தலாம் என்பது அனுமதிக்கத்தக்கதா என்பதே. வரி உயர்த்தும் உரிமை அரசருக்குரியதென்றும், அது ஜமீன்தாரிடமிருந்து எடுத்து விடப்பட்டதென்றும், சட்டத்தின் 8-வது பிரிவிலும், வரிப்படித்தரம் பற்றிய முறையின் 9-வது பிரிவிலும் எப்படியும் இது உணரக்கூடியதாகும். கலெக்டருக்கு விடுத்திருக்கும் அறிக்கையின் 37-வது பிரிவு கீழ்க்கண்டவாறு :—

"இனி, தங்கள் நலனைக்கருதி நிலச்சுவான்தார்களும், ரயத்துகளும் ஒரு குறிப்பிட்ட அளவான நிலத்துக்கு ஒரு குறிப்பிட்ட தொகையை ஏற்படுத்திக்கொண்டு, எந்த வகையான மாசூல் செய்தால் அதிக லாபம் வருமோ அதைச் செய்துக்கொள்ள உரிமை இருக்கும்படி ஒப்பந்தம் செய்துக் கொள்ளலாம். இந்தப் பிரிவுபடி காலமுறையாக விலையைக்கொண்டு வரி மாற்றத்தை செய்ய ஒரு ஏற்பாடும் இல்லை."

எஸ்டேட் நிலச்சட்டத்தின் 30 (a) பிரிவில் கீழ்க் கண்டபடி சட்டமிருக்கிறது :—

"ஆனால் குத்தகைத் தொகையானது நிஷ்கரிஷை செய்யப்பட்டுள்ள ஒரு வீதம் அல்லது வீதங்களின்படி சாசுவதமாய் செலுத்தத்தக்கதாய் இருந்தால் அது விலை அதிகரித்திருக்கிறதென்னும் ஹேதுவினாலே இந்தப் பகுதியின்படி அதிகப்படுத்துவதற்குள்ளாகமாட்டாது."

நிலச்சுவான்தாரும் ரயத்தும் வாரத்துக்குப் பதில் பணமாக மாற்றிக்கொண்டால், விலை உயர்வால்
பணத்தீர்வையை உயர்த்த முடியாதென்று இந்த நிபந்தனை ஏற்றுக்கொள்கிறது. அதனுல்த்தான் விலை
உயர்ந்திருந்தாலும் பல ஜமீன்தார்களின் விஷயங்களில் பணத்தீர்வை உயர்த்தப்படவில்லையென்று நம்
முன் சாக்ஷியங்கள் வந்தன. உண்மையாக 1908-ம் வருஷத்து சட்டத்தில் தான் விலை உயர்வால் தீர்வையை
உயர்த்த உரிமையுண்டென்று காணப்படுகிறது. அதுவலையில் ரெகுலேஷன்களிலும் இதர சட்டத்திலும்
இதைப்பற்றி குறிப்பேயில்லை. வரி மாற்றுவதை உத்தரவு செய்வதிலோ, நிறுத்திவைப்பதிலோ விலை
உயர்வோடு மட்டுமன்றி பல காரணங்களால் சர்க்கார் நிச்சயித்து அதில் மனதைச் செலுத்துவதாலும்,
காலப்படி. சர்க்கார் தீர்வை நிர்ணயிக்கையில் விலையைப்பற்றி கருதுவதுயென்பதாலும் அதை ஜமீன்தார்
எல்லையில் கொண்டுவருவது செல்லத்தக்கதல்லவென்று எனக்குத் தோன்றுகிறது. அதனுல் எஸ்டேட்
நிலச்சட்டத்தில் தீர்வையை உயர்த்துவதைப்பற்றிய நிபந்தனையை இனி தொடரக்கூடாதென்றும், தீர்வை
நிஷ்கரிஷை முடிவாகச் செய்துவிடவேண்டுமென்றும் எனக்கு ஏற்படுகிறது. அதனுல் ஜமீன்தார் எல்லையில்
எப்படி. தீர்வையை மாற்றுவதென்பதைப்பற்றிய கேள்வி எழும். ஒரு குறிப்பிட்ட வகையான ரயத்து
கள் ஒரு குறிப்பிட்ட பிரதேசத்தில் பெர்மனெண்ட் செட்டில்மெண்ட் மற்ற இதர ரெகுலேஷன் முதலியவற்
ருல் ஆளப்படுகையில் மற்ருெரு வகையானவர்க்கு சர்க்கார் பார்வையில் அவர்கள் ஏஜண்டுமூலம் சர்க்கார்
பாக்கியை வசூலிக்கப்படுகிறது. வரி உயர்த்துவதைப்பற்றிய பல சட்டங்களுக்கேற்றபடி இப்போதுள்ள
உயர்ந்தமுறையில் ஜமீன்தார்கள் தீர்வையை உயர்த்திவிட்டார்கள். சர்க்காரோ ஒரே விதமான
கணக்குப்படி தங்கள் ரயத்துகளின் தீர்வையைக் குறைத்திருக்கிருர்கள். இந்நிலையில் செய்யத்தக்க
தாவது: குறைந்தது ஜமீன் வீதங்களை சர்க்கார் வீதங்கள்படி குறைக்கவேண்டியதே. இக்கமிட்டியின்
முன் அப்படித்தான் சாக்ஷியமும் வந்தது. பல சங்கங்களும், ரயத்து சங்கமும் அதே மாதிரிதான்
வேண்டின. இவற்ருல் சிபார்சு செய்யக்கூடியது கீழ்க்கண்டதொன்றே :—

> ரயத்வாரி எல்லையில் எப்படி நிஷ்கரிஷை செய்யப்பட்டிருக்கிறதோ அதைப்போலவும், நிபந்தனை
> களின் பிரகாரமாகவும் ஜமீன்தாரி எல்லைகளையும் கட்டாயமாக சர்வே செய்து நிஷ்கரிஷை
> செய்யவேண்டும். மார்ஜோரி கமிஷன் அறிக்கையின் சிபார்சுகளையும் இவ்விஷயத்தில்
> கவனித்து ஏற்பாடு செய்யவேண்டும். அந்த சர்வேயிலும், நிஷ்கரிஷையிலும் ஏற்பட்ட வரி
> வீதம் முடிவாக நிஷ்கரிஷையானதாக இருக்கவேண்டும்.

3-ம் அத்தியாயம்,

சர்வேயும், செட்டில்மெண்டும், நீர்ப்பாசனமும்.

கைப்பற்று நிலத்தைப்பற்றி திர்வை வீதத்தோடு நெருங்கி சம்பந்தப்பட்டிருப்பது நீர்ப் பாசனம்,
சர்வே என்பதாகும். ரயத்தின் கைப்பற்று நிலத்தின் பளுவையும் விலை, பொதுத் தீர்வையின் தன்மையை
யும், தடங்கலில்லாத குறைவற்ற நீர்ப்பாய்ச்சலையும் பொறுத்தது. ரயத்தின் வேலைப்பாட்டாலும், கிணற்று
ஜலம், மழை இவைமேல் ஆதாரப்பட்ட புஞ்சை நிலங்களைத் தவிர்த்து ஜமீன்தாரி எல்லையில் நஞ்சை நிலம்தான்
ரயத்தின் கைப்பற்று நிலத்தில் முக்கியமான விலையுயர்ந்த பாகமாகும். ஒரு பக்கமோ மற்ருெரு பக்க
மோ ஒரு சில ரூபாய் வித்தியாசமான தீர்வை விகிதம், குறைபாடான நீர்ப்பாய்ச்சல் கட்டு வேலைகளைப்
போல கெடுதியானதல்ல. ஒரு ரயத்து நஞ்சை நிலம் பயிர்செய்து நடுவிலோ முடிவிலோ நீர்க்குறைவால்
பயிர் கெட்டுவிட்டால், ரயத்து பயிர்மட்டும் இழப்பதல்லாமல், அது சம்பந்தமான தொகையையும் இழக்
கிருன். சாதாரண அனுபவத்தில் ஒரு ஏக்கருக்கு 10 முதல் 20 ரூபாய் வரை செலவாகிறதாக ஏற்படுகிறது.
அதனுல் நஞ்சை நில விகிதத்தில் குறைவு கிடைக்கிறதோ இல்லையோ, தான் அந்தப்பணத்தை இழக்க
வேண்டியதுதான். வரிவஜா என்பது ஒரு முகத்துடைப்புதான். உண்மையான மருந்து நீர்ப்பாய்ச்சலை
கவனிப்பதே. ஜலக்குறைவுக், பயிரைப் பூராவும் விளையாமல் செய்யாதபடிக்கு மொத்த மகசூலை குறைக்கும்.
இதை நான் சொல்வதின் காரணம், நீர்ப்பாய்ச்சல் வசதிகளின் அவசியத்தைக்காப்பாற்றி கட்டு மராமத்துப்
பார்ப்பதின் அவசியத்தை விளக்கவேதான்.

கலெக்டரிடம் இருந்து கிடைத்த பல அறிக்கைகளிலிருந்து பல ஏரிகள் நல்ல நிலையில் இல்லையென்று தெரி
கிறது. சாக்ஷிகளும், நீர்ப்பாசனங்களை சரியான நிலையில் காப்பாற்றவில்லையென்றும் கெட்டுப்போகவிட்டிருப்ப
தாகவும் கூறினுர்கள். புதுச் சட்டத்தில் ஏற்படுத்தியிருக்கும் நிபந்தனைகள் விருத்தியான நிலமைக்குக்
கொண்டுவரத்தக்க போதுமான ஏற்பாடுகள் உடையதாக இல்லை. அதனுல் ஒவ்வொரு ஆயக்கட்டிலும்
இருக்கும் நிலத்தீர்வையிலிருந்து ஒரு தொகையை எடுத்து ஒரு நிதியாக ஒவ்வொரு நீர்ப்பாசன வேலை
யையும் காப்பாற்றிவைக்கவேண்டும் என்று என்மனதிற்கு ஏற்படுகிறது. எந்த விகிதமாக இவ்விஷ
யத்திற்கு தொகை ஒதுக்குவது என்பது திண்ணமாக ஏற்படுத்தவேண்டும். ஆனுல் இப்போது
இருக்கும்படியான அதிகேவல நிலைமைக்கு ஆயக்கட்டு வருவாயில் 100-க்கு 25 சதம் எடுத்து வருஷ
மராமத்து வேலைக்கு ஒதுக்கி, தக்கபோது 10 சதம் வரை குறைக்குமட்டும் நீக்கிவைக்க ஏற்பாடு செய்ய
வேண்டும். இவ்விஷயத்தில் மச்சம்போன்ற வகையில் வரும் வரும்படியையும் ஆயக்கட்டு வரும்படியில்
கணக்கிடவேண்டும்.

நீர்ப்பாசன கட்டு வேலைகளின விஷயத்திலும், நிலத்துக்கு ஜலம் பாய்ச்சுவதிலும் அதிகாரம
ஜமீன்தாருக்கு இருக்கக்கூடாதென்று சாக்ஷியம் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஜமீன்தார்கள் தரப்பு சாக்ஷி
களால், இப்போது இருப்பதுபடி நீர்ப்பாய்ச்சல், ரயத்துகளாலேயே பங்கிடப்படுகிறதென்றும் வழக்க
முறை தவறியபோது சிவில் கோர்ட் அதிகாரம் செலுத்தப்படுகிறதென்றும் ஒத்துக்கொள்ளப்பட்டிருக்
கிறது. ஜமீன் எல்லையிலும் சர்க்கார் எல்லையிலும் இதே முறைதான் இருப்பதாக நான் நம்புகிறேன்.
டெல்டா ஏரியாவில் சர்க்காரால் நீர்ப்பாய்ச்சல் பங்கிடப்படுகிற பாசங்களில் கூட, அந்தத்திட்டம் நிலத்துக்கு
நிலம் செய்யப்படவில்லையென்றும் ஏற்படுகிறது. இயற்கையாகவே நிலத்துக்கு நிலம் நீர்ப்பாய்ச்சலில்.
முறை ஏற்படுத்துவது அசாத்தியமான காரியம். செய்யவேண்டிய சிபார்சு என்னவென்ருல் நிலத்துக்கு
நிலம் நீர்ப்பாய்ச்சுவதின் முறையில் ஜமீன்தார்க்கு அதிகாரம் இருக்கக்கூடாதென்பதும் சிவில் கோர்ட்டால்
விசாரிக்கப்பட்டு உத்தரவிடப்பட்ட கிராம சம்பிரதாயப்படி நடை பெற விட்டுவிடவேண்டுமென்பதே.

நிலச்சுவான்தாரின் சொந்தச் செலவில் கட்டு வேலையில்
ஜலவரி வீதம்பற்றி கவனிக்கவேண்டும். ஆக்ட், இவைகளின்படி என்ன
ரெண்ட் ரெகவரி ஆக்ட், எஸ்டேட் லாண்ட்
விருத்திகள் செய்யப்பட்டால், இருக்கிற நீர்ப்பாசன ஆதாரங்களை
நிபந்தனைகள் ஏற்பட்டிருக்கிறதென்பதைப்பற்றி குறிப்பிட்டிருக்கிறது.
விருத்தி செய்யவும், புதிதாக கட்டு வேலைகள் ஏற்படுத்தவும் பெரும்பான்மை அறிக்கை சொல்லுகிறபடி, நியாய
மான தக்க தீர்வை விதிக்காமல் நிலச்சுவான்தார் இவ்வேலைகளைச் செய்யவேண்டுமென்பதை நான் ஏற்றுக்
கொள்ளவில்லை. அது நிலச்சுவான்தார்கள் எந்த வேலையையும் செய்ய முன் வரச்செய்யாது. இதை
சர்க்காரே சட்டமூலம் சரி செய்யவேண்டும். ஜலவரி முறையில் சர்க்கார் எல்லையில் இருக்கும் விகி
தத்தையே இதற்கும் முறையாகக் கொள்ளவேண்டுமென நான் சிபார்சு செய்கிறேன்.

பயிரிடுவதற்கு, நிரந்தரமாகவோ, தற்காலிகமாகவோ ஏரிக் கரைகளை கொடுத்திருப்பதால் ஏரிகளில் மண் தேக்கமாயிருப்பதாக, குறைகள் கூறி மனுக்கள் வந்திருக்கின்றன. ஜலம் சேமிப்புக்கு பாதகமான இச்செய்கையைத் தண்டிக்க வேண்டும். சர்வே செய்வதில், இதை கவனித்து சரியானபடி வரையறுக்க வேண்டும்.

சர்வேயும், செட்டில்மெண்டும்.

தீர்வை வீதத்தோடு, நீர்ப்பாசன வேலைகள் மராமத்து செய்யப்படாமலிருப்பதைப்பற்றிய குறைகளுடன் சர்வே செய்யாததும், பட்டா மாற்றப்படாதிருப்பதும் குறைகளாகும். கூட்டுப்பட்டாவைப்பற்றி, சாதாரணமாக குறை பெரிதாயிருக்கிறது. உயர்ந்த தீர்வையென்னும் குறையோடு, பட்டா மாற்றுமலிருப்பதால் மற்றொருவர் மாகூல் செய்யும் நிலத்திற்கு, ஏதோ ஒருவர் கட்டவேண்டியிருக்கிறது. எல்லா சர்க்கார் எல்லைகளும் சர்வே செய்யப்பட்டு, நிலப் பதிவுகளும் ஏற்படுத்தி யத்துகளின் கைப்பற்று நிலங்களைப்பற்றி மற்றும் எல்லா விபரங்களும் கிடைக்கும்படி ஏற்பாடு செய்திருக்கையில், ஜமீன்தாரின் எல்லையிலோ பாதி நிலங்கள் மட்டும் சர்வே செய்யப்பட்டு, மற்ற பாதி சர்வே செய்யப்படவில்லை. இது கைப்பற்று நிலங்களை விற்பனை செய்வதிலும் அடமானம் செய்வதிலும், மிக கஷ்டங்களை விளைவிக்கின்றது. எவ்விடத்தில் கைப்பற்று நிலங்கள் இருக்கின்றதென்று குறிப்பிடுவதும் கஷ்டம். இதனுல் ஜமீன்தாரியிலுள்ள நிலங்களை அடமானங்கள் வாங்குவதில்லையென்று, நில அடமான பாங்கிகள் ஒரு முடிவு செய்திருக்கின்றன. சர்வேயில்லாதது, கூட்டுப்பட்டாக்களை அதிகமாக்குகிறது. நிலத்தீர்வை பாக்கி, கூட்டுப்பட்டாவினுல் அதிக குறைகளை ஏற்படுத்துகிறது. ஜமீன்தார்கள் பட்டா மாற்ற கர்ணங்களுக்கு உத்தரவிட்டும் அவர்கள் செய்வதில்லையென்றும், அவர்களை ஜமீன்தாரர்களால் விலக்கமுடியாதென்றும் குறை கூறுகிறார்கள். எது எப்படியானுலும் குறையிருப்பதென்பது ஒத்துக்கொள்ளப்படுகிறது. கைப்பற்று நிலங்களை உட்பிரிவினை செய்வதற்கும், மாற்றுவதற்கும், நில தஸ்தாவேஜுகளைக் காப்பாற்றுவதற்கும் ரயத்வாரி எல்லையில் இருக்கும் நிபந்தனைகள் ஜமீன்தாரி எல்லையிலும் கையாளப்படவேண்டும். பல நிலத்துக்குடையவர்கள் ஜமீன்தாருக்கு, விண்ணப்பங்கள் செய்தவுடன், தனிப் பட்டாக்கள் கொடுத்து கூட்டுப்பட்டா முறையை ஒழித்துவிடவேண்டும்.

சர்வே, நீர்பாசனம், இவைபற்றிய இவ்வத்தியாயத்தை நான் முடிக்கு முன் ஒன்று சொல்ல விரும்புகிறேன். ஒவ்வொரு வருஷமும் சர்க்கார், பேஷ்கஷ் மூலம் 40 லக்ஷ ரூபாயும், இனும் சொத்தில் குவிட் ரெண்டில் 7 லக்ஷமும் பெறுகின்றது. இவ்விதமாக வருஷா வருஷம் சுமார் 50 லக்ஷ ரூபாய் வீதம், 130 வருஷங்களாக வசூலித்தும், நீர்ப்பாசன வசதிகள், சர்வே, தீர்வை, நிஷ்கரிஷை செய்யப்படாமல், பல காலமாக ஜமீன்தாரியிலுள்ள எல்லைகளில் குறைகள் இருக்கின்றன. ஜமீன்தாரியின் பொறுப்பு நிச்சயமானதானுலும், இவ்விஷயத்திற் சர்க்காரின் பொறுப்பும் மறக்கத்தக்கதல்ல.

4-ம் அத்தியாயம்.

காடுகளும், குன்றுகளும்.

இவைகளைப்பற்றிய விஷயாலோசனையாவது :—

தங்கள் குடும்ப உபயோகத்திற்கும், விவசாயத்திற்கும் குடியானவர்களுக்கு இயற்கை வசதிகளிலுள்ள உரிமைகளைப்பற்றி அறிக்கையிடுவது :—

இதைப்பற்றிய கேள்வியாவது.—

7. (a) மேய்ச்சல், தழை கழித்தல், விவசாயத்திற்கு மரம் முதலியன வெட்டல் முதலியவற்றிற்காக உள்ளூர் இயற்கை வசதிகளில் குடியானவர்களுக்கு உள்ள உரிமை என்ன ?

(b) செலவில்லாமல், குடும்ப உபயோகத்திற்கும், விவசாயத்திற்கும் உபயோகிக்க குடியானவர்களுக்கும் ஏதாவது சொந்த உரிமையிருக்கிறதா ?

(c) நிலச்சுவான்தாருக்கும், குடியானவனுக்கும், பொது வழி, கிராம நிலம், குன்றுகள், காடுகள், புறம்போக்கு, முதலியவற்றில் ஒவ்வொருவருக்கும் எவ்விதமான உரிமை இருக்கிறது ?

பெரும்பான்மையாரின் சிபார்சை இங்கு கூறுவோம் :—

(a) நிலம் ரயத்துக்கே சொந்தமானதாலும், நிலச்சுவான்தார் தீர்வை வசூலிக்கும் நபர் ஆனதாலும், இயற்கை வசதிகளாகிய, கால்நடை மேய்ச்சல், தழை கழித்தல், விவசாயத்திற்கு மரம் வெட்டல், முதலியன ரயத்து அனுபவிக்க சுதந்தரம் உண்டென்று தீர்மானிக்கவேண்டும். அது ஒரு சுயேச்சையான உரிமை, காலகாலமாய் அனுபவித்துவந்தது. புதிதாகக்கொள்ளப்பட்டதல்ல.

(c) என்னும் வகுப்பில், பொது வழி, குன்றுகள், காடு, புறம்போக்கு முதலியவற்றில் ரயத்துக்கு தடையில்லாமல் உரிமை இருக்கிறது. நிலச்சுவான்தாரிடமிருந்து பெற்றதல்ல. அது அவர்களும் அவர்கள் முன்னோர்களும் அனுபவித்தது. அவர்கள் உரிமை சரித்திர சம்பந்தமானது.

புறம்போக்குகளிலும், குன்றுகளிலும், காடுகளிலும் காட்டு மாகூல்களிலும் ரயத்துக்குள்ள உரிமையைப்பற்றி, யாதொரு கேள்வியுமில்லை. இப்புதுச்சட்டத்தில், தெளிவாகவும் வெளிப்படையாகவும் இவ்வுரிமையைத் தெரிவிக்கவேண்டும்.

கொண்டுவரப்போகும் மசோதாவில் 4-ம் பிரிவு, 11-ம் உட்பிரிவுடமிருந்து கீழ்க்கண்டவைகளைக் கொண்டிருக்கிறது (283-ம் பக்கம்) :—

11. (a) 1882-ம் வருஷத்து சென்னை காட்டுச் சட்டம் நிபந்தனைக்குட்பட்டு, காடுகளிலுள்ள நிலங்களில் ரயத்துக்கு சொந்த உரிமை இருக்கிறதென்றும், கால் நடை மேய்ப்பதற்கும், தழை எருஎடுப்பதற்கும், குடும்ப உபயோகத்திற்கும் விவசாயத்திற்கும் மரம் வெட்டிக்கொள்ளவும் அனுபோக உரிமை இருக்கிறதென்றும் இதன்படி விளம்பரம் செய்யப்படுகிறது.

பூமியில் நிலச்சுவான்தாருக்கு இனி ஒரு உரிமையும் கிடையாது. மேற்கூறியபடி ரயத்து உரிமை, வசதிகளை அனுபவிப்பதை ஆக்ஷேபனை செய்ய அதிகாரமும் இடையாது.

12. (a) சுரங்கச் சட்டப்படி சர்க்கார் கட்டணத்தைச் செலுத்திவிட்டு, கரம்புகளிலும், காடுகளிலும் ரயத்து சுரங்கம் வெட்டவும், பாறையகற்றவும், தன்கைப்பற்று நிலத்திற்கு நேர் கீழே தோண்டி உலோகங்கள், சரளை, களிமண் முதலியவற்றை எடுத்துக்கொள்ளவும் உரிமையுள்ளவர்களா வார்கள்.

நான் கிராமப் புறம்போக்கைப்பற்றிக் கூறுகிறேன். சாக்ஷிகள், கமிட்டியின் முன் வெகு தெளிவாக ஜமீன்தார்களும், ரயத்துகளும் புறம்போக்கு நிலங்களில் ஆக்ரமிப்பு செய்கிறார்களென்று கூறினார்கள். இதற்கு ஒரு முக்கியமான காரணம். புறம்போக்கு நிலங்களை சர்வே செய்து வறையறுக்காததுதான். தக்க பாதுகாப்பு இல்லாததும் ஒரு காரணம் பொது நிலங்களை வரையறுத்து சர்க்கார் கண்காணிப்பு செய்வதோடு, பாதுகாப்பும் செய்யாவிட்டால், அந்நிலங்களால் ரயத்துகள் ஒரு பலனையும் அடையமுடியாது.

காடுகள் சம்பந்தப்பட்டவரையில், ரயத்துகள்தான் சொந்தக்காரர்கள் என்பது முதலில் குறிக்கத்தக்கது. எந்த கிராமத்து ரயத்துகளுக்கு சொந்தமென்பது என்றால், அது எந்த கிராமத்தில் இருக்கிறதோ அந்த கிராமத்தில் இருக்கும் ரயத்துகள்தான் சொந்தக்காரர்கள் என்றுக் கொள்ளவேண்டுமென்றும், அக் காட்டிற்குப் புறம்பேயுள்ள சில கிராமத்தார்கள் சில உரிமைகளும் அனுபவிக்கலாமென்றும் கொள்ள வேண்டும். அது ஒரு சிறிய விஷயம். பல சுற்றுக் கிராமத்தார்களுக்கும் உரிமையிருக்கிறதென்று மாற்றிக்கொள்ளலாம். ரயத்துகள்தான் சொந்தக்காரர்கள் என்பதை ஏற்றுக்கொள்வதா என்பது தான் உண்மையான கேள்வி.

தேசத்தின் பொதுச் சட்டப்படி, கிராமத்துக்கு காடு சேர்ந்ததென்றும், சாசுவத செட்டில்மெண்ட் ரெகுலேஷன்படிக்கு அது மாற்றப்படவில்லையென்றாலும், நான் கீழ்க்கண்ட காரணங்களால் அதை ஒத்துக் கொள்ள முடியாது :—

(1) இயற்கை வசதிகளை அனுபவிக்கும் சில நிர்ணயித்த வழக்கங்களுக்குட்பட்டு, ஒரு கிராமத்திலிருக்கும் காடுகளும், குன்றுகளும், ஜமீன்தாரியிலானாலும், இனுமிலானாலும், ஜமீன்தாருக்கு அல்லது இனும்தாருக்கு சொந்தமானதென்று உயர்ந்த நீதி மன்றங்களான ஹைகோர்ட்டும், பிரீவி கௌன்ஸிலும் தீர்மானித்திருக்கின்றன. அந்த தீர்மானத்தின்மேல்தான், ஒவ்வொரு விஷயமும் முடிவு கூறப்பட்டிருக்கிறது. வழக்குச் சட்டம் நான் சொல்லவேண்டியது அவசியமல்ல. 40 **Mad.** 886-ல் தெளிவாக ஜம்மாவில் விதிக்கப்பட்டதெல்லாம், சன்னதில் சேர்த்திருப்பதாகக் கூறியிருக்கிறது. 36 **M.L.J.** 203-லும் அதே அபிப்பிராயம்தான் கூறப்பட்டிருக்கிறது. 1802-ம் வருஷத்து சாசுவத செட்டில்மெண்ட் ரெகுலேஷன், கிராமங்களையும், காடுகளையும், மலைப்பாகங்களையும் நிரந்தரமாக முடிவு செய்யவில்லையென்று இப்போது எனக்குத் தோன்றவில்லை. 4-ம் பிரிவு ஜமீன்தாருக்கு அனுகூலமாக ஹைகோர்ட்டால் விளக்கப்பட்டிருக்கிறது.

(2) சாசுவத செட்டில்மெண்ட்டுபோது கிராம அரசியல் அங்கம், பழைய மிராசி, என்று பழைய கிராமத்தில் குடியேறினவர்கள் பூரா கிராமத்தையும், நிஷ்கரிஷைசெய்த பங்குகளாக வைத்திருந்ததாக சொன்னால் அதற்குப் பதில், அதுபோல அப்பொழுதும் ஒரு கூட்டம் இருந்ததில்லை, இன்றும் நிச்சயமாக இல்லையென்பதே. ஒரு சாக்ஷிகூட காடுகள், மைல்கள் கணக்காக பரந்திருந்தாலும் கிராமத்தாருக்கு சொந்தமானது என்று கூறவில்லை. காட்டு வசதிகளை அனுபவிக்கும் உரிமையைப்பற்றிதான் தாவாக்கள் எழுந்தன. 1818-ம் வருஷத்து ஜனவரி மாதம் 5-ம் தேதி போர்ட் ஆவ் ரெவின்யூ அறிக்கையில் மிராசி உரிமையின் வளர்ச்சி, அழிவு முதலியவற்றைப்பற்றி விபரமாகக் கூறியிருக்கிறது. மகமதியர் காலத்தில் அதிகவரி வீதமும், பாயக்காரி முறையும், முதலியவும் அறிக்கையில் வெளியான பல இதர காரணங்களால் மிராசி முறை அழிந்துபோனது என்று தெரிகிறது. அது சரித்திர சம்பந்தமானது. தெலுங்கு தேசத்தைப்பற்றி அறிக்கையின் 115-ம் பிரிவில் கீழ்க்கண்டவை தெரிவிக்கப்பட்டிருக்கின்றன :—

ஆங்கில அரசாங்கத்துக்கு தெலுங்கு மாகாணத்தைவிட்டுவிடும்போது, முந்திய நிலை எப்படியிருந்திருந்தாலும் தமிழ் நாட்டில் உள்ள குடியானவர்கள் என்ன உரிமைகொண்டாடினார்களோ அதைவிட அதிகம் கொண்டாடவில்லை. அவர்களுக்கு நிலத்தை விற்கவும், வில்லங்கம் செய்யவும் உரிமை இருந்திருந்தால், எல்லாம் இப்பொழுது போய்விட்டன. ஆனால் அவர் நிரந்தரமாய் பரம்பரை விவசாயிகளாக தொடர்ந்து வந்தார்கள்.

அவர்கள் தீர்வையைக் கட்டிவந்த வரையில் அவர்களை அப்புறப்படுத்தவில்லை. நிலங்கள் இப்போது விற்க முடியாதானாலும் பரம்பரையாய் தகப்பனாரிடமிருந்து பிள்ளைக்கு வந்திருக்கிறது.

அதனால் பழைய மிராசி எவ்விதமானதென்று இன்று கூறமுடியாது. ரயத்து என்று அந்த சிபார்சில் கூறியிருப்பதை பொதுவான ரயத்துகள் என்று கொள்ளவேண்டும். பொதுவாக ஒரு கிராமத்து ரயத்துகள், இப்போது கொண்டுவரும் சீர் திருத்தத்தில் சொந்தக்காரர்களாக வேண்டுமென்றால் அதுவும் நடைபெறாது. இப்போதுள்ள ரயத்துகள் கைப்பற்று சொத்தாக ஏற்றுக்கொண்டிருப்பதால், ஒன்றாக சேர்ப்பதென்பதை அவர்கள் ஒரு காலமும் ஏற்றுக்கொள்ளமாட்டார்கள். கைப்பற்று சொத்து, பிறற்கின்றி தனக்கு லாபம், என்று ஒரு கிராமத்தார்களானாலும், ஒவ்வொருவரின் வாழ்க்கைக் கொள்கையாக இப்போது இருக்கிறது. அப்பேர்ப்பட்டவர்களை காட்டுக்குச் சொந்தக்காரர்கள் என்பது சட்டவிரோதமானதென்றும், தீங்கு விளைவிக்கக்கூடியதென்றும் தோன்றுகிறது.

இக்காரணங்களால்தான், நம் கமிட்டியின்முன் சாக்ஷியம்கூறிய பல ரயத்துகள் சார்பின் சாக்ஷிகள், நீர்ப்பாய்ச்சல், காட்டு உரிமைகள், தீர்வை வசூலிப்பது முதலியன கிராமப் பஞ்சாயத்தார் பொறுப்பில் விட்டுவிடலாம் என்னும் ஆலோசனையை அங்கீகரிக்கவில்லை. பொது விஷயங்களுக்கென ஏற்பட்ட பஞ்சாயத்துகளும் பல சந்தர்ப்பங்களில் சொந்த உபயோகத்திற்கு பிரயோகிக்கப்படுகிறது. உள்ளூர், மாகாணம் இவற்றில் கக்ஷிகளை, ராஜாங்கத்தின்கொடுமைகளை ஒழிக்க, அதற்கு பதிலாக தனிப்பட்ட பொது உத்தியோக வழிமுறைகளும், நீதியிலாக்காவும் ஏற்படுத்துவோமென்றால், இப்போதுள்ள ஜனங்களின் மனப்பான்மை, வழக்கங்களின்படி, சொத்துரிமைகளை, கிராமக் குடி அரசுக்கு விட்டுவிடுவதென்பது நினைக்கமுடியாதொரு காரியம்.

(3) காடுகளிலும், குன்றுகளிலும், பஞ்சாயத்து எல்லைகளிலும் சம்பிரதாயமாய் அனுபவிக்கும் உரிமையை, சொந்தமென்று கூறமுடியாது. கன்னிவாடி ஜமீன்தாரியில் 4 மலைக் கிராமங்கள் சாசுவத செட்டில்மெண்டுபோது ராஜாங்க வருமானமாய் 2,000 ரூபாய் கொடுத்தது. திவானுடைய சாக்ஷியமாவது அக் கிராமங்களிலுள்ள நிலங்கள் ரயத்துகளால் 20,000 ரூபாய் தீர்வை கட்டப்பட்ட கைப்பற்று நிலங்களையுடையதென்பது இந்த விபரம் தக்க ஆதாரமாகும். காட்டு வசதிகளை அனுபவிப்பதில் 1802-ம் வருஷத்தில் இக்கிராமங்களிலிருந்த சில ரயத்துகளுக்கு உரிமை இருந்தது. ஆனால் 1802-ம் வருஷத்தில் கிராமங்கள் குடியரசாக இருந்தனவென்றும், சாசுவத செட்டில்மெண்ட் ஏற்படக் கூடாததென்றும், சொல்லமுடியாது. 20,000 ரூபாய் தீர்வை செலுத்தும் ரயத்துகளும் காடுகளில் பிரவேசித்து பயிர்செய்ய நிலங்களைப் பண்படுத்துவதைத் தடுக்க, ஜமீன்தாருக்கு உரிமை யிருந்ததென்றும் கூற முடியாது.

(4) பெரும்பான்மையோர் சிபார்சு, சொந்தப் புறம்போக்கைப்பற்றி 1884-ம் வருஷத்து திரு. பார்மர் அறிக்கையை ஒட்டியதாகும். அந்த சிபார்சைத் தகர்க்க 1884-ம் வருஷம் மே மாதம் 21-ம் தேதியில் வெளியான ரெவின்யூ 664-ம் நெ. சர்க்கார் உத்தரவு போதுமானது. அதில் 1799-ம் வருஷம் அக்டோபர் மாதம் 15-ம் தேதி போர்ட் ஆவ் ரெவின்யூ குறிப்பில் வெளியான 27, 64 பிரிவுகளை சர்க்கார் குறிப்பிடுகிறது. அதன்படி மலைகளும், காடுகளும், பயிரிடத்தக்கதல்லவென்று முதலில் குறிப்பிட்டிருந்தாலும், சாசனத்தில் சேர்க்கப்பட்டதாகும். இந்திய சர்க்காரின் உத்தரவால் இக்குறிப்பு ரத்து செய்யப்படவில்லையென்றும், ஆனால் இந்த அபிப்பிராயமே ஊர்ஜிதம் செய்யப்பட்டதென்றும் காணப்படுகிறது. சர்க்கார் உத்தரவின் 27-ம் பிரிவாவது :—

ஜமீன்தார்களுக்கும், இனாம்தார்களுக்கும் புறம்போக்கைக் கொடுப்பது, ரயத்துகளுக்குள்ள பழைய உரிமை என்று திரு. பார்மர் சொல்லுகிறார். ஆனால் அது நன்கு விளங்கவில்லை. அது பயிராகாத நிலங்களைப்போல் சர்க்காரிடமிருந்து உரிமை பெற்றதால், சர்க்காருக்கிருந்த உரிமை ஜமீன்தாருக்கும் உண்டு என்பது தெரிந்ததே. பார்மர், புறம்போக்கை பிறருக்குக் கொடுக்க சர்க்காருக்கு அதிகாரம் உண்டென்கிறார். அதாவது பயிரிட்டால் தீர்வை விதிக்கலாமென்கிறார். சர்க்கார் தாங்கள் அனுபவித்ததெல்லாம் சகல உரிமையோடு 1802-ம் வருஷத்தில் ஜமீன்தார்கள் வாங்கினதாக ஒத்துக்கொள்கிறார். சர்க்கார் விற்றது காம்போடுதான். காம்பை பயிரிட்டால் தீர்வையை மாசூலாகக்கூட பெறலாம் என்று சர்க்கார் கொடுத்த உரிமையில் இருக்கிறது. இந்த உரிமை பாதகமின்றி ஜமீன்தாருக்குத் தரப்பட்டது.

இனி ரயத்தின் சொந்தத்தைப்பற்றிச் சொல்லவேண்டியது அவசியமில்லை. கேள்வியிற் குறித்தபடி பதில் சொல்லவேண்டியதுதான். கேள்வியாவது :—

இயற்கை வசதிகளான, கால்நடை மேய்ச்சல், எருவுக்குத் தழை கழித்தல், விவசாயத்திற்கு விலையின்றி மரம் வெட்டிக்கொள்ளுதல் முதலியவற்றில் பாயக்காரிக்குள்ள உரிமை யென்ன ? ஜமீன்தாருக்கு ஒன்றும் கட்டாமல் ரயத்துகள் இவைகளை அனுபவித்து வந்ததாகவும், இப்போதுதான் லைசென்ஸ் கட்டணமென்றும், மேய்ச்சல் வரியென்றும் வாங்கப்படுவதாகவும் சாக்ஷியங்கள் கிடைத்திருக்கின்றன. ஏதோ கொஞ்ச நிலம்தான் பயிரிட்டுவந்தகாலமான சென்ற நூற்றாண்டின்பின் 50 ஆண்டுகளில், ஏராளமான நிலங்கள் இன்னும் பயிரிடவேண்டியிருக்கையில் ஜமீன்தார்கள் இந்த இயற்கை வசதிகளை ரயத்துகள் அனுபவிப்பதை ஆக்ஷேபணை செய்திருப்பார்கள் என்பது எனக்கு நம்ப முடியவில்லை. இவ்வுரிமைகளை கோர்ட்டில் வழக்காடி ருஜுசெய்யவேண்டுமென்றால் ரயத்துகளுக்கு அது பெரும் இன்னல்களை விளைவிக்கும். வெங்கடகிரி எல்லையில் மேய்ச்சல் விஷயமாய் பரிதாபகரமான கிரிமினல் வழக்குகள் உண்டாகியிருக்கின்றன. ஜமீன்தார்கள் காடுகளிலும் மேச்சல் நிலங்களிலும் பிரயோகிக்கும் அதிகாரங்களுக்கு வரம்பு ஏற்படுத்தவேண்டும். தீர, எல்லாவிஷயத்தையும் ஆலோசித்து கீழ்கண்ட சிபார்சுகளைச் செய்ய நான் துணிகிறேன்.

(1) கிராமப்படி, அதற்கு வேண்டிய அளவு, ரயத்தின் உபயோகத்துக்கென்று காடுகளில் ஒரு பகுதியை நிலச்சுவான்தார் ஒதுக்கிவிடவேண்டுமென்று திட்டம் செய்யவேண்டும். உள்ளூர் சர்க்கார் உத்தியோகஸ்தர் மேற்பார்வையிலும் அதிகாரத்திற்கும் கட்டுப்பட்டு ரயத்துகளுக்கு மேய்ச்சல் முதலிய உரிமைகள் இருக்கவேண்டும். மேய்ச்சலுக்காக நிலத்தைக் காப்பாற்றுவதும், புல் முதலியன விளைவதற்கும் கட்டாயப்படுத்த நிபந்தனைகள் செய்யவேண்டும். அதற்கேற்படும் செலவை, மேய்ச்சல் நிலத்தைக் காப்பாற்ற சம்பந்தப்பட்ட ரயத்துகள் பொறுப்பு ஏற்றுக் கொள்ளவேண்டும். வழக்கம் இருக்கிறதோ, இல்லையோ, இச்சிபார்சு செய்யப்பட்டிருக்கிறது.

(2) கிராமத்தைச் சார்ந்தாற்போல் காடுகளோ, மேய்ச்சல் நிலங்களோ இருந்தால் காட்டுச் சட்டப்படி கிராமத்துக்கருகே அல்லது அதற்கு ஆபத்துகரமான தூரத்தில் காடுகளை ரிசர்வ் செய்வது அனுமதிக்கக் கூடாது.

(3) சர்க்கார் கிராமங்களில் ரிசர்வ் செய்யாத எல்லைகளுக்குள்ள நிபந்தனைகளே சொந்தமான கிராமங்களுக்கும் பிரயோகிக்கப்படவேண்டும்.

இவ்வத்தியாயத்தை முடிக்குமுன் நான் சில சொல்ல வேண்டியது முக்கியமானவேலை என்று தீர்மானிக்கிறேன். 1 முதல் 3-வது அத்தியாயம் வரையில் வாதித்த விஷயங்களில் நிலத் தீர்வைக்குரியவர்களுக்கும் கைப்பற்று நிலச் சொந்தக்காரர்களுக்கும் உள்ள உறவைப்பற்றிப் பேசினோம்.

அவைகள் ரயத்துகளின் கைப்பற்று நிலங்களிலுள்ள உரிமைகளைப் பாதிக்கின்றன. ஆனால் காடுகள், மேய்ச்சல் நிலங்கள், கரம்புகள், இதர பொதுவல்லாத புறம்போக்கு நிலங்கள் முதலியவற்றின் விஷயங்களில், வேறுவிதமாக உரிமை ஏற்படுகிறது. கவனிக்கத்தகாத உரிமைகளான மேய்ச்சல்போன்றவை தவிர, இந்நிலங்களில் ரயத்தின் உரிமை கொஞ்சமே. அப்பேர்ப்பட்ட மேய்ச்சல் உரிமை முதலியவற்றை ஒரே வழியாக நிலங்களுக்கே சொந்த உரிமையாக மாற்றுவதென்பது வேரோடு பிடுங்கி அனுபவிக்கும் உரிமையாகும். கிருஷ்ணா டெல்டாவில் விவசாயம் விருத்தியாயிருக்கும் இடங்களில் ஒவ்வொரு அங்குலமும் பயிராகி இருக்கும்போது, மேய்ச்சலுக்கு நிலம் ஒக்கப்படுவதுதென்பது நினைக்கமுடியாது. டெல்டா ரயத்துகள், அந்த ஜில்லாவின் மேட்டுப் பாகங்களில் மேய்ச்சலுக்கு குறைவான மாசூல் தரக்கூடிய இடங்களை குத்தகைக்கு சென்ற 2 வருஷங்களுக்குள்ளாக மணிலா பயிர் செய்யவேண்டி விட்டிருக்கிறார்கள். இது வருந்தத்தக்கதா ? டெல்டா எல்லையிலுள்ள ரயத்துகள் இதற்குப்பின், மேய்ச்சலுக்கு அடுத்த ஜில்லாக்களில் இடம் தேடுகிறார்கள். மேய்ச்சலுசுரும், புல், மற்றும் இதர வகையான தீனிகளையும் மேய தாங்களே ஓட்டிச் செல்லுகிறார்கள். இதுமாதிரி ஒரு வகையான லாபம் மற்றொரு வகையான நிலங்களை உண்டுபண்ணும். சேத்தூர் ஜமீன்தார் 10,000 ஏக்கர் நிலங்களைப் பயிரிட, காடுகளை அழிப்பதாக குறைகூறி மனு அனுப்பினார்கள். தன நில மல்லாததால் ரயத்து அதைப்பற்றி குறைகூறக்கூடாது. தாம்பரபரணி ஆற்று முறையை அது பாதிக்குமென்கின்றனர். அது உண்மையா, அதனால் பாய்ச்சலில் இருக்கும் நஞ்சை ஆயகட்டு ஒருவர் குறைகூறுவது சரியல்ல. அவைகளைப்பற்றி கவனித்து, தக்கபடி காப்பாற்ற முறை தேடுவது, மாகாண சர்க்காரின் பொறுப்பு. எவ்வளவு நேர்மையாகச் சொல்லளவில் காண்பினும், குடியரசு ஏற்படுத்துவதும், தொழிலாளி ஆதிக்கியம் ஏற்படுத்துவதும் யுக்தமானவையல்ல.

இனாம்.

இனாம் கிராமங்களைப்பற்றி, பெரும்பான்மையாரின் சிபார்சை நான் ஒத்துக்கொள்ளமுடியாது. பெரும்பான்மையார் அறிக்கையின் முதல் கேள்வி கீழ்க்கண்டவாறு :—

1802-ம் வருஷத்து 31-வது ரெகுலேஷன், 1831-ம் வருஷத்து 4-வது ரெகுலேஷன், 1836-ம் வருஷத்து 31-வது சட்டம், சென்னை இனாம் சட்டம், 1871-ம் வருஷத்து 23-ம் சட்டமான கவர்ன்மெண்ட் ஆவ் இந்தியா சட்டம் முதலியவற்றின் நிபந்தனைகள் அமுலிலிருக்க, எப்படி

அதற்குள் நேருமாறாக ஒரு சட்டம் ஏற்படுத்துவது. இதுபோல சட்டமுறைப்படி ஒரு கேள்வியையெழுப்பி பெரும்பான்மையார் சிபார்சுபடி, அது எதிராக தீர்மானிக்கப்பட்டது. என்னுடைய அறிவிற்கு, அது பிசகென்று தெரிகிறது.

சாசுவத செட்டில்மென்டில் ஏற்பட்ட இனும் கிராமங்களும், சொந்த கிராமங்களும் வரி வசூல்சட்டத்தில் முதலிலும், 1908-ம் வருஷத்து சென்னை எஸ்டேட் நிலச் சட்டத்தில் இரண்டாம் முறையும், 1931-ம் வருஷத்து திருத்தச் சட்டத்தில் மூன்றும் முறையும், 1934, 1936-ம் வருஷத்து மசோதாவில் கடைசியாகவும் கவனிக்கப்பட்டது. இத்துடன் 1914-ம் வருஷத்தில் ஒரு மசோதாவும், கே. சீனிவாச அய்யங்காரால் மற்றொரு மசோதாவும் கொண்டுவரப்பட்டது. 1908-ம் வருஷத்து சட்டம் வருகையில், ஹைகோர்ட் நீதிபதி வி. கிருஷ்ணசாமி அய்யரும், இன்னும் பிரக்கியாதிபெற்ற வக்கீல்களும், சட்டசபை அங்கத்தினர்களாக இருந்தார்கள். எஸ்டேட் நிலச் சட்டத்தில் ஒரு பாகமாக கே. சீனிவாச அய்யங்கார் (ஹைகோர்ட் ஜட்ஜ்)தானே ஒரு மசோதாவைக் கொண்டுவந்தார். பிறகு வந்த மசோதாவில் பல வக்கீல்களும், அட்வகேட் ஜனரல்களும், ஹை கோர்ட் நீதிபதிகளும் வாதித்தனர். இப்படிப்பட்ட விஷயத்தில் சரித்திர சம்பந்தமாய், பல வருஷங்களாக மதிக்கப்பட்ட அறிவாளிகளாலும், வக்கீல்களாலும், சட்டத் திறமையில் தேர்ந்தவர்களும் கவனிக்கப்பட்டிருக்க இது வரை யாரும், இப்பொழுது எடுத்திருக்கும் விஷயங்களை எப்போதும் கொண்டுவரவில்லை. நான் மிகவும் போற்றும் வக்கீல்களிற் திறமைவாய்ந்த திரு. டி. கே. வெங்கடராம சாஸ்திரியார் அக்ரகாரம் கிராமங்களைப்பற்றி சாக்ஷியம் சொல்லும்போது முரணாக இருக்கும் சட்டத்தையும், அதன் மதிப்பையும்பற்றி கேள்வி எழுப்பவில்லை.

இது, பெரும்பான்மையோருடைய அறிக்கையில் ஒத்துக்கொள்ளப்பட்டிருக்கிறது.

"சிவில் கோர்ட் அதிகாரத்தை பூராவும் எடுத்துவிட்டு, வேறுவிதமான தனியாக ஏற்படுத்தப்பட்ட சட்டங்களால் இனும் வாரங்கள் நடத்தப்பட்டதென்று ஒருவராலும் குறிக்கப்படவில்லை."

இதில் ஒன்றுமில்லாததால், இதைப்பற்றி கேள்வி எழவில்லையென்று, என் மனதிற்குத் தோன்றுகிறது. பட்டா ரெகுலேஷனும், சாசுவத செட்டில்மென்ட்டும் முரணாக இருப்பதைவிட குறைவாகவே இவ் விருவித சட்டங்களும் இருக்கின்றன. இனும் சட்டத்தில் ரயத்துகள் சம்பந்தமாக ஒன்றுமில்லை. அது ஜமீன் தாருக்கும் இனாம்தாருக்கும் உள்ள தொடர்பு பற்றியதுதான். இனாம்தாருக்கும், ரயத்துளுக்கும் உள்ள உறவைப்பற்றி பொதுச் சட்டம் எப்படி இருந்தது, எப்படி இருக்கவேண்டுமென்று, இவைகளில் ஒரு ஆதார மும் இல்லை. எஸ்டேட் நிலச்சட்டம் அக்ரஹாரம்தாருக்கும், ரயத்துகளுக்கும் உள்ள உரிமைகளையும், பந்தங்களையும் விளக்கியும், விளம்பரப்படுத்தியும் இருக்கும்படியானதே ஒழிய, சர்க்காருக்கும் இனாம்தாருக்கும் உள்ள உறவைப்பற்றியதல்ல.

அவ்வறிக்கையில், வாதித்த மற்றொரு விஷயம் இனாம் சுவாதீனத்தைப்பற்றியது. 1802-ம் வருஷத்து 31-வது ரெகுலேஷன் 2-ம் பகுதியின் விளக்கத்தில் குறிக்கப்பட்டிருக்கிறது. அதில் காண்பதாவது :—

"இதற்கு முன் சொல்லப்பட்ட தேதிகளுக்கு, முன் இப்போதிருப்பவர்கள் அந்நிலங்களைப்பெற்று ஸ்வாதீனத்தில் வைத்திருந்தால்."

போர்ட்ஸ் நிரந்தரம் உத்தரவு குறிப்பிடுவதாவது :—

"அத்தேதிக்கு முன் 50 ஆண்டுகளாக தங்கள் ஸ்வாதீனத்தில் வைத்திருந்தார்கள் என்பது, இப் போதுள்ள இனாம்தார்களுக்கும் உரிமை ஏற்படுத்தும்."

52-வது விதி சொல்வதாவது :—

"ஐம்பது வருஷங்களாக, தடையின்றி ஸ்வாதீனத்தில் இருந்தால், இந்த விதிப்படி இனாமாக நிரந்தர மாய் உரிமை ஏற்படுத்திக்கொள்ளப்போதுமானது. ஆனால் அந்த 50-வருஷம் இனாம் கமிஷன் ஏற்பட்ட தேதிவரையில் கணக்கிடவேண்டும். வரி விதிக்காமல், ஸ்வாதீனத்தைப்பற்றி நோட்டீஸ் வந்த தேதி வரையில், 50 ஆண்டுகளாய் ஸ்வாதீனத்தில் இருந்ததால், இனாம் ஏற்படவேண்டுமென்பதல்ல."

முடிவாக பின்வருமாறு கூறப்படுகிறது :—

"இனாம் கமிஷனரால், இனாம்தார்கள் உரிமைக்கு இந்த ஸ்வாதீனம்தான் அங்கீகாரத்திற்கு ஆதார மாய் இருக்கிறது."

சொந்த இனாம்கிராமங்களுக்காக ஏற்பட்ட சீர்திருத்தத்தில், இனாம் கிராமங்கள் விலக்கப்பட்ட தின் காரணம் நிலத்தின் ஸ்வாதீன விஷயம் கவனிக்கப்பட்டதால்த்தான். பெரும்பான்மையாரின் சிபார்சு அவ்வாறுதான் என்று நான் கருதுகிறேன். ஆனால் நான் அதைப்பற்றி நிச்சயமாக இல்லை. எனக்கு போர்ட்ஸ் நிரந்தர உத்தரவும், 1802-ம் வருஷத்து 31-வது ரெகுலேஷன் 2-பகுதியின நிபந்தனையும், இதற்குச் சம்பந்தமான இதர விஷயங்களும், பூராவும் தப்பாக அபிப்பிராயப்பட்டிருக்கிறதாகத் தோன்று கிறது. எப்படி சாசுவத செட்டில்மென்டில். பூசாரத்திற்கு சொந்தக்காரர்கள் என்பதை தப்பாக பொருள் கொள்ளப்பட்டதோ அதேபோன்ற தவறுதான். ஸ்வாதீனம் என்பது உண்மையான முழு ஸ்வாதீனமல்ல. இனாம் ஸ்வாதீனம்தான் பழைய அரசர்களால் தரப்பட்ட இனாம் கிராமத்தின் சொந்தக் காரர்கள் ராஜாங்கத்திற்கு வரி தராமல் வைத்திருக்கலாமா என்பது தான் சர்க்கார் கேள்வி. இனாம் யார் ஸ்வாதீனத்தில் இருந்தது என்பதைப்பற்றி விசாரிக்கவில்லை. நிலமாவது, கிராமமாவது இனாமாக ஸ்வாதீனத்தில் இருக்கப்பட்டதா, அதாவது, முழுவதும் அல்லது பகுதியாக வரி தராமல் இருக்கப்பட்டதா என்பது தான். அதனால் ஸ்வாதீனம் என்பது மேற்கூறியபடி தப்பாக பொருள் கொள்ளப்பட்டதேயாகும். 1869-ம் வருஷத்து சட்டம், இனாம்தார்களுக்குத்தரப்பட்ட உரிமை தஸ்தாவேஜு கள், இனாம் உண்டான நிலத்தின் சொந்தக்காரர்களின் உரிமைகளை விளக்கவோ, கட்டுப்படுத்தவோ, பாதிக்கவோ, ரத்து செய்யவோ ஏற்பட்டதல்ல என்பதை விளக்கவே உண்டானது. உண்மையில் அது நிரந்தரமாய் முடிவு செய்யப்பட்ட பூஸ்திதிகளுக்கான, 22-வது ரெகுலேஷனைப் போன்றது.

பெரும்பான்மையோர் அறிக்கையில் சாசுவத செட்டில்மெண்ட் ரெகுலேஷனிலும், இனாம் கிராமங்கள் வரவில்லையென்று வாதித்திருக்கிறது. இனாம் கிராமங்களைப்பற்றி சாசுவத செட்டில்மெண்ட் ரெகுலேஷனுக்கு ஒரு சம்பந்தமும் கிடையாது. ஆனால் இனாமிலிருக்கும் ரயத்துகள் சாசுவதமாக

முடிவான எல்லையிலிருக்கும், ரயத்துகள் போலல்ல என்று அதனுல் சொல்ல முடியாது. 1818-ல் இருவித ரயத்துகளும் ஒரேமாதிரி சட்டம் என்று கூறப்பட்டது. 1918-ம்ஹு ஜனவரிமீ 5உயில் போர்டு ஆவ் ரெவன்யூ நடவடிக்கையில் கீழ்க்கண்டபடி சொல்லப்பட்டிருக்கிறது :—

"இவ்வகையான ஜனங்களின் முக்கியமான ஸ்வதந்தரங்களும், பலர் அறிந்த பிரபலமான உரிமைகளும் பூமியில் விளையும் லாபத்திற்கும், பரம்பரையாய் ஸ்வாதீனத்தில் இருக்கும் பூரண உரிமைக்கும் என்பதாகும். அதுவும் நிலத்தின் விளைபொருளில் ஒரு பகுதியை, விளைபொளாகவோ, பணமாகவோ, பொதுவரியாகவோ, வேலை மூலமாகவோ, பணமாகவோ மாசூலாகவோ ராஜாக்களுக்கோ, ஜமீன்தார்களுக்கோ, பாளையக்காரர்களுக்கோ முத்தாதார்களுக்கோ, ஸ்ரோத்திரயம்தாரர்களுக்கோ இனும்தார்களுக்கோ அல்லது சர்க்கார் உத்தியோகஸ்தர்களான தாசில்தார், அமல்தார், அமீன், தாருதார் முதலியவர்களுக்கோ, கட்டும்வரையில் ஏற்றுக் கொள்ளப்படும். ரயத்துகளால் கட்டப்பட்ட தொகை சர்க்கார் தீர்வையாககொள்ளப்படும்."

இப்படியான நிலத்தீர்வைக்கு சொந்தக்காரர் என்பது ஜமீன்தாருடன், சுரோத்திரியம்தார்கூட என்று 1865-ம் வருஷத்து ரெண்ட் ரெகவரி சட்டத்தில் ஏற்பட்டது. இதற்கு ஒரு ஆக்ஷேபணையும் ஏற்படவில்லை. பயிரிடுபவர்களுக்கு அனுபோக உரிமை ஏற்படுத்தவே 1905-ம் வருஷத்தில் இதைப்பற்றி எழுப்பப்பட்டது. கனம் ஸ்டோக்ஸ் அவர்கள் விளக்கமாகத் தெரிவித்தார் அவர் சொன்னதாவது :—

"1865-ம் வருஷத்தி 8-ம் சட்டம், இனும்தார்களுக்கும், அக்கிரகாரங்களுக்கும் செல்லத்தகும். இவ்வித எதிர்ப்புக்குக்காரணம் இனும் கிராமங்களில் இவ்வித அனுபோக உரிமையை சட்டமூலம் ஏற்படுத்துவதால்த் தான்."

நிலத்தீர்வை மட்டும் கொடுக்கப்பட்ட இனும் கிராமங்கள், நிலத்தீர்வை தரப்பட நிரந்தரமாய் செட்டில்மெண்டான கிராமங்களைப்போன்றதென திரு. கிருஷ்ணசாமி ஐயர் வெகுவாக ஒத்துக்கொண்டார். ஹைகோர்ட்டும், ஜமீன்தாரி கிராமங்களில் ரயத்துகளுக்குள்ள அனுபோக பாத்தியதை இனும் கிராமங்களிலும் உண்டு என்று தீர்மானித்திருக்கின்றது. 1908-ம் வருஷத்திய எஸ்டேட் நிலச்சட்டத்திற்குப்பிறகும். உரிமை, மேல் வாரத்துக்கு மட்டும்தான் என்றும், பாயக்காரிக்கு அனுபோக உரிமை உண்டென்று ஹைகோர்ட்டு எண்ணியிருந்தது. அதுதான் 41 மதராசில் பிரிவி கௌன்சிலால் மாற்றப்பட்டு 1931-ம் வருஷத்து திருத்தசட்டத்திற்கு இடம் தந்தது.

பட்டாரயத்துகளைவிட, மேன்மையான அந்தஸ்த்தில் இனும்தார்கள் இல்லையென்று சாக்ஷியம் வந்தது. சிலவற்றில் சிறிது அளவுவரையில் அப்படியிருக்கலாம். பட்டா ரயத்து, சர்க்கார் நிலத் தீர்வை செலுத்துகிறார். இனும்தாரோ தீர்வைக்கே சொந்தக்காரர். ஒரு பட்டா ரயத்தோ, எல்லா ரயத்துகளுமோ கிராமத்திற்கு சொந்தக்காரர்கள் என்று சொந்தம் பாராட்ட முடியாதென்பதை மறந்துவிடலாகாது. ரயத்தின் கைப்பற்று நிலங்கள் தவிர மற்றவை சர்க்காருக்குச் சொந்தமானவை. இனும் கிராமங்களிலோ, மலைகளும், குன்றுகளும், ஓடைகளும் இனும்தாரர்களுக்குச் சொந்தமானதென்று சொல்லப்படுகிறது. இனும்தார்கள் பலர் இருப்பதாலும், ஒரு கிராமத்திற்கே பல இனும்தார்கள் ஆனதாலும், அனுபோக பாத்தியதை தருவது, இனும்தார்கள் விவசாயத்திற்குத் திரும்புவதைத் தடுப்பதாகும். இது கஷ்டமாய்த்தோன்றலாம். ஆனால் இப்போது நிரந்தரமாய் செட்டிலான பல கிராமங்கள் சிறு பங்குகளாக அனுபவிக்கப்பட்டு வருகின்றன. கார்வேட்டி நகரம் ஜமீன், துண்டுகளாக சிதறி பல கிராமங்கள் பலர் கையில் இருக்கின்றன. சேலம் மிட்டாவும் அதுபோலவே இவ்வகையான நிலச்சுவரன்தார்களின் எண்ணிக்கை அதிகப்படுவது, ரயத்துகள் தீர்வையைச்செலுத்தி தங்கள் நிலங்களை அனுபவிப்பதை பாதிக்காது. 1908-ல் இந்த கொள்கையை திரு பி. என். சர்மா சட்ட சபையில் தெரிவித்தார். ஆனால் சர்க்கார் அதை ஏற்றுக்கொள்ளவில்லை. அதனால் இனும்தார்கள் சட்டத்தை முழுஇனும் கிராமங்கள் வரையில் மாற்றியமைக்கவேண்டியதில்லை யென்று எனக்குத்தோன்றுகிறது.

எஸ்டேட் நிலச்சட்டம், இனும் சட்டத்தோடு முரணக இருப்பதாகக் கொண்டாலும், இனும் கிராமங்களுக்கு வேறு வகையான சீர் திருத்தங்கள் கொண்டுவரவேண்டுமென்றாலும் பெரும்பான்மையார் அதைப் பற்றி யாதொரு ஏற்பாடும் கொண்டுவராததற்கு என் வருத்தத்தைத் தெரிவிக்காமல் இவ்வத்தியாயத்தை நான் முடிக்க விரும்பவில்லை. கமிட்டியின் முன், இனும் கிராமத்தின் ரயத்தின் சார்பாய் விடுத்த சாக்ஷியங்களுக்காகவும் அவர்கள் கொண்டிருக்கும் பிரமைக்காகவும் ஒரு சட்ட ஏற்பாடு கொண்டுவந்திருக்க வேண்டும். "சேர்க்கப்பட்ட இனும்கள்" என்பதையாவது சாசுவதமாக செட்டிலான பூஸ்திகளோடு ஒத்தாற்போல் கொண்டுவரும் மசோதாவில் சேர்த்திருப்பது ஒரு ஆறுதலான காரியம். விலக்கப்பட்ட, செட்டில்மென்டுக்கு முந்திய பூரா இனும் கிராமங்கள் 1865-ம் வருஷத்து ரெண்ட் ரெகவரி ஆக்ட், 1908-ம் வருஷத்து எஸ்ட்டேட் நிலச்சட்டம், பின்னர்வந்த திருத்தச் சட்டம், இவைகளின் அதிகாரத்தில் இருந்தன. அதனால் இனும் கிராமங்களுக்கு பிரயோகப்படும் எஸ்டேட் நிலச்சட்டத்தை ரத்து செய்வதென்பது எனக்குச்சரியென்று தோன்றவில்லை.

பி. நாராயணசாமி நாயுடு.

மிர்ஜாபுரம் ஜமீன்தாரின் அபிப்பிராயபேத யாதாஸ்து.

பூர்வாங்கம்.

என் சகாக்கள் தங்கள் அறிக்கையில் செய்திருக்கும் முடிவிற்கு நான் சம்மதிக்கவில்லையென்று நான் வருத்தப்படுகிறேன். நிலத்துக்குடையவருக்கும் ரயத்துக்குமுள்ள பாத்தியதைகளும், பொறுப்புகளும் சாசுவத செட்டில்மென்டு முறையில் தீர்மானிக்கப்படும் என்பதை ஏற்றுக்கொண்டு, தங்கள் முடிவு அச்செட்டில்மென்டின் அபிப்பிராயம், வரம்பு, சாராம்சம் முதலியவற்றை தப்பாக பொருள்படுத்தியதாக எனக்குப்படுகிறது. அவர்கள் சாசுவத செட்டில்மென்டை விளக்கம் செய்வது நூதனமானது. கடந்த 130 ஆண்டுகளாக பல சிறந்த நீதிபதிகளும், ராஜாங்க நிர்வாகஸ்தர்களும் இதைப்பற்றி ஆராயநேர்ந்த போது வராத முடிவாகும். என் சகாக்களின் அபிப்பிராயங்களைப்பூராவும் தெரிந்துக்கொண்டும்கூட செட்டில்மென்டை பல காலமாக, எப்படி பொருள்படுத்தப்பட்டதோ அதை, தப்பு என்று கூறமுடியாது அவர்களின் முடிவிற்கும், சிபார்சுக்கும் நான் ஒத்துக்கொள்ளமுடியாது. ஏனென்றால் அவர்கள் சிபார்சுபடி சட்டம் ஏற்படுத்தினுல், ஈடு இல்லாமல் உரிமை பறிப்பதாகும். அத்தோடு, அடிக்கடி ஏற்றுக்கொள்ளப்பட்டபடி சர்க்கார் சாசுவத செட்டில்மென்டுபடி, ஒத்துக்கொண்ட ஒப்பந்தத்திற்கு மாறுனதாகும். தீர்வை தீர்மானிக்கும் விஷயத்தில் அவர்கள் கொண்டுவரும் காரணங்களும் நடைமுறையில் செல்லக்கூடுமானவையல்ல. கூறப்படும் கணக்கு முறையும் கிடைக்கக்கூடியதல்ல, கிடைத்தாலும் சரியானதாகாது.

நிலத்துக்குடையவருக்கும் ரயத்துகளுக்குமுள்ள ஒற்றுமை இருசார்பாருக்கும் நன்மையைச்செய்யத்தக்கது. இவ்வறிக்கையின் தீர்மானத்தின்படி அது ஒரே முடிவாய் அழிந்து இன்னல் விளைக்குமானதால் நான் அந்ததீர்மானத்தை ஏற்றுக்கொள்ள முடியாது.

இதனுல் தனி அறிக்கையை நான் வெளியிடவேண்டியது அவசியமானதால், நான் ஒன்று சமர்ப்பிக்கிறேன். கமிட்டியார் ஆலோசித்த ஒவ்வொரு கேள்வியைப்பற்றியும் என் விபரமான காரணங்களுடன் பதில்த்தீர்மானத்தைச் செப்புகிறேன்.

1-ம் அத்தியாயம்.

பெரும்பான்மையார் சிபார்சின் உள்க்கருத்து.

பல விஷயங்களைப்பற்றி என் சகாக்களின் முடிவையும் சிபார்சையும்பற்றி சொல்லுமுன் அவர்களின் கருத்தைப்பற்றிக்கூறவேண்டியது அவசியம். சட்ட சபையும், நிர்வாகஸ்த்தர்களும், இச்சட்டத்தால் என்ன நேரிடுமென்பதைப்பற்றி முற்றினும் தெரிந்துகொள்ள வேண்டியதால் அவர்களுக்கு இதைப்பற்றி தெரிவிக்க வேண்டும்.

என் சகாக்கள் சொல்வதின்படி ஜமீன்தார்கள், 1802-ம் வருஷத்து தீர்வை வீதம்படிதான் வரிக்குரியவர்கள் என்பதாகும். கரம்பை நிலங்களுக்குக்கூட அதே வீதம்தான். கரம்பை நிலங்கள், மலைகள் காடுகள், ஏரி, தரிசு எல்லாம், ரயத்துகளின் சொத்துகள். நிலத்துக்குடையவர், நீர்ப்பாய்ச்சல் மராமத்துகட்டு வேலைகளை சரிவர பாதுகாக்கவேண்டும். புதுவேலைகளும் செய்யவேண்டும். ஆனுல் அதற்காக வரியை உயர்த்தக்கூடாது. மாசூல் விளையாததால், ரயத்து தீர்வையை குறைத்துக்கொள்ள மனுச்செய்யலாம். மசோதாவின் ஒரு பார்வை என் நண்பர்களின் உட்கிடக்கையை வெளிப்படுத்தும். அவர்கள் சொல்லும்படிக் கெல்லாம் உட்பட்டு, 1802-ம் வருஷத்தைப்போல தீர்வை வசூலித்தால் பேஷ்கஷ் பாக்கிக்காக எல்லா பூஸ்த்திதிகளையும் விற்றுவிட்டுப்போகவேண்டியதுதான் என்று தடையின்றிக்கூறலாம். சாசுவத செட்டில்மென்டுபோது அதிக பேஷ்கஷ் ஏற்பட்டதால் தான் 1805-ம்வூ முதல் 1820-ம்வூ வரையில் பல பூஸ்த்திதிகள் பாக்கிக்காக வடக்கு, தெற்கு ஜில்லாக்களில் விற்கப்பட்டது. அதைப்பற்றி என் சகாக்கள் தங்கள் அறிக்கையின் 5-ம் பக்கத்தில் குறிப்பிடுகிருர்கள். தாங்கள் குறிப்பிடும் கணக்கின்படியே இந்நிலை சீக்கிரம் ஏற்படும் என்பது, அவர்கள் சொல்வதைச்செய்தால் விளையும் பயனென்பதில். ஆக்ஷேபணையில்லை. தங்கள் அறிக்கையின் 2-ம் பாகத்தில் "கன்வர்ஷன் ரேட்" என்பதைப்பற்றிக்கூறுகிருர்கள். விஜயநகரம் பூஸ்த்திதியில் தக்க கன்வர்ஷன் விகிதப்படி 1802-ம்வூ முதல் இதுவரையில் விவசாயம் அதிகப்படவில்லை என்று அவர்கள் சொல்லுகிருர்கள். இப்போதுள்ள 25- லக்ஷ ரூபாய் வருமானமும் சாகுபடி விஸ்தீரணத்தாலல்லவென்றும் குத்தகை உயர்வால்த்தானென்றும், சாசுவத செட்டில்மென்டைவிட அதிகமாக அதாவது 7 லக்ஷ ரூபாய் விட அதிகமாக வசூலிக்கக்கூடாதென்றும் சொல்லப்படுகிறது. 10 சதம் வீதம் தீர்வை வசூலிக்கும் செலவாக அனுபவப்படி கொண்டாலும், ஒவ்வொருதம்பிடியும் வசூலானுல் 6,30,000 ரூபாய் வசூலாகும். இப்போதுள்ள நீர்ப்பாசனங்களை தக்க நிலைமையில் மராமத்து வேலை செய்துகாப்பாற்ற அவர்கள் கூற்றின்படி 10 சதம் செலவாகும். அதன்படி 70,000 ரூபாய் போகும். இதுவும் போதாதென்றே சொல்லவேண்டும். ஜமீன்தாரின் சொந்தபாகமாக வரி செலுத்தவேண்டியது 5 சதம் என்றுல் 35,000 ரூபாய் குறையும். வழக்குச் செலவு, வரிகுறைத்தல், ஒருபகுதி வரி வசூலிக்க முடியாதது, முதலியவற்றிற்கு ஒரு பாகம் ஒதுக்கினுல், 5,25,000 ரூபாயே, குறைந்தால், மீதி 5,00,000 ரூபாய் ஜமீன்தார் பேஷ்கஷ் கட்டவே போதுமானதல்ல.

பொப்பிலியை எடுத்துக்கொள்ளுவோம். இதில்க்கூட சாசுவத செட்டில்மென்டுக்குப்பின் சாகுபடி விஸ்தீரணம் அதிகமாகவில்லையென்று என் சகாக்கள் பெரிதும் விவரித்திருக்கின்றனர். 1802-ல் மொத்தத் தீர்வைமூலம் வருமானம் 1,26,000 ரூபாய். அத்துடன் அதற்குப்பின் செய்யக்கூடிய விவசாய விஸ்தீரணத்திற்கு 9,000 ரூபாய் சேர்க்கப்பட்டிருக்கிறது. அவர்கள் கூற்றுப்படியே விவசாயம் அதிகப்படாததால் 1,26,000 ரூபாயே மொத்த வரவு என்றுகொள்வோம். 10 சதம் வசூல் செலவிற்கும், 10 சதம் மராமத்துக்கும், 5 சதம் சொந்த தீர்வைக்கும் மற்றவைகளுக்கும் கழித்தால், 94,000 ரூபாய் மீதிவரும். இதில் வழக்குச்செலவிற்கு ஒதுக்கப்படவில்லை, பூரா வரியும் வருவதாகக் கணக்கு. இதில் 90,000 ரூபாய் பேஷ்கஷ் கட்டவேண்டும். நான் தெரிந்தே குறைவாக, வசூல்ச்செலவையும் நீர்ப்பாய்ச்சல் மராமத்து, கட்டுவேலைகளைச் செய்வதற்குக் கணக்கிட்டிருக்கிறேன். கோர்ட் ஆவ் வார்ட்ஸ் தங்கள் ஸ்வாதீனத்திலிருக்கும் பூஸ்த்திதிகளில் வசூலிப்புக்கு 20 சதம் செலவாகுமென்று எழுதியிருக்கிருர்கள்.

பித்தாபுரத்தில் 1803-ம் வருஷத்தில் 133,806 ஏக்கர் நிலங்கள் பயிரானதாகச்சொல்லியிருக்கிறது. அது இப்போதுள்ள 131,388 ஏக்கரைவிட அதிகமானது. 1803-ல் இருந்தபடியே, பயிரிருப்பதாகக்கொண்டாலும் 3,92,182 ரூபாய் வரவில் 98,000 ரூபாய் செலவில்ப்போகும். மிகுதி 2,94,000. இதிலும் வழக்கு,வசூலிக்க முடியாத தொகை, முதலியன கழிக்கப்படவில்லை. ரூ. 2,59,000 பேஷ்கஷ் கட்டவேண்டும்.

ராமநாதபுரத்தைப்பற்றி 2-ம் பாகத்தில் 124-ம் பக்கத்தில் சொல்லியிருக்கிறது. என் சகாக்கள் சொல்லுவதாவது: கணக்கில்க்காட்டப்பட்டபடி. 1802-ம் வருஷத்தைவிட அதிகமாக பயிரிடப்படவில்லை. கர்ணம் கணக்குபடி 357,933 ஏக்கர் என்பதை 450,500 ஏக்கராக எடுத்துக்கொள்வோம். விஜயநகரம், பொப்பிலி முதலியவற்றிற்கு வைத்த கன்வர்ஷன் விகிதப்படி இதையும் பார்த்தால், மிக்கக் கெடுதியே காணப்படும். அதில் 3,31,565 ரூபாய் 1802-ல் பேஷ்கஷ் 3-ல் 2-பங்கு வீதம் ஏற்படுத்தப்பட்டது. அதுபோலவே எடுத்துக் கொள்வோம். மொத்த வரவு 5 லக்ஷம் என்று சொல்லப்படவில்லை. இப்போதுள்ள தீர்வை ஜாப்தாபடி 13 லக்ஷத்து சொச்சம். அதிக சாகுபடியாலல்ல, ஆனால் உயரிய வரி விதித்ததால் என்பது எங்கள் நண்பர்கள் கூற்று. செட்டில்மெண்டுக்கு முந்தியபடி 5 லக்ஷ ரூபாயானால், ஜமீன்தார் முன்கூறியகணக்குப்படி பேஷ்கஷ் கட்ட முடியாது.

மொத்தவரவில் 3-ல் 2-வீதம் பேஷ்கஷ் நிச்சயிக்கப்பட்டதாகக்கொண்டால் பெரும்பான்மை அறிக்கைப்படி மேற்கூறி செலவெல்லாம் போக பேஷ்கஷ் கட்ட பணமே இராது. இது பூஸ்த்திதிகளை அழித்தொழிக்கும் ஒருமசோதா என்று வெள்ளிடையாகச்சொல்வது மிகையாகாது. இதுமாத்திரம் நன்றாய்த் தெரிந்தால் சட்ட சபையும், பொது மக்களும், இதை ஏற்றுக்கொள்ளமாட்டார்கள். முக்கியமாக இச்சட்டத்தை நிலத்துக்குடையவர்களுக்குத்தக்கநஷ்ட ஈடு தராமல் புகுத்தினால், இச்சட்டம் செல்லத்தகுந்ததோ, ராஜரீகப்படி ஒழுங்கானதோ, தீர்ப்பு சரியானதோ என்பது ஒருபுறமிருக்க, இது சட்டத்துக்கு விரோதமானதென்று சொல்லலாம். இவ்விஷயங்களைபற்றி கீழே விவரிக்கிறேன்.

நிலத்துக்குச் சொந்தமும், அனுபோக பாத்தியதையும்.

1-ம், 2-ம் அத்தியாயங்களில், என் சகாக்கள் பூமியின் உரிமையைப்பற்றிச் சொல்லுகிறார்கள்.

வரி வீதத்தைப்பற்றி சரியான முறையில் அவர்கள் அறிக்கையை ஆரம்பிக்கிறார்கள். அதற்கு 2 கேள்வி எழுப்பினார்கள். (1) ஜமீன்தாருக்கோ, நிலத்துக்குடையவருக்கோ, பாயக்காரி தரவேண்டிய நியாயமான தீர்வை வீதம் எப்படி. (2) சாசுவத செட்டில்மெண்டுபோது பயிரான நிலங்களுக்கும், பின்பு சாகுபடி செய்யப்பட்ட கரம்பை நிலங்களுக்கும் அப்போது தீர்மானித்த தீர்வை வீதத்திற்கு மேல் தங்களிஷ்டப்படி உயர்த்த, ஜமீன்தார்களுக்கு அல்லது நிலத்துக்குடையவர்களுக்கு உரிமை உண்டா. ?

இக்கேள்விகளே தப்பானவை. ஒப்புக்கொள்ளக்கூடியதல்ல. முதலில், இப்போதுள்ள தீர்வை வீதம் நியாயமானதல்லவென்று ஆரம்பிப்பதாகும். அதனால் இப்போதுள்ள தீர்வை முறைக்கு கணக்கில்லாமல் ஏதோ புது முறையாக தீர்வை நியமிக்க ஒரு ஆலோசனை எடுத்துக்கொண்டதைப்போலத் தெரிகிறது. எஸ்டேட் நிலச்சட்டத்தில் 28-ம் பிரிவு இப்போதுள்ள தீர்வை அதற்கு மாறாக ருஜு செய்யப்படும்வரையில் நியாயமானதென்று கொள்ளவேண்டுமென்பதை கோர்ட்டு உள்பட ஒத்துக்கொண்ட விஷயம். சட்டம் செய்யும் முறையில்கூட, இருக்கும் விஷயங்கள் முறையானதென்ற அபிப்பிராயத்துடன் தொடங்குவது சட்ட சபையின் ஒழுக்கம் அதைத்திருத்துவதென்றால் கூக்குரல் இருந்தால்த்தான் செய்வது. அப்போதும் இருப்பதை மாற்றுவதில் அதிக வித்தியாசம் ஏற்படுத்துவதில்லை. நியாயமான கேள்வி கீழ்க்கண்டபடி இருக்கவேண்டும். நேராகவும் தஸ்தவேஜுமூலமாகவும் எந்த வழக்குகளில் இருக்கும் தீர்வை அநியாயமானதென்று ருஜு செய்யப்பட்டது, அதில் எப்படி சட்டசபை பிரவேசிக்கலாம், அது எம்மாதிரி நியாயமானபடி காலத்திற்குத்தக்கபடி தீர்க்கவேண்டும் என்பதாகும்.'

இரண்டாம் கேள்வியும் ஒத்துக்கொள்ளத்தக்கதல்ல. அது சாசுவத செட்டில்மெண்டு போது தீர்வை நிஷ்கரிஷை செய்யப்பட்டதாக ஏற்றுக்கொள்ளப்படுவதாகும். வரி உயர்த்தல் என்பது சட்டமுறையானதல்ல. ஜமீன்தார் தங்கள் இஷ்டப்படி வரி உயர்த்த உரிமை கொண்டாடுகிறார்கள் என்பதாகும். அப்படிக் கேள்வி கேட்டால் எதிர்ப்பான பதில்தான் வரும். முதலில் சாசுவத செட்டில்மெண்டில் கமிட்டியார் சொல்வதைப்போல் தீர்வை நிஷ்கரிஷை செய்யப்பட்டதாவென்றும், அல்லது 1908-ம் வருஷத்து எஸ்டேட் நிலச் சட்டம் வந்தவரையிலாவது அப்படி தீர்மானிக்கப்பட்டதாவென்றும், இச்சட்டம் கடந்த 30 ஆண்டுகளாக இருந்த அனுபோகத்தால் ரயத்துகளின் நன்மைக்கு வேறுபாடுகள் தேவையாவென்றும் அப்படியானால் என்ன செய்யவேண்டுமென்றும் கவனிக்கவேண்டும்.

ஜமீன்தாரி ரயத்துகளின் தீர்வையை சாசுவத செட்டில்மெண்ட் நிஷ்கரிஷை செய்யவில்லையென்று நான் இனிக் காண்பிக்கின்றேன். 1865-ம் வருஷத்து வரிவசூல் சட்டப்படி தீர்வை விஷயத்தில் ஜமீன்தாருக்கும் ரயத்துக்குமுள்ள ஒப்பந்தம் செல்லத்தக்கதென்றிருக்கிறது. 1908-ம்வருஷத்து எஸ்டேட் நிலச்சட்டத்தின் 30-ம் பிரிவுபடி, கோர்ட்டு மூலம் தீர்வை உயர்த்தலாமேயன்றி அச்சட்டத்தின் 24-ம் பிரிவுப்படி மற்றவித எவ்விதமான வரி உயர்த்தலும் சட்டவிரோதமானதாகும். நீண்ட விசாரணையின் பின் கோர்ட்டால் சில வழக்குகளில் 2 அணாவும் அதற்கு குறைவாயும் வரி உயர்த்தப்பட்டதேயொழிய மற்றவைகளில் சுமார் 30 ஆண்டுகளுக்கு குறையாமலும், சாதாரணமாய் 50 ஆண்டுகளாகவும், ஒரேமாதிரித்தான் தீர்வை வசூலிக்கப்படுகிறது. அதை இப்போது தகர்க்கவேண்டுமானால் ரயத்து சார்பாய் வழக்கு ருஜு ஆகவேண்டும். நேராகவும், தஸ்தாவேஜு மூலமாகவும் நம்முன் சமர்ப்பித்த சாக்ஷியங்கள்படி இது போல ஒன்றும் அநீதியாகக் காணவில்லை. நான். சென்னை எஸ்டேட் நிலசட்டத்தை (தீர்வை நிஷ்கரிஷை விஷயத்தில் விலை உயர்வால் வரி உயர்த்துவதைத்தடுப்பதற்கும் அல்லது அச்சட்டம் ஏற்பட்டபோது விதித்த தீர்வை வீதம் பின்பு விலைக்குறைவால் ரயத்துகளுக்கு கஷ்டம் தருகிறதென்று குறைப்பதையோ) எதிர்க்கவில்லை. 1908-ம் வருஷத்து தீர்வையே சரியானதென்று எனக்குத்தோன்றுகிறது.

நம்முன்னுள்ள சாக்ஷியத்தைக்கொண்டு ஜமீன் பாயக்காரிகளின் பொருளாதார நிலையைப்பற்றி பின்னர் வாதிக்கும்போது இதைப்பற்றி பேசுகிறேன். என் சகாக்கள் என்ன ருஜு ஆனதென்பதைக் கொண்டு தற்போதுள்ள தீர்வை விகிதங்கள் கொடுமையானவையென்று கூறுகிறார்கள் என்பது விளங்கவில்லை.

பிறகு அவர்கள் கீழ்க்கண்ட கேள்வியின் பதிலே முன்னிரண்டு கேள்விகளின் பதில் என்கிறார்கள் :—

(1) நிலத்துக்கு சொந்தக்காரர் யார்? நில உரிமையின் தன்மை என்ன? 1802-ல் சாசுவத செட்டில்மெண்டுபோது எது நிஷ்கரிஷை செய்யப்பட்டது?

(2) ஜமீன்தார் அல்லது நிலத்துக்குடையவர் யார்? விவசாயியிடம் அவர் உறவு என்ன? அது இங்கிலாந்திலுள்ளதுபோலவா? இங்கிலாந்தில் நிலத்துக்குடையவரிடமிருந்து பாயக்காரி அனுபோக உரிமை அடைவதைப்போலவா இந்தியாவிலும் அடையப்படுகிறது?

இது ஒரு வக்கீல் கூட்டத்தாரால் தீர்மானிக்கப்படவேண்டும். பொது தேசியவாதிகள் எவ்வளவு பிரக்கியாதியானவர்களானாலும், தஸ்தவேஜுகளும் நேரில் சாக்ஷியங்களும் என்ன கூறினாலும், தகுந்த சட்டங்களையும், தீர்மானங்களையும் கொண்டே முடிவிற்கு வரவேண்டும். நிலத்தின் சொந்தத்தைப்பற்றி தீர்

மானிப்பது, எப்படி சட்டம் செய்வசற்கு, எப்படி உதவும். ஜமீன்தாரியிலுள்ள பாயக்காரி யின் பொருள்நிலையை ஆராயவேண்டும். அவர்களைத் தாழ்மைப்படுத்தும் உயரிய தீர்வையை விசாரித்து ஆராய்ந்து அறிய வேண்டும். அப்படியானால் அதை எப்படி சீர்திருத்தம் செய்யவேண்டு மென கவனிக்கவேண்டும். நிலச்சுவன்தார் சங்கத்தார், தங்கள் மனுவின் 4-வது பாராவில் பூமிக்குச் சொந்தக்காரர் நிலத்துக்குடையவர் என்றும் அதிலிருந்து சில உரிமைகள் பாயக்காரிகளுக்கேற்றபடி தரப்பட்டிருக்கிறதென்றும், அதில் ஒன்று பாயக்காரியின் நிரந்தரமான அனுபோக உரிமையென்றும் சொல்லி யிருக்கிறது. எஸ்டேட் நிலச்சட்டத்தில் பாயக்காரியின் அனுபோக உரிமை அங்கீகரிக்கப்பட்டிருப்பதால் ஹிந்து மகமதிய மன்னர்கள் முறைப்படியோ, ஆங்கிலேய அரசாங்கப்படியோ நிலத்துக்குச் சொந்தக்காரர் யார் என்று ஆராய்வது அவஸியமானதல்ல என்றும் சொல்லப்படுகிறது. இந்த முக்கியமான விஷயத்தை ஜமீன்தார்கள் தள்ளிவைப்பதாக என் சகாக்கள் கூறுகிருர்கள். தங்களுக்கு தக்க ஆதாரம் இல்லாததால் தான் இதை ஏற்றுக்கொள்ளவில்லையென்றும் சொல்லப்படுகிறது. நிலச்சுவன்தார் சங்கத்தாரின் சார்பாய் தரப்பட்ட அறிக்கையின் 6 முதல் 14 பாராக்களில், சாசுவத செட்டில்மெண்டுக்கு முன் கலக்டருக்கு விடுத்த அறிக்கைகளும், 1802, 1822-ம் வருஷத்து ரெகுலேஷன்கள், சென்னை ஹைகோர்ட் தீர்ப்புகள், ப்ரீவி கௌன்ஸில் தீர்மானங்கள், நிலத்துக்குடையவர்தான் சொந்தக்காரர் என்றும், பாயக்காரியல்ல வென்றும் கூறியிருப்பதை என் சகாக்கள் கவனிக்கவில்லை.

இச்சங்கத்தார் இவ்விஷயத்தை விட்டு விடவில்லை. அதைப்பற்றி பூர்வாங்கமாய் கவனித்திருக்கிறது. அவர்கள் சொல்லுவதாவது, இப்போதிருக்கும் உரிமை விளக்கமாயிருப்பதால் அதைப்பற்றி வாதம் வேண்டு வதில்லையென்பதே.

ரயத்துகள் சார்பில், ரயத்துகள்தான் நிலத்துக்குச் சொந்தக்காரர்களென்றும், ராஜாங்கத்திற்கு அதிற் சொந்தமில்லையென்றும், ஜமீன்தார்கள் ராஜாங்கத்தின் "அஸைனீகளான" படியால் அவர்களுக்கு உயரிய உரிமை வராதென்றும் கூறுகின்றனர். இதன் ஆபத்தை அறியாமல் என் சகாக்கள் அதை முற்றிலும் ஏற்றுக் கொள்ளுகிருர்கள். கடந்த 100 ஆண்டுகளாக கொண்டாடிய பாத்தியதைக்கு மாறுகவும், ரயத்வாரி எல்லையில் ரெவன்யூ இலாகா நடைமுறை, கொள்கைக்கு விரோதமாகவும், சர்க்கார், பூமிக்குச் சொந்தக்காரர் என்பதையும் இது தகர்த்தெறிகிறதென்று கவனிக்கவில்லை.

ஜமீன்தார்தான், நிலத்துக்குச் சொந்தக்காரர், பாயக்காரி அவரிடமிருந்து சில உரிமைகளை அடைந்தார்க ளென்பதை என் சகாக்கள் தப்பாகப் பொருள் கொண்டனர். ஜமீன்தார்கள் அவ்வுரிமையை ரத்து செய்து விடலாமென்றும், அவ்வுரிமை பலமானதல்லவென்றும் கூறவில்லை. உண்மையில், ரயத்துக்குள்ள அனு போக பாத்தியதை நிலத்துக்குடையவரின் சொந்த பாத்தியதையைவிட விலை உயர்வானது. வரியைச் சரியாகச் செலுத்துமட்டும் நிலத்துக்குடையவர் பாயக்காரியை அப்புறப்படுத்தமுடியாது. வரி கட்டாவிட்டால் தான், தாம் கைப்பற்று நிலத்தை அடையமுடியும். திருத்தமான சென்னை எஸ்டேட் நிலச் சட்டத்தின் 151-ம் பிரிவுப்படி, நிலத்தின் மதிப்பை கேவலமாகக் குறைவு ஏற்படும்படி கெடுத்தாலும், பயிரிடவே லாயக்கில்லாமல் செய்தாலும் கலெக்டர் முன், பாயக்காரியை விலக்க தாவாசெய்து, தீர்ப்பு மூலம் அப்புறப்படுத்தவேண்டும்.

ஹிந்து சட்டப் பிரகாரம் அரசர், விவசாயி என்பவர்களின் உரிமையைப் பார்க்கின், விளக்கமான பொருள் கிடையாது. பெரும்பான்மை அறிக்கையில், 47 Mad., 337-லும் 1890-ம் ஜனவரி 5-ல் போர்ட் ஆவ் ரெவின்யூ நடவடிக்கையிலும், பிரீவீ கௌன்ஸிலில் கூறியபடி குடிவார உரிமை எப்படியோ அப்படியே நிலத்தில் முதல் முதல் பிரவேசித்தவர் உரிமையென்றிருக்கிறது. அது ஒரு வகையான பாயக்காரியின் உரிமை. அத்துடன் யாரும் வாதம் செய்யவில்லை. அரசர்களை "பிரித்விபதி" என்றும் "பூமேஸ்வரன்" என்றும், தக்கபடி காக்காமல் நிலத்தை வைத்திருந்தால் பாயக்காரியை அப்புறப்படுத்த அரசுக்கு உரிமை யுண்டென்றும் இருக்கிறது. மகமதியர்கள் காலத்திலும் சொந்த நிலம் என்று பாயக்காரிகளுக்குக் கிடை யாது. எல்லாம் மன்னருக்கே உடையது. பெரும்பான்மையார் அறிக்கையில் "கிராம முறையைப்பற்றி, மெயின் சொல்லியிருப்பதைப்பார்த்தால், இது விளங்கும். இங்கிலீஷ்காரர்கள் மகமதியர்களிடமிருந்து தான் ஆதிக்கியம் பெற்றவர்கள். எல்லா பூமியும் அரசருக்கென்றும், உழைப்பால் நிலத்தில் கிடைப்ப தெல்லாம் குடி மக்களுக்கென்றும் கூறப்படுகிறது. எவ்வளவு அதிகமாக பாயக்காரிக்குத் தரப்பட்டாலும் சொந்த உரிமைகளை மகமதிய அரசர்கள் இழக்கவில்லை. ஆங்கிலேயர்கள் மகமதிய அரசர்களின் ராஜப் பிரதிநிதிகளிடமிருந்து எல்லா உரிமைகளையும் பெற்றனர். (மெயின், கிராம முறை 4-வது பிரசங்கம், 104–106 பக்கங்கள்).

எனது சகாக்கள் இவ்விராஜதானியில், பல பூஸ்திதிகளின் சரித்திரங்களை ஆராய்ந்து, ஜமீன்தார்கள், சர்காரிடமிருந்து வரி வசூலிக்க உத்தரவு பெற்றவர்களென்றும், சர்க்காருக்கே பூமியில் சொந்தமில்லை யென்றும் கூறுகின்றனர். அவர்கள் ஜமீன்தார்களெல்லாம் பழைய ஹிந்து அரச பரம்பரையினர் என்பதை மறந்துவிட்டனர். மக்லீன், சென்னையில், நிரந்தரமான பூஸ்திதிகளின் ஜமீன்தார்கள் இருவகைப்பட்டனர் என்கிருர். அவர்கள் பழைய முக்கியஸ்த்தர்களின் பரம்பரையினர்கள். மூத்த புதல்வன் பாத்தியதைக் குடையவன். நிலத்தை விற்கமுடியாது. தான் வாழ்நாள்மட்டும் வில்லங்கம் செய்யலாம். இவர்கள் ஒரு வகுப்பார். இரண்டாவதாக பாகப்பிரிவினையில், ஹிந்து சட்டத்திற்குட்பட்ட 1802-ம் வருஷத்துக்குப் பின் ஏற்பட்ட வகுப்பினர். முதலாவது தரப்பினர் ஒரு ராஜீய அந்தஸ்துடையவர். அது இரண்டாம் தரப்பின ரிடம் அழிந்து வருகிறது. முதல் வகுப்பினரை பேஷ்கஷ் கட்டும் முறையாக அவர் குறிப்பிடுகிருர். விஜயநகரம், வெங்கடகிரி, ராமநாதபுரம், சிவகங்கை, பித்தாபுரம், கார்வேட்நகரம், காளாஸ்திரி, நிடாடவோல் நுஜ்ஜிவிட், பொப்பிலி, பர்லாகிமிடி, ஜெயபூர், இவையோடு 126 பாளையக்காரர்களையும் இணைக்கப்படுகிறது. மற்ற ஜமீன்தார்கள் எல்லோரும் 1802-ம் வருஷத்து சாசுவத செட்டில்மென்டால் ஏற்பட்டவர்கள்.

ஒவ்வொரு ஜமீன்தாரியின் சரித்திரத்தைத் சொல்லவேண்டியதில்லை. மேலே சொல்லப்பட்டவைகளெல் லாம் மிகத் தொன்மையானவை. இவர்களின் முன்னேர்கள் அரசுரிமை கொண்டாடினவர்கள். அவரவர்க ளிடங்களில் ஹைதராபாத் நிஜாமானும் கர்நாடக நவாப்பாலும், தங்கள் பிரதிநிதிகளாகக்கொள்ளப்பட்டவர் கள்.

மேற்குப் பாளையங்களுக்கு ஒரு தனியான நிரந்தர செட்டில்மெண்டு செய்யப்பட்டது. அவைகளில் ஒன்ருன வெங்கடகிரியைப்பற்றிப் பேசுவோம். வெங்கடகிரி தலைவர்கள் கர்நாடக நவாப்புக்கு இணைக்கப்பட்டு 21,000 பொன் வராகன்கள் கப்பம் கட்டிவந்தார். அதைத் தவிர மற்றபடி அவர்கள் சிவில், கிரிமினல் அதிகாரத்துடன் வரி விதித்து வசூலித்து வந்தார்கள். 1792-ம் வருஷத்தில் கிழக்கிந்திய கம்பெனியா ருக்கும் நவாப்புக்கும் ஏற்பட்ட உடன்படிக்கையின் 5-ம் பகுதிப்படி இந்த கப்பம் கம்பெனிக்கு மாற்றப் பட்டு, நவாப் கம்பெனிக்குத் தரவேண்டிய கடனுக்கு சரிப்படுத்தப்பட்டது. 1801-ம் வருஷத்தில் ஏற்பட்ட மற்றொரு உடன்படிக்கைப்படி கம்பெனியாரே நவாப்புக்கு ஒரு ஜீவனும்சம் கொடுத்துவிட்டு கர்நாட கத்தின் அரசுரிமையை ஏற்றுக்கொண்டனர். 1802-ம் வருஷத்து செட்டில்மெண்டு ஜமீன்தார் கட்டவேண்டிய தொகையை மாற்றவில்லை. நவாப்புக்கு பட்டாளத்திற்காக உதவவேண்டியதற்கு பதிலாக 89,384 வராகன் கள் தீர்மானிக்கப்பட்டு, மொத்தம் 111,058 வராகன் பேஷ்கஷ் ஏற்படுத்தப்பட்டது. எல்லா ஜமீன்தார்களும், குத்தகைதாரர்கள் என்று சொல்லும் கூற்றை மறுக்கத்தான் இதைச் சொல்லுகிறேன்.

37 Mad., 322-ல், சர் சங்கரன் நாயர் இந்த ராஜதானியில் ஜமீன்தாரின் அந்தஸ்த்தைப்பற்றி விளக்கமாகக் கீழ்க்கண்டபடி சொல்லியிருக்கிறார்:—1802-ம் வருஷத்திலும், பிறகும் மூன்று வகையான நிலத்துக்குடையவர்களுக்கு சநநது தரப்பட்டது. சிலர் உண்மையாக, அரசாண்ட மன்னரின் வம்சத்தினர். அவர்கள், தங்களுடைய சிறிய எல்லையில் ராஜ உரிமை நடாத்திவந்தனர். அவர்கள் பட்டாளங்கள் வைத்திருந்தார்கள். சண்டை தொடகுவதும் சமாதானம்செய்துகொள்வதுமுண்டு. சொந்த நாணயமும் செய்துக் கொண்டார்கள். ராமநாதபுரம் ஜமீன் அப்படித்தான். 24 Mad. 613. கஞ்சம் ஜில்லாவில் பர்லாகிமிடி ஜமீன்தார் போன்றவர்கள், மன்னர் வம்சத்தினர். சர்க்கார் பிரதேசத்திய ஜமீன்தார்கள் 5-ம் அறிக்கையின் 35-ம் பக்கத்தில் காணப்படும். மற்றொரு வகுப்பார் பலவித அதிகாரம் செலுத்திய தலைவர்கள். அரசர்களால் தரப்பட்ட அதிகாரங்களைச் செலுத்தியவர்கள் தெற்கே பாளையக்காரர்கள். தெலுங்கு ஜில்லாக்களில் ஜமீன்தார்கள், எனப்பட்டனர். மற்றவர்கள் ரெவின்யூ உத்தியோகஸ்தர்கள், படைத்தலைவர்கள், போலீஸ் அதிகாரிகள். இவர்கள் மற்றவர்வேலைகளை கைப்பற்றிக்கொண்டவர்கள். 6 Mad., 17 சி.ஆர். 208-ம் "எலக்கமணி—ரங்க கிருஷ்ணமுத்து வீர பூச்சைய்ய நாயக்கர்" என்னும் வழக்கில் இத்தலைவர்களின் சரித்திரம் விளக்கப்பட்டிருக்கிறது. பிரிவீகௌன்சில் தீர்ப்பு "லெக்கமணி—திருச்சினாப்பள்ளி கலெக்டர்" என்ற வழக்கிலும் காணலாம். (9-1 A-293) இவ்விரண்டு வகை தவிர, கிழக்கு இந்திய கம்பெனியார் ஒருவகை ஜமீன்தார்களையும் ஏற்படுத்தினர்.

ரயத்தின் உரிமைக்குட்பட்டு தங்கள் அதிகாரத்திலிருந்த சர்க்கார் பிரதேசத்தில் ஹாவலி நிலங்களில் ஜமீன்களை உண்டுபண்ணினர். ராஜதானியின் வடக்கே சில பூஸ்திதிகளை உண்டுபண்ணி சன்னது கொடுத்தனர். அவர்களை மற்ற வகையான நிலத்துக்குடையவர்கள் போலவே கருதப்பட்டனர். ஒரே வகையில் தான் குறை. அதாவது நீர் சம்பந்தமானது. 2-வது தொகுதி, 5-வது அறிக்கையின் 330, 331-வது பக்கங்களில் சாசுவத செட்டில்மென்ட் சமயத்தில் கலெக்டருக்கு விடுத்த அறிக்கையில் பார்க்கவும்; அவர்களும் பழைய ராஜாக்கள், சந்நத்துக்கு முன் அனுபவித்த சகல பாத்தியதைகளையும் ஏற்றுக்கொண்டனர். சந்நதுப்படி ஏற்பட்ட தீர்வை தங்களுக்கு உயராமலிருக்கும் உரிமையும் பெற்றனர்.

"இந்தியாவின் நில சம்பந்தமான விவகாரங்கள்" என்ற புத்தகத்தில், ராதா கமல் மூக்கர்ஜி ஜமீன்தார்களைப்பற்றி எழுதுகிறார்: "பிரிட்டிஷ் சர்க்காரோடு செட்டில்மென்ட் செய்துகொண்ட ஜமீன்தார்கள் தங்கள் அந்தஸ்த்திலும், நிலத்தை அனுபவிக்கும் விஷயத்திலும் மாறுபாடுடையவர்கள். சிலர் வரி வசூலிப்பவர்கள்மட்டுமல்ல. பரம்பரை எல்லை யதிகாரிகள். ஆனால் செட்டில்மென்டால் எல்லாம் ஒரு நிலை எய்தினர். வித்தியாசம் இல்லை."

மகமதிய அரசர்களிடமிருந்து தாங்கள் இராஜ்யம்பெற்றதால் பிரிட்டிஷ் ஸ்தானிகர்கள் 18-ம் நூற்றுண்டின் முடிவிலும், 19-ம் நூற்றுண்டின் ஆரம்பத்திலும் சர்க்கார்தான் நிலத்துக்குச் சொந்தக்காரர் என்று எண்ணினர். அதனால் ஹாவலி பூஸ்திதிகளிலும், பழைய தலைவர்களுக்கும், பூமியில் உரிமை இருந்ததை அங்கீகரிப்பதில் தடங்கலில்லையென்று நினைத்தனர். இதுதான், கலெக்டருக்கு நிலத்துக்குடையவர்களைப்பற்றி விடுத்த அறிக்கையிலும் இருப்பது.

ராபர்ட்சன் இந்தியா என்பதில் ஸ்ட்ராபன் அபிப்பிராயம் என்பதைப்பற்றி பின்வருமாறு எழுதியுள்ளது "இந்தியாவில் இருக்கும் ஜனங்களின் அபிப்பிராயப்படி அரசர்தான் பூமிக்கு சொந்தக்காரர். அவரிடமிருந்துதான் சகலவித உரிமையும் குடி பெறவேண்டும்."

சர் ஜான் ஹோர் கூற்று கவனிக்கத்தக்கது. பரம்பரையாய் அனுபவிக்கும் ஜமீன்தார்களே நிலத்துக்குச் சொந்தக்காரர்கள் என்று நான் நினைக்கிறேன். அவர்களின் சொந்தத்தின் ஆரம்பமும் பரம்பரை உரிமையின் ஆரம்பமும் நிச்சயமாயில்லை. அது மகமதிய மன்னர்களுக்கு முன்பே இருந்து, பின்னர் உறுதி செய்யப்பட்டு சந்நதுகளாலும் ஏற்கப்பட்டும், கால உரிமையால் சொந்தமானதாகவும் இருக்கிறது.

1784-ம் வருஷத்தில், வடக்கு சர்க்கார் பிரதேச சரித்திர சர்வேயில் கிரான்ட் என்பவர் அரசரிடம்தான் நிலத்துக்கு சொந்த பாத்தியதையுண்டென்றும், சர்க்கார் ராஜ்ஜியத்தின் சொந்தக்காரர் என்கிறார். இந்தியாவின் நிலத்தீர்வை இங்கிலாந்தில் சொந்த நிலவரவில் 5-ல் ஒரு பங்கு போலல்லவென்றும், சர்க்கார், எல்லோரும் அறிந்த நிலத்துக்குச் சொந்தக்காரராய் விலையில் 4-ல் 1 பகுதிக்குடைய ரயத்துக்கு நேராக நிலத்துக்கு சொந்தக்காரர் என்று ரெவின்யூ ரெஜிஸ்டர் 5-வது தொகுதி 122-ம் பக்கத்தில் சொல்லி இருக்கிறது.

நெல்லூர் ஜில்லா பாஸ்வல் மானுயூலில் 477-ம் பக்கத்தில் சர்க்கார்தான் நிலத்துக்குச் சொந்தக்காரர் என்று இருக்கிறது.

1799-ம௵ செப்டெம்பர்மீ 4உயில் சர்க்கார், போர்ட் ஆவ் ரெவின்யூவுக்கு விடுத்த அறிக்கையில் ஜமீன்தார்களை அவரவர்கள் பூஸ்திதிகளின் சொந்தக்காரர்களாகச் செய்யவேண்டுமென்பது அவர்கள் எண்ணம் என்று கூறியிருக்கின்றனர். ஹாவலி நிலத்திலும் தாங்கள் சொந்தக்காரர்கள் என்றும் நிலத்துக்குடையவர்களுக்கு அதை மாற்றவேண்டுமென்றும் சொல்லியிருக்கிறது. 3-வது பாராவில் தாங்கள் செய்யப்போகும் புது முறையைக் குறிப்பிடுகின்றனர். ஹாவலி நிலத்தின் சொந்தம் சர்க்காரிடம் இருப்பதை எப்படி முடிவு செய்யலாமென்று வினவி யுள்ளனர். முரண்பாடான, ஏகதேசமாக விதிக்கப்படும் பொது வரிமுறையில் இருக்கும், ஜமீன்தார்கள்முறையைக்குறித்து வங்காளத்தில் புகுத்தியதைப்போல ஒரு பொதுவான முறை உண்டுபண்ண வேண்டுமென்று "தங்கள் பூஸ்திதிகளின் சொந்தத்திற்கும், மற்ற உரிமைகளுக்கும்" ஜமீன்தார்களுக்குத்தக்க ஏற்பாடுசெய்யத் தீர்மானித்தனர். அதில் 6-வது பாராவில் சொத்தின் உரிமையை எதுவும் பாதிக்காதென்றும் இருக்கிறது. 8-வது பாராவில் நிலத்துக்குடையவர்களின் மதிப்பை அதிகம்செய்வதாகுமென்றும், குறைப்பதாகதென்றும் சொல்லப்படுகிறது. 29-வது பாராவில், ஜமீன்தார்கள் நிலத்துக்குச் சொந்தக்காரர்களாகிவிட்டால் சர்க்காருக்குச் சேரவேண்டிய ஜம்மாவிற்கு அது ஜாமீனென்றும், பாக்கிக்காக ஏலத்தில் எடுப்பவருக்கு நிலம் சொந்தத்தோடு தரப்படும் என்றும் இருக்கிறது. தென் மாகாணத்திலுள்ள பாளையங்களைப்பற்றி 1801-ம௵ டிசம்பர்மீ 1உயில் விடுத்த விளம்பரத்தில் "பாளையங்களுக்கு நிரந்தரமான நிலத்தீர்வை ஏற்படுத்துவது எண்ணம் என்றும், ஜமீன்தாரிகளைப்போல ஏற்பாடுசெய்வதாகவும்; ஒருமுறை ஏற்பாடானதை மாற்றுவதில்லையென்றும், ஜமீன்தாரைப் போன்ற பாளையக்காரர்கள் பட்டாளம் தரவேண்டியதில்லையென்றும் சட்டப்படி, அவர்கள் பரம்பரை பாத்தியதை காப்பாற்றப்படுமென்றும்" இருக்கிறது.

1802-ம் வருஷத்து 25-வது ரெகுலேஷனில் ஜமீன்தார்களுக்கும் அவர்கள் வார்சுகளுக்கும் எப்போதும் நிலத்தில் சொந்த உரிமையும், எக்காலத்திற்கும் ஒரே தீர்வையும் ஏற்படுத்தப்பட்டதென்றும், 1802-ம் வருஷத்து 31வது ரெகுலேஷனில் பழக்க வழக்கங்களுக்குட்பட்டு இம் மாகாணத்தின் ஆட்சிசெய்யும் சர்க்கார் எல்லாவிதமான நிலங்களிலும் தங்கள் சொந்த பாத்தியதையைக் கொண்டாடுவதாகவும்,

அதை நிறுத்திக்கொண்டதாகவும் கூறப்படுகிறது. சாசுவத செட்டில்மெண்ட் ரெகுலேஷன் 2-வது பிரிவு "இந்த நிபந்தனைகளுக்குத் தக்கபடி சர்க்காருக்குத் தீர்வை செலுத்தும் நிலங்களுக்கு ஒரு வரி தீர் மானித்து அதற்காக ஜமீன்தாருக்கு நிலத்தில் சொந்த உரிமை அளிக்கப்படும் என்று இருக்கிறது."

I.I.A. 282-ல் 306-ம் பக்கத்தில், பிரீவீ கௌன்ஸில் மேற்கூறிய பிரிவைப்பற்றி நிரந்தரமான ஏற் ரடில்லாத பூஸ்திதிகளில் சொந்தக்காரர்கள் அனுபவித்த உரிமையை பறிக்கமுடியாது என்று சொல்லி யிருக்கிறது. சர் ஜான் வாலிஸும் 41 Mad., 749-ல் மேற்கூறிய அபிப்பிராயத்தை அங்கீகரித்திருக்கிறார்.

பிரிட்டிஷ் இந்தியாவின் நிலமுறை 3-வது புத்தகம் 131-ம் பக்கத்தில் பேடன் பௌவல் ஜமீன்தாருக் குத் தரப்பட்ட "சந்நத்–இ–மில்கியத்–இஸ்திமிரர், எல்லாக் காலத்திற்கும் சொந்தமாக தரப்பட்டதென்பதை குறிக்கும் பார்ஷியன் பதம் என்கிறார்."

1799-ம் ஞு செப்டெம்பர் 4உயில் சென்னை சர்க்கார் போர்ட் ஆவ் ரெவின்யூக்கு விடுத்த அறிக்கையில் தாலூக்தார்களுக்கும், கீழ்ப்பாயகாரிகளுக்கும் சில விடங்களில் உரிமைகள் இருப்பதாக ஏற்படலாம் என்று தெரிகிறது. 34-வது பாராவில் ஜமீன்தாருக்குள்ள சொந்த உரிமையும் ரயத்துக்குள்ள அனுபோக பாத்தி யதையும் சொல்லப்பட்டிருக்கிறது. விளக்கமாய்ச் சொன்னால் "விவசாயம் செய்யும் ரயத்துகளுக்கு அதுபோ லல்லாமல் தாங்கள் பயிரிடும் நிலங்களில் அனுபோக உரிமையுண்டு. அது எவ்வளவு காலம், சர்க்காருக்குத் தரவேண்டிய தொகையை மாசூலாகவோ பணமாகவோ தரப்படுகிறதோ அதுவரையிலுண்டு. ஆனால், அவர்களுக்கு பூமியில் சொந்த உரிமை கிடையாது."

1802-ம் வருஷத்து 25-வது ரெகுலேஷனில் பூமிக்குச் சொந்தக்காரர் என்பதை இந்தியப் பொருளில் சொல்லியிருப்பதாகவும், சர் ஜான் ஹோரும், லார்ட் காரன் வாலிஸும் ஜமீன்தார்களை பூமிக்கு யஜ மானர்கள் என்றும், சொந்தக்காரர்கள் என்றும், சொல்லும்போது இங்கிலீஷ் பொருள்படி சொல்லவில்லை யென்றும் என் சகாக்கள் ஒரு புது மாதிரியான அர்த்தம் செய்கிறார்கள். 34-வது பாராவின் வாக்கியம் இச் சந்தேகத்திற்கு இடம் தரவில்லை. அக்காலத்திய நிர்வாகஸ்தர்களும், சீர்திருத்தக்காரர்களும் சொத் துக்கு சொந்தம் என்பதையும், அனுபவபாத்தியதை என்பதையும் நன்கு அறிந்தார்கள் என்றும் நிலத்துக்குடையவருக்கு பூமியில் சொந்தமும், பாயக்காரிக்கு அனுபவ பாத்தியதையும் இருப்பதால் முர ணாகாதென்றும் அவர்களுக்குத் தெரிந்ததேயென்று அறியலாம்.

1890-ம் ஞு ஜனவரி 5உயில் போர்ட் ஆவ் ரெவின்யூ, ரயத்துகளுக்கு வரி செலுத்தும்வரையில் அனுபவிக்கும் நிலத்தில் அனுபவ உரிமை உண்டு என்பதை விளக்கும்போது, நிலத்துக்குடையவர்களுடைய நிலத்தின்பேரிலுள்ள சொந்த உரிமைக்கு இது முரணாகாதென்று தெரிவித்திருக்கின்றனர். ஆகையால் என் சகாக்கள், ரெகுலேஷன்களையும், சட்டங்களையும், அறிக்கைகளையும் தப்பாகவே பொருள்படுத்திக்கொண்டார்க ளென்று நான் சொல்லுகிறேன்.

1802-ம் வருஷத்து 25-வது ரெகுலேஷன், 14-வது பிரிவு, 1822-ம் வருஷத்து 4-வது ரெகுலேஷன் இரண்டும் ரயத்துகளுக்கு சான்றாகக் காட்டப்படுகிறது. 1802-ம் வருஷத்து ரெகுலேஷன், 14-ம் பிரிவு, ஜமீன்தார்கள் ரயத்துகளிடம் குத்தகை மாசூலாகவோ பணமாகவோ பெற்றுக்கொள்ளவும், குறிப்பிட்ட காலத்தில் அந்த ரயத்துகளுக்கு பட்டாவும் கௌலும் தரவும் ஒவ்வொரு நிபந்தனையோடு ஒப்பந்தம் செய்வ தைப்பற்றியது. இது ஜமீன்தார் அதிகமாக தீர்வை கேட்காதிருக்க ஏற்பட்டது. இது எப்படி ரயத்துக்கு நிலத்தில் சொந்தத்தை ஏற்படுத்தும் என்பது எனக்குத் தெரியவில்லை. 1822-ம் வருஷத்து ரெகுலேஷன் பாயக்காரிகளுக்கு சாசுவத செட்டில்மெண்ட் ரெகுலேஷனுக்கு முந்தி இருந்த எந்த உரிமையும் பாதிக்கப்பட மாட்டாதென்பதே.

சாசுவத செட்டில்மெண்டுக்கு முன் ரயத்துக்கு பூமியில் சொந்தம் இருந்ததாகக் காட்ட ஒரு ஆதா ரமுமில்லை. பிரிட்டிஷ் அல்லது கம்பெனி காலத்தில் அப்படிப்பட்ட உரிமை இருந்ததாக, மெயினும் சொல்ல வில்லை. மக்லீன் தன் "மான்யூல் ஆவ் அட்மினிஸ்ட்ரேஷன்" என்பதின் 103-ம் பக்கத்தில் "சர்க்கார் ரயத் துக்கு அந்தகாலத்தில் நிலத்திற்குச் சொந்தமில்லை" யென்று கூறியிருக்கிறார்.

ஆகையால் மகமதியர்கள் ராஜாங்கத்திலும், ஆங்கில ஆட்சியிலும், சர்க்காரே நிலத்துக்குச் சொந்தக் காரரென்றும், ஜமீன்தார்கள் தங்கள் பூஸ்திதியில் நிலத்துக்குச் சொந்தக்காரர்கள் என்றும், ரயத்துகளுக்கு சொந்த பாத்தியதை இல்லையென்றும் எனக்குத்தெரிகிறது. உயர்ந்ததாக ஏதேனும் இருப்பதாகச் சொன் னால் போர்ட் ஆவ் ரெவின்யூ சொன்னதைப்போல ரயத்துகளுக்கு அனுபோக உரிமை மட்டும் உண்டு.
20 Mad., 299, 23 Mad., 318-லும், ஜமீன்தாரியிலுள்ள ரயத்துகளை, வரிதரும்வரையில் அப்புறப்படுத்த முடியாது என்று சொல்லியிருக்கிறது. அதைத்தான் அவர்கள் சார்பாய் அடிக்கடி சொல்வது. 23 Mad., 318-ல் நீதிபதி சுப்பிரமணிய அய்யரால் பிரபலமாக குறிக்கப்பட்ட இந்த உரிமையைத்தான், போர்ட் ஆவ் ரெவினியூவும் அங்கீகரித்து, 1908-ல் எஸ்டேட் நிலச் சட்டத்தைச் செய்தது. இத் தீர்மானங்கள் ரயத்து தான் நிலத்துக்குச் சொந்தக்காரரென்றும், நிலத்துக்குடையவருக்கு நிலத்தில் சொந்தமில்லையென்றும் சொல்லவில்லை. நிலத்துக்குச் சொந்தமென்பதற்கும், அனுபோக பாத்தியதையென்பதற்கும் வித்தியாச மிருப்பதை என் சகாக்கள் அறியவில்லை. அனுபோக பாத்தியதை என்பதே மற்றொருவரிடம் சொந்த பாத்தியதை இருப்பதைக் குறிப்பதாகும்.

இந்த வித்தியாசத்தை, சென்னை எஸ்டேட் நிலச் சட்டம், 6-ம் பிரிவில் நிலத்துக்குடையவர், நிலச் சொந்தக்காரராய் ரயத்தை ஸ்வாதீனத்தில் ஏற்று, ரயத்து அதற்குள்ள அனுபோக பாத்தியதையை அனுபவிக்க மற்ற பிரிவுகளில் கூறியுள்ளபடி அனுமதிக்கிறாரென்று இருக்கிறது. ஒருவனை நிலத்தில் அனுமதிக்க உரிமை இருக்கிறதென்றால், சொந்தக்காரரல்லாமல் அது எப்படி முடியும்?

இதைமட்டும் தெரிந்துகொண்டால் ஜமீன்தாரின் உண்மையான அந்தஸ்தை அறிந்துக்கொள்வது சுலபம்.

இந்த ராஜதானியில் சம்பிரதாயமாய் அனுபோக உரிமை இருந்ததா, 20 Mad., 299, 23 Mad., 318 இவைகளிலுள்ள தீர்ப்புகள் பிரீவீகௌன்ஸில் அபிப்பிராயப்படி சரியானதா என்று நான் கூற வேண்டியதில்லை. சென்னை ஹை கோர்ட்டில் 44 Mad., 588, 48 Mad., 701-ல், 20 Mad., 299, 23 Mad., 318-ல் கூறிய சட்ட முறை தப்பென்றிருக்கிறது. 47 Mad., 337-ல் பிரீவீகௌன்ஸில் அபிப்பிராயப்படி ரயத்துக்கு அனுபோக உரிமைமட்டும்தான் உண்டு. 41 Mad., 1012-ல் ஜமீன்தாருக்கு நிலத்திலுள்ள சொந்தத்தைப்பற்றி கூறியிருப்பது கவனிக்கத்தக்கது. "பிரதிவாதிகளுக்காக வாதித்ததில், இந்த ஜில்லாக் களை ரெட்டி ராஜாக்கள் ஆண்டபோது, இந்தியாவில் நிலங்களுக்குச் சொந்தம் அரசர்களுக்கில்லையென்றும், பயிரிடுபவர்களிடம் தீர்வையாக ஒரு பகுதியை வாங்கிக்கொள்ளமட்டும் உரிமை யென்றும்" சொல்லப்பட்டது.

அதனால் 1373-ல் தரப்பட்ட இனும் அரசருக்குள்ள உரிமைதான் என்று சொல்லப்பட்டது. குடிவாரம் இல்லையென்றும் நிலத்தீர்வைமட்டும்தான் தரப்பட்டதென்றும் சொல்லப்பட்டது. இதை யாரும் ஏற்றுக் கொள்ளமுடியாது. இந்த முறையே அரசர்களுக்கு சொந்தத்தை இல்லையென்பதாகுமென்றால் தகாது. அவர்களுக்குத்தான் சொந்தமானதால், அவர்கள் நிலத்திற்குத் தீர்வை வாங்கினார்களென்றும், அது அரசர்கள் இஷ்டப்படி மாற்றத்தகுந்ததென்றும் தெரியக்கிடக்கிறது.

பிரதிவாதிகளுக்காக ஏற்பட்ட இவ்வாதம் 1802-ம் வருஷத்து 31-வது ரெகுலேஷன்னில் ஏற்றுக்கொள்ளப்படவில்லை. 44 Mad., 588-ல் வாலீஸ் பிரதம நீதிபதி, பிரிவி கௌன்ஸில் தீர்ப்பைப்பற்றி விளக்கியிருக்கிறார்.

தீர்வை மட்டுமா அல்லது நிலத்தில் சொந்தம்கூடவா தரப்பட்டது, எது என்பது கவனிக்கப்பட்டது நிலத்தீர்வைமட்டும்தான் என்பதை ஏற்றுக்கொள்ளாமல் சொந்தத்தைத்தான் என்று கொள்ளப்பட்டது. இதற்கு மாறாக ஒன்றும் தெளிவாக இல்லை. இனும்தார்களுக்கு இரண்டு வாரங்களிலும் உரிமையுண்டா என்ற சந்தேகமிருக்கலாம். ஆனால், நிலத்துக்குச் சொந்தக்காரர் என்பதில் ஐயமில்லை.

47 Mad., 337-ல் மங்கல் கிராமத்தைப்பற்றிய வழக்கில் பிரிவி கௌன்ஸில் தீர்ப்பாவது :—தன்னை அப்புறப்படுத்தும் வழக்கில் தனக்கு நிரந்தர பாயக்காரி உரிமை இருக்கிறதென்று, ரயத்துதான் ருஜு செய்யவேண்டும். இதை இந்திய செக்ரட்ரி—லக்ஷ்மேஸ்வர் சிங்—வழக்கில் ஏற்றுக்கொள்ளப்பட்டது. பிறகு ஒருவர் நிரந்தர அனுபோக உரிமை கொண்டாடினால் அதை அவர் சம்பிரதாயப்படியோ, சாஸனத்தாலோ அதை தரக்கூடிய அதிகாரமுடையவரிடமிருந்து அல்லது சட்டசபை, சட்டப்படி பெற்றிருக்கவேண்டுமென்று சொல்லியிருக்கிறது. 57 Mad., 443-ல், 1810-ம் வருஷத்தில் ஒரு கிராமத்தின் ஜமீன்தார் தன் கிராமத்தில்லாத ஒரு பிராமணருக்கு அக்ரகாரம் கொடுத்தார். அப்பொழுது பயிரிடும் பாயக்காரிகள் அந் நிலத்தில் இருந்தனர். அக்ரகாரம்தார் வரி வசூலித்தார் ஒழிய பயிரிடவில்லை. குடிவாரம் கூட தரப்பட்டதா என்ற கேள்வி எழுந்தது. ஜமீன்தாருக்கே குடிவாரம் இல்லாததால் அது தரப்படவில்லையென்று வாதிக்கப்பட்டது. இதை ஏற்றுக்கொள்ளாமல் 450-ம் பக்கத்தில் நீதிபதிகள் கீழ்க்கண்டவாறு சொல்கின்றனர். 1810-க்கு முன் பயிரிட்டதால் குடிவாரம் சன்னதில் தரப்படவில்லையென்கிறார்கள். அப்பேர்ப்பட்ட அபிப்பிராயமுள்ள தீர்ப்புகள் 41 Mad., 1012-ல் சூர்யநாராயண—போத்தண்ணா வழக்கில் ரத்துசெய்யப்பட்டது. 44 Calcutta 841-ல் ஜுடீஷியல் கமிட்டியார் சொன்னதாவது :—(இதுதான் சென்னையில் சாசுவத செட்டில்மெண்டுக்கு காரணமானது. கல்கத்தாவில் சாசுவத செட்டில்மெண்டுக்கு ஒத்தது.) 1793-ம் வருஷத்து செட்டில்மெண்டைப் பார்த்தால் இங்கிலீஷ்காரர் ஸ்வாதீனத்திற்குமுன் ஜமீன்தார்கள் நிலத்துக்குச் சொந்தக்காரர்களோ இல்லையோ என்ற சந்தேகமுண்டானாலும் இந்த செட்டில்மெண்டுபடி அவர்கள்தான் சொந்தக்காரர்கள் என்றும் அதற்காகத்தான் சர்க்காருக்குத் தீர்வை செலுத்துகிறார்கள என்றும் முடிவு செய்யவேண்டும். ஜமீன்தார்களுடனும், தனிப்பட்ட தாலூக்தார்களுடனும் இதர பூமிக்குச் சொந்தக்காரர்களுடனும் செட்டில்மெண்ட் செய்யப்பட்டிருக்கிறது. 1931 A.I.R. பி.சி. 89-ல் பிரீவீ கௌன்ஸில் இதை மறுபடியும் ஊர்ஜிதம்செய்திருக்கிறது. ஆரம்பகால ஹிந்து அரசர்கள் காலத்திலும், மகமதியர் காலத்திலுமதையும் இதைப்பற்றி விளக்கமாய் ஏற்படாத காரணங்களைவிட்டுவிட்டு, பிரிட்டிஷ் ஆக்ஷியின்முன் ஒன்றல்லது இரண்டு நூற்றாண்டுகளாக ஹிந்து அரசர்களும் அவர்கள் கீழ் சிற்றரசர்களும் அரசு செலுத்தும்போது அவர்களும் அவர்கள் பிரிதிநிதிகளும் பூமிக்குச் சொந்தக்காரர்களாகவே கருதப்பட்டார்கள். சென்னையிலும் வங்காளத்திலும் சாசுவத செட்டில்மெண்டுக்கு முந்திய ராஜாங்க தஸ்தாவேஜுகளும் சர்க்கார் பிரசுரங்களும் ஜமீன்தார்தான் நிலத்துக்குடையவரென்றும் ரயத்தல்ல வென்றும் தெரிவிக்கின்றது. இதைப்பற்றி சாசுவத செட்டில்மெண்ட் ரெகுலேஷனும் 1802-ம் வருஷத்தில் ஏற்பட்ட இதர ரெகுலேஷன்களும் சந்தேகமற ஜமீன்தார்தான் பூமிக்குச் சொந்தக்காரரெனத் தெரிவித்திருக்கிறது. சம்பிரதாயப்படி அனுபவ பாத்தியதையென்பது சரியாகப் பொருள்படுத்தினால் நிலத்தின் சொந்தத்திற்கு முரணானதல்லவென்றும் ; அந்த சொந்த உரிமை ஜமீன்தாருக்கு இருப்பதால் அனுபோக பாத்தியதைக்கு ஒரு பாதகமுமில்லையென்றும் பிரீவீ கௌன்ஸில், ஹை கோர்ட் முதலியன இப்படியே தீர்ப்பளித்திருக்கிறதென்றும், அவர்களுக்கு அனுபோக பாத்தியதையில்லையென்றும் தெரிகிறது. இது 20 Mad., 299, 23 Mad., 318-க்கு மாறான அபிப்பிராயமே.

சென்னை எஸ்டேட் நிலச்சட்டம், மேற்கூறிய ஹைகோர்ட் தீர்ப்பின்படியே ஜமீன்தாரி ரயத்தின் உரிமையைப்பற்றி உயர்ந்த முறையில் செய்திருக்கிறது. ஆனால் மதராஸ் எஸ்டேட் நிலச்சட்டம் நிலத்துக்குச் சொந்தக்காரர் ஜமீன்தார் என்னும் கொள்கையிலே சென்றிருக்கிறது. அதைப்பற்றி நிலச்சுவான்தார் சங்கத்தார் கீழ்க்கண்டவாறு தெரிவித்திருக்கிறார்கள். அதற்கு நானும் சம்மதிக்கிறேன் :—

"கீழ்க்கண்ட நிபந்தனைகள் எஸ்டேட் நிலச்சட்டத்தில ஜமீனதார்தான் நிலத்துக்குச் சொந்தக்காரரென்றும், அந்த உரிமையின்கீழ் பல உரிமைகள் இருக்கிறதென்றும், அவைகள் சட்ட முறையாக விளக்கப்பட்டிருக்கிறதாகவும், அவற்றை இச்சட்டத்தில் குறிப்பிட்டபடி பலவாறு உளர் சார்பாய் வகுக்கப்பட்டிருக்கிறதென்றும், அவற்றுள் முக்கியமானது ரயத்துகளின் நிரந்தரமான அனுபோக பாத்தியதையென்றும் ஏற்படுகிறது. சொந்த கைப்பற்று நிலம் ஜமீன்தாரின் இஷ்டத்திற்கானதும், அவ்வித நிலத்தில் ஜமீன்தாருக்கும் பாயக்காரிக்குமுள்ள உரிமையைப்பற்றி இச்சட்டத்தில் சொல்லவில்லை. (19-வது பிரிவு) இது இங்கிலாந்தில் நிலத்துக்குடையவருக்கும், பாயக்காரிக்கும் உள்ள ஒப்பந்தத்தைப்போன்றது. கைப்பற்று நிலத்தை ரயத்து நிலமாக்கி, ரயத்திடம் ஒப்பிவித்து அனுபோக பாத்தியதையை ஏற்படுத்த ஜமீன்தாருக்கு அதிகாரமுண்டு. ஆனால் இது, தானே சுயேச்சையாய் செய்யக்கூடியதன்றி கட்டாயப்படுத்திச் செய்யக்கூடியதல்ல. கரம்பை நிலங்களிலும், தோப்புக்கும், தோட்டப்பயிருக்கும் ஜமீன்தாரால் ஒதுக்கப்பட்ட நிலத்திலும், மேய்ச்சலுக்கும், தற்காலிகமாக பயிரிடவும் விடப்பட்ட பாயக்காரிக்கு அனுபவ பாத்தியதை ஏற்பட முடியாது. 6-வது பிரிவின் 2-வது உட்பிரிவால் இவ்வகையான நிலங்களில் ஜமீன்தாரின் சொந்தம் காபாற்றப்பட்டிருக்கிறது. ரயத்து நிலத்தில்கூட அனுபோக பாத்தியதை, ஜமீன்தார் ஒரு ரயத்தை நிலத்தில் பிரவேசிக்க அனுமதித்தபின்தான் உண்டாகும். இதனால் ஆரம்பத்திலேயே இந்த பாத்தியதை ஒப்பந்தத்தால் உண்டானது. நிலத்துக்குடையவர் சம்மதமின்றி நிலத்தில் பிரவேசம் செய்வதால் பாயக்காரியாக முடியாது. ஆனால் 163-ம் பிரிவுபடி குத்தகை வாங்கிக்கொண்டால் அப்படி பொருள் கொள்ளப்படும். அப்படி குத்தகை வாங்கிய 2 வருஷத்திற்குள் அப்புறப்படுத்த வழக்கிட்டாலன்றி பாயக்காரி நிலைவந்துவிடும். 1934-ம் வருஷத்து சென்னை 8-வது சட்டப்படி ஒரு நபர் ரயத்து நிலத்தை 12 வருஷங்களாக தொடர்ந்து அனுபவித்திருந்தால் இச் சட்டப்படி ரயத்தென்று கருதப்படுவான். நிபந்தனைக்குட்பட்டு, அனுபோக பாத்தியதையை ஒருவன் கால அளவால் அடைய முடியுமென்று இதனால் உண்டாகிறது. 7-வது பிரிவில். சுரங்கம் வெட்டும் உரிமை நிலத்துக்குடையவர் தனக்கே ஒதிக்கிக்கொள்ளப்பட்டதாகும். 25-வது பிரிவில் ஜமீன்தார் கரம்பை நிலத்திலோ, முந்திய ரயத்தால் விட்டுவிடப்பட்ட நிலத்திலோ,

குத்தகைக்கு ஏலத்தில் விடப்பட்ட நிலத்திலோ ரயத்தை அனுமதித்தால் அதற்குப் பணம் வசூலிக்கலாம். 10-ம் பிரிவு 2-ம் உட்பிரிவில் ஒரு ரயத்து வார்சு இல்லாமல் இறந்துவிட்டால் அவர் அனுபோக உரிமை போய்விடும். அதனால் அது ஜமீன்தாருக்குச் சேரும். 11-ம் பிரிவில் ரயத்துக்கு பயிரிடமட்டும் தான் உரிமை உண்டென்று இருக்கிறது. நிலத்தைக் கெடுத்துவிட்டால் 151-ம் பிரிவுபடி அந்த நிலத்திலிருந்து விலக்கிவிடலாம். இதனால், நிலத்துக்குடையவரின் சட்ட முறையான பாத்தியதை தெரிகிறது. அதனால் யார் உரிமையை இழக்கிறாரோ, அவ்வுரிமையை அடையக்கூடியவர் சொந்தக்காரர் என்று ஏற்படுகிறது."

ஜமீன்தார் நிலத்துக்குச் சொந்தக்காரர் என்னும்போது நானாவது, எந்த ஜமீன்தாராவது, மதராஸ் எஸ்டேட் நிலச்சட்டத்தின் முறையை மாற்றவேண்டுமென்றாகிலும், அதனால் தரப்பட்ட பாத்தியதைகளை ரத்துசெய்யவேண்டுமென்றாகிலும் கேட்கவில்லை. ரயத்துக்காக பேசும் எந்த தீவிரவாதியும், ரயத்தின் பாத்திய தைகளை 20 M. 299, 23 M. 318-ல் காப்பாற்றவில்லையென்று சொல்லமுடியாது. திரு போர்ப்ஸ் மேற்கூறிய தீர்மானங்களை அனுஷ்டித்து சென்னை பூஸ்த்திதிகளிலுள்ள நிலச்சட்டத்தைக் கொண்டுவந்தாரென்றால், இம்மாதிரியான சொந்தத்தைப்பற்றி பாராட்டுவது நியாயமானது அல்ல.

என் சகாக்கள் அபிப்பிராயத்தைப்பற்றி, எதிர்த்து பேசவேண்டுமானால் நில ஆக்ரமிப்பு சட்டம், இன்னும் சர்க்கார் தீர்வையைப்பற்றிய ரெகுலேஷன்கள், போர்ட் ஆப் ரெவின்யூவின் நிரந்தர உத்தரவு விதிகள் முதலியன போதுமானவை. அவைகளில், அனுபோகத்திலில்லாத நிலங்கள் சர்க்காருடையதென்றும், சுரங்கம் வெட்டும் உரிமைகள் காப்பாற்றப்பட்டிருக்கின்றனவென்றும் மற்றும் அனுபோகமுள்ள நிலங்கள்கூட முடிவில் அனந்தர வார்சாக சர்க்காருடையதானதால் சர்க்கார்தான் நிலத்துக்குடையவர் என்றும் தெரிகிறது. ஆனால் சர்க்காரால் ஒருவருக்கு அந்த பாத்தியதை மாற்றம் செய்யப்பட்டால் அது அவருக்குச்சேரும்.

I.L.R. 45 Mad., 586-ல் பிரிவிகௌன்ஸிலின் தீர்ப்பின்படி, ரயத்து நிலத்தில், நிலத்துக்குடையவருக்கு ஸ்வாதீனம்கூட இல்லை என்னும் முடிவோடு என் சகாக்கள் முதல் அத்தியாயத்தை முடிக்கின்றனர். அந்த வழக்கில் கருப்புடையான்பட்டி இனம் சாசனம் பிரகாரம் மேல்வாரம், குடிவாரம் எனப்படும் இரண்டு பாத்தியதைகளும் தரப்பட்டிருக்கிறதா? அப்படிக்கில்லையானால், திருத்தத்திற்குமுன் எஸ்டேட் நிலச்சட்டம் 3 (2) (d) பிரிவின்படி அது எஸ்டேட் எனப்படுமா என்பது வழக்கு. இதைப்போன்ற வழக்கு களில், சாதாரணமாக இருப்பதைப்போல ரயத்துகள் வெகுகாலமாய் அனுபோகபாத்தியதை உடையவர்கள் ஆனதால், இனாம்தாருக்கு குடிவார பாத்தியதை தரப்படவில்லையென முடிவு கட்டினர். அதனால் எஸ்டேட் என்னும் சொல்லில் அது அடங்கியது என்பது தீர்ப்பு. எஸ்டேட் என்னும் வியாக்கியானத்தில் வந்தால் ரயத்தை, நிலத்தைப்பாழ் செய்ததற்காகத்தான் விலக்க முடியுமென்பது உண்மையே. மேற்கூறிய என் சகாக்களுடைய தீர்மானத்திற்கு, இந்த வழக்கு ஒரு சான்று மளிக்கவில்லை.

ரயத்துகள் சார்பாக வந்த பல விண்ணப்பங்களும், தாங்கள் நிலத்துக்குச் சொந்தக்காரர்கள் என்றாலும் செட்டில்மெண்டுக்குமுன் தப்பாக ஜமீன்தார்களை சொந்தக்காரர்களாகக் கொள்ளப்பட்டதென்று ஏற்றுக் கொள்ளுகிறது. அப்படி சாசுவத செட்டில்மெண்டு தப்பான அபிப்பிராயத்துடன் நடந்ததென்பதற்கு சான்று இல்லை. அதை மாற்றவேண்டுமென கேட்பதற்கும் நியாயமில்லை.

3-ம் அத்தியாயம்.

தீர்வை நிஷ்கரிஷை செயயப்பட்டதா ?

ஜமீன்தாரியில், தீர்வை நிர்ணயிக்கப்பட்டதா என்பதை மூன்றுவிதமாக ஆராயலாம். முதலில் சாசுவத செட்டில்மெண்டுக்குமுன், இரண்டாவதாக, சாசுவத செட்டில்மெண்டில், மூன்றாவதாக சாசுவத செட்டில் மெண்டின்பின், தீர்வை நிஷ்கரிஷை செய்யப்பட்டதா என்பதே.

என் சகாக்கள் முதலிலும், மூன்றாம் நிலையிலும் தீர்மானிக்கப்படவில்லை யென்கின்றனர். சாசுவத செட்டில்மெண்டுக்குமுன் ஜமீன்தாரியில் தீர்வை நிஷ்கரிஷை செய்யப்படவில்லை என்று சொல்லு கிறார்கள். பட்டா ரெகுலேஷன்போது ரயத்துகளின் துயரமாவது தீர்வை நிரந்தரமாய் ஏற்பாடு செய்யாத தால், மாறுதலினால் துன்பம் விளைவதென்பதே. சாசுவத செட்டில்மெண்டுக்குமுன் ஜமீன்தாரியில் மாற்ற முடியாதபடி தீர்வை நிர்ணயிக்கப்பட்டிருந்தால் ரயத்துவாரி நிலங்களுக்கும் அப்படியே இருந் திருக்கவேண்டும். ஆனால் சர்க்கார் அடிக்கடி பல செட்டில்மெண்டுபோது உயர்த்தி இருக்கின்றனர். அதேபோல சாசுவத செட்டில்மெண்டுக்குப்பின் நிச்சயித்திருக்கலாமென்பது ஒத்துக்கொள்ளத்தக்கதல்ல. என் சகாக்கள் சீர்திருத்தக்காரர்களையும், நீதிபதிகளையும், நிர்வாகிகளையும் குற்றம்பாராட்டிப் பேசுகையில் சாசுவத செட்டில்மெண்டுபடி தீர்வை நிர்ணயிக்கப்படவில்லை யென்பதற்கு மாறாகவே பேசினார்கள். அதனால் 1802-ம் வருஷத்திற்குப்பின் தீர்வை தீர்மானமாக நிஷ்கரிஷை செய்யப்பட்டதென்பது சரியல்ல. என் சகாக்களாவது, ரயத்து சார்பாக வந்த சாக்ஷிகளாவது அவ்வாறு கூறவில்லை.

அதனால் சாசுவத செட்டில்மெண்டில் தீர்வை நிஷ்கரிஷை செய்யப்பட்டதா என்பதைக் கவனிக்க வேண்டும். பெரும்பான்மை அறிக்கையின் 3, 4, 5 அத்தியாயங்கள் 1802-ம் வருஷத்து 30-வது பட்டா ரெகுலேஷனையும், 29-வது கர்ணம் ரெகுலேஷனையும் ஆராய்வதாகும். 1799-ல் கலெக்டருக்கு விடுத்துள்ள அறிக்கைகள், 1808-ம் வருஷத்து ஹாட்க்ஸன் அறிக்கை கோர்ட் ஆப் டைரக்டர்ஸ் கடிதம், இன்னும் சில தஸ்த்தாவேஜுகள் மேற்கூறிய ரெகுலேஷன்களோடு ஜமீன்தாரியில் தீர்வை சாசுவத செட்டில்மெண்டில் நிஷ்கரிஷை செய்யப்பட்டதென்று என் சகாக்கள் முடிவுக்குவர ஏதுவாயிற்று. நான் அந்த முடிவை ஒத்துக்கொள்ளமுடியாது. இயற்கையான வியாக்கியானத்தை விட்டுவிட்டு தங்கள் கருத்தின்படிவியாக்கி யானம் செய்கின்றனர்.

அவற்றைப்பற்றி வாதிக்குமுன், முதலில் அரசருக்கு தீர்வை வசூலிப்பதில் இருக்கும் பாத்தியதையின் அளவும், அதிகாரமும், பின்னர் ஜமீன்தாருக்குள்ள உரிமையும்பற்றி நான் சொல்லுகிறேன். நிலத்தின் சொந்தத்தைப்பற்றி என்ன சொன்னாலும், ராஜாங்கத்திற்கோ, அதன் "அஸைனிக்கோ", ஜமீன்தாருக்கோ மேல்வாரம் அல்லது ராஜ பாகத்திற்கு உரிமை இருக்கிறதென்பதில் ஐயமில்லை. மொத்த மாசூலில் என்ன பகுதி என்பது மாறலாம். ஆனால் ராஜாங்கத்திற்கும், அதன் "அஸைனிக்கும்" மாசூலில் ஒரு பகுதி உண்டென்பது தொன்றுதொட்டு இருக்கும் உரிமை.

ஹிந்து அரசர்களின் காலம்.

மனுவின்படி ராஜபாகம் மொத்த வரவில் 6-ல் 1 பங்கென்றும் நிர்ப்பந்தமான காலத்தில் 4-ல் 1 பங்காக உயர்த்தப்படுமென்றும், மொகலாயர் காலத்தில் 3-ல் 1 பங்காக உயர்த்தப்பட்டதென்றும், மொகலாய அரசர் களின் வீழ்ச்சியின்போது பாதியாகவும், 5-ல் 2 பங்காகவும் உயர்த்தப்பட்டதென்றும் தெரிகிறது.

ஹிந்துக்கள் காலத்தில் 6-ல் 1 பகுதிதான் வசூலிக்கப்பட்டதென்பதற்கு சாக்ஷியமில்லை. ஆனால் ஒழுங்கான நிலைக்கு அது சொல்லப்பட்டிருக்கலாம். சோழ அரசாங்கத்தைப்பற்றி ஒன்றும் தெரியவில்லை. விஜயநகரத்தைப்பற்றியும் அப்படியே. அர்த்த சாஸ்திரம், அவசரத்தில் 3-ல் 1 பங்கு அல்லது 4-ல் 1 பங்கு விதிக்கலாமென்று கூறுகிறது. சாதாரணமாய் 6-ல் 1 பங்கு அதிகப்பட்டதென்றே C. H. ராவ் 'இந்தியாவின் பழமை' என்பதில் சொல்லுகிறார். பொதுவரி 6-லோ, 5-ந்திலோ, 4-லிலோ ஒரு பகுதியாயிருந்தால் அதன் மேல்பார்வைக்கு அவ்வளவு செலவில் உத்தியோகஸ்த்தர்கள் தேவையில்லை யென்று சர் தாமஸ் மன்ரோ கூற்று.

முஸ்லீம் ஆக்ரமிப்பு இல்லாமலிருந்து ஹிந்துவழியே வந்த உடையபூர், மேவார் போன்ற ராஜபுதன அரசாங்கத்தில் இன்று எப்படி, ஹிந்துமுறை கையாளப்படுகிறது என்பதை நோக்குவது நலம். அங்கு பாகம், அளவு, ஒப்பந்தம் என்னும் மூன்று முறை ஒரே கிராமத்தில் காணப்படும். பாகமாவது 3-ல் 1 பங்கு அல்லது மாசூலில் 2-ல் 1 பங்கு. ஆனால் எடைக்கும், பாகத்திற்கும் களத்திலேயே தீர்மானம் செய்யலாம்.

மகமதிய அரசர்களின் காலம்.

முஸ்லீம் காலத்தில் ரெவன்யூ நிர்வாகம் புதிப்பிக்கப்பட்டு தீர்வை ஏற்றப்பட்டதென்பது நிஜமல்ல. ஆப்கான் ஸ்தானத்திலிருந்து வந்த முஸ்லீம்கள் இங்கு இருந்த பழக்கத்தையே கையாண்டனர்.

1300-ம் ஆண்டில், அல்லாடின் கில்ஜி என்பவர் தீர்வை முறைபற்றி ஏற்பாடு செய்ததுதான் மகமதியர் காலத்தில் பழைமையானது. அதன்படி—

(1) தீர்வை வசூலிப்பு, தள்ளுபடியின்றி, மாசூலில் பாதியாகும்.

(2) அனுபவிக்கப்பட்ட எல்லா நிலங்களும் முழு வீதம்படி கணக்கிடப்பட்டு சொற்பச் செலவு ரத்து செய்யப்பட்டது.

(3) தீர்வை வீதம், அளவுபடிக்காகும். விலை, நிரந்தரமான மாசூலின்படி கணக்கிடப்படும்.

(4) பயிரிடுவதற்கு, தீர்வை விதிப்பதற்குமேல் மேய்ச்சல் வரி விதிக்கப்பட்டது.

இம்முறை அல்லாடினுக்குப்பின் தொடரவில்லை. கியாசிடின் காலத்தில் ரெவன்யூமுறை திருத்தி அமைக்கப்பட்டது. பங்குமுறையை அவர் வெறுத்து, தலைவர்களை பழைய நிலைமைக்கு கொண்டுவந்தார்.

1352 முதல் 1388-வரை பெரூஸ் சாகெப் அரசுரிமையில் ஜலவரியென்று 10-ல் 1 பங்கு விதித்தனர்.

அக்பர் காலத்தில், 1556 முதல் 1605-வரையில் தோடர் மல் செட்டில்மெண்ட் பிரக்கியாதியானது. மானவாரி மாசூல் இரண்டிலும், பாதி தீர்வையென்று ஏற்பாடு. அது அநியாயமாகாது என்று கிராண்டு சொல்லுகிறார். விதைக்கும் உழைப்பிற்கும் ரயத்தே பாதிக்கப்பட்டாலும் நீர்பாசனங்களால் பயிரிடப்பட்டதற்கு 3-ல் 1 பங்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. உயர்ந்த மாசூலான கரும்பு முதலியவற்றிற்கு தீர்வை 4-ல் 1, 5-ல் 1, 6-ல் 1, 7-ல் 1 வீதம் பயிருக்குத்தக்கபடி இருந்தது. 19 வருஷ விலையைப்பார்த்து சர்க்கார் பகுதி தீர்மானிக்கப்படும். பிறகு 10 வருஷ சராசரி விலைப்படி தீர்மானிக்கப்பட்டது. இதுதான் ஜமாபந்தி நெக்டி என்பது. டெல்லி, ஆக்ரா, குஜரத், பேரார் முதலிய இடங்களில் இது இருந்தது. மற்ற மாகாணங்களில் பாட்டை முறை என்னும் மாசூல் பாகமுறை இருந்தது. தோடர் மல் முறை ஒரு நூற்றாண்டுவரை இருந்தது.

தோடர்மல் முறையில் கூட பாதி அல்லது 3-ல் 1 பங்கு தீர்வை விதிக்கப்பட்டது. எப்படியானாலும் ஹிந்துக்கள் காலத்தில் 6-ல் 1 பங்காக இருந்து மகமதியர்களால் பாதியாக்கப்பட்டதென்பதற்கு சான்றில்லை. ஒரிசா முதல் கன்னியாகுமரி வரையில் ஹிந்து அல்லது மகமதியர் காலத்தில், ஆங்கிலேயரின் முதல் செட்டில்மெண்டுக்குமுன் மொத்த மாசூலில் பாதிதான் ராஜபாகமாயிருந்தது. 5-ல் 3 என்பது அதிகம், 5-ல் 2 என்பது குறைவு, இதன் மத்தியில் பாதியானது சரியே.

"தக்கண அரசியல் ஆராய்ச்சி" என்னும் புத்தகத்தில் (3-வது அறிக்கை 36-வது பக்கம்) வட சர்க்கார் பிரதேசத்தைப்பற்றி எழுதுகையில் திரு கிராண்ட் கீழ்க்கண்டவாறு சொல்லுகிறார். 1687-க்குப்பின் ஹைதராபாத்தில் சேர்ந்த வட சர்க்கார் மகமதியர் ஆக்ஞைக்கு உட்பட்டது. இதன் பிறகு வரி விஷயத்தில் மாறுதல்கள் ஏற்பட்டதாகத் தெரியவில்லை. கூட்டில், ஷிஹித் திட்டம், ஆலம்கீர் தீர்வை ஜாப்தாவோடு இணைக்கப்பட்டபோது, "பாட்டை" முறை தொடரப்பட்டது. தஞ்சாவூர் போன்ற சமஸ்தானங்களிலும் பாதி முறை இருந்திருக்கிறது.

சாசுவத செட்டில்மெண்டுக்குமுன் இருந்த நிலையைப்பற்றி சர்கூட் கமிட்டியார் சொன்னதைவிட அதிகம் என்னால் சொல்லமுடியாது. கஞ்சம் ஜில்லாவில் ஹாவலி நிலத்தில் பயிரிடுபவருக்குத் தரப்பட்ட பாகம் 20-ல், 6-க்கு குறையாமலும் 10-க்கு மேம்படாமலும் இருந்தது. புஞ்சை மாசூல் பாதியாக வகுக்கப்பட்டது. புகையிலை, கரும்பு முதலியவற்றிற்கு நிலத்தீர்வை நிஷ்கரிஷை செய்யப்பட்டு தரப்பட்டது. விசாகபட்டணம், சிக்காகோல் சர்க்கார் ஜமீன்தாரியில், விவசாயிக்கு திருப்தியளிப்பது அவர்களுக்கு நெல்லில் 3-ல் 1 பங்கும், மற்றவைகளில் 5-ல் 2 பங்கும், இன்னும் சிலவற்றில் பாதியும் என்று சர்கூட் கமிட்டியார் கூறுகின்றனர். ராஜமந்திரி சர்க்காரில் 20-ல் 8, 10, 12 வீதம் நெல்லு விவசாயிகளுக்கு முதலில் தரப்பட்டது. பிராமணர்கள், ராஜவாரு, அன்னியர்கள், ஜமீன்தாரால் விரும்பப்பட்டவர்கள் 10 முதல் 12 தூம்வரை பெருவார்கள். புஞ்சை மாசூலில் பாதிதான் பங்கு. மசூலிபட்டணத்தில் விவசாயிக்கு 20-ல் 8, 10, 12 பங்கு தரப்படும். புகையிலை, கரும்பு, தோட்டப்பயிர், நீலம் முதலிய பயிராகும் நிலங்களுக்கு பில்மக்தா முறையில் விடப்படும். நுஜ்விட், சார்மகால் ஜமீனில் பாதி தரப்படும். அதில் ஏரிமராமத்து, கோவில் பூஜை முதலிய செலவுபோக 3-ல் 1 பங்குதான் ரயத்துக்குக் கிடைக்கும். அதுவே அவர்களுக்கு சந்தோஷம் விசாகப்பட்டணத்தில் ஜமீன்தாரிகளுக்கு சாசுவத செட்டில்மெண்ட் ஏற்படும்முன், நிலங்களுக்கு பாகமாகவோ அல்லது பகுதியாகவோ தீர்வை வசூலிக்கப்பட்டது. அதன் அளவு, ரயத்தின் நிலை, ஜாதி முதலியவற்றைப் பொருந்தியது. ராஜபுத்திரர்கள் வெளமர்கள், இன்னும் இதர விவசாயிகள் பாதி பங்கு கொண்டனர். சாதாரண ரயத்து 3-ல் 1 பங்குதான் அடைவது. வெப்பும், விஜயநகரம் ஜமீனில், ராஜிநாமா செய்யப்பட்ட நிலங்களை திரும்பவும் விடும்போது பாதிமுறையில் விடவேண்டுமென்று சொல்லியிருக்கிறார். ராம்னுட் மான்யூலில், புல்லர்டர் தென் மாகாணத்தில் பழக்கமான ஏற்பாடாவது, மாசூலில் பாதி விவசாயிக்கும், இதரபாதி சர்க்காருக்கும் என்று கூறியிருக்கிறார்.

மேற்குப் பாளையங்கள் தவிர, தெற்கேயும் வடக்கேயும் ஜமீன்தார்பங்கு மொத்த மாசூலில் பாதியாக இருந்து வந்தது. முதல் ரயத்துவாரி செட்டில்மெண்டில் சர்க்காரும் பாதி பங்கே தீர்மானித்தனர். கிராமக் குத்தகை முறையிலும் பாதிப் பங்கே கையாளப்பட்டது. சேலம் ஜில்லாவில் நிறுவப்பட்ட தனி முறையில், ரீட் ஏற்பாட்டின்படி நஞ்சையில் மொத்த மாசூலில் 5-ல் 2 பங்கும், புஞ்சையில் மொத்த

மாசூலில் பாதியும் வரியாகத் தீர்மானிக்கப்பட்டது. நெல்லூர் ஜில்லாவில் 1211-ம் பசலியில் திரு. டிருவர்
ஸும் 1236-ம் பசலியில் திரு. ஸ்மாலியும் சர்க்கார் பங்கு 20-ல் 11 பாகம் என்று கூறுகின்றனர். செங்
கல்பட் கலெக்டரான பிளேஸ் என்பவர் பாயக்காரி மாசூலில் பாதிக்குடையவர் என்று கூறுகிறார். தஞ்சாவூர்,
திருச்சினுப்பள்ளி கலெக்டரான வாலஸ் என்பவர், போர்ட் ஆவ் ரெவன்யூவுக்கு அனுப்பிய அறிக்கையில்,
மான்யம் சுதந்திரம் போக மீதியில் 100-ல் 50 முதல் 60 பங்கு சர்க்காருக்கு என்று 1806-ம்ஸு ஜூன்மீ
15உ-யில் தெரிவிக்கிறார். 1770 முதல் 1780 வரையில் திருநெல்வேலியில் ஏற்படுத்திய செட்டில்மென்டில்
சர்க்கார் பாகம் 60 சதமும், 1781 முதல் 1789 வரையில் 50 சதமும் 1790 முதல் 1791 வரையில் 40
சதமும் 1792 முதல் 1800 வரை 50 சதமும் ஏற்பட்டிருக்கிறது. ஹட்சின் அறிக்கைப்படி பாதி பாகமாகும்.
தந்த ஜில்லாக்களிலும் 1887-ம்ஸு ஜூலைமீ 15உ-யில் கலெக்டர் அறிக்கையின்படி சுமார் பாதிபாக
மெனத் தெரிகிறது. அதனால் ஜமீன்தாரியிலிருந்த வீதம் அநியாயமானதென்று புலனாகவில்லை.

இப்படி ஜமீன்தாரின் சராசரி வரவைக்கண்டுபிடித்தே, ஒவ்வொரு பூஸ்திதிக்கும் மொத்த வரவில்
3-ல் 2 பங்கு பேஷ்கஷ் தீர்மானிக்கப்பட்டு, அதில் கலெக்டர் சிபார்சுபடி எஸ்டேட்டுக்கு பிரகாரம், அதன்
நிலைக்கேற்றவாறு, சேர்த்தும், குறைத்தும், ஏற்பாடு செய்யப்பட்டது. இதனால், சர்க்காருக்கும், ஜமீன்
தாருக்கும், ரயத்துக்கும் ஒப்பந்தம், தீர்வையைமாற்ற முடியாதபடி ஏற்படவில்லை யென்பதைக் காண்பிக்கலாம்.
ஜமீன்தாரியின் வரவில் 3-ல் 2 பங்கில் மாறுதலிருப்பது இல்லை. அத்துடன் சேர்க்கப்படும் தொகையாலோ,
குறைக்கப்படும் தொகையாலோ, அது மாறுதலடைவதில்லை. ராஜபாகமோ, மேல்வாரமோ பாதியாகவும்,
மேல்வாரப்படி சரியாய் 3-ல் 2 பங்கு, பேஷ்கஷுக்கு சர்க்கார் எடுக்கவில்லை யென்றால், ஜமீன்தாருக்கும்
ரயத்துக்கும் ஒரு ஒப்பந்தத்தாலேத்தான் ஏற்பட்டது. சர்க்கார் வித்தியாசமான முறையிலா இந்த தீர்
வையை பல எஸ்டேட்களில் ஏற்பாடு செய்ததாகக்கொள்வது.

சிற்றரசு முறையான பூஸ்திதிகள்.

வெங்கடகிரி, காளாஸ்திரி, கார்வேட் நகரம், சைதாப்பூர் முதலியவற்றின் செட்டில்மெண்ட் ஜமீன்தார்
தீர்வையுடன் சம்பந்தப்பட்டதல்ல. கர்னாடக நவாப்புக்கு ஒரு கப்பம் கட்டவேண்டியதை கிழக்கிந்திய கம்
பெனியாருக்கு உடன்படிக்கைப்படி மாற்றப்பட்டது. யுத்த உதவிக்காக ஒரு தொகை அத்துடன்
சேர்க்கப்பட்டது. இப்படி, கட்டணம் ஏற்பாடு செய்த எந்த காலத்திலும் என்ன மாதிரி அவ்வரசர்களால்
குடிகளிடமிருந்து தீர்வை வசூலிக்கப்பட்டதென்று கணக்கிடவில்லை. 44 M. 864-ல், செட்டில்மெண்ட் முந்
திய இனுக்களின் பேஷ்கஷ் எப்படி தீர்மானிக்கப்பட்டதென்பதைப்பற்றி கூறியிருக்கிறது.

மேற்கூறிய பூஸ்த்திதிகள் சாசுவத செட்டில்மென்டில் ஏற்பட்ட பூஸ்திதிகளைப்போல தீர்மானிக்கப்பட
வில்லையென்று என் சகாக்கள் ஒத்துக்கொள்கின்றனர். அதனால் அந்த எஸ்டேட்களில் நிரந்தரமாக
செட்டில் செய்யப்பட்டுவிட்டது என்பது உண்மையாகாது.

1802-ம் ஆண்டில் நிஷ்கரிஷை செய்யப்படவில்லையானுல் பின்னுல்த்தான் வேறு சீர்திருத்தம் இருந்ததா
வென்று என் சகாக்கள் கூறவில்லை. வரி வசூல் சட்டம் ஒப்பந்தங்களை ஒத்துக்கொள்வதாகும். எஸ்டேட்
நிலச்சட்டம் தீர்வை உயர்வை தடுப்பதாகும்.

இதனால் சிற்றரசர்கள் பூஸ்த்திதியில்க்கூட சாசுவத செட்டில்மேண்ட் தீர்வை ஏற்படுத்துவது என்
சகாக்களின் வாதத்தாலேயே ஏற்படுகிறது.

1765-ல் வங்காளம், பீகார், ஒரிசா திவானிகளை பிரிட்டீஷார் எடுத்துக்கொண்டபோது பாதிக்குமேல்
தீர்வை வாங்கினதாக ஒத்துக்கொள்ளப்பட்டது. 1802-ம்ஸுத்து பட்டா, கர்ணம், சாசுவத செட்டில்
மெண்ட், ரெகுலேஷன்களைக்கொண்டு ஜமீன்தார் சர்க்காருக்குக்கட்டவேண்டிய பேஷ்கஷ், ரயத்து ஜமீன்
தாருக்கு செலுத்தவேண்டிய தீர்வையும் நிஷ்கரிஷை செய்யப்பட்டதென்று என் சகாக்கள் கூறுகின்றனர்.
நான் அதை ஒப்புக்கொள்ளவில்லை.

பட்டா ரெகுலேஷனைக் கவனிப்போம். என் சகாக்களே கூறுவதுபடி, ரயத்துகள் பல ஹிம்சைக்கு உட்
பட்டனர். தீர்வை அதிகமாக வசூலிக்கப்பட்டது. பல பெயர்கள்கொண்டு, குறிப்பிட்ட தொகைக்குமேல்
தீர்வை வசூலிப்பதால் ரயத்துகள் துன்பமடைந்தனர். எவ்வளவுதான் கட்டவேண்டிய தீர்வையென்று
இதனால் ஏற்பாடில்லாமலிருந்தது. அதை சீர்திருத்தவேண்டி, ஒவ்வொரு ரயத்துடன் ஜமீன்தாரும்,
ஒவ்வொரு ரயத்தும், பாயக்காரியிடமும் ஒப்பந்தம் செய்துக்கொள்ளவேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டது.
அதில் விபரமாக ரயத்து செலுத்த வேண்டிய தீர்வை முதலியன நிச்சயிக்கப்பட்டது. இப்படி ஏற்பட்ட
பத்திரம்தான் பட்டா. இதன்படி பட்டாவும் முச்சிலிக்கையும் மாற்றிக்கொள்ளவேண்டும். இதனால் பட்டா
ரெகுலேஷன், ரயத்து எவ்வளவு நிலம் பயிரிடலாம், என்ன தீர்வை செலுத்தவேண்டும் என்பதும், எப்படி
ஜமீன்தார் உயரிய தீர்வை பெறுவதைத் தடுக்க முடியுமென்றும் அதற்காக ஏற்பட்டதொரு சட்டமாகு
மென்றும் தெரிகிறது :—பட்டா ரெகுலேஷன் வரி உயர்த்துவதைத் தடுக்கவில்லை. மதராஸ் எஸ்டேட்
நிலச்சட்டம் 24-வது பிரிவுபோல, ஒன்றும் பட்டா ரெகுலேஷனில் இல்லை. விலை உயர்வாலும், நிலம் அதிக
மாக விளைவு கொடுத்தாலும், வரி உயர்த்துவதைப்பற்றி ஒப்பந்தம் செய்துக்கொள்வதை 1802-ம்ஸுத்து
செட்டில்மெண்ட் தடுக்கவில்லை. S.A. No. 6 ஆவ் 1847-ல் சத்தர் அடலட் தீர்மானத்தை ஸ்லோன்
என்பவர் தன் ரெவன்யூ கோடில் பட்டா ரெகுலேஷன், 6, 7-வது பிரிவுகளில் விருத்திசெய்யப்பட்ட நிலத்திற்கு
(புஞ்சையிலிருந்து நஞ்சையாக்கப்பட்டால்) ஊரிலுள்ள வழக்கப்படி, அந்த நிலத்தின் ரயத்து முட்டாதாருக்கு
அதிக தீர்வை செலுத்தவேண்டும், பாக்கு, தேங்காய், வெற்றிலைத்தோட்டம் முதலியவற்றிற்கு உயரிய
தீர்வை விதிக்கலாம், தெரிவித்திருக்கிறார்.

இதனால், என் சகாக்கள் எப்படி தீர்வை நிஷ்கரிஷை செய்யப்பட்டதென்ற முடிவிற்கு வந்தார்கள்
என்று எனக்குத் தெரியவில்லை. மாசூலைப்பங்கிடுவதும், பணமாக கணக்கொப்பிப்பதையும் ரத்து செய்யப்
பட்டது என்றால், வரியை நிஷ்கரிஷை செய்யப்பட்டதென்கின்றனர். அப்படியல்ல, ஏனென்றால் விலை மாற்றத்
தால் இது சரியானபடி கணக்கிடவில்லை. அதைத் தீர்மானிக்கவே விலை நிச்சயிக்கப்பட்டது. அதன்பேரில்
தீர்வை தீர்மானிக்கப்பட்டது. என் சகாக்களே சாசுவத செட்டில்மெண்ட்போது தீர்வை தான்யத்தில்
தரப்பட்டதென்றும், பணமாக இல்லையென்றும் சொல்லுகிறார்கள். தீர்வையை நிஷ்கரிஷை செய்யப்
பட்டாலன்றி ஜமீன்தார் சர்க்காருக்குத் தரப்பட்ட பேஷ்கஷ் நிஷ்கரிஷை செய்யமுடியாது. ஜமீன்தார்
சர்க்காருக்குக் கட்டவேண்டிய பேஷ்கஷ் நிஷ்கரிஷை செய்வதால், எப்படி தகுந்த காரணங்களுக்கு ரயத்தின்
தீர்வையை உயர்த்தக்கூடாதென்று எனக்குத் தெரியவில்லை. பட்டா ரெகுலேஷன் வரி உயர்த்துவதைத்
தடுப்பதற்கென்றால், சட்டசபை அப்படிச் சொல்லி இருக்கலாம். ஆனால் அப்படிச் சொல்லவில்லை. 2, 3-வது
பிரிவு, நிலத்துக்குடையவரும், ரயத்தும் எழுத்துமூலம் ஒப்பந்தம் செய்துக்கொள்ளவேண்டுமென்று இருக்கி
றது. 4-ம் பிரிவு அவ்வொப்பந்தத்தின் உள்ளடக்கங்களையும், பட்டா முச்சலிக்கையைப்பற்றியும், இருக்கிறது,
பட்டா 4 வகையாகும். அவை கிராமத்தீர்வை, நிலத்தில்விளையும் மாசூலில் பங்கு, பணமாகத் தீர்வை,

தான்யமூலம் தீர்வை என்பன. 5-ம் பிரிவுபடி பட்டாவும் முச்சிலிக்கையும் கர்ணத்தால் பதிவு செய்யப்படவேண்டும். இந்த ரெகுலேஷனுக்குப்பின் 2 ஆண்டில் எல்லாவிதமானக் கட்டணங்களேயும் தீர்வையுடன் சேர்த்துவிடவேண்டும். 7-ம் பிரிவு அனுமதியில்லாத தீர்வை வசூலிப்பதை தண்டிப்பதற்காகும். விவசாயிகள் சொந்தக்காரர்களைப் பட்டாதரும்படி கட்டாயப்படுத்தலாம். அப்படி, சொந்தக்காரர்கள் பட்டா தரத்தவறினுல் அவர்கள்மீது தாவா தொடரப்பட்டு அபராதம் விதிக்கப்படும் தீர்வையை பணமாக மதிக்கும் வகையினும், மாசூலே பாகமாகப் பிரிக்கும் விஷயத்திலும் வாதம் ஏற்பட்டால், சாசுவத ஜம்மா நிர்ணயித்த முன்வருஷத்தில் பயிரான நிலங்களுக்கிருந்த வீதத்தை ஏற்படுத்தவேண்டும். 9-ம் பிரிவு ஒப்பந்தம் இல்லாத வழக்குகளைப்பற்றியது. கோர்டார் தாவாதார்களின் பாத்தியதைகளே ஒப்பந்தமூலம் தீர்மானிக்க முடியாவிட்டால் சாசுவத செட்டில்மென்ட்டுக்கு முன்வருஷத்து வீதத்தை அனுசரிக்கவேண்டும். குத்தகை நிஷ்கரிஷை செய்யப்பட்டால், பட்டாவும் முச்சலிக்கையும் மாற்றிக்கொண்டு, பின்னர் 12 ஆண்டுகளுக்கு மாற்ற வேண்டியதில்லேயென 12-ம் பிரிவில் இருக்கிறது :—புதிப்பித்தல், கரம்பை நிலத்தை பயிரிடுவதால், தீர்வையை உயர்த்தி சேர்ப்பதற்க்கல்ல. "வழக்கு ஏற்பட்ட நிலங்களைப் போன்ற தரமும், தன்மையும் வாய்ந்ததுமான நிலத்திற்கேற்பட்ட வீதம்படி" என்பது பக்கத்து நிலங்களில் சாசுவத செட்டில்மென்டுக்கு முந்திய வருஷத்து வீதம் என்று என் சகாக்கள் பொருள் கொண்டார்கள். அது அப்படியாகாது என்று நான் சொல்லுகிறேன். இதைப்போலவே வரிவசூல் சட்டத்தில் 11-ம் பிரிவினும் மதராஸ் எஸ்டேட் நிலச் சட்டத்தில் 25-ம் பிரிவினும் இருக்கிறது. இந்த சொற்களுக்கு என் சகாக்கள் சொல்லும் பொருள், வரிவசூல் சட்டம், எஸ்டேட் நிலச் சட்டத்தின் விளக்கத்திற்கு மாறுனதாகும். 12-ம் பிரிவு 11-ம் பிரிவு முச்சிலிக்கையில் குறிப்பிட்ட தீர்வைக்கு அதிகமாக வாங்கினுல் அதற்கு தண்டனே விதிப்பதற்காகும். 12-ம் பிரிவு பட்டாவை புதிப்பிப்பதற்கு 13-ம் பிரிவு பூஸ்த்திதியின் பாகத்தையோ பகதியையோ வாங்குபவர்களுக்கு பட்டா தருவதைப்பற்றியது. நிலத்துக்குடையவர்கள் பணமாகவோ, தான்யமாகவோ தீர்வை வாங்கினுல் ரசீது தரவேண்டும். அப்படித் தரத்தவறினுல் 2 பங்கு நஷ்ட ஈடு தரவேண்டும்.

இதனுல் பட்டா ரெகுலேஷன், ஜமீன்தாரும் ரயத்தும் பட்டாவும் முச்சிலிக்கையும் ஏற்படுத்தி தங்கள் பாத்தியதை தீர்மானம் செய்துகொள்ள ஏற்பட்டது. தீர்வை வாங்கினுலும் ரசீது தரவேண்டுமென்பதற்குமாகும். இதனுல் வழக்கு வந்தாலும் பாயக்காரிகள் தங்கள் நிலேமையை தஸ்தாவேஜு மூலம் கோர்ட்டில் நியாயம் பெறலாம். பட்டா ரெகுலேஷன் இதைவிட அதிகம் செய்யவில்லே. பழைய முறைப்படி மாசூலில் பகுதி வாங்குவதென்பதை ஏற்றுக்கொண்டால், பணமாகக்கூட தீர்வை தீர்மானித்திருந்தால், விலே உயர்வாலோ, அல்லது விலேயுயர்ந்த மாசூல் விளேவாலோ, நிலத்தை விருத்தி செய்வதாலோ அல்லது நிலம் நிறைய விளேவு தருவதாலோ, தீர்வையை திருத்தியமைக்கலாமென்பதை ஏற்றுக்கொள்ளலாம். 1865-ம்ஞு ஜூன்மீ 19உ-யில் கல்கத்தா ஹைகோர்ட் தீர்ப்பை குறிப்பிடுகிறேன். இதில் 15 நீதிபதிகள் உட்கார்ந்தனர். அவர்கள் ஜமீன்தார் விலே உயர்வால் குத்தகையை உயர்த்தலாமென்று முடிவு கட்டினர் வங்காள ரெகுலேஷனிலும் இதரசட்டங்களிலும் இதைத்தடுக்க ஒன்றுமில்லேயென்று தீர்மானிக்கப்பட்டது :—

1793, 1794, 1799-ம் ஞுத்து வங்காள ரெகுலேஷன்கள் 1802-ம்ஞுத்து சென்னே ரெகுலேஷன் போன்றதென்பதற்கு நீதிபதிகள் ட்ரோவர் என்பவர் சொல்வதாவது :—

> "தேச நிலே மாறுபடும் காலத்தில் தீர்வை வீதம் பணமாக நிஷ்கரிஷை செய்யப்பட்டதென்பது முடியாத காரியம். கட்டவேண்டிய மாசூல் பகுதி ஒன்றாக இருக்கலாம். தொகை, நாணயத்தின் மதிப்பைப்பொறுத்தது. இந்தத் தீர்ப்பு 100 பக்கங்கள் கொண்டது. பெங்கால் ரெகுலேஷன்களே வார்த்தைக்கு வார்த்தை சென்னே ரெகுலேஷன்களாகும். என் சகாக்கள் சொல்லும் தீர்ப்பு, கல்கத்தா நிதிபதிகளின் தீர்ப்புக்கு எதிரானது."

1802-ம்ஞுத்து 30-வது பட்டா ரெகுலேஷனில் ஒரு பிரிவினுள்ளபடி 1739-ம்ஞு அக்டோபர்மீ 15உ-யில் கலெக்டருக்குவிடுத்த அறிக்கையால் காணப்படுகிறது. அதை என் சகாக்கள் உபயோகிக்கின்றனர். அதாவது :—

> "சர்க்கார் அல்லது நிலத்துக்குடையவர் பாக்கியைக்காப்பாற்ற கோர்ட்டுகள் நிபந்தனேகள் செய்யும். அந்த நிபந்தனேகளே பாயக்காரிகளேயும், கீழ்ப் பாயக்காரிகளேயும் காப்பாற்றும்."

நிலத்துக்குடையவரும், கீழ்த்தர நிலச்சொந்தக்காரர்களும், ரயத்துகளுடனும், பாயக்காரிகளுடனும் எழுத்து மூலமாக ஒப்பந்தமும், பட்டாவும், ஏற்படுத்திக்கொள்ளவேண்டும். அதில் கட்டவேண்டிய தீர்வைத்தொகை நிச்சயித்திருக்கவேண்டும். அப்போதுதான் இருவர்களுக்கும் ஒரு திட்டம் ஏற்படும். என் சகாக்கள் அர்த்தம் செய்வதைப்போல 130 வருஷங்களாக பட்டா ரெகுலேஷனே யாரும் அர்த்தம் செய்யவில்லே. அதற்குமாருக, நிர்வாகிகளும், சீர்திருத்தக்காரர்களும், நீதிபதிகளும் ஜமீன்தாரி எல்லேயிலுள்ள குத்தகை தக்க காரணங்களால் மாற்றத்தக்கதென்றும் முதன் முதல் ஒப்பந்தத்தால் குத்தகை உயர்த்தல் 1908-ம்ஞுத்து எஸ்டேட் நிலச்சட்டத்தில் தடுக்கப்பட்டதென்றும் ஏற்றுக்கொண்டிருக்கின்றனர்.

1802-ம்ஞுத்து சாசுவத செட்டில்மெண்டு 25-வது ரெகுலேஷன்படி, 2-ம் பிரிவில், குத்தகை நிஷ்கரிஷை செய்யப்பட்டிருக்கிறதென்று என் சகாக்கள் கூறுகின்றனர். 2-ம் பிரிவில் கூறியிருப்பதாவது :— "சர்க்காருக்குத் தீர்வை கட்டவேண்டிய நிலங்களுக்கெல்லாம், தீர்வை நிஷ்கரிஷை செய்யப்படும். அதற்காக பூமியில் சொந்த உரிமை ஜமீன்தாருக்கும், நிலத்துக்குடையவர்களுக்கும், அவர்கள் வார்சுகளுக்கும் எக்காலத்திற்கும் உண்டு" இதனுல் என் சகாக்கள் வாதிப்பது "தீர்வை நிஷ்கரிஷை செய்தபின்தான் ஜமீன்தாருக்கும் சர்க்காருக்கும் சாசுவதம் ஏற்பாடு உண்டாகும் அப்படித் தீர்வை நிஷ்கரிஷை செய்யப்பட்டால் அதை எப்படி மாற்றுவது" ; என்பதே. இதில் தீர்வை விதிப்பதற்கும், குத்தகை விதிப்பதற்கும் சந்தேகம் உண்டாகிறது. சாசுவத செட்டில்மென்டின் ஏற்பாட்டின் காரணத்தில் சர்க்காருக்கு ஜமீன்தார் கட்டவேண்டியதை நிஷ்கரிஷை செய்யவேண்டியதென்பதேயாம். 2-ம் பிரிவில் சொல்லப்படும் வரி நிர்ணயம் சர்க்காருக்குக் கட்டவேண்டிய தீர்வை. ரயத்து கட்டவேண்டிய குத்தகை சர்க்காருக்குக் கட்டவேண்டியதல்ல, அதைத் தீர்வையாகவும் கொள்ளமுடியாது.

எலலா நிலத்திற்கும் குத்தகை நிஷ்கரிஷை செய்து, பின்புதான் நிலத்தின் சொந்தத்திற்கு பாத்தியஸ்தர்களாகலாமென்றிருக்கையில் எப்படி அந்த சுதந்தரத்தை பின்னர் இழப்பதென்கின்றனர். ? சாசுவத நிர்ணயம் ரயத்துக்கு ஒரு சுதந்தரமும் தரவில்லே யென்றும் அதில் அவர் ஒரு தரப்பாரில்லேயென்றும், அதனுல் அவர் சுதந்தரத்தை எடுத்துக்கொள்வதாகாதென்பதுமே பதில். வரி நிர்ணயம் என்பது பேஷ்கஷ் அல்லது ஜம்மா. வருஷாவருஷம் ஜமீன்தார் சர்க்காருக்குக் கட்டுவது பேஷ்கஷ், ஜம்மா, அஸஸ்மெண்ட் என்பது. என் சகாக்கள், ரயத்து சர்க்காருக்கு செலுத்தும் தீர்வையை தவருக அர்த்தம் பண்ணுகிருர்கள். 3-ம் பிரிவில் (சாசுவத செட்டில்மெண்ட்) ஜமீன்தாருக்குத் தரப்படும் சந்நத் கபூலியத் தென்னும் சர்க்காருக்குத்தரப்படும் பத்திரம் முதலியன, வாரத்தின் தன்மையையும், தீர்வையில்

வாதம் ஏற்பட்டபோது ஒவ்வொரு வழக்கிலும் ஏற்பட்ட ஒப்பந்தப்படி தீர்ப்பளிக்கவேண்டுமென்று இருக்கிறது. இதில் கூறியிருக்கும் வாரத்தின் நிபந்தனையும், சர்க்காருக்கும் ஜமீன்தாருக்குமேயன்றி, ஜமீன்தாருக்கும், ரயத்துக்கும் தீர்வைபற்றிய வாதம்பற்றியல்ல. அது 14-ம் பிரிவில் சொல்லப்பட்டிருக்கிறது. அதன்படி ஜமீன் தாரும், ரயத்தும் பட்டா ரெகுலேஷனில் கூறியுள்ளதைப்போல பட்டா முச்சிலிக்கை மாற்றிக் கொள்ளவேண்டிய விஷயமும் **தீர்வை** பெற்றுக்கொண்டால் ரசீது தரவேண்டிய அவசியமும் சொல்லி யிருக்கிறது. ரசீது தரத்தவறினால், நஷ்ட ஈடு கோர்ட்டார் உத்தரவு செய்யவேண்டியதும் குறிப்பிடப்பட்டிருக்கி றது. ஜமீன்தாருக்கும் ரயத்துக்குமுள்ள ஒப்பந்தம் தனிப்பட்டது. அது ஜமீன்தாருக்கும் சர்க்காருக்குமுள்ள ஒப்பந்தத்துடன் இணைக்கப்பட்டதல்ல. என் சகாக்கள், தங்கள் அறிக்கையின் 35-ம் பக்கத்தில் "தீர்வையை நிஷ்கரிஷித்து பட்டா கபூலியத் மாற்றிக்கொள்ளுதலும், குத்தகை பெற்றதற்கு ரசீது தருவதும் சந்நதின் செல்லுபடிக்கு முதல் நிபந்தனை" என்று கூறுகின்றனர். "தீர்வையை நிஷ்கரிஷித்து" என்பது எப்படி வந்தது என்பது தெரியவில்லை. 14-ம் பிரிவில் இவ்வார்த்தைகளைக் காணவில்லை, பட்டா ரெகு லேஷனிலும் இல்லை. கபூலியத்தும் பட்டாவும் மாற்றிக்கொள்ளுதல், சந்நதின் செல்லுபடிக்கு முதற் கடமை என்பதும் விளங்கவில்லை. ஜமீன்தார் பட்டா தராவிட்டால், சர்க்காருக்கும் ஜமீன்தாருக்குமுள்ள ஒப்பந்தமாக முடிவடைகிறது. அப்படியானால் ஜமீன்தாரிடம் பேஷ்கஷ் வசூலிக்க முடியாதல்லவா. என் சகாக்கள் மற்றும் விளங்கமுடியாத கூற்றை உரைக்கின்றனர். "இந்த நிபந்தனைகளை கவனிக்காவிட்டால் **தீர்வையை** வசூலிக்க வழக்குத்தொடரும் உரிமையை இழப்பார். அதுதான் பூஸ்திதியை நிலத்துக்குடையவரிட மிருந்து விலக்கிவிடல் என்பது." அப்படியானால் ஒரு ஜமீன்தார் ஒரு ரயத்துக்கு பட்டா தராவிட்டால் மற்ற ரயத்துகளிடமிருந்து **தீர்வை** வசூலிக்க முடியாதா? பூஸ்திதியின் சொந்தத்தையே இழக்கிறாரா? என் சகாக்கள் கூறுகிறபடி ஜமீன்தாரியில், ஜமீன்தாரின் வேலையாள்கூட அந்தப்படி ரசீதோ பட்டாவோ தர ஒரு மூலையில் தவறினால்கூட இந்த கஷ்டமான நிலை ஏற்படாதா?

சாசுவத செட்டில்மெண்ட் 8-ம் பிரிவுபடி ஜமீன்தாருக்கும் ரயத்துக்கும் **தீர்வை** நிஷ்கரிஷை என்பதைப்பற்றி யாதொன்றுமில்லை. அது ஒரு பூஸ்திதியை வேறொருவருக்கு மாற்றிவிடுவதால், அதைச் சரியென்று ஒத்துக்கொள்ள சர்க்கார், உத்தியோகஸ்தர்களுக்கும் கோர்ட்டுகளுக்கும் நிபந்தனை தெரிவிக்கும். ஆனால் அந்தப்படி மாற்றுதல் மகமதியர் சட்டம், ஹிந்து சட்டம், பிரிட்டிஷ் சர்க்கார் ரெகுலேஷன் களுக்கு முரணாக இருக்கக்கூடாது. யார் பேருக்கு மாற்றப்பட்டதோ அவர், மாற்றினவருடைய பாத்தியதை அதிகாரங்கள் முதலியனவற்றிற்கு மேலாக ஒன்றும் அடைய முடியாது. 8 **M.I.A.**, 328-ல் இங்ஸ்டைன் சொல்லுவதாவது "ரெகுலேஷன் வாசகம், ஜமீன்தாருக்கும், சர்க்காருக்கும் இருக்கும் உரிமையைப்பற்றியது. சர்க்காருக்கு நோட்டீஸ் இல்லாமல் ஜமீன்தாரியை மாற்றக் கூடாதென்பதற்கு ஏற்பட்டது." 9 **Mad.**, **307**-ல் சர் ரிச்சர்ட் கௌச் 1802-ம் வருஷத்து 25-வது ரெகுலேஷன் 3-ம் பிரிவைக் குறிப்பிடுகிறார். பொது வரியைக் காப்பாற்ற இந்த நிபந்தனை ஏற்பட்டதென்கிறார். அது வில்லங்கம் செய்வதை தடுக்கும்படிக்கானது. தன் முன்னோர்களால் தரப்பட்ட காலவரம்பால் பெறப்பட்ட இனாம் உரிமைகளை ஒரு ஜமீன்தார் குலைக்க அதிகாரமில்லை என்பதைப்பற்றிக்கூறுகிறது. 38 **Mad.**, 1128. "சர் ஜான் வாலிஸ்" 8-ம் பிரிவின் பின் பகுதியிருப்பினும், எட்டயாபுரம் வழக்கில் (8 **I.M.A.** 328) பிரிவி கௌன்ஸில், இந்த பிரிவு கக்ஷிக்காரர் கள் மாற்றிக்கொள்வதை செய்துகொள்வதைத் தடுக்கவில்லையென்றும் ஆனால் சர்க்கார் மஹிமையை காப்பாற்றுவதாகு மென்றும் கூறுகிறார். 1876-ம் வருஷத்து 1-ம் சட்டத்தில் இன்னொருவருக்குக் கொடுக்கப்பட்ட நிரந்தரமான பூஸ்திதிகளின் பாகங்களுக்கு, அவை செல்லத்தகாதவையானால், அவைகளின் நன்மையைக் கருதி நல்ல நிபந்தனைகள் செய்ய ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. இச்சட்டம் பதிவு செய்யப்பட்ட சொந்தக் காரரால் செய்யப்படும் பராதீனத்துக்கு மட்டுமல்ல என்று கொள்ளவேண்டும்.

கர்ணத்தை உத்தியோகத்திலிருந்து விலக்க அதிகாரமில்லாமல், உத்தியோகத்திற்கு நியமிக்க இருக்கும் அதிகாரம், ஜமீன்தார் நிலத்துக்குச் சொந்தக்காரரல்லவென்பதை நிரூபிக்கும் என்கின்றனர். அது எப்படி என்பது எனக்கு விளங்கவில்லை.

என் அபிப்பிராயப்படி, சாசுவத செட்டில்மெண்ட் ரெகுலேஷனின் 9-ம் பிரிவு பிரிக்கப்பட்ட **பூஸ்திதி** யின் பாகத்தின் **பேஷ்கஷ்** எப்படி நிர்ணயிப்பது என்பது, இந்த விஷயத்தின் முடிவான தீர்ப்புக்கு இடம் தரும். அந்தப் பிரிவாவது :—

> "பிரிக்கப்பட்ட பூஸ்திதியின் மதிப்பு, முழு பூஸ்திதியின் மதிப்பில் என்ன பாகமோ அதே பாகம் மொத்த ஜம்மாவில் **வரிநிர்ணயமாக** தீர்மானிக்கவேண்டும்."

ஜமீன்தாரின் வரும்படி எப்படியிருந்தாலும் சர்க்கார் **சாசுவத** செட்டில்மெண்டுப்படி நிஷ்கரிஷை செய்யப்பட்ட பேஷ்கஷ்தான் பெறலாம். அதனால் ஒரு பூஸ்திதியின் ஒரு பாகம் வேறொருவருக்கு மாற்றப் பட்டால், அதற்குத்தகுந்த வீதம்தான், சர்க்கார் பேஷ்கஷ் வாங்கலாம். ரயத்து அதிகமாக லாபம் சம் பாதிக்கிறார் என்பது காரணமாகாது. ரயத்துடன் சர்க்கார் ஒப்பந்தம் செய்துகொள்ளவில்லை. 1802-ல் சர்க்கார் ஜமீன்தாருடன் நிஷ்கரிஷை செய்யப்பட்ட பேஷ்கஷ் வாங்கவேண்டுமென்பதால் ஜமீன்தாரும் ரயத்துடன் அப்படியே வாங்கவேண்டுமென்பது எனக்கு விளங்கவில்லை. சர்க்காருக்கும் ஜமீன்தாருக்கும் பேஷ்கஷ் **முடிவு செய்யுமுன்** ஜமீன்தாருக்கும், ரயத்துக்கும், குத்தகை தீர்மானிக்கவேண்டுமென்பது **சாசுவத** செட்டில்மெண்ட் ரெகுலேஷனில், எங்கும் சொல்லப்படவில்லை. பேஷ்கஷ் நிர்ணயிப்பதற்கு ஜமீன்தார் முதலில் எவ்வளவு மேல்வாரம் பெறுகிறார் என்பதைத்தெரிந்துகொள்ளும் ஏற்பாடு சர்க்காருக்கு மொத்த வரவில் மூன்றில் இரண்டு பங்கு நிச்சயப்பதற்கு என்பதே. முதலில் ரயத்தின் **தீர்வையை** தீர்மானிக்கவேண்டுமென்பதல்ல. பேஷ்கஷ் என்றால் கப்பம் கட்டுவது என்பது. இதனாலேயே **சாசுவத** செட்டில்மெண்டின் உள்கருத்து விளங்கும். உயர்ந்த முறையில் சர்க்கார் பேஷ்கஷ் நிஷ்கரிஷை செய்தனர். **இனாமில் கமிஷனர் எப்படி** மொத்தவரவில் எட்டில் ஒரு பாகம் அல்லது நாலில் ஒரு பாகமாக குவிட்ரெண்ட் தீர்மானித்தாரோ அப்படியே பேஷ்கஷும் மூன்றில் இரண்டு பங்காகத்தீர்மானிக்கப்பட்டது. பெர்மனெண்ட் செட்டில்மெண்டுப்படி மூன்று பேர் ஒப்பந்தம் இருப்பதாக ஏற்படவில்லை. கர்ணம் ரெகுலேஷனிலும் ஜமீன்தா ருக்கு ரயத்து தரும் **தீர்வை** நிர்ணயிக்கப்பட்டதென்று சொல்லமுடியாது. **தீர்வை** நிச்சயிக்கப்பட்டதால் ரெவின்யூ உத்தியோகஸ்தர்கள் வேலையிலிருந்தும் எடுக்கப்பட்டார்கள் என்றும், கர்ணங்கள் மட்டும் வைத்துக்கொள்ளப்பட்டார்கள் என்றும், என் சகாக்கள் தங்கள் அறிக்கையில் 91-ம் பக்கத்தில் தெரிவிக் கின்றனர். சரியாக கிராம கணக்குகளை காப்பாற்றுவதற்கு கர்ணங்கள் தேவை. அதனால் **தீர்வை** தீர்மானிக் கப்பட்டதென்று சொல்லமுடியாது.

இப்போது நான் என் சகாக்கள் சார்பாக உபயோகிக்கும் சில இராஜாங்க தஸ்தாவேஜுகளைப்பற்றிக்கூறுகி றேன். 1799-ல் கலெக்டருக்கு விடுத்த அறிக்கையை என் சகாக்கள் உபயோகிக்கின்றார்கள். அந்த அறிக் கையின் பெரும்பான்மையான பாகம் **சாசுவத** செட்டில்மெண்ட் ரெகுலேஷனிலும், பட்டா ரெகுலேஷனி லும் உபயோகிக்கப்பட்டிருக்கிறது. அது என் சகாக்களின் அபிப்பிராயத்திற்கு மாறுபட்ட விஷயங்களைத்தெரி விக்கின்றன. நாலாவது விதி **சாசுவத** செட்டில்மெண்டுக்கு முன்னிருந்த நிலையைப்பற்றியது. நிச்சய

யில்லாத வரிநிர்மாணத்தைக் குறித்தது. 5-வது விதி ஜமீன்தார்களை நிலத்துக்குச் சொந்தக்காரர்களாக ஆக்குவது, 6-வது விதி சாசுவத செட்டில்மெண்ட் முடிந்தபின் ஜமீன்தார்களின் உரிமையில் பிரவேசிக்க முடியாதென்பது, 7-வது விதி ஒவ்வொரு எஸ்டேட்டுடனும் செட்டில்மெண்ட் செய்துகொள்வது. இவைகளில் எதிலும் ஜமீன்தாருக்கு ரயத்து செலுத்தவேண்டிய தீர்வையைப்பற்றியாவது அதன் நிஷ்கரிஷையைப் பற்றியாவது சொல்லவில்லை. 8-வது விதி இந்த முறையால் விவசாயிகளுக்கு சாதகம் ஏற்படுமென்பது. பேஷ்கஷ் நிச்சயித்ததால் ஜமீன்தார் விவசாயத்தை விருத்திபண்ண ஏதுவாகும். அதனால் விவசாயிக்கு நன்மை பயக்கும். இதுதான் சர்க்கார் எதிர்ப்பார்த்த கோரிக்கை. இதைக் கொண்டு ரயத்து செலுத்தவேண்டிய தீர்வை நிஷ்கரிஷை செய்யப்பட்டதென்பது பொருந்தாதென்று கூறிகிறேன். 9-வது விதி சொத்தின் பாது காப்புக்கு சம்மந்தப்பட்ட பல அநுகூலங்களைப்பற்றியது. 10-வது விதி ஜமீன்தார் கட்டவேண்டிய பேஷ்கஷ் அதிகமா என்றும், அதனால் ஜமீனை விற்க நேரிடுமா என்பதைக் கவனிப்பது. அப்படி நேராது என்பது அதற்கு பதில். அதற்குக் காரணம் ஒரு நியமான பேஷ்கஷ் நிச்சயித்தப்பிறகு அநுகூலங்களான வருஷங்களில் கிடைக்கும் லாபம் பிரதிகூலமான வருஷங்களில் ஏற்படும் நஷ்டத்திற்கு சரியாய்விடும். நியமாக நிச்சயிக்கப்பட்ட வரியென்பதை என் சகாக்கள் தீர்வையை தீர்மானிப்பதென்னும் குடிவாரத்தின் உரிமையை ஏற்பாடு செய்வதென்றும் பொருள் கொள்கிறார்கள். நியமான வரி என்பது ஜமீன்தார் சர்க்காருக்கு கட்டவேண்டிய பேஷ்கஷ். இதற்கும் தீர்வைக்கும் சம்பந்தமே கிடையாது. 1802-ம்௵ 25-வது ரெகுலேஷன், 14-ம் பிரிவு தீர்வையை நிஷ்கரிஷை செய்யவேண்டுமென்று கட்டாயப் படுத்தும் பிரிவு. அப்பிரிவை உற்று நோக்கினால் இந்த விளக்கத்துக்கு ஆதாரமேயில்லை. அந்தப் பிரிவில் சொல்வதெல்லாம் ஜமீன்தாரும் ரயத்தும் பட்டாவையும் முச்சிலிக்கையும் மாற்றிக்கொள்ளவேண்டுமென்பதே. இதனால் இருதரத்தாருக்கும் ஏற்படும் வழக்கில் தஸ்தாவேஜ் மூலமாக அவரவர் பாத்தியதைகளை ருஜு செய்யலாம். இதனால் தீர்வை நிஷ்கரிஷை செய்யவேண்டுமென்பது ஏற்படவில்லை. பட்டா ரெகுலேஷனின் 6-வது பிரிவில் ஒரு நிலத்துக்குடையவர் பல தலைப்பின் கீழ் வசூலிப்பதை எல்லாம் ஒன்று சேர்க்க வேண்டுமென்றும் இந்த பட்டா ரெகுலேஷன் அமுலில் வந்த இரண்டு ஆண்டுகளுக்குள் அது முடிவு பெற வேண்டுமென்றும் கூறுகின்றது. 36-வது விதியில் பணம் வசூலித்ததற்கு ரசீது தரவேண்டுமென்றும் அபபடி தரத் தவறினால் தண்டனை விதிக்கப்படுமென்றும் கூறுகிறது. 32-வது விதியில் ரயத்துக்கு நிலத்தில் சொந்த உரிமை இல்லையென்றும் சர்க்காருக்கோ ஜமீன்தாருக்கோ பணமாகவோ மாசூலில் பங்காகவோ தவறாமல் கட்டணம் செலுத்தும் வரையில் அநுபோக உரிமை உண்டு என்றிருக்கிறது. இது அநுபோக உரிமைக்கும் நிலத்திலுள்ள சொந்த உரிமைக்கும் இருக்கக்கூடிய வித்தியாசத்தை விளக்குகிறது. இவ்விரண்டும் இரண்டு பேர்களுக்கு இருப்பதில் ஒரு வித வித்தியாசமுமில்லை. அதனால் தான் நிலத்தின் சொந்தத்தை ஒருவருக்கும், அனுபோக உரிமையை மற்றொருவருக்கும் தருவதில் முரண்பாடு ஒன்றுமில்லையெனவே அதிகாரிகள் இவ்விதமாக ஏற்பாடு செய்யும்படி தெரிவித்தார்கள். கமிட்டியின் முதற் கேள்விக்கு இதுவே பதிலாகும். 34, 35-வது விதிகள் கேட்கும்போது பட்டா தர வேண்டியதைப்பற்றியும், தராவிட்டால் விதிக்கப்படும் தண்டனையையும் தெரிவிக்கிறது. என் சகாக்களால் தப்பாக 48, 49-வது விதிகள் என்ற 50, 51-வது விதிகள் ரெவ்ன்யூ அதிகாரிகளை வேலையிலிருந்து எடுத்து விடுவதைப்பற்றியும், கர்ணங்களை உத்தியோகத்தில்வைத்துக்கொள்வதைப்பற்றியும் சொல்லுகின்றன. 50-வது விதியில் பேஷ்கஷ் நிஷ்கரிஷை செய்யப்பட்டதாலும், அதைப்பற்றி கணக்கிடவேண்டிய உத்தியோகஸ்த்தர்கள் தேவையில்லையானதாலும் அவர்களை எடுத்துவிடப்பட்டதென்று இருக்கிறது. 11-வது விதியில், லார்ட் காரன்வாலிஸ் வாதமான, சீர்திருத்தம் முதலில் ஜமீன்தார் கட்டவேண்டிய பேஷ்கஷ் நிஷ்கரிஷை செய்யப் படவேண்டுமென்பதும், அதன்பின்தான் நிலத்துக்குடையவர்கள் ரயத்துகளிடம் கேட்கும் வரியை நிஷ்கரிஷை செய்ய இடம் தருமென்றும் கூறுகிறது. இதனாலேயே, சர்க்கார் தாங்கள் வசூலிக்கும் பேஷ்கஷ் நிஷ்கரிஷை செய்யாத வரையில், ஜமீன்தார் ரயத்துகளிடம் கேட்கும்வரி ஒழுங்காக இருக்காது என்று தெரிந்திருக்கிறதென்று ஏற்படுகிறது. இதில் முதலில் பேஷ்கஷ் நிச்சயிக்கவேண்டுமென்பது கவனிக்கத்தக்கது :—11-வது விதியில் ஜமீன்தாருக்கும் ரயத்துக்கும் தீர்வை விஷயத்தில் ஒரு ஏற்பாடும் செய்யப் படவில்லையென்பது தெரிகிறது. 12-வது விதியில்க்கூட தீர்வை நிஷ்கரிஷை செய்யப்பட்டதாக ஒன்றும் இல்லை.

சென்னை சர்க்கார் சாசுவத செட்டில்மெண்டு செய்வதற்கு கவர்னர் ஜனரல் கொடுத்த சம்மதம் பற்றி என் சகாக்கள் அறிக்கையில் 45-ம் பக்கத்தில் குறிப்பிட்டிருக்கிறது. அதன்படி, அந்த சம்மதம் ஜமீன்தார் தான் நிலத்துக்குச் சொந்தக்காரர் என்பதற்கு மாறாக இல்லை. அதில் அச்சட்டம் ரயத்துகளின் பாதுகாப்புக்கு நல்லதென்று இருந்தாலும் தீர்வை நிஷ்கரிஷை செய்யப்பட்டதாக ஒன்றுமில்லை. அப்படியானால் என் சகாக்கள் சொல்வதைப்போல இதைப்பற்றி வேறு சட்டங்கள் செய்திருக்கவேண்டியதில்லை. ஆனால் அவர்கள் வரிவசூல் சட்டம், எஸ்டேட் நிலசட்டமும் 1802-ம்௵த்து ரெகுலேஷனில் ரயத்துக்குத் தரப்பட்ட பாதுகாப்பை எடுத்துவிட்டதென்றும், அதன் காரணம் 1802-ம் சட்டத்தை சீர்திருத்தக்காரர்கள் கவனிக்கவில்லையென்றும், தப்பாக அர்த்தம் செய்துகொண்டார்கள் என்றும் கூறுகின்றனர். 1822-ம்௵த்து 4-வது ரெகுலேஷனைப்பற்றி முதல் கேள்விக்கு பதிலளிக்கும்போது சொல்லி விட்டேன். 1822-ம்௵த்து 5-வது ரெகுலேஷன், பட்டா ரெகுலேஷனும், கர்ணம் ரெகுலேஷனும் எழும் வழக்குகளை ஜில்லா கோர்ட்டிலிருந்து கலெக்டருக்கு மாற்றவும், கலெக்டரிடமிருந்து பஞ்சாயத்தார்களுக்கு மாற்றவும் அதிகாரம் அளிக்கிறது. இதனால் தீர்வை நிஷ்கரிஷை செய்யப்பட்டது தெரியவில்லை. என் சகாக்கள் அறிக்கையில் 52-ம் பக்கத்தில், 1789-ல் சர்ஜான் ஹோர் சொல்வதை எடுத்துக் காட்டுகின்றனர். அதில் கீழ்க்கண்டவாறு இருக்கிறது. "வங்காளத்தில் சாசுவதசெட்டில்மெண்ட் ஏற்பட்டதின் காரணம் (1) சர்க்கார் தீர்வையைக் காப்பாற்றவும், (2) தங்கள் குடிகளுக்கு பாதுகாப்பும் அமைதியும் ஏற்படுத்தவும்" என்பதே. இதில் முதலாவது ஜமீன்தார்கள் அல்லது நிலத்துக்குச் சொந்தக்காரர்களிடம் சாசுவத செட்டில்மெண்ட் ஏற்படுத்திக் கொள்வதால் ஏற்படும் பலனாகும். அவர்கள் நிலம் சர்க்காருக்கு ஜாமீனாக இருக்கும். இரண்டாவது, கூடுமானவரை நிர்ணயிக்கப்பட்ட உயர்ந்தவரியை தீர்மானிப்பதால் வரக்கூடிய பலனாகும். இதில் குடி என்பதை கவனித்தால் ஜமீன்தார் என்றாகாது. ஜமீன்தாருக்கு ரயத்து தரவேண்டியது தீர்வையல்ல, குத்தகையே. அதனால் என் சகாக்கள் இதைப்பற்றிகொண்டுள்ள அபிப்பிராயம் தப்பானதே.

சர் ஜான் வெஸ்ட் தன் இராஜாங்கக்குறிப்பில் 93-ம் பக்கத்தில், நிலத்துக்குடையவர் கட்டவேண்டிய பேஷ்கஷ் நிர்ணயிக்கப்பட்டால் குடிகளின் நன்மை அதிகரிக்கும் என்று சொல்லியிருக்கிறார். அதுவுமன்றி நிலத்துக்குடையவர் ரயத்தினிடம் கேட்கும்வரியை அது சுலபமாகச்செய்துவிடும் என்கிறார். இதைப் பற்றி சொல்லுகையில் இன்னும் சொல்லுவதாவது "நிலத்தின் மாசூல் மதிப்பாவது, நிலத்துக்குடையவருக்கும், விவசாயிக்கும் தெரிந்த ஒரு அனுமானமுள்ளது. அதை நியாயமாக குத்தகையாய் நிஷ்கரிஷை செய்துக்கொள்வதால் இருதரத்தாருக்கும் ஒரு ஒப்பந்தத்தை ஏற்படுத்தும். இதனால் நிஷ்கரிஷை செய்யப்படுவது என்னவென்றால் சம்பிரதாயமான பங்கே. ஏதாவது வழக்கு ஏற்பட்டால் பங்கு அல்லது வாரம் எவ்வளவென்பது அந்த வழக்கைத் தீர்த்துவிடும். இப்பல தீர்மானங்கள் ஏற்றுக்கொண்டிருப்ப

ஷோடு வரி வசூல் சட்டத்தின் 11-ம் பிரிவும் அங்கீகரித்திருக்கிறது. பயிர் விளைந்தாலும், விளையா விட்டாலும், பங்கு என்பது திட்டமானல், இருதரத்தாருக்கும் ஒரே மாதிரித்தான் பாதிக்கும். அதனால் விலை உயர்ந்தால், குத்தகையை பணமாகத் தருவதில் உயர்ந்த குத்தகை தருவதால் ஒரு வித்தியாசமு மில்லை. மசூலிபட்டணம் ஜில்லாவில் ஹாவலி பூஸ்த்திதியை ஏலம் விட்ட விளம்பரங்களை என் சகாக்கள் எடுத்துக்காட்டுகின்றனர். அதின் 1820 பகுதியில் கீழ்கண்ட நிபந்தனைகள் இருக்கின்றன. "அதை வாங்கு பவர் 1210-ம் பசலியில் தரப்பட்ட வாரத்தைவிட அதிகமாக ரயத்துகளிடமிருந்து பெற முடியாதென்றும், சர்க்கார் அதுகாறும் வசூலித்ததைவிட அதிகமாய் வசூலிக்கக்கூடாதென்றும் 19-ம் பகுதியிலிருக்கிறது, நிலத்தை வாங்குபவர் 1210-ம் பசலியில் வசூலித்த தொகையே வசூலிக்கவேண்டுமென்று 20-ம் பகுதியில் இருக்கிறது. இதில், குத்தகை உயர்த்துவதைக் தடுக்கவாவது, ஏது உயர்ந்த குத்தகையென்றாவது சொல்ல வில்லை. சர்க்காருக்கோ, ஜமீன்தாருக்கோ வழக்கமான வாரத்தைவிட அதிகமாக வாங்கமுடியாது.

ஹாட்க்ஸன், திண்டுக்கல் அறிக்கையில், ஒரு ஜமீன்தார் தான்யத்தில் குத்தகை வாங்கினுல், உயர்ந்த தான்யம் விளைக்கும்போது உயர்ந்த குத்தகை பெற்றுக்கொள்ளலாமென்று இருக்கிறது. தான்யத்தின் விலை உயர்ந்தால் குத்தகையையும் உயர்த்தலாம். இதனுல் 1802-ல் குத்தகை நிஷ்கரிஷை செய்யப்பட்டதென்று என் சகாக்கள் சொல்வது ஹாட்க்ஸன் கூற்றின்படி சரியல்ல. 1864-ம௵ டிசம்பர்மீ 2௨யில் ரெவின்யூ போர்டார் நடவடிக்கையில் 71-ம் பக்கத்தில், சாசுவத செட்டில்மென்டுக்குப்பின் ஜமீன்தாருக்கும் ரயத்துக்கும் ஏதாவது ஒப்பந்தம் ஏற்பட்டிருந்தால் அது செல்லும் என்று கூறியிருக்கிறது. போர்ட் அபிப் பிராயப்படி கலெக்டர் ஒரு வழக்கில், சாசுவத செட்டில்மென்டுபடி என்ன ஏற்பாடென்பதையும், அப்போது ஏற்பாடு இல்லாவிட்டால், பின்னுல் ஏதாகிலும் ஒப்பந்தம் இருந்தால் அதன்படியும் ஜமீன்தாரின் டிமாண்டு சரிதானுவென்று அறியவேண்டுமென்றிருக்கிறது. அதுபோல ஏற்பாடு இல்லாதபோது ரயத்தின் உரிமை எப்பேர்ப்பட்டதென்றும், அப்படியானுல் அதுபோல உரிமையுள்ள பக்கத்து நிலங்களின் ஏற்பாட்டின் படி தீர்மானிக்கவேண்டுமென்றிருக்கிறது. இதில் உரிமை என்பதும் பக்கத்து நிலங்களில் இருப்பதுபோல என்பதும், சாசுவத செட்டில்மென்டுபோது இருந்தபடியல்லவென்றும் வழக்கு ஏற்பட்டபோது என்றும் போர்டார் அபிப்பிராயம். போர்டார் செட்டில்மென்டுக்குப் பிந்திய ஒப்பந்தங்களை ஏற்றுக்கொள்வதால் செட்டில்மென்டில் குத்தகை நிஷ்கரிஷை செய்யப்படவில்லையென்பது தெரிகிறது.

பயிர்வாரி முறை.

ரயத்தால் விளைக்கப்பட்ட மாசூலின்படி குத்தகை வசூலிப்பதென்பது ஒன்று. என்சகாக்கள் தங்கள் அறிக்கையில் 39-ம் பக்கத்தில் அதை சட்டத்துக்கு விரோதமானது என்கின்றனர். மதராஸ் நிலச்சட்டம் 29-ம் பிரிவு இந்த பயிர்வாரி முறையைச் சரியென்று ஏற்றுக்கொள்ளுகிறது. வாரத்திற்கு பதிலாக பணமாக குத்தகை வாங்குவதென்று ஏற்பட்டபோது, பயிர்வாரி முறைப்படி குத்தகை வாங்கலாம் என்ற ஒப்பந்தம் சரியானதென்று பிரிவி கௌன்ஸில் 36 M.L.J., 49-ல் சொல்லியிருக்கின்றனர். 43 Mad., 475-ல் சர் ஜான் வாலிஸும் இதைப்போலவே அபிப்பிராயம் கூறியிருக்கிறர்.

குத்தகையை பணமாக வசூலிக்க ஏற்பாடு.

குத்தகையைப் பணமாக மாற்றுவதைப்பற்றி என் சகாக்கள் ஒன்றும் கூறவில்லை. ஆனுலும் அவர்கள் இதைப்பற்றி செய்யும் சீர்திருத்தம் ஒழுங்கானதா என்பதைப்பற்றி நான் சிறிது கூறுகிறேன். 1802-ல் குத்தகையை நிஷ்கரிஷை செய்ததல்லாமல் என் சகாக்கள் அதைப் பணமாகவும் நிர்ணயித்தார்களென்று நினைத்துக்கொள்ளுகிறர்கள். 1802-ல் பயிரான நிலங்களுக்கு பணமாகவே குத்தகை வசூலிக்கவேண்டு மென்று சொல்லும் கூற்றுக்கு ஆதாரம் இல்லாததால் கேவலம் அவ்வாறு ஊகிக்கிறர்களென்று நான் சொல்லு கிறேன். 1802-ல் குத்தகை பணமாக மாற்றப்பட்டதென்று அவர்கள் சொல்லவில்லை. இன்றைக்கும் மாசூலில் ஒரு பங்கு குத்தகை வாங்குவதும் வாரமாக மாசூலில் பங்கு எடுத்துக்கொள்ளுவதும் தெற்கு ஜில்லாக்களில் பல பூஸ்திதிகளில் இருக்கின்றது. பட்டா ரெகுலேஷன் 4-வது பிரிவில் மாசூலின் எந்த பங்கு குத்தகை எனக் குறிப்பிடவேண்டியிருக்கிறது. இது சாசுவத செட்டில்மென்ட் ரெகுலேஷனுக்குப் பின்னும் தொடரவேண்டுமென்பது அங்கீகரிக்கப்பட்டிருக்கிறது. இம்மாதிரி மேல்வாரம் வசூலிப்பது சட்டத் துக்கு விரோதமானதல்ல. மேல்வாரம் சாதாரணமாக மாசூலில் பாதிப் பங்காகயிருந்தது. இப்படியிருக் கையில் மேல்வாரத்தை சாசுவத செட்டில்மென்டின் போதிருந்த மாசூலின் விலைப்படி பணமாகத் தீர்மானிக்கவேண்டுமென்பது நியமானதல்ல. சர்க்கார் வசூலித்ததைவிட ஜமீன்தாரரோ "அசைனியோ" வழக்கமுறைக்கு மேல் வசூலிக்கக்கூடாதென்றிருக்கிறதே ஒழிய, ரயத்து ஜமீன்தாரைப் பணமாக குத்தகை பெற்றுக்கொள்ளவேண்டுமென்று கட்டாயப்படுத்த எங்கும் நிபந்தனையைக் காணவில்லை. அதற்குமாறாக ஏதாவது ஒரு ஒப்பந்தப்படி பணமாக குத்தகை பெற ஏற்பாடு இருந்தாலும் இஷ்டப்பட்டபோது மாசூலாகவே குத்தகையைப் பெறும் முறைக்கு திரும்பிக்கொள்ளலாமென்றிருக்கிறது. செங்கல்பட்டில் சில நிலங்களை திரும்பிப்பெறவும், பட்டாவை அடையவும், ஒரு ரயத்து ஜமீன்தார் மீது தொடர்ந்த வழக்கில் கிரீன்வே என்னும் நீதிபதி எ. எஸ். நெ. 15, 1812-ல் அளித்த தீர்ப்பு 1864-ம௵ டிசம்பர்மீ 2௨-ல் ரெவின்யூ போர்டார் நடவடிக்கையில் காணப்படுகிற கிரீன்வே என்பவர் சத்தர்-திவானி அடலத் நீதிபதியாக வருமுன் சர்க்கார் காரியதரிசியாக இருந்து ரெவின்யூ நிர்வாகத்தில் மிகத் தேர்ச்சிபெற்ற வரென்றும் ஹாட்க்சனேடு சேர்ந்து சென்னையில் கம்பெனியின் சுவாதீனத்தின் கீழ் இருக்கும் ஜமீன்தார்கள் ரயத்துகளின் உரிமைகளில் பாதிக்காதபடி பாதுகாப்பளித்தவரென்று என் சகாக்கள் சொல்லுகிறர்கள்— கிரீன்வே சொல்லும் தீர்ப்பு கீழ்க்கண்ட வாறிருக்கிறது. சாட்சியங்களை எல்லாம் கவனித்தால் நிலத்தின் தீர்வை நிஷ்கரிஷையாகவில்லை என்றும், மாசூலில் ஒரு பகுதியாக வாங்கப்பட்டதென்றும். காலத்துக் கேற்றவாறு அது மாறிற்றென்றும் அதன் பண மதிப்பு, விளைவு உயர்ந்ததாலோ குறைந்ததாலோ பாதிக்கப் பட்டதென்றும் ஏற்படுகிறது. மாசூலின் பங்கு எந்த வீதமாக பணமாக மாற்றுதல் என்பது கோர்ட்டாரின் கடமையல்ல. இது தாவாதார்களின் பொறுப்பு. இதைப்பற்றி ஒப்பந்தமிருந்தால் கோர்ட்டார் அதை அனு சரிக்கவேண்டுமென்று கட்டாயப்படுத்தும்படி வேண்டிக்கொள்ளலாம். இதனுல் பணமாக, குத்தகை நிர் ணயிக்கப்படவில்லை என்று ஏற்படுகிறது. ரெவின்யூ போர்டார் 67-வது பாராவில் இதை மீண்டும் ஊர்ஜிதம் செய்கின்றனர். 1865-ம௵த்து வரிவசூல் சட்டத்தில் 11-ம் பிரிவில் 3-வது உட் பிரிவு வழக்கப்படி யோ அல்லது அடுத்தாற்போலுள்ள நிலத்துக்கு ஏற்பட்டபடியோ குத்தகை நிச்சயிக்கப்பட்டு அதில் இரு தரத்தாருக்கும் சம்மதமில்லாவிட்டால் சர்க்கார் அல்லது நிலத்துக்குடையவருக்கும் பயிரிடுபவருக்கும் ஏற் பட்டுள்ள வாரப்படி தீர்மானிக்கவேண்டுமென்று கூறியிருக்கிறது. இதன்படி வாரம்தான் பழைய முறை என்று ஏற்படுகிறது. வரி வசூல் சட்டத்தில் தாவாதாரர் அபிப்பிராயப்படி மாசூல்க் குத்தகையை பணமாக மாற்றிக்கொள்ள கோர்ட்டார் அனுமதிக்க நிபந்தனைஒன்றுமில்லை. 1908-ம௵ மதராஸ் எஸ்டேட்ஸ் நிலச்சட்டத்தில் 40-வது பிரிவில் மாசூல்க் குத்தகையை பணக் குத்தகையாக மாற்றும்படி ஜமீன்தாரோ ரயத்தோ கலெக்டரிடம் விண்ணப்பம் செய்யலாமென்றிருக்கிறது. அப்படிச் செய்வதில் நிலத்துக் குடையவருக்கு அதற்கு முந்திய பத்து வருஷங்களில் பஞ்சமில்லாத வருஷங்களைத் தவிர்த்து, சராசரியாக

சேரவேண்டிய குத்தகையின் மதிப்பை கலெக்டர் தீர்மானிக்கவேண்டும். 1934-ம்ஷ 8-வது சென்னை சட்டம், 40-வது பிரிவு கலெக்டருக்கு மாசூல்க் குத்தகையை பணக் குத்தகையாக மாற்ற அதிகாரம் தருகிறது. ஆனால் இதைத் தீர்மானிப்பதில் இதற்குமுன் தீர்மானித்த முறையையே அநுஷ்டிக்கவேண்டுமென்றிருக்கிறது. இதனால் 1802-லும் சம்மதமில்லாவிட்டால் 1908-லும் மாசூல்க் குத்தகையை பணக் குத்தகையாக் மாற்றமுடியாதென்று ஏற்படுகிறது. சர்க்கார் பேஷ்கஷை நிஷ்கரிக்கும்போது அப்போதுள்ள விலைப்படி மதிப்பிட்டு வாவில் மூன்றில் இரண்டு பங்கை ஏற்படுத்தினார்கள். இதனால் ஜமீன்தார் வாங்கும் குத்தகையும் நிஷ்கரிக்கப்பட்டதென்று எப்படிச் சொல்லமுடியும்? 1908-ம்ஷ வரையில் ஜமீன்தார்களும் குத்தகையை மாசூலாக வசூலித்தார்கள். ஜமீன்தார் பணமாகக் குத்தகையை மாற்றும்போதிருந்த விலைப்படி குத்தகையை நிச்சயிக்கக்கூடாதென்றும், பண மதிப்பு நூறு வருஷத்திற்கு மேற்பட்டபோதிருந்த விலைப்படி நிச்சயிக்கவேண்டுமென்றும் என் சகாக்கள் கூறுவதை நான் ஏற்றுக்கொள்ளமுடியவில்லை. இது அநியாயமான ஏற்பாடு. சொத்தினுள்ள உரிமையைப்பறிக்கும் ஏற்பாடே. சாசுவத செட்டில்மெண்டின் நோக்கத்தையே தாக்குவதாகும். இந்த அநியாயம் சாசுவத செட்டில்மென்ட்டின் பேரால் என் சகாக்கள் செய்தாலும் அந்த அநியாயத்தை தப்பிக்கமுடியாது. சாசுவத செட்டில்மெண்டின்போது ஜமீன்தாரரின் பங்கு சர்க்காரின் அதிகாரம் பெற்றவர்களாக மாசூலில் பாதி என்பது சாசுவத செட்டில்மெண்ட்டின் ஏற்பாடு என்றாலும் அதைப் பணமாக மாற்றுகையில் 1802-ம்ஷத்திய விலைப்படி மதிப்பிடவேண்டுமென்பது ஒத்துக்கொள்ளத்தக்கதல்ல. இது மாதிரி செய்யும் சீர்திருத்தம் ஒருவரின் உரிமையை அபகரிப்பது என்று சொல்வது மிகையாகாது.

4-ம் அத்தியாயம்.

ரெண்ட் ரெகவரி ஆக்ட்: (குத்தகை வசூலிக்கும் சட்டம்). எஸ்டேட் லாண்டு ஆக்ட்: (பூஸ்திதிகளிலுள்ள நிலச்சட்டம்).

தங்கள் அறிக்கையின் 6-ம் அத்தியாயத்தில், என் சகாக்கள் 1863-ம்ஷத்து குத்தகை மசோதா 1865-ம்ஷத்து எட்டாவது சட்டமான குத்தகை வசூலிப்பு சட்டம் இரண்டையும் பற்றி கவனித்திருக்கிறார்கள். அவர்கள் அபிப்பிராயப்படி குத்தகை வசூலிப்பு சட்டம் சாசுவத செட்டில்மென்டின் அபிப்பிராயத்தை கவனிக்கவில்லையென்றும் ரயத்துகளின் உரிமைகளை பாதிக்கிறதென்றும் குறைகூறுகிறார்கள். எனக்கு இச்சட்டம் 1802-ம்ஷ அல்லது 1822-ம்ஷத்து ரெகுலேஷன்களுக்கு முரண்பட்டதென்று ஏற்படவில்லை. எந்தக் கோர்ட்டாரும் நான் சொல்வதற்கு மாறாகச் சொல்லவில்லை. சென்னை ஹைகோர்ட்டின் தீர்ப்பும் அப்படியே. அந்த தீர்மானங்களையும் அச்சட்டத்தின் 21-வது பிரிவின் பொருளையும் என் சகாக்கள் தப்பாக வியாக்கியானம் செய்கின்றனர். 1863-ஷத்து குத்தகை மசோதாவின் பத்தாவது பகுதியில் கீழ் கண்டபடியிருக்கிறது. சர்க்கார் இடத்தை வகித்த நிலத்துக்குடையவர்கள், ரயத்துகளுக்கு எந்தப் பெயராலும் காரணத்தாலும், அனுமதித்த தீர்வைக்கு மேல் விதிக்கக்கூடாது. பணமாகவோ, பொருளாகவோ, தீர்வை வீதத்தில் வழக்கு ஏற்பட்டால், வழக்கேற்பட்ட நிலங்களுக்கு நிஷ்கரிஷித்த வீதத்தையும் அப்படி நிஷ்கரிஷிக்காத இடங்களுக்கு அடுத்தாற்போல் அதே மாசூல் பயிரிடப்படும் அதேபோன்ற நிலங்களுக்கு விதிக்கும் வீதப்படி தீர்மானிக்கவேண்டும். ஆனால் நிலத்துக்கு நீர்ப்பாசன வசதி ஏற்படுத்தியதாலோ அல்லது இதர விர்த்திகளை நிலத்துக்குடையவர் செய்ததாலோ குத்தகை வீதத்தை கலெக்டர் அனுமதியின்பேரில் உயர்த்தலாமென்றிருக்கிறது. இதனால் குத்தகை உயர்த்தலாமென்றும் நிரந்தரமாக தீர்வை விதிக்காத நிலங்களிருந்ததென்று ஏற்படுகிறது. ஆனால் என் சகாக்களோ நிலத்துக்கு விர்த்தி மட்டும் செய்யவேண்டும், குத்தகை மட்டும் உயர்த்தக்கூடாதென்கின்றனர்.

1863-ம்ஷத்து குத்தகை மசோதாவில் செலக்ட் கமிட்டியாரின் சிபார்சுகளில் மூன்று விஷயங்களில், இரண்டு செலக்ட் கம்மிட்டியாரால் புகுத்தப்பட்டிருக்கின்றன. (1) பாயக்காரிக்கும் நிலத்துக்குடையவருக்கும் ஏற்பட்டுள்ள பாகம் பழமையான குத்தகை முறை. ஏதாவது வழக்கு ஏற்பட்டால் வேறு வகையான விதங்களால் தீர்மானிக்க முடியாவிட்டால் இந்தப்பழைய முறையைக் கையாளவேண்டும். (2) அனுபவத்தில் இல்லாத நிலங்களுக்கு நிலத்துக்குடையவர்கள் தங்கள் இஷ்டப்படி குத்தகை ஏற்படுத்திக்கொள்ளலாம். இதனால் மாசூலில் பங்கு முறையே பழமையானது என்று ஏற்படுகிறது. குத்தகை விஷயத்தில் வழக்கு ஏற்பட்டு திருப்திகரமாக தீர்மானிக்க முடியாவிட்டால், யி வாரி முறையை அனுஷ்டிக்கவேண்டும். அதிலும் உள்ளூர் வழக்கப்படி குத்தகை வீதத்தைத் தெரிந்து அதன்படி ஏற்பாடு செய்யவேண்டும். இதனால், 1802-ல் இருந்த விலைப்படி குத்தகையைப் பணமாகத் தீர்மானிக்கையில் கணக்கிடவேண்டுமென்று என் சகாக்கள் சொல்லும் கூற்றுக்கு ஆதாரமேயில்லை. கரம்பை நிலங்களில் பயிர் செய்தால் தன் இஷ்டப்படி ஜமீன்தார் குத்தகை ஏற்பாடு செய்யலாம் என்று கூறப்படுகிறது. அது உண்மையே. கரம்பை நிலத்தில் மேய்ச்சல் முதலிய பாத்தியத்தை தவிர, மற்ற யாதொரு பாத்தியதையும் ரயத்துகளுக்கு இல்லை. ரெண்ட் ரெகவரி ஆக்டின் 11-ம் பிரிவின் முதற் பகுதியில் குத்தகையைப்பற்றிய எல்லாவித ஒப்பந்தங்களும் செல்லும் என்றிருக்கிறது. இதை போர்டாரும் தங்கள் நடவடிக்கையில் 1864-ம்ஷ டிசம்பர்மீ 2வயில் 71-வது பாராவில் இதற்கு முன் கூறியதுபோல கலெக்டர் ரயத்தின் குடிவார உரிமையைப்பற்றி விசாரித்து வழக்க முறைப்படியும், ஏற்பாட்டின்படியும் இருக்கிறதாவென்று தீர்மானித்து அதற்குத் தக்கபடி ஜமீன்தாரின் தாவா இருந்தால் உத்தரவிடலாம், இல்லாவிட்டால் ஒப்பந்தப்படியோ வழக்கப்படியோ தீர்மானிக்கவேண்டுமென்று இருக்கிறது. ஹைகோர்ட்டில் எல்லா நீதிபதிகள் ஒன்று கூடி (நீதிபதிகள் டர்னர், முத்துசாமி அய்யர், ஹட்சின்ஸ் முதலியவர்கள்) ரெண்ட் ரெகவரி ஆக்டின் நிபந்தனைகளையும், போர்டாரின் நடவடிக்கைகளையும் கார்மைக்கேல் கடிதங்களையும் தீர ஆலோசனைச் செய்து "போர்ட் ஆவ் ரெவின்யூ அபிப்பிராயமும், கார்மைகேல் கடிதங்களும் ரெண்ட் ஆக்டின் 11-வது பிரிவில் சேர்க்கப்பட்டிருக்கிறது என்று கூறுகின்றார்கள்."

1802-ல் குத்தகை, ஜமீந்தாரி நிலங்களுக்கு நிஷ்கரிஷை செய்யப்பட்டதென்பதற்கு ஒப்ப, 11-ம் பிரிவின் 1-ம் உட்பிரிவு அனுபோக ரயத்துகளுக்குச் செல்லாது என்று என் சகாக்கள் சொல்லுவார்கள். நிலத்துக்குடையவர் என்பவர் எல்லாம் "சந்நத்-இ-மிலிகியத் இஸ்திம்ரார்" என்னும் சந்நதைப் பெற்றவர்கள். பாயக்காரிகள் யென்பது, நிலத்துக்குடையவருக்கு, குத்தகை யார் யார் தருகிறார்களோ, அவர்களெல்லாம் என்பதே. 8, 9, 10-வது பிரிவுகளை அனுபோகமில்லாத ரயத்துகளுக்கு அனுஷ்டிப்பதைத் தடுக்க அவற்றில் ஒன்றுமில்லாததாலும், 11-ம் பிரிவும் அவைகளோடு சேர்ந்து இருப்பதாலும், 11 (1)-ம் பிரிவு, அவர்களை பாதிக்காது என்று என் சகாக்கள் சொல்வது சரியல்ல. 1908-ம்ஷத்தில் ரெண்ட் ரெகவரி ஆக்ட் ரத்து செய்யப்பட்ட வரையில் இப்பிரிவுகள் அனுபோகமில்லாத ரயத்துகளுக்கும் உபயோகப்படுத்தப்பட்டன. இப்பிரிவை அனுபோக ரயத்துகளுக்கு மட்டுமென்று சொன்னால் "குத்தகைக்காக ஒப்பந்தம்" என்பது என் சகாக்கள் சொல்வதுபடி, 1802-ம்ஷத்தில் பெர்மனெண்ட் செட்டில்மெண்ட்போது ஏற்பட்ட ஒப்பந்தமென்றாகும். வழக்கு உண்டானபோது இருக்கும் ஒப்பந்தத்தை விட்டுவிட்டு 1802-ம்ஷ ஒப்பந்தத்தை ஏன் கவனிக்கவேண்டுமென்பதற்கு ஒரு காரணமும் கூறவில்லை. சாசுவத செட்டில்மெண்டுக்குப் பின் உண்டான ஒப்பந்தங்கள் செல்லத்தக்கனவென்று 1864-ம்ஷத்தில் போர்டார் அங்கீகரித்திருக்கின்றனர். ஒரு

மூலமான ஒப்பந்தமில்லாதபோது, பழக்கப்படி இருந்ததை ஒப்பந்தமாகக் கொள்ளலாமென்று கோர்ட்டும் ஏற்றுக்கொண்டிருக்கிறது. என் சகாக்கள், கோர்ட்டார், பிசகாக ஆரம்பம் செய்தார்கள் என்று கூறு கிறார்கள். எப்போது கோர்ட்டார் 11 (1)-ம் பிரிவை அனுபோக ரயத்துகளுக்கு ஏற்பட்டதென்று சொன்னர் களென எனக்குத் தெரியவில்லை. ரெண்ட் ரெகவரி ஆக்டுக்குப் பின் வந்த இந்தியா ஒப்பந்தச் சட்டத்தில் பிரயோகித்தபடி, "ஒப்பந்தம்" என்பது உபயோகிக்கப்படவில்லையென என் சகாக்கள் கூறுகிருர்கள். ஒப்பந் தம் என்பது இந்தியா ஒப்பந்தச் சட்டத்திற்கு முன்னும், ஒரே பொருளில் தான் உபயோகிக்கப்பட்டது. 11 (2)-ம் பிரிவு ரயத்துவாரி நிலங்களுக்கு செலுத்தப்படுமென்றும், அதற்குக் காரணம் 1859-க்கு முன் ஜமீன்தாரி நிலங்கள் சர்வே செய்யப்படாததுதான் என்றும் சொல்லப்படுகிறது. இது தவறு. கன்னிவாடி ஜமீனிலும் (2 M.H.R., 23) நாமக்கல் தாலூக்காவிலும், திருச்சிறைப்பள்ளி ஜில்லாவிலும், இப்போது சேலம் ஜில்லாவிலும் ஜமீன் நிலங்கள் சர்வே செய்யப்பட்டிருக்கின்றன. 13 Mad., 479; 7 L.W., 376, 2-ம் உட் பிரிவு, பசலி வீதம் என்பதைக் குறிக்கிறது. ஒப்பந்தமில்லாதபோது இந்த வீதத்தை அனுஷ்டிக்கவேண்டு மென்றிருக்கிறது.

3-ம் உட்பிரிவு, 1, 2-ம் உட்பிரிவுகள் அனுஷ்டிக்க முடியாதபோது சுதேச வழக்கப்படியும், அதுவும் தெரி யாதபோது, மேற்படி நிலங்களுக்கு அடுத்தாற்போலுள்ள நிலங்களில் என்ன குத்தகை விதிக்கப்பட்டிருக் கிறதோ, அல்லது கட்டப்படுகிறதோ, அப்படியே விதிக்கப்படவேண்டுமென்றிருக்கிறது :—வழக்கமென்பதும் அடுத்தாற்போலுள்ள நிலக்குத்தகை யென்பதும், என் சகாக்கள் சாசுவத செட்டில்மெண்டுபோது இருந்தபடி என்கின்றனர். இது, இப்பிரிவுகளை வீணாக தப்பர்த்தம் செய்வதாகும்.

6 M.H.C.R., 239-ல் "ஸ்காட்லன்ட் இன்ஸ்" என்னும் நீதிசபை "விதிக்கப்பட்டிருக்கிற அல் லது கட்டப்படுகிற வீதம்" என்று 11-வது பிரிவு 3-வது பகுதியில் இருப்பதைக் சாதாரணமாக வழங்கி வருகிற வீதப்படியென்றும், உண்மையாகக் கட்டப்படுகிற குத்தகை வீதமென்றும் கூறியிருக்கிருர்கள். இதே போல 21-சி. 986-லும் கின்லி, ஹில், என்னும் நீதிபதிகள் தீர்ப்புக் கூறியிருக்கிருர்கள். 3-ம் உட்பிரிவு அனுபோக ரயத்துகளுக்கு செல்லத்தக்கதல்லவென்பது, 1-வது பிரிவு எப்படி செல்லத்தக்கதல்லவென் கின்றதோ, அப்படியே அது நாம் ஒப்புக்கொள்ளத்தக்க வாதமல்ல.

கரம்பைநிலகுத்தகை.

4-வது பகுதியில் கீழ்க்கண்டவாறு நிபந்தனை இருக்கிறது :—

> "அப்படிப்பட்ட கரம்பை நிலங்களிலும், ஸ்வாதீனத்திலில்லாத நிலங்களிலும், சட்டப்படியோ, அல்லது சட்ட பலமுள்ள வழக்கப்படியோ ஒரு வகுப்பினராலோ அல்லது ஒருவராலோ கொண்டாடப்படும் தனி உரிமையை இந்த நிபந்தனையிலுள்ள எதுவும் பாதிக்காது."

இது ரயத்துக்கு மேய்ச்சல் போன்ற உரிமைகளைக் காப்பாற்ற ஏற்பட்டது. ஜமீன்தாரின் சொந்தம் இந்த உரிமை அளவுக்குக் கட்டுப்பட்டது. 4-வது பகுதியில், கரம்பை நிலங்களிலும், குத்தகை பாக்கிக்கோ, அல்லது தானகவே விடப்பட்ட ஸ்வாதீனத்திலில்லாத நிலங்களிலும், ஜமீன்தார் தங்கள் இஷ்டம்போல குத்தகை ஏற்பாடு செய்து செய்துகொள்ளலாமென்றிருக்கிறது. மேற்கண்ட நிபந்தனையைக்கொண்டு என் சகாக்கள் ஒரு புது அர்த்தம் செய்கிருர்கள். கரம்பை நிலங்கள் ரயத்துகளுக்கு சொந்தமாம். எந்த ரயத்துக்குச் சொந்தமென்று தெரியவில்லை. கரம்பை நிலத்தில் ஜமீன்தாரின் உரிமை சாசுவத செட்டில்மெண்டில் அங்கீகரிக்கப்பட்டிருக்கிறது. அப்படி இருக்கையில் கிராமக்கூட்டத்தாருக்கு ஒரு காலத்தில் பொதுவாக இருந்த கரம்பை நிலங்கள், கிராமக்கூட்டம் உடைந்த பிறகு ரயத்துவாரி முறையில், ஒவ்வொரு ரயத்துக்கும் சொந்தமானதென்று சொல்லுவதிற் பொருளில்லை.

மேற்கூறிய கரம்பை நிலங்களும், ஸ்வாதீனமில்லாத நிலங்களும் சாசுவத செட்டில்மெண்டு போது கணக்கில் எடுக்கப்படவில்லையென்றும், அவற்றிற்கு உயர்ந்த குத்தகை ஏற்படுத்தப்படவில்லையென்றும் என் சகாக்கள் கூறுகின்றனர். 40 M. 886 P.C. தீர்ப்பின்படி ஒவ்வொரு அணுவு கரம்பை நிலமும் ஜமீன்தாருக்கு சேர்க்கப்பட்டது என்று இருக்கிறது. என் அபிப்பிராயப்படி சாசுவத செட்டில்மெண்டில் சேர்க்கப்பட்டதின்னவை, சேர்க்கப்படாததின்னவையென்று கரம்பை நிலங்களைப் பிரிக்க முடியாதென்பதே. சில கரம்பை நிலங்களுக்கு உயர்ந்த குத்தகை ஏற்படுத்தப்பட்டதென்று என் சகாக்கள் கூறுவதும் சரியல்ல. சாசுவத செட்டில்மெண்டில் கரம்பை நிலங்களே கணக்கிடப்படவில்லை. குத்தகையும், அப்போது நிஷ்க ரிஷை செய்யப்படவில்லை.

மற்றொரு விளக்கமும் 4-வது பகுதியைப்பற்றி செய்யப்படுகிறது. அதாவது இந்தப் பகுதி 2-வது வகுப்பு நிலத்துக்குடையவர்களுக்குமட்டுந்தான் ஏற்பட்டதென்பது. அதுமாதிரி 4-வது பகுதியில் வித்தியாசமே இல்லை. கரம்பை நிலத்திற்கு, நிலத்துக்குடையவர்கள் ஏற்படுத்திக்கொண்ட ஒப்பந்தம் எல்லோராலும் அங்கீகரிக்கப்பட்டே வந்தது.

எஸ்டேட் நிலச் சட்டத்தைப்பற்றி ஆராயும்போது என் சகாக்கள், கரம்பை நிலங்களிலுள்ள உரிமை என்பதைப்பற்றி கவனம் செலுத்துகிருர்கள். அச்சட்டம் அங்கீகரிக்கப்பட்டதன்முன் ஏற்பட்ட வாதங்களைப் பற்றி பரந்த கேள்விகள் கேட்கிருர்கள். திரு. தேசிகாச்சாரியும், போர்ப்ஸும் செய்த சொற்பொழிவுகளில் கரம்பை நிலங்களில் ரயத்துகளின் சொந்த உரிமை என்பதைப்பற்றியது ஒன்றுமில்லை. கரம்பு நிலத்தை, சொந்த நிலமாகவும் கம்பத்து நிலமாகவும் மாற்றி சிலகாலம் பயிரிட்டு, பின்பு ரயத்துகளுக்கு குத்தகைக்கு விடவும், அதனல் ரயத்து அனுபோக பாத்தியதை அடையாமலிருக்கவும் செய்யவேண்டிய ஏற்பாட்டைப்பற்றி கனம் தேசிகாச்சாரியார் பிரேரேபித்தார். இதனல் ஏராளமான கரம்பு நிலங்களும் குத்தகை பாக்கிக்காக விட்டுவிடப்பட்ட நிலங்களும் ஜமீன்தாரியின் சொந்த நிலங்களாக மாறி ஜமீன்தாருக்கு ஏராளமான கைப் பற்று நிலம் ஏற்பட்டுவிடுமென்று கனம் போர்ப்ஸ் எடுத்துரைத்தார். இதனல் குடிவார உரிமையே ஒரு கிராமத்தில் அழிய நேரிடும். இந்தியா சர்க்காரும் கனம் போர்ப்ஸின் ஆக்ஷேபனையின்பேரில் இந்த ஏற்பாட்டை ஆக்ஷேபித்தனர். ஜமீன்தார் கரம்பு நிலத்தை பயிரிடும் வரையில் பயிரிடலாம். ஒரு ரயத்தை அனுமதித்தால் ரயத்துக்கு அனுபோக உரிமை ஏற்பட்டு விடும். நிலத்துக்குடையவர் அனுமதியில்லாமல் ரயத்து, கரம்பு நிலத்தில் பிரவேசிக்கக்கூடாதென்றும், கரம்பு நிலத்தைப் பங்கிடுவது ஜமீன்தாரின் உரிமை யென்றும் கனம் போர்ப்ஸ் கூறுகின்றர். நிலத்துக்குடையவர் அனுமதியின்றி பிரவேசிக்கும் ரயத்தை சிவில் கோர்ட்டு மூலம் எஸ்டேட் நிலச்சட்டத்தின் 163-வது பிரிவின்படி அப்புறப்படுத்தலாமென்றும், 45-ம் பிரிவின்படி ரயத்தினிடம் நஷ்ட ஈடு பெறலாமென்றும் ஏற்படுகின்றது. 25-வது பிரிவில் ரயத்து நிலத்தில் பிரவேசிக்கு முன் ஒரு கட்டணம் ஜமீன்தார் வாங்கிக்கொள்ளலாமென்றுமிருக்கிறது. அதே பிரிவின்படி ரயத்தினிடமிருந்து அதே போன்ற நிலத்துக்கு அங்கே விதிக்கப்பட்ட குத்தகைக்கு மேற்படாமல் அல்லது கலெக்டரால் நியாயமென்று தீர்மானிக்கப்பட்டபடி, நிலத்துக்குக் குத்தகை விதிக்கலாம். 1934-ம்ஆண்டுத்து திருத்த சட்டத்தில் தள்ளப்பட்ட பழைய கரம்பு நிலங்களைத் தவிர மற்ற கரம்புகளில் ரயத்துக்கு அனுபோக உரிமை தரவேண்டுமென்பதிலும், அவற்றை ஜமீன்தார் சொந்த நிலமாக மாற்றிக்கொள்ளக்கூடாதென்பதை

யும், கனம் போர்ப்ஸ் சொல்வதைப்போல் நான் ஏற்றுக்கொள்கிறேன். ஆனால் சாசுவத செட்டில் மெண்ட்போது பயிரான நிலங்களுக்கு நிஷ்கரிஷை செய்யப்பட்ட குத்தகைக்குமேல் கரம்பு நிலங்களுக்கு விதிக்கக்கூடாதென்னும் முடிவை நான் ஒப்புக்கொள்ளவில்லை. எஸ்டேட் நிலச் சட்டத்தின் 25-ம் பிரிவில் வழக்கு ஏற்பட்ட காலத்தில் அதேபோன்ற நிலங்களுக்கு இருந்த குத்தகை என்ற உயர்ந்த அளவுதான் சொல்லப்பட்டிருக்கிறது. 1802-ம்ஹூ்த்து 30-வது பட்டா ரெகுலேஷனையும் குத்தகை வசூலிப்பு சட்டம் 11-ம் பிரிவையும்பற்றி சொல்லுகையில் கரம்பு நிலங்களில் குத்தகை விதிக்கும் விஷயத்தில் ஜமீன்தாருக் குள்ள சுதந்திரத்தைப்பற்றிச் சொல்லியிருக்கிறேன். இதைப்பற்றி 1799-ம்ஹூ்த்தில் கலெக்டருக்கு விடுத்த அறிக்கையின் 27-வது பாராவில் கீழ்க்கண்டவாறு இருக்கிறது. சர்க்கார் பிரதேசத்தில் ஜமீன்தாரியைச் சேர்ந்த பயிரிடாத நிலங்களும், கரம்பு நிலங்களும், பயிரிடக்கூடிய நிலங்களும், ஏராளமாக இருக்கின்றன. இதற்கென்று பேஷ்கஷ் அதிகப்படுத்தாமல், இவற்றை ஜமீன்தாருக்கு என்றைக்கும் சொந்த மாய்க் கொடுத்துவிடவேண்டும். இதில் அவர்களுக்கு ஏற்படும் உரிமை எவராலும் பாதிக்கப்படாதபடி ஏற்பாடு செய்து, அந்த நிலங்களை அவர்கள் விர்த்தி செய்ய உதவவேண்டும். இப்படி அவர்கள் அந்த நிலங்களை விர்த்தி செய்வதால் தங்களுக்கும் நன்மை கிடைத்து, உயரிய அந்தஸ்திலிருக்கச் செய்து தனக்கும் தங்கள் குடும்பத்தாருக்கும் சுகங்களை ஏற்படுத்திக்கொண்டும் திடீரென ஏற்படும் அவசர உபயோகங்களுக்கும் உபயோகப்படுத்திக்கொண்டும், சர்க்கார் தீர்வையை சிறிதேனும் தயக்கமில்லாமல் செலுத்தவும் ஏதுவாகும்.

"காணி ஆட்சி" என்னும் புஸ்தகத்தில் பேடன் பவல் எழுதுவதாவது : கரம்பு அல்லது சுவாதீனத்தி லில்லாத நிலங்கள் இராஜாங்கத்துக்குச் சேர்ந்தவை என்பதில் வாதமில்லை. அந்த நிலங்களை அரசர் தமது இஷ்டப்படி உபயோகித்துக்கொள்ளலாம். அவை இராஜாங்கத்தை சேர்ந்தவைகள். 1808-ம்ஹூ மேமீ 25உ யில் ரெவின்யூ போர்டார் நிலத்துக்குடையவர் இஷ்டமான குத்தகை ஏற்பாடு செய்துகொள்ளலாமென்றும் அதற்கு நிபந்தனைகளும் சொல்லியிருக்கின்றனர். "பயிரான நிலங்களுக்கு சர்வேயிலேற்பட்ட தீர்வைக்கு மேல் நீங்கள் விதிக்கக்கூடாது. அதற்காக கரம்பு நிலங்களில் நீங்கள் ரயத்துகள் சம்மதத்தின் பேரில் எவ்விதமான ஏற்பாடும் செய்துகொள்ளலாம். இதனால் பயிரான நிலங்களுக்கும் கரம்பு நிலங்களுக்கும் உள்ள வித்தியாசம் கவனிக்கத்தக்கது. கரம்பு நிலங்களுக்கு குத்தகை விதிக்கும் விஷயத்தில் ஒரு கட்டுப்பாடுமில்லை. சிலோன் ரெவின்யூ கோடில் 164-ம் பக்கத்தில் கரம்பு நிலத்தில் ஜமீன்தாருக்குள்ள சர்வ உரிமையை 1852-ம்ஹூ்த்திலும், 1893-ம்ஹூ்த்திலும் சர்க்கார் அங்கீகரித்திருக்கின்றனரென்றிருக்கிறது. 1880-ம்ஹூ்த்தில் ஜனவரிமீ 8உயில் சர். ரிச்சர்ட் கார்த், வங்காளத்தின் பிரதம நீதிபதி. கீழ்க்கண்டபடி சொல்லியிருக்கிறார். 1880-ம்ஹூ ஜூலைமீ 21உ கல்கத்தா கெஜட், 386-ம் பக்கம். சாசுவத செட்டில் மெண்டால் சட்டசபை, ஜமீன்தார் சுவாதீனத்திலில்லாத நிலங்களை ரயத்துகளுக்கு இஷ்டப்பட்டு குத்தகைக்கு விடலாமென்று அனுமதிக்கிறது. இது இங்கிலாந்தில் நிலத்துக்குடையவர்களுக்குள்ள சுதந்திரம் போன்றதாகும். ஜமீன்தார்களின் உரிமையும், அவர்கள் குத்தகைக்கு விடும் நிபந்தனையும் ஒரு ஒப்பந் தத்தைப் போன்றது. அது நிலத்திற்குள்ள தேவையைப்பொறுத்தது. டாக்டர் பீல்டும் தன்னுடைய "நில உரிமை" என்னும் புத்தகத்தில், 556-ம் பக்கத்தில், மேல் கண்ட அபிப்பிராயங்களையே ஏற்றுக்கொள்ளுகிறார். குத்தகை விஷயமான சீர்திருத்தம் வந்தபோதெல்லாம், கரம்பு நிலத்தில் ஜமீன்தாருக்கு உள்ள உரிமை யில் கட்டுப்பாடு இல்லையென்பது அங்கீகரிக்கப்பட்டிருக்கிறது. 1865-ம்ஹூ்த்து சென்னை 8-வது சட்டம் வருமுன் அந்த மசோதாவின் செலக்ட் கமிட்டியார், அனுபவத்திலுள்ள நிலங்களுக்கும், அனுபவத்திலில்லாத நிலங்களுக்கும், தீர்வை விதிக்கும் விஷயத்தில் வித்தியாசம் ஏற்படுத்தினர். அனுபோகமில்லாத நிலத் திற்கு ஜமீன்தார் இஷ்டப்படி குத்தகை ஏற்படுத்திக்கொள்ளலாமென்று சொல்லப்பட்டிருக்கின்றது. 1865-ம் ஹூ்த்தின் எட்டாவது சட்டத்து 11-வது பிரிவு, 4-வது உட் பிரிவில் செலக்ட் கமிட்டியாரின் சிபார்சு ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கிறது. பல கோர்ட்டின் தீர்ப்புகளும் ஜமீன்தார்தான் கரம்பு நிலங்களின் சொந்தக் காரர் என்று கூறியிருக்கின்றன (26 Mad., 252, 40 Mad., 886).

இதனால், சென்னை எஸ்டேட் நிலச்சட்டம் 2 வகையாக ஜமீன்தாரின் உரிமைகளைக் குறைத்துவிட்டதென்று கூறலாம் ஒன்று, அனுபோகத்துக்கு அனுமதித்தபின் அனுபோக உரிமை ரயத்துக்கு ஏற்படுவது, இரண் டாவது அடுத்தாற்போலுள்ள அதே போன்ற நிலங்களுக்கேற்பட்டுள்ளபடி குத்தகை நிச்சயிப்பதென்பது. இப்படியிருக்கையில் எஸ்டேட் நிலச்சட்டம் ரயத்துகளுக்கு பாதகரமானதென்பது சரியல்ல. இதைத் தவிர, ஜமீன்தாரின் உரிமையைக் குறைக்கும் எச்சட்டமும், உரிமையைப் பிடுங்கிக்கொள்ளும் சட்டமென்று நான் அஞ்சாமற் கூறுவேன்.

வரி உயர்த்துவதைப்பற்றி எஸ்டேட் நிலச்சட்டத்தைப் பார்த்தால் என் சகாக்கள், கூறுவது ஒத்துக் கொள்ளத்தக்க சரியான வியாக்கியானமல்ல. 30 (1) பிரிவுபடி விலை உயர்ந்தபோது குத்தகையும் உயரலாம் என்பதை, 1802-வது வருஷத்தில் பயிரான நிலங்களுக்கு இது ஏற்பட்டதல்லவென்று கூறுவதும், பின்னர் பயிரிடப்பட்ட நிலங்களுக்குக் கூடவல்லவென்பதும், பழைய கரம்புகளுக்கு மட்டும்தா னென்பதும் சரியல்ல. 30 (1)-வது பிரிவு அனுபோக பாத்தியதையுள்ள ரயத்துகளுக்கு அனுஷ்டிக்கப்பட்டே வந்தது. திரு போர்ப்ஸும் இதை ஒத்துக்கொள்ளுகிறார். விலைக்குத் தக்கபடி குத்தகையை மாற்றிக் கொள்ளுவதில் புதிதொன்றுமில்லை. இந்நாட்டின் பழைய வழக்கம் மாசூலை நிலத்துக்குடையவர் பங்கென் றும், பாயக்காரி பங்கென்றும் பிரித்துக்கொள்வது ஆகும். இம்மாதிரி பிரித்துக்கொள்ளும் முறை பணமாக தீர்மானிக்கப்பட்டபோது, அந்தப்படி தீர்மானிக்கும்போது இருந்த விலைப்படியே தீர்மானிக்கப் பட்டது. எஸ்டேட் நிலச் சட்டப்படி குத்தகையை உயர்த்தவும், குறைக்கவும் ஏற்பட்டிருக்கும் நிபந்தனை. கோர்ட்டார் இதைத் தீர்மானிக்கும் விஷயத்தில் கவனிக்கவேண்டிய விஷயங்களைப்பற்றி நன்றாகச் சொல்லி யிருக்கிறது. 30 (1)-சி, பிரிவில் எக்காரணத்தாலும் ஒரு ரூபாயில் 2 அணுவுக்குமேல் குத்தகை உயர்த்தக் கூடாதென்று இருக்கிறது. 31 முதல் 34-ம் பிரிவுகளிற் கூறியுள்ள நிபந்தனைகளிருந்தபோதிலும், 35-ம் பிரிவுபடி கலெக்டர் குத்தகை அநியாயமென்று நினைத்தால், குத்தகை உயர்த்துவதை அனுமதிக்கக்கூடாது. 1802-வது வருஷத்தில் ஜமீன்தாரியில் குத்தகை நிஷ்கரிஷை செய்யப்பட்டது சரியல்ல வென்றால், 30 (1)-ம் பிரிவு, செட்டில்மென்டுபோது, அல்லது பின்னர், பயிரிடப்பட்ட நிலங்களின் அனுபோக ரயத்துகளுக்கு அனுஷ்டிக்கப்படாது என்பதும் தப்பே. பழைய கரம்பு நிலங்களுக்கென்று குத்தகையை உயர்த்த 47, 48, 49-ம் பிரிவுகள் மிக அனுகூலமாக இருக்கும்போது, 30 (1)-வது பிரிவை ஏன் ஜமீன்தார் உபயோகிக்கவேண் டும் ? இப்போது ரத்து செய்யப்பட்ட 49 (2)-வது பிரிவு கலெக்டர், ஏதாவது குத்தகை உயர்த்தப்பட்டதாவென தீர்மானிக்கையில் இச்சட்டத்தின் 30 முதல் 37-வது பிரிவு வரையிலுள்ள நிபந்தனைகளை கவனிக்கவேண்டு மென்று கூறுகின்றது. இவை, பழைய கரம்பு தவிர மற்ற நிலங்களுக்கேற்பட்ட நிபந்தனைகள். ஆனால் விதிகள் ஒன்றாகவே காணப்படுகின்றன. இதனால் 30 (1)-ம் பிரிவைப்பற்றி என் சகாக்கள் தப்பாக அபிப் பிராயப்படுகிறார்கள் என்பது விளங்குகிறது.

30 (2) பிரிவைப்பற்றிக் கூட என் சகாக்கள் அபிப்பிராயத்தை நான் ஏற்றுக்கொள்ளவில்லை. 13-வது பிரிவுபடி ரயத்தும் நிலத்துக்குடையவரும், சில விருத்திகள் செய்யவேண்டுமென்றால் ரயத்துக்கு முதல் பாத்தியதை உண்டென்றும், மற்றொரு ரயத்தின் உரிமை பாதிக்குமானால் நிலத்துக்குடையவருக்கு உரி மையுண்டென்றும் கூறுகிறது. அப்படி நிலத்துக்குடையவர் விருத்தி செய்தோ, அல்லது ரயத்து செய்யத்

தவறி, நிலத்துக்குடையவரால் விருத்தி செய்யப்பட்டோ, ஒரு நிலம் அனுகூலமடைந்தால் நிலத்துக்குடையவர் மே`கண்ட காரணத்தால் குத்தகையை அவ்வாண்டில் உயர்த்தவேண்டுமென்று கலெக்டருக்கு மனு செய்ய லாம். எஸ்டேட் நிலச்சட்டபடி இவ்விதமாக நிலத்துக்குடையவர் விருத்தி செய்தபோதும்கூட குத்தகை உயர்த்தமுடியாதென்று இருக்கிறது. இச்சட்டத்திற் கூறியபடி, மற்றபோது, 24-ம் பிரிவுபடி குத்தகை உயர்வெல்லாம் செல்லத்தக்கதல்ல. இப்படி நிலத்துக்குடையவர் விருத்தி செய்து, ரயத்துக்கு நன்மை பயக்கும்போது கலெக்டர் மூலமாகவே குத்தகையை உயர்த்துவதால் என்ன தீங்கு? அப்படி உயர்த்தினுல் தானே நிலத்துக்குடையவர் விருத்திசெய்ய முன்வரக்கூடும். இருதரத்தார் சார்பிலும் இந்தப்படி வரி உயர்த்தும் நிபந்தனை நல்லதே.

3-வது பகுதியைப்பற்றிக் கூட என் சகாக்கள் அபிப்பிராயத்தை நான் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. நீர்ப்பாசன வேலைகளை விருத்தி செய்வதும், கட்டு மராமத்து பார்ப்பதும் ஒன்றென்று கொள்கிருர்கள் போலும். ஜமீன்தார் கடமை சம்மந்தப்பட்ட வரையில் நீர்ப்பாசனங்களை விருத்தி செய்யவோ, புதிதாக உண்டுபண்ண வோ நிபந்தனைகள் இல்லை. இருப்பதை நல்ல நிலையில் வைத்திருக்கவேண்டியதே கடமை. சர்க்கார் நீர்ப்பாசன வேலைகளை புதிதாகச் செய்தோ, விருத்தி செய்தோ அந்த செலவை நிலத்துக்குடையவரிடம் வசூ லித்தால், அதனுல் பலனடையும் ரயத்தினிடம் ஏன் ஜமீன்தார் அந்த தொகைக்காக வசூலிக்கக்கூடாது? இதற்குத்தான் 30 (3), 33-வது பிரிவுகள் ஏற்பாடு செய்கின்றன. 33-வது பிரிவு, 30 (3) பிரிவுபடி குத்த கயை உயர்த்தினுல், சர்காருக்கு ஜமீன்தார் கட்டிய தொகைக்கு தக்கவாறு உயர்த்தவேண்டுமென்று கூறுகிறது. இதில் அநியாயம் ஒன்றுமில்லை. சர்க்காரே தாங்கள் செய்த வேலைக்கு நேராக ரயத்தினிடம் வசூலித்தால் இம்மாதிரி குறை கூறமுடியாது.

30 (4)-வது பிரிவைப்பற்றிய என் சகாக்களின் அபிப்பிராயம் சரியானதல்ல. இதை 38 (a)-வது பிரிவுடன் வாசிக்கவேண்டும். நிலத்தின் பூசாரத்தால் பூமி அதிக விளைவு தருகிறதற்கு குத்தகை உயர்த்த 30 (4)-வது பிரிவு இடம் தந்தால் 38 (1) a-வது பிரிவில், பூசாரம் குறைந்து பயிர் விருத்தியாகாதபோது ரயத்து, குத்தகை குறைய மனுச் செய்யலாமென்றிருக்கிறது. வார முறையே இருந்திருந்தால் இவ்வித நிபந்தனைகள் அவசியமில்லை. அதில் மாசூல் அதிகப்பட்டாலும் குறைந்தாலும் வித்தியாசமில்லை. ஜமீன் தாரும் ரயத்தும் தங்கள் பங்குடன் போய்விடுவார்கள். பணமாக குத்தகையை ஏற்படுத்தியதால்தான் மேற்கூறியபடி உயர்த்தவும் குறைக்கவும் ஏற்பாடு வேண்டியிருக்கிறது.

என் சகாக்கள் 30-வது பிரிவுமட்டும் எடுத்துவிடவேண்டுமென்னும்போது, குத்தகை குறைக்கவேண்டுமென் பதை எடுத்துவிடவேண்டுமெனச் சொல்லவில்லை. அது அநீதியல்லவா ?

எஸ்டேட் நிலச்சட்டத்தின் 40, 41-வது பிரிவுகள் எடுபட வேண்டுமென என் சகாக்கள் கூறுகின்றனர். அதன் பலனுவது, இரு தரத்தாரும் சம்மதப்பட்டாலன்றி குத்தகையைப் பணமாக மாற்ற முடியாது. எஸ்டேட் நிலச் சட்டத்தின் முன் அதுதான் நிலைமை, ரெண்ட் ரெகவரி சட்டமும், குத்தகையைப் பணமாக மாற்றுவதைப்பற்றி ஒன்றும் கூறவில்லை. அதனுல் ஏற்படும் கஷ்டங்களை நிவர்த்திக்கவே 40, 41-வது பிரிவுகள் உண்டாயின. என் சகாக்கள் 30-ம் பிரிவிற்கும் 40-ம் பிரிவிற்குமுள்ள சம்பந்தத்தை ஏன் பார்க்கவில்லையென்று எனக்குத் தெரியவில்லை. ரெவின்யூ போர்டும், சத்தர் திவானி அடலத்தும் ஜமீன் தாரோ, நிலத்துக்குடையவரோ குத்தகையைப் பணமாக மாற்ற கட்டாயப்படுத்தக்கூடாதென்று கூறி யிருக்கின்றனர். என் சகாக்கள் 40, 41-வது பிரிவுகளை எடுத்துவிட்டு, 1802-ம் வருஷத்து 30-வது ரெகுலேஷன் 7, 9-வது பிரிவுகளை புகுத்தவேண்டுமென்கின்றனர். அதில் மாசூல்குத்த கைக்கு பதிலாக பணகுத்தகை ஏற்படுத்தவும், 1802-ம் வருஷத்து விலைப்படி செய்யவேண்டு மென்பதும் காணவில்லை. பட்டா ரெகுலேஷனில் 4-வது பிரிவு, 4-வது பகுதி, 1802-ம் வருஷத் துக்கு பின்பும் மாசூலில் பங்குமுறையை ஏற்றுக்கொண்டு, அந்த நிலங்கள் முறைக்கேற்றபடி பட்டா தரவேண்டிய விபரங்களைக் குறிக்கிறது. வழக்கு உண்டானபோதுள்ள விலையைப்போல் ஏற்பாடு செய்வதில் என் சகாக்கள் ஆக்ஷேபனை செய்கிருர்கள். சராசரி என்பதில் உயர்வான விலையுள்ள வருஷங் களின் சராசரி என்றுலும் ஆக்ஷேபனை இருக்கலாம். 1929-ம் வருஷத்தில் அதிக விலையுள்ளபோது, சில பணமாக மாற்றியதால் ரயத்துகள் கஷ்டப்படுகின்றனர் என்பது அந்தப் பிரிவையே எடுத்துவிட நியாய மாகாது. அதற்கு 41-வது பிரிவில் குறிப்பதைவிட நீண்ட வருஷங்கள் சராசரி விலையாவது, 20 வருஷங் களுக்குக் குறைந்த குறிப்பிட்ட வருஷங்களின் சராசரி விலையாவது ஏற்படுத்தலாம். எப்படியானுலும் 1802-ம் வருஷத்து விலைப்படி யென்பது நீதியற்றதென்றே நான் கூறுவேன்.

கட்டணங்களைப்பற்றி ஒரு சொற் கூற விரும்புகிறேன். கரம்பு நிலங்கள் ஜமீன்தார் வசம் இருந் தால், ரயத்துகளைச் சேர்க்கும்போது கட்டணம் வாங்கலாமென்று ஏற்படுகிறது. ரயத்தை, நிலத்தில் சேர்த்த பிறகு பாதிக்காமலிருக்கவும், அதிகமாகக் கட்டணம் வாங்காமலிருக்கவும், ரயத்தை நிலத்தில் சேர்க்கும் முன்பே பூரத் தொகையும் வாங்கிக்கொண்டு சேர்க்கவேண்டுமென்று 25-ம் பிரிவில் இருக்கிறது. ஒரு தரம் சேர்த்த பின் கட்டணம் வாங்கமுடியாது. மற்றும் இந்த நிலங்களுக்கு விதிக்கும் குத்தகையும், அடுத்தாறபோலுள்ள அதேபோன்ற நிலங்களுக்கு விதிக்கப்படும் குத்தகைக்குமேல் விதிக்கப்படாது என்று நிபந்தனை இருக்கிறது. "ரெண்ட் ரெகவரி" சட்டத்தில் கட்டணம் வசூலிப்பதைப்பற்றி யொன்றுமில்லை யென என் சகாக்கள் வாதிக்கின்றனர். அதில் அதைத் தடுப்பதற்கொன்றுமில்லை. அச்சட்டமிருந்தபோது, நிலத்தில் சேர்ந்த பிறகுகூட கட்டணம் வாங்குவதைத்தடுக்க ஒன்றுமில்லை. ரயத்துகளின் உரிமைக்கு பாதகரமானதென்று, எஸ்டேட் நிலச்சட்டத்தைக் கூறுவதற்கில்லை. ரயத்துகளின் நன்மைக்கே ஏற்பட்டதால், கரம்பு நிலங்கள் ஜமீன்தாருக்குச் சொந்தமானதென்பதை ஏற்றுக்கொண்டு, நிலத்தில் ரயத்தை பிரவேசிக்க விடுமுன் ரயத்தின் நலனைக்கோரியே, எஸ்டேட் நிலச்சட்டம் கட்டணத்தை வாங்கிக்கொள்ளவேண்டுமென்ற நிபந்தனையை ஏற்படுத்திற்று.

5-ம் அத்தியாயம்.

தீர்வையைத் திருத்தியமைக்க ஏது இல்லை.

சாசுவத செட்டில்மெண்டிலிருந்து குத்தகையைப்பற்றி ஜமீன்தாருக்கும் ரயத்துக்குமுள்ள சட்ட முறையான நிலமையைப்பற்றி இதுகாறும் கூறினேன். என் தீர்மானங்கள், பல சட்டங்களையும், ரெகு லேஷன்களையும், கோர்ட்டார் தீர்ப்புகளையும் அனுஷ்டித்தே கூறப்பட்டவை. எஸ்டேட் நிலச்சட்டத்தின் நிபந்தனைகள் என் சகாக்கள் கூறுவதைப்போல அநியாயமானவையல்ல. அப்படியே 1802-ம் வருஷத்தில் குத்தகை நிஷ்கரிஷை செய்யப்பட்டதென்றுலும் பல ஆண்கள் கடந்துவிட்டதால் அப்போதிருந்த விலைப்படி குத்தகையைப் பணமாக நிஷ்கரிஷை செய்யவேண்டுமென்றும் ரயத்தின் உரிமை போய்விட்டது. உயர்ந்த கோர்ட்டார்களும், கடந்த 150 வருஷங்களாக, பல சீர்திருத்தச் சட்டங்களும், 1802-ம் வருஷத்தில் குத்தகை நிஷ்கரிஷை செய்யப்பட்டதாகக் கூறவில்லை. அதனுல் காலத்திற்கேற்றபடி நிலத்துக்குடையவர்கள், 1802-ம்

வருஷத்து குத்தகை வீதத்தைவிட உயர்ந்தபோதிலும், பணமாகக் குத்தகையை மாற்றிக்கொள்ளும்போது ஏற்பாடு செய்துகொள்ளலாமென்று அங்கீகரிக்கப்பட்டிருக்கிறது. அனுபோக பாத்தியதையாலும், வழக்கத்தாலும், காலத்தாலும் புது உரிமைகள் ஏற்பட்டுவிட்டன. அதனால் இறந்துபோன உரிமைகளை ஏற்படுத்த முயல்வது சட்டப்படி முறையல்ல. சாசுவத செட்டில்மெண்டுக்குப் பின் நடந்தவை சரி யென்றே நாம் ஏற்றுக்கொள்ளவேண்டும். கடந்த 130 ஆண்டுகளாக நடந்தேறியதை முன்னிட்டு இனி, முக்கியமான ஆதாரங்களைப்பற்றி விசாரணை செய்வது சரியல்ல. ஆகையால் கமிட்டியார் இனி அவற்றை புதிப்பிக்க முயல்வது நீதியாகாது. வெகு நாளைய அனுபவத்தை விட்டுவிட்டு ஏதோ ஒரு காலத்தில் பாத்தியதைகள் இருந்தன என்பதைப்பற்றி விசாரணை செய்தல், சொத்தின் உரிமைக்கும், பாதுகாப்புக்கும் அமைதி உண்டாகாது.

இக்காரணத்தைக்கொண்டே, சாசுவத ஏற்பாடு உண்டான காலத்தில் ஜமீன்தார்களுக்கும் குடிகளுக்கும் உண்டான சட்ட சம்பந்தமான உரிமைகளை விசாரணை செய்யவேண்டாமென்கிறேன். நான் என்னுடைய சகாக்களின் தீர்மானத்தை இதனால் ஆமோதிக்கிறேனென்பதில்லை. அவர்கள் விஸ்தாரமாகச் செய்த விசாரணையைப்போல் நான் செய்யச் சலிக்கவுமில்லை. நான் முன் சொன்னவாறு, இவ்வித விசாரணையினால் ஜமீன்தார்கள் பாதிக்கப்படவில்லை. என்னுடைய சகாக்களின் விசாரணையிலும் தீர்மானங்களிலும் ஒருவித புதுமையைத் தவிர வேறொரு சாதனமுமில்லை. இந்தக் கமிட்டியின் கடமை, இவ்வரி விஷயத்தில் சட்டசபை தீர்மானங்கள் செய்ய ஆதாரமிருக்கிறதா என்று பார்ப்பதேயாகும். சென்னை, ஜமீன் சட்டம் 24-வது பிரிவில் வரி உயர்த்துதல் தடைபட்டிருப்பதால், கடந்த 30 வருஷமாக இப்பொழுதிருக்கும் வரியே இருந்து வருகிறது. பல ஜமீன்களில் கடந்த 50 வருஷமாகத் தடையின்றி ஒரே வரியிருந்துவருகிறது. திருச்சி, சேலம் ஜில்லா ஜமீன் குடிகள் 'பய்மாஷ்' கால முதல் தங்கள் வரி மாறுதலடையவில்லை யென்கிறார்கள். தஞ்சாவூர் ஜில்லாவில், அரண்மனை, சத்திரம் ஜமீன்களில், 200 கிராமங்கள் சார்பாக ஒருவர், ஜமீன்தார்கள், குடிகள் சாதகத்திற்காக, 1, 3 அல்லது 5 வருடம் சர்க்கார், நெல் விலையை யொட்டி குடிகளிடமிருந்து பணமாக வரி வசூலித்தபோதும், சாசுவத திட்ட காலத்திலிருந்து அதிக மாறுதலில்லை யென்கிறார்கள். தஞ்சாவூர் சாக்ஷிகள், வருஷ அல்லது பல வருட வரிகளை மொத்தமாக மதிப்பதனால் வரியைப் பணமாகக் கொடுப்பதில் அதிக மடங்காகிறதென்று முறையிடுகிறார்கள். இந்த மாறுபாடு விலக்க முடியாதது. நெல்விலை அதிகமானால் வரிப்பணம் உயர்கிறது. ஆனால் வரித்திட்டம் உயர்கிறதென்பது சரியாகாது. பணக்கணக்கில் வரி அதிகமாகத் தோன்றினால் அது குடிகளைப் பாதிக்கவில்லை. வரிக்கணக்கில் எப்பொழுதும் மேல்வாரத்தார்கள் கொடுப்பதுபோல் அரைமடங்கு விளைவு நெல் தான் கொடுக்கப்படுகிறது. மேலும், வாரத்தார் இஷ்டப்பட்டால் நெல்லாகவே கொடுக்கலாம். சாக்ஷிக்காரர்கள் நீதிமன்றங்களில் இதைச் சட்ட முறையல்லவென்று தள்ளவில்லையென்றும், தங்கள் நிலம் அதிக விலை மதிப்பு இடப்பெற்றதென்றும், கீழ்க் குடிகளுக்கு வாரம் விட்டபோதும், தாங்கள் லாபமடைந்ததாகச் சொல்லுகிறார்கள். திருச்சினாப்பள்ளி ஜமீன்சாக்ஷிகள், தஞ்சாவூர், சேலம் ஜமீன்களில், பக்கத்து சர்க்கார் நிலவரியைவிட ஜமீன் தீர்வை குறைவென்கிறார்கள். சில கிராமங்களைத் தவிர மதுரை, இராமநாதபுரம் ஜில்லாக்களின் ஜமீன்களில் தீர்வை குறைவென குடிகளே ஒப்புக்கொள்கின்றனர். மதுரை சாக்ஷிகளும் வார வரியோ, பண வரியோ சாசுவத திட்டகாலத்திலிருந்து மாறவில்லை யென்கிறார்கள். கோர்ட்டுகளிலும் அவை எதிர்க்கப்படவில்லை. ஆனால், ஜமீன்தார்கள் தங்களுடைய அரைப்பாகம், நெல்விலை குறைந்ததனால், பண விகிதமாக மாற்றப்பட்டதிலிருந்து அதிகமாகப் பாதித்து விட்டதென கூறுகிறார்கள். இதை ஒழுங்குபடுத்த தற்கால நெல் விலையை யொட்டி சென்னை ஜமீன் நிலச்சட்டத்தில், காட்டியாவறு தீர்வையை மாற்றி அமைத்துக்கொள்ளலாம். இதற்காக ஜமீன் நிலச்சட்டத்தையே பூராவும் மாற்றுவது என்னுடைய எண்ணப்படி அவசியமல்ல.

சாசுவத திட்ட காலத்திலிருந்தே தீர்வை வாரமாகக் கொடுக்கப்பட்டுவந்தது. குடிகள் ஜமீன்தார்கள் சம்மதத்தின் பேரிலோ, அல்லது கோர்ட்டார் தீர்மானத்தின்படியோ, சில விடங்களில் வாரத்திட்டம் பணத்திட்டமாக மாற்றப்பட்டது. சாக்ஷியாக வந்த குடிகளும் தங்களுடைய மொத்தத் தீர்வை பாதிக்கவில்லை யென்கிறார்கள். ஆகையினால் சாசுவத திட்ட காலத்திலிருந்தபடியே தீர்வை அதிகப்படாமலிருக்கிறதெனக்கொள்ளவேண்டும். ஆனால் நான் எல்லா இடங்களிலும் வாரத்திட்டம் பணத்திட்டமாக மாறவேண்டுமென்றாவது, குறைவுபட்ட இடங்களில் ஜமீன் தீர்வைகள் அதிகப்படவேண்டுமென்றாவது, அன்றி ஜமீன் தீர்வைகள் மொத்த விளைவில் ஒரு பாகமாக ஏற்பட வேண்டுமென்றாவது கூறவில்லை. இருகட்சிகளும் நியாயம் அடைய, ஜமீன் நிலச்சட்டத்தில் அங்குமிங்கும் சில சிறு மாறுதல்கள் செய்யலாமென்று சொல்லுகிறேன்.

மொத்தத்தில், ரயத்து சாக்ஷிகள் தீர்வைக் கொடுமையைப்பற்றி புகார் சொன்ன போதிலும், புள்ளி விவரமாகவாவது, உண்மை ஆதாரங்களினாலாவது தங்கள் குறைகளை ருசுப்படுத்தவில்லை. ஆனால் அவர்கள் காட்டிய நிலவிலைப்பத்திரங்களிலிருந்து, நிலத்தின் மதிப்பு அதிகமாகக் கருதப்படுகிறதென்றும், அவர்கள் கீழ்க்குடிகளுக்கு நிலத்தைப்பயிரிட விட்ட பொழுதும், ஜமீன்தாருக்குத் தீர்வை செலுத்தியது போக லாபமடைவதாகத் தெரிகிறது. ஆகையினால் ஜமீன் தீர்வை அவ்வளவு கொடியதல்ல. 1930-ல் ஏற்பட்ட பண்ட விலைக் குறைவினாலும் சில ஜமீன் தீர்வைகள் அதிகமாகத் தோன்றலாம். ஆனால் ஜமீன்தார்களை யோசனையின்றி எதிர்த்துப் பழி சுமத்துவது சுத்தத் தவறாகும். ஜமீன் தீர்வையுடன் சர்க்கார் தீர்வையை ஒப்பிடுவதும் சரியல்ல. ஜமீன் தீர்வை அதிக மிருப்பதுபோல் சில இடங்களில் சர்க்கார் தீர்வையுமிருக்கிறது. அது பலவித காரணங்களினாலாகும். சர்க்கார் நிலங்களில் ஆதியிலிருந்தே தீர்வையைப் பணமாகக் கணக்கிடப்பட்டது. ஜமீன் நிலங்களில் அவ்வப்போது இவ்வித மாறுபாடு செய்யப்பட்டது. பணத் தீர்வை அந்தந்தக் காலத்து நெல் விலைக் கேற்றவாறு அமைக்கப்பட்டது. நெல் விலை அக்காலங்களில் 1800-வது வருஷத்திலிருந்ததைவிட அதிகமாக இருந்தது. ஒரு சில இடங்களிலும், வெகு சில நூற்றுக்கணக்கான ஏக்கர் நிலங்களில்தான் தீர்வை உயர்வாகக் காணப்படுகிறது. அவையும் சில தனிப்பட்ட காரணங்களைக்கொண்டேயாகும். குடிகள் நிலத்தை விட்டுப் போனதினாலோ, தீர்வை கட்டாததினால் ஏலத்துக்கு வந்ததினாலோ ஜமீன்தார்கள் புதுக்குடிகளை அந்த நிலங்களில் அமைத்தபோது அக்கால நெல் விலையை யொட்டித் தீர்வையும் அதிகமாக ஏற்படச் சாதகமாயிற்று. இந்த ஒரு சில சந்தர்ப்பங்களிலிருந்து ஜமீன்தார்களின் தீர்வையைக் கண்டிக்க முடியாது. இவ்வளவுகாலமாகக் குடிகள் அவ்வித தீர்வைகளைக் கொடுத்துவந்ததிலிருந்தே அவை சரியென்றும் நியாயமென்றும் கருத வேண்டும். இதை யெதிர்க்க நம் முன் தக்க சான்றுகள் காட்டப்படவில்லை.

பனகல், மட்கோல், உய்யூர், வெங்கடகிரி ஜமீன்தார்கள் காண்பித்த கணக்குகளிலிருந்து சாசுவத திட்ட கால முதல் குடிகளும் ஜமீன்தார்களும் சரிசமானமாக மொத்த விளைவைப் பங்கிட்டுக் கொண்டதாகத் தெரிகிறது. பனகல் ஜமீன்கணக்கு 1793 முதல் இன்று வரையுமிருக்கிறது. சாசுவத திட்டத்திற்காக 1795-ல் ஏற்படுத்தப்பட்ட மட்கோல் ஜமீன் 'கம்போகட்ட' கணக்குப்படி ஜமீன்தார்கள் மொத்த விளைவில் 2/3, சில சமயம் $\frac{1}{2}$ மடங்கும் கொண்டதாகத் தெரிகிறது. வெங்கடகிரி, உய்யூர் ஜமீன் கணக்குகளும், சாசுவத திட்டம் உண்டான சமீபகாலத்திலிருந்து 50 சதவிகிதம் ஜமீன்தார்கள் பெற்றதாகக்

காட்டுகின்றன. 1841-லிருந்து பாமூர் ஜமீன் கணக்கு பணத்தீர்வையாகவே மாறுதலின்றி இருப்பதாகத் தெரிகிறது. ஜமீன்தார்கள், சாசுவத திட்டகாலத்தைவிடத் தற்போது அதிக வருமானம் அடைவதைப் பற்றித் தப்பபிப்பிராயங்கள் இருக்கின்றன. உண்மையில் பயிர்த் தொழிலுக்குரிய நீர்ப்பாய்ச்சல் முதலிய சாதனங்களை உண்டாக்கியதால் ஜமீன்தார்கள் அதிக வரும்படி அடைகிறார்களே ஒழிய, தீர்வை உயர்ந்ததாலல்ல. நான் திட்டமாக, ஜமீன் தீர்வை குறைய வேண்டுமென்று நிரூபிக்கப்படவில்லையென எண்ணுகிறேன்.

இச்சந்தர்ப்பத்தில் தீர்வையைப்பற்றிய விசாரணை காலங்களில் சகஜமாக நாம் மறந்துவிடக்கூடிய ஒரு விஷயத்தைப்பற்றிச் சொல்லுகிறேன். 1802-ல் தீர்வை பணத்திட்டமாக மாற்றப்பட்டதை, தற்கால பணத்திட்டத்தோடு ஒப்பிட்டால் அதிகமாகிறது. இதற்குக் காரணம் : (1) பயிரிடுதல் அதிகப்பட்டதினாலும், (2) நெல் விலை உயர்ந்ததினாலுமாகும். 1802-ல் ரூபாயின் பொருள் மதிப்பு இப்போதுவிட மூன்று மடங்கு அதிகமாக இருந்ததென உணரவேண்டும். ‘ பெரும்பான்மை அறிக்கையினர் ’ தற்போதைய பண்ட விலைகள் முன்னையவிட மூன்று மடங்கு அதிகப்படுகின்றனவென ஒப்புக்கொள்கிறார்கள். அதற்கேற்றவாறே தீர்வையை நாம், பண்ட விலைப்படி சீர்தூக்கிப்பார்த்தால் பணத்தில் அதிகமாகப் புலப்படும். ஆகையால், உண்மையில் தீர்வை உயரவில்லை.; பண்ட விலை உயர்ந்திருக்கிறது, பண மதிப்பு குறைந்திருக்கிறது.

6-ம் அத்தியாயம்.

தீர்வை நிர்ணயிப்பதைப்பற்றிய பல அபிப்பிராயங்கள்.

இப்பொழுது, குடியானவர்கள் சார்பாக கமிட்டியாருக்கு அறிவித்த யாதஸ்துக்களைக் கவனிப்போம். அநேகமாக அவைகள் அருகாமையிலுள்ள ரையத்வாரி பிரதேசங்களில் காணப்படும் விகிதப்பிரகாரம், ஜமீன்தாரிப் பிரதேசங்களிலும் தீர்வை குறைக்கப்படவேண்டும் என வேண்டுகின்றன.

அருகாமையிலுள்ள ரையத்வாரி விகிதம் சரியானதெனக் கருதலாமா ?

இந்தக் கோரிக்கை, ஜமீன்தாரிப் பிரதேசத்திற்கும், ரையத்வாரிப் பிரதேசத்திற்கும் தீர்வை தீர்மானிப்பதற்கு உண்டான அடிப்படையான காரணங்களை அறவே மறந்துவிடுகிறது. ஜமீன்தாரின் உரிமைகளையும், கடமைகளையும் சற்றும் கவனிக்கவில்லை.

முன்னர் கண்ட பிரகாரம், ஜமீன்தாரி நிலங்களிலும், ரையத்வாரி நிலங்களிலும் விகிதக் கணக்கு மொத்த விளைவில் அரை மடங்கு என தீர்மானிக்கப்பட்டது. 1858-ம் வருஷம் இந்திய அரசாங்கத்தார் நிலவருமான நிர்ணய இலாகா வ ஏற்படுத்தினார்கள். முதல் டைரக்டராக திரு நிவில் நியமிக்கப்பட்டார். அவர் அரசாங்கத்தார் 100-க்கு 50 மடங்கிலிருந்து 100-க்கு 30 மடங்கு மொத்த விளைவிலிருந்து வசூல் செய்யும்படி ஒப்படைத்தார். 1864-ல் இந்திய செக்ரிடரி ஆவ் ஸ்டேட், அரசாங்கத்தார் தேறின விளைவில், ரையத்வாரி நிலங்களில் 100-க்கு 50 வீதம் வசூலிக்கவேண்டுமென ஏற்பாடு செய்தார். ஆகையினால் அரசாங்கத்தாரும் தீவிரமாக மொத்த விளைவில் தங்களுடைய பங்கை குறைத்துக்கொண்டனர். ஆகையால், ஜமீன்தார் நிலங்களிலும் ரையத்வாரி நிலங்களிலும் விகிதத்தில் வித்தியாசம் காணப்பட்டால் அது ஜமீன்தார்கள் விகிதத்தை உயர்த்தினதினால் ஏற்பட்டதல்ல. சர்க்கார் தங்களுடைய விகிதத்தை 19 நூற்றாண்டின் மத்தியில் குறைத்ததினால் உண்டானதாகும். சர்க்கார் தங்களுடைய நிலவரியை எந்த வேளையிலும் குறைக்கலாம். ஆகையினால் சர்க்கார் விகிதத்தை மாற்றி ரையத்வாரி நிலங்களில் தீர்வையை குறைத்தாலோ அல்லது அதிகப்படுத்தினாலோ, ஜமீன்தார்களும் அப்படியே மாறுதல்கள் ஏற்படுத்தவேண்டுமென்பது ஏற்படவில்லை ; அவர்கள் தாங்களும், சர்க்காரை ஒட்டி விகிதத்தை குறைக்கவேண்டும் என்பது சரியல்ல. ஜமீன்தார்கள், சட்டப்பிரகாரம் அநேகவித கடமைகளை தங்களுடைய குடிகளுக்கு செலுத்தவேண்டியிருக்கிறது. ஆனால் ரையத்வாரி நிலங்களில் சர்க்காருக்கு அவ்விதமாக கடமைகள் கிடையாது. ஜமீன்தார் வருமானமோ, தங்கள் குடிகளிடம் வசூலிக்கப்படும் வழக்கமான வரி ஒன்றே. அதைக்கொண்டுதான் அவர்கள் பொறுப்புகளை நிறைவேற்றவேண்டும். சர்க்காருக்கோ வருமான ஆதாரவுகள் அநேகம்.

வரி வசூலிப்பதற்காக ஜமீன்தார்கள் அதிகச் செலவில் ஸ்தாபனங்களை ஏற்படுத்தவேண்டி வருகிறது. நீர்ப் பாய்ச்சல்களை அவ்வப்பொழுது சரியான நிலைமையில் வைத்திருக்கவேண்டி வருகிறது. நீர், மழை இல்லாத வரட்சை காலங்களிலும் அவர்கள் சர்க்காருக்கு வருஷா வருஷம் பேஷ்கஷ் கட்டிதான் வரவேண்டும். தங்களுடைய குடும்பத்தில் உள்ள இளைஞர்கள் போஷணைகளை கவனிக்க தங்கள் பூஸ்திதியின் பேரில் பொறுப்படைக்கும்படி நேரிடுகிறது. தங்களுடைய, நிலவரி பங்கல்லாமல், குடிகளுடைய பங்குகளையும், முன்னதாகவே கட்டும்படியும் நேரிடுகிறது. குடிகளிடம் பின்னால் நிலவரியை வசூலிக்கும்படியும் ஆகிறது. அநேகமாக வசூல் செய்வதில் உள்ள தடைகள் பல. சில குடிகள் வரி கொடுப்பதற்கு எதிர்த்து பல இன்னல்களை விளைவிக்கிறார்கள். வசூலிக்கும் கிராம உத்தியோகஸ்தர்களில் சிலர் தங்களுடைய வேலைகளை சரியாகக் கவனிக்காமலும் ஜமீன்தாருக்கு நஷ்டத்தை உண்டாக்குகிறார்கள். ஆகையால் வசூல் செய்யமுடியாமற் போகும் பல கஷ்டங்களுக்காக மொத்த வசூலில் ஒரு பங்கு எப்பொழுதும் தள்ளப்பட்டே கணக்கு கொடுக்கவேண்டும். மேற்படி காரணங்களினால் சர்க்கார் அருகாமையிலுள்ள ரையத்வாரி நில விகிதம் ஜமீன்தார் நிலங்களுக்கும் வரியை சரிக்கட்டினால், ஜமீன்தார்கள் தங்கள் குடிகளுக்கு செய்யவேண்டிய பல கடமைகளை சரிவர கவனிக்கமுடியாது.

ரையத்வாரி வரி விகிதம், முன் சொன்ன பிரகாரம் தேறின விளைவில் சர்க்கார் அரை மடங்கு அடையவேண்டும் என்கிற கொள்கையின்பேரில் நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. சாதாரணமாக அரை மடங்கு வருமானமென்றால் 100-க்கு 40 வீதம் மொத்தத்தில் தேரும். மெக்லீன் துரையின் நிர்வாகமேன்யூல் புத்தகத்தில் நிலவரி வசூல் என்னும் அத்தியாயத்தில் இக்கொள்கையை கீழ்வருமாறு விவரித்திருக்கிறார்: பாரா 172.—“ நாட்டின் முழு விளைவை கணக்கெடுத்து, நிலவரியுடன் ஒப்பிட்டு பிரமாணக்கணக் கெடுத்தும், அத்துடன் தேறின விளைவை நிலசாகுபடி வேறுபாட்டுடன் ஒப்பிட்டு பார்ப்பதும் உசிதமான வழி. ஆனால் இது சுலபமாகவும் சரியாகவும் செய்யக்கூடிய வழி அல்ல. சர்க்காருக்கு நில வரி கட்டும் மொத்த நிலங்களில் விளைவைக்குறித்து நம்பக்கூடியதான கணக்குகள் கிடைக்கவில்லை. நிலவரி சராசரியாகத் மொத்த விளைவில் அரைமடங்கென்று நிர்ணயம் செய்யப்பட்டிருக்கின்றது. இவ்விகிதம் அவ்வப்போது மாறுபாடு அடைந்திருக்கிறது. ஒவ்வொரு ஜில்லாவில், ஒவ்வொரு விதமாக தானியமாகவோ, பணமாகவோ, வரி விகிதம் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. தற்காலத்தில், நிலங்களை சரிவர அளந்து

விளைவையும் கவனித்து வரி விகிதம் அதற்கேற்றபடி ரையத் வாரி நிலங்களில் புது நிலவரி நிர்மாணம் அமைக்கப்படுவதில், விகிதத் தொகை 100-க்கு 40 மடங்கு மொத்த விளைவில், சர்க்காரால் நீர்ப் பாய்ச்சல் அடையும் நிலங்களில் வசூலிக்கவேண்டுமென்றும், அப்படி நீர்ப் பாய்ச்சலில்லாத விடங்களில் $\frac{1}{3}$ மடங்கென்றும் ஏற்பட்டு, அது சராசரியாக தேறின விளைவில் அரைமடங்கு இவ்விதமாக சர்க்காரால் வசூலிக்க படுகிறதென்றும்" தெரிவிக்கிறார்.

இக்கொள்கைப்படி 20% வீதம் மொத்த விளைவில் சாகுபடி செலவுக்காக கணக்கினின்றும் தள்ளப்பட்டு பாக்கியில் தான் சர்க்கார் அரைமடங்கு கொள்கிறார்கள். அப்படி தள்ளப்படும் 20% வீதம் சாகுபடிச் செலவு நிமித்தம் போதாதெனக் கருதமுடியாது.

இவ்விதமான கொள்கையை செட்டில்மெண்டு அதிகாரிகள் கையாண்டு, அவ்வப்பொழுது நிலவரியை ஒத்திட்டு அமைப்பதினால் உண்மையில், தீர்மானித்த "அரை மடங்கு" என்னும் விகிதத்தைவிட எவ்வளவோ குறைந்தது என்று தான் நினைக்கவேண்டும். 1902-ம் ஜனவரி 16௳ இந்திய சர்க்காரின் நிலவருமான கொள்கையை ஒட்டிய, கவர்னர் ஜெனரல் சபையின் தீர்மானத்தில் இது ஒத்துக்கொள்ளப்பட்டிருக்கிறது. 19-ம் பக்கம் :—

"நிலவரி நிர்ணயம் செய்யும் உத்தியோகஸ்தர்கள், அக்காலங்களில் எவ்வளவு தாராளமாக நிர்ணயம் செய்கிறார்களென்பது, தெரிந்தவர்களுக்கு நன்றாக விளங்கும். சர்க்கார் வரிச்சுமையை நிலத்தின்பேரிலிருந்து குறைக்கவேண்டும் என்னும் கொள்கையை ஒட்டித்தான் இவ்வித தாராள தீர்மானத்தை அனுமதிக்கிறார்கள். வரி வசூல் உத்தியோகஸ்தர்கள் குடிகளிடம் பழகப் பழக அவர்களின் கஷ்ட நஷ்டங்களைத் தெரிந்துகொண்டு வரி நிர்ணய விஷயங்களில் நிர்ப்பந்த வழிகளைக் கையாளாமல் வருகிறார்கள். தங்களுடைய பெரும்பான்மை வாழ்நாட்களை குடிகளிடம் செலவழிப்பதினால் தான், நிலவரி நிர்ணய இலாகா உத்தியோகஸ்தர்கள் 'தாராள' வழியை தங்கள் வேலையில் கடைப்பிடிப்பது உசிதமென எண்ணுகிறார்கள்." பலவேறு நிலங்களில் விகிதம் மாறுபடுதலை தனிப்படையான உத்தியோகஸ்தர்களின் குணத்தினால் என்று ஓரளவு சொல்லலாம். சில சமயம், சில இடங்களில் அதிக விளைவுள்ள இடங்கள் குறைவான வரி கொடுப்பதையும், விளைவு குறைந்த நிலங்களில் வரி அதிகமாக கணக்கிடப்பட்டிருப்பதையும் சர்வ சாதாரணமாகக் காணலாம்.

ரையத்வாரி நிலங்களின் வரிக்குறைவுக்கு மற்றொரு காரணமுண்டு. வரி ஏற்பாடு 1870-ம் வருடம் தீர்மாணிக்கப்பட்டது. அப்போதிய கணக்குக்கு முந்திய 20 வருடமாக உலாவியிருந்த குறைந்த நெல் விலையை ஆதாரமாக எடுத்துக்கொள்ளப்பட்டது. அப்பொழுது பண்டங்களின் விலை குறைவு. பிறகு பண்டங்களின் விலை ஏறினபொழுதும், அதற்குத் தகுந்தபடி நில வரி உயர்த்தப்படவில்லை. ஜனங்களின் எதிர்ப்பை ஒட்டியும், சர்க்கார் சாதாரணமாக $18\frac{1}{4}\%$ மேல் வசூலிக்கக்கூடாது என்று கொள்கையை ஒட்டியும் நில வரியில் மாறுதல்கள் ஏற்படவில்லை. ஆனாலும் பிற்காலத்திய விகிதம் 2 தரம் நிர்ணயிக்கப்பட்ட காலங்களில், நில வரி கொஞ்சம் உயர்த்தப்பட்டுவந்தது. அதுவே முதலில் நிர்ணயிக்கப்பட்ட விகிதம் குறைவாகவிருந்தது என்பதை நிரூபிக்கின்றது.

"தேறின விளைவில் $\frac{1}{2}$ மடங்கு" என்ற கொள்கையையே சர்க்கார் அனுசரித்தனர். ஆர். சி. டட் என்பவர் கவர்னர்-ஜெனரலுக்கு இக் கொள்கையை மாற்றி அமைக்கும்படி எழுதின கடிதத்துக்கும் கவர்ன்மெண்டார் ஒப்பவில்லை.

1902-ம் வருஷத்தில் கவர்னர் - ஜெனரல் சொன்னதாவது :—

"நிலச்சுவான்தார்களிடமிருந்து சர்க்கார் வரி வசூலிப்பதில் 'தாராளக் கொள்கையை' தன் அனுபவத்தில் கொண்டுள்ளது. ஒரே மாதிரியாக 50% வரி விகிதத்தைத்தான் பின்பற்றி சில சமயம் வரிக் கணக்கில் குறைவாகவே வசூலிக்கிறது."

வரி விசாரணைக் கமிட்டியார் கூறுவதாவது :—

"சாதாரணமாக சர்க்கார், தேறின விளைவில் அரை மடங்கென்னும் கொள்கையை ஒட்டி வரி வசூலிப்பதில், விளைவு மாறுதலுக்கேற்றபடியானதாகவில்லை. ஓர் ஒழுங்கு வாரியான வரி மட்டம் எங்கும் இருப்பதாகத் தெரியவில்லை. சில இடங்களில் ஜில்லாவிற்கேற்றவாறு வரி குறைந்தும், சில இடங்களில் வரி இலாகா உத்தியோகஸ்தர்கள் போக்குப்படி வரி குறைவுபட்டும், குறிப்பிட்ட விகிதத்தை விட அதிகப்படாமல் எங்கும் குறைவான வசூலாகவே இருக்கிறது.

அதை ஒட்டி கீழ்வரும் குறிப்பை அக்கமிட்டியார் தெரிவிக்கின்றனர் :—

வருஷம்.	நிலப் பதிவின் எண்ணிக்கை. ரூ.	மொத்த சாகுபடி விஸ்தீர்ணத்தின் எண்ணிக்கை. ரூ.	ஏற்றுமதி விலைகளின் எண்ணிக்கை. ரூ.
1903–04	100·0	100	100
1904–05	97·8	100	101
1905–06	97·8	100	113
1906–07	104·8	103	135
1907–08	97·4	101	141
1908–09	104·3	105	147
1909–10	113·5	107	129
1910–11	102·0	107	123
1911–12	108·3	103	132
1912–13	111·5	108	141
1913–14	112·7	105	149
1914–15	111·2	109	155
1915–16	116·6	107	150
1916–17	115·9	111	156
1917–18	113·7	110	165
1918–19	113·9	97	193
1919–20	118·7	107	269
1920–21	111·5	102	273
1921–22	125·1	107	232
1922–23	124·4	108	238
1923–24	120·4	107	217

இதிலிருந்து நாம் காண்பதாவது, விலைகள் 100-க்கு 117-ஆக உயர்ந்த பொழுதிலும் நில வரி 20% தான் உயர்ந்திருக்கிறது. அதுவும் 100-க்கு 7 மடங்கு சாகுபடி நிலம் அதிகமானதால்.

ரயத்வாரி வரியானது சிக்கன வரியைவிட அதிகக் குறைவாயிருக்கிறது. மேலும் கொள்கைப்பிரகாரம் விளைவில் அரை மடங்கு என்றபொழுதிலும், சகஜமாகக் குறைவாக விதிக்கப்பட்டிருக்கிறது. வரி விசாரிப்புக் கமிட்டியாரின் அறிக்கையில் 60-வது பக்கத்தில் தீர்ந்த விளைவை செட்டில்மெண்டு உத்தியோகஸ்தர்கள் அரை மடங்காக விதிக்கும்பொழுது, போட்டிக் குத்தகையைவிடக் குறைத்தே விதித்துள்ளார்.

முடிவில், அருகாமையிலுள்ள ரயத்வாரி நிலவரி, ஜமீன் நிலவரியோடு ஒப்பிட சாத்திர முறைப்படி ஆதாரமில்லை. நிலச் சொந்தக்காரரின் உரிமையையும், குடிகளின் உரிமையையும் ஒட்டியாவது, அல்லது அவர்களுடைய கடமைகளும், திறமைகளும் விசாரிக்கப்பட்டாவது விதிக்கப்படவேண்டும்.

மற்றும் பல கஷ்டங்களாவன :—

பித்தாபுரம்போலுள்ள ஜமீன்களினருகில் ரயத்வாரி நிலம் கிடையாது. விசாகபட்டணம் ஜில்லாவில் 9/10, ஜமீன் பிரதேசம். இன்னும் சில ஜமீனுக்கருகில் வெகு சில ரயத்வாரி கிராமங்களே உள. பின்னும் ஒரு ஜமீன் கிராமத்தருகில் இரண்டு ரயத்வாரி கிராமங்கள் வெவ்வேறு நிலவரி திட்டத்துடன் காணப்படுகின்றன. ஆகையினால் அக்கம்பக்க ரயத்வாரி நில வரிகளை ஆதாரமாகக் கொள்ளுதல் சரியாகாது.

சில ஜமீன் நிலங்களில் அருகாமையிலுள்ள சர்க்கார் விகிதத்தைவிடக் குறைந்தே யிருக்கிறது. சேத்தூர் உதாரணமாகும். அந்த ஜமீன்களில் வரிகளை சர்க்கார் விகித அளவு உயர்த்தலாமா ?

வெங்கடகிரிபோன்ற சில ஜமீன்களில், அருகாமை ரயத்வாரி நிலத்திற்கும் நஞ்செய் தீர்வை, புஞ்செய் தீர்வைகளில் மாறுபாடுகள் காணப்படுகின்றன. சர்க்கார் தீர்வையை விடச் சிறிது குறைந்தே விதிக்கப்படுகிறது. அந்த ஜமீன்களில் நஞ்செய் தீர்வையைக் குறைக்கவேண்டுமானால், சர்க்கார் தீர்வையளவு புஞ்செய் தீர்வையை உயர்த்தலாமா ?

நாம் இதில் ஒரு வித்தியாசத்தைக் கவனிக்கவேண்டும். சர்க்காருக்கு ரயத்வாரி நிலங்களுக்குக் கொடுக்கப்படுவது வரியாகும்; ஜமீனில் குத்தகையாகும். குத்தகையையும் வரியையும் ஒன்றாக நினைப்பது சிக்கனமாகாது. நிலவரியானது சர்க்காரின் தேவைகளையொட்டி யமைக்கப்படுகிறது. குத்தகையோ ஜமீன்தாரின் நிலத்துக்காகவும், குடியானவர், நிலத்தில் பாடுபடுகிற விளைவுக்குத் தகுந்தவாறும் சேர்த்து விதிக்கப்படுகிறது.

ஆகையினால் ரயத்வாரி விகிதத்தைக்கொள்வது கூடுமானதுமல்ல நியாயமானதுமல்ல. காரணமில்லாமலும், நியாயமற்றும் ஜமீன்தார்களை இது பாதிக்கின்றது.

ரயத்வாரி ஏற்பாடான "அரைமடங்கு கொள்கை" சாசுவத ஜமீன்களில் ஆதாரமாகக் கொள்ளலாமா ?

சில யதாஸ்துக்களில் இக்கொள்கை சிபார்சு செய்யப்படுகிறது. திருநெல்வேலி காங்கிரஸ் கமிட்டியார் ரயத்வாரி விகிதத்தை, எவ்வித மாறுதல்கள் இருந்தபோதிலும் ஜமீன் நிலங்களை ஆதாரமாகக்கொள்ளலாமென்று சொல்லுகின்றனர்.

முதலாவதாக மேற் சொன்னவாறு மொத்த விளைவில் பாதியிலிருந்து, தேறின விளைவில் பாதி யென்பதே ஜமீன்தாரின் உரிமையை அபகரித்ததாகும்.

இரண்டாவதாக, இக்கொள்கையை உபயோகிப்பதில் அநேக கஷ்டங்களுண்டு. சாகுபடி செலவைக் கழித்து மிகுந்த விளைவு எவ்வளவென்பதை அறிய பலவித முறைகள் உண்டு. பயிர்ச் செலவுகள் என்னென்னவென்பதை யொட்டியும் பலவேறுபாடுகள் உள. சிலர் குடும்பச் செலவையும் அதனுடன் சேர்த்துவிடுகிறார்கள். இவ்விஷயங்களை நன்குணர்ந்தவரென்று விசாரிக்கப்பட்ட ஜோகி ராஜ் என்பவர், மொத்த விளைவில் 50% செலவுக்காக ஒதுக்கவேண்டுமென்கிறார்.

கவர்னர்-ஜெனரலின் கௌன்சில் 1902-ம் வருடம் பிறப்பித்த ஒரு உத்தரவில் நம் நாட்டுப் பழமொழியொன்றைக் குறிப்பிட்டு சாகுபடிச் செலவைப் பணமாகக் கணக்கிட்டால் ஒரு ஆடு மதிப்புக்கூட மீதியிராதென்று சொல்லியும், ஆனால் உண்மையில், குடியானவன் இதனால் பிழைப்பதல்லாமல், தன் நிலத்திற்கும் ஒரு விலை மதிப்பைக் கொடுக்கின்றான் என்ற உண்மையை நினைவிற்கொண்டால், பலவித தப்பெண்ணங்களெல்லாம் தோன்றாது என்கிறது.

சர்க்கார், மொத்த விளைவில் 20% சாகுபடிச் செலவுக்காகக் குறைக்கிறார்கள். "மெக்ளீன் மானுவல் ஆவ் அட்மினிஸ்டிரேஷன்" 144–145 பக்கம் பார்க்கவும்.

ஆதியில் "ஹெப்பர்ன்" துரை செங்கற்பட்டு ஜில்லாவில், ஏற்பட்ட விளைவில் அரைமடங்கு வீதம் வரி விதித்தார். "செங்கற்பட்டு ஜில்லா மேனுவல்" 227-ம் பக்கம் பார்க்க.

அவர் சாகுபடிச் செலவைக் கணக்கிட்டதாவது :—

	கலம்.
	201/256
விதை 4	70/256
12 குடியானவர் ஜீவனம்	11/256
மாடுகள் தீனி முதலியன	184/256
கொல்ல வேலையும் இதர செலவும்	100-க்கு 20
மொத்தம் சாகுபடிச் செலவுகள்	

வெவ்வேறு ஜில்லாக்களில் வெவ்வேறு விதமாகப் சாகுபடிச் செலவுகள் கணக்கிடப்பட்டிருக்கின்றதென்று செட்டில்மெண்ட் அறிக்கைகள் காண்பிக்கின்றன. சாதாரணமாக அவைகள், மொத்த விளைவில் 20% முதல் 35% வரை போகிறது. ஒரு இடத்திலும் சாகுபடிச் செலவுக்காக மொத்த விளைவில் 50 %

என்று காண்பிக்கப்படவில்லை. 1937-ம் வருஷம் டிசம்பர் மாதம் 2-ந்தேதி "நெல்லூர் ஜில்லா கெஜெட்டில்" செட்டில்மெண்ட் உத்தியோகஸ்தரின் அறிக்கையில் காணப்படுகிறது. அவர் கீழ்வரும் குறிப்பைக் காட்டுகிறார்—

தானிய வகை.	விளைவு, ஒரு ஏக்கருக்கு பட்டணம் படி விகிதம்.		மொத்தச் செலவு.	சாகுபடிச் செலவு ஏக்கருக்கு.	
	முக்கிய டிவிஷன்.	சப் டிவிஷன்.		முக்கிய டிவிஷன்.	சப் டிவிஷன்.
				ரூ. அ. பை.	ரூ. அ. பை.
நெல்	500—850	500—850	107	9 3 2 இருந்து.	10 8 3 வரை.
சோளம்	80—300	70—325	129	2 0 7 இருந்து 4 3 4 வரை.	1 8 0 இருந்து 2 14 7 வரை.
அருகா	112—500	120—150	64	1 6 7 இருந்து 2 7 5 வரை.	..
வரிகா	..	100—500	107	..	2 0 0 இருந்து 5 4 0 வரை.
சஜ்ஜா	..	60—325	107	..	1 3 8 இருந்து 2 5 0 வரை.

'பாடிஸன்' துரை முதல்த் திட்டத்தை வகுத்தார். சாகுபடி செலவை 100-க்கு 15 உயர்த்தினார். இந்தக் கணக்கு தாராளமாகவே காணப்படுகிறது. சாதாரணமாக உத்தியோகஸ்தர் குறிப்பிடும் சாகுபடிச்செலவு கணக்கு உண்மையைவிடவே அதிகமாகயிருக்கிறது.

கீழ்வரும் விஷயம் 1902-ல் இந்திய சர்க்கார் பிரசுரித்த 'இந்திய நிலவரிக் கொள்கை' என்ற புத்தகத்தில் 188—191 பக்கங்களில் காணப்படுகிறது:—

"சாகுபடிச்செலவானது, மனிதனுக்கு மனிதன், நிலத்துக்கு நிலம், பயிருக்குப் பயிர், வருஷா வருஷம் மாறுதலடைகிறதென்பது யாவரும் அறிந்த விஷயம். சிலர் எருவுக்காக, நடும் பயிரை உத்தேசித்து, அதிகம் செலவிடுவார். சிலர் தாமே உழுதல், தழைவெட்டுதல், களையெடுத்தல், அறுவடை செய்தல் முதலியவற்றைச்செய்கிறார்கள். ஆனால் பிராமணனோ, வணிகனோ, அல்லது இதர குடியானவரல்லாதார், வேலையாட்களையமர்த்தியும், வேண்டிய சாகுபடிச்செலவுகளைச் செய்கிறார். செட்டில்மெண்ட் உத்தியோகஸ்தர்கள் விளைவு மதிப்புப் போடும்போது அநேக வருட கணக்குகளை ஒத்திட்டும், பொதுவாக நில விளைவுகளைக் கணக்கிட்டும், மற்றும், பல குடியானவரின் பழக்க வழக்கங்களையனுசரித்தும் விகிதத்தைத் தீர்மானிக்கிறார்கள். உதாரணமாக செழிப்பான நிலத்துக்குத்தான் அதிகச் செலவு செய்கிறான், மட்ட நிலத்துக்குக் குறைக்கிறான். ஆகையால் விளைவுக்கும் செலவுக்கும் அதிக தாரதம்மியம் ஏற்படுகிறதென்பதை உத்தியோகஸ்தர்கள் தெரிந்துகொள்கிறார்கள்."

* * * * * *

"இம்மாதிரியாக சாகுபடிச்செலவை மதிப்பிடுவதிலும் சில குறைகளுண்டு. உதாரணமாக, குடியானவன் மாடு ஒவ்வொன்றுக்கும், வேலை ஒவ்வொன்றுக்கும் தனித்தனியாக மதிப்புப்போட்டு மொத்தத்தை உண்மையைவிட அதிகமாக்குகிறான். குடியானவர்கள் கணக்கில் காட்டும் எல்லா மாடுகளையும் கடையில் வாங்குவதில்லை. வேலைகளுக்கும் தானியமாகவோ பணமாகவோ தனியாக செலவு செய்வதில்லை. மேலும், மாடுகள் உழவுத்தொழிலேயன்றி இதர வேலைகளும் செய்கின்றன. கணக்கில் காட்டிய தீனிச்செலவேயன்றி சுலபமாக மேய்ந்தும் வாழ்கின்றன. புஞ்செய் நிலங்களில் குடியானவன் தன் குடும்பத்தோடு பாடுபடுகிறான். வேலையாட்களை கூலிக்கு வைப்பதில்லை. ஒருவருக்கொருவர், உழுதல், அறுவடை செய்யுங்காலங்களில், உதவி செய்துகொள்கிறார்கள். பயிருக்கு வேண்டிய எருவும், மாடுகளிடமிருந்து கிடைக்கின்றன. பையன்களும், பெண்களும் காடுகளிலிருந்து இலை, மிலாறு முதலிய எருக்களை கொணர்கிறார்கள். மாடு மேய்த்தல் சுலபமான காரியம். வைக்கோலைப் பணமதிப்பிட்டு விகிதத்தில் செட்டில்மெண்ட் உத்தியோகஸ்தர் சேர்ப்பதில்லை. முன்காலத்தில், வைக்கோல் மதிப்பும், பயிர்ச் செலவும் செட்டில்மெண்டில் சரிசெய்யப்பட்டது. இப்பொழுதும் வாரக்குடிகள், நல்ல நிலங்களை மொத்த விளைவில் நாலில் ஒன்றுக்கும், வைக்கோலுக்கும் பயிரிடுகிறார்கள்.

* * * * * * *

உண்மையான சாகுபடிச்செலவு 'செட்டில்மெண்ட் இலாக்கா' மதிப்பைவிட அதிகமாக இருந்தால் அநேக ஜில்லாக்களில் மொத்த விளைவும் அவர்கள் மதிப்பைவிட அதிகமாக இருக்கவேண்டும். அநேகமாக நஞ்செய் புஞ்செய்கள் ஒரே மாதிரியாக அரை விகிதப்படி கணக்கிடின், நஞ்செய், ஜமீன்தாருக்கு அரைக்குமேல் அதிகமாகவும், நல்ல நிலங்களில் 2/5-ம், சாகுபடிச்செலவுக்காக மொத்த மதிப்பில் 1/3 அல்லது $\frac{1}{4}$ தவிர, மீதியை லாபமாகவே கணக்கிடவேண்டும்.

வரி விசாரணைக்கமிட்டியார் நிலவரி விதிப்பதற்காக அநேக திட்டங்களைப் பரிசோதித்தார். மொத்த விளைவுக்கும் வரித்தொகைக்கும் ஒத்திட்டு அவர்கள் அறிக்கையில் (95-வது பகுதி, 75-ம் பக்கம் பார்க்க) காட்டியிருக்கிறார்கள்:—

"தேர்ந்த விளைவில் நிலவரியாக சர்க்கார் அடையும் பங்கு நிச்சயமின்றி மாறுகிறது. இதர நாடுகளில் நிலவரி ஒரு திட்டமான கொள்கைப்படி அமைக்கப்படுகிறது. இந்தியாவிலே வாடகை அல்லது தேறின மதிப்பின்பேரில் வரி விதிக்கப்படுகிறது. வாடகையானால் வழக்கத்தையொட்டியோ, நிதானமாகவோ, அல்லது தீர்மானத்தின்பேரிலோ ஏற்படுகிறது. தேறின மதிப்பானது குடியானவனின் சாப்பாட்டுக்செலவைக்கொண்டோ, கொள்ளாம்லோ இருக்கலாம். வரி விதிப்பு செட்டில்மெண்ட் உத்தியோகஸ்தரின் எண்ணப்படிக்கோ, ஜில்லாவின் நிலைமை பற்றியோ, குடியானவரின் ஏற்பாடுகளைப்பற்றியோ, அல்லது மாகாண சர்க்கார் உயர்த்துகிற முறைப்படியோ, மாறுகிறது. ஆகையினால் நிலவரி எவ்வளவு தூரம் நிலத்தைப் பாதிக்குமென்பதைக் கணக்கிட முடியவில்லை. சர்க்காரின் புள்ளிவிவரங்கள் நம்பக்கூடியதாக இல்லை. கமிட்டியார் இந்திய நிலவரி நிர்ணயம் ஒருவித ஒழுங்கான கொள்கையை ஒட்டினதாகயில்லையென்று தீர்மானிக்கிறார்கள்."

ஆகையால் சாகுபடிச்செலவிற்கு புள்ளிகளை இஷ்டப்படி ஏற்றியோ குறைத்தோ விடலாம். வரி விகிதமும் தனித்தனி நபர்களின் போக்குப்படி அமைக்கப்படுகிறது. அதிக வித்தியாசங்களும் நிலையில்லாத் தன்மையும் காணப்படுகின்றன. வரி விசாரணைக் கமிட்டியாரே தேர்ந்த விளைவில் அரை மடங்கு கொள்கையைத் தள்ளும் பொழுது ஜமீன்களில் அதை ஆதாரமாகக்கொள்வது சரியல்ல.

முடிவில், வரித்திட்டமானது மொத்த விளைவில் ஒரு பங்காக ஏற்படுத்தப்படவேண்டும். சிலர் மொத்த விளைவைக் கணக்கெடுப்பது அநேக விதமாக முடியுமென்றும், ஆகையினால் ஒருவித நிச்சயமில்லையென்றும் சொல்லுகிறார்கள். இருந்தபோதிலும், இதில் நிச்சயமில்லாத விஷயம் ஒன்றே ஒன்றுதான். அதாவது உண்மையானசாகுபடிச் செலவு. ஆனால் அரை மடங்கு கொள்கையில்சாகுபடிச் செலவுக் கணக்கும்மொத்த விளைவுக்கணக்கும் சரியாக இராது. ஆகையினால் மொத்த விளைவு கொள்கையே மேலானதாகக் காணப்படுகிறது. பழைய காலத்திற்கூட வாரக் குத்தகையிடங்களிலும் இந்தத் திட்டந்தான் பரவி யிருக்கிறது. 1901-ம் வருஷம் ஆர். சி. டட், வைசிராய்க்கு எழுதிய கடிதத்தில் ரயத்வாரி பிரதேசத்தில் இத்திட்டத்தை யொட்டி மாறுபாடு செய்யும்படி சொல்கிறார். கமிட்டியாரின் விசாரணைக் காலத்தில் அனுபவமுள்ள பலர் ஜமீன்தாருக்குக் கொடுக்கும் பகுதியானது மொத்த விளைவில் ஒரு பாகமாக இருந்தால் நலம் என்றனர். இந்தத் திட்டந்தான் அதிக தடையில்லாமலும், சாஸ்திர முறைப்படியும் ஒத்துக்கொள்ளப்படுகிறது.

ஜமீன் நிலங்களில் குத்தகை சரியானதா அல்லவா என்று 'செட்டில்மென்ட்' உத்தியோகஸ்தர்கள் பரிசோதிக்கும்போது இந்தத் திட்டத்தை ஆதாரமாகக் கொள்ளல்வேண்டும். இப்பொழுது ஜமீன்தாரின் பகுதி மொத்த விளைவில் எவ்வளவென்று தீர்மானிக்கலாம். ஜமீன் குடிகளின் நிலத்தைக் கவனிக்கிறவர்கள் மனு தர்மப்படிப்படி மொத்த விளைவில் 1/6 மடங்கென்கிறார்கள். ஜமீன்தார்களோ நிலையான திட்டப்படி நிலத்தை மதிப்பிட்டதற்கேற்றபடி தங்களுக்கு மொத்த விளைவில் அரை மடங்கு நியாயமாகச்சேரவேண்டுமென்கிறார்கள். நாமும் பல காரணங்களால் ஜமீன்தார்கள் அரை மடங்குக்கு உரியவர் என்கிறோம்.

மொத்த விளைவில், ஆறிலொரு பங்கு பரிமாண அளவே பேஷ்கஷ்.

மற்றொரு யோசனையானது தீர்வை, மொத்த விளைவில் ஆறிலொரு பங்குடன் சர்க்காருக்குக் கட்ட வேண்டிய பரிமாண அளவு 'பேஷ்கஷை' சேர்க்கவேண்டுமென்பதாகும். இதற்குக் காட்டப்படும் காரணங்களாவன சாசுவத திட்ட காலத்தில் 'பேஷ்கஷ்' மொத்த விளைவில் 2/3 பங்கோ அன்றி அரை மடங்கென்றோ ஜமீன்தார்களுக்குக் குடியானவர்கள் கொடுக்கும் திட்டம் அது எனவும் கொண்டு விதிக்கப்பட்டது. ஆகையால் 'பேஷ்கஷ்' தவிர மொத்த விளைவில் ஆறிலொரு பங்கே ஜமீன்தாருக்குச் சேருகிறது. இந்தவிதமான வாதம் தவறாகும். சாசுவத திட்ட காலத்தில் 'பேஷ்கஷ்' இவ்வாறு அமைக்கப்படவில்லை. நெல் விலை உயர்வு குறைவைப் பற்றியாவது, கால வேறுபாடுகளை ஒட்டியாவது அமைக்கப்படவில்லை. நிரந்தரமாக 'பேஷ்கஷ்' இவ்வளவென்று பணமாகத் தீர்மானிக்கப்பட்டது. இதற்குப் பதிலாக ஜமீன்தாருக்கு நில உரிமை கொடுக்கப்பட்டது. அப்போது சர்க்கார் அந்நிலங்களில், குறைந்தது பயிரிட்ட நிலங்களில் மொத்த வருமானத்தில் 50%ஐயும்கரம்பை நிலத்தில் கிடைக்கக்கூடிய வருமானத்தையுமடைந்து வந்தது.

அக்காலத்தில் சர்க்கார், நெல் விலை உயர்வு தாழ்வினால் ஏற்படும் லாப நஷ்டத்தை ஜமீன்தார்களே அடையும்படி விட்டு விட்டார்கள். ஜமீன்தார்கள் தீர்வையைப் பணமாக வசூலிப்பதில் சாசுவத திட்ட காலத்தில் இருந்த வரியையே ஆதாரமாகக் கொள்ளவேண்டுமென்று ஒருவித கட்டுப்பாடும் ஜமீன்தார் மீது சுமத்தப்படவில்லை. 34-வது பகுதி, 'குறிப்பு அறிவிக்கும் சாசனத்தில்' மொத்த விளைவில் 50% பதிலாகக் குடிகள் சர்க்காருக்கோ அன்றி நிலச் சொந்தக்காரருக்கோ, பணமாகவோ அல்லது பண்டமாகவோ வழக்கமான பங்கைக் கொடுக்கும்படிதான் சொல்லுகிறது. ஆகையால் பண்ட விலையுயர்வால் குடிகள்தான் லாபமடைய வேண்டுமென்றும், ஜமீன்தார்கள் பாதிக்கப்பட வேண்டுமென்றும் ஏற்படவில்லை. முன்னர் சொன்ன ஆட்ஸன் துரை திண்டுக்கல் ஜில்லா அறிக்கையில் இது ருசுவாகிறது. ஜமீன்தார்களின் 'பேஷ்கஷ்' நில வருமானத்தில் 2/3 என்று எப்பொழுதும் வழங்கவேண்டுமென தீர்மானிக்கப்படவில்லை. ஜமீன்தாரின் வருமானமும் அதிகப்படவேண்டுமென்றுதான் எண்ணப்பட்டது. அக்காலத்தில் தைரியமாக முன்வந்து, சர்க்கார் கேட்ட 2/3 பங்கு 'பேஷ்கஷ்' கொடுக்க ஒப்புக்கொண்டபோது இவ்வித வருமான உயர்வை எதிர்பார்த்துத்தான் செய்தார்கள். செங்கற்பட்டு, கஞ்சம் முதலிய இடங்களில் 'பேஷ்கஷ்' கொடுக்கப்படாததால் ஜமீனையே விற்கவும் நேர்ந்தது. ஜமீன்தார்கள் சிக்கன வாழ்க்கையாலும், நில சீர்திருத்தங்களினாலும், கரம்பு நிலங்களை உழவுக்குக் கொண்டு வந்ததினாலுந்தான் வருமானத்தையும் அதிகமாக்கி, சர்க்காருக்கு அதிக 'பேஷ்கஷ்' கொடுத்து வந்தார்கள்.

பயிர்த் தொழில் அதிகப்பட்டதினாலும், விளைவு விலை ஏறியதாலுந்தான், சாசுவத திட்ட காலத்தைவிட தற்பொழுது ஜமீன்தார்களின் வருமானம் அதிகமென சான்றுகளுடன் காட்டலாம். வெங்கடகிரி ஜமீனை எடுத்துக்கொண்டால், 1802-ல் 'பேஷ்கஷ்' கலெக்டர், ஸ்டிராட்டன் துரை மொத்த வருமானத்தைப் பின் வருமாறு காண்பிக்கிறார். அத்தேதியில் பண வரும்படி 2,48,438–12–1/16 வராகன்கள். 9,778–18–4 3/4 பாரம் நெல் மதிப்பு 74,986–3–14/16 வராகன். அதாவது ரூபாயில் 2,88,696. ஒரு பார நெல் மதிப்பு, 29. ரூபாயாக மொத்த வருமானம் ரூ. 9,56,485. இப்போதுள்ள விலை மதிப்புப்படி பாரமொன்று 50 ரூபாய் விலை மதித்தால் ஜமீனின் மொத்த வருமானம், தற்கால விலைப்படி 1802-ல் ரூ. 11,56,489 ஆகும். இப்பொழுது அதே மதிப்பின்படிதான் இந்த ஜமீனில் வருமானம் கிடைக்கிறது. நாம் 1802-க்குப் பிறகு பயிரிடப்பட்ட நிலத்தைக் கணக்கில் கொண்டுவரவேண்டும். 1346-வது பசலி, ஜமீனின் மொத்த வருமானம் 12,85,000 ரூபாயாகும். ஆனால் இதில் 1802-ல் இல்லாத பல புதிய கிராமங்களின் வருமானம் சேர்க்கப்பட்டிருக்கிறது. 1802-க்குப் பிறகு அநேக அக்ரகாரமும், இனமும் ஜமீனில் சேர்க்கப்பட்டன. இவைகளின் வருமானங்களைக் கழித்தால் 1802-வது வருஷ வருமானத்துடன் சரியாகத் தோன்றும்.

1802-ல் வாரத் தீர்வைதான் பரவியிருந்தது. வாரத் தீர்வையில் திட்டத்துக்கும் வசூலுக்கும் வித்தியாசமேற்படாது. 1802-ல் வசூல் செய்யப்பட்ட தீர்வைநெல் உண்மையாக வசூலானதே தவிர, ஜமீன்தாருக்குச் சேரவேண்டிய தீர்வை கணக்கேயல்ல. ஆகையால் அதை ஒப்பிடும்பொழுது தற்காலத்திய தீர்வை விதியோடல்லாமல் தீர்வை வசூலோடு ஒத்திடவேண்டும். அப்படிச் செய்தால் வருமானக் குறைவே தென்படுகிறது. சாசுவத திட்ட காலத்திலிருந்து ஜமீன்தாரின் கடமைகள் அதிகரித்து விட்டன. 1802-ல் நிலவரி கிடையாது. 1866-ல்தான் அது விதிக்கப்பட்டது. ஆதியில் 'ரூபாய்க்கு ஆறு தம்பிடி' என்றும் 50 வருஷத்துக்குப் பிறகு மூன்று மடங்காகவும் உயர்த்தப்பட்டது. முதலில் ஜமீன்தார்களே குடிகளின் பகுதியையும் சேர்த்துக் கொடுத்தார்கள். அதை வசூலிக்கச் செலவும் செய்தார்கள். உதாரணமாக வெங்கடகிரி ஜமீன்தார் இப்பொழுதும் நில வரியாக ரூ. 1,15,000 கட்டுகிறார். இதில் அவர் பங்கு ரூ. 60,000 தான். இம்மாதிரியான செலவு சாசுவத திட்ட காலத்தில் எதிர்பார்க்கப்படவில்லை.

சாசுவத திட்ட காலத்தில் குடிகளின் பொருளாதார நிலைமையும், தற்கால நிலைமையும்.

சாசுவத திட்ட காலத்தைவிட இப்பொழுது மேலாக இருக்கிறது. 1802-ல் விளைவில் அரை மடங்கு கொடுத்ததைவிட, 'மேல்வாரம்' 'அபுவாப்ஸ்' 'மஹோதஸ்' முதலிய தீர்வைகளையும் கட்டுகின்றனர். இப்பொழுது பண்ட விலைகள் 100% அதிகமானதால் குடிகள் நன்மையடைகிறார்கள். அக்காலத்தைவிட தற்போது ஏற்பட்டுள்ள சிறந்த போக்குவரத்து சாதனங்களால் தங்கள் பொருள்களை சுலபமாக விற்பனை செய்கிறார்கள். 1802-ல் குடிகள் கிராம அதிகாரிகளுக்கு முழுதுமோ அன்றி பாதியோ கொடுத்தார்கள். 1894-ம் ஆண்டு (சட்டம் நெ. 2) குடிகள் கொடுக்கவேண்டிய 'ருசும்' 'மேராஸ்' தள்ளுபடியாயின். இப்பொழுது கிராம அதிகாரிக்கும் ஒன்றும் கொடுப்பதில்லை. பல ஜமீன்களில் 30 அல்லது 50 வருஷங்களுக்கு முன்பு தீர்வை பணக்கணக்கில் மாற்றப்பட்டது. அத்தீர்வைகள் இதுவரை உயர்த்தப்படவில்லை. அக்காலத்திலிருந்து, பண்டங்களின் விலைவுயர்வினால் குடிகளே லாபமடைந்து வருகிறார்கள். கோர்ட்டு மூலமாகத் தீர்மானிக்கப்பட்ட இடங்களிலும், ஜமீன் நிலச்சட்டத்துக்கேற்ப 1 ரூபாய்க்கு 2 அணா தான் அதிகப்படுத்தப் பட்டது. ஆனால் பண்ட விலைவுயர்வோ 100% அந்நாளில் குடிகளுக்குச் சுலபமாக கடன் கிடைப்பதில்லை, வட்டியும் 24% ஆக கொடுக்கவேண்டியிருந்தது. இப்போதோ, "கோவாப்ரேடிவ் பாங்குகள்" இருக்கின்றன; இன்னும் பல சட்டங்கள் வட்டிகளைக் குறைக்கின்றன. குடிகள் கடன் கொள்வதற்கு அநேக சாதனங்களுமுள. மொத்தத்தில் குடிகளின் பொருள் நிலைமை சாசுவத திட்டகாலத்தைவிட இப்பொழுது மேன்மை யடைந்துளது. "குடிகள் கஷ்டப்படுகிறார்களென்றால் அதற்குக் காரணம் வேறு. நில வுழவைவிட்டுக் குத்தகை விட்டுச் சாப்பிடுவதாலும், குடிச் செலவு அதிகமானதாலும், அவர்கள் கஷ்டப்படுகிறார்கள். மேலும் வழக்குகளில் காலத்தையும் பணத்தையும் செலவிடுகிறார்கள்." [வரி விசாரணைக் கமிட்டி அறிக்கை—பக்கம் 346—347.]'' மேலும் ஜமீன்தார்கள் மொத்த வருமானத்தில் "பேஷ்கஷை" தவிர ஆறிலொரு மடங்குதான் அடையவேண்டுமென சொல்லுகிறவர்கள், சாசுவத திட்டகாலத்தைவிட இப்பொழுது அதிகமான நிலங்கள் பயிரிடும் நிலைக்குக் கொண்டுவந்திருப்பதையும், அக்காலத்தில் ஜமீன்தார்கள் சர்க்காருக்குத் தனித்தொகை கட்டவேண்டுவதில்லை என்பதையும் மறந்துவிடுகிறார்கள். இப்பொழுதும், 1802-ம் ஆண்டில் எவ்வளவு நிலந்தான் பயிரிடப்பட்டதென்று கணக்கிடப்பட முடியவில்லை. ஆகையினால் ஜமீன்தாருக்கு நியாயமாக மொத்த விளைவில் பாதிதான் சேரவேண்டுமே ஒழிய ஆறிலொரு மடங்கென்பது நியாயமாகாது.

கமிட்டியார் முதலிலேயே எழுப்பிய கேள்விகளில் 1802-ம் ஆண்டில் பயிரிடப்பட்ட நிலங்களின் கணக்குகளைச் சேர்க்கவில்லை. ஆகையால் பிறகு இவ்விஷயத்தைப்பற்றி, விசாரணையில் சாக்ஷிகள் சொல்லியதிலிருந்து, நாம் ஜமீன்தாருக்கு எதிராக எடுத்துக்கொள்ளக்கூடாது. மேலும் பின்னால் அனுப்பப்பட்ட கேள்விகளிலும், 1808-ம் ஆண்டுக்குப் பிறகு பயிரிடப்பட்ட நிலக்கணக்குதான் கேள்க்கப்பட்டது.

எது எப்படி இருந்தபோதிலும், நாம் அக்காலக் கணக்குகளை இப்பொழுது நிச்சயமெனக் கொள்ள ஆதாரமில்லை. வெங்கடகிரி ஜமீன் கணக்குகளை விவரிக்கும்போது ஸ்டிராட்டன் துரை, "கிராமக் கர்ணம் வாரத் தீர்வைப்படி பயிரிடப்பட்ட நிலக்கணக்கைச் சரியாக வைக்கவில்லை யென்றும், சில இடங்களில் கணக்கேயில்லை" யென்றும் கூறுகின்றார். பின்னும் நிலத்தின் அளவு ஜமீனுக்கு ஜமீன் வெவ்வேறு விதமாகக் கணக்கிடப்பட்டிருந்தது. உதாரணமாக ["மேற்குப்பாளைய அறிக்கை" (ஸ்டிராடன் துரையது) பக்கம் 198, பகுதி 30 பார்க்க.]

தெற்குப் பர்கானாவில் :

96 ஆள் (கால்) சதுர அடி = 1 குண்டா.

24 குண்டா = 1 குர்ரோ.

5 குண்டா பயிரிட = 1 தூம் நெல் விதை.

5 குண்டா நிலத்துக்குச் சராசரி விளைவு 15 தூம்.

வட பர்கானங்கள் :

64 ஆள் (கால்) சதுர அடி = 1 குண்டா.

50 குண்டா = 1 குர்ரோ.

12½ குண்டா பயிரிட = 1 தூம் விதை நெல்.

அதில் விளைவும் மேற்சொல்லிய வாறேயாம்.

நில அளவு, விளைவுக்கேற்ற விதைக்குத்தக்கபடி கணக்கிடப்பட்டுளது. விசாகபட்டணம் ஜில்லாவில் :

1 கரிசை நஞ்செய் = 2 ஏக்கர்.

1 கரிசை புஞ்செய் = 4 ஏக்கர்.

இவ்விதமாக நில அளவு பல இடங்களில் பலவிதமாக உளது. 1802-ம் ஆண்டில் சாசுவத திட்ட காலத்தில் நிலத்தை உண்மையாக அளந்து கணக்கிடவில்லை. கிராமாதிகாரிகளும், "சர்வே" உத்தியோகஸ்தர்களும் மனம் போனவாறு கணக்கிட்டனர். நஞ்செய், புஞ்செய், தோட்டம் என்ற வேறுபாடு இல்லை. பின்னால் நஞ்செய், புஞ்செய்ஆக மாற்றினதற்கும் கணக்கில்லை. இந்நிலையில் ஜமீன்தார்கள் மொத்த விளைவில் ஆறி லொருபங்கும், அதற்குத்தகுந்த "பேஷ்கஷ்" அடையவேண்டுமென்பதும் சரியாகாது.

தற்கால ஜமீன் தீர்வை நியாயமான தீர்வையாகுமா.

ஜமீன்தார்கள், தீர்வைகளை அதிகமாக வசூல் செய்யவில்லையென ஏற்பட்டதினால், நாம் குடிகள் கொடுக்கும் தீர்வை இப்பொழுது கஷ்டமுண்டு பண்ணாததாகவும், நியாயமானதாகவும் இருக்கிறதாவென்று கவனிப்போம். அல்லது தீர்வையைக் குறைக்கப் போதுமான காரணங்கள் உண்டா? ஜமீன்தாருக்கு நியாயமாகப் பணத்தீர்வையாகக் கட்டப்படுமிடத்தில், மொத்த விளைவில் அரை மடங்கு கொடுக்கப்பட வேண்டுமென்ற போதிலும், சாதாரணமாக 40% அல்லது 1/3 தான் கிடைக்கிறது. இப்பொழுதும் இராமநாதபுரம் ஜில்லாவில் வாரக் குத்தகை, நிலங்களில் மொத்த விளைவில் அரை மடங்குதான் வசூலிக்கப்படுகிறது. இப்படி ஜமீன்தாரின் பங்கு குறைந்ததற்குக் காரணம், வாரத் தீர்வையைப் பணத் தீர்வையாக மாற்றினதும், பண்டவிலை உயர்ந்ததுமாகும். சில ஜமீன்களில் 12½% தான் தீர்வை உயர்ந்துளது. எப்படிக் கவனித்தாலும் குடிகள்தான் லாபமடைகிறார்கள். அவர்கள் கட்டும் தீர்வையோ மொத்த விளைவில் அரை மடங்குக்குக் குறைந்ததே.

தீர்வை நியாயத்தைப் பரிசோதிக்கும்போது நாம் முக்கியமாக கவனிக்கவேண்டியது, அவர்கள் கீழ்க் குடிகளிடமிருந்து எவ்வளவு குத்தகை வரி வசூலிக்கிறார்களென்று பார்க்கவேண்டும். ரயத்வாரி நிலங்களில் இது கவனிக்கப்படுகிறது. வரி விசாரணைக் கமிட்டியார் அறிக்கை பக்கம் 60-ல், "குத்தகை வசூல் செய்யும் குடிகள், பயிரிடும் குடிகளிடமிருந்து அடைகிற தொகை, பயிர்ச் செலவுக்கு ஒருவித தடையாக மாறி, 'செட்டில்மென்ட்' உத்தியோகஸ்தர் கணக்கிட்டவாறு இல்லாமல், போட்டிக் குத்தகை விகிதத்தைவிடக் குறைந்தே தோன்றுகிறது." இப்பொழுது, குடிகள் குத்தகையை விளைவில் ஒரு பங்கென விடுகிறார்கள். குடிகளும், பயிரிடுவோரும் அரை, அரை மடங்கு கொள்கிறார்கள். நஞ்செய், புஞ்செய் இரண்டிலும் இந்தத் திட்டமே ; ஆகையால் சராசரி பயிர்ச் செலவுக்காகவும், பயிரிடுவோரின் குடும்பச் செலவுக்கும், நிலத்தின் குணத்துக்கேற்றவாறு, மொத்த விளைவில் குறைந்தது 2/5, 1/3 அல்லது $\frac{1}{4}$ ஒதுக்கப்படவேண்டும். [இந்திய சர்க்கார் நிலவரிக் கொள்கை, பக்கம் 191.]

ஸ்ரீ ஜோகிராஜ், விசாகபட்டணம் ஜில்லாவில், சிலமாதிரி கிராமங்களில் எடுத்த கணக்குப்படி ; "சராசரி நிலத்தீர்வை 12 கிராமங்களில் : நஞ்செய்க்கு ரூ. 11 ; புஞ்செய்க்கு ரூ. 3. அவைக்காக உழவுசெய்யும் குடி குத்தகை கொடுப்பது : நஞ்செய் ரூ. 33 ; புஞ்செய் ரூ. 15 ; ஆகையால் சராசரி 5 ஏக்கர் உடையகுடி 3 ஏக்கர் நஞ்செய்க்கு உழவுசெய்யும் குடியைவிட ரூ. 3 அதிக தீர்வை செலுத்தவேண்டியுளது. [மதராஸ் விவசாய இலாக பிரசுரம் நெ. 40 'விசாகபட்டணம் ஜில்லா குடிகளின் நிலை' பார்க்க.] கமிட்டியார் இஷ்டப்பட்டபடி சாக்ஷிகள் காட்டிய குத்தகைப் பத்திரங்களிலிருந்து, உழவுக் குடிக்குக் கொடுத்து மீந்த வருமானம், மிகவும் அதிகமெனத் தெளிவாய் விளங்குகிறது.

தீர்வை விதிப்பதில் கவனிக்கவேண்டிய விஷயங்கள்.

ஜமீன்தாருக்குக் கொடுப்பதைவிடக் குடியானவர்கள் இரண்டு மடங்கு வருமானம் அடைகிறார்கள் என்று நிரூபிக்கப்பட்டுளது. நாம் தீர்வை விதிக்கும் விஷயத்தில் குடியானவனை பயிரிடுபவனாகக் கருதிக் கணக்கிட வேண்டும். அன்றேல், குடியானவனைக் குத்தகை விடுபவனாகக் கருதினால், அவன் ஒரு மத்திய முதலாளியாக மாறிவிடுகிறான். ஆகையால் குடிகளின் தீர்வை அநீதியென்பதும், கஷ்டமுண்டுபண்ணுவதென்பதும் ஜமீன்தாருக்கு லாபமளிப்பதென்பதும் முழுதும் பொய். இரண்டாவதாகத் தீர்வை தீர்மானிப்பதில் நிலத்துக்குக் கிராக்கி உண்டா என்று பாராமல், ஜமீன் நிலங்களின் விற்பனை விலையைக் கவனிக்கவேண்டும். கமிட்டியார் முன்னால் அநேக ஜமீன்தார்கள் பட்டா ரசீதுகளையும், விற்பனை சாசனங்களையும் காட்டினார்கள். அதிலிருந்து ஜமீன் நிலங்களின் விலை மதிப்பு அதிகமாகக் காணப்படுகிறது. உண்மையில் ஜமீன் தீர்வை அதிகமாயிருந்தால், அந்நிலங்களின் விலைமதிப்பும் அதிகமாக யிருக்குமா ? பிண்ட்லே ஷிராஸ் என்பவர் 'பொதுப் பணசாஸ்திரப்' புத்தகத்தில் தொகுதி I, பக்கம் 417-ல் : 'செட்டில்மென்ட் உத்தியோகஸ்தர்கள், ரயத்வாரி நிலங்களில் தீர்வையை மாற்றியமைக்கும்போது, நில விற்பனை விலையை ஆதாரமாகக் கொள்ளவேண்டுமென்கிறார். தீர்வை தீர்மானிக்கப்படும் முன் அவர்கள், கூலி, வாடகை, விலை, மழை, அடமான மதிப்பு முதலியவைகளைக் கவனிக்கவேண்டுமென்கிறார். வாடகைப் பணமும், விற்பனை விலையும் நியாயமான தீர்வைக்கு வழிகாட்டி என்று சொல்கிறார்.

உண்மையில் சில நாடுகளில் நிலத்தின் மொத்த மதிப்பை யொட்டித்தான் வரி விதிக்கப்படுகிறது. ஜப்பானில் வருடாவருடம் நிலமதிப்பில் ஒரு சதாம்சம் தீர்வையாகக் கொள்ளப்படுகிறது. அவ்வப்போது மாற்றமும் அநுகூலமாகயிருக்கிறது. இந்தியாவில் இக்கொள்கையை அனுசரித்தால் சரித்திரத்துக்கும் பரிபாலனத்திற்கும் புதிதாகத் தோன்றும். [பிண்டிலே ஷிராஸ் டி புத்தகம், தொகுதி I, பக்கம் 472]. மேலும் அக்காலத்தில் தீர்வையானது குடிகளுக்கும் ஜமீன்தார்களுக்குமுள்ள ஒப்பந்தத்தின்பேரில் விதிக்கப்பட்டது. இவ்வித ஒப்பந்தங்களை சாசுவத திட்டம், பட்டா ஒழுங்குபாடு, வாடகை வசூல் சட்டம் (1865-ம்ஞு) முதலியவைகள் சட்டப்பிரகாரம் அநுசரிக்கப்படவேண்டுமெனக் காண்பித்தது. இது '1908-ம்ஞு சென்னை ஜமீன் நிலச்சட்டம்' வந்ததிலிருந்துதான் தள்ளப்பட்டுக் குடியானவர்கள் ஜமீன்தாருடன் சரிசமானமான ஒப்பந்தம் செய்யக்கூடிய நிலைமையில் இல்லையென்று கருதப்பட்டது ; இது ஒரு தப்பிதம். குடிகள் அநியாய வரிகளை எதிர்க்க எப்பொழுதும் பலமுள்ளவர்களாகக் காணப்படுகிறார்கள்.

சர். கிரிப்பித் ஈவன்ஸ், சுப்ரீம் கவுன்சில் மெம்பர், 'வங்காளக் குடியானவர் சட்டம்' ஏற்பட்டபோது குடிகளின் திறமையைப்பற்றி பின்வருமாறு பேசினார் :—

> "குடியானவர்கள் சந்தேகமில்லாமலத், தெரிந்துகொள்கிற விஷயம் தாம் எவ்வளவு தீர்வை கட்ட வேண்டுமென்பதே. 100-வருட ஆங்கில ஆட்சியிலிருந்து அவர்களுக்குத் தீர்வை யென்றால் எவ்வளவு ஜாக்கிரதையாக இருக்கவேண்டுமென்று தெரிந்திருக்கிறது. அவ்விஷயத்தில் அவர்களுக்குதவி வேண்டியதில்லை. ஜமீன்தார்களை எதிர்க்க அவர்களுக்கொன்றும் உதவி வேண்டுவதில்லை. அதனால் சில தீங்குகளே நேர்கின்றன."

மற்றும் தற்கால ஜமீன் தீர்வை கடுமையென்றால் நாம் எங்கு பார்த்தாலும் குடிகள் நிலங்களை விட்டு விடுவதைக் காணலாம். உண்மையிலோ, குடிகள் அதிக நிலங்களைப் பயிரிடுகிறார்கள். புதிதாக நிலங்களை ஒப்புக்கொள்ளும் பொழுதும் தனிப்பணமாக ஜமீன்தார்களுக்குக் கட்டுகிறார்கள்.

மேலும் இவ்விதத் தீர்வைகள் எவ்வளவு காலமாக மாறுதலின்றி இருக்கிறதென்பதைக் கவனிக்கலாம். ஊத்துக்குழி, போடிநாயக்கனூர், இன்னும் சில சேலம் மிட்டாக்களில் சாசுவத திட்டகாலத்திலிருந்து இன்று வரைக்கு தீர்வை மாறுபடவில்லை. வெங்கடகிரி ஜமீனில் பசலி 1234-லிருந்து இன்று வரை ஒரேவித தீர்வை தான். சில ஜமீன்களில் 50 வருடகாலமாக அவை மாறுபடவில்லை. மேலும் 1908-ம்ஞுத்துக்குப் பிறகு சட்டங்களினால் ஜமீன்தார்கள் தீர்வையை உயர்த்த முடியாதவாறு செய்யப்பட்டது. 1908ம்ஞுத்துக்குப் பிறகு சில இடங்களில் ரூபாய்க்கு, இரண்டணா தீர்வை உயர்ந்தது. அதுவும் 'பிரிவு 30 முதல் 35.' சென்னை ஜமீன் நிலச்சட்டப் பிரகாரம்—ஏற்படுத்தப்பட்டவை. ஆகையால் 1908ம்ஞுத்தில் இருந்ததீர்வை நியாயமானதாகக் கருதப்படவேண்டும்.

ஜமீன் நிலச்சட்டத்தில் உள்ள ஏற்பாடுகள்.

ஒழுங்கானதும், நியாயமானதுமான தீர்வைவிதிக்க கீழ்வரும் வழிகள் காட்டப்படுகின்றன :—

(a) பிரிவு 25.—நிலத்தைக் குடிகளிடம் ஒப்புவிக்கும் பொழுது விதிக்கப்படும் தீர்வை அண்டையிலுள்ள நிலங்களுக்குள்ளதைப் போலிருக்கவேண்டும். கலெக்டருக்கு அத்தீர்வைகள் தெரியாமலிருந்தால், தான் எண்ணுகிறபடி நியாயமான தீர்வை விதிக்கவேண்டும்.

(b) செக்ஷன் 28.—சாதாரணமாகக் கட்டிவரும் தீர்வை நியாயமெனவே கருதப்படுகிறது. அது தப்பிதமெனக்காண்பிப்பது குடிகளின் கடமையாகும்.

(c) பிரிவு 168.—வரித்திட்டம் தீர்மானிக்கும்போது கலெக்டர் கவனிக்கவேண்டிய விதிகள்—

(i) ஏற்கனவேயுள்ள தீர்வையே நியாயமெனக்கொள்ளல்.

(ii) இச்சட்டத்தின் விதிகளைக் கவனித்தல்.

(iii) இருதரத்தாரின் ஒப்பந்தங்களைக் கவனித்தல்.

கலெக்டர், தான் நியாயமென்று நினைப்பதையும் கட்சிக்காரருக்குத் தெரிவிக்கலாம்.

(d) தீர்வையை உயர்த்தும்போது கவனிக்கவேண்டிய விஷயங்கள்—

(i) ஜமீன்தாருக்குத் தேறிய விளைவில் அரைப்பங்குக்குமேல் கிடைக்கக்கூடாது.

(ii) 40-வது பிரிவின்படி பணத்தீர்வையாக மாற்றியிருப்பது வழக்கமான வாரத்தீர்வையைவிட அதிகமாகக்கூடாது.

(e) வாரத் தீர்வையைப் பணத்தீர்வையாக மாற்றும்போது கவனிக்கவேண்டிய விஷயங்கள்—

(i) பஞ்ச வருஷங்களைத் தவிர மற்ற பத்து வருஷங்களில் ஜமீன்தார் உண்மையாக அடைந்த தீர்வை மதிப்பும்.

(ii) அண்டையயலிலுள்ள நிலங்களின் பணத்தீர்வை அல்லது பக்கத்து ஜில்லா கிராமங்களி லிருப்பதையும்.

(iii) ஜமீன்தார்களோ, குடிகளோ நிலத்துக்குச் செய்த சீர்திருத்தங்களும் கவனிக்கப்படவேண்டும்.

ஜமீன் நிலச்சட்டத்தில் அநியாயமாக தீர்வை யுயர்த்தலைப் பாதுகாக்க ஏற்படுத்தப்பட்ட விதிகள்—

(i) பிரிவு 24.—இச்சட்டத்தின்படியன்றி வேறுவிதமாக தீர்வை உயர்தக்கூடாது.

(ii) வாரத் தீர்வை உயர்த்தப்படலாகாது.

(iii) தீர்வை உயர்த்தல் பிரிவு 31–35-படியும் பிரிவு 40-ஐ ஒட்டியுமிருக்கவேண்டும்.

(iv) (பிரிவு 168).—இருதரத்தாரும் தீர்வை ஒப்பந்தம் செய்து கொண்டால் கலெக்டர் அது நியாயமானதா என கவனிக்கவேண்டும்.

(v) (பிரிவு 192-C).—கோர்ட்டில் தீர்வையைப்பற்றி விவாதம் நடக்கும்பொழுது, இருதரத்தாரும் சமாதானம் செய்து கொண்டால், அதைக் கோர்ட்டார் அங்கீகரிக்கு முன் நியாயமானதா என்று கவனிக்கவேண்டும்.

(vi) பிரிவு 13-III).—தன்னுடைய முயற்சியினாலேயே குடிகள் விளைவை அதிகப்படுத்தியிருந்தால் அதை யொட்டித் தீர்வை உயர்த்தப்படக்கூடாது.

(vii) நிலத்தில் அன்னியன் புகுந்து அதை வசப்படுத்திக்கொண்டிருப்பினும், தீர்வை விதிக்கப்படாம லிருந்தால், ஜமீன்தார் வழக்குத் தொடரவும், கலெக்டர் வேறு விவாதமாகத் தீர்வையை வகுக்கவேண்டும்.

மேலும், சாதாரணமாக தீர்வைத்திட்ட உத்தியோகஸ்தர்கள், குடிகள் பட்சமே சாதகமாக இருக்கும்படி எதிர் பார்க்கப்படுகிறது. ஆகையால் பிரிவு 28 மாற்றப்பட்டு, 1808-ல் இருந்த தீர்வையையே உறுதிப் படுத்தவேண்டும். தீர்வையானது எப்பொழுதும் மொத்தவிளைவில் அதிகப்படக்கூடாது.

7-ம் அத்தியாயம்.

குன்றுகளும், காடுகளும், காம்பு நிலங்களும்.

என்னுடைய சகாக்கள், புறம்போக்கு நிலங்களில் காடுகள், குன்றுகள், குளக்கரைகள், கரம்புகள், யாவற்றையும் ஒன்றாகக் கருதிக் காரணங்காட்டாமல் குடிகளுக்கே உரிமையென்கிறார்கள். ஒரு காலத்தில் கிராமங்கள் முழுவதும் கிராம வாசிகளுக்கே சொந்தமாகக் கருதப்பட்டது. தனித்தனி ரயத்வாரித் திட்டம் ஏற்பட்டகாலத்தில் இவ்வுரிமை பிளவுபட்டது. அதற்காக என் சகாக்கள் வருத்தமும் அடைகிறார்கள் பிளவுபட்ட காலத்தில் எப்படியோ சில கிராமக்குடிகளுக்கு இந்த உரிமை மாற்றப்பட்டதாகக் கருதுகிறார்கள். ஆனால் ஒருகாலத்திலும் ஜமீன்தாருக்குப் புறம்போக்கில் உரிமை ஏற்படவில்லையென சொல்லுகின்றனர். அவர்கள் 'பிரிவி கவுன்சில்', சென்னை ஐகோர்ட், சாசுவததிட்ட ரெகார்டுகள் முதலியவைகளில், இந்த உரிமை ஜமீன்களுக்கே என்ற தீர்ப்பை மறந்துவிடுகிறார்கள். சென்னை ஜமீன் நிலச்சட்டத்தைப்பற்றியும் அவர்கள் கவனிக்கவில்லை. என் கூட்டாளிகள் தங்களுக்குச் சாதகமாக ('சத்தர் அடாலட் கோர்ட்' ஸ்பெஷல் அப்பீல் தாவாக்கள் எண். 18—1802; நம். 10—1814). எடுத்துக்காட்டாக காண்பிக்கின்றனர். அந்த தாவாக்களில், 'திவி' ஜமீன்தாருக்கும், மசூலிபட்டணம் விறகு வியாபாரிகளுக்கும், திவிக்காட்டில் விறகுவெட்ட யாருக்கு உரிமையுண்டென்ற கேள்வி யெழுந்தது. கோர்ட்டார் வியாபாரிகள் பக்கமே தீர் மானம் செய்தார்கள். ஆனால் இத்தீர்மானம் குடிகளின் உரிமையைப்பற்றியல்ல என்று நான் எடுத்துக் காட்டுகிறேன். முதலாவதாக மசூலிபட்டணம் வியாபாரிகள், ஜமீன்தாரின் குடிகளாகக் கருதப்படவில்லை. இரண்டாவதாக, விறகு வெட்டுதல் தொன்றுதொட்ட ஒரு பழைய உரிமையாகக் கருதப்பட்டது. நிலவுரிமை யாருக்கென்பது பற்றிய கேள்வியே எழவில்லை. மசூலிபட்டணம் வியாபாரிக்கு எல்லாவுரிமையுமிருந்தால் விறகுவெட்டுதலைப்பற்றிமாத்திரம் ஏன் வழக்கு ஏற்படவேண்டும். ? ஆகையினால் நிதானித்துக் கவனித்தால் இந்த வழக்கு ஜமீன்தாருக்குச் சாதகமாக ஏற்பட்டதென்றே கொள்ளவேண்டும். ஜமீன்தாருக்குச் சாதக மான சில வழக்குக்களை நான் சொல்லுகிறேன்: (40. சென்னை—1886 உர்லாம் கேஸ்.) இந்த வழக்கில் 'பிரிவி கௌன்சிலின்' முன்பு வாதிக்கப்பட்டதாவது:—சாசுவத திட்ட காலத்தில் ஜமீன்தார்களுக்குத் தீர்வை விதிக்கப்பட்ட நிலங்களின் உரிமைதான் மாற்றப்பட்டதென்றும், புறம்போக்கு நிலங்களின் உரிமை மாற்றப்படவில்லை. இவ்வழக்கைத் தள்ளிவிட்டார்கள். ஜமீன்தார்களுக்கு, குளங்களும், கழனி கட்டடங்களும், கால்வாய் பாய்ச்சல்களும், கரம்பு நிலங்களுங் கூட அவசியமென்றும், தீர்வை அவைகளின் உபயோகங்களுக் கெனவும் தீர்மானிக்கப்பட்டது. மேலும் ராஜா ரஞ்சித் சிங் பகதூருக்கும், காளிதாஸ் தேவிக்கும் நடந்த வழக்கிலும், (36 எம்.எல்.ஜே. 203 பக்கம். நீதிபதி சதாசிவ அய்யர் தீர்ப்பு.). எ.ஐ.ஆர். 1936-ல் 'பிரிவி கவுன்சில்' 108. சர். ஜான்வால்லிஸ் தீர்ப்பும், ஜமீன்தார்களை ஆதரிக்கின்றது.

கீழ்வரும் வழக்கு ஜாப்தாக்களும் ஜமீன்களுக்குச் சாதகமாயுள்ளன:—

9. சென்னை, 285. நிதிபதிகள் சர். சார்லஸ் டர்னர், முத்துசாமி அய்யர் சிங்கம்பட்டி ஜமீனுக்கும், சர்க்காருக்கும் ஏற்பட்ட வழக்கில் ஜமீன்தாரின் உரிமை அங்கீகரிக்கப்பட்டது.

26 சென்னை, 252—சிவகங்கை ஜமீன் வழக்கு.—கரம்பு நில வுரிமை ஜமீன்தாருக்கே எனவும், 1802-ம் வருஷ 25-வது ரெகுலேஷன், 20 சென்னை 299, சீக்கட்டி வழக்கு, 23 சென்னை 318—கரம்பு நிலத்தில் சென்னை ஜமீன் நிலச்சட்டம் அமுலுக்கு வந்த பிறகு, குடிகளுக்குக் குடியிருப்புரிமை ஏற்பட்டபோதிலும், ஜமீன்தாருக்கே சொந்த உரிமையென நீதிபதிகள், பென்ஸனும், மூரும் தீர்மானிக்கிறார்கள்.

28 சென்னை 69—நீதிபதிகள் சுப்பிரமணிய அய்யர், போடாம்—இனும் திட்ட காலத்துப்பத்திரங்களில் சில குன்றுகளின் உரிமை காணப்படாவிட்டாலும் ஜாகிர்தாருக்கே அவை சொந்தமென சொல்லுகிறார்கள்.

24 சென்னை 31—நீதிபதிகள் சங்கர நாயர், சதாசிவ அய்யர்—24 எம்.எல்.ஜே. 36—இவ்வழக்குகளில் ‘செட்டில்மெண்டு’ சாசனங்களில் காணப்படும் “புறம்போக்குகூட” என்ற வார்த்தையினால் ஜமீன்தார்கள் பொதுஜன இடங்களாகிய கோவில், மயானம், நெற்களம் முதலிய இடங்களைத் தவிர பாக்கி புறம்போக்கு நிலங்கள் ஜமீன்தாருக்கே என்கிறார்கள்.

‘பிரிவி கௌவுன்சில் 40’ சென்னை 86—முன்சொன்ன ஊர்லாம் வழக்கில் தீர்மானித்த ஆற்றங்கரைகள் ஜமீன்தாருக்குச் சொந்தம் என்ற தீர்ப்பை மாற்றிவிட்டது. இதை நீதிபதி சதாசிவ அய்யரும் 36 எம்.எல்.ஜே. 203-ல் ஒப்புக்கொள்ளுகிறார்.

29 எம்.எல்.ஜே. 276—சர். ஜான் வால்லிஸ், நீதிபதி கூட்ஸ் டிராட்டர், ‘இனும் சாசனத்’தில் கண்ட “புறம்போக்கோடுகூடிய” என்ற வார்த்தைக்கு மேற் சொல்லிய அர்த்தத்தையே அளிக்கிறார்கள். கிராமத்தில் கணக்கில் வாராத நிலங்களெல்லாம் ஜமீன்தாருக்கே உரியதெனத் தீர்மானிக்கப்படுகிறது.

36 எம்.எல்.ஜே. யில் “புறம்போக்கு” என்னும் பதத்துக்குப் பொருள் சொல்லப்படுகிறது. சர்க்காருக்கு வருமானம் காண்பிக்காத உதவா நிலமெல்லாம் புறம்போக்காகும். பிணம் எரிக்கும், புதைக்கும் நிலங்கள், கோவில் நிலங்கள், களங்கள் பொதுஜனப்புறம்போக்கென்றும், அதைப் பொது மக்களுக்காக சர்க்கார் கவனித்து வருகின்றனரெனவும்; ஆற்றங்கரை, வாய்க்கால் ஓரம் முதலியவை கிராம வாசிகளுக்கல்லாமல், ஜமீன்தாருக்கோ இனும்தாருக்கோ சொந்தமெனச் சொல்லப்படுகிறது.

40 சென்னை 722—நீதிபதிகள் சர். ஜான் வாலிஸ், சேஷகிரி அய்யர்—சிவகங்கை ஜமீனைப்பற்றிய வழக்குத் தீர்மானம் :—ஜமீன்தாருக்கு மேல்வாரக் குடிவார உரிமைகளுண்டென்றும், கரம்பு, காடுநிலமும் அவர்களுக்குரியதே என்றும், அதை எதிர்த்தால் குடிகளின் மேல் நிரூபிக்கும் கடமை சுமத்தப்படும் என்றும் கூறுகிறார்கள்.

20 லா வீக்லி 478—நீதிபதி கிருஷ்ணன்—விஜயநகர ஜமீன் வழக்குத் தீர்மானம் :—காட்டு நில உரிமை முழுதும் ஜமீன்தாருக்கே.

இதில் 40 சென்னை 72 ஒப்புக்கொள்ளப்பட்டது.

ஜமீன்தாரியின் பொதுவழி, அடிநிலம் யாருடையதென்ற கேள்வி, சமீபத்தில் 71 எம்.எல்.ஜே. 749. நீதிபதி வரதாச்சாரியார், பழைய ‘**வழக்கு**’களைச் சொல்லிவிட்டுப் பின்வருமாறு கூறுகிறார், “சாசுவத திட்ட காலத்தின் முன்னுகினும், பின்னுகினும்சரி, பொதுவழி, அடி நிலம், வளர்மர உரிமைகள் ஜமீன்தாருக்கே; குடிகளுக்கு நடமாடும் உரிமையொன்றுதான் உண்டு. மேலும் ஜமீன் நிலங்களில் பாயும் ஆறுகளின் கரை, ஆற்றின் அருகாமை நிலச் சொந்தக்காரராகிய ஜமீன்தாருக்கே என்றும், சர்க்காருக்குச் சேரா தெனவும் தீர்மானிக்கிறார். மயானங்கள் பொது மக்களுக்காக, சர்க்காரால் நிர்வகிக்கப்படுகின்றன வென் கிறார்.

ஆகையால் என் **சகாக்க**ளின் அபிப்பிராயம் தப்பாகும். பொது ஜன நன்மைக்கான புறம்போக்கு நிலங்களைத் தவிர, பாக்கி நிலங்கள் ஜமீன்தாருடையதே என்றும் கோர்ட்டுத் தீர்ப்புகளை என் **சகாக்**கள் மறந்து விடுகின்றனர்.

மேலும் கலெக்டர்களுக்கு ஏற்படுத்தப்பட்ட விதிகளில் (15 அக்டோபர், 1799, பகுதி 27-ல்) “ஜமீன்
களில் காணப்படும் பயிரிடப்படாத கரம்பு நிலங்கள் ஜமீன்தாருடையதெனக் கொள்ளவேண்டுமென்றும்,
அதையொட்டிய ஏற்பாடுகளை அவர்கள் தங்கள் குடிகளுடன் ஒப்பந்தம் செய்துகொள்ளலாமென்றும், கூறப்
படுகிறது.

ஆகையினுல் குடிகளின் சுதந்திர உரிமையென—ஆடு, மாடு மேய்த்தல், விறகு வெட்டுதல், எருக்
காக இலை சேர்த்தல், ஏர், கலப்பைக்காக மரம் வெட்டுதல் சரியாகுமா? “இந்திய ஈஸ்மெண்ட் ஆக்ட்,
பிரிவு 7 பி”ல் ‘அசையாப்பொருள்களின் சொந்தக்காரர் ஒவ்வொருவருக்கும் அவைகளிலிருந்து
உண்டாகும் சர்வ பொருள்களுக்கும் உரியவரெனக் கருதப்படுகிறது. அதைப்போல் குடிகளுக்கு நிலத்தின்
இடவசதியொட்டி உரிமைகள் உண்டாகா. அநேக ஆண்டுகளாக தங்கு தடையின்றி அனுபவிக்கும்
பழக்க வழக்கங்கள் நாளடைவில் சுதந்தர உரிமையாக மாறுகின்றன. இதைப்பற்றி (20 நாகூர்
லா ஜர்னல் 131-ல் நீதிபதிகள் ஸ்டோனும், நியோகியும் கூறுகிறார்கள்:—“வழக்கமென்றால் ஒப்பந்தமல்ல;
திருட்டுத்தனமானதுமல்ல; மறைவு நடத்தையுமல்ல; சர்வ சாதாரணமானதும், பரந்ததும், யாவருக்கும்
தெரிந்த விஷயமுமே பழைய வழக்கமெனக் கொள்ளலாம். ஒப்பந்தத்தின்பேரில், ஜமீன்தார் வெகு
நாளாக தன் நிலத்தின்மீது குடிகளுக்கு, மேய்ச்சல், மரம் வெட்டல் உரிமைகளைக் கொடுத்திருந்தால் அது
குடி உரிமையாகமாறாது.”

தொன்றுதொட்டதாகவும், நியாய ஒழுங்கானதாகவுமிருத்தல்வேண்டும்.
பின்னும் வழக்கமானது, அவ்வுரிமையை அனுபவிக்கும் மக்கள் யாவராயினுமிருத்தல்
9 கல்கத்தா 698—“வழக்கமென்றால், சொந்தச் சொத்தின் மதிப்பை அறவே
வேண்டும். குடிகள் அதிகமாகப் பெருகி உரிமையை உபயோகித்துச்
அழித்துவிடலாம்.” 1930 அலகாபாத் 388 :—

தெரியாமலோ, அன்றி அவன் சம்மதத்தோடோ
“சொந்தக்காரன் இஷ்டத்துக்கு மாறாகவோ, அவ்வழக்கமும் அநியாயமெனத்
செய்துவரும் காரியம் பழைய வழக்கமெனக் கருதலாகாது; உரிமையென்றால், காட்டிலுள்ள
தோன்றலாகாது. உதாரணமாக, காட்டில் மரம் வெட்டும்
எல்லா மரங்களையும் வெட்டியழித்தல் என்ற பொருளல்ல.”

குடிகள் கொண்டாடுகிற உரிமைகளைப் பழைமையானதென
எங்கள் முன்னால் விடப்பட்ட சாக்ஷியங்களும, அதிகமாக வரி வசூலித்து வருகிறார்களென்று
ருஜுப்படுத்தவில்லை. மேய்ச்சலுக்காக ஜமீன்தாரர்கள் இவ்வித உரிமை ஜமீன்தாருக்கிருந்ததாகத்
தான் சொல்லப்படுகிறது. சாசுவத திட்ட காலத்துக்கு முன்பே

தெரிகிறது. அக்காலத்தில் 'சேயர்' என்னுந் தலைப்பின்கீழ் சர்க்கார் இத்தகையை சில்லரை வரிகளை வசூலித்ததாகக் கலெக்டரின் குறிப்புக்கள் காட்டுகின்றன. தோட்டம், மேய்ச்சல், கட்டிடம், கிடங்கு முதலியவற்றிற்காக 'சேயர்' என்ற தலைப்பின் கீழ் வரி வசூலிப்பது தவறென்றும், அவை தரை வரியிலேயே அடங்கியுளதென்றும், ஜமீன்தாருக்குப் பூரண உரிமையுளதென்றும், சர்க்கார் தலையிடலாகாதென்றும் காணப்படுகிறது.

முன்னால் வட சர்க்காரின்—1782—1786 களில் ஏற்பட்ட வழக்குகளில், ஜமீன்தாரியின் மேய்ச்சல் நிலங்களைப்பற்றித் தீர்மானங்கள் காணப்படுகின்றன. ஜமீன்தாரிடமிருந்து 'பேஷ்காஷ்' வசூலிலேயே இதையும் சேர்க்கப்பட்டதாகத் தோன்றுகிறது. 'பேஷ்கஷ்' கலெக்டர் வெப், மா, ஈச்சந் தோட்டவரிகளும்; செக்குமேடு, கடைக்காரர்கள் இடமிருந்து நிலத்துக்காக வசூலிக்கும் வரியைத் தனியாகக் கருதலாகாதெனவும்; இடையர், செம்படவர் தரும் வரியும், நிலம், கடல், ஆறு, குளம் முதலியவற்றிற்குத் தனி வரியாக அல்லாமல் நில விஸ்தீர்ணத்திற்கென்றே கொள்ளவேண்டுமென்கிறார். கணக்கிலும் அவ்வாறே சேர்த்துள்ளார்.

நெல்லூர் ஜில்லாவில் சர்க்காரின் 1791-ம் ஆண்டு வருமானக் கணக்கில், டெய்ட்டன் துரை, ஆடு, மாடு மேய்ச்சலினால் வரவு ரூ. 10,000 என்கிறார்.

நெல்லூர் ஜில்லா 'பாஸ்வெல் துரை மானுவல் 28—1808-ல் நெல்லூர் கலெக்டர் பிரேஸர் துரை மாடுகளுக்கு 8 அணு வீதம் பொங்கல் காலத்தில் வசூலிக்கப்பட்டதன்றி, மாடு மேய்க்கும் வெளிகள் ஏலத்துக்குக்கொண்டுவரப்பட்டதாகவும் கூறுகிறார். மக்த புல்லேறி, அனுமக் புல்லேறி, அழக புல்லேறி, எனிக புல்லேறி என்றும் மேய்ச்சல் நிலங்களைப்பற்றியும், நெல்லூர் ஜில்லா மேய்ச்சல் நிலங்களைப்பற்றியும் விவரித்துள்ளார். சர்க்கார் கட்டளை 1867-ம் ஆண்டு நவம்பர் மீ 13உ நெ. 2676 நிலவரி இலாகா—நெல்லூரில் புல்லேறி தீர்வை ஒழிக்கப்பட்டது. ஒவ்வொரு கிராமத்திலும் கரம்பு நிலத்தில், பயிரிடும் நிலத்துக்கு 30 சத விகிதம் சரியான நிலம் மேய்ச்சலுக்கு இனுமாக ஒதுக்கப்படவேண்டுமெனவும், பாக்கி ஏலத்தில் விட்டுவிடவேண்டுமென்றும், யாராகிலும் தீர்வை கட்ட ஒப்புக்கொண்டால் அக்கரம்பு நிலம் கொடுக்கப்படலாமென்றும் தீர்மானிக்கப்பட்டது. இதனால் மேய்ச்சல் உரிமை, ஒரு பழைய உரிமையன்றென்றும் சர்க்காரே ரயத்வாரி நிலங்களில் மேய்ச்சல் வரி வசூலித்தார்களென்றும் ஏற்படுகின்றது.

இப்பொழுது சில, சென்னை ஐக்கோர்ட்டுத் தீர்மானங்களை கவனிக்கலாம் :—

38 சென்னை, 738—வெங்கடகிரி ராஜா தம் குடிகளிடமிருந்து ஏக்கர் ஒன்றுக்கு 5 அணு 1 பை வீதம் சென்ற 40 வருடங்களாக பசலி 1317 வரை வசூலித்து வந்ததாகவும், பசலி 1318-ல் பிரதிவாதிகள் உயர்த்தப்பட்ட வரிகளை ஒப்புக்கொண்டு அவ்வாறு கொடுக்காததினால், நிலத்தை விட்டு நீக்க வழக்கு தொடரப்பட்டது. நீதிபதிகள் சதாசிவ அய்யரும், தயாப்ஜியும், குடிகளுக்கு நிலத்திலிருக்க உரிமையில்லையென்றும், அதிலிருந்து வெளிகிளம்பவேண்டுமென்றும் கூறினார்கள்.

31 எம்.எல்.ஜே. 211—வெங்கடகிரி ஜமீன் வெளிக்கள்ளு கிராமத்தின் மேய்ச்சல் உரிமைபற்றிய வழக்கு. மேற்சொன்ன வாறே விவாதம். சென்னை ஜமீன் நிலச்சட்டத்துக்குப் பிறகு 10, 15 வருடங்களுக்கும் 1894—1899 வரையும் நாராயணசாமி நாயுடுக்கு குத்தகையாகக் கொடுக்கப்பட்டதென்றும், அவருக்குப் பிறகு அக்கிராமப் பட்டாதார்கள் 500 முதல் 600 ரூபாய் வரை வரியாகக் கொடுத்தார்களென்றும் கூறப்பட்டது. நீதிபதிகள் வால்லிசும், பிலிப்சும், இப்பணம் மேய்ச்சல் வரி வசூலுக்காக அல்லவென்றும், மேய்ச்சலுக்காகவே ஏற்பட்டதென்றும், ஜமீன்தாருக்குத்தான் பூரணஉரிமையுண்டென்றும் தெளிவாகக் கூறினார்கள்.

31 எம்.எல்.ஜே. 214—நீதிபதிகள் சதாசிவ அய்யர், மூர்—பித்தாபுரம் ஜமீன் வழக்கும் மேற்படியே.

ஜமீன் நிலச்சட்டத்திலும், மேய்ச்சல் உரிமைகள் காணப்படவில்லை. ஆனால் ஜமீன்தார்கள், மேய்ச்சல் வரி வசூலிக்கும் உரிமையை, விளக்கும் பிரிவு 3, உட்பிரிவு 11 (பி)-ல் காணப்படுகிறது. (பிரிவு 6, உட்பிரிவு 2-ல்) ஒப்பந்தத்தின்படி மேய்ச்சல் வரி கொடுப்பதினால் மேய்ப்பவர்களுக்கு நிலவுரிமை இல்லையெனவும் கூறப்படுகிறது. மேலும் ஒப்பந்தப்படி ஜமீன்தார், மேய்ச்சல் வரியை உயர்த்தவோ, இஷ்டப்பட்டபோது மேய்ப்பவரை விலக்கவோ உரிமையுண்டெனக் காணப்படுகிறது.

1867, நவம்பர் 12; சர்க்கார் உத்தரவு ந. 267 நிலவரி—நெல்லூர் ஜில்லாவில் 1867 புல்லேறி வழக்கம் விலக்கப்பட்டதிலிருந்து, கஞ்சா வழக்கப்படி, 1 அல்லது 2 வருஷத்துக் கொருமுறை மேய்ச்சல் நிலங்கள் ஏலத்துக்கு விடப்பட்டன. ஒருவனுக்கே மொத்த நிலத்தைக் கொடுக்காமலும், அதிக ஏலம் கூறுபவனுக்கே மேய்ச்சலுரிமை கொடுக்கப்பட்டுவந்தது. இந்தக் கஞ்சா ஏற்பாடு இப்பொழுதும், வெங்கிடகிரி, விஜய நகரம், நெல்லூர், சித்தூர் ஜில்லாக்களில் வழங்கிவருகிறது. இதிலிருந்து நிலத்தின் உரிமை குடிகளுக்குச் சேரவில்லையென்பது தெளிவாகத் தெரிகிறது.

சில ஜமீன்களில், பர்லாகிமிடி, விஜயநகரம், வெங்கடகிரி இவைகளில், மேய்ச்சல் வரி அதிகமாக வசூலிக்கப்படுகிறதென்று குடிகளின் சாக்ஷிகள் சொல்லுகிறார்கள். ஜமீன் கணக்குக்களின்படி சர்க்கார் திட்டத்தைவிட அவை அதிகமானதாகக் காணப்படவில்லை. விஜயநகரம் ஜமீனில் மாடொன்றுக்கு 8 அணுதான் வரி. காட்டு நில உத்தியோகஸ்தர் கூறும்வண்ணம், அருகாமையுள்ள கோயம்புத்தூர் ஜில்லாவில் 12 அணு முதல் 1 ரூபாய் வரை வசூலிக்கின்றனராம். வெங்கடகிரி ஜமீனில் மேய்ச்சல் செலவு ஏக்கர் ஒன்றுக்கு 2 அணு 5 பை ஆகவும், மாடொன்றுக்கு 3 அணு 1 பை ஆகவும் காணப்படுகிறது. மேய்ச்சல் நில விஸ்தீர்ணங்களைப்பற்றியும், மாட்டு எண்ணிக்கைகளைப்பறியும், மேய்ச்சல் வரி வசூலிப்பதைப்பற்றியும் ஜமீன்தார்கள் கணக்குகள் கொடுத்துளர். அதை ஒப்பிட்டால் நெல்லூர் ஜில்லாவில் சர்க்கார் வசூலிப்பது அதிகமாகக் காணப்படுகிறது.

வெங்கடகிரி ஜமீனில் "கஞ்சா" வரி அதிகமெனக் கூறப்படுவதைப்பற்றித் தக்க சாக்ஷியங்கள் காணப்படவில்லை. பல ஜமீன்களில் மேய்ச்சலுக்காகப் போதுமான காடுகள் ஒதுக்கப்படவில்லையெனச் சொல்லுவது, காட்டுச்சட்டப்படி தவறெனத் தோன்றுகிறது. உதாரணமாகக் காட்டுச் சட்டத்தை அமுலுக்குக் கொண்டு வருமுன், கலெக்டர்கள், ஜமீன்களிற் போதுமான மேய்ச்சல் நிலங்களை ஒதுக்கி விட்டுத்தான் கணக்கெடுக்கிறார்கள். உதாரணம் :—ஜெய்ப்பூர், பர்லாகிமிடி, பொப்பிலி, குப்பம், வெங்கடகிரி ஜமீன் போன்ற இடங்களில் போதுமான மேய்ச்சல் நிலம் உபயோகத்துக்கில்லையென்பதும் தவறாகும். ஏலத்தில், "கஞ்சா" வழக்கப்படி எடுத்து அதிக வரி வீதம், குடிகளுக்கு மேய்ச்சல் நிலம் விடப்படும். ஏலமெடுப்போரின் ஆசையினால் தான் இவ்வளவு கஷ்டம் ஏற்படுகிறது.

ஆட்டு மேய்ச்சலைப்பற்றிய கஷ்டம் ஜமீன் நிலங்களிலன்றிச் சர்க்கார் நிலங்களிலும் காணப்படுகிறது. குடிகளின் சார்பாகச் சொல்லப்பட்ட யோசனையாவது, முதலில் காட்டுப் பஞ்சாயத்தாரை ஏற்படுத்தவேண்டுமென்றும், இரண்டாவதாகக் காட்டுச் சட்டத்தை ஜமீனில் அமுலுக்குக் கொண்டுவரமேண்டுமென்பதே.

ஆனால் காட்டுப் பஞ்சாயத்தார் சர்க்கார் நிலங்களிலிருந்தபோதிலும் நன்மை விளைவதாகக் காணோம். காட்டுச் சட்டத்தை மேய்ச்சல் நிலங்களும், விஸ்தீர்ணக் காடுகளுமுள்ள பெரிய ஜமீன்களில்தான் அமுலுக்குக் கொண்டுவரமுடியும். சிறிய ஜமீன்களில் தனி ஏற்பாடுகள் செய்யவேண்டும். ஜமீன்தார்களுக்கும் குடிகளுக்குமுள்ள தற்போதைய உரிமைகளைக் கவனித்துச் செய்யவேண்டும்.

மரம் வெட்டுதலுக்கும், இலை சேர்த்தலுக்கும் குடிகளுக்கு, 9 கல்கத்தா 698, 193 அலகாபாத் 338-ல் கண்டபடி காட்டை ஒழிக்கக்கூடிய பூரா உரிமையும் கொடுக்கக்கூடாது. ஒரு வரம்பும், விதியும் ஏற்படுத்தி அதற்குத்தக்க சட்டம் செய்யவேண்டும். சில ஜமீன்களில் குறைந்தவரி நாமதேயமாகத்தான் விதிக்கப்படுகிறது.

பொது ஜன நிலங்களைப்பற்றி நான் என் கூட்டாளிகளின் தீர்மானத்தை ஆமோதிக்கவில்லை. மேலே காட்டிய தீர்ப்புக்களின்படி, அவை கிராமவாசிகளுக்குப் பொதுவில் சொந்தமாயிருந்தபோதிலும், வழக்கமான பொது நன்மைக்கு இப்போது உபயோகப்படாமலிருந்தால், ஜமீன்தாருக்கோ அல்லது அவை ஆதியில் யாருக்குரித்தாயிருந்தனவோ அவர்களுக்கோ சேரவேண்டுமென நினைக்கிறேன். ஒருதரம் பொது ஜன நன்மைக்கான நிலம் என்றால் எப்பொழுதும் அப்படியே என்கிற என் நண்பர்களின் கொள்கையை எதிர்க்கிறேன். நான் சொன்னவாறு தான், ஜமீன் நிலச்சட்டம் 20, தீர்மானிக்கப்படல் வேண்டும்.

மேலும் பொது ஜன நன்மைக்காகப் புதிதாகச் சேர்க்கப்படும் நிலங்கள் இது வரை சொந்தமென நியாயமின்றி உரிமை பாராட்டிவந்த ஜமீன்தார்களோ அன்றிக் குடிகளோதான் செலவுகளை ஏற்றுக்கொள்ள வேண்டும். சிறிது தவணை கொடுக்கப்படாமல் உடனே அவர்களை ஷை நிலங்களிலிருந்து விலக்கிவிடவேண்டுமென்பதும் தப்பிதமே. ஆதியில் தவறாக அவர்கள் வந்திருந்தபோதிலும், இப்பொழுது திடீரென அவர்களை விலக்குவது சரியாகாது. எனது அபிப்பிராயம், ஜமீன் நிலச்சட்டத்தில், இதைப்பற்றிச் சமீபகாலத்தில் ஏற்பட்ட திருத்தங்கள்போதும் என்பதே.

8-ம் அத்தியாயம்.

வரி வஜா.

கீழ்வரும் காரணங்களுக்காக, எனது சகாக்கள் வரி வஜாவைக் கட்டாயப்படுத்தவேண்டுமென்கிறார்கள் :—

(a) வரி குறைக்குமாறு கேட்பது ஒரு பொது உரிமை.

(b) பயிர்ச் சேத மேற்படுங்காலத்து வரி குறைப்பது வழக்கம்.

(c) ஜமீந்தார்கள் தங்கள் பேஷ்கஷை நிரந்தரமாகக் கொடுப்பதால், வரியும் குடிகளிடமிருந்து நிரந்தரமானதொகையாய் வசூலிக்கவேண்டுமென்கிற கொள்கை.

இக்காரணங்களை நன்கு விசாரித்தால், என் சகாக்களின் தப்பித சந்தேகங்கள் விலகும். முதலாவதாக, வரிக்குறைவு குடிகளின் உரிமை யென்பதைப்பற்றி அதிக சாக்ஷியங்கள் காண்பிக்கப்படவில்லை. இப்பொழுது பழையபடி, தீர்வையை விளைவில் ஒரு பங்கு என்னும் கொள்கைக்குக் கொணரப்போவதில்லை. அதிகமாக விளைந்த காலத்தில் எப்படி ஜமீந்தார் லாபமடையாமல் குடிகளே லாபமடைந்தார்களோ அதே போல், விளைவு குறைவுபட்ட காலத்திலும் பொறுப்பைக் குடிகளே ஏற்றுக்கொள்ளவேண்டும். வாரத்தீர்வை மாற்றப்பட்டுப் பணத்தீர்வையாக ஆனபொழுது விளைவையும், விளையாமையையும் ஒட்டித்தான் தீர்வை விதிக்கப்பட்டது. ஜமீந்தார் கட்டும் ' பேஷ்கஷ் ' மாத்திரம், குடிகளின் தீர்வையைப்போல், கெட்ட காலங்களில் ஏன் குறைக்கப்படுவதில்லை யென்பது சரியாக விளங்கவில்லை. கட்டாய வரிக் குறைவை ஜமீன்தார்கள் எதிர்த்த பொழுதும், பஞ்ச காலங்களிலும், நெல் விலை குறைந்த காலத்திலும், ஜமீந்தார்கள் தீர்வையில் குறைத்துக் கொடுத்திருக்கிறார்கள். வெங்கடகிரி ஜமீந்தார், பஞ்சமேற்பட்ட 1336-ம் பசலியின் பொழுது 1,35,000 ரூபாய் குறைத்திருக்கிறார். 1342–43-ம் பசலியில், பொருளாதார நெருக்கடி ஏற்பட்டதினால், சர்க்கார், ரயத்வாரி நிலங்களில் தீர்வை குறைக்காமலிருந்தபொழுதிலும் நஞ்சை நிலங்களில் ஜமீந்தார்கள் 12½%, வரியில் தள்ளிக்கொடுத்தார்கள். ஜக்கம்பேட்டைத் திவானும், ஜமீந்தாரிணியினால் தள்ளப்பட்ட வரிக் கணக்குகளைக் காட்டுகிறார். சரியான காரணங்களுக்காக ஜமீந்தார்கள் வரிகளைத் தள்ளித்தான் கொடுக்கிறார்கள்.

வரி தள்ளிக்கொடுப்பது, சர்க்காரின்மேல் சுமத்தப்பட்ட ஒரு கட்டாய விதி என்று சர்க்காரே ' நிரந்தர உத்தரவு விதி, நெ. 13-ல்' ஒப்புக்கொள்ளவில்லை. அது அவர்கள் இஷ்டத்தையும், கருணையையும் பொறுத்த தாம் ; காலத்துக்குத்தக்கபடி மாற்றவும்படுமாம். சர்க்காருக்கோ நிலவரியல்லாமல் இதர வருமானம் உண்டு. ஜமீந்தார்கள் குடிகளின் தீர்வையைக்கொண்டுதான் தங்கள் குடும்பத்தையும், நிலத்தின் செலவையும் கவனிக்கவேண்டும். தான தருமங்களும் அதிலிருந்துதான், செய்யப்படவேண்டும்.

என்னுடைய கருத்தில், ஜமீன் நிலச்சட்டத்திற் கண்டுள்ள சாசுவத வரிக் குறைவும், அவ்வப்போதைய வரிக் குறைவும் குடிகளின் உதவிக்குப் போதுமென நினைக்கிறேன். நிலத்தின் விளைவுத் தன்மை முற்றும் குறைந்துவிட்டாலும் சில சாப்பாட்டுத் தானியங்களின் விலை முற்றும் குறைந்துவிட்டாலும், அன்றி நீர்ப்பாய்ச் சல் முற்றும் கெட்டுவிட்டாலும், வரியில் நிரந்தரக் குறைவு ஏற்படுத்தப்படுகிறது. (பிரிவு 38.). பிரிவு 39–A பிரகாரம் பொருள்களின் விளைவு, திட்டம் விதித்த காலத்தைவிட 18¾% குறைந்துவிட்டால் வரி குறைக்கப்படுகிறது. பிரிவு 141 நீர்ப்பாய்ச்சல் கெட்ட காலங்களில் வரி குறைக்கிறது. பிரிவு 137–C ஆறு வருட காலம் நீர்ப்பாய்ச்சல் இல்லாமற் போகும். நிலங்களைப் பயிரிடாத நிலங்களாகக் கருதி கலெக்டர் புதுத் திட்டம் விதிக்கும்படி கூறுகிறது. இவைகளே குடிகளுக்கு வேண்டிய வசதிகளை அளிக்கின்றன.

கடைசியாகக் கட்டாய வரிக்குறைவு அபாண்ட அபகரிப்பு என ஏற்பட்டு ' இந்தியா சர்க்கார் சட்டம், பிரிவு 299 ஐயும்,' நிராகரிக்கிறது.

9-ம் அத்தியாயம்.

வரிமாற்ற விகிதம்.

பொப்பிலி, விஜயநகரம் ஜமீன்களில் எப்படி தீர்வை விகிதம் மாறுதலடைய வேண்டுமென்பதைப்பற்றி என் சகாக்கள் சொல்லியது முற்றும் தவறெனக் கருதுகிறேன். அவர்களுடைய திட்டத்தையும் கணக்கையும் நான் ஒத்துக்கொள்ளவில்லை.

என் சகாக்கள் விஜயநகர ஜமீனில் பின்வரும் விதிப்படி, மாற்றுவிகிதக் கணக்கிடுகிறார்கள் :—

மொத்த விஸ்தீர்ணம்—2,334·6 சதுர மைல்கள்.
ஒதுக்கப்பட்ட காடுகள்—318·20 ,, ,,
ஒதுக்கப்படாத காடுகள்—167·20 ,, ,,
போக பயிரிடும் நிலம்—1,849·76 ,, ,,

இதில் என் சகாக்கள் முதல்த் தவறிழைத்துள்ளார்கள். காட்டுப் பிரதேசத்தைத் தவிர, மண்மேடு, குன்று, பாறை, கரை முதலியவற்றை பயிருக்குதவாததென ஒதுக்கவில்லை. மற்றும் கிராமப் பொதுஜன நன்மைக்காக ஏற்பட்ட களம், சுடுகாடு, மாட்டுக்கொட்டகைகள், குளக்கரைகள், வாய்க்கால்கள் முதலியவை ஒதுக்கப்படவில்லை.

இரண்டாவதாக ‘ வெப் ’ துரையவர்களின் கணக்குப்படி 110, 324 கரிசைகள், பயிரிடும் நிலமெனக் கொண்டது சரியல்ல. ‘ கரிசை ’ என்பது நில அளவல்ல ; நில விளைவின் அளவை யொட்டியது. (விசாகபட்டணம் ஜில்லா ‘ கார்மீக்கல் மானுவலை ’ப் பார்க்க.) அக்காலத்தில் ‘ கர்ணங்கள் ’ எடுத்த கணக்கு நம்பக்கூடியதல்ல. மேலும் பயிரிடும் நிலமென்பது காலத்துக்குக் காலமும், இடத்துக்கு இடமும் மாறுபடுகிறது. உதவாததாகக் கருதப்பட்ட இடம் மணிலாக்கொட்டை விளையும் செழிப்பான பூமியாக மாறுவது நாம் அறிந்த விஷயம். மேலும் ‘ வெப் ’ துரை காலத்திலிருந்த காடுகள் பல அழிந்துவிட்டன. கிராம உத்தியோகஸ்தர்களும், குறைத்தும், சேர்த்தும், மனம்போனவாறு கணக்கிட்டிருக்கலாம். ஆகையால் அதை ஆதாரமாகக் கொண்டு, என் சகாக்கள் 1,849·76 சதுர மைல் = 1,183·346 ஏக்கர்கள் என்பதை 110, 324 ‘ கரிசை ’ களால் வகுத்து ‘ 1 கரிசை = 10·7 ஏக்கர்கள் ’ என்னும் கணக்குத் தவறாகும். அவர்கள் கணக்குப்படி 1802-ம் ஆண்டில் பயிரிடக்கூடிய 49,931 கரிசை = 534,000 ஏக்கர்கள். இப்பொழுது பயிரிடப்படுவது சுமார் 524,000 ஏக்கர்கள். என் சகாக்களின்படி 1346-வது பசலியில், பயிரிடப்பட்ட நிலங்களில் 1802-ம் ஆண்டில் பயிரிடப்பட்ட நிலப்பரப்பைவிட குறைவாயுள்ளதென்னும், ஆச்சரியமானதும், தப்பிதமானதுமான முடிவுக்கு வருகிறோம்.

நஞ்சை நிலத்துக்கு வேறுவித மாறுதல்க் கணக்கு எடுத்துக்கொள்ளுகிறார்கள். அதாவது : ‘ வெப் ’ துரை ‘ அறிக்கையில் ’ சாசுவதத்திட்ட காலத்தில் கீழ்நிலம் 39,310 கரிசை எனவும், 1346-வது பசலி, ‘ சர்வே ’ பிரகாரம் நஞ்சை 241,408 ஏக்கர்கள் எனவும், இதை வகுத்ததில், 1 கரிசை = 6·1 ஏக்கர்களாகவும் ஏற்படுகிறது. இதுவும் தவறேயாகும். 1802-ம் ஆண்டில் இருந்த புஞ்சை நிலங்கள், இப்பொழுது நஞ்சை ஆக மாறியிருக்கக்கூடுமென இவர்கள் கருதவில்லை.

புஞ்சை நிலக் கணக்குகளும், அதி நூதனமாகக் காணப்படுகிறது. சாசுவத திட்ட காலத்தில், புஞ்சை 384,102 ஏக்கர்கள். 1346-ம் பசலியில் புஞ்சை 281,692 ஏக்கர். எங்கோ ஒரு லக்ஷ ஏக்கர் புஞ்சை நிலம் மாறுதல் அடைந்துவிட்டுளது. புஞ்சை 1 கரிசை = 20 ஏக்கர் என்றால் விசாகப்பட்டணம் ஜில்லாவில் இப்போதும் நஞ்சை 1 கரிசை = 2 ஏக்கர் ; புஞ்சை 1 கரிசை = 4 ஏக்கர். சர்க்காரே இக்கணக்கை யொட்டித்தான், இனும் திட்ட காலத்திலும், 2 காணி கணக்குகளிலும் மாறுதல்கள் செய்தார்கள். இவ்வழியைப் பின் பற்றாததற்கு, என் சகாக்கள் காரணம் காண்பிக்கவில்லை.

அவர்கள் பொப்பிலி ஜமீனில் கணக்கிட்டதாவது : 1 கரிசை நஞ்சை = 3·7 ஏக்கர். 1 கரிசை புஞ்சை = 23 ஏக்கர்கள்.

சராசரி 1 கரிசை = 9 ஏக்கர்கள்.

இக்கணக்குகளின் வித்தியாசங்களே இத்னுடைய உபயோகமில்லாத் தன்மையைக் காண்பிக்கிறது. விஜயநகர ஜமீனில் 1 கரிசை நஞ்சை = 6 ஏக்கராகவும், அதற்கடுத்த பொப்பிலி ஜமீனில் 3·7 ஏக்கராகவும் கணக்கிடப்படுவது நம்பத்தகுந்ததா ?

இதை மற்றொரு விதமாகவும் கவனிக்கலாம். 1 கரிசை என்பது விளையும் பொருளைக் குறித்ததாகும். குளப்பாய்ச்சல், ஆற்றுப்பாய்ச்சல் நிலங்களின் விளைவின் வேறுபாடுகளுக்கேற்ப, பொப்பிலி ஜமீனில் மாறுதல் விகிதமானது 1 கரிசை நஞ்சைக்கு 2 ஏக்கர் என நிச்சயிக்கப்பட்டது. கேழ்வரகு விளைவின் சராசரி கணக்கிடப்பட்டு 1 கரிசை = 4 ஏக்கர் என தீர்மானிக்கப்பட்டது. ஆனால் என் சகாக்களின் கணக்குப்படி ஒரு கரிசை நஞ்சை தானியம் விளைய 6 ஏக்கர் வேண்டியுளது ; புஞ்சை ஒரு கரிசை விளைய 20, 23 ஏக்கர் நிலம் வேண்டியிருக்கிறது. ‘ அலெக்ஸாண்டர் ’ துரை அறிக்கையின்படி, பொப்பிலி நிலத்தின் கணக்கை என் சகாக்கள் நிச்சயித்தது தவறாகும். அவர்களுடைய கணக்கின்படி, ஜனங்கள் அதிகரித்து, விலைகள் அதிகரித்தபோதிலும், விளைவு அதிகரிக்கவில்லையென்பது சொல்லாமலே தவறென் விளங்கும். ‘ அலெக்சாண்டர் ’ துரை காலத்தில் சராசரி வருமானம் 118,347 ரூபாய். மானியம், கட்டுப்படி ‘ நிசார்கள் ’ வருமானம் 6,957 ரூபாய். கலெக்டர் சராசரியாக மொத்த வருமானம் ரூ. 1,35,000 என்றும், அதில் மூன்றில் இரண்டு பாகம் ‘ பேஷ்கஷாக ’ ரூ. 92,000 ஆகுமென்றும் தீர்மானித்தார். நிலங்களைப் பாகுபடுத்தக்கூடுமென்றும், ரூ. 10,000 அதிகரித்தே மதிப்பிடப்பட்டது. அக்காலத்தில், பின்னால் அதிகரிக்கக்கூடியது என் சகாக்கள் கணக்குப்படி ரூ. 10,000 வருமானமெனக் கணக்கிடப்பட்டதற்கு, 55 ஏக்கர் நஞ்சையும், 575 ஏக்கர் புஞ்சையும்தான் இருந்ததென ஏற்படுகிறது. பொப்பிலி ஜமீன் கணக்குகள் என் சகாக்களின் முடிவுகளைப் பொய்யாக்குகின்றன. இவர்கள் அக்காலத்திலேயே, பொப்பிலி ஜமீனில், மேய்ச்சல் நிலம் தவிர பாக்கி நிலங்கள் பூராவும் பயிரிடப்பட்டதெனத் தெரிவிக்கிறார்கள். உண்மையில் கடந்த ஐம்பது வருட காலமாக பொப்பிலி ஜமீனில் பயிரிடாத நிலங்கள் இருந்திருந்தால் என் நிலவரி கட்டியிருக்கவேண்டும் ? விசாகபட்டணம் ஜில்லா சர்க்கார் நிலங்களின் விஸ்தீர்ணப் பரிமாணங்களைப்பற்றிய சென்னை மாகாண 1930-ம் ஆண்டு புள்ளி விவர ‘ அட்லாஸ் ’ பிரகாரம், கடந்த 54 வருடங்களாகப் பயிரிடப்படும் நிலம் அதிகரித்து வருவதாகத் தெரிகிறது. 1276-வது பசலியில், பயிரிடப்பட்ட நிலங்கள் 76,892 ஏக்கர்கள். பசலி 1330-ல் 174,179 ஏக்கர்கள். வரி விகிதமும் ரூ. 1,84,558-லிருந்து ரூ. 5,62,284 உயர்ந்திருக்கிறது அதாவது, பயிர் நிலங்கள் இரட்டிப்படைந்தோ அன்றி முதலிலிருந்ததைவிட 126% அதிகமாகியும், வரிவசூல் மூன்று மடங்கு அதிகமானதாகவும் காணப்படுகிறது. இது சர்க்கார் நிலங்களிலே. ஜமீன் நிலங்களிலும் இவ்வாறான மாறுதல்கள் ஏற்படாமலிருக்குமா ? உண்மையில் பொப்பிலி ஜமீன் கணக்குகள் சரிவர இல்லை. குடிகளும் பயிர் நிலங்கள் அதிகப்படவில்லை யென்று சொல்லவில்லை. ஆகையால் என் சகாக்களின் கணக்கு முழுவதும் தப்பாகும்.

பொப்பிலி ஜமீனைக் கொஞ்சம் கவனிக்கலாம். என்னுடைய சகாக்களின் கருத்துப்படி பொப்பிலி ஜமீனில் சாசுவதத் திட்ட காலத்துக்குமுன் வாரத் தீர்வை யிருந்ததென்றும், ஜமீந்தார்கள் மொத்த விளைவில் மூன்றில் இரண்டு பங்கு எடுத்துக்கொண்டதாகத் தெரியவில்லை யென்கிறார்கள். அவர்கள், ‘ பத்மநாபம் ’ சண்டையில் விஜயநகர அரசன் இறந்த இரண்டு வருடங்களுக்குப் பிறகு (1296-ல்) பொப்பிலி ஜமீந்தார்

அந்நிலத்தை யடைந்ததாகும். அந்தக் காலத்தில் விஜயநகரம் ஜமீனில் நெல்வரி விலக்கப்பட்டு, கரிசை ஒன்றுக்குப் பத்து ரூபாய் தீர்வையிருந்துவந்ததென்றும் சொல்லுகிறார்கள். இது நம்பக்கூடிய கதையல்ல. பசலி 1207, 1208, 1209-ல் நெல்வரியாக வாங்கப்பட்டுள்ளது. நாகவல்லியாற்றுக்கால் பாய்கின்ற காவிட்டுத் தாணு முகத்துவார கிராமங்களில், பசலி ஒன்றுக்கு தீர்வை சுமார் 3,500 கரிசை நெல், எனத் தெரிய வருகிறது. ஜமீன் நிலச்சட்டம் அமுலுக்கு வந்தபிறகுகூட 40-வது செக்ஷன் பிரிவின்படி, குட்டவில்லி, லப்ஹாம் குடிகள் தங்கள் தீர்வைகளைப் பணமாக மாற்றியமைக்கும்படி வழக்குத் தொடர்ந்திருக்கிறார்கள். இந்த வழக்குகளில் 'தாக்கல்' செய்யப்பட்ட 'கம்பகோட்டா' கணக்குகளும் இதர பட்டிகளும், தானிய மாகத் தீர்வை கொடுப்பது பழைய வழக்கமென்றும், நெருக்கடியான காலங்களில் தானியத்துக்குப் பதிலாகப் பணமாகக் கொடுக்கப்பட்டதென்றும் டெப்டி கலெக்டர் சொல்லுகிறார். [டெப்டி கலெக்டர் தாவாக்கள்—விஜய நகரம் எஸ்.எஸ். நெம்பர்கள் 453 முதல் 521—1908. எக்ஸிபிட் XXII, XXIII முதலியவைகள் பார்க்க.] சாசுவத திட்ட காலத்திலும் குடிகளை ஆதரிக்க ஜமீந்தார்கள் பணத் தீர்வைக்குப் பதிலாகத் தானிய மாகவே வசூல் செய்துகொண்டார்கள். ஜில்லா கோர்ட்டு அப்பீல்கள் 272-லிருந்து 394 வரை 1911-ம்ஞூத் தில் ஐகோர்ட் இரண்டாவது அப்பீல்கள் 778-லிருந்து 807 வரையும், 809-லிருந்து 814 வரையும், 816, 819, 821-லிருந்து 826 வரையும், 828-லிருந்து 846 வரையும் 1913-ம்ஞூத்தில் டெப்டி கலெக்டரின் தீர்ப்பு ஆமோதிக்கப்பட்டது. பசலி 1207–9 வரை கம்பகோட்டா கணக்குகளும், காவட்டித்தாணு கிராமக் கணக்குகளும், சாசுவதத் திட்ட காலத்தில் தானியவரி இருந்ததெனக் காண்பிக்கிறது. ஆகையால் இவைகளை அறவே மறந்துவிட்டு, என் சகாக்கள் தீர்மானித்திருப்பது சரியாகாது.

பொப்பிலி ஜமீனில் கரிசை ஒன்றுக்கு சராசரி நெல்விலை பசலி 1207–9 களில் ரூ. 12, ரூ. 12–8–0, ரூ. 16–8–0 யாக இருந்தது. சராசரியில் கரிசை ஒன்று ரூ. 13–10–8 யாகும். என் சகாக்கள் போடும் கணக்கு படி ரூ. 30-தாக ஏற்படுகிறது. ஆகையால் விலை விஷயத்திலும் அவர்கள் தவருகவே கணக்கிட்டு இருக் கிருர்கள்.

மேலும் அக்காலத்தில், ஜமீன் நிலத்தீர்வையை ரயத்வாரி நிலத்தீர்வையோடு ஒப்பிடுவது தவருகும். 1908-ம்ஞூத்து ஜில்லா 'கெஜெட்' பிரகாரம் சர்க்கார் வரி நஞ்சைக்கு ஏக்கர் ஒன்றுக்கு ரூ. 2 முதல் ரூ. 8 வரையும், புஞ்சைக்கு ரூ. 2–6–0 ஆகவும் காணப்படுகிறது. பிறகு நஞ்சைக்கு ரூ. 18 ஆகவும், புஞ்சைக்கு ரூ. 4 ஆகவும் உயர்த்தப்பட்டதை என் சகாக்கள் கணக்கில் எடுத்துக்கொள்ளவில்லை. பின்னும் இவ்வாறு ஒத்து நோக்குவது சரியல்லவென்று முன்பே கூறியுள்ளேன். வரி வசூலிப்பதற்காக ஜமீந்தார்கள் கோர்ட்டு விஷயங்களில் அதிகப் பணம் செலவிடுகிருர்கள் என்பதையும் கவனத்தில் வைக்கவேண்டும்.

10-ம் அத்தியாயம்.

பட்டாக்களும், முச்சிலிக்கைகளும்.

என்னுடைய சகாக்கள், பட்டா என்கிற பதத்தின் அர்த்தம், எப்படி ஜமீந்தாருக்கு சன்னத்துக்கள் உரிமை யளிக்கின்றனவோ அம்மாதிரியே குடிகளுக்குப் பட்டா என்கிருர்கள். உண்மையில் பட்டா, குடியானவரின் நிலை மையைப்பற்றியதோர் சாசனமேயாகும். அனுபோக உரிமை ஆதியிலேயே குடிகளுக்கு உண்டு என்பதைப் பட்டா காண்பிக்காது. என்னுடைய சகாக்கள் 'சென்னை ஜமீன் சட்டம்' 50-வது செக்ஷனில், அனுபோக உரிமையில்லாத குடிகளை ஒன்று சேர்த்திருப்பதைப்பற்றிக் குறைகூறுகிருர்கள். அவர்கள் அந்தச் சட்டம் அனுபோக உரிமையில்லா ரயத்துகளுக்குத்தான் பிரயோகம் செய்யவேண்டுமென்றும், அனுபோக ரயத்துகள் தங்கள் பட்டாக்களையும், முச்சலிக்கைகளையும் மாற்றிக்கொள்ளவேண்டாமென்றும் கூறுகிருர்கள். பழைய கரம்பு நிலவகையராக்களை எடுத்துவிட்ட 1934-ம் வருட திருத்தச் சட்டம் 8-ன் பொழுதே பட்டா, முச்சலிக்கா என் பவை எடுத்துவிடப்பட்டிருக்கவேண்டும் என்கிருர்கள். இதனுல் எவ்வித நன்மையை அவர்கள் எதிர் பார்க்கிருர் களென்பது எனக்குத் தெரியவில்லை. பட்டாவானது அவ்வப்பொழுது குடிகள் ஆளும் நில விஸ்தீர்ணத்தைப் பற்றியும் அதற்காகக் கொடுக்கும் வரியைப்பற்றியும், இன்னும் பலவித உரிமைகளையுந்தான் காண்பிக்கிற தென்பது சொல்லாமலே விளங்கும். இது அவசியமென்றும் சொல்லவேண்டுவதில்லை. 1802-ம்ஞூத்து பட்டா ரெகுலேஷனும், 1865-ம்ஞூத்திய வரி வசூல் சட்டமும், ஜமீன் நிலச்சட்டமும் பட்டாவுக்கு இவ்வர்த்தத் தைத்தான் தருகிறது.

என்னுடைய சகாக்கள் சாசுவத திட்ட காலத்தில் பயிரிடப்பட்ட நிலங்களுக்கும், அக்காலத்திலிருந்து
பயிர்த் தொழிலுக்குக் கொண்டுவரப்பட்ட நிலங்களுக்கும், ஒரே ஒரு நிலையான பட்டாதான் இருக்கவேண்டு
மென்றும், அதை மாற்றவேண்டிய அவசியமில்லையென்றும் சொல்லுகிருர்கள். பெரும்பான்மை அறிக்கை
தாயாரிப்பு மசோதா, 35-வது உட்பிரிவைப் பார்க்க. 31-வது உட்பிரிவின்படி ஜமீந்தார் பழைய பட்டாக்களை
மாற்றிப் புதிதாக பட்டா கொடுக்காமல் குடிகளின்மேல் வழக்குத் தொடரலாகாதென்றும் கூறுகிருர்கள்.
ஆனல் இந்த 'ஆக்டில்' சொல்லியவாறு, கொடுக்கப்படும் நிரந்தரப் பட்டாவை இந்த உட்பிரிவு 31 பாதிக்காது
எனவும் கூறுகிருர்கள். இதன் பொருள் எனக்குச் சரிவர விளங்கவில்லை. ஒருவேளை ஒரே ஒரு நிரந்தர பட்டா
இருப்பதினுலும், அல்லது பட்டா மாற்றல் இல்லாமலிருந்தபோதிலும், ஜமீந்தார்கள் தங்கள் நில வரியைச்
சுலபமாக வசூலிக்க ஏற்பட்டது போலும். பட்டாதார் இறந்து, சந்ததிகளுக்கு நிலம் மாற்றப்பட்டபோதிலும்,
நிலத்தைப் பாகம் பிரிக்கும் காலத்திலும், அல்லது மாற்றல் ஏற்படும் காலங்களிலும், பட்டாவும் மாரு
விட்டால் பல கஷ்டங்கள் ஏற்படுமென நான் என் சகாக்களுக்குச் சொல்லவேண்டியுளது. ஜமீந்தார் வரிப்
பாக்கிக்காக ஜப்தி அல்லது விற்பனை நடவடிக்கை எடுத்துக்கொள்ளுங் காலங்களில் எவர்மீதென்பது பட்டாவின்
மூலமாகத்தான் தெரிந்துகொள்ளமுடியும். 7, 8 அத்தியாயங்களில் சொல்லிய நடவடிக்கைகளுக்கு இறந்த
வர்கள்மீது நோட்டீஸ் கொடுக்கமுடியாது.

97, 98-வது உட்பிரிவுகளில் நிலத்தைப் பங்கு செய்தாலும், மாற்றினுலும் நிலத்தை யார் அடைகிருர்
என்று கண்டுபிடிக்க வழிகள் ஏற்பட்டிருந்தபோதிலும், நிலப்பகுதிகள் பாகம் பிரிக்கவேண்டி மாற்றப்பட்டதி
னுலும் அல்லது சந்ததிகளுக்கு வருங்காலத்திலும் மாறுதல்களைக் காண்பிக்க, பட்டாவும் மாறுதலடைய
வேண்டுமென்பது சொல்லப்படவில்லை. தங்களுடைய பங்குகளுக்காக எவ்வளவு தீர்வை செலுத்தவேண்டு
மென்பதற்காகவே அவர்களுக்குப் புதுப்பட்டாக்கள் வேண்டியுளது. குடிகளே, ஜமீந்தார்கள் நிலப்பாகம்
பிரிப்பதையும், மாறுதலையும் கவனித்துப் புதுப் பட்டா கொடுக்காமல் மொத்த நிலத்தின்பேரில் வரிக்காக
நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளுகிருர்களெனச் சொல்லுகிருர்கள். குடிகளின் நன்மைக்காகவே பட்டாக்கள்
புதிதாகக் கொடுக்கப்படுகின்றன. எப்பொழுதும் குத்தகை நிலையும், வரியும் ஒரே மாதிரியிருப்பின் பட்டாக்கள்
மாற்றப்படவேண்டியதில்லை; ஆனல் வழக்கத்தில் அவ்வாறில்லை. ஆகவே எல்லாருடைய நன்மையைக்
கருதியே பட்டாக்கள் மாற்றப்படல்வேண்டும்.

11-ம் அத்தியாயம்.

வரி வசூல்.

சாசுவத திட்ட சட்டம் 1802-ல் ஏற்படுத்தப்பட்ட நாளிலிருந்தே, ஜமீன்தார்கள் தம் குடிகளிடமிருந்து வரி வசூலிக்கும் முறையை ஏற்படுத்தினார்கள்.

அவ்விதிகள், ஜமீன்தார்கள் அக்கிரமமாகச் சில முறைகளை இவ்விஷயத்தில் அனுஷ்டிக்கலாகாதென்றும், குடிகளின் பாதுகாப்புக்காக தகுந்த ஏற்பாடுகள் வேண்டுமென்றும் ஷை சட்ட முன்னுரையில் தெரிவிக்கின்றன. ஜமீன்தார்கள் ஜப்தி, பரிமுதல், வரிக்காகச் செய்யும்போது, கீழ்க்குடிகளின், நிலம், வீடு, சொத்து முதலியவைகளை யாதொரு விதமாகவும் பாதிக்கலாகாதென சொல்லப்படுகிறது. அடமானக்காரரும் வரிக்காக விளையும் தானியங்களைச் செலுத்திய பின்புதான், தனக்குக் கொடுக்கவேண்டிய பணத்துக்காகப் பரிமுதல் செய்யலாமெனவுளது. ஜமீன்தார்கள், வரி கொடாதவரை கோர்ட்டு மூலமாகக் கைது செய்யவும், அவர்கள் நிலங்களைப் பரிமுதல் செய்யவும், அவ்வருஷத்துக்குள் வரிப் பணம் கிடைக்காவிட்டால் விற்பனை செய்யவும், இதர சந்தர்ப்பங்களில் நிலத்தைவிட்டு விலக்கவும் உரிமைகள் கொடுக்கப்பட்டுள்ளன.

2. வரி வசூல் சட்டம் (ஆக்ட் 8–1865) வரி வசூலிப்பதற்கு ஜமீன்தாருக்குள்ள வழிகள் :

(a) கலெக்டர் முன் தாவா செய்வது.

(b) தானியம், ஜங்கமச் சொத்துக்களைப் பரிமுதல் செய்வது.

(c) குடிக்கு விற்பனை உரிமையிருப்பின் நிலத்தை விற்பது.

(d) விற்பனையுரிமை இல்லாத குடிகளை நிலத்தைவிட்டு விலக்குவது (செக்ஷன் 41).

(e) 50 ரூபாய்க்குள்பட்ட வரி கொடாமலிருப்பவரை, 6 வாரம் வரை சிறையில் வைப்பது ; 50 ரூபாய்க்கு மேற்பட்டால் 6 மாதம் வரை சிறைவைப்பது.

ஜமீன் நிலச் சட்டம், குடிகளை அப்புறப்படுத்தல், கைது செய்தல், சிறைவைத்தல் முதலிய முறைகளை நீக்கிவிட்டது.

3. பாக்கியுள்ள வழிகளுக்கு பட்டா முச்சிலிக்கைகளை முன்னமே ஜமீன்தாருக்கும் குடிகளுக்கும் மாற்றப்பட்டிருக்கும். கலெக்டர்முன் தாவா செய்ய இதற்கு அவசியமில்லை.

4. இவ்வழிகளைப்பற்றி குடிகள் கூறும் குறைகள் :

(a) ஜமீன்தாரின் ஏஜண்டுகள், வரி வசூலித்தலுக்காக ரசீது கொடுப்பதில்லை.

(b) கூட்டுப்பட்டா இருப்பதனால் ஒரு குடி தன் பங்கைவிட அதிகமாக வரி செலுத்த நேருகிறது.

(c) ஜங்கமச் சொத்துக்களைப் பரி முதல் செய்யுங்காலத்து, ஜமீன்தாரின் ஆட்கள் அநியாய முறைகளைக் கையாளல்.

(d) வரி வசூல் காலத்துக்கும், விளைவு காலத்துக்கும் சம்பந்தமில்லாமை.

5. பெரும்பான்மை அறிக்கை, இதைப்பற்றிக் கூறும் தீர்மானங்கள் ஆவன :

(a) நிரந்தர வரி விதிப்பினால், புத்தியுள்ள குடியானவன் வரியைக் காலா காலத்தில் கொடுத்து விடுகிறான். ஆகையால் அவனை வற்புறுத்தும் வழிகள் அவசியமில்லை.

(b) வரி, 'பேஷ்கஷை' ப்போல் ஒத்திருப்பதனால், ஜமீன்தாருக்கும் இவ்விஷயத்தில் சர்க்கார் அனுசரிக்கும் முறைகளைக் கொடுக்கவேண்டும்.

(c) ஜமீன் நிலச் சட்டத்தின் 6-வது அத்தியாயத்தை மாற்றி, பரிமுதல், விற்பனை முதலிய வழிகள் சர்க்கார் வரி உத்தியோகஸ்தர் மூலமாய் நடைபெறல் வேண்டும்.

(d) கோர்ட்டின் மூலமாகவும் குடிகளைச் சிறையிடல் கூடாது.

(e) வழக்குக்களை விசாரிக்க வரி உத்தியோகஸ்தர்கள் அடங்கிய நீதி மன்றங்கள் ஏற்படுத்தவேண்டும். 'அப்பீல் கோர்ட்டு' களும் ஏற்படுத்தப்படல் வேண்டும்.

6. என் அபிப்பிராயப்படி, வற்புறுத்தும் வழிகளில்லாமற்போயின், குடிகள் தாங்களே காலா காலத்தில் வரியை ஒழுங்காகக் கொடுப்பார்கள் என நினைக்கவில்லை.

7. சர்க்காருக்குள்ள, முறைகள் ஜமீன்தாருக்குமளிக்கப்படல் வேண்டும் என்னும் தீர்மானத்தை நான் மகிழ்வுடன் ஆமோதிக்கிறேன்.

8. ஆனால், இவ்வாறு என் சகாக்கள் சொல்லுகையில், ஜமீன்தார்கள் அனுபவித்து வரும் முறைகளைக் குறைவுபடுத்துகிறார்களே ஒழிய வெறொன்றும் தரவில்லை. மேலும் ஜமீன்தார்கள் பரிமுதல் முதலிய வழிகளை, வரம்புமீறிக் கையாளுவதினால்தான் இவ்வித மாறுதல்கள் செய்யவேண்டுமென்கிறார்கள்.

9. **பரி முதல் காலத்திற் கையாளப்படும்** கொடுமைகள்.—கொடுமைகளை நிரூபிக்க சரியான சாக்ஷியம் காண்பிக்கப்படவில்லை. மேலும், இருக்கும் சட்டங்களிலேயே போதிய பாதுகாப்புகள் உள :

(a) கலப்பை, உழவுச் சாதனங்கள், ஆடு மாடு, எரு, விதை தானியம் முதலியவைகளைப் பரிமுதல் செய்யலாகாது. ஜமீன் நிலச் சட்டப்படி எல்லா மாடுகளும் ஜப்தியிலிருந்து விலக்கப்படுகின்றன 'சிவில் கோட்' பிரகாரம் ஒரு ஜதை மாடுதான் விலக்கப்பட்டுள்ளன.

(b) கொடுக்கவேண்டிய வரிப்பணத்துக்குப் போதிய பரிமுதல் செய்யவேண்டும் ; அதிகம் கூடாது.

(c) ஜப்தி செய்யப்பட்ட ஆடுமாடுகளையாவது, பொருள்களையாவது, தான் உபயோகிக்கலாகாது. மாடு ஆடுகளுக்கு வேண்டிய தீனி அளித்து காப்பாற்றவேண்டும்.

(d) பரிமுதல் செய்த பொருள்கள் தொலைந்தோ, களவாடப்பட்டோ விட்டால், ஜப்தி செய்தவன் நஷ்டங்களை ஈடுகட்டித் தரவேண்டும். விளைவிலேயே தானியங்களை ஜப்தி செய்திருந்தால், அவற்றை அறுவடை வரையில் சொந்தக்காரனே பாதுகாத்து அறுவடை செய்யலாம். அவ்வாறு அவன் செய்யாவிடின், ஜப்தி செய்தவன் செய்யலாம். எவன் ஒருவன் அக்கிரமமாகவும், அநியாயமாகவும், தவறென்றுணர்ந்தும், இவ்விதமாக குடியின் சம்மதம் பெறுமல் செய்கிருனே, அல்லது, அறுவடை, பாதுகாத்தலைத்தடுக்கிருனே அவன் 212-B சட்டப்படி தண்டனைக்குள்ளாவான். மேலும், 1934-ம் வருடம் உண்டான திருத்தங்களுக்குப்பின், ஜமீன்தார், கோர்ட்டில் தாவா செய்திருந்தால், தனியாக ஜப்தி, விலக்குதல் முதலிய செய்தல் கூடாது. மேலும், ஜங்கமச் சொத்துகளைப் பரிமுதல்

செய்யுமுன்பும், நிலத்தை விற்பனை செய்யுமுன்பும், ஜமீன்தார் குடிகளுக்கு அவ்வப்போது தகுந்த நோட்டீஸ் கொடுக்கவேண்டும். பரிமுதல் செய்த பொருள்களின் பட்டியும், முன்னால் குடிக்கு அனுப்பிய நோட்டீசும், விற்பனைக்குக் கொண்டுவரும் பத்து நாளுக்குமுன் கலெக்டருக்கு அனுப்பப் படவேண்டும். ஜப்திச் சொத்துக்களை விற்பனை செய்வது சர்க்கார் உத்தியோகஸ்தர்களே. 96-வது பிரிவின்படி, ஜப்தி செய்த 15 நாளுக்குள், குடிகள், அநியாய ஜப்தி என்று 8 அணா முத்திரைச் செலவில் சுலபமாக வழக்குத் தொடரலாம்.

10. குடிகள் கூறும் குறைகள் மேற்கூறிய காரணங்களால் சரியல்ல. கோவாபரேடிவ் பாங்குகள், நில அடமான பாங்குகள், பணங்களை வசூலிப்பதில் சர்க்காரைப்போல், நிலத்தீர்வையில் பாக்கியை வசூலிக்கக் கையாளும் முறைகளைத்தான் அனுசரிக்கின்றன. ஆகையால் ஜமீன் நிலச்சட்ட முறைகளை அதிகப்படுத்தி, ஜமீன் தாருக்கு ஜப்தி செய்யும் உரிமையைத் திருப்பியளித்தல் வேண்டும்.

11. இக்காலத்தில், குடிகள் சங்கங்கள் அமைத்து, தம் உரிமைகளைப் பாதுகாத்துக் கொள்வதால், உண்மையில், அவர்கள் சொல்வதேபோல், ஜப்திகாலங்களில் கொடுமையே ஏற்படுவதில்லை ; இவ்விஷயத்தில் ஜமீன்தார் ஆட்களே துன்பமுறுகின்றனர்.

12. **சர்க்கார் மூலம் வரிவசூலித்தல்.**—இம்முறை சாசுவத திட்டத்துக்கு முற்றும் முரணானது. சர்க்காரே வசூலித்தால் ஜமீன்தார்கள் என் ? அவர்கள் "பென்ஷன்" வாங்குபவரா அல்லது "மாலிகானா"க் களா ? இது, ஜமீன்தாரிகளை யறவே யழிக்க ஒரு மறைவழியா ?

சர்க்கார் மூலமாகப் பரிமுதல் செய்தால் அதிக செலவும், தாமதமும் ஏற்படும் ; மேலும் அவர்கள் இஷ்டம்போல் சரிவர வசூல் செய்யார்கள். ஒருவித இரட்டை ஆட்சி ஏற்பட்டு, வசூலிக்கும் சாதனங்களில் தாமதமும், கோளாறுகளும் உண்டாகும்.

13. பஞ்சாயத்து ஏற்படுத்தி வசூலிக்கலாமெனவும் சொல்லப்படுகிறது. இதற்குச் சாதகமாகப் பழைய காலங்களில் பஞ்சாயத்து உண்டு எனவும் சொல்லப்படுகிறது. ஆனால் ஆசிரியர், மூர்லாண்ட், முகல் இந்திய விவசாயமென்னும் புத்தகத்தில் இதிலுள்ள ஆபத்தை யெடுத்துக் காட்டுகிறார்.

"சில, அதிகாரம் வாய்ந்த நபர்கள் ஒன்றுகூடி, இவ்வித பஞ்சாயத்தால் குடிகளுக்குத் துன்பம் விளைவிக்கக்கூடும் ; தங்கள் சுயநலத்தையே யாகிலும் கருதிச் செய்யலாம்" என்கிறார்.

14. இத்தகைய பஞ்சாயத்துக்களை, காட்டு இலாகாவில் சர்க்கார் உபயோகப்படுத்துகிறார்கள். அதிக கஷ்டங்களில்லாத அந்த இலாகாவிலேயே விவசாய மந்திரியார் சொல்லுகிறபடி (1938-ம் ஞு பிப்ரவரி மீ 10உ பொடலகூர் பேச்சு). பஞ்சாயத்துக்கள் முறிந்துவிட்டன. காடுகளைக் கவனிக்காமல், அரசியல் கட்சிக்காரரின் பலத்துக் கேற்றவாறு, சுயநலங்கருதி, குடிகளின் நன்மைகளைப் பாதுகாப்பதில்லை யென்கிறார்.

கிராமக் கட்சி விவாதங்களினாலும், இப்பஞ்சாயத்து முறை சரிவர நடைபெறாது.

15. **குடிகளின் குறைகள்.**—ஜமீன் நிலச்சட்டத்தில், ஜமீன்தாரிடமிருந்து குடிகளைப் பாதுகாக்க போதிய விதிகள் உள. வரி வசூல் செய்ததற்கு அத்தாக்ஷியாக ஜமீன்தார் ரசீது கொடுக்க மறுத்தால், குடிகள் கலெக்டரிடம் மனுச்செய்து இரட்டிப்பு நஷ்ட ஈடு வசூல் செய்யலாமென்று காணப்படுகிறது (65-வது பிரிவு). கொடுக்கும் வரியை வாங்கிக்கொள்ள ஜமீன்தார் மறுத்தால், குடிகள் கலெக்டரிடம் பணத்தைக் கட்டிவிட்டு ரசீது பெற்றுக்கொள்ளலாமெனவும் சொல்லப்படுகிறது (பிரிவு 68).

குடிகள் கொடுக்கும் வரியை, அவர்கள் சொல்லுகிற காலத்துக்கும், பங்குக்குந்தான் வசூலான தொகை யாக வைத்துக்கொள்ள வேண்டுமே தவிர, காலந்தவறிய பழைய பாக்கிக்காக ஜமீன்தார் வரவு வைத்துக் கொள்ளலாகாது. அப்படி, குடிகள் ஒன்றும் சொல்லாமல் வரி செலுத்தினால் பழைய பாக்கிக்காக அதைக் கணக்கில் வரவு வைக்கலாமென்று, பிரிவு 64 கூறுகிறது.

ஜமீன் நிலச்சட்டம், "இந்திய கான்ட்ராக்ட்" சட்டத்தைவிட, அதிகமாகவே சலுகை காட்டுகிறது.

16. **கூட்டுப் பட்டா.**—ஜமீன்தார்கள் பட்டா பிறித்துக் கொடுப்பதில்லையென்று சொல்வதற்குக் காரணம், குடிகளின் ஒத்துழைப்பில்லாமையும், நிலத்தைப் பிரிவினை செய்வதற்கு வேண்டிய செலவுகளைக் கொடா மையுமே. ஜமீன்தார்கள் அதற்காகச் செலவு செய்வது சரியல்ல. ரயத்வாரி நிலங்களில், பட்டா பிரிவினைக் குக் குடிகளேதான் செலவுசெய்து கொள்கிறார்கள். பிரிவு 145, ஜமீன் நிலச்சட்டப்படி, நிலங்களில் பங்கு பிரிவினை ஏற்படுங் காலங்களில் குடிகளே "ரெஜிஸ்டிரேஷன்" செய்யும்போது, விற்பவர், வாங்கு பவர் கையெழுத்துள்பட, ஜமீன்தாருக்குச் சேரவேண்டிய "நோட்டீசை", "ரெஜிஸ்டர்" செய்யும் உத்தி யோகஸ்தர் மூலமாக அனுப்பிவிடலாமெனவும், அப்படி ஏற்பட்ட மாறுதல்களை, ஜமீன்தார்கள் ஏற்றுக்கொ ளல் வேண்டுமெனவும் சொல்லப்படுகிறது. தவறினால், கலெக்டர் மூலம் குடிகள் பட்டா மாறுதல்களையும், வரி வேறுபாடுகளையும் தெரிவிக்கலாமெனக் காணப்படுகிறது.

17. **அசௌகரியமான வரிவசூல் தேதிகள்.**—ஜமீன் நிலச்சட்டம் 51-வது பிரிவின்படி, ஒப்பந்தமிருந் தால், அந்த தேதிகளிலாயினும், அல்லது வழக்கமான தேதிகளிலாவது வரிவசூலிக்கப்படவேண்டும். தேதியை நிச்சயப்பதில் குடிகள் அறுவடை செய்யுங் காலத்தை யொட்டியும், ஜமீன்தாரின் வசதியை ஒட்டியும் செய்யப் பட்டது. அறுவடைக்குப் பிறகு அதிக காலதாமதம் செய்தால், குடிகள் வீண்செலவு செய்துவிடுவார்கள். ஜமீன்தார்கள் சர்க்காருக்குக் கட்டும், "பேஷ்கஷ்" தினமும், குடிகள் வரி வசூலுக்குப் பிறகு அமைக்கப்பட வேண்டும்.

18. **அநியாய வசூல்கள்.**—ஜமீன்தார்கள் அநியாயமாகவும் சில வசூல்கள் செய்வதாகக் குடிகள் கூறு கிறார்கள். 135, 136-வது செக்ஷன்கள், ஜமீன் நிலச்சட்டம், இவ்விஷயத்தில் குடிகளுக்குப் பாதுகாப்பளிக் கிறது. கலெக்டர் மூலமாக ஜமீன்தாருக்கு அபராதமும் விதிக்கலாம். ஆகையால் குடிகள் கூறும் குறைகள் வீண்பழியே.

19. வரி வசூலிக்கும் வழிகள், ஜமீன்தாருக்கு, ஜமீன் நிலச்சட்டப்படி, அதிக செலவுள்ளதாகவும், கால தாமதம் செய்யக்கூடியதாகவு முளது. மேலும், கிராம உத்தியோகஸ்தர்மீது, ஜமீன்தாருக்குதக்க அதி காரம் இல்லை. 12 மாத காலத்துக்குமேல், வரி வசூலிக்கப்படாமலிருந்தால், கோர்ட்டு தாவா ஒன்றே ஜமீன்தார் கையாளக்கூடிய முறை.

20. கோர்ட்டு தாவா.—நூறு ரூபாய் வரிக்காகத் தாவா எடுப்பதற்கு வேண்டிய செலவு கீழ்வருமாறு.—

	ரூ.	அ.	பை.
ஸ்டாம்பு	11	3	0
வக்காலத்து	1	0	0
பிரதிவாதி சம்மன் (பிரதிவாதி ஒன்றுக்குமேலானால் சம்மன் கட்டணம் உயர்வு).	0	8	0
சாக்ஷி பாட்டா	3	0	0
வக்கீல் பீஸ்	4	0	0
டிக்ரி நகல்	0	8	0
டிக்ரி வசூல் ஸ்டாம்பு	0	12	0
நோட்டீஸ்	0	8	0
ஜங்கம ஜப்தி பாட்டா	2	0	0
விற்பனை நோட்டீஸ்	1	0	0
இதர செலவுகள்	2	0	0
மொத்தச் செலவு ..	26	7	0

ஜங்கமப் பொருள்களை விற்பனைக்குக் கொண்டுவந்தால் தனிச் செலவு 10 ரூபாய். வாய்தாக்கள் ஒன்றுக்குமேலானால் செலவதிகம். பிரதிவாதிக்குச் சம்மன் சேராமலோ, அல்லது அன்னார் மைனராக இருந்தாலோ, கோர்ட்டுக்கு வரும் போகும் செலவுகளோ தனியாகும். மொத்தத்தில் ரூ. 100 தாவாவுக்கு ரூ. 30 செலவாகிறது. "சிவில் புரொஸிஜர் கோடு II விதி 2" பிரகாரம், ஜமீன்தார் காலக்கெடுவிலிருந்து தப்புவிப்பதற்காக, மூன்று பசலி பாக்கிக்காகச் செலவு செய்யவேண்டியுளது ; குடிகளுக்கும் கஷ்டம், ஜமீன்தாருக்கும் லாப்மில்லை.

கோர்ட்டில் தாவா செய்யும் வழியைத் தள்ளிவிட வேண்டுமென சிலர் சொல்கிறார்கள். தனியான ஜப்தி, விற்பனை முதலியவைகளே போதுமெனச் சொல்கிறார்கள். ஆனால் கோர்ட்டு மூலமாக தாவா செய்வதில் பலவித நன்மைகள் உள. வரிவிகிதம், ஜமீன்தாரின் உரிமை முதலிய பலவிஷயங்கள் கோர்ட்டாரால் விசாரிக்கப்பட்டுத் தீர்மானிக்கப்படுகின்றன. மேலும் கோர்ட்டு மூலமாக ஜப்தியோ, கடன்காரனைச் சிறையில் வைப்பதோ ஏற்பாடாகிறது. ஆகையால் கோர்ட்டுச் செலவைக்குறைத்து, "ஸ்மால்காஸ்" நூற்றுக்கு ஏழரையாகவும், வரிவசூல் தாவாக்களில் நூற்றுக்கு 11 ரூபாய் 3 அணாவாக விருப்பதை ரூ. 5 ஆக மாற்றவேண்டும். சம்மன் செலவுகளையும் குறைக்கவேண்டும். டிக்ரி காபிகள் இலவசமாகவோ அல்லது 2 அணா வாகவோ ஏற்படுத்தவேண்டும். பிரதிவாதி வராத தாவாக்களில் சாக்ஷிகளின்றி, வாதியின் பிரமாணப் பத்திரங்களின் மீதிலேயே டிக்ரிகள் கொடுக்கவேண்டும். ஸ்பெஷல் டெப்டி கலெக்டர்களை ஏற்படுத்தி சீக்கிரத்தில் தாவாக்களைத் தீர்மானித்தல் வேண்டும்.

21. ஜங்கம ஜப்தி.—இதைப்பற்றி ஜமீன்தாரின் குறைகளாவன :—

(a) அநேகவித பொருள்கள் ஜப்தியிலிருந்து விலக்கப்படுகின்றன.

(b) விற்பனை உத்தியோகஸ்தரின் நீண்ட காலதாமதங்களும் அதனால் ஏற்படும் செலவுகளும்.

(c) ஜப்திகளைத் தடுப்பவர்க்குத் தக்க தண்டனை இல்லாமை.

(d) ஜப்தியை ஏமாற்றுதல்.

உழவு மாடுகளில் முக்கியமான ஒரு ஜதையைத் தவிர மீதியை ஜப்தியிலிருந்து விலக்கலாகாது. குடிகளின் சொத்து அவைகள்தான். சில காலங்களில் குடிகளிடமே ஜப்திப் பொருள்களை விட்டுவைப்பது தவறு. சாக்ஷி கூறவந்த, அனுபவம் வாய்ந்த, டெப்டி கலெக்டர்கள் இக்குறையை ஒப்புக்கொள்கிறார்கள்.

விற்பனை காலம் அதிக தாமதப்படுத்தப்படுகிறது. சில வேளை ஜப்தி செய்த 6 மாதம் வரையும் நடவடிக்கை எடுக்கப்படுவதில்லை. விற்பனை செய்யும் சர்க்கார் டெபுடி தாசில்தார்கள் பல இடங்களுக்கும் ஒரே சமயம் போக முடியாது. ஆகையால் கிராமாதிகாரிகளுக்கு போதுமான பாதுகாப்புடன் விற்பனை செய்ய உரிமையளிக்கலாம்.

என் தீர்மானப்படி, ரெவின்யூ டிவிஷனல் ஆபிஸர்கள், ஒப்புக்கொள்ளப்பட்ட ஜமீன்தாரின் உத்தியோகஸ்தரை இவ்வேலைக்கு நியமிக்கலாம். ஜப்தியிலிருக்கும் பொருள்களைத் திருட்டுத்தனமாகவோ, மோசமாகவோ மாற்றுவதைத் தடுக்க, ஜமீன் நிலச்சட்டத்திலுள்ள பாது காப்புகள் போதா. வரி வசூல் சட்டத்தில் 26, 27 பிரிவுகளிற் கண்டபடி, ஜமீன் நிலச்சட்டம், 90–வது பிரிவு மாற்றியமைக்கப்படவேண்டும்.

ஜப்தி செய்த பொருள்களின் பேரில், கடனாளியின் உரிமையுடன் தாவாக்கள் போடப்படுகின்றன. இதற்காக விசாரணையும் நீடிக்கப்படுகிறது. அந்தந்தக் கிராமங்களிலே சர்க்கார் டெப்டி தாசில்தார்கள் இதை விசாரிக்கவேண்டும். ஜப்தி செய்யும் பொருள்கள் கடனாளியின் சொந்தமெனக் கிராமாதிகாரிகள் நற்சாக்ஷி கொடுத்தால் அது நம்பலாகும்.

ஜப்தி செய்த பொருள்கள், கிராம அதிகாரி பாதுகாப்பிலேயே இருக்கவேண்டும். மேலும் ஒருவருட பாக்கிக்கன்றி, கடந்த 2, 3 வருட பாக்கிகளுக்கும், ஜமீன்தாருக்கு ஜப்தி செய்யுமுரிமை தரப்படவேண்டும். இருதரத்தாரும் வீணைக் கோர்ட்டுக்குப் போகாமல் காரியங்களை முடித்துக்கொள்ளலாம்.

22. நில விற்பனை.—ஜமீன்தார்கள், இது அதிகச் செலவுள்ளதாகவும், காலதாமதமுள்ளதாகவுமிருப்பதாகக் கூறுகிறார்கள். இவ்வழி சிக்கலானதாகவும், சமயா சமயத்தில் விற்பனை காலத்தில் உத்தியோகஸ்தர்கள் அகப்படாமையாகவும் தோன்றுகிறது. விற்பனைக்கு முன் பழைய சட்டப்படி கட்சிக்காரருக்கு நோட்டீஸ் கொடுத்து, தடைகளிருப்பின் விசாரித்தும், நிலங்களைப்பங்கு படுத்தியும், பங்கு பங்காக நிலங்களை விற்கவேண்டியிருந்தது. இதனால் ஜமீன்தாருக்கு அதிக செலவு ; குடிகளும் தடை சொல்லவருவதில்லை ; வீணைக் காலதாமதமே ஏற்படுகிறது.

விற்பனைக்குப் பிறகு, ஜமீன்தாருக்குப் பணம் கைக்குவர 30 நாள் ஆகியிருந்ததை, இப்பொழுது விலையானதெனச் "சர்டிபிகேட்" கொடுத்த பிறகு ஜமீன்தாருக்குக் கொடுக்கவேண்டுமென திருத்தப்பட்டது. ஏலத்தில் நிலத்தை வாங்கியவர் 3 வருடத்துக்குள் "சர்டிபிகேட்டுக்கு" மனுச் செய்துகொள்ளலாம்.

ஆகையால் ஜமீன்தாருக்குப் பணம் வர, ஏலமெடுத்தோர் காலதாமதப்படுத்துவதைப் பொருத்துளது இத்திருத்தம் 126-வது பிரிவிலிருந்து எடுக்கப்படவேண்டும். நிலப்பங்குகளை விற்பதிலும், விற்றபின் உரிமையளிப்பதிலும் ஏற்படும் காலதாமதமும் குறைக்கப்படவேண்டும்.

"ரெவின்யூ" கோர்ட்டு மூலமாக ஏலத்தில் விடப்பட்ட நிலங்களை பழைய குடிகள், விடாமல் நிலம் வாங்கினவனுக்குக் கஷ்டமளிக்கிறார்கள். அவர்களுக்குத் தகுந்த தண்டனைகளும் 212-D-ல் நுழைக்கப் படவேண்டும். விற்பனையைப்பற்றி ஜில்லா கெஜெட்டில் குறைந்தது மூன்று தரம் பிரசுரிக்க வேண்டு மென சட்டம் கூறுகிறது.

அவை பிரிவுகள் 117 (1), 123 (2), 124 (3) அதற்கேற்படும் செலவாவது :—

	ரூ.	அ.	பை.
(a) "நோட்டீஸ்" குடிகளுக்கனுப்பல்	0	8	0
(b) விலைக்கிக்கொண்டு வர மனு	0	12	0
(c) 116-வது பிரிவின்படி நோட்டீஸ்	0	8	0
(d) விற்பனை விளம்பரம்	1	0	0
(e) விற்பனைக்கட்டணம்	1	0	0
(f) பிரசுரச் செலவுகள்	11	8	0
(g) தபாற் செலவுகள்	0	3	0
மொத்தச் செலவு	15	7	0

அநேக குடிகள் படிப்பு வாசனையறியாதவர். கெஜெட்டில் பிரசுரிக்கும் செலவோ அதிகம். இரு தரத்தாரின் நன்மைக்காகவே இப்பிரசுர விஷயத்தை எடுத்துவிடலாம். மேலும், ஒரு வருஷத்துக்கன்றி 3 வருஷ பாக்கிக்கும் நிலத்தை விற்பனைக்குக் கொணர ஜமீன்தாருக்குரிமை தரலாம்.

23. **இதர பாதுகாப்புகள்.**—கமிட்டியாருக்குச் சமர்ப்பித்த யாதாஸ்துகளில் இன்னும் இதர **உபாயங்கள்** கூறப்படுகின்றன :—

(a) சர்க்காருக்குக் கொடுக்கவேண்டிய நிலவரியைப் போலவே, **தீர்வையும்** வசூலிக்கப்படலாமென்பது. வரி வசூல் சட்ட முறைகளை அனுஷ்டிப்பது. ஜமீந்தார்கள் வரி பாக்கிக்காக, ஜப்தி விற்பனை முதலிய செய்யாமல் [செக்ஷன் 22, ஆக்ட் 2 (1826)] பிரகாரம் சுவாதீனத்தில் கொணர்ந்து நிலத் தைப் பார்வையிடுவது. இவ்விஷயத்தில், குடி மைனராயிருந்தாலும், நிலம் அதிகமாயிருந்தாலும், சுலபமாகவும், குடி நன்மைக்காகவும் அனுசரிக்கலாம். மேலும் ஜமீன் நிலங்களிலும், சர்க்கார் நிலங்களிலும் வரி வசூல் ஒரே விதமாக இருக்கவேண்டும். இவ்வாறான ஏற்பாடுகள், 'கோவாபரேடிவ் சொசைட்டி ஆக்டிலும்' 'சென்னை இந்துமத எண்டோமெண்ட் ஆக்டிலும்' காணப்படுகின்றன.

(b) குடிகள் ஒன்றாகச் சேர்ந்துகொண்டு, ஜப்தியைச் சுலபமாகத் தடை செய்யலாம்; பலமுள்ள குடி கள் ஜப்தியைத் தடுக்கிறார்கள். போலீஸ் உதவியும், கலகம் விளைந்தாலன்றிக் கிடைப்பதில்லை. வசூல் காலத்தில் ஜமீந்தாரின் உத்தியோகஸ்தர் வெவ்வேறிடங்களுக்குப் போகிறார்கள். ஆகையால் பக்கபலமுள்ள குடிகள் ஜப்தியைத் தடுக்கிறார்கள். போலீஸ் தாவா முன் ரெவின்யூ இன்ஸ்பெக்டர் ஒன்றும் செய்யமுடியாது. போலீஸ் தாவா செய்தாலோ தக்க சாக்ஷிகளில்லாமல் தள்ளப்படுகிறது. ஆகையால், [விதி 33, ஷெட்யூல் 4, லோகல் போர்டு ஆக்ட்; ஜில்லா முனிஸிபல் ஆக்ட் விதி 30 (2), ஷெட்யூல் 4. அனுசரிக்கப்பட வேண்டும்.]

அதைப்போலவே ரெகுலேஷன் 28, 1802. பிரிவு 45, ஆக்ட் 8, 1865. பிரிவு 48, ஆக்ட் 2, 1864 :—

இச்சட்டங்களிற் காண்பதுபோல், எக்காரணத்தை உத்தேசித்தும் வரி கொடாதவன் சொத்தை ஜப்தி செய்ய முடியாவிட்டால், மாஜிஸ்ட்ரேட் முன் குற்ற தாவா செய்யலாமென ஏற்படவேண்டும். ஜப்தியைக் குடிகள் எதிர்க்கிறார்களென, தக்க சாக்ஷிகளுடன் கலெக்டருக்கு மனுச் செய்து கொண்டால், அவர்களைக் கைது செய்ய வாரண்டு பிறப்பிக்கவேண்டும். (மேற்படி சட்டக் குறிப்புகளை கவனிக்க.)

24. **கிராமாதிகாரிகள்.**—'ஆக்ட் 2, 1894,' அமுலுக்கு வருமுன் கிராமாதிகாரிகள் ஜமீந்தாருக்கு அடங்கி யிருந்தார்கள். அவர்கள் சம்பளமும் ஒரு பங்கு ஜமீந்தாரிடமும் ஒரு பங்கு குடிகளிடமுமிருந்து வசூலிக்கப் பட்டது. ஆகையால் அவர்கள் அக்கரையுடன் ஜமீந்தாருக்கு வரி வசூல் செய்து தந்தார்கள். ரெகுலேஷன் XXIX, 1802-ல் கண்டபடி கர்ணங்கள் தங்கள் கடமைகளை ஜமீந்தாருக்குச் சரிவர செலுத்தி வந்தனர். 'ஜில்லா அதாலத் கோர்ட்டின்' மூலமாக, கலெக்டர்கள்கூட கர்ணங்களை ஆஜர்ப்படுத்தினாலும், பல வேறு விஷயங்களைச் செய்யும்படி சொன்னாலும், அபராதம் முதலிய தண்டனைகளை ஏற்றுக்கொள்ளவேண்டியிருந்தது. இவைகள் இனும் வேலைத் திட்டங்கள் மாறுபட்டபின்னும், கிராமாதிகாரிகள் தனிப்பட்ட பட்டா அடைந்தபின் னும் மாறுபட்டன. குடிகளிடமிருந்து, ருசும், மேரா முதலிய வசூல்கள் நிறுத்தப்பட்டன; சர்க்கார் சம்பள முறையைக் கையாண்டது. 'ரெவின்யூ போர்டின்' கட்டளைப்படி கலெக்டர்கள், கிராமாதிகாரிகளை நியமித்த னர். ஜில்லா கலெக்டர்கள் ஒழுங்கில்லா நடவடிக்கைக்கோ, நியமித்த வேலையைச் செய்யாததற்கோ, போது மான திறமையின்மைக்காகவோ, கிராமத்தில் குடியில்லாததற்கோ எழுத்துமூலங் காரணங்காட்டி அவர்களை வேலையிலிருந்து நீக்கலாமென [பிரிவு 16 (2), ஆக்ட் 2, 1894-ல்] காணப்பட்டது. ஜமீந்தார்கள் அக் கிராமாதிகாரிகளுக்கு ரூ. 3-க்குட்பட்ட அபராதம்தான் விதிக்கலாம்; அதிலும் அவர்கள் அப்பீல் செய்து கொள்ளலாம்.

இவ்விதச் சட்ட மாறுபாட்டினால் கிராமாதிகாரிகள், கலெக்டர்களுக்கு ஜவாப் சொல்லுவதைத் தவிர, ஜமீந்தாருக்கு அடங்கினதாக ஏற்படவில்லை. சர்க்காரிடமிருந்து நேரே சம்பளம் பெற்றார்கள். அநேக விதங்களில் ஜமீந்தார்களை அவமதிப்பும் செய்கிறார்கள்; வசூல் காலங்களில் ஜமீந்தாருடன் போவதில்லை; ஜப்தி சொத்துக்களைத் தங்கள் பாதுகாப்பில் வைத்துக்கொள்வதில்லை; அவ்வப்போதேற்படும் நிலப்பங்கு பாடுகளை ஜமீந்தாருக்குத் தெரிவிப்பதில்லை; வசூல் கணக்கும் சரிவர அனுப்புவதில்லை; இக்குறைகளைக் கண்டிக்க ஜமீந்தாருக்குப் போதிய அதிகாரமில்லை; கலெக்டருக்கு மனுச் செய்துகொண்டாலோ, இவர்களின் வேலைக் குறைகளை எடுத்துக்காட்டத்தக்க சாக்ஷியங் கிடைப்பதில்லை. மேலே குடிகள் கூறிய பட்டா கொடாமை, வரி வசூல் ரசீது கொடாதது, தாறுமாறாக ஜமாபந்தி செய்தல், அநியாய வசூல் செய்தல், ஆகிய எல்லாம் இவ்விதக் கிராமாதிகாரிகளின் கவனிப்பின்மையால்தான் எனக் கூறலாம். ஜமீந்தார்களுக்கு வரி வசூலிப்பதற்

காகக் கிராமாதிகாரிகளை யடக்கத் தகுந்த அதிகாரங்கள் கொடுக்கவேண்டும். பிரிவு 30, ஆக்ட் 2, 1894-ல் கிராமாதிகாரிகளின் கடமைகள் அடங்கியுள. அச்சட்டம் அமுலுக்கு வரும் முன்னமேயே, வெங்கடகிரி, காளாஸ்திரி, கார்வெட்டிநகர் ஜமீந்தார்கள் அதை எதிர்த்ததாக அவர்களின் யாதாஸ்துகளிலிருந்து தெரிய வருகிறது.

இந்தச் சட்டம் அமுலுக்கு வந்தபிறகு, வெங்கிடகிரியில் ஏற்பட்ட குழப்பத்தைச் சற்று கவனிக்கலாம். இனும் வேலை மாற்றப்பட்டு, கிராமாதிகாரிகள் சர்க்கார் சம்பளம் பெற்றுர்கள்; பிறகு ஜமீந்தார் தேவதாயம், தருமதாயம் என்னும் இனுங்களையொட்டி பிரிவி கவுன்ஸிலுக்குத் தாவா கொண்டுபோனதில் சர்க்காருக் கல்லாமல் ஜமீந்தாருக்கே உத்தராதிகார உரிமை உண்டென்றதால், சர்க்கார் வேலை இனுங்களினும் தங்களுக்குரிமையில்லை யெனக்கூறி, ஜமீந்தார்களே வேண்டிய கிராமாதிகாரிகளை இனி ஏற்படுத்திக்கொள்ள லாமென்றனர். இவ்விளம்பரத்தைக் கண்டவுடன் கிராமாதிகாரிகள் தங்கள் எஜமானர் யார் என உணரா மல், சர்க்கார் விளம்பரப்படி ஜமீந்தாருக்குச் செய்துவந்த வேலைகளை நிறுத்திவிட்டார்கள்; வரி வசூல் வேலை கள் தடைபட்டன. ஜமீந்தார் சர்க்கார்மீது இதை யொட்டிவழக்குத் தொடர்ந்து, சமாதானமான பிறகுதான், மறுபடியும் கிராமாதிகாரிகள் ஜமீந்தாரின் வேலைகளைக் கவனிக்க ஆரம்பித்தார்கள்.

ஆகையால், ' ஆக்ட் 2, 1894 ' பிரகாரம், சர்க்கார், இஷ்டம்போல் கிராமாதிகாரிகளை ஜமீந்தாருக்கு வேலை செய்யவொட்டாது தடைப்படுத்திவிடலாம்.

சட்டமூலமாக, கிராமாதிகாரிகளை ஜமீந்தார்கள் அதிகாரத்துக்குக் கீழ்க்கொணரவேண்டும்; ஜப்தி, வசூல் காலங்களில் ஜமீந்தாருக்குதவி புரியவேண்டும்; கணக்கொப்புவிக்கவேண்டும்; தவறுல், ஜமீந்தாராலேயே தண்டனைக்குள்ளாக்கப்படவேண்டும்.

பெரும்பான்மைக் கமிட்டியார் தங்கள் தீர்மானங்களில், குடிகளின் தீர்வைகளை, ஜமீந்தார்கள் சர்க்காருக்குக் கொடுக்கும் ' பேஷ்கஷ் ' உடன் ஒத்திட்டு இரண்டும் ஒரே நிலைமையில் உளதென்கிறுர்கள். ஆனுல் கொடுக் கப்படாமலுள்ள வரிகளை வசூலிப்பதற்கு ஜமீந்தார்கள், ஜப்தி முதலிய வழிகளைச் சர்க்காரின் ' ரெவின்யூ ஆபீஸர் ' மூலமாகத்தான் உபயோகிக்கலாமென்பது எனக்கு விளங்கவில்லை. எப்படி சர்க்கார், ரயத்வாரி பிரதேசங்களில் வரி வசூலிப்பதற்கு சில முறைகளைக் கையாளுகிருர்களோ, அவ்வாறே ஜமீந்தார்களும் தங்கள் தீர்வைகளை வசூலிக்கக் கையாளவேண்டுமென ஏற்படுகிறது. ஆகையால் (தயாரிப்பு மசோதா, உட்பிரிவு 41-ல்) கண்டபடி சர்க்கார் ரெவின்யூ அதிகாரிகளுக்கு ஜமீன் குடி ஜட்திக்காகக் கொடுக்கும் உரிமைகள் நீக்கப்பட வேண்டும். தயாரிப்பு மசோதாவின் 7, 8-வது அத்தியாயத்தில் காணும் வழிகள் 1898, சென்னைக் குடிகள் சட்டத்தை யொட்டியே உளது. 1908-மூ௵த்து சென்னை ஜமீன் நிலச்சட்டம், சென்னைக் குடிகள் மசோதாவை விட அதிக திருத்தங்கள் கொண்டுளது. ஆகையால் தயாரிப்பு மசோதாவில் கண்டபடி நாம் பழைய, 1898-மூ௵த்து சென்னைக் குடிகள் சட்டத்தை யனுசரிப்பது சரியல்ல.

மசோதாவின் உட்பிரிவு 41; ரெவின்யூ அதிகாரி ஜப்தி செய்யவேண்டுமென்று சொல்லும்பொழுது அந்த ஜப்தியினுல் ஏற்படும் நஷ்டங்களுக்கு ஜமீந்தார் உத்தரவாதமாகவேண்டுமென்பது நியாயமானதல்ல. மேலும் ஜமீன்தாருக்கு உட்பிரிவு 76 பிரகாரம், முதல் சொந்த உரிமை உண்டென ஏற்படும்போது, என் உட்பிரிவு 73-ன்படி, குடிகள் நிலத்தை தனியாகக்கட்டுப்படுத்த வேண்டுமென்பது விளங்கவில்லை. மசோதா வானது ஜமீந்தாருக்குள்ள கோர்ட்டு தாவா வழியை எடுத்துவிடுகிறது போலும். இதனுல் ஜமீந்தாருக் கேற்படும் கஷ்டங்களை முன்னமேயே சொல்லிவிட்டேன்.

12-ம் அத்தியாயம்.

சர்வேயும் செட்டில்மெண்டும்.

என்னுடைய சகாக்கள், சென்னை ஜமீன் நிலச்சட்டம் 11-வது அத்தியாயம், கோர்ட்டாரின் உதவிக்காக ஏற்படுத்தப்பட்டதென்றும், சாசுவத திட்ட காலத்திலே, பயிரிடப்பட்ட நிலங்களுக்கன்றி கரம்பு நிலங்கள், பின்னுல் உழவுக்குக் கொண்டுவரப்படும் நிலங்கள் உள்பட, கணக்கெடுக்கப்பட்டு வரி நிச்சயிக்கப்பட்டதென்றும் சொல்லுகிருர்கள். வரித் திட்டம் வேண்டாமென்றும், சாசுவத திட்ட காலத்தில் இருந்து வந்த வரி விகிதத் தைக் கவனித்தால் போதுமெனவும் என் சகாக்கள் சொல்கிருர்கள்.

என் சகாக்கள், ஜமீன்களில், விட்டுப்போன நிலங்களைச் ' சர்வே ' செய்து, தனித்தனிக் குடிகளின் பங்குகளை வரையறுத்து, சாசுவத திட்ட காலத்தில் ஏற்பட்ட குத்தகையுடன் கூட்டிவிடலாமெனக் கூறுகிருர்கள். கட்டாய ' சர்வே ' நான் வேண்டாமென்கிறேன். சில ஜமீன்களில், சொந்த ' சர்வேக்கள் ' செய்யப்பட்டு வரி வசூலிக்கப்படுகிறது. சர்வே இல்லாமலிருக்கும் ஜமீனில்கூட, வரி வசூல்செய்ய நில அளவு தெரியாத தினுல் கஷ்டங்கள் காணப்படுவதில்லை. பிரிவு 164-ன்படி ஜமீன் நிலத்தை அளக்கவேண்டுமென்றும், குடிகளின் நிலவுரிமைகளைப் ரிஜிஸ்தர் செய்யவேண்டுமெனவும் கூறப்படுகிறது. இப்படிக் கட்டாய அளவு செய் தால் செலவு அதிகமாகிறது. நான் அச்செலவைக் குறைக்கவேண்டுமென்றும் சொல்லுகிறேன். மேலும், நில அளவையொட்டி, சென்னை ஜமீந்தார்கள் சங்கத்தின் யோசனைகளைக் கவனிக்குமாறும் சொல்லுகிறேன். அவர்கள் சொல்வதாவது,—ஜமீந்தாரின் வேண்டுகோளின்பேரிலோ, மொத்தக் குடிகளில் காலவாசிப்பேர் வேண்டினுலோ, அன்றி சர்க்கார் எண்ணத்தில் ஜமீன் குடிகளின் உரிமைகளைத் தனித்தனி அறியவேண்டி யிருந்தாலோ, அல்லது இருதரத்தாருக்கும் இதைப்பற்றி யேற்படும் சச்சரவுகளை நீக்கவேண்டியோ ஏற்படும் காலங்களில் ' சர்வே ' செய்யவேண்டுமென்கிருர்கள்.

' சர்வே 'க்காக ஏற்படும் செலவில், $\frac{1}{3}$, சர்க்கார் ஏற்றுக்கொள்ளவேண்டும். ஜமீன் நிலங்களில் சர்க் கார் பல உரிமைகளையனுபவிக்கிருர்கள். பொதுஜன புறம்போக்கு, நீர்ப்பாய்ச்சல், நிலவரி, நீர்வரி முதலிய வகையில் சர்க்கார் உரிமைகள் கொண்டாடுவதினுல், நில அளவு செய்வதில் அவர்களுக்கும் நன்மை ஏற்படுகிறது. குடிகளுக்கும், ஜமீன்தாரருக்கும் இவ்வித செலவில், மொத்த விளைவில் பிரித்துக் கொள்ளும் பங்கையொட்டிச் செலவையும் பிரித்துக் கொடுக்கவேண்டும். அளவிடும் காலத்துக்கு முன்ன மேயே இருதரப்பாரின் செலவு தொகையை ஏறக்குறைய கணக்கிட்டு வசூலிக்கவேண்டும். இப்பொழுது அளவு ஏற்பாடுகளைக் கவனித்து வருவதில், ஜமீன்தாருக்குச் செலவு ஏற்படுகிறது; சர்க்கார் இதிலொரு பங்கை ஏற்றுக்கொள்ளவேண்டும்.

குடிகளுக்காக மொத்த நிலங்களைப் பங்கு பிரிக்கும்பொழுது ஏற்படும் அளவுச் செலவுகளைக் குடிகளே கொடுக்கவேண்டும்.

கட்டாய நில அளவெடுப்பு வேண்டுமென்றுலும், கன்னிவாடி ஜமீன்தார் சொல்லுகிறபடி, அவரவர்கள் உரிமைப் பத்திரங்களை, ஜமீன்தாரோ அல்லது, தெரிந்தமைக்கப்பட்ட ஒரு தொகுதி குடிகளோ கேட்காம லிருந்தால், அப்பொழுது, அது அவசியமில்லை.

13-ம் அத்தியாயம்.

நீர்ப்பாசன வேலைகள்.

ஜமீன்குடிகள் நீர்ப்பாசன உரிமைகளைப்பற்றி, என் சகாக்களின் தீர்மானங்கள் கீழ்வருமாறு :—

(a) ஜமீன்தார்கள், ஜமீன் பூமிக்குச் சொந்தக்காரரல்லாமையால், குளம், வாய்க்கால் முதலியவற்றிற்குச் சொந்தக்காரரல்ல.

(b) சாசுவத திட்டகாலத்திலிருந்து, குளம், கால்வாய்கள், சர்க்கார் ஜமீன்களுக்கு மாற்றினமையால், இருக்கும் குளங்களைக் கவனிக்கவும், புதிய குளங்களைக் கவனிக்கவும் கடமை ஏற்பட்டது.

(c) ஜமீன் நிலச்சட்டம் நீர்ப்பாய்ச்சல் ஏற்பாடுகளில், ஜமீன்தாருக்கும் குடிகளுக்குமுள்ள உரிமைகளை வரையறுக்கவில்லை.

(d) பிரிவுகள் 30–35, 40–41,—ஜமீன் நிலச்சட்டம்.—சாகுபடி சாதனங்களை அதிகப்படுத்தல் ஜமீன்தாரின் கடமையென்றும், ஆனால் அதற்காக ஜமீன்தார்கள் குடிகளின் தீர்வையை உயர்த்துவது சட்டவிரோதமெனவும் சொல்லுகிறார்கள்.

(e) ஜமீன்தார்கள் நீர்ப்பாய்ச்சல் சாதனங்களைப் பழுது பார்க்குமாறு கட்டாயப்படுத்த, ஜமீன் நிலச்சட்டத்தில் காணப்படும் முறைகள் செலவு அதிகமானதும், கோளாறுள்ளனவென்றும் சொல்லுகிறார்கள்.

(f) நீர்ப்பாசன சாதனங்களை ஜமீன்தார்கள் பழுது பார்க்கச், சுலபமான ஒரு கட்டாய வழி ஏற்படுத்த வேண்டுமென்றும், அப்படித் தவறினால், சர்க்காரே வேண்டிய வேலைகளைச் செய்துவிட்டுச் செலவை வசூல் செய்யவேண்டுமென்கிறார்கள்.

2. இத்தீர்மானங்கள் தவறென நான் எண்ணுகிறேன். எவ்விடத்திலும், குளம், கால்வாய் முதலிய குடிகளுக்குரிமையென்று சொல்லப்படவில்லை. அவர்களுக்கு நிரந்தர அனுபோகஉரிமைதான் உண்டு.

3. ஜமீன்தார்களுக்கு, குளம், கால்வாய்கள் சொந்தமென்பதிற் சந்தேகமில்லை. நாட்டுச் சட்டங்களும், கோர்ட்டுத் தீர்மானங்களும் இதைத்தான் ஆதரிக்கின்றன.

4. நீர்ப்பாசன வரிச்சட்டம், சென்னை நில வரம்பு கடப்புச் சட்டம், ஜமீன் நிலச்சட்டம் ; (40 சென்னை 886) உர்லாம் வழக்கு, ஐகோர்ட் தீர்மானங்கள்—யாவும் ஜமீன்தார்கள்தான் உரிமையாளர்கள் எனக் கூறுகின்றன.

5. குடிகளுக்கு, நீர்ப்பாசன உரிமைகள் ஒப்பந்தத்தினால்தான் ஏற்பட்டவை. ஆனாலும் குடிகளின் உரிமை, தங்கள் நிலங்களுக்குப் போதுமான தண்ணீர் பாய்ச்சிக்கொள்வதில்தான் வாய்க்கால், குளங்கள் முதலிய நீர்ச்சாதனங்களின் மேடு, கரைகளில் உரிமையில்லை. உதாரணம் 1937-ம் வருஷம் மதராஸ் வீக்லி நோட்ஸ் நீதிபதி—வெங்கடரமண ராவ் தீர்ப்பை பார்க்க.

இனும் நிலங்களில், குடிவாரம் படைத்த குடிகளுக்குக் குளக்கரைக்கு உரிமையில்லையென்றும், குளத்திலிருந்து வழக்கமான அளவு தண்ணீர்ப் பாய்ச்சலுக்குத்தான் உரிமையுண்டென்றும், குடிகளிடம் குளக்கரை, நீர்ப்பரப்பு முதலியவைகளை விட்டுவைத்திருந்தபோதிலும், அவைகள் இல்லாமையால் தங்கள் நிலங்களுக்கு நஷ்டம் ஏற்படும் என்று காண்பித்தாலன்றி, அவைகளை யொட்டிய எவ்வுரிமைகளும் குடிகளைச் சேரா என்று சொல்லுகிறார்.

6. என்னுடைய சகாக்கள், கார்வெட் நகர் வழக்கில், (இந்திய அப்பீல்கள் 364) பிரிவி கவுன்ஸில், ஜமீன்தாரின் கடமை, குளங்களைப் பாதுகாப்பது, பழுது பார்ப்பதெனத் தீர்மானிக்கின்றனர். இத்தீர்மானத்தில் ஜமீன்தார்கள், இவ்வித நன்மைகளைக் குடிகளுக்குச் செய்வதால், குடிகளின் தீர்வைகளை யதிகப்படுத்தக் கூடாதென்று என் சகாக்கள் சொல்வதுபோல் யாதும் காணேம். காலத்துக்கேற்ப, ஜமீன்தார்கள் புதிதாக நீர்ப்பாசன சாதனங்கள் உண்டாக்கவேண்டுமென, எக்கோர்ட்டு தீர்மானங்களிலும் காணப்படவில்லை. வரி வசூல் சட்டமும், ஜமீன் நிலச்சட்டமும், ஜமீன்தார்கள் இவ்விதப் புதிய நீர்ப்பாசன வசதிகளை உண்டாக்கி, அதனால் குடிகள் நன்மையடைந்தால், தீர்வையை யுயர்த்தலாமென்று கூறுகிறது ; பொது நியாயமும் அப்படித்தான் காணப்படுகிறது.

7. குடிகளின் உரிமைகளைப்பற்றியும், கடமைகளைப்பற்றியும் தீர்மானிக்கப்பட்ட, கோர்ட்டுத் தீர்ப்புகளைப் பின்வருமாறு கூறலாம் :—

(a) நீர்ப்பாசன சாதனங்களுக்கு ஜமீன்தார்களே சொந்தக்காரர்கள்.

(b) ஆயக்கட்டுதாரர்களுக்குச் சேரவேண்டிய, நீரைப் பாய்ச்சியது போக, மீதியுள்ள நீரை ஜமீன்தார் தன் மனம்போல் உபயோகிக்கலாம் ; பயிரிடுதலையதிகப்படுத்தலாம் ; புஞ்சைக்கு நீர் பாய்ச்சலாம் ; முதற் போக நிலங்களில், இரண்டாம் போகத்துக்காக தண்ணீர் பாய்ச்சி வரி வசூலிக்கலாம். (10 சென்னை 282 ; 44 சென்னை 534). தன்னுடைய இதர நிலங்களுக்கு, அந்தக் கிராமத்திலாயினும், பக்கத்துக் கிராமங்களிலாயினும், நீர் பாய்ச்சலாம்.

(c) குளத்திலுள்ள மீன்கள் ஜமீன்தாருக்கே உரியவை.

(d) போதுமான தண்ணீர் விடுவதைத் தவிர கால்வாய்களின் போக்கை மாற்றியமைக்கலாம்.

(e) ஆயக்கட்டு நிலங்களுக்குத் தண்ணீர் வினியோகிக்கும் வேலை ஜமீன்தாரின் முக்கிய உரிமை.

(f) குளக்கரையின் மேல் ஜமீன்தார் தற்காலிகமாகப் பயிரிட்டுக்கொள்ளலாம்.

(g) சர்க்கார், ரயத்துவாரி நிலங்களில் அனுபவிக்கும் அவ்வளவு உரிமை, கடமைகள் ஜமீன்தார்களுக்கு ஜமீன் நிலத்தில் உண்டு. ஜமீன் நிலச்சட்டம், ஜமீன்தார் மீது சில கடமைகளைச் சுமத்திய போது அவர்கள் உரிமைகளையும் ஒப்புக்கொண்டது.

7-A. ஜமீன் நிலச்சட்டம், பிரிவு 3 (11)-ல் காணும், 'தீர்வை' என்னும் பதத்தின் பொருளே இதற்குப்போதிய சான்றாகும். அந்த பிரிவின்படி தீர்வை என்பது 'ஜமீன்தாரின் சம்மதத்தின்பேரிலோ, அல்லது அவரின் சம்மதமின்றியோ, நீர்ப்பாசன வரியும் நில வரியோடு சேர்க்கப்படாத நிலங்களுக்கு நீர் பாய்ச்சப்பட்டதற்கு நியாயமாகச் செலுத்தவேண்டியது' என்பதுமாகும்.

8. நிலம், நஞ்சை எனப் பிரிக்கப்பட்டால் நீர்ப்பாசன தீர்வையும் சேர்க்கப்படுகிறது ; புஞ்சை வரியில் நீர் வரி சேர்வதில்லை. தனியாக நீர்ப்பாய்ச்சினால் தனியாக நீர்வரியுண்டு ; இரண்டாம் போகத்துக்கும் தனியான நீர்வரியே.

9. ஜமீன்தாருக்கு, தன்னுடைய நீரைப் பாய்ச்சிக்கொள்வதற்கு வரி விதிக்க தனிஉரிமையுண்டென்று பல ஹை கோர்ட்டுத் தீர்மானங்கள் இருக்கின்றன. (10 சென்னை 282 ; 1 எம்.எல்.ஜே. 1938)—நீதிபதி வரதாச்சாரியார் தீர்ப்பைப் பார்க்க.

10. நீர்ப்பாசனங்களைப்பற்றி குடிகளின் குறைகள் :—

(a) ஜமீன்தார்கள் வெகு காலமாகப் பழுது பார்க்காதது ; சில விடங்களில் 30 வருஷமாகவும் பழுது பார்க்காமை.

(b) ஜமீன்தார்கள் குளக்கரைகளை பிறருக்கு விட்டுவிடுதல்.

(c) சில இடங்களில், ஜமீன்தார்கள், குளத்து நீர்பாய்ச்சலின் அளவுக்கு மேலாக ஆயக்கட்டுகளை விஸ்தரித்தல்.

(d) ஜமீன்தாருக்கு நேசமில்லாதவருக்கு சரியாக நீர்ப்பாய்ச்சாமை.

(e) சில ஜமீன்தார்கள் குடிகளிடமிருந்து, பழுதுபார்க்கும் செலவை வசூலித்தல்.

11. இக்குறைகளை நிவர்த்திக்கக் குடிகள் கூறும் வழிகள் :—

(a) நீர்ப்பாசன வேலைகளை கிராமப் பஞ்சாயத்தாரிடம் ஒப்படைத்தல்.

(b) சாகுபடி சாதனங்களைச் சர்க்காரே எடுத்துக்கொண்டு பழுதுபார்த்தல்.

(c) சர்க்காரே, தங்களுடைய சுய உரிமைகளால், சாகுபடி சாதனங்களைப் பழுது பார்த்து ஜமீன்தாரிடம் செலவை வசூல் செய்துகொள்ளுதல்.

வெங்கடகிரி, பித்தாபுரம், பொப்பிலி ஜமீன்தார்கள் கொடுக்கும் கணக்கிலிருந்து, அவர்கள் வசூலிக்கும் தீர்வையில் 10 சதம், நீர்ப்பாய்ச்சலுக்காக வருடா வருடம் செலவிடப்படுகிறதெனத் தெரிகிறது.

12. ஜமீன்தாரிகளின் குறைகள் :—

(a) குடிகள், குளமடைகளை வெட்டி இஷ்டப்படி தண்ணீரைப் பாய்ச்சிக்கொள்கிறார்களென்றும், அதைத் தடுக்க, அவர்கள்மேல் அபராதம்போட, ஜமீன்தார் அவர்கள் உயர் உத்தியோகஸ்தர்களுக்கு அதிகாரம் கொடுக்கவேண்டும்.

(b) வழக்கமாக, கால்வாய்களைப் பழுது பார்ப்பதற்காக தாங்கள் செய்யவேண்டிய வேலைகளைச் செய்யாமலும், உடைப்பு, வெள்ளம் முதலிய காலங்களில் உதவி செய்யாமலும் (சென்னை ஆக்ட் 1—1858)-ல் கண்டபடி சில்லரைத் திருத்தங்களை குடிகள் செய்வதில்லையென்பதும் அவர்கள் குறையாகும்.

13. ஜமீன்தார்கள் வசூல் செய்யும் தீர்வையில் 10%-க்கு மேலாகவே நீர்ப்பாசனத்துக்காக செலவு செய்கிறார்கள் ; புது சாதனங்களும் ஏற்படுத்துகிறார்கள் ; அவர்களைக் குறை கூறுவது தப்பிதம்.

15. இப்பொழுதிருக்கும் சட்டங்களே இவ்விஷயத்தில் குடிகளுக்குப் போதிய பாதுகாப்பளிக்கிறது. கனம் ராமதாஸ் பந்துலு அவர்களும், காலஞ்சென்ற B. முனுசாமி நாயுடு அவர்களும், ஜமீன் நிலச் சட்டத்தின் 8-ம் அத்தியாயத்தை, திருத்தச்சட்டம் 8—1934 மூலமாக குடிகளுக்கு சாதகமாகவே மாற்றியமைத்துள்ளார்கள். நீர்ப்பாசன சாதனங்களை, மேஜர், மைனர் எனப் பிரித்து 138-வது பிரிவின்படி அயக்கட்டில் கால்மடங்கு அனுபவிக்கும் குடிகள் 200 அல்லது 100 ரூபா 'டிபாசிட்' செய்துவிட்டு, வேண்டிய பழுது பார்த்தலுக்கு வசதிகள் உண்டாக்கிக்கொள்ளலாம். அப்படி 'டிபாசிட்' செய்த பிறகு அந்த உத்தியோகஸ்தர், தேவையாயிருந்தால் ஜமீன்தாரையே குறித்த காலத்திற்குள் பழுது பார்க்கும்படியும், முன்னமேயே அதற்குண்டான செலவைத் தம்மிடம் 'டிபாசிட்' செய்யும்படியும், தவறினால், பிரிவு 139 (3)-ன் படி, வேண்டிய பணத்தை ஜமீன்தாரிடமிருந்து வரியைப்போல் வசூலித்துக்கொள்ளலாமென்றும், பிறகு கூடிய சீக்கிரம் வேண்டிய பழுது பார்த்தலை அப்பணத்தைக் கொண்டு செய்யலாமென்றும் சொல்லப்படுகிறது. இந்த வழி அதிக குழப்பமானதென என் சகாக்கள் சொல்வதை நான் ஒப்பவில்லை. இதைவிட்டு, ஒவ்வொரு குடியும் தன் இச்சைபோல் இதைக்குறித்து ஜமீன்தார் மீது தாவா செய்வதென்பதும், அவர் தவறினால், சர்க்காரே செய்துவிட்டு ஜமீனிடமிருந்து வசூலித்துக்கொள்ளலாமென்பதையும் நான் ஒப்பவில்லை. பெரிய நீர்ப்பாய்ச்சல் விஷயங்களிற் தலையிட சர்க்காருக்கு, முன்னாடியே வேண்டிய பணத்தை ஒதுக்கி வைத்தல் முடியாது. பொறுப்பில்லாத குடிகள் காரணமில்லாமல், ஜமீன்தாரை வழக்குக்கிழுக்க இதனால் இடமேற்படுகிறது.

16. ஆயக்கட்டுகள் பல ஜமீன்களில், குளத்து நீரை, அதிகமாகப் பாதிப் படும்படி விஸ்தரிக்கிறார்களென்பதை நீக்க ஜமீன் நிலச்சட்டத்தில் (137—137-D பிரிவில்) வழிகள் இருக்கின்றன :—

(a) ஆயக்கட்டின் விஸ்தீர்ணத்தை, எந்தக் குடியும் தீர்மானித்துக்கொள்ளலாம். தண்ணீர் பாய்ச்சப்படும் நிலத்தை வயல் எனவும், தோப்பு எனவும் வகுத்து, தக்க குத்தகையை ஏற்படுத்தலாம்.

(b) கலெக்டரின் தனியான உத்தரவன்றி ஜமீன்தார்கள் ஆயக்கட்டு நிலத்தை யதிகப்படுத்தலாகாது.

(c) சேர்ந்தாற்போல் 6 வருட காலம், நீர்ப்பாய்ச்ச முடியாவிடின், அந்நிலத்தை உதவா நிலமெனக் குடிகள் தீர்மானிக்கும்படி மனுச் செய்யலாம்.

(d) பழுது பார்க்கும் வரை குடிகள் தீர்வைக் குறைவுக்கு மனுப்போடலாம்.

இதைவிட இதர பாதுகாப்பு குடிகளுக்கு வேண்டியதில்லை.

குளக்கரைகள், ஜமீன்தார்கள் தனியாகப் பட்டாவுக்கு விட்டு வருமானமடைகிறார்கள் என்னும் குறையைத் தவிர்க்க, ஜமீன் நிலச்சட்டம், பிரிவு 21 உளது. குளக்கரையில் இருப்பவர்களை, சென்னை நில வரம்புகடக்குஞ் சட்டத்தின் மூலமாக அப்புறப்படுத்தலாம். மேலும், நீர்ப்பாசன விஷயங்களில் சர்க்காரோ அல்லது தனிப் பஞ்சாயத்துக்களோ கவனிக்கலாமென்பது ஜமீன்தாரின் பல உரிமைகளைப் பாதிக்கின்றது. அவ்வித ஏற்பாடுகளும் ஒழுங்காக நடவா. மூன்றாம் மனுஷர்கள், ஜமீன்தாருக்கும் குடிகளுக்கும் ஏற்படும் விஷயங்களில் தலையிடின் பலவித கஷ்டங்களைக் கிளப்பிவிடுவார்கள். உதாரணமாக பசலி, அல்லது தீர்வை அதிகம் என்பதை யார் வசூல் செய்வது ? பழுது பார்ப்பதற்கு எவ்வளவு செலவு என்பதை யார் கணக்கிடுவது ? பஞ்சாயத்தா, சர்க்காரா ? குளக்கரை மரங்கள் யாருக்குச் சொந்தம் ?

இவ்விஷயங்களில் பஞ்சாயத்து அமைப்பது நான் முன் சொல்லியது போல் அறிவுக்குத் தக்கதல்ல ; அநேக விதக் கஷ்டங்கள் இதனாலேற்படும். ஆயக்கட்டுதாரர்க்குள் நீர்ப்பாசன சச்சரவுகளால், பிரிவு ஏற்பட்டால் ஜமீன்தார் பொறுப்புள்ளவராகமாட்டார்.

ஜமீன் நிலச்சட்டம் 8-வது அத்தியாயத்தில், பழுது பார்ப்பதற்காகச் செலவு செய்யும் தொகை,
ஜமீன் வருமானத்தின் சக்தியை யொட்டி இருக்கவேண்டுமெனக் கூறப்பட்டுள்ளது. குடிகள் தாளமுடி
யாத வேலைகளைச் செய்யக் கோருவது சரியல்ல, இவ்விஷயங்களை ஆராய நியமிக்கப்படும் தாசில்தார்களும்,
சாதாரணமாக ஜமீன் வருமானத்தைக் கவனிக்காமல், அதிகச் செலவில், பழுதுபார்க்கத் தீர்மானிப்பது
தவறுகும். அவர்கள் ஜமீன்தார்தானே பொறுப்பென்று, சிலசமயம், இஷ்டம்போல் அதிகச் செலவைச்
சரியென நிச்சயிக்கிருர்கள்.

1932-ல் ஜமீன் நிலச்சட்டத்தைச் சீர்திருத்த ஏற்படுத்தப்பட்ட, 'செலெக்ட் கமிட்டி', ஜமீன்தார்,
பழுது பார்த்தலுக்காகச் செய்யும் வருடச் செலவு, அவர்கள் நஞ்சை நிலங்களிலிருந்து வசூலிக்
கும் வருடத் தீர்வையைவிட அதிகமாகலாகாதெனக் கூறினுர்கள். என்னுடைய எண்ணத்தில், உழவு
நிலங்களின் வருட வருமானத்தில் 5%-க்கு மேல் பழுது பார்க்கும் செலவுக்கொதுக்கச் சொல்வதை ஜமீன்
தார்கள் பொறுக்கமுடியாது.

சில சமயங்களில் மிகுந்தமழை, புயலினுல் குளம், கால்வாய்கள் பழுதடைவதுண்டு. அச்சந்தர்ப்பங்களில்
திடீரென ஜமீன்தாருக்குப் பணம் கிடைக்காது. ஆதலின் சர்க்கார் கடன் கொடுத்துப் பல தவணைகளாக
வசூல் செய்துக் கொள்ளவேண்டும். (உதாரணம் கலெக்டருக்கு உதவி யோசனைகள், 1799-ம்ஞு ஜூலை மீ
15உ. பகுதி 59.)

பிரிவு 138, ஜமீன் நிலச்சட்டப்படி, நீர்ப்பாய்ச்சல் பழுதுற்றதினுல், தண்ணீரின்றிக் கேடுறும் நிலச்
சொந்தக்காரர்கள், பழுது பார்க்கும்படி மனுச் செய்துகொள்ளலாமெனக் காணப்படுகிறது. இதில் 'பழுது'
என்னும் பதத்தின் பொருளையறியவேண்டும். சில குடிகள் 30, 40 வருடங்களுக்கு முன் இருந்ததைப்
போன்ற நீர்ப்பாசன ஏற்பாடு செய்யவேண்டுமென்கிருர்கள் ; இது தப்பிதம். கடந்த 10 வருடமாக இருந்து
வந்த நீர்ப்பாசனம் பாதிக்கப்பட்டாலோ, அன்றி நீர்க்குறைவால், பயிரிடப்பட்டு வந்த நிலப்பரப்பு பயிரிட
முடியாவிட்டாலோ, அன்றி அறுவடை செய்த அளவு நீரின்மையால் இப்பொழுது பயிர் செய்ய முடியா
விடிலோ விளைவு பாதிக்கப்பட்டதென்று நாம் கொள்ளவேண்டும்.

ஜமீன்தார் சிக்கண முறையில், வேறு வழியாக, முன்போல் போதுமான நீர்ப்பாசனத்துக்கு ஏற்பாடு
செய்தாலும் ஒப்புக்கொள்ளவேண்டும்.

சிறிய பழுதுகளைப் பார்க்கவும், ஏரி, கால்வாய்களில், மண்ணெடுப்பதற்கும் அவரவர்கள் நிலப்பரப்புக்
கொப்ப, குடிகள் கட்டாய வேலைகள் செய்யவேண்டும். குடிகள் மனம்போல் வழக்கப்படி விடாமல்,
சட்டமூலம் அதை ஒழுங்கு படுத்தவேண்டும். குடிகள், ஏரி, மதகுகளை, தம் நிலங்களுக்குத் தண்ணீர் பாய்ச்ச
திருட்டுத்தனமாகத் திறக்காமற் தடுக்கவும், ஆடு மாடுகளை ஏரிக் கரைகளில் மேய விடாமற் தடுக்கவும், சிறு
அபராத தண்டனைகள் ஏற்படுத்தப்பட வேண்டும்.

சில ஜமீன்களில், பழைய வழக்கப்படி சிறிய நீர்ப்பாய்ச்சல்களைக் குடிகளே கவனித்து வருகிருர்கள்.
அந்தந்த இடங்களில் அவ்வழக்கங்களை நிச்சயிக்கவேண்டும்.

14-ம் அத்தியாயம்.

கேள்விகளுக்குப் பதிலும், தீர்மானங்களும்.

நான் இப்பொழுது என் முடிவுகளைத் தெரிவிக்கிறேன். ஜமீன்தாரே நிலத்துக்குரியவர். முகம்மதியர்
ஆட்சியில், சர்க்காரும், அவர்கள் நியமித்தவர்களும் நிலத்துக்குரியவரெனச் சொல்லப்பட்டது. பின்பு வந்த
ஆங்கில சர்க்கார் இதையே ஏற்றுக்கொண்டனர். சாசுவத திட்டகால சாசனங்களும், சன்னத்துக்களும், 1802
ரெகுலேஷன்களும், ஆங்கில சர்க்காருக்கு, ஜமீன்தார்களையே நிலச் சொந்தக்காரராக ஏற்படுத்தும் எண்ண
மிருந்ததாகக் காண்பிக்கின்றன. நாட்டு, வழக்கங்களுக்கேற்ப, குடிகளுக்கு நிரந்தர அனுபோக உரிமைதான்
உண்டென்பதையும் அவர்கள் ஏற்றுக் கொண்டார்கள். 1822 ரெகுலேஷன் 4, இதைத் தெளிவாகக்
காட்டுகிறது. 20 சென்னை, 299; 23 சென்னை, 318, சமீப காலத்துப் 'பிரிவி கவுன்சில்' தீர்ப்புக்கள்,
குடிகளின் நிரந்தர அனுபோக உரிமையை சந்தேகத்துக்குள்ளாகிவிட்டன. சென்னை ஜமீன் நிலச்சட்டம்,
குடிகளுக்கு அவ்வுரிமை உண்டெனக் கூறியிருப்பதால், அதைப்பற்றிக் கவனிக்கவேண்டியதில்லை. ஜமீன்
குடிகளைக் குடிவாரக்காரரெனக் கூறலாம். அதை பிறருக்கு மாற்றவும், சந்ததிகள் அடையவும் உரிமை
யுண்டு. அதனுடைய குணுதிசயங்களைச் சென்னை ஜமீன் நிலச்சட்டம் விளக்குகிறது. குடிவார உரிமையுடன்,
ஜமீன்தார் நிலச்சுதந்தர உரிமை முரண்படவில்லை. இவைகள்தான், கேள்விகள் [1-a,.1-b]-க்கு, என்
பதிலாகும்.

1802 சாசுவத திட்ட காலத்திலேயே குடிகளின் தீர்வையும் நிரந்தரமாக நிச்சயிக்கப்பட்டதென்பது, நான்
எடுத்துக்காட்டிய பலவித சட்டங்களாலும், கோர்ட்டுத் தீர்ப்புகளாலும், அனுபவம் வாய்ந்த உத்தியோகஸ்தர்
களின் சான்றுகளாலும் தெளிவாக விளக்கப்பட்டுவிட்டது. சாசுவத திட்டகாலத்தில், சர்க்காருக்கும், ஜமீன்
தாருக்கும், 'பேஷ்கஷ்' தான் நிச்சயிக்கப்பட்டது. அக்காலங்களில் தீர்வையானது, வாரம் அல்லது
விளைவில் ஒரு பங்காகவிருந்தது. மேல்வாரம் அல்லது இராஜபாகமென்பது அரைமடங்குக்கு மேலாகவே
இருந்தது. 1802 ரெகுலேஷன்களாவது, வரி வசூல் சட்டமாவது, தீர்வையை உயர்த்துவதை தடை செய்ய
வில்லை. சென்னை ஜமீன் நிலச்சட்டந்தான், முதன் முதலாக வரி உயர்வைத் தடை செய்கிறது. பட்டா விதி
களின் நோக்கம் ஜமீன்தாருக்கும், குடிகளுக்குமுள்ள ஒப்பந்தங்களை எடுத்துக்காட்டுவதே. தீர்வை நிச்சயிப்
பதைப் பற்றி ஒன்றும் சொல்லவில்லை. ஜமீன்தாரும், குடிகளும் ஒப்பந்தம் செய்துகொள்ள எப்பொழுதும்
உரிமையிருந்தது ; வரி வசூல் திட்டமும் இதை ஏற்றுக்கொள்கிறது. தானியங்களின்விலை யுயர்ந்ததினு
லோ, மேலான தானியங்களைப் பயிரிடுவதினுலேயோ, பூமியின் வளமை அதிகரிப்பாலேயோ தீர்வையையுயர்த்த
ஜமீன்தாருக்குரிமை இருந்து வந்தது. ஜமீன்
சாசுவத திட்டகாலத்திலிருந்து, கடந்த 130 வருடங்களாக
நிலச்சட்ட காலம் வரையில், வரிகளைத் தானிய விகிதத்திலிருந்து பணமாக மாற்ற ஜமீன்தார்களுக் குரிமை
யிருந்தது ; இன்றும் சிலவிடங்களில் தானிய தீர்வையாகவே இருந்து வருகிறது. சில இடங்களில் 30,
40 வருடகாலமாகவே இவ்வழக்க மிருப்பதால், அதை மாற்றியமைப்பதில், ஜமீன்தாரின் சாதகமாக ஆழ்ந்து
நோக்கவேண்டும். வழங்கிவரும் தீர்வை விகிதத்தையே நியாயமெனக் கொள்ளவேண்டும். சில குடிகள்,
வாரக்குடிகளைக் கொண்டு பயிரிட்டும், தீர்வை கட்டியது போக லாபமடைகிருர்கள் என்பதை மறக்கலாகாது.
ஜமீன் நிலச்சட்டத்தில் குடிகளுக்
குள்ள பாதுகாப்புகள் போதும். சென்னை ஜமீனைச் சீர்திருத்த அவசியமில்லை.
அதிகமான தீர்மானங்கள்,
சில ஜமீன்களில், 1930-ல் ஏற்பட்ட விலைக் குறைவினுல் தீர்வையதிகமெனத்
தோன்றலாம். அத்தீர்வைகளை மாற்ற ஏற்பாடுகள் செய்தாற் போதும், 2-எ, கேள்விக்கு என் பதிலானது,
தீர்வை நியாயங்களைக் கவனித்து ஏற்பாடுகள் செய்யவேண்டும். வழங்கும்
அந்தந்த இடத்துக்கேற்றவாறு
தீர்வை நீண்டகாலமாகவிருந்தால் அதை நியாயமென்றே கருதவேண்டும். பொதுவாக நாம் நியாயமான

தீர்வையை நிச்சயிக்க முடியாது. இதுவே கேள்வி 2-(b)-க்குப் பதிலாகும். கேள்வி 2-(e)-க்குப் பதில் பிரிவு 39-(a)-ல் கண்டபடி வரிக்குறைவு அனுமதித்தல் போதும். இதர சட்டங்கள் வேண்டியதில்லை. கேள்வி 2-டி-க்குப் பதில், தீர்வையை நிரந்தரமாக்குவது தவறென்பதே. நீதியான தீர்வையை நிர்ண யிக்க கோர்ட்டாரோ, உத்தியோகஸ்தரோதான் தகுந்தவர் எனக் கருதுகிறேன். கேள்வி 2-இ-ல் கண்ட வாறு, சர்க்கார் தீர்வையைக் குறைக்கவோ மாற்றவோ, திருத்தவோ தனிமையான அதிகாரம் வைத்துக் கொள்ளலாகாது.

வரி வசூலிப்பதில் கேள்வி 3-(a)க்குப் பதில் நான் முன்னரே விளக்கிக் கூறியுள்ளேன். ஜமீன்தாருக்கு இவ்விஷயங்களில் அதிக அதிகாரங்கள் தரவேண்டும் கிராமஉத்தியோகஸ்தர்களும், ரெவின்யூ அதிகாரிக ளுக்கும் உதவி செய்யவேண்டும் என்று இது கேள்வி 3-b, 3-c-க்குப் பதில் அளிக்கிறேன்.

கேள்விகள் 4-a, 4-b-க்குப் பதில், ஜமீன்தாருக்குதான் நீர்ப்பாசன சாதனங்களுக்குரிமையுண்டென் றும், மேற் சொன்னவாறு அவ்வுரிமைகளைக் குடிகளின் தன்னிச்சையினின்றும் ஒழுங்கு படுத்தவேண்டு மெனக் கூறுகிறேன். கட்டாய 'சர்வே' வேண்டியதில்லை ; அப்படி நில அளவு செய்தல் ஏற்பட்டால், சர்க்காரும் ஜமீன்தாரும். சமபாகமாகச் செலவை ஏற்றுக் கொள்ளவேண்டும். ஜமீன்தார், தீர்வையைத் தவிர இதர வசூல் ஒன்றும் செய்யக்கூடாது.

கேள்விகள் 5, 6, 7-க்குப்பதிலாக, நான், குடிகளின் மேய்ச்சல் உரிமை, ஜமீன்தாரின் காடு, குன்று, கரம்பு நில உரிமை, புறம்போக்கில் பொதுஜன உரிமை முதலியவற்றைக் கவனிக்குமாறு கூறுகிறேன்.

கேள்வி 8-க்குப் பதில்—நீர்ப்பாசன சாதனங்களின் தலைப்பின் கீழ் பார்க்கவும்.

கேள்வி 9-க்கு பதிலாக, வருஷ ஜமாபந்தியை ஜமீன்தார்கள் சுயேச்சையாக ஏற்படுத்தலாம் ; இதற்குக் கிராமாதிகாரிகளின் ஒத்துழைப்பு அவசியம் என்று கூறுகிறேன். ஜமீன்தார்கள் தீர்வையைக் குறைக்க வேண்டுமானால், அதற்கேற்ப சர்க்காரும் ' பேஷ்கஷைக் ' குறைக்கவேண்டும்.

கேள்வி 10-க்குப் பதில் .—கீழ்க்குடிகளுக்கு, பல வருடங்கள், ஒரே பட்டாதாரின் நிலத்தை உழுது வந் தார்களென நிரூபிக்கப்பட்டால், அனுபோக உரிமை யளிக்கபடவேண்டும். பட்டாதாருக்கும், கீழ்க்குடிக்கும் வரி ஒழுங்குபாடு செய்யவேண்டும். இதனால் ஜமீன்தாரின் தீர்வை பாதிக்கப்படலாகாது. கீழ்க்குடியின்மேலும், வரி வசூல் செய்யும் உரிமை ஜமீன்தாருக்குக் கொடுக்கப்படவேண்டும்.

கேள்வி 11-a .—ஜமீன்தாருக்கும் குடிகளுக்கும் உண்டாகும் வழக்குக்களை விசாரணை செய்ய தனிக் கோர்ட்டுகள் வேண்டியதில்லை. ரெவின்யூ போர்டே, அப்பீல், ரிவிஷன் உள்பட கவனித்து வரலாம். இவ் விஷயங்கள் ' சிவில் கோர்ட்டு 'க்கு மாற்றப்பட வேண்டியதில்லை.

ஜமீன்தார்கள், அநியாயமாகவும், விரோதமாகவும், மாற்றப்பட்ட அல்லது விற்பனை செய்யப்பட்ட நிலங் களிற் பிரவேசிக்கும் குடிகளை, விலக்க சுலபமான வழிகளைக் கையாள ஏற்பாடு செய்யவேண்டும். கலெக்டர் களிடமிருந்து வாரன்டுகள் கிடைக்க வேண்டும்.

கேள்வி 12-b-க்கு விடை.—ஜமீன்தார்கள் குடிகளிடமிருந்து தீர்வை வசூலிப்பதைப் போலவே இனும் தார்களிடமிருந்து ஜோதி, பொருப்பு, கட்டுபடி வசூல் செய்ய சாதனங்கள் வேண்டும். என் சகாக்களின் வரி மாற்றும் விகித முறைகள், தவறானவையாகத்தோன்றுகின்றன. 1802-ல் வழக்கிலிருந்த வரி விகிதமும் தெரியாது ; பயிரிடப்பட்ட நிலப்பரப்பும் தெரியாது.

15-ம் அத்தியாயம்.

சில ஜமீன்களைப்பற்றிய குறிப்புகள்.

அறிக்கையின் இரண்டாவது பகுதியில், எனது சகாக்கள், சில தனி ஜமீன்களின் விஷயங் களைத் தங்களுடைய சொந்த அனுபவித்திலிருந்தும், சாக்ஷிகளிடமிருந்தும் விசாரித்து முடிவு கூறியிருக்கி றார்கள். நான், எனக்குக் கிடைத்த சிறிது காலத்திற்குள் அத்தீர்மானங்கள் யாவையும் கவனிக்க முடிய வில்லை. சில ஜமீன்களைப் பற்றித்தான், நான் என் முடிவைத் தெரிவிக்கிறேன். அதனால், நான் என் சகாக்க ளின் இதர முடிவுகளை ஒப்புக் கொண்டதாக ஏற்படக்கூடாது.

பித்தாபுரம் ஜமீன்.—பெரும்பான்மை அறிக்கையினர், திவான் சாக்ஷியத்தைத்தான் விவரிக்கிறார்கள். தற்போதுள்ள மகாராஜாவின் முன்னோர்களின், அரசியல் அந்தஸ்தைப் பற்றித் தீர்மானிக்கும்பொழுது, அவர்கள் சுதந்திர அதிகாரம் படைத்தவரல்லவென்று சொல்வது தவறு. இந்த ஜமீனின் பழைய சரித் திரத்திலிருந்து, நாம் இவ்வம்சத்து மூதாதையர் தெலிங்கானா நாட்டைச் சுதந்தரத்துடன் ஆண்டுவந்தவரென அறிகிறோம். முகலாயர்கள் தெலிங்கானாவைப்பற்றிய பொழுது, பித்தாபுரம் அரசர்கள், தேசமுகி என்னும் பெயருடன், கப்பங்கட்டும் மன்னர்களாக மாறினார்கள். அப்பொழுதும், ஒரு சிறு ராணுவப்படையுடன் நகர, ராணுவ, பொருளாதார வேலைகளைக் கவனித்து வந்தார்கள். ஆகையினால், பித்தாபுரம் ஜமீன் முகலாய ஆட்சியிலும் சுதந்திரமாக வாழ்ந்திருந்தது.

இந்த ஜமீனில் 1802-ல், 'பேஷ்கஷ்' ரூ. 2,58,979., 1936-ல் ரூ. 2,31,438-10-0 ; இக்குறைவுக்கு காரணம் பொது நன்மைக்காக 'ஜீரையதி' நிலங்கள் தனிப்படுத்தப்பட்டதேயென்றும், இப்படி 'பேஷ் கஷ்' குறைந்த போதும், ஜமீனில் குடிகளின் தீர்வை உயர்ந்து வந்தது என்பதும் உண்மைக்கு விரோத மானவை. 'பேஷ் கஷ் ' குறைந்ததற்குக் காரணம் ' தார்மிலா ' இனும் நிலங்களை தனியே நீக்கி, இதர, ஆக்ட் 1, 1876,-ன் படி, மாற்றப்பட்ட நிலங்களுடன், தனிவரியிட்டு வசூலிப்பதினாலேயே. சர்க்கார், தங்கள் வரிகளை தனிப்பதிவுகள் ஏற்படுத்தி அந்நிலங்களிலிருந்தும் வசூல் செய்கிறார்கள். ' பேஷ்கஷ்' குறைவு படுவதற்கு முன்னும், ஜமீன்தார்கள் அந்நிலங்களிலிருந்து வருமானம் ஒன்றும் அனுபவிக்கவில்லை.

இந்த ஜமீனின் திவான், நிலத் தீர்வை உயர்த்து வதற்குக் காட்டும் காரணங்கள் மூன்று ;

(1) கரம்பு நிலங்கள் பயிரிடப்படும் நிலைக்குக் கொண்டு வரப்பட்டிருப்பது.

(2) உணவு தானியங்களின் விலையுயர்வு.

(3) சாகுபடி சாதனங்கள் அதிகப்பட்டிருப்பது.

இதற்குத் தகுந்த கணக்குகளை அவர் காண்பிக்கிறார். இந்த ஜமீன் 'சர்வே ' செய்யப்பட்டது ; ஏக்கர் அளவுகளில் வழக்கு ஏற்படாது. சாசுவத திட்டகாலத்தில் பயிரிடப்பட்ட நிலம் 75,000 ஏக்கர். இப்பொழுது பயிரிடப்படும் நிலம் 134,239 ஏக்கர்கள். ஆகையால், சுமார் 60,000 ஏக்கர், கரம்பு நிலம், 1802-லிருந்து இது

வரை பயிரிடுவதற்குக் கொண்டு வரப்பட்டுள்ளது. பேஷ் கஷைத் தீர்மானிக்கும் கணக்குப் புத்தகங்களில் சுமார் 53,911 ஏக்கர் கரம்பு நிலம் சாசுவத திட்டத்துக்குப்பின் உழவுக்குக் கொண்டுவரப்பட்டதாகக் காணப் படுகிறது.

என்னுடைய சகாக்கள் இதைக் கவனியாமல், இப்பொழுது இருப்பதை விட, சாசுவத திட்ட காலத்தில் அதிக நிலம் பயிரிடப்பட்டு வந்ததாகக் கூறுகிருர்கள். 1802-ல், கரம்பு நிலம் அதிகமாக இருந்ததாகச் சர்க்கார் கணக்குகளே காண்பிக்கின்றன. இப்பொழுது ஜமீனில் கரம்பு நிலமே இல்லே. ஆகையால், 1802-க்குப் பிறகுதான் அவை யெல்லாம் பயிரிடப்பட்டிருக்கவேண்டும். இதை என் சகாக்கள் மறுப்பது தங்களைத்தாமே, ஏமாற்றிக் கொள்வதுபோலாகும். இதற்குக் காரணம், அவர்கள் பின் பற்றும் தப்பான கணக்கு முறையே தான்.

1802-வது வருஷத்தில் சாகுபடி செய்யப்பட்ட நில விஸ்தீரணத்தை அறிவதற்கு, எனது சகாக்கள் அனுசரித்திருக்கும் உபாயத்தை ஒப்புக்கொண்டாலும், அக்காலத்தில் ஒரு கரிசை நெல் விலே ரூ 85 இருந்தது என்று அவர்கள் சொல்வதை தர்க்க செளகர்யத்திற்கு ஒத்துக்கொண்டாலும், பெரும்பான்மை அறிக்கையிற் கண்டுள்ள கணக்கு விவரங்கள் தவருக இருக்கின்றன என்பதிற் சந்தேகம் இல்லே. சாசுவத பைசல் காலத்தில், ஜமீன்தாரின் வருமானம் (Rent roll) ரூ. 3,92,182. அக்காலத்தில் ஒரு கரிசை நெல்லின் விலே ரூ. 85 என்ருல் ஜமீன்தாரின் வரி வருமானத்தை கரிசையாக மாற்றினுல், சுமார் 4,614 கரிசைகள் ஏற்படுகின்றன. 16 ஏக்கர் நிலம் ஒரு கரிசை தீர்வை தருகிறதென்று எனது சகாக்கள் கூறும் விதியை அனுசரித்தால், 4,614 கரிசைகள், 4,614 × 16 அல்லது 73,824 ஏக்கர்கள் ஆகின்றன. இதுவே சாசுவத பைசல் காலத்தில் இருந்த சாகுபடிசெய்யப்பட்ட நிலத்தின் விஸ்தீர்ணம் ஆகும். சற்றேறக்குறைய இதே புள்ளியைத்தான், திவான் தமது சாக்ஷியத்தில் தெரிவித்தார். ஆதலால் 1802-ம் வருஷத்தில் சாகுபடி செய்யப்பட்ட நிலத்தின் விஸ்தீர்ணம் 1,33,806 ஏக்கர்கள் என்று எனது சகாக்கள் கூறுவது அறியக்கூடவில்லே.

1887-ம் வருஷத்திற்குமுன் ஜமீனில் அனுசரிக்கப்பட்ட "ஒன்து வாரடி" முறையைப்பற்றி பெரும் பான்மை அறிக்கையில் பலமான கண்டனம் செய்யப்பட்டிருக்கிறது. இந்த முறையின் உண்மையான நோக்கத்தை எனது சகாக்கள் கிரஹிக்கவில்லே என்று மரியாதையுடன் தெரிவிக்கிறேன். இம் முறைப்படி ஒரு கிராமத்தின் மொத்த நிலவரி நிர்மாணம் எப்பொழுதும் அதிகரிக்கப்படவில்லே. கிராமத்திலுள்ள சில நிலங்களுக்குமட்டும்தான் வரிவிசிதம் திருத்தி யமைக்கப்பட்டது. ஏழைக் குடியானவர்களும், செல்வ முள்ள குடியானவர்களும், சமமாக பலனே அனுபவிப்பதற்கே இது செய்யப்பட்டது. அது சம்பந்தமாக அனுசரித்த ஏற்பாடு பின்வருமாறு :—

ஒரு கிராமத்திலுள்ள குடியானவன் தனது பக்கத்திலுள்ள குடியானவனுடைய நிலத்திற்கு குறை வான தீர்வை இருப்பதாகவும், தனது நிலத்திற்கு அதிகமான தீர்வை இருப்பதாகவும், நினேத்தால் பக்கத்திலுள்ள குடியானவனுடைய நிலத்தை உயர்ந்த தீர்வைக்கு தான் எடுத்துக்கொள்வதாகவும், தனது நிலத்தை குறைந்த தீர்வைக்கு மேற்படி குடியானவனுக்குக் கொடுக்க தயாராய் இருப்பதாகவும், கூறி அதன்படி ஏற்பாடுசெய்துகொள்கிருன். ஆனல் ஜமீன்தாரைப் பொருத்தமட்டில், மொத்த வருமானத்தில் அவருக்கு ஒன்றும் அதிகமாய்க் கிடைக்கவில்லே. ஏனெனில் அது குடியானவர்களே செய்துகொண்ட ஏற்பாடாகும். இந்த ஏற்பாடுமூலமாக, ஒரு நிலத்திற்கு அதிக தீர்வை ஏற்பட்டால், மற்றொரு நிலத்திற்கு தீர்வை குறைந்துவிடுகிறது. இம் முறைப்படி, ஜமீன்தாரின் ஸ்தல அதிகாரிகூட யாதொரு லாபமும் அடைய முடியாது. ஏனெனில், அவர் நிலத்திற்கும் மேற்கூறிய "சவால்" முறையே ஏற்படும். இம் முறையின் ஒரு குறை என்னவென்ருல் குடியானவனுக்கு நில அனுபோக ஸ்திரம் கிடையாது. அதன் காரணமாக பணம் செலவழித்து, உழைத்து, நிலத்தை அபிவிருத்திசெய்வதற்கு குடியானவனுக்கு ஊக்கம் ஏற்படாது. இம் முறையின் தீமைகள் எவ்வாறு இருப்பினும், ஜமீன்தார் தனது வருமானத்தை அதி கரிப்பதற்கு அது சாதகமாயில்லே. இந்த ஜமீனில் வரி உயர்வு ஏற்பட்டிருந்தால், அதற்குக் காரணம் "ஒன்து வாரடி" முறையல்ல, மற்ற காரணங்களாய் இருக்கலாம். இந்த முறை, இந்த ஜமீனுக்குமட்டும் விசேஷமானதல்ல. இது, 1825-ம் வருஷத்திலிருந்து ரயத்துவாரிப் பிரதேசங்களிலும் அமுலில் இருந் திருக்கிறது. 1860-ம் வருஷத்தில் ரயத்துவாரிப் பிரதேசங்களில் சாஸ்திரோக்தமான வரி நிர்ணயம் ஏற் பட்டபொழுதுதான் இம்முறை ரத்து செய்யப்பட்டது. மாரிஸ் என்பவர் "கோதாவரி ஜில்லாவின் சரித்திர விவரம்" என்ற, தாம் எழுதிய புஸ்தகத்தில், 314-வது பக்கத்தில் "சவால்" வழக்கைத்தைப்பற்றி விவரித்திருக்கிருர். இம்முறை கோதாவரி ஜில்லா கெஜட்டியரில், 168-வது பக்கத்தில் விளக்கப்பட்டிருக்கிறது. இவ்விரு புஸ்தகங்களில் இம்முறையைப்பற்றி அறிவிக்கப்பட்ட விஷயங்களுக்கும், திவான் தமது சாக்ஷி யத்தில் அறிவித்த விஷயங்களுக்கும், யாதொரு வித்தியாசமும் இல்லே. ஆதலால் "ஒன்து வாரடி" முறையால், ஜமீன் வருமானம் அதிகரிக்கப்பட்டது என்று கூறுவது, தருமமல்ல மேலே தெரிவித்தபடி அம்முறைக்கும், ஜமீன் வருமானப் பெருக்கத்திற்கும் யாதொரு சம்பந்தமும் இல்லே.

முக்கிய உணவுப்பொருள்களின் விலே அதிகமானதின் பலிதமாக வரியும் உயர்ந்ததென்று, திவான் இரண்டாவது காரணமாகத் தெரிவித்தார். 1264-வது பசலியின் பழைய ஜமீன் கணக்குகளில் இருந்து அறியக்கூடியபடி, 1854-ம் வருஷத்தில் ஒரு புட்டி (அதாவது 200 குஞ்சம்) நெல் விலே ரூ. 14–6–0-ஆக இருந்திருக்கிறது கணக்குப் பார்த்தால் ஒரு கரிசைக்கு ரூ. 43–2–0 ஏற்படுகிறது. சர்க்கார் பிரசுரித்திருக்கிற புள்ளி விவர விளக்கத்தின்படி, 1874-1875-ம் வருஷங்களில் ஒரு ரூபாய்க்கு கிடைத்த அரிசி 19·8 சேர்கள், அதாவது, 39·6 சேர் நெல். அது ஒரு கரிசை நெல் 62 வீதம் ஏற்படுகிறது. சாசுவத பைசல் காலத்தில் ஒரு கரிசை நெல்லின் விலே ரூ. 20 லிருந்து 30 வரை இருந்ததென்பதைத் தெரிவிக்கும் பழைய கிராமக் கணக்குகளின் சாராம்சங்களே ஸ்ரீ சி. வி. எஸ் நரசிம்ஹ ராஜு இக்கமிட்டிக்கு அனுப்பிய தமது யாதாஸ்தில் குறிப்பிட்டிருக்கிருர். பஞ்சம் முதலிய அபூர்வ சம்பவகாலங்களிற் தவிர, மற்றபடி 1802-வது வருஷத்தி லிருந்து, உணவுப்பொருள்களின் விலேவாசிகள் கிரமமாக உயர்ந்து வந்திருக்கின்றன. இப்பொழுதுள்ள குறைவான விலே வீதங்கள் 19-வது நூற்றுண்டின் முற் பகுதியில் இருந்த விலேவீதங்களேவிட இரண்டு மூன்று மடங்கு அதிகமாய் இருக்கின்றன.

உணவுப்பொருள்களின் விலே நிச்சயமாக உயர்ந்திருந்தும், 1802-வது வருஷத்திய ரெகுலேஷன்களின்படி தீர்வையை உயர்த்துவதற்கு ஜமீன்தாருக்கு உரிமை இல்லே என்றும், 1802-வது வருஷத்தில் விதிக்கப்பட்ட தீர்வைகள் மாற்றக்கூடாதவை என்றும், எனது சகாக்கள் அபிப்பிராயப்படுகிருர்கள். இதைப்பற்றி, எனது யாதாஸ்தின் மற்றொரு இடத்தில் ஆராய்ந்து, இது முற்றிலும் தவறு என்று எடுத்துக்காட்டி இருக்கின்றேன். அங்கு நான் தெரிவித்த காரணங்களே இங்கு மீண்டும் கூற அவசியம் இல்லே.

நீர்ப் பாசனங்களுக்கு அபிவிருத்திசெய்ததின் பலிதமாக, வரி வருமானம் உயர்ந்தது என்பது, திவான் வற்புறுத்தும் மற்றொரு காரணமாகும். ஜமீனிலுள்ள புஞ்சை நிலங்கள் முழுவதும், கோதாவரி அணேக்கட்டு முறையால் நீர்ப்பாய்ச்சப்படுகின்றனவென்பது, கமிட்டியின் மற்றொரு தவருன அபிப்பிராயமாகும்..

ஜமீனில் மூன்றில் ஒரு பாகமே கோதாவரி நீரைப் பெறுகிறது. மிகுதியுள்ள மூன்றில் இரண்டு பாகங்கள் மேட்டுப்போக்கான நிலங்கள். இவைகளுக்கு ஜமீன்தார் பிரத்தியேகமான நீர்ப்பாசன வசதிகளைச் செய்திருக்கிறார். அணைக்கட்டு வசதி மூலம் தண்ணீரை அடையும் நஞ்சை நிலங்களுக்கு, குடியானவன் தண்ணீர் வரி கொடுக்கவேண்டியதாயிருக்கிறதென்றும், ஜமீன்தார் அவைகளுக்கு நீர்ப்பாசன வசதிகளைச் செய்யவில்லையென்றும், பெரும்பான்மை அங்கத்தினர்கள் கூறுகிறார்கள். இது தவறு. ஏனெனில் அணைக் கட்டுமுறை ஏற்படுவதற்குமுன், ஜமீனில், இந்தப் பகுதியிலுள்ள நஞ்சை நிலங்களுக்கு, ஜமீன்தார் அதிக செலவு செய்து நீர்ப்பாசன வசதிகளைச் செய்திருக்கிறார். அதன் காரணமாக இந்த நிலங்களுக்கு நஞ்சைத் தீர்வை ஏற்பட்டது. அணைக்கட்டு முறை ஏற்பட்டபிறகு, நீர்ப்பாசன மூலங்கள் சர்க்காரால் தடை செய்யப்பட்டு, எடுத்துக்கொள்ளப்பட்டன. அதனால் ஜமீன்தாருக்கு ஏற்பட்ட நஷ்டத்தை சரிசெய்வதற்கு, ஜமீன்தார் நீர்ப் பாசன மூலங்களால் இதற்கு முன் சாகுபடிசெய்யப்பட்ட நஞ்சை நிலங்களுக்கு தண்ணீர் வரி இல்லாமல் தண்ணீர் விடுவதாக சர்க்கார் ஜமீன்தாரோடு ஒப்பந்தம் செய்துகொண்டார்கள். குடியானவனுக்கு முன் போலவே தண்ணீர் கிடைத்து வருகிறது; ஜமீன்தாரும் பழைய தீர்வையையே வசூலித்துவருகிறார். ஆதலால் இந்த நஞ்சை நிலங்களுக்கு ஜமீன்தார் தண்ணீர் வசதிகள் தரவில்லையென்பது சரியாகாது. மேட்டுப் பிரதேசங்களிலுள்ள நஞ்சை நிலங்களின் நீர்ப்பாசன வசதிக்கு ஜமீன்தார் ஏராளமான தொகைகளைச் செலவுசெய்து அநேக நீர்ப்பாசன அமைப்புகளை ஏற்படுத்தி இருக்கிறார். அதன் பலிதமாக ஆயிரக் கணக்கான புஞ்சை நிலங்கள் நஞ்சை நிலங்களாகச் செய்யப்பட்டிருக்கின்றன. மேற்படி செலவுதொகைகளைப்பற்றியும், நீர்பாசன அமைப்புகளைப்பற்றியும் பூரண விவரங்கள் எங்களுக்குத் தெரிவிக்கப்பட்டன. இந்த நஞ்சை நிலங்களுக்கு, ஜமீன்தார் மாமூலான நஞ்சைத் தீர்வையையே வசூலித்து வருகின்றார். தரிசு நிலங்களுக்கும், மற்ற நிலங்களுக்கும் ஜமீன்தார் தனது சொந்தச்செலவில் பல நல்ல அபிவிருத்திகளைச் செய்தாலும், மேற்படி நிலங்களுக்கு, சாசுவத பைசல் காலத்தில் தீர்மானிக்கப்பட்ட தீர்வையைவிட அதிகமான தீர்வையை ஜமீன்தார் விதிக்கக்கூடாதென்று, பெரும்பான்மை அங்கத்தினர்கள் கருதுகிறார்கள். விலைவாசிகள் உயர்ந்தால் தீர்வையையும் உயர்த்தலாம் என்ற ஜமீன்தார் உரிமையைப்பற்றி, நான் முன்பு தெரிவித்த காரணங்கள் இதற்கும் சமமாகவே செல்லும்.

முதலாவது கிராமத் தொகுதியில், கரும்பு, வெற்றிலை, பயிர் செய்வதைப்பற்றி குறை கூறப்பட்டது. கமிட்டிக்கு அனுப்பிய யாதாஸ்தில், சாகுபடி செய்யப்படும் பயிர்களுக்குத் தகுந்தாற்போல், கிராமங்கள் தொகுக்கப்படவில்லை; நீர்ப்பாசன வசதிகளுக்குத் தகுந்தாற்போல், கிராமங்கள் தொகுக்கப்பட்டிருக்கின்றன. கிராமங்கள் அவ்வாறு தொகுக்கப்பட்டபொழுது, மேற்படி கிராமங்களில் சாகுபடி செய்யப்படும் பலவித பயிர்களைப்பற்றியும், பொதுவான ஒரு விளக்கம் தெரிவிக்கப்பட்டது. இந்த கிராமங்கள் முழுவதிலும் அல்லது ஒவ்வொரு கிராமத்திலுள்ள எல்லா நிலங்களிலும், மேற்படி பயிர்கள் சாகுபடி செய்யப்படுகின்றனவென்று தெரிவிக்கவேண்டுமென்பது திவான் கருத்தல்ல. இந்த கிராமங்களில் சொற்ப பாகத்தில் தான் கரும்பு, வெற்றிலை சாகுபடி செய்யப்படுகின்றனவென்று, தான் கூறிய சாக்ஷியத்தில், திவான் இதை நன்கு விளக்கி இருக்கிறார். மேலும் கரும்பு சாகுபடி செய்வது மிகச் செலவான காரியம். அதற்கு அதிக முதல் வேண்டும். அதற்கு நல்ல விலை கிடைத்தாலொழிய, குடியானவனுக்கு பெருத்த நஷ்டம் ஏற்படும். ஆதலால் முதல் வகுப்பு கிராமங்களில், கரும்பு, வெற்றிலை சாகுபடி செய்யக்கூடுமானாலும், மேற்கூறிய காரணங்களை முன்னிட்டு, அவைகளைச் சாகுபடிசெய்வதற்கு குடியானவன் தயங்குவான். பெனுகுதுரு கிராமத்திலும், சொல்லங்கி கிராமத்திலும் உப்புதான் முக்கிய விளைச்சலென்று பெரும்பான்மை அறிக்கை கூறுவது சரியல்ல. இந்த கிராமங்கள் நல்ல நெல் விளைச்சலைத்தரும். நஞ்சை நிலங்கள், நூற்றுக் கணக்கான ஏக்கர்களாக இருக்கின்றன. இதைப்பற்றி திவான் கூறிய சாக்ஷியம் எவராலும் மறுக்கப்படவில்லை.

நீர்ப்பாசன அமைப்புகள்; அவைகளின் மராமத்து நிர்வஹிப்பு; ஏரிப்படுகை நிலங்களை குத்தகைக்கு விடுதல்; வரி வஜாக்கள்; சர்வேயும், உரிமைகளின் அடங்கலும்; சமுதாய நிலங்கள் ஜமீன்தாரரால் பராதீனம் செய்யப்பட்டன என்ற குற்றச்சாட்டு; லங்கா நிலங்களைக் குத்தகைக்கு விடுதல்; முதலியவைகள் சம்பந்தமாக பெரும்பான்மை அறிக்கையில் சில அபிப்பிராயங்கள் தெரிவிக்கப்பட்டிருக்கின்றன. மேற்படி விஷயங்களைப்பற்றி, குடியானவர்கள் பிரஸ்தாபித்த பல முறையீடுகளுக்கு, திவான் தக்க ஆதாரப் பத்திரங்களுடன், விவரமாக சமாதானம் கூறி இருக்கிறார். குடியானவர்கள் தெரிவித்த முறையீடுகளைமட்டும் எனது சகாக்கள் அறிக்கையில் அமைத்துக்கொண்டார்களே தவிர, அவைகள் சம்பந்தமாக திவான் கூறிய பதில்களைக் குறிக்கவில்லை. அவைகளைப்பற்றி ஒன்றும் ஆராயவும் இல்லை. இச்சந்தர்ப்பத்தில், பெரும்பான்மை அறிக்கையில் ஒரு தவறான விஷயமும் தெறிவிக்கப்பட்டிருக்கிறது. ஜமீன்தார் தனது உறவினர்களுக்கும், தனக்கு வேண்டியவர்களுக்கும், சமுதாய நிலங்களைக் கொடுத்து வருகிறார் என்று, ஒரு சாக்ஷிகூட முறையிடவில்லை. ஜமீன்தார் அப்படிச் செய்கிறார் என்று திவானும் ஒப்புக்கொள்ளவில்லை. வரி பாக்கிகளைக் கொடுக்கமுடியாது, தாங்கள் விட்டுவிட்ட லங்கா நிலங்களை மஹாராஜா தனது உறவினருக்குக் கொடுத்தாரென்று சில சாக்ஷிகள் தெரிவித்தார்கள். குடியானவர்கள் இனிமேல் ஒழுங்காக வரி கொடுத்து வர சம்மதித்தால், மஹாராஜா அவர்களுக்கு நிலங்களை திருப்பித்தர, தயாராய் இருப்பதாக திவான் கூறியது இந்த நிலங்களைப்பற்றியே. நான் முடிவில் சொல்ல விரும்புவது என்னவென்றால், இந்த ஜமீனைப் பற்றி குடியானவர்கள் சார்பாக சில சாக்ஷிகள் தங்களுக்குத் தோன்றியவாறு ஆதாரமற்ற சில விஷயங்களைத் தெரிவித்திருப்பது நம்பமுடியாது என்பதே.

உடையார்பாளையம் ஜமீன்.

பெரும்பான்மை அறிக்கை, தென்னாட்டுப் பாளையங்களின் சரித்திர வரலாற்றைப்பற்றி வெகுவாக ஆராய்ந்திருக்கிறது. திருச்சினாப்பள்ளி ஜில்லாவிலுள்ள உடையார்பாளையம் ஜமீனைப்பற்றி, சில குறிப்பான அபிப்பிராயங்களையும் தெரிவித்திருக்கிறது.

1817-வது வருஷத்தில், இந்த ஜமீனுக்கு சாசுவத பைசல் ஏற்படுவதற்குமுன், இந்த ஜமீன் முழுவதும் சர்க்காரின் ஏகபோக உரிமையாக இருந்ததென்று அறிக்கையிற் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. எனது சகாக்கள் தெரிவித்த இவ்வபிப்பிராயம், மேற்படி ஜமீன் வார்சு பாத்தியதை சம்பந்தமாக சென்னை ஹைகோர்ட்டின் தீர்ப்புக்கு (25 மதராஸ், 562) விரோதமாய் இருக்கிறது. தங்கள்முன்பு கொடுக்கப்பட்ட சாக்ஷியத்தைக்கொண்டு, நீதிபதிகள், சந்தேகமற்ற முறையில், வெகு தெளிவாகத் தெரிவித்ததாவது: 1817-வது வருஷத்திய ஏற்பாட்டால், ஜமீன்தாருக்கு அவரது புராதன பாளையம் திருப்பிக்கொடுக்கப்பட்டது. மேற்படி பாளையம் தற்காலிகமாக சர்க்கார் வசம் இருந்தபோதிலும், அதன் பூர்வ காணியாட்சிமுறையில் யாதொரு மாறுதலும் ஏற்படவில்லை. ஹைகோர்ட்டின் தீர்ப்பு, பிரிவிகௌன்சிலால் (28 மதராஸ் 508) அங்கீகரிக்கப்பட்டது.

தீர்வையை, ஜமீன்தார் கொஞ்சம் கொஞ்சமாக உயர்த்திவந்திருக்கிறாரென்ற குடியானவர்களின்கூற்றை எனது சகாக்கள் ஒப்புக்கொண்டிருப்பதாகத் தோன்றுகிறது. இக்குற்றச்சாட்டுகளெல்லாம் திவான் கொடுத்த சாக்ஷியத்தாலும், அவர் தாக்கல் செய்த தக்க ஆதாரப்பத்திரங்களாலும் மறுக்கப்பட்டிருக்கின்றனவென் பது எனது அபிப்பிராயம். திருச்சிறுப்பள்ளி ஜில்லா மான்யூலில் 225-வது பக்கத்தில் ஒரு எக்கருக்கு சராசரி விகிதம் ரூபாய் ஒன்று என்பது, உடையார்பாளையம் ஜமீன் கிராமங்களைப் பொறுத்ததல்ல. 1817-வது வருஷத்தில், பாளையம் ஜமீன்தாருக்கு திருப்பிக் கொடுக்கப்பட்டபொழுது, என்ன தீர்வை விகிதங்கள் இருந்தனவோ அவைகளே இப்பொழுதும் அனுசரிக்கப்படுகின்றன. 1264-வது பசலியில் பக்குல் துரை **(Mr. Puckle)** செய்த செட்டில்மெண்ட் தீர்மானங்களின்படி, திருச்சிறுப்பள்ளியிலுள்ள சர்க்கார் கிராமங்களில், புஞ்சை நிலங்களுக்கு விதிக்கவேண்டிய சராசரித் தீர்வையே மேற்படி மான்யூலில் குறிக்கப்பட்டிருக்கிறது. ஜில்லா மான்யூலின் 201, 202-ம் பக்கங்களில் தெரிவிக்கப்பட்டிருக்கும் தீர்வை விகிதங்களும் மேற்படி ஜில்லாவிலுள்ள சர்க்கார் கிராமங்கள் சம்பந்தமானவை ; ஜமீன் கிராமங்களைப்பற்றிய வையல்ல. 1864-வது வருஷத்தில் பக்குல் துரை செய்த செட்டில்மெண்டின் சராசரி விகிதம், சாசுவத பைசல் காலத்தில் உடையார்பாளையம் ஜமீனிலிருந்த வரி விகிதம் என்று எனது சகாக்கள் தவறுதக்கருதி, அப்பொழுது, ஜமீனில் சாகுபடி செய்யப்பட்ட நிலத்தின் விஸ்தீர்ணம், 27, 412 எக்கர்கள் என்று கணக் கிட்டிருக்கிறார்கள். 1227-வது பசலியில் ஜமீனுடைய வருமான மதிப்பாக, லஷிங்டன் துரையால் கொடுக் கப்பட்ட 27,412 என்கிற எண்ணை 1 ரூபாயால் வகுத்து மேற்கூறிய புள்ளி முடிவிற்குவந்திருக்கிறார்கள். முன்பு சொன்னபடி, அக்காலத்திலிருந்த தீர்வை விகிதம் ரூ. 1 என்பது பெரும்பான்மை அங்கத்தினர் களின் அபிப்பிராயம். 1227-வது பசலியில் சாகுபடி செய்யப்பட்ட நிலத்தின் விஸ்தீர்ணம் என்னவென்று அறிவதற்கு எனது சகாக்கள் மொத்த வருமானத் தொகையாகிய 27,412 ஐ அப்பொழுதிருந்த தீர்வை விகிதத்தால் வகுத்திருக்கவேண்டும். ஜமீன்தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட தஸ்தாவேஜுகளில் இருந்த 1217-வது பசலியிலிருந்து, 1347-வது பசலிவரை, அதாவது 50 வருஷ காலமாக, தீர்வை விகிதங்களில் மாறுதல் ஏற்படவில்லை என்பது தெரியவருகிறது. சுமார் 9 பசலிகளுக்கு சராசரி தீர்வை விகிதங்களை தெரிவிக்கும் பட்டியை தாக்கல் செய்திருக்கிறார். மேற்படி 9 பசலிகளின் சராசரியைச் கணக்கிடுவோமாகில் ஒரு எக்கருக்கு ரூ. 2–12–3 தீர்வையாக ஏற்படுகிறது. 1297-வது பசலிக்கு முன் இருந்த தீர்வை விகிதங்கள், அதற்கு பிறகு உள்ள விகிதங்களை விட குறைவாய் இருக்கின்றனவென்பதற்கு, நேர் முகமான சாக்ஷியம் இல்லாதவரை, 1227-வது பசலியில் இருந்த தீர்வை விகிதம் ரூ. 2–12–3 என்றே கொள்ளவேண்டும். லஷிங்டன் துரையால் மொத்த வருமானமாக மதிப்பிடப்பட்ட ரூ. 27,412-ஐ, ரூ. 2–12–3-ஆல் வகுத்தால், 1227-வது பசலியில் சாகுபடி செய்யப்பட்ட நில விஸ்தீர்ணம் 9,912 எக்கர்களாக ஏற்படும். மேலும், 1297-வது பசலியில் சாகுபடி செய்யப்பட்ட நிலத்தின் விஸ்தீர்ணம் 38,685·38 எக்கர்கள் என்றும் அது 1344-வது பசலியில் இரட்டிப்பு மடங் (67,265·86 எக்கர்கள்) காக அதிகரித்தது என்றும் தெரிவித்திருக்கும் பொழுது, 1227-வது பசலியில் இருந்து 1297-வது பசலிவரை, அதாவது 60 வருஷ காலத்தில் உள் நாட்டுப்போர், கலகம், சச்சரவு இல்லாத காலத்தில், 1227-வது பசலியில் 9,912 எக்கர்களாக இருந்த சாகுபடி செய்யப்பட்ட நில விஸ்தீர்ணம் 1297-வது பசலியில், 38,686·38 எக்கர்களாக அதிகரித்து, அதன் பலித மாக, ஜமீன்தாருக்கு செலுத்தவேண்டிய தீர்வையும் உயர்ந்திருப்பது ஆச்சரியமல்ல.

1817-வது வருஷத்திற்குப் பின் தர்காஸ்து மீது, சாகுபடி செய்வதற்கு புதிதான பல நிலங்கள் உள்க் குடி விகிதத்தில், குடியானவர்களுக்குக் கொடுத்திருக்கலாம் (உள்க் குடி விகிதம் என்பது ஜமீனிலுள்ள உயர்ந்த வரி விகிதமாகும்) இந்த உள்க்குடி வரி விகிதம் நியாயமானதென்று (1915-வது வருஷத்திய எ.எஸ். நெம்பர்கள் 280 முதல் 284 வரை) திருச்சிறுப்பள்ளி ஜில்லா கோர்ட்டு தீர்ப்புக் கூறி இருக்கிறது. மேற்படி தீர்ப்பின் நகல் எங்கள் முன்பு தாக்கல் செய்யப்பட்டது. ஆதலால், இப்பொழுது ஜமீனுக்குள்ள அதிக வருமானத்திற்குக் காரணம் சாகுபடி செய்யப்படும் நில விஸ்தீர்ணத்தின் பெருக்கமே தவிர, வரி வுயர்வுகள் அல்ல. 1 ரூபாயிலிருந்து ரூ. 2–12–0-க்கு தீர்வை உயர்த்தப்பட்டதென்று பெரும்பான்மை அறிக்கையில் தெரிவித்திருப்பது தவறு. 1346-வது பசலிக்கு ஜமீன்தார் தெரிவித்த மொத்த வருமானத் திற்கும், சர்க்கார் கணக்குகளில் இருந்து எடுக்கப்பட்ட மொத்த வருமானத்திற்கும், இருக்கும் வித்தியாசத் திற்கு காரணம் பின் வருமாறு : சர்க்கார் தெரிவித்த தொகையாகிய ரூ. 1,56,020–5–3-ல் கல்வி வரி, ரஸ்தா வரிகளும் அடங்கியிருக்கின்றன. ஆனால் ஜமீன்தார் தெரிவித்த தொகை, 67,265·86 எக்கர்களுக்கு மொத்தத் தீர்வையாகிய ரூ. 1,79,714–9–9 ஆகும். இதில் இதர வரிகள் ஒன்றும் சேர்க்கவில்லை. (1346-வது பச லிக்கு, குடிவாரி, பயிர்வாரி முறைப்படி, பலவகை தானியங்களுக்கு பலவித தீர்வைகள் விதித்திருப்பதைத் தெரிவிக்கும் எதாஸ்தை பார்க்கவும்.)

சில சாக்ஷிகள் தவறுகக் கூறின விஷயங்களை, பெரும்பான்மை அறிக்கை ஆதாரமாகக் கொள்கிறது. உதாரணமாக 1–9–6 அளவுள்ள, அடங்கல் நெம்பர் 23-க்கு 1241-வது பசலியில், ரூ. 0–14–6 இருந்த தென்றும், பிறகு 1283-வது பசலியில் அதே அடங்கல் நெம்பரைக் கொண்ட 0–7–0 காணி நிலத்திற்கு ரூ. 2–1–4 வரி ஏற்படுத்தப்பட்டதென்றும் தெரிவித்திருக்கிறது. 1283-வது பசலியில் ஸ்டார் பகோடாக் களில் நாணயம் மதிப்பிடப்பட்டு வந்ததென்றும், மேற்படி சாக்ஷிகள் தெரிவித்த புள்ளிகள் ரூபாய்களாக மாற்றப்பட்டால், வரி உயர்வு ஏற்படவில்லையென்பது தெளிவாய் விளங்குமென்றும், ஜமீன்தார் தனது யாதாஸ்தில் தெரிவித்திருக்கிறார். சௌக்க மரங்களுக்கும், முந்திரி மரங்களுக்கும், வரிகளை இரட்டிப்பாக உயர்த்திவிட்டாரென்று பெரும்பான்மை அறிக்கையில் எனது சகாக்கள் தெரிவித்திருக்கிறார்கள். வரி அப்படி உயர்த்தப்படவில்லை என்றும், முதல் முதலாக சௌக்கமரங்களுக்கும், முந்திரி மரங்களுக்கும் 1929-வது வருஷத்தில்தான் வரிகள் ஏற்பட்டனவென்றும், 1928-வது வருஷத்தில் கரம்பு நில விகிதங்கள் படி, வரி ஏற்பட்டனவே தவிர, நிலத்திலிருந்த மரங்களுக்கு வரி விதிக்கப்படவில்லை என்றும், ஜமீன்தார் தனது சாக்ஷியத்தில் தெரிவித்திருக்கிறார். மேற்படி வரி விகிதங்கள் ஏற்படுத்தினது நியாயம் என்று காட்டுவதற்கு, 1932-ம் வருஷத்திய எ.எஸ். நெ. 185-ல் ஜில்லா கோர்ட்டு கூறிய தீர்ப்பின் நகலையும் ஜமீன்தார் கமிட்டி முன்பு தாக்கல் செய்திருக்கிறார்.

அறிக்கையின் முதற் பாகத்தில், ஜமீன்தார், தான் நிலத்திற்கு உடையவர் அல்லவென்று ஒப்புக் கொண்டதாகத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. கேள்வித் தொடர்ச்சிக்கு ஜமீன்தார் அனுப்பிய விடைகளிலிருந்து இது முற்றிலும் தவறு என்பது வெளிப்படும். விடைகளின் 9-வது பக்க உட்பிரிவில் " நிலத்திற்குடைய வர் ஜமீன்தார் " என்று தெளிவாகத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

ஆனால், 2-வது கேள்விக்கு தெரிவிக்கப்பட்ட விடைகளின் கடைசி இரண்டு வாக்கியங்கள் தப்பர்த்தம் செய்துகொள்ளப்பட்டதாகத் தெரியவருகிறது. அதாவது, " ரெண்ட் (வரி, வாடகை) என்ற பதம் சரியான பதமல்ல. நான் நிலத்திற்குடையவன் **(landlord)** அல்ல. நிலத்தை அனுபவிப்பவனும் மல்ல, அதாவது குடியானவனல்ல." இந்த வாக்கியங்களால் ஜமீன்தார் தெரிவிக்கவிரும்பியது என்ன வென்றால், தான் ஆங்கில சம்பிரதாயப்படி நிலப்பிரபு அல்லவென்பதும், குடியானவன் குத்தகை காரன் அல்லவென்பதுமே. முன் ஜமீன்தார், சந்தேகமற்ற முறையில் முதலிற் தெரிவித்ததற்கு மாருக, மேற்படி வாக்கியங்களை அர்த்தம் செய்யக்கூடாது.

கபிலேஸ்வரபுரம், கேஸனகுர்ரு ஜமீன்கள்.

கபிலேஸ்வரபுரம், கேஸனகுர்ரு ஜமீன்களை எனது சகாக்கள், ஹஸன் பாதா கிராமத்தோடு சேர்க்கிறார்கள். அந்த கிராமம் சர்க்கார் ரயத்துவாரி கிராமம் ஆகையால் அதை இங்கு பிரஸ்தாபிக்கவேண்டிய அவசியம் இல்லை. கபிலேஸ்வரபுரம், கேஸனகுர்ரு ஜமீன்களுக்கு 1874, 1875-வது வருஷங்களிலும் 1346-வது, பசலியிலும் இருந்த வரி வருமானத்தை ஒப்பிட்டுப்பார்த்து, 1346-வது பசலியில் கபிலேஸ்வர ஜமீனுக்கு ரூ. 75,335 சொச்சம் மொத்தம் வருமானமாக இருந்ததென்று எனது சகாக்கள் கூறுகிறார்கள். ஆனால் மேற்படி ஜமீனுக்கு மொத்த வருமானம் ரூ. 42,024 தான் என்று தானேதார் கூறுகிறார். இதைப்போலவே, கேஸனகுர்ரு ஜமீனைப்பற்றியும் தவறு ஏற்பட்டிருக்கிறது. 1346-வது பசலியில் கேஸனகுர்ரு ஜமீனுக்கு மொத்த வருமானம் ரூ. 29,220 தான்என்றுதானேதார் கூறுகிறார். எனது சகாக்களோ ரூ. 34,340 மொத்த வருமானம் என்று எழுதி இருக்கிறார்கள். என்ன ஆதாரத்தைக் கொண்டாவது, மேற்கோளைக் கொண்டாவது, எனது சகாக்கள் அவ்வாறு தெரிவித்திருக்கிறார்கள் என்பதை நான் அறியக் கூடவில்லை. ஜமீன் கணக்குகளிலிருந்தே தானேதார் தான் தெரிவித்த புள்ளி விவரங்களை எடுத்திருக்க வேண்டும். மேற்படி கணக்குகள் கமிட்டிமுன்பு ஆஜர் செய்யப்படவேண்டுமென்று தெரிவிக்கப்பட்டிருந்தால் அவைகள் ஜமீன் தரப்பில் செய்யப்பட்டிருக்கும். 1346-வது பசலியில் கபிலேஸ்வரம், கேஸனகுர்ரு ஜமீன்களுக்கு, மொத்த வருமானம் முறையே ரூ. 42,000 சொச்சம், ரூ. 29,000 சொச்சம் என்று தானேதார் தெரிவித்திருக்கிறார். அந்த வருமானத்தில், பெரும்பான்மையான பாகம், ஜமீன்தாரே சாகுபடி செய்து அனுபவிக்கிற, லங்கா நிலங்களில் இருந்து கிடைக்கிறது. 1346-வது பசலியில், கேஸனகுர்ரு ஜமீனுக்கு லங்கா நிலங்களில் இருந்து கிடைத்தது சுமார் ரூ. 9,800. ஆகவே மொத்த வருமானமாகிய ரூபாய் 29,000த்தில், ரயத்தி நிலங்களில் இருந்து கிடைத்தது ரூ. 19,400. லங்கா நிலங்களில் இருந்து கிடைக்கும் வருமானம் குடியானவர்களிடமிருந்து வசூலிக்கும் வரித் தொகை அல்ல. ஏனெனில் பெரும்பான்மையான லங்கா நிலங்களை, சிப்பந்திகள், ஸ்தாபனங்களைக்கொண்டு, ஜமீன்தார் தானே விவசாயம் செய்கிறார். ஆதலால் சர்க்காருக்கு செலுத்தவேண்டிய ரஸ்தா வரியை கணக்கிடுவதற்கு மொத்த வருமானம் என்று அப்படி தெரிவிக்கப்பட்டிருக்கிறது. 1874–75 வருஷங்களில் கபிலேஸ்வர ஜமீனுக்கு லங்கா நிலங்கள் கிடையா. 1874–75 வருஷங்களில் கேஸனகுர்ரு ஜமீனுக்கு சொற்ப லங்கா நிலங்களே இருந்தன. ஆனால் 1346-வது பசலியில், கபிலேஸ்வரம் ஜமீனுக்கு சுமார் 1,500 ஏக்கர் லங்கா நிலங்கள் ஏற்பட்டன. கேஸனகுர்ரு ஜமீனுக்கு அப்பொழுது சுமார் 465 ஏக்கர் லங்கா நிலங்கள் இருந்தன. ஆதலால், 1874–75 வருஷங்களிலும், 1346-வது பசலியிலும், இந்த ஜமீன்களின் மொத்த வருமானத்தை ஒப்பிட்டுப் பார்த்ததில் எனது சகாக்கள், லங்கா நிலங்களிலிருந்து வந்த வருமானத்தை சேர்த்திருக்கக்கூடாது. பின் பசலியில், "ரயத்தி" நிலங்களில் இருந்து கிடைத்த வருமானத்தையே கணக்கிட்டிருக்கவேண்டும். அதன்படி பார்ப்போமாகில், 1874–75 வருஷங்களில் ரயத்தி நிலங்களில் இருந்து கபிலேஸ்வரம் ஜமீனில் கிடைத்தது ரூ. 19,255 தான்; 1346-வது பசலியில் கிடைத்தது, ரூ. 19,400. ஆதலால் அறிக்கையின் 55-வது பக்கத்தில் எனது சகாக்கள் தெரிவித்திருக்கிற முடிவுகள் தவறான ஆதாரத்தின் மீது சார்ந்திருக்கிறபடியால் அவைகளை ஒப்புக்கொள்ளமுடியாது. தக்க புள்ளி விவரங்களைக்கொண்டு கபிலேஸ்வரபுரம் தானேதார் கொடுத்திருக்கும் விழுமிய சாக்ஷியத்திலிருந்து, பக்கத்திலிருக்கும் ரயத்திவாரி கிராமங்களின் தீர்வைகள் கபிலேஸ்வரபுரம், கேஸனகுர்ரு ஜமீன்களுக்கு அனுசரிக்கப்பட்டால், ஷை ஜமீன்களின் வருமானம், ஜமீன்தார் சர்க்காருக்கு செலுத்தவேண்டிய பேஷ்கஷ் தொகையைவிட குறைவாக இருக்கும் என்று தெரியவருகிறது. இந்த சாக்ஷியம் மறுக்கப்படவில்லை. தானேதார் தெரிவித்த புள்ளி விவரங்கள், ஜமீன் கணக்குகளில் இருந்தும், சர்க்கார் ரிஜிஸ்தர்களிலிருந்தும், எடுக்கப்பட்டமையால், அவைகளை ஆக்ஷேபிக்கமுடியாது. ஜமீன்களுக்கு, ரயத்துவாரி தீர்வைகள் அனுசரிக்கவேண்டுமென்பது, செயல் முறையில் பலிதமடையாதென்பதற்கு இது தக்க சாக்ஷியமாகும். அந்த விஷயத்தைப்பற்றி பிறிதொரு இடத்தில் விவரமாகத்தெரிவிக்கிறேன். பழைய பெத்தாபுரம் ஜமீன் சிதைவுற்றதின் காரணமாக, தற்போதுள்ள ஜமீன்தாரின் முன்னோர்கள், கபிலேஸ்வரபுரம், கேஸனகுர்ரு ஜமீன்களை விலைக்கு வாங்கினார்கள். பழைய பெத்தாபுரம் ஜமீனைச் சேர்ந்த சில கிராமங்களை, ஒரே ஏல விற்பனையில் சர்க்காரும் வாங்கினார்கள். ஷை கிராமங்களின் தீர்வைகளை சர்க்கார் உயர்த்தினார்களென்றும்; ஒரு கிராமத்தில் (இனவல்லி கிராமம்) 151 % உரைக்கும் வரி உயர்த்தப்பட்டதென்றும்; தானேலங்கா, ஜீவேமவரம், உதயர்லங்கா, கிராமங்களுக்கு, 1802-வது வருஷத்திலிருந்த தீர்வைகளைவிட, முறையே, 50%, 64%, 57% உயர்த்தப்பட்டதென்றும்; தான் எழுத்துமூலமாக கொடுத்த சாக்ஷியத்தின், A அனுபந்தத்தில், தானேதார் எடுத்துக் காட்டியிருக்கிறார். மேற்படி கிராமங்களில் அவ்வாறு தீர்வைகளை உயர்த்தியது, தவறல்லவென்று சர்க்கார் கருதினது ஒருபுறமிருக்க, 1802-வது வருஷத்தில் நிர்மாணிக்கப்பட்ட வரி விகிதங்கள் நிரந்தரமாக நிர்மாணிக்கப்பட்டவையென்றும், அவைகளை மாற்றமுடியாதென்றும், எனது சகாக்கள் நிலைநாட்ட முயல்வது தவறு என்பது மேற்கூறிய விஷயத்திலிருந்து தெள்ளிதிற் புலப்படுகிறது. ஏனெனில் அவ்வாறிருந்தால், நான் முன்பு கூறியவண்ணம் ஒரே விற்பனை நிபந்தனைக்கு உட்பட்ட கிராமங்களின் தீர்வையை சர்க்கார் உயர்த்தி இருக்கமாட்டார்கள்.

இந்த ஜமீனைப்பற்றி, சில சாக்ஷிகள் குற்றம் கூறி இருக்கிறார்கள். அவ்வாறு கூறுவதற்கு, கொஞ்சம் கூட ஆதாரமில்லை என்பது எனது அபிப்பிராயம். தனது பண்ணை நிலங்களாகிய சேரி அல்லது கம்மட்ட நிலங்களை அதிகரிப்பதற்கு, குடியானவர்கள் வரி பாக்கி கொடுக்கவில்லை என்று சொல்லி, ஜமீன்தார்கள் அவைகளை ஏலத்தில் எடுத்துக்கொள்கிறார் என்று சில சாக்ஷிகள் கூறி இருப்பது நம்பத்தக்கதல்ல. ஷை நிலங்களை, ஜமீன்தார் ஏலத்தில் எடுத்த பிறகும், குடியானவர்களுக்கு அவைகளை குத்தகைக்கு விடுகிறாரென்று 118-வது நெம்பர் சாக்ஷி ஒப்புக்கொண்டிருக்கிறார். மேலும் தன் வசத்தில் வந்த ரயத்தி நிலத்தை, ஜமீன்தார் தனது சேரி அல்லது கம்மட்ட நிலமாக சட்டப்படி மாற்ற முடியாது. ஏனெனில் இந்த நிலத்தை ஒரு குடியானவனுக்கு விட்டவுடன் ஷை குடியானவனுக்கு அந்த நிலத்தில் அனுபோக பாத்தியம் ஏற்பட்டு விடுகிறது. கீழ்மட்ட லங்காக்கள் வெகு அதிகமான தொகைகளுக்கு குத்தகைக்கு விடப்படுகின்றனவென்று சில சாக்ஷிகள் குறை கூறியிருக்கிறார்கள். இது சம்பந்தமாக, தானேதார் கொடுத்த சாக்ஷியம் குறிப்பிடத்தக்கது. சர்க்கார் கிராமங்களிற்கூட, கீழ்மட்ட லங்காக்கள் அவ்வப்போது ஏலத்தில் விடப்படுகின்றன. ஏலத்தில் அதிக தொகை கேட்பவர்களுக்கே அந்த நிலங்கள் விடப்படுகின்றன. இவ்வாறு லங்காக்களை ஏலத்தில் எடுக்கும் ஹிஜராதார்களுக்கு அவைகளில் அனுபோக பாத்தியம் கிடையாது. இந்த லங்காக்கள் நீரில் கழிவு அடையக்கூடியவையென்பதைப்பற்றியும், அவைகள் புதிதாக அமையும்பொழுது அவைகளை பண்படுத்துவதற்கும், பிறகு அபிவிருத்திசெய்து பராமரிப்பதற்கும் ஏற்படும் அதிக செலவுகளைப் பற்றியும், லங்காக்களின் கழிவான பாகங்களுக்கு குடியானவன் வரி கொடுக்க மறுப்பதைப்பற்றியும், லங்காக்கள் ஏற்பட்ட ஆரம்ப காலத்தில் அவைகளுக்குள்ள செழிப்பைப்பற்றியும், தானேதார், தனது சாக்ஷியத்தில் தெரிவித்திருக்கிறார். இந்த ஜமீன்களிலும், மற்ற ஜமீன்களிலும் லங்கா நிலங்களைப்பற்றிய காணியாட்சி முறையையும், குடியானவர்கள் தெரிவித்த முறை ஈடுகளுக்கு உண்மையான ஆதாரம் இல்லை என்பதையும், அறிய விரும்புவோர், தானேதார் சாக்ஷியத்தை கூர்ந்து கவனிக்கவேண்டும். 147-வது நெம்பர் சாக்ஷியைப்பற்றி இங்கு தெரி

வித்திருப்பது பிசகாகும். ஏனெனில், இந்த ஜமீனில் அவருக்கு யாதொரு சம்பந்தமும் இல்லை. இந்த ஜமீனில் உள்ள காடுகளில் குடியானவர்கள் முன்பு பணம் கொடுக்காமல், தங்கள் கால் நடைகளை மேய்த்து வந்தார்களென்று, 146 வது நெம்பர் சாக்ஷி கூறி இருப்பது உண்மையாயிருக்கமுடியாது.

கன்னிவாடி ஜமீன்.

இந்த ஜமீனைப்பற்றி, அறிக்கையில் எனது சகாக்கள் ஆராய்ந்திருக்கும் பல விஷயங்களில் முக்கிய மானது, அவர்கள் தெரிவித்த தத்துவங்களின்படி, ஜமீன்தாருக்கு சேரவேண்டிய வருமானமாகும். இதை முன்னிட்டு, 1344-வது பசலியில் இருந்த வருமானத்தையும், 1904-வது வருஷத்திற் கிடைத்த வருமானத் தையும் எனது சகாக்கள் ஒப்பிட்டுப்பார்க்கிறார்கள். அவர்கள் கூறும் தீர்மானங்களின்படி, சாசுவத பைசல் காலத்திலிருந்த தீர்வை விகிதங்கள் அறியப்பட வேண்டுமாயினும், 1802-வது வருஷத்திலிருந்த சாகுபடி செய்யப்பட்ட நில விஸ்தீர்ணத்தையும், அப்பொழுதிருந்த தீர்வை விகிதங்களையும் அறிக்கையிற் பல இடங் களில் தெரிவித்திருக்கிறார்கள். ஆனால் அவைகள் சம்பந்தமாக, தக்க புள்ளி விவரங்களைக் கொடுக்கவில்லை. இது சகஜமாக ஏற்படக்கூடிய காரியமே. ஏனெனில், எனக்குத் தெரிந்தவரை 1802-வது வருஷத்தில் சாகுபடிசெய்யப்பட்ட நில விஸ்தீர்ணத்தைத் தெரிவிக்கும் பத்திரங்களை தாக்கல் செய்யவேண்டுமென்று ஒரு ஜமீன்தாரும் கேட்கப்படவில்லை. 1802-வது வருஷத்திற்கு பிறகு சாகுபடி செய்யப்பட்ட நில விஸ்தீர்ணத் தைப்பற்றியும், தகவல்கள் கேட்கவில்லை. இது சம்பந்தமாக ஜமீன்தார்களை நேரே விசாரிக்காமலும் அவர்கள் கணக்குகள் முதலிய ஆதாரப் பத்திரங்களைத் தாக்கல் செய்ய போதிய வசதிகள் அளிக்காமலும், பெரும் பான்மை அங்கத்தினர்கள், வருமான அதிகரிப்பிற்கு, தங்களுக்குத் தோன்றிய காரணங்களை குறித்திருப்பது நியாயமல்ல. ஜமீன் வருமானம் அதிகரிப்பதற்கு முக்கிய காரணம், கரம்பை நிலங்கள் அதிகமாக சாகு படி செய்யப்பட்டதே என்பது ஜமீன்தார்களின் வாதமாகும். எங்களுக்கு தெரிந்தவரை, 1802-வது வருஷத் திய கணக்குகளைக்கொண்டும், அதற்கு முன்னிருந்த கணக்குகளைக் கொண்டும், அதற்கு சில வருஷங் களுக்குப்பின் இருந்த கணக்குகளைக் கொண்டும், இதை ஜமீன்தார்கள் வலியுறுத்தக்கூடும். 1904-வது வருஷத்திலிருந்த புள்ளி விவரங்களை ஆதாரமாகக் கொண்டால், 21,467 ஏக்கர்கள் தான் அதிகமாக சாகுபடி செய்யப்பட்டன என்று ஏற்படும். ஆனால் 1802-வது வருஷத்திய புள்ளி விவரங்களை அனுசரித்துப் பார்த்தால், அதற்கு அதிகமாக நிலங்கள் சாகுபடி செய்யப்பட்டனவென்பது தெரியவரும். ஆதலால் சாசுவத பைசல் விகிதத்தின்படி, ஜமீன்தாருக்குக் கிடைக்கக்கூடிய வருமானத்தைவிட 1937-வது வருஷத்தில் இரண்டு மடங்கான வருமானம் அவருக்கு கிடைத்திருக்கிறதென்று எனது சகாக்கள் கூறும் முடிவு, 1904-வது வருஷத்திய புள்ளி விவரங்கள்மீது ஆதாரப்பட்டிருக்கிறது. ஆதலின் அது தவறாகும். 1937-வது வருஷத் திற்கு, இந்த ஜமீனுடைய வருமானம்யென்று தெரிவித்திருக்கிற ரூ. 1,74,291-ல் மலைக் கிராமங்களிலிருந்து கிடைக்கும் வருமானமாகிய ரூ. 28,123-ம் அடங்கி இருக்கிறது. மலைக் கிராமங்கள் இந்த ஜமீனுக்கு ஒரு பிரத்தியேக அம்சமாகும். மேற்படி தொகை கணக்கிலிருந்து நீக்கப்பட்டால், ஒப்பிட்டுப்பார்ப்பதற்கு, ஜமீன் வருமானம் ரூ. 1,46,168 என்றுதான் ஏற்படும்.

எம். வெங்கடராமய்ய அப்பா ராவ்,
மிர்ஜாபுரம் ஜமீன்தார்.

1938-ம்௵ நவம்பர்மீ 14உ.

அறிக்கையில் குறிக்கப்பட்டுள்ள அனுபந்தங்களின் ஜாபிதா.

I அயின்-இ-அக்பரி.

II பிரிட்டிஷாரின் வருகை.

III சாசுவத பைசல் ஏற்பாட்டிற்குமுன் இருந்த ரெவின்யூ பரிபாலனம்.

IV சாசுவத ஏற்பாடு.

V குடியானவனுடைய பாகம்.

VI வரிச் சட்டங்கள்.

VII-A வட ஜில்லாக்களில் சாசுவத செட்டில்மெண்ட் ஏற்படுவது சம்பந்தமாக, கலெக்டர்களுக்கு அனுப்பிய குறிப்புகள்.

VII-B தென் ஜில்லாக்களில் சாசுவத செட்டில்மெண்ட் ஏற்படுவது சம்பந்தமாக, கலெக்டர்களுக்கு அனுப்பிய குறிப்புகள்.

VIII 1802–வது வருஷத்திய, 1822-வது வருஷத்திய, மதராஸ் ரெகுலேஷன்கள்.

IX பட்டா ரெகுலேஷன், அமுலில் எவ்வாறு நடந்து வருகிறதென்பதைப்பற்றி, ஒரு அறிக்கை தயாரிக்குமாறு கலெக்டர்களுக்கு அனுப்பிய சுற்றுக் கடிதம்.

X ரெவின்யூ ஆலோசனைகள் (1821).

XI சர் தாமஸ் மன்ரோ அவர்கள் குறிப்புகள்.

XII செண்ட் ஜார்ஜ் கோட்டை கவர்னருக்கு, கோர்ட் ஆவ் டைரெக்டர்ஸ் (லண்டன்) விடுத்த நிரூபம்.

XIII ரெவின்யூ போர்டு நடவடிக்கைகள் ந. 7743.

XIV காட்டு விதிகள்.

XV 1863-வது வருஷத்திய வரி வசூல் மசோதாவும், செலெக்ட் கமிட்டியின் இரண்டாவது அறிக்கையும்.

XVI வரி மாற்ற விகிதங்கள்.

XVII-1 ஸ்பெஷல் கமிஷன் நியமிக்கப்படுதல்.

XVII-2 ஸ்பெஷல் கமிஷன் அறிக்கையும், சர்க்கார் உத்தரவும்.

XVII-3 ஸ்பெஷல் கமிஷன் அறிக்கையும் மேற்றிசைப் பாளையங்களும்

XVII-4 சர்க்கார் உத்தரவு.

XVII-5 சர்க்கார் உத்தரவு—மேற்றிசைப் பாளையங்கள்.

XVII-6 சேலத்தைப் பற்றி ஸ்பெஷல் கமிஷன் அறிக்கை.

XVII-7 ஸ்பெஷல் கமிஷன் அறிக்கையின் மீது சர்க்காரின் உத்தரவு.

XVII-8 ஸ்பெஷல் கமிஷன் அறிக்கை, முதல் டிவிஷன் விசாகப்பட்டணம்.

XVII-9 முதல் டிவிஷன் (விசாகபட்டணம்) சாசுவத ஏற்பாட்டைப்பற்றி சர்க்கார் உத்தரவு.

XVII-10 விசாகபட்டணம் முதல் டிவிஷன் நிலங்களின் விற்பனை விளம்பரம்.

XVII-11 விசாகபட்டணம், முதல் டிவிஷன் நிலங்களின் விற்பனை நிபந்தனைகள்.

XVII-12 மசூலிபட்டணம், 3-வது, 4-வது டிவிஷன்களைப்பற்றி, ஸ்பெஷல் கமிஷன் அறிக்கை.

XVII-13 மசூலிபட்டணம் முதலாவது, மூன்றுவது, நான்காவது டிவிஷன்களின் சாசுவத ஏற்பாட்டைப் பற்றி சர்க்கார் உத்தரவு.

XVII-14 ராமநாதபுரம், சிவகங்கை, திருநெல்வேலி ஆகிய இவைகளைப்பற்றி ஸ்பெஷல் கமிஷன் அறிக்கை.

XVII-15 மசூலிபட்டணம் ஒன்றுவது, இரண்டாவது டிவிஷன்களிலுள்ள ஹாவலி நிலங்களைப்பற்றியும், விசாகப்பட்டணம் முதலாவது, இரண்டாவது ஹாவலி நிலங்களைப்பற்றியும்.

XVII-16 ஸ்பெஷல் கமிஷனின் மறைவு.

XVII-17 மசூலிபட்டணம் முதலாவது, இரண்டாவது டிவிஷன்களிலுள்ள ஹாவலி நிலங்களைப்பற்றி, ஸ்பெஷல் கமிஷன் செய்த அறிக்கையின் மீது சர்க்கார் உத்தரவு.

XVII-18 ஸ்பெஷல் கமிஷன் ஒழிந்த பிறகு ரெவினியூ போர்டுக்கு ஏற்பட்ட கடமைகளைத் தெரிவிக்கும் கடிதம் (ரெவினியூ போர்டுக்கு அனுப்பி-)

XVII-19 விசாகபட்டணம் இரண்டாவது டிவிஷனின் சாசுவத ஏற்பாட்டைப்பற்றி, ஸ்பெஷல் கமிஷன் அறிக்கை.

XVII-20 விசாகபட்டணம் இரண்டாவது டிவிஷன் செட்டில்மென்டைப்பற்றி, சர்க்கார் உத்திரவு.

XVII-21 கஞ்சத்தைப்பற்றி ஸ்பெஷல் கமிஷன் அறிக்கை.

XVII-22 கஞ்சம் ஸ்பெஷல் கமிஷன் அறிக்கை மீது சர்க்கார் உத்தரவு.

XVII-23 கிருஷ்ணகிரி டிவிஷனைப்பற்றி ஸ்பெஷல் கமிஷன் அறிக்கை.

XVII-24 கிருஷ்ணகிரி சாஸ்வத ஏற்பாட்டைப்பற்றி சர்க்கார் உத்தரவு.

XVII-25 திண்டுக்கல் பிரதேசத்தைப்பற்றி ஸ்பெஷல் கமிஷன் அறிக்கை.

XVII-26 திண்டுக்கல் செட்டில்மெண்ட்டைப்பற்றி சர்க்கார் உத்தரவு.

அறிக்கை தயாரிப்பதற்கு அனுகூலமாக இருந்த ரிகார்டுகளின் பட்டி.

தஸ்தாவேஜ் தொகுதி 3171-B 1938-ம்௵ ஜூன்௴ 1௳.

(1) ஜி.ஓ. ந. 4 (சட்டம்), 1903-ம்௵ ஜனவரி௴ 28௳.
(2) ஜி.ஓ. நெ. 83 (சட்டம்), 1896-ம்௵ டிசம்பர்௴ 1௳
(3) ஜி.ஓ. நெ. 85 (பொது), 1896-ம்௵ ஜனவரி௴ 16௳.
(4) ஜி.ஓ. நெ. 6266 (ரெவின்யூ), 1897-ம்௵ டிசம்பர்௴ 4௳.
(5) ஜி.ஓ. நெ. 6239 (ரெவின்யூ), 1897-ம்௵ டிசம்பர்௴ 3௳.
(6) ஜி.ஓ. நெ. 3076 (ரெவின்யூ), 1898-ம்௵ ஜூலை௴ 21௳.
(7) ஜி.ஓ. நெ. 2533 (ரெவின்யூ), 1898-ம்௵ ஜூன்௴ 16௳.
(8) ஜி.ஓ. நெ. 2396 (ரெவின்யூ), 1898-ம்௵ ஜூன்௴ 4௳.
(9) ஜி.ஓ. நெ. 2772 (ரெவின்யூ), 1898-ம்௵ ஜூலை௴ 1௳.
(10) ஜி.ஓ. நெ. 319 (ரெவின்யூ), 1897-ம்௵ மே௴ 12௳.
(11) ஜி.ஓ. நெ. 211 (ரெவின்யூ), 1898-ம்௵ ஏப்ரல்௴ 1௳.
(12) ஜி.ஓ. நெ. 1678 (ரெவின்யூ), 1898-ம்௵ ஏப்ரல்௴ 19௳.
(13) ஜி.ஓ. நெ. 1202 (ரெவின்யூ), 1898-ம்௵ மார்ச்சு௴ 9௳.
(14) ஜி.ஓ. நெ. 1188 (ரெவின்யூ), 1897-ம்௵ மார்ச்சு௴ 2௳.
(15) ஜி.ஓ. நெ. 4927 (ரெவின்யூ), 1898-ம்௵ செப்டம்பர்௴ 17௳.
(16) ஜி.ஓ. நெ. 189 (ரெவின்யூ), 1899-ம்௵ ஜனவரி௴ 12௳.
(17) சர்க்கார் நிரூபம் நெ. 11 (சட்டம்), 1896-ம்௵ டிசம்பர்௴ 19௳.
(18) ஜி.ஓ. நெ. 10 (சட்டம்), 1897-ம்௵ பிப்ரவரி௴ 13௳.
(19) ஜி.ஓ. நெ. 20 (சட்டம்), 1897-ம்௵ மார்ச்சு௴ 2௳.
(20) ஜி.ஓ. நெம்பர்கள் 89-A, 90, 91 (சட்டம்), 1897-ம்௵ நவம்பர்௴ 19௳.
(21) ஜி.ஓ. நெ. 92 (சட்டம்), 1897-ம்௵ டிசம்பர்௴ 25௳.
(22) ஜி.ஓ. நெ. 2026 (ரெவின்யூ), 1898-ம்௵ மே௴ 29௳.
(23) ஜி.ஓ. நெ. 2300 (ரெவின்யூ), 1898-ம்௵ மே௴ 27௳.
(24) ஜி.ஓ. நெ. 2525 (ரெவின்யூ), 1898-ம்௵ ஜூன்௴ 15௳.
(25) ஜி.ஓ. நெ. 14 (சட்டம்), 1898-ம்௵ மார்ச்சு௴ 17௳.
(26) ஜி.ஓ. நெ. 17 (சட்டம்), 1898-ம்௵ மார்ச்சு௴ 22௳.
(27) ஜி.ஓ. நெ. 30 (சட்டம்), 1898-ம்௵ மே௴ 14௳.
(28) ஜி.ஓ. நெ. 35 (சட்டம்), 1898-ம்௵ மே௴ 14௳.
(29) ஜி.ஓ. நெ. 41 (சட்டம்), 1898-ம்௵ ஜூன்௴ 11௳.
(30) ஜி.ஓ. நெ. 42 (சட்டம்), 1898-ம்௵ ஜூலை௴ 4௳.
(31) ஜி.ஓ. நெ. 69 (சட்டம்), 1898-ம்௵ அக்டோபர்௴ 31௳.
(32) ஜி.ஓ. நெ. 81 (சட்டம்), 1898-ம்௵ டிசம்பர்௴ 13௳.
(33) ஜி.ஓ. நெ. 2 (சட்டம்), 1899-ம்௵ ஜனவரி௴ 17௳.
(34) ஜி.ஓ. நெம்பர்கள் 12, 13 (சட்டம்), 1899-ம்௵ பிப்ரவரி௴ 16௳.
(35) ஜி.ஓ. நெ. 45 (சட்டம்), 1899-ம்௵ ஏப்ரல்௴ 13௳.
(36) ஜி.ஓ. நெ. 55 (சட்டம்), 1899-ம்௵ மே௴ 6௳.
(37) ஜி.ஓ. நெ. 97 (சட்டம்), 1899-ம்௵ செப்டம்பர்௴ 5௳.
(38) ஜி.ஓ. நெ. 107 (சட்டம்), 1899-ம்௵ அக்டோபர்௴ 13௳.
(39) ஜி.ஓ. நெ. 115 (சட்டம்), 1899-ம்௵ நவம்பர்௴ 4௳.
(40) ஜி.ஓ. நெ. 123 (சட்டம்), 1899-ம்௵ டிசம்பர்௴ 4௳.
(41) ஜி.ஓ. நெ. 131 (சட்டம்), 1899-ம்௵ டிசம்பர்௴ 16௳.
(42) ஜி.ஓ. நெ. 134 (சட்டம்), 1899-ம்௵ டிசம்பர்௴ 22௳.
(43) ஜி.ஓ. நெ. 2 (சட்டம்), 1900-ம்௵ ஜனவரி௴ 12௳.
(44) ஜி.ஓ. நெ. 4 (சட்டம்), 1900-ம்௵ ஜனவரி௴ 18௳.
(45) ஜி.ஓ. நெ. 60 (சட்டம்), 1900-ம்௵ ஆகஸ்டு௴ 6௳.
(46) ஜி.ஓ. நெம்பர்கள் 75, 76, (சட்டம்) 1900-ம்௵ நவம்பர்௴ 16௳.
(47) மதராஸ் குடியானவர்கள் பற்றிய நோக்கங்களையும், காரணங்களையும் விளக்கும் வாசகம்.
(48) ரெவின்யூ கோடு, 1802—1875-ம்—தாஸ் இயற்றியது.
(49) வரிச் சட்டங்களை திருத்தும் மசோதா சம்பந்தமான பத்திரங்கள்.
(50) மதராஸ் எஸ்டேட் நில மசோதா (1905) சம்பந்தமான பத்திரங்கள்.
(51) செய்ன்ட் ஜார்ஜ் கோட்டை கெஜெட் அனுபந்தம் (1863-ம் வருஷம் ஜனவரி முதல் ஜூன் வரை).

தஸ்தாவேஜ் தொகுதி 91-C/38-3.

(1) ஸ்பெஷல் கமிஷன் நடவடிக்கைகள் ந. 33, 34, 1902-ம்௵ ஏப்ரல்௴ 14௳.
(2) ஸ்பெஷல் கமிஷன் நடவடிக்கைகள் ந. 50, 51, 1802-ம்௵ மே௴ 12௳.
(3) ஸ்பெஷல் கமிஷன் நடவடிக்கைகள் ந. 96, 98, 1802-ம்௵ ஜூலை௴ 21௳.
(4) ஸ்பெஷல் கமிஷன் நடவடிக்கைகள் ந. 54, 56, 1802-ம்௵ செப்டம்பர்௴ 8௳.
(5) ஸ்பெஷல் கமிஷன் நடவடிக்கைகள் ந. 48, 49, 1802-ம்௵ செப்டம்பர்௴ 1௳.
(6) ஸ்பெஷல் கமிஷன் நடவடிக்கைகள் ந. 76, 1802-ம்௵ செப்டம்பர்௴ 22௳.
(7) ஸ்பெஷல் கமிஷன் நடவடிக்கைகள் ந. 100, 101, 1802-ம்௵ அக்டோபர்௴ 13௳.

தஸ்தாவேஜ் தொகுதி 91-C/ 38-3—தொடர்ச்சி	(8) ஸ்பெஷல் கமிஷன் நடவடிக்கைகள் ந. 140, 1802-ம்ஞு டிசம்பர்மீ 15உ. (9) ஸ்பெஷல் கமிஷன் நடவடிக்கைகள் ந. 53, 1803-ம்ஞு மார்ச்மீ 23உ. (10) ஸ்பெஷல் கமிஷன் நடவடிக்கைகள் ந. 59, 1803-ம்ஞு ஏப்ரல்மீ 6உ. (11) போர்டின் ஆலோசனைகள் ந. 98, 99, 1801-ம்ஞு டிசம்பர்மீ 28உ. (12) போர்டின் ஆலோசனைகள் ந. 16, 17, 1803-ம்ஞு டிசம்பர்மீ 27உ. (13) போர்டின் ஆலோசனைகள் ந. 13, 1804-ம்ஞு மேமீ 14உ. (14) போர்டின் ஆலோசனைகள் ந. 31, 1804-ம்ஞு ஜூன்மீ 21உ. (15) போர்டின் ஆலோசனைகள் ந. 26, 27, 1804-ம்ஞு ஜூன்மீ 25உ. (16) போர்டின் ஆலோசனைகள் ந. 9, 1804-ம்ஞு ஆகஸ்டுமீ 20உ. (17) போர்டின் ஆலோசனைகள் ந. 41, 1804-ம்ஞு செப்டம்பர்மீ 3உ. (18) போர்டின் ஆலோசனைகள் ந. 14, 15, 1804-ம்ஞு நவம்பர்மீ 1உ. (19) போர்டின் ஆலோசனைகள் ந. 15–17, 1806-ம்ஞு ஏப்ரல்மீ 28உ. (20) போர்டின் ஆலோசனைகள் ந. 12, 13, 1807-ம்ஞு ஜூலைமீ 16உ. (21) போர்டின் ஆலோசனைகள் ந. 14, 15, 1807-ம்ஞு ஜூலைமீ 7உ. (22) போர்டின் ஆலோசனைகள் ந. 20, 21, 1816-ம்ஞு ஜூன்மீ 20உ. (23) போர்டின் நடவடிக்கைகள் ந. 4625, 1861-ம்ஞு ஆகஸ்டுமீ 26உ. (24) போர்டின் நடவடிக்கைகள் ந. 357, 1862-ம்ஞு ஜனவரிமீ 15உ. (25) போர்டின் நடவடிக்கைகள் ந. 21, 1866-ம்ஞு ஜனவரிமீ 4உ. (26) போர்டின் நடவடிக்கைகள் ந. 128, 1866-ம்ஞு ஜூன்மீ 8உ. (27) போர்டின் நடவடிக்கைகள் ந. 1272, 1866-ம்ஞு பிப்ரவரிமீ 22உ. (28) போர்டின் நடவடிக்கைகள் ந. 2892, 1866-ம்ஞு ஏப்ரல்மீ 25உ. (29) போர்டின் நடவடிக்கைகள் ந. 4264, 1867-ம்ஞு ஜூலைமீ 3உ. (30) போர்டின் நடவடிக்கைகள் ந. 4282, 1868-ம்ஞு ஜூன்மீ 9உ. (31) ஜி.ஓ. ந. 408 (ரெவின்யூ), 1862-ம்ஞு பிப்ரவரிமீ 25உ. (32) ஜி.ஓ. ந. 2730 (ரெவின்யூ), 1865-ம்ஞு நவம்பர்மீ 10உ (33) ரெவின்யூ ஆலோசனையின் இணைப்புப் பத்திரங்கள், 1802-ம்ஞு ஆகஸ்டுமீ 31உ. (34) விசேஷ பொது நடவடிக்கைகள் தொகுதி நெ. 3 (பொது நெ. 17858). (35) விசேஷ பொது நடவடிக்கைகள் தொகுதி நெ. 12. (36) சாசுவத செட்டில்மெண்ட் தொகுதி ந. 20 (பொது ந. 17875). (37) சாசுவத செட்டில்மெண்ட், தொகுதி ந. 21 (பொது ந. 17876). (38) சாசுவத செட்டில்மெண்ட், தொகுதி ந. 22 (பொது ந. 17877). (39) சாசுவத செட்டில்மெண்ட், தொகுதி ந. 27 (பொது ந. 17882). (40) சாசுவத செட்டில்மெண்ட், தொகுதி ந. 28 (பொது ந. 17883). (41) சாசுவத செட்டில்மெண்ட், தொகுதி ந. 30 (பொது ந. 17885). (42) போர்டின் ஆலோசனைகள், தொகுதி ந. 348 (பொது ந. 14554). (43) போர்டின் ஆலோசனைகள், தொகுதி ந. 363 (பொது ந. 14569). (44) போர்டின் ஆலோசனைகள், தொகுதி ந. 384 (பொது ந. 14590). (45) போர்டின் ஆலோசனைகள் தொகுதி ந. 438 (பொது ந. 14654). (46) போர்டின் ஆலோசனைகள், தொகுதி ந. 448 (பொது ந. 14654). (47) மசூலிபட்டணம் ஜில்லா செலக்ஷன்கள்—ரீடின் அறிக்கை, பாகம் I (மறு பதிப்பு). (48) கஞ்சம் ஜில்லா மான்யூயல், பத்திரத் தொகுதி நெ. 486 சி-38, 1938-ம்ஞு ஜூன் 15உ.
பத்திரத் தொகுதி 3105 B/ 38-2, 1938-ம்ஞு மேமீ 31உ.	(49) இந்தியா பத்திரங்களின் சாராம்சங்கள் (நியாயாதி தொகுதி II நெ. A. S. O B. 73. இரண்டு தொகுதிகள்). (50) கிழக்கிந்தியா கச்சேரி ரிகார்டுகளின் சில சாராம்ஸப் பத்திரங்கள், தொகுதி III—பாகம் II, A.S.O. C.B. நெ. 74–A.
பத்திரத் தொகுதி 5152-E/ 37-3.	(51) ஸ்பெஷல் கமிஷன் காரியக் கிரமங்கள், தொகுதி II.
பத்திரத் தொகுதி 463–C, 1938-ம்ஞு ஜூன்மீ 11உ.	(52) விசாகபட்டணம் ஜில்லா கெஜட்டியர், தொகுதி I.
பத்திரத் தொகுதி 392–C/ 38, 1938-ம்ஞு ஜூன்மீ 3உ.	(53) சர்க்கூட் கமிட்டி கணக்குகள், தொகுதி 4–A.
பத்திரத் தொகுதி 3385-B/ 38-1, 1938-ம்ஞு ஜூன்மீ 16உ.	(54) ரிகார்டுகள் சம்பந்தமாக பாஸ்டர் எழுதிய ஆதாரங்கள். (55) சென்னை இராஜதானி சம்பந்தமான நிரந்தரத் தகவலை தெரிவிக்கும் மான்யூல்.
பத்திரத் தொகுதி 3289-B/ 38-1.	(56) ஜி.ஓ. நெ. 2350 (ரெவின்யூ), 1936-ம்ஞு அக்டோபர்மீ 31உ.
பத்திரத் தொகுதி 3207-B/ 38-1, 1938-ம்ஞு ஜூன்மீ 10உ.	(58) சாசுவத செட்டில்மெண்ட் சம்பந்தமாக அனுப்பவேண்டிய தீர்மானங்களின் குறிப்புகள்—வரிசை நெ. 1179 (பொது நெ. 19542). (59) கோதாவரி ஜில்லா ரிகார்டுகள் S. நெ. 890 (பொது நெ. 19245). (60) ரெவின்யூ போர்டின் காரியக் கிரமங்கள் (1799, S. நெ. 236) (பொது நெ. 14442).
பத்திரத் தொகுதி 1938-ம்ஞு ஜூன்மீ 13உ.	(61) போர்டின் ஆலோசனைகள், பழைய நெ. 5, 1825-ம்ஞு ஜூலைமீ 21உ. (62) போர்டின் ஆலோசனைகள் பழைய நெ. 6, 7, 1825-ம்ஞு ஏப்ரல்மீ 14உ. (63) போர்டின் ஆலோசனைகள் பழைய நெ. 55, 56, 1825-ம்ஞு மேமீ 2உ.

பத்திரத் தொகுதி 1938-ம் ஞூ ஜூன்மீ 13வ—தொடர்ச்சி.

(64) போர்டின் நடவடிக்கைகள், நெ. 470, 1892-ம் ஞூ ஆகஸ்ட்டுமீ 26வ (பதிப்பிக்கப்பட்டது).

(65) 1865-ம் ஞூத்திய மதராஸ் வரி வசூல் சட்டம் VIII அமுலில் வந்த காலத்திலிருந்து, 1896-வது வருஷம் மேமீ வரை, மேற்படி சட்ட சம்பந்தமான, சென்னை ஹைகோர்ட் செய்த தீர்ப்புகளின் சங்கிரமம்.

பத்திரத் தொகுதி 3708-E/38, 1938-ம் ஞூ ஜூன்மீ 8வ.

(66) ரெவினியூ போர்டின் நடவடிக்கைகள் (ரெவனியூ செட்டில்மெண்ட், நில ரிகார்டுகளும், விவசாயமும்), 1896-ம் ஞூ மார்ச்சுமீ, தொகுதி III.

பத்திரத் தொகுதி 3551-B/38-1, 1938-ம் ஞூ ஜூலைமீ 4வ.

(67) போர்டின் ஆலோசனைகள், 1797-ம் ஞூத்தின் தொகுதி (ந. 175).

பத்திரத் தொகுதி 3915-E, 1938-ம் ஞூ ஜூன்மீ 25வ.

(68) கோர்ட் ஆவ் டைரெக்டர்கள் விடுத்த அரசாங்க நிரூபம், 1795-ம் ஞூ ஜூன்மீ 10வ.

(69) போர்டின் நாளுவிதத் தொகுதி, 1799-ம் ஞூ ந. 190 (ந. 18228).

(70) போர்டின் நாளுவிதத் தொகுதி (1799), ந. 191 (ந. 18228).

(71) இங்கிலாந்திலிருந்து அனுப்பப்பட்ட ரெவினியூ நிரூபங்கள், 1815-ம் ஞூ ஏப்ரல்மீ 12வ.

(72) 1786-ம் ஞூத்திலிருந்து 1794-ம் வருஷம்வரை, ரெவின்யூ போர்டு கவர்னருக்கு அனுப்பிய பொது அறிக்கைகள்; அதில், 1786-ம் ஞூ செப்டம்பர்மீ 25வ-யில், ஜமீன்களைப்பற்றி போர்டு எழுதிய அறிக்கையும் அடங்கியிருக்கிறது.

(73) ரெவின்யூ போர்டின் பொது அறிக்கைகள் (1801-ம் ஞூ ஏப்ரல்மீ 20வயிலிருந்து 1804-ம் ஞூ பிப்ரவரிமீ 20வவரை) அதில், 1802-ம் ஞூ ஜனவரிமீ 1வ பொது அறிக்கையும் அடங்கி இருக்கிறது. (M.R.O. ந. 319).

(74) ரெவினியூ போர்டு குறிப்பு—1818-ம் ஞூ ஜனவரிமீ 5வ (போர்டின் நாளுவிதத் தொகுதிகள் நம்பர் 25–7 A/18299).

பத்திரத் தொகுதி 3653-B/38-2, 1938-ம் ஞூ ஜூலைமீ 9வ.

(75) இங்கிலாந்துக்கு அனுப்பிய அரசாங்கக் கடிதங்கள்—1767-ம் ஞூ முதல் 1769-ம்வருஷம்வரை—1767-ம் ஞூ மார்ச்சுமீ 8வயிலும், 1769-ம் ஞூ ஜூன்மீ 27வயிலும் செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலிருந்து அனுப்பப்பட்ட பொது நிரூபங்கள் தொகுதி நெ. 25-B.

பத்திரத் தொகுதி 873-C/38-2, 1938-ம் ஞூ ஜூலைமீ 25வ.

(76) திருச்சிராப்பள்ளி ஜில்லா ரிகார்டுகளின் சில சாராம்சங்கள் (அச்சடிக்கப்பட்ட புஸ்தகம், M.R.O. எ. எஸ். O.D. 358).

(77) போர்டு நடவடிக்கைகள் (சாராம்சங்கள்) ந. 128, 1866-ம் ஞூ ஜனவரிமீ 8வ.

(78) போர்டு நடவடிக்கைகள் (சாராம்சங்கள்) ந. 21, 1866-ம் ஞூ ஜனவரிமீ 4வ.

(79) போர்டு நடவடிக்கைகள் (சாராம்சங்கள்) ந. 357, 1862-ம் ஞூ ஜனவரிமீ 15வ.

(80) போர்டு நடவடிக்கைகள் (சாராம்சங்கள்) ந. 4282, 1868-ம் ஞூ ஜூன்மீ 9வ.

(81) ஜி.ஓ. நெ. 408, 1862-ம் ஞூ பிப்ரவரிமீ 25வ.

(82) ஜி.ஓ. நெ. 1223 (ரெவனியூ), 1906-ம் ஞூ அக்டோபர்மீ 20வ.

(83) போர்டு நடவடிக்கைகள் நெ. 10, 1816-ம் ஞூ ஏப்ரல்மீ 22வ.

(84) போர்டின் ஆலோசனைகள் நெ. 11, 1817-ம் ஞூ நவம்பர்மீ 21வ.

(85) ஸ்பெஷல் கமிஷன் நடவடிக்கைகள் ந. 47-47-A, 1802-ம் ஞூ செப்டம்பர்மீ 1வ.

(86) போர்டு நடவடிக்கைகள் நெ. 18-19, 1804-ம் ஞூ ஆகஸ்டுமீ 16வ.

(87) ஜி.ஓ. நெ. 143, 1906-ம் ஞூ பிப்ரவரிமீ 15வ.

(88) ஜி.ஓ. நெ. 960, 1906-ம் ஞூ ஆகஸ்டுமீ 14வ.

(90) போர்டு நடவடிக்கைகள் (தொகுதி) ந. 772—1817 (பொது ந. 14978).

(91) போர்டு நடவடிக்கைகள் (தொகுதி) ந. 740—1817 (பொது ந. (15497).

(92) போர்டு நடவடிக்கைகள் (தொகுதி) ந. 769—1817 (பொது ந. 14975).

(93) போர்டு நடவடிக்கைகள் (தொகுதி) ந. 764—1817 (பொது ந. 14970).

(94) போர்டு நடவடிக்கைகள் (தொகுதி) ந. 750—1817 (பொது ந. 14956).

பத்திரத் தொகுதி 4050-B/38, 1938-ம் ஞூ ஜூலைமீ 30வ.

(95) ஜி.ஓ. ந. 869 (ரெவின்யூ), 1870-ம் ஞூ ஜூன்மீ 13வ.

(96) ஜி.ஓ. ந. 1539 (ரெவன்யூ), 1870-ம் ஞூ அக்டோபர்மீ 11வ.

(97) ஜி.ஓ. ந. 337 (ரெவின்யூ), 1871-ம் ஞூ பிப்ரவரிமீ 24வ.

(98) இனும் சாராம்சங்கள்.

(99) ஜி.ஓ. ந. 329 (ரெவின்யூ), 1822-ம் ஞூ மார்ச்சுமீ 21வ.

(100) ஜி.ஓ. ந. 843 (ரெவின்யூ), 1883-ம் ஞூ ஜூலைமீ 11வ.

(101) ஜி.ஓ. ந. 1328 (ரெவின்யூ), 1883-ம் ஞூ அக்டோபர்மீ 23வ.

(102) போர்டு நடவடிக்கைகள் ந. 2235, 1872-ம் ஞூ மார்ச்சுமீ 25வ.

(103) ஜி.ஓ. ந. 302, 1872-ம் ஞூ பிப்ரவரிமீ 16வ.

(104) போர்டு நடவடிக்கைகள் ந. 1259, 1872-ம் ஞூ பிப்ரவரிமீ 20வ.

(105) போர்டு நடவடிக்கைகள் ந. 2774, 1849-ம் ஞூ ஏப்ரல்மீ 16வ.

(106) போர்டு நடவடிக்கைகள் ந. 29–30, 1849-ம் ஞூ அக்டோபர்மீ 25வ.

(107) போர்டு நடவடிக்கைகள் நெ. 91–92 (ஜி.ஓ. நெ. 583, 1872-ம் ஞூ ஏப்ரல்மீ 9வ).

பத்திரத் தொகுதி 1017-C/38, 1938-ம் ஆகஸ்ட்டுமீ 4உ.

(108) ஜி.ஓ. ந. 5112, 1871-ம் டிசம்பர்மீ 20உ.
(109) ஜி.ஓ. ந. 3312, 1871-ம் ஆகஸ்ட்டுமீ 7உ.
(110) ஜி.ஓ. ந. 2191, 1868-ம் மார்ச்சுமீ 26உ.
(111) ஜி.ஓ. ந. 38–39, 1848-ம் ஜனவரிமீ 20உ.
(112) ஜி.ஓ. ந. 43–44, 1848-ம் மார்ச்சுமீ 28உ.
(113) ஜி.ஓ. ந. 4–5, 1848-ம் மேமீ 15உ.
(114) ஜி.ஓ. ந. 32–33, 1849-ம் ஜனவரிமீ 11உ.
(115) ஜி.ஓ. ந. 2721, 1871-ம் ஜூலைமீ 5உ.
(116) ஜி.ஓ. ந. 24–25, 1849-ம் ஏப்ரல்மீ 23உ.
(117) ஜி.ஓ. ந. 9–10, 1849-ம் டிசம்பர்மீ 10உ.
(118) ஜி.ஓ. ந. 7557, 1865-ம் நவம்பர்மீ 27உ.
(119) போர்டு நடவடிக்கைகள் ந. 5088, 1866-ம் ஜூலைமீ 24உ.
(120) போர்டு நடவடிக்கைகள் ந. 15–16, 1848-ம் ஆகஸ்ட்டுமீ 24உ.
(121) போர்டு நடவடிக்கைகள் ந. 15–16, 1848-ம் அக்டோபர்மீ 30உ.
(122) போர்டு நடவடிக்கைகள் ந. 14–15, 1815-ம் ஏப்ரல்மீ 27உ.
(123) போர்டு நடவடிக்கைகள் ந. 1, 1815-ம் ஜூன்மீ 27உ.
(124) போர்டு நடவடிக்கைகள் ந. 9, 1815-ம் ஜூன்மீ 19உ.
(125) போர்டு நடவடிக்கைகள் ந. 26–27, 1815-ம் ஜூன்மீ 2உ.
(126) போர்டு நடவடிக்கைகள் ந. 26–27, 1815-ம் ஜூலைமீ 10உ.
(127) போர்டு நடவடிக்கைகள் ந. 3, 1815-ம் ஜூலைமீ 31உ.
(128) புங்கநூரைப்பற்றி, ராஸ்துரை எழுதிய இறுதி அறிக்கை. (A.S.O. D. 21).
(129) ஜி.ஓ. ந. 1994 (ரெவின்யூ), 1860-ம் அக்டோபர்மீ 30உ.
(130) சட்ட ரீதி நடவடிக்கைகள், தொகுதி IV, 1881-ம் அக்டோபரிலிருந்து டிசம்பர்வரை.
(131) சட்ட ரீதி நடவடிக்கைகள், தொகுதி III, 1881-ம் ஜூலையிலிருந்து செப்டம்பர் வரை.
(132) ஸ்பெஷல் கமிஷன் நடவடிக்கைகள், தொகுதி 4-A, 1802-ம் ஜூலைமீ 13உயிலிருந்து 1802-ம் ஜூலைமீ 27உ வரை.
(133) காங்கணகுடியைப்பற்றி கிரஹாம்துரை எழுதிய அறிக்கை நெ. 18355.
(134) போர்டின் ஆலோசனைகள் நெ. 5–6, 1803-ம் ஜூன்மீ 28உ.

பத்திரத் தொகுதி 3739-E/38.

(135) ஜி.ஓ. ந. 317 (ரெவின்யூ), 1857-ம் ஏப்ரல்மீ 2உ.
(136) இ.எம்.ஸி. நெ. 372–73 (ரெவின்யூ), 1857-ம் ஏப்ரல்மீ 22உ.
(137) ஜி.ஓ. ந. 554 (ரெவின்யூ), 1857-ம் ஜூன்மீ 5உ.
(138) ஜி.ஓ. ந. 626 (ரெவின்யூ), 1857-ம் ஜூலைமீ 4உ.
(139) ஜி.ஓ. ந. 729 (ரெவின்யூ), 1857-ம் ஜூலைமீ 22உ.
(140) ஜி.ஓ. ந. 921 (ரெவின்யூ), 1857-ம் செப்டம்பர்மீ 11உ.
(141) சர்க்கார் உத்தரவு நெ. 955, ரெவின்யூ, 1857-ம் செப்டம்பர்மீ 18உ.
(142) இங்கிலாந்துக்கு அனுப்பிய ரெவின்யூ நிரூபம் நெ. 5, 1858-ம் மார்ச்சுமீ 1உ.
(143) சர்க்கார் உத்தரவு ந. 1726 (ரெவின்யூ), 1858-ம் பிப்ரவரிமீ 24உ.
(144) போர்டு ஆலோசனைகள் ந. 86–87, 1857-ம் ஏப்ரல்மீ 4உ.
(145) போர்டு ஆலோசனைகள் ந. 253–54, 1857-ம் டிசம்பர்மீ 7உ.
(146) போர்டு ஆலோசனைகள் ந. 463–64, 1857-ம் ஜூலைமீ 15உ.
(147) போர்டு ஆலோசனைகள் ந. 694–95, 1857-ம் டிசம்பர்மீ 16உ.
(148) போர்டு ஆலோசனைகள் ந. 835–36, 1857-ம் டிசம்பர்மீ 18உ.
(149) போர்டு ஆலோசனைகள் ந. 845, 1857-ம் நவம்பர்மீ 19உ.
(150) போர்டு ஆலோசனைகள் ந. 1170–71, 1857-ம் டிசம்பர்மீ 24உ.
(151) போர்டு ஆலோசனைகள் நெ. 1303–05, 1817-ம் நவம்பர்மீ 27உ.
(152) இ.எம்.சி. ந. 704, ரெவின்யூ இலாகா, 1855-ம் ஜூன்மீ 11உ.
(153) இ.எம்.சி. ந. 30–31, ரெவின்யூ இலாகா, 1858-ம் பிப்ரவரிமீ 15உ (ஜி.ஓ. ந. 191, 1858-ம் பிப்ரவரிமீ 15உ).
(154) எ.எம்.சி. ந. 32, ரெவின்யூ இலாகா, 1858-ம் பிப்ரவரிமீ 15உ (ஜி.ஓ. ந. 192, 1858-ம் பிப்ரவரிமீ 15உ).
(155) ரெவினியூ ஆலோசனைகள், 1855 (M.R.O. ந. 842).
(156) சர்க்கார் உத்தரவு ந. 815, 1857-ம் ஆகஸ்ட்டுமீ 14உ.
(157) சர்க்கார் உத்தரவு ந. 709, 1858-ம் மேமீ 29உ.
(158) போர்டு நடவடிக்கைகள் ந. 1783, 1877-ம் ஏப்ரல்மீ 19உ (அசலும் அதன் இணைப்புகளும்).
(159) சர்க்கார் உத்தரவு ந. 3410 (ரென்வியூ), 1877-ம் டிசம்பர்மீ 17உ.
(160) சர்க்கார் உத்தரவு ந. 144 (ரெவின்யூ), 1889-ம் மார்ச்சுமீ 4உ.
(161) சர்க்கார் உத்தரவு ந. 784 (ரெவின்யூ), 1889-ம் செப்டம்பர்மீ 23உ.
(162) போர்டு நடவடிக்கைகள், தொகுதி, 1872-ம் ஜூன்மீ (M.R.O. ந. 177).

பத்திரத் தொகுதி 3739-E/38—தொடர்ச்சி.

(163) போர்டு நடவடிக்கைகள், தொகுதி, 1874 (M.R. 6. ந. 199).
(164) சர்க்கார் உத்தரவு ந. 145 (ரெவின்யூ), 1873-ம௵ பிப்ரவரி௴ 5௳.
(165) சர்க்கார் உத்தரவு ந. 1491 (ரெவின்யூ), 1875-ம௵ அக்டோபர்௴ 13௳.
(166) சர்க்கார் உத்தரவு ந. 976 (ரெவின்யூ), 1876-ம௵ ஜூலை௴ 20௳.
(167) சர்க்கார் உத்தரவு ந. 1145 (ரெவின்யூ), 1878-ம௵ ஜூலை௴ 23௳.
(168) போர்டு நடவடிக்கைகள் ந. 2931, 1879-ம௵ அக்டோபர்௴ 15௳.
(169) சர்க்கார் உத்தரவு ந. 140 (ரெவின்யூ), 1880-ம௵ பிப்ரவரி௴ 5௳.
(170) சர்க்கார் உத்தரவு ந. 939 (ரெவின்யூ), 1880-ம௵ ஆகஸ்ட்டு௴ 9௳.
(171) போர்டு நடவடிக்கைகளின் இணைப்புப் பத்திரங்கள் ந. 2849, 1864-ம௵ மே௴ 12௳.
(172) ரெவின்யூ நடவடிக்கைகள், தொகுதி, 1878-ம௵ எப்ரல்௴.
(173) போர்டு நடவடிக்கைகள், தொகுதி, 1888-ம௵ அக்டோபர்௴
(174) ஜி.ஓ. ந. 798, 1872-ம௵ மே௴ 14௳.
(175) போர்டு பத்திரங்களின் இணைப்புப்பத்திரங்கள் ந. 9586, 1876-ம௵ நவம்பர்௴ 8௳.
(176) ரெவின்யூ நடவடிக்கைகள், தொகுதி, 1878-ம௵ எப்ரல்௴.
(177) ரெவின்யூ நடவடிக்கைகள், தொகுதி, 1888-ம௵ அக்டோபர்௴.
(178) ரெவின்யூ நடவடிக்கைகள், தொகுதி, 1890-ம௵ செப்டம்பர்௴.
(179) ரெவின்யூ நடவடிக்கைகள், தொகுதி, 1889-ம௵ ஜூலை௴.
(180) ஜி.ஓ. ந. 527 (ரெவின்யூ), 1896-ம௵ அக்டோபர்௴ 13௳.
(181) ஜி.ஓ. ந. 298 (ரெவின்யூ), 1897-ம௵ மே௴ 4௳.
(182) ஜி.ஓ. ந. 606 (ரெவின்யூ), 1897-ம௵ ஜூலை௴ 22௳.
(183) ரெவின்யூ நடவடிக்கைகள், தொகுதி, 1893-ம௵ மே௴.
(184) ரெவின்யூ நடவடிக்கைகள், தொகுதி, 1881-ம௵ எப்ரல்௴.
(185) ரெவின்யூ நடவடிக்கைகள், தொகுதி, 1893-ம௵ ஜூலை௴.
(186) ரெவின்யூ நடவடிக்கைகள், தொகுதி, 1893-ம௵ ஜூலை௴.
(187) ஜி.ஓ. ந. 3 (ரெவின்யூ), 1894-ம௵ ஜனவரி௴ 8௳.
(188) ஜி.ஓ. ந. 383 (ரெவின்யூ), 1894-ம௵ மே௴ 30௳.
(189) ஜி.ஓ. ந. 263 (ரெவின்யூ), 1895-ம௵ மே௴ 11௳.
(190) ரெவின்யூ நடவடிக்கைகள், தொகுதி, 1864-ம௵ எப்ரல்௴.
(191) ரெவின்யூ நடவடிக்கைகள், தொகுதி, 1863-ம௵ அக்டோபர்௴.
(192) ரெவின்யூ நடவடிக்கைகள், தொகுதி, 1885-ம௵ ஜூலை௴.
(193) போர்டு நடவடிக்கைகள் நெ. 563, 1894-ம௵ பிப்ரவரி௴ 19௳.
(194) ஜி.ஓ. ந. 1289 (ரெவின்யூ), 1872-ம௵ செப்டம்பர்௴ 6௳.
(195) ஜி.ஓ. ந. 716 (ரெவின்யூ), 1872-ம௵ மே௴ 3௳.
(196) போர்டு நடவடிக்கைகள், 1878-ம௵ ஜூன்௴ (M.R.O. நெ. 245)
(197) ரெவின்யூ நடவடிக்கைகள், தொகுதி, நவம்பர், டிசம்பர், 1878.
(198) ஜி.ஓ. ந. 757 (ரெவின்யூ), 1902-ம௵ ஆகஸ்ட்டு௴ 25௳.
(199) ரெவின்யூ நடவடிக்கைகள், தொகுதி, 1886-ம௵ ஜூலை௴.
(200) ஜி.ஓ. ந. 1017 (ரெவின்யூ), 1886-ம௵ நவம்பர்௴ 22௳.
(201) ஜி.ஓ. ந. 659 (ரெவின்யூ), 1887-ம௵ ஜூலை௴ 8௳.
(202) ஜி.ஓ. ந. 755 (ரெவின்யூ), 1888-ம௵ நவம்பர்௴ 1௳.
(203) ஜி.ஓ. ந. 827 (ரெவின்யூ), 1889-ம௵ அக்டோபர்௴ 12௳.
(204) ஜி.ஓ. ந. 931 (ரெவின்யூ), 1893-ம௵ அக்டோபர்௴ 23௳.
(205) ரெவின்யூ நடவடிக்கைகள், தொகுதி, 1900-ம௵ ஆகஸ்ட்டு௴.
(206) ஜி.ஓ. ந. 453 (ரெவின்யூ), 1881-ம௵ மார்ச்சு௴ 16௳.
(207) ஜி.ஓ. ந. 876 (ரெவின்யூ), 1881-ம௵ ஜூன்௴ 3௳.
(208) ரெவன்யூ நடவடிக்விகள், தொகுதி, 1885-ம௵ எப்ரல்௴.
(209) ஜி.ஓ. ந. 502 (ரெவின்யூ), 1808-ம௵ ஜூலை௴ 21௳.
(210) ஜி.ஓ. ந. 78 (ரெவின்யூ), 1890-ம௵ ஜனவரி௴ 27௳.

பத்திரத் தொகுதி 3902-E (Pro. நெ. 3453-E/38).

பத்திரத் தொகுதி 3453-E 38 (3743-E/38-ம்).

போர்டு நடவடிக்கைகள், தொகுதி, 1861-ம௵ பிப்ரவரி௴.
(211) போர்டு நடவடிக்கைகள், தொகுதி, 1861-ம௵ ஜூன்௴.
(212) ரெவின்யூ நடவடிக்கைகள், தொகுதி, 1865-ம௵ எப்ரல்௴.
(213) போர்டு நடவடிக்கைகள், தொகுதி, 1865-ம௵ மே௴.
(214) ரெவின்யூ நடவடிக்கைகள், தொகுதி, ஆகஸ்ட்டு௴ 28௳.
(215) ஜி.ஓ. ந. 2013 (ரெவின்யூ), 1872-ம௵ எப்ரல்௴, மே௴.
(216) ரெவின்யூ நடவடிக்கைகள் (தொகுதி), 1870-ம௵ மார்ச்சு௴ (M.R. 6. நெ.
(217) போர்டு நடவடிக்கைகள், 146).
தொகுதி, 1862-ம௵ அக்டோபர்௴
(218) போர்டு நடவடிக்கைகள், (M.R. 6. ந. 57).
தொகுதி, 1864-ம௵ செப்டம்பர்௴.
(219) ரெவன்யூ நடவடிக்கைகள், தொகுதி, 1872-ம௵ ஜூலை௴ (M.R. 6.
(220) போர்டு நடவடிக்கைகள், ந. 174).
தொகுதி, 1873-ம௵ ஜூலை௴ (M.R. 6,
(221) போர்டு நடவடிக்கைகள், ந. 186).
ஜி.ஓ. ந. 267 (ரெவின்யூ), 1873-ம௵ மார்ச்சு௴ 6௳.
(222) ஜி.ஓ. ந. 203 (ரெவின்யூ), 1874-ம௵ பிப்ரவரி௴ 13௳.
(223) போர்டு நடவடிக்கைகள், தொகுதி, 1867-ம௵ அக்டோபர்௴.
(224)

பத்திரத் தொகுதி 3453-E/38, (3743-E/38-ம்)—தொடர்ச்சி.

(225) ஜி.ஒ. ந. 1427 (ரெவின்யூ), 1868-ம்ஸ்ரீ மேமீ 20உ.
(226) போர்டு நடவடிக்கைகள், தொகுதி, 1859-ம்ஸ்ரீ செப்டம்பர்மீ (M.R.O. நெ. 20).
(227) ரெவின்யூ நடவடிக்கைகள், தொகுதி, 1860-ம்ஸ்ரீ அக்டோபர்மீ.
(228) ரெவின்யூ நடவடிக்கைகள், 1887-ம்ஸ்ரீ டிசம்பர்மீ.
(229) ரெவின்யூ நடவடிக்கைகள் தொகுதி, ஜனவரி, பிப்ரவரி 1876.
(230) ரெவின்யூ நடவடிக்கைகள், 1875-ம்ஸ்ரீ ஜனவரி, பிப்ரவரிமீ (M.R.O. ந. 13).
(231) போர்டு நடவடிக்கைகள் தொகுதி, 1876-ம்ஸ்ரீ டிசம்பர்மீ (M.R.O. ந. 227).
(232) போர்டு நடவடிக்கைகள் தொகுதி, 1874-ம்ஸ்ரீ அக்டோபர்மீ (M.R.O. ந. 201).
(233) ஜி.ஒ. ந. 541, ரெவின்யூ, 1877-ம்ஸ்ரீ பிப்ரவரிமீ 6உ.

பத்திரத் தொகுதி 4241-B/38, 1938-ம்ஸ்ரீ ஆகஸ்ட்டுமீ 8உ.

(234) ஜி.ஒ. ந. 1824 (ரெவின்யூ), 1860-ம்ஸ்ரீ அக்டோபர்மீ 9உ.
(235) ஜி.ஒ. ந. 950 (ரெவின்யூ), 1860-ம்ஸ்ரீ ஜூன்மீ 8உ.
(236) உத்தரவு ந. 784 (ரெவின்யூ), 1859-ம்ஸ்ரீ ஜூன்மீ 14உ.
(237) உத்தரவு ந. 690 (ரெவின்யூ), 1859-ம்ஸ்ரீ மேமீ 20உ.
(238) உத்தரவு ந. 729 (ரெவின்யூ), 1859-ம்ஸ்ரீ மேமீ 30உ.
(239) ஜி.ஒ. ந. 1069 (ரெவன்யூ), 1858-ம்ஸ்ரீ ஆகஸ்ட்டுமீ 9உ.
(240) ஜி.ஒ. ந. 1531 (ரெவன்யூ), 1858-ம்ஸ்ரீ நவம்பர்மீ 16உ.
(241) ஜி.ஒ. ந. 1533 (ரெவன்யூ)1858-ம்ஸ்ரீ நவம்பர்மீ 16உ.

பத்திரத் தொகுதி 228-C ..

(242) சர்கூட் கமிட்டி கணக்குகள், தொகுதி 3-A.
(243) சர்கூட் கமிட்டி கணக்குகள், தொகுதி 3-B.
(244) சர்கூட் கமிட்டி கணக்குகள், தொகுதி 4-B.

பத்திரத் தொகுதி 3766-B ..

(245) போர்டின் ஆலோசனைகள், தொகுதி ந. 305, 1801-ம் வருஷம்.

ரெவின்யூ 1017-சி/38-6, 1938-ம்ஸ்ரீ ஆகஸ்ட்டுமீ 15உ.

(246) போர்டு நடவடிக்கைகள் ந. 3–4, 1789-ம்ஸ்ரீ ஜனவரிமீ 3உ.
(247) போர்டு நடவடிக்கைகள் ந. 5, 1789-ம்ஸ்ரீ மார்ச்சுமீ 9உ.
(248) போர்டு நடவடிக்கைகள் ந. 1–2, 1789-ம்ஸ்ரீ எப்ரல்மீ 14உ.
(249) போர்டு நடவடிக்கைகள் ந. 1–2, 1789-ம்ஸ்ரீ எப்ரல்மீ 27உ.
(250) போர்டு நடவடிக்கைகள் ந. 1, 1789-ம்ஸ்ரீ மேமீ 7உ.
(251) போர்டு நடவடிக்கைகள் ந. 2–3, 1789-ம்ஸ்ரீ மேமீ 14உ.
(252) போர்டு நடவடிக்கைகள் ந. 4, 1789-ம்ஸ்ரீ மேமீ 30உ.
(253) போர்டு நடவடிக்கைகள் ந. 4–5, 1789-ம்ஸ்ரீ ஜூன்மீ 1உ.
(254) போர்டு நடவடிக்கைகள் ந. 9, 1789-ம்ஸ்ரீ ஜூன்மீ 5உ.
(255) போர்டு நடவடிக்கைகள் ந. 10, 1789-ம்ஸ்ரீ ஜூன்மீ 8உ.
(256) போர்டு நடவடிக்கைகள் ந. 32–33, 1789-ம்ஸ்ரீ ஜூன்மீ 22உ.
(257) போர்டு நடவடிக்கைகள் ந. 1, 1789 ம்ஸ்ரீ ஜூன்மீ 25உ.
(258) போர்டு நடவடிக்கைகள் ந. 7–8, 1789-ம்ஸ்ரீ ஜூன்மீ 29உ.
(259) போர்டு நடவடிக்கைகள் ந. 3–4, 1789-ம்ஸ்ரீ ஜூலைமீ 2உ.
(260) போர்டு நடவடிக்கைகள் ந. 3, 1789-ம்ஸ்ரீ ஜூன்மீ 9உ.
(261) போர்டு நடவடிக்கைகள் ந. 8–9, 1789-ம்ஸ்ரீ ஜூலைமீ 13உ.
(262) போர்டு நடவடிக்கைகள் ந. 4, 1789-ம்ஸ்ரீ ஜூலைமீ 23உ.
(263) போர்டு நடவடிக்கைகள் தாகுதி, S நெ. 14231.
(264) ரெவின்யூ ஆலோசனைகள் தொகுதி, 1802 நெ. 116 (உதிரி கடிதங்கள்).

பத்திரத் தொகுதி 4345-B/38, 1938-ம்ஸ்ரீ ஆகஸ்ட்டுமீ 15உ

(265) செயின்ட் ஜார்ஜ் கோட்டை கெஜெட் தொகுதி, 1865-ம்ஸ்ரீ ஜூலைமீயி லிருந்து டிசம்பர் வரை (அனுபந்தம்).

பத்திரத் தொகுதி 3040-B-1938-ம்ஸ்ரீ ஜூலைமீ 23உ.

(266) போர்டின் நடவடிக்கைகள், 1909-ம்ஸ்ரீ ஜூலைமீ தொகுதி VII.
(267) ஸ்பெஷல் கமிஷன். 88, 1802-ம்ஸ்ரீ ஜூலைமீ 8உ.

பத்திரத் தொகுதி 3922–B, 1938-ம்ஸ்ரீ ஜூலைமீ 20உ.

(268) ஆலோசனைக் குறிப்புகளின் சட்ட சாராம்சம்.
(269) சட்ட ரீதி ஆலோசனை ந. (2), 1802-ம்ஸ்ரீ ஜூலைமீ 13உ.
(270) சட்டரீதி இ.எம்.சி. ந. 318, 1802-ம்ஸ்ரீ நவம்பர்மீ 5உ.

பத்திரத் தொகுதி 1137-C/38.

(271) செட்டில்மெண்டு ரிக்கார்டு XIII, தொகுதி 18.

பத்திரத் தொகுதி 3008-B/38.

(273) மதராஸ் ஐகோர்ட்டு தீர்ப்பு, தொகுதி 5–8–1 புஸ்தகம்.
(274) ஐ.எல்.ஆர். தொகுதி XXI.
(275) ஐ.எல்.ஆர். தொகுதி XVIII.
(276) பரிபாலனத்தைப்பற்றி லாலி யெழுதிய குறிப்புகள்.
(277) நிரந்தர பத்திரத் தொகுதி: மதராஸ் குடியானவர்கள் சட்டம்—பத்திர தொகுதி 1.
(278) செயின்ட் ஜார்ஜ் கோட்டை கெஜெட், 1905-ம்ஸ்ரீ மார்ச்சுமீ 17உ.

பத்திரத் தொகுதி 2288-B/38.

(279) ஐக்கிய மாகாண குடியானவர்கள் மசோதா.
(280) குடியானவர்களுடைய நிலமையைச் சீர்திருத்துவதைப்பற்றியும் நிலவரி சீர்திருத்தத்தைப்பற்றியும் சர்க்கார் தீர்மானங்கள்.

பத்திரத் தொகுதி 3490-B, 1938-ம்ஸ்ரீ ஜூன்மீ 24உ.

(281) ஸ்பெஷல் கமிஷன் நடவடிக்கைகள் நெ. 69, 1802-ம்ஸ்ரீ செப்டம்பர்மீ 15உ.

பத்திரத் தொகுதி 3363-E, 1938-ம்ஸ்ரீ மேமீ 16உ.

(282) அயின்-இ-அக்பரி தொகுதி I.
(283) அயின்-இ-அக்பரி, தொகுதி II.

பத்திரத் தொகுதி 2774-B/38, 1938-ம்ஸ்ரீ மேமீ 14உ.

(284) தஞ்சாவூர் ஜில்லா கெஜட்டிர், தொகுதி II, 1933.
(285) ராமநாதபுரம் ஜில்லா கெஜட்டிர், தொகுதி II, 1929.
(286) ராமநாதபுரம் ஜில்லா கெஜட்டிர், தொகுதி III, 1933.
(287) பெல்லாரி ஜில்லா கெஜட்டிர், தொகுதி I, 1916.
(288) பெல்லாரி ஜில்லா கெஜட்டிர், தொகுதி II, 1930.
(289) பெல்லாரி ஜில்லா கெஜட்டிர், தொகுதி III, 1933.
(290) கஞ்சம் ஜில்லா கெஜட்டிர், தொகுதி II, 1930.
(291) கஞ்சம் ஜில்லா கெஜட்டிர், தொகுதி III, 1934.

பத்திரத் தொகுதி 2774-B/38, 1938-ம் ௵ மேமீ 14௳—தொடர்ச்சி.

(292) கடப்பா ஜில்லா கெஜட்டிர், தொகுதி I, 1915.
(293) கடப்பா ஜில்லா கெஜட்டிர், தொகுதி II, 1930.
(294) கடப்பா ஜில்லா கெஜட்டிர், தொகுதி III, 1933.
(295) குண்டூர் ஜில்லா கெஜட் ர், தொகுதி II, 1929.
(296) குண்டூர் ஜில்லா கெஜட்டிர், தொகுதி III, 1933.
(297) கிருஷ்ணு ஜில்லா கெஜட்டிர், தொகுதி II, 1934.
(298) கோயம்புத்தூர் ஜில்லா கெஜட்டிர், தொகுதி II, 1933.
(299) கர்நூல் ஜில்லா கெஜட்டிர், தொகுதி II, 1928.
(300) கர்நூல் ஜில்லா கெஜட்டிர், தொகுதி III, 1932.
(301) நெல்லூர் ஜில்லா கெஜட்டிர், தொகுதி II, 1929.
(302) நெல்லூர் ஜில்லா கெஜட்டிர், தொகுதி III, 1932.
(303) செங்கல்பட்டு ஜில்லா கெஜட்டிர், தொகுதி II, 1928.
(304) செங்கல்பட்டு ஜில்லா கெஜட்டிர், தொகுதி III, 1933.
(305) தென் ஆற்காடு ஜில்லா கெஜட்டிர், தொகுதி II, 1932.
(306) சேலம் ஜில்லா கெஜட்டிர், தொகுதி II, 1932.
(307) விசாகப்பட்டணம் ஜில்லா கெஜட்டிர், தொகுதி II, 1935.
(308) திருச்சிறுப்பள்ளி ஜில்லா கெஜட்டிர், தொகுதி II, 1931.
(309) திருச்சிறுப்பள்ளி ஜில்லா கெஜட்டிர், தொகுதி III, 1933.
(310) நீலகிரி ஜில்லா கெஜட்டிர், தொகுதி II, 1928.
(311) நீலகிரி ஜில்லா கெஜட்டிர், தொகுதி III, 1933.
(312) திருநெல்வேலி ஜில்லா கெஜட்டிர், தொகுதி I, 1917.
(313) திருநெல்வேலி ஜில்லா கெஜட்டிர், தொகுதி II, 1934.
(314) சித்தூர் ஜில்லா கெஜட்டிர், தொகுதி II, 1928.
(315) சித்தூர் ஜில்லா கெஜட்டிர், தொகுதி III, 1932.
(316) கிழக்கு கோதாவரி ஜில்லா கெஜட்டிர், தொகுதி II, 1935.
(317) மேற்கு கோதாவரி ஜில்லா கெஜட்டிர், தொகுதி II, 1934.
(318) மலபார் ஜில்லா கெஜட்டிர், தொகுதி II, 1933.
(319) அனந்தப்பூர் ஜில்லா கெஜட்டிர், தொகுதி II, 1930.
(320) அனந்தப்பூர் ஜில்லா கெஜட்டிர், தொகுதி III, 1933.
(321) வட ஆற்காடு ஜில்லா கெஜட்டிர், தொகுதி II, 1929.
(322) வட ஆற்காடு ஜில்லா கெஜட்டிர், தொகுதி III, 1933.

பத்திரத் தொகுதி 2774-B/38, 1938-ம் ௵ மேமீ 11௳.

(323) மதுரை ஜில்லா கெஜட்டிர், தொகுதி I, 1906.
(324) அனந்தபூர் ஜில்லா கெஜட்டிர், தொகுதி I, 1905.
(325) தென் ஆற்காடு ஜில்லா கெஜட்டிர், தொகுதி I, 1906.
(326) திருச்சிறுப்பள்ளி ஜில்லா கெஜட்டிர், தொகுதி I, 1907.
(327) மலபார், அன்ஜன்கோ கெஜட்டீர், தொகுதி I, 1908.
(328) நீலகிரி ஜில்லா கெஜட்டிர், தொகுதி I, 1908.
(329) கிழக்கு கோதாவரி ஜில்லா கெஜட்டிர், 1879.
(330) திருநெல்வேலி ஜில்லா சரித்திரம், 1881.
(331) கடப்பா மான்யூயல், 1875.
(332) கர்நூல் மான்யூயல், 1886.
(333) சேலம் ஜில்லா கெஜட்டிர், தொகுதி I (பாகம் I), 1918.
(334) சேலம் ஜில்லா கெஜட்டிர், தொகுதி I (பாகம் II), 1918.
(335) தஞ்சாவூர் ஜில்லா கெஜட்டிர், தொகுதி I, 1915.
(336) நெல்லூர் ஜில்லா மான்யூயல், 1868.
(337) மலபார் ஜில்லா மான்யூயல், 1906.
(338) சேலம் ஜில்லா மான்யூயல், தொகுதி I, 1883.
(339) சேலம் ஜில்லா மான்யூயல், தொகுதி II, 1883.
(340) தென் ஆற்காடு ஜில்லா மான்யூயல்.
(341) நீலகிரி ஜில்லா மான்யூயல், தொகுதி I, 1878.
(342) நீலகிரி ஜில்லா மான்யூயல், தொகுதி II, 1880.
(343) திருச்சிறுப்பள்ளி ஜில்லா மான்யூயல், பாகம் I, 1878.
(344) திருச்சிறுப்பள்ளி ஜில்லா மான்யூயல், பாகம் II.
(345) வட ஆற்காடு ஜில்லா மான்யூயல், தொகுதி I, 1895.
(346) வட ஆற்காடு ஜில்லா மான்யூயல், தொகுதி II, 1894.
(347) ராமநாதபுரம் ஜில்லா மான்யூயல், 1889.
(348) கோயம்புத்தூர் ஜில்லா மான்யூயல், 1887.
(349) கோயம்புத்தூர் ஜில்லா மான்யூயல், 1887.
(350) செங்கற்பட்டு ஜில்லா மான்யூயல், 1879.
(351) ரெவின்யூ போர்டு நடவடிக்கைகள் (நிலவரியும் செட்டில்மெண்டும்). 1831-ம் ௵ டிசம்பர்மீ 31௳ R.E. வரைக்கும்.

பத்திரத் தொகுதி 3462-B/38-1, 1938-ம் ௵ ஜூன்மீ 22௳.

(352) 1823-ம் ௵த்தின் ரெவின்யூ ஆலோசனைகள் (M.R.O. நெ. 287).
(353) 1835-ம் ௵த்திய பொருளாதார ஆலோசனைகள் (M.R.O. நெ. 55).
(354) 1865-ம் ௵த்திய செண்ட் ஜார்ஜ் கோட்டை கெஜட், ஜனவரி முதல் ஜூன் அனுபந்தம் வரை (M.R.O. நெ. 96).
(355) 1864-ம் ௵த்திய செண்ட் ஜார்ஜ் கோட்டை கெஜட், அக்டோபர் முதல் டிசம்பர் அனுபந்தம் வரை (M.R.O. நெ. 91).

பத்திரத் தொகுதி 3653-B/38-1 1938-ம் ௵ ஜூலைமீ 7௳.

(358) இங்கிலீஷ் சட்டம், இரண்டாவது திருத்தியமைக்கப்பட்ட பதிப்பு தொகுதி II (A.D. 1717—1800).
(359) வங்காளக் குடியானவர்களின் சட்டம் (1835), 1933-ம் ௵ செப்டம்பர்மீ 1௳ வரை திருத்தி அமைக்கப்பட்டபடி.
(360) பம்பாய் சட்டங்கள், 1921.
(361) பம்பாய் சட்டங்கள், 1929.
(362) பம்பாய் சட்டம் V (1879).

பத்திரத் தொகுதி (சட்டரீதி) 5668-1, 1938-ம் ஸு ஆகஸ்ட்டுமீ 22உ.

(363) மதராஸ் சட்டம் II (1869).

பத்திரத் தொகுதி 3620-B, 1937-ம் ஸு ஆகஸ்ட்டுமீ 18உ.

(406) 1898-ம் ஸுத்திய மதராஸ் குடியானவர்களின் சம்பந்தமான நிரந்தர பத்திரத் தொகுதி (பத்திரத் தொகுதி நெ. 1).

(407) 1905-ம் ஸுத்திய மதராஸ் எஸ்டேட் நிலச்சம்பந்தமான சர்க்கார் பத்திரங்கள்.

(408) 1909-ம் ஸுத்திய மதராஸ் சட்டம் IV சம்பந்தமான சர்க்கார் பத்திரங்கள் (பத்திர தொகுதி நெ. III).

(409) இறுதியில், 1934-ம் ஸுத்திய மதராஸ் சட்டம் VIII ஆன மதராஸ் எஸ்டேட் நில திருத்த மசோதா நெ. IV (1931) சம்பந்தமான சர்க்கார் பத்திரங்கள் ; பத்திரத் தொகுதி நெ. IV.

(410) மேன்மை தங்கிய மே. த. கவர்னர் அவர்களின் அனுமதி பெற்ற 1934-ம் ஸுத்திய மதராஸ் எஸ்டேட் நிலத் திருத்த மசோதா (1934-ம் ஸுத்திய மசோதா நெ. 10) சம்பந்தமான சர்க்கார் பத்திரங்கள் (பத்திர தொகுதி நெ. V).

(411) முடிவில் 1936-ம் ஸுத்திய மதராஸ் சட்டம் VI ஆன மதராஸ் எஸ்டேட் நில மசோதா (1935-ம் ஸுத்திய திருத்த மசோதா ; அதாவது 1935-ம் ஸுத்திய மசோதா நெ. 10) சம்பந்தமான சர்க்கார் பத்திரங்கள் (பத்திரத் தொகுதி நெ. VI).

(412) முடிவில் 1936-வது வருஷத்திய சட்டம் XVIII ஆன 1936-ம் ஸுத்திய மதராஸ் எஸ்டேட் நில திருத்த மசோதா (1936-ம் ஸுத்திய மசோதா நெ. 2).

(413) மதராஸ் எஸ்டேட் நிலச்சட்டம் (உவமைப் பத்திகளுடன் (1909-ம் ஸுத்திய மதராஸ் சட்டம் IV-ஆல் திருத்தம் செய்யப்பட்ட, 1908-ம் ஸுத்திய மதராஸ் சட்டம் I) பத்திரத் தொகுதி நெ. VIII.

பத்திரத் தொகுதி 3054-B/38-1, 1938-ம் ஸு மேமீ 27உ.

(414) நிரந்தரப் பத்திரத் தொகுதி IX (1908-ம் ஸுத்தின் மதராஸ் எஸ்டேட் நில சட்டத்திற்கு ந்த விதிகளைத் தெரிவிக்கும் சர்க்கார் உத்தரவு.

(415) நிரந்தரப் பத்திரத் தொகுதி X (1908-ம் ஸுத்திய மதராஸ் எஸ்டேட் நிலச்சட்டம் கிரியாம்சையில் எவ்வாறு நடக்கிறதென்பதைக் குறித்து சில அறிக்கைகள்.,

(416) நிரந்தரப் பத்திரத் தொகுதி XI (1908-ம் ஸுத்திய மதராஸ் எஸ்டேட் நிலச் சட்டம் I.

மதராஸ் ரிகார்டு ஆபிஸிலிருந்து நேராக வந்த பத்திரத் தொகுதி.

(417) ஸ்பெஷல் கமிஷன் நடவடிக்கைகள், தொகுதி 13.
(418) ஸ்பெஷல் கமிஷன் நடவடிக்கைகள், தொகுதி 9.
(419) ஸ்பெஷல் கமிஷன் நடவடிக்கைகள், தொகுதி 8.
(420) ஸ்பெஷல் கமிஷன் நடவடிக்கைகள், தொகுதி 7.
(421) ஸ்பெஷல் கமிஷன் நடவடிக்கைகள், தொகுதி 6.
(422) ரெவன்யூ இலாகா—சர்க்கார் கடிதங்களின் சுருக்கம், 1786—1830.

ரெவன்யூ காரியதரிசியிடமிருந்து மந்திரியாருக்குக் கிடைத்த பத்திரத் தொகுதிகள்.

(423) பிரதேசங்கள் சம்பந்தமான ரிஜிஸ்தர்—செங்கற்பட்டு ஜில்லா, பொன்னேரி, திருவள்ளூர் தாலூகாவில், திருப்பதி தேவஸ்தானத்தைச் சேர்ந்த கச்சிறுடு தாலூகா.

(424) ந. I சர்வே பார்ட்டி—கிராமப் பிரதேசங்கள் சம்பந்தமான ரிஜிஸ்டர் (ஜில்லா—நெல்லூர்—மல்லம் தாலூகா வெங்கடகிரி).—

(425) ந. II சர்வே பார்ட்டி—கிராமப் பிரதேசங்கள் சம்பந்தமான ரிஜிஸ்டர் —சித்தூர் ஜில்லா—அக்கூர் தாலூகா—வெங்கடகிரி.

(426) ந. II சர்வே பார்ட்டி—கிராமப் பிரதேசங்கள் சம்பந்தமான ரிஜிஸ்டர் —குண்டூர் ஜில்லா—வெல்லூர் தாலூகா (வெங்கடகிரி).

(427) நெ. II சர்வே பார்டி—கிராமப் பிரதேசங்கள் சம்பந்தமான ரிஜிஸ்தர்—நெல்லூர் ஜில்லா—போலூர் தாலூகா (வெங்கடகிரி).

(428) ந. II சர்வே பார்டி—கிராமப் பிரதேசங்கள் சம்பந்தமான ரிஜிஸ்ர்—நெல்லூர் ஜில்லா—மேரல்லா தாலூகா (வெங்கடகிரி).

(429) ந. II சர்வே பார்டி—கிராமப் பிரதேசங்கள் சம்பந்தமான ரிஜிஸ்தர்—நெல்லூர் ஜில்லா—வெங்கடகிரி தாலூகா (வெங்கடகிரி).

(430) ந. II சர்வே பார்டி—கிராமப் பிரதேசங்கள் சம்பந்தமான ரிஜிஸ்தர்—நெல்லூர் ஜில்லா—சாகுத்துரு தாலூகா (வெங்கடகிரி).

(431) ந. II சர்வே பார்டி—கிராமப் பிரதேசங்கள் சம்பந்தமான ரிஜிஸ்ர்—நெல்லூர் ஜில்லா—போடிலி தாலூகா (வெங்கடகிரி).

லைப்ரெரியிலிருந்து நேராகக் கிடைத்த பத்திரத்தொகுதி.

(432) சர்க்கார் குறிப்புகளிலிருந்து மன்ரோ தொகுத்த சாராம்சங்கள்—எ. எ. ஜி. அர்பத்நாட் பதிப்பிட்டது. (லைப்ரெரி நெ. VI/33).

(433) கிழக்கிந்தியா கம்பெனியின் விஷய நிலை (V-வது அறிக்கை). XII-A. 65.

(434) கிழக்கிந்தியா கம்பெனியின் தொகுதி II.

(435) விவசாய விஷயங்கள், புள்ளி விவரங்கள், இவை சம்பந்தமான குறிப்பேடு (XXV-A).

(436) பிரிட்டிஷ் இந்தியாவிலுள்ள நிலவரி பரிபாலனம். பேடன் பவல் எழுதியது (XIII-A).

(437) சென்னை இராஜதானி ஜன சங்கியை, 1871—அனுபந்தத்துடன் அறிக்கை, தொகுதி I (லைப்ரெரி நெ. VII-1.)

(438) சென்னை இராஜதானியின் பரிபாலன மான்யூயல், மெக்லியான் எழுதியது, தொகுதி I.

(439) சென்னை இராஜதானியின் பரிபாலன மான்யூயல், மெக்லியான் எழுதியது, தொகுதி II.

லைப்ரெரியிலிருந்து நேராகக் கிடைத்த பத்திரத் தொகுதி —தொடர்ச்சி.

(440) சென்னை இராஜதானியின் பரிபாலன மான்யூயல் மெக்லியான் எழுதியது, தொகுதி III.
(441) உடன்படிக்கைகள், ஒப்பந்தங்கள், சன்னதுகள் ஆகிய இவைகளின் தொகுதி.
(442) உடன்படிக்கைகள், ஒப்பந்தங்கள், சன்னதுகள் ஆகிய இவைகளின் தொகுதி.
(443) தாலூகாவிலும், ஜில்லாக்களிலும் உள்ள கிராமங்களின் ஜாபிதா.
(444) இந்திய அரசியல் சீர்திருத்தத்தைப்பற்றி நியமிக்கப்பட்ட கூட்டுக்கமிட்டி (1933–34—கூட்டம்) தொகுதி I, பாகம் I, அறிக்கை.
(445) இந்திய வரி விசாரணைக்கமிட்டியின் அறிக்கை, 1924–25—தொகுதி I.
(446) பிரிட்டிஷ் இந்தியாவிலுள்ள நிலவரி முறை, பேடன் பவல் எழுதியது—XIII-A-2.
(447) பிரிட்டிஷ் இந்தியாவிலுள்ள நிலவரி முறை, பேடன் பவல் எழுதியது, 1882, XIII-A-3.
(448) கவர்னர் ஜெனரலுக்கும், கவர்னர்களுக்கும் விடுத்த குறிப்புப்பத்திரங்கள்.
(449) மனுப்பெரியாரின் நில, வாணிப சட்டங்கள், ஆர். எஸ். வைத்தியநாதய்யர் எழுதியது.
(450) நியாய, ரெவன்யூ, வார்த்தைகளின், அரும்பதவுரை, வில்ஸன் எழுதியது, XXVIII-C/5.
(451) கோதாவரி டெல்டாவில் நடந்தேறிய இஞ்சினியரிங் வேலைகள், தொகுதி I, வாஷ் எழுதியது.
(454) XIII-19 சாசுவத செட்டில்மெண்ட் ரிகார்டுகள், வெங்கடகிரி ஜமீனைச் சார்ந்த பரக்காணங்களின் வருமான மூலங்கள், ந. 1–11.
(455) ஸ்பெஷல் கமிஷன் நடவடிக்கைகள், பழைய ந. 68, 1803-ம்௵ ஏப்ரல்மீ 20௳.
(456) ஸ்பெஷல் கமிஷன் நடவடிக்கைகள், பழைய ந. 69–69-A, 1803-ம் ௵ ஏப்ரல்மீ 20௳.
(457) ஸ்பெஷல் கமிஷன் நடவடிக்கைகள், பழைய ந. 68, 1802-ம் ௵ செப்டம்பர்மீ 15௳.
(458) ஸ்பெஷல் கமிஷன் நடவடிக்கைகள், பழைய ந. 67, 1803-ம் ௵ ஏப்ரல்மீ 20௳.
(459) ஸ்பெஷல் கமிஷன் நடவடிக்கைகள், பழைய ந. 123, 1802-ம் ௵ நவம்பர்மீ 24௳.
(460) ஸ்பெஷல் கமிஷன் நடவடிக்கைகள், பழைய ந. 86, 1802-ம் ௵ ஜூலைமீ 7௳.
(461) ஸ்பெஷல் கமிஷன் நடவடிக்கைகள், பழைய ந. 87, 1802-ம் ௵ ஜூலைமீ 7௳.
(462) ஸ்பெஷல் கமிஷன் நடவடிக்கைகள், பழைய ந. 48–49, 1802-ம் ௵ மேமீ 12௳.
(463) ஸ்பெஷல் கமிஷன் நடவடிக்கைகள், ந. பாகம் I–18–19, 1802-ம் ௵ ஆகஸ்ட்டுமீ 18௳.
(464) ஸ்பெஷல் கமிஷன் நடவடிக்கைகள், பழைய ந. 83, 1802-ம் ௵ ஜூலைமீ 7௳.
(465) ஸ்பெஷல் கமிஷன் நடவடிக்கைகள், ந. 12–12-A, 1802-ம் ௵ ஆகஸ்ட்டுமீ 4௳.
(466) ஸ்பெஷல் கமிஷன் நடவடிக்கைகள், ந. 64, 1802-ம் ௵ செப்டம்பர்மீ 15௳.
(467) ஸ்பெஷல் கமிஷன் நடவடிக்கைகள், ந. 22–23, 1802-ம் ௵ ஆகஸ்ட்டுமீ 18௳.
(468) போர்டின் ஆலோசனைகள், ந. 11-11, 1803-ம் ௵ ஜனவரிமீ 1௳.
(469) போர்டின் ஆலோசனைகள், ந. 3–4, 1805-ம் ௵ ஆகஸ்ட்டுமீ 12௳.
(470) போர்டின் ஆலோசனைகள், ந. 17–18, 1803-ம் ௵ நவம்பர்மீ 10௳.
(471) ஸ்பெஷல் கமிஷன் நடவடிக்கைகள், தொகுதி 5 (1802-ம் ௵ ஜூலைமீ 28௳யிலிருந்து ஆகஸ்டுமீ 18௳ வரை).
(472) ஸ்பெஷல் கமிஷன் நடவடிக்கைகள், தொகுதி I (1802-ம் ௵ பிப்ரவரி மீ 15௳யிலிருந்து 21௳ வரை).
(473) ஸ்பெஷல் கமிஷன் நடவடிக்கைகள், தொகுதி II (1802-ம் ௵ பிப்ரவரிமீ 24௳முதல் மார்ச்சுமீ 3௳ வரை.)
(474) ஸ்பெஷல் கமிஷன் நடவடிக்கைகள், பழைய ந. 44, 1802-ம் ௵ ஆகஸ்ட்டுமீ 25௳.
(475) ஸ்பெஷல் கமிஷன் நடவடிக்கைகள், பழைய ந. 73, 1803-ம் ௵ மேமீ 11௳.
(476) ஸ்பெஷல் கமிஷன் நடவடிக்கைகள், பழைய ந. 70–78, 1803-ம் ௵ மேமீ 26௳.
(477) ஸ்பெஷல் கமிஷன் நடவடிக்கைகள், பழைய ந. 66, 1803-ம் ௵ ஏப்ரல்மீ 20௳.
(478) வட ஆற்காடு ஜில்லா ரிகார்டுகள் (மேற்றிசை ஜமீன்களின் வருமான மூலங்களைத் தெரிவிக்கும் ஜாபிதா), 24/18348.
(479) வட ஆற்காடு ஜில்லா ரிகார்டுகள் (மேற்றிசை ஜமீன்களைப்பற்றி கலெக்டரின் அறிக்கை), எஸ். ந. 23/18347.

லைப்ரெரியிலிருந்து நேராகக் கிடைத்த பத்திரத் தொகுதி —தொடர்ச்சி.

(480) XIII—தொகுதி 16—வெங்கடகிரி ஜமீனைச்சார்ந்த பரக்காணங்களின் அசல் வருமான மூலத்தை தெரிவிக்கும் யதாஸ்து (ந. 1-3-ம் 5-11).

(481) ரெவன்யூ ஆலோசனைகள் (1802)—எம். ஆர். ஓ. நெ. 121/5351.

(482) போர்டு நடவடிக்கைகள் (1808) (குண்டூர் ஜமீன்கள்) எம்.ஆர்.ஓ. ந. 287/14493.

(483) போர்டு நடவடிக்கைகள் (1802) (விஜயநகரம் முதலிய ஜமீன்கள்) எம்.ஆர்.ஓ. ந. 356/14562.

(484) போர்டு நடவடிக்கைகள் (1803) (தொகுதி 20) எம்.ஆர்.ஓ. ந. 359/14565.

(485) கஞ்சம் ஜில்லாவின் ஜமீன்கள் முதலியவை சம்பந்தமான ரிகார்டு களின் சாராம்சங்கள் (1803) எம்.ஆர்.ஓ. ந. 489. A.S.O.13/140.

(486) பழைய மசூலிபட்டணம் ஜில்லா ரிகார்டுகளின் சாராம்சங்கள் (1911).

(487) ரெவன்யூ போர்டு ரிகார்டுகளின் சாராம்சங்கள் ந. I (நிலவரி)—விசாகப்பட்டணம் பழைய 2-வது டிவிஷன் ஜமீன்களின் சாசுவத பைசல் சம்பந்தமான கடிதப்போக்கு வரவு, எம்.ஆர்.ஓ. ந. 278—A.S.O.D./373.

(488) தென்னாட்டுப் பாளையங்கள், ராமநாதபுரம், சிவகங்கை ஜமீன்கள், ஆகிய இவைகளின் சாசுவத செட்டில்மெண்ட் சம்பந்தமாக, ராம நாதபுரம் ஜில்லா கலெக்டருக்கும், (பாலிசார் பேஷ்கஷ்) ரெவன்யூ போர்டுக்கும், ஸ்பெஷல் கமிஷனுக்கும் நடந்த கடிதப்போக்கு வரவு, எம்.ஆர்.ஓ. ந. 213, A.S.O.D./304.

(489) கோயம்புத்தூர் ஜில்லா பழைய ரிகார்டுகளின் சாராம்சங்கள், 1811-12 வருஷங்களில் சாசுவ செட்டில்மெண்ட்பற்றி ரெவன்யூ போர் டுக்கு அனுப்பிய அறிக்கை, எம்.ஆர்.ஓ. ந. 69—A.S.O.D./96.

(490) 1802-ம் ௵த்தில் ஜாகிர் சம்பந்தமாக ஏற்பட்ட சாசுவத பைசல் ஏற்பாட்டைப்பற்றிய கடிதப் போக்கு வரவு—எம்.ஆர்.ஓ. ந. 63—A.S.O.D./88.

(491) மேற்றிசைப்பாளையங்கள், ஜார்ஜ் ஸடராடனின் இரண்டு அறிக்கை கள், ந. 35, A.S.O.D./33.

(492) பழைய மசூலிபட்டணம் ஜில்லா ரிகார்டுகளின் சாராம்சங்கள், பாகம் II, எம்.ஆர்.ஓ. ந. 150, A.S.O.D./274.

(493) விசாகபட்டணம் ஜில்லா முதலாவது டிவிஷன் சாசுவத செட்டில் மென்டைப்பற்றி கலெக்டரின் அறிக்கை, எம்.ஆர்.ஓ. ந. 276—A.S.O.D./371.

(494) பழைய மசூலிபட்டணம் ஜில்லா ரிகார்டுகளின் சாராம்சங்கள், பாகம் II, எம்.ஆர்.ஓ. ந. 4—A.S.O.D./215.

(495) கஞ்சாவிலுள்ள, ஜமீன்கள், ஹாவலி நிலங்கள் ஆகிய இவைகளின் ஸர்கூட் கமிட்டியின் அறிக்கை.

(496) நூஜிவிட், சார்மஹால், ஜமீன்களைப்பற்றி, சர்கூட் கமிட்டியின் அறிக் கை, எம்.ஆர்.ஓ. ந. 149—A.S.O.D./279.

(497) சிகாகோல் சர்க்காரின், காசிம்கோட்டா டிவிஷனைப்பற்றி, சர்கூட் கமிட் டியின் அறிக்கை, எம்.ஆர்.ஓ. ந. 272—A.S.O.D./368.

(498) மசூலிபட்டணம் ஜில்லாவிலுள்ள ஜமீன்களைப்பற்றி சர்கூட் கமிட்டி அறிக்கை. (ராஜமஹேந்திரபுரம் சர்க்கார்—1789-ம் ௵ பிப்ரவரி ௴ 15௳—மசூலிபட்டணத்தைச்சார்ந்த—ஹாவிலி நிலங்களும், சிறு ஜமீன்களும், 1886-ம் ௵ டிசம்பர் ௴ 18௳) எம்.ஆர்.ஓ. ந. 114—A.S.O.D./152.

(499) விசாகபட்டணம், சிகாகோல் சர்க்காரைப்பற்றி சர்கூட் கமிட்டியின் அறிக்கை, ந. XIII—A. 206.

(500) கலெக்டர்களுக்கு விடுத்த குறிப்புகள், 1799-ம் ௵ அக்டோபர் ௴ 15௳, எம்.ஆர்.ஓ. ந. A.S.O.D./372.

(501) சட்ட ரீதி ஆலோசனைகள், 1822 (தொகுதி 6852).

(502) இங்கிலாந்திலிருந்து வந்த சட்ட ரீதி நிரூபங்கள், 1814 (தொகுதி 7428).

(503) போர்டின் ஆலோசனைகள், 1815-ம் ௵ ஏப்ரல் ௴ 27௳.

(504) போர்டின் நடவடிக்கைகள், 1815 (தொகுதி 14907).

(505) நீதி இலாகா கமிஷனர்களுக்கு கிடைத்த கடிதங்கள் (தொகுதி 1541).

(506) நீதி இலாகா கமிஷனர்களுக்குக் கிடைத்த கடிதங்கள் (தொகுதி 7546).

(507) சட்டமுறையான ஆலோசனைகள், 1822 (தொகுதி 6854).

(508) சட்டமுறையான ஆலோசனைகள், 1821 (தொகுதி (5496).

(509) போர்டின் நாளுவிதப் பத்திரங்கள் (தொகுதி 18286).

(510) போர்டின் ஆலோசனைகள், 17-18, 1815-ம் ௵ மார்ச்சு ௴ 23௳.

(511) சென்னை சட்டசபையின் நடவடிக்கைகள், 1908.

(512) சென்னை சட்ட சபை நடவடிக்கைகளின் சங்கிரமம், 1907.

(513) சென்னை சட்டசபை நடவடிக்கைகளின் சங்கிரமம், 1905.